# தமிழரசு



JL
J.211m.N70
N75.6
69680



அரிசிமில், மாவுமில், ஆயில் மில், மர அறுவைத் தொழில் போன்ற சிறு தொழில் நிறுவனங்களில் இயங்கும் மோட்டார்களைச் சீராகச் செலுத்த, சிறந்த ஒரு சாதனம் எல் & டி ஸ்டார்ட்டர். எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸ்டார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் எல்லா வித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

இவைகளை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

• பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று, வேண்டிய ஆலோசனைகள் கூறி, ... சர்வீஸ் வசதிகள் செய்துகொடுக்கின்றனர்.

• சிறிய ஊர்களில் கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டி விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி

ஸ்விட்ச்கியர் டிவிஷன்,
லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்
P.O. Box 8922, பம்பாய் 72 □ P.O. Box 323, புது டில்லி 1
P.O. Box 619, கல்கத்தா 16 □ Post Bag 5247, சென்னை 2





# எதிர்காலத்தின் பொறுப்பை ஏற்போம்!

யூனியன் பேங்க், தேசிய இளம் தொழில் ஆர்வலர்களின் கூட்டமைப்பு அறிமுகப்படுத்தும் 'யூபீனைப்ஸ்' என்ற ஒரு புதிய திட்டத்தின் துவக்க விழாவில் ஒன்பது நண்பர்களுக்குத் தொழில் தொடங்குவதற்கான கடன் தொகையை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். அதிலும் முதலாவதாகக் கொடுத்த கடனை ஊனமுடைய ஒரு நண்பருக்குத் தந்ததில் மிகுந்த பெருமை அடைகிறேன். ஒருவேளை தமிழக அரசின் திட்டங்களை நண்பர்கள் நன்றாகப் புரிந்து கொண்டிருப்பதாலோ என்னவோ முதலில் ஒரு ஊனமுற்ற நண்பரைத் தேர்ந்தெடுத்து அதனை வழங்கியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

ஊனமுற்றவர்களாக இருந்தாலும், அவர்களும் வாழ வேண்டும்-வாழ்ந்து காட்ட வேண்டும். தங்களுடைய வாழ்க்கை மற்றவர்களுக்கு வழிகாட்டியாக அமையவேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

என்னதான் இங்கே பெரிய நிகழ்ச்சியை நடத்திப் பெரிய தொழில்கள் நடத்துபவர்களை எல்லாம் அழைத்து, அதிலே ஒன்பது பேருக்குக் கடன் தொகையை வழங்கினாலும், என்னுடைய பார்வை அந்த ஊனமுற்றவர் பக்கம்தான் செல்கிறது—என்பதற்குக் காரணம் - புறக்கணிக்கப்பட்டவர்களுடைய பக்கம்தான் என்னுடைய பார்வை செல்கிறது என்பதற்குக் காரணம்—ஒரு காலத்தில் நாங்களே புறக்கணிக்கப்பட்டவர்களாக இருந்தோம். ஆகவேதான் அவர்களை வாழவைக்க வேண்டும் என்பதில் அதிக அக்கறை செலுத்துகிறோம்!

சக்ரதாரி அகர்வால் பேசும்போது காஷ்மீரத்தில் நடைபெற்ற கருத்தரங்கின் தொடர்ச்சியாக — அடுத்த நிகழ்ச்சியாக இங்கே இந்தத் தொடங்க விழா நடைபெறுகிறது என்று சொன்னார். காஷ்மீரத்திலே சொல்லப்படுகிற—விவாதிக்கப்படுகிற - கருத்துக்குத் தொடக்க விழா தமிழ்நாட்டில் நடைபெறும் என்பதை நான் இங்கே சூசகமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

வேலை வாய்ப்புகளை அளிப்பது இந்தத் திட்டத்தினுடைய தலையாய நோக்கமாகும். இன்று இந்தியா எத்தனையோ ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டியும், நாம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு இந்தியாவில் வேகமாகச் சொல்லப்படுகிற கோஷம் 'ஹரீபி ஹட்டாவோ' (வறுமையே வெளியேறு) என்பதாகும். இந்த முழக்கம் சொல்லப்படுவதற்கு முன்பே, தமிழ்நாட்டில் நான் சார்ந்துள்ள இயக்கம் நடத்துகின்ற ஆட்சியின் வாயிலாக அதனைச் செயல்படுத்தியிருக்கிறது என்பதைச் சக்ரவர்த்தி இங்கே எடுத்துக் காட்டினார். வறுமையை வெளியேற்றினால் அது மீண்டும் ஒருவேளை வந்துவிடக் கூடுமோ என்பதால்தான் நாங்கள் எங்களுடைய முழக்கத்தில் "வறுமையை வெல்வோம்" என்று கூறிவருகிறோம். ஒன்றை வெளியேற்றினால் அது மீண்டும் வர வாய்ப்பு இருக்கிறது.

உதாரணமாக நம் முகத்திற்கு எதிரே வண்டோ, ஈயோ பறந்தால்- அதைக் கையால் விரட்டி அகற்றினால், சிறிது நேரத்திற்கெல்லாம் மீண்டும் அது நம்முகத்திற்கு எதிரே வந்து பறக்கும். ஆகவே விலக்குவோம்; அகற்றுவோம்; என்கிற கோஷத்தைவிட, கேட்பதற்கு மென்மையாக இருந்தாலும், நிச்சயமாக நடைபெற வேண்டிய ஒன்றாக 'வறுமையை வெல்வோம்' என்று நாம் அந்த முழக்கத்தைப் படிப்படியாக செயல்படுத்தி வருகிறோம். இந்தியாவை அல்லது தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், நாம் அதிலே பிரமாதமான வெற்றியைப் பெற்றிருக்கிறோமா என்றால் இல்லை; அல்லது இன்று தொடங்கப்படுகிற இந்த முயற்சி மூலமாக வேலையில்லாத் திண்டாட்டத்தை அறவே ஒழித்துவிடப் போகிறோமா என்றால் இல்லை. ஆனால் அவரவர்களும் தனித்தனியாக முயற்சிகளைச் செய்தால்தான் இந்தியாவிலே இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற வேலை வாய்ப்பற்ற நிலைமை என்ற நோயைத் தீர்க்க முடியும்.

வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வர என்ன காரணம் என்பதை நாம் கண்டுபிடித்திருக்கிறோம். ஆனால் கண்டுபிடித்து அந்த நோய்க்குக் கடுமையான வைத்தியத்தை நாம் செய்கிறோமா என்றால் இல்லை; நோய் ஏற்பட்டுவிட்ட பிறகு மருந்துகளை தேடுகிறோமே தவிர-நோய் ஏற்படாமல் தடுக்கும் முறையை நாம் கடைப்பிடிக்கிறோமா என்றால் இல்லை.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி நாட்டு மக்களுடைய வளர்ச்சியோடு இணைந்திருக்கிறது. பொருளாதாரம் என்னதான் வளர்ந்தாலும், மக்கள் தொகைப் பெருக்கம் காரணமாக அது சீர்குலையக் காரணமாகிவிடுகிறது. அண்மையில் திட்டக்குழுத் தலைவர் திரு. ஹக்சர், என்னிடம் "இந்தியாவில் பொருளாதாரத்தைச் சீர்படுத்த மிக முக்கியமான திட்டம் என்று எதைக் கருதுகிறீர்கள்" என்று கேட்டார். "குடும்பக் கட்டுப்பாடு திட்டம்" என்று நான் பதில் கூறிவிட்டு, மேலும் விளக்குகையில் "நாம் அந்தத் திட்டத்தின் அவசியத்தை உணர்ந்திருக்கிறோம். ஆனால் அதற்காக ஒதுக்கப்படுகிற நிதி மிகக் குறைவாக இருக்கிறது. வெறும் பிரச்சார அளவில் இன்று செயல்படும் அத்திட்டத்திற்கு, மற்றத் திட்டங்களுக்கு ஒதுக்கப்படுகிற நிதியை விடக்கூட அதிகமாக ஒதுக்கி மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தினால் தவிர எவ்வளவு திட்டங்களைப் போட்டாலும், எவ்வளவு வரியாக வசூலித்தாலும் இந்தியாவின் பொருளாதாரம் எதிர்காலத்தில் பயங்கரமானதாக இருக்கும்; ஆகவே இன்றைக்கே எச்சரிக்கையாக இந்தக் காரியத்தில் ஈடுபட வேண்டு'' மென்று சொன்னேன்.

இந்திய யூனியன் வங்கியினுடைய இந்தத் திட்டம் இளைஞர்கள், பட்டதாரிகள், தொழில் பயிற்சி பெற்றவர்கள் எல்லாம் தாங்களே முன்வந்து-ஏதோ படித்தோம் ஒரு குமாஸ்தா வேலை அல்லது அரசாங்க அலுவல் என்பதில் மாத்திரம் மனத்தைச் செலுத்தாமல், அவரவர்களும் தொழில் துறையில் முன்னேறும் வாய்ப்பைப் பெற்றுத் தாங்கள் பெறுகின்ற வாய்ப்பின் மூலம் மேலும் பத்து, இருபது பேர்களுக்கு அதிலே வாய்ப்புத் தரும் வசதிகளைப் பெறுவதற்குத்தான் என்ற அளவில் இந்தத் திட்டங்கள் எல்லாம் பயன்பட்டாக வேண்டும்.

தொழில் வளர நாம் எவ்வளவோ சலுகைகளை அளிக்கிறோம். தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரையில், மத்திய அரசிடம் எடுத்துச் சொல்லி ராமநாதபுரம், தருமபுரி, புதுக்கோட்டை மாவட்டங்களைத் தொழில்துறையில் பின்தங்கிய மாவட்டங்கள் என்று பிரகடனப்படுத்தித் தொழில் தொடங்கச் சலுகைகளை வழங்க முன்வந்திருக்கிறோம்.

நம் நாட்டில் வேளாண்மைத் துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் அந்தத் துறையைத் தவிர இன்னொரு இடத்திற்கு, ஒரு அடி கூட எடுத்து வைக்கத் தயாராக இல்லை; விவசாயத்தையும் பார்த்துக்கொண்டு ஒரு சிறிய தொழிலையும் தொடங்கலாம் என்ற எண்ணம் கிடையாது.

தமிழக அரசைப் பொறுத்தவரையில் தொழில்களைத் தொடங்குவதற்கு எல்லா வகையான வசதிகளையும் தந்து வருகிறோம். தொழில் அமைதியைச் சிலர் கெடுக்க முனைந்தாலும், அவைகளும் கட்டுப்படுத்தப்பட்டுத் தமிழ்நாட்டில் தொழில் அமைதி காப்பாற்றப்படுகிறது.

ஒருசிலர் தமிழ்நாட்டில் தொழிலை ஆரம்பித்தால் எதிர்காலத்தில் மின்சாரப் பற்றாக்குறை இருக்குமோ என்ற தயக்கத்தோடு இருக்கிறார்கள்.

வெளி மாநிலங்களிலிருந்து இங்கு வந்தும், இது போன்ற கடன் உதவியைப் பெற்றும், சிறுசிறு தொழில்களை மின்சார உதவியோடு நடத்த வேண்டிய தொழில்களைத் தொடங்க விரும்புவர்களுக்குச் சொல்கிறேன். எதிர்காலத்தில் மின்சார தட்டுப்பாடு வரும் என்று எண்ணுவதற்குப் பதிலாக நல்லவைகளையே நினைப்போமே; ஏன் தீமை வரும் என்று நினைக்க வேண்டும்?

எட்டு ஒன்பதாண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் ஒரு நாளைக்குத் தேவைப்பட்ட மின்சார அளவு 16 மில்லியன் யூனிட் என்றால் இப்போது அது 25 மில்லியன் யூனிட் என்ற அளவிற்கு உயர்ந்திருக்கிறது. அதனை நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

இடையில் ஏற்பட்ட இயற்கையின் கோளாறு, நாம் நீர் மின்சாரத்தையே நம்பிக் கொண்டிருப்பதால் மின்வெட்டுக்கு உள்ளாக நேரிடுகிறது. எதிர்காலத்தில் மிக விரைவில் இடுக்கித் திட்டம் நிறைவேற்றப்படும். ஒன்றிரண்டு ஆண்டுக் காலத்திற்குள்ளாவது நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருவதையொட்டி கல்பாக்கத்திலிருந்து நமக்கு மின்சாரம் கிடைக்கக்கூடும்; நெய்வேலி சுரங்கம் மிக விரைவில் ஆரம்பமாகிவிட்டால் பத்தாண்டுகளுக்குள் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்கிற திட்டங்களில் ஒன்றாக அந்தத் திட்டமும் இருந்திடக்கூடும்.

ஆகவே, எதிர்காலத்தில் மின்சாரப் பற்றாக்குறை வந்துவிடுமோ என்று எண்ணித் தொழிலைத் தொடங்க முடியுமா என்று யாரும் மலைத்திடத் தேவையில்லை; எதிர்காலத்தில் மின்சாரத்தால் தொழில்கள் பாதிக்கப்படாமல் பாதுகாக்கின்ற பொறுப்பைத் தமிழக அரசு நிச்சயமாக ஏற்றுக் கொள்ளும்.

[சென்னையில் நடைபெற்ற இளம்தொழில் ஆர்வலர்களுக்குத் தொழில் தொடங்குவதற்கான கடன்களை வழங்கி முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.]

**முதல்வர் கலைஞர்**

# குடிசைமாற்றுப் பணிக்கு ஒரு கருத்தரங்கு....



தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் சார்பில், குடிசைப் பகுதி மாற்றுப்பணிகள் பற்றிய அனைத்திந்திய கருத்தரங்கு ஜூன் திங்கள் 20,21-ஆம் நாட்களில் சென்னை இராஜாஜி மண்டபத்தில் சீரும் சிறப்புமாக நடந்தது.

இந்தியா முழுவதிலுமிருந்து 13 மாநிலங்களின் பிரதிநிதிகள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டார்கள்.

தமிழ்நாடு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்கள் கருத்தரங்கிற்குத் தலைமை வகித்து, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் ஆற்றிவரும் அரும் பணிகளை விளக்கிக் கூறினார்.

தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத் தலைவர் திரு. இராம. அரங்கண்ணல் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், சென்னை நகரிலுள்ள குடிசைப் பகுதிகள் பற்றிய சமூகப் பொருளாதார மலரை வெளியிட்டார்.

இக்கருத்தரங்கையொட்டி அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியைக் கல்வியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் திறந்து வைத்தார்.

கருத்தரங்கைத் தொடங்கி வைத்துத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பேசியதாவது:

''நகர்ப்புறங்களின் பிரச்சினைகளை மனத்திற் கொண்டு அனைத்திந்திய அளவில் வருங்காலத்தில் பொருளாதார சமூக வளர்ச்சிக்கு வழிகாட்டும் வகையில் ஒரு அமைப்புக் கொள்கையை வகுக்க நாம் முயற்சி செய்து வருகிறோம். கடந்த இருபதாண்டுகளில் இந்தியாவின் நகர்ப்புற மக்களின் எண்ணிக்கை பன்மடங்காக அதிகரித்துள்ளது. 1931 ஆம் ஆண்டு 3 கோடியே 40 இலட்சமாக இருந்தது. 1971 இல் 11 கோடியாக ஆயிற்று. அதாவது 40 ஆண்டுகளில் மூன்று மடங்காக ஆயிற்று. கி.பி. 2000-த்தில் இந்திய நகர்ப்புறங்களில் வாழுகின்றவர்கள் மட்டும் 30 கோடியாக இருப்பார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இப்படி நகரங்களில் மக்கள் எண்ணிக்கை அதிகரிப்பதால் சுகாதாரம், இடவசதி, கல்வி, குடிநீர் வசதிப் பிரச்சினைகள் உருவாகின்றன. நகர்ப்புறங்களில் வாழும் மக்களிலேயும் வறுமை நிலைக்குக் கீழே வாழுவோரே அதிகம் என்பதால் அனைத்திந்திய அளவில் குறைந்த பட்சத் தேவைகளை நிறைவு செய்யும் திட்டம் அவசியம் வகுக்கப்பட வேண்டும். நகர்ப்புறங்களில் வாழுகிற ஏழை மக்களின் வாழுமிட வசதி, கல்வி வசதி, துப்புரவு வசதி, குடிநீர் வசதி ஆகியவற்றை மேம்படுத்திட தேசிய அளவிலான இத்தகைய திட்டம் ஒன்று தேவை. இணைப்பான முயற்சி வேண்டும்.

''குடிசைப் பகுதி மாற்றுத் திட்டத்தின் அவசியத்தை மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருந்தாலும், புதிதாகப் பெருமளவில் குடியிருப்புகளுக்கான கட்டடங்கள் அமைக்கப்பட ஏற்பாடு இல்லை. இப்போதுள்ள குடிசைப் பகுதிகளைச் சுற்றி சுற்றுச் சார்புகளைத் துப்புரவாக்கிட சிறுதொகை மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. இப்படி குடிசைப் பகுதிகளில் துப்புரவுப் பணிகளுக்காகச் செலவிடுவது மட்டும் போதுமானதாக இராது என்ற கருத்தைத் தமிழக அரசு பல காலமாகக் கொண்டிருந்தது. ஆகவே குடிசைப் பகுதிகள் அடியோடு மாற்றப்பட்டுவிடுவதே தக்க நிவாரணம் என்று திட்டம் வகுத்துச் செயல்பட்டது தமிழக அரசு. இக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டே சேரி ஒழிப்புத் திட்ட வாரியம் சென்னை நகரில் அமைக்கப்பட்டது.

''தமிழ்நாட்டில் குடிசைப் பகுதி மாற்று வாரியம் இதுவரை 16 ஆயிரம் குடியிருப்புகளைக் கட்டியுள்ளது. இந்த வாரியம் அமைந்தது முதல் ஆண்டுதோறும் மூன்றரைக் கோடி ரூபாய் வீதம் இதற்கெனத் தமிழக அரசு வழங்கி வருகின்றது. மத்திய அரசிடமிருந்து குறிப்பிடத்தக்க நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை.

''குடிசைவாழ் மக்களின் தேவைகளை உணர்ந்து குடிசைகளை ஒழிப்பதற்கான ஒரு திட்டத்தை அனைத்திந்திய அளவில் உருவாக்கி இந்த அறைகூவலைச் சந்தித்திட வேண்டும் என்று நான் மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறேன். இது செய்யப்பட்டாலன்றி இங்கே வந்த இந்தத் திட்டங்களையெல்லாம் பார்த்து தலைவர்கள் வழங்கும் பாராட்டுரைகளால் மட்டுமே பிரச்சினையின் தீர்வுக்கான பலன் ஏற்பட்டுவிடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.''

கருத்தரங்கையொட்டி கண்கவர் கண்காட்சி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குடிசைகளெல்லாம் கோபுரமாய் உயர்ந்துள்ள காட்சியை விளக்கிடும் வகையில், குடிசை ஒன்றையும், உயர்ந்த மாடிக் கட்டடம் ஒன்றையும் கண்காட்சியில் அமைத்திருந்தது அனைவரின் கவனத்தையும் கவர்ந்தது. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் ஆற்றிவருகின்ற அரிய பணிகளை விளக்கிடும் புகைப்படங்களும், புள்ளி விவரங்களும், கைவினைப் பொருள்களும் காட்சியில் இடம் பெற்றிருந்தன. இந்தியாவிலேயே, தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், முன்னணியில் இருப்பது மட்டுமின்றி, முன்மாதிரியாகவும் திகழ்கிறது என்பதைச் சொல்லாமல் சொல்லிக்கொண்டிருந்தது. இவ்விரு நாள் கருத்தரங்கு!






# பணிகள் அளிப்பதற்கே பணிபுரியும் அலுவலகம்!

கல்வி கற்றவர்கள்-கல்லாதவர்கள் எவராக இருந்தாலும் வாழ்வை நடத்திச் செல்வதற்குத் தேவைப்படுவது வேலை-அலுதல்-பணி.

நாட்டில் பிறந்த அனைவரும் சொந்தத்தில் தொழில் புரிய வாய்ப்புக் கிடையாது. ஒரு சிலருக்குத்தான் அந்த வாய்ப்பு உண்டு. மிகப் பலர் அரசுத் துறையில் அல்லது தனியார் அலுவலகங்களில் மாத ஊதியத்திற்குப் பணிபுரிய வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே தான் வேலைதேடி அலைவோர் பட்டியல் நாள்தோறும் பெருகி வருகிறது.

எந்த அலுவலகத்தில் வேலை காலியிருக்கிறது, எப்படிப் பட்ட வேலை காலியிருக்கிறது என்பனபோன்ற விவரங்கள் வேலை தேடுவோர்க்குத் தெரிந்திருக்க முடியாது.

தங்கள் அலுவலகங்களுக்குத் தேவையான தகுதிபடைத்த ஊழியர்கள் எங்கே இருக்கிறார்கள் என்ற விவரம் அரசு அலுவலகங்களுக்கோ அல்லது தனிப்பட்ட நிறுவனங்களுக்கோ தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

எனவே வேலைதேடுவோருக்கும், வேலை கொடுப்பவருக்கும் இணைப்புப் பாலமாக ஓர் அமைப்பு இன்றியமையாத ஒன்றாகும். அந்தப் பாலம் தான் அரசைச் சார்ந்த 'வேலை தேடித்தரும் அலுவலகம்''.

வேலையின்மை அகன்றால் தான் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் உயர முடியும். எனவேதான் அரசு பல்வேறு வழிகளில்-பல்வேறு முறைகளில், தொழிலகங்கள், வாணிகம், வேளாண்மை, கைத்தொழில் போன்ற பல்வேறு துறைகளை உருவாக்கி வேலையின்மையைப் போக்கிட முயன்று வருவதை நாம் அறியலாம்.

இத்தகைய முறைகளுக்கு உதவுகின்ற வகையில் ஏற்படுத்தப்பெற்றதுதான் வேலை வாய்ப்பு-மற்றும் பயிற்சித் துறை. இத்துறையின் கீழ் மாவட்டந்தோறும் வேலை வாய்ப்பு அலுவலகங்கள் ஏற்படுத்தப்பெற்று அவை வேலை வேண்டுவோர்க்கும், வேலை தருவோர்க்கும் இணைப்பு நிலையங்களாக-தொடர்பு நிலையங்களாகச் செயல்பட்டு வருகின்றன. இவ்வலுவலகங்கள் ஒவ்வொன்றும் உதவி இயக்குநர் அல்லது மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலரின் நிருவாகத்தின் கீழ் செயல்படுகின்றன.

நாட்டைக் காத்திடும் பணியில் ஈடுபட்டு, பின்னர் இராணுவப் பணியினின்று விடுவிக்கப்பட்டவர்கள் வேலை வாய்ப்புப் பெற்றிடும் வகையில் தான் முதன் முதலாக 1945-ஆம் ஆண்டில் வேலை வாய்ப்பு நிறுவனம் தோன்றியது. அது இராணுவத்தின் ஒரு பகுதியாகவே இயங்கி வந்தது. முன்னாள் இராணுவத்தினருக்கென இயங்கி வந்த இந்த அமைப்பு 1947-ஆம் ஆண்டு முதல் பொதுமக்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பளிக்கும் அமைப்பாக செயல்படத் துவங்கியது. இந்த அமைப்பு 31-10-1956 வரை மைய அரசின் நிருவாகத்தின்கீழ் இயங்கி பின்னர் 1-11-1956 முதல் மாநில அரசின் நிருவாகத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றது.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்டத் தலைநகர்களில் வேலைவாய்ப்பு நிலையங்கள் ஏற்படுத்தப் பெற்றுள்ளன. தென்ஆர்க்காடு மாவட்டம் நெய்வேலியில் முழுவளர்ச்சியுற்ற (Full-fledged Employment Office) வேலைவாய்ப்பு அலுவலகம் ஒன்றுசெயல்பட்டுவருகின்றது. ஆனால் தமிழகத்தின் தலைநகரான சென்னை மாநகரில் மட்டும் ஐந்து நிலையங்கள் செயல்படுகின்றன.

சென்னை நந்தனத்தில் பள்ளி இறுதி வகுப்புத் தேர்ச்சி பெற்றவர்கள், இளநிலைப் பட்டதாரிகள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள், பிராட்மா போன்ற பணி இயந்திரப் பணியாளர்கள், விற்பனைப் பணியாளர்கள் (Sales Workers) போன்றவர்கள் பதிவு செய்ய உதவுகின்ற வகையில் பொது அலுவலகம் ஒன்றும், தொழில் நுட்ப அலுவல் பணியாளர்களுக்கென தனி அலுவலகம், உடல் ஊனமுற்றோர் நலனுக்கெனத் தனி வேலைவாய்ப்பு அலுவலகம் ஒன்றும் தனித்தனியாக செயல்படுகின்றன.

வடசென்னையில் பள்ளி இறுதி வகுப்பிற்குக் குறைந்தவர்கள் பதிவு செய்வதற்கென தனியான அலுவலகமும், நந்தனத்தில் முதுநிலைப் பட்டதாரிகள், பி.டி. ஆசிரியர்கள், மருத்துவம், சட்டம், பொறியியல் போன்ற வாழ்க்கைத்

தொழில் சார்ந்த பட்டதாரிகளுக்கென 'வாழ்க்கைத் தொழில் மற்றும் நிருவாக வேலைவாய்ப்பு அலுவலகமும்' இயங்கி வருகின்றன.

நந்தனத்திலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகம், தொழில்முறை வழிகாட்டும் பிரிவு (Vocational guidance unit), வேலைத்தகவல் நிலவரப் பிரிவு (Employment Market Information) ஆகிய பிரிவுகளைக் கொண்டும் செயல்பட்டு வருகின்றது.

வேலைத்தகவல் நிலவரப் பிரிவு, பொதுத் துறையில் பணியாற்றும் அனைத்துத் தொழிலாளர்கள், வேளாண்மைப் பணிகள் தவிர்த்து, 10 பேர்களுக்கு மேற்பட்ட தனியார் தொழிலகங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள் ஆகியவர்கள் பற்றிய எல்லா விதத் தகவல்களையும் சேகரிக்கின்றது. எந்த வகைத் தொழிலில் விண்ணப்பதாரர்களின் பற்றுக்குறை எழுகிறது. நாட்டில் ஏற்படுகின்ற தொழிற்சாலைகளின் வளர்ச்சி, நலிவு; மற்றப் பணிகளுக்குத் தேவைப்படுகின்ற ஆட்களின் எண்ணிக்கை என்பனபோன்ற விவரங்களையும் சேகரித்து, அவைகளைத் தொழில்முறை வழிகாட்டும் பிரிவிற்குத் தெரிவிக்கிறது.

சிலர் ஒரு குறிப்பிட்ட தொழிலைச் செய்வதில் ஆர்வமும் திறமையும் பெற்றிருப்பர். ஆனால் அவர்களுக்கு அத்தகு தொழில் பற்றிய விவரமோ அதன் இருப்பிடம், நிலை ஆகியவையோ தெரிந்திருக்காது. இத்தகு நிலையிலுள்ளவர்ளுக்கு வழிகாட்டுகிறது இந்தத் தொழில்முறை வழிகாட்டும் பிரிவு.

இப்பபிரிவு அநேகமாக ஒவ்வொரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் செயல்படுகின்றது. இதற்கென இளைஞர் பகுதி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் ஒருவர் நியமனம்செய்யப்பட்டுள்ளார். பதிவு செய்ய வருகின்றவர்களுக்குப் பயிற்சித் தொழில், வாழ்க்கைத் தொழில், மேற்படிப்பு போன்றவைகளின் இன்றியமையாமையை அறிந்து கொள்ளும் வகையில் வழிகாட்டுகிறது. பதிவு செய்வதற்கு முன்பு அவர்கள் அனைவரையும் ஒன்று. சேர்த்து 30 நிமிடங்கள் இவை குறித்த விளக்கங்களை எடுத்துரைக்கின்றது.

தனிப்பட்ட ஒருவருக்கு உதவிடும் வகையிலும் (Individual guidance) இப்பிரிவு செயல்படுகிறது. ஒருவர், தான் ஈடுபாடுகொண்ட தொழிலை மேற்கொள்ள விரும்பினால், அவரைத் தனியாக அழைத்து அவரது தகுதி, ஆர்வம் போன்றவைகளை இப்பிரிவு முதலில் கணிக்கிறது. பின்னர்



தொழில்முறை வழிகாட்டுதல் குறித்த விளக்கங்கள் தரப்படுகின்றன.

அத்தொழிலைப் பற்றிய தகவல்கள் அனைத்தையும் அவருக்கு அளித்துதவுகிறது.

இப்பிரிவு மேலும் மாவட்டங்கள், மாநிலம் முழுவதிலும் கிடைக்கக்கூடிய பயிற்சித் தொழில், வாழ்க்கைத்தொழில்களின் விவரங்கள் அனைத்தையும் சேகரித்து, தேவைப்படுகின்ற-விருப்பங் கொண்டுள்ள விண்ணப்பதாரர்களுக்குத் தெரிவிக்கின்றது.

இப்பிரிவின் மூலம் ஒவ்வொரு தொழில்கள் பற்றிய விளக்கங்கள், எந்தத் தொழிலை மேற்கொண்டால் வாய்ப்புப் பெறலாம் என்பன போன்ற விவரங்கள் அடங்கிய புத்தகங்களை இலவசமாகவும், மிகக் குறைந்த விலையிலும் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் இப்பிரிவினர் சென்று அங்குள்ள பள்ளியிறுதி வகுப்பு மாணவர்களுக்கு வாழ்க்கை நெறி பற்றிய கருத்துரைகளை வழங்குகின்றனர். அவர்களுக்கு இலவசமாக வாழ்க்கைத் தொழில் தழுவிய புத்தகங்களை இலவசமாக வழங்கி அவர்கள் பயன்பெற வழிகாட்டுகின்றனர். இதனால் ஓரளவு பயனும் ஏற்பட்டுள்ளது.

இதே இடத்தில் தொழில் நுட்பத் துறையினருக்கென



பதிவுசெய்யும் மகளிர் பிரிவு.

தனியாகத் 'தொழில் நுட்பப் பிரிவு வேலைவாய்ப்பு அலுவலகம்' ஒன்றும் செயல்பட்டு வருகின்றது. இதற்குத் தனியாக மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் உள்ளார். இந்த அலுவலகம் தனி அலுவலகமாக 1-7-1974 முதல் இயங்கி வருகிறது.

பொறியியலில் பல்வேறு துறைகளில் பட்டயம் (Diploma) பெற்றவர்கள் எல்லா வகையான கைவினைஞர்கள், (Craftsmen) தொழில் நுட்பத் துறைகளில் சான்றிதழ் பெற்றுள்ளவர்கள், செவிலியர் (Nurses) மருந்தாக்கக் கலைஞர்கள் (Pharmacists), அச்சுத் தொழிலைச் சார்ந்தவர்கள், ஆய்வுக் கூடத் தொழில் நுட்ப வல்லுநர்கள் (Laboratory Technicians) போன்றவர்கள் தங்களை இந்த அலுவலகத்தில்தான் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இதுவரை ஏறத்தாழ 14,500 பேர் பதிவு செய்துள்ளனர். தொழில் நுட்பப் பிரிவைப் பொறுத்த வரையில் வேலைவாய்ப்புகள் கிடைத்திட வாய்ப்புண்டு-வழியுண்டு. கட்டுமானப் பொறியியல் பட்டயதாரிகள் (Civil Engineering Diploma Holders), செவிலியர், மருந்தாக்கக் கலைஞர்கள் போன்ற பணிகளுக்கு, தேவைக்கேற்ப ஆட்கள் கிடைப்பதில்லை. எனவே இத்தகைய துறைகளில் சான்றிதழ் பெற்றவர்கள் எளிதில் வேலை பெற முடியும்.

அரசுத் துறைகளுக்கு மட்டுமின்றி, தனியார் துறையினருக்கும் இந்த அலுவலகத்திலிருந்து விண்ணப்பதாரர்கள் அனுப்பப்படுகின்றனர். இதில் ஒரு சிறப்பு அம்சம்-தனியார் துறைகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்கள் பெரும்பாலும் திரும்பி வருவதில்லை. நிலையான பணி புரிய வாய்ப்புப் பெற்றுவிடுகின்றனர். இத்தகு வழிகளில் இந்த அலுவலகம் இயங்குகிறது.

உடலில் ஊனமிருந்தாலும் உள்ளத்தில் ஊனமில்லாது, உறுதியும் உத்வேகமும் உள்ளவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். பொதுவாக உடல் ஊனமுற்றோர் வாழ்விலும் ஒளிவிளக்கேற்றிடும் வகையில் அவர்களுக்கும் வேலைவாய்ப்பினை வழங்கிடும் சிறப்புப் பிரிவு ஒன்று, தனி வேலைவாய்ப்பு அலுவலரைக்கொண்டு 1-4-1962 முதல் செயலாற்றி வருகிறது.

இவ்வலுவலகத்தில் 31-5-1975 வரை 2,370 பேர் பதிவு செய்துள்ளார்கள். இவர்களில் விழியிழந்தோர் 375 பேர்கள், காது கேளாதோர் 355 பேர்கள்,; உடல் ஊனமுற்றோர் 1,640 பேர்கள் ஆவர். இவர்களில் 46 பேர் பட்டமேற்படிப்பு மற்றும் வாழ்க்கைத் தொழில் சார்ந்த பட்டதாரிகள் ஆவர்.

சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளைச் சார்ந்த உடல் ஊனமுற்றோர் இங்குப் பதிவு செய்கின்றனர். தமிழ்நாட்டிலுள்ள விழியிழந்தோர், காது கேளாதோர் அனைவரும் முதலில் இந்த அலுவலகத்தில்தான் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இவ்வலுவலகம் தொடங்கப் பெற்ற நாளிலிருந்து 31-5-75 வரை 1,891 பேர்கள் பல்வேறு துறைகளில் பணியில் அமர்த்தப் பட்டுள்ளனர். இவர்கள், மாநில, மைய அரசுத் துறைகள், பொதுத்துறை, தனியார் துறை போன்றவைகளில் பணியாற்றுகின்றனர். இவர்களில் பெரும்பாலோர் எழுத்தர், தட்டச்சர், சுருக்கெழுத்துத் தட்டச்சர் போன்ற பணிகளிலும், பள்ளி இறுதி வகுப்பிற்குக் குறைந்தவர்கள், அரசில் கடைநிலை ஊழியர், அரசு அச்சகம் போன்றவைகளில் பணியாற்றுகின்ற வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

பணியில் அமர்த்தப்படுவதற்கு முன்னர் மருத்துவச் சோதனை நடத்தப்படுகிறது. இதற்கென ஒரு சிறப்புப் பகுதி ஏற்படுத்தப் பெற்று, சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் அனைத்துச் சோதனைகளும் நடத்தப்படுகின்றன. செலவுகள் முழுவதையும் அரசே ஏற்றுக் கொள்வது குறிப்பிடத்தக்கது. இதற்குப் பின்னர் மறுபரிசோதனை கிடையாது என்பதையும் குறிப்பிடவேண்டும்.

வேலையில் அவர்களை அமர்த்தி விட்டாலும் அத்தோடு தம்முடைய பணி முடிந்துவிட்டது என்றில்லாமல் பணியாற்றுகின்ற காலத்தில் குறைந்தது 6 மாதங்கள் வரை அவர்களைப் பார்வையிட்டு வருகின்றனர். வாழ்க்கையில் வசதியேற்படுகின்ற அளவுக்கு வேலைவாய்ப்பு அலுவலகத்தினர் கண்காணிப்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கு அரசு அலுவலகங்களில் பணிபுரிவதற்கென வயது வரம்பும் தளர்த்தப்படுகிறது. பணியாற்றுவதற்கு மூன்றாவது முன்னுரிமை வழங்கவும் பரிந்துரை செய்யப்படுகிறது.

பள்ளி இறுதி வகுப்பு-மற்றும் பட்டப்படிப்பு முடித்தவர்கள் ஏராளமான பேர் எழுத்தர் பணியை நாடிவருகின்ற சூழ்நிலை இருக்க, கீழ்க்கண்ட பணிகளில் பணிபுரிந்திடத் தகுதி படைத்தவர்கள் மிகமிகக் குறைந்த அளவிலே தான் இருக்கிறார்கள்.

1. முதுநிலை வானிலை ஆராய்ச்சியாளர்.

2. கைத்தறி-மற்றும் ஓவிய ஆசிரியர்.

3. இந்தி மொழியில் பயிற்றுவிக்கும் நடுநிலை, உயர்நிலை ஆசிரியர்கள்.

4. விழியிழந்தோர், காது கேளாதோர் போன்ற உடலுறுப்புக் குறைபாடு உள்ளவர்களுக்குக் கல்வி போதிப்பதில் பயிற்சி பெற்ற சிறப்பு நடுநிலை, உயர்நிலை ஆசிரியர்கள்.

மொத்தத்தில் வேலைவாய்ப்பு அலுவலகம் மிகவும் அக்கறையோடு பணி ஆற்றுகிறது என்பது மட்டுமல்ல-வேலைதேடுவோரில் பெரும்பான்மையோரின் பிரச்சினைகளைத் தீர்க்கும் பெரும்பணியில் ஈடுபட்டு அருந்தொண்டாற்றி வருகிறது என்பதை எவரும் மறந்துவிட முடியாது.

—ஆயிரம்.



பதிவுசெய்யும் ஆண்கள் பகுதி.

# பார்த்தோம்! படித்தோம்!

### எண்ணக் கருவூலம் எனினும்........

முன்பு போல தமிழரசில் வண்ணப் பக்கங்களே கிடையாது. ஆனாலும் வருகின்ற கட்டுரைகளின் தகவல்களில் ஏராளமான செய்திகள் பொதிந்து கிடக்கின்றன. ஒவ்வொரு தமிழரசு இதழும் எண்ணக் கருவூலமாக உள்ள உண்மையை மறுக்க முடியாது. எனினும் தமிழரசு இதழ் காலதாமதமாக வருவது இருக்கிறதே அதை மாற்றக்கூடாதா? காலத்தோடு கிடைத்தால் இன்னும் எங்களுக்கு மகிழ்ச்சி!

—தேவ. நெல்லையப்பன்,
திருநெல்வேலி-1.

### துணையான தூதுவன்

தமிழரசு இதழ்களில் வரும் கட்டுரைகள் தேர்வுகளுக்கு உரிய பாடங்களாக அமைந்து உள்ளன. இவ்வாண்டு அரசு ஆணைக் கழக ஐந்தாம் தொகுதித் தேர்வுகளில் கேட்கப்பட்ட வினாக்களுக்குத் தமிழரசை ஒழுங்காக ஒருவர் படித்துக் கொண்டு இருந்தால் சிறந்த முறையில் பதில் எழுதியிருக்க முடியும். தமிழ்நாடு அரசு 1974-ஆம் ஆண்டுசமூகப் பாதுகாப்புத் திட்டம் பற்றி தமிழரசில் வெளியான இலவச இணைப்பைப் படிந்திருந்த எனது நண்பர்கள் நன்கு தேர்வு எழுதியிருந்தார்கள்.

—கோ. வி. தனசேகரன், எம்.ஏ.,
கோயம்புத்தூர்-3.

### அளவு குறைந்தாலும்......

அறுபத்து நான்கு பக்கங்களில் வெளிவந்து கொண்டு இருந்த தமிழரசு இதழ் இப்பொழுது நாற்பத்தெட்டு பக்கங்களில் வருகிறது. கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது என்பதை நிரூபிக்கும் வகையில் பக்கங்கள் குறைந்தாலும் பயன்மிகுந்த தகவல்களைத் தாங்கி வருகிறது. ஆனாலும் வழக்கமான பகுதிகளைத் தொடர்ந்து வெளியிடக் கூடாதா?

—இரா. சடகோபன்,
சேலம்-1.

### தேவை சிறுகதை!

நான் 'தமிழரசு' இதழைத் தவறாமல் படித்து வருகின்றேன். நாட்டுக்குத் தேவையான பயனுள்ள கட்டுரைகள், தெளிவான புள்ளி விவரங்கள், நல்ல செய்திகள் போன்றவை வெளியிடுவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் கருத்துள்ள சிறுகதைகள் தொடர்ந்துஇடம்பெறாததைப் பெரிய குறையாகக் கருதுகிறேன். எனது வேண்டுகோளை 'தமிழரசு' நிறைவேற்றும் என நம்புகிறேன்.

—கே. குமாரினி,
சென்னை-83.

### கல்விக்குச் சிறப்பு!

தமிழரசு ஜூன் 16-ஆம் தேதி இதழைக் கண்ணுற்றேன். கல்விச் சிறப்பிதழாக மலர்ந்திருக்கும் அந்த இதழ் பல அரிய செய்திகளைத் தொகுத்துத் தந்திருப்பது பாராட்டுக்கு உரியது. கல்வி—கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலிருந்தே பாராட்டப்பெற்றுள்ளது என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறீர்கள். நன்றி.

—எம். வெங்கடலட்சுமி,
மதுரை—18.

### 'பாடம்' தரும் கட்டுரை

16—6—75 தமிழரசு இதழில் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவன மேலாண்மை இயக்குநர். அவர்களின் பேட்டிக் கட்டுரை படித்தேன். பாடநூல் தயாரிப்பதில் இந்தியாவிலேயே தலைசிறந்த நிறுவனமாக விளங்குவதும் அழகிய முறையில் தரமான பாடநூல்களை வெளியிட்டு வருவதுமான பல தகவல்களைத் தெரிந்து கொண்டேன். குறைகூறுவோருக்கு இக்கட்டுரை தெளிவு பெற வைக்கிறது.

—என். ஆர். சந்தர்,
கோவை-1.

ஓமார்.....

# அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி வகுப்புகள்

டி. கே. ஓசா, ஐ.ஏ.எஸ்.,
இயக்குநர்,
வேலை வாய்ப்பு-மற்றும்
பயிற்சித் துறை.

தமிழ்நாட்டில்வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் கீழ் 31 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. அப்பயிற்சி நிலையங்களில் கீழ்க்கண்ட திட்டங்களின் கீழ் பயிற்சி பெறும் வாய்ப்புகள் உள்ளன.

1. கைவினைஞர்க்கான பயிற்சித் திட்டம்.

2. தொழிலாளர்களுக்கான மாலை வகுப்புகள் திட்டம்.

3. இடம் பெயர்ந்த நெசவாளர், பொற்கொல்லர் மற்றும் மாதிரி உருவமைப்புச் செய்வோர் முதலியோருக்கான பயிற்சித் திட்டம்.

4. 1961-ஆம் ஆண்டு தொழிற் பழகுநர் சட்டத்தின் கீழ் பயிற்சித் திட்டம், மேற்கண்ட ஒவ்வொரு திட்டத்தைப் பற்றிய விவரமும் விரிவாகக் கீழே தரப்பட்டுள்ளது.

### கைவினைஞருக்கான பயிற்சித் திட்டம்

இத்திட்டம் தமிழ்நாட்டில் உள்ள 31 பயிற்சி நிலையங்களிலும் நடைமுறையில் உள்ளது. இந்நிலையங்களில் மொத்தமாக 31 பொறியியல் மற்றும் 6 பொறியியல் அல்லாத தொழில்களில் அவைகளின் தன்மைக்கேற்ப ஓராண்டு அல்லது இரண்டாண்டு பயிற்சி என நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ், 15 முதல் 25 வரையில் வயதுள்ள இளைஞர்களுக்கு, பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத தொழில்களில் ஓராண்டு அல்லது ஈராண்டுக் காலத்திற்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாசிகளுக்கு வயது வரம்பு 27 ஆகவும், முன்னாள் இராணுவத்தினருக்கும், போரில் கணவனை இழந்த விதவைகளுக்கும் வயது வரம்பு 45 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பர்மா, இலங்கை, அகதிகளுக்குத் தேவையான அளவுக்கு வயது வரம்பு தளர்த்தவும் வாய்ப்பு உண்டு. தொழிலின் தன்மைக்குத் தக்கவாறு, கல்வித் தகுதி 9-ஆம் வகுப்பு அல்லது பள்ளியிறுதித் தேர்ச்சி என வரையறுக்கப்பட்டுள்ளது. உடல் ஊனமுற்றோரை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கும் சில குறிப்பிட்ட தொழில்களில் பயிற்சியளிக்கப்படுகிறது.

1. இருக்கைகள் ஒதுக்கீடு : ஒவ்வொரு தொழிற் பயிற்சி நிலையத்திலும் நிரப்பப்பட வேண்டிய இருக்கைகளில் 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாசிகளுக்கும், 31 சதவீதம் பிற்பட்டோர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும், 5 சதவீதம் பர்மா, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கும், கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இடம் பெயர்ந்து வந்தோருக்கும், 5இருக்கைகள் முன்னாள் இராணுவப் பணியாளருக்கும் ஒதுக்க அரசு வகை செய்துள்ளது. மீதமுள்ள இருக்கைகள் வெளிப்படைத் தேர்வு மூலம் நிரப்பப்படுகிறது.

2. உதவித் தொகை : ஒவ்வொரு தொழிற்பயிற்சி நிலையத்திலும் சேர்க்கப்பட வேண்டிய பயிற்சியாளர்களில் 33-1/3 சதவீதத்தினருக்கு, ஒருபயிற்சியாளருக்கு ரூ. 25/- வீதம் உதவித் மாதமொன்றுக்கு தொகை அளிக்கப்படுகிறது. மேற்கூறிய சதவீதத்தில் 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட/மலைவாசி வகுப்பைச் சேர்ந்த பயிற்சியாளர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. தவிர தாழ்த்தப்பட்ட / மலைவாசிகளுக்கும் ஒரு பயிற்சியாளருக்கு ரூ. 45/- வீதம் உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய அகதிகளுக்கு விதிமுறைப்படி மாதம் ஒன்றுக்கு ரூ. 15/- அல்லது ரூ. 55/- உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

3. தேர்வுகள்: மொத்தம் 37 பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத தொழில்களில் அவைகளின் தன்மைக்கேற்ப ஓராண்டு அல்லது இரண்டாண்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு தொழிலும் ஆண்டுக்கொரு முறை ஜூலை மாதத்தில் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களுக்கு "தேசிய தொழிற்சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சி பெறும் மாணவர்களுக்கு ஆர்வமும் ஊக்கமும் அளிப்பதற்காக இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களிலும் தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களுக்குள், அகிலஇந்திய ரீதியில் 9 தொழில் பிரிவுகளில் திறமைப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இவற்றில் முதன்மையிடத்தைப் பெறும் பயிற்சியாளர்களுக்கு ரூ.5,000 ரொக்கப் பரிசும், ரூ. 1,000/- மதிப்புள்ள, தொழிற் கருவிகள் அடங்கிய பெட்டியும், வெள்ளிப் பதக்கமும் அளிப்பதோடு, நாட்டிலுள்ள முக்கியமான பெரிய தொழிற்சாலைகளை அரசின் செலவில் பார்வையிடவும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை நடந்திருக்கும் 11 போட்டிகளில் தமிழ்நாடு 5 முறைகள் சிறந்த மாநிலமாக அறிவிக்கப்பட்டுள்ளன. இதற்கான "சுழற் கேடயம்" தொடர்ந்து கடந்த இரண்டு ஆண்டுகளாக இம் மாநிலத்துக்கும் கிடைத்துள்ளது.

பயிற்சியில் தேர்ச்சி பெற்றவர்கள் தொழில் பழகுவோர் சட்டத்தின் கீழ், ஒரு தொழிலில் மேலும் பயிற்சி பெறலாம்.

### தொழிலாளர்களுக்கான மாலை வகுப்புகள் திட்டம்

நோக்கம் : தொழிற்சாலைகளில் வேலை செய்யும் பெரும்பாலோருக்கும் அவர்கள் புரியும் தொழிலைப் பற்றிய நூலறிவு போதிய அளவுக்கு இருக்க வேண்டுமென்பதே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். ஆகையால் எல்லா பொறியியல் தொழில்களுக்கும் பொதுவான தொழிற்சாலை கணித இயல், வரைபடங்களை அறிதல் குறித்த


அடாடா! இந்தப் பூச்சிங்க பயிரை நாசம் பண்ணிடுச்-சிங்களே!
VOLTAS
பயப்படாதீங்க ! அதுங்களைப் போக்க நான் வழி காட்டறேன்.
பார்த்தீங்களா? இந்தப் பூச்சிமருந்து எப்படி வேலை செய்யுதுன்னு!
ஆச்சரியமா இருக்குதே! ஒரே மருந்து பலவித பூச்சிங்களை தீர்த்துக் கட்டுதே!!
ஆமாம், ஜோலோன் அப்படிப்பட்ட ஒரு பூச்சிமருந்தாக்கும்! பலவிதப் பயிர்ப்பூச்சிங்களைத் தீர்த்துக் கட்டுது ஒரே பூச்சிமருந்து ஜோலோன்.
ஜோலோன்
பயிர்ப்பூச்சி மருந்து உபயோகியுங்கள். மிகச்சிறந்த செழுமையான பருத்தி விளைச்சலைப் பெறுங்கள்.
ஜோலோன் பல்வேறு பூச்சிகளை அழிக்கும் ஒருமித்த பூச்சிமருந்து
விளியோகஸ்தர்கள் வோல்டாஸ் லிமிடெட்
கெமிக்கல்ஸ் டிவிஷன்
பம்பாய் அகமதாபாத் செகந்தராபாத் புதுடில்லி கல்கத்தா சென்னை பெங்களூர்
HT-VT-6800


தமிழ்நாட்டில் தரிசுநிலங்களை சாகுபடி நிலங்களாக்க அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு பண்ணைக் கழகம் திருநெல்வேலி மாவட்டத்தில் 12 ஆயிரம் ஏக்கர் நிலத்தையும் செங்கற்பட்டு மாவட்டத்தில் 8 ஆயிரம் ஏக்கர் நிலத்தையும் குத்தகைக்கு எடுத்துள்ளது. சாகுபடி நிலங்களாக மாற்றும் அடிப்படைப் பணிகள் துவக்கப்பட்டுவிட்டன.
தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு அடிப்படை மருத்துவ வசதிகளை அளிக்கும் வகையில் பலநோக்கு மக்கள் நல்வாழ்வுப் பணியாளர்களை உருவாக்கத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.
செய்தியே சித்திரமே
பல்கலைக் கழகப் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்க தமிழ்நாடு அரசு திட்டமிட்டு வருகிறது!

அடிப்படை போதனை, நுண் கருவிகளைப் பயன்படுத்தும் முறை முதலியவற்றில் தொழிலாளர்களுக்குள்ள நூல் அறிவை மேம்பாடு செய்தற் பொருட்டு இவ்வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தமிழகத்தில் தொழிற்சாலைகளையும், தொழிலாளர்களையும் அதிகமாகக் கொண்ட சுற்றுப்புறத்தில் உள்ள சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய 5 தொழிற் பயிற்சி நிலையங்களில் குறிப்பிட்ட தொழிற் பிரிவுகளில் மேற்கூறிய மாலை நேர வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தொழில் புரியும் நிறுவனங்களினால் அனுப்பப்பட்ட தொழில் குறித்த போதனைகளைப் புரிந்து கொள்ளும் திறமையுடைய எல்லாத் தொழிலாளர்களும் இம் மாலை நேர வகுப்புகளில் சேரத் தகுதியுடையவராவர். இதற்கென அமைக்கப்படும் குழு ஒன்றினால் மனுச் செய்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள தொழிலாளர்கள் திங்கள் ஒன்றுக்கு ரூ. 2/-கட்டணம் செலுத்த வேண்டும். இவ்வகுப்புகளில் சேர்க்கப்படுகையில் ரூ. 10/- மட்டும் நிலைய முன்பணம் செலுத்த வேண்டும். இதனை தவணை ஒன்றுக்கு ரூ. 2/- வீதம் 5 தவணைகளிலும் செலுத்த வகை செய்யப்பட்டுள்ளது. இத்தொகை தேர்வு முடிந்த பின்னர் திருப்பித் தரப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் இப்பயிற்சியாளர்களுக்குத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. தேர்ச்சியாளர்களுக்கு மாநிலப் பயிற்சி மன்றம், சான்றிதழ் வழங்கும்.

**இடம் பெயர்ந்த நெசவாளர், பொற்கொல்லர் மற்றும் மாதிரி உருவமைப்புச் செய்பவர் ஆகியோருக்கான பயிற்சித் திட்டம்:**

மேற்கூறிய தொழில்களில் ஈடுபட்டுள்ளவர் பெரும்பாலும் அதனை வாழையடி வாழையாகக் கடைபிடித்து வருபவர்களாவர். ஆனால், இத்தொழில்களில் போதிய வருவாய் கிட்டுவதில்லை. தமிழ்நாடு அரசு இத்தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களது வருவாயைப் பெருக்கும் பொருட்டு, அவர்களுக்கு நல்ல பயனளிக்கும் தொழிலைக் கற்றுத்தர முன்வந்திருக்கின்றது. இதன் விளைவாக, 4 தொழிற் பயிற்சி நிலையங்களில் இம் மாதிரியான 160 தொழிலாளர்களுக்கு தொழிற்கல்வி அளித்து வருகிறது. தமிழ் எழுதப் படிக்கப் பேச தெரிந்த தொழிலாளர் இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெறத் தகுதியுடையவர்களாவர். இவர்களுக்கு வயது வரம்பு இல்லை. இலவசப் பயிற்சி, மாதம் ஒன்றுக்கு ரூ. 10/- உதவித் தொகை ஆகியவை இவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளாகும். கீழ்க்காணும் பயிற்சி நிலையங்களில், அவற்றிற்கெதிரில் காணும் தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

| பயிற்சி நிலையத்தின் பெயர் | | தொழிற் பிரிவின் பெயர் |
|---|---|---|
| 1. சேலம் | ... | 1. பொறிப்பகுதி பொருத்துபவர் மற்றும் கடைசல் பிடிப்பவர். |
| | | 2. பொறிப்பகுதி பொருத்துபவர் மற்றும் கருமான். |
| 2. பேட்டை (திருநெல்வேலி). | | 1. பொறிப்பகுதி பொருத்துபவர் மற்றும் கடைசல் பிடிப்பவர். |
| 3. மதுரை | ... | 1. பொறிப்பகுதி பொருத்துபவர் மற்றும் கருமான். |
| | | 2. செம்பு வேலையாள் மற்றும் தகர வேலையாள் (உலோகத் தகடு வேலையாள்) |
| 4. திருச்சி | ... | 1. பொறிப்பகுதி பொருத்துபவர் மற்றும் கருமான். |

இதற்கான பயிற்சிக் காலம் இரண்டு ஆண்டுகள். எல்லா வேலை நாட்களிலும் மாலை 6 மணி முதல் 9 மணி வரை வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இத்திட்டம் 1969-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் நடைமுறையில் உள்ளது. 1968-ல் 86 பயிற்சியாளர்களும், 1970-இல் 87 பேரும், 1972-இல் 52 பயிற்சியாளர்களும், ஜுன் 1973-ல் 54 பேர்களும் இத்திட்டத்தில் பயிற்சி பெற்று பயனடைந்துள்ளனர்.

**1961-ஆம் ஆண்டு தொழிற் பழகுநர் சட்டத்தின் கீழ் பயிற்சித் திட்டம் :**

நாடு முழுவதுமுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் தொழில் பயின்றவர்களை, தொழில் நிறுவனங்களுக்குத் தேவையானதேர்ச்சி பெற்ற தொழிலாளர்களாகப் பயிற்சி அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்நாள் வரை 201 வகைத் தொழில் நிறுவனங்கள் தொழிற் பயிற்சித் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இந்நிறுவனங்களின் அதிபர்கள் வரையறுக்கப்பட்ட தொழில்களில் பயிற்சியாளர்களைத் தேர்ந்தெடுத்து முறைப்படி பயிற்சியளிக்க வேண்டுமென்பது இச்சட்டத்தின் கட்டுப்பாடாகும். இதுவரை 61 தொழில்கள் தொழிற் பயிற்சி பெற வரையறுக்கப்பட்டுள்ளன.



பயிற்சித் தொழிலைப் பொறுத்து, பள்ளித் தேர்வு, அதற்கு இரண்டு வகுப்புகள் குறைந்த படிப்பு என்ற கல்வி தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

**அரசினர் தொழிற்பயிற்சி**

ஒவ்வொரு தொழிலுக்கான பயிற்சியைப் பொருத்து, பயிற்சியின் கால அளவு 6 மாதங்கள் முதல் 4 ஆண்டுகள் வரை வேறுபடுகிறது. இப்பயிற்சியில் சேர குறைந்த அளவு வயது 14. அதிக பட்ச வயது வரையறுக்கப்படவில்லை.

தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றோரும், மற்றும் தேவையான பொதுக் கல்வி பெற்று தொழில் அனுபவம் இல்லாதோரும்கூட தொழிற் பழகுபவர்களாக அமர்த்தப்படலாம்.

ஓர் ஆண்டில் இருமுறை, அதாவது பிப்ரவரி/மார்ச்சு மற்றும் ஆகஸ்டு/செப்டம்பர் திங்களில் தொழில் பயில்வோர் வழக்கமாக அமர்த்தப்படுவர். வேலைவாய்ப்பு அலுவலகங்களின் மூலமாகவோ, தொழிற்பயிற்சி நிலையங்களின் மூலமாகவோ செய்தித்தாள்களில் விளம்பரங்கள் மூலமாகவோ, இப்பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கலாம். தொழிற் பயிற்சி நிலையங்களில் தேறி பயிற்சி நிலையத்தில் அவர்கள் வெற்றிகரமாக முடித்து பயிற்சிக் காலத்தின் நிகரான அளவு, தொழில் பழகும் கால அளவில் குறைத்துக் கொள்ளத் தகுதியுடையவர்களாகின்றனர். பயிற்சிக்கால முழுவதிலும், பயிற்சியாளர்களுக்குத் தொழிற்சாலைகளில் நடைமுறைப் பயிற்சித் தரப்படுகிறது. அத்துடன் சம்பந்தப்பட்ட தொழில்களைச் சார்ந்த 'தொடர் போதனை வகுப்புகள்' அரசின் செலவில் நடத்தப்படுகின்றன.

பயிற்சியாளர்களுக்கு சட்டப்படி தரப்படும் உதவித்தொகை விவரங்கள் பின்வருமாறு:—



| பயிற்சிக் காலம் | | சென்னை, பம்பாய் கல்கத்தா | மற்ற இடங்கள் |
|---|---|---|---|
| முதல் வருடம் | ... | ரூ. 100 | ரூ. 90 |
| 2-ஆம் வருடம் | ... | ரூ. 110 | ரூ. 100 |
| 3-ஆம் வருடம் | ... | ரூ. 120 | ரூ. 108 |
| 4-ஆம் வருடம் | ... | ரூ. 160 | ரூ. 144 |

தற்போது தமிழ்நாட்டில் இத்துறையினரால் ஆய்வு செய்யப்பட்ட 4,602 நிறுவனங்கள் உள்ளன. இவற்றில் 1,094 நிறுவனங்களில் 6,242 பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டுமென மதிப்பிடப்பட்டுள்ளது. தற்சமயம் 4,941 பேர் பயில்விக்கப்பட்டு வருகின்றனர்.

பயிற்சிக்குச் செய்யும் முதலீடு, நாட்டின் பொருள் உற்பத்திக்காகச் செய்யும் முதலீடாகும். இத்துறையில் தமிழ்நாடு இந்திய நாட்டில் மிகச் சிறந்த இடம் வகித்து வருகிறது.




## தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகம்

தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகம் இப்பொழுது 10 லாரிகளுடன் தொடங்கப்பட்டாலும் இந்த ஆண்டு 100 லாரிகள் வாங்கிவிடும்.

இந்த 100 லாரிகள் மூலம் ஆண்டுதோறும் அரசுக்கு 20 லட்சம் ரூபாய் செலவு மீதமாகும்.

கடந்த 3-6-'75 அன்று சென்னையில் பொருள் போக்குவரத்துக் கழகத்தை முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தொடங்கிவைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகம் புதிய ஏற்பாடாக நம்முடைய மாநிலத்திலே முதல் முயற்சியாக உருவாக்கப்பட்டிருக்கிறது.

முன்னாள் இராணுவத்தினருக்கு முன்னுரிமை தரும் இந்தப் பொருள் போக்குவரத்துக் கழகம், தொழிலாளர்களுக்கு நன்மைகளைச் செய்வதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கிற ஓர் அரசு நாட்டுடைமைக் கொள்கையை நம்முடைய இந்திய நாட்டின் சூழ்நிலையைப் பொறுத்த அளவில் குறிப்பாகத் தமிழ்நாட்டின் நிலையைப் பொறுத்தளவில், செயல்படுத்த அமைக்கப்பட்ட நிறுவனங்களில் ஒன்றாகும்.''

# இல்லங்களைப் பொலிவுறச் செய்யும் சிறந்த இல்லம்— காதி கிராஃப்ட்

கோடைக்கேற்ற கதர் பருத்தி வகைகள்
கண்ணைக் கவரும் வண்ண வண்ணப்பட்டு
தினுசுகள், தாகம் தணிக்க பதநீர், சுவை
மிகுந்த தேன், அக்மார்க் செய்யப்பட்ட
செக்கெண்ணெய், உடலுக்கு உறுதி
அளிக்கும் பனைவெல்லம், மணமும், அழகும்
பெருக்கும் குறிஞ்சி வாசனை சோப்பு,
வெள்ளை வெளேர் சலவைக்குக் கோபுரம்
சோப்பு, சிறந்த முறையில் செய்யப்பட்ட
காலணிகள், தோல் பொருட்கள்,
வேலைப்பாடு மிக்க மண்பாண்டங்கள்,
இல்லத்தை அலங்கரிக்க எழில்மிகு மரச்
சாமான்கள், பிரம்பு, மூங்கிலிலான
பொருட்கள் மலிவு விலை தீப்பெட்டிகள்,
அழைப்பிதழ் அச்சிட காகிதங்கள்.

தமிழகமெங்கும் அமைந்துள்ள 180

**காதி கிராஃப்ட் களிலும்**

மலிவு விலையில் கிடைக்கும்.
வாங்கிப் பயன் பெறுவீர்!
கிராமக் கைவினைஞர்களை ஊக்குவிப்பீர்!



வெளியீடு: தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்


# மாநிலச் செய்தி நிலையம்— நூலகம்

**பொது அறிவை வளர்த்துக் கொள்ளப் பெரிதும் உதவுவது, நூலகம் என்பதை நாம் அறிவோம். தமிழகத்தில் பல்வேறு நூலகங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒருவகையில் சிறப்புப் பெற்றிருக்கிறது. தமிழக அரசின் செய்தி நிலையமும் அதோடு இணைந்த நூலகமும் மக்களுக்குப் பயனுள்ள வகையில் உதவி வருகின்றன. இதனை விளக்குகிறது இந்தக் கட்டுரை.**

காலை எட்டு மணி!

நாளேடுகளைக் கையில் வைத்துக்கொண்டு, நாட்டு நடப்புகளைக் கவனமாகப் படித்துக் கொண்டிருக்கின்றனர் ஒரு பக்கம்.

புத்தகங்களைப் பிரித்து வைத்துக் கொண்டு அதில் ஆழ்ந்திருக்கின்றனர் இன்னொருபக்கம்.

சென்னை அண்ணாசாலை அரசினர் தோட்டத்திலுள்ள மாநிலச் செய்தி நிலையமும் (State Information Centre) அதோடு இணைந்த நூலகமும் (Library) நம்மையெல்லாம் நல்லறிவு பெற நல்வரவு கூறுகின்றது.

இந்நிலையம் தமிழ்நாடு அரசு செய்தி - மக்கள் தொடர்புத் துறையைச் சேர்ந்தது.

அரசினர் தோட்டத்திலுள்ள கலைவாணர் அரங்கக் கட்டடத்தில், செம்மையாகச் செயல்பட்டு வரும் இந்தச் செய்தி நிலையம் 1956-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது.

இந்நிலையம் நான்கு வழிகளில் பணிபுரிந்து வருகின்றது. அவை: 1. விசாரணைப் பிரிவு 2. விற்பனைப் பிரிவு. 3. நூலக பிரிவு 4. திரைப்படப் பிரிவு.

விசாரணைப் பிரிவின் வேலை என்ன?

தமிழ்நாட்டிலுள்ளவர்களுக்கும், வெளி மாநிலங்களிலுள்ளவர்களுக்கும், வெளிநாடுகளிலிருந்து வருகிறவர்களுக்கும் தக்க வழிகாட்டியாக இப்பிரிவு இருந்து வருகின்றது. 1971-74-ஆம் ஆண்டுகளில் 97,530 பேர் தகவல்களுக்காகவும், பிற உதவிகளுக்காகவும் இங்கு வருகை தந்துள்ளனர். இவர்களில் சுமார் 10,000 பேர் வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். இவர்களெல்லாம் தமிழகத்தைப் பற்றிப் பொதுவான தகவல்களைத் தெரிந்து கொள்ள வந்திருந்தார்கள். இம்மாதிரி வருகிறவர்களுக்கெல்லாம் தக்கவாறு உதவி புரிந்து வருகிறது இந்நிலையத்தின் விசாரணைப் பிரிவு (Enquiry Section).

இந்த ஆண்டுகளில் சுமார் 1,500 வெளிநாட்டினரும் இங்கு வருகை தந்திருக்கின்றனர். தமிழகம் பற்றிய பொதுவான தகவல்கள் அறியவும், பிற உதவிகளுக்காகவும் இவர்கள் இப்பிரிவின் உதவியை நாடினர்.

நேரில் மட்டுமல்லாமல், தொலைபேசி, கடிதம் மூலம் தொடர்பு கொண்டும் பலர் தகவல்கள் பெறுகின்றனர். இவ்வாறு 39,219 விசாரணைகள் கவனிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் கண்ணகிக் கோயில் எங்கிருக்கிறது? தமிழகத்தில் சுற்றுலாவுக்கேற்ற இடங்கள் எங்கெங்குள்ளன? கன்னியாகுமரியிலுள்ள நினைவுப் பாறையின் முக்கியத்துவம் என்ன? அந்தமான், நிகோபார் தீவுகள்—போக்குவரத்து வசதிகள் பற்றி விவரம் தர இயலுமா?

இவைபோன்ற பல்வேறு விசாரணைகளுக்குத் தக்கவாறு பதில்கள் தந்து உதவி வருகின்றது இந்த விசாரணைப் பிரிவு.

தமிழக அரசின் திட்டங்கள், சாதனைகள் முதலானவற்றை விளக்கிடும் துண்டு அறிக்கைகள், சிறு வெளியீடுகள் போன்றவற்றைப் பொது மக்களுக்கு வழங்கிடும் பிரிவுதான் விற்பனைப் பிரிவு (Sales Section). கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழக அரசின் வெளியீடுகள் ரூ. 1,745.85க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசின் செய்தி-மக்கள் தொடர்புத்துறை வெளியிட்டு வரும் இலவச வெளியீடுகளும் கல்வி, சமூகப் பண்பாட்டு நிலையங்களுக்கு அவ்வப்போது விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. செய்தி நிலையத்துக்கு வருகை தருவோருக்குங்கூட இவ்வெளியீடுகள் வழங்கப்படுகின்றன.

செய்தி நிலையத்தோடு அறிவு வளர்ச்சிக்குத் தூண்டுகோலாய் ஒரு நூலகமும் (Reference Library) இயங்கி வருகின்றது. சுமார் 10,000 நூல்கள் இடம்பெற்றுள்ள இந்நூலகத்திற்குக் கடந்த மூன்று ஆண்டுகளில் 2,43,783 பேர் வருகை தந்துள்ளனர்.

இந்த ஆண்டுகளில் 3504 பத்திரிகைகள் வாங்கப்பட்டுள்ளன. 1226 நூல்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன. பலதிறப்பட்ட 13,963 பத்திரிகைத் துணுக்குகள் தொகுத்து வைக்கப்பட்டுள்ளன. 2000 புத்தகங்கள் அரசு அலுவலர்களுக்கும், தலைமை அலுவலகங்களுக்கும், ஊழியர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளன. பழைய பத்திரிகைத் துணுக்குகள் சுமார் 1000 பார்வைக்காகக் கொடுக்கப்பட்டுள்ளன. இங்கே 134



தேசப்படங்களும், ஏராளமான பத்திரிகைகளும், 500 பருவ இதழ்ச் சுவடிகளும் உள்ளன.

ஞாயிறு உட்பட மற்ற எல்லா நாட்களிலும் காலை 8 மணி முதல் இரவு 7 மணி வரை இந்நூலகம் திறந்திருக்கும். இங்குள்ள நூல்கள் பார்வைக்காக (Reference) மட்டுமே அன்றி, வெளியில் தரப்படுவதில்லை. 1972-ல் மாநில சுயாட்சி பற்றிய சிறப்புச் சுற்றறிக்கை (Special Folder) ஒன்றை இந்நிலையம் தயாரித்துத் தமிழக முதல்வர் அவர்களுக்கு வழங்கி யுள்ளது.



சென்னை அருங்காட்சியகத்திற்கு (Museum) 20 சுதந்தரப் போராட்ட வீரர்களின் புகைப்படங்களை, இந்நூலகம் பல்வேறு இதழ்களிலிருந்து தொகுத்துத் தந்துள்ளது. தேசியத் தலைவர்களின் புகைப் படங்களையும் இது வழங்கியுள்ளது. இவையெல்லாம் கண்காட்சி நடத்தப் பெரிதும் உதவி புரிந்தன.





சமுதாய வளர்ச்சிக்கும், வளத்துக்கும், சீர்திருத்தத்துக்கும் துணை புரியும் சாதனங்களில் திரைப்படமும் ஒன்று என்பதை நாமறிவோம். குழந்தைகளுக்கும் ஏன் பெரியவர்களுக்கும்கூட இதன்மூலம் ஒரு கருத்தை எளிதில் பதிய வைக்க முடியும்.

செய்தி நிலையத்தின் சார்பில் இயங்கி வரும் திரைப்பட பிரிவு (Film Section) ஏறத்தாழ 2166 படக்காட்சிகள் காட்டியுள்ளன. குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் ஒத்துழைப்புடன் குடிசைப் பகுதிகளிலும், கல்வி சம்பந்தமான நிலையங்களிலும் படக் காட்சிகளைக் காட்டி மக்களை மகிழ்வித்து வருகின்றது.

அரசு விழாக்களின்போது, முக்கியப் பேச்சாளர்களின் சொற்பொழிவுகளைப் பதிவு செய்வதற்கென பதிவு நாடா (Tape Recorder) ஒன்றும் இங்கு உள்ளது. செய்தி நிலையத்தின் மூலமாக, மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்குத் திரைப்படங்கள் அனுப்பப்படுகின்றன. இப்பிரிவில் பல்வேறு தமிழ், ஆங்கிலப் படங்கள் உள்ளன.

இவ்வாறு நாளும் நற்பணியாற்றிவரும் செய்தி நிலையம், ஒரு கலங்கரை விளக்காய்த் திகழ்ந்து வருகிறதென்றால் அது மிகையல்ல!

—பி.வி.ஜி.

# ஆறுக் தமிழரசே நூறாண்டு வாழ்க!

**கவிஞர் கா.வேழவேந்தன் எம்.எல்.ஏ.**



தமிழரசே! தமிழரசே வாழ்க! உன்றன்
தளிர்வயதும் ஆறுண்டா? இவ்வா றுண்டில்
இமையுயர்த்தி நாங்களெல்லாம் வியக்கும் வண்ணம்
எத்தனைஎத் தனைபணிகள் முடிக்கின் றாய்நீ
அமைந்திட்ட தமிழாட்சி நிகழ்த்திக் காட்டும்
அற்புதங்கள், செயல்திட்டம் அனைத்தும் சேர்த்துச்
சுமைசுமையாய் உன்தோளில் சுமக்கின் றாயே
சொலும்புள்ளி விவரங்கள் ஒன்றி ரண்டா?

காட்டுவளக் காட்சிகளின் மாட்சி சொல்வாய்!
கடல்வளத்துப் புதிரெல்லாம் அவிழ்த்து வைப்பாய்!
பாட்டுவள ஆழத்தைக் காட்டு தற்குப்
பரிசளித்து வெண்பாக்கள் நெய்து தந்தாய்!
மாட்டுவளம், கோழிவளம் செழிப்ப தெல்லாம்
வனப்புமிக்க படங்களுடன் தொகுத்துச் சொல்வாய்
ஏட்டுவளம் காட்டுகின்ற 'அர'சே! உன்றன்
எழில்வளத்தால் பலர்விழிகள் திறந்த தன்றோ!

அடித்தளத்து மாந்தர்களின் வாழ்வு யர்த்த
அன்றாடம் உழைக்கிறது கலைஞர் ஆட்சி!
விடியாத பொழுதென்றே ஏங்கு வோர்க்கு
விழிதந்து வழிதந்து நலங்கள் சேர்த்தோம்!
ஒடிந்திட்ட உள்ளமுடன் கண்ணீ ரோடும்
உழன்றிருந்த விதவையர்க்கு வாழ்வு தந்தோம்!
படிப்போர்கள் பாராட்டும் திட்ட மெல்லாம்
பலவகையில் நாட்டோர்க்கு விளக்கிச் சொல்வாய்!

மின்னல்களே மழைமேக முகப்பு! துள்ளும்
வெள்ளலைகள் கடல்மங்கை முகப்பு! வீட்டில்
சன்னல்களே வெளிச்சத்தின் முகப்பு! கீழைச்
செவ்வானம் பகலவனின் முகப்பு! மங்கைக்
கன்னத்து முத்திரைகள் காதல் வாழ்க்கைக்
காவியத்தில் காணுகின்ற முகப்பு! மின்னும்
வண்ணவண்ண முகப்போடு எழிலே கொஞ்ச
மாதமிரு முறைகாட்சி தருகின் றாயே!

அப்பப்பா! ஆண்டுதோறும் நீயும் நாட்டில்
ஆற்றியுள்ள தொண்டுகளை எண்ணிப் பார்த்தால்
எப்படியெல் லாம்உன்னைப் புகழ்வ தென்றே
எழுத்தின்றித் தவிக்கின்றேன்! அந்தக் காலச்
'செப்புப்பட் டயங்க'ளெலாம் ஆண்டி ருந்த
சீர்வேந்தர் வரலாற்றுப் பெருமை கூறும்!
இப்போது நமையாளும் ஆட்சி யாளர்
'எழில்தூதன்' நீயன்றோ? வளர்க, வாழ்க!

இதோ, இந்தியாவின் பசுமைப் புரட்சிக்கு ஒரு விஞ்ஞானரீதியான துணை

**எக்ரோமின்®**
**சிலேடெட் தாவர உணவு**

**பயிர் விளைச்சலை 20% அல்லது அதற்கு மேலும் அதிகமாக்குகிறது.**



நீங்கள் ஒரே வாரத்தில் பயனைக் கண்கூடாகக் காணலாம்!

தாவர போஷாக்குச் சத்துக்களை உபயோகிப்பதன் மூலம் உங்கள் பயிர் விளைச்சலை வெகுவாக அதிகமாக்கிக் கொள்ள முடியும் என்பதை தீவிரமான ஆராய்ச்சி நிரூபித்துள்ளது.

- எக்ரோமின் ஒன்று மட்டுமே சிலேடெட் தாவர உணவாகும்.
- எக்ரோமின் நீரில் முற்றிலும் கரைந்து விடுகிறது.
- எக்ரோமின் சிறப்பாகக் கிரகிக்கப் படுவதற்கென கரைக்கும் மற்றும் பரப்பும் சாதனம் அடங்கப் பெற்றது.
- எக்ரோமின் ஒரு இலைத் தெளிப்பாகும்—மற்ற அக்ரோ—கெமிகல்களுடன் இதை உபயோகிக்கலாம்.
- எக்ரோமின் ரசாயன உரங்களின் பயனை அதிக அளவில் பெற உதவுகிறது.
- எக்ரோமின், தானியங்கள், எண்ணெய்வித்துக்கள், வாசனைத் திரவியங்கள் இழைப் பயிர்கள், பழங்கள், மற்றும் தோட்டப் பயிர்களுக்கென, வெவ்வேறு அமைப்புகளில் கிடைக்கிறது.




**எக்ரோமின்**
**சிக்கனமாக பயிர் விளைச்சலை அதிகமாக்கும் சிலேடெட் தாவர உணவு.**

® ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்.



எக்ரோமின் பற்றிய அதிகப்படி விவரங்களை அறிய இந்த முகவரிக்கு எழுதவும்:
**ஏரீஸ் எக்ரோ-வெட் இண்டஸ்ட்ரீஸ் ப்ரை. லிட்.**
தபால் பெட்டி எண் 9417,
பம்பாய் 400 093.

**Distributors :**
S.L.N.S. AGENCIES, 19, Municipal Bldg., Srinivasa Park, Salem-636002.
INDOMAG CORPORATION,
3, Kollanpattarai Street, East Veli Street, Madurai-1.

# காற்றினிலே எழும் நச்சுச் சூழ்நிலை

டாக்டர் வா.செ. குழந்தைசாமி,
இயக்குநர், தொழில் நுட்பக் கல்வி.

## மாணவர் அரங்கம்

இயற்கை மனிதனுக்குப் பல்வகை வளங்களையும், வசதிகளையும் தருகிறது என்றாலும், அவன் அவற்றை அடைவதற்கும், பயன்படுத்துவதற்கும், இயற்கையின் போக்கில் தலையிட வேண்டியவனாக இருக்கிறான். இத்தலையீடு, அவனது புறச்சூழ்நிலையைப் பெரும்அளவிற்கு மாற்றுகிறது. இம்மாறுதல்களின் விளைவுகள் ஆரம்பத்தில் அவ்வளவாகத் தெரியவில்லை. எல்லையின்றி விரியும் காலவெளியில், தொடர்ந்து நிகழும் மாற்றங்கள் ஒரு குறிப்பிட்ட எல்லையைத் தாண்டியபின், அவற்றின் விளைவுகள், அதனால் ஏற்படும் தீமைகள் ஆங்காங்கு தென்படத் தொடங்குகின்றன. அப்படிப்பட்ட . விளைவுகளில் ஒன்றுதான் நம்மைச் சுற்றியுள்ள வளி மண்டலம் தூய்மை குறைந்து மாசுறுவது ஆகும். வளி மாசுறுதல், அல்லது Air Pollution என்ற ஒரு தீமை, சில ஆண்டுகட்குமுன் அவ்வளவாகப் பேசப்பட்டதில்லை. இன்று முன்னேறிய நாடுகளில் அது முக்கியமான பிரச்சினையாகிவிட்டது இந்தியா போன்ற முன்னேறும் நாடுகளிலும்கூட, ஆங்காங்கு மாசுற்ற வளியின் தீங்குகள் மக்களைப் பாதிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

எப்படி மீன்கள் நீர் மண்டலத்தில் வாழ்கின்றனவோ அது போல மனிதன் காற்று மண்டலத்தில் வாழும் உயிர்க்குலத்தைச் சேர்ந்தவன். மாசுபடிந்த தண்ணீரில் மீனினம் நலமாக வாழ இயலாதது போலவே, மாசுபடிந்த வளிமண்டலத்தில் மனித இனம், மற்ற உயிர்கள், நலத்துடன் வாழ முடியாது.

அறிவியல், பொறியியல் சாதனங்களின் துணை கொண்டு மனிதன் தனது சூழ்நிலைகளில் ஏற்படுத்தியிருக்கும் மாறுதல்கள் இன்று கணிசமானவை இந்த மாறுதல்களின் காரணமாகப் பல்வகையான விலங்கு பறவை, உயிர்வகைகள் நிரந்தரமாகவே மறைந்துவிட்டன. பல மறையும் தருவாயிலிருக்கின்றன. கடந்த நூறு ஆண்டுகளில் சராசரி ஒவ்வொரு ஆண்டிற்கும் ஓர் உயிரினம் மறைந்துவிட்டதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள மாறுதல்களின் மூலம் ஆபத்தான நிலைமைக்குட்பட்டிருக்கும் உயிர் வகைகளின் பட்டியலில் 275 விலங்கு வகைகளும், 300 பறவைகளும் இடம் பெற்றிருக்கின்றன. இந்தப் பட்டியல் முழுமையானதோ, முடிவானதோ அல்ல. நிலத்தின் தட்பவெப்ப நிலைகூட 1880-ஆம் ஆண்டிலிருந்து 1940-க்குள் ஒரு பாரன்ஹீட் அளவு கூடி, பின்னர் கடந்த 30 ஆண்டில் அதிலிருந்து ½ பாரன்ஹீட் அளவு குறைந்திருக்கிறது.

தொடர்ந்து அதிகரிக்கும் சமா மக்கள் தொகையைச் துறை ளிக்க, இரண்டு முக்கிய தேவைப் களில் முன்னேற்றம் பட்டது. ஒன்று வேளாண்மைத் துறை. இரண்டாவது தொழில் துறை.

வேளாண்மைத் துறையில் விளைவை அதிகப்படுத்த செயற்கை உரங்கள், பயிர் களின் அழிவைத் தடுக்க பூச்சி மருந்துகள் ஆகியன மிகுதியும் பயன்படுத்தப்பட்டன; பயன் படுத்தப்படுகின்றன. தொழில் வளர்ச்சி, மண்ணின் பல்வகை யான கனி வளங்களையும், எண்ணெய் வளங்களையும் பயன் படுத்த வேண்டிய தேவையை வளர்த்தது. இவற்றின் விளை வாக ஏறத்தாழ, 5,00,000 இரசாயனப் பொருள்கள் சம் பந்தப்பட்ட கழிவுகள் இன்று நமது சூழ்நிலையை மாசுபடுத் தும் நிலையில் அப்புறப்படுத்தப் படுகின்றன.

இயற்கைக் கழிவுகளை ஏற்று, ஆபத்தின்றித் தன்னுள் ஆட்கொள்ளும் ஆற்றல் இயற்கைக்கு உண்டு. ஆனால் மனிதன் தொடர்ந்து சேர்க்கும் பல்வகைச் செயற்கைக் கழிவுப் பொருள்களை முழுவதும் ஏற்று ஆட்கொள்வது இயன்றதல்ல. எனவே இயற்கைச் சூழ்நிலை நாள்தோறும் மாறுகிறது. அப்படிப்பட்ட மாறுதலுக்குள்ளாகும் முக்கியப் பொருள் காற்று. காற்று மாசுபடுவதையும், அதற்கான காரணங்களையும் அதன் விளைவுகளையும் இப்போது காண்போம்.

நம்மைச் சுற்றிலும் உள்ள வளி மண்டம், அதாவது Atmosphere அதை மாசுபடுத்தும் பொருள்களைக் காலப்போக்கில் தீர்த்து, அவற்றினால் ஏற்படும் தீங்குகளைப் போக்க வல்லதுதான் என்றாலும் அதற்கும் ஒரு அளவுண்டு. அந்த அளவுக்கு மேலான கழி பொருள்கள் வளி மண்டலத்தில் தொடர்ந்து கழிக்கப் படும் போதுதான் வளிமண்டலம் மாசுறுகிறது.

தொழிலகங்களிலிருந்து வரும் வாயுக்களில் Sulphur Dioxide, Nitrogen Oxide, Hydrogen Sulphide, Hydrogen Fluoride, Hydrocarbon, Carbon-monoxide, Oxidants ஆகியன வளிமண்டலம் அசுத்தப்படுத்துவதற்குக் காரணமாக அமைந்தவை. இவற்றுள் Sulphur Dioxide மின் நிலயங்கள், பெட்ரோலியம், எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை ஆகியவற்றிலிருந்து வெளிவருகின்றது. இதனால் கண், தொண்டை எரிச்சல், நுரையீரல் சம்பந்தமான பிணிகள் ஆகியன ஏற்படலாம். மென்மையான தாவரங்களையும் இது அழித்து விடும்.

ஹைட்ரஜன் சல்பைட் கெட்ட நாற்றம் வீசும் ஒரு

வகை வாயு. பெட்ரோலயம், தோல்பதனிடுதல், சாய உற்பத்தி, விஸ்கோஸ்ரயான், எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆகிய தொழிற்சாலைகளிலிருந்து இவ்வாயு வெளிவருகிறது. மூச்சுவாங்குதல், மூச்சுவாதம், மூச்சு எரிச்சல் ஆகியன இதனால் ஏற்படுகிறது. Nitrogen Dioxide என்ற ஒருவகை அமிலம். இது வெடி மருந்து தொழிற்சாலை, கார், பஸ் போன்ற வாகனங்கள் ஆகியவை மூலம் பரவுகிறது. மூச்சிழுப்பு, எரிச்சல் ஆகியவற்றுக்குக் காரணமாக இருப்பதுடன் நுரையீரலையும் பாதிக்கும் தன்மை கொண்டது.

Hydrogen Fluoride என்ற வாயு, உரம், இரசாயனப் பொருள்கள், அலுமினியம் ஆகியவை உற்பத்தியாகும்தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகிறது. எரிச்சல் Fluorosis எனப்படும் நோய், பற்சிதைவு, நுரையீரல் சம்பந்தமான பிணி ஆகியவற்றைத் தோற்றுவிக்கின்றது. Hydro Carbonகள் Organic Chemical தொழிற்சாலைகள், பஸ், கார், போன்ற வாகனங்கள் ஆகியவற்றிலிருந்து வெளிவருகின்றன. இவை புற்றுநோய் போன்றவை தோன்ற ஏதுவாகின்றன.

புழுதி, அதாவது, Dust ஆனது சுரங்கங்கள், கல்லெடுக்கும் பாறைகள், பாண்டங்கள் உற்பத்தி செய்யும் இடம், மின் நிலையங்கள், சாலைகள் ஆகியவற்றிலிருந்து தோன்றுகின்றன. மூச்சுபற்றிய நோய்கள், Silicosis, Asbestosis எனப்படும் நோய்கள் தோன்ற இது காரணமாக இருக்கிறது. சிலவகைப் புழுதிகள், குறிப்பாக உலோகப் புழுதிகள் நச்சுத்தன்மை கொண்டவை.

Carbon Monoxide பொதுவாக எரிகின்ற பல்வகையான ஆற்றல் பொருள்கள் இயங்கிகளிலிந்து வரும் கழிவுப் பொருள்கள், எரி உலைகள் வெளியிடும் வாயுக்கள் மூலமாக காற்று மண்டலத்தை அடைகிறது. இது சுவாசத்தைப் பாதிக்கும் நச்சுவளியாகும்.

காற்று மண்டலத்தை மாசுபடுத்தும் முக்கியமான நச்சுவளிகள், அவை தோன்றும் இடங்கள், அவற்றினால் ஏற்படும் தீமை பற்றிப் பொதுவாகப் பார்த்தோம். இதனால் மனிதர்கட்கு மட்டுமின்றித் தாவரங்கட்கும், விலங்குகட்கும், பறவைகட்கும் தீங்குகள்



நேர்கின்றன. ஓர் அளவிற்கு மேல் நச்சுக் காற்றின் கலவையால் பாதிக்கப்பட்ட தாவரங்கள் பட்டுப் போகின்றன. அல்லது வளர்ச்சி குன்றிவிடுகின்றன. இப்படிப் பாதிக்கப்பட்ட தாவர வகைகள் அதாவது புல், பயிர் ஆகியவற்றைத் தின்னும் விலங்கினங்களும் பாதிக்கப்படுகின்றன. அமெரிக்காவில் Florida மாநிலத்தில் தொழிற்சாலைகளிலிருந்து வரும் Fluoride களால் பாதிக்கப்பட்ட புல்லைத் தின்ற கால்நடைகள் Fluorosis நோய்வாய்ப்பட்டு இறந்தன. இப்படி ஏராளமான சான்றுகள் கூறலாம்.

வளிமண்டலம் மாசுறுவதாகிய தீங்கின் நிலை, நமது இந்தியத் துணைக் கண்ட அளவில் எப்படி இருக்கிறது என்று ஆராய்வது முக்கியம். தொழிற்சாலைகள் நிறைய அமைந்துள்ள பெருநகரங்கள் யாவும் பல்வேறு அளவுகளால் மாசற்ற காற்றினால் பாதிக்கப்பட்டுள்ளன. பம்பாய்ப் பெருநகரில் 60 நெசவாலைகள், 150 தொழில் பேட்டைகள்,

## மாணவர் அரங்கம்

மாணவர் அரங்கம் பகுதி மாணவர்களுக்குப் பொது அறிவு ஊட்டும் பகுதியாகும்.

இந்த இதழில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் வா. செ. குழந்தைசாமி அவர்கள் வானொலியில் 15.6.75 அன்று 'காற்று மாறுதல்' பற்றி ஆற்றிய உரையை இப்பகுதியில் வெளியிடுகின்றோம்.

விழிப்பும், முன்னோக்குள்ள பார்வையும் அறிவு வளர்ச்சியின் சாதனங்களை அப்போதைக்கப்போது பயன்படுத்திக் கொள்ளும் வேகமும் இன்றைய இன்றியமையாத தேவைகள் என்பதை வலியுறுத்தும் அரியதோர் தகவல் தொகுப்பாகும் இது.

மாணவர் அரங்கம் பகுதியில் மாணவர்கள் பங்கேற்பதைத் தமிழரசு விரும்பி வரவேற்கிறது.

300 இரசாயனத் தொழிற்சாலைகள், இன்னும் 2,500-க்கு மேற்பட்ட மற்ற வகைத் தொழில் அகங்களும் இருப்பதால் கலப்பு நிகழ்ந்து காற்று மாசுபட்டு நிற்கிறது. பம்பாயின் செம்பூர்ப் பகுதி மிகவும் பாதிக்கப்பட்ட இடமாகும். இந்திய நகரங்களில் மாசுபட்ட காற்றுப் பிரச்சினை சற்று மோசமான நிலைக்கு எட்டியுள்ள நகரம் கல்கத்தாவாகும். இங்கு இயங்கிகளிலிருந்து வெளிப்படும் (Carbon Monoxide) இன் கலப்பு ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய முன்னேறிய நாடுகளில் காற்று மாசடைந்த நகரங்களின் நிலையைவிட மோசமானதாக இருக்கிறது.

காற்று மிகுதியும் மாசுற்றுள்ள மற்றொரு இந்திய நகரம் கான்பூர். இங்கு 60 தோல் பதனிடும் ஆலைகளும், 10 நெசவாலைகளும் மற்றும் பல்வகைத் தொழிற்சாலைகளும் உள்ளன. இங்கு நிலக்கரி பெரும் அளவில் பயன்படுத்தப்படுகிறது. அத்துடன் போக்குவரத்தும் மிக அதிகம். இவை காற்று மாசுறக் காரணமாகும்.

நமது சென்னை நகரும் மாசுற்ற காற்றினால் பாதிக்கப்பட்ட நகரங்களில் ஒன்றாகும். இங்குள்ள தொழிற்சாலைகள், ஆலைகளில், அனல் மின் நிலையங்கள், எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, உர ஆலைகள் இரசாயனத் தொழிற்சாலைகள் முக்கியமானவை. இவைதவிர கிட்டத்தட்ட 50,000 தானியங்கும் வாகனங்கள் சாலைகளில் ஓடுகின்றன. இவற்றினால் காற்று நகரின் பல பகுதிகளில் மாசுற்று இருக்கிறது.

சென்னையில் காற்று மிகவும் மாசுபட்டுள்ள இடம் பேசின் பிரிட்ஜ் பகுதியாகும். இங்கு படியும் புழுதியின் அளவு உலகின் மற்ற பல பெருநகர்ப் பகுதிகளில் படியும் புழுதியைவிட அதிகமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. பேசின் பிரிட்ஜிக்கு அடுத்தபடி காற்று மாசுற்று உள்ள இடம் பொது மருத்துவமனைப் பகுதியாகும்.

காற்று மாசுற்றிருப்பதை எப்படி அறிகிறோம். எப்படி அளக்கிறோம் என்ற கேள்வி எழுவது இயல்பு. காற்றின் தூய்மை நிலையை வரைப்படுத்தப்பட்ட சில அளவைகள் மூலமாகத்தான் முடிவு செய்ய வேண்டும். இதற்காக நியதிப்படுத்தப்பட்டுள்ள கருவிகளும்

இருக்கின்றன. காற்றில் எந்த வித நச்சுக் கலப்பும் அறவே இல்லாதிருக்க வேண்டும் என்பதில்லை. எவ்வகைக் கலப்புக்கும் ஓர் அனுமதிக்கப்பட்ட அளவு இருக்கிறது. அதற்கு மேல் இருக்கக்கூடாது என்பதுதான் தேவை. இந்த அனுமதிக்கப்பட்ட அளவு இடத்திற்கு இடம், நாட்டுக்கு நாடு சற்று மாறக்கூடியதுமாகும். ஆங்கு இருக்கும் தட்ப வெப்பநிலை, வாழும் உயிர்வகை, அவற்றின் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப் பொறுத்திருக்கிறது. காற்றின் தூய்மை நிலை அல்லது மாசுற்ற நிலையை, அதன் படியும் புழுதி அளவு (Settleable dust fall rate) Sulphation rate, Suspended particulates, Nitrogen-dioxide, Sulphur dioxide, Hydrogen Sulphide ஆகிய அளவைகளின் மூலம் தீர்மானிக்கப்படுகிறது. ஒரு நகரில் இவை குறைவாக இருக்கின்றனவா, கூடுதலாக இருக்கின்றனவா என்பதை எப்படி அறியலாம் என்ற கேள்வி எழலாம். இதற்காக, காற்றுத் தன்மை அளவு நிலையங்கள் (Air Sampling Stations) ஏற்படுத்த வேண்டும். அந்நிலையங்களில் அதற்கான கருவிகளை அமைக்க வேண்டும். அவற்றின் மூலம் சேகரித்த காற்றை ஆய்வதன் மூலம், அதன் தூய்மை நிலையை அறிய முடியும். சென்னையில் ஆறு "காற்றுத்தன்மை அளவு" நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை கட்டடங்களின் உச்சியில், பெரும்பாலும் மொட்டைமாடிகள் தரைமட்டத்திலிருந்து 5 முதல்

1948-ஆம் ஆண்டில்தான் இந்தியாவில் சுற்றுலாத்துறைக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் அமைப்பு அளவில் சுற்றுலாத்துறை இயங்கத் தொடங்கியது 1958-ஆம் ஆண்டில்தான்.

நாளுக்குநாள் இந்தியாவில் சுற்றுலாத்துறை நன்கு வளர்ந்து வருகிறது. 1975-ஆம் ஆண்டில் மட்டும் ஐந்து இலட்சம் வெளிநாட்டவர்கள் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் 83 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி கிடைக்கும்.

10 மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலையங்கள் அமைந்துள்ள இடங்களில் கிண்டி தொழிற்பேட்டை, அண்ணா சாலையில் ( Automobile Assosiation ) கட்டடம் பொது மருத்துவமனை, பேசின்பிரிட்ஜ், எண்ணூர், கொடுங்கையூர் ஆகியனவாகும்.

இவற்றில் எடுக்கப்படும் மாதிரி அளவைகள் மூலம் தான் சென்னை நகர்ப்புறக் காற்றின் கலப்புத் தன்மை பற்றிய விவரம் சேகரிக்கப்படுகிறது! அனுமதிக்கப்பட்ட அளவிற்கும் மேலாகக் காற்று அசுத்தப்பட்ட நிலைமை நகரின் குறிப்பிட்ட பகுதிகளில் ஏற்பட்டிருக்கிறது என்பது தெளிவு. நாம் வீதி, வளித் துப்புரவு, கழிநீர், சாக்கடைத் துப்புரவு என்பதுபோல, காற்றுத் துப்புரவு பற்றியும் இனிக் கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என்பது தெளிவாகிறது.

நகர்ப்புற வளர்ச்சியில் ஒரு நகரத்துக்கு அருகில் இன்னொரு நகரம் தோன்றுவதும், நகரங்கள் விரிவடைவதும் தான் பிரச்சினைகளைக் குறைக்கும். அது தான் முறையும்கூட. அந்த நிலையில், அடுத்து அடுத்து நகரப்புறங்கள் அமைந்து, நகர்ப்புற வளர்ச்சியில் முன்னணியில் திகழும் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.

பொருளாதார வளர்ச்சி, உணவுப் பெருக்கம் ஆகியன தொடர்ந்து வளர்ந்து வர வேண்டியனவாகும். இதன் விளைவுகளாகக்கழிவுப் பொருள்களும் அதிகமாகத்தான் செய்யும். எனவே சுற்றுப்புறம் மாசுறுதல் காற்றுக் கலப்பு ஆகியன நாளும் வளரும் ஒரு பிரச்சினையாக உருவெடுத்திருக்கிறது. இவை அறிவியல் வளர்ச்சியின் பொறியியல் எழுந்துள்ள அடிப்படையில் தொல்லைகள், இவற்றை அறிவியல் பொறியியல் துணை கொண்டுதான் சமாளிக்க வேண்டும். எனவே, அதற்கான ஈடுபடுவது ஆய்வுகளில் தேவையாகும். கொஞ்சம் கவனமும், கட்டுப்பாடும் இருக்குமானால், கழிவுப் பொருள்களின் தூய்மைத் தரத்தை உயர்த்துவதும், சற்றுப் பாதுகாப்பான சூழ்நிலைகளில் அவற்றை வெளியேற்றுவதும் இயன்றதாகும்.


தமிழரசு
16-7-75
இதழ்
தொழில் வளர்ச்சிச் சிறப்பிதழாக
மலருகிறது


கழிவுப் பொருட்கள் மிகுதியாக வெளியிடும் தொழிற்சாலைகள் மக்கள் வாழும் பகுதியினின்றும் சேய்மையில் அமைப்பதும் அவற்றை அமைக்கும்பொழுதே கழிவுப் பொருள்களினால் ஏற்படும் விளைவுபற்றி எண்ணி ஏற்ற தடுப்பு வழிகளைக் கையாளுவதும் தேவையாகும்.

மனித சமுதாய வளர்ச்சி ஒரு முடிவில்லாத பயணம். அப்பயணத்தில் புதிய பாதைகள், புதிய திருப்பங்கள் அமைவது இயற்கை; தேவையுமாகும். ஆங்காங்கு புதிய பிரச்சினைகள், முன்பு அனுபவித்திராத தொல்லைகள், தென்படுவதும் எதிர்பார்க்கத் தக்கதே. அவற்றிற்கான பரிகாரம் தேடுதல் பயணத்தின் ஒரு பகுதி. அதை உரிய காலத்தில் மேற்கொள்வதும், உரிய வழிகளில் மேற்கொள்வதும், நமது அறிவையும் திறனையும் பொறுத்திருக்கிறது. விழிப்பும் முன்னோக்குள்ள பார்வையும், அறிவு வளர்ச்சியின் சாதனங்களை அப்போதைக்கப்போது பயன்படுத்திக் கொள்ளும் வேகமும் இன்றைய இன்றியமையாத தேவைகள்.





கண்ணொளி வழங்குதல்

# படமும் செய்தியும்

8.6.'75 அன்று புதுக்கோட்டையில் முதல்வர் கலைஞர் நிகழ்ச்சிகள்



நரிக்குறவர் குடியிருப்புத் திறப்பு விழா



தஞ்சை மாவட்டம் கூத்தாநல்லூர் பண்டிதக்குடி மதகு அணை பாலத்தை முதல்வர் கலைஞர் 6.6.'75 அன்று திறந்து வைத்தார்.



கருணை இல்லம் திறப்பு விழா



அரசு ஊழியர் குடும்பப் பாதுகாப்புத்திட்டத்தின்படி உயிரிழந்த அரசு ஊழியர் குடும்பத்துக்கு முதல்வர் ரூ.10000 வழங்கினார்



உடல் ஊனமுற்றோர்க்குக் கருவிகள் வழங்குதல்




மொஸாய்க் நோய் தாக்கப்படாதது.

மொஸாய்க் நோய் தாக்கப்பட்டது.

# மரவள்ளியில் தேமல் நோய்

நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போகும் மக்கள் தொகைக்கு ஏற்ப, உணவு உற்பத்தியைப் பெருக்குவது இன்றியமையாத வொன்ருகும். ஆகவே, விஞ்ஞானிகள் தற்போது மரவள்ளி போன்ற அதிகப் பழக்கமில்லாத உணவு பொருட்களின் மேல் நாட்டங் கொண்டு, அத்ன் உற்பத்தியை —மற்ற. பயிர்களில் காணுவதைப் போன்று—அதிகமாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அவ்வாறு காணும் வழிமுறைகளில், மரவள்ளியைத் தாக்கி அதன் விளைச்சலைப் பாதிக்கும் நோய்களைப் பற்றியும், அவைகளைத் தடுக்கும் முறைகளைப் பற்றியும் அறிதல் மிக முக்கியமானதாகும். தற்போது மரவள்ளியைத் தாக்கும் நோய்கள் பற்றி ஒரு சில தகவல்களே கிடைத்துள்ளன. ஆயினும், அத்தகவல்கள் அந்நோய்களைப் பற்றிய முக்கியத்துவத்தை உணர்த்துவனவாய் இல்லை. அத்தோடு மக்களிடையே இப்பயிரைத் தாக்கும் நோய்களானது அவ்வளவொன்றும் முக்கியமானவையல்ல என்ற ஒரு தவருன கருத்தும் நிலவியுள்ளது. நோயுற்ற பயிரைக் காணும் யாரும், மரவள்ளியைத் தாக்கும் நோய்கள் யாவும் முக்கியமானவைகளே என்று எண்ணுவர். இப்பயிரை பூசணம் (Fungi), பாக்டீரியா (Bacteria), வைரஸ் (Virus) போன்றவைகள் தாக்கி விளைச்சலை வெகுவாகப் பாதிக்கின்றன.

தமிழ் நாட்டில் சேலம், கன்னியாகுமரி, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் சுமார் 1,25,000 ஏக்கரில் மரவள்ளி பயிரிடப்படுகிறது. சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் உற்பத்தியாகும் மரவள்ளி முக்கியமாக மாவு (ஸ்டார்ச்) எடுப்பதற்கும், கன்னியாகுமரி மாவட்டத்தில் இது உணவுப் பொருளாகவும் உபயோகப்படுகிறது. தற்போது இம் மாவட்டங்களில் பயிர் செய்யப்படும் 'பர்மா' மற்றும் 'மலபார்' என்னும் வகைகளில் 'பர்மா' வகையே அதிக அளவில் பயிரிடப்படுகிறது. இப்பயிரை 'கசாவா மொசைக்' (Cassava Mosaic) என்னும் 'வைரஸ்' நோய்த் தாக்கி விளைச்சலை வெகு வேகமாகப் பாதிக்கிறது. உலகின் மற்ற இடங்களில் நடத்திய ஆராய்ச்சியில் இந் நோயினுல், விளைச்சல் 20 முதல் 90 சதம் வரை பாதிக்கப்படுவதாயும், மற்றும் சேலம் மாவட்டத்தில் உள்ள மரவள்ளி ஆராய்ச்சி நிலையத்தில் இந் நோய் பற்றிய ஆய்வில் (Survey) இந் நோயினுல் விளைச்சலானது 53.00 முதல் 78.00 • சதம் வரையும்பாதிக்கப்படுவதாயும் கண்டறியப்பட்டுள்ளது.

இந்நோயானது மற்ற செடிகளில் காணும் தேமல் நோய் போன்றே (Mosaic) காணப்படும். முளையிலிருந்து அறுவடை வரை உள்ள காலத்தில் எப்போது வேண்டுமானுலும், இந்நோயினுல் மரவள்ளிச் செடி தாக்கப்படலாம். இந் நோயானது, இளம் செடிகளின் இலையில் பச்சையம் (Chlorophyll) குறைந்த மஞ்சள் கலந்த பகுதிகளாக—தேமலைப் போல்—காணப்படும். நோய் உற்றச் செடியின் இலைகளைச் சூரிய வெளிச்சத்திற்கு எதிராகப் பிடித்துப் பார்த்தால், இது நன்ருகத் தெரியும். மேலும், இலைகள், அதன் உருவம், வடிவம் ஆகியவற்றை இழந்து வளைந்து திரிந்து காணப்படும். கிழங்குகளில் 'வரிக் கிழங்கு' என்று சொல்லக்கூடிய மற்ெருரு வகை அறிகுறியும் காணப்படுகின்றது. இம் மாதிரியான கிழங்குகளில் வெடிப்புகள் தோன்றிச் சிறியதாகவும், 'ஸ்டார்ச்' மற்றும் எடை ஆகியவை குறைந்தும் காணப்படுவதால், அவை மிகக் குறைந்த விலைக்கே எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இவ்வித அறிகுறியுள்ள நோயுற்ற செடியின் தண்டினை மறு பருவத்திற்குக் கரணையாக உபயோகித்தால், அதிலிருந்து தோன்றும் செடியின் கிழங்குகளிலும் இவ்வாருன அறிகுறி தோன்றும். இதனுல் 90 சதவிகிதம் வரை விளைச்சல் குறைந்து காணப்படுவதாகத் தெரியவருகிறது.

நோயுற்றச் செடியிலிருந்து எடுத்த கரணைகளை நட்டு அதிலிருந்து தோன்றிய வரிக் கிழங்குகளின் எண்ணிக்கையையும், மற்றும் முதலிலேயே நோயற்ற செடியிலிருந்து எடுத்த கரணைகளை நட்டு அதிலிருந்து வரும் நல்ல செடியின் வளர்ச்சிக் காலத்தில் அது நோயுருமாயின், அதில் தோன்றிய வரிக் கிழங்குகளின் எண்ணிக்கையையும் ஒப்பிட்டதில் முதல் வகையான செடியில் தோன்றிய கிழங்குகளில் 23.3 சதமும், இரண்டாவது வகைச் செடியில் சராசரி 14.0 சத கிழங்குகளும் பாதிக்கப்பட்டு உள்ளதாகக் கணக்கிடப்பட்டது.

நல்ல செடிகளில் இந் நோயானது அறுவடைக்குச் சில நாட்களுக்கு முன்பு தோன்றுமேயானுல் அதனுல் மகசூல் அதிகமாகப் பாதிக்கப்படுவதில்லை. அவ்வாறு அல்லாது அவை இளமையிலேயே பாதிக்கப்பட்டால், விளைச்சல் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. மேலும் ஒருநோயுற்ற செடியைச்சுற்றிலுமுள்ள மற்ற செடிகள் நன்ருக மருந்து தெளித்துப் பூச்சி தாக்குதலினின்று காப்பாற்றப்பட்டிருந்தாலும், அவைகளிலிருந்து எடுத்த குச்சிகளை நடவுக்கு உபயோகித்தால் அதிலும் சுமார் 5 சதம் வரை நோய் வருவதாகக் கண்டறியப்பட்டு உள்ளது.

இந்நோயானது 'பீமிசிய டொபாசி' (Bemisia Tabasi) என்னும் வெள்ளைப்பூச்சியினுல் பரப்பப்படுகிறது. இப்பூச்சியானது நோயுற்ற செடியிலிருந்து சாற்றை உறிஞ்சிய பின், நல்ல செடியிலிருந்து சாற்றை உறிஞ்சும்போது நோய்க்குக் காரணமான 'மொசைக் வைரஸ்' நச்சுறியை நல்ல செடிக்குப் பரவச் செய்கின்றது. இப்பூச்சியானது நோயுற்ற செடியிலிருந்து சாற்றை ஒரு மணி நேரம் உறிஞ்சிவிட்டு அதன்பின், நான்கு மணி நேரம் கழித்து நல்ல செடியிலிருந்து சாற்றை உறிஞ்சினுலும், அந்த நல்ல செடிக்கு நோய் பரவுகிறது.

வெள்ளைப் பூச்சி மற்றும் 'மொசைக்' நோய் ஆகியவை எந்தப் பருவத்தில் அதிகமாக காணப்படுகின்றன என்ற கணக்கெடுப்பில், ஏப்ரல்—மே மாதங்களில் பூச்சியும், ஜுன்—ஜுலை மாதங்களில் நோயும் அதிகமாகக் காணப்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது ஆகவே நல்ல செடியில், 'வைரஸ்' நோயைத் தன்னகத்தே கொண்டுள்ள வெள்ளைப்பூச்சி தாக்கிய சுமார் ஒரு மாத காலத்திற்குப்புப் பின் நோயின் அறிகுறிகள் தோன்ற ஆரம்பிக்கின்றன.

## நோயின்தடுப்புமுறைகள்

நடவுக்கு நல்ல செடிகளிலிருந்து எடுத்த குச்சிகளையே உபயோகித்தல் அவசியமாகும். அவ்வாறு செய்வதன் மூலம் நோய் பரவுதலைத் தடுப்பதோடு மகசூல் இழப்பையும் தடுக்கலாம். நல்ல குச்சிகளைத் தேர்ந்தெடுக்கும்போது நோயுற்ற செடியைச் சுற்றிலுமுள்ள செடிகள் நல்லவைகள் போல். தோற்றம் அளித்தாலும் அவைகளை உபயோகிக்கக் கூடாது. ஏனெனில், சில சமயம் அவைகள் 'வைரஸ்' நோயின் அறிகுறிகளை வெளிக்காட்டாது நல்ல செடிகள் போன்று தோற்றமளிக்கும். நடவுக்குப் பின் செடிகளில் நோய் காணப்பட்டால், அவைகளை உடனே அகற்றி விடுவதன் மூலம்நோய் மற்ற செடிகளுக்குப் பரவாமல் தடுக்கலாம். இந் நோயானது வெள்ளைப் பூச்சியின் மூலம் நோயுற்ற செடியிலிருந்து நல்ல செடிக்கும் பரப்பப்படுவதால், செடிகளை இளமை முதல் கடைசி வரை மருந்து தெளித்துக் காத்தல் வேண்டும். இப் பூச்சிகளைக் கொல்ல 'ரோகார்' அல்லது 'மெட்டாசிஸ்டாக்ஸ்' போன்ற மருந்துகளைத் தண்ணீரில் கலந்து. (450 மில்லி மருந்தை 450 லிட்டர் தண்ணீரில் கலந்து) இலை முழுவதும் நனையுமாறு தெளித்தல் அவசியமாகும். மேலும் 'எண்டிரின்' தெளித்தசெடிகளில் செவட்டை (Mite) அதிகமாகக் காணப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது. எனவே, மரவள்ளியின் மகசூலைக் குறைக்கும் தேமல் நோயாயை மேற்கூறிய வகையில் கட்டுப்படுத்துவது உழவர் பெருமக்களின் கடமையாகும்.

தகவல் : க. ரங்கநாதன், எம்.எஸ்சி (வே.).,
உதவி பயிர் நோய் நிபுணர்,
மரவள்ளிக் கிழங்கு ஆராய்ச்சி நிலையம், சேலம்-7.

வெளியீடு : தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை-7.

# பசுவுக்குப் பாராட்டு விழா!

அண்மையில் 'ரோரிங் ஸ்பிரிங்' என்ற இடத்தில் ஒரு பசுவுக்குப் பாராட்டு விழா நடைபெற்றது! அப்பாராட்டு விழாவில் ஏறத்தாழ 2,000 பேர்கள் கலந்து கொண்டனர்! அவ்விழாவில் அமெரிக்க நாட்டின் 'ஹோல்ஸ்டின்—பிரிஷியன்' சங்கத்தினர் 'கோரின்னி' என்ற பெயருடைய 'ஹோல்ஸ்டின்' இனப் பசுவுக்குப் பாராட்டிதழ் வழங்கி பரிசு அளித்ததுடன், மரியாதையும் செலுத்தினர்!

உலகில் வேறெந்தப் பசுவைக் காட்டிலும், 1974-ஆம் ஆண்டில் அதிக அளவுப் பால் தந்த அப்பசுவைப் பற்றிப் பேசாத மக்களே பென்சில்வேனிய நாட்டில் இல்லை என்று சொல்லலாம்! சராசரியாக 'ஹோல்ஸ்டின்' பசு 13,000 பௌண்ட் பால் மட்டுமே கொடுக்கையில், கடந்த ஆண்டு அப்பசு 50,750 பௌண்ட் பால் கொடுத்து உலகச் சாதனைப் புரிந்துள்ளது!

''எப்பொழுது வேண்டுமானுலும் பால் கொடுக்கும் தாராள மனம் படைத்தவள்!'' என்று அந்த அதிசயப் பசுவைப் பற்றி, அதன் உரிமையாளர் கென்னத் மௌரி என்பவர் குறிப்பிட்டுள்ளார்!

பருத்த மடியே அப்பசுவிற்குப் புகழ் தேடிக் கொடுத்துள்ளது! 10 வயதும், 1,600 பௌண்ட் எடையும் உள்ள அப்பசுவே உலகச் சாம்பியன் பசுவாக விளங்குகிறது!




115 நாட்கள் கொண்ட '1251' என்ற இரகத்தை திரூர் குப்பம் ஆராய்ச்சி நிலையம் தந்துள்ளது! 'டி.கே.எம்.6', 'டி.என்.1' ஆகியவற்றை ஒட்டு சேர்த்து கண்டு பிடிக்கப்பட்ட இரகம் இது. நவரைப் பட்டத்தில் 'கோ. 29',, 'டி.கே.எம். 6' 'காஞ்சி', 'கண்ணகி', ரத்னா' 'காவேரி' ஆகியவற்றைவிட அதிக மகசூல் கொடுக்கிறது. வட மாவட்டங்களுக்கு நவரை பட்டத்திற்கு மிகவும் ஏற்ற நெல் இது.

கடந்த ஆண்டுகளில் எங்களது கவனத்தைப் பெரும்பாலும் நெல் வேளாண்மையிலேயே அதிகமாக செலுத்தி வந்துள்ளோம். ஆனால் இந்த ஆண்டு நெல்லுடன்கூட புன்செய்த் தானியங்களிலும் அக்கறை காட்டி புன்செய், தோட்டக்கால் நிலங்களிலும் புதிய




குறைந்த வயதும், அதிக மகசூலும் தரும் நெல்லை தேர்ந்தெடுக்கிறோமோ அவ்வளவுக்கு நல்லது என்பது நமது நீண்ட நாளையக் கனவு! அந்தக் கனவு நிறைவேறப் போகிறது இந்த ஆண்டில்! "1140" என்ற ஒரு புதிய இரகத்தை ஆடுதுறையில் கண்டு பிடித்துள்ளோம்! இதன் வயது 155 நாள். ஆகஸ்ட் மாதத்திலிருந்து அக்டோபர் மாதம் வரை எப்பொழுது விதைத்தாலும் இதன் வயது மாறுவதில்லை! 'கோ-25' ஐ விட அதிக மகசூல் தருகிறது! 'ஐ. ஆர்.20', 'பொன்னி' ஆகியவற்றிற்கு ஈடாக இதன் விளைச்சல் திறன் உள்ளது. மேலும் 'ஐ. ஆர். 20', 'பொன்னி' ஆகியவற்றை விட மிகவும் நல்ல முறையில் வறட்சியைத் தாங்குகிறது. அரிசி சன்னமாக பொன்னியை விட நீளமாக இருக்கிறது. எனவே, மார்க்கெட்டில் இந்த ரகத்திற்கு அதிக விலை நிச்சயம் கிடைக்கும். இலைப்புள்ளி நோய் தாக்குதலுக்கு இந்த இரகம் ஆளாவதில்லை. குறைந்த வயதும், அதிக மகசூலும், நல்ல இரக அரிசியும், வறட்சியைத் தாங்கி, புள்ளி நோயை எதிர்த்து நிற்கும் திறனும் ஒருங்கே கொண்ட இந்நெல்லை கண்டு பிடித்த வேளாண்மை விஞ்ஞானிகளுக்கு உங்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்த இரகத்தைச் செயல் விளக்கப் பாத்திகள் மூலமாக இந்த ஆண்டு அறிமுகப் படுத்துவோம் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.





முறைகளைப்பரப்ப, தீவிரமாகப் பணி செய்யத் திட்டமிட்டுள்ளோம். குறைந்த நீரில் நெல்லைப் போலவே அதிக மகசூல் தரவல்ல புதிய சிறுதானிய இரகங்கள் நம்மிடையே உள்ளன. 'சி.எஸ்.எச்-5' என்ற புதிய இரகச் சோளம் 90 நாளில் 2 டன் மகசூல் தரவல்லது! கோவில்பட்டி நெட்டை இரகச் சோளம் புன்செய் நிலத்திலும், தோட்டக்காலிலும் நன்றாக வளர்ந்து அதிக மகசூலுடன் தட்டையும் தருகிறது! எனவே, இந்த இரண்டு இரகங்களையும் அதிகப் பரப்பில் பயிர் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். 'டெக்கான்', 'கங்கா. 5' ஆகிய மக்கச் சோள இரகங்களும், 'பி.ஆர். —202', 'கோ. 7', 'கோ. 10', 'சாரதா' ஆகிய இராகி இரகங்களும் நெல்லுக்கு ஈடாக மகசூல் தரவல்லவை! இந்த சிறுதானிய இரகங்கள் எல்லாருக்கும் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில், அதிகமாக விதை உற்பத்தி செய்ய ஆரம்பித்துள்ளோம். எனவே தட்டில்லாமல், நல்ல வீரிய சிறுதானிய விதைகள் வேளாண்மைக் கிடங்குகள் மூலமாக கிடைக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.





'பி. ஆர். —202'

மரவள்ளிக் கிழங்கு நமக்கு புதிய பயிரல்ல! சேலம், குமரி, நீலகிரி மாவட்டங்களில் அதிகமாக பயிரிடப்படும் இப்பயிரை, மற்றைய மாவட்டங்களில் பரப்பிடத் திட்டமிட்டுள்ளோம். புதிதாகப் பயிரிடுவதற்கு, ஏக்கருக்கு 15-லிருந்து 20-டன் விளைச்சல் தரும் 'எச். —165' என்ற இரகத்தை வழங்கிட நமது மாநிலத்தில் மூன்று இடங்களில் 300 ஏக்கர் பரப்பளவில் மரவள்ளிக் கிழங்கு விதைப்பண்ணை அமைத்து வருகிறோம்.

நமது வேளாண்மை வளர்ச்சியின் ஆணிவேர் பொறுக்கு விதை! நல்ல விதைகளை அரசு பண்ணைகளில் விளைவிப்பதுடன், தனியார்க் கழனிகளிலும் இப்போது பயிர் செய்து வருகிறோம்! இதற்காக ஆறு இடங்களில் விதை நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்த ஆண்டு கோவை மாவட்டத்தில் மேலும் ஒரு விதை நிலையம் துவக்க இருக்கிறோம். இந்நிலையங்கள் மூலமாக சிறுதானியங்களிலும் ஒட்டு வீரிய விதை எவ்வாறு உற்பத்தி செய்வது என்பதை ஆர்வமுள்ள உழவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து, அவர்களுக்கு வேண்டிய தாய் விதைகளையும் கொடுப்பதற்கான ஒரு புதியத் திட்டத்தை இந்த ஆண்டு துவக்குகிறோம்! நல்ல விதை தயாரிக்கும் முயற்சியில் இது மேலும் ஒரு முன்னேற்றம் எனக் கருதி இத்திட்டத்தின் பயனைப் பெற்றிட உழவர் பெருமக்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தீவிர வேளாண்மைத் திட்டத்தை தர்மபுரி, சேலம், முகவை, குமரி ஆகிய நான்கு மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தியுள்ளோம். இதன் பயனாக இந்த மாவட்டங்களில் அதிகமாக செயல் விளக்கப் பண்ணைகள் அமைக்கப்படும். சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தை முகவை, தர்மபுரி தவிர மாநிலம் முழுவதும் பரப்பியுள்ளோம். இத்திட்டத்தினால் வருகிற 5 ஆண்டுகளில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 1.50 கோடி ரூபாய் அளவில் நிதி கிடைக்கும். முகவைக்கும், தருமபுரி மாவட்டத்திற்கும் புன்செய் நில அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கப்படும்.

இரசாயன உரம் இந்த ஆண்டு தட்டின்றி கிடைக்கும் என எண்ணுகிறேன். அதுபோல பூச்சி மருந்துக்கும் குறைவு இருக்காது! இதற்கு வேண்டிய முன் நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். எப்பொழுதும் போல மண் அரிப்பு, குழாய்க் கிணறு அமைப்பது போன்ற திட்டங்களைத் தீவிரமாகச் செயலாக்குவோம். வேளாண்மைக் கடன்களையும் காலத்தே வழங்கிட ஆவன செய்து வருகிறோம்.

அறிவையும், ஆற்றலையும் மூலதனமாக்கி, நாடு நலமுடன் வாழ—நாட்டு மக்கள் முன்னேறிட—அயராது உழைத்திடும் உழவர் பெருமக்களே! **உங்களின் முன்னேற்றத்திற்காக வேளாண்மைத்துறை விரைந்து செயல்படும், உங்கள் உற்ற தோழனாக விளங்கும்** என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்!








# உழவர் பெருமக்களுக்குக் காணிக்கை!


அ. வேங்கடராமன்,
பி.எஸ்சி.(வே).,எம்.எஸ்.,
இயக்குநர்,
வேளாண்மைத் துறை,
சென்னை-600 005


காலங்கள் யாருக்காகவும் காத்திருப்பதில்லை! கடந்த காலங்களையே எண்ணி நிற்காமல், வருபவை இன்பம் பயப்பவையாக இருக்கும் என்ற நம்பிக்கையில் வாழ்பவர்கள் மக்கள்! அதிலும் குறிப்பாக இயற்கையின் துணை கொண்டு தொழில் நடத்தும் வேளாண் பெரு மக்கள், 'இந்த ஆண்டிலாவது நல்ல மழை பொழியும், நந்தமிழ் நாடு செழிக்கும்' என்ற நம்பிக்கையுடனும், 'தீமைகளின் பிடியினின்று விடுபட்டு மீண்டும் வீறுடன் தமிழக வேளாண்மை முன்னேறி விடும்!' என்ற அசைக்க முடியாத உணர்வுடனும் உள்ளனர்! கொடிய வறட்சிக்குப் பிறகு, ஆங்காங்கே பரவலாக மழை பொழியத் துவங்கியுள்ளதால், இந்த நேரத்திலே உழவர்களின் முன்னேற்றத்திற்கு உதவும் புதிய வேளாண்மைக் கண்டு பிடிப்புகளையும், திட்டங்களையும் தமிழக உழவர் பெருமக்களுக்குக் காணிக்கையாகப் படைத்துள்ளேன்.

ஆடுதுறை ஆராய்ச்சி நிலையம் 'ஆடுதுறை-31' என்ற பெயரில் ஒரு நெல் இரகத்தைத் தந்துள்ளது. 105 நாட்கள் வயது கொண்ட இந்நெல் தஞ்சை, திருச்சி மாவட்டத்தில் குறுவைப் பட்டத்திற்கும் நெல்லை, குமரி மாவட்டத்திற்கு கார் பட்டத்திற்கும், கோவை மாவட்டத்தில் கோடையில் பயிரிடவும் மிகவும் ஏற்றது. இப்பட்டங்களில் இன்று நடப்பில் உள்ள 'கருணை', 'கண்ணகி', 'அம்பை-1', 'கோ-29' போன்ற நெல் இரகங்களைவிட 'ஆடுதுறை-31' அதிக மகசூல் தர வல்லது. ஏற்கனவே செயல் விளக்கப் பண்ணைகளில் முற்போக்கு உழவர்களின் நிலத்தில் ஏனையோர் தெரிந்து கொள்வதற்காகவும், விதை உற்பத்திக்காகவும் பயிர் செய்துள்ளோம். எல்லா இடங்களிலும் நல்ல மகசூல்- 2 டனுக்கு குறையாமல்-கொடுத்துள்ளது.

இதையடுத்து, 'பூசா—33' என்ற இரகத்தையும் வெளியிட இருக்கிறோம். 105 நாள் கொண்ட இந்த இரகம் 'சபர்மதி', 'இரத்னா' ஆகிய இரண்டையும் ஒட்டுக் கட்டியதால் பிறந்தது. இந்த இரகம் 1.75-லிருந்து 2 டன் வரை மகசூல் தரவல்லது. இதன் சிறப்பு அம்சம் வடநாட்டுப் 'பாசுமதி' அரிசியைப்போல் இதுவும் நறுமணம் கொண்டது!

'ஆடுதுறை-31', 'பூசா-33' ஆகிய இரு இரகங்களையும் பரப்பிட கணிசமான அளவுக்கு நெல் விதை வழங்கிட வேண்டிய ஏற்பாடுகள் செய்துள்ளோம்.

சம்பாவிலும், தளாடியிலும் பல்வேறு காரணங்களுக்காக இன்னும் நீண்ட கால பயிரான 'கோ-25' இரகத்தையே பயிர் செய்து வருகிறோம். கடந்த ஆண்டில் தண்ணீர் தட்டு ஏற்படுகின்ற நேரங்களில் நீண்ட காலப் பயிர்களினால் என்னென்ன கேடுகள் விளைகின்றன என்பதைக் கண்கூடாகக் கண்டோம்! எவ்வளவு விரைவில் இந்த நீண்ட கால இரகத்தை விடுத்து, இதே பட்டத்தில் 'கோ-25' இரகத்தைவிட






"வீட்டிலே யாருங்க" என்ற குரல் கேட்டு எட்டிப் பார்த்தாள் பத்மினி. பெண் ஒருத்தி சிறுமியோடு நின்றிருந்தாள்.

"டீச்சரம்மா இருக்காங்களா?"

"என்ன சேதி?"

"டீச்சரம்மாவைப் பார்க்கணும்."

"நான்தான் டீச்சரம்மா... என்ன?"

"கும்புடறேம்மா".

அந்தப் பெண் கரங்குவித்து அந்தச் சிறுமியிடமும் சாடை காட்டினாள். உடனே அந்தச் சிறுமியும் கும்பிட்டாள்.

"இது என் தங்கச்சி டீச்சரம்மா. படிக்கறதுக்கு ஆசைப் படறா!"

"எத்தனையாவது படிக்கிறாள்?"

"இரண்டாவது. ஆனால் அவளை ஒழுங்கா பள்ளிக்கூடம் போக விட மாட்டேங்கறாங்க அவ அப்பாவும் அம்மாவும்;".

"ஏன்?"

"ஏதாவது வேலை வெச்சே கெடுத்துடறாங்க டீச்சர். எவ்வளவு சொன்னாலும் புரியலே."

"சரி, என்ன அதற்கு?"

"நீங்க இதுக்குப் பிரைவேட்டுச் சொல்லிக் கொடுக்கணும் சாயங்காலத்திலே. உங்க பெண்ணா நினைச்சி அக்கறையாச் சொல்லணும். எவ்வளவு ரூபாய்க் கேட்கறீங்க?"

"மூணு ரூபா" என்றாள் பத்மினி. பார்த்தால் அவ்வளவு சுத்தம் சுசியான பெண்ணாகப் படாதது அவளுக்கு ஒரு மாதிரியாகப்பட்டது.

"மூணு ரூபாயா?" என்று வாயைப் பிளந்தாள் அந்த யுவதி.

"ஆமா. சின்னப் பசங்களுக்குச் சின்ன மூளையிலே சன்னமா பாடம் சொல்லிக் கொடுக்கிறதுதான் கஷ்டம்."

"ஒரு நாள் முழுக்க உழைக்கணும்... அவ்வளவுதானே" என்று தனக்குத் தானே முணு முணுத்துக் கொண்ட அந்தப் பெண் "சரி. சொல்லிக் கொடுங்க" என்றாள்.

"அப்போ நாளையிலிருந்தா. முதல் தேதியிலிருந்தா?"

**எம். எஸ். ரவீந்திரன்**

அந்தப் பெண் சிறுமியைப் பார்த்தாள்.

"நாளைக்கே வர்றையா?"

"வர்றேன்".

"அப்போ நாளையிலிருந்தே நடத்துங்க டீச்சர். ஏழைப் பொண்ணு டீச்சர். நீங்க அவளை முன்னுக்குக் கொண்டு வரணும்!"

"நான் சொல்லித்தருவேன். கற்றுக் கொள்ள வேண்டியது அவளுடைய சாமர்த்தியம்."

"டீச்சாம்மா என்ன சொல்றாங்கண்ணு புரியுதாடி?"

"நான் நல்லாப் படிக்கறேங்கா".

அவர்கள் இருவரும் விடை பெற்றுக்கொண்டு சென்றனர். பத்மினிக்கு அந்தப் பெண்ணை பார்க்கச் சிரிப்பாகவும் இருந்தது, அதே சமயத்தில் பரிதாபமாகவும் இருந்தது

மறுநாள் மணி நாலரை இருக்கும். 'டீச்சர்' என்று குரல் கொடுத்துக் கொண்டே அந்தச் சிறுமி வந்து நின்றாள். அப்பொழுதுதான் பள்ளியிலிருந்து திரும்பி முகத்தில் சோப்புப் போட்டுக் கொண்டு இருந்த பத்மினி இரு விழி வரை சோப்பை வழித்து விட்டுக் கொண்டு பார்த்தாள்.

"வணக்கம் டீச்சர்."

"நீயா, உட்கார்" என்ற பத்மினி முகத்தைக் கழுவிக் கொண்டு டவலில் துடைத்தவாறே வந்தாள்.

"பள்ளிக்கூடத்துக்குப் போறையா?"

"இல்லே டீச்சர்."

"ஏன்?"

அந்தச் சிறுமி பதில் சொல்லவில்லை.

"சரி. குளித்தாயா?"

"ஓ. . ."

"மெய்யைச் சொல்லணும். பொய்யைச் சொன்னால் நான் சொல்லித் தரமாட்டேன். படிப்பும் வராது."

"இல்லே டீச்சர்."

"இனிமே எப்போ வந்தாலும் குளிச்சிட்டு தலைவாரிக்கிட்டு பொட்டு இட்டுட்டுச் சுத்தமா, அழகா வரணும், தெரியுதா?"

"சரி, டீச்சர்."



"ஸ்கூலுக்கு நிக்காமல் போகணும் . . என்ன?"

அந்தச் சிறுமி தலையாட்டினாள்.

"உன் பேரென்ன?"

"ருக்கு டீச்சர்."

"ருக்குமணியா?"

"ஆமா டீச்சர்."

"அக்கா பேரு?"

"முனிம்மா."

அதற்கு மேல் அவளுடைய அப்பா அம்மாவின் பேரையும் கேட்டு விட்டுப் பாடத்தைத் துவக்கினாள்.

பாடம் ருக்மணியின் மூளையில் நன்றாக ஏறியது. முதலில் சிறிது அலட்சியமாகச் சொல்லித் தந்த பத்மினியே வியந்து விறுவிறுப்படைந்தாள்.

முதல் தேதி வந்தது. "இதுவரை எவ்வளவு ஆச்சின்னு அக்கா கேட்டுட்டு வரச்சொல்லிச்சு டீச்சர்" என்றாள் ருக்கு.

"யாரு முனியம்மாவா? அப்பா அம்மா கேட்டுட்டு வரச் சொல்லலையா?"

"அக்காதான் என்னைப் படிக்க வைக்குது."

பத்மினி கணக்குப்பார்த்துச் சொல்லி அனுப்பித்தாள். சொன்ன ஐந்தாம் நாள் கொண்டு வந்து கொடுத்தாள் ருக்கு.

அடுத்த மாதம் ஒரு வாரம் கழித்துக் கொண்டு வந்து கொடுத்தாள்.

"என்ன இத்தனை நாள்?" என்றாள் பத்மினி.

"அக்காவை வேலை செய்ய வேணான்னுட்டாங்களாம் டீச்சர். அப்படியும் பிடிவாதமா போய் செய்து கூலி வாங்கியாந்து கொடுத்தது."

பத்மினிக்கு அவள் சொன்னது அவ்வளவாகப் புரியவில்லை என்றாலும் தனக்கென இருந்துவிட்டாள். ஆனால் அடுத்த மாதம் இரண்டு வாரம் கழித்தும் பணம் வராதபோது "என்ன ருக்கு, அப்புறம் உன் அக்கா கூலி வேலைக்குப் போகவே இல்லையா?" என்று கேட்டாள்.

"போக விடலையாம் டீச்சர். ஆனா எப்படியும் பணம்கொடுத்துடும்."

"உங்கப்பா அம்மாதானே தடுக்கிறது. அவங்களைக்கேளு."

"எங்கப்பா அம்மா வேறே. அதனப்பா அம்மா வேறே டீச்சர்."

பத்மினி துணுக்குற்றாள்.

"உனக்கு அக்கான்னு சொன்னேயடி?"

"கூடப் புறந்தது இல்லே டீச்சர்."

"உம்?"

"தெரிந்த அக்கா."

"தெரிந்த அக்காவா?" — பத்மினி வியப்போடு கேட்டாள். தெரிந்தவளுக்கு என்ன பிடித்தது டியூஷன் ஃபீஸ் கொடுக்கவும், ஊக்கப்படுத்தவும்.

"ஆமா டீச்சர். நான் நல்லா படிக்கிறதையும் இஸ்கூலுக்குப் போறதுக்கு அம்மா அப்பா கிட்டே அடம் புடிக்கிறதையும் பார்த்துட்டுதான் டீச்சர், அந்த அக்கா இப்படிச் செய்யுது."

பதமினி உண்மையிலேயே வியந்து போனாள். ஆனால் அவள் மட்டும் என்ன பணக்காரியா? தன் ஒருவளுடைய சம்பாத்தியத்தில் தன்னோடு தன் தாய், தந்தை, மங்கலம் இழந்த தமக்கை, அவள் குழந்தை, தம்பி இத்தனை பேரையும் அல்லவா காப்பாற்ற வேண்டிய நெருக்கடியில் அவள் இருக்கிறாள்.

"கொஞ்சம் கொஞ்சமாவது கொடுக்கச் சொல்லு..என்ன?"

"சரி டீச்சர்."

அன்றைக்குச் சென்ற ருக்கு, பத்து நாட்களாயிற்று, மீண்டும் வரவே இல்லை. பணம் கேட்டதால் வரவில்லை என்று சப்புக் கொட்டிக் கொண்டாள் பத்மினி.

அன்று பள்ளியில் கல்வி வாரம் கொண்டாடப்பட்டது. ஊரின் முக்கியப் பிரமுகர்கள் வரவழைக்கப்பட்டதோடு ஒரு உயர்தரக் கல்வி அதிகாரியும் வந்திருந்து உரையாற்றினார். அவர் தம் உரையின் முடிவில் ஒரு வேண்டுகோளையும் வலியுறுத்தினார் :

"ஊதியத்திற்காக வேண்டி பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களாகிய நீங்கள் எல்லாரும் உங்கள் உள்ளத்தின் சாந்திக்காக ஒரு வசதியற்ற சிறுவனுக்கோ அல்லது சிறுமிக்கோ விரும்பி இனமாகக் கல்வி என்னும் ஒளி விளக்கை ஏற்றி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அதுவே கல்விக்கு— நீங்கள் செய்யும் தொண்டு."

வாய்க்கு இலேசான வேண்டுகோள். ஆனால் பற்றாக்குறையில் உழலும் பத்மினிக்கு அது வயிற்றெரிச்சலைத் தந்தது. அவரைப் போலக் கற்றை கற்றையாகச் சம்பளம் வாங்குபவளா அவள்! பல்லின்மேல் நாக்கைப் போட்டுப்பலாச்சுளை போல் பேசிவிட்டார். எங்கே முடிகிறது!

வீட்டிற்கு வந்த பத்மினிக்கு அன்றும் ருக்கு வராதது வேதனையைத் தந்தது. அவளுக்கு என்று அமைந்தது ஒரே ஒரு 'டியூஷன்'. அதுவும் 'ஃபீஸ்' சரியாக வராத துரதிருஷ்டம். எப்படியும் ஒரு நாள் வரும் என்ற நம்பிக்கையோடு நடத்தலாம் என்றால் என்ன 'இல்லக்'. அந்தப் பெண்ணே வரவில்லையே. அந்த மூன்று ரூபாயை நம்பியல்லவா அக்காவின் குழந்தைக்கு அரை ஆழாக்குப் பால் அதிகமாக வாங்க ஆரம்பித்து விட்டிருக்கிறாள்.

பத்மினிக்கு முகம் அலம்பக் கூடத் தோன்றவில்லை. இந்த வாய்ப்புளிக்காத 'அட்வைஸு'க்கு நன்கொடை வேறு ஒரு ரூபாய்.

"டீச்சர்!"

பத்மினி துணுக்குற்று விழிப்படைந்தாள். அவளுக்கு அப்பொழுதுதான் இருளில் அமர்ந்திருப்பது புரிந்தது.

"டீச்சரம்மா!"

"யாரு?"

"ருக்கு டீச்சர்."

"ருக்மணியா?"

பத்மினி அந்த இருண்ட பகுதியை விட்டு எழுந்து வந்தாள். இந்த நேரத்தில் ஏன் ருக்மணி முனியம்மாவோடு வர வேண்டும். ஃபீஸ் கொடுக்கவா? அதற்கு ருக்மணியிடமே கொடுத்தனுப்பலாமே. ஒரு வேளை டியூஷனே வேண்டாம் என்று சொல்லிவிடுவாளோ! அப்படி யென்றால் அந்த மூன்று ரூபாய் நிரந்தரமாகவே போனதுதானே?

"இந்தாங்க டீச்சர் பிரைவேட்டுப் பணம். தாமஷம் ஆயிடுச்சேன்னு கோவிச்சுக்காதீங்க."

ஆவலோடு வாங்கிக் கொண்ட பத்மினி எண்ணினாள்.

"என்ன, ஆறு ரூபாய் இருக்கு?"

"ஆமாம்மா. இந்த ரெண்டு வாரத்துக்கும் ஒரு மாசமா கணக்குப் பண்ணி கொடுத்திட்டேன்."

"வேலை செய்ய விட்டாங்களா உன் அம்மா அப்பா?"

"உம். விட்டா ஏம்மா கேக்கறீங்க. நான் இதோட நிறுத்திக்கறேன்."

சுரீர் என்றது பத்மினிக்கு.

"ஏன்? ஏன் நிறுத்தறே? வேணும்னா ஒரு ரூபாய் குறைச்சுக்கோ."



"அதுக்கில்லேம்மா. உங்க கிட்டே சொல்றதுலே எனக்கென்ன கொறைஞ்சிடப் போவுது. இப்ப நான் வீட்டுக்குத் தெரியாம வந்து என் மூக்குத்தி வச்சிப் பணம் வாங்கியாந்திருக்கேம்மா."

யாரோ ஓங்கி 'நக்'கென்று குட்டியது போலிருந்தது பத்மினிக்கு. திடீரென்று அவள் கை கனத்தது. ஆறு ரூபாய்—அதுவும் காகிதம்—ஏன் அப்படிக் கனக்க வேண்டும்.

"அ . . அடகு வைத்தா . . மூக்குத்தியா?"

"ஆமாம்மா. இந்தத் தடவைதான் அதை வெச்சிக் கொடுத்துட்டேன் நாணயமா. அடுத்த தடவை நான் என்ன செய்வேன்? இவ கொடுத்து வைச்சது அவ்வளவுதான். நாங்க வர்றோம். கும்புடுறோம் டீச்சரம்மாவுக்கு."

ருக்குமணியும், முனியம்மாவும் திரும்பி ஓரடி எடுத்து வைத்தனர். பத்மினி திடீரென்று பாய்ந்து ருக்குவின் கையைப் பற்றினாள்.



"என்னம்மா?"

முனியம்மா மிரட்சியோடு கேட்டாள்.

"இந்தா ஆறு ரூபாய். நீ அந்த மூக்குத்தியை மீட்டிக் கொள்! இனி இந்த ருக்குக்கு இந்த ஊரிலிருக்கிற வரைக்கும் 'ஃப்ரீயாகவே' டியூஷன் சொல்லித் தர்றேன். இவளை மட்டும் ஒழுங்காக அனுப்பி வை.

"பணமில்லாமலா!"

முனியம்மாவின் விழிகள் விரிந்தன.

"ஆமாம். பிடி இந்தப் பணத்தை."

"வெச்சிக்கோங்க டீச்சர்."

"பரவாயில்லே."

பணத்தை முனியம்மாவின் கையில் வலியத் திணித்த பத்மினி "இனிமேல் நிற்காமல் வீட்டுக்கு... சொல்லித்தர்றேன் என்ன?" என்றாள்.

"சரி டீச்சர்."

"வர்றோம்ங்க."

முனியம்மாவும் ருக்குமணியும் ஒருவித நிறைவோடு செல்வதையே பார்த்தவாறு நின்ற பத்மினி சிரித்துக்கொண்டாள். படிப்பறிவு இல்லாத—உறவு முறையும் இல்லாத ஓர் அன்றாடங்காய்ச்சிப் பெண் யாரோ ஒரு சிறுமியின் படிப்புக்கு இத்தனைக் கஷ்டப்படும்போது படிப்பதையே தொழிலாகக் கொண்ட பத்மினி மட்டும் சளைக்கலாமா?


ESTD: 2-3-52 **தபால் மூலம்** GOVT REGD: 3072.

## இலவசக் கல்வி போதனை

**D குரூப் வகுப்புகள் ஆரம்பம் : 14-7-1975**

ஆண்—பெண் இருபாலரும் 1975-76-ம் வருட சர்க்கார்-பல்கலைக் கழக தேர்வுகளில் தேர்ச்சி பெற உத்திரவாதத்துடன் மாதம் இருமுறை தபால் மூலம் பாடங்கள் அனுப்பி பயிற்சி அளிக்கப்படும்.

1. S. V. B. A., B. Com., B. Sc., March- 1976 (P.U.C./இன்டர் தேறியவர்கள் தகுதியுடையவர்கள்.) 2. B. L., M.A., M.Com., A.M.I.B.M., M.B.A. (பட்டதாரிகள் அருகதையுடையவர்கள்.) 3. ஆக்ரா-டில்லி-கர்நாடக் B.A., B.Com., B. Sc., (S. S. L. C. (அ) S. S. C. ஆ. மெட்ரிக் தேறியவர்கள் கலந்து கொள்ளலாம்.) 4. போபால்-ஆந்திரா-கர்நாடக்-டெல்லி இன்டர் (S.S.L.C./S.S.C. மெட்ரிக் படித்தவர்கள் தகுதியுடையவர்கள்.) 5. A. C. B-I. (London) S.S.L.C. மெட்ரிக் தேறியவர்கள் தகுதியுடையவர்கள், 6. Account Text Exmns. (I. M. C. S.S.L.C. S.S.C. மெட்ரிக் தேறியவர்கள் தகுதியுடையவர்கள்.) 7. டெலிபோன் ஆப்ரேட்டர்-டெலிகிராபிக் ஒயர்லெஸ். 8. சென்னை-மதுரை-திருப்பதி மெட்ரிகுலேஷன். 9. சென்னை-மதுரை P. U. C. 10, தமிழ் வித்துவான்-புலவர் தேர்வுகள். 11. விவசாயம். 12. போஸ்ட்மென். 13. போஸ்டல் கிளார்க். 14. கைத்தறி நெசவு. 15. அக்கவுண்டன்ஸி. 16. கிராம மணியம்-கர்ணம். 17. சர்வீஸ் கமிஷன் (தமிழ் அண்ட் ஆங்கிலம் அக்-75). 18. S.S.L.C. (8 ஆம் வகுப்பும் அதற்கு மேலும் படித்தவர்கள் தகுதியுடையவர்கள்.) 19. Com INTER. D. Com., B. Com., B. Com (Hons) M. Com., S. S. L. C. அல்லது P. U. C. தேறியவர்களும்-தவறியவர்களும் 75-நவம்பர் தேர்வில் கலந்து கொள்ளலாம். 20. பேசிக் ஆங்கிலம். 21. பிரி-மெட்ரிக். 22. ஹோமியோபதி. 23. காம்பாசிடர். 24. டெல்லி ஹையர் செகண்டரி தேர்வு (X. XI) படித்தவர்கள் தகுதியுடையவர்கள்.)

முழு விவரங்களுக்கு 25 பைசா தபால் தலையுடன் விண்ணப்பித்து நீங்கள் விரும்பும் வகுப்பில் சேர்ந்து பயிற்சி பெற உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

'தமிழகத்தின் தனிப் பெரும் தபால் கல்வி ஸ்தாபனம்'

Affiliated by I.A. & A.I.S. Educations & Com. University, New Delhi

**ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட்**

சிஷிவந்தியம்--S.O., Pin : 606205. தென்னார்க்காடு மாவட்டம். தமிழ்நாடு.

கிளைகள் : சிலோன், மலேசியா, தெ. ஆப்பிரிக்கா, மாரிஷஸ் அண்ட் இந்தோனேஷியா.

**'Kalvikkadir' Dr. R. P. Kandasami, H.P., B.Com (Hons). Principal,**




# சால்பாளும் 'தமிழரசே'!




மனசை ப. கிரன்

தமிழரசு தொன்மைநலம் தாங்கியொளிர் தமிழ்க்குடியின்
அமிழ்தான இளங்குழந்தை! ஆற்றலுயர் எழிற்செல்வம்!
நேரான தமிழாட்சி நித்திலத்துச் சீராட்சி
பேராளப் பிறந்துள்ள பெட்புயர்ந்த பிள்ளையிது!
கண்ணொளியை இழந்தோர்கள் காணுதற்கு வகையான
கண்ணொளியை வழங்குதிட்டம் எண்ணில்லா எளியோர்கள்
பட்டிதொட்டி யாண்டுமுளோர் பார்த்தழைத்து விருந்தளித்தே
எட்டாத நிபுணரெலாம் கிட்டவந்து மருந்தளிக்க
வாழ்வதனின் இருளோட்டி வண்ணமிகும் ஒளியூட்டும்
சூழ்கின்ற திட்டமெல்லாம் துலங்கிடவே கடைவிரிக்கும்!
ஊனமுற்ற போழ்தினிலும் தன்காலே உதவியென
மானமுள்ள வாழ்வமைக்க வகுத்ததிட்டம் பறைசாற்றும்!
தமிழனது தொன்மையினைச் சால்புயர்ந்த பண்பாட்டை
இமிழ்கடலாய் எடுத்திசைக்கும் இசைபடைத்த விழாவெல்லாம்
நிழற்படத்துத் தொகுப்பேபோல் நிரலாகத் தொகுத்தளிக்கும்!
மிழற்றுகிற தமிழ்க்கவிதை மெய்சிலிர்க்க வீற்றிருக்கும்!
நாட்டுக்கே வேர்த்திட்டம் குடும்பத்து நலத்திட்டம்,
வீட்டுக்காம் காய்கறிகள், விளைக்கின்ற தானியங்கள்
மிகவிளைக்கும் ஆய்வுகளின் விரிவான முறையெல்லாம்
தகவாகத் தாளாண்மை ஊன்றுங்கோல் தானாகும்!
தாயகத்துச் சிறப்பெல்லாம் தலைதூக்கும் திட்டமெலாம்
நேயமுடன் சுமந்துவரும்! நெறிவிளக்கும் ஏடாகும்!
அலைகடலின் அப்பாலும் அருந்தமிழர் சிறப்புணரக்
கலைமிளிரும் தமிழகம் நிலையுயர்த்தும் திட்டமெலாம்
தலைவர்கள் கொணர்வதெலாம் தாழாமல் சாற்றிடும்!
தொலைநாட்டில் வாழ்வோரும் தூய்மைமிகு தாய் நாட்டில்
அன்றாட நடப்பெல்லாம் அறிவிக்கும் தூதுவனாய்
நின்றொளிரும் நல்லிதழ்தான் நெறியுயர்ந்த தமிழரசு!
ஐந்தாண்டுச் சிறுபிள்ளை அறிவடையும் பருவமென
முந்துமன நூலோர்கள் மொழிகின்றார், முழுவுண்மை!
அகவையைந்து நடைபயின்று அரும்இதழாம் 'தமிழரசு'
தகவாகத் தோற்றமுதல் சான்றாண்மை சாற்றிவரும்!
கல்விகொளும் பிள்ளையைப்போல் கலையிதழாம் தமிழரசு
செல்வவளம் திட்டமெலாம் தீட்டிவரும் மிகையில்லை!
நாட்டகத்தே தமிழான நாமுயர்வோம், என்பார்கள்!
மேட்டிமையாம் தாயகத்தில் தமிழ்ச்சான்றோர் அரசாள
வரலாறு கண்டதமிழ் வையமெலாம் புகழாளத்
தரமான தாளிகையாய்ச் சால்பாளும் தமிழரசே!



சென்னை வேளாண்மை மாணவர்கள் சங்கம் 66 ஆண்டுகளாக இப்பல்கலைக்கழகக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. துணைவேந்தர்தான் இச்சங்கத்தின் தலைவராவார். இச்சங்கம், வேளாண்மைக் கல்லூரியில் தற்போது படிக்கும் மாணவர்களையும், முன்பு படித்த மாணவர்களையும் இணைக்கும் பாலமாக இருக்கிறது என்று டாக்டர் ரங்கசாமி குறிப்பிட்டார். இச்சங்கம் ''சென்னை வேளாண்மைச் செய்தி' என்ற திங்கள் இதழை 1914-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. வேளாண்மைத்துறை சம்பந்தமான, ஆராய்ச்சிக் கட்டுரைகள், ஆராய்ச்சிக் குறிப்புகள் ஆகியவை இதில் வெளிவருகின்றன. நவீன விவசாய முறையை ஊக்குவிப்பதில் ஒரு சிறந்த கருவியாக இந்த இதழ் விளங்குகிறது.

**ஆராய்ச்சிப் பணி**

67 ஆண்டுக் காலமாக சிறந்த பணியாற்றிவரும், கோவையிலுள்ள வேளாண்மைக் கல்வி மற்றும், ஆராய்ச்சிக் கழகம், வேளாண்மை விஞ்ஞானத்தின் பல்வேறு துறைகள் சம்பந்தமாக, குறிப்பாக மரபுவழி பண்பியல், கலப்பினப் பயிர் ஆகியவைகளில், ஆராய்ச்சி செய்யும் தலைசிறந்த நிலையமாக அங்கீகரிக்கப்படுகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட்டவுடன், உழவர்களுக்கு உதவக்கூடிய விதத்தில் இக்கழகத்தின் ஆராய்ச்சிப்பணிகளைத் திருத்தியமைக்கும், செயலில் டாக்டர் ரங்கசாமி ஈடுபட்டார். ஒவ்வொரு துறையிலும், ஒருங்கிணைந்த பயிற்சி வகுப்புகள், ஆராய்ச்சி வகுப்புகள், போதனை வகுப்புகள் ஆகியவை ஏற்பட்டதோடு அல்லாமல், பல புதிய பிரிவுகள் அமைக்கப்பட்டன. வேளாண்மைத் துறை, வேளாண்மைப் பொறியியல், அடிப்படை விஞ்ஞானம் பாடங்கள் துறை, கால்நடை மருத்துவத் துறை ஆகிய நான்கு துறைகள் தற்போதுள்ளன. இந்த நான்கு துறைக்காக மொத்தம், தனித் தனியாக 21 பிரிவுகள் உள்ளன. உழவர்களின் தற்போதைய பிரச்சினைகள், எதிர்காலத் தேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில், ஒவ்வொரு பிரிவிலும் ஆராய்ச்சி திட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் படுகிறது. ஆராய்ச்சி திட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக முடிவெடுக்கும் முன்னர், சம்பந்தப்பட்ட தமிழ்நாடு அரசின் அலுவலர்களின் யோசனை கேட்கப்படுகிறது. ஒவ்வொரு பிரிவு நடத்தும் ஆராய்ச்சி நடவடிக்கையும், மூன்று மாதங்களுக்கொரு முறை பரிசீலனை செய்யப்படுகிறது. இப்பல்கலைக்கழக நிர்வாகக் குழு முக்கியமான கொள்கைகளைத் தீர்மானிக்கிறது. இப்பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி சபை ஆராய்ச்சிப் பணிகளுக்கான பொறுப்பை ஏற்கிறது. தமிழ்நாட்டில், பல்வேறு இடங்களில் 5 மலைப்பாங்கான பகுதிகளில் பல போக சாகுபடி, கலப்பின சாகுபடி ஆகியவற்றில் ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்வதற்காக மண்டல ஆராய்ச்சி நிலையங்களையும், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையங்களையும் ஏற்படுத்துவதற்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

பல்வேறு ஆராய்ச்சிப் பணிகளுக்கான நிதி, தமிழ்நாடு அரசிடமிருந்து கிடைத்த போதிலும், இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தெரிந்தெடுக்கப்பட்ட சில ஆராய்ச்சிப் பணிகளுக்கு கூடுதலாக நிதி வழங்கி உதவி அளிக்கிறது. தற்போது நடைபெற்றுவரும் 850 ஆராய்ச்சித் திட்டப் பணிகளில், 55 அடிப்படை ஆராய்ச்சி சம்பந்தப்பட்டவையாகும். மற்றவை, நடைமுறையிலுள்ள பிரச்சினை சம்பந்தப்பட்டவையாகும். இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் தற்போது பண்ணை யந்திரம், மண் மற்றும் நீர் நிர்வாகம், தோட்டக்கலை, பயிர்ப் பாதுகாப்பு போன்றவை உட்பட வேளாண்மை விஞ்ஞானத்தின் பல்வேறு பிரிவுகள் சம்பந்தப்பட்ட 48 அனைத்திந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டங்களுக்கு நிதி வசதி அளித்து வருகிறது. மதுரைக் கல்லூரியில் 84 ஆராய்ச்சித் திட்டப் பணிகள் (அடிப்படை மற்றும் நடைமுறை) தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வேளாண்மைக் கல்லூரி மாணவர்களின் ஆராய்ச்சி, மற்றும் விளக்கப் பயிற்சிக்காக சுமார் 430 ஏக்கர் நிலப்பரப்பு உள்ளது. கல்வி கற்கும் போதே சம்பாதிக்கும் திட்டத்தின்படி, மாணவர்கள் நேரடியாக, வேளாண்மைத் தொழிலில் ஈடுபடுவதற்காக, இப்பல்கலைக்கழகம் கிட்டத்தட்ட 30 ஏக்கர் நிலப்பரப்பை ஒதுக்கியுள்ளது. அண்மைக் கால ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளை மாணவர்கள் இந்த நிலப்பரப்பில் ஆய்வு முறையில் பயன்படுத்தி வருகிறார்கள்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், நெல், தினை வகைகள், பருப்பு வகைகள், தக்காளி, பப்பாளி, வாழை, சூரியகாந்தி, நிலக்கடலை, பருத்தி, ரோஜா, மல்லிகை போன்றவற்றில் பல புதிய ரகங்களைக் கண்டுபிடித்துள்ளது. இவற்றில், 'பவானி', 'வைகை' நெல் ரகங்களைப் பற்றி இங்குக் குறிப்பிட வேண்டும். கடந்த இரண்டு ஆண்டுகளில் இவை மிகவும் புகழ் பெற்றுள்ளன. சுமார் 2 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் இவ்விரு ரகங்களும் பயிரிடப்படுகின்றன. இதன் மூலம், உழவர்களுக்கு ஆண்டுக்குக் கூடுதலாக சுமார் 10 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கிறது.

மேலும், இப்பல்கலைக்கழகம 'சி.பி.எஸ் 156' எனும் அதிசய பருத்திரகம் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளது. இந்தப் பருத்தியைக் கொண்டு, நீண்ட உறுதியான 120 நம்பர் இழைகளை நூற்கலாம். இந்தப் பருத்தி ரகத்தைப் பயிர் செய்தால் எக்டேருக்கு 10 ஆயிரம் ரூபாய் இலாபம் அடையலாம். ஒரேஒரு லட்சம் எக்டேர் நிலப்பரப்பில் இந்த உயர் விளைச்சல் பருத்தி ரகத்தைப் பயிர் செய்தால், நம் நாட்டின் மொத்தப் பருத்தி தேவையை சமாளித்து விடலாம். மேலும், அதன் மூலம், 150 கோடி ரூபாய் அளவுக்கு அந்நியச்செலாவணியை மிச்சப் படுத்தலாம். இப்புதிய ரகத்தை பெருமளவு நிலப்பரப்பில் பயிர் செய்வதற்கான செயல் திட்டம் ஒன்றை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வகுத்துள்ளது.

இப்பல்கலைக்கழகம் கண்டுபிடிக்கும் புதிய ரகங்கள் மிகவும் புகழ் பெற்றவையாக உள்ளன என்று துணைவேந்தர் கூறினார். பல்கலைக்கழகத்திலேயே புதிய ரகங்களுக்கான விதைகள் உழவர்களுக்குக் கிடைக்கின்றன. மேலும், மாநில வேளாண்மைத்துறை மூலமாகவும் விதைகள் வழங்கப்படுகின்றன. இப்பல்கலைக் கழகத்தில் விதைத் தொழில் நுட்பப் பிரிவு ஒன்று உள்ளது. இப்பிரிவு, பட்ட மேற்படிப்பு வகுப்பு ஒன்றை நடத்துகிறது. வேளாண்மைத்துறை விதைப் பண்ணைகளையும் நடத்தி வருகிறது. இப்பல்கலைக்கழகத்தில் சிறிய மின் கலப்பைகள் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்படுகின்றன. தழைச்சத்து (நைட்ரஜன்) உரங்கள் கிடைப்பதில் தட்டுப்பாடு உள்ளதைக் கருத்தில் கொண்டு இப்பல்கலைக் கழகம் நுண்ணுயிர் (பாக்டீரியா) கொண்ட உரங்களை அதிக அளவுக்கு உற்பத்தி செய்து உழவர்களுக்கு விநியோகித்து வருகிறது. பருப்பு வகை விதைகளுடன் நுண்ணுயிர் உரத்தைச் சேர்த்து மண்ணிலிட்டால் நல்ல பலன் கிடைக்கிறது. இப்பல்கலைக்கழகம், தமிழ்நாடு, புதுவை, ஆகியவற்றில் பயிரிடப்பட்டு வரும், பருப்பு வகைப் பயிர்களுக்காக இந்த நுண்ணுயிர் உரத்தை அளித்து வருகிறது.

துணைவேந்தர் டாக்டர் ரங்கசாமி, இப்பல்கலைக்கழகத்தில் வேளாண்மைப் பொறியியல் கல்லூரி ஒன்றையும், தோட்டக்கலைக் கல்லூரி ஒன்றையும் ஏற்படுத்தியுள்ளார். தென்னிந்தியாவில் ஏற்பட்டுள்ள முதல் வேளாண்மைப் பொறியியல் கல்லூரியாகும் அது. இந்தியாவிலேயே முதன் முறையாக ஏற்படுத்தப்பட்ட தோட்டக்கலைக் கல்லூரி கோவையில் உள்ளதுதான்.

**உழவர் போதனைக் கல்வி**

பல்வேறு ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை உழவர்களுக்கு போதனையாளர்கள் மூலம் எடுத்துக் கூறுவதற்காகவும், உழவர்களுக்கு அவ்வப்போது ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவும், இப்பல்கலைக்கழகத்தில் உழவர்கள் போதனைக் கல்வி அலுவலகம்



உள்ளது. வேளாண்மைத்துறை மற்றும் சம்பந்தப்பட்ட நிலையங்களில் வேலையில் அமர்வதற்கு உதவுவதற்காக பட்டப் படித்தவர் மேற்படிப்பு பல்கலைக்கழக புகுமுகங்களுக்கும் படித்தவர்களுக்கும் வகுப்பு பயிற்சி அளிக்கிறது.

பல்கலைக்கழகத்தின் பல்வேறு அலுவல்கள் பற்றி மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்காக மிகச் சிறந்த தகவல் நிலையம் ஒன்று உள்ளது. இத்தகவல் நிலையம் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளை தாமதமின்றி உழவர்களுக்கு வானொலி நிகழ்ச்சிகள் மூலம் தெரிவிக்கிறது. மேலும் பத்திரிகைகளையும் வெளியிடுகிறது. இந்நிலையம் பல்கலைக்கழக ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளை புத்தக வடிவில் வெளியிடுகிறது. இந்நிலையத்தில் அச்சகப் பிரிவும், புகைப்படப் பிரிவும், ஓவியப பிரிவும் உள்ளன. இப்பல்கலைக் கழகத்தின் நடுவிலுள்ள பொருட்காட்சிச் சாலை, இந்நிலையத்தோடு இணைந்ததாகும்.

இப்பல்கலைக்கழகம் உழவர்களுக்காக இரண்டு பயிற்சி நிலையங்களை நடத்தி வருகிறது. ஒன்று கோவையிலும், மற்றொன்று மதுரையிலும் உள்ளது. கிராமப்புற இளைஞர்கள், உழவர்கள் ஆகியோர்க்கு இந்நிலையங்களில் பயிற்சியளிக்கப்படுகிறது. இப்பல்கலைக்கழகம், பண்ணை ஆலோசனைச் சபையை நடத்தி உழவர்களுக்குப் பெரிதும் உதவுகிறது. கோவையிலும் மதுரையிலும் இத்தகைய சபைகள் உள்ளன. இவை, உழவர்களுக்கு சிறந்த ஆலோசனைகள் வழங்குகின்றன. வேளாண்மைத்துறை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இந்த சபைகள் உழவர் வீடுகளுக்குச் சென்று உதவுகின்றன!

தேசிய விளக்கப் பயிற்சித் திட்டத்தின் மூலம், இப்பல்கலைக்கழகம், வேளாண்மைத் துறை, ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள் பற்றி உழவர்களுக்கு விளக்கப் பயிற்சி அளிக்கிறது.

உழவர்கள் போதனைக் கல்வி அலுவலகம், இப்பல்கலைக்கழகம் வகுக்கும் நவீன வேளாண்மை முறையை உழவர்கள் ஏற்றுக்கொள்வதற்காக, விவாதங்களையும் நடத்துகிறது.

இந்த அலுவலகம், அரசு அலுவலர்களுக்கும், பொதுத் துறை நிறுவன அலுவலர்களுக்

# பசுமைப் புரட்சிக்கு உதவும் பல்கலைக் கழகம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலிருந்து, பட்டம் பெற்று வெளியேறும் எல்லா பட்டதாரிகளுக்கும், உடனடியாக எந்த வித சங்கடமும் இன்றி, வேலைகிடைத்து விடுகிறது. ஆகையால், அவர்கள் நேரடியாக பொது மக்களுக்கு தங்கள் சிறப்பான தொண்டினை ஆற்ற முடிகிறது. இந்தச் சாதனை குறித்து, இப் பல்கலைக்கழகமும், மாணவர்களும் பெருமை கொள்வதில் தவறில்லை.''

''யோஜனா'' நிருபருக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேட்டியளித்தபோது இவ்வாறு கூறினார். அப்போது அவரது முகம் பெருமிதத்தால் பிரகாசமடைந்தது.

இப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் கோ. ரங்கசாமி, ஒரு சிறந்த விவசாய விஞ்ஞானி. இத்துறையில் 25 ஆண்டுகளுக்கும் அதிகமான காலத்திற்கு ஆராய்ச்சி அனுபவம் பெற்றவர்.

வேளாண்மைப் பட்டதாரிகளிடையே வேலையில்லாப் பிரச்சினையே இல்லை என்று கூறும்போது டாக்டர் ரங்கசாமி பெருமகிழ்ச்சியடைகிறார். 1945-ஆம் ஆண்டு முதல் இதே நிலைமை ஒரு சில ஆண்டுகளைத் தவிர நீடித்து வருகிறது. ''மிகச்சிறந்த மாணவர்களைத்தான் நாங்கள் வேளாண்மைப் பட்டப்படிப்பிற்குச் சேர்த்துக் கொள்கிறோம். ஒவ்வொரு இடத்துக்கும் 15 முதல் 20 மாணவர்கள் போட்டியிடுகிறார்கள். மிக அதிக மதிப்பெண் பெற்றுள்ள மாணவர்கள்தான் இப்பல்கலைக் கழகத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இதற்குக் காரணம், சிறந்த அறிவாற்றல் மிக்க மாணவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்ற நோக்கம் தான். பொதுவாக வேளாண்மைக் கல்லூரிகள், மேலும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஆனால், தற்போது மிக உயர்வாக இருக்கும் வேளாண்மைக் கல்வியின் தரத்தை தொடர்ந்து, வைத்திருக்கும் பொருட்டு நாங்கள் இந்தக் கருத்தை எதிர்த்து வருகிறோம்'

**பல்கலைக்கழகத்தின் வரலாறு**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நற்பணி சம்பந்தமாக நடத்தப்பட்ட ஆய்வு இதை விளக்கும். 1971-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட இந்தப் பல்கலைக்கழகம் தமிழ்நாட்டின் வேளாண்மைத் துறை வளர்ச்சிக்காக சிறந்த பணி ஆற்றி வருகிறது. இந்தியாவிலேயே மிகச் சிறந்த வேளாண்மைப் பல்கலைக் கழகங்களில் இதுவும் ஒன்றாகக் கருதப்படுகிறது. மிகக் குறுகிய காலமான மூன்றரை ஆண்டுகளுக்குள் இப்பல்கலைக் கழகம், நான்கு துறைகளையும் 21 பிரிவுகளையும், 20 ஆராய்ச்சி நிலையங்களையும், ஒரு வேளாண்மைப் பாலிடெக்னிக்கையும், இரண்டு வேளாண்மைப் பயிற்சி நிலையங்களையும் அமைத்துள்ளது. இப்பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. சிறந்த மாணவர்களை உருவாக்குவதற்காக, ஆண்டிற்கு மூன்று முறை தேர்வு நடத்தப்படுகிறது. இப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் தலைமையில் 720 ஆராய்ச்சிப் பணியாளர்கள், 850 ஆராய்ச்சித் திட்டப்பணிகளைச் செய்து வருகிறார்கள். உழவர்களின் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட பண்ணை ஆலோசனை சபைகளுக்கும்' இவர் தலைவராவார்.

தமிழ்நாட்டில் வேளாண்மைக் கல்வியின் முக்கியத்துவம் 1876-ஆம் ஆண்டில் மிக அதிகமாக உணரப்பட்டது. அந்த ஆண்டில் வேளாண்மைப் பள்ளி ஒன்று சென்னையில் ஏற்படுத்தப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்குப் பின் இப் பள்ளி 'டிப்ளமா' வகுப்பு, குறுகிய கால வகுப்பு ஆகியவற்றை நடத்தக்கூடிய கல்லூரியாக மாற்றப்பட்டது. கோவையில் பல்வேறு மண் வளங்கள் கிடைப்பதைக் கண்டு. 1907-ஆம் ஆண்டில் சைதாப்பேட்டையில் இருந்த வேளாண்மைக் கல்லூரி கோவைக்கு மாற்றப்பட்டது. 1920-ஆம் ஆண்டில் இக்கல்லூரி சென்னை பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது. 'டிப்ளமா' வகுப்புக்குப் பதிலாக மூன்று ஆண்டு பட்டப்படிப்பு வகுப்பு நடத்தும் கல்லூரியாக இது மாறியது. சென்னைப் பல்கலைக் கழகம், ஓர் ஆண்டு புகுமுக வகுப்பு 'கொண்டு வந்ததையடுத்து, 1957-58-ஆம் ஆண்டில் நான்கு ஆண்டுப் பட்டப்படிப்பாக இது மாற்றப்பட்டது. வேளாண்மைப்பட்டதாரிகளின் தேவை அதிகரித்து வருவதைச் சமாளிப்பதற்காக 1965-ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு மதுரையில் மற்றொரு வேளாண்மைக் கல்லூரியை ஏற்படுத்தியது.

வேளாண்மைத் தாவர இயல், மண், விஞ்ஞானம், வேளாண்மை இரசாயனம், தோட்டக்கலை, வேளாண்மைப் பொருளாதாரம், வேளாண்மைத் தொழில்நுட்பம், கால்நடை சுகாதாரம், பராமரிப்பு வேளாண்மைப் பொறியியல், பயிர் நோய் இயல் போன்ற பல பாடங்களை இவ்விரு கல்லூரிகளும் மாணவர்களுக்கும் வேளாண்மைக்கல்வி கற்பித்து வருகின்றன. உழவர்கள் போதனை, பௌதிகம், போன்றவை சம்பந்தமான வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. தமிழ், ஆங்கிலம் போன்ற மொழி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. கோவையிலுள்ள கல்லூரி, பட்ட மேற்படிப்புப் பயிற்சிக்கான நிலையமாக 1958 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டது. மதுரையிலுள்ள கல்லூரி, இதே மதிப்பை 1969-ஆம் ஆண்டு பெற்றது. நம் நாட்டில் பல்வேறு பகுதியிலுள்ள மாணவர்களும், எகிப்து, நேபாளம், தாய்லாந்து, மலேஷியா போன்ற வெளிநாடுகளைச் சேர்ந்த மாணவர்களும் கோவைக் கல்லூரியில் சேருகிறார்கள். இவ்விரு கல்லூரிகளும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்தவையாகும். தற்போது, கோவை வேளாண்மைப் பொறியியல் கல்லூரியும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்துள்ளது. பல்கலைக்கழகத்தின் தனிப்பட்ட இரு தனித்தியங்கு நிலையங்களாக இவ்விரு கல்லூரிகளும் விளங்குகின்றன. பவானி சாகர், ஆழியார்நகர், காவேரிப் பட்டினம் ஆகியவற்றிலுள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள், பொள்ளாச்சியிலுள்ள நிலக்கடலை ஆராய்ச்சி நிலையம் கொடைக்கானலிலுள்ள ஆப்பிள் பழ ஆராய்ச்சி நிலையம், பழ பெரியகுளத்திலுள்ள ஆராய்ச்சி நிலையம் ஆகியவை இப்பல்கலைக்கழகத்தோடு இணைந்தவையாகும். பட்ட மேற்படிப்புப் படிக்கும் மாணவர்கள் ஆராய்ச்சிப்பணி மேற்கொள்ள இந்நிலையங்கள் வசதி அளித்துள்ளன. ஆடுதுறை, கோவில் திருவில்லிப்புத்தூர், விருத்தாசலம் பட்டி, கடலூர், ஆகிய இடங்களிலுள்ள அனைத்திந்திய ஒருங்கிணைப்பு ஆராய்ச்சி, திட்டப்பணி நிலையங்கள், திருச்சி, வேப்பங்குளம், முத்துப்பேட்டை, கோவில்பட்டி ஆகிய இடங்களிலுள்ள அனைத்திந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சி, அபிவிருத்தி, திட்டப்பணி நிலையங்கள் ஆகியவற்றையும் இப் பல்கலைக்கழகம் நடத்தி வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும், இப் பல்கலைக்கழகத்தின் 220 வேளாண்மைப் பட்டதாரிகள், 20 தோட்டக்கலைப் பட்டதாரிகள் 50 வேளாண்மைப் பொறியியல் பட்டதாரிகள் பட்டம் பெற்று வெளியேறுகின்றனர்.



இவ்வாறு பட்டம் பெற்று வெளியேறும் மாணவர்களின் வேலைவாய்ப்பு பற்றிப் பல்கலைக் கழகம் முயற்சி ஏதாவது செய்கிறதா என்று கேட்டபோது, இப்பல்கலைக்கழகத் துணைவேந்தர், மாநில அரசுடன் இது பற்றித் தொடர்பு கொண்டு வருவதாகக் கூறினார்.

''பட்டதாரிகள் பட்டியலையும் நாங்கள், பிரபல தொழிற்சாலைகளுக்கும், பாங்குகளுக்கும் அனுப்புகிறோம். அரசுத் துறைகள், மற்ற தனியார் நிறுவனங்கள் போன்றவை வேளாண்மைப் பட்டதாரிகளை வேலைக்கமர்த்திக் கொண்டவுடன், எங்களுக்கு உடனடியாகத் தெரியப்படுத்துகின்றன. தமிழ்நாடு அரசு, வேளாண்மைப் பட்டதாரிகளை அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களாக நியமிக்கிறது. வேளாண்மைப் பல்கலைக் கழகத்தை விரிவுபடுத்துவதற்கான பணிக்காக, சில பட்டதாரிகள் பல்கலைக்கழகத்திலேயே வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள்.

கும், தனியார் துறை அலுவலர்களுக்கும் பயிற்சி வகுப்புகள் நடத்துகிறது.

உழவர்களுக்குப் பயிற்சி அளிப்பது பற்றி கருத்து அறிவித்த டாக்டர் ரங்கசுவாமி, இப்பல்கலைக்கழகம் நடத்தி வரும் கல்வி வகுப்பின் முக்கிய பங்கை வலியுறுத்தினார். இத்தகைய வகுப்புகளுக்கு மாணவர்களிடமிருந்து குறைந்த கட்டணம்தான் வசூலிக்கப்படுகிறது. வேளாண்மைத் தொழில் சம்பந்தமான எல்லா அம்சங்களும் இந்த வகுப்புகள் மூலம் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. வரைபடங்கள், போன்றவையும் அஞ்சல் மூலம் அனுப்பப்படுகின்றன. இந்த வகுப்புகளில் சேர, பலர் விண்ணப்பித்துக் கொள்கிறார்கள். ஒவ்வொரு வகுப்பிலும் 40 பேர்தான் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். ஆகையால், இந்த வகுப்புகளுக்குத் தெரிந்தெடுக்கும் நடவடிக்கையில் மிகுந்த கண்டிப்பு உள்ளது. வகுப்பு இறுதியில், மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு அழைத்து வரப்படுகிறார்கள். அவர்கள் அங்கு மூன்று நாட்கள் தங்கி, பண்ணை ஆலோசனைச் சபை, பல்வேறு துறைகளின் தலைவர்கள், பேராசிரியர்கள் ஆகியோரைச் சந்தித்துப் பேசுகிறார்கள். இந்த அஞ்சல் வழிக் கல்வி வகுப்புகள் மூலம் இதுவரை 250 பேர் பயிற்சி பெற்றுள்ளார்.

உழவர்கள் கல்வி போதனைத் திட்டம் மூலம் உழவர்கள் பெரிதும் பயனடைகின்றனர் என்று கூறிய டாக்டர் ரங்கசுவாமி, வேளாண்மைத்துறை நிபுணர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும், இருந்தால் இத்திட்டம் மேலும் சிறந்த முறையில் நடைபெறும் என்று கருத்துத் தெரிவித்தார். ஒவ்வொரு வேளாண்மை வானிலை மண்டலத்திலும் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்று அவர் யோசனை கூறினார். காவேரிப்பட்டினத்திலுள்ள நிலையம் ஒன்றை அவர் உதாரணம் காட்டினார். 50 ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்துள்ள இந்த ஆராய்ச்சி நிலையம், பல்வேறு பயிர்வகைகள், காட்டுவளம், மீன் வளம், கால்நடைப் பராமரிப்பு, கோழிப்பண்ணை ஆகியவை சம்பந்தமாக ஆராய்ச்சி நடத்தியிருக்கிறது. தமிழ்நாட்டில் திருச்சி, திருநெல்வேலி, தஞ்சாவூர், வட ஆர்க்காடு





செங்கல்பட்டு ஆகிய இடங்களில் இத்தகைய நிலையங்கள் ஏற்பட வேண்டும் என்று ஆலோசனை கூறப்பட்டுள்ளது. புதிய திட்டங்களுக்கும், புதிய கருத்துக்களுக்கும் சரியான ஊக்குவிப்புக் கிடைப்பதில்லை. என்று டாக்டர் ரங்கசுவாமி மனம் வருந்திக் கூறினார். ஆராய்ச்சிப் பணியைச் சுருக்கினால், தற்போதைய தலைமுறையினருக்கு மட்டுமல்லாமல், எதிர்காலத் தலைமுறையினருக்கும் தீங்கு நேரிடும். வேளாண்மைத்துறை சம்பந்தப்பட்ட வரை ஒருங்கிணைந்த அணுகுமுறை தேவை.

பண்ணை ஆலோசனைச் சபைகள் பற்றிக் கூறிய அவர், ஒவ்வொரு தொகுதியிலும் உழவர்கள் சங்கம் இருந்தால், இச்சபைகள் நல்ல முறையில்







கோவையிலுள்ள பல்கலைக் கழக விதை விற்பனை நிலையம்

இயங்க முடியும் என்று சொன்னார். இத்தகைய சங்கங்கள் ஏற்படுத்துவதில் மாநில வேளாண்மைத்துறை உதவலாம் என்று கருத்துத் தெரிவித்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் மூலம் நாட்டிலுள்ள மற்ற வேளாண்மைப் பல்கலைக் கழகங்களுடன் தொடர்பு கொண்டு வருகிறது. வேளாண்மைப் பல்கலைக்கழகங்களின் சங்கம் ஒன்று உள்ளது. இச்சங்கத்தில் பல்வேறு துணைவேந்தர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். துணைவேந்தர்கள் தங்கள் அறிக்கைகளை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும் பிரச்சினைகளை விவாதிப்பதற்கும் இச்சங்கம் வகை செய்கிறது. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இச்சங்கம் கூடுகிறது.

கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகத்தை அடுத்த 12 ஆண்டுக் காலத்தில் அபிவிருத்தி செய்வதற்கான பெரிய திட்டம் ஒன்றை டாக்டர் ரங்கசுவாமி வகுத்துள்ளார். உலக நிதி நிறுவனத்தைச் சேர்ந்த குழுக்கள் இப்பல்கலைக் கழகத்தைச் சுற்றிப்பார்த்த போது, இத்திட்டத்தின் குறிக்கோள்களை வலுவாக ஆதரித்துள்ளன. அந்த இந்திட்டத்துக்காக, கணிசமான அள

வுக்கு. இப்பல்கலைக்கழகத் துக்கு உதவி புரிய வேண்டும் என்று சிபாரிசு செய்துள்ளன. இப்பல்கலைக்கழகத்தின் கிராமப் புற சமூக இயல் துறை, வேளாண்மைப் பொருளா தாரத்துறை ஆகியவற்றின் அபிவிருத்திக்காக, ஃபோர்டு' நிறுவனத்திடமிருந்து 40 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயை உதவியாக டாக்டர் ரங்கசுவாமி பெற்றுள்ளார்.

புதிய திட்டங்கள் ஏதாவது அமல் நடத்தப்படவிருக்கின் றனவா என்று கேட்டபோது, இப்பல்கலைக்கழகத் துணைவேந் தர், பட்டுத் தொழில் சம் பந்தமாக நான்காண்டுக்கால பட்டபடிப்பு வகுப்பு ஒன்று ஆய்வு அடிப்படையில் துவக் கப்படவிருக்கிறது என்று சொன்னார். இந்த ஆண்டில் இது துவங்கக்கூடும். இப் பல்கலைக்கழகத்தில் உயிரியல் இரசாயனத்துறை, வேளாண் மை அடிப்படையில் அமைந்த தொழில்துறை ஆகிய இரண்டு துறைகள் ஏற்படுத்தப்பட விருக்கின்றன. இப்பல்கலைக் கழகத்திலுள்ள பல்வேறு துறை களின் எண்ணிக்கை கடந்த மூன்று ஆண்டுக் காலத்தில் 11- லிருந்து 25-க்கு அதிகரித்துள் ளது என்று துணைவேந்தர் பெருமையுடன் கூறினார். மேலும் இப்பல்கலைக்கழகத் திலுள்ள ஆராய்ச்சிப் பணி யாளர்கள் எண்ணிக்கையும் 400-லிருந்து 720-க்கு அதி

கரித்துள்ளது என்று கூறினார்.

இப் பல்கலைக்கழகத்தில் தொடர் செலவு 1 கோடியே 65 இலட்சம் ரூபாயாகும். இந்தநிதியைத் தமிழ்நாடு அரசு அளிக்கிறது. இதுவரை மத்திய அரசு இப்பல்கலைக்கழகத்துக்கு 96 இலட்சம் ரூபாய் நிதிதான் அளித்துள்ளது. இதில் ஆராய்ச்சிப் பணிகளுக்காக அளிக்கப்பட்ட தொகை 65 இலட்சம் ஆகும்.

''பள்ளிகளில் வேளாண்மையைக் கட்டாயப்பாடமாகக் கொண்டுவந்தால்தான் கிராமப்புற இளைஞர்களைத் தேசிய வாழ்க்கையில் ஈடுபடுத்த முடியும். பண்ணைகளிலுள்ள இளைஞர்கள் வேளாண்மைத் தொழிலை ஒரு கண்ணியமான தொழிலாக மதிப்பதில்லை. பள்ளி, கல்லூரிப் படிப்புக்குப் பின் இளைஞர்கள், வேளாண்மைத் தொழிலிலிருந்து விடுபடவே முயற்சிக்கிறார்கள். மறுபடியும் கிராமத்துக்கு வருவது தன்மானக் குறைவு என்று கருதுகிறார்கள். இளமையிலேயே வேளாண்மைத்துறை பற்றிய நல்லெண்ணத்தைப் புகுத்தினாலொழிய இந்தப் போக்கை மாற்ற முடியாது'' என்று டாக்டர் ரங்கசுவாமி கூறினார்.

# சிறு துளி பெரு வெள்ளம்

## தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் முதலீடு செய்யுங்கள்

டெபாஸிட்டுகளுக்கு எங்கள் வட்டி விகிதங்கள் :

1. சீசன் டெபாஸிட்டுகள்- ரூ 1000/-மும் அதற்கு மேலும்

| | வருடத்திற்கு |
|---|---|
| 15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | 3.25% |
| 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 3.75% |

2. தவணை டெபாஸிட்டுகள்- ரூ 100/-ம் அதற்கு மேலும்

| காலம் | வருடத்திற்கு |
|---|---|
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்கு குறைவாக | 5.75% |
| 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களுக்கு குறைவாக | 6.25% |
| 9 மாதங்களிலிருந்து 1 வருடத்திற்கு குறைவாக | 7.25% |
| 1 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 3 வருடங்களுக்கு குறைவாக | 8.25% |
| 3 வருடங்களும் அதற்கு மேலும் ஆனால் 5 வருடங்கள் வரை | 9.25% |
| 5 வருடங்களுக்கு மேல் | 10.25% |

3. சேவிங்ஸ் கணக்கு 5.75%
4. நடப்பு (current) கணக்கு வட்டி கிடையாது

TNSC BANK



**தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்,**
379, நேதாஜி சுபாஷ்சந்திர போஸ் ரோடு, சென்னை-600 001
தந்தி: 'URBANK' போன் : 20367 (3 லைன்கள்)
டெலக்ஸ் :MS 7225

கிளைகள் : அண்ணா நகர், அண்ணா சாலை (காமதேனு), அண்ணா சாலை (அண்ணா சிலை), அசோக் நகர், பெஸண்ட் நகர், எழும்பூர், காந்தி நகர், கிரீன்வேஸ் ரோடு, இலஞர் நகர், கெல்லீஸ், தங்கசாலை, மைலாப்பூர், மைலாப்பூர் குளம், நுங்கம்பாக்கம், புரசைவாக்கம், ராயப்பேட்டை, ராஜா அண்ணாமலைபுரம், சாந்தோம், சாஸ்திரி நகர், ஜெஜய் நகர், தியாகராய நகர் & திருவல்லிக்கேணி.

TNSCB - 122/75


# கோபுரம் போல் வீடு தரும் குடிசை மாற்று வாரியம்

சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஏழை எளிய மக்கள் நல்வாழ்வுக்காகத் தமிழக அரசு பல்வேறு புரட்சித் திட்டங்களை வகுத்துச் செயலாற்றி வருகின்றது. அவற்றுள் ஒன்று குடிசைப் பகுதி மாற்றுத் திட்டம். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் இலட்சிய நோக்கோடு வெற்றி நடைபோட்டு வரும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், துவக்கத்திலிருந்து ஆற்றி வந்துள்ள நற்பணிகளை விளக்கிக் கூறுகிறார், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத் தலைவர் திரு. இராம. அரங்கண்ணல், எம்.எல்.ஏ., அவர்கள்.

தமிழ்நாடு
குடிசைப் பகுதி மாற்று வாரியத்
தலைவர்

**திரு. இராம. அரங்கண்ணல்,**
எம்.எல்.ஏ.,

அவர்களின் பேட்டி



கே: தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் எப்போது தோன்றியது? அதன் நோக்கமென்ன?

ப: தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் 1970-ஆம் ஆண்டு செப்டம்பர் மாத இறுதியில் அமைக்கப்பட்டது.

புதிய குடிசைப் பகுதிகள் தோன்றுவண்ணம் பாதுகாத்தல், தற்போதுள்ள குடிசைப் பகுதிகளைத் திட்டமிட்டு அகற்றி அந்தந்தப் பகுதியிலேயே மின் வசதி, குடிநீர் வசதியுடன் மாடிக் குடியிருப்பு கட்டிக் கொடுத்தல், தனிப்பட்டோர் நிலத்திலும், அரசு, மாநகராட்சிக்குச் சொந்தமான நிலங்களிலும் வாழும் குடிசை வாழ் மக்கள் வெளியேற்றப்படும் போது அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தல். அதாவது குடிசைப் பகுதியில் உள்ளவர்களை வெளியேற்றுவதானால், அது குறித்து தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு முன் கூட்டித் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு வெளியேற்றப்படுபவர்களுக்கு புதிய குடியிருப்புகள் கட்டி முடிக்கப்படுகிற வரையில் தற்காலிக இட வசதி அளிக்கும் பொறுப்பினைத் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மேற்கொள்ளுதல், நடைபாதை வாசிகளும், உரிமையின்றி கூடாரம் அமைத்துள்ளவர்களும் தங்களுக்கு வசதி குறைவையும் இடர்ப்பாட்டையும் ஏற்படுத்திக் கொள்வது மட்டுமின்றி நடைபாதைகளில் விபத்து ஏற்படுவதற்கும் காரணமாகின்றனர். இவர்களுக்கும் பிற்காலத்தில் வீட்டுவசதி செய்து தருதல்; தீ விபத்தால்—வெள்ளத்தால் பாதிக்கப்படும் குடிசை வாழ் மக்களுக்கு உதவியளித்தல் போன்றவை இவ்வாரியத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

கே: சென்னையில் எத்தனை இடங்களில் இத்திட்டம் நிறைவேற்




றப்பட்டுள்ளது? இதில் எத்தனைக் குடும்பங்கள் அமர்த்தப்பட்டுள்ளன?

ப : வாரியம் ஆரம்பித்த பின் 101 பகுதிகளில் குடியிருப்பு கட்டுவதற்கான திட்டம் தீட்டப்பட்டு இதுவரை 66 குடிசைப் பகுதிகள் அகற்றப்பட்டுள்ளன.

13,900 குடும்பங்கள் புதுக் குடியிருப்புக்களில் அமர்த்தப்பட்டுள்ளனர். ஜூன் 75-ல் இன்னமும் 3,100 குடியிருப்புக்கள் தயாராகும்.

**கே: தமிழ்நாட்டில் பிற மாவட்டங்களில் எங்கெங்கு இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது? இதில் எத்தனைக் குடும்பங்கள் அமர்த்தப்பட்டுள்ளன?**

ப : சென்னை நகரில் குடிசைகளை அகற்றும் பணியினை குடிசை மாற்று வாரியம் மேற்கொண்டுள்ளது. மற்ற மாவட்டங்களில் வாரியத் திட்டத்தினைச் செயல்படுத்துவது, வீட்டுவசதி வாரியமாகும்.

தமிழ் நாட்டில் கீழ்க்கண்ட மாவட்டங்களில் இத்திட்டம் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 117 குடியிருப்புக்கள். இதே போல மற்ற மாவட்டங்களிலும் குடியிருப்புகள் உள்ளன. அவை :—

திருச்சி 455, தஞ்சாவூர் 199, மதுரை 244, திருநெல்வேலி 80, கோயம்புத்தூர் 2,941, சேலம் 1,048. ஆக மொத்தம் 5,084 குடியிருப்புகள் உள்ளன. மற்ற மாவட்டங்களில் குடியிருப்புகள் முடியுந் தறுவாயிலுள்ளன. அவை; வட ஆர்க்காடு மாவட்டத்தில் 460 குடியிருப்புகள். இதே போல மற்ற மாவட்டங்களில் உள்ள குடியிருப்புகள்; திருச்சி 313, தஞ்சாவூர் 572, மதுரை 642, இராமநாதபுரம் 60, கோவை 1,000, சேலம் 1,359. ஆக மொத்தம் 4,406 குடியிருப்புகள் முடியுந் தறுவாயிலுள்ளன.

**கே: இந்தக் குடியிருப்புகளில் என்னென்ன வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன?**

ப : குடியிருப்பில் பல்வேறு வசதிகள் செய்து தரப்பட்டு உள்ளன. 1. பொது அறை, 2. சமையலறை, 3. குளிக்கும் அறை, 4. கழிவறை தனித்தனியாக உள்ளன. ஒவ்வொரு அறையிலும் தேவைக்கேற்றவாறு அலமாரிகள், பரண் ஆகியவை சுவற்றிலேயே வைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. 5. தண்ணீர் வசதி—கட்டடத்தின் மேலே சிறிய நீர்த் தொட்டிகள் கட்டப்பட்டு, மின் சக்தி மூலம் நீர் வழங்கப்படுகிறது. 6. மின்சார வசதி. 7. கழிவு நீர் வெளியேற்றும் வசதி, 8. மாடிகளிலிருந்து வெளிப்புறம் குப்பைகளைக் கொட்டாமல், அக்குடியிருப்பிலிருந்து உட்புறமாகக் கொட்டுவதற்கும், அவைகளைக் கட்டடத்தின் கீழேயிருந்து அகற்றுவதற்கும் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

இவையன்றி பிளாக்குகளிடையே சிமெண்டினால் பூசப்பட்டு அப்பகுதி சுத்தமாக இருக்க வசதி செய்து தரப்பட்டுள்ளது. புதுக் குடியிருப்புப் பகுதியிலேயே கடைகள், பள்ளிக் கூடம், மருத்துவ மனை ஆகியவை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

**கே: குடியிருப்புகளுக்கு வாடகை ஏதேனும் வசூலிக்கப்படுகின்றதா? வாடகைகள் ஒழுங்காகச் செலுத்தப்படுகின்றனவா?**

ப : வாரியம் கட்டப்படும் குடியிருப்புகளின் நியாய வாடகை ரூ. 55 ஆகும். ஆயினும், குடிசை வாழ் மக்களின் பொருளாதார நிலையை மனத்தில் கொண்டு ரூ. 15 மட்டுமே வாடகையாக வசூலிக்கப்படுகின்றது.

வாடகை வசூல் செய்ய வருவாய்ப் பிரிவு ஒன்று தனியே இயங்கி வருகிறது. இரண்டு மாத வாடகையை முன்பணமாக ஒரு குடியிருப்புக்கு வசூலித்து வருகிறோம். வருவாய்ப் பிரிவில் பணியாளர்கள் வாடகையை மாதா மாதம் வசூல் செய்து வருகிறார்கள். வாடகை செலுத்துவதில் தாமதமோ, நிலுவையோ ஏற்படுமாயின் அக்குடும்பத்தினர் உடனுக்குடன் எச்சரிக்கப்படுகின்றனர்.

**கே: குடிசைப் பகுதிகளில் உள்ள அனைவருக்கும் வீடுகள் தரப்படுகின்றனவா?**

ப : குடிசை மாற்று வாரியத்தின் குறிக்கோள், எந்தெந்தப் பகுதிகளில் குடிசைகளாக உள்ளனவோ அந்தந்தப் பகுதிகளிலேயே குடியிருப்புகளைக் கட்டித் தருவதாகும். சென்னையில் வாரியக் கணக்குப்படி 1,202 குடிசைப் பகுதிகள் உள்ளன. 1,70,000-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடிசைகளில் வசித்து வருகின்றன.

வாரியத்தின் குறிக்கோள், குடிசைப் பகுதிகளில் உள்ள அனைவருக்குமே வீடு வழங்குவதுதான். அதாவது, குடிசைக்குச் சொந்தக்காரனுக்கும் வாடகைக்கு வசிப்பவனுக்கும் பேதமின்றி வழங்குவது. இந்தக் குறிக்கோளினைச் செயல்படுத்த வாரியம் கடைப்பிடிக்கும் வழி ஒவ்வொரு குடும்பத்தினரையும் புகைப்படம் எடுத்து அவர்களுடைய குடும்பத்தினரை முழு விவரத்துடன் கணக்கெடுப்பு நடத்தி ஆய்வு செய்தபின் அவர்களுக்குப் பாஸ் புத்தகம் வழங்கியுள்ளதாகும். இதன் மூலம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர், தான் குடிசைப் பகுதியில் குடியிருந்ததாக யாரும் விண்ணப்பிக்க வழி இல்லாமல் செய்ததுமட்டுமின்றி, இனி புதிதாகக் குடிசைப் பகுதிகளில் யாரும் குடியேறிப் பின்னர் வீட்டிற்கு முறையிடத் தடுக்கவும் முடிகிறது.

பாஸ் புத்தகம் பெற்றவர்களே வாரியம் கட்டித் தரும் குடியிருப்புகளில் வசிப்பதற்கு உரிமை பெற்றவராவர்.

புதுக் குடியிருப்புகளில் குடியேறிய பின்பும், இந்த பாஸ் புத்தகம் அந்தக் குடும்பத்தாரால் பாதுகாக்கப்பட வேண்டியதொன்றாகும். குடியிருப்புதாரர் தொடர்ந்து வசிக்கிறார்களா? இல்லையா என்பதை வாரியத்தின் புலனாய்வுப் பிரிவிற்கு இதனைக் காட்ட வேண்டியிருப்பதால் மாற்றார் வசிப்பதைத் தடுக்க உதவுகிறது.

**கே: இத்திட்டம் மற்ற மாநிலத்தவர்களைக் கவர்ந்துள்ளதா?**

ப : ஆம். இத்திட்டம் மற்ற மாநிலத்தவர்களை மட்டும் அல்லாது வெளி நாட்டவர்களையும் கவர்ந்துள்ளது.

வாரியம் ஆரம்பித்த பின் வருகை தந்து, திட்ட விவரம் அறியவும் பகுதிகளைப் பார்வையிடவும் பலர் ஆர்வம் காட்டினர்.

மத்திய திட்டக் குழு உறுப்பினர், மத்திய அரசு வீட்டு வசதி—பொதுப்பணி அமைச்சர், பாராளுமன்ற திட்டக் குழு உறுப்பினர், மத்திய அரசு இரயில்வே துறை அமைச்சர், ஃபோர்டு பௌண்டேஷனைச் சேர்ந்த திரு. சட்டர்ஜி ஆகியோரும், மைசூர் மாநிலத்தைச் சேர்ந்த நகர வளர்ச்சி வாரியத்தின் தலைவர், பெங்களூர் நகராட்சி, வீட்டு வசதித் துறை அமைச்சர் ஆகியோரும், அமெரிக்க நாட்டுத் தூதுவர் திரு. மொய்னிகான், அரியாணா நிதித் துறை, வீட்டு வசதித் துறை அமைச்சர், பஞ்சாப் வீட்டு வசதித் துறை அமைச்சர், மேற்கு வங்காள சட்டமன்ற மதிப்பீட்டுக் குழுத் தலைவரும் — உறுப்பினர்கள்




ஆகியோர் வாரியத் திட்டங்களை அறிய ஆர்வங் காட்டியவர்களில் முக்கியமானவர்களாகும்.

**கே: இத்திட்டத்தின் மூலம் எத்தனை பேர், அல்லது எத்தனைக் குடும்பங்கள் பயன் அடைந்துள்ளன?**

ப : குடியிருப்பு கிடைத்த வகையில் இத் திட்டத்தின் மூலம் சென்னையில் சுமார் 14,000 குடும்பங்கள் பயன் அடைந்துள்ளன.

**கே: இத்திட்டத்திற்காக இது வரை எவ்வளவு தொகை செலவிடப்பட்டுள்ளது?**

ப : இத்திட்டத்திற்கு இது வரை சுமார் 14 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. குடிசைகளை அகற்ற ரூ. 12 கோடியும், குடிசைப் பகுதிகள் சீரமைக்க ரூ. 2 கோடியும் ஆக மொத்தம் ரூ. 14 கோடி இத்திட்டத்திற்காகச் செலவிடப்பட்டுள்ளது.

குடிசைகளை அகற்றுவதற்காகச் செலவிடப்பட்ட ரூ. 12 கோடி மாநில அரசு வழங்கியதாகும். மத்தியஅரசு குடிசைப் பகுதி சீரமைப்புக்காக ஒதுக்கீடு செய்து அதிலிருந்து செலவழித்துள்ளது ரூ. 2 கோடி.

**கே: குடிசை வாசிகளுக்குக் குடியிருப்புகள் சொந்தமாகக் கிடைக்க வசதிகள் செய்யப்பட்டிருக்கிறதா?**

ப : குடிசை வாசிகளுக்குக் குடியிருப்பு சொந்தமாகக் கிடைக்க ''தவணை முறைத் திட்டம்'' ஒன்று செயல்படுத்தப்பட்டுள்ளது. வாரியத்தால் கட்டப்படும் குடியிருப்புகளில் ஒரு சில பிளாக்குகள் தவணை முறைத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. வாடகைக்காக வழங்கும்போது அந்தந்தப் பகுதி குடிசை வாசிகளாக அவசியம் இருத்தல் வேண்டும் என வலியுறுத்துகிறோம். தவணை முறைத் திட்டத்தின் கீழ் ஒதுக்கிடும்போது அப் பகுதியில் உள்ள குடிசை வாசிகளின் மனுக்கள் ஏற்கப்படுகின்றன.

வாடகைக்கு ஒதுக்கீடு செய்வது போன்றே புகைப்படம் எடுக்கப்பட்ட குடிசைவாசிகளே தகுதியானவர் என விதிமுறை வைக்கப்பட்டுள்ளன. அந்தத் திட்டத்தின்படி குடிசை வாசி முன் பணம் ரூ. 500 செலுத்த வேண்டும். ஒதுக்கீடு பெற்ற பின் 20 ஆண்டுக்காலத்திற்குத் தவணை முறையில் மாதா மாதம் பணம் செலுத்த வேண்டும். 1. கீழ்த்தளத்திற்கு ரூ. 40; 2. முதல்மாடிக்கு ரூ. 35, 3. இரண்டாவது மாடிக்கு ரூ. 30; 4. மூன்றாவது மாடிக்கு ரூ. 25.

**கே: குடியிருப்புகளைப் பெற்றவர்கள் அதை மேல் வாடகைக்கு விடுவது, விற்பது போன்ற தவறுகள் ஏதேனும் நடந்துள்ளனவா?**

ப : குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஆரம்பித்தவுடன் ஒவ்வொரு குடிசைப் பகுதிகளில் வசிக்கும் குடும்பங்களைப்

புகைப்படம் எடுத்து பாஸ் புத்தகம் வழங்கியுள்ளோம். குடியிருப்பு ஒதுக்கீடு பெற்றவர்கள் இந்தப் பாஸ் புத்தகத்தைத் தான் சான்ருக வைத்திருக்க வேண்டும் என்பது வாரியத்தின் தலையாய நிபந்தனை.

அப்படியும் ஒரு சில இடங்களில் மேல் வாடகைக்கு விடுவதும், குடியிருப்புகளை விற்பதும் தவிர்க்க முடியாமல் போய்விடுகிறது. ஆனல், அவை மிகவும் குறைவே! இதனைக் கண்காணிக்கவே புலனய்வுப் பிரிவு ஒன்று வாரியத்தில் பணியாற்றுகிறது. அதுபோன்ற தவறுகள் நேராவண்ணம் கண்காணிக்கவும், உடனுக்குடன் கண்டுபிடித்துத் தவறுகளை நீக்கவும் இப்பிரிவு செயலாற்றுகிறது.

**கே: 'புதுக் குடியிருப்பு நல் வாழ்வுப் பேரவை' ஒன்று செயல்படுவதாகக் கூறுகிருர்களே, அதன் பணிகள் என்னென்ன?**

ப: குடிசை மாற்று வாரியம் ஆரம்பித்தபின் தனது பணி, கட்டடங்கள் கட்டுவதுடன் நிறுத்திக் கொண்டால்-கட்டப்படும் புதுக் குடியிருப்புகளும் நாளடைவில் குடிசைப் பகுதியிலிருந்து மாறுதல் காணுத கட்டட குடிசைகளாக நின்றுவிடலாம் என்ற அச்சம் ஏற்பட்டது. கட்டடங்கள் மட்டும் போதாது. குடிசை வாழ் மக்களின் மனமாற்றம், எண்ணத்தில்—செயலில்—மாற்றம் ஏற்பட்டால்தான் புதிய சூழ்நிலையில் சுகாதாரத்தோடு வாழ்வதற்குச் சமூகநலத் திட்டங்களை அவர்களின் மனமறிந்து செயல்பட விரும்பும் சமூகநல நிறுவனங்களின் ஒத்துழைப்பை நாடினேம். அப்போது உருவானதுதான் இந்தப் 'புதுக் குடியிருப்பு நல்வாழ்வுப் பேரவை.'

இது, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் புதிதாகக் கட்டியுள்ள வீடுகளில் குடியமர்த்தப்படும் குடும்பத்தினருக்குச் சமூகப்பணியை அளிப்பதோடு ஆலோசனையும் நல்குகிறது.

இந்தப் பேரவை ஒரு நிருவாக அலுவலர், ஒரு மருத்துவ அலுவலர், 14 சமூக நல ஊழியர்கள், ஒரு மேற்பார்வை சமூகநல மருத்துவப் பெண்மணி, 12 பார்வையிடும் மருத்துவப் பெண்மணிகளைக் கொண்டது. இது குடிசைப் பகுதி மாற்று வாரிய திட்டப் பகுதிகளில் செயலாற்றி வருகின்றது.

அவை: 1. நொச்சிக்குப்பம், நொச்சி நகர், 2. விசாலாட்சித் தோட்டம், 3. பிருந்தாவனம், 4. மாம்பலம் ஏரிக்கரை, 5. சுபேதார் தோட்டம், 6. அயோத்தியாக்குப்பம், 7. சீனிவாசபுரம், 8. டொம்மிங் குப்பம், 9. கோட்டூர் புரம், 10. கல்லறைச்சாலை, 11. தாண்டவராயசத்திரம், 12. எம்.எஸ். நகர், 13. டாக்டர் சந்தோஷ் நகர், 14. கலைஞர் கருணநிதி நகர், 15. வியாசர் பாடி, 16. ஜாபர்கான்பேட்டை.

இத்தகு எல்லாத் திட்டப் பகுதிகளிலும் சிருர்பள்ளி, துப்புரவுப்பணி, நோய்த்தடை காப்பு பற்றி விளக்குதல், குடும்பநலத் திட்டம், பெண்கள் சங்கம் போன்றவையும் இப்பேரவையால் கவனிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசின் சத்துணவுத் திட்டத்திற்கும், சமூக நலத் திட்டத்திற்கும் இவர்கள் ஒத்துழைப்பு கொடுக்கிருர்கள்.

இந்தத் திட்டப் பகுதிகளில் இயங்கும் குழந்தைகள் காப்பகங்கள், 10 தனி மருத்துவமனை (போதனை மருத்துவமனை) 6 இரவுப் பள்ளிகள், 6 முதியோர் கல்வி வகுப்புகள் சிறுசேமிப்புத் திட்டங்கள், 7 தையல் வகுப்புகள் முதலியவைகளையும் இவர்களின் மேற்பார்வையின் கீழ்தான் இயங்கி வருகின்றன.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் இந் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ''நடமாடும் மருத்துவ ஊர்தி' மூலம் மருத்துவ வசதியில்லாத பகுதிகளில் மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது.

குடும்பத்தின் வருமானத்தைப் பெருக்க பலவிதத் திட்டங்களைச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் ஒன்று ஒட்டுத் துணிகளைக் கொண்டு பூப்போன்ற வட்ட வட்டமான துணிகளால் மேசை விரிவு, கைச்சட்டை போன்றவை தயாரித்தல் - தோல்-வண்ணப் பூச்சு, தையல் இயந்திரங்களைக் கொண்டு 'ரெடிமேடு' சட்டைகள் தைத்துதருதல் ஆகும்.

பெண்கள் குழு, இளைஞர்-குழு- இவர்கள் மூலமாகவும் சமூகப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

இவையன்றி, தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்புத் துறையினரால் எல்லாக் குடிசைப் பகுதிகளிலும் மக்களுக்கு இன்றியமையாத சுகாதாரம், தீண்டாமை ஒழிப்பு, ஒற்றுமையாக வாழ்தல் போன்ற படக்காட்சிகள் அடிக்கடி காண்பிக்கப்படுகின்றன.



அசுத்தம்...

**கே: இவ்வாரியத்தின் மூலம் நிறைவேற்றப்படவிருக்கும் திட்டங்கள் ஏதேனும் உள்ளனவா?**

ப: தமிழக அரசின் நிதி உதவியுடன் பணியாற்றும் குடிசை மாற்று வாரியம் மத்திய அரசின் குடிசை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படும் நிதியினைக் கொண்டு அடுத்த பத்து ஆண்டுக் காலத்தில் அகற்றப்பட இயலாத குடிசை பகுதிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருகின்றது. அவை: பொதுக் கழியலறை, பொதுக் குளியலறை, ஒழுங்காக அமைக்கப்பட்ட நடை பாதைகள், தெரு விளக்கு, பொது நீர் ஊற்றுகள் மூலம் குடிநீர் வழங்குதல், மழைநீர் வடிகால் கட்டித்தருதல் போன்றவையாகும்.

குடியிருப்புகளுக்கு ஏற்படும் வாடகை இழப்பைச் சரிக்கட்டுவதற்காக அரசால் ஆண்டு தோறும் தரப்படுகின்ற பெரிய உதவித் தொகைச் சுமையைக் குறைப்பதற்காகப் பல்வேறு வழிகள் ஆலோசிக்கப்பட்டன. அவற்றுள் ஒன்றே ஆதாயம் தரும் தொழில் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் கடைகள், காட்சி அறைகள், உணவு விடுதி, அலுவலகக் கட்டடம், திருமணமாகாதவர்கள் தங்கும் அறைகள், கிடங்குகள் முதலானவை கட்டப்பட இருக்கின்றன. இத்திட்டங்கள் பல்வேறு குடிசை மாற்றுத் திட்டங்களில் செயல்படுத்தப்படும். இத் திட்டங்களுக்குத் தேவையான முதலீடு நீண்டகாலக் கடனக வணிக வங்கிகளிடமிருந்தும், இந்திய அரசு நிறுவனமான 'ஹட்கோ' விடமிருந்தும் பெறத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத் திட்டங்களிலிருந்து பெறப்படும் வருவாயைக் கொண்டு கடன்கள் முழுவதையும் 10 முதல் 20 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்திய பின்னர் இக்கட்டடங்கள் வாரியத்திற்கு நிலையான வருவாயை ஈட்டித் தரும்.

**கே: குடிசை மாற்று வாரியத் திட்டத்திற்கு மத்திய அரசு உதவி செய்கின்றதா?**

ப: ஆம். சுற்றுப்புறச் சூழ்நிலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மத்திய அரசிடமிருந்து கிடைத்துள்ள நிதி உதவிகள்; 1972-73-ல் 148.61 இலட்சங்கள் 1973-74-ல் 146.55 இலட்சங்கள் ஆகும்.



குடிசைப் பகுதிகளில் மருத்துவ வசதி!

177 குடிசைப் பகுதிகளில் இதுவரை அடிப்படை வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. அவை: கட்டப்பட்ட பொது கழியலறை, குளியலறை 3,100 குடிநீர்க் குழாய்கள் 400, தெரு விளக்குகள் 560, தோண்டப்பட்ட கிணறுகள் 200, சிறு பாலங்கள் 420, போடப்பட்டுள்ள சாலை நீளம் 1,12,000 மீட்டர், போடப்பட்டுள்ள கழிவு நீர்க் குழாய்கள் நீளம் 1,00,000 மீட்டர், போடப்பட்டுள்ள சாக்கடைக் கழிவு நீளம் 22,000 மீட்டர், போடப்பட்டுள்ள தண்ணீர்க் குழாய்களின் நீளம் 34,000 மீட்டர், போடப்பட்டுள்ள நடைபாதைகளின் நீளம் 1,30,000 சதுர மீட்டர், பள்ளமான பகுதிகளைச் சரிப்படுத்திய அளவு 1,50,000 மீட்டர்.

**கே: அண்மையில் தாங்கள் மேலை நாடுகள் சென்று வந்துள்ளீர்கள். அங்கு இது சம்பந்தமாகத் தாங்கள் கண்டவற்றைச் சொல்ல முடியுமா?**

ப: ஏற்கனவே ஒருமுறை நான் ஜெர்மனிக்குச் சென்றவன்தான் என்றலும், இந்த முறை ஜெர்மானிய நாடுகளையும், அதன் அரசின் அமைப்புகளையும், தொழில் வளர்ச்சிகளையும், இயற்கை அமைப்புகளையும் காணுகின்ற வகையில் தென் பகுதியான எஸ்டட்கார்ட், மியூனிச், பெர்லின், ஹம்பர்க், மேற்கு ஜெர்மனியின் தலைநகரான பான் முதலிய நகரங்களைக் காணுகின்ற வகையில் என்னுடைய பயணம் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

மியூனிச்சிலிருந்து பெர்லின் நகருக்குச் சென்றேன். பெர்



இசுத்தம்...

வின் நகர வீட்டு வசதி அலுவலர் நகரமைப்பு அலுவலர் ஆகியோர் என்னை வரவேற்றுர்கள். இங்கு 20 நகரமைப்புக் கார்ப்பரேஷன்கள் இருப்பதாகவும் அரசு மட்டுமின்றி, அரசினுடைய உதவி பெற்று தனியாரும், இலாப நட்டமில்லாத கார்ப்பரேஷன்களை நிருவகிப்பதாகவும் அறிய வந்தேன். ஒரு குடியிருப்புக்குச் சுமார் 1,200-லிருந்து 2,000 ரூபாய் வரையில் வாடகையாக வாங்கப்படுகிறது. ஒரு வீட்டின் சராசரி அளவு சுமார் 700 சதுர அடிகள் இருக்கிறது.

வளவு குடியிருப்புகளையும் நாங்கள் கட்டினேம் என்று நான் சொன்ன நேரத்தில் அவர்கள் மிகவும் ஆச்சரியப் பட்டார்கள்.

'Slums' (நாம் அழைக்கும் குடிசைப்பகுதி) எனும் பல பகுதிகளையும் நேரில் சென்று பார்வையிட்டேன். நம்மைப் போலவே சட்டத்தைவிட மக்களின் மனநிலை பொறுத்து கலந்தாலோசித்து பேசியே காரியம் ஆற்றுவதாகச் சொன்ஞர்கள். பெர்லின் நகரில் இத்துறைக்கு மட்டும், ஒரு ஆண்டுக்கு 6 கோடி ரூபாய் அரசு செலவிடுவதாகச் சொன்ஞர்கள். இப்படிச் செலவிட்டு 30 ஆண்டுகளில் மொத்தம் 4 இலட்சம் வீடுகள் கட்டப்பட்டு இருப்பதாகவும் சொன்ஞர்கள்.

பெர்லினிலிருந்து ஜெர்மனியினுடைய துறைமுகப்பட்டினமான 'ஹம்பர்க்' சென்று இருந்தேன். இங்கும் நகரமைப்பு, வீடுகள் கட்டுகின்ற முறைகள் எல்லாவற்றையும் பார்வையிட்டேன்.

இங்கு திருமதி சோலோஸ்கி என்கின்ற பெண் இன்ஜினியர் துறைமுக அலுவலராக இருக்கிறார். ஒரு சதுர மீட்டருக்கு வீடு கட்ட சுமார் 6,000 ரூபாய் செலவாகிறது என்று சொன்ஞர்கள். பொதுவாக எல்லா மக்களும் பழைய முறையில் வீடுகள் கட்டுவதைத் தான் விரும்புகிருர்கள். ஏராளமான வீடுகள் கட்டப்படும்போது 'PRE FAB' முறையை அனுசரிக்கிருர்கள். பழைய வீடுகளைப் புதுப்பிக்க, வட்டியில்லாதக் கடன் அரசாங்கத்தாரால் வழங்கப்படுவதாகவும் சொன்ஞர்கள்.

'ஹம்பர்க்' கிலிருந்து ஜெர்மனியினுடைய தலைநகரான 'பான்' நகருக்குச் சென்றேன். மாநகர அமைப்புகளும் மாநில அரசுகளும் தனித்தனியாகப் பணம் செலவிட்டு குடியிருப்புகள் கட்டுவதற்குத் திட்டம் போட்டாலும், மத்தியக் கூட்டாட்சி ஏராளமான பண உதவி செய்கிறது என்று அறிந்து கொண்டேன். ஆண்டு ஒன்றுக்கு, ஜெர்மனியின் மத்திய அரசாங்கம் மட்டும் 200 கோடி ரூபாய் செலவிடுவதாகவும் சொன்ஞர்கள்.

இங்கு நம்முடைய தமிழ் நாட்டில் வீட்டு வசதி வாரியத்தாரால் போடப்பட்டது போன்ற 'ஒரு ரூபாய் திட்டம்' அங்கும் வகுக்கப்பட்டு இருக்கின்றது. அதற்குக் 'கட்டடச் சேமிப்புத் திட்டம்' என்று பெயர். சொந்த வீடு விரும்புகின்ற ஒரு தனி நபர், 7 ஆண்டுக் காலத்திற்கு ஒரு குறிப்பிட்ட தொகையைப் போட்டு வந்தால், அந்தத் தொகையைப் போல் ஒன்றரை மடங்கு அளவிற்கு வட்டி யில்லாத கடன் அரசாங்கத்தாரால் கொடுக்கப்படுவதாகவும், அதைக்கொண்டு அந்தத் தனி நபர் தனக்கு விருப்பப்பட்ட கட்டடத்தைக் கட்டிக்கொள்ளலாம் என்றும் சொன்ஞர்கள். அவ்விதம் கட்டடம் கட்டிக் கொள்ள உதவித் தொகையும் அரசால் அளிக்கப்படுகிறது. இதனுல் தனிப்பட்டவர்கள் ஏராளமான கட்டடங்கள் உருவாக்கும் உற்சாகமான சூழ்நிலை இருப்பதாகச் சொன்ஞர்கள்.

பழைய வீடுகளைப் புதுப்பித்துக் கொள்ளவும், இத்திட்டத்தின் கீழ் கடன் வழங்கப் படுகிறது. நம்முடைய ஊரில், அதே வீடுகளுக்குப் பதில்



அன்றும்...

20 இலட்சம் பேர்களுள்ள மேற்கு பெர்லினில் கடந்த போருக்குப் பிறகு ஏராளமான வீடுகள் கட்டி இருக்கிருர்கள்.

17,000 குடியிருப்புகள் கொண்ட 'மேரி செஸ் வைர்டல்' என்ற ஒரு புதிய காலனிக்குப் போய் இருந்தேன். இந்த 17,000 குடியிருப்புகள் கட்டி முடிக்க அவர்களுக்கு 10 ஆண்டுக் காலம் ஆயிற்ரும். 2 ஆண்டுக் காலத்திற்குள் அவ்



வண்ணம் பூசும் வனிதையர்!



ஒட்டுத் துணியில் ஒய்யாரக் கைவேலை!





தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் செயற்கரிய செயல்களை நேரில் கண்டு மேலை நாட்டினரும் வெகுவாகப் பாராட்டியுள்ளனர். இதோ, பாராட்டியோர் பட்டியல்!

1. உலக வங்கியின் துணை டைரக்டர், வாஷிங்டன் ஜெர்மன் நாட்டினைச் சேர்ந்த நகர அமைப்புத் தலைவர்.
2. சுவீடன் நாட்டில் இயங்கும் சுவாலோஸ் சமுகப் பணி நிறுவனத்தின் தலைவர்.
3. பிரிட்டன் நாட்டில் ஆக்ஸ்போர்டு பகுதியைச் சேர்ந்த திரு. நைஜில் ஹாரீஸ்.
4. மாரேஷியஸ் நாட்டின் வீட்டு அமைப்பின் தலைவர்.
5. சுவிஸ் நாட்டுப் பல்கலைக் கழகத்தினைச் சேர்ந்த மாணவர் குழு.
6. சென்னை நகரில் இயங்கும் அமெரிக்க நாட்டின் தூதுவர்.
7. போலந்து நாட்டைச் சேர்ந்தவர்கள்.
8. ஐக்கிய நாட்டுச் சபை வீட்டு வசதி அணியின் தலைவரான ஆஸ்திரேலியா நாட்டினைச் சேர்ந்தவர்கள்.
9. சுவிட்சர்லாந்து நாட்டினைச் சேர்ந்தவர்கள்.
10. அந்தமான் நிகோபார் தீவுப்பகுதிகளைச் சார்ந்த பிஷப் அவர்கள்.
11. ஜெனிவா நாட்டினைச் சேர்ந்த திரு. பாப்.
12. எத்தியோப்பியாநாட்டினைச் சேர்ந்த திரு. அப்துல்ரகமான்.
13. இலங்கை நாட்டின் வீட்டு வசதித் துறையைச் சேர்ந்த திரு. சில்வியா.
14. நியூயார்க்கில் பூடான் நாட்டின் நிரந்தரக் குழுவின் ஆலோசகராகப் பணியாற்றும் திரு. மணி.
15. பாரீஸ் பல்கலைக் கழக மாணவர் குழு.





கைகை ஸ்ரீரங்கபுரத்தில் குடிசைப்பகுதி மாற்று வாரியக் குடியிருப்புக்கு அடிக்கல் நாட்டிய கான் அப்துல் கபார் கான்.

கோட்டூர்புரம் குடிசைமாற்றுப் பகுதிக் குடியிருப்பைத் திறந்து வைத்த ஜெயப்பிரகாஷ் நாராயணன்.

அனைத்திந்திய குடிசை மாற்று வாரியக் கருத்தரங்கு சென்னை ராஜாஜி மண்டபத்தில் இருநாட்கள் நடந்தது. கருத்தரங்கில், சேரிகள் தோன்ற காரணம், சேரிகளை அகற்றுவதற்கு வழிமுறைகள், குடிசைகளை அகற்றி மாடி வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான நிதி உதவி, வீடுகளின் வடிவமைப்பு, சமுக சேவை ஆகியவை குறித்து விவாதம் நடந்தது.

தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்திற்கு அரசு குறைந்த வட்டியில் கடன் உதவி, குறைந்த விலையில் நிலம் அளித்து உதவ வலியுறுத்தப்பட்டு உள்ளது.

சேரிகளை அப்புறப்படுத்தி, குடிசைவாசிகளுக்கு நகரத்தையொட்டி உள்ள பகுதிகளில் தனித் தனி வீடுகள் கட்டிக் கொடுத்து குடியமர்த்தவும் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் ஆகிய இடங்களில் குடிசைமாற்று வாரியத்தின் சார்பில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி 60 ஆயிரம் தனி வீடுகள் கட்ட உலக பாங்கி ரூ.37.5 கோடி உதவி செய்ய ஒப்புதல் அளித்துள்ளது.

குடிசைவாசிகளுக்கு மாத வாடகையில் மாடி வீடுகள் கட்டிக் கொடுக்க நிதிப்பற்றுக்குறை இருப்பதால், அவர்களுக்குத் தவணைமுறை அடிப்படையில் சொந்தமாக வீடுகள் கட்டிக் கொடுக்க கருத்தரங்கில் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி மாதம் ரூ.300க்கு மேல் வருமானம் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் தவணைமுறையில் சொந்தமாக வீடுகள் கட்டிக் கொடுக்க முயற்சி எடுக்கப்படும்.

நட்ட ஈட்டுத்தொகை கொடுப்பதைப்போல் அங்கும் மத்திய தர மக்களுக்கான வீடுகளுக்கும் 'ஈடு' கொடுக்கின்ற முறை இருக்கின்றது. இந்த ஈடு குடிசை மாற்று வாரியம்போல் ஒட்டு மொத்தமாக எல்லாருக்கும் வாடகை ரூ. 15 என்று அமைக்கப்படாமல் ஒரு குடும்பத்தினருடைய வருமானத்தையும், அக்குடும்பத்தின் குழந்தைகளையும் பொறுத்துக் கணக்கிடப்படுகிறது.

இவ்வாறு சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஏழை எளிய மக்களின் நல்வாழ்வுக்காகப் பல்வேறு புரட்சித் திட்டங்களை உருவாக்கிச் செயலாற்றும் தமிழக அரசின் பணிகளில் குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஆற்றும் பணி மகத்தானது என்பதைப் பெருமையுடன் கூறிக் கொள்கிறேன். இந்தியாவின் ஏனைய மாநிலங்களுக்கு வழிகாட்டியாகத் திகழும் சிறப்பு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்துக்கு உண்டு என்பதை எடுத்துக் கூறுவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

பேட்டி: பி.வி.ஜி.




தமிழரசு

# வெற்றியை நோக்கி....!

நாளுக்குநாள்
நம்முடைய வாழ்க்கைக்கு
அரசு அளிக்கும்
பாதுகாப்புகள் ஏராளம்

**அரசு அலுவலர்களுக்கு**
**குடும்பப் பாதுகாப்புத் திட்டம்**
**அதனைத் தொடர்ந்து**
**சமுதாயத்திலுள்ள அனைவரும்**
**பயனடையும் வகையில்**
**சமூகப் பாதுகாப்புத் திட்டம் !**



**எல்லாரும்**
**இன்புற்றிருக்கச்**
**செயல்படுத்தும்**
**திட்டங்கள்**
**வெற்றி பெற்றிட**
**வலுமிக்க**
**அடித்தளம் அமைய**

**உதவுவதே**
**அளவான குடும்பம்.**

...குழந்தை இப்போது வேண்டாம்!

குடும்பநலத்...

19 JUL 1975
7589
R.No.12...

தமிழரசு

16-7-1975 50 காசு





# பூம்புகார் கலைக்கூடம் காண வாரீர்



* கல்லெல்லாம் கதை சொல்லும்
சிலப்பதிகாரக் காட்சிகள்!

புதையுண்ட பூம்புகார்
புது வடிவம் பெற்றுள்ளது!

சிந்தைக்கும் கண்ணுக்கும்
தெவிட்டாத தமிழ்விருந்து!

மனதைக் கவரும் மாதவியின்
அழகுச்சிலை.

**இவற்றைக் காண பூம்புகார்
சிலப்பதிகாரக் கலைக்கூடத்திற்கு
வருகை தாரீர்!**

பூம்புகார் கலைக்கூடம், சீர்காழியிலிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவிலும், மாயவரத்திலிருந்து 29 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது.

இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.





# தமிழரசு

மலர்: 6 16-7-75 இதழ்: 2






உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்—வீணில்
உண்டுகளித் திருப்போரை
நிந்தனை செய்வோம்!
—பாரதியார்

ஒருவன் அறிதொழிலை
ஊரார் தொழிலாக்கிப்
பெரும்பே றடைவதுதான்
வெற்றி என்க!
—பாரதிதாசன்.



வாழ வேண்டுமெனில்—தொழில்கள்
வளர வேண்டுமையா!
—தேசிக விநாயகம் பிள்ளை





# பார்த்தோம்! படித்தோம்!!

## எங்கே ? எப்போது ?

'தமிழரசு' 1-7-1975 இதழைக் கண்ணுற்றேன். அட்டையில் முதல்வர் கலைஞர் அவர்களுக்கு, ஒரு சிறுமி திலக மிடுங்காட்சியை மிகச் சிறப்பாக வெளியிட்டிருக்கிறீர்கள்! ஆனால் அந்நிகழ்ச்சி எங்கே, எப்போது நடைபெற்றது என்ற விளக்கத்தைத் தருவதற்கு மறந்துவிட்டீர்களே !

அ. சோமசுந்தரம்,
மதுரை-2.

## முதன் முதலில்........

'பணிகள் அளிப்பதற்கே பணி புரியும் அலுவலகம்' என்ற கட்டுரையைப் படித்தேன்; பயனுள்ள அக்கட்டுரை ஏராளமான விவரங்களைத் தெரிவித்துள்ளது. 'வேலை தேடித்தரும் அலுவலகத்தின் பணிச் சிறப்பு' குறித்து இதுவரை எந்த இதழிலும் வெளிவந்ததில்லை. 'தமிழரசு'தான் முதன் முதலாக வெளியிட்டிருக்கிறது, என்று நம்புகிறேன்.

—செல்வி. எஸ். காமாட்சி,
காஞ்சிபுரம்.

## சுவைத்தோம் ! மகிழ்ந்தோம் !

கவிஞர் வேழவேந்தனின் கவிதையைப் பார்த்தோம்; படித்தோம்; சுவைத்தோம்; மகிழ்ந்தோம். 'தமிழரசு' ஆறும் ஆண்டில் பயணத்தைத் துவக்கியிருப்பதற்குக் கவிஞர் சூட்டியுள்ள பாராட்டில் எங்களது பாராட்டுக்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டுகிறோம்.

—கே. லீலா, கே. கமலா,
திருச்சி.

## பசுவுக்குப் புகைப்படம்..?

'பசுவுக்குப் பாராட்டு விழா' செய்தி படித்தோம். வியந்தோம்! அது, ஆண்டுக்கு 50,750 பவுண்டு பால் கொடுத்த செய்தி சாதாரணச் செய்தியல்ல! புகழ் பெற்ற இந்த 'உலகச் சாம்பியன்' பசுவின் புகைப் படத்தை வெளியிட்டு அதற்குச் சிறப்புச் சேர்க்கத் தவறிவிட்டீர்களே...!

—சுப. மெய்யப்பன்,
காரைக்குடி.

## மாற்றுவது எப்படி ?

'காற்று எப்படி நச்சுச் சூழ்நிலை' எய்துகிறது என்பதை மிகத் தெளிவாக எடுத்துரைக்கும் கட்டுரை பாராட்டுக்குரிய முறையில் அமைந்துள்ளது. என்றாலும் நச்சுச் சூழ்நிலையை எப்படி மாற்றுவது என்ற விவரத்தையும் கட்டுரை ஆசிரியர் தெரிவித்திருக்கக்கூடாதா ?

—இரா. பரமசிவன்,
திருநெல்வேலி.



## சில நேரங்களில் சில குழந்தைகள்....!

'பிஞ்சுக் குழந்தைகள் சிலர் பெரியவர்களின் நெஞ்சுக்கு நீதியை எடுத்துரைத்து விடுகிறார்கள்' என்ற கருத்தினை மையமாக வைத்து எழுதப்பட்ட 'மனமிருந்தால்' சிறுகதை உள்ளத்தைத் தொட்டுவிட்டது.

—எம். பாலசுப்பிரமணியன்,
பீளமேடு.



## கோபுரச் சாதனை.

குடிசை மாற்று வாரியம், கோபுரம் போல் வீடு தருகிறது என்று கட்டுரை தெரிவிக்கிறது. அதன் சாதனைகளைத் தொகுத்துப் பார்த்தாலே கோபுரம் போல் உயரமாகத் தெரியும் என்பதைக் கட்டுரை புரிய வைத்து விட்டது.

—மே. செல்வராசு,
தஞ்சாவூர்.

# படமும் செய்தியும்



பம்மலில் 18-6-'75 அன்று நடைபெற்ற குடிநீர்த் திட்ட அடிக்கல் நாட்டு விழாவில் நரிக்குறவர்களுக்கு நிலப்பட்டா, மனைப்பட்டா ஆகியவற்றை முதல்வர் கலைஞர் வழங்கினர்.



சென்னையில் நடைபெற்ற ஆசியக் கவிஞர் மாநாட்டில் பங்கு பெற்ற கவிஞர்கள் பூம்புகார்சென்று சிலப்பதிகார கலைக் கூடத்தைக் கண்டு களித்தனர்.



கன்னிமாரா பொது நூலகத்தில் 23-6-'75 அன்று நடைபெற்ற தமிழ்நூல்கள் அறிமுக விழாவில் பெற்றோர்—ஆசிரியர் கழகம் நடத்திய நூலகப் படிப்புக் கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குக் கல்வி அமைச்சர் நாவலர் பரிசு வழங்கினர்.

# ஆசியக் கவிஞர் மாநாடு அகிலத்தை விழிப்புறச் செய்க!



## முதல்வர் கலைஞர்

இந்நாள் தமிழ்நாட்டின் இலக்கிய வட்டம் மறக்கவொண்ணு நாளாகும். கவிஞர்களாகிய நீங்கள் உங்களது இம்மாநாட்டுக்குத் திருவள்ளுவர் வாழ்ந்த இச் சென்னை மாநகரைத் தேர்ந்தெடுத்தது குறித்து நான் பெருமைப்படுகிறேன். இன்று இராஜாஜி மண்டபம் பாடும் பறவைகளின் கூடாகவே மாறிவிட்டது.

''கூட்டத்தை விரட்ட அங்கே ஒரு கவிஞன் வந்தால் போதும்'' என்று விளையாட்டாகச் சொல்லுவார்கள். ஆனால் எப்படி மேற்கும் கிழக்கும் வெவ்வேருனதோ அது போலத் தமிழ்நாட்டு நிலைமையும் வேருகும். இங்கே தமிழ்நாட்டில் கவியரங்கம் என்ருலே எங்கள் மரபுக்கொப்ப அங்கே விழாக்கோலம் காணலாம். அது அரசியலோ, சமயமோ, மொழியோ, இலக்கியமோ எதைப்பற்றியதாளுலும், அங்கே ஒரு கவிஞர் அணி, எளிதில் வந்து சேருவதை நாம் காணலாம். அண்டை நாடுகளிலிருந்து வந்துள்ள ஆசியாவின் கவிஞர்களையும் இந்தியாவின் பிறமொழி மாநிலக் கவிஞர்களையும் இங்கே காணுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். உங்களுக்கெல்லாம் நல்வரவு கூறுகிறேன். சென்னையில் நீங்கள் தங்கியுள்ள நாட்கள் இனியவையாக, பயனுற்றவையாக இருக்க எனது விழைவைத் தெரிவிக்கிறேன்.

கவிஞர் இனத்தில் ஒரு கவிஞனுக என்னையும் ஏற்றுக்கொண்டதற்காக உயர்நீதிமன்ற முன்னுள் நீதிபதி மகாராசனுக்கும் கிருஷ்ணு சீனுவாசனுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கிருஷ்ணுசீனிவாசன் என்னிடத்தில் எப்போதும் அன்புடன் பழகுபவர். அந்த அன்பின் காரணமாகவே சில ஆண்டுகளுக்கு முன், அவர் அமெரிக்காவில் இருந்தபோது ''டலாஸ் கார்னிங்நியூஸ்' என்ற நாளேட்டிற்கு அளித்த பேட்டியில், ''நான் வாழுகிற தமிழகத்தில் எங்கள் முதலமைச்சரே ஒரு கவிஞர்' என்றும், ''இன்றைய உலகில் தலைமை தாங்கிச் செல்ல உணர்ச்சியும் சிந்தையும் உள்ள ஒரு கவிஞனே தேவை'' என்றும் குறிப்பிட்டார். அவர், கவிஞர்களின் இந்த மாநாட்டைக் கூட்டுவதில் பெரும் பங்கு எடுத்துக் கொண்டிருக்கிருர்.

கவிஞன் என்பவன் எங்கோ உயர் மாடத்தில் வீற்றிருப்பவன் என்று எண்ணப்படுகிறது. எதார்த்த நிலைக்கு வராதவர்கள் என்றும் பொதுவாகக்கருதப்படுகின்றது. அது உண்மையல்ல. இலட்சிய உலகைப் பற்றிக் கனவு காண்பவர்களாக மட்டும் கவிஞர்கள் நின்றுவிடக் கூடாது. மக்கள் வாழ்வில் வளம் சேர்க்க உழைத்திடும் இலட்சிய வீரர்களாவும் அவர்கள் ஆகவேண்டும்.

'கவிஞர்கள் மக்களின் அங்கீகரிக்கப்படாத சட்டமன்ற உறுப்பினர்கள்' என்ருன் ஷெல்லி. இந்த மாநாட்டின் அமைப்பாளர்களோ, உங்களையெல்லாம் சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் தங்கச் செய்ததன் மூலம் அங்கீகரிக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களாகவே ஆக்கிவிட்டார்கள்.

ஒரு கவிஞன் எப்போதும் உன்னதமான நோக்கத்தோடு பாடுபடுகிருன். கவிஞன், 'காலத்தின் மைந்தன்'. தன்னை சுற்றி நிகழ்வனவற்றைப் பார்த்துக் கொண்டு அவனுல் சும்மாயிருக்க முடியாது. கவிஞனே உணர்ச்சியின் பிம்பம் என்பதால் தன் எண்ணங்களையெல்லாம் கட்டுப்படுத்திக்கொண்டு அவன் கவி இயற்றுவதென்பது நடக்கக் கூடிய காரியமல்ல.

நண்பர்களே! இருபது வயதில் நான் கவிதை எழுதத் தொடங்கினேன். எனது முதல் கவிதை 'கவிதை அல்ல'. ஆம் அதுதான் அதற்கு நான் இட்ட தலைப்பு. அன்றுமுதல் நான், வசன கவிதை எழுதி வருகின்றேன்.

'மனித வாழ்வில் பொறுமை' பற்றி நான் எண்ணியபோது சொன்னேன்.

''பிறையொன்று பொறுத்திருந்து
நிலவாகும்
பொறை கொண்டார் பொறுத்
திருந்து நில மாள்வார்.
இரையொன்று வருமட்டும்
காத்திருக்கும் கொக்கு
அதனைப் பொறை யென்று
சொல்லாதீர்!
தரைமீது அப்பறவை கற்ற
சூழ்ச்சி....
இகழ்வார்ப் பொறுத்தல்
தலையாய்க் கொண்டோன்
அகழ்வார் தாங்கும் நிலமென
நவின்ருர்—
இகழ்வார்க் கிருப்பது தலையும்
அல்ல.
ஏசிக் கிறுங்குதல் கலையும் அல்ல
புகழ்வார் பின்னே போதலும் தீது
இகழ்வார் எதிர்த்தல் அதனினும்
தீது.''

மாத்யூ ஆர்னுல்டு என்ற மாபெரும் விமர்சகர் ''இங்கிலாந்து மகத்தான நாடாகும். அதற்குக் காரணம் கவிதை'' என்று ஒருமுறை குறிப்பிட்டது என் நினைவிற்கு வருகிறது. ஆனுல் அவரே ஆசியாவைப் பற்றியும் 'ஆசியச் சுடர்' என்ற தன்னுடைய தலையாய நூலுக்கு புத்தரைத் தலைமகனுகக் கொண்டு 'நினைவில் எட்டா நீண்ட நெடுங்காலத்துக்கு முன்பிருந்தே ஆசியா கவிதைகளின் தொட்டில் ஆக விளங்கி வருகிறது' என்று எழுதியிருந்தார்.

எங்கள் தமிழகத்தையே எடுத்துக்கொள்ளுங்கள். வரலாற்றுக் காலந்தொட்டுக் கவிதை இங்குச் செழித்து வளர்ந்துள்ளது. சங்க காலத்துச் சங்கப் புலவர்கள்-ஔவையார் பெண் கவிஞர்களிலேயே முதலானவர்-எங்கள் திருவள்ளுவர் தன்னுடைய 1330 குறட்பாக்களில் காலத்தின் அறிவையெல்லாம் வடித்துத் தந்தார். அவரது குறட்பாக்கள் உலகில் எல்லா முக்கிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

காலத்தை வென்ற கவிஞர் பலர் எங்கள் மண்ணில் தோன்றியுள்ளனர். இருபதாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் விடுதலை இயக்கம் விடுதலை வேட்கையை-சுதந்தரக் கனலைச்சுடர்விடச் செய்தது. அந்நேரத்தில் எங்களிடையே வாழ்ந்தவர் சுப்பிரமணிய பாரதி. சுதந்தர இயக்கத்தின் சேதியைத் திக்கெட்டும் பரவச் செய்தான். மூலை முடுக்கெல்லாம் ஒலிக்கச் செய்தான். அவனது பாடலைப் பாடியபடி ஆயிரமாயிரம் பேர் சிறைக் கோட்டம் புகுந்தனர்.

அவருக்குப் பின் பாரதிதாசன் தனது புரட்சிக் கருத்துக்களால் தமிழகத்தில் புரட்சியைத் தோற்றுவித்தார். எங்கள் சிந்தையில் புதிய இரத்தத்தைப் பாய்ச்சினுர். அவர் புதுமை விரும்பியாகத் திகழ்ந்தார். சமுதாயத்தில் புரையோடிப் போன பழையமூடப் பழக்க வழக்கங்களை, தீண்டாமையை அவர் சாடினுர்.

இன்றையக் கவிஞன் உறுதி படைத்தவனுக இருக்கிருன். கவிஞனுகப் பிறப்பெடுக்கும் போதே அவன் அரசியலைச் சீர்படுத்த வேண்டுமென்கிற பெரு விருப்பத்தோடு பிறப்பெடுக்கிருன். தன் நாட்டைப் பற்றி, தன் மூதாதையரைப் பற்றி. தன் மொழியைப்பற்றி தன் இலக்கியத்தைப் பற்றி-தன் பண்பாடு, கலை, கலாசாரம், பாரம்பரியம், புகழ் இவை பற்றி அவன் பெருமைப்படுகின்ருன். புகழ் என்ற தலைப்பில் நான் எழுதிய கவிதைகளிலிருந்து சில வரிகளை இங்கே கூற முற்படுகிறேன்.

''கடற்கரையில் தலைநீட்டும் நண்டுகளைக் கைநீட்டிப் பிடிக்க ஓட, உடன் அவைகள் போன இடம் தெரியாமல் பதுங்கிவிடும். புகழும் அதுதான்.

''யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' என்று தமிழில் சிறப்பாகச் சொல்லுவோம். உலகெலாம் ஒன்றே எனக்கூறும் இக்கவிதை வரிகள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பாடப்பட்டதாகும். இதுதான் நாங்கள் எல்லாருக்கும்-ஆசியாவுக்கும்-உலகம் அனைத்துக்கும் அளிக்கின்ற செய்தியாகும்.

ஆசியக் கவிஞர்களின் இம்மாநாடு கவிஞர்களிடையே கருத்துப் பரிமாற்றத்துக்கும் உலகின் முன்னேற்றத்துக்குத் தேவையான ஒற்றுமை உணர்வை ஏற்படுத்துவதற்கு உதவுவதாகட்டும்.

உலகக் கவிஞர்களுக்கு மிகப் பெரும் பொறுப்பு உள்ளது. கவிஞர்களைக் காட்டிலும் உண்மை நிலையை எளிதில் உணரும் ஆற்றல் படைத்தவர் வேறு எவரும் இல்லை. வானிலை ஆய்வுக் கூடம் எதனைக் காட்டிலும் கால நிலை அறியும் தனி ஆற்றல் கவிஞனுக்கே உண்டு. மனித உணர்வுகளின் மேம்பாட்டுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருப்பவனே கவிஞன். இதைக் கவிஞன் தன் எண்ணத்தில் பதித்திட வேண்டும். ஓர் இனத்தின் காவலனும் மொழியின் ஒளிவிளக்காக அவனே! எதார்த்த அமைய வேண்டும். எதார்த்த நிலையை உணர்ந்ததாக அவனது செயல் இருக்க வேண்டும். எளிதில் எவருக்கும் புரியும் படி அவனது வர்ணனைகள் அமையவேண்டும்.

'வாழ்வின் பாதை' என்ற எனது கவிதையொன்றிலிருந்து சில வரிகளை இங்கே கூறுகிறேன்.

''இனிக்கின்ற சர்க்கரையைக்
குழந்தைக் கூட்டம்
அள்ளி அள்ளி வாயில்
நிறைக்கின்ற காட்சிதனைக்
கண்டிருப்போம்.
சுவைக்கின்ற இன்பத்தை அள
வறிந்து நுகராமல்—மாடு
மிதிக்கின்ற சேறுபோல் ஆக்கு
கின்ருர் சிலபேர் தம் வாழ்வை!
வேண்டியமட்டும் உணவருந்தி
மகிழும் வேங்கை—பசி
தாண்டிய பின்னும் மான்களை
விழுங்கி மயங்கும் பாம்பு!
காடகத்தில் இரு காட்சி கண்ட
பின்னும்—வாழ்வு
நாடகத்தில் நடிக்கின்ருேர்
கற்கவில்லை—என்ன செய்?
ஆறிலும் சாவு நூறிலும் சாவு
ஆனது ஆகட்டுமென்று
அறப்போர் புரிவோன் அரிமா
வீரன்;
ஆறிலும் சாவு நூறிலும் சாவு
ஆனது ஆகட்டுமென்று
அயரா தின்பம் அனைத்தும்
துய்ப்போன்...
வீரனே அல்ல, விலங்கினும்
கீழோன்.
தன் வீடு—தன் மனைவி—
தன் பிள்ளை—தன் சுற்றம்
என்றிருப்போன் நடத்துவதும்
வாழ்வல்ல!
என் நாடு—எம் உரிமை—என்
மொழியாம்—அனைத்தும் காக்க
என்னுலே இயன்றதெல்லாம்
செய்திடுவேன் என்போன்தான்
பொதுமனிதன்.''

உலகக் கவிஞர்கள் எல்லாப் ஒன்றுபடுவோம்! இருளும் சோர்வும் அகலப் புது ஒள பரப்புவோம்!

தமிழ்நாட்டில் கூடுகிற இம்மாநாடு உகை விழிப்புறச் செய்யும்; சுடரொளி பரப்பும்! சிறு பொறி நெருப்பாகட்டும்! என்று கூறி இம்மாநாட்டினைத் தொடங்கி வைக்கின்றேன்.

**—22-6-'75ல் இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற ஆசியக் கவிஞர் மாநாட்டில் முதல்வர் கலைஞர் ஆங்கிலத்தில் ஆற்றிய தொடக்க உரையின் தமிழாக்கம்.**




# 'தமிழரசு'

# ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா

தமிழரசு-இதழின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா 27-6-75 அன்று காலை பத்து மணிக்கு இராஜாஜி மண்டபத்தில் கொண்டாடப் பெற்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சிறப்பு விருந்தினராக வருகை புரிந்தார்கள். அமைச்சர் பெருமக்களும் தமிழ்ச் சான்றோர்களும், கவிஞர்கள், நீதிபதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரும் விழாவுக்கு வந்து சிறப்பித்தனர்.

இந்த விழாவிலே மற்றொரு சிறப்பும் சேர்ந்திருந்தது குறிப்பிடத்தக்கது: இராஜாஜி மண்டபத்தில், பழங்கால வெள்ளை ஆட்சியாளர் 12 பேரின் உருவப்படங்கள் நீண்ட காலமாக இடம் பெற்றிருந்தன. அவற்றை எல்லாம் அகற்றி விட்டு, அவற்றின் இடங்களில் தமிழ்ச் சான்றோர்களின் படங்களை அரசு அமைத்திருந்த காட்சி, விழாவுக்கு வந்திருந்த அனைவரின் இதயத்தையும் மகிழ்வித்தது.

இராஜாஜி மண்டப நுழைவு வாயிலில் 'தமிழரசு' இதழின் மாதிரி ஏடுகள், இணைப்புகள், சுவரொட்டிகள் ஆகியவை, வருகை புரிவோரின் பார்வைக்காகக் கண்காட்சி போல வைக்கப்பட்டிருந்தன.

வருகை புரிந்தோர் அனைவரையும் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. கே.ஏ. சுந்தரம், ஐ.ஏ.எஸ். அவர்கள் வரவேற்றுப் பேசினார். பின்னர், முதல்வர் கலைஞர் அவர்கள் 'தமிழரசு' இதழ் உருவாகிய சூழ்நிலையையும் அதன் தொண்டுகளையும் குறித்து உரையாற்றினார்கள். முதல்வரின் உரை வருமாறு:

''தமிழரசு'' இதழின் ஆறும் ஆண்டுத் தொடக்க விழாவில் பங்கேற்று உங்களையெல்லாம் காண்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

'தமிழ்நாடு அரசின் சார்பில் பலவகையான இதழ்கள் நடத்தப்பட்டு வந்தன. அவைபற்றி அரசு ஆய்வு நடத்தி, அவையெல்லாம் சரியான அளவுக்குப் பயன் தரவில்லை என்ற முடிவுக்கு வந்து, அவற்றில் சில பல ஏடுகளை இணைத்து, 'தமிழரசு' என்ற இவ்விதழை அரசு தொடங்கியது. இவ்விதழ் இதன் ஆறுவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்நாளில், இச்சிறப்புமிக்க விழாவினோடு இணைந்தே தமிழ்நாட்டு மக்களிடம் நீண்ட நெடுங்காலமாக இருந்து வந்த ஆவலை நிறைவு செய்யும் வகையில் தமிழ்ப் புலவர்கள், சான்றோர்கள் மனக்குறையைப் போக்கும் வகையில், இராஜாஜி மண்டபத்தில் இருந்த பழைய வெள்ளை அரசால் நிறுவப்பட்ட படங்களை இங்கேயிருந்து அகற்றி, அவற்றை மதிக்கத்தக்க முறையில் அரசாங்கக் கலைக்கூடத்தில் வைத்துவிட்டு அந்தப் படங்கள் இருந்த இடத்தில், தமிழ்க்கலை, கலாச்சாரம் பண்பாடு இவை சிறக்கும் வகையிலும், தமிழரின் வீர வரலாறு நினைவு கூரத்தக்க வகையிலும், உள்ள படங்கள் இந்த மண்டபத்தில் இடம் பெற்றிருக்கின்றன.

செய்தித்துறையினர் அல்லும் பகலும் அரும்பாடுபட்டு இந்த வெற்றியைத் தேடித் தந்திருக்கின்றனர்.

எந்தெந்தப் படங்கள் இங்கு இடம் பெறவேண்டுமென்று நீங்களெல்லாம் விரும்பினீர்களோ அவையெல்லாம் இங்கு இடம் பெற்றிருக்கின்றன. நாட்டின் மரபுக்கும், மொழி உணர்வுக்கும் வரலாற்றுச் சிறப்புக்கும் ஏற்றவகையில் இவை அமைந்துள்ளன. இந்தப் படங்கள் நமக்கு எத்தனையோ கதைகளை-வரலாறுகளை- அறிவுரைகளை வழங்கிக் கொண்டிருக்கும்.

இவையெல்லாம் இங்குச் சிறப்புற அமைந்திட உறுதுணையாக இருந்த செய்தித் துறை இயக்குநர் சுந்தரம் அவர்களுக்கும் துணை இயக்குநர் அருமை நண்பர் கருணானந்தம் அவர்களுக்கும் என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.''

ஓவியர்கள் வேதாசலம், ஆர். நடராஜன், சீனி சோமு, வி. மாதவன் பிள்ளை, கே. ஆர். வேணுகோபால் சர்மா, கே. வீ. ராகவன், கே. எம். சுந்தரம் ஆகியோருக்கு முதல்வர் மாலைகளணிவித்துச் சிறப்பித்தார்.

'தமிழரசு' ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா- இலட்சியம் நிறைவேறிய விழாவாக மலர்ந்தது என்பதில் ஐயமில்லை.

முதல்வர், அமைச்சர்கள், சட்டமன்ற மேலவைத் துணைத்தலைவர் ஆகியோருடன் ஓவியர்கள்



| ஆண்டு | விநியோகித்த மூலப்பொருள்களின் மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| அக்டோபர் 1970 முதல் மார்ச்சு 1971 வரை | 106.58 |
| 1971—72 ... ... ... | 379.20 |
| 1972—73 ... ... ... | 417.90 |
| 1973—74 ... ... ... | 576.10 |
| ஏப்ரல் 1974 முதல் டிசம்பர் 1974 முடிய (9 மாதங்கள்) | 602.43 |



**தவணை முறையில் இயந்திரங்கள் வழங்கும் திட்டமும், தமிழ் நாட்டுத் தொழில் முதலீட்டுக் கழகத்துடன் கொண்டுள்ள இணைப்புத் திட்டமும்.**

தவணைமுறைத் திட்டத்தின் (இயந்திரங்கள்) கீழ் 'சிட்கோ' 31-3-74 வரை 1,135 தொழில் முனைவோர்களுக்கு 5 கோடி ரூபாய் மதிப்புள்ள இயந்திரங்களை வாங்குவதற்கு உதவியுள்ளது. 1-4-74 முதல் சிறுதொழில்களுக்கு இயந்திரங்கள் வழங்க, சொந்த இடங்களில் தொழிற்கூடங்கள் அமைக்க தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்துடன் (TIIC) கூட்டு இணைப்புத் திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

**இத்திட்டத்தின் சிறப்பான அம்சங்களும் உதவி பெற அணுகும் முறையும்.**

இத்திட்டத்தின்கீழ் தொழில் முனைவோர்களுக்கு நிலம், கட்டடம் மற்றும் இயந்திரங்களின் விலையில் 90 சதவீதம் வரை நிதி உதவியளிக்கப்படும். எஞ்சியுள்ள தொகையைத் தொழில் முனைவோர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். இத்திட்டத்தின்கீழ் அதிகபட்சமாக ரூபாய் 7.5 இலட்சம் வழங்கப்படும். நுட்பமான தொழில்களுக்கு 10 இலட்சம் ரூபாய் வரை உதவி செய்யப்படும். தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளுக்கு 9.5 சத வட்டியும், மற்ற பகுதிகளுக்கு 10.5 சத வட்டியும் வசூலிக்கப்படும். இக்கடன் தொகையை இரண்டு ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு ஆறு ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

**தவணைமுறைத் திட்டத்தில் உதவி பெறும் முறை.**

தவணைமுறைத் திட்டத்தில் ரூபாய் மூன்று இலட்சம் வரை உதவிபெற விரும்புகின்றவர்கள் எளியமுறையில் அமைக்கப்பெற்ற மனுப்படிவங்களை 'சிட்கோ' வின் தலைமை அலுவலகத்திலும் மற்றும் வேலூர், திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, கோயம்புத்தூர், மதுரை, இராமநாதபுரம் (மதுரையில் உள்ளது) திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள கிளை அலுவலகங்களிலும் ரூபாய் 2 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். ரூபாய் 3 இலட்சத்திற்கு மேல் உதவி பெற, தமிழ்நாடு முதலீட்டுக் கழகம் வழங்கும் மனுப் படிவத்தில்தான் மனுச் செய்ய வேண்டும்.

தவணைமுறைத் திட்டத்தின் கீழ் 'சிட்கோ' கீழ்க்கண்ட சாதனைகளைச் செய்துள்ளது.




| ஆண்டு | | 14-10-70 முதல் 31-3-71 | 1-4-71 முதல் 31-3-72 | 1-4-72 முதல் 31-3-73 | 1-4-73 முதல் 31-3-74 | 1-4-74 முதல் 31-12-74 |
|---|---|---|---|---|---|---|
| பயன்பெற்ற தொழில் முனைவோர்களின் எண்ணிக்கை... | ... | 11 | 154 | 401 | 569 | 127* |
| வழங்கப்பட்ட இயந்திரங்களின் மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | ... | 7.62 | 75.91 | 173.11 | 232.76 | 198.23 |

*சிட்கோ-தொழில் முதலீட்டு நிறுவனம் ஆகியவற்றின் இணைப்புத் திட்டத்தில் பலனடைந்தவர்களின் எண்ணிக்கையும் சேர்ந்தது.

**பின்தங்கிய பகுதிகளின் முன்னேற்றமும், மானியம் வழங்கும் திட்டங்களும்.**

பின்தங்கிய பகுதிகளில் துவக்கப்பட விருக்கும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு மானியம் வழங்கும் திட்டத்தை சிட்கோ 1.4.74-லிருந்து மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் தொழில்துறையில் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ள 27 வட்டங்களில் (தாலுக்கா) புதிதாக ஆரம்பிக்கப்பட விருக்கும் தொழில் நிறுவனங்களுக்கு அவைகளின் நிலையான முதலீட்டில் 15 சத வீதம் மானியம் வழங்கப்படுகிறது. தற்பொழுதுள்ள சிறு தொழிற்சாலைகளை விரிவுபடுத்துவதற்கும் மானியம் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் மானியம்பெறுவதற்கான மனுப் படிவத்தையும் விவரங்களையும் 'சிட்கோ' அலுவலகங்களில் உள்ள சம்பந்தப்பட்ட உதவி வளர்ச்சி அலுவலர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

1.4.74 முதல் 'சிட்கோ'வின் மூலம் பின்கண்ட 105 தொழிற்சாலைகளுக்கு 11.61 இலட்சம் ரூபாய் மானியத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| வட ஆர்க்காடு மாவட்டம் | 12 |
| மதுரை மாவட்டம் | 7 |
| இராமநாதபுர மாவட்டம் | 37 |
| புதுக்கோட்டை மாவட்டம் | 11 |
| தருமபுரி மாவட்டம் | 38 |

இந்த 105 தொழிற்சாலைகளில் 74 புதியதொழிற்சாலைகளும், 31 ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கும் தொழிற்சாலைகளுமாகும். இந்தத் தொழிற்சாலைகளினால் 1,929 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

**ஏற்றுமதித் திட்டம்**

சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் தகுதியுடைய ஏற்றுமதி இல்லம் என்று அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து குறைந்த மதிப்புள்ள அந்நாட்டு செலாவணி சிறு தொழிற்சாலைகளின் சார்பாக மூலப்பொருள் இறக்குமதி செய்யப்படுகிறது. அதன் காரணமாகச் சிறுதொழிற்சாலைகள் விரைவாகவும், விலை குறைவாகவும் மூலப் பொருள்களைப் பெறுகின்றன.

திருவாளர்கள் ஹில்வர்சம் எலக்ட்ரானிக்ஸ் பிரைவேட் லிமிடெட்டுக்குத் (M/s. Hilversum Electronics Private Limited) தேவையான 2.5 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள மூலப்பொருள்களை இறக்குமதி செய்ய முடிவு செய்துள்ளது. மாநில வர்த்தக நிறுவனத்துடன் 1 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 'கம் அராபிக்' (Gum Arabic) என்ற பொருளை இறக்குமதி செய்து சிறு தொழிற்சாலைகளுக்கு விநியோகம் செய்ய ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. அதுபோலவே மாநில வர்த்தகக் கழகத்துடன் இணைந்து 'எச்.டி.' 'எல்.டி.' பாலித்தின் வார்ப்பட பவுடர் இறக்குமதி செய்து சிறு தொழிற்சாலைகளுக்கு வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.




பூர்த்தியான ரப்பர் பொருள்களை 'சிட்கோ' மூலம் ஏற்றுமதி செய்யும் சிறுதொழிற்சாலைகள் 6 உள்ளன. அவைகளுக்குத் தேவையான மூலப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு இந்நிறுவனம் ஏற்பாடு செய்யும். கிரேனைட் கற்கள், தீப்பெட்டிகள், சோப்புகள் போன்றவைகளை ஏற்றுமதி செய்ய ஆவன செய்யப்பட்டு வருகின்றன.

**தொழில்நுட்ப அறிவுரை வழங்குதலும் தொழில் சாத்தியக் குறிப்பு தயாரித்தலும்**

திறமை வாய்ந்த தொழில் நுட்ப ஆலோசகர்கள் மூலமாக, தொழில் நுட்பத் திட்டங்களை உள்ளடக்கிய தொழில் முனைவோர்களுக்கு வழங்க 'சிட்கோ' ஓர் அறிவுரைக் குழுவை அமைக்கிறது. நசித்த தொழில் நிறுவனங்கள் இதன்மூலம் அறிவுரையும் புதிய வழிமுறையும் பெற்றுத் தொழில் வளர்ச்சியடையச் செய்யலாம். இதற்கெனத் திறமை வாய்ந்த தொழில் நுட்ப ஆலோசகர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அவ்வப்போது ஏற்படும் சிக்கல்களைத் தொழில் நுட்ப ஆலோசகர்கள் மூலமாக முடிவு செய்வதற்கென ஒவ்வொரு தொழில் முறையிலும் தேர்ந்த அறிவுரையாளர்களைக் கொண்ட குழு ஒன்றை நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்குழு ஏற்கெனவே தொழில் நுட்பம் மற்றும் பொருளாதார அடிப்படையில் தயார் செய்யப்பட்ட அறிக்கைகளைக் கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் விரிவான தொழில்திட்ட அறிக்கைகளைத் தயார் செய்யப் பயன்படுத்தப்படும்.

சிட்கோ சிறு தொழில் முனைவோர்களுக்குக் குறிப்பிட்ட தொழில் நடத்தத் தேவையான [illegible]

# பொற்காலத்தின் வாயிலில் தமிழகம்!

மாண்புமிகு தொழில் அமைச்சர் எஸ். ஜே. சாதிக்பாட்சா

தமிழ்நாட்டின் வருங்காலப் பொருளாதார வளர்ச்சிக்குத் திறவுகோல், தொழில் வளர்ச்சியே ஆகும். மத்திய அரசின் அளவிலும், மாநில அரசின் அளவிலும் சம்பந்தப்பட்ட அனைவரின் முயற்சியினால் ஐந்தாண்டுத் திட்டங்கள் வாயிலாகத் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கான வித்துக்கள் 1967—1970 ஆண்டுகளில் விதைக்கப்பட்டன. தேவையான சமூக அடிப்படை வசதிகளை அளிக்க அவை உதவின. பொருளாதார வளர்ச்சியின் தலையாய அம்சமாகத் தொழில் வளர்ச்சி தலையெடுத்துள்ளதால், தமிழகம் புதியதோர் பொற்காலத்தின் வாயிலில் அடியெடுத்து வைத்துள்ளது.

தமிழகத்தினைத் தொழில் மயமாக்குவதற்குத் தமிழ்நாடு அரசு பல்வேறு முயற்சிகளைக் கடந்த 8 ஆண்டுகளில் மேற்கொண்டு வந்ததன் காரணமாகத் தமிழ்நாடு தொழில் மயமாகி வருகிறது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் முன்னேறி வருகின்றது என்பதற்கான ஆதாரங்களைத் "தமிழரசு" இதழின் தொழில் மலர் மூலமாகத் தமிழக மக்களுக்குத் தெரிவித்துக் கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

**தொழில் உற்பத்தி :**

தொழில் உற்பத்திக் குறியீட்டு எண் தொழில் வளர்ச்சியைக் காட்டும் ஒரு அளவுகோலாகும். 1966-ஆம் ஆண்டில் 148.6 எனவிருந்த தொழில் உற்பத்திக் குறியீட்டு எண், 1974-ஆம் ஆண்டில் 195.9 என உயர்ந்துள்ளது. எனவே, தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் முன்னேறி வருகிறது என்பது தெளிவாகிறது.

இரண்டாவது, முக்கியத்துவம் பெறும் துறையிலிருந்து—அதாவது தொழில் துறையிலிருந்து—மாநில வருவாய்க்குக் கிடைக்கும் தொகை குறித்த புள்ளி விவரம் தொழில் வளர்ச்சியைக் குறிப்பிடும் மற்றொரு முக்கியமான அளவுகோலாகும்.

1966—67-ஆம் ஆண்டில் தொழில்துறையிலிருந்து மாநில மொத்த வருவாய்க்குக் கிடைத்த தொகை ரூபாய் 270.89 கோடி. அத் தொகை 1973—74-ஆம் ஆண்டில் ரூபாய் 374.39 கோடியாக உயர்ந்துள்ளது. இதிலிருந்தும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி பெருகுகிறது என்பது உள்ளங்கை நெல்லிக் கனியெனத் தெளிவாகிறது.

தொழிற்சாலைகள் மின்சக்தியை நம்பியுள்ளன. ஏனெனில் தொழில் வளர்ச்சிக்கு மின்சக்தி அடிப்படைத் தேவையாகும். தமிழகத்தில் உள்ள தொழிற்சாலைகள் பயன்படுத்திய மின்சக்தி குறித்த புள்ளி விவரங்கள், தமிழகத்தில் தொழில் வளர்ச்சி எந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்துள்ளது என்பதை மதிப்பிடுவதற்கு இன்றியமையாத அளவுகோலாக உள்ளன. தமிழ்நாட்டில் மொத்தம் பயன்படுத்தப்படும் மின்சக்தியில் 50 சதவிகிதத்தை பல்வேறு தொழிற்சாலைகள் பயன்படுத்துகின்றன. இம்மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகள் 1966—67-ஆம் ஆண்டில் 1,923 மில்லியன் யூனிட் மின்சக்தியை பயன்படுத்தியிருக்க, 1973—74-ஆம் ஆண்டில் 2,184 மில்லியன் யூனிட் மின்சக்தியை பயன்படுத்தியுள்ளன. இதிலிருந்தும் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி முன்னேற்ற நிலையில் உள்ளது என்பது மெய்ப்பிக்கப்படுகிறது.

ஏற்றத்தாழ்வற்ற சமதர்மச் சமுதாயம் அமைக்க வேண்டும் என்ற இலட்சியத்துடன் செயலாற்றி வரும் தமிழ்நாடு அரசு, தமிழகத்தை பெரும் தொழில் மயமாக்கி தமிழக மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் பின்கண்ட முக்கிய கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு மத்திய அரசை வற்புறுத்தி வருகிறது.



1. நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டி மற்றொரு அனல் மின் நிலையம் ஏற்படுத்த வேண்டும்.

2. சேலம் இரும்பாலைத் திட்டத்தை விரைவு படுத்த வேண்டும்.

3. கல்பாக்கம் அணுமின் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும்.

4. சேது சமுத்திரத் திட்டத்தை ஐந்தாவது திட்டத்தில் சேர்க்க வேண்டும்.

5. தூத்துக்குடியில் மற்றொரு அணு மின் திட்டத்தைத் துவக்க வேண்டும்.

மேலும் தமிழ்நாடு அரசு 'சிட்கோ', 'டிட்கோ', 'சிப்காட்' ஆகிய நிறுவனங்களின் மூலம் தொழில்களின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா வசதிகளையும் செய்து கொடுக்கின்றன.

தமிழ்நாடு அரசின் இத்தகைய முயற்சிகளினால் தமிழகம் விரைவில் தொழில் மயமாகும், அதன் பயனாய்த் தமிழக மக்களின் வாழ்வு வளம் பெறும், தமிழகத்தில் பொற்காலம் பிறக்கும் என்பது திண்ணமாகும்.

# சிறுதொழில் வளர்க்கும் சிட்கோ

தமிழ்நாட்டிலுள்ள சிறு தொழிற்சாலைகளுக்கு உதவவும் அவைகளின் வளர்ச்சிக்காகவும் 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் நிறுவனமாகத் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் ('சிட்கோ') துவக்கப்பட்டது. முக்கியமாக 'சிட்கோ' சிறுதொழில் முனைவோர்களின் தொழில் முன்னேற்றத்துக்கு வேண்டிய எல்லாவிதமான பணிகளையும் செய்து வருகிறது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:

1. சிறு தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருள்களைச் செவ்வனே கொள்முதல் செய்து, பின்னர் சிறுதொழில்களுக்குப் போதிய விலையில் கொடுத்து உதவுதல்.

2. சிறு தொழில்களுக்குத் தேவையான இயந்திரங்களை எளிய தவணைமுறைக் கடன் திட்டத்தில் வழங்குதல்.

3. தவணைமுறைக் கடன் திட்டத்தில் சிறுதொழில்களுக்குத் தொழிற்கூடங்கள் கட்டிக் கொள்ளவும், கட்டித்தரவும் வகை செய்தல்.

4. சிறு தொழில்கள் தொடங்க தொழில் நுணுக்க அறிவுரை வழங்குதல், புதிய சிறு தொழில்கள் தொடங்க தொழில்நுட்பத் திட்ட அறிக்கை தயாரித்து வழங்குதல் ஆகியவை.

5. சிறு தொழில்களின் உற்பத்திப் பொருள்களுக்கு விற்பனை வாய்ப்பு ஏற்படுத்தித் தருதல்.

6. சிறுதொழில்களினுடைய இறக்குமதி உரிமங்களை ஒன்று திரட்டி, மூலப்பொருள்களை மொத்தமாக இறக்குமதி செய்து தொழிலகங்களுக்கு வழங்குதல் மற்றும் ஏற்றுமதி வளர்ச்சியை ஊக்குவித்தல்.

**மூலப்பொருட்கள் கொள்முதல் விநியோகம் மற்றும் அதைப் பெறும் முறைகள்.**

'சிட்கோ' மாநிலம் முழுவதிலும் உள்ள சிறுதொழில்களுக்குத் தேவையான இரும்பு மற்றும் எஃகுப் பொருட்களின் அளவை இணைத் தொழில் குழுவில் (Joint Plant Committee) முடிவு செய்கிறது. இந்நிறுவனம், இணை தொழில் குழுவின் ஒதுக்கீடு மூலமும், உற்பத்தியாளர்கள் (Hindustan Steel Limited, Tata Iron and Steel Limited) மூலமும் கொள்முதல் செய்த இரும்பு மற்றும் எஃகுப் பொருட்களை, 'சிட்கோவில்' மூலப் பொருட்களுக்காகப் பதிவு செய்துள்ள சிறுதொழில்களுக்கு விநியோகம் செய்து வருகின்றது. கையிருப்புள்ள மூலப் பொருட்களை சுழற்சி முறையில் விநியோகம் செய்கின்றது. மேலும் சிறுதொழிற்சாலைகளுக்கு கிடைக்கப்பெற்ற ஆர்டர்களைப் பூர்த்தி செய்ய வேண்டிய மூலப் பொருட்களையும் சிறப்பு ஒதுக்கீட்டின் மூலம் வழங்கி வருகிறது. இது தவிர துத்தநாகம் (Zinc), 'பட்டன் டாலோ', 'பாம் ஆயில்' (Palm oil), காஸ்டிக் சோடா, 'பொட்டாசியம் குளோரேட்' நிலக்கரி முதலிய மூலப்பொருட்களையும் கொள்முதல் செய்து தொழில் வணிக இயக்குநரின் ஒதுக்கீட்டின்படி விநியோகம் செய்து வருகின்றது.

**மூலப்பொருட்களைப் பெறும் முறை**

1. இரும்பு எஃகுப் பொருட்களின் தேவைக்குச் 'சிட்கோ' அலுவலகங்களில் ரூபாய் 1.50-க்கு கிடைக்கும் மனுவை வாங்கி, அதில் கேட்டுள்ள விவரங்களைப் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். மேலும், சிறுதொழில் சான்றிதழின் நகல் ஒன்றையும் இணைத்து அனுப்ப வேண்டும். சிறப்பு ஒதுக்கீடுகளுக்கு (Adhoc releases) கீழே குறிப்பிட்டுள்ள இணைப்புகளுடன் சாதாரணமாக மனு செய்தால் போதுமானது. (1) அரசிடமிருந்து அல்லது அரசின்கீழ் இயங்கும் நிறுவனங்களிடமிருந்து அல்லது பெரிய கம்பெனிகளிடமிருந்து பெறப்பட்ட ஆர்டரின் (உண்மையெனக் கையொப்பமிடப்பட்ட) நகல்

2. சிறுதொழில் சான்றிதழ் (உண்மையென கையொப்பமிடப்பட்ட) நகல்.

3. தயாரிக்கப் போகும் பொருளின் அங்கீகாரம் செய்யப்பட்ட வரைபடம்.

4. வரைபடத்தில் உள்ள பொருளைத் தயாரிக்கத் தேவையான மூலப்பொருட்கள்.

இந்த ஆண்டில் சுமார் 225 மெட்ரிக் டன் பொட்டாசியம் குளோரேட்டை இறக்குமதி செய்து தீப்பெட்டித் தொழில்களுக்கு விநியோகம் செய்ய மாநில வர்த்தகக் கழகத்துடன் (State Trading Corporation) 'சிட்கோ' ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது. இதே போன்று 'என்ட்ரின்' (Endrine), 'பட்டன் டாலோ, 'பாம் ஆயில்' போன்ற கிடைத்தற்கரிய மூலப் பொருட்களை விநியோகம் செய்ய மாநில வர்த்தகக் கழகத்துடன் ஒப்பந்தம் செய்ய முனைந்து வருகிறது.

சிறுதொழில் முனைவோர்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு உதவியாக 'இர்மாக்' (Industrial Raw Material Assistance Centre) என்ற திட்டத்தைத் தொடங்கியிருக்கிறது. ஏறத்தாழ 10 இலட்சம் ரூபாய்க்கு பொது நாணயப் பகுதிகளிலிருந்தும் மற்றும் 25 இலட்ச ரூபாய்க்குப் பணமாகச் செலுத்தக்கூடிய பகுதிகளிலிருந்தும் இத்திட்டத்தைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இறக்குமதி அனுமதிச் சான்றிதழ்களைப் பெறுகிறது. இந்த அடிப்படையில் ஏற்றுமதிப் பொருட்களை உற்பத்தி செய்யும் சிறுதொழில்களுக்கு வேண்டிய மூலப் பொருட்களை இறக்குமதி செய்து அந்தத் தொழிற்கூடங்களுக்கு வேண்டிய மூலப் பொருட்கள் தங்கு தடையின்றிக் கிடைக்கும்படி செய்ய முடியும்.

மூலப்பொருள்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் 'சிட்கோ'வின் சாதனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

# தெரிந்து கொள்ளுங்கள் !

1947-ல் நாடு முழுவதும், 19 பல்கலைக் கழகங்களும் 600 கல்லூரிகளும் இருந்தன. 2.5 இலட்சம் உயர்மட்டக் கல்வி மாணவர்கள் இருந்தனர். தற்போது 100 பல்கலைக் கழகங்களும், 4,000 கல்லூரிகளும் உள்ளன. உயர்மட்டக் கல்வி பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை 40 இலட்சமாக உயர்ந்துள்ளது.

ஆண்டுதோறும் கல்விக்காக இந்திய அரசு செலவு செய்யும் தொகை ரூ. 1,350 கோடி ஆகும். நாட்டின் மொத்தச் செலவினத்தில் இது இரண்டாவது இடத்தைப் பெறுகிறது.

1947-ஆம் ஆண்டில், இந்தியாவில் எழுத்தறிவு பெற்றோரின் தொகை 14 சதவீதம்; 1971-ல் இது 29 சதவீதமாக மாறியது. தற்போது ஏறக்குறைய 35 சதவீதமாகியுள்ளது.

தமிழ்நாட்டில் கல்விக்காக ரூ. 118 கோடி செலவிடப்படுகிறது. தமிழக அரசின் செலவினத்தில் கல்வி முதலிடம் பெற்றிருக்கிறது.

களின் சாத்தியக்கூறுகளை ஆராய உதவுகிறது. இத்திட்டத்தின்கீழ் சிறுதொழில் முனைவோர்கள் ரூபாய் 10,000—வரை மதிப்புள்ள தொழில் திட்டச் சாத்தியக் கூறுகளுக்கு அதில் 10 சதவீதமும், ரூபாய் 10,000—க்கு மேற்பட்ட மதிப்புள்ள சாத்தியக்கூறுகளுக்கு அதில் 20 சதவீதமும் செலுத்த வேண்டும். எஞ்சியுள்ள தொகையை 'சிட்கோ' வே அதனுடைய நிதியிலிருந்து மானியமாக ஏற்றுக்கொள்ளும்.

## மின் அணுக்கருவித் தொழிலகங்கள்

திறமை வாய்ந்த தொழில் முனைவோர்களின் நன்மைக்காக மின் அணு சம்பந்தப்பட்ட தொழில் திட்டங்கள் பற்றிய சாத்தியக் கூறுகளை இந்நிறுவனம் தயார் செய்துள்ளது.

இதுவரை 24 மின் அணுத் தொழில்களுக்கான சாத்திய அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு 10 தொழில் நிறுவனங்களால் செயல்படுத்தப்பட்டு, 6 தொழில் நிறுவனங்களால் இந்திய அரசின் அனுமதிக்குப் பின் செயல்படுத்தப்படவும் இருக்கின்றன.

## படித்த வேலையில்லாதோர் மற்றும் தொழில் வினைஞர்களுக்காக சலுகைகள்

படித்து வேலையில்லாதிருந்த 305 பேர்களுக்கு இயந்திரங்கள் வாங்கவும், தொழிற்கூடங்கள் கட்டவும் 'சிட்கோ' இதுவரை உதவியுள்ளது. இவ்வெண்ணிக்கையில் 251 தொழில் வினைஞர்கள் அடங்குவர். இவர்களுக்கு 'சிட்கோ சிறப்பு அம்சமாகத் தவணை முறைத் திட்டத்தின்கீழ், 100சதவீத நிதியுதவி வழங்குகிறது. அதாவது உதவி பெறுவோர் செலுத்தவேண்டிய 10 சதவீத முன்பணத்தை இவர்கள் செலுத்தவேண்டியதில்லை.

## வேலை வாய்ப்பு

பல்வேறு வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 'சிட்கோ' இதுவரை 1,642 தொழில் முனைவோர்களுக்கு வேலை வாய்ப்பளித்ததின் பயனால் அவர்கள் 15,000—க்கும் மேற்பட்ட பேர்களுக்கு நம் மாநிலம் முழுவதிலும் வேலை வாய்ப்பளித்துள்ளார்கள்.

'சிட்கோ' செயலுக்குக் கொண்டு வந்துள்ள எல்லாத் திட்டங்களும் சிறுதொழில் முனைவோர்களிடமிருந்து முழு ஆதரவையும் பெற்று, அதனுடைய முக்கிய நோக்கங்களை நிறைவேற்றி வருகின்றது.

## இலாபம்

'சிட்கோ' நிறுவனம் கடந்த ஆண்டுகளில் வரி விதிப்புக்குமுன் அடைந்துள்ள இலாபங்கள் பின்வருமாறு :

| ஆண்டு | | | இலாபம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1970—71 | ... | ... | 2.54 |
| 1971—72 | ... | ... | 15.14 |
| 1972—73 | ... | ... | 20.61 |
| 1973—74 | ... | ... | 14.34 |





# 'சிப்காட்' செய்யும் நிதியுதவி !

நாட்டில் தொழில்துறைக்கு நிதியுதவி அளிப்பதில், கூட்டு நிதியுதவி அளித்தல்தான் சிறந்ததாகிறது என்பதை மனத்திற் கொண்டும், நிதியுதவி அளிப்பதில் உள்ள வரையறைகளைக் கருத்தில் கொண்டும் தொழிற்சாலைகளுக்கு இயல்பாகக் கிடைக்கும் நிதியுதவியுடன் 'சரிக்கட்டும் நிதி' அல்லது 'துணை நிதி' வழங்கும் திட்டத்தை 'சிப்காட்' நிறுவனம் வகுத்துள்ளது. எந்த ஒரு முக்கிய தொழில் நிறுவனமும் போதிய நிதிவசதி இல்லாத காரணத்தால் நலிவுறக் கூடாது என்பதுதான் 'சிப்காட்' டின் முக்கியக் குறிக்கோளாகும். இந்நிறுவனம் நடுத்தர, பெரிய தொழில்கள் முக்கியமாக பின்தங்கிய பகுதிகளில் நிறுவப்படுபவைகளுக்கு தாராள நிதி உதவிகளுடன் அத்திட்டங்களுக்காகத் திரட்டப்படும் பங்குத் தொகை முதலீட்டிற்கும் உத்தரவாதமும் அளிக்கிறது. 'சிப்காட்' நிறுவனத்தினுடைய தவணைக் கடன்கள் குறைந்த வீதங்களில் வட்டி, கடன் தவணை நீடிப்பு, கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு வரையறுக்கப்பட்ட கால அளவை நீடித்தல் போன்ற தாராள நிதியுதவிகளுடையவை. இந்நிறுவனம் வகுத்துள்ள, பிற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நிதி உதவும் திட்டத்தின்கீழ் (Consortium Aid Scheme) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், வணிக வங்கிகள், அனைத்திந்திய நிதி உதவி வழங்கும் நிறுவனங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் நிதி உதவியளிக்கப்படுகிறது. இம்மாதிரி உதவியால் பெரிய தொழில் நிறுவனங்கள் முன்னேறவும், அதற்குத் திட்டமிடவும்—தான் தரும் உதவி குறைந்த அளவில் இருந்தாலும் அதனால் ஊக்குவிக்கப்பட்ட முதலீடு பன்மடங்கு அதிகமாகவும் இருக்க 'சிப்காட்' வழிவகுத்துள்ளது.

## தவணைக் கடன்கள்

'சிப்காட்' நிறுவனம் 31-3-75 வரை 48 தொழிற்சாலைகளுக்கு ரூபாய் 498.17 இலட்சம் தவணை கடன் வழங்கு ஒப்புதல் அளித்துள்ளது. ஒப்புதல் அளித்துள்ளதில் இதுவரை வழங்கியுள்ள தொகை ரூபாய் 177.62 இலட்சமாகும்.

## பங்குத் தொகை சேர்ப்பதற்கு உத்தரவாதம்

இதுவரை 52.50 இலட்சம் ரூபாய்க்கான பங்கு உத்தரவாதங்களை 'சிப்காட்' அளித்துள்ளது. அதில் 35.70 இலட்சம் ரூபாய்க்கான பங்குகளைப் பொதுமக்களுக்கு வெளியிட்டுள்ளது. ஒரு தொழில் நிறுவனத்திற்கு சிப்காட் அளித்த ரூபாய் 2.50 இலட்சம் உத்தரவாதத் தொகையில் ரூபாய் 55,000-க்கு ஆன பங்குத் தொகை 1974-75 முதல் காலாண்டுக் காலத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது தவிர, வெளியிடப்பட்ட பங்குகள் அனைத்தும் முழுவதுமாக எடுத்துக் கொள்ளப்பட்டன.

நிதியுதவி மற்றும் நிதியுதவியற்ற வேறு உதவிகளை இணைத்துச் செய்வதன் மூலம் பொதுவாகத் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும் சிறப்பாக இதுவரை தொழில் வளர்ச்சியடையாது பின்தங்கி இருந்த பகுதிகளுக்கும் 'சிப்காட்' நிறுவனத்தின் நிதியுதவித் திட்டங்கள் ஒரு புதிய ஊக்கத்தைக் கொடுத்துள்ளது.

'சிப்காட்' நிறுவனம் கடந்த 3 ஆண்டுக் காலத்தில் பின் கண்ட சாதனைகளைப் படைத்துள்ளது.

(1) தொழில் வளர்ச்சிக்காக 10 கோடி ரூபாய் உதவி செய்ய அனுமதித்துள்ளதன் மூலம் தமிழ்நாட்டின் தொழில்துறையில் 82 கோடிக்கும் மேற்பட்ட தொகையை முதலீடு செய்ய ஊக்குவித்துள்ளது.

(2) நேரடியாக 13,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கியுள்ளதுடன் பல்லாயிரக்கணக்கான பேர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவ்விரு சாதனைகளும் 'சிப்காட்' நிறுவனத்தின் செயல் திறனுக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகத் திகழ்கின்றன.

'சிப்காட்' நிறுவனம் பின் தங்கிய பகுதிகள் தொழில் மயமாவதற்காக 9.08 கோடி ரூபாய் உதவியுள்ளதனால், பின்தங்கிய மாவட்டங்களில் தொழில் வளர்ச்சிக்காக 73.50 கோடி ரூபாய்க்கும் அதிகமாக முதலீடு செய்யப்பட்டுள்ளது. அதாவது 'சிப்காட்' நிறுவனம் அனுமதித்துள்ள மொத்த உதவியில் 91.50 உதவி பின் தங்கிய பகுதிகளில் நிறுவப்படவிருக்கும் தொழில் நிறுவனங்களுக்கே வழங்கப்பட்டுள்ளது என்பது மனநிறைவும், மகிழ்ச்சியும் தருவதாக அமைந்துள்ளது.

## பொதுத் துறையைச் சார்ந்த பெருந்தொழிற் திட்டங்கள்

நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்கள்

**1. தமிழ்நாடு நைலான் நூல் தொழிற்சாலை லிமிடெட்.**

ஆண்டொன்றுக்கு 2,100 மெட்ரிக் டன் நிறுவிய திறனளவு கொண்ட நைலான்-6 நுண்ணிழைத் தொற்சாலை ஒன்றை ரூபாய் 12 கோடி செலவில் நிறுவிட 'டிட்கோ', 1971 டிசம்பர் திங்களில் அனுமதி உரிமம் ஒன்றைப் பெற்றது. கைத்தறி, விசைத்தறித் துறைகளுக்கு நைலான் நூல் இடு பொருளாகும். எனவே, தமிழ்நாடு அரசு இத்திட்டத்தைப் பொதுத்துறையில் நிறுவிட முடிவு செய்தது. இத்திட்டத்தில் கைத்தறி நெசவாளர்களும், விசைத்தறி நெசவாளர்களும், அவர்களது கூட்டுறவுச் சங்கங்களும் பங்குபெறும். மதுரை மாவட்டத்தில் வைகை அணைக்கட்டுக்கு அருகில் இத்தொழிற்சாலையை அமைத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. ஜப்பானில் உள்ள திருவாளர்கள் 'யுனிட்டிகா ஹித்தாச்சி ஜோஸன்' (M/s. Unitika Hithachi Jozen) என்கிற நிறுவனத்துடன் தொழில் நுட்ப உடனுழைப்பு உடன்பாடு செய்து கொள்வதற்கான செயற்குறிப்புகளை 1972 ஜூன் 30-ஆம் நாள் அன்றே இந்திய அரசுக்கு அனுப்பியுள்ளபோதிலும், இந்திய அரசு இச்செயற்குறிப்புகளுக்கு ஏற்பளிப்பு வழங்கவில்லை. நைலான் நுண்ணிழை நூல் உற்பத்தி செய்வதற்கு அனுமதி உரிமம் பெற்றுள்ள இந்நாட்டு 13 மாநிலத் தொழிற் வளர்ச்சிக் கழகங்களில், தமிழக தொழில் வளர்ச்சிக் கழகமே முதலிடம் பெற்றுள்ளது.

**2. ஸ்கூட்டர் உற்பத்தித் திட்டம்.**

மோபெடுகள் (Mobeds), ஸ்கூட்டர்கள் போன்ற தனிப் போக்குவரத்து வண்டிகளுக்கான தேவைப் பெருகியுள்ளதால், அரசின் ஆலோசனைக்கேற்ப, மதுரை மாவட்டம் கப்பலூரில் ஸ்கூட்டர் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைத்திட 'டிட்கோ' கருதியுள்ளது. அங்கு தொழிற் பேட்டை ஒன்றை நிறுவுவதற்காக ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்டுள்ள நிலங்களைப் பயன்படுத்தி இத்தொழிற்சாலையை நிறுவிடக் கருதப்பட்டுள்ளது. இலட்சுமணபுரியில் உள்ள திருவாளர்கள் ஸ்கூட்டர்ஸ் (இந்தியா) லிமிடெட் நிறுவனம், ஸ்கூட்டர் உற்பத்திக்குத் தேவையான தொழில்நுட்ப அறிவை வழங்கும். இந்நிறுவனம், இத்தொழில்நுட்ப அறிவை இத்தாலி நாட்டை சார்ந்த மிலானோவிலுள்ள 'இன்னோசேட்டி' (Innoceti) என்கிற நிறுவனத்தாரிடமிருந்து பெற்றுள்ளது.

இத்தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 30,000 ஸ்கூட்டர்களை உற்பத்தி செய்யும். இதற்கு ஆகும் மொத்த மூலதனச் செலவு ரூபாய் 2.5 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு உரிய தொழில் உரிமம் ஒன்றை வழங்கும்படி இந்திய அரசிற்கு எழுதிக் கேட்கப்பட்டுள்ளது. இது கிடைத்திடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் கிட்டத்தட்ட 250 பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டும்.

**3. அரியலூர் சிமிட்டித் தொழிற்சாலை.**

அரியலூர் - செந்துறைப் பகுதியில் தமிழ்நாடு மாநிலப் புவியியல் துறையினர் நடத்திய ஆய்வுகளிலிருந்து அப்பகுதியில் சிமிட்டி உற்பத்திக்கு தரமான சுண்ணாம்புக் கல் (ஏறத்தாழ 45 மில்லியன் டன்) கனிவளம் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. சுண்ணாம்புக் கல் கிடைப்பதாலும், சிமிட்டி தேவை மேன்மேலும் பெருகி வருவதாலும் ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன் 'போர்ட்லாந்து' சிமெட்டி உற்பத்தி செய்வதற்கான சிமிட்டித் தொழிற்சாலை ஒன்றை அங்கு நிறுவத் திட்டமிடப்பட்டது. இத்தொழிற்சாலையில் நாளொன்றுக்கு 750 டன் சிமிட்டி உற்பத்தி செய்யும் திறனுள்ள உலர்ந்த முறை சூளைகள் இரண்டை அங்கு நிறுவுவதன் மூலம் உற்பத்தியைத் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் இரயில் வசதிகளும் சாலைப் போக்குவரத்து வசதிகளும் எளிதாகக் கிடைக்கக் கூடிய அரியலூர் பகுதியில் அமைக்கப்படும். இத்தொழிற்சாலைகளுக்குத் தேவையான நீர், மின்சக்தி ஆகியவையும் எளிதாகக் கிடைக்கக்கூடும். இத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு ரூபாய் 25 கோடி ஆகிறது. இத்திட்டத்தை நிறுவிட இந்திய அரசு 'டிட்கோ' விற்குத் தொழில் உரிமம் ஒன்றை இப்பொழுது வழங்கியுள்ளது. இத்தொழிற்சாலை ஏறத்தாழ இன்னும் 4 ஆண்டுகளில் உற்பத்தியைத் தொடங்கிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் கிட்டத்தட்ட 2,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.



**4. மென் இரும்புத் தொழிற்சாலை.**

அரக்கோணத்தில் அமைக்கப்பட்டுள்ள தொடர் வார்ப்படத் தொழிற்சாலைக்கு மூலப் பொருளாகக் கொடுக்கும் பொருட்டு பொதுத்துறையில் மென் இரும்புத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தும் வாய்ப்பினை 'டிட்கோ' ஆய்வு செய்து வந்துள்ளது. இதனால் தொடர் வார்ப்படத் தொழிற்சாலைக்குத் தேவையான மூலப் பொருட்கள் (துணுக்கு இரும்பு) பற்றாக்குறையை இது தீர்த்து வைக்கும். இந்தத் தொழிற்சாலையை நிறுவுவதற்கான அனுமதி உரிமம் ஒன்றை இக்கழகம் பெற்றுள்ளது. இத்தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 1 இலட்சம் டன் மென் இரும்பை உற்பத்தி செய்யும் திறனுள்ளது. வல்லுநர்கள் அளித்துள்ள அறிவுரையிலிருந்தும், இக்கழகம் நடத்தியுள்ள ஆய்வுகளிலிருந்தும் இத்தொழிற்சாலையின் திறனளவை 4 இலட்சம் டன்னாக உயர்த்துவது விரும்பத்தக்கது எனத் தெரியவந்துள்ளது.

# வளர்ந்து வரும் தொழிற்பேட்டைகள்!

தொழில்களின் தனித்தன்மைக்கும், தேவைக்கும் ஏற்றபடி இத்திட்டத்தின்கீழ் 'சிட்கோ' தொழிற்கூடங்களைக் கட்டிக்கொடுத்து உதவுகிறது. தொழில் அதிபர்கள் [illegible] செலுத்தும் [illegible] தொழிலிலிருந்து கிடைக்கும் வருமானத்திலிருந்தே நீண்டகாலத் தவணை முறையில் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான வசதி இத்திட்டத்தில் உள்ளது. 'சிட்கோ' பின்கண்டவாறு இரண்டு வகையான திட்டத்தைத் தொழிற்கூடம் கட்டுவதற்கு வகுத்துள்ளது.

1. 'சிட்கோ' தனது நிலத்தில் தொழிலதிபர்களின் தேவைக்கேற்பத் தொழிற் கட்டி வழங்குவது.

2. தொழில் முனைவோரின் சொந்த நிலத்தில் தொழிற்கூடம் கட்டுவதற்கு உதவி வழங்குவது.

**உதவி பெறும் முறை**

'சிட்கோ' நிலங்களில் தொழிற்கூடங்கள் அமைப்பதற்கு 'சிட்கோ'வின் தலைமை அலுவலகத்திலும் அதன் கிளை அலுவலகங்களிலும் ரூபாய் 1.50 செலுத்தி மனுப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இத்திட்டத்தின்கீழ் அதிகப்படியாக ரூபாய் 1 இலட்சம் வரை கடனாகக் கொடுக்கப்படும். ஆனால் தனித்தன்மை வாய்ந்த முக்கிய தொழில் சாலைகளுக்கு ரூபாய் 2 இலட்சம் வரைக்கும் கடனை இந்நிறுவனம் வழங்கும்.

சிட்கோவின் வட்டி விகிதம் 14.5 சதம்.

கடன் தொகையும் வட்டியும் சேர்த்து 16 ஆறுமாத காலத் தவணைக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும். கட்டடம் கட்டி முடித்த இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு முதல் தவணையைச் செலுத்த வேண்டும்.

தனியார் நிலங்களின் தொழிற்கூடங்கள் அமைக்க [illegible] [illegible]லிருந்து சிட்கோ-தொழில் முதலீட்டுக் கழகத் தின்கூட்டு முறைத் திட்டத்தில் தான் மனுச் செய்யவேண்டும்.

**சாதனைகள்**

'சிட்கோ' இதுவரையில் அம்பத்தூர், குறிச்சி, திருவெறும்பூர், இராணிப்பேட்டை முதலான இடங்களில் தொழிற்பேட்டைகளை அமைத்துள்ளது. அம்பத்தூரில் சுமார் 62 இலட்சம் ரூபாயில் 89 தொழிற்கூடங்களை மூன்று கட்டமாகக் கட்டி முடித்துள்ளது. நான்காவது கட்டமாக ரூபாய் 27 இலட்சம் மதிப்பில் 25 தொழிற்கூடங்களை அமைக்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. திருச்சிக்கு அருகிலுள்ள திருவெறும்பூரில் 24 இலட்ச ரூபாய் மதிப்பில் 12 தொழிற்கூடங்கள் கட்டி முடிக்கப்படும் தறுவாயில் உள்ளன. குறிச்சியில் 16.14 இலட்ச ரூபாய் மதிப்பில் 26 தொழிற்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இராணிப்பேட்டையில் 10.50 இலட்ச ரூபாய் மதிப்பில் 12 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இரண்டாவது கட்ட வேலை நடந்து கொண்டு வருகிறது.



அம்பத்தூர் தொழிற்பேட்டை

தனியார் நிலங்களில் தொழிற்கூடங்கள் அமைக்க 'சிட்கோ' சுமார் 88.99 இலட்ச ரூபாய் செலவில் 127 தொழில் முனைவோர்களுக்கு உதவியளித்துள்ளது.

**துணைத் தொழிற்சாலைகளின் வளர்ச்சி**

தமிழ்நாடு முழுவதும் உள்ள முக்கியத் தொழிலைச் சார்ந்த துணைத் தொழில்களை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்பே எடுக்கப்பட்டுள்ளன. அம்பத்தூர் தொழிற்பேட்டையில் டி.ஐ. மிதிவண்டி தொழிற்சாலைச் சார்புள்ள தொழிற்கூடங்கள் முன்பேஅமைக்கப்பட்டுள்ளன.

தொழில்நுட்பக் கல்வி கற்று வேலையில்லாத 19 பட்டதாரிகளை டி.ஐ. மிதிவண்டித்தொழிற்சாலையும் 'சிட்கோ' வும் கூட்டாகத் தேர்ந்தெடுத்தது. தரமான பொருள்களை உன்னதமாகத் தயாரிக்க வேண்டும் என்ற மையக் கருத்தின் அடிப்படையில் அந்தத் தேர்வு நடந்தது.

கோயம்புத்தூருக்கு அருகில் உள்ள குறிச்சி தொழிற்பேட்டையில் நெசவுத் தொழில் சம்பந்தப்பட்ட இயந்திரக் கருவிகளின் பாகங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்கள் அமைக்கும் வேலைகள் முடிவுற்று உற்பத்தியைத் துவக்கியுள்ளன.

'பாரத் கனரக எலக்ட்ரிகல்' நிறுவனத்தின் ஊக்குவிப்பின் காரணமாக திருச்சிக்கு அருகில் உள்ள திருவெறும்பூரில் 12 ஏக்கர் பரப்பளவில் 12 சார்பு நிலைத் தொழிற்கூடங்களை ரூபாய் 24 இலட்சம் மதிப்பில் அமைத்து 12 தொழில் அதிபர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் 'பாரத் கனரக எலக்ட்ரிகல்' நிறுவனத்தின் தேவையை ஈடு செய்ய புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள மாத்தூரில் மற்றுமொரு சார்புநிலை தொழிற்கூடம் அமைக்கும் ஏற்பாடுகள் முடிவடைந்து விட்டன.

ஆயினும் இந்த மாதிரி சார்புநிலைத் தொழிற்கூடங்கள் அமைக்க உத்தேசிக்கும் பகுதிகளில் வேறு பல தேவைகளைச் செய்து முடிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே அரசுத் துறை, கூட்டுத்துறை மற்றும் தனியார் துறையில் இருக்கும் பெருந் தொழிற்சாலைகளைத் தீவிரமாக கலந்து சார்புநிலைத் தொழில்களின் வளமை, வாய்ப்பை விஞ்ஞான ரீதியில் நன்முக கவனித்தபின் தொழிற்கூடங்கள் அமைத்து சிறுதொழில்கள் வளர்க்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

தொழிற்பேட்டை அமைக்கும் திட்டத்தின்கீழ், எதிர்காலத்தில் பின்கண்டவாறு தொழிற்கூடங்கள் அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. மேலும், அந்தத் தொழிற்பேட்டைகளில் துணைத் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

| இடம் | | | கட்டப்பட வேண்டிய தொழிற் கூடங்களின் எண்ணிக்கை | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| திருப்பூர் (கோவை மாவட்டம்) | | .. | 100 | 75 |
| மாத்தூர் (புதுக்கோட்டை மாவட்டம்) | | | 8 | 12 |
| பொன்னமராவதி (புதுக்கோட்டை மாவட்டம்) | ... | ... | 10 | 8 |
| இராணிப்பேட்டை | ... | ... | 15 | 12 |
| அம்பத்தூர் | ... | ... | 49 | 50 |
| கோயம்புத்தூர் | ... | ... | 50 | 50 |
| திருச்சிராப்பள்ளி | ... | ... | 10 | 8 |
| பூம்புகார் | ... | ... | 12 | 12 |




களப் பரிசோதனைகள்
காண்பிக்கின்றன:
**பிளானோபிக்ஸ்**
நிலக்கடலை விளைச்சலைக்
கணிசமாகப் பெருக்குகிறது.

20 பி.பி.எம். வீதம், அதாவது 4.5 லிட்டர் (1 காலன்) நீரிலே 2 மிலி. வீதம் கரைத்து, விதைப்பாகி முதல் 40 நாட்களுக்கும், மறுபடி, விதைப்பாகி 80 நாட்களுக்கும் பிளானோபிக்ஸ் தெளித்துவந்தால் அது அதி உன்னதமான பலன்களைத் தருவதாக அறிவிக்கப்படுகிறது.
விவரமான தகவல்களை விசாரித்தறியவும்.

பிளானோபிக்ஸ் என்பது, மே & பேக்கர் லிட்டின் டிரேடு மார்க் ஆகும்.

M&B May & Baker

மே & பேக்கர் (இந்தியா) பிரைவேட் லிட்.
பம்பாய் . கல்கத்தா . கவுஹாத்தி . இந்தோர்
லக்னோ . சென்னை . நியூ டெல்லி . பாட்னா

TAM


# தமிழ்நாடு கைத்திறன் வளர்ச்சிக் கழகம்



தமிழ் நாட்டின் கை நுட்பவியலை வளரச் செய்வதிலும், கை நுட்பப் பொருட்களை உற்பத்தி செய்வதில் புத்துணர்ச்சியூட்டவும், புதியதொரு வழியினைக் காட்டவும் வேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழக அரசு ''தமிழ்நாடு கைத்திறன் வளர்ச்சி நிறுவனம்'' என்ற பெயரில் தனியொரு நிறுவத்தினை அமைத்துள்ளது.

இந்த நிறுவனத்தின் முதன்மையான நோக்கங்கள் கீழ்வருமாறு :—

1. இதுகாறும் அரசுத்துறையிலும் கூட்டுறவுத்துறையிலும் இயங்கி வந்த விற்பனை நிலையங்களின் கைநுட்பக் கலைப் பொருட்களின் விற்பனையைத் தனதாக்கிக் கொண்டு ஏற்று நடத்தல்.

2. கைத்திறன் பொருள் உற்பத்தி நிலையங்களுக்கும், கைநுட்ப வல்லுநர்களுக்கும், நிதியுதவி, நுட்ப உதவி, விற்பனை உதவி, வளர்ச்சிக்கான உதவி ஆகியவற்றை ஆக்கியளித்தல்.

3. இந்தியாவிலும் வெளிநாட்டிலும் விற்பனை அலுவலகங்களை நிறுவுதல்.

4. பொருட்காட்சிகளை உருவாக்குதல்.

5. மூலப் பொருட்கள், கருவிகள், இயந்திரங்கள் ஆகியவற்றை வழங்க ஏற்பாடு செய்தல்.

6. கலை நுட்பப் பொருட்களின் விலைப் பட்டியல், விளம்பர நூல் ஆகியவற்றைத் தயாரித்தல், விற்பனை வாய்ப்புப் பற்றி புள்ளி விவரம் தயாரித்தல், விற்பனை வாய்ப்புப் பற்றி ஆய்வு நடத்துதல், மற்றும் கை நுட்பப் பொருட்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல்.

இந்நிறுவனம் 1—8—73-ல் பொது அரசுடைமையான நிறுவனமாகத் துவங்கப்பட்டது. இந்நிறுவனம் சென்னை, மகாபலிபுரம், நெய்வேலி, சேலம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருச்சி, திண்டுக்கல், திருநெல்வேலி ஆகிய ஒன்பது இடங்களில் அரசுத் துறையினால் இயக்கப் பெற்று வந்த விற்பனை நிலையங்களின் இருப்புச் சொத்துக்களையும் கொடுபட வேண்டிய இழப்புக்களையும் பொறுப்பேற்றுக் கொண்டது. 1—10—73-ல் இந்நிறுவனம், தமிழ்நாடு கைத்திறன் கூட்டுறவு விற்பனைக் கழகத்தினால் இயக்கப் பெற்று வந்த புது டில்லி விற்பனை நிலையத்தில் இருப்புச் சொத்துக்களையும் பொறுப்பேற்றுக் கொண்டது. 15—11—73-ல் தமிழ்நாடு கைத்திறன் பொருள் விற்பனைக் கழகத்தினால் இயக்கப் பெற்று வந்த கடலூர், வேலூர், ஈரோடு, உதகை, மதுரை ஆகிய ஐந்து இடங்களிலுள்ள விற்பனை நிலையங்களுக்குச் சொந்தமான இருப்புக்களையும் பொறுப்பு ஏற்றுக் கொண்டது.

1—11—74-ஆம் நாளன்று, தமிழக அரசு தொழில்வணிகத் துறையின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த கீழ்வரும் பயிற்சி உற்பத்தி நிலையங்கள், இந்நிலையங்களின் உற்பத்தியையும், பயிற்சியையும் விற்பனையோடு இசைந்ததாக அமைத்திட வேண்டும் என்று இந் நிறுவனத்தின் ஆளுமைக்கு மாற்றப்பட்டன.

1. பித்தளைக் கலைப்பொருள் பயிற்சி நிலையம், மதுரை.

2. கலைப் பொருள் வெண்கல உலோகப் பொருள் பயிற்சி நிலையம், காஞ்சிபுரம்.

3. வெண்கல உலோகப் பொருள் உற்பத்திச் சேவை நிலையம், நாச்சியார்கோவில்.

4. பஞ்சலோக சிலைகள் உற்பத்தி நிலையம், சுவாமிமலை.

5. கோவில் தேர்ப் பயிற்சி நிலையம், நாகர்கோவில்.

துறையில் ஈடுபட்டுள்ள கைநுட்பத் தட்டு செய்வதற்கான பித்தளைத் தகடுகளை விலைக்கு வாங்கி அவற்றைத் தஞ்சாவூரிலுள்ள இக்கலை வல்லுநர்களுக்கு வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இது நாள் வரை ரூ. 2.00 இலட்சம் பெறும் மதிப்புள்ள மூலப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

**முன்னேற்றச் செயல் முறைகள்**

1. 1974 மார்ச் மாதம் அகில இந்திய கைத்திறன் கழகத்தின் தலைமையில் சாஸ்திரி பவனம், சென்னை-6-ல் விற்பனையாளர்களுக்குத் தொழில் நுட்பம் வாய்ந்தவர்களையும் கைநுட்ப வல்லுநர்களையும் அறிமுகப்படுத்தும் வகையிலான ஒரு மகாநாட்டை இந் நிறுவனம் நடத்தி, அதன்மூலம் கைநுட்ப வல்லுநர்கள் வாங்குவோரை நேரில் கலந்து கொள்ளவும், விற்பனையிலுள்ள இடர்ப்பாடுகளை அறிந்துகொள்ளவும், அதனை நீக்கி முன்னேற்றம் காண்பதற்கான வழிமுறைகளைப் புரிந்து கொள்ளவும் வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது. இம்மகாநாடு, கலை வல்லுநர்களையும், வாங்குவோர்களையும், ஏற்றுமதியாளர்களையும், நுண்ணியல் வல்லுநர்களையும் ஒருங்கிணைத்துச் செயல்பட வகை செய்துள்ளது. இம்மகாநாடு, கழிவுப் பொருட்களிலிருந்து சில புதிய கைநுட்பப் பொருட்கள் செய்கின்ற தொழிலைப் புதிதாகப் புகுத்துகின்ற அளவுக்குப் பயன் விளைவித்துள்ளது.

2. கலைப் பொருட்களில் உருமுதன்மையானவற்றை உருவாக்க வழி வகுக்கும் வகையில் கலை நுட்ப வல்லுநர்களை ஊக்குவிக்க, 1976 ஜனவரி மாதத்திலிருந்து ஒரு மாநிலப் பரிசுப் போட்டித் திட்டத்தினையும் அமலாக்க இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.




# சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை) எண் 151.
## சேலம்-1.

**தபால் பை எண். 171** **தொலைபேசி எண் : 2402**

**கிளைகள் :** நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணாபுரம் சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, பெத்தநாய்க்கன் பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

**சொந்த நிதி ரூ. 327 லட்சம்.** **நடைமுறை மூலதனம் 1711 லட்சம்.**

**வட்டி விகித அட்டவணை**

| | | |
|---|---|---|
| **கால் டெபாசிட்டுகள் :** | ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் (முன் அறிவிப்பு இல்லாமல்) | $3\frac{1}{4}$% |
| | ரூ. 10,000/-க்கும் அதற்கு மேலும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்) | $3\frac{1}{2}$% |
| **சிசன் டெபாசிட்டுகள் :** | ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும் | |
| | 15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும் | 3% |
| | 46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும் | $3\frac{1}{2}$% |
| **பிக்செட் டெபாசிட்டுகள் :** | ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு : | |
| | 1. 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் | 6% |
| | 2. 6 மாதத்திற்கும் அதற்குமேல் 9 மாதத்திற்குள் | $6\frac{1}{2}$% |
| | 3. 9 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் | $7\frac{1}{2}$% |
| | 4. 12 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் | $8\frac{1}{2}$% |
| | 5. 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் | $9\frac{1}{2}$% |
| | 6. 61 மாதத்திற்கும் அதற்குமேலும் | $10\frac{1}{2}$% |

**நடப்புக் கணக்கு $\frac{1}{2}$%** **சேமிப்புக் கணக்கு 6%**

ரூ. 5000/-க்கு மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு. பிக்செட் டெபாசிட்டுகளின்மீது மாதாந்திர வட்டி உண்டு. ரெக்கரிங், பிராவிடெண்ட் டிபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்புகொள்க.

**இ. பாலசுந்தரம், பி.ஏ.,**
**துணைப் பதிவாளர்,**
**நிர்வாக அதிகாரி.**

**எஸ். ஆறுமுகம்,**
**தலைவர்.**




# முகம் பார்க்கும் கண்ணாடித் தொழிலில் முன்னோடி நிறுவனம்

கிண்டித் தொழிற்பேட்டை!

நூற்றுக் கணக்கான தொழிற்கூடங்களின் மையம்!

இங்கே பல்வேறு தொழில்கள் வளர்ந்து வரும் அதே சமயத்தில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களும் பயன்பெற்று வரும் பாங்கினைப்பார்க்கிறோம்.

தமிழக அரசு தொழிற்பேட்டைகள் பலவற்றை உருவாக்கி, தொழில் வளர்ச்சிக்கு வழிகோலி வருவதை நாமறிவோம்.

சென்னைக் கிண்டித் தொழிற்பேட்டையில் உள்ளது, 'பில்கோ மிர்ரர்' Pilco Mirror' என்னும் முகம் பார்க்கும் கண்ணாடித் தொழிற்கூடம்.

அன்று சிறிய அளவிலே துவக்கப்பட்ட இந்த நிறுவனம், இன்று படிப்படியாய் வளர்ந்து வந்துள்ளது.

அன்றாடத் தேவைப் பொருள்களில் ஒன்று, முகம் பார்க்கும் கண்ணாடி. கண்ணாடி முன்னாடி மணிக்கணக்காக நின்று அழகைப் பார்ப்பது பெண்மணிகள் மட்டுமல்லவே, ஆண்களும் கூடத்தானே!

சிறிய பெரிய அளவுகளில் பல்வேறு வடிவங்களில், அழகிய கண்ணாடிகளைத் தயாரிப்பதில் புகழ் பெற்று விளங்குகிறது, 'பில்கோ மிர்ரர்' தொழிற்கூடம்.

தொழிற்கூடத்தினுள் நுழைகிறோம்.

முதலில் சாதாரணக் கண்ணாடியைப் பார்க்கிறோம். பிறகு அது புதுப்பொலிவைப் பெறும் காட்சியையும் காண்கிறோம்.

கண்ணாடியின் நான்கு ஓரங்களில் பட்டைத் தீட்டுவது, அதற்கு மெருகு தருவது, ரசம் பூசுவது, இறுதியில் அதனை அழகுப்படுத்துவது, பிறகு அதன் பின்புறம் சிவப்பு வண்ணந் தீட்டுவது, கடைசியில் அதனை 'பேக்' செய்வது போன்ற வேலைகளை வரிசையாகப் பார்க்கிறோம்.

தமிழ்நாட்டில் முகம் பார்க்கும் கண்ணாடித் தொழிற்சாலையை முதன்முதலில் இயந்திரமயமாக்கிய பெருமை இத்தொழிற்கூடத்தையே சாரும்.

பெல்ஜியம், ஜெர்மன், ஹாலந்து ஆகிய நாடுகளில் கண்ணாடித் தொழில் பற்றிய நுணுக்கங்களைக் கண்டறிந்து வந்துள்ளார் இத்தொழிற்கூடத்தின் உரிமையாளர் திரு. கே. நடராசன் அவர்களின் மகன் திரு. என். தேவேந்திரன். இவர் முகம் பார்க்கும் கண்ணாடிகள் தயாரிக்கும் இயந்திரங்களைச் செய்யும் முறையையும் கற்று வந்துள்ளார்.

இத்தொழிற்கூடத்தில் தயாராகும் வகை வகையான கண்ணாடிகள் இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. நல்ல தரமான கண்ணாடிகளைத் தயாரிக்கும் இத்தொழிற்கூடத்தில் நவீன சாதனங்களும் உள்ளன. அவை: 1. கண்ணாடிக்குப் பின்புறம் சிவப்பு வண்ணம் தீட்டும் இயந்திரம் (Curtain Coat Painting Machine) 2. கண்ணாடியில் வெள்ளிப்பூச்சு, தாமிரப்பூச்சு பூசும் கருவி (Airless Silvering and Coppering on glass)



← பட்டைக்கு மெருகேற்றப்படுகிறது.



← கண்ணாடிக்கு மெருகேற்றப்படுகிறது.

'பூம்புகார்' என்று அழைக்கப்படும் விற்பனைக் கூடங்கள் தமிழ்நாடு கைத்திறன் வளர்ச்சிக் கழகத்தைச் சேர்ந்தவை. தமிழ்நாட்டின் கைநுட்பவியல் வளர நமது அரசு அமைத்த இக்கழகம் பற்றிய விவரங்களை விளக்குகிறது இக்கட்டுரை.

6. அரக்கு பூனைந்த கடைசல் பொருள் பயிற்சி நிலையம், அம்பாசமுத்திரம்.

7. சடம்பு நார்ப் பொருள் பயிற்சி நிலையம், ஆய்குடி.

8. பனையோலைப் பொருள் பயிற்சி நிலையம், இராமேசுவரம்.

9. பனையோலைப் பொருள் பயிற்சி நிலையம், புதுக்கோட்டை.

10. பனையோலைப் பொருள் பயிற்சி நிலையம், காவேரி நகர்.

11. வெண்கல உலோகப் பொருள் உற்பத்தி நிலையம், வாகைக்குளம்.

12. வடிவு, செயல் முறை விளக்க நிலையம், சென்னை.

13. கலை நுட்ப உலோகப் பொருள் பயிற்சி நிலையம், சேலம்.

14. பனையோலைப் பொருள் பயிற்சி நிலையம், வந்தவாசி.

எல்லா விற்பனை நிலையங்களும், தங்களுக்குத் தேவையான பொருட்களுக்கு மேற்குறித்த பயிற்சி உற்பத்தி நிலையங்களுக்கு நேரடியாகத் தேவைப் பட்டியல்களை அனுப்புகின்றன. இந்நிலையங்கள் அவற்றை நியாயமான காலக் கெடுவுக்குள் விற்பனை நிலையங்களுக்கு வழங்குகின்றன. இந்நிறுவனமானது, விற்பனைக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்வதில் ஆர்வம் காட்டுகின்ற அதே நேரத்தில், பரம்பரையானதும் புதுமையானதுமான வழி முறைகளிலும் வடிவமைப்பு முறைகளிலும் இன்னும் அதிகமான அளவு கலை வல்லுநர்களுக்குப் பயிற்சி அளிப்பதிலும் நிகரற்ற ஆர்வம் காட்டி வருகின்றது.

இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம், பங்கீடு செய்யப்பட்ட ஒப்புமையுடைய பங்குக்கு ரூ. 100/- கொண்ட 50,000 பங்குகளான 50 இலட்சம் ரூபாயாக அமைந்துள்ளது. இந் நிறுவனத்திற்கு மாற்றுதல் செய்யப்பட்டுள்ள இருப்புச் சொத்தின் மதிப்பு பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இச் சொத்துக்களுக்கு நிகரான பங்குகள் இந் நிறுவனத்தினால் அரசுக்கு விரைவிலேயே வழங்கப்படும்.

**செயல்படல் மூலதனம்**

இந்த நிறுவனத்தின் செயல்படல் மூலதனத் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு, கனரா வங்கியிலிருந்து ரூ. 14.00 இலட்சத்திற்கு நிதிக் கடன் வாய்ப்புப் பெறப்பட்டுள்ளது. 1974—75-ஆம் ஆண்டில் அரசும் இந் நிறுவனத்திற்கு ரூ. 5.00 இலட்சம் கடன் உதவி அளித்துள்ளது.

**செயற் பயன்**

இந்த நிறுவனம் அமைக்கப்பட்ட பிறகு அதன் ஆளுகைக்கு உட்படுத்தப்பட்ட 16 விற்பனை நிலையங்களிலும், விற்பனையைப் பெருக்கியுள்ளது. எல்லா விற்பனை நிலையங்களிலுமாக 31—3—74 முடிய உள்ள நிதியாண்டில் இந் நிறுவனத்தின் விற்பனை 52.86 இலட்சமாகும். ஆனால் இதே கால அளவில் 1972—73-ஆம் ஆண்டில் விற்பனை 40.75 இலட்சமாக மட்டுமே இருந்தது. இந்த நிறுவனமானது பொறுப்பேற்றுக்கொண்ட 8 மாத கால அளவே கொண்ட முதல் நிதியாண்டிலேயே தோராயமாக 12.00 இலட்சம் (30 சதம்) விற்பனையில் வளர்ச்சியைக் கண்டுள்ளது. 1974—75-ஆம் நிதியாண்டில் 1—4—74 முதல் 30—11—74 முடிய உள்ள 8 மாத கால அளவில் விற்பனை 78.79 இலட்சமாகும். ஆனால் அதே கால அளவில் சென்ற ஆண்டு விற்பனை 36.05 இலட்சம் மட்டுமே இருந்தது. எனவே, சென்ற ஆண்டு இதே கால அளவில் இருந்ததை விட இவ்வாண்டு 100 சதம் விற்பனை அதிகரிக்கப்பட்டுள்ளது.

**விற்பனை நுண்ணியல் வளர்ச்சி ஆகியவற்றிற்கான உதவிகளை ஆக்கித் தருதல்**

[illegible]



தக்க ஏற்பாடுகளையும் செய்யவும் நடவடிக்கை எடுத்துள்ளது. இராஜஸ்தான், ஆந்திர, கர்நாடக அரசு நிறுவனங்களுடன் இது மாதிரியான ஏற்பாடுகளை இந்நிறுவனம் ஏற்கனவே செய்து கொண்டு உள்ளது. பீகார், ஒரிசா, மேற்கு வங்காளம் ஆகிய மாநில அரசு நிறுவனங்களுடன் இது மாதிரியான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

விற்பனை நிலையங்கள் மூலமாகவும் ஏனைய மாநில அரசுகளின் மூலமாகவும் கைத்திறன் பொருட்களை விற்பனை செய்வதோடு கூட, இந்நிறுவனம் மாநிலத்துக்கு உள்ளேயும் வெளியேயும் பொருட்காட்சிகளையும் நடத்தி வருகின்றது. இதுகாறும் இந் நிறுவனம் சென்னை, பம்பாய், கோவா ஆகிய இடங்களில் 6 (ஆறு) பொருட்காட்சிகளை நடத்தியுள்ளது. நடப்பு நிதியாண்டில் கல்கத்தா, சண்டிகார் ஆகிய இடங்களிலும் இரண்டு பொருட்காட்சிகள் நடத்தப்படும்.

**ஏற்றுமதி :**

இந்நிறுவனம் ஒரு ஏற்றுமதி நிலையமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதோடு கூட, ஏற்றுமதியில் பெருமளவு முன்னேற்றத்தையும் காட்டியுள்ளது. இந் நிறுவனம் ரூ. 4.00 இலட்சத்திற்கு ஏற்றுமதி செய்ய வேண்டுமென்ற வரையறை செய்துள்ளது. இந் நிறுவனம் ஏற்கனவே ரூ. 1.5 இலட்சம் பெரு மதிப்புள்ள பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது. ஏற்றுமதியை அதிகரிக்கும் பொருட்டு வணிக அமைச்சகத்தினால் உருவாக்கப்படுகின்ற வெளிநாட்டு கண்காட்சிகளிலும், பொருட்காட்சிகளிலும் பங்கெடுத்துக் கொள்ளவும் முடிவு செய்துள்ளது. மேலும், மீனம்பாக்கம் அகில உலக விமான நிலையத்தில் ஒருவிற்பனைப்பகுதியையும் அமைத்துள்ளது.

(அ) இந்நிறுவனம் ஏற்றுமதி முயற்சிகளை வலுப்பெறச் செய்யும் நோக்கத்துடன் கீழ் வரும் ஏற்றுமதிக் கழகங்களில் ஒரு உறுப்பினராகவும் ஆகியுள்ளது.

1. பருத்தித் துணிஏற்றுமதி வளர்ச்சிக் கழகம்.
2. பட்டுத் துணி, ரேயான் ஏற்றுமதி வளர்ச்சிக் கழகம்.
3. கைத்தறித் துணி ஏற்றுமதி வளர்ச்சிக் கழகம்.
4. அகில இந்திய கைத்திறன் குழு.
5. இரத்தினங்கள், நகைகள் ஏற்றுமதி வளர்ச்சிக் கழகம்.

(ஆ) இந்நிறுவனம், கீழ் வரும் கைத்திறன் தொழில்களில் ஏற்றுமதிக்கான பொருட்களைத் தேர்ந்தெடுத்து அவற்றில் புதிய வடிவமைப்புகளை வளர்த்துள்ளது :

1. தஞ்சை கலை நுட்பத் தட்டுகள்.
2. சங்குப் பொருட்கள்.
3. பாய்கள்.
4. நகைகள்.
5. மரக்கலைப் பொருட்கள்.

(இ) இந்நிறுவனம் கீழ் வரும் கைநுட்பத் தொழில்கள் குறித்து மலர்களும் விலைப் பட்டியல்களும் அச்சிட்டு வெளியிட்டு ஏற்றுமதிக்கு வகைசெய்யப்பட்டுள்ளது.

1. பாய்களும் பைகளும்.
2. இரத்தினங்களும் நகைகளும்.
3. மரச் சிற்பங்கள்.
4. தஞ்சாவூர் கலை நுட்பத் தட்டு.
5. பஞ்ச உலோகச் சிற்பங்கள்.
6. கற் சிற்பங்கள்.

**நுண்ணியல் வளர்ச்சி**

1. இந்நிறுவனம் அகில இந்திய கைத்திறன் குழுவின் ஆளுகைக்குட்பட்ட பெங்களூர் வடிவமைப்பு நிலையத்திலிருந்து புதிய வடிவங்களையும் வழி முறைகளையும்பெற்றுஅவற்றை தனது ஆளுகைக்குட்பட்ட உற்பத்தி நிலையங்களுக்கும்கூட்டுறவுக் கழகங்களுக்கும் அனுப்பிப் பயன் பெறச் செய்துள்ளது.

2. வடிவமைப்பு, உற்பத்தி, விற்பனை இவற்றைஒருங்கிணைக்கும் பொருட்டு இந்நிறுவனம் தனது ஆளுகைக்குட்பட்ட வடிவமைப்பு நிலையத்தையும் புனரமைத்து விரிவுபடுத்தி வருகின்றது.

இந்நிறுவனம் வளர்ச்சி பெற்ற வழி முறை பற்றிய அறிவினைப் பரப்பும் பொருட்டு சிறப்புப் பயிற்சி உற்பத்தி நிலையங்களைத் துவக்குகின்றது. 1974 டிசம்பர் முடிய இந் நிறுவனம் 7 (ஏழு) உற்பத்தி நிலையங்களைத் துவக்கியுள்ளது. இந் நிறுவனம் இன்றைய நாளில் 21 பயிற்சி உற்பத்தி நிலையங்களை இயக்கி வருகின்றது.

**மூலப் பொருட்கள், கருவிகள், இயந்திரங்கள் முதலியன அளித்தல் குறித்து**

இந்நிறுவனம் எல்லா கைநுட்ப வல்லுநர்களின் பெயரையும் இந்நிறுவனத்தோடு பதிவு செய்யவும், அவர்களிடமிருந்து அவர்களது பொருட்களை விலைக்கு வாங்கவும், அவர்களுக்குத் தேவையான மூலப் பொருட்களை நியாயமான நிலையில் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவ்வகையில் இந்நிறுவனம் வனத் துறையிலிருந்து நூக்கமரம், தந்தம் ஆகியவற்றைப் பெற்று இத்






கண்ணாடிகளுக்குப் பயன் படுத்துவதற்கென மேலை நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப் பட்ட இவ்விரண்டு சாதனங் களும், இந்தியாவிலேயே முதன்முதலில் இங்குதான் பொருத்தப்பட்டிருக்கிறது என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

கண்ணாடிக்குச் சிவப்பு வண் ணந்தீட்டும் இந்த நவீன இயந் திரம் இத்தாலியிலிருந்து தரு விக்கப்பட்டதாகும்.

வெள்ளிப் பூச்சும், தாமிரப் பூச்சும் பூசப்பட்ட கண்ணாடிகள் சிவப்பு வண்ணந்தீட்டும் நவீன இயந்திரப் பிரிவுக்குக்கொண்டு வரப்படுகிறது. இந்த இயந் திரத்தின் மேல் தட்டில் கண் ணாடியை வைத்து இயந்தி ரத்தை இயங்கச் செய்ததும், கண்ணாடிக் கண் திறப்பதற்கான வண்ணந் தீட்டிவிடுகிறது இது! இயந்திரத்தில் பொருத்தப் பட்டுள்ள ஒரு தொட்டியில் வண்ணக் குழம்பு நிரப்பிக் கொண்டு இருப்பதையும் பார்க்கிறோம்.

கண்ணாடிகள் எந்த அளவா யிருந்தாலும் பரவாயில்லை. அவற்றுக்கு இந்த இயந்திரத் தின் மூலம் வண்ணம் தீட்டிக் கொள்ளலாம்.

இந்த இயந்திரத்தின் மூலம் கண்ணாடிக்கு [illegible] வண்ணம் தீட்டிக் [illegible] கொள்ள இயந்திரத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது.

இந்த இயந்திரத்தினால் என்ன நன்மை?

வர்ணம் வீணாவதில்லை; வண் ணப் பூச்சின்போது காற்று உபயோகப் படுத்தப்படாத தால் கசிவு ஏற்படுவதில்லை; அதிக உற்பத்தி கிடைக்கிறது; புகைபோன்ற எந்தத் தொந்த ரவும் இதை இயக்கும் தொழி லாளர்களுக்கு ஏற்படுவதில்லை.

மேலே குறிப்பிட்ட வெள்ளி, தாமிரப் பூச்சுக் கருவிகளும் இத்தாலியிலிருந்து தருவிக்கப் பட்டதாகும். இந்தச் சாதனத் தின் உதவியால் தயாரிக்கப் படும் கண்ணாடிகள் தரம் உள்ளதாகத் திகழ்கின்றன.



தாமிரப் பூச்சுக்கு உதவும் நவீனக் கருவி.



வண்ணந் தீட்டும் நவீன இயந்திரம்.

இந்தப் பூச்சுக் கருவிகள் விரைவான உற்பத்திக்கு வகை செய்கின்றன. வேலை செய்யும்போது தொழிலாளர் களுக்கு நெடி போன்ற தொல்லைகள் இல்லாதது ஒரு சிறப்பு அம்சமாகும்.

மேற்கு ஜெர்மனியில் நடந்த ஒரு கண்காட்சியில் இந்த இயந்திரங்கள் வைக்கப்பட்டி ருந்தனவாம். அதன் நூதன அமைப்பு இந்நிறுவனத்தாரை கவர்ந்ததாம். முயற்சியுடை யார் இகழ்ச்சியடையார் அல் லவா? காலப்போக்கில் கண் காட்சியில் கண்ட கருவிகள் கண்ணுக்கு எதிரிலேயே இயங் கத் தொடங்கிவிட்டன!

இத்தொழிற்கூடத்தில் கண் ணாடியிலேயே உருவங்களைப் பதிக்கும் ஒரு புதிய முறையை யும் கையாண்டிருக்கிறார்கள். கண்ணாடியில் ஏசு, புத்தர், காந்தி, அறிஞர் அண்ணா போன்ற திரு உருவங்களையும், இயற்கைக் காட்சிகளையும் பல வண்ணங்களில் பதிக்கலாம். இம்முறை தமிழ்நாட்டில் இங்குதான் முதன் முதலாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

தொழில் எதுவாயினும், அத்தொழிலில் புதிய புதிய புரட்சிகளைக் கையாளுதல் வேண்டும். அப்போதுதான் தொழில் மேலும் மேலும் வள ரும்; வளம் பெறும். இந்த வகையில் தொழில் வளர்ச்சி யில் குறிப்பாகக் கண்ணாடித் தொழிலில் அக்கறை காட்டும் துடிப்புள்ள இளைஞர்களால் நடத்தப்பெறும் இத்தொழிற் கூடம், தரமான தயாரிப்பில் கண்ணாடி போல் பளபளக்கிற தென்றால் அது மிகையல்ல!

—பி.வி.ஜி.



# பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள்!

—ஆர். எம்.

மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று தண்ணீர்! கிராமப்புற மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட தண்ணீர் வழங்க வேண்டும் என்பதற்காக இன்றைய தமிழ்நாடு அரசு 14—4—1971-ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தைத் துவக்கியது!

1966—67-ஆம் ஆண்டு வரை பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வசதி பெற்றிருந்த நகராட்சி,பேரூராட்சிகள்...116

1967—68 முதல் 1974—75 வரையான 8 ஆண்டுக் காலத்தில் புதிதாகப் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வசதி பெற்ற நகராட்சிகள், பேரூராட்சிகள் ... ... 68



குடிநீர் வடிகால் வாரியம் அமைக்கப்பட்ட பின் 4 ஆண்டுக் காலத்தில் புதிதாகப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி பெற்ற—

| | | |
|---|---|---|
| (1) | நகராட்சிகள் | ... 10 |
| (2) | பேரூராட்சி | ... 29 |
| (3) | மக்கள் | ... 9·14 இலட்சம் |

## மாவட்ட ஆட்சியாளர்கள், காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை
5-7-75

மேதகு ஆளுநர் அவர்களே,
அமைச்சர் பெருமக்களே,
தலைமைச் செயலாளர் அவர்களே,
காவல்துறைத் தலைமை அதிகாரி அவர்களே,
அரசு உயர் அலுவலர்களே,
மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
[illegible] துறை அதிகாரிகள் கொண்ட
[illegible] இந்த மாநாடு, நமது தமிழ்
நாட்டின் முன்னேற்றத்திற்குத் தேவை
யான [illegible]
போலவே இந்த ஆண்டும் [illegible]

என்பதில் ஐயமில்லை. [illegible]
[illegible] பல்வேறு திட்டங்களில் மக்களுக்
கான திட்டங்கள் நிறைவேற்றுவதில்
இந்த அரசு [illegible].
அதற்கான அத்துறையைச் சேர்ந்தவர்
கள் பெரும்பான்மையான அரசு அலு
வலர்கள் உழைத்து வருகின்றார்கள்.
அதற்காக என் நெஞ்சார்ந்த பாராட்
டுக்களைத் தெரிவித்துக் கொள்கி
றேன்.
இந்தியாவின் நிலைமை [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]ண்டு வரை இருப்பினோம்.
நாங்களோடு தொண்டு செய்திடும்,
உழைப்பு, வெம்மை, தமிழ் இயக்கக்
கொள்கைக்கும் மரபு மரபு வந்த நேர்மை
விட்டுக்கொடுக்க என்றும், பிரி-
வினைந்து எடுத்த முயற்சிகளாலும்
வித்தகர்களின் வியூகப் பண்பாளரும்
தமிழ்மக்களின் பேராதரவோடும்,
நடு இலட்சியப் பணம் திரட்டப்பட்டு.
நிலத் தொகை உண்டெனும்
இடத் தேர்வும் உண்டு எனும்
புரட்சிக் கவிஞர் மொழிச் செப்ப
எதையும் தாங்கும் இதயம் போன்ற
என்ற அண்ணாவின் வழிநின்று - கடமை,
கண்ணியம், தொண்டுடன் கட்டுப்பாட்டுடனும்

மனவளம் கொண்டவர்களாகத் தமிழ்
மக்கள் மீதுபெரும்பாலான இப்புதிய
நாள், விழாக்குக் கழக நடைபெறும்
விழா, விழாவுக்காகத் திட்டம்
செழுமைய சிந்தனை திட்டம் செய்து தொடப
கழகக் கிளைகளெல்லாம் தொடர்ந்து செயல்
படுத்த முடிந்தது.
நான் அழைத்த கூட்டம் கூட்டோடு
போல், பெருமைக்குக் கொண்டு
விதிமுறை தேர்தலில் இன்னமும்
சேர்த்தன உணர்வுடன் நான் உள்ளத்தில்
பதிவு செய்தேன். தாய்மாரும்,
பாதுகாப்பும் துணை முயற்சி
எப்போதும் நம்பிக்கையே துணையாக
எழும் இலக்கியில். அதே சமயம்

சமுதாயத்தை உருவாக்கிடும் பழம்
பழமை போற்றியும், சட்டம், அறிவின்
கு, விளைந்து காத்து சமுதாயத்தில்
விளம்புவன் புதுமை கிடைப்பதும்,
நடுநிலைமைக்கு விரோதிகள், தீயவர்,
சாதிச் சூழ்நிலையின் இருவரை கட்டு
வந்தும் பெருமைப் உணர்வைத் தொட்டுத்
கட்டுப் படுத்தாக்கியும் போர்க்காலக்
கொண்டு உண்டு.
இன்று, இந்த விதமாக
விழாவில் ஏற்பட்டோம் ஆய்வுகள்
பற்றி, தமிழ் மக்களுக்கு இருக்கும்
கட்சியின் விதிகள் நிலைமை கொண்ட
கருத்து நாட்டியம் என்றும், இதே
பெருமையை எழுத்தும் நிலையாக்கும் வரை,

இந்தப் பெருமைக்கு வர்க்க சாலைக்கு
ஆம் ஆமி; கட்டம் அழுங்கு இனைந்
உள்ள முழுக் கடமை என்பதை
விசுவாசத்தோடு கொண்டு எல்லையோர்
திட்டவட்டமாகத் தெரிவித்துக்
கொண்டேன். ஜனநாயகத்தில்
உள்ள முறைகள், எந்த வகையில்
தோன்றுவதும் விளம்பரத்தைப் பட
முயற்சியைக் காக்கும். பகைவனை நோக்கி
நேர்மை நெஞ்சோடும், நேர்மை
நோக்கிப் பண்பு நெஞ்சோடும்
கொள்கை பற்றுக் கொண்ட தான் என்று
பல போல், வன்முறையுடன்
கொண்டும் நடுத்தும் எந்த
வகையில் இல்லாதாகும் பகுதி

இலையுதிர்காலத்தையும் பிணையுவேனும்
அழிப்பதையான தேய்ப்ப போல்
திட்டம் –
நான் தேடிப்பிட்ட இருக்கச் சூழல்
களும், தேடிப்பிட விட்டுப் போன
பேராற்றலான பணிகளும் –
தொலைவினிற் தொடர்ந்து
நடைபெறு மாவட்ட கட்சித்துப்
வசம், மாவட்டத் தீருமானம்
போது நினைவு அதிகாரிகள், உயர்
அதிகாரிகள் அனுபவம் அமைய
தொண்டாற்றிட வேண்டும்.
உள்ளாட்சி மன்றங்களின்

தேர்தல்கள் முன்னிலைக்கப்பட
சேர்ந்து விட்டதால், அதிகாரி
களின் ஒத்துழைப்பும், பொறுப்பும்
மேலும் பன்மடங்கு அதிகமாகத்
தேவைப்படுகிறது. இந்த நிலைப்
புக்கத்தில், என்பதை நான்
சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்
ளேன்.

சென்ற ஆண்டு நான் உங்களி
டமே உறுதியளித்தபடி போது
மீண்டும் மது விலக்குக் கொள்கை
நடைமுறைப் படுத்தப் படவேண்டுக்
தேடிப்பிட்டு அதன் விளைவாகப்

பழைய நிலைகள் அமைக்கும் படி
ஆக்கும் என்று செய்கிறேன்.
காய்ச்சுவோர், குடிப்போர் என்
றெல்லாம் கடுமை விதிகள்
கொண்டுவர் – அவர்கள் தீர்ப்போர்
திருந்துவோர் – நன்று செம்மையாக
அருந்துவோர் – மறுபடி காரர்
என்றெல்லாம் பட்டியல் தொடர்
காலம் பார்த்துக் கொள்ள வேண்டு
மென்று வலியுறுத்திக் கேட்டுக்
கொண்டேன். அதில் இன்னும்
சிறு கண் காணிப்பு தேவை என்
பதையும், வேலியே பயிரை மேயா
மல் பார்த்துக் கொள்ள வேண்டு

மென்பதையும் மீண்டும் வலியுறுத்
திக் கூறுகிறேன்.
"ஸ்பிரிட்" போன்ற எரிசாராயப் பொ
ருட்களுக்கு அனுமதி வழங்கு
கிறபோது கட்டுப்படுத்தப்பட்டு, புதிதாக
மாநிலங்கள் அனுமதி அளிக்காமலும்,
எரிசாராய அனுமதி பெறுபவர்களின்
அதிகாரிகள் கோரிக்கையை ஏற்
காமலும் – அதை எடுத்துக்கொண்டு
டிச, கள்ளச் சாராயம் காய்ச்சும்
சமூக விரோதத் தொழில் பெருகும்
அளவு நடைபெறுகிறது. இந்த
'ஸ்பிரிட்' அனுமதி பெறுபவர்கள், அதனைத்
தவறாகப் பயன்படுத்தாமல் செய்து

[illegible]ப்படப் போவது தொடர்ந்த சமுதா-
யத்திற்கான என்பதை மறந்து
விடாமல், கடமையாற்ற வேண்டுகிறேன்.
நமது மாநிலத்துக்குரிய இன்றைய
தேவைகள், [illegible], இவை
களைத் தொகுத்துக் கொண்டு, இம்
[illegible] உதவிகள் [illegible]
வெற்றியடைந்தோம்.
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

கிராமங்களை இணைக்கும் சாலைத்
திட்டம், இணைப்புப் பாதைகள்
அமைத்தல் போன்ற கிராமப்புற
மேம்பாட்டுத் திட்டங்கள் நடைபெறு
கின்றன.
எட்டாண்டு காலத் திட்டம் [illegible]
சுமார் 15 லட்சம் ஏக்கர் பாசன
வசதி அளித்தது மட்டுமல்லாமல்
மேலும் ஆயிரக்கணக்கான பாசனத்
[illegible]
[illegible]
கின்றன.
[illegible]
பல கிராமங்கள் பெற்று வருகின்
றன.

தொழிற்பேட்டைகள் தொடங்குதல்,
[illegible], [illegible] வழங்கு
தல் போன்ற புதுத் திட்டங்கள்
பணிகள் பெருமளவில் நடக்கின்றன.
உற்பத்திப் பெருக்கம் [illegible]
பட்டு, [illegible] பல்லாயிரக்
கணக்கானோர் [illegible]
வழங்கப்பட்டு வருகின்றன.
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible] பெறும்.
இதே போல [illegible]
[illegible]
[illegible] பணிகள் தொடங்
கப்பட்டு விட்டன.
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
திட்டங்கள்—
[illegible]
திட்டம்—

[illegible]

5/7/1975

குடிநீர் வடிகால் வாரியம் அமைக்கப்பட்ட பின் மேம்படுத்தப்பட்ட குடிநீர் வசதி பெற்ற—

| | | | |
|---|---|---|---|
| (1) | நகராட்சிகள் | ... | 12 |
| (2) | பேரூராட்சி | ... | 1 |
| (3) | மக்கள் | ... | 6·38 இலட்சம் |

| | | |
|---|---|---|
| கிராமப்புற மக்களுக்காக விரைவு செயல்முறை திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்களின் எண்ணிக்கை | ... | 356 |
| குறைந்தபட்சக் குடிநீர்த் தேவைத் திட்டத்தின்கீழ் புதிதாகப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி பெற்ற — ஊற்றுத்துறை இல்லாத, தொற்றுநோய் பரவக்கூடிய — கிராமங்கள் | | 980 |
| ஐ.நா. நிறுவனத்தின் உதவியுடன் கூடிய கிராம குடிநீர் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளைக் கிணறுகள் | ... | 2,230 |
| வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் குடிநீர் வசதி பெற்ற கிராமங்கள் | ... | 1,200 |



தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் இதுவரை பாதுகாக்கப்பட்ட குடிநீர் பெற்றுள்ள கிராமங்களின் மொத்த எண்ணிக்கை ... ... 5,000

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவேண்டும் என்பதற்காகத் தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியத்திற்குக் கடன்கள், மானியங்கள் கொடுப்பதற்காக 1975—76-ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் தமிழ்நாடு அரசு ஒதுக்கியுள்ள தொகை ... ... 10.32 கோடி ரூபாய்

வீராணம் திட்டத்திற்காக 1974-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முடிய செலவிட்டுள்ள தொகை ... ... 20·25 கோடி ரூபாய்.

வீராணம் திட்டத்திற்காக 1975-76-ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ... ... 7·0 கோடி ரூபாய்.

பாலாற்றுப் படுகையிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டுவரும் திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு ஒதுக்கியுள்ள தொகை ... 1.2 கோடி ரூபாய்.

சிறுவாணி ஆற்றிலிருந்து கோவை நகருக்குத் தண்ணீர் கொண்டுவந்து வழங்கும் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை ... 1.71 கோடி ரூபாய்.



வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் வழங்கும் பணிகளை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குத் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ள தொகை ... 2 கோடி ரூபாய்.

கிராமப்புறங்களில் குடிநீர் வழங்குவதற்காக 1975—76-ஆம் ஆண்டிற்குத் தமிழ்நாடு அரசால் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ... ... 3.25 கோடி ரூபாய்.

கிராமங்களுக்குக் குடிநீர் வழங்குவதற்காக 1975—76-ஆம் ஆண்டில்ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகச் செலவிடப்படவிருக்கும் தொகை ... 1.9 கோடி ரூபாய்.

கிராமங்களுக்குக் குடிநீர் வழங்குவதற்காகச் செய்யப்பட்டுள்ள பல்வேறு நிதி ஒதுக்கங்களிலிருந்து வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 1974—75, 1975—76-ஆம் ஆண்டுகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை ... 6.25 கோடி ரூபாய்.

திருவான்மியூரிலிருந்து சென்னை நகருக்குத் தண்ணீர் கொண்டுவரும் விரைவுத் திட்டத்திற்காகத் தமிழ்நாடு அரசு செலவிட்டுள்ள தொகை ... 50 இலட்சம்







தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தோற்றுவாய்க்கு முன் செலவிடப்பட்ட மொத்த தொகை

ரூபாய் 31·90 கோடி

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தோன்றியது முதல் இன்றுவரை செயலாக்கப்பட்ட திட்டங்களுக்காக செலவிடப்பட்ட தொகை

| ஆண்டு | கோடி ரூபாய். |
|---|---|
| 1971-72 .. .. | 11·44 |
| 1972-73 .. .. | 11·04 |
| 1973-74 .. .. | 13.66 |
| 1974-75 .. .. | 18.35 |
| மொத்தம் | 54·49 |

இன்றையத் தமிழ்நாடு அரசால் துவக்கப்பட்ட குடிநீர் வடிகால் வாரியத்தால் பாதுகாக்கப்பட்ட தண்ணீர் வசதி பெறும்—

| | | |
|---|---|---|
| 1. | மாநகராட்சிகள் ... | 2 |
| 2. | நகராட்சிகள் ... | 83 |
| 3. | நகரியங்கள் ... | 13 |
| 4. | பேரூராட்சிகள் ... | 86 |
| 5. | கிராமங்கள் (குக்கிராமம் உட்பட) | 42333 |
| 6. | நகர்ப்புற மக்கள் ... | 101 இலட்சம் |
| 7. | கிராமப்புற மக்கள் ... | 147 இலட்சம் |

பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி பெறும் நகர்ப்புற மக்களின் சதவீதம் ... 65

கிராமப்புற மக்களின் சதவீதம் 58



# கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு ரப்பர்த் தோட்டங்கள்

—இரா. பரதன்



தேசிய அளவில் ரப்பர் மிக இன்றியமையாத மூலப் பொருள். தொழில்நுட்ப ரீதியிலும், கைத்தொழில் சம்பந்தமாகவும், வீடுகளில் அன்றாடத் தேவைக்கும் மிகப் பயன்படும் பொருள் ரப்பர். நாட்டின் தற்காப்பிற்கான பொருட்கள் தயாரிக்கவும் ரப்பர் தேவை.

இயற்கை ரப்பர் உற்பத்தியில் நமதுநாடு உலகில் ஐந்தாவது இடத்தில் இருக்கிறது. நமது நாட்டின் தேவைக்குப் போதுமான இயற்கை ரப்பர் உற்பத்தியாகாத காரணத்தாலும்—ரப்பர் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யக் கூடிய வாய்ப்புகள் நமது நாட்டில் இருப்பதாலும் மேற்படி வாய்ப்புகளைப் பயன்படுத்தும் முயற்சி கைக்கொள்ளப்பட்டது.

மொழிவழி அடிப்படையில் 1956-ல் கன்னியாகுமரி மாவட்டம் கேரளத்திலிருந்து பிரிந்து தமிழ் நாட்டுடன் சேர்ந்தது. வனச்செல்வத்தில் சிறந்து விளங்கும் குமரி மாவட்டக் காடுகளில் ரப்பர் பயிரிடுவ்தற்குச் சாதகமான ஒதோஷ்ண நிலையும், மண்வளமும் உள்ளன. மேலும் ஏற்கெனவே குமரி மாவட்டத்தில் நல்லமுறையில் தனியார் ரப்பர் தோட்டங்கள் இயங்கி வந்தன.

ஆகவே அரசினரால் வனத் துறை மூலம் ரப்பர் தோட்டம் உண்டாக்க ஒரு திட்டம் தீட்டப்பட்டது. மேற்படி திட்டத்தின்படி 1200 எக்டேரில் ஆறு வருடங்களில் ரூ. 34 இலட்சம் செலவில் ரப்பர் பயிரிடத் திட்டமிடப்பட்டது. அதன் படி 1960-ல் ரப்பர் பயிரிடத் தொடங்கி ஒரு குறியீடு அடைபப்பட்டது. திட்டத்தின் யலன் நல்லமுறையில் அமைந்தால் தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் பயிர் செய்யப்பட்டு வருகிறது. இதுவரை சுமார் 3500 எக்டேர் பரப்பளவில் ரப்பர் பயிர் செய்யப்பட்டிருக்கிறது. மேலும் 1600 எக்டேர் பரப்பில் ரப்பர் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

முதலில் நாற்றுக்களைத் தயார் செய்து அவற்றை அப்படியே நடுவதன் மூலம் தோட்டம் பயிர் செய்யப்பட்டது. பின்னர் நல்லமுறையில் அதிகப்படியாகப் பால் கிடைக்கக்கூடிய உயர் ரக ரப்பர் செடிகளிலிருந்து ஒட்டுச் செடிகள் தயாரித்துப் பயிரிடப்பட்டு வருகின்றன.

ரப்பர் மரங்கள் 8-வது ஆண்டிலிருந்து பலன்கொடுக்கக்கூடியவை. அரசு ரப்பர் தோட்டத்தில்1966-67லிருந்து பால் எடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை சுமார் 76 லட்ச ரூபாய், ரப்பர் விற்பனை மூலம் கிடைக்கப் பெற்றுள்ளது. இதுவரை ரூ. 4.314 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது. தோட்டம் முழுவதும் பலன் கொடுக்க ஆரம்பிக்கும்பொழுது ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3 கோடி வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது.

தற்சமயம் ரப்பர்ஷீட்டாகவும், கிரேப் ரப்பராகவும் தயார் செய்துவிற்கப்படுகிறது. இவைகள் தயாரிப்பதற்கு நவீன தொழிற்சாலை ஒன்றும், உயர் ரக இயந்திரங்களுடன் செயல்பட்டு வருகிறது. ரப்பர் தோட்டத்தில் தயார் செய்யும் ரப்பரிலிருந்து பொருட்கள் தயார் செய்ய இன்னும் ஏராளமான தொழிற்சாலைகள் துவங்க வாய்ப்பிருக்கிறது.

அரசு ரப்பர் தோட்டத்தால் ஆண்களும், பெண்களுமாகச் சுமார் 1600 தொழிலாளிகள்-காட்டு வேலையிலும், பால் எடுக்கும் தொழிலிலும் தொழிற்சாலையிலும், பணி



தொழிற் கூடத்தில் ரப்பர்ப் பால், ஷீட்டாக மாற்றும் இயந்திரத்திற்கு அனுப்பப்படுகிறது.



உறைந்துபோன ரப்பர்க் கட்டிகள் பதப்படுத்தப் படுகின்றன.



ரப்பர் ஷீட்டுகள் புகையறையில் (Smoke Room) உலர்த்துவதற்குக் கொண்டு செல்லப்படுகின்றன.



ரப்பர்ப் பால் ஷீட்டாக மாறுகிறது



உலர்த்தப்பட்ட ரப்பர் ஷீட்டுகள் தரம் பிரிக்கப் பட்டு எடை போடப்பட்டுச் சிப்பங்களாக்கப்படுகின்றன.



ரப்பர் ஷீட்டுகள் சுத்தம் செய்யப்படுகின்றன



கட்டுகளாக்கப்பட்ட ரப்பர் ஷீட்டுகள் விற்பனைக்குத் தயாராக இருக்கின்றன

மணலோடை ரப்பர்த் தோட்டத் தொழிலாளர் குடியிருப்புகள்



யாற்றி வருகிறார்கள். தொழிலாளர்களுக்குத் தொழிலாளர்கள் நலச் சட்டப்படிக் கொடுக்க வேண்டிய சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. வீட்டு வசதி, குழந்தைகளுக்கான கல்வி வசதி, மருத்துவ வசதி, தண்ணீர் வசதி, பொழுதுபோக்க வசதி ஆகியவற்றில் தனிக்கவனம் செலுத்தப்படுகின்றன.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் அகதிகளில் 333 குடும்பத்தினரை அரசு ரப்பர் தோட்டத்தில் குடியமர்த்தி வேலை கொடுத்து அவர்களுக்கு புனர் வாழ்வளிக்கும் திட்டமும் அரசு ரப்பர் தோட்டத்தில் அமல் நடத்தப்படுகிறது. இதுவரை 133 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன. மீதமுள்ள குடும்பங்களுக்கான வீடுகளும் கட்டப்பட்டு வருகின்றன. இலக்கில் குறிப்பிட்டுள்ள குடும்பங்கள் எல்லாம் 31-3-1978-க்குள் அரசு ரப்பத் தோட்டத்தில் குடி அமர்த்தப் படுவார்கள்.

மேலும் 285 அகதிக் குடும்பங்களைக் குடியமர்த்தும் திட்டமும் பரிசீலனையில் உள்ளது.

பொதுவாக, கன்னியாகுமரி மாவட்டத்தைச் செழிப்படையச் செய்து தொழில் வளத்தைப் பெருக்கி, வேலை வாய்ப்பை அதிகப்படுத்தி, தேசிய பொருளாதாரத்தை அதிகரிக்கச் செய்வதில் கன்னியாகுமரி மாவட்ட அரசு ரப்பர் தோட்டத்தின் பங்கு பாராட்டு தற்குரியது.

1960-61ல் குமரி மாவட்டத்தில் 60.30 எக்டேரில் துவங்கப்பட்ட அரசு ரப்பர்த் தோட்டங்களில் 1967 வரை 1,116,80 எக்டேரில் ரப்பர் பயிர் செய்யப்பட்டது. 1967 விருந்து 1974 வரை1,44810 எக்டேர் நிலப் பரப்பில் பயிர் செய்யப்பட்டுள்ளது.

1966-67ல் ஆண்டொன்றுக்கு அரசு ரப்பர்த்தோட்டங்கள் மூலம் 625 கிலோ ரப்பர்தான் கிடைத்தது. அது படிப்படியாக வளர்ந்து 1974ல் 13,56,646 கிலோவாக உயர்ந்துள்ளது.

தொழிலாளர் நலத் திட்டத்தின் கீழ் அரசு ரப்பர்த் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 1965 முதல் 1967 வரை 28 குடியிருப்புக்களே கட்டிக் கொடுக்கப்பட்டிருந்தன. 1967லிருந்து 1974 வரை 126 குடியிருப்புக்கள் கட்டிக் கொடுக்கப்பட்டன.

இவை தவிர, தொழிலாளர் பொழுது போக்கிற்கென ஒரு பொழுது போக்குச் சங்கமும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. பெண் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லும் போது குழந்தைகளைப் பராமரிக்கக் குழந்தைகள் காப்பகம் ஒன்றும் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் கல்விக்கு ஒரு நடுநிலைப்பள்ளியும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

மற்றும் அகதிகள் நிவாரணப் பணியின் கீழ் 1971லிருந்து இவ்வாண்டு முடிய 224 குடியிருப்புக்கள் அரசால் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் காப்பகம் ஒன்றும், துவக்கப்பள்ளி ஒன்றும் இத்திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுக்கப் பட்டுள்ளன.



# பனை வழங்கும் செல்வம்

நிறுந்தொகை என்னும் நீதி நூலைப் படைத்த அதிவீரராம பாண்டியனுர், பனையைக் குறித்து ஒரு செய்தியைக் கூறுகிருர்.

தேம்படு பனையின்
திரள்பழத் தொருவிதை
வானுற ஓங்கி
வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க
நிழலா காதே

என்று குறிப்பிடுகிருர்.

பனைமரத்தின் விதை பெரிது; மரமும் உயரம்;' ஆனுல் அதன் கீழே ஒருவர் நிற்பதற்குக் கூட நிழல் கிடைக்காது-என்பது செய்யுளின் கருத்து.

மனித சமுதாயத்துக்குப் பலவகையில் பயனளித்து வரும் பனைமரத்தை-பனைச் செல்வமாக விளங்கிவரும் பனைமரத்தை-இப்படிப் பயனில்லாதார் பட்டியலில் சேர்த்து விட்டாரே அதிவீரராம பாண்டியர் என்ற மன வருத்தம் கொண்ட தற்காலக் கவிஞர் ஒருவர் பனையின் பயனை மிக விரிவாக எடுத்துரைத்தார். பனைமரத்தினிடத்தில் அவர் வினுத் தொடுக்கிருர். அதற்குப் பனைமரம் விடை தருகிறது.

கவிஞர் கேட்கிருர்:

''பனைமரமே பனைமரமே!
ஏன் வளர்ந்தாய் பனைமரமே!''

பனைமரம் உடனே பதில் கூறுகிறது. சமுதாயத்துக்கு அது எந்தெந்த வகையில் எல்லாம் பணியாற்றுகின்றது என்னும் செய்தியை எடுத்து வைக்கிறது.

''நான் வளர்ந்த காரணத்தை
நாட்டோரே சொல்லுகின்றேன்
படுக்க நல்ல பாயாவேன்
பஞ்சணைக்கு நாராவேன்
அடுக்கடுக்காய்ப் பானைகளை
அடுக்கிவைக்க உறியாவேன்

சித்திரைக் கோடையிலே
சிறந்தநுங்கை நான்தருவேன்
எத்திசையும் உள்ளவர்க்கு
இயலுதவி செய்திடுவேன்
........

இப்படியே அடுக்கிக் கொண்டு போகிறது பனைமரம்.தன்னுல் இந்த உலகத்துக்குக் கிடைக்கும் பயன்களை அடுக்கடுக்காகத் தொகுத்துச் சொல்கிறது பனைமரம்.

பனைமரத்தினுல் கிடைக்கும் பயன்கள் மிகமிக அதிகம். பனையின் எந்தப் பகுதியும் வீணுவதில்லை. அனைத்தும் நமக்கு உதவுகின்றன. கற்பகத் தரு என்ற ஒன்று இருக்குமானுல் அது பனைமரமாகத்தான் இருக்க முடியும்.

தமிழ்நாட்டில் ஏறக்குறைய 4 கோடி பனைமரங்கள் உள்ளன. கன்னியாகுமரி, இராமநாதபுரம், திருநெல்வேலி, சேலம், கோவை மாவட்டங்களில் பனைவெல்லம் தயாரிக்கும் தொழில் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்தத் தொழிலில் ஏறக்குறைய 2 இலட்சம் பேர் ஈடுபட்டு வருகின்றனர். பதநீர் இறக்குதல், வெல்லம் காய்ச்சுதல், பனை ஓலைப் பொருட்களை உருவாக்குதல், பனந்தும்பு தயாரித்தல், பிரஷ் செய்தல் போன்ற தொழில்களில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

மாநிலம் முழுதும் பரவலாக 1505 துவக்கநிலைக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவை மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் சம்மேளனங்களாக இணைந்துள்ளன. மாநிலம் முழுதும் 2,45,099 உறுப்பினர்கள் உள்ளனர். செலுத்தப்பட்டிருக்கும் மூலதனம் ரூ. 13.4 லட்சம் ஆகும். ஆண்டொன்றுக்கு மொத்தம் ரூ. 325.9 இலட்சம் மதிப்புள்ள 24,802 டன் பனைவெல்லம் தயாரிக்கப்படுகிறது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் கூட்டுறவுப் பனைப்பொருள் உற்பத்திக் கழகம் மாதவரத்தில் பணியாற்றி வருகிறது. அதன் அருந்தொண்டுகளைப் பார்ப்போம்.

இங்கே ஒன்பது பிரிவுகள் உள்ளன; அவை:

1. பதநீர் பக்குவப்படுத்தும் நிலையம்
2. நார்ப்பிரிவு
3. பிரஷ் தயாரிப்பு
4. பனங்கற்கண்டுப் பிரிவு
5. மிட்டாய்ப் பிரிவு
6, சுவைநீர்தயாரிப்பு(பானம்)
7. பழப்பக்குவப்படுத்தல்
8. பதநீர் காய்ச்சுதல்
9. பனஞ்சர்க்கரை தயாரித்தல்

இந்த ஒன்பது பிரிவுகளில் நடைபெறும் பணிகளை நோக்குவோம்.



பனை ஓலையால் உருவாக்கப் பெறும் நாற்காலி.

**பதநீர் பக்குவப்படுத்தும் நிலையம்:**

பனைமரத்திலிருந்து இறக்கப்படும் பதநீர் இங்கே கொண்டு வரப்படுகிறது. அது, நன்கு வடிகட்டப்பெறுகிறது. வடிகட்டப்பெற்ற பதநீர் குளிர் பதனப்படுத்தப்பெறும் இயந்திரத்தின் உள்ளே வைக்கப்படுகிறது. 2 மணி நேரத்தில், பதநீர் நல்ல குளிர்ச்சியைப் பெறுகிறது. அதன்பின் பாலிதீன் பாட்டில்களில் அடைக்கப்படுகிறது. இந்தக் குளிர்ச்சி 6 மணி நேரம் வரை நீடிக்கிறது.

நாளொன்றுக்கு 14 ஆயிரம் பாட்டில் பதநீர் இங்கே குளிர் பதனப்படுத்தப் பெற்று வெளியே விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.



பட்டை தும்பாக்கப்படுகிறது

**நார்ப் பிரிவு :**

பனை ஓலையில் வண்ணம் ஏற்றப்பெற்று, அவற்றைக் கொண்டு கூடைகள் முடையப் படுகின்றன. இரும்பு நாற்காலி களில் பிளாஸ்டிக் வயர் பின் னப்படுவதைப் போன்றே பனை ஓலையைக் கொண்டும் பின்னு கிருர்கள். பார்ப்பதற்கு நவீன பிளாஸ்டிக் வயர் இணைக்கப் பெற்ற நாற்காலிகள் போலவே காட்சி தருகின்றன. பார்வை யில் மட்டுமல்ல-நேர்த்தியிலும் உழைப்பிலும் உறுதியானவை யாக விளங்குகின்றன. கைவினைப் பொருள் என்ற முறையில் இதனை அணுகும் போதுதான் இதன் சிறப்பு நமக்கு விளங்குகிறது.

பனந்தும்பு 'பிரஷ்' ஆகிறது



**பிரஷ் பிரிவு :**

பனைமரத்தின் பட்டை ஒரு வகை சிறு இயந்திரத்தின் உதவியால் தும்பு தும்பாக்கப்படுகின்றது. அதன் பின்னர் ஊசி கொண்டு தும்புகள் சிக்கு எடுக்கப்படுகின்றன. பின்னர் அந்தத் தும்புகளில் வண்ணம் தோய்க்கப்படுகின்றது. பொதுவாக, கறுப்பு வண்ணம்தான் தோய்க்கப்படுகிறது. பின்னர் சிறுசிறு துண்டுகளாக வெட்டப்படுகின்றன.

பிரஷ்ஷுக்குத் தேவையான மரம் தேர்ந்தெடுக்கப் பெறுகிறது. சிறு இயந்திரத்தின் உதவியால் மரக்கட்டை, வடிவம் பெறுகிறது. அவற்றில் துளைகளும் இடப்படுகின்றன. இந்தத் துளைகள் கட்டைகளின் முழு கனத்திற்கும் இடப்படுவதில்லை. கட்டையின் உயரம் 2 அங்குலம் என்ருல் துளையின் ஆழம் அரை அங்குலம் இருக்கலாம். துளையிடப்பட்ட பின்னர், ஓர் ஆணியின் உதவியால் பனந்தும்புகள் அந்தத் துளைகளின் உட் செலுத்தப்படுகின்றன. கட்டையில் உள்ள துளைகள் அனைத்திலும் தும்புகள் வைக்கப் பெற்றபின் நல்ல பிரஷ்கள் உருவாகி விடுகின்றன. வீடுகள் சுத்தம் செய்ய, இயந்திரங்கள் சுத்தம் செய்ய இந்த பிரஷ் பயன்படுகிறது.

'பனந்தும்புதானே இது' என்று எளிதாக எண்ணிவிடாதீர்கள்! இவை, அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி, ஜப்பான், ஆஸ்திரேலியா, போன்ற மொத்தம் 40 வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. 50 கிலோ கொண்ட கட்டுகளாக அவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆண்டுக்கு 30 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பனந்தும்புகள் ஏற்றுமதியாகின்றன.

இந்தப் பிரிவில் 15 பெண்கள் பணிபுரிகிருர்கள். நாளொன்றுக்கு ஒருவர் சராசரி 30 பிரஷ் வீதம் மொத்தம் 450 பிரஷ்கள் உருவாக்கப் பெறுகின்றன. நிலையத்துக்கு வராமல் தொழிலிருந்தபடியே பிரஷ் தயாரித்துந் தருவதற்கும் வகை செய்யப்பட்டிருக்கிறது. இவ்வகையில் 12 பேர் பணி புரிகிருர்கள். இவர்கள் நாள் ஒன்றுக்கு இருபது பிரஷ்கள் வீதம் மொத்தம் 240 தயாரிக்கிருர்கள். ஆக நிலையத்திலும் வெளியிலுமாக மொத்தத்தில் நாளொன்றுக்கு 690 பிரஷ்கள் தயாரிக்கப்படுகின்றன.

**பனங்கற்கண்டுப் பிரிவு :**

பனங்கற்கண்டு-உடலுக்குக் கெடுதல் தராதது என்பதை அனைவரும் அறிவார்கள். தொண்டை கட்டிக் கொண்டால், பெரியவர்கள் பனங்கற்கண்டைப் பாலில் சேர்த்துச் சாப்பிடுவது நமது தமிழகத்தில் வழக்கம். குறிப்பாக, பாடகர்கள் பனங்கற்கண்டை மிகவும் பயன்படுத்திவருகிருர்கள். இது மருந்து வகையைச் சேர்ந்தது என்று கூறலாம்.

பதநீருடன் சர்பத், மற்றும் தேவையான மருந்து

(Chemicals) களும் கலக்கப்படுகின்றன. தகரத் தொட்டிகளில் ஊறப்பெற்று உமியில் புதைத்து வைக்கப்படுகின்றன. தொட்டிகளின் உள்ளே நூல், வரிசை வரிசையாக இடம் பெற்றிருக்கின்றது. கலவை, 30 அல்லது 40 நாட்களில் தன் திரவத் தன்மையை இழந்து படிகத் தன்மையைப் பெறுகிறது. தொட்டிகளில் உள்ள நூல்களில் அவை உருவாகின்றன. இந்தப் படிகம் தான் பனங்கற்கண்டு ஆகும். 100 கிலோ பதநீரைக்கொண்டு 5 கிலோ கற்கண்டு தயாரிக்கப் பெறுகிறது.

**மிட்டாய்ப் பிரிவு :**

பனஞ்சர்க்கரையைக்கொண்டு இங்கே தயாரிக்கப்படும் மிட்டாய்கள், சாக்லெட்டுகள் சுவை நிரம்பியவை. வெளிச் சந்தையில் இராட்சத இயந்திரங்களின் உதவி கொண்டும் அஸ்காவினலும் தயாரிக்கப்பெறும் சாக்லெட்டுகளைப் போலவே— பனஞ்சர்க்கரை சேர்க்கப் பெற்ற மிட்டாய்களும் சுவையாக உள்ளன. இனிப்புச் சாக்லெட்டு மட்டுமல்ல இஞ்சிச் சாக்லெட்டும் இங்கே தயாரிக்கப்படுகின்றது. இவையெல்லாம் மின்னாற்றலால் இல்லாமல் கையாலேயே இயக்கப்படுகின்ற சிறு இயந்திரங்களின் உதவியால் தயாரிக்கப்படுவது குறிப்பிடத்தக்க செய்திஆகும். நாளொன்றுக்கு 600 ரூபாய் மதிப்புள்ள மிட்டாய்கள் தயாரிக்கப்படுகின்றன.

**பைநீர் (பாமோ கோலா) :**

பனஞ் சர்க்கரையைக் கொண்டு தயாரிக்கப்பெறும் பைநீரே பாமோ கோலா ஆகும். நாளொன்றுக்கு 100 டஜன் வரை தயாரிப்பதற்குரிய ஆற்றல் பெற்றிருந்தாலும் தற்சமயம் 30 டஜன் முதல் 40 டஜன் வரைதான் தயாரிக்கப்படுகின்றன. எளிய இயந்திர முறையில்தான் இதுவும் தயாரிக்கப்படுகிறது. சுவைமிகுந்த இந்த பானம் காதி விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படுகின்றன. இராணுவ உணவு விடுதிகளில் இந்தச் சுவைநீருக்கு மிகுந்த வரவேற்பு இருந்து வருகிறது.

**பழப்பக்குவப்படுத்தல் (Jam) :**

ஆப்பிள், மாம்பழம்போன்ற பழங்கள் இங்கே பக்குவப் படுத்தப்படுகின்றன. தேவையான (Chemicals) இராசயனங்களுடன் பனஞ்சர்க்கரையையும் கலந்து இந்தப் பழக் கூட்டைத் (Jam) தயாரிக்கிறார்கள். இதற்கு நல்ல வரவேற்பிருக்கிறது என்றாலும், இத்தகைய சுவையான பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன என்பதற்குரிய விளம்பரங்கள் இல்லாததால் இவற்றின் அருமை சரிவர உணரப்படாமல் இருக்கிறது.



வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பனத்தும்பு

**பதநீர் காய்ச்சுதல் :**

பனஞ்சர்க்கரை தயாரிப்பதற்கு-பதநீர் காய்ச்சப்படுதல் அவசியம். இங்கே பெரிய பெரிய வாணலியில் பதநீர் ஊற்றப்பட்டு, காய்ச்சப்படுகின்றது. தேவையான பக்குவம் வந்தவுடன் காய்ச்சுவது நிறுத்தப்படுகிறது.

**சர்க்கரைத் தயாரிப்பு :**

காய்ச்சப்பெற்ற பதநீர் ஒரு தொட்டியில் அடைக்கப் பெறுகிறது. ஒரு குழாயின் வழியாக ஏற்றப்படுகிறது. பெரிய வடிவில் காட்சி தரும் சர்க்கரை ஆலையில் திரவ வடிவப் பதநீர்-ரவை வடிவச் சர்க்கரையாக மாற்றம் செய்யப்படுகிறது. நாளொன்றுக்கு ஒரு டன் சர்க்கரை தயாரிக்கும் ஆற்றல் பெற்றது இந்த இயந்திரம். மாநிலம் முழுதும் இது போன்ற இயந்திரங்கள் அதிக அளவில் இடம்பெற்றால்-சர்க்கரைப் பிரச்சினை சரியான முறையில் சமாளிக்கப்படுவது உறுதி.



படிவ வடிவப் பனங்கற்கண்டு

மொத்தத்தில், பனைமரம்- பயனுள்ள மரம். கண்கண்ட கற்பகத்தரு என்பதைச் செங்கை மாவட்டக் கூட்டுறவுப் பனைப்பொருள் உற்பத்திக் கழகம் மெய்யாக்கி வருகிறது. என்றாலும் இதன் சீரிய பணியையும், செம்மையான தயாரிப்புகளையும் பொதுமக்களுக்கு நன்கு எடுத்துச் சொல்ல வேண்டியது அவசியம்!

—த. பி.

பாம்கோலா தயாராகிறது.



# பெருந்தொழில் வளர்க்கும் 'டிட்கோ'

தமிழ்நாட்டில் பெருந் தொழில்களைத் தோற்றுவித்துத் தொழில் வளம் பெருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் 'டிட்கோ' எனப்படும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (Tamil Nadu Industrial Development Corporation Limited) நிறுவப்பட்டது. தமிழ்நாடு அரசின் நிறுவனமான 'டிட்கோ', தமிழ்நாட்டில் பொதுத் துறையிலும், கூட்டுத் துறையிலும் தொழில்கள் வளர்ச்சி பெறுவதற்கு உதவும் ஒரு முக்கியத் தூண்டுகோலாக அமைந்துள்ளது.

பொதுத்துறையில் தொழில்களைத் துவக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் இராமநாதபுரம் மாவட்டம் ஆலங்குளத்தில் 'தமிழ்நாடு சிமெண்ட்' தொழிற்சாலையையும், வட ஆர்க்காடு மாவட்டம் அரக்கோணத்தில் தொடர் வார்ப்பட உருக்குத் தொழிற்சாலையையும் நிறுவியுள்ளது. 1968-ஆம் ஆண்டு வரை பொதுத்துறையைச் சார்ந்த மேற்கூறிய 2 தொழிற்சாலைத் திட்டங்களை நிறைவேற்றுவதில் மட்டுமே கருத்தாய் இருந்த 'டிட்கோ', 1968 ஆம் ஆண்டிற்குப் பிறகு தன்னுடைய பணிகளைப் பலவழிகளிலும் விரிவுபடுத்த முடிவு செய்தது. அதன் காரணமாகத் தமிழ்நாட்டில் உள்ள வளங்கள் எதிர்காலத் தேவைகள் ஆகியவைகளுக்கு ஏற்பவும்-தற்பொழுதுள்ள தொழில் திறமை அத்தொழில் திறமையை மேலும் வளர்க்க வேண்டியதற்கு ஏற்பவும்—திட்டமிட்டு தமிழ்நாட்டில் விரைவான தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்கான பல்வேறு திட்டங்களைத் தயாரித்து இந்திய அரசின் அனுமதிக்கு அனுப்பியது.

பொதுத்துறைத் தொழில்களில் கவனம் செலுத்தி வருவது போலவே, பொதுத் துறையிலிருந்து மாறுபட்ட கூட்டுத்துறைத் தொழில்களிலும் 'டிட்கோ' கவனம் செலுத்தத் தொடங்கியது. கூட்டுத்துறையில் பல்வகைத் தொழில்களை உள்ளிட்ட ஏராளமான திட்டங்களை 'டிட்கோ' ஊக்குவித்துள்ளது. கூட்டுத் துறைத் தொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள மாநிலத் தொழில் வளர்ச்சிக் கழகங்களில் இந்தியாவிலேயே முதலிடத்தை 'டிட்கோ' பெற்றுள்ளது. பொதுத்துறைத் தொழில்களுக்கான திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்துவதுடன் நிதிநிலை பற்றாக்குறையினால் நொடித்த தனியார் தொழில் நிறுவனங்களுக்கும் 'டிட்கோ' நிதி உதவி செய்தது.

கடந்த 4 ஆண்டுகளில் 37 திட்டங்களைச் செயல்படுத்துவதற்குரிய விரைவு நடவடிக்கைகளை 'டிட்கோ' மேற்கொண்டது. அதன்பயனாய், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பெட்ரோலிய இரசாயனப் பொருள்கள், மருந்துப் பொருள்கள் மற்றும் இதர இரசாயனப் பொருள்கள், எஃகு வார்ப்படம் மென் இரும்பு, ஸ்கூட்டர், தோல் பதனிடுதல், ரெப்ராக்டரீஸ், ரேயான் தர கூழ், மீன்பிடிக்க உதவும் இழுவைகள் போன்ற பொருள்களை உற்பத்தி செய்யும் துறைகளில் ஏற்படவிருந்த பற்றாக்குறையை- தேவைக்கும் உற்பத்திக்கும் இடையே உள்ள இடைவெளியை-'டிட்கோ'வின் சீரிய முயற்சிகளால் குறைத்திட முடியும் என்பது திண்ணம்.

**இறுதி நோக்கங்கள்**

'டிட்கோ' மேற்கொண்டுள்ள முயற்சிகளின் இறுதி நோக்கங்களாவன:

1. தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை ஊக்குவித்து,



அரக்கோணம் இரும்பு வார்ப்பட ஆலையை முதல்வர் கலைஞர் துவக்குதல்.

தொழில் இடைவெளியை- அதாவது தொழிற் பொருட்களின் உற்பத்திப் பற்றுக் குறையை அகற்றுதல்.

2. தொழிற்சாலைகளைத் தோற்றுவிப்பதற்கான இடங்களை முடிவு செய்யும் அதிகாரங்களைப் பரவலாக்குதல்.

3. ஏற்றத்தாழ்வற்ற - சமமான - பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்தல்.

4. முடக்கப்பட்டுள்ள மூலதனத்தைப் பயனுக்குக் கொண்டு வருதல்.

5. தொழில் திறமை மிக்க மேலாளர்களையும், நிருவாகத் திறமை தேவையான புதிய தொழில் முனைவோர்களையும் ஒன்று சேர்த்தல்.

**'டிட்கோ' செய்யும் பணிகள்**

நமது நாட்டிலும், வெளி நாடுகளிலும் பரவலாக ஏற்படுத்திக் கொண்டுள்ள தொடர்பின் காரணமாக வெளிநாடுகளிலுள்ள திறமைமிக்க நிறுவனங்களோடு இணைந்து கூட்டாகச் செயல்படவும். அத்தகைய கூட்டு முயற்சிக்குத் தேவையான பேச்சு நடத்தி ஒப்பந்தம் செய்து கொள்ளவும் கூட்டுத்துறையில் உள்ள கூட்டாளிகளுக்கு 'டிட்கோ' உதவுகிறது.

திட்டம் தயாரிக்கவும், நிதி உதவி செய்யும் நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு கடன் பெறவும் 'டிட்கோ' உதவி செய்கிறது.

விரைவாக உரிமம் பெறுவதற்கும, திட்டத்தைச் செயல்படுத்தும்போது பர்மிட்டுகளைப் பெறுவதற்கும் கூட்டுத்துறைத் தொழில்களில் ஈடுபட்டுள்ள கூட்டாளிகளுக்கு உதவி செய்யும் நிறுவனமாக 'டிட்கோ' விளங்குகிறது.

'டிட்கோ' வின் திட்டச் செயற்குழு (Project cell) இந்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் அமைச்சர்களுடனும், துறைகளுடனும் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி நெருக்கமான உறவு கொண்டுள்ளது. 'டிட்கோ' புதுடெல்லியில் ஒரு தொடர்பு அலுவலகத்தையும் கொண்டுள்ளது.

தொழில்கள் பற்றிய சாத்திய அறிக்கைகள் தயாரிக்கவும், தகுந்த இடத்தைத் தேர்ந்தெடுக்கவும், தமிழ் நாட்டின் மின்வாரியம், குடிநீர் வாரியம் ஆகியவைகளிலிருந்து முறையே மின்சாரம் தண்ணீர் பெறவும் 'டிட்கோ' துணை செய்கிறது.

**நிதி அமைப்பு**

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் 21-5-1965-ல் 10 கோடி ரூபாய் அனுமதி பெற்ற மூலதனத்துடன் செயல்படத் துவங்கியது. இக்கழகத்தின் அனுமதி பெற்ற மூலதனம் தற்பொழுது 15 கோடி ரூபாயாக வளர்ந்துள்ளது. 31-12-1974-ல் 'டிட்கோ'வின் செலுத்தப்பட்ட மூலதனம் 11.92 கோடி ரூபாயாக உள்ளது. பங்கு மூலதன வகையில் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ள அளிப்புத் தொகைகள் தவிர, கடனீட்டு ஆவணங்களை வெளியிடுவதன் வாயிலாகவும், பொது மக்களிடமிருந்து நிலை வைப்புத் தொகைகளைப் பெற்றுக் கொள்வதன் மூலமாகவும் 'டிட்கோ' தனது நிதி வாயில்களைப் பெருக்கிக் கொண்டுள்ளது. மற்றும் 'டிட்கோ'வின் மூலதனச் செலவுக்காகத் தமிழ்நாடு அரசும் கடன்கள் வழங்கியுள்ளது.

'டிட்கோ'வின் மூலதன அமைப்பு, 31-12-74 புள்ளி விவரப்படி கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளது.

| | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|
| செலுத்தப்பட்ட மூலதனத் தொகை | 1,191.74 |
| கடனீட்டு ஆவணங்கள் | 405.00 |
| தமிழ்நாடு அரசிடமிருந்து பெற்ற கடன் (31-3-74 வரை சேர்ந்த வட்டியும், வழிவகை முன் பணம் ரூபாய் 200 இலட்சமும் உட்பட) | 787.15 |
| நிலை வைப்புத் தொகைகள் | 85.69 |
| மொத்தம் | 2,469.58 |

**முதலீடு**

இக்கழகம் இதுவரை தமிழ்நாடு சிமெண்ட் ஆலையில் ரூபாய் 597.27 இலட்சமும், தமிழ்நாடு ஸ்டீல்ஸ் ஆலையில் ரூபாய் 747.16 இலட்சமும்



இரும்பு உருக்கப்பெற்று வார்ப்படமாக்கப்படுதல்.

முதலீடு செய்துள்ளது. இது தவிர, பெரிய கூட்டுத் துறை நிறுவனங்களில் ஒன்றாகிய திருவாளர்கள் சதர்ன் பெட்ரோ கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தில் பங்கு அளிப்புத் தொகை வகையில் ரூபாய் 500 இலட்சம் முதலீடு செய்துள்ளது. 31.12.74-வரை பிற நிறுவனங்களில் செய்துள்ள முதலீடு ரூபாய் 143.33 இலட்சம் ஆகிறது. இது தவிர, இக்கழகம் ரூபாய் 64.77 இலட்சம் அளவிற்குத் தொழில் நிறுவனங்களுக்குக் கடன் வழங்கும் வகையில் நிதி உதவி அளித்துள்ளது. மேலும் பற்பல நிறுவனங்களுக்கு ரூபாய் 4024.00 இலட்சத்திற்கு நிதி உத்தரவாதமும் இக்கழகம் அளித்துள்ளது. கீழ்க்கண்ட விவர அட்டவணையிலிருந்து இக்கழகத்தின் முதலீட்டு விவரங்களைக் காணலாம்.

## நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

**அ. பொதுத்துறையைச் சேர்ந்தவை.**

1. தமிழ்நாடு சிமெண்ட்ஸ், ஆலங்குளம்.

தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதியான இராமநாதபுரம் மாவட்டத்தில் இராஜபாளையத்திலிருந்து சுமார் 13 மைல் தொலைவிலுள்ள ஆலங்குளத்தில் இத்தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை மே, 1970-ல் உற்பத்தியைத் துவக்கியது. ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன் சிமிட்டி உற்பத்தி செய்யும் திறனுடையது. இதில் நாளொன்றுக்கு 1,200 டன் சிமிட்டி உற்பத்தி செய்யும் திறனுள்ள இரண்டு சுழற்சூளைகள் உள்ளன.

மரபு வழியான ஈரத் தயாரிப்பு முறையைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யும் இத்தொழிற்சாலை இந்நாட்டிலேயே மிகப் புதிய வகையைச் சேர்ந்த சிமிட்டித் தொழிற்சாலைகளில் ஒன்றாகும்! இவ்வாலையின் மூலதனச் செலவு ஏறத்தாழ ரூபாய். 6.7 கோடியாகும். 'டிட்கோ'வின் சொந்த நிதி வசதியிலிருந்தும், அரசிடமிருந்து பெற்ற கடன்களிலிருந்தும் இதற்கு நிதி உதவி அளிக்கப்பட்டது. இத்தொழிற்சாலையில் 1,430 பேர் பணியாற்றுகின்றனர்.

இத்தொழிற்சாலை 1971-72ல் ஓரளவிற்கு நல்ல உற்பத்தித் திறனைப் பெற்றது. மதிப்பிட்ட அதன் உற்பத்தித் திறனில் 76.5 சதவீதத் திறனளவை எட்டியதோடு ஆதாயத்தையும் ஈட்டியது. அதற்கு அடுத்த ஆண்டுகளில் மின்வெட்டும் நிலக்கரிப் பற்றுக்குறையும் மிகக் கடுமையாக இருந்ததால், உற்பத்தி குறைந்தது. 1972-73-ல் திறனளவுப் பயன்பாடு 73.38 சதவீதமாகவும், 1973-74-ல் 70.03 சத வீதமாகவும் இருந்தது. மின்வெட்டும், நிலக்கரிப் பற்றுக்குறையும் இல்லாதிருந்தால் இத்தொழிற்சாலையின் உற்பத்தித்திறன் 80 சதத்திற்கும் அதிகமாக இருந்திருக்கும். கடந்த 5 ஆண்டுகளில் இத்தொழிற்சாலை 11,26,587 மெட்ரிக் டன் சிமிட்டியை உற்பத்தி செய்து, வழங்கியுள்ளது.

**விரிவுத் திட்டம்**

ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலையிலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவிற்குள் உயர்ந்த ரகச் சுண்ணும்புக் கற்கள் போதிய அளவில் கிடைப்பதால், இத்தொழிற்சாலையை விரிவுபடுத்தும் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள ஈரத் தயாரிப்பு முறைச் சூளைகள் இரண்டையும் உலர்ந்த தயாரிப்பு முறை சூளைகளாக மாற்றுவது; நாளொன்றுக்கு 750 மற்று உற்பத்தித் திறனுடன் கொண்ட உலர்ந்த தாயவுப்பு முறை சூளை ஒன்றைக் கூடுதலாக நிறுவுவது என்கிற இந்த இரு திட்டங்களும் மேற்சொன்ன விரிவுத் திட்டத்தில் அடங்கும். இவற்றின் மதிப்பிடப்பட்ட செலவு ரூபாய் 19.50 கோடியாகும். இதனால், நிறுவிய திறனளவு ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன்னிலிருந்து 7 இலட்சம் டன்னாக உயரும். இவ்விரிவாக்கத் திட்டம் 1977 இறுதிக்குள் முடிவடையும் என்று திட்டமிடப்பட்டுள்ளது. இந்த உத்தேச விரிவுத் திட்டத்தின் விளைவாக, கூடுதலாக சுமார் 400 பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

**2. தமிழ்நாடு ஸ்டீல்ஸ், அரக்கோணம்.**

இரும்புத் துகள்களை மூலப் பொருளாகக் கொண்டது இத்திட்டம். ரஷ்ய நாட்டுத் தொழில் நுட்ப உதவியுடன் இது நிறுவப்பட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சம் டன் உருக்குப் பாளங்களை உற்பத்தி செய்திட இத்தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. இந்த உற்பத்திக்குத் தொடர் வார்ப்படத் தொழில் நுட்ப உத்தியை இது கையாளும்.

இந்தியாவில் பொதுத்துறையில் முதன் முதலாக நிறுவப்பட்டுள்ள "சிறிய அளவு" உருக்காலை இதுவே ஆகும்! இத்தொழிற்சாலையில் 100 மில்லி மீட்டர், 75 சதுர மில்லி மீட்டர் அளவுள்ள உருக்குப் பாளங்களைத் தயாரிப்பதற்காக 25 டன் மின் ஒளி உலைகளும், செங்குத்தான நிலையிலுள்ள 4 தொடர் வார்ப்பட இயந்திரங்களும் நிறுவப்பட்டுள்ளன. எனவே, இதன் உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 50,000 டன் அளவுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உருக்குக் கிடைக்கும் நிலையை இத்தொழிற்சாலை பெரிதும் மேம்படுத்தியுள்ளது. அதே நேரத்தில், நமது மாநிலத்திற்குள்ளும், தென்னகத்திலும் கிடைத்து வந்த ஏராளமான உருக்குத் துகள்களை ஆக்க வழிகளில் பயன்படுத்துவதற்கு இது உதவியுள்ளது. இதற்கு முன் இந்த இரும்புத் துகள்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டோ, நாட்டின் பிற்பகுதிகளுக்கு அனுப்பப்பட்டோ உருக்கப்பட்டு வந்தன.

தொழில்துறையில் பின் தங்கிய பகுதியான அரக்கோணத்தில் நிறுவப்பட்டுள்ள இத்தொழிற்சாலை571 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது.

இத்தொழிற்சாலை 1972 ஏப்ரல் திங்களில் உற்பத்தியை தொடங்கியது. கடந்த மூன்று ஆண்டுகளில் ஆன உற்பத்தி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| ஆண்டு | உருக்குப் பாளங்கள் உற்பத்தி (டன்களில்) |
|---|---|
| 1972—73 | 8,237 |
| 1973—74 | 17,798 |
| 1974—75 (31-12-74 வரை 9 மாதங்களுக்கு மட்டும்) | 15,442 |

**விரிவுத் திட்டம்**

உயர் கரியக் கம்பிகள், நடுத்தர கரிய உருளைக் கம்பிகள் குறைந்த கலவை உருக்குகள், வில் உருக்குப் பட்டைகள் ஆகியவற்றை உற்பத்திசெய்வதற்காக ரூபாய் 7 கோடி செலவில் பாளங்கள், கம்பிகள் இழுக்கும் ஆலை ஒன்றை நிறுவுவதன் மூலம், அரக்கோணம் தமிழ் நாடு ஸ்டீல்ஸ் தொழிற்சாலையை விரிவு படுத்துவதற்குத் தொழில் வளர்ச்சிக் கழகம் திட்டங்கள் வகுத்துள்ளது. உருக்குப்பட்டறை, அடிப்படையில் பல்வகைத் தொழில்களை மேம்படுத்துவதற்கும் 'டிட்கோ' உத்தேசித்துள்ளது. இந்தத் தொழிற்சாலையைச் சுற்றி உருக்கை அடிப்படையாகக் கொண்ட பிறதொழில்களையும், துணைத் தொழிற்சாலைகளையும் நிறுவுவதற்காக அகன்ற பரப்புள்ள நிலங்கள் கையகப்படுத்தப் பட்டுள்ளன.

**முகப்பில்...**

தமிழ்நாடு அரசின் பொதுத்துறையைச் சார்ந்த ஆலங்குளம் சிமிட்டித் தொழிற் சாலையின் தோற்றம்

# சிறுவர்க்கான சிறப்பான ஆடைகள்



உங்கள் குழந்தைகளுக்கேற்ற புது ரக வண்ணமிகு எழில் ரெடிமேடு ஆடைகள் குறைந்த விலைகளில் உள்ளன உங்கள் இல்லத்திற்குத் தேவைப்படும் எண்ணெய், தேன், வாசனை மற்றும் சலவை சோப்புகளுக்கு உகந்த இடம்.

தமிழகம் முழுவதிலும் அமைந்துள்ள 180 காதிகிராப்ட் களில் கிடைக்கும்.


ஆண்டொன்றுக்கு உற்பத்தியாகும் உருக்குப் பாளங்களின் அளவை 50,000 டன்னிலிருந்து, 1 இலட்சம் டன்னுக உயர்த்திட ரூபாய் 2 கோடி செலவில் கூடுதலாக மின் ஒளி உலை ஒன்றை நிறுவிடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனுல் தற்போதுள்ள தொடர் வார்ப்பட இயந்திரங்களை முழு அளவிற்குப் பயன்படுத்த முடியும்.

## 2. கூட்டுத்துறையைச் சார்ந்தவை.

கூட்டுத்துறை என்பது அண்மைக்காலத்தில் தோன்றிய கொள்கையின் அடிப்படையானதாகும். தமிழ்நாட்டில் உள்ள இயற்கை வளத்தையும், மனித வளத்தையும் சிறந்த முறையில் பயன்படுத்தி, தமிழ்நாட்டின் தொழில் வளம் பெருக்க வேண்டும் என்ற இலட்சியத்தின் அடிப்படையில், தொழில் துறையில் முன்னேறியுள்ள தனிப்பட்ட தொழில் முனைவோர்களின் திறமையையும், வழிகாட்டுதலையும், அரசின் சமதர்மக் கொள்கைகளையும் சுமுகமான முறையில் ஒருங்கிணைத்துச் செயல்படுத்துவதே கூட்டுத்துறையின் கொள்கையாகும்.

திறமையான நிருவாகத்துடன் தொழிற்சாலைகளை அமைக்க புதிய தொழில் முனைவோர்கள் வரவேற்கப்படுகின்றனர். கூட்டுத் தொழில்களுக்கு அரசு பின்னிருந்து உதவி செய்வதால் நிதி நிறுவனங்களிலிருந்து உதவி பெறுவது எளிதாக உள்ளது. கூட்டுத்துறையில் அரசு பங்குகொள்வது, அரசின் சமதர்மக் கொள்கைகளுக்கு ஒத்த நியாயமான விலைவாசி நிலவரம், வேலைவாய்ப்புக் கொள்கைகள் ஆகியவற்றை ஊக்குவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே நிதிவசதிகளும், தொழில் நுட்ப அறிவும் படைத்த தொழில் முனைவோர்களைச் சேர்த்துக் கொண்டு கூட்டுத் துறையில் தொழில் திட்டங்களை ஏற்படுத்த ஊக்கமளிப்பதில் 'டிட்கோ' முனைப்பான பணியாற்றி வருகிறது.

இந்திய அரசு வகுத்துக் கொடுத்துள்ள "வழிகாட்டுதலின் அடிப்படையில், 'டிட்கோ' கூட்டுத் தொழில் திட்டங்களுக்கு 26 சத வட்டி இல்லாத மூலதனம் அளிக்கிறது. கூட்டுத்துறைத் திட்டங்களில். தனிப்பட்ட முனைவோர்களிடமிருந்து 25 சத அளவுக்கே மூலதனம் பெறப்படும். எஞ்சிய மூலதனத்தைப் பொது மக்களிடமிருந்தே பெற வேண்டும். இதுதான் கூட்டுத்துறை திட்டங்களை அமைப்பதில் பின்பற்றப்படும் கொள்கையாகும்.

### கூட்டுத்துறையில் ஏற்படுத்துவதற்கான திட்டங்கள்.

கூட்டுத்துறையில் செயல்படுத்துவதற்கான திட்டங்களைத் தேர்ந்தெடுப்பதில் பின்கண்ட கொள்கைகளை 'டிட்கோ' பின்பற்றி வருகிறது.

1. தமிழ்நாட்டில் கிடைக்கும் மூலப்பொருள்களையும், கனிப் பொருள்களையும் பயன்படுத்துவதாக இருக்க வேண்டும்.

2. முக்கியமான தொழிலை ஊக்குவிப்பதாக இருக்க வேண்டும். பொதுவாக முக்கியத் தொழில்கள் பொதுத் துறையிலேயே துவக்கப்படுமெனினும், நிதி, நிருவாக அமைப்பில் உள்ள தடைகளை வென்று மாநிலத்தின் தொழில் உற்பத்தியில் உள்ள இடைவெளியைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்பதற்காக கூட்டுத் துறையிலும் முக்கியத்தொழில்கள் ஊக்குவிக்கப்படும்.

3. பின்தங்கிய பகுதிகளை மேம்படுத்துவதாக இருக்க வேண்டும்.

4. தமிழ்நாட்டில், தேவை மிகுந்துள்ள முக்கியப் பொருள்களை உற்பத்தி செய்வதாக இருக்க வேண்டும்.

5. அந்நியச் செலாவணியை ஈட்டித் தரக்கூடிய-ஏற்றுமதி செய்வதற்கு ஏற்ற-பொருள்களை உற்பத்தி செய்வதாக இருக்க வேண்டும்.




கூட்டுத்துறைத் தொழில் திட்டங்களில் பல ஒன்றுக்கொன்று உதவுவதாக உள்ளது. சோடா ஆஷ் மற்றும் அமோனியம் குளோரைட், பொட்டாசியம் குளோரைட் மற்றும் காஸ்டிக் சோடா போன்றவைகளைத் தயாரிக்கும் கூட்டுத்துறை தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருள்கள், கூட்டுத்துறையைச் சார்ந்த 'ஸ்பிக்' மற்றும் 'மர்தி .கிரிஸ்டல் உப்பு கம்பெனி' ஆகியவைகளிலிருந்தே கிடைக்கின்றன.

கூட்டுத்துறையில் 'சிகரெட்' தயாரிக்கும் திட்டம், பின்தங்கிய மாவட்டமான தருமபுரி மாவட்டத்தில் புகையிலை பயிரிடுவதற்கான பெரும் வாய்ப்பு உள்ளதால், அம்மாவட்டத்தின் வேளாண்மைப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் தூண்டுகோலாக அமையும்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தினுல் ஊக்குவிக்கப்பட்ட, பதப்படுத்திப் பயன்படுத்துவதற்கு ஏற்ற நிலையில் உள்ள தோல் தயாரிக்கும் திட்டமும், 'எலக்ட்ரானிக்ஸ்' திட்டமும் 100 சதவித அளவுக்கு ஏற்றுமதியை ஊக்குவித்து, அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற திட்டங்களுக்கு நிலையான எடுத்துக் காட்டுகளாக விளங்குகின்றன. மேலும் இக்கழகம் தமிழ்நாட்டிலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மற்றும், தீ பெட்டி, மருந்து பொருள்கள், துணிகள், காகிதம், கண்ணுடி ஆகியவைகளை

உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளின் தேவையை ஈடு செய்யக்கூடிய முக்கிய மூலப் பொருள்களை உற்பத்தி செய்து வழங்கக்கூடிய இரசாயனத் தொழிற்சாலைகளையே தேர்ந்தெடுத்துள்ளது.

### இணைக்கப்பட்ட கூட்டுத்துறைக் கம்பெனிகள்

கூட்டுத்துறையின் மூலம் இரசாயன உரங்கள், இரசாயனப் பொருள்கள், மின் அணுச் சாதனங்கள், டயர்கள், டியூப்கள், நுண் அளவைக் கருவிகள் போன்ற பலவகைப் பொருள்களை உற்பத்தி செய்வதற்காக 20 திட்டங்களுக்கு ஊக்கமளித்து 'டிட்கோ' வெற்றி பெற்றுள்ளது. 'டிட்கோ'வின் கூட்டுத்துறையில் 31.3.'75 நிலவரப்படி கீழ்க் கண்டவாறு 20 கம்பெனிகள் இணைக்கப்பட்டுள்ளன.

| ஆண்டு | இணைக்கப்பட்ட கம்பெனிகள் |
|---|---|
| 1969 | 1 |
| 1970 | ... |
| 1971 | 2 |
| 1972 | 5 |
| 1973 | 7 |
| 1974-75 | 5 |
| மொத்தம் | 20 |

மேற்கூறிய 20 திட்டங்களுக்கும் மொத்தம் 185 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. அதில் வட்டியில்லாத மூலதனம் 48.50 கோடி ரூபாயும், கடன் மூலதனம் 136.50 கோடி ரூபாயும் அடங்கியுள்ளன. வட்டியில்லாத மூலதனமாக 'டிட்கோ' 13 கோடி ரூபாய் வழங்கும்.

### நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்கள்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தால், இதுவரை ஏற்படுத்தப்பட்டுள்ள 20 கூட்டுத் துறைக் கம்பெனிகளில் பின் கண்ட 9 கம்பெனிகளும் 1975 ஆம் ஆண்டில் உற்பத்தியைத் துவக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1. சதர்ன் பெட்ரோ கெமிக்கல்ஸ் இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட். (யூரியா உற்பத்தி ஜூன் மாதத்திலேயே துவக்கப்பட்டுவிட்டது)

2. தமிழ்நாடு குரோமேட்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட்.

3. சதர்ன் போராக்ஸ் லிமிடெட்.

4. பாண்டியன் கெமிக்கல்ஸ் லிமிடெட்.

5. டைனுவிஷன் லிமிடெட்.

6. மார்த்தி கிரிஸ்டல் உப்பு கம்பெனி லிமிடெட்.

7. ஆசியா புகையிலை கம்பெனி லிமிடெட்.

8. தமிழ்நாடு ஆல்கலின் பேட்டரிஸ் லிமிடெட்.

9. அரக்கோணம் வார்ப்படத் தொழிற்சாலை லிமிடெட்.

'டிட்கோ'வினுல் ஏற்றுக் கொள்ளப்பட்ட தமிழ்நாடு தாதா பார்மாசூட்டிகல்ஸ் லிமிடெட் முழு அளவில் உற்பத்தி செய்து வருகிறது. இதனை விரிவுபடுத்தும் திட்டம் விரைவில் செயலுக்குக்கொண்டு வரப்படும்.

மீதியுள்ள 10 கம்பெனிகளும் 1976 அல்லது 1977-ஆம் ஆண்டில் உற்பத்தியைத் துவக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் இக்கழகம் கூட்டுத் துறையில் அட்டவணையில் கண்ட 11 திட்டங்களைச் செயற்படுத்த முனைப்பாக நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இது தவிர, பின்வரும் திட்டங்களை நிறுவிட இந்திய அரசுடன் கடிதப் போக்குவரத்து மேற்கொண்டு வருகிறது.

1. பெட்ரோ கெமிக்கல்ஸ்.

2. விளிம்பற்ற உருக்குக் குழாய்கள்.

3. மரக்கூழ் நெட்டிழை நூல்.

4. சிந்தடிக் ரூடைல் (டைடேனியம் டை ஆக்ஸைடு)

5. மூடி திறக்கத்தக்க அலுமினியக் குழாய்கள்.

6. கல்நார் சிமிட்டித் தகடுகள்.

நான்காம் திட்டக்காலத்தில் 'டிட்கோ' ஆற்றியுள்ள செயல்களை ஆய்வு செய்தால், பொதுத் துறையிலும், கூட்டுத்துறையிலும் பற்பல தொழில்களை வளர்க்கும் வளர்ச்சி வீதம் நிலையாகப் பெருகி வந்துள்ளது என்பது புலப்படும். 43 திட்டங்களைச் (கைவசம் உள்ள 37 திட்டங்களும், அனுமதிக் கடிதம் பெற வேண்டியுள்ள பிற 6 திட்டங்களும் சேர்ந்து) செயற்படுத்தி வளர்க்க 'டிட்கோ' முனைப்பாகச் செயல்பட்டு வந்துள்ளது. அவற்றில் பெரும்பாலான திட்டங்கள் ஐந்தாவது திட்டகால இறுதிக்குள் உற்பத்தியைத்தொடங்கிவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றன. கணிசமான இச்சாதனையில் ஐந்தாம் திட்டகாலத்திலேயே 'டிட்கோ'வின் ஆய்வுக்கு வரக்கூடிய பிற புதிய திட்டங்கள் அடங்கமாட்டா. கையிலுள்ள 37 திட்டங்களில் 23 திட்டங்கள் (பொதுத் துறையில் 3 திட்டங்களும், கூட்டுத் துறையில் 20 திட்டங்களும் சேர்ந்து) ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டு விட்டன. எஞ்சிய 14 திட்டங்கள் (பொதுத் துறையில் 3 திட்டங்கள், கூட்டுத்துறையில் 11 திட்டங்கள்) பற்பல நிலைகளில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இந்த 37 திட்டங்களுக்கான மொத்த மூலதன முதலீடு ரூபாய் 340 கோடி அளவில் (பொதுத்துறையில் ரூபாய் 90 கோடியாகவும், கூட்டுத்துறையில் ரூபாய் 250 கோடியாகவும் சேர்ந்து) அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த 37 திட்டங்களில் வட்டி இல்லா மூலதனத்திற்கு 'டிட்கோ' ரூபாய் 46.5 கோடி அளவிற்குத் (பொதுத்துறையில் ரூ. 28 கோடியும், கூட்டுத் துறையில் ரூ. 18.5 கோடியுமாக) தொகை உதவி அளிக்கும்.

### வேலைவாய்ப்பு

கூட்டுத்துறையில் நிறைவேற்றப்படும் திட்டங்கள் வாயிலாக 11,500 பேருக்கு மேல் நேர்முக வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

இவ்வாருக, 'டிட்கோ' பெருந்தொழில்கள், நடுத்தரத் தொழில்களைத் தோற்றுவிப்பதின் வாயிலாக இம் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்து, பாமர மக்களின் சமூகப் பொருளாதார நன்மைகளுக்காக உருவாக்கப்படும் தமிழ்நாடு அரசின் கொள்கைகளைச் செயல்படுத்தும் உயிர்நாடியாக விளங்குகிறது.



# வெற்றிகள் குவிக்கும் வீரராகவபுரம் காகிதத்தொழில் நிலையம்!

நவீன இயந்திர யுகத்தில்—இராட்சத இயந்திரங்களின் உதவியால் காகித ஆலைகள் விரைவாகவும், தரமாகவும் காகிதங்களை உற்பத்தி செய்து தருகின்றன. அவற்றுடன் போட்டி போடுவதற்குக் குடிசைத் தொழில் நிறுவனங்களால் முடியாது என்பது உண்மைதான். ஆலைகளுடன் போட்டி போட்டுக் குறைந்த நேரத்தில் மிகுந்த அளவில் தயாரிக்க முடியாது தான். ஆனல், ஆலைகளின் தயாரிப்புப் போன்றே தரம் நிறைந்த காகிதங்களை, கதர் கிராமக் கைத்தொழில் துறையின் நிருவாகத்தில் இயங்கி வரும் கையினுல் காகிதம் செய்யும் நிறுவனங்கள் தயாரித்துத் தரமுடியும் என்பது மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

செங்கை மாவட்டத்தில் வீரராகவபுரத்தில் உள்ள கையினுல் காகிதம் செய்யும் நிலையம் (Filter Paper Unit) மிகப் பெரும் பணிகளைச் சாதித்து வருகிறது.

காகிதத்துறையைச் சார்ந்த எட்டு நிறுவனங்களில் இதுவும் ஒன்று. 1971-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10ஆம் நாள் துவக்கப்பட்ட இந்த நிறுவனத்தின் இயந்திர மூலதனம் மட்டும் 57,671.81 கட்டடச் செலவு ரூபாய் 82,657.12 ஏறக்குறைய 1.17 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் இந்தத் தொழிற்கூடம் உள்ளது.



மூலப்பொருள் கூழாக்கப்படுகிறது



கூழ் தாளாகிறது

இங்கே தயாரிக்கப்படும் காகித வகைகள்:

அட்டைகள் (Card Boards)

பிரதிஎடுக்கும் தாள் (Duplicating Paper)

மென்மைத்தாள் (Manifolding Paper)

பளபளப்புத்தாள் (Marble Paper)

எழுதும் தாள் (Writing Paper)

அட்டைத்தாள் (Wrapper Paper)

இவை தவிர, கட்டடங்களின் மேல்தளத்துக்குப் பயன்படும் அட்டைகளும் (Ceiling Board) அலுவலகத்துக்குத் தேவைப்படும் காகிதப் பொருள்களும், கோப்பு வகைகளும், உறைகளும் தயாரிக்கப்படுகின்றன. பதிவுத்துறையில் பயன்படும் பத்திரத்தாள் (Bond Paper) தயாரிப்பு இங்கு குறிப்பிடத்தக்க அம்சம்.

கடந்த ஆண்டு மட்டும் பத்திரப் பதிவுத்துறைக்கு 400 ரீம் பத்திரத்தாள்களை இந்த நிலையம் விநியோகித்திருக்கிறது.

இந்த ஆண்டு ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தேவையான சர்வீஸ் புத்தகங்களைத் தயாரித்து வருகிறது.

இங்குத் தயாராகும் அட்டைக் காகிதப் பெட்டி காதி விற்பனை நிலையங்களில் மிகவும் பயன்படுகின்றன. வெளிச்சந்தையிலும் இதற்கு அமோகமான வரவேற்பு இருந்து வருகிறது.

ஆண்டுதோறும் 80 டன் எடையுள்ள 1 இலட்ச ரூபாய் மதிப்புள்ள அட்டைத் தாள்கள் வெளிச்சந்தைக்கு அனுப்பப்படுகின்றன.

பொதுவாக வெளிச்சந்தையில் தனியார் ஆலைகளில் தயாராகும் பொருள்களுக்குத்தான் மதிப்பு அதிகம். அரசுத்துறை நிறுவனங்களின் தயாரிப்புகளுக்கு அவ்வளவு ஆதரவு கிடையாது. ஏன் தெரியுமா? தனியார் ஆலைகள், கடன் முறையில் வியாபாரிகளுக்குக் கொடுத்து உதவுகின்றன. அரசுத்துறை நிறுவனங்களால் அவ்வாறு செய்ய முடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தும்கூட, ஆண்டொன்றுக்கு ஒரு லட்ச ரூபாய் மதிப்புள்ள அட்டைத் தாள்களை இந்த நிறுவனம் விற்பனை செய்து வருவது பாராட்டுக்குரிய செய்தியாகும்.



உலர்ந்த அட்டை செம்மையாக்கப்படுகிறது

இங்குத் தயாராகும் எழுது தாள்களுக்கு வெளிமாநிலத்திலும்நல்லவரவேற்புக் கிடைத்து வருகிறது. பம்பாய் கல்கத்தா ஆகிய நகரங்களில் உள்ள மைய அரசு அலுவலகங்கள் ஆண்டொன்றுக்கு 30 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள உயர்ந்த ரகத் தாள்களை (High Grade Paper) வாங்கிக் கொள்கின்றன.

புல்வகை, கரும்புச் சக்கை, கிழிந்த பழைய துணிகள், தையற்கடைத் துணித் துணுக்குகள், வைக்கோல், கோணி, அச்சகக் காகிதத் துணுக்குகள் ஆகியவைதான் அழகான-தரமான காகிதம் செய்வதற்குரிய மூலப் பொருள்கள் என்பதைப் பார்க்கும்போது நாம் வியப்படைகிறோம்.

அதுமட்டுமல்ல, அவை கூழாக்கப்பட்ட பின்னர், வெறும் தண்ணீர் போல் தெரிவதும் அதனை வடிகட்டும் சட்டத்தைக் கொண்டு அள்ளிய சில விநாடிகளில் அது, நீளமான தாளாக மாறுவதும் வியப்பாக உள்ளது. சோறு வடித்த கஞ்சிபோல்தான் தெரிகிறது; அதனை இரு பெண்கள் சாதாரணச் சட்டங்களை வைத்து அள்ளிக் காகிதமாக்கி விடுகின்றனர்.



அட்டைத்தாள் தயாரிக்கப்படுகிறது.

இந்த நிலையத்தில் மூலப் பொருள்களைக் கூழாக்குவதற்கு இயந்திரங்களும் இருக்கின்றன. மற்ற நிலையங்களை விட இங்கே இயந்திர முறைத் தயாரிப்புகளும் ஓரளவு அதிகமாக உள்ளன; என்றாலும், இவற்றில் கையினால் தயாரிக்கப் பெறும் நிலைகளே அதிகமாக உள்ளன.

அட்டைக் காகிதம் இந்த நிலையத்தின் சிறப்புத் தயாரிப்பு.

கடந்த அக்டோபர்த் திங்களிலிருந்து, மேற்கூரைக்குப் பயன்படும் அட்டையையும் (Ceiling Board) இந்த நிலையம் தயாரித்து வருகிறது. திரைப்பட அரங்குகள், வணிக நிலையங்கள் ஆகியவற்றில் அந்த அட்டைகள் பயன்படுத்தப் பெறுகின்றன. அதற்கு நல்ல வரவேற்பு ஏற்பட்டு வருகிறது.

மொத்தத்தில் காகிதத் துறையின் காகிதத் தயாரிப்பு நிலையங்கள் எட்டினுள் இலாபத்துடன் பணியாற்றும் நான்கு நிலையங்களில் இந்த வீரராகவபுரம் நிலையமும் ஒன்று. இது எதிர்காலத்தில் இன்னும் வளம் பெறுவது உறுதி.

# வாழ்விலோர் திருநாள்

~ சோம. மகாதேவன் ~

அகமும் முகமும் மலர, கையில் வெற்றிலைச் செல்லத்தோடு திண்ணையில் வந்து உட்கார்ந்தார் சுந்தரேசன்.

வாயில் பாக்கை அள்ளிப் போட்டுக் கொண்டபோது அழிந்தும், அழியாமலும் ஓட்டுச்சாய்ப்பிலிருந்து தொங்கிய விளம்பரப் பலகை அவரது பார்வையில் பட்டது.

இந்த வட்டாரத்தையே பொறுத்தவரையில் சுந்தரேசனுக்கு விளம்பரம் தேவை இல்லைதான். இந்தத் தலைமுறையினர் பெரும்பாலோரின் ஜாதகம் அவர் பணித்ததே! நல்லது, கெட்டதற்கு நாள் பார்க்க வேண்டுமென்றால், இங்கே தேடிவந்தேயாக வேண்டும். வந்து குந்திப் பேசுபவர்கள் கும்பிடோடு எழுந்து போய்விட முடியுமா?

நாளது வரையிலும் சுந்தரேசன் அமைத்துக் கொண்ட வாழ்வு சோடை போய்விடவில்லை, ஒன்றே ஒன்றைத் தவிர.

மக்கட் செல்வமென்பதில் ஆணும் பெண்ணுமாக இரண்டே இரண்டுதான்.

எல்லாப் பொருத்தங்களையும் துருவிப் பார்த்தே மகள் அம்பிகாவுக்குத் திருமணத்தை முடித்து வைத்தார். கைப்பிடித்தவன் வீட்டில் வாழப் போன மகள், அவளிருந்த சுவடு மாறுவதற்குள்ளாகவே பிறந்த வீட்டிற்கு நிரந்தரமாகவே வந்து சேர்ந்து விட்டாள்.

இப்பொழுது அவளைப் பொறுத்த வரையிலும் சுந்தரேசனுக்குக் கவலை இல்லைதான். கால வெள்ளத்தில் அந்த மனப்புண்ணும் தழும்பாகி விட்டது. இதையே ஒரு குறையாகக் கொண்டு பெருமூச்சு விட்டுக் கொண்டிருப்பதில் ஆகப் போவதென்ன?

மூத்தவன் சாரங்கன் மிகவும் புத்திசாலி. அரசினரின் உபகாரச் சம்பளம் பெற்றே பட்டப் படிப்பில் முதன்மையாகத் தேறிப் பட்டணத்தில் ஒரு டயர் கம்பெனியில் கை நிறையச் சம்பாதிக்கிறான். அடுத்து, நினைத்துள்ளவாறு அவனுக்குத் திருமணத்தை முடித்துவிட்டால், அதில் இன்று நிலவும் குறையும் நிறைவாகி விடாதா?

கல்யாணப் பேச்சையே இது வரையில் காது கொடுத்துக் கேளாதவன் சாரங்கன். கடந்த வாரம் பெண் பார்க்க வரச் சொல்லி எழுதிய கடிதத்திற்கு மதிப்புக் கொடுத்துப் புறப்பட்டு, இன்று காலையில்தான் இங்கு வந்திருக்கிறான். அவனைக் கண்டதுமே வீட்டில் பூரிப்பு பொங்கி வழிகிறது.

சுந்தரேசன்-கவிழ்ந்து வீட்டிற்குள் எட்டிப் பார்த்துக் கொண்டார். பார்வதி, மகனிடம் திருமணப் பேச்சையே பேசிக் கொண்டிருக்கிறாள். சலித்தெடுத்துப் பார்க்கும் பொழுது, மேலகரம் மிராசுதார் பெண் மீனாட்சியே முன் நிற்கிறாள். கொடுப்பன-கொள்வன என்பதைப் பற்றியெல்லாம் பேசிக் கொள்ளவே வேண்டியதில்லை.' ஏனெனில் இருக்கும் சொத்தெல்லாம் அந்தப் பெண்ணுக்குத்தானே! சாரங்கனை மருமகனாக அடையவும் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே!

காலையில், சாரங்கன் தெருவோடு நடந்து வருவதைக் கண்டபோது மெய்சிலிர்க்கவே செய்தது. அவன்-அப்படியே தாத்தாவின் சாயல், நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை, பெற்று வளர்த்த கண்ணே பட்டிருக்கும்; திருஷ்டி சுற்றிப் போடச் சொல்லவேண்டும்.

''என்னங்க'' என்ற குரல் கேட்டுச் சிந்தனையிலிருந்து விடுபட்டுத் திரும்பினார் சுந்தரேசன்.

மனமொத்த மனையாள் பார்வதி நிலைப்படியைப் பிடித்தவாறே நின்று கொண்டிருந்தாள்.

''என்ன சொல்றான் மகன்? மேலகரம் பெண்ணையே செய்துக்கிறானாமா? நாளைக்கே பேசி முடிச்சிடுவோம்'' என்று வாய்நிறைய வெற்றிலையைக் குதப்பிக்கொண்டு அவசரத்துடனே சொன்னார் சுந்தரேசன்.

பார்வதியின் குரல் இறங்கிப் போயிருக்கிறது.

''நீங்க கோட்டை கட்டுறீங்க. அவன் என்னென்னமோ சொல்றான்'' என்றாள் சுரத்தில்லாமல்.

''என்ன சொல்றான்?''

''சிவசிவா..அதை என் வாயாலே சொல்லணுமா? எந்திரிச்சு வீட்டுக்குள்ளே வாங்க' என்றதோடு பார்வதி திரும்பி விட்டாள்.

நினைத்துக் கொண்டிருந்ததில் விடுபட்டு, சுந்தரேசனும் பரபரப்புடன் வீட்டிற்குள் சென்றார்.

தகப்பனைக் கண்டதும்சாரங்கன் எழுந்து ஒதுங்கி நின்றான்.

"என்னடா உங்கம்மா சிவனே அழைக்கிறாளே..என்ன?'' என்று கேட்டுக் கொண்டே நாற்காலியில் உட்கார்ந்தார் சுந்தரேசன்.

சாரங்கன் சற்றுத் தள்ளி ஜன்னலோரமாகப் போய் நின்று திரும்பினான்.

''நடக்க வேண்டியதைச் சொன்னேன்'' என்றான் மெதுவாக.

''நடக்க வேண்டியதைத் தானடா நாங்களும் பேசிக்கிட்டிருக்கோம்.''

சாரங்கன் நெற்றியில் சரிந்திருந்த தலைமுடியை ஒதுக்கி விட்டுக் கொண்டு சொன்னான்:

''பதினெட்டு வயது நிரம்பாத தங்கை, பொட்டிழந்து, பூவிழந்து, பட்டுப்போன மரமாக வீட்டிலிருக்கும்போது, நான் மண வாழ்க்கையை ஏத்துக்கிட்டா அதிலே மகிழ்ச்சி இருக்க முடியுமாப்பா?'' என்று கேட்டான்.

சுந்தரேசன் பதட்டத்துடன் எழுந்தார்.

''இது என்னடா பிரமை உனக்கு? அது அவளது தலை எழுத்து! அதை மாற்றியமைக்க நம்மாலே முடியுமா? நம் வகையிலே, இவளைப் போல எத்தனையோ பேர் கைம்மை விரத



மெடுத்து, கடைசிவரையிலும் நெறியோட வாழலையா?'' என்று கேட்டார்.

''இப்படித்தான் வாழணும்னு கட்டாயப்படுத்தும் போது வேறென்ன செய்ய முடியும்? நல்லதும்கெட்டதும் நம்ம கையிலேதான் இருக்கு! தங்கச்சிக்கு மறுமணம் நடந்த பிறகுதான், நான் திருமணம் செய்யறது நல்லதுன்னு தோணுது'' என்று சாரங்கன் தீர்மானமாகவே சொன்னான்.

சுந்தரேசனுக்குத் தலையில் கொதிக்கும் நீரை விட்டது போலிருந்தது.

''நீ சொன்னது நடந்தா.... நம்ம வீட்டிலே யாராவது கை நனைப்பாங்களா?'' என்று கோபத்தோடு கேட்டார்.

''அப்புறம்...நமக்கும் இந்த ஊருக்குள்ளே குடியிருப்பில்லே'' என்று பார்வதியும் குறுக்கிட்டாள்.

சுந்தரேசன் கொந்தளிப்புடன் மகனுக்குப் பக்கத்தில் போய் நின்றார்.

'' கைம்பெண்ணானவள் கடைசி வரையிலும் தன் கணவனை நினைத்து, நோன்பிருந்து கரை சேரணும்ங்கிறதுதான், நம்ம முன்னோர்கள் வகுத்துக் கிட்ட விதி. இதிலே என் பொண்ணு விலகி நடக்க மாட்டாங்கிற உறுதி எனக்கிருக்கிறது.'' என்று ஆத்திரம் தொனிக்கச் சொன்னவர், பார்வதியின் பக்கம் திரும்பி, ''அம்பிகா எங்கே?'' என்று கேட்டார்.

பார்வதி மாடியின் பக்கமாக ஏறிட்டுப் பார்த்தபோது, அம்பிகா இறங்கி வந்துகொண்டிருந்தாள்.

வர்ணம் தீட்டப்படாத ஓவியம் போன்றிருந்த தங்கையை இமையாது பார்த்தான் சாரங்கன்.

''இப்படி வாம்மா'' என்றழைத்த சுந்தரேசன், அவள் பக்கத்தில் வந்து நின்றதும், ''சொல்லவே எனக்கு நாகூசுது. இவன் உனக்கு மறுமணம் செய்து வைக்கப் போறானாம்'' என்று குமுறினார்.

''அம்பிகா! தைரியத்தோட உன் மனசிலே இருக்கிறதைச் சொல்லம்மா?'' என்று அமைதியாகவே கேட்டான் சாரங்கன்.

படியருகே நின்றுவிட்ட அம்பிகா ஏறிட்டுப்பார்த்தாள். அவள் முகத்தில் எவ்விதச் சலனமும தென்படவில்லை. மீண்டும் தலைகுனிந்து கொண்டாள்.



''சொல்லம்மா... அப்பவாவது இந்தச் சீர்திருத்தக்காரன்-மனசு நிம்மதியடையட்டும்'' என்று உரக்கவே சொன்னார் சுந்தரேசன்.

''அதிலே எனக்கு விருப்பமில்லை'' என்றாள் அம்பிகா குனிந்த தலை நிமிராமலே.

''போதுமாடா..? இதுக்கு மேலே மனசை அலட்டிக்காதே! இனிமே இந்தப் பேச்சையே எடுக்காதே. நாளைக்கே உன் கல்யாணத்துக்கு ஆக வேண்டியதைப் பார்க்கலாம்'' என்றார் சுந்தரேசன் சற்று அமைதியடைந்தவராக.

''சொல்லவேண்டியது இன்னும் எவ்வளவோ பாக்கி இருக்கு. நானும் அம்பிகாவும் தனியாகப்பேசணும். அதுக்குப் பிறகு என் கல்யாணத்தைப் பத்தியும் பேசி முடிவுக்கு வரலாம். நீங்களும் அம்மாவும் கொஞ்சம் விலகி இருங்களேன்'' என்று சாரங்கனும் அமைதியாகவே கேட்டுக்கொண்டான்.

சுந்தரேசனுக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. பார்வதியும் முந்திக் கொண்டாள்.

'நான் பெற்ற மகள் அம்பிகா ஆயிரம் தடவை கேட்டாலும் இதைத்தான் சொல்லப்போறா. நீங்க வாங்க'' என்று கோபத்தோடு சொல்லிவிட்டு வாசல் பக்கம் நடந்தாள்.

சுந்தரேசனும் கடுகடுப்புடன் வாய் திறக்காமலே மனைவியைப் பின் தொடர்ந்தார்.

சாரங்கன் தங்கையை ஏறிட்டுப் பார்த்தான்.

''அம்பிகா..வாழ்க்கை என்பது நாளையோ, மறுநாளோ முடியப் போறதில்லையம்மா. இந்த இரண்டாண்டுகளுக்குள்ளேயே நீ உருக்குலைஞ்சு போயிட்டியே'' என்றான்.

''இங்கே எனக்கு ஒரு குறைவுமில்லையே'' என்றாள் அவள் ஏறிட்டுப் பார்க்காமலே.

'எனக்குத் தெரியும் அம்பிகா. வீடு நிறையவே கொட்டிக் கிடந்தாலும் இங்கே உனக்கு வயிறு நிறைய ருசியான உணவு கிடைக்காது. உன்னைப்போன்ற அபாக்கியவதிகளின் உடலைக் குறைத்தால், உணர்வுகளும் மழுங்கிப் போகும் என்பதில் பெத்தவங்களுக்கே ஒரு நம்பிக்கை. இதுக்கொரு புனிதத்தைக் கற்பிச்சு, நரை தோன்றும் வரையிலும் வெளியுலகச் சிந்தனையே இல்லாத நடைப் பிணமாக்கி வீட்டிற்குள்ளேயே சிறை வைத்து விடுவார்கள். நடக்கப் போறது இதுவேதான்.'' என்றான் சாரங்கன்.

அம்பிகா தலை நிமிர்ந்தாள். இரு முத்துப் போன்ற கண்ணீர்த் துளிகள் வெளிறிய கன்னங்களில் உருண்டன.

''கருகிய மலருக்கு மறுபடியும் மணம் உண்டாக முடியுமா அண்ணா?'' என்று கேட்டாள்.

''முதல் நாள் பூத்து, மறுநாள் வாடி உதிர்ந்து விடும் மலரும்-மங்கையும் ஒன்றாக முடியுமா? நீ வாழ வேண்டியவள். வாழத்தான் வேண்டும். உன் வாழ்வைச் சீரழிக்க யாருக்குமே உரிமை இல்லையம்மா. உன் மனத்திலிருப்பதைச் சொல்'' என்று மேலும் கேட்டான் சாரங்கன்.

''என் நிலையிலே எதுவுமே சொல்ல முடியலையே அண்ணா?'' என்றாள் அவள் தணிந்த குரலில்.

''ஒன்றைப் பார்த்ததும்.... உன் உள்ளத்தில் உள்ளதையெல்லாம் சொல்லிவிடுவாய்!'' என்ற சாரங்கன், பக்கத்து அறைக்குள்ளே சென்று தனது கைப்பையை எடுத்து வந்து, அவளுக்கு முன்பாக வைத்துத் திறந்து, அதனுள்ளிருந்து ஒரு பத்திரிகையை எடுத்து அவள் கையில் கொடுத்து; ''இந்த அட்டைப் படத்திலிருக்கும் பெண் யாரென்று பாரம்மா நீ'' என்று சொல்லியவாறு அவள் கையில் கொடுத்தான்.

அந்தப் படத்தைப் பார்த்த போது அவள் மெய்சிலிர்த்தது.

பத்திரிகையில், அவளது உருவம் அமங்கலியாகவே, அப்படியே இருந்தது. வலுவான கரமொன்று கை நிறைய வண்ண மலர்களைக் கொடுத்து, அவள் நெற்றியிலே திலகமிடுகிறது.



படத்தையே பார்த்துக் கொண்டிருந்தவள். பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, இமைகள் படபடக்கத் தமையனை ஏறிட்டுப்பார்த்தாள்.

''அணுவளவும் பிசகாமல் எப்படியம்மா - அப்படியே அந்த ஓவியன் உன் உருவத்தை வரைந்திருக்க முடியும்? உன் காதோரமாக இருக்கும் மச்சம் கூடப் பக்கத்தில் இருக்கிறது. இப்போது உன் நினைவுக்கு வருகிறதா?'' என்று கேட்டான் சாரங்கன்.

அம்பிகா குனிந்து மீண்டும் படத்தைப் பார்த்தாள்.

மறுக்கவே முடியாது. அவளது உருவமே அது. இது எப்படி முடிந்தது? இதை வரைந்தது யார்?

அவரா-அவரே தானா?

அவளது உதடுகள் துடித்தன. தமையனை ஏறிட்டுப் பார்த்தவள் மீண்டும் தலைகுனிந்து கொண்டாள்.

தங்கையின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த சாரங்கன் சொன்னான்:

'உன் மனத்திரையில் தோன்றும், ஓவியர் சத்தியன் தானம்மா இந்தப் படத்தை வரைந்தது. போன வருடம், இந்த ஊருக்குத் தனது உறவினர் வீட்டுக்கு வந்திருந்த போது சத்தியன் உன்னைப் பார்த்திருக்கிறான். அப்போது, உனக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டுமென்ற துடிப்பு அவனுக்கு ஏற்பட்டது. ஒருநாள் கோவிலில் உன்னைச் சந்தித்துத் தனது உள்ளத்தில் உள்ளதையெல்லாம் சொல்லி இருக்கிறான். சமுதாயத்தின் ஏச்சுக்குப் பயந்து நீ ஒதுங்கி இருக்கிறாய். ஆனால் இன்றளவும் சத்தியன் உன்னை மறக்கவில்லை. அவனது நினைவில் நீயே நிறைந்திருக்கிறாய் என்பதற்கு அவனது கைத்திறனில் உருவாகியுள்ள இந்தப் படமே தக்க சாட்சியாகிறது. நான், தற்செயலாகத்தான், இந்தப் பத்திரிகையில் உன்னைப் பார்த்து, வியந்து, தேடிச் சென்று ஓவியர் சத்தியனைச் சந்தித்தேனம்மா. அதன் பிறகுதான் இங்குப் புறப்பட்டு வந்தேன்.''

அம்பிகா தலைநிமிர்ந்தாள். அவள் விழிகளில் புத்தொளி வீசியது. பெருக்கெடுக்கும் எண்ணக் குவியலைச் சொலல முடியாமல் அவளது உதடுகள் துடித்தன.

''சத்தியன்-உனக்குப் பூச்சூட்டிப் பொட்டு வைக்கவே காத்திருக்கிறானம்மா. அதைக் கண்ணாரக் கண்டபிறகுதான் என் திருமணத்தைப் பற்றியும் நினைக்க முடியும்.'' என்று சாரங்கன் சொல்லி வந்தபோது நாணத்தால் முகம் சிவக்க, அப்படியே குனிந்து அவன் கால்களைத் தொட்டு வணங்கினாள்.

தங்கையைத் தூக்கி அணைத்துக் கொண்ட சாரங்கனின் பார்வை எதிரே சுவரிலிருந்த படங்களின் மீது திரும்பியது. காந்தி, பெரியார், அண்ணா!

''அந்தச் சான்றோரின் கருத்துக்களுக்கு உருக்கொடுத்துத் தமிழக அரசு, இன்று உன்னைப் போன்று வாழ்விழந்து கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கும் அபலைகளையெல்லாம் தனது மகளாகவே ஏற்றுக்கொண்டு அரவணைக்கிறதம்மா!'' என்றான்.

அம்பிகா தலைநிமிர்ந்து பார்த்தாள்; நடந்தாள்!


## அதிசய நீர் ஊற்று நிபுணர்

குழாய்க் கிணறு இறக்கவும், புதிய கிணறு வெட்ட (பழைய கிணற்றில் போரிங் குழி இறக்க) குறிப்பிட்ட பூமியில் உள்ள நீர் ஊற்றுக்களை எல்லாம் விஞ்ஞான முறைப்படி கண்டுபிடித்து அந்த நீர் ஊற்றுக்களிலேயே மிக அதிகமான தண்ணீர் உள்ள 2 நீர்ஊற்றுக்கள் கிராஸ் செய்யும் சரியான இடமும், அதில் கிடைக்கும் தண்ணீரின் அளவும், நீர் ஊற்று உள்ள ஆழம் முதலிய விவரங்களையும் தெரிவிக்கப்படும்.

என்னுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு நான் குறிக்கும் இடத்தில் குழாய்க் கிணறு இறக்குபவர்களுக்கு அதில் தண்ணீர் சப்ளை கிடைக்கவில்லை என்று நிரூபித்தால் 2:3 என்ற விகிதத்தில் ரூ. 3,000 நஷ்டஈடு கொடுக்கப்படும்.

விவரங்களுக்கு 25 நயா பைசா ஸ்டாம்பு அனுப்புக.

**K. கந்தசாமி,**

(Ex. Member of the British Society of Dowers, London)

நீர் ஊற்று நிபுணர், கணபதி அஞ்சல்,
கோயமுத்தூர்-6.

தொலைபேசி எண் 31912.


**அடுத்த இதழில்...**

இராஜாஜி மண்டபத்தில் புதிதாக வைக்கப்பட்டுள்ள பன்னிரண்டு வண்ண ஓவியங்கள் அடுத்த இதழில்—முழுப்பக்க அளவில் இடம் பெறும்.

# தொழில்களை முன்னேற்ற அரசு தரும் சலுகைகள்!

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கத் தமிழ்நாடு அரசு முனைப்பான முயற்சிகளை மேற்கொண்டு வருவதுடன், பின்தங்கிய பகுதிகளின் முன்னேற்றத்திற்கு உதவும் தொழிற்சாலைகளையும் துவக்கி வருகிறது. 'தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும்', 'பின்தங்கிய பகுதிகளில் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி பொருளாதார மேம்பாட்டுக்கு உதவ வேண்டும்' என்ற இலட்சியங்களில் வெற்றி பெறுவதற்கான திட்டங்களைத் தீட்டவும், அத்திட்டங்களைத் திறமையாக நிறைவேற்றுவதற்கும் தேவையான நிருவாக அமைப்புகளைத் தமிழ்நாடு அரசு வலுப்படுத்தி வருகிறது. அத்தகைய நிருவாக அமைப்புகளில் ஒன்றே 'சிப்காட்' எனப்படும் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (The State Industries Promotion Corporation of Tamil Nadu Ltd)

'சிப்காட்' நிறுவனம் 1971-ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட தமிழ்நாடு அரசுக்கே சொந்தமான வரையறுக்கப்பட்டதொரு பொதுநிறுவனமாகும். இது 5 கோடி ரூபாய் ஒப்பிய மூலதனத்துடன் துவக்கப்பட்டது. இந்நிறுவனம், தமிழ்நாடு அரசின் முதிய அலுவலர்களும், புகழ்பெற்ற தொழிலதிபர்களும் அடங்கிய இயக்குநர் குழுவால் நிருவகிக்கப்பட்டு வருகிறது.

**நோக்கங்கள்**

பொதுவாகத் தொழில்களில் உயர்ந்த அளவுக்கு வளர்ச்சி அடையவேண்டுமென்பதும், இதுவரைத் தமிழ்நாட்டில் வளர்ச்சியடையாதிருந்த பகுதிகள் தொழில்மயமாக ஆவதற்கு வசதி செய்ய வேண்டுமென்பதுமே 'சிப்காட்'டின் நோக்கங்களாகும். இந்த நோக்கங்களின் அடிப்படையில், 'சிப்காட்' நிறுவனம், வேறெந்த நிறுவனமும் செய்யக் கடமைப்பட்டில்லாத எந்தவித உதவியையும் செய்து தொழில் முனைவோர்களுக்கு ஒருங்கிணைந்த பணியாற்றுவதையே கடமையாகக் கொண்டுள்ளது.

'சிப்காட்' நிறுவனத்தின் முக்கிய நோக்கம் நடுத்தர, பெரிய தொழில்களுக்கான திட்டமிடுதலும், அத்தொழில்களை முன்னேறச் செய்வதும், விரிவாக்குதலும் ஆகும். இந் நிறுவனத்தின் முன்னேற்ற நடவடிக்கைகள் பின்வருமாறு உள்ளன.

1. தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களில் தொழில் வளர்ச்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களிலுள்ள தொழில் பகுதிகளை மேம்படுத்துதல் மற்றும் நியாய விலையிலும், சுலபத் தவணை முறையில் செலுத்தும் வகையிலும் மேம்படுத்தப்பட்ட நிலங்களை வழங்குதல்.

2. புதிய தொழில் முனைவோர்கள் பயனடையும் வகையில் ஊக்கச் சலுகைத் திட்டத்தைச் செயல்படுத்துதல்.

3. தொழில் முனைவோர்களுக்கான பல்வேறு துணையுதவிப் பணிகள் செய்தல்.

4. நடுத்தர, பெரிய தொழில்களுக்குத் தாராள நிபந்தனைகளின் பேரில் சரிக்கட்டும் நிதி (Balancing Finance) அல்லது துணை நிதி (Supplemental Finance) அளித்தல்.

## 'சிப்காட்' செய்யும் உதவிகள்

**1. ஊக்கச் சலுகை முனைப்புத் திட்டம்:**

'சிப்காட்' நிறுவனத்தின் முன்னேற்ற நடவடிக்கைகளில் தொழில் முனைவோர்களைத் தூண்டி இழுக்கும் ஒருங்கிணைந்த நிதியுதவித் திட்டங்களும் அடங்கியுள்ளன.

'சிப்காட்' நிறுவனத்தின் நிதியுதவித் திட்டங்கள் தமிழ்நாட்டின் பின்தங்கிய பகுதிகளில் தொழிற்சாலைகளை அமைக்க முன்வரும் தொழில் முனைவோர்களுக்கு எளிதில் கிடைக்கக் கூடியதாக இலாபகரமானதாகவும் அமைந்துள்ளது.

'சிப்காட்' நிறுவனம் பின்கண்ட நிதியுதவித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

**1. தொழில் தொடங்கும் ஆய்வுக்கு உதவித் தொகை:—**

ஆதாயமளிக்கும் தொழில் திட்டங்களைக் கண்டறிவதற்கான வாய்ப்புகள் பற்றிய ஆய்வுகளை 'சிப்காட்' தாமாகவே தொடங்கி வைப்பதுடன், தொழில்முனைவோர்க்கு வாய்ப்புக் கூறு அறிக்கைகளைச் சலுகை விலையில் அளிக்கிறது. 'சிப்காட்' அளிக்கும் சலுகை, ஆய்வின் செலவை ஒட்டி 75 முதல் 100 சதவீதம் வரை அமைகிறது. இத்திட்டம் சமீபத்தில் மாறுதல் செய்யப்பட்டு, திருத்தப்பட்ட திட்டப்படி 'சிப்காட்'டின் பங்கு

ரூபாய் 20,000 செலவாகும் ஆய்வுகளுக்கு 75 சதவீதமும், ரூபாய் 20,000க்கும் மேல் செலவாகும் ஆய்வுகளுக்கு ரூபாய் 15,000-த்துடன், ரூபாய் 20,000/-க்கு மேற்பட்ட தொகையில் 50 சதவீதமும் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த வாய்ப்புக் கூறு அறிக்கைப்படி தொழில் நிறுவப்பட்டுவிட்டால், ஆய்வுக்காகும் மொத்தச் செலவில் 'சிப்காட்'டின் பங்கு மூலதனத்தில் பங்காகவோ அல்லது தவணைக் கடனாகவோ மாற்றியமைக்கப்படும். 'சிப்காட்' இம்மாதிரி ஆய்வுகளைத் தாமாகவோ அல்லது 'தொழில் முனைவோர்கள் ஆதாயமளிக்கும் தொழில் திட்டங்களின் வாய்ப்புக் கூறுகள் பற்றிய ஆய்வுகளைக் கேட்டுக் கொள்வதன் பேரிலோ மேற்கொள்கிறது.

**2. வட்டியில்லா விற்பனைக்கடன்:**

ஊக்கச் சலுகை தீவிரத் திட்டத்தின் முக்கிய அங்கமாக வட்டியில்லா விற்பனை வரிக்கடனை மாநில அரசின் சார்பில் 'சிப்காட்' நிறுவனம் வழங்கி வருகிறது. இந்தக் கடன்கள் கீழ்க்கண்ட 9 மாவட்டங்களில் ஏதாவது ஒன்றில் துவங்க இருக்கும் நடுத்தர அல்லது தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.

1. வடஆர்க்காடு.
2. தென்னார்க்காடு.
3. தருமபுரி.
4. திருச்சி.
5. தஞ்சை.
6. மதுரை.
7. இராமநாதபுரம்.
8. புதுக்கோட்டை.
9. கன்னியாகுமரி.

இத்திட்டம் இரு பகுதிகளைக் கொண்டதாகும். முதல் பகுதித் திட்டத்தின்கீழ், கணிசமான அளவுக்குத் தொழில் விரிவுபடுத்தும் அல்லது பல பிரிவுகளாகப் பெருக்கும் பணியை மேற்கொள்ளும் தொழிற்சாலைகளுக்கு, அத்தொழிற்சாலைகள் கடன்கோரி விண்ணப்பம் செய்து கொள்ளும் நாளுக்கு முந்தைய மூன்றாண்டுகளுக்குச் செலுத்திய விற்பனை வரித்தொகை அளவுக்கு-ஆனால் பல பிரிவுகளாகப் பெருக்கப்படும் திட்டத்தின் நிலையான இருப்புகளில் 25 சதவீதத்துக்கு மேற்படாமல்-விற்பனை வரிக்கடன் தொகை அளிக்கப்படுகிறது.



இரண்டாவது பகுதித் திட்டத்தின்கீழ், நிறுவப்படவுள்ள புதிய தொழிற்சாலைகளுக்கு அவை உற்பத்திப் பணியை மேற்கொள்ளும் முதல் 6 ஆண்டுக்காலத்திற்கு ஆண்டு தோறும் வட்டியில்லா விற்பனை வரிக்கடன், முந்தைய ஆண்டில் செலுத்திய விற்பனை வரித்தொகைக்குச் சமமானதாகவும், ஆனால் புதிதாக நிறுவப்பட்ட தொழில் நிறுவனத்தின் நிலையான இருப்புகளில் 8 சதவிகித அளவுக்கு மேற்படாமலும் அளிக்கப்படும் இக்கடன்களுக்குப் பிணையம் கிடையாது. கடன் வழங்கப்பட்ட 18 ஆண்டுகளுக்குப் பிறகு மூன்று சம ஆண்டுத் தவணைகளில் கடனைத் திருப்பிச் செலுத்தப்படவேண்டும்.




கடந்த மூன்று ஆண்டுகளில் இத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதில் கணிசமான முன்னேற்றம் அடையப் பெற்றுள்ளது. இதுவரை முதலாவது பகுதித் திட்டத்தின் கீழ் ரூபாய் 210.55 இலட்சத்துக்கு உதவி அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் 31.3.75 வரை ரூபாய் 135.23 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சலுகையினைப் பெற்ற 14 தொழில் நிறுவனங்களில், 1973-74-ல் 4 நிறுவனங்களும், 1974-75-ல் 5 நிறுவனங்களும் உற்பத்தியைத் தொடங்கி இருக்கின்றன. மற்ற 5 நிறுவனங்களும் கட்டடங்கள் கட்டிக் கொண்டிருக்கும் பல நிலைகளில் உள்ளன. அவை 1975-ல் உற்பத்தியைத் துவக்கும் நிலையில் உள்ளன.

இரண்டாவது பகுதித் திட்டத்தின்படி, 1972-73-ல் ரூபாய் 59.00 இலட்சத்துக்கு 4 தற்காலிகத் தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிறுவனங்கள் உற்பத்தி தொடங்கி முதலாண்டு விற்பனை வரி செலுத்திய பிறகு தான் விற்பனை வரிக்கடன் பெறத் தகுதி அடைவதால், இதுவரை இறுதித் தகுதிச் சான்றிதழ்கள் எதுவும் வழங்கப்படவில்லை. இருப்பினும், தற்காலிகத் தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்ட 4 நிறுவனங்களும் உற்பத்தித் தொடங்கியுள்ளதால் 1975-76-ல் அவை விற்பனைவரிக் கடனைப் பெற்றுப் பயனடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**3. நிலையான இருப்புகள் மீது உதவித் தொகை:**

தமிழ்நாட்டுக்குரிய மத்திய நேரடி மானியம் அல்லது உதவித்தொகை வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பைத் தமிழ்நாடு அரசு 1972-ஆம் ஆண்டு பிப்ரவரியில் 'சிப்காட்' நிறுவனத்திடம்' ஒப்படைத்தது. இத்திட்டத்தின்கீழ், இம்மாநிலத்தில் உள்ள 27 பின்தங்கிய வட்டங்களில் நிறுவப்படும் எந்த ஒரு புதிய தொழிற்பிரிவும், குறிப்பிடத் தகுந்த விரிவுத் திட்டம் மேற்கொள்ளும் தொழிற்பிரிவும் அதன் நிலையான இருப்புகளில் 15 சதவீதத்திற்குச் சமமான தொகையை நேரடி மான்யமாகவோ அல்லது உதவித் தொகையாகவோ பெறுவதற்குத்தகுதி உடையதாகும். இத்திட்டத்தின் கீழ், 31.3.75 வரை முடிவுற்ற சென்ற மூன்றுண்டுகளில் ஒப்புதலளிக்கப்பட்ட கணிசமான மொத்தத் தொகை ரூபாய் 313.59 இலட்சம் ஆகும். இதில், சிறு தொழில்களுக்கு (சிறுதொழில்கள் 'சிட்கோ'வுக்கு மாற்றப்படுவதற்கு முன்பு) வழங்கப்பட்ட ரூபாய் 27.61 இலட்சமும் அடங்கும். ஒப்புதல் அளிக்கப்பட்டத்தில் 31.3.75 வரை ரூபாய் 86.05 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**4. மின் சக்திக் கட்டணச் சலுகை:**

தமிழகத்தில் நிறுவப்படும் புதிய தொழிற்சாலைகளுக்கு முதல் ஐந்தாண்டுகளுக்கு மின் சத்திக் கட்டணச் சலுகை வழங்கப்படுகிறது. ஆருவது ஆண்டிலிருந்து மட்டுமே முழு மின் சக்திக் கட்டணத்தை அத்தொழிற்சாலைகள் செலுத்த வேண்டும். இத்திட்டத்தின் கீழ்ப் பின்கண்டவாறு சலுகைகள் அளிக்கப்படுகின்றன

1. முதல் மூன்றுண்டுகளுக்கு: சாதாரண உயர் அழுத்த மின் சக்திக் கட்டணத்தில் 66.66 சதவிகிதம் மட்டுமே கட்ட வேண்டும்.
2. நான்காவது ஆண்டுக்கு: சாதாரண உயர் அழுத்த மின் சக்திக்கட்டணத்தில் 80 சதவிகிதம் மட்டுமே கட்ட வேண்டும்.
3. ஐந்தாவது ஆண்டுக்கு : சாதாரண உயர் அழுத்த மின் சக்திக்கட்டணத்தில் 90 சதவிகிதம் மட்டுமே கட்ட வேண்டும்.

இவை தவிரத் தமிழகத்தில் பின்தங்கிய வட்டங்களெனத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் பகுதிகளில் நிறுவப்படவிருக்கும் புதிய தொழில்களுக்கு மின் சக்திக் கட்டணத்தில் மேலும் 15 சதவீதக் குறைப்பு, சலுகையாக அளிக்கப்படும்.

1973 செப்டம்பர் வரை 40 பின்தங்கிய வட்டங்கள் மட்டுமே மேற் கூறிய சலுகையைப் பெறத் தகுதியுடையனவாக இருந்தன. 'சிப்காட்' பரிந்துரையின் மேல், மாநில அரசு 1973 அக்டோபர் முதல் இச்சலுகையை மேற் கொண்டு 16 வட்டங்களுக்கு அளித்துள்ளது. இவ்வாறாக இம்மாநிலத்தில் 56 பின்தங்கிய வட்டங்களில் அமைந்துள்ள தொழில்கள் இப்போது இச்சலுகையைப் பெறத் தகுதியுடையவையாகும்.

**5. தண்ணீர் உரிமைக் கட்டணத்தில் சலுகை:**

சாதாரணமாகத் தொழிற்சாலைகளுக்கு இயந்திரக் கருவிகள் மூலம் பொது நீர் நிலையங்களிலிருந்து நீர் எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறது. இதற்காக 1,000 கன மீட்டர் தண்ணீருக்கு ரூபாய் 16 வீதம் உரிமைக் கட்டணத்தை அவர்கள் செலுத்த வேண்டும். இவ்வாறு செலுத்தப்படும் தொகை ஆண்டொன்றுக்கு ரூபாய் 200-க்குக்குறையாமல் இருக்க வேண்டும். தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் பரிவுரைகளை ஏற்றுத் தமிழ்நாடு அரசு, பின்தங்கிய மாவட்டங்களில் புதிதாக நிறுவப்படும் தொழில்களுக்கு ஆண்டொன்றுக்குத் தண்ணீர் உரிமைக் கட்டணமாக ரூபாய் 200 மட்டும் செலுத்தி பொது நீர் நிலையங்களிலிருந்து எவ்வளவு தண்ணீர் வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ள அனுமதித்துள்ளது. இச்சலுகை, தொழிற்சாலை தொடங்கப்பட்ட முதல் ஆறு ஆண்டுகளுக்கு மட்டுமே உண்டு.

**6. அரசு கொள்முதல் செய்யும் உற்பத்திப் பொருள்களுக்கு சகாய விலையளித்தல்:**

தமிழ்நாட்டில் உள்ள நடுத்தர, பெரிய தொழிற்சாலைகளின் உற்பத்திப் பொருட்களை அரசு வாங்கும்போது மற்ற மாநில உற்பத்திப் பொருள்களுக்கு அளிக்கப்படும் விலையைக் காட்டிலும் விலையில் 10 சதவீதம் சலுகை அளிக்கப்படும்.

**7. தொழில் உரிமங்களைப் பெறுவதில் மாநில அரசின் உதவி:**

தொழில் உரிமங்கள் கோரி இந்திய அரசுக்கு விடுக்கப்படும் விண்ணப்பங்களுக்கு, தமிழக அரசின் முழு ஆதரவும் உண்டு. இந்த வகையில் மாநில அரசு தொடர் நடவடிக்கைகளை எடுத்து விண்ணப்பங்களில் குறிப்பிட்டுள்ள செயற் குறிப்புகளுக்கு ஒப்புதல் பெற ஆவன செய்யும்.

## தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி



**தொ**ழில் வணிகத் துறையின் நிர்வாகப் பொறுப்பின்கீழ், தமிழ்நாடு மாநிலத் தொழில் கூட்டுறவு வங்கி என்னும் பெயரில் தொழில் கூட்டுறவுகளுக்கென்று உள் தலைமை நிதி வங்கி ஒன்று உளது. வேளாண்மைத் தேவைகளுக்கு மட்டும் நிதி உதவி அளிப்பதற்கென்று இருக்கும் பிற கூட்டுறவு வங்கிகளிடமிருந்து இச் சங்கங்கள் தங்களுக்குத் தேவையான நிதியைப் பெற முடியாமற் போவதால், தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி செய்வதற்காக இவ்வங்கி ஏற்படுத்தப்பட்டது. இவ்வங்கியின் பங்கு மூலதனம் ரூ. 51·48 இலட்சமாகும். இதில் ரூபாய் 25 . 30 இலட்சம் அரசால் வழங்கப்பட்டது.

30-6-1974 ஆம் நாளில் இவ்வங்கி இருந்த நிலவரப்படி, தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூபாய் 9,22,70,360 வரை (ரொக்கக் கடன்கள், புதுப்பிக்கப்படுதல் ...ட்பட)நிதியுதவி அளித்துள்ளது. இந்திய ரிசர்வ் வங்கி இந்த வங்கிக்கு இன்னும் ஏற்பளிக்கவில்லை. எனவே, ஏனைய கூட்டுறவு வங்கிகள் பெறுவது போல மறு நிதி உதவி வசதிகளை இது பெறவில்லை. இவ்வங்கியை ஒரு தலைமை வங்கியாக அங்கீகரிக்கும் செயற் குறிப்புப் பற்றி இந்திய ரிசர்வ் வங்கிக்கும், தமிழ்நாடு அரசுக்குமிடையில் போக்குவரத்து கடிதப் நடைபெற்று வருகிறது.





## தமிழ்நாட்டில் துவக்கப்படவிருக்கும் புதிய சர்க்கரை ஆலைகள்!

புதிய சர்க்கரை ஆலைகள் அனைத்தும் இனிமேல் அரசுத் துறையில் மட்டுமே ஏற்படுத்தப்படல் வேண்டும் என்று அரசு கொள்கை முடிவு ஒன்றை எடுத்துள்ளது. எனவே, தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தை அண்மையில் ஏற்படுத்தியுள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இம்மாநிலத்தில் ஒவ்வொன்றும் 1,250 டன் கரும்பு பிழியும் திறன் கொண்ட 8 புதிய சர்க்கரை ஆலைகளை அமைக்கக் கருதப்பட்டுள்ளது. ஆலைகள் கீழ்க்காணும் ஐந்து இடங்களில் அமைப்பதற்குரிய அனுமதிக் கடிதங்கள் இந்திய அரசுக்கு 1974 ஆகஸ்டில் அனுப்பப்பட்டுள்ளன :—

1. தஞ்சாவூர் வட்டம்... ...தஞ்சாவூர் மாவட்டம்.
2. திருக்கோவிலூர் வட்டம்... ...தென்னார்க்காடு மாவட்டம்.
3. சங்கரன்கோயில் வட்டம்... ...திருநெல்வேலி மாவட்டம்
4. பெரம்பலூர் வட்டம்... ...திருச்சிராப்பள்ளி மாவட்டம்
5. சிவகங்கை வட்டம்... ...இராமநாதபுரம் மாவட்டம்.

விண்ணப்பங்களை இந்திய அரசுத் தேர்வுக் குழு 1975 ஜனவரி இறுதியில் ஆய்வு செய்தது; இச் செயற் குறிப்புகளுக்கு விரைவில் அனுமதியளிக்கும் என நம்பப்படுகிறது.

அனுமதிக் கடிதங்கள் கிடைக்கப் பெற்றவுடன், இப்பகுதிகளில் திட்ட முன்னோடிப் பணிகளை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. தஞ்சாவூர், சங்கரன் கோவில் பகுதிகளில் முதலில் பங்கு மூலதன வசூலிப்புப் பணியை மேற்கொள்ளச் சர்க்கரைக் கழகம் கருதியுள்ளது.

மேலும் மூன்று ஆலைகளை அமைப்பதற்கான இடங்களைத் தெரிந்தெடுப்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆலைகளை அமைக்கக் கூடிய இடங்கள் முடிவு ஒன்றை எடுத்த பின்னர், அனுமதிக் கடிதத்தைக் கொடுப்பதற்காக இந்திய அரசிடம் அணுகப்படும்.

## தென்னை நார்த் தொழில்



தமிழகத்தில் தென்னை நார்த் தொழில் வளர்ச்சிக்காக அரசு, தென்னை நார்த் தொழிலாளர்களுக்கு இதுவரை சுமார் 25 தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தியுள்ளது; தென்னை நார்த் தொழில் பள்ளி ஒன்றும், மெத்தை விரிப்புகள் ஆகியவை தயாரிப்பதற்கான முன்னோடித்தொழிற்சாலை ஒன்றுமாக இரண்டு துறை சார்ந்த [illegible] ஏற்படுத்தப்பட்டன.

இயந்திரமயமாக்கப்பட்ட தென்னை நார்த் தொழிலை வளர்ச்சி அடையச் செய்வதற்கான அடங்கல் திட்டத்தின்கீழ் இயந்திரம் பயன்படுத்தப்படும். தென்னை நார்த் தொழிற் பிரிவுகளை ஏற்படுத்த வாய்ப்புகளை உடைய தொழில் முனைவோர்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. 1974-75-ஆம் ஆண்டில், தஞ்சாவூர் மாவட்டம் தவிர மற்ற மாவட்டங்களில் நிதியுதவி செய்வதற்காக 2 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. 1975-76ஆம் ஆண்டில் ரூபாய் 1 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகளுக்கு மாநில அரசு உதவி வழங்கும் சட்டத்தின்கீழ் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள தொழில் முனைவர்களுக்காக இயந்திர மயமாக்கப்பட்ட தென்னை நார்ப்பொருள் உற்பத்திப்பிரிவுகளை அமைப்பதற்கான குத்தகை விடப்படுகிறது. 1975-76ல் தென்னை நார் எடுப்பதற்காகக் கொல்லங்கோடு கயிறு உற்பத்தித் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ. 42,000 வரையும், உற்பத்திப் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதற்காகக் கன்னியாகுமரி மாவட்ட மத்திய விற்பனைத் தொழிற் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ. 55,000 வரையிலும் நிதி உதவி செய்யக் கருதப்பட்ட



தமிழரசு

பதிவு எண். M. 8676

# வெற்றியை நோக்கி....!

நாளுக்குநாள்
நம்முடைய வாழ்க்கைக்கு
அரசு அளிக்கும்
பாதுகாப்புகள் ஏராளம

**அரசு அலுவலர்களுக்கு**
**குடும்பப் பாதுகாப்புத் திட்டம்**
**அதனைத் தொடர்ந்து**
**சமுதாயத்திலுள்ள அனைவரும்**
**பயனடையும் வகையில்**
**சமூகப் பாதுகாப்புத் திட்டம் !**

[illegible]

எல்லாரும்
இன்புற்றிருக்கச்
செயல்படுத்தும்
திட்டங்கள்
வெற்றி பெற்றிட
வலுமிக்க
அடித்தளம் அமைய

**உதவுவதே**
**அளவான குடும்பம்.**



அடுத்த குழந்தை இப்போது வேண்டாம் !

தமிழரசு

1-8-1975
50 காசு






# இந்தியாவே போற்றும் ஈடில்லாப் பணி

## ஆளுநர் கே.கே.ஷா பெருமிதம்

இந்தியாவே பாராட்டும் வகையில் நமது முதலமைச்சர் அவர்களும் அமைச்சர் ராசாராம் அவர்களும் குடிசை மாற்று வாரியத் தலைவர் அரங்கண்ணல் அவர்களும் நாமெல்லாம் பெருமைப்படும் அளவுக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் குடிசை மாற்று வாரியமும்-வீட்டு வசதி வாரியமும்-எப்படி இவ்வளவு சிறப்புமிக்க காரியங்களைச் செய்கின்றன என்று என்னைப் பார்க்கிற மற்ற மாநிலத்துக்காரர்கள் கேட்கிறார்கள்.

குடிசை மாற்று வாரியத்தின் மூலம் 4 கோடி ரூபாயும்-வீட்டு வசதி வாரியத்தின் மூலம் 9 கோடி ரூபாயும் செலவிடப்படுவது பெரிய காரியமல்ல; ஆனால் இந்தப் பணத்தைச் செயல்படுத்துகிற முறைதான் புகழுக்குரியதாகும்.

குடிசை வாழ் மக்களின் கஷ்டங்களைப் போக்கி விடுவோம் என்று பேசுவது எளிது. ஆனால் அந்த அடிப்படையில் காரியங்களைச் செய்து காட்டுவது அரிதானதாகும்! ஆனால் இந்த அரசு ஏழை மக்களுக்கான இது போன்ற பணிகளைச் செய்து வருவது சிறப்பான முறையில் குறிப்பிடத்தக்கதாகும்.

அரசியல்வாதிகளைப் பற்றிக் கவலையில்லை. ஏழை எளிய மக்களின் முகங்களில்-அவர்களின் கண்களில் இருக்கிற ஒளியைப் பார்க்கிறோம். அவர்களின் எண்ணங்களைப் பூர்த்தி செய்யாமல் நாமெல்லாம் ஏன் இருக்க வேண்டும்? இன்றைய தினம் இந்த ஏழை மக்களெல்லாம் அமைதியோடு இருக்கிறார்கள் என்றால் அவர்கள் வாழ்வில் தமிழக அரசு பெரிய நம்பிக்கையை உருவாக்கியிருக்கிறது.

குடிசைப்பகுதிகள் நாட்டில் உருவாகக் காரணம் என்ன? ஏழை எளியவர்கள் வாழ்கின்ற கிராமப்புறங்களில் அவர்களுக்குப் போதிய வேலை வாய்ப்புக் கிடைக்காததால் அந்த மக்கள் இதுபோன்ற நகரைத் தேடி வருகிறார்கள்.

அங்கே வேலை வாய்ப்பு இல்லை-இங்கே வேலை கிடைக்கிறது. கிராமப்புறங்களிலும் வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டால் அவர்கள் இங்கே வரமாட்டார்கள்.

இதுபோன்ற ஏழைகளுக்கு வீடுகளைக் கட்டித் தருவது மாத்திரமல்ல; அவர்களுக்கு நல்வாழ்வு தரும் பணியை யும் இந்த அரசு செய்து வருகிறது.

''ஒருவர் வாழ்வதற்கு மிகக் குறைவான இடவசதி யென்றால் கூட 27 சதுர அடி தேவை. ஆனால் அது இந்தியாவில் இப்போது, கிடைக்கிறதா? இந்தியா மாளிகையில் இருக்கிறதா-குடிசைப் பகுதியில் இருக்கிறதா என்றால் குடிசைப் பகுதியில்தான் இந்தியா இருக்கிறது. அந்த அளவுக்கு இந்தியாவில் குடிசைகள் தான் அதிகமாக இருக்கின்றன. இதை மாற்றிவிட்டால் இந்தியா இப்படித்தான் இருக்கும்.

இதுபோன்ற ஒரு நல்ல நிலையை-சீர்திருத்தத்தை நாம் புகழா விட்டால் என்ன பயன்? ஆகவே இதுபோன்ற வீடு கட்டும் முயற்சியைக் கண்டு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

மத்திய அரசில் நான் பொறுப்பில் இருந்தபோது நாட்டிலுள்ள குடிசைப் பகுதிகளை யெல்லாம் மாற்ற என்ன செலவாகும் என்று கணக்கிட்டபோது பதினாயிரம் கோடி ரூபாய் தேவையென்று கணக்கிட்டேன்-ஆனால் அதற்கு எங்கே போவது என்று கருதினேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இதுபோன்ற அரிய காரியத்தைச் செய்து வரும் முதல்வரையும் வீட்டு வசதி அமைச்சரையும்-வாரியத் தலைவரையும் நான் வெகுவாகப் பாராட்டுகிறேன்!

[சென்னை காசிமேடு குப்பத்தில்குடிசைமாற்று வாரியத்தின் சார்பில் கட்டப்பட்ட 464 குடியிருப்புக்களை திறந்து வைத்து ஆற்றிய உரை.]

தமிழரசு
மலர்.6 இதழ்.3
1-8-75



# ஏழை எளியோருக்கு ரூ 27 கோடி செலவில் 25 ஆயிரம் வீடுகள்



## முதல்வர் கலைஞர் உரை

சென்னை மாநகரில் மக்கள் வாழ்வதற்கு, அதிலும் முக்கியமாக வசிப்பதற்கு இடம் இல்லாத காரணத்தால் எவ்வளவு சங்கடங்கள் இருந்தது என்பதையும், இன்னும் அந்தச் சங்கடங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்பதையும், ஆனால் அவைகளை நாம் நீக்குவதற்குச் சபதம் எடுத்துக் கொண்டு, பெரும் பகுதி அதிலே வெற்றி கண்டு, எஞ்சியுள்ள பகுதியையும் வெற்றிகரமாக ஆக்குவதற்கு முனைந்து செயல்படுகிறோம்.

பத்தாண்டுக் காலத்திற்கு முன்பு இரண்டரைக் கோடி என்ற அளவில் தமிழகத்தில் இருந்த மக்கள் தொகை, இப்போது மேலும் ஒன்றரைக் கோடி பேர் அதிகமாகி இருக்கிறார்கள். கிராமப்புற மக்கள் வேலை வாய்ப்புக்களைத் தேடி, நகர்ப் புறங்களை நாடி, குறிப்பாக சென்னைக்கு வந்தால் ஏதாவது ஒரு செய் தொழில் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு வந்து, தொழில் கிடைத்தவுடன் வசிப்பதற்கு இடம் கிடைக்காத காரணத்தால் தாங்களே புறம்போக்கு இடங்களில் அப்படிப்பட்ட இடங்களை உருவாக்கிக் கொண்டு விடுகின்ற காரணத்தால் ஆயிரக்கணக்கான குடிசைகள் சென்னையில் தோன்றி, அந்தக் குடிசை வாழ் மக்களுடைய அல்லலைத் துடைக்க கழக அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகள் தான் குடிசை மாற்றுவாரியத் திட்டமாகும்.

இந்தத் திட்டத்தைச் செ

மையாக, வேகமாக, பாராட்டத்தக்கமுறையில் அமைத்துத் தரக்கூடிய ஆற்றல் பெற்றவராக சகோதரர் அரங்கண்ணல் திகழ்வார் என்ற நம்பிக்கை இருந்த காரணத்தால் அந்தப் பொறுப்பை அவரை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டேன். அந்த நம்பிக்கை வீண் போகவில்லை என்பதற்கு அடையாளமாகத்தான் கோபுரம் போலக் கட்டடங்கள் எழுந்திருக்கிற இந்தக் காட்சிகளாகும்.

நேற்று பேராசிரியர் அன்பழகன் அவர்களுடைய தொகுதியிலும், அதற்கு முன்தினம் அரங்கண்ணல் அவர்களுடைய பழைய மயிலாப்பூர் தொகுதியிலும், நாளைய தினம் (9-7-75) என்னுடைய தொகுதியிலும் குடியிருப்புகள் திறந்து வைக்கப்படுகின்றன. ஆனால் எங்கள் தொகுதிகளில் எல்லாம் உள்ள குடியிருப்புகள் நான்கு மாடிக் கட்டடங்கள்தான்; ஆனால் இன்று திறக்கப்படு

கின்ற அரங்கண்ணல் தொகுதியில் மாத்திரம் ஐந்து மாடிக் கட்டடங்களாகும். இதனைச் சுயநலம் என்று சொல்லமாட்டேன். இங்கே ஐந்து மாடிக் கட்டடம் கட்ட . வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்றால், நான்கு மாடிக்கட்டடம் கட்டினால் பல வீடுகளுக்கு இடம் இேழ இல்லாத நிலைமை ஏற்படக்கூடிய நெருக்கடி ஏற்படும் என்பதற்காகத்தான் அகலப் போவதைவிட உயரமாகப் போவோம் என்று மாடிகளை அதிகமாக ஆக்கியிருக்கிறார்கள்.

நாம் நெருக்கடியைத் தீர்ப்பதற்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். அதற்குப் பொது மக்களுடைய உதவி நிரம்பத் தேவை. அழகான வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. நாம் குடும்பத்தைக் கட்டுப்பாட்டோடு வைத்துக் கொண்டால்தான் இந்த வீடுகள் போதும்; அருமையான வீடு கிடைத்து விட்டதே என்ற அகமகிழ்ச்சியில் குடும்பக்கட்டுப்பாட்டை மறந்துவிட்டால் மகிழ்ச்சி நீண்ட நாள் நிலைக்காமல் போய்விடும்.

வீட்டு வசதிகளை நகரங்களோடு மாத்திரம் நிறுத்திக் கொள்ளாமல் கிராமங்களுக்கும் நாம் இன்றைக்கு விரிவுபடுத்தியிருக்கிறோம். அதற்கு அடையாளம்தான் அரிசனங்களுக்காக வீடு கட்டித் தருகின்ற பிரம்மாண்டமானத் திட்டம். தமிழ் நாட்டில் இருக்கின்ற அரிசன மக்களுக்குத் தேவையான வீடுகள் பத்து

# ஐந்தாண்டுகளில் தமிழக அரசின் அருஞ்சாதனை



மயிலைத் தொகுதி குப்பைமேடு குடியிருப்புகள்..

இலட்சம். இந்தப் பத்து இலட்சம் வீடுகளை அப்போது கட்டத் தொடங்கியிருந்தால் இன்று எல்லா அரிசனங்களுக்கும் வீடு கிடைத்திருக்கும் என்று எண்ணிப்பார்த்தால், சுதந்தரம் 1947-ல் கிடைத்து, ஓராண்டு அதற்கான விழாவைக் கொண்டாடி முடித்து விட்டு 1948-ஆம் ஆண்டில் இதற்கான திட்டத்தைத் தொடங்கியிருந்தால் இதனை நிறைவேற்றியிருக்க முடியும். இந்த இருபத்தேழு ஆண்டுக் காலத்தில் இந்தியாவிலே இருக்கிற ஏழ்மையை விரட்டி விட்டு மற்ற நாடுகளைப் பார்த்து மார் தட்டிக் கொள்ளலாம்.

கழக அரசு இந்த ஐந்தாறு ஆண்டுக் காலத்தில் தன்னுடைய சக்திக்கேற்ப-நிதி நிலைக்கேற்ப, இந்த மாநிலத்திற்கு இருக்கிற-வரை முறைப்படுத்தப்பட்ட-வரையறைக்கு உட்பட்டுள்ள குறுகிய அதிகாரங்களை வைத்துக் கொண்டு செய்திருக்கிற காரியங்களை, அகில இந்திய மட்டத்தில் யார் செய்திருக்கிறார்கள் என்று தான் அறைகூவல் விட்டுக் கேட்கிறேன்.

இங்கே காந்தியின் சிலை இருக்கிறது. அந்தச் சிலையின் சார்பாகக் கேட்கிறேன். காந்தியடிகளின் திட்டங்களை, அவர் யாருக்காகப் பாடுபட வேண்டுமென்று சொன்னாரோ, அந்தப் பணிகளை, நாங்கள் காந்தியடிகளின் நேரடி வாரிசுதாரர்களாக இல்லா விட்டாலும், காந்திக்குத் துணைவராக இருந்த தந்தை பெரியாருக்கும், அவரால் உருவாக்கப்பட்ட தென்னாட்டு காந்தி அண்ணாவிற்கும் வாரிசுதாரர்களாக இருந்து இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

''ஏன் சுதந்தரம் கேட்கிறாய்? எவ்வளவோ நன்மைகளை வெள்ளைக்காரன் செய்திருக்கிறானே'' என்று கேட்டபோது, ''ஏழை யெளிய மக்கள் வசதியோடு வாழ, கூரை வீடுகளுக்கு ஓடுகள் வேய நான் சுதந்தரம் கேட்கிறேன்'' என்று காந்தியடிகள் சொன்னார். ஆனால் காந்தியடிகளின் வாரிசுகள் அவரது வார்த்தைகளை மறந்தார்கள்; ஏன் காந்தியையே மறந்தார்கள்.

ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் சென்னைக்கு ராஜாஜி நினைவாலயத்தைத் திறந்து வைக்க வந்த போது ''இந்தியாவிலேயே காந்தியடிகளின் மதுவிலக்குத் திட்டத்தை அமல்படுத்துகின்ற மாநிலம் காந்தி பிறந்த குஜராத் மாநிலமும், தமிழ்நாடும்தான்'' என்று சொன்னார். குதிரைப் பந்தயம் இல்லாத மாநிலம் குஜராத்தும், தமிழ்நாடும் தான் என்று சொன்னார். குஜராத் மாநிலத்தில் குதிரைப் பந்தயம் இல்லவே இல்லை. ஆகவே அது ஒழிக்கப்பட வேண்டிய அவசியமில்லை. ஆனால் தமிழ் நாட்டில் அப்படி அல்ல. ஏறத்தாழ 200 ஆண்டுக் காலமாக இருந்த குதிரைப் பந்தயத்தை—1948—49-ஆம் ஆண்டில் குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட வேண்டுமென்று சட்டத்தை நிறைவேற்றி வைத்துக்கொண்டு ஆனால் அதை ஒழிக்காமல் இன்னும் இரண்டு ஆண்டு, இன்னும் இரண்டு ஆண்டு என்று நீடித்துக் கொண்டே போனார்கள்.

நான் பாளையங்கோட்டைச் சிறைச்சாலையில் இருந்தபோது, பத்திரிகையில் ஒரு செய்தி படித்தேன். சட்ட சபையில் அப்போது கழகத்தைச் சேர்ந்தவர்கள் நாவலரும், அரங்கண்ணலும் இருந்தபோது, அமைச்சர் வெங்கட்ராமனைப் பார்த்து குதிரைப்பந்தயத்தை ஏன் ஒழிக்கக் கூடாது என்று கேள்வி கேட்டு, அதற்கு அவர் ''குதிரைப் பந்தயத்தை ஒழித்துவிட்டால் பிறகு நல்ல உயர்வான—பலம் பொருந்திய குதிரைகள் வளர்க்கப்படாமல் அந்தக் குதிரைகளின் வமிசம் அழிந்துவிடும் ; ஆகவே குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்கு இல்லை'' என்று பதில் சொல்லியிருந்தார். அதனைப் பத்திரிகையில் படித்து விட்டு பாளையங்கோட்டைச் சிறைச்சாலையில் ஒரு குறிப்பு எழுதி வைத்தேன். அதாவது ''அப்படியானால் இன்றைக்கு எத்தனையோ இடங்களில், பொங்கல் நேரத்தில் மாடுகளை அவிழ்த்து விட்டு அவற்றுடன் மனிதர்கள் மோதுகின்ற நிகழ்ச்சிகள் போன்றவைகளை நிறுத்தி விட்டு பழையகோட்டை மன்றாடியார் பண்ணையில் மாடுகளை எல்லாம் சாதாரணமாகவே வளர்க்கின்றார்களே; அவைகளும் வளர்கின்றனவே அதைப்போல குதிரைப் பந்தயத்தை நடத்தாமல், அவைகளை வளர்க்கக் கூடாதா? என்று எழுதி வைத்தேன்; ''அடுத்த வரியில் மது குடிக்கிறவன் கொஞ்சம் கொஞ்சமாகச் சாகிறான்; குதிரைப் பந்தயத்தில் தோற்கிறவன் அதே இடத்தில் செத்துவிடுகிறான்; ஆகவே குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட வேண்டாமா?'' என்று எழுதி வைத்தேன். 'பாளை நினைவுகள்'' என்கிற புத்தகத்தில், அவைகள் எல்லாம் வெளிவந்தன.

ஆக நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது என்ன என்ன நினைத்தோமோ அதையெல்லாம் செய்கிறோம் என்பதற்கு அடையாளமாகத்தான் குதிரைப் பந்தயத்தை ஒழித்தோம்.



புரசைத்தொகுதி
காந்திநகர்
குடியிருப்புகள்.

மதுவிலக்குப் பற்றியும்,
குதிரைப் பந்தயம் பற்றியும்
குறிப்பிட்ட ஜெயப் பிரகாஷ்
அவர்கள் அதே விழாவில்
பரிசுச் சீட்டையும் ஒழித்துவிட்
டால் தமிழ்நாடு காந்தி
பிறந்த குஜராத்திற்கு நிகராக
விளங்கும் என்ருர். நான்
உடனே அதனுல் எவ்வளவு
நஷ்டம் வரும் என்று கூட
கருதாமல், அதே இடத்தில்
பரிசுச் சீட்டுகள் ஒழிக்கப்படும்
என்று அறிவித்தேன். அதற்
தும் அவர் பாராட்டுத் தெரி
வித்தார்.

ஏன் இதைச் சொல்லுகி
றேன் என்ருல், தமிழ்நாடு
காந்தியடிகளுடைய கொள்கை
களை நிறைவேற்றி வருகிறது
என்பதை எடுத்துக் காட்டத்
தான்; காந்தி பிறந்த அக்டோ
பர் 2-ஆம் தேதியோடு அரி
ஜனங்களுக்காக முப்பதாயிரம்
வீடுகள் கட்டி முடிக்கப்பட
விருக்கின்றன.

விவசாயத் தொழிலாளர்
களுக்குக் குடியிருப்பு மனை
1,75,000 பேர்களுக்கு நாம்
வழங்கியிருக்கிருேம். இரண்டு
நாளைக்கு முன்புதான் விவசா
யத்தொழிலாளர்கள் என்ற
பட்டியலில் விவசாயத்திற்குத்
துணை நிற்கிறவர்களையும்
சேர்த்துக் கொள்ள வேண்டும்;
கிராமப் புறத்தில் இருக்கிற
குருமான், கொத்தனுர், முடி
திருத்துவோர், சலவைத்
தொழிலாளிகள் என்று இப்
படிப்பட்ட கிராமப்புறத்தில்
இருக்கிற சிறு கருவி தொழிலா
ளர்கள் அனைவரையும், விவ
சாயத் தொழிலாளர்களாகவே
கருதி, அவர்களுக்கும் குடி
யிருப்பு மனைகளைச் சொந்த
மாக்க அரசு விரைவில் சட்டம்
செய்ய இருக்கிறது என்று
அறிவித்தேன்.

ஆக, கிராமங்களிலிருந்து—
பேரூர்களிலிருந்து —பட்டினக்
கரைகள் வரை மக்களுடைய
வீட்டு வசதிகளைப் பெருக்க
எடுத்துக் கொண்டிருக்கிற
இந்த முயற்சிகளில் இப்போது
வீட்டு வசதி வாரியத்தின்
சார்பாக, நாம் பல்வேறு கட்
டங்களில் பல்வேறு வகையான
வருவாய் உள்ளவர்களுக்கும்
வீடுகள் கட்டித் தருகிருேம்.

இன்றைக்குப் பொருளாதார
தில் பலவீனப்பட்டுள்ள (எக்க
னமிக்கலி வீக்கர்செக்ஷனுக்கு)
வீடுகள் கட்டித் தரப்படுகின்
றன. அதை மேலும் விரிவாக்
கும் வகையில், நானும் அந்தத்
துறை அமைச்சரும் கலந்து
பேசி, அதையும் சென்னையில்
விரிவுபடுத்துகின்ற ஒரு திட்
டத்தை வெகு விரைவில் இந்த
அரசின் சார்பில் நிறைவேற்ற
இருக்கிருேம் என்று தெரி
வித்துக் கொள்கிறேன்.

**[சென்னை எழும்பூர் தொகுதி கொய்யாத் தோப்புப் பகுதியில் குடிசைமாற்று வாரியத்தின் சார்பில் ரூ. 20 இலட்சம் செலவில் கட்டப்பட்ட 190 குடியிருப்புகளை 8-7-'75 அன்று திறந்து வைத்து முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை.]**

* * *

கடந்த மூன்று நாட்களில்
சென்னையில் மயிலை தொகுதி
யிலே குப்பைமேடு பகுதியில்
344 வீடுகளையும், புரசைத்
தொகுதியிலே காந்தி நகரில்
496 வீடுகளையும், நேற்று எழும்
பூர் தொகுதியில் கொய்யாத்
தோப்பில் 192 குடியிருப்புகளை
யும், இன்று இங்கே 488 குடி
யிருப்புகளையும் ஆக மொத்தம்
இந்த நான்கு நாட்களில் 1,520
வீடுகளையும் ஏழை எளிய
குடிசை வாழ் மக்களுக்காக
நாம் திறந்து வைத்திருக்
கிருேம்.

மேலும் இந்தத் தொடர்
விழாக்கள் 15-ஆம் தேதி ஆலை
யம்மன் பகுதியில் 308 வீடு
களும், 16-ஆம் தேதி பார்த்த
சாரதி நகரில் 120 வீடுகளும்,
17-ஆம் தேதி கிரே நகர் பள்
ளம் என்ற பகுதியில் 440 வீடு
களும், 22-ஆம் தேதி காசிமேடு
குப்பம் பகுதியில் 464 வீடு
களும் திறக்கப்பட்டு இந்த
மாதத்திலே மாத்திரம் 2,852
வீடுகள் திறக்கின்ற ஒரு பெரும்
சாதனையைக் குடிசை மாற்று
வாரியம் செய்திருக்கிறது.

சில பல ஆண்டுகளுக்கு
முன்பு போடப்பட்ட திட்டத்
தின் காரணமாக நகரம் அழ
காக இருக்க வேண்டும் என்கிற
எண்ணத்தோடு நகரத்திலே
சாலையோரத்திலே, குடிசை
களிலே வாழ்ந்த மக்களை அப்பு
றப்படுத்தி, வேறு பகுதியில்
போய் குடிசைகளைப் போட்டுக்
கொள் என்று சொல்லிவிட்டால்
மாத்திரம் நகரத்தின் அழகைக்
காப்பாற்றி விடலாம் என்று
முன்பிருந்தவர்கள் கருதி
ஞர்கள்.

அதன் மூலம் நகரத்தின்
அழகைக் காப்பாற்றலாம்;
ஆனல் நாட்டின் ஒற்றுமை
யைக் காப்பாற்ற முடியாது.
நாட்டின் பெருமையைக் காப்
பாற்றவும், மனிதாபிமான
உணர்வுகளைக் காப்பாற்றவும்,
அதிக அக்கறை கொண்ட இந்த
அரசு சென்னையிலே மாத்திர
மல்லாமல், தமிழகத்திலே
உள்ள பல்வேறு நகரங்கள்,
கிராமப் புறங்கள் உட்பட
எல்லா இடங்களிலும் மக்க
ளுடைய மிக அத்தியாவசியான
தேவைகளில் ஒன்ருன வீட்டு
வசதித் தேவையை நிறை
வேற்றி வைக்கும் பணியை
மேற்கொண்டிருக்கிறது.

எழும்பூர்தொகுதி கொய்யாத்
தோப்பு குடியிருப்புகள்.



சமுதாய நலத் தொண்டு
களில் இது மிக முக்கியமான
தொண்டாகும். பாம்புக்குக்
கூட வாழ்வதற்கு ஒரு புற்று
இருக்கிறது; பயங்கரமான
புலிக்குக் கூட குகை இருக்கி
றது. எறும்புகளுக்குக் கூட
வளை இருக்கிறது. ஆனல்
மனிதர்களாகப் பிறந்தவா
களுக்கு தாங்கள் வாழ்வதற்கு
ஓர் இடம் கிடையாது. அப்படி
ஓர் இடம் கிடைத்தாலும் அது
சுகாதார வசதியோடு கூடிய
தாக இருப்பதில்லை. பன்றிகளை
விடக் கேவலமாக, ஆடுமாடு
களைவிடக் கேவலமாக, வாழ
வேண்டிய ஒரு இக்கட்டான
சூழ்நிலைமனிதர்களாகப்பிறந்த
வர்களுக்கு ஏற்படுகிறதென்
ருல், அந்தக் கஷ்டத்தை அனு
பவிப்பவர்களுக்கு ஏற்படு
கின்றவேதனையைவிட, அந்தக்
கஷ்டத்தைப் பார்த்துக்கொண்
டிருக்கிற நமக்குத் தான் அதிக
வேதனைஏற்பட்டாகவேண்டும்.

அந்த வேதனையை எப்படித்
துடைப்பது? கண்ணீர் விடுவ
தால் அந்த வேதனை நீங்கி
விடுமா? நீங்காது. அனுதாப
வார்த்தைகளைச் சொன்னுல்
போதுமா? போதாது. ஆனுல்
அவைகளைக் கூடச் சொல்லாத
வர்கள் நாட்டில் இருக்கிருர்
கள். அந்தக் கண்ணீரை
வடிக்கக் கூடத் தயாராக இல்
லாதவர்கள் உலகத்திலே வாழ்
கிருர்கள்.

இன்றுபொறுப்பை ஏற்றுக்
கொண்டிருக்கிற இந்த அரசு,
நீண்ட நெடுங்காலமாக அதா
வது 18 ஆண்டுக் காலத்திற்கு
மேலாக ஒரு அரசியல் கட்சி
வடிவிலும், அதற்கு முன்பு 40,
50 ஆண்டுக் காலமாக ஏழை
எளிய மக்களுக்குப் பாடுபட
வேண்டும் என்ற பொதுநோக்
கோடும், அதிலும் குறிப்பாக
அடித்தளத்தில் இருக்கிற
மக்கள்—சமுதாயத்தால், பொரு

சைதைத்தொகுதி
கலைஞர் கருணாநிதிநகர்
குடியிருப்புகள்.



ளாதாரத் துறையால் பின்
தங்கிக் கிடக்கிற மக்கள்—ஆகி
யோரை வாழ வைக்க வேண்
டும் என்றமுனைப்போடு, எவை
யெவை இந்த நாட்டு மக்களுக்
காக நிறைவேற்றப்பட வேண்
டுமென்று சொன்னுேமோ,
அதை நிறைவேற்றுகின்ற
இடத்தில் அமர்ந்ததும் சொன்
னவைகளை மறந்து விடாமல்,
முடிந்த வரை செய்து காட்டு
கின்ற தன்மையைத்தான் இந்த
நாடு காண்கிறது.

இந்த அரசைப் பொறுத்த
வரையில் இதனுடைய பார்வை
எந்தப் பக்கம் செல்கிறது என்
பதை ஏழெட்டு ஆண்டுக்காலம்
கழக ஆட்சியை உன்னிப்பாகக்
கவனிப்பவர்கள் புரிந்து
கொள்ள முடியும். எங்கே
பிச்சைக்காரர்கள், தொழு
நோயாளிகள், கண்பார்வை
மங்கியவர்கள், மாடுகளைவிடக்
கேவலமாக கைரிக்ஷாக்களை
இழுப்போர், அனதைச் சிறு
வர்கள், ஆதரவற்ற கைம்
பெண்கள் இருக்கிருர்கள்
என்று தேடிப் பார்த்து, அவர்
களுக்கு வாழ்வளிக்கும் முயற்சி
யில் இந்த அரசு ஈடுபட்டு வரு
கிறது.

இப்படி இந்த நாட்டில் சமு
தாயத்தில், அடித்தளத்தில்
வாழ்கிறவர்கள், அனதைக
ளாக விடப்பட்ட என்ற வகை
யில் யார் யார் புறக்கணிக்கப்
பட்டுக் கிடக்கிருர்களோ,
அப்படிப் புறக்கணிக்கப்பட்ட
வர்கள் பக்கம்தான் இந்த
அரசின் பார்வை எட்டாண்டுக்
காலமாகச்சென்று கொண்டிருக்
கிறது.

இதற்கு என்ன காரணம்?
நாங்களே ஒரு காலத்தில் புறக்
கணிக்கப் பட்டவர்களாக
இருந்தோம். ஆகவேதான்
புறக்கணிக்கப்பட்டவர்களால்
தான் புறக்கணிக்கப்பட்டவர்
களை உணர முடியும்; அவர்
களுடைய கஷ்டம் தெரியும்
என்ற வகையில்தான் இந்த
அரசு அந்தப் பெரும் முயற்சி
யில் இன்றைக்கு ஈடுபட்டிருக்
கிறது.

ஆனல் எல்லாவற்றையும்
செய்து விட்டோம் என்ற மன
நிறைவு எங்களுக்கு ஏற்பட்டு
விட்டதா என்ருல் இல்லை.
இந்த அரசுக்கு இருக்கிற அதி
காரத்தைக் கொண்டு, நிதி
ஆதாரங்களைக் கொண்டு
இயன்ற அளவிற்கு நாட்டுமக்க
ளுடைய கஷ்டத்தைப் போக்
கும் தொண்டை செய்துவருகி
ருேம்.

இங்கே கட்டப்பட்டிருக்கிற
இந்த எழில் மாடங்களைக்
காண்கிறேன். இந்த மாடங்
களில் உள்ள பால்கனியில்
இங்கே வாழப் போகிறவர்கள்
நின்று கொண்டு, இந்தக் கூட்
டத்தினைக் கவனித்துக் கொண்
டிருக்கிருர்கள். இவ்வளவு
அழகான கட்டடங்கள் குடிசை
களில் வாழ்கிற மக்களுக்குக்
கிடைக்குமா என்ற ஏக்கப்
பெருமூச்சு ஒருகாலத்தில் எங்
களுடைய உள்ளத்தில் எழுந்
தது. அந்த ஏக்கத்தைத்
துடைக்கின்ற முதல் முயற்சி
யாகத் தான் இந்த வாரியத்
தை நாங்கள் உருவாக்கினேம்.



தியாகராயநகர் பகுதி
ஆலையம்மன் கோயில்
குடியிருப்புகள்.



# LIC கட்டடம் தீ விபத்து



தீக்கிரையான மேஜை நாற்காலிகள்.

சென்னை மாநகரத்திலேயே மிக உயரமான கட்டடம் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்குச் சொந்த மான பதினைந்து மாடிக் கட்டட மாகும்.

174 அடி உயரமுள்ள இந்தக் கட்டடத்தில் கடந்த ஜூலை 11-ஆம் நாள் இரவு 8.15 மணி அளவில் தீ பிடித்தது. இந்தப் பயங்கரத் தீயை அணைக்கத் தீயணைப்புப் படை வீரர்கள் மொத்தம் 22 மணிநேரம் இடைவிடாமல் போராடி வென்ற னர்.

1958-ஆம் ஆண்டில் ஆயுள் காப்பீட்டு நிறுவனம் தனியார் துறை நிறுவனமாக இருந்த பொழுது சட்டப்பட்ட கட்டடம் இது. அப்பொழுதே இதன் மதிப்பு ஏறத் தாழ ஒரு கோடி ரூபாயாகும்.

இந்தக் கட்டடம் ஓரியண்டல் பயர் அண்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனியில் ரூ. 1 கோடியே 20 இலட்சத்துக்கு 'இன்ஷூர்' செய்யப் பட்டுள்ளதாம்.

நாடு சுதந்தரம் அடைந்த பிறகு இவ்வளவு பெரிய தீ விபத்து சென்னை நகரில் ஏற்பட்டதில்லை.

சென்னை நகரிலுள்ள எல்லாத் தீயணைப்பு வண்டிகளும் இத்தீயைத் தடுக்கக் கடுமையாகப் போராடின. ஏறத்தாழ 40 யூனிட் தீயணைப்புப் படையினர் இப்பணியில் ஈடுபட்டனர்.

தீயணைப்புத் துறையில் கடுமை யான உழைப்புப் போன்று, தமிழ் நாடு காவல்துறையினரும் அரும் பாடுபட்டனர். இவர்கள் அனைவ ருக்கும் ஆயுள் காப்பீட்டுக் கழக நிருவாகிகள் நன்றி தெரிவித் துள்ளனர்.

உயிரைப் பணயம் வைத்துத் தீத்தணிப்புப் பணியில் ஈடுபட்ட தீயணைப்பு வீரர்களுக்குத் தமிழக மக்கள் அனைவரும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்கள்.

சென்னை மாநகர வரலாற்றில் மிகக் கொடுமையான இத் தீவிபத் தில் ஓர் உயிரும் பலியாகவில்லை என்பது ஆறுதளிக்கக் கூடிய செய்தியாகும்.

தீவிபத்துக்கான காரணங்கள் பற்றித் தமிழகக் குற்றப் புலனாய்வுப் பிரிவைச்சார்ந்த காவல்துறையினர் ஆய்வு நடத்தி வருகின்றனர்.

தீவிபத்துக்குட்பட்ட கட்டடத்தின் உட்பகுதிகளை முதல்வர் பார்வையிட்டார்.







# கொடி கண்டேன்!

அழகொழுகுந் தாமரைப்பூ மலர்ந்து காட்ட
அதன்நடுவே இருகுவளை விரிந்தி ருக்க
எழில்தவழும் எள்ளின்பூ எடுப்பாய் நிற்க
இனியநிறத் தரக்காம்பல் அவிழ்ந்து தோன்ற
கொழுமுகைகள் செறிமுல்லை வரிசை காட்டக்
குவிகமலம் மலராது நிமிர்ந்து நிற்கச்
செழுமையுறு செங்காந்தள் விரிந்து தோன்றச்
செப்பரிய மெல்லியநல் லனிச்சம் தாங்கி,

ஒசிந்தாடி வருகின்ற கொடியைக் கண்டேன்
உள்ளமெலாம் நயந்தோடி உருகி நின்றேன்;
கசிந்தோடி அன்புக்குக் கரைகள் கட்டிக்
காப்பமைத்தேன்; ஆயினுமவ் வன்பு பொங்கி
வசங்காணுக் காதலெனும் வடிவங் கொண்டு
வாட்டியதால் அக்கொடியின் மலர்கள் தம்மைக்
கசங்காமல் நுகரஎழும் ஆசை காட்டிக்
கண்ணிமைக்க மனமின்றி நோக்கி நின்றேன்.

அவள்முகத்தில் மாங்கதுப்பில் அரும்பி நின்ற
அணிமிகுந்த இளஞ்சிவப்பை, மலையில் மண்ணில்
தவழ்நிறத்துப் பூவிலெலாங் கண்ட தில்லை!
தமிழச்சி நாணத்தின் வண்ணம் போலும்!
குவளைமலர்க் கருவிழியை ஓரம் போக்கிக்
குனிந்துநிலம் கால்விரலால் கிளறி நின்றாள்
தவளமலர் நகைமறைத்து இதழ்கள் மீது
தனித்துடிப்பை முறுவலொடு தவழ விட்டாள்.

பூப்பொறித்த மேலாடை திருத்தி விட்டாள்
புறமுதுகில் தொங்குகிற சடையை மார்பின்
மேற்புறத்துப் படரவிட்டாள்; பார்த்த பின்னர்
மேலுமதைப் பின்புறத்தே புரள விட்டாள்;
யாப்புறுத்த என்மனத்தைத் துடிக்க வைத்தாள்;
எழிலெல்லாந் தன்னிடத்தே படைத்து வைத்துக்
காப்பளிப்பாள் செய்கின்ற செய்கை எல்லாம்
காதலுக்கோர் அறிவிப்பாம் என்று கண்டேன்.

செம்புலத்துப் பெயல்நீர்போல் இருவர் நெஞ்சும்
சேர்ந்தமையால் இல்லறத்துப் பள்ளி புக்கோம்
ஐம்புலத்தை ஒருபுலமே யாக்கி யங்கே
அளப்பரிய கலைபலவுங் கற்று வந்தோம்
அம்புவிக்கு விளக்காக விளங்குந் திங்கள்
அளவில்பல விண்மீன்கள் அகன்ற வானம்
எம்முளத்தில் புதியகதை பலவுஞ் சொல்ல
இணைகூற முடியாத உலகஞ் சென்றோம்!

கவியரசு முடியரசன்



# தமிழ்நாடு அரசின் கூட்டுத் துறையைச் சார்ந்த தொழிற்சாலைகள்!

— ஆர். எம். —

**(1) சதர்ன் பெட்ரோ கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேசன் லிமிடெட்:—**

யூரியா, என்.பி.கே. கூட்டு உரம் போன்ற மிகத் தேவையான உரவகை உற்பத்தி செய்வதற்குக் கூட்டுத்துறையில் ஊக்குவிக்கப்பட்டுள்ளன. மிக முதன்மையான முக்கியத் தொழில் முயற்சிகளில் 'ஸ்பிக்' (SPIC) ஒன்றாகும். இத்திட்டத்தின் மூலதன முதலீடு ரூபாய் 90 கோடி அளவில் இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது. தூத்துக்குடியில் நிறுவப்பட்டுள்ள இத்திட்டம் அதன் முதற்கட்டத்தில் நாளொன்றுக்கு 1,100 டன் அமோனியாவையும், நாளொன்றுக்கு 1,600 டன் யூரியாவையும், நாளொன்றுக்கு 600 டன் DAP/NPK உரங்களையும், நாளொன்றுக்கு 470 டன் கந்தக அமிலத்தையும், நாளொன்றுக்கு 165 டன் பாஸ் ாரிக் அமிலத்தையும் உற் த்தி செய்யும் என்று எதிர் ார்க்கப்படுகிறது.

இந்த நிறுவனம் இங்கிலாந் லிருந்து தேவையான இயந் ரங்களைத் தருவித்ததில் சில டர்ப்பாடுகளை ஏற்க நேரிட் து. இதன் காரணமாக இத் ட்டம் கால அட்டவணைப் ் உற்பத்தியைத் தொடங்க யலவில்லை. இந்த இடர் ாடுகள் இப்பொழுது இந் றுவன நிருவாகிகளால் ர்க்கப்பட்டுவிட்டன. 1975 ன் மாதத்தில் யூரியா உற் ்தியைத் துவங்கிய இத் திட் ் இவ்வாண்டு செப்டம்பர் தத்தில் கூட்டு உர பத்தியைத் தொடங்கும் று எதிர்பார்க்கப்படுகிறது. ாகு உற்பத்தி செய்யப்படும் வகைகளில் 60 சத அளவு ழ் நாட்டில் கூட்டுறவுச் ங்களின் வாயிலாக வழங் படும். இத்திட்டம் ஏறத்தாழ 1,200 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது.

**(2) தூத்துக்குடி ஆல்கலி கெமிகல்ஸ் லிமிடெட்:—**

இந்த நிறுவனம் தூத்துக்குடி கடற்கரைப் பகுதிகளிலிருந்து கிடைக்கும் உப்பையும், 'ஸ்பிக்' நிறுவனத்திலிருந்து உபரியாகக் கிடைக்கும் அமோனியாவையும் பயன்படுத்தி சோடா ஆஷ், அமோனியம் குளோரைடு ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்காக 'டிட்கோ', 'ஸ்பிக்' ஆகியவற்றின் கூட்டு முயற்சியாகப் பதிவு செய்து நிறுவப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 70,000 டன் சோடா ஆஷ், 70,000 டன் அமோனியம் குளோரைடு ஆகியவற்றை உற்பத்தி செய்யும். மற்றும், இது ஆண்டொன்றுக்கு 5,000 டன் மெலாமைன் ( Melamine ), ஆண்டொன்றுக்கு 1,200 டன் எல்-லைசின் (L. Lysine) ஆகியவற்றையும் கூடுதலாக உற்பத்தி செய்யும் எனக் கருதப்படுகிறது. சோடா ஆஷ், அமோனியம் குளோரைடு ஆகியவற்றிற்காக மொத்த திட்ட செலவு ரூபாய் 28.60 கோடி என்று மதிப்பிடப்படுகிறது. இதில் வட்டி இல்லாத மூலதனம் ஏறத்தாழ ரூபாய் 10 கோடியாகும். இத்திட்டம் தூத்துக்குடியில் 'ஸ்பிக்' தொழிற்சாலைக்குப் பக்கத்தில் நிறுவப்படும். சோடா ஆஷ், அமோனியம் குளோரைடு ஆகியவற்றிற்காக ஜப்பானிலுள்ள திருவாளர்கள் ஹித்தாச்சி ஜோசன் என்கிற நிறுவனத்திடம் வெளிநாட்டுத் தொழில் நுட்ப உத்தியைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் முடிவு செய்யப் பெற்றுள்ளது. இத்தொழிலுக்கான வெளிநாட்டு உடனுழைப்புச் செயற்குறிப்புகளுக்கு இந்திய அரசு ஏற்பளிப்பு வழங்கிவிட்டது. இத்தொழிற்சாலை 1977-78-இல் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது ஏறத்தாழ 600 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும்.

**(3) தமிழ்நாடு கெமிக்கல் பிராடக்ட்ஸ் லிமிடெட்:—**

இராமநாதபுர மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்தில் உள்ள கழனிவாசல் கிராமத்தில் ஆண்டொன்றுக்கு 3,300 டன் சோடியம் ஹைட்ரோ ஸல்பைட்டை இந்நிறுவனம் உற்பத்தி செய்யும். இந்த இரசாயனப் பொருள் பஞ்சாலைத் தொழிலுக்குத் தேவையான 'வாட்' (Vat) சாயங்களில் பயன்படுத்துவதற்காகத் தேவைப்படுகிறது. துத்தநாகத்தைப் பயன்படுத்தாமல் சோடியம் ஹைட்ரோ ஸல்பைட்டை உற்பத்தி செய்யும் இந்தியாவிலுள்ள முதல் தொழிற்சாலை இதுவாகவே இருக்கும். இதன் விளைவாக அந்நியச் செலாவணி பெரிதும் மிச்சப்படும். ஜப்பானிலுள்ள திருவாளர்கள் மிட்சுபிஷி கார்ப்பரேஷன் என்கிற நிறுவனத்துடன் வெளிநாட்டு உடனுழைப்பு ஏற்பாட்டிற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் மூலதனச் செலவு ரூபாய் 1.30 கோடியாகும். திருவாளர்கள் 'டேவி பவர்காஸ் லிமிடெட்' நிறுவனத்தினர், விரிவான பொறியியல் பணிகளை மேற்கொள்ளுமாறு நியமிக்கப்பட்டுள்ளனர். கருவிகள் பெறுவதற்கான ஆணைகள் அனுப்பப்பட்டு விட்டன. நிதி உதவும் நிறுவனங்கள் தவணைக் கடன்களுக்கு ஒப்பளிப்பு வழங்கி விட்டன. இந்த நிறுவனத்தின் வட்டி இல்லாப் பங்கு மூலதனம், முன்னுரிமைப் பங்கு மூலதனம் ஆகியவற்றிற்கும் இவை உத்திரவாதம் அளித்துள்ளது. இந்தத் தொழிற்சாலை, 1976 பிப்ரவரியில் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏறத்தாழ 500 பேருக்கு இது வேலை வாய்ப்பு அளிக்கும்.



**(4) தமிழ்நாடு ரப்பர் லிமிடெட்:—**

டயர்கள், ட்யூப்புகள் உற்பத்தி செய்வதற்கான பெரிய கூட்டுத்துறைத் திட்டங்களில் இது ஒன்றாகும். இத் தொழிற்சாலையின் திறனளவு ஆண்டொன்றுக்கு டயர்கள், ட்யூப்புகள் ஒவ்வொன்றிலும் 4 இலட்சம் உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாகும். இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் வட்டத்திலுள்ள காரியூர் கிராமத்தில் இத் தொழிற்சாலை நிறுவப்படுகிறது. இப்பகுதி தொழிற்துறையில் பின்தங்கியதாகும். அமெரிக்காவிலுள்ள 'ஜெனரல் டயர்ஸ் இன்டர்நேஷனல் கம்பெனி' என்கிற புகழ்பெற்ற வெளிநாட்டு நிறுவனத்துடன் தொழில்நுட்ப உடனுழைப்பு உடன்பாடு செய்துகொண்டு இத்தொழிற்சாலை 1976-77-ல் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலதனச் செலவு ரூபாய் 25.50 கோடியாகும் என்று மதிப்பிடப்படுகிறது. இதில் வட்டி இல்லா மூலதனம் ரூபாய் 8.50 கோடியாகும். இந்திய அரசு மூலதன சரக்குகள் விண்ணப்பத்திற்கும் ஏற்கெனவே ஒப்புதல் அளித்துவிட்டது. ரூபாய் 6.20 கோடி மதிப்பிற்கு மூலதனச் சரக்குகளை இறக்குமதி செய்வது பற்றி முடிவு செய்யப்பட்டு வருகிறது. உள்நாட்டு இயந்திரங்கள் நீண்டநாள் அடிப்படையில் ஒப்படை தர வேண்டி இருந்ததால், அத்தகைய பலவகை இயந்திரங்களுக்கும் ஆணைகள் அனுப்பப்பட்டு விட்டன. நிதி உதவி பெறுவதற்காக கடன் வழங்கும் நிறுவனங்களிடம் ஏற்கனவே இந்த நிறுவனம் தேவையான மனுக்களைத் தாக்கல் செய்துள்ளது. அனுமதிக் கடிதம் தொழில் உரிமமாக மாற்றப்பட்டு விட்டது. இத்திட்டம் ஏறத்தாழ 800 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும்.

**(5) தமிழ்நாடு குரோமேட்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட்:-**

இந்த நிறுவனம் வடஆர்க்காடு மாவட்டம் இராணிப்பேட்டை தொழிற்பேட்டையில் அமைக்கப்பட்டுள்ளது. தென் இந்தியாவில் உள்ள சாயத் தொழிற்சாலைகளில் ஆண்டொன்றுக்கு மிகுதியாகத் தேவைப்படுகிற அடிப்படை குரோமியம் ஸல்பேட் சாயத்தூள் 3,300 டன்னும், சோடியம் 'டைக்ரோமேட்' 2,500 டன்னும், சோடியம் ஸல்பேட் 2,400 டன்னும் உற்பத்தி செய்யும். இத்திட்டத்தின் மூலதனச் செலவு ஏறத்தாழ ரூபாய் 154 இலட்சம். இதற்கு வெளிநாட்டு உடனுழைப்புத் தேவையில்லை. இதற்குத் தேவையான மூலப்பொருட்களும் உள்நாட்டிலேயே கிடைக்கின்றன. இத்தொழிற்சாலை பெரும்பாலும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. இது விரைவில் உற்பத்தியைத் தொடங்கும். ஏறத்தாழ 500 பேருக்கு இது வேலை வாய்ப்பு அளிக்கும்.

**(6) பாண்டியன் கெமிக்கல்ஸ் லிமிடெட்:—**

ஆண்டொன்றுக்கு 1,825 டன் பொட்டாஷியம் குளோரைடு உற்பத்தி செய்யும் வகையில் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. மதுரை மாவட்டம், மேலூர் வட்டத்தில் உள்ள நரசிங்கம்பட்டி கிராமத்தில் இது அமைக்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவு ரூபாய் 80 இலட்சமாகும். இந்நிறுவனத்தின் கட்டட வேலைகள் பெரும்பாலும் முடிவடைந்துவிட்டன. இதில் உற்பத்தி ஆகும் பொட்டாஷியம் குளோரேடு, இதற்கு அருகிலுள்ள பகுதிகளில் செயல்படும் எண்ணற்ற தீக்குச்சித் தொழிற்சாலைகளுக்குப் பெரிதும் தேவைப்படுகிறது. 1975 ஏப்ரல் திங்களுக்குள் இத்தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏறக்குறைய 200 பேருக்கு இதில் வேலைவாய்ப்பு கிட்டும்.

**(7) சதர்ன் போராக்ஸ் லிமிடெட்:-**

இந்த நிறுவனம் ஆண்டொன்றுக்கு 15,000 டன் 'போராக்ஸ்'



**(17) ஏஷியன் பேரிங்ஸ் லிமிடெட்:-**

இந்நாட்டில் பொறியியல் தொழில்களில் பெரிதும் தேவைப்படுகிற பால்பேரிங்குகள் (Ball bearings) உருளை ரோலர் பேரிங்குகள், ஊசி ரோலர் பேரிங்குகள், கோள ரோலர் பேரிங்குகள் போன்ற பற்பல வகையான 50 இலட்சம் பேரிங்குகளை இந்நிறுவனம் உற்பத்தி செய்யும். இத்திட்டத்தின் மூலதனச் செலவு ரூபாய் 10 கோடியாகும். தருமபுரி மாவட்டம் ஒசூருக்கு அருகில் இது அமைக்கப்படும். இதில் அமைப்பதில் வெளிநாட்டு தொழில்நுட்ப அறிவு பெறப்படும். சுமார் 1,100 பேருக்கு இது வேலைவாய்ப்பு அளிக்கும். 1977 ஏப்ரல் திங்களில் இது உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**(18) அரக்கோணம் வார்பட கொல்லுலைத் தொழிற்சாலை:—**

'டிட்கோ', 'கே.சி.பி.' நிறுவனம் ஆகியவற்றின் கூட்டு முயற்சி இது. ஆண்டொன்றுக்கு 1,000 டன் வரை கனரக வார்ப்படங்களைத் தயாரிப்பதற்காக அரக்கோணத்திலுள்ள தமிழ்நாடு உருக்காலை நிறுவனத்தின் மின்ஒளி உலையில் கிடைக்கக்கூடிய உலோகத்தை உருக்கும் வசதியைப் பயன்படுத்திக் கொள்வதற்கு இந்நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு ரூபாய் 1 கோடியாகும். இந்நிறுவனம் சோதனை அடிப்படையில் கனரக வார்ப்படங்களை உற்பத்தி செய்யத் தொடங்கியுள்ளது. இதில் ஏறத்தாழ 100 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

**(19) ஸ்டைரோ பிலிம்ஸ் லிமிடெட்:-**

இத்தொழிலை கூட்டுத்துறையில் மேம்படுத்துவதற்கான செயற்குறிப்பை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. ஆண்டொன்றுக்கு 1,000 டன் திறனளவு



கொண்ட ஈரிருசுப் பாங்குள்ள பாலிஸ்ட்ரின் படச்சுருள்களை உற்பத்தி செய்வதற்கு திருவாளர்கள் 'இண்ஸ்ட்ரியல் கெமிக்கல்ஸ்' நிறுவனத்தைச் சேர்ந்த திரு. என். சங்கர் அவர்களுடன் சேர்ந்து இத்தொழில் மேம்படுத்தப்படும். ஸ்டைரோ பிலிம்ஸ் லிமிடெட் என்கிற பெயரில் இந்நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு ரூபாய் 1.70 கோடியாகும். அடையாறு 'இன்ஸ்ட்ரானிக்ஸ் கேம்பஸ்' வளவில் இத்தொழிற்சாலை அமையும். இத்திட்டத்திற்கான மூலதனச் சரக்குகள் மனுவிற்கு இந்திய அரசு ஏற்பளிப்பு வழங்கிவிட்டது. இந்நிறுவனம் நிதி உதவி பெறுவதற்காக கடன் வழங்கும் நிறுவனங்களை அணுகியுள்ளது. 1976 ஏப்ரல் திங்களுக்குள் உற்பத்தி தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**(20) இண்டர் காண்டினென்டல் லெதர்ஸ் லிமிடெட்:—**

கையுறைத்தோல், ஆடைகள் தோல், மேல் தோல், உட்புறத்தோல் போன்ற தோல் வகைகளை உற்பத்தி செய்வதற்கான முழு அளவு ஏற்றுமதிப் பாங்கு கொண்ட திட்டத்தை இந்நிறுவனம் செயல்படுத்தும். இது ஆண்டொன்றுக்கு 36.20 இலட்சம் சதுர அடி தோல் உற்பத்தி செய்யும் திறனளவைக் கொண்டிருக்கும். இத்திட்டத்தின் மூலதனச் செலவு ரூபாய் 155 இலட்சமாகும். இத்திட்டம், ருமேனியாவில் புக்காரஸ்டிலுள்ள திருவாளர்கள் 'லெதர் சென்ட்ரல்' என்கிற நிறுவனத்தின் தொழில்நுட்ப உடனுழைப்புடன் அமைக்கப்பட்டு வருகிறது. செயற்குறிப்புகளுக்கு இந்திய அரசு ஏற்பளிப்பு வழங்கிவிட்டது. 1976-77-ல் இத்தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏறத்தாழ 100 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும்.

## சிறுதொழில்களைத் தொடங்குவதற்கான நடைமுறை

அரசு நிருவாகச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பரிவுரையின்பேரில், சிறுதொழில்களைத் தொடங்குவதற்கான நடைமுறை எளிதாக்கப்பட்டுள்ளது. அதன்படி, தற்போது தொழில் முனைவோர், தங்கள் பகுதியைச் சார்ந்த தொழில் வணிகத்துறை உதவி இயக்குநர் அவர்களை மட்டும் அணுகினால் போதுமானது. அவர், தொழில்முனைவோர் சார்பில் மற்ற எல்லா அலுவலர்களுடனும் தொடர்புகொண்டு தேவையான அனுமதியைப் பெற்றுத் தருவார்.

# மின்சார, மின்னணுத் தொழில்களின் வளர்ச்சி!

தமிழ்நாட்டில் மின்சார, மின்னணுத் தொழில்களின் வளர்ச்சிக்குப் பெரும் வாய்ப்புள்ளதால் தொழில் -வணிக இயக்குநர் அலுவலகத்தில் 1-12-1972 முதல் செயல்பட்டு வரும், மின்சார மின்னணுப் பிரிவு இம்மாநிலத்தில் மின்சார மின்னணுத் தொழில் மேம்பாடு தொடர்பான பணிகள் அனைத்தையும் கவனிக்கிறது. மின்சார, மின்னணுத் தொழில் பிரிவு அடைந்த முன்னேற்றத்தின் முக்கியமான கூறுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட தொழில்களுக்கான தொழில் பேட்டைகள் : (அ) **மின்சாரக் கருவிகள், பேட்டை.**- பதினான்கு தொழிற்சாலைகளுடன் காக்கலூரில் அமைக்கப்பட்ட மின்சாரக் கருவிகளுக்கு உரித்தான தொழில்பேட்டை, மின்னணுக் கருவிகளுக்கு வேண்டிய உலோக ஆக்ஸைடுரெஸிஸ்டர்கள், பாலிஸ்டர், கபாஸிட்டர்கள், மின்கம்பித் துணைச் சாதனங்கள், மின்கம்பிக் காப்புறைப் பொருட்கள், 'ஸிவிட்சிகியர்' ஆகியவற்றை உற்பத்தி செய்து, மிகவும் திறம்படச் செயல்பட்டு வருகிறது. இது 100 பேருக்கு நேரடியாகவும், 200 பேருக்கு மேல் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு அளித்து வருகிறது. ஆண்டொன்றுக்கு மொத்த வியாபாரத் தொகை ரூபாய் 8.00இலட்சமாக இருந்து வந்துள்ளது. அடுத்த இரு ஆண்டுகளுக்குள் இது ரூபாய்35 இலட்சமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**(ஆ) இன்ஸ்ட்ரானிக்ஸ் எஸ்டேட் அடையாறு:** மின்கருவிகள், மின்னணுக் கருவிகள் தயாரிக்கும் விக்ரம் சாராபாய்தொழில் பேட்டை தொழில் நுட்ப வல்லுநர்களுக்காக முதல் கட்டத்தில் 37 தொழிற்சாலைகளைக் கொண்டு செயல்படத் தொடங்கியுள்ளது. இரு கட்டங்களுக்குமாக இந்த தொழிற்பேட்டையின் மொத்த முதலீடு ரூபாய் 45 இலட்சமாகும். முடிவாக நன்கு அமைந்த மின்னணுமின்கருவித்தொழிற்சாலைகள் 65-ஐ இந்தத் தொழில்பேட்டை கொண்டிருக்கும்.

இந்தத் தொழில்பேட்டையில் உள்ள தனியார் தொழிற்சாலைகள் நவீன ''பிராசஸ் கண்ட்ரோல்கள்'', டெலிவிஷன் பெட்டிகளுக்கு வேண்டிய 'டிஃப்ளக்ஷன்' கருவிகள், லீனியாரிடி கண்ட்ரோல்கள், தொழில் சார்ந்த வெப்பமானிகள், பொடி மின்குமிழ்கள், கார் வானொலிப் பெட்டிகள், சிறப்பு மின் அணுக் கருவிகள் கண்ணாடிக் கருவிகள் முதலியவற்றை இப்போது தயாரித்து வருகின்றன. கார் வானொலிப் பெட்டிகள் இங்கிலாந்துக்கும் ஏனைய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

இந்தத் தொழிற்சாலைகள் 300 பேர்களுக்கு நேரடியாகவும், 1,000-க்கும் அதிகமான பேர்களுக்கு மறைமுகமாகவும் வேலையளித்து வருகின்றன. அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் இத்தொழிற்சாலைகள் 1,500 பேருக்கு நேரடியாகவும், 3,000 பேருக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்பளிக்கும் வளம் பெற்றிருக்கும்.

**2. கருவிகளைச் சோதித்துப் பார்க்கும் வசதிகள்**

காக்கலூரில் அமைக்கப்பட்ட மத்திய மின்கருவிச் சோதனை ஆய்வுக்கூடம் செயல்படத்தொடங்கி, மின்கருவிகள், கூட்டமைப்புகள், பாகங்கள், அமைப்புகள் ஆகியவைகளின் தயாரிப்புக்குப் பிறகு சோதித்து சரிபார்க்கும் வசதிகளை அளித்து வருகிறது.

இந்த ஆய்வுக் கூடத்தைச் சோதனை சான்றுகள் வழங்கும் நிறுவனமாக இந்தியத் தர நிறுவனம் ஏற்றுள்ளது. மின்சாரத் தொழிலுக்குக் குறிப்பாக சிறு தொழிலுக்கு இந்த ஆய்வுக் கூடம் மிகவும் பயனுள்ளதாக உள்ளன.

அடையாறில், ரூபாய் 35 இலட்சம் செலவில் சோதனையிடல்-சான்றளித்தல்-பொருள் வளர்ச்சிக்குரிய மைய ஆய்வுக் கூடம் (Central Testing Certification and Product Development Laboratory) ஒன்று நிறுவப்பட்டு வருகிறது. இதில் ரூபாய் 14.83 இலட்சம், தனிச் சோதனைக் கருவிகளை வாங்குவதற்காக இந்தியா அரசின் மின்னணுவியல் துறையிடமிருந்து மானியமாகப் பெறப்பட வேண்டும். மின்னணுவியல் கருவிகள், பாகங்கள், மனமகிழ் சாதனங்கள் (Entertainment Equipment) ஆகியவற்றைச் சோதனை செய்வதற்கான வசதிகளுடன் அடையாறில் உள்ள டாக்டர் விக்ரம்சாராபாய் இன்ஸ்டிரானிக்ஸ் எஸ்டேட்டில் இந்த ஆய்வுக்கூடத்திற்கான முதல் நிலைப் பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன. பொருள் வளர்ச்சி ஆலோசனை பரிசோதனைக்கான இயங்கும் ஆய்வுக்கூட வசதிகள் ஆகியவை இந்த ஆய்வுக்கூடத்தில் உள்ளன. இது 1975-ஆம் ஆண்டு மத்தியில் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தகுதி பெற்ற 75 பொறியாளர்களுக்கும், கை வினைஞர்களுக்கும் நேரடியாக வேலை அளிப்பதோடு மின்னணுத் தொழிலுக்கும் குறிப்பாக சிறு தொழிலுக்கு சோதனை —வளர்ச்சி வசதிகளை அளிக்கும்.

**3. மின் மருத்துவச் சாதனங்களுக்கான செப்பனிடு நிலையம்**

கிண்டியில் மின் மருத்துவ
சாதனங்களைச் செப்பனி
வதற்காக ரூபாய் 16 இலட்ச
செலவில் அமைக்கப்பட்ட
மத்தியக் குழுவும், தஞ்சை
மதுரை ஆகிய இடங்களி
அமைக்கப்பட்ட துணைப் பிரி
களும், இம்மாநிலத்திலுள்
மருத்துவ, கால்நடை மரு
துவ, ஏனைய நிறுவனங்க
விருந்து வரப்பெற்ற மொத்த
ரூபாய் 15.00 இலட்ச
மதிப்புடைய 16,000-க்கு
மேற்பட்ட சாதனங்களுக்
மேல் இதுவரையில் பழு
பார்த்துச் செப்பனிட்டு
கொடுத்துள்ளன. இம்மூன்

3,000 டன் 'போரிக் அமிலம்' ஆகியவற்றை உற்பத்தி செய்யும். இவ்விரண்டும் கண்ணுடி உற்பத்தியிலும், மருந்துப் பொருள்கள் தொழிலிலும் பெரிதும் பயன்படுகின்றன. இத்திட்டத்தின் மூலதனச் செலவு ரூபாய் 94 இலட்சம் என்று மதிப்பிடப்படுகிறது. செங்கற்பட்டு மாவட்டம் சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள தச்சூர் கிராமத்தில், இத்தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது. கட்டட வேலைகள் நடந்தேறி வருகின்றன. 1975 ஜுலைத் திங்களில் இத்தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கிட்டத்தட்ட 150 பேருக்கு இது வேலைவாய்ப்பு அளிக்கும்.

### (8) தமிழ்நாடு புளோரின் அண்டு அலைடு கெமிக்கல்ஸ் லிமிடெட்:-

இந்நிறுவனம் தயாரிக்கவிருக்கும் பொருள் அலுமினியம் புளோரைடு ஆகும். இது அலுமினிய உற்பத்திக்குத் தேவைப்படுகிறது. இத்திட்டத்தின் மூலதனச் செலவு ரூபாய் 5.50 கோடியாகும். இராமநாதபுரம் மாவட்டம் மணலூர் கிராமத்தில் இத்தொழிற்சாலை நிறுவப்பட்டு வருகிறது. இப்பகுதி தொழில் துறையில் பின் தங்கிய பகுதியாகும். இத்தொழிற்சாலையின் ஆண்டு உற்பத்தி அளவு 6,000டன் ஆகும். ஸ்விட்சர்லாந்திலுள்ள திருவாளர்கள் ஏ.ஜி. பஸ் (Buss) நிறுவனத்தார் தொழில் நுட்ப அறிவுரையும், அடிப்படைப் பொறியியல் உதவிகளும் அளிப்பதாகச் சொன்னதன் பேரில் 1973 ஆகஸ்ட் திங்களில் எஃப். ஐ. பி. (FIB) மனு இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. இந்திய அரசின் ஏற்பளிப்பு எதிர்பார்க்கப்படுகிறது. திருவாளர்கள் 'இண்டஸ்ட்ரியல் அண்டு அக்ரிகல்சுரல் கன்சல்டன்ட்ஸ்' என்னும் நிறுவனம் இத்திட்டத்திற்கான இந்திய ஆலோசகர் ஆவர். 1977 ஏப்ரல் திங்களில் இத்திட்டம் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் சுமார் 300 பேருக்கு வேலைவாய்ப்பு கிட்டும்.

### (9) மிக நுண்ணிய அளவைக் கருவிகள் நிறுவனம்:—

மைக்ரோ மீட்டர்கள், வெர்னியர் காலிப்பர்கள், டையல் கேஜிகள், ஸ்லிப் கேஜுகள், போர் கேஜுகள் (Bore gauges) போன்ற பொறியியல் துறைகளில் பயன்படுத்தும் மிக நுண்ணிய அளவைக் கருவிகளை (Fine measure Instrument Ltd.) இந்நிறுவனம் உற்பத்தி செய்யும். சென்னை அடையாற்றிலுள்ள 'இன்ஸ்ட்ரானிக்ஸ் கேம்பஸ்' வளவில் இத்தொழிற்சாலை அமைக்கப்படும். இதன் மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவு ரூபாய் 80 இலட்சமாகும். 1976 மார்ச் திங்களில் இத்தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, ஏறத்தாழ 100 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும்.

### (10) தமிழ்நாடு தாதா பார்மாஸ்யூடிக்கல்ஸ் லிமிடெட்:—

இம்மாநிலத்தில் மருந்து பொருள்கள் உற்பத்தித் தொழிலை மேம்படுத்தவும், தரமான மருந்துகளும், உயிர் காக்கும் மருந்துகளும் தொடர்ந்து கிடைத்து வரவும் 'டிட்கோ' நிறுவனம், மருந்துப் பொருள் உற்பத்தித் தொழிலில் புகழ்பெற்ற நிறுவனமான திருவாளர்கள் 'தாதா மருந்துகள் மற்றும் மருந்துப் பொருட்கள் பிரைவேட் லிமிடெட்' என்கிற நிறுவனத்துடன் சேர்ந்து 1973, மே திங்களிலிருந்து இது உற்பத்தியைத் தொடங்கிற்று. செங்கற்பட்டு மாவட்டம் பல்லாவரத்தில் இதன் தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது. இது 500 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது. இதன் செயல் முறைகளை விரிவாக்கவும், இடைப் பொருட்கள், அடிப்படை ரசாயனப் பொருட்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி பல வகை உற்பத்திப் பொருட்களை தயாரிக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரிவுபடுத்தப்பட்ட திட்டத்தின் மொத்தச் செலவு ரூபாய் 3.20 கோடியாகும் என்று மதிப்பிடப்படுகிறது.

### (11) டைனுவிஷன் லிமிடெட்:—

அடையாற்றிலுள்ள 'இன்ஸ்ட்ரானிக்ஸ் கேம்பஸ்' வளவில் டைனவிஷன் லிமிடெட் (Dynavision Ltd.) நிறுவனம் அமைந்துள்ளது. ஆண்டொன்றுக்கு 10,000 டெலிவிஷன் பெட்டிகளை இது உற்பத்தி செய்யும். இத்திட்டத்தின் மொத்தச் செலவுரூபாய் 96 இலட்சமாகும். இத்திட்டத்திற்கான மூலதனச் சரக்குகள் விண்ணப்பத்திற்கு இந்திய அரசு ஏற்பளிப்பு வழங்கிவிட்டது. இயந்திரத் துணைப் பகுதிகளுக்கான உத்தரவுகள் அனுப்பப்பட்டுவிட்டன. மாதிரி டெலிவிஷன் பெட்டி முடிவு செய்யப்பட்டு. சோதனை அடிப்படையில் டெலிவிஷன் பெட்டிகளை உற்பத்தி செய்ய இந்நிறுவனம் தொடங்கிவிட்டது. 1975 ஏப்ரல் திங்களில் வணிக அளவில் உற்பத்தியைக் தொடங்கியுள்ளது. சுமார் 80 பேருக்கு வேலைவாய்ப்பு கிட்டியுள்ளது.



### (12) தமிழ்நாடு இன்டர்நேஷனல் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட்:—

அதிக 'வோல்டேஜ்' மின் அழுத்தம் வழங்குமானிகள், மின்மாற்றிகள், அச்சு மின் ஓட்டங்கள் (Printed circuits) கம்பாஸிடர்கள், பிற மின் அணுச்சாதனங்கள், துணைக் கருவிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்காக முழு அளவுக்கும் ஏற்றுமதிப் பாங்குள்ள இந்நிறுவனம் அமைக்கப்பட்டது. தருமபுரி மாவட்டம் ஓசூருக்கு அருகில் இது அமைக்கப்பட்டுள்ளது. இப்பகுதி தொழில்துறையில் பின் தங்கிய பகுதியாகும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபாய் 2 கோடியாகும். தொழில் நுட்ப அறிவுரை, அடிப்படைப் பொறியியல் இயந்திரங்கள், கருவிகள் வழங்குதல் போன்றவற்றிற்காக 'F I B' மனு இந்திய அரசிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை 1976 டிசம்பர் திங்களில் உற்பத்தியைத் தொடங்கும். கிட்டத்தட்ட 200 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும்.

### (13) மார்த்தி க்ரிஸ்டல்சால்ட் கம்பெனி லிமிடெட்:—

மிக நவீன இயந்திரத் தளவாடங்களைப் பயன்படுத்தி ஆண்டொன்றுக்கு 1,20,000 டன் தொழில் உப்பு தயாரிக்கவிருக்கும் இத்தொழிற்சாலை, இவ்வகையில் இந்நாட்டிலுள்ள முதல் தொழிற்சாலையாக அமையும். இத்தொழில் மிக விஞ்ஞான முறையிலும், பொருளதார ரீதியில் ஆதாயம் தரும் வகையிலும் அமைவதற்காக இதனுடன் இரசாயனப் பொருட்கள் உற்பத்திக்கான தொழிற்சாலை ஒன்றும் இணைக்கப்படும். இத்திட்டத்தின் மூலதனச் செலவு ரூபாய் 60 இலட்சமாகும் என்று மதிப்பிடப்படுகிறது. இதன் கட்டட வேலைகள் நடந்தேறி வருகின்றன. பெரும்பாலான இயந்திரங்களை அனுப்பும்படி ஆணைகள் அனுப்பப்பட்டுவிட்டன. 1975 மே திங்களில் இது உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் 100 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். செங்கற்பட்டு மாவட்டம் கோவளம் பகுதியில் 4,000 ஏக்கர் பரப்பளவில் இது அமைந்துள்ளது.

### (14) ஆசியா புகையிலை நிறுவனம லிமிடெட்:—

ஆண்டொன்றுக்கு 450 கோடி சிகரெட்டுகளைத் தயாரிப்பதற்காக இந்நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவு ரூபாய் 2.50 கோடியாகும். தொழில் துறையில் பின்தங்கிய பகுதியான தருமபுரி மாவட்டத்தில் ஓசூருக்கு அருகில் இத்திட்டம் அமைக்கப்படும். இத்திட்டத்தை நிறுவுவதற்கான முன்னேடி நடவடிக்கைகள் அனைத்தையும் இந்நிறுவனம் இறுதி செய்துவிட்டது. 1975 மே திங்களில் இது உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏறத்தாழ 400 பேருக்கு இது வேலைவாய்ப்பு அளிக்கும். தவிர இதன் அண்டைப் பகுதிகளில் புகையிலைச் சாகுபடிக்கும் பெரும் ஊக்கம் அளிக்கும்.

### (15) கடல் சார்ந்த பெரும் இழு படகு கட்டும் தளம், மண்டபம் லிமிடெட்:—

இப்போது ஆழ்கடலிலும், தொலைகடலிலும் சென்று மீன் பிடிக்க மீன்பிடி கப்பல்கள் போதிய அளவில் கிடைப்பதில்லை. மீன்பிடி தொழில் மேம்பாட்டிற்கு இது பெரிதும் தடையாய் உள்ளது. இந்த இடைவெளியை நிரப்புவதற்காக இக்கூட்டுத்துறை நிறுவனம் உருவாவதற்கு ஊக்கமளிக்கப் பட்டுள்ளது. உருக்கிலேயே கட்டப்பட்ட நடுத்தர அளவுள்ள மீன்பிடி இழுபடகுகள் ஆண்டொன்றுக்கு 16 படகுகளைக் கட்டுவதற்கு இதில் வகை செய்யப்பட்டுள்ளது. மண்டபத்தில் உள்ள படகுத்துறை வசதிகள், கடற்கரையிலிருந்து உட்செல்லும் படகுகள் வாயில் வசதிகள், கெய்ஸன் (Caissen gate) வசதி, தொழிற் பட்டறை வசதி போன்ற பல அடிப்படை வசதிகளை இந் நிறுவனம் பயன்படுத்திக் கொள்ளும். இத்திட்டத்தின் மூலதனச் செலவு ரூபாய் 80 இலட்சமாகும் என்று மதிப்பிடப்படுகிறது. இது ஏறத்தாழ 300 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும். 1976-77 இல் இழுபடகுகள் கட்டும் பணி தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### (16) தமிழ்நாடு ஆல்கலைன் பாட்டரீஸ் லிமிடெட்:—

இளம் தொழில்நுட்ப வல்லுநர்களைச் சேர்த்துக் கொண்டு கூட்டுத்துறையில் இந்நிறுவனம் அமைககபபட்டுள்ளது. சின்டர்ட் பிளேட் (Cintered Plate), வென்டட் மின்கலங்கள்(Vented cells) பாக்கெட் பிளேட், பித்தான் வகை மின்கலன்கள், உருளை வகை மின்கலன்கள் போன்ற எல்லா வகை நிக்கல் காட்மியம் மின்கலன்களைத் தயாரிப்பதற்காக காரைக்குடியிலுள்ள மின்-ரசாயன ஆராய்ச்சி நிலையத்தின் உதவியுடன் மேற்சொன்ன தொழில் நுட்ப வல்லுநர்கள் உள்நாட்டு வணிக ரீதியிலான செய்முறை ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார்கள். இத்தகைய மின் கலங்கள் பாதுகாப்புத்துறை, ரயில்வேத்துறை, பிற நுகர் பொருள் துறைகளுக்குத் தேவைப்படுகின்றன. 50 இலட்சம் மின்கலங்கள் உற்பத்தி செய்யும் திறனளவைப் பெற்ற இத்திட்டம் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் நிறுவப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலதனச் செலவு ரூபாய் 1.65 கோடி அளவில் மதிப்பிடப்படுகிறது. இத்திட்டம் 1975 ஜுலைத் திங்களில் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது ஏறத்தாழ 250 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும்.



தொழிற்சாலைகளும் ஓரளவு ஆதாயம் பெற்று பணிகளை அவ்வப்போது, உடனுக்குடன் செவ்வனே நிறைவேற்றுகின்றன என்ற புகழ்பெற்றுள்ளன.

**4. மின்சார, மின்னணுத் தொழிலுக்கான தகவல் பிரிவு:**

மின்னணுத் தொழில் குறித்த தகவல் அளிக்கும் நிலையமாக பணி புரியும் நோக்குடன் இம் மாநிலத்தில் உள்ள மின்சார மின்னணுக் கருவிகள் தொழில் குறித்த தகவலைச் சேகரிப்பதற்கான தகவல் பிரிவு ஒன்று, கருவிகள் தொழிற்பேட்டையில் அமைக்கப்பட்டு வருகிறது. எல்லா பிரிவுகளிலும் உள்ள 1000-க்கும் மேற்பட்ட பிரிவுகளிலிருந்து ஏற்கெனவே தகவல் சேகரிக்கப்பட்டுள்ளது. இத்தகவலைப் பரப்புவதற்காக, அவை தொகுக்கப்பட்டு வருகின்றன.

நவீன தொழில் நுட்ப உத்திகள், பொருள் வளர்ச்சி, நடைமுறை அலுவல்கள் ஆகியவை குறித்த தகவலைச் சேகரித்து வழங்குவதில் மின்னணுவியல் குழு உயர் தொழில் நுட்ப நிறுவனங்கள், தேசிய ஆய்வுக்கூடங்கள், நிதி வழங்கல் நிறுவனங்கள் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

**5. புதிதாக அனுமதிக்கப்பட்ட திட்டங்கள்**

(1) துணைத் தொழில் பேட்டை, சென்னை ஃபிடிரான்ஸ் பார்மர், ஸ்விச்கியர் போன்றவற்றிக்குத் தேவைப்படும் துணைப் பிரிவுகளும், துணைக் கட்டுமான ஏற்பாடுகள், கருவிகள் போன்ற துணைப் பகுதிகளைத் தயாரிப்பதற்கான தனித் தொழிற்பேட்டை ஒன்று பலகைவாரவதிக்கருகே-கருவிகள் தொழிற்பேட்டைக் கருகாமையில் — அமைக்கப்பட்டு வருகிறது. அங்கு 8 பிரிவுகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்தொழிற்பேட்டைக்கான தொடக்கப் பணி விரைவாக நடந்தேறி வருகிறது.

(2) சென்னைக்கருகே மின்சார மின்னணுவியல் கருவிகள் தொழிற்சாலைக்கான மேம்பாடுப்படுத்தப்பட்ட மனைகள் தொழிற்பேட்டை:- மின்சாரப் பொருள்கள், மின்னணுவியல் கருவிகள், ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளை ஊக்குவிப்பதற்காக சென்னை, மகாபலிபுரம் சாலையில் சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் மின்சார, மின்னணுவியல் கருவிகள் தொழிற்சாலைக்கான தனிப்பட்ட மேம்படுத்தப்பட்ட தொழிற்பேட்டை, ஒன்றை ஏற்படுத்துவது குறித்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. செப்பனிடு பணி வசதிகளும் அளிக்கப்படும். நிலங்களைக் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வருவாய்த்துறை எடுத்து வருகிறது.

(3) மின்சாரப் பொருட்களைப் பயன்படுத்துவோர் தொழிற்பேட்டை திருச்சி:— மின்சாரப் பொருட்களைப் பயன் படுத்துவோருக்கான தொழிற்பேட்டை ஒன்றை திருச்சியில் அமைப்பதற்கான திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. தூவக்குடியில் உள்ள மேம்படுத்தப்பட்ட மனைகள் எஸ்டேட்டுக்குப் பக்கத்தில் இத்தொழிற்பேட்டையை அமைக்கக் கருதப்பட்டுள்ளது. முதல் நிலையில் ஐந்து பிரிவுகள் கட்டப்படும். மேற்கொண்டும் பிரிவுகள் கட்டும் பணி, தேவைகேற்ப கட்டப்படும். கட்டுமானப்பணிகள் 1975 டிசம்பரில் தொடங்கும். மின்சாரப் பொருட்கள், மின்னணுவியல் பொருள்கள், கருவிகள் ஆகியவற்றைத் தயாரிப்பதையும், கோப்பதையும் இத்தொழிற்பேட்டை ஊக்குவிக்கும்.

(4) மதுரையில் மின்னணுவியலுக்கான சோதனை, சான்றளிப்பு பொருள் வளர்ச்சிக்கான, ஆய்வுக்கூடம் ஏற்படுத்துதல்: — உற்பத்திக்குப் பின் சோதனை, சான்றளிப்பு, பொருள் வளர்ச்சி வசதிகளைத், தற்போதைய தரத்தையொட்டி அளிப்பதற்காக மதுரையில் ரூபாய் 7.25 இலட்சம் செலவில் மின்னணுவியலுக்கான, சோதனை, சான்றளிப்பு, பொருள் வளர்ச்சி ஆய்வுக்கூடம் ஒன்று ஏட்படுத்தப்படும்.

(5) மின்சார சிறப்புத் துணைப் பகுதிகள், கருவிகள், தொழிற்பேட்டை:— ஓசூர்: தொழில் துறையில் பின் தங்கிய பகுதியான ஓசூரில் மின்சார துணைப் பகுதிகள், கருவிகளுக்கானத் தனித் தொழிற்பேட்டை ஒன்றும் அமைக்கப்பட்டு வருகிறது. ஓசூர் பெங்களுருக்கு அருகே அமைந்திருப்பதால், இந்தியன் டெலிபோன் இன்டஸ்ட்ரீஸ், பாரத் எலக்ட்ரானிக் நிறுவனம், இந்துஸ்தான் விமானத் தொழிற்சாலை போன்ற பெரிய தொழிற்சாலைகளுக்கு வேண்டிய துணைப்பகுதிகளை அளிப்பதற்கு இங்கு துணைத் தொழில்களை ஆரம்பிக்க வாய்ப்புள்ளது. 5 ஏக்கர் பரப்பளவில் இத்தொழிற்பேட்டை அமைக்கப்படும்.

(6) மின்சார, மின்னணுவியல் தொழிற்பேட்டை, சேலம்:— சேலம் உருக்காலைத் திட்டத்தினால் உருவாகக்கூடிய தொழில் வளத்தைக் கருத்திற் கொண்டு சேலத்தில், மின்சார மின்னணுவியல் தொழிற்பேட்டை ஒன்று நிறுவுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. தொழிற்துறையில் பின்தங்கிய பகுதியான சேலத்தில் தொழில் வளம் உருவாக்க இது பெரிதும் உதவும். இத்தொழிற்பேட்டையை சேலம் உருக்காலைத் தொகுதியின் அருகே அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. தொடக்கத்தில் இத்தொழிற்பேட்டையில் சுமார் 15 தொழிற்சாலைகள் இருக்கும்.

(7) கோயம்புத்தூர், மின் மருத்துவச் சாதனத்திற்காக செப்பனிடுதல் — பணி துணை நிலையம்.

கோயம்புத்தூர், சேலம், நீலகிரி மாவட்டங்களில் மருத்துவ, கால் நடை, ஏனைய நிறுவனங்களின் மின் மருத்துவச் சாதனங்களைச் செப்பனிடுதலுக்காக மின் மருத்துவச் சாதனைச் செப்பனிடு துணை நிலையம் ஒன்று கோயம்புத்தூரில் அமைக்கப்பட்டு வருகிறது. இதற்குத் தேவையான சாதனங்களை வரவழைக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**6. தமிழ்நாடு மின்னணுவியல் கழகம்**

இம்மாநிலத்தில் உள்ள மின்னணுவியல் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்தும் நோக்குடன், புதிய கழகம் ஒன்றை எற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. மேற் சொன்ன மின்சார, மின்னணுவியல் பிரிவுகள் அனைத்தும் இக் கழகத்திற்கு மாற்றப்படும். இக்கழகம் தனக்கென்று புதிய பிரிவுகளையும் எற்படுத்துவதுடன், மின்னணுவியல் துறையில் உள்ள தனியார் தொழிற்சாலைகளுக்கும் உதவும். இக் கழகம் விரைவில் பதிவு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




# இரு மாநிலங்களை இணைக்கும் இணையற்ற பாலம்

நட்புறவுக்குப் பாலத்தை உதாரணம் காட்டுகிறோம்.

காரணம், ஒன்றிலிருந்து ஒன்றை அடைந்திடப் பாலம் பெரிதும் உதவுவதுதான்.

நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு உறுதுணையாக விளங்குகின்ற வாணிபத்தின் வளர்ச்சிக்கும், நாடுகளின் உறவுக்கும், பயணிகளின் தொடர்புக்கும் பெரிதும் துணைபுரிவது போக்குவரத்தாகும். இவைகளில் சாலைப் போக்குவரத்து, கடல் போக்குவரத்து, ஆகாயப் போக்குவரத்து ஆகியவற்றை முக்கியமாகக் குறிப்பிடலாம். சாலைப் போக்குவரத்து என்கின்றபோது பாலம் இன்றியமையாத ஒன்றாக இருக்கின்றது.

சாலைப் போக்குவரத்தில் தடங்கல்ஏற்படாமலிருக்கவும், இவைகளில் செல்லுகின்ற ஊர்திகள் சிராகச் சென்றிடவும் தேவைப்படுகின்ற இடங்களில் பாலங்களை உருவாக்கிட வேண்டும். இந்த வகையில் உருவாக்கப் பெற்றது தான் செங்கற்பட்டு மாவட்டம் தேன்பாக்கத்திலுள்ள 'கலைஞர் கருணாநிதி பாலம்'.

இந்தப் பாலம் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள தேன்பாக்கத்தையும், தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள மரக்காணத்தையும் இணைக்கின்ற சாலையில்—கழிமுகத்தில் கட்டப்பெற்றுள்ளது. இச் சாலை கீழ்க்கடற்கரைச் சாலையின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது.

கீழ்க்கடற்கரைச் சாலை நம் நாட்டினுடைய பாதுகாப்புக்கு முக்கிய உறுப்பாகக் கருதப்படுவதால் இதனைத் தேசிய நெடுஞ்சாலை அளவுக்கு மேம்பாடு செய்து பாலங்கள் கட்டுவதற்கென ரூபாய் 16 கோடிக்குத் திட்டம் வகுக்கப்பெற்றுமையஅரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இச்சாலையின் மொத்த நீளம் ஏறத்தாழ 768 கிலோ மீட்டர்களாகும்.

இச்சாலை கல்பாக்கம் அனல் மின் நிலையம், புதுவையிலுள்ள ஆரோவில் நகரம் ஆகியவைகளையும், கீழ்க்கடற்கரையின் துறைமுகங்களான பாண்டிச்சேரி, கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி போன்றவைகளையும் இணைத்து, வசதியான —துரிதமான கடல் போக்குவரத்துக்கு வழிகோலுகிறது. மேலும், இச்சாலை சென்னை மாநகரை மாமல்லபுரம், மரக்காணம், காரைக்கால், முத்துப்பேட்டை, தொண்டி, இராமநாதபுரம், கீழக்கரை, திருச்செந்தூர், கன்னியாகுமரி போன்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுடன் இணைக்கிறது. இத்தகு வரலாற்றுச் சிறப்புள்ள இடங்களையும், சுற்றுலாத் தலங்களையும் இணைப்பதால் ஏராளமான சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திட இச்சாலை பயன்படுகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் தற்சமயம் இந்தச் சாலையில் சுமார் 261 இலட்சம் ரூபாய் செலவில் 40 பாலங்கள் பல் வேறு இடங்களில் கட்ட ஒப்புதல் பெறப்பட்டு, 33 வேலைகள் விரைவாக நிறைவேறி வருகின்றன. இங்குக் கட்டப்பெற்று உள்ள பாலங்களில் ''கலைஞர் கருணாநிதி பாலம்'' ஒன்றாகும்.

கழிமுகத்தில் கட்டப்பெற்று உள்ள இந்தப் பாலத்தின் முதன்மைப் பகுதி 8 மீட்டர் நீளமுள்ள 45 கண்கள் கொண்டது. தவிர அணுகுச் சாலையில் 8 மீட்டர் நீளங் கொண்ட இரண்டு கண் பாலமும் அமைக்கப்பெற்று உப்பளங்களுக்குத் தண்ணீர் செல்ல வசதி செய்து தரப்பட்டுள்ளது.

இப்பாலத்தின் மேல் தளம் 18 அங்குல சதுரமும், 53 அடி நீளமும் கொண்ட கான்கிரீட் தூண்களின் அடிப்படையினால்

தாங்கப்படுகிறது. மேல் தளம் கம்பிகளால்வலுவேற்றப்பட்ட கான்கிரீட் கலவையினுல் ஆன தாகும். இப் பாலத்தின் மீது 7.5 மீட்டர் அகலத்தில் இரண்டு வழித் தளங்கள் அமைக்கப்பெற்றுள்ளன.

இப்பாலத்தின் அணுகுச் சாலைகள் 1,341 மீட்டர் நீளம் கொண்டதாகும். இந்த அணுகுச் சாலைக்கு அப்பால் மரக்காணத்திற்குச் செல்லு கின்ற 2.7 கி.மீ. நீளமுள்ள சாலை மைய உப்பளத்துறையி னரால் பராமரிக்கப்பட்டு வரும் பகுதி வழியே செல்லு கிறது. இதனை நெடுஞ்சாலை அளவுக்கு உயர்த்த மைய அரசிடம் மாநில அரசு கேட்டு உள்ளது குறிப்பிடத் தக்கது.

இத்தகு சிறப்புக்கள் வாய்ந்த —முக்கியத்துவம் பெற்ற கலைஞர் கருணாநிதி பாலத்தினை உருவாக்கிட ரூபாய் 75 இலட் சம் செலவாகியுள்ளது.

வாணிபத்தின் வளர்ச்சிக் கும், பயணிகளின் வசதிக்கும் வழி செய்கின்ற இந்தப் பாலத் தினை 4—7—75-ஆம் நாளில் மேதகு தமிழக ஆளுநர் கே.கே. ஷா அவர்கள், மாண்பு மிகு பொதுப்பணித் துறை அமைச்சர் ப.உ. சண்முகம் அவர்களின் தலைமையில் திறந்து வைத்துப் பேசுகையில் ''வர லாற்று முக்கியத்துவம் உடை யதாகவும் பொருளாதார மேம் பாட்டிற்கு உறுதுணையாக விளங்குகின்றதாகவும் உருவாக் கப்பெற்றுள்ளது இந்தப்பாலம். இந்தக் கீழ்க்கடற்கரைச் சாலை நாட்டின் பல முக்கியப் பகுதி களை இணைப்பதாலும், நாட் டின் வணிக வளர்ச்சிக்கும், பாதுகாப்புக்கும் பெரிதும் பயன்படுவதாலும் இங்குப் பாலம்அமைக்கப்பெற்றுள்ளது பெரிதும் பாராட்டத்தக்கது. அதிலும் இந்தப் பாலத்திற்குத் தமிழகத்தின்முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களின் பெயர் சூட்டப்பட்டுள்ளது மிகவும் பொருத்தமானதாகும்' என்று குறிப்பிட்டார்கள்.

—ஆயிரம்

# தமிழ்நாட்டில் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சி!

பல்வேறு வகைப்பட்ட சிறு தொழிற்சாலைகள், குடிசைத் தொழில்கள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள தொழிலா ளர்கள், கைவினைஞர்கள் ஆகி யோரின் பயனுக்காகப் பல தொழில் கூட்டுறவுச் சங்கங் களை தொழில் வணிக இயக்கு நர் அலுவலகம் ஏற்படுத்தி வரு கிறது. தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் தொழிலாளர்கள் உறுப்பினர்கள் ஆகியோ ருக்குப் பயிற்சி அளிப்பதற்கும் வாணிபத்தில் அவர்களது திறமையை வளர்ச்சியடையச் செய்வதற்கும் தொழில்-வணிக இயக்குநர் அலுவலகம் பல பயிற்சித் திட்டங்களை நடத்து கிறது. சிறு அளவில் தீக்குச்சி உற்பத்தி செய்வோர் பணிச் சங்கங்கள், சிறு அளவில் தேயிலை பயிரிடுவோருக்கான கூட்டுறவுத் தேயிலைத் தொழிற் சாலைகள் போன்ற கூட்டுறவுச் சங்கங்களும் ஏற்படுத்தப் பட்டுள்ளன. தொடக்கச் சங் கங்கள், மத்திய சங்கங்கள், தலைமைச் சங்கங்கள் ஆகியவை ஏற்படுத்தப்பட்டன. இச்சங் கங்களுக்குக் கடன் உதவித் தொகை வடிவில் நிதி உதவி அளிக்கப்பட்டது. குறிப்பிட்ட காலத்துக்கு நிருவாகப் பணி யாளர்கள், தொழில் நுட்பப் பணியாளர் ஆகியோரின் பணி களும் இலவசமாக அளிக்கப் பட்டன. இங்சங்கங்களின் பங்கு மூலதனத்தில் மாநில அரசும் முதலீடு செய்துள்ளது. கட்டுப்பாடு விதிக்கப்பட்ட பொருள்களையும், மிகவும் அரி தாகக் கிடைக்கும் மூலப் பொருள்களையும் இச்சங்கங் களுக்கு வழங்கத் தொழில் - வணிக இயக்குநர் அலுவலகம் ஏற்பாடு செய்கிறது.

தற்போதுள்ள தொழிற் கூட்டுறவுகளைஒருங்கு திரட்டிச் சீரமைக்கும் பொருட்டு எடுக் கப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாக இச்சங்கங்கள் பொதுவாகச் செயல்படும் நிலை ஆண்டுக்காண்டு படிப்படியாக மேம்பட்டு வந்துள்ளது. இதனை கீழ்க்காணும் புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம்.

| ஆண்டு | சங்கங்கள் எண்ணிக்கை | உற்பத்தி | விற்பனை | அவ்வாண்டில் இலாபத்தில் செயல்பட்ட சங்கங்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1967—68 | 395 | 350.00 | 401.00 | 60 |
| 1968—69 | 367 | 358.00 | 414.00 | 96 |
| 1969—70 | 338 | 411.37 | 480.00 | 113 |
| 1970—71 | 337 | 578.51 | 564.38 | 125 |
| 1971—72 | 313 | 483.77 | 593.33 | 121 |
| 1972—73 | 325 | 451.36 | 548.76 | 143 |
| 1973—74 | 336 | 543.22 | 609.46 | 155 |



தமிழ்நாட்டில்

# பின்தங்கிய மாவட்டங்களில் தொழில் தொகுதிகளின் வளர்ச்சி!

பின்தங்கிய மாவட்டங் களில் தொழில்கள் தழைக்க வேண்டுமென்பதற்காக, பின் தங்கிய பகுதிகளைத் தொழில் தொகுதிகளாக (Industrial Complexes) உருவாக்கி விரிவு படுத்தும் பேராவல் திட் டத்தைச் செயல்படுத்து வதில் 'சிப்காட்' முனைப் பாக உள்ளது. தற்பொழுது குறைந்த அளவில் உள்ள வசதி களில் கணிசமாகப் பயன்களைப் பெற வேண்டுமெனில், பின் தங்கிய மாவட்டங்களில் தொழில் வளரும் வாய்ப் புடைய இடங்களைத் தேர்ந் தெடுத்து அவற்றில் தொழில் தொகுதிகளை உருவாக்கி விரிவு படுத்தும் திட்டம் சிறந்தது என உணரப்பட்டது. ஆகவே 'சிப்காட்' பின்தங்கிய பகுதி களை விரிவுபடுத்த, பொருத்த மான வழி வகைகளை வகுத்துள் ளது. தொழில் வாய்ப்புடைய இடங்களைத் தொழில் தொகுதி களாக உருவாக்குவதற்குத் தேர்ந்தெடுத்தல், அவ்விடங் களில் பல்வேறு இன்றியமையா அடிப்படை வசதிகளைப் பெருக்குதல், குறிப்பிட்ட குறைந்த காலத்தில் தன்னைத் தானே விரிவுபடுத்திக் கொள் ளும் அளவுக்கு தொழில் தொகுதிகளில் வளரும் தொழிற்சாலைகளை அமைத்தல் ஆகியவை இத்திட்டத்தின் முக் கியமான அம்சங்களாகும். இந்தத் திட்டத்தின் அடிப் படையில் சில தொழில் வளரும் வாய்ப்புடைய தொகுதிகளைச் 'சிப்காட்' தேர்ந்தெடுத்திருக் கிறது.

### ஆனைக்காரன்பட்டியில் ஒரு தொழிற்பேட்டை

பின்தங்கிய பகுதிகளில் தொழில்தொகுதிகளை உருவாக் கும் முயற்சியில் முதற்கட்ட மாக, 1972-73-ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டத் தில் ஆனைக்காரப்பட்டி என்னு மிடத்தில் ஒரு தனியார் தொழிற்பேட்டையை உரு வாக்க மிகுந்த முயற்சியுடன் 'சிப்காட்' நிறுவனம் உதவி செய்து. அங்கு ஏற்படுத்தப் பட்ட ஒரு பெரிய இயந்திர தொழிற்சாலையும், 2 நடுத் தரப் பகுதிகளும், 16 சிறு தொழில் பகுதிகளும் 1973-இல் உற்பத்தியைத் துவங்கி யுள்ளன. இந்தத் தொழில் பேட்டையில் சுமார் ரூபாய் 2.4 கோடி மூலதனம் போடப் பட்டு, 980 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டியுள்ளது.

### இராணிப்பேட்டை தொழில் தொகுதி

'சிப்காட்' நிறுவனத்தால் முதலாவது துவக்கப்பட்ட பெரிய தொழில் தொகுதி வடஆர்க்காடு மாவட்டம் இராணிப்பேட்டையில் அமைந் துள்ளது. தொழில் பெருக்கு வதற்குத் தேவையான பல் வேறு இன்றியமையா அடிப் படை வசதிகளைப் பெருக்கு வதற்கு திட்டமிடப்பட்டு, அவைகள் 712 ஏக்கர் பரப்பில் அமைக்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில் இராணிப்பேட்டை தொழில் தொகுதியில் தொழில் நிறுவனங்கள் ஏற்படுத்த தகுந்த நடவடிக்கைகள் எடுக் கப்பட்டு, அவைகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளையும், ஆலோசனைகளை யும், உதவியையும் 'சிப்காட்' நல்கியுள்ளது. இந்த முயற்சி களின் பலனாய் விற்பனைக் குள்ள மொத்தம் 480 ஏக்கர் பகுதியில், 221.76 ஏக்கர் நிலம் 27 நிறுவனங்களுக்கு வழங்கப் பட்டுள்ளது. தொழிற்சாலை களின் மின்சாரத் தேவையை நிறைவு செய்ய 110/11 கிலோ வாட் துணைமின் நிலையம் ஒன்றை அமைப்பதற்காக சிப் காட் விற்பனைக்குரிய 480 ஏக்கர் பரப்பில் 15 ஏக்கர் அளவுள்ள தனிப் பகுதியை தமிழ்நாடு மின்சார வாரியத் திற்கு ஒதுக்கியுள்ளது. இந்தத் துணை நிலையம் அமைக்கப்பட்டு இந்த தொழில் தொகுதிக்கு மின்சாரம் கொடுக்கத் தயா ராக உள்ளது.

இத்தொழில் தொகுதியை ஒட்டிய பகுதியில் 71 ஏக்கர் கொண்ட அடக்கப்பகுதி ஒன்று சிறுதொழில்களுக்குத் தேவை யான கட்டடங்கள் அமைப்ப தற்காக, ''சிட்கோ''விற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. முதலில் 12 தொழிற்கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, இரண்டாவது முறையாக மேலும் 25 தொழிற்





கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அவைகள் 'சிட்கோ' மூலம் சிறுதொழிற்சாலைகளுக்காக ஒதுக்கப்பட்டு வருகின்றன.

தொழில் தொகுதிகளில் அமையவிருக்கும் தொழில் பிரிவுகளின் பணியாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும் 25 ஏக்கர் பரப்புள்ள பகுதியில் வெவ்வேறு அளவில் வீடுகள் கட்டும் பணியை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மேற்கொண்டிருக்கிறது. தொழில் முனைவோர்களைக் கலந்தாலோசித்ததின் பேரில், இந்தப் பரப்பில் ஒரு பகுதியை மேம்பாடடையச் செய்து அதில் வீட்டுமனைகளைத் தொழில்முனைவோர்களுக்கும், அவர்களது அதிகாரிகளுக்கும் வீடுகட்டிக் கொடுப்பதற்காக ஒதுக்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. தொழில் தொகுதிக்கு எதிர்புறம் வீட்டு வசதி வாரியம், பணியாளர்களுக்கு குடியிருப்பு வீடுகள் கட்டும் பணியைத் துவக்கியிருக்கிறது.

தொழில் தொகுதியை முறையாகத் தொடங்கி வைத்த பொழுதே பலவகை தொழில் பிரிவுகளும் தங்கள் துவக்கப் பணியை ஆரம்பித்ததால், மனைகள் ஒதுக்கப்பட்ட 27 தொழில் பிரிவுகளில் 7 பிரிவுகள் உற்பத்தித் தொடங்கியுள்ளன. மேலும் 7 பிரிவுகள் கட்டடங்கள் கட்டும் பலவித நிலைகளில் இருப்பதால் அவை 1975-76-ஆம் ஆண்டில் உற்பத்தியைத் துவக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மற்ற மனை ஒதுக்கப்பட்ட 13 தொழில்முனைவோர்கள் அவர்களுடைய தொழிற்சாலைகளுக்கு வரும் ஆண்டில் கட்டடங்கள் கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். இந்த எல்லாப் பிரிவுகளும் உற்பத்தியைத் துவக்கினால் இவை ரூபாய் 25.00 கோடி முதலீடு செய்து 3,000 பேர்களுக்கு மேல் நேரிடையாக வேலை வாய்ப்பும், அநேகருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### ஒசூர் தொழில் தொகுதி

இம்மாநிலத்திலும் பிற மாநிலங்களிலும் உள்ள

STATE INDUSTRIES PROMOTION CORPORATION OF TAMIL NADU LIMITED

தொழில் முனைவோர்களிடமிருந்து இராணிப்பேட்டையில் துவக்கப்பட்ட முதல் தொழில் தொகுதிக்குக் கிடைத்த உற்சாகமான ஆதரவினால் உந்தப்பட்டு, 1,257 ஏக்கர் பரப்பில் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள ஒசூர் அருகே ஒரு தொழில் தொகுதியைத் துவக்கிட 'சிப்காட்' திட்டமிட்டது. நில ஆர்ஜித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் இத்தொழில் தொகுதியில் அடிப்படை வசதிகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். பல்வேறு வசதிகளை அமைக்கும் முன்பே, அநேக தொழில் முனைவோர்கள் இந்த தொழில் தொகுதியில் தொழிற்சாலைகளை நிறுவத் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். இந்த தொழில் தொகுதியில் நிலங்கள் ஒதுக்குமாறு 47 மனுக்கள் இதுவரை வந்துள்ளன. இவர்களில் சில தொழில் முனைவோர்கள் அவர்களுடைய தொழிற்சாலைகளை இங்கு உருவாக்குவதில் பூர்வாங்கப்பணிகளை துவக்கியுள்ளனர்.

ஒசூர் தொழில் தொகுதியை உருவாக்க 2.3 கோடி ரூபாய் முதலீடு செய்ய வேண்டியிருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் பணிகள் யாவும் இரண்டு ஆண்டு காலத்தில் முடிவுபெறும்.

### மானாமதுரை தொழில் தொகுதி

'சிப்காட்' தனது மூன்றாவது தொழில் தொகுதியை இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மானாமதுரைக்கருகே நிறுவ திட்டமிட்டுள்ளது. 732 ஏக்கர் அரசின் நிலங்களையும், 112 ஏக்கர் தனியார் நிலங்களையும் நில ஆர்ஜிதம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இங்கு அடிப்படை வசதிகளை பெருக்குவதற்கான தொடக்கப்பணிகள் இவ்வாண்டில் மேற்கொள்ளப்படும்.

### மறைமலை நகர் தொழில் தொகுதி

சென்னை பெருநகர வளர்ச்சி மன்றத்தினால் (Madras Metropolitan Development Authority) புதிதாக உருவாக்கப்படும் 'மறைமலை நகரத்தில்' தொழில் தொகுதி ஒன்றை நிறுவும் பொறுப்பு 'சிப்காட்' நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

### புதிய தொழில் தொகுதிகள்

தமிழ்நாடு அரசு, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இன்னும் மூன்று தொழில் அபிவிருத்தி தொகுதிகளை மதுரை, புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களில் நிறுவும்படி 'சிப்காட்'டிற்குப் பணித்துள்ளது. விரைவில் இந்த மாவட்டங்களில் தொழில் வளரும் வாய்ப்புடைய இடங்களைத் தேர்ந்தெடுத்து ஒன்றன்பின் ஒன்றாக விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகள் அடங்கிய தொழிற்பேட்டை

அம்பத்தூர், கிண்டி, மதுரை மேட்டூர் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு சுலபமாகப் பணம் செலுத்தும் வகையில் அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகள் அடிப்படை வசதிகளோடு கிடைக்கின்றன. 31-5-74 வரை இந்த அபிவிருத்தி செய்யப்பட்ட தொழிற்பேட்டைகளில் அபிவிருத்தி, பராமரிப்பு, மனைகள் ஒதுக்குதல் ஆகிய பணிகளை தொழில் வணிக இயக்குனர் கவனித்து வந்தார். 1.6.74 முதல் இந்த அபிவிருத்திச் செய்யப்பட்ட தொழிற்பேட்டைகளின் நிருவாகத்தை தமிழ்நாடு அரசு 'சிப்காட்' நிறுவனத்திடம் ஒப்படைத்தது. அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகள் ஒதுக்குவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் கீழ்க்கண்டவாறு உள்ளது.

| | அம்பத்தூர் | கிண்டி | மதுரை | மேட்டூர் | திருச் |
|---|---|---|---|---|---|
| நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட பரப்பு | 963 | 171 | 525 | 184 | 418 |
| விற்பனைக்குரிய பரப்பு | 773 | 80 | 188 | 118 | 359 |
| அரசினரால் (தொழில் வணிகத்துறையால் ஒதுக்கப்பட்ட பரப்பு) | 686 | 70 | 36 | 24 | 206 |
| 1-6-74 முதல் 31-1-75வரை 'சிப்காட்' நிறுவனத்தால் ஒதுக்கப்பட்ட பரப்பு | 14 | 1 | 12 | 1 | 6 |
| எஞ்சியுள்ள பரப்பு* | 73 | 9* | 140 | 93 | 1-47 |

*(தொழிற் நுட்ப பயிற்சியாளர்களுக்கு ஒதுக்கப்பட்டது)



அபிவிருத்தி செய்யப்பட் தொழிற்பேட்டையின் பர மரிப்பை 'சிப்காட்' எடுத்து கொண்டதன் பயனாக, இ மாநிலத்தின் முக்கிய இட களில் அபிவிருத்தி செய்ய பட்ட மனைகள் வழங்க மு கிறது.


# Indco Brick

## வெங்கடாஜலப்புரம் அரிசன செங்கல் தொழிலாளர் குடிசைத் தொழிற் கூட்டுறவு சங்கம், இண்ட் No. 502

வெங்கடாஜலப்புரம், சொன்னேக்குடி (PO), லால்குடி தாலுக்கா,
திருச்சிராப்பள்ளி ஜில்லா.

எங்களிடம் தரமான செங்கற்கள் குறைந்த விலையில் கிடைக்கும். ஆர்டர்களுக்கு குறித்த நேரத்தில் செங்கல் கொடுக்கப்படும்.

எங்களிடம் கிடைக்கும் செங்கற்களின் விவரம் :

தரைக் கற்கள்

8¾" × 4¼" × 3"
19 × 9 × 9 செ.மீ.
ஒட்டுக் கல்

8¾" × 4¼" × 2"
19 × 9 × 5·7 செ.மீ.
இதரக் கற்கள் (Half Bricks)

அ. இராமகிருஷ்ணன், B.A., (Hons.)
உதவி இயக்குநர்/செயலர்.

வெ. ந. முத்தமிழ்செல்வன், M.L.A,
தலைவர்.

(இது தொழில் வணிகத்துறை இயக்குநரின் கீழ் இயங்கும் ஒரு தொழிற் கூட்டுறவுச் சங்கம்.)

இதோ, இந்தியாவின் பசுமைப் புரட்சிக்கு ஒரு விஞ்ஞானரீதியான துணை

**எக்ரோமின்®**
**சிலேடெட் தாவர உணவு**

**பயிர் விளைச்சலை 20% அல்லது அதற்கு மேலும் அதிகமாக்குகிறது.**






● எக்ரோமின், ஒரே சிலேடெட் தாவர உணவாகும். தண்ணீரில் கரைகிறது. கரைக்கும் மறறும் பரப்பும் சாதனம் சுலபமாக கிரகிக்கப்பட உதவுகிறது
● எக்ரோமின் இலைத்தெளிப்பாகும். மற்ற எக்ரோ கெமிகல்களுடன் இதை உபயோகிக்கலாம்
● எக்ரோமின், தானியங்கள், எண்ணைவித்துக்கள், மசாலாப் பொருள்கள், இழைப் பயர்கள், பழங்கள் மறறும் தோட்டப் பயிர்களுக்கென வெவ்வேறு அமைப்புகளில் கிலோ கிராம் பேக்குகளில் கிடைக்கிறது.

**எக்ரோமின்**
சிக்கனமாக பயிர் விளைச்சலை அதிக மாக்கும் சிலேடெட் தாவர உணவு.

® ரெஜிஸ்டர்ட் டிரேட் மார்க்

நீங்கள் ஒரே வாரத்தில் பயனைக் கண்கூடாகக் காணலாம்!



எக்ரோமின் பற்றிய அதிகப்படி விவரங்களை அறிய இந்த முகவரிக்கு எழுதவும்:
ஏரீஸ் எக்ரோ-வெட் இண்டஸ்ட்ரீஸ் ப்ரை. லிட்,
தபால் பெட்டி எண் 9417,
பம்பாய் 400 093.

DISTRIBUTORS: VORION INDUSTRIES & CHEMICALS, 55/1, Mogapperi, Madras-600 050. S. L. N. S. AGENCIES, 19, Municipal Buildings, Srinivasa Park, Salem-636 002. INDOMAG CORPORATION, 3, Kollanpattarai Street, East Veli Street, Madras-1.

# இராஜாஜி மண்டபத்தில் புதிய படங்கள்

~ டாக்டர் ந. சஞ்சீவி ~

இராசாசி மண்டபத்தில் 27—6—1975 அன்று திறக்கப்பட்ட புதிய படங்களின் திறப்பு விழா ஓசைப்படாப் புரட்சி—புரட்சி என்ற சொல்லுக்கே உண்மைப் பொருள்—உயர் பொருள்—புதுப் பொருள்—உணர்த்தும் புரட்சி.

தமிழ்த்தாய் நமது முதல்வர் கலைஞர் வாயிலாகப் புரட்சியினைச் செய்து கொள்ள வேண்டுமென்று இத்தனை ஆண்டுகளும் தவமிருந்தாள் போலும்!

நாம் உயிரினும் சிறப்புடையதாய்ப் போற்றும் தமிழினத்திற்கும் மகிழ்வு தரும் வகையில் செய்துள்ளார் என்பதை எண்ணும் பொழுது, உடம்பெல்லாம் உயிராகிறது. மாண்புமிகு கலைஞர் அவர்கள் பன்னிரண்டு படங்களைத் தேர்ந்தெடுத்துள்ள திறமும் அவற்றை எதிரெதிராக வைத்துள்ள அருமையும் எண்ணியெண்ணி அறிவு படைத்த ஒவ்வொரு தமிழனும் பெருமை கொள்ளத்தகும்.

| | வலம் | இடம் |
|---|---|---|
| 1. | பெரியார் | பாரதிதாசன் |
| 2. | திருவள்ளுவர் | அவ்வையார் |
| 3. | பாண்டியன் நெடுஞ்செழியன் | கரிகாற் சோழன் |
| 4. | பாரதியார் | வ. உ. சி. |
| 5. | சேரன் செங்குட்டுவன் | வீரபாண்டியக் கட்டபொம்மன் |
| 6. | கம்பர் | இளங்கோவடிகள் |

இளங்கோவடிகள் இயற்கை முடியையும் செயற்கை அரசியல் முடியையும் துறந்து நிற்பதுடன் வாளையும் கீழே வைத்துவிட்டு நூலைக் கையில் ஏந்தி இன்றும் சேர நாட்டில் இலங்கும் உடையுடன் காட்சி தரும் வகையில் ஓவியம் தீட்டப்பட்டிருப்பது ஓவியருக்கும் உணர்வு கொடுத்த கலைஞர் கலைநயத்தைக் காட்டுவதாகும். சேரன் செங்குட்டுவன் இமயப் பகைப் புலத்தில் தோற்றத்துடனும் சீற்றத்துடனும் விளங்கும் காட்சி ஏற்றம் மிகுந்ததாகும். புரட்சித் தந்தை பெரியாரின் மெய்ப்பாடும், புரட்சிக் கவிஞரின் பொலிவும் உள்ளத்தைக் கொள்ளை கொள்வன. எனவே அவற்றைப் பற்றிச் சுருக்கமான சில குறிப்புகள்.

ஒவ்வொரு படத்தின் அடியிலும் அப் படத்திற்கு உரியவரின் காலக் குறிப்பு இருப்பது போற்றத்தக்கது.

## பெரியார்

1. இராசாசி மண்டபத்தின் உள்ளே நுழையும்போது வலப் புறத்தில் முதல் படமாகத் தந்தை பெரியார் படம் இருப்பது தனிச் சிறப்பு. இப்படத்தில் கருஞ்சட்டைத் தலைவர் சிவப்பு நாற்காலியில் உட்காராமல் எழுந்து நின்று தன் வலக்கை ஐந்து விரல்களையும் குவித்துக் கொண்டு எதன் கழுத்தையோ பிடிப்பது போல் இருப்பது ஆழ்ந்த சிந்தனைக்கு உரியது. கருஞ்சட்டையின் மேல் தந்தை பெரியார் போர்த்தி இருக்கும் சந்தனச் சால்வை மாற்றாரிடம் அவர் காட்டிய நாகரிகப் பண்பாட்டின் நல்ல அறிகுறி!

## திருவள்ளுவர்

2. திருவள்ளுவரின் திருவுருவப் படத்தில் எவ்விதப் பின்னணியும் இல்லாமல் இருப்பதுதான் பெருமையினும் பெருமை. அவர்தான் பொதுமைப் பின்னணியின் புதுமைப் பாவலர் ஆயிற்றே! திருவள்ளுவர் மிதியடி கூட இல்லாமல் இருக்கும் எளிமையும், ஏடும் எழுத்தாணியும் கையில் இருந்தாலும் ஏட்டையும் கூட மறந்து எங்கோ வெட்ட வெளியில் தோன்றும் ஆழ்ந்த கருத்தை ஊடுருவி ஆராய்ந்து பார்க்கும் பார்வையுடன் நிற்பதும் நம் உள்ளத்தையே ஊடுருவுவது ஆகும். அப் பெருஞானியின் தலையைச் சுற்றிலும் ஒளி வட்டம் அமைந்திருப்பதும் ஓர்தற்கு உரியது.

## பாண்டியன் நெடுஞ்செழியன்

3. பாண்டியன் நெடுஞ்செழியன், நீதி மன்னன் நெடுஞ்செழியன் என்பது எல்லோரும் அறிந்ததே. இதை நினைவூட்டுவது போல் மீன்கள் மின்னும் அமைப்புகளுடன் மீனவன் அரியணையிலிருந்து அகலும் கருத்துடன் எழுந்து நிற்கும் காட்சி கருதத்தக்கது.

## பாரதியார்

4. தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியார் குத்து மீசையுடனும் குறுகுறுப்புப் பார்

வையுடனும் இருப்பது இயற்கையாய் உள்ளது. இவர் இருக்கும் அறையின் ஓரத்தில் பழங்காலத் தூண் ஒன்று இருப்பது பார்க்கத் தக்கது. ஆம்; அக்கால மரத் தூண்களுக்கு அடியில் உரல் போன்ற கல் தாங்கிகள் இருக்கும் (கழுவிவிடும் தண்ணீரால் மரம் பழுது பட்டுப் போகாமல் இருக்கவும் தளத்தின் பாரத்தைத் தாங்கவும்). தேசியக் கவி பாரதி விரும்பியதாகக் குறிப்புகள் கூறும் பழைய அல்பாக்கா அங்கி பார்க்கப் பார்க்க அழகாகத் தான் இருக்கிறது. பாரதியார் வலக் கரத்தின் கீழே மேசையின் மேல் புத்தகங்களுடன் பத்திரிகைகள் இருப்பதும் பார்த்துப் பூரிக்கத் தக்கது. காரணம், அவர் நூலாசிரியரோடு பத்திரிகையாசிரியரும் அல்லவா!

### சேரன் செங்குட்டுவன்

5. சேரன் செங்குட்டுவனின் சித்திரம் சினத்தின் சித்திரமாய் சிறந்திருப்பது சிந்தை கொள்ளத் தக்கது. நம் முதல்வர் மிக மிக அண்மையில்கூடப் பேசியுள்ள ஒரு பேச்சில் இன்றையத் தமிழகத்தின் மான அரசியலுக்குக் காரணம் வீர சிலப்பதிகாரம்தான் என்று விளம்பி இருப்பதை எந்தத் தமிழனால் மறக்க இயலும்? ஊக்க உயிர்ப்பாய் உள்ள வஞ்சிக் காண்டத்தின் வஞ்சினக் காட்சியாய் விளங்குவதே சேரன் செங்குட்டுவனின் சித்திரமாகும். அவன் உருவிய வாளுடன் துருவிய கண்களுடன் உயிர்த் துடிப்போடு நிற்கும் காட்சியைக் கண்டால் பாரதிதாசனும் ஒரு காப்பியம் படைப்பார்.

### கம்பர்

6. கவிச் சக்கரவர்த்தி கம்பரின் படம் கண்ணையும் கருத்தையும் கவருவதாகும். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் இருந்த அருந்தமிழ்ப் புலவரின் கோலம் எப்படியிருக்கும் என்று காட்டுவதாய் இலங்கும் எழில்கோலம் கம்பரின் திருக்கோலம். செம்பட்டுத் தலைப்பாகையும் மேல் அங்கியும் பட்டுச் சரிகையும் பளபளக்கும் காட்சி, கம்பரின் கலை உள்ளத்திற்குப் புற அழகு செய்யும் அழகே அழகு. ஒரு கம்பத்துக்கு அருகில் கம்பர் நிற்பது ஓர்தற்கு உரியது. தொலைவில் காணும் திருக்கோயில் அவர்தம் சமரச தெய்வ பக்தியின் அறிகுறி போலும். கம்பருக்குக் கைகளில் காப்புகள் இருப்பதும் காதுகளில் கடுக்கண்கள் இருப்பதும் சரி.

### பாரதிதாசன்

7. இராசாசி மண்டபத்தின் இடப்புறத்தில் முதல் படம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் படம். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் குத்துப் பார்வை எல்லோர் கண்களையும் குடைவதாகும். நண்பர்கள் கண்களையே அது நையாண்டி செய்யும் என்றால் பகைவர்களின் கண்களைப் பதம் பார்க்கும் விதம் விளம்பல் வேண்டுமோ?

### அவ்வையார்

8. அவ்வைப் பாட்டியின் படம்அவளைப் பற்றிக் காலம் காலமாக நமக்குச் சொல்லப்பட்டு வரும் செய்திகளின் சித்திரம். காலமெல்லாம் இலக்கியப் பயணம் செய்த காரணத்தால் என்றென்றும் நம் கருத்தில் இதயப் பயணம் செய்யும் அந்தத் தாயின் தவள வாள் நுதலில் பவளக் குங்குமம் பளிச்சிடுவதும் பெண் பக்தியின் பயனோமோ! அனைத்துலகப் பெண்கள் ஆண்டில் நம் முதல்வர் கலைஞர் செய்து உள்ள ஓசைப்படாப் படப்புரட்சியின் உயிராக விளங்குவது இந்த அவ்வையின் படம் எனலாமே? காரணம், அவ்வைக்கு நிகர் யார்?—எந்த நாட்டில்? எந்தக் காலத்தில்?

### கரிகாற்சோழன்

9. திருமாவளவன்—கரிகாற் சோழன்—திருவுருவப் படம். காவிரி நாட்டின் வளம் எல்லாம் காட்டும் பின்னணிக் காட்சி கவின் நிறைந்த காட்சி—கல்லணை—கால வெள்ளத்தால்—இல்லை—வரலாற்றில் மங்கிக் கிடக்கும் மலர்க் காட்சி.

### வ. உ. சிதம்பரனார்

10. கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் பாரதிக்குச் செய்யுள் செயல் வீரர். அவர் வலக்கை அருகே அவர் கனவு கண்ட கப்பல் காட்சி அளிப்பது மாட்சி தருவதாகும்.

பழங்கால வழக்கறிஞருக்கு உரிய கருப்பு அங்கி அணிந்துள்ளார். கப்பலோட்டிய தமிழர் பணி செய்வதே அணி செய்வது என்று கருதிய அந்த வித்தகர் சிறையில் பிணி செய்யப்பட்டபோதும் கைதிகளும் வாழக் கருத்து மிக்க செய்யுள் நூல்கள் செய்தார்.

### வீரபாண்டியக்கட்டபொம்மன்

11. வீரபாண்டியக் கட்டபொம்மன் உருவாத வாளுடன் உருத்துப் பார்ப்பதும் அவன் வரலாற்றைக் காட்டும் உயிர் ஓவியம்தான். ஆம்; அவன் வருந்தியது எல்லாம் பாஞ்சைப் பதியை விட்டுப் பக்கத்துத் தமிழனை நம்பி வெளியேறுமல் பார் அதிர உருவிய வாளுடன் போர் அதிரச் செயல்பட்டிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும் என்பதுதானே! வீரபாண்டியக் கட்டபொம்மன் உடலுக்கு உயிர் கொடுக்க முடியாவிட்டாலும் இன்று அவன் கட்டிய கோட்டைக்கு உயிர் கொடுத்துள்ளார் நம் கலைஞர். இந்த இராசாசி மண்டபத்திற்கு அந்த நாள் வீரபாண்டியக் கட்டபொம்மன் உயிருடன் வந்தானே இல்லையோ, இன்று காப்பியமாய் ஓவியக் காட்சித் தருகிறான்!

### இளங்கோவடிகள்

12. இடப்புற வரிசையில் இறுதிப்படம் இளங்கோவடிகள் படம். இயற்கை முடியையும் செயற்கை முடியையும் துறந்து வாளை விட்டு நூலை எடுத்து நிற்கும் இளங்கோவடிகளின் காட்சியே காட்சி. அரசு துறந்தும் தமிழ் மறவாத அந்தக் கோலமே கோலம். சேர நாட்டு உடையும் உள்ளமும் நம்மைச் சேர அணைக்கும் அணைப்பே அணைப்பு!

**அடுத்து வரும் பக்கங்களில் வண்ணப் படங்கள் →**

## தொழில்-வணிகத் துறையின் சீரிய பணிகள்!

தொழில்-வணிக இயக்குநர் அலுவலகம், குடிசைத்தொழில், சிறுதொழில் வளர்ச்சிக்கான திட்டங்களை வகுத்து அவற்றைச் செயல்படுத்தும் தலையாய பொறுப்பை ஏற்று வெற்றிகரமாக நிறைவேற்றி வருகிறது. குடிசைத் தொழில்களையும், சிறு தொழில்களையும் இந்த அலுவலகம் பதிவு செய்து வருவதோடு, தொழிற்சாலைகளுக்கு அரசு உதவியளிக்கும் சட்டத்தின் கீழ், இந்தத் தொழில்களுக்கு நிதியுதவியும் அளித்து வருகிறது. அதோடு, தேவையான இயந்திரங்களையும், மூலப்பொருள்களையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொள்ள இன்றியமையாத தேவை பற்றிய தேவைச் சான்றிதழ்களையும் வழங்குகின்றது. இவை தவிர, பொருள்களைத் தனது பணி நிலையங்களில் பகுப்பாய்வு செய்யவும், சோதனையிடவும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இதுவரை தொழில்-வணிக இயக்குநரால் நிருவகிக்கப்பட்டு வந்த முறையான, பொதுத் தொழிற்பேட்டைகளும், மேம்படுத்தப்பட்ட மனைகளும், 1-6-1974-லிருந்து முறையே சிறு தொழில்கள் வளர்ச்சிக் கழகத்திற்கும், மாநிலத் தொழிலாக்கக் கழகத்திற்கும் மாற்றப்பட்டன.

தொழில்-வணிக இயக்குநர் இத்துறையின் தலைவராவார். இவருக்கு, ஒவ்வொரு தொழிலிலும் சிறந்து விளங்கும் தொழில் நுட்ப அதிகாரிகள் குழு உதவி செய்கிறது. இம்மாநிலம், ஐந்து கிராமத் தொழில் திட்டப் பகுதிகளாகவும், நான்கு வட்டாரங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டாரமும் ஒரு வட்டாரத் துணை இயக்குநராலும் ஒவ்வொரு கிராமத் தொழில் திட்டமும் துணை இயக்குநர் தரத்திலுள்ள திட்ட அதிகாரி ஒருவராலும் நிருவகித்து வரப்படுகின்றன. அவர்கள் தங்கள் வட்டாரத்தில் தொழில் வளர்ச்சி பெறுவதற்கான பல்வேறு திட்டங்கள் குறித்து வழிவகைகள் தெரிவிப்பதோடு மேற்பார்வையும் செய்து வருகின்றனர். அவர்களே தங்களது வட்டாரத்தில் தொழில் வளர்ச்சி குறித்த பல்வேறு திட்டங்களுக்கும் பொறுப்பாகயிருக்கிறார்கள்.

மாவட்டங்களில் இப்பணியைத் தொழில்-வணிக உதவி இயக்குநர்கள் மேற்பார்வை செய்து வருகின்றனர். இவர்கள் பணியாற்ற செவ்வனே தொழிற்சாலை ஆய்வாளர்கள், தொழிற் கூட்டுறவுச் சங்க ஆய்வாளர்கள், குடிசைத் தொழில் ஆய்வாளர்கள், குடிசைத் தொழில் அதிகாரிகள், ஆய்வு-புள்ளி விவர ஆய்வாளர்கள், மாநில உதவி ஆய்வாளர்கள் (கடன்கள்), சிறப்பு வட்டாட்சியாளர்கள் ஆகியோர் உதவி புரிகின்றனர்.

இம்மாநிலத்தில் இந்த இயக்குநர் அலுவலகத்தின் அலுவல்கள் பலவற்றை தொழில் ஊக்கக் கழகங்கள் தற்போது எடுத்துக் கொண்டுள்ள போதிலும், தொழில் வளர்ச்சியை, குறிப்பாக, சிறு தொழில் துறையில் தொழில்களை ஊக்குவிப்பதில், இந்த அலுவலகம் முக்கியமான பங்கு ஆற்றி வந்துள்ளது. சென்ற ஆண்டில் இம்மாநிலத்தில் மட்பாண்டத் தொழில் வளர்ச்சிக்காக மட்பாண்டத் தொழிற் கழகம் ஒன்றை உருவாக்குவதற்கு இந்த இயக்குநர் அலுவலகம் காரணமாக இருந்தது.

அதே போல, சிறு தொழில் துறையிலுள்ள மின்னணுவியல் தொழில் வளர்ச்சிக்கு ஒருமித்த நாட்டம் செலுத்துவதற்காக மின்னணுவியல் கழகம் ஒன்றை அமைப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் தோல் தொழிலை மேம்படுத்த தொழில் வணிகத்துறை இயக்குநர் அலுவலகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. தோல் பதனிடுபவர்கள், பக்குவப்படுத்தப்பட்ட தோலை ஏற்றுமதி செய்ய இயலும் வகையில், அவர்களுக்கு அந்த வசதிகளையளிக்கும் பொருட்டு தோல் பக்குவப்படுத்தும் கூட்டுறவு நிலையங்களை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இந்த இயக்குநர் அலுவலகம் மேற்கொண்டுள்ளது. தமிழ்நாடு சிறு தொழில் கழகத்தின் தோல் உற்பத்திப் பிரிவுகளை மேற்கொள்ளவும், தோல் உற்பத்திப் பொருள்களுக்கான பக்குவப்படுத்தும் நிலையங்களை ஏற்படுத்தவும் தோல் தொழிற் கழகம் ஒன்றை விரைவில் ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

சிறுதொழில் குறித்த கணக்கெடுப்பைத் தொழில்-வணிகத் துறை கடந்த ஆண்டில் மேற்கொண்டது. இம்மாநிலத்தில் உள்ள சிறுதொழில்கள் அனைத்தையும் குறித்த முழு விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இறுதியான விவரங்கள் தொகுக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு தொழிற்பிரிவும் எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்பளிக்கின்றது, ஒவ்வொரு தொழிற்பிரிவின் உற்பத்தி வகை, அதன் திறுவனத் திறன், அதற்குத் தேவைப்படும் மூலப்பொருட்கள் ஆகியவற்றை முடிவு செய்ய இந்த விவரங்கள் உதவியாக இருக்கும். சிறுதொழில் நிருவாகத்தில் இந்த இயக்குநர் அலுவலகத்திற்கு ஆலோசனையையும் நல்கும்.

படித்து வேலையற்றிருப்பவர்களுக்கான வேலை வாய்ப்பு-பயிற்சி குறித்த 15 திட்டங்களை கடந்த ஆண்டில் இந்திய அரசின் வேலைவாய்ப்புப் பெருக்கத் திட்டத்தின்கீழ் இந்த இயக்குநர் அலுவலகம், செயற்படுத்தியுள்ளது. இத்திட்டங்களுக்காக மொத்தத்தில் ரூபாய் 38.7 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. படித்து வேலையற்றிருக்கும் 421 பேருக்கு வேலை வாய்ப்பளிக்க திட்டமிட்டுள்ளது.

ஐந்து இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டத்தின் கீழ் இந்த இயக்குநர் அலுவலகம் ரூபாய் 41.18 இலட்சம் செலவில் 13 திட்டங்களை நிறைவேற்ற எடுத்துக் கொண்டு தொழிற் கூட்டுறவுத் துறையில் 900 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தது. 700 பேர் பயனடைவதற்காக ரூ. 10.58 இலட்சம் செலவில். பொறியாளர்களின் வேலை வாய்ப்பிற்கு மானியும் அளிக்கும் மற்றொரு திட்டத்தையும் நிறைவேற்ற எடுத்துக் கொண்டுள்ளது.

# எண்ணிலாப் பணிகள் என்றும் தொடரும்!

*சமுதாயத்தின் அடித் தளத்திலுள்ள ஏழை, எளிய மக்களிலிருந்து அநாதைக் குழந்தைகள்வரை-அவர்கள் தம் வாழ்க்கையில் வளமும் நலமும் பெற்று விளங்கிடத் தமிழ்நாடு அரசு நாளும் நற்பணியாற்றி வருகிறது.*

*இதேபோன்று பிற்பட் டோர் நலனிலும் அக்கறையும் ஆர்வமும் கொண்டு பல் வேறுதிட்டங்களைச்செம்மையாகச் செயலாற்றி வருகின்றது. இதனை விளக்கிக் கூறுகிறார் பிற்பட்டோர் நலத்துறை இயக்குநர் திரு. வி. ஆறுமுகம், ஐ. ஏ. எஸ்., அவர்கள்.*



**பிற்பட்டோர் நலத்துறை இயக்குநர்**
**திரு. வி. ஆறுமுகம்** ஐ.ஏ.எஸ்.,
**அவர்களின் பேட்டி**

**கே: பிற்பட்டோர் நலத்துறை தோற்றம் பற்றிக் கூற இயலுமா?**

ப : பிற்பட்டோர் நலன் என்பது அரசைப் பொறுத்த வரை 31—3—1948 வரை அரைச் சம்பளச் சலுகை அளிக்கப்படும் அளவிலேயே இருந்தது. 1948—49 -ல் பழைய சென்னை மாநிலத்தில் பிற்பட்டோருக்குப் படிப்பிற்கு உதவிப் பணம் வழங்கும்முறை அதாவது 'ஸ்காலர்ஷிப்' வழங்கும் முறை, முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டது. அரிசன நலனுக்கு அப்போது பொறுப்பாயிருந்த தொழிலாளர் நல ஆணையர் இந்த முறையைக் கவனிக்கலானார். 1—4—1949 முதல், மாநில அரிசன நலக் குழு பரிந்துரையின் மேல், அரிசன நலனையும், பிற்பட்டோர், மலைச் சாதியினர் இவர்களின் நலனையும் கண்காணிக்க அரிசன நலத்துறை ஏற்படுத்தப்பட்டது. இதன் பின் பற்பல சமயங்களில் பிற்பட்டோர் நல ஆலோசனைக் குழுவிலும், சட்ட மன்றத்திலும் பிற்பட்டோர் நலனைப் பாதுகாக்கத் தனித் துறை தோற்றுவிக்க வேண்டும் என வற்புறுத்தப் பட்டு வந்தது. இவ்வேண்டு கோளுக்கு இணங்கும் வகையில் 1969 மே மாதம் 2-ஆம் நாள் பிற்பட்டோர், முன்னாள் குற்றப் பரம்பரையினர் இவர்களின் நலன்களைப் பாதுகாக்க பிற்பட்டோர் நலத் துறை துவக்கப்பட்டது. ஆயினும் மாவட்டத்தில் அரிசன நலத் துறையைச் சார்ந்த அலுவலர்களே பிற்பட்டோரின் நலனையும் 1974 மே மாதம் வரை பார்த்து வந்தனர். 1974 ஜூன் மாதம் முதல் பிற்பட்டோருக்கென தனி மாவட்ட நல அலுவலர்களும் நியமிக்கப்பட்டு இன்று மாவட்ட அளவிலும் பிற்பட்டோர் நலத்துறை தனித்து இயங்கி வருகிறது.

**கே: இத்துறையின் நோக்கம் என்ன?**

ப : பிற்பட்ட வகுப்பினர், தமிழகத்தின் மொத்த மக்கள் தொகையில் சரிபாதிக்கு மேல் இருக்கிறார்கள். சமுதாய அமைப்பினாலும், அவர்கள் பரம்பரை பரம்பரையாகச் செய்து வந்த தொழிலினாலும் இவர்கள் பன்னெடுங்காலமாக இதர பிரிவினருடன் இணைந்து முன்னேற முடியாதவர்களாக இருந்துவிட்டார்கள். இதனால் இந்தப் பின்தங்கிய மக்கள் விவசாயம் முதலிய முக்கியமான தொழில்களில் ஈடுபட்டு நல்ல உழைப்பாளிகளாக இருந்தும் கூட கல்வியிலும், பொருளாதாரத்திலும் முன்னேற முடியவில்லை.

ஆகவே, சமூக, கல்வி நிலையில் பிற்பட்டுள்ள பிற்பட்டோரை கல்வி, பொருளாதார நிலைகளில், ஏனைய முற்பட்ட மக்களுக்கு ஈடாக முன்னேற வேண்டிய வழி வகைகளைக் காண்பதும் அவைகளைச் செயல்படுத்துவதுமே இத்துறையின் முக்கிய நோக்கமாகும். அதாவது, உயர்தரக்கல்வி, தொழில் நுட்பக் கல்வி போன்றவைகளில் முன்னேறுவதும், அரசுப் பணிகளில் போதிய இடங்களை இவர்கள் அடையச் செய்வதும், தொழில், வர்த்தகம் முதலிய பொருளாதாரத்துறைகளில் இவர்களை மேம்படுத்துவதும், இவர்களைச் சமூகத்தில் முற்பட்ட வகுப்பினருக்குச் சமமாகக் கல்வி நிலையிலும் பொருளாதார நிலையிலும் முன்னேற்றுவிப்பதும் இத் துறையின் நோக்கமாகும்.



பிற்பட்டோர் வகுப்பைச் சேர்ந்த ஒருவருக்கு இஸ்திரிப் பெட்டி வழங்குகிறார் பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள்.

**கே: இத்துறை ஆற்றிவரும் பணிகள் என்னென்ன?**

ப : நமது மாநிலத்தில் மொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழ 52 சதவிகித மக்கள் பிற்பட்டவர்கள். இவர்களில் பெரும்பாலோர் கிராமப்புறங்களில் விவசாயக் கூலி வேலை மற்றும் சிறு கைத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள். இவர்கள் நிலையை எண்ணிப் பார்த்தால் இவர்கள் பெற்ற வளர்ச்சி மிகக் குறைவானது என்பதும், இவர்கள் முன்னேற்றத்திற்குச் செய்ய வேண்டியது மிக அதிகம் என்பதும் தெரியும்.

இதை ஆழ்ந்து சிந்தித்த இன்றைய நம் தமிழக அரசு, எந்த மாநிலத்திலும் இல்லாத முறையில் பிற்பட்டோர் நலனுக்காக ஒரு தனித் துறையை ஏற்படுத்தி அதற்கென தனியொரு அமைச்சரையும், தனியாக ஒரு இயக்குநரையும் நியமித்து அவர்களின் நலனுக்கு அவசியமான வழி வகைகளை ஆராய்ந்து பரிந்துரைகள் செய்வதற்கென ஒரு தனிக் குழு திருவாளர் ஏ. என். சட்டநாதன் அவர்கள் தலைமையில் அமைத்து அந்தக் குழுவின் பரிந்துரைகள் மீது ஆவன செய்து வருகிறது.

பன்னெடுங்காலமாகப் பிற்பட்ட வகுப்பினர் கல்வியில் போதிய அக்கறை காட்டாததனால் சமுதாயத்திலும் பொருளாதாரத்திலும் பிற்பட்டவர்களாக உள்ள இவர்கள் கல்வியிலும் பிற்பட்டவர்களாகவே இருக்கிறார்கள்.

1—8—72-ல் கல்வி இயக்குநரின் அறிக்கைப்படி, 1 முதல் 11-வது வகுப்பு வரை படிக்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கையில் பிற்பட்டோர் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா ?

1-ஆம் வகுப்பு 60 சதவிகிதம், 5-ஆம் வகுப்பு 52 சதவிகிதம், 8-ஆம் வகுப்பு 51 சதவிகிதம், 11-ஆம் வகுப்பு 47 சதவிகிதம்.

இதிலிருந்து பிற்பட்டோர் கல்வி கற்க வரும் நிலைமை உயர் வகுப்புகளுக்குச் செல்லச் செல்ல இந்நாளிலும் குறைந்து கொண்டே போகிறது என்பது தெளிவாகிறது. இதற்கு முக்கிய காரணம் பிற்பட்ட சமூகங்களைச் சேர்ந்த பலருக்கு உயர்தரக் கல்வி கற்கப் போதுமான வாய்ப்புகளும், வசதிகளும் பல ஆண்டுகளாய் உருவாகவில்லை என்பதுதான். ஆகவே பிற்பட்டோர் நலன் எனும் போது அவர்கள் கல்வி பெற வசதியுடன் படித்து முன்னேற அவசியமான உபகாரச் சம்பளம், உண்டி, உள்ளுறை போன்ற வசதிகளைத் தருவதையும், படித்து முன்னேறியவர்களுக்கு ஓரளவு அரசினரின் ஆதரவில் வேலை வாய்ப்புகள் கிடைக்கும் வகையில் ஒதுக்கீடுகள் செய்வதையும் முக்கியப் பணியாகக் கொண்டு இதில் நம் அரசு மிகுந்த அக்கறை செலுத்துகிறது.

**கே: இவை தவிர வேறு ஏதேனும் பணிகளை இத்துறை மேற்கொண்டுள்ளனவா?**

ப : ஆம். பொதுவாக மேற்கொள்ளப்படும் திட்டங்கள் தவிர இத்துறையின் மூலம் மேற்கொண்டுள்ள பணிகள் பலவாகும். அவை :

1. 9-ஆம் வகுப்பிற்கு மேல் பட்டப் படிப்பு, மேற்பட்டப் படிப்பு முதலியவற்றிற்குப் படிக்கும் இச் சமூக மாணவர்களுக்குப் படிப்பு உதவிப்பணம் பொருளாதார அடிப்படையில் அளித்தல்.

2. ஏழை, எளிய மாணவ, மாணவியர்கள் இலவச உண்டி, உறையுள் வசதி பெற்று கல்வி கற்க மாணவரில்லங்களைத் திறத்தல், பராமரித்தல்.

3. தனியார் மாணவரில்லங்களில் தங்கிப் பயிலும் ஏழை மாணவ, மாணவியருக்கு உணவு மானியம் வழங்கல்.

4. பிற்பட்டோர் துறை அரசு மாணவரில்லங்களில் தங்கியிருக்கும் மாணவ மாணவியருக்குச் சீருடை வழங்கல்.

5. முன்னாள் குற்றப் பரம்பரையினருக்குப் பள்ளிகளையும் மாணவரில்லங்களையும் நடத்துதல்.

6. மேற்படி பள்ளிகள், மாணவரில்லங்களில் உள்ளவர்களுக்குச் சீருடை வழங்கல்.

7. இந்தப் பள்ளிகளில் உள்ளவர்களுக்கு மதிய உணவு, இலவசமாகக் கரும் பலகை, புத்தகங்கள் வழங்கல்.

8. முன்னாள் குற்றப் பரம்பரையினருக்குக் கிணறு வெட்ட, வீடுகள் கட்ட மானியம் வழங்கல்.

9. மருத்துவர்கள், சலவைத் தொழிலாளர்களுக்கு இலவசமாகத் தொழிற் கருவிகள் வழங்கல்.

10. சலவைத் தொழிலாளர் நலன் கருதி சலவைத் துறை கட்ட முன் வரும் நகராட்சி, ஊராட்சிக்கு மானியமும், கடனும் வழங்கல்.

11. முன்னாள் குற்றப்பரம்பரையினருக்குக் குறிப்பிட்ட இடங்களில் கைத்தொழில் கற்றுக் கொடுத்தல்.

12. ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ்., போன்ற மத்திய அரசுப் பணிகளுக்கு நடைபெறும் தேர்வுகளில் தேர்ச்சி பெற பிற்பட்ட மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

13. இந்திய இராணுவத் துறையில் கமிஷன் அந்தஸ்து அலுவலர்கள் தேர்வுக்குப் பயிற்சி அளித்தல்.

14. கல்லூரிகளில் ஒவ்வொரு பாட முறையிலும் குறைந்தது 31 சதவிகித இடங்கள் பிற்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும். கல்வி நிலையங்கள் இதைச் சரிவர அமல் செய்கின்றனவா என்பதைக் கல்வி நிலையங்கள் வாரியாக ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அனுப்புதல்.

15. அரசுப் பணிகளில் 31 சதவிகித இடங்கள் சில குறிப்பிட்ட இனங்களில்ஒதுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு பகுதியிலும் சேர்ந்துள்ள பிற்பட்டோரின் எண்ணிக்கை விதிகளின் படி

31 சதவிகிதத்துக்குக் குறைவில்லாமல் இருக்கிறதா என்று ஆராய்ந்து குறைவுக்குக் காரணங்களை அறிந்து அரசுக்கு அறிக்கை அனுப்புதல்.

**கே: பிற்பட்டோர் பட்டியலில் சுமார் எத்தனை சாதிப்பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன?**

ப : 124 சாதிப் பிரிவுகள் இன்றளவில் சேர்க்கப்பட்டு உள்ளன.

**கே: பிற்பட்டோருக்காக வழங்கப்படும் சலுகைகள் என்னென்ன?**

ப : பிற்பட்டோருக்குப் பல சலுகைகள் வழங்கி வருகின்றோம். அவை : 1. பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூபாய் 1,500-க்குள் இருக்குமானால், மிகப் பிற்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த மாணவருக்கு முழுச் சம்பளச் சலுகையும், இதே வருமான வரம்புக்குட்பட்ட பிற்பட்ட மாணவர்களுக்கு அரைச் சம்பளச் சலுகையும் கல்வித் துறை மூலம் வழங்கப்படுகிறது.

2. பிற்பட்ட, மிகப் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ. 2,500-க்கு மேற்படாமல்இருந்து, இம்மாணவர்கள் முந்திய ஆண்டு இறுதித் தேர்வில் சராசரி 40 சதவிகித மதிப்பெண்கள் எடுத்துத் தேர்ச்சி பெற்றிருப்பார்களானால் இவர்களுக்குப் படிப்பு உதவிப் பணம், பிற்பட்டோர் நலத் துறையால் வழங்கப்படுகிறது. இச்சலுகை 9-ஆம் வகுப்பு முதல் அமல்படுத்தப்படுகிறது; ஆனால், பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஊதியத்தொகை படிப்பு உதவிப் பணம் வழங்குவதற்குக் கணக்கிடப்படுவதில்லை.

3. கலை, தொழில் கல்லூரிகளிலும், பாலிடெக்னிக்குகளிலும் 31 சதவிகித இடங்கள் பிற்பட்டோருக்கு ஒதுக்கப்படுகின்றன.

4. அரசுப் பதவி நியமனங்களில் சம்பந்தப்பட்ட துறை விதிகளின்படி சில பணியிடங்களில் 31 சதவிகித இடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

5. பணியாளர் தேர்வாணைக் குழுவினரால் நடத்தப்படும் தேர்வுகளுக்குக் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கப்படுகின்றன :

அ. மேற்படி தேர்வில் கலந்து கொள்ள அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு வயது ஒரு ஆண்டும், அரசுப் பணியில் இல்லாதவர்களுக்கு 6 மாதக் காலமும் முன் அனுமதியுடன் தளர்த்தப்படுகிறது.

ஆ. மேற்படி தேர்வில் கலந்து கொள்வதற்கு விதிக்கப்பட்டுள்ள குறைந்த அளவு மதிப்பெண்கள் தகுதியில் அரசுப் பணியில் இருப்பவர்களுக்கு ஏதாவது ஒரு பாடத்தில் 5 மதிப்பெண்கள், அரசுப் பணியில் இல்லாதவர்களுக்கு 2 மதிப்பெண்கள் முன் அனுமதியுடன் தளர்த்தப்படுகிறது.

6. அ : பட்டப் படிப்புத் தேர்வில் கலந்து கொள்ளும் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு முதல் மூன்று தேர்வுகளுக்குக் கட்டணமின்றி மனுச் செய்ய சலுகை அளிக்கப்படுகிறது.

ஆ. மேற்படி தேர்வுக்கு மனு செய்யும் பிற்பட்ட வகுப்பு மாணவர், எழுதுகின்ற தேர்வுக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வி நிலைக்கு மேற்பட்ட கல்வி கற்றிருப்பின் அவருக்கு வயது வரம்பு கிடையாது.

**கே: பிற்பட்டோர் சொந்தமாகத் தொழில் நடத்த ஏதேனும் உதவிகள் அளிக்கப்படுகின்றனவா?**

ப : ஆம். சலவைத் தொழிலாளர், மருத்துவத் தொழிலாளர் ஆகியோருக்கு, அவர் தம் தொழிலைத் தன்னிச்சையாகச் செய்வதற்குக் கருவிகள் வாங்கி இலவசமாக வழங்கப்படுகின்றன. சலவைத்தொழில் கருவிகள் நபர் ஒன்றுக்கு ரூ. 240 மதிப்புள்ளதாகவும், முடி திருத்தும் தொழிலுக்கு ரூ. 75 மதிப்புள்ளதாகவும் வழங்கப்படுகின்றன.

**கே: பின் தங்கிய வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்குப் படிப்பு உதவித்தொகைகள் வழங்கப்படுகின்றனவா?**

ப : ஆம். பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 2,500-க்குள் உள்ள மாணவ, மாணவியருக்கு அவர்கள் தங்கள் முந்தைய ஆண்டு இறுதித் தேர்வில், மொத்தத்தில் 40 சதவிகிதம் மதிப்பெண்கள்பெற்று இருந்தால், படிப்பு உதவித் தொகை வரையறுக்கப்பட்ட விகிதத்தில் வழங்கப்படுகிறது. பள்ளிப் படிப்பில் 9 முதல் 11 வகுப்பு வரைதான் புத்தகங்கள் மற்றும் தேர்வுக் கட்டணங்களுக்கு மட்டும் உதவி அளிக்கப்படுகிறது. கல்லூரிகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லா முறைப் பாடங்களுக்கும், 'சார்ட்டட் அக்கவுண்டண்ட்' பயிற்சிக்கும் உதவி அளிக்கப்படுகிறது.

இது தவிர, மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற் படிப்பிற்கு, வருமானம் ரூபாய் 2,500-க்கு மேலும் 6,000-க்குள் உள்ள கல்லூரி விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு வட்டியில்லாக் கடன் வழங்கப்படுகிறது. இப்படி வழங்கப்படும் தொகை ஆண்டிடிற்கு ரூ. 500 ஆகும். ஆண்டு ஒன்றுக்கு 250 பேருக்கு மட்டும் வழங்கப்பட்டு வருகிறது.

**கே: இதனால் இதுவரை எத்தனை மாணவர்கள் பயனடைந்துள்ளனர்?**

ப : இதன் மூலம் பல இலட்சம் மாணவர்கள் 1948—49 முதல் பயனடைந்துள்ளனர். ஆண்டு வாரியாகப் பார்த்தால் இதன் வளர்ச்சி நன்கு தெரிய வரும். அதாவது 1948—49-ல் படிப்பு உதவி வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பொழுது பயனடைந்தோரின் எண்ணிக்கை 607, செலவான தொகை ரூ. 1 இலட்சம். 1949—50-ல் ரூ. 5 இலட்சம் பயனடைந்தோரின் எண்ணிக்கை 2,908. இவை மெல்ல மெல்ல வளர்ந்து 1960—61-ல் 19,856 பேர், 1970—71-ல் 1,34,249 என்று உயர்ந்து கொண்டே சென்று 1974-75-ல் 1,75,391 பேர் பயனடையும் வகையில் வளர்ந்துள்ளதைப் பெருமிதத்தோடு குறிப்பிட வேண்டும்.

முன்னாள் குற்றப் பரம்பரையினருக்குப் படிப்பு உதவிப் பணம் ஆரம்ப வகுப்பு முதல் அளிக்கப்படுகிறது. அவர்களுக்குப் படிப்பு உதவி அளிக்க பிற்பட்டோருக்கான வருமான வரம்பே கடைப்பிடிக்கப்படுகிறது. 1955—56 வரை குற்றப் பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்ட பரம்பரையைச் சேர்ந்த மாணவர்களுக்கு, தாழ்த்தப்பட்டோருக்கு உதவித் தொகைக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலேயே சேர்த்து வழங்கப்பட்டது.

1956—57-ல் ரூ. 1.20 இலட்சம் செலவில் 822 பேர் பயன் அடைந்தனர். இந்த நிலை படிப்படியாக உயர்ந்து 1960—61-ல் ரூ. 3.70 இலட்சம் செலவில் 2,771 பேர் பயன் அடைந்தனர். 1970-71-ல் ரூ. 21.16 இலட்சம் செலவில் 44,189 பேர் பயனடைந்தனர். 1974—75-ல் ரூ. 35.66 இலட்சம் செலவில் 65,334 பேர் பயன் அடைந்துள்ளனர் என்ற வகையில் உயர்ந்துள்ளது.

இவ்விதம் பிற்பட்டோருக்கும், குற்றப் பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்ட பரம்பரையினருக்கும் அளிக்கப்பட்ட உதவிகளின் எண்ணிக்கை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் (1961—66) 2,08,700. இதே போல் இடை திட்டக் காலத்தில் (1966—69) உதவியளிக்கப்பட்ட எண்ணிக்கை 2,11,018 நான்காவது திட்டக் காலத்தில் (1969—74) அளிக்கப்பட்ட உதவிகளின் எண்ணிக்கை 10,68,158 சென்ற ஆண்டு (1974—75) மட்டும் வழங்கப்பட்ட உதவித் தொகைகளின் எண்ணிக்கை 240,725.

**கே: 'குற்றப்பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர்'- இதனைச்சற்று விளக்கிட முடியுமா?**

ப : பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மலைச்சாதியினர் ஆகியோர்களில் ஒரு சில பிரிவினர் வறுமையினாலும் தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமையினாலும் கொலை கொள்ளை, வழிப்பறி முதலிய சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டதாக அன்றைய ஆங்கில ஆட்சியினர் கருதி 1911-ஆம் ஆண்டு அதற்கு என "குற்றப் பரம்பரைச்" சட்டமியற்றி அதன் மூலம் இவர்களைத் திருத்துவதற்கு முயற்சித்தனர். அதன்படி அம்மக்கள் காவலர் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டனர்.

நம் நாடு விடுதலை அடைந்த பின் குற்றம் பரம்பரைச் சட்டம் 1948-ல் நீக்கப்பட்டது. குற்றப் பரம்பரை என்ற அவப் பெயருக்கு ஆளாக்கப்பட்டு பழிச் சொற்களுக்கு உள்ளாகி வந்த மக்கள் தன்மானத்தோடு வாழ்ந்து முன்னேறுவதற்கு அரசு பல்வேறு வழிகளிலும் உதவி வருகிறது.

இந்தப் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தொகை ஏறக்குறைய 27 இலட்சமாகும். தென் மாவட்டங்களில்இவர்கள்பெருமளவில் வசிக்கின்றனர். சுமார் 70 சாதியினர் இந்த வகையில் உள்ளடங்கியவர்கள். கொடுமையிலிருந்தும், பழியிலிருந்தும் நீக்கப்பட்ட பின்னர், தனி உதவிக்கு இலக்காகும் இவர்கள் "குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்கள்" எனக் குறிப்பிடப்பட்டுகின்றனர்.

காவலர் கண்காணிப்பில் இருக்கும்பொழுதே இவர்களது கல்வி இன்மை, ஏழ்மை இவற்றைப் போக்க திட்டங்கள் வகுக்கப்பட்டன. இவர்களுக்காகப் பள்ளிகள் நடத்துவது, படிப்பதற்குப் படிப்பு உதவித் தொகை அளிப்பது, தேயிலை, காப்பித் தோட்டங்களில் வேலை வாய்ப்புகள் பெற்றுத் தருவது, விவசாயம் செய்யக் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் அமைத்துத்தருவது, இதன்மூலம் கடன் வழங்குவது முதலிய செயல் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இப்பிரிவில் தாழ்த்தப்பட்டவர்கள் பிற்படுத்தப்பட்டோர், மலைச்சாதியினர் ஆகிய மூன்று பிரிவினரும் அடங்குவர். இவ்வாறு தனிப்படுத்தப்பட்ட பிரிவினர், சாதிகளின் அடிப்படையின்றி அவர்களது முன்னோர்கள் ஈடுபட்ட சமூக விரோத நடவடிக்கைகளினால் சலுகை பெறும் தனிப்பட்டியலில் வருகின்றனர்.

ஆனால், வேலை வாய்ப்பு மற்றும் கல்வி நிலையங்களில் முன்னுரிமை போன்ற காரியங்களுக்கு இவர்கள் எவ்வகுப்பு அல்லது சாதியைச் சேர்ந்திருக்கின்றனரோ அதற்கேற்ப சலுகை அளிக்கப்படுகிறது. அதாவது, இவர்கள் பிற்பட்ட சாதிகளுள் ஏதாவது ஒன்றைச் சார்ந்திருந்தால் இவர்களுக்குப் பிற்பட்டோருக்கான ஒதுக்கீட்டிலும், அரிசனங்களாயின் அவர்களுக்கான ஒதுக்கீட்டிலும் வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன.

ஒரே வகுப்பைச் சார்ந்தவர்கள் ஒரு மாவட்டத்தில் குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவராகவும் ஏனைய மாவட்டங்களில் இப்பிரிவில் அடங்காமல் உள்ளனர். குறிப்பாக மதுரை மாவட்ட 'மறவர்கள்' இப்பிரிவில் இல்லை. ஆனால், முகவை, நெல்லை மா





வேலூரிலுள்ள அரசினர் மாணவர் விடுதி

வட்டங்களில் 'மறவர்கள்' முன்னாள் குற்றப்பரம்பரையின ராவர். ஆகவே, எந்தப் பகுதி மக்கள் 1911-ஆம் ஆண்டு மத்தியக் குற்றப் பரம்பரைச் சட்டத்தின்கீழ் கொண்டுவரப் பட்டுக் கண்காணிக்கப்பட்டார்களோ, அவர்களைத்தான் அச் சட்டம் நீக்கப்பட்டபின் 'டிஞேடிபைடு ட்ரைப்ஸ்' அதாவது குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் என அழைக்கப்படுகின்றனர்.

இம் மக்கள் முன்னேற்றத்திற்கு நாடு விடுதலை பெறுவதற்கு முன் கல்வி, சிறிய அளவில் விவசாயம் செய்ய உதவிகள் அளிக்கப்பட்டன. விடுதலைக்குப் பின் கல்வி முன்னேற்றம் மட்டுமின்றி ஏனைய துறைகளிலும் இவர்கள் மேம்பாட்டிற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டன. கிறித்தவ மதம் மாறியவர்களுக்கு இத்துறையின் சலுகைகள் பொருந்தும்.

முதன் முதலில் 1922-ல் மதுரையிலும், 1923-ல் முகவையிலும் இவர்களுக்குப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன.

பிற்பட்டோர் நலத்துறை ஆரம்பிக்கப்பட்டபோது 232 ஆரம்பப் பள்ளிகளும், 33 இடைநிலைப் பள்ளிகளும், 5 உயர்நிலைப் பள்ளிகளும் இருந்தன. இப்போது 235 ஆரம்பப் பள்ளிகளும், 32 இடைநிலைப் பள்ளிகளும், 10 உயர்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. இந்தப் பள்ளிகளின் மூலம் சுமார் 36,720 பேர் பயனடைகின்றனர். இந்தப் பள்ளிகளில் இதர மாணவர்களும் சேர்க்கப்படுகின்றனர். இவர்கள் சுமார் 10 சதவிகிதம் இருக்கலாம்.

இந்த ஏழை மாணவர்கள் தங்கள் பெற்றோரின் வறுமை காரணமாகப் படிப்பை நிறுத்தி விடாமல் இருக்க 1 முதல் 8 வகுப்பு வரை இந்தப் பள்ளிகளில் சாதி வேறுபாடு இன்றிப் பகலுணவு வழங்கப்படுகிறது. இந்தக் கல்விக் கூடங்களைப் பராமரிக்க ஆண்டுதோறும் மதிய உணவு, சீருடை வழங்குவது உட்பட சுமார் 72 இலட்சம் ரூபாய் செலவிடப்படுகிறது. அனைத்துப் பள்ளிகளும் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன.

**கே: 'பின்தங்கிய மாணவர்களுக்கான 'மாணவர் இல்லங்கள்' உள்ளனவா? இதனால் எத்தனை பேர் பயன்பெறுகின்றனர் ?**

ப : ஆம். பின்தங்கிய மாணவருக்கென 979 மாணவ, மாணவியர் பயன் பெறும் வகையில் 11 இல்லங்கள்தான் 1969—70 வரை இருந்தன. தனித்துறை ஆரம்பித்த பின்னர் இவ்வெண்ணிக்கை இன்று 177 ஆக உயர்ந்து, 11,210 மாணவர்கள் பயன்பெற உதவுகிறது. மேலும் இவ்வாண்டில் 20 இல்லங்கள் திறக்கப்படும். அதன் மூலம் மேலும் 1,000 மாணவ, மாணவியர் பயன்பெறுவர்.

இவைகளில் 55 இல்லங்கள் கல்லூரி மாணவ, மாணவியருக்கு ஆனவை. இவை தவிர, முன்னாள் குற்றப் பரம்பரையினருக்கென 5,100 பேர் பயனடையும் வகையில் 54 இல்லங்கள் நடத்தப்படுகின்றன.

**கே: ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற வேலைகளுக்கான தேர்வுகளுக்குச் சிறப்புப் பயிற்சியளிக்கும் நிலையம் உள்ளதாமே?**

ப : ஆம். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற பதவிகளில் பிற்பட்டோரின் பிரதிநிதித்துவம் மிகக் குறைவு. இவ்வாண்டு இப்பதவிகளுக்கு மத்திய அரசின் தேர்வாணைக் குழுவினால் தேர்வு நடத்தப்படுகிறது. பிற்பட்டோருக்கென தனி ஒதுக்கீடும் இல்லை. அத் தேர்வில், பல முன்னேற்றம் அடைந்த வகுப்பு மாணவர்களுடன், பல வசதிகள் குறைவின் காரணமாகப் பிற்பட்ட மாணவர்கள் போட்டியிட்டுத் தேர்வு பெறுவது கடினம் என்பதை உணர்ந்து, அத்தேர்வுக்குத் தகுந்த பயிற்சி அளிக்கவே, ''சிறப்புப் பயிற்சி நிலையம்'' ஒன்று 1971-ல் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வகுப்பில் 50 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இலவச உண்டி, உறையுள் வசதியுடன் கூடிய இந் நிலையத்தில் நூலகமும், தேர்வுக்குப் பயன்படும் புத்தகங்களும் உள்ளன. ஆர்வமும் முன் அனுபவமும் திறமையும் மிக்க ஆசிரியர்களால் இம்மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்நிலையத்தை நடத்திச் செல்ல ஒரு ஆலோசனைக் குழு உள்ளது. அதில், சமூக நலத் துறைச் செயலர் தலைவராகவும், கல்லூரி இயக்குநர், காவல் துறைத் தலைவர், தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் முதலானோர் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

முதன் முதலில் பயிற்சி 12—12—71-ல்தான் ஆரம்பிக்கப்பட்டது. சேர்க்கப்பட்ட 12 பேரில் எவரும் தேர்ச்சி பெறவில்லை. இரண்டாவது அணியில் 1972 நவம்பர் முதல் 1973 அக்டோபர் வரை 67 பேருக்குப் பயிற்சி அளித்ததில், ஒருவர் ஐ.ஏ.எஸ்ஸுக்கும், இருவர் மத்திய அரசுப் பணியாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மூன்றாவது அணி 1973 நவம்பரில் தொடங்கப்பட்டது. இதில் ஒருவர் ஐ.ஏ.எஸ்ஸுக்கும் மற்றொருவர் ஐ.பி.எஸ்ஸுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நான்காவது அணிக்கு 1974 நவம்பர் முதல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கல்வி, வேலை ஆகியவற்றில் அளிக்கப்படும் சலுகைகளைச் சோழிய வேளாளர்களுக்கும் அளிக்க வகை செய்யும் உத்தரவைத் தமிழ்நாடு அரசு பிறப்பித்துள்ளது.**

**ஏற்கெனவே, கொங்கு வேளாளர் சமூகத்தினருக்குப் பிற்பட்டோருக்கான சலுகைகள் அளிக்கப்படுமென்று, தமிழ்நாடு அரசு கடந்த மே மாதம் அறிவித்தது.**

**சோழிய வேளாளர்களுக்கும் இந்தச் சலுகை அளிக்கப்படவேண்டுமென்று அப்போது கோரிக்கை தெரிவிக்கப்பட்டது.**

**அதன் அடிப்படையில் சோழிய வேளாளர், அதைச் சார்ந்துள்ள சோழிய வேளாள வெற்றிலைக்காரன், கொடிக்கால் காரன், கீரைக்காரன் ஆகிய உட்பிரிவினரும், கருணீகர் வகுப்பாரும் பின்தங்கியவர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.**

**அதன்படி இந்தச் சமூகத்தினருக்குப் பின்தங்கியோருக்கான கல்விச் சலுகைகள் இந்தக் கல்வி ஆண்டு முதல் கிடைக்கிறது. அரசு வேலைகளில் இடம் ஒதுக்குவதிலும் இந்தச் சமூகத்தினர் தகுதி பெறுகிறார்கள்.**

இப்பயிற்சி நிலையத்தில் பெண்களும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். பட்ட மேற்படிப்பு உள்ளவர்கள்தான் நேரிடைத் தேர்வின் மூலம் சேர்க்கப்படுகின்றனர். இதில் சேர்வதற்குப் பெற்றோரின் வருமான வரம்பு கணக்கிடப்படுவது இல்லை. இப்பயிற்சியில் சேர ஆர்வம் உடைய மாணவர்கள் பயிற்சி நடைபெறும் ஆண்டில் ஆகஸ்டில் முதல் தேதியில் 25 வயதைக் கடந்து இருக்கக் கூடாது.

**கே: பல்வேறு தொழில்களில் பயிற்சி பெறுவதற்கான கைத்தொழில் நிலையங்களும் உள்ளனவா?**

ப : ஆம். உள்ளன. முன்னாள் குற்றப் பரம்பரையினருக்கும், பிற்பட்டோருக்கும் தொழில் கல்வி அளிக்கப்படுகிறது. அவை :

1. பொதுப் பொறியியல் பட்டறைகள் : செக்காணூரணி (மதுரை மாவட்டம்), முதுகுளத்தூர் (முகவை மாவட்டம்), வீரகேரளம்புதூர் (நெல்லை மாவட்டம்) ஆகிய இடங்களிலும்; 2. பிரம்புப்பொருள்கள் செய்யும் பயிற்சி நிலையம் : பிரஸ்லி நகர், பெரம்பூரிலும்; 3. பெண்களுக்காக, மதுரை மாவட்டம் உசிலம்பட்டியிலும், நெல்லை மாவட்டம் கூலவணிகபுரத்திலும், கிண்டி ராஜபவனம் மற்றும் தருமபுரி மாவட்டம் சாமியாபுரத்திலும் தையற் பயிற்சி நிலையங்கள் உள்ளன. இதேபோல, 4. கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறையில், தும்புப் பொருள் தயாரிப்பு மற்றும் பாகோடில், பிரம்புப் பொருள் தயாரிப்புப் பயிற்சி நிலையங்கள் உள்ளன.

**கே: பிற்பட்டோர் நலனுக்காக புதிய திட்டங்கள் ஏதேனும் உள்ளனவா?**

ப : இன்றளவில் நடைபெறும் திட்டங்களினால் ஏற்பட்ட பயனை ஆய்வு செய்து புதுத் திட்டங்கள் உருவாக்கினால் நலம்.

பிற்பட்டோர் நலத் துறை பிற்பட்ட மக்களின் கல்வி மேம்பாட்டை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு ஏராளமான மக்களுக்கு உபகாரச் சம்பளம் மற்றும் இதர சலுகைகளை வழங்கி வருகிறது. ஆண்டு தோறும் இதற்காகவே ஏறத்தாழ 5 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது. இந்தத் துறைக்கு ஒதுக்கப்படும் மொத்த நிதியில் இது சுமார் 82 சதவிகிதம்.

வீட்டு வசதி, தொழில் மேம்பாடு, பொருளாதார வளர்ச்சி போன்ற துறைகளில் பிற்பட்ட மக்களுக்கு என்று தனித் திட்டங்கள் தேவைப்படினும் நமது அரசு எந்தெந்தத் துறைகளில் வளர்ச்சித் திட்டங்களை வகுத்தாலும் அவை சமுதாயத்தின் பிற்பகுதியில் இருக்கும் ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும் முறையில்தான் வகுக்கப்படுகின்றன.

ஆகவே, நம் அரசு இதரத் துறைகளில் வகுக்கும் வளர்ச்சி திட்டங்களும் பிற்பட்ட மக்களுக்குச் சாதகமானவையாக இருப்பதாகவே கொள்ளலாம்.

இவ்வாறு எந்த மாநிலத்திலும் இல்லாத முறையில் பிற்பட்டோர் நலனுக்காக ஒரு தனித் துறையையே ஏற்படுத்தி அவர்கள் நலனில் அக்கறையும் ஆர்வமும் கொண்டு தமிழக அரசு ஆக்கப் பணிகளை அயராது ஆற்றி வருகிறது என்பதை நான் பெருமையாகக் கூறிக் கொள்ளவிரும்புகிறேன்.

**—பேட்டி : பி. வி. ஜி.**






# தமிழ்நாட்டில் பெருந் தொழிற்சாலைகள்!

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெருந்தொழிற்சாலைகள் மிகவும் இன்றியமையாததாகும். ஆனால் தற்பொழுது தமிழ்நாட்டில் ஒருசில பெருந்தொழிற்சாலைகளே உள்ளன! எனவேதான், தமிழ்நாடு அரசு தமிழ்நாட்டில் பெருந்தொழிற்சாலைகளை அமைப்பதற்குள்ள வாய்ப்புகளை எடுத்துக்கூறி, அத்தகையத் தொழிற்சாலைகளைத் தமிழ்நாட்டில் மைய அரசுத் திட்டத்தின்கீழ் அமைத்திடும்படி இந்திய அரசிடம் வற்புறுத்தி வருகிறது. மேலும் தமிழ்நாடு அரசே பொதுத் துறையிலும், கூட்டுத்துறையிலும் பல தொழிற்சாலைகளைத் துவக்கிட முயன்று வருவதுடன், பெருந்தொழிற்சாலைகளைத் துவக்கிட முன்வரும் தொழில் முனைவோர்களுக்கும் உதவி வருகிறது.

தமிழகத்தில் உள்ள பெருந்தொழிற்சாலைகள் பின்கண்டவாறு 4 வகையில் அடங்குகின்றன.

1. மைய அரசுத் துறையைச் சார்ந்தவை.

2. மாநில அரசின் பொதுத் துறையைச் சார்ந்தவை.

3. மாநில அரசின் கூட்டுத் துறையைச் சார்ந்தவை.

4. தனியார் துறையைச் சார்ந்தவை.

தமிழ்நாட்டில் தற்பொழுது உள்ள பெருந்தொழிற்சாலைகளைப் பற்றிய விவரங்கள் கீழே விவரிக்கப்பள்டுள்ளன.

## மைய அரசுத் துறையைச் சார்ந்த பெருந் தொழிற்சாலைகள்!

### 1. நெய்வேலி நிலக்கரி தொழிற்சாலை:





நெய்வேலி நிலக்கரி தொழிற்சாலை நிருவாகத்தை, நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம் ஏற்றுக் கொண்டுள்ளது. இக்கழகத்தில் சுரங்கப் பிரிவு, அனல் மின் உற்பத்திப் பிரிவு, உர உற்பத்திப் பிரிவு, சுட்ட அச்சுக் கரித் தொழிற் பிரிவு ஆகிய நான்கு பெரும் பிரிவுகள் உள்ளன. சுரங்கப் பிரிவில் முதல் நிலையில் ஆண்டு ஒன்றுக்கு 3.5 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரி கிடைக்கும் என்றிருந்தது. இந்த அளவை ஆண்டு ஒன்றுக்கு 6.5 மில்லியன் டன்னாக உயர்த்த முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. இப்பிரிவுகள் அனைத்தும் 1974-ல் செயல்பட்டன. இப்பிரிவுகள் 17,903 பேர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கின்றன. பழைய கருவிகளுக்குப் பதிலாக புதிய கருவிகள் வாங்க ரூபாய் 36 கோடி முதலீடு செய்யவும், ஆண்டொன்றுக்கு சுரங்கத்தின் நிலக்கரி வெட்டியெடுக்கும் திறனை 6.5 டன் மில்லியனாக உயர்த்தவும் இக்கழகம் கருதியுள்ளது.

இரண்டாவது சுரங்கப் பிரிவை வெட்டுமாறு இந்தியஅரசைத் தமிழ்நாடு அரசு வலியுறுத்தி வருகிறது. இது, மின்சக்தி உற்பத்தியைப் பெருக்க உதவும். அதனால் நீடித்து வருகிற நிலையாக நமது மின்சக்தி பற்றாக் குறையை ஓரளவுக்குத் தணிக்க முடியும். நமது வேண்டுகோளுக்கு இந்திய அரசு இன்னும்

### 2. இணைப்பு ரயில் பெட்டித் தொழிற்சாலை.

இந்திய அரசு ரயில்வே அமைச்சகத்தின் கீழுள்ள உற்பத்திப் பிரிவான இணைப்பு ரயில் பெட்டித் தொழிற்சாலை, ஸ்விட்சர்லாந்து நாட்டு உடனுழைப்புடன் அமைக்கப்பட்டது. 1958-59-ல் இத்தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு இருக்கை மற்றும் வசதிகளில்லாத 350 ரயில் பெட்டிகளை உற்பத்தி செய்தது. பின்னர் முழு வசதிகள் நிறைந்த 750 ரயில் பெட்டிகளாக இந்த உற்பத்தித் திறன் படிப்படியாக உயர்ந்தது. இச்சாதனை 1973-74-ல் திட்டமிட்டபடி எய்த முடிந்தது. ஏற்றுமதியில் இணைப்பு ரயில் பெட்டித் தொழிற்சாலையும் முக்கிய பங்கு வகிக்கிறது. இத்தொழிற்சாலை தைவான், பர்மா, ஜாம்பியா, தாய்லாந்து, போன்ற பல நாடுகளுக்கு ரயில் பெட்டிகள் உதிரிப் பகுதிகள் முதலியவற்றை வழங்கியுள்ளன. பிலிப்பைன் தேசிய ரயில்வேயிடமிருந்து 30 ரயில் பெட்டிகளுக்கும், தைவானிலிருந்து 96 ரயில் பெட்டிகளுக்கும், பர்மா ரயில்வேயிலிருந்து உதிரிப் பகுதிகளுக்கும் வழங்கல் ஆணை கிடைத்துள்ளது. இதனிடமுள்ள ஏற்றுமதி ஆணையின் மொத்த மதிப்பு ரூபாய் 3.38 கோடியாகும். இத்தொழிற்சாலை தொடங்கிய நாளிலிருந்து இதுவரை 10,527

லாத ரயில் பெட்டிகளை உற்பத்தி செய்துள்ளது. இதில் 8,527 பெட்டிகள் முழு வசதிகள் நிறைந்த பெட்டிகளாக மாற்றப்பட்டன. இத்தொழிற்சாலை 13,351 பேர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கிறது.

**3. இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம்.**

ரூபாய் 123 இலட்சம் செலுத்தப்பட்ட மூலதனத்துடன் 'இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம்', 6,000 டெலிபிரிண்டர்களை உற்பத்தி செய்கிறது. இது 1,413 பேர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கிறது. மின்சார தட்டச்சு இயந்திரம், 'பவர் க்யூபிகில்ஸ்' (Power Cudicles), 'ஸ்டாம்ப் கான்சலிங்' இயந்திரங்கள் போன்ற புதிய பொருள்களை உற்பத்தி செய்வதில் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது. 'ஸ்டாம்ப் கான்சலிங்' இயந்திரங்கள் 100-ஐ உற்பத்தி செய்ய இந்நிறுவனம் தொழில்நுட்ப வளர்ச்சி தலைமை இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளது.

**4. இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தயாரிப்பு நிறுவனம்.**

அரசுத் துறையிலுள்ள பெரிய அளவுத் தொழிற்சாலைகளில் இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தயாரிப்பு நிறுவனம் ஒன்றாகும். இந்நிறுவனம் புகைப்படம் சம்பந்தப்பட்ட பொருள்கள், மற்றும், எக்ஸ்-கதிர் சுருள்களையும் தயாரிக்கின்றன. இத்தொழிற்சாலையின் மூலதன முதலீடு ரூபாய் 13.60 கோடியாகும். இது 1,957 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது.

சென்ற ஆண்டில் இந்த நிறுவனம் இறக்குமதி செய்யப்பட்ட திரைப்படச் சுருளுக்கான மூலப் பொருளை (Jumboos) மாற்றுவதன் மூலம் பாஸிடிவ் திரைப்படச் சுருளைத் தயாரிக்கும் பணியை மேற்கொண்டுள்ளது. மேலும் பாலியஸ்டரை மூலப் பொருளாகக் கொண்டு எக்ஸ்-கதிர் படச் சுருள், கற்பரப்பில் வரைந்த ஓவியங்கட்கான அச்சுப் படச்சுருள் (Graphic Arts film) ஆகியவற்றை உற்பத்திச் செய்யவும் திட்டமிட்டு வருகிறது.




**5. பாரத் கனரக மின் கருவிகள் நிறுவனம், திருச்சிராப்பள்ளி.**



இது இந்திய அரசு நிறுவியுள்ள முக்கியமான பெருந்தொழிற்சாலையாகும். இது செக்கோஸ்லோவாகியாவைச் சேர்ந்த திருவாளர்கள் "டெக்னோ எக்ஸ்போர்ட்ஸ்" (M/s. Techno Exports) நிறுவனத்தின் ஒத்துழைப்புடன், நிறுவப்பட்டுள்ளது. அனல் மின் நிலையத்துக்குத் தேவைப்படும் பெரும் கொதிகலன்கள் முதலியவற்றைத் தயாரிக்கிறது. திருச்சியிலுள்ள இத்தொழிற்சாலை இந்நாட்டில் அமைந்துள்ள பாரத் கனரக மின் கருவிகள் நிறுவனத்தைச் சேர்ந்த நான்கு பெரியதொழிற்சாலைகளில் ஒன்றாகும். இந்நிறுவனத்தின் நிறுவிய நிலை உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 31,000 மெட்ரிக் டன் கொதிகலன் கூட்டு உறுப்புகள் அல்லது 750 மெகாவாட்டுக்குச் சமமான ஆற்றல் ஆகும். இத்தொழிற்சாலையின் உற்பத்தித் திறனை 1,100 மெகாவாட்டாக உயர்த்துவதற்கு, '1973-74-ஆம் ஆண்டில், தனது முதல் நிலை விரிவாக்கத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்தியுள்ளது. 1973 செப்டம்பரில், ரூபாய் 12.12 கோடி மதிப்பீட்டுச் செலவில் அரசு அனுமதித்துள்ள 2-ஆம் நிலை விரிவாக்கத் திட்டத்தைத் தற்போது இத்தொழிற்சாலை நிறைவேற்றி வருகிறது. இத்திட்டம், இதன் உற்பத்தித் திறனை 2,500 மெகாவாட்டாக அதாவது ஆண்டுக்கு 87,000 மெட்ரிக் டன் கொதிகலன்கள் கூட்டு உறுப்புகளாக உயர்த்தும். இத்தொழிற்சாலையில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் விரிவாக்கப் பணித்திட்டம் 1976-77-ஆம் ஆண்டில் நிறைவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொழிற்சாலையின் தற்போதைய மூலதன முதலீடு சுமார் ரூபாய் 60.63 கோடியாகும். இது 8,565 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உற்பத்தியைப் பல திறப்படுத்துதல், புதிய பொருள் உற்பத்தி தொடங்கல் ஆகியவை குறித்த செயற்குறிப்புகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. விவரங்களுக்கு இறுதி வடிவமளிக்க இன்னும் சிறிது காலம் ஆகும்.

**6. அறுவை சிகிச்சை கருவிகள் தொழிற்சாலை, நந்தம்பாக்கம்.**

இந்திய மருந்துகள், மருந்துத் தயாரிப்புகள் நிறுவனம் சென்னைக்கு அருகில் உள்ள நந்தம்பாக்கத்தில் சோவியத் நாட்டின் ஒத்துழைப்புடன் அறுவை சிகிச்சைக் கருவிகள் தொழிற்சாலை ஒன்றை நிறுவியுள்ளது. இது ஆண்டொன்றுக்கு 25 இலட்சம் அறுவைச் சிகிச்சைக் கருவிகள் உற்பத்தி செய்யும் திறனுடையது. இத்தொழிற்சாலை 1965-ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டு உற்பத்தியைத் தொடங்கியுள்ளது இது 1,011 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கிறது.

**7. உயவு எண்ணெய்க் கலவைத் தொழிற்சாலை.**

இந்திய எண்ணெய்க் கழகத்தின் உயவு எண்ணெய்த் தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 1.4 இலட்சம் டன் கலவை லூப் (Lube) எண்ணெயை உற்பத்தி செய்யும் திறனுடையதாகும். இது ரூபாய் 1.10 கோடி மூலதன முதலீட்டுடன் தொடங்கப்பட்டது. இது 125 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. இக்கழகம் 1,650 தார் பீப்பாய்களையும், 1,650 லூப் எண்ணெய் பீப்பாய்களையும் தயாரிக்கிறது. இதற்காக இந்திய எண்ணெய் கழகம் ரூபாய் 50 இலட்சம் மூலதன முதலீடு செய்துள்ளது. இத்தொழிற்சாலை 160 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது. இது சென்னையிலுள்ள எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலையின் விற்பனைத் தேவைகளை நிறைவு செய்கிறது. இது 'டிகாயிலிங்' (Decoiling) தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கும் திட்டமிட்டுள்ளது. இத்தொழிற்சாலை 1975-76-ல் செயல்படத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.



சென்னை உரத் தொழிற்சாலை

**8. எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலை, சென்னை.**

மணலியில் நிறுவப்பட்டுள்ள சென்னை எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலை இம்மாநிலத்தின் தொழில் துறையின் வரலாற்றில் பெரும் வளர்ச்சியைக் காட்டுவதாகும். இது ரூபாய் 43.02 கோடி மூலதன முதலீட்டுடன் செயல்பட்டு வருகிறது. இது ஆண்டொன்றுக்கு 25 இலட்சம் டன் தூய்மைப்படுத்தப்படாத எண்ணெயைத் தூய்மைப்படுத்துகிறது. இது 505 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. இத்தொழிற்சாலை எம்.ஆர்.எல். ரப்பர் எக்ஸ்டெண்டர் ஆயில் (M.R.L. Rubber Extender Oil) அதிர்ச்சி தாங்கும் திரவம், டர்பன் தர எண்ணெய் (Turbine Grade Oil) முதலியன போன்ற சிறப்புப்பொருள்களைத் தோற்றுவித்துள்ளது. இக்கழகம் ஆண்டொன்றுக்கு தூய்மைபடுத்தப்படாத 25 இலட்சம் டன் எண்ணெயைத் தூய்மைப்படுத்தும். தனது திறனை உயர்த்த அதாவது ஆண்டுக்கு 35 இலட்சம் டன் தூய்மைப் படுத்தப்படாத எண்ணெயைத் தூய்மைப் படுத்தும் அளவிற்கு உயர்த்த திட்டமிட்டுள்ளது. அதுபோல ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் டன் லூப் எண்ணெய் அளிக்கும் திறனை, ஆண்டுக்கு 2.7 இலட்சம் டன் லூப் எண்ணெய் அளிக்கும் திறனை உயர்த்தவும் கருதப்பட்டுள்ளது. மேலும் ஆண்டொன்றுக்கு 20 ஆயிரம் டன் உற்பத்தித் திறன் கொண்ட பாரபின் மெழுகை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கான செயற் குறிப்பும் உள்ளது.

**9. சென்னை உரத் தொழிற்சாலை**

சென்னை எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலையின் இணைத் தொழிற்சாலையாக நாப்தாவை மூலப்பொருளாகக் கொண்டு சென்னை உரத் தொழிற்சாலை என்னும் பெய



எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலை, சென்னை.



# தமிழ்நாட்டில் சர்க்கரைத் தொழில்

தமிழ் நாட்டில் சர்க்கரைத் தொழில் நான்காவது ஐந்தாண்டுத்திட்டக் காலம் (1969 74) முழுவதும் சிறந்த சாதனை புரிந்து வந்துள்ளது. இத் தொழில் 1973-74 சர்க்கரை ஆண்டில், ஒரு புதிய சாதனைச் சிகரத்தை எட்டியது. முன்னெப்போதுமிராத அளவு, 4.43 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்து அருஞ் சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. அனைத்திந்திய நோக்கில் பார்க்கின்றபோது, இந்நிலை மேலும் சிறப்பாகப் போற்றப்படுவதற்குரியதெனக் கருதப்படுகிறது.

**கரும்பு பயிரிடும் பரப்பு குறைந்த நிலையிலும் சாதனை!**

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கத்திலும் (1969-70), 1972-73—ஆம் ஆண்டிலும் இருந்த நிலையைக் காட்டிலும், 1973-74-ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க அளவு உற்பத்தி உயர்வை எட்டியுள்ளது. இந்த மாநிலத்தில் கரும்பு பயிரிடப்படும் மொத்தப் பரப்பு குறைந்த நிலையிலும் நாம் அடைந்த பெரிய சாதனையாகும்!

**நான்காவது திட்டக் காலத்தின் போது எய்திய சாதனை!**

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின்போது (1969-74) தமிழ் நாட்டில் சர்க்கரைத் தொழில் படிப்படியாக முன்னேற்றமடைந்து வந்தது, 1969-70—ஆம் ஆண்டில் 2.88 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது. 1972-73—இல் உற்பத்தியளவு 3.31 இலட்சம் டன்னை எட்டியது. 1973-74-இல் 4.43 இலட்சம் டன் என்னும் சாதனைச் சிகரத்தை எட்டியது. ஆக, 1972-73-ஆம் ஆண்டின் உற்பத்தியளவைக் காட்டிலும் 1973-74-ஆம் ஆண்டில் 1.12 இலட்சம் டன் கூடுதலாக உற்பத்தியாகியுள்ளது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் தமிழ்நாட்டில் சர்க்கரை உற்பத்தியளவு சுமார் 54 சதவீதம் உயர்ந்துள்ளது. முந்திய ஆண்டு உற்பத்தியளவைக் காட்டிலும், 1973-74-ஆம் ஆண்டில் உற்பத்தியளவு சுமார் 34 சதவீதம் உயர்ந்துள்ளது. இதே ஆண்டில் நாடு முழுவதையும் எடுத்துக் கொண்டால் மொத்த உற்பத்தியளவில் கிட்டத்தட்ட 10 சதவீதம் குறைந்துள்ளது. இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனல் தமிழ்நாட்டில் 1972-73-ஆம் ஆண்டைக்காட்டிலும் 1973-74-ல் உற்பத்தியளவு 1.12. இலட்சம் டன் உயர்ந்திருக்க நாட்டின் மற்றப் பகுதிகளின் மொத்த உற்பத்தியளவு 0.35 இலட்சம் டன் குறைந்துள்ளது. மேலும், ஒரு சிறப்பான கூறு என்னவெனில், தமிழ்நாட்டில் மொத்தம் கரும்பு பயிரிடப்படும் பரப்பு குறைந்திருந்த நிலையிலும் இச்சாதனையை எட்டிஞேம் என்பதேயாகும்.

1967-70-ல் கரும்புப் பயிரிடப்பட்ட நிலங்களின் மொத்தப் பரப்பு 1.72 இலட்சம் எக்டேர்கள்; அப்பரப்பு 1973-74-ல் 1.13 இலட்சம் எக்டேர்களாகக் குறைந்துவிட்டது.

1973—74—ஆம் ஆண்டில் பிழியப்பட்ட கரும்பு, உற்பத்தியாகிய சர்க்கரை இவற்றின் அளவு.

தமிழகத்திலுள்ள 16 சர்க்கரை ஆலைகளாலும் பிழியப்பட்ட கரும்பின் மொத்த அளவு, 1972-73-ஆம் ஆண்டில் 40.08 இலட்சம் டன்னுக இருந்தது. இது, 1973-74-இல் 52.87 இலட்சம் டன்னுக உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள 7 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும், பிழிந்த கரும்பின் அளவு, 1972-73-ல் 12.91 இலட்சம் டன்னுக இருந்தது. 1973-74-இல் 19.76 இலட்சம் டன்னுக உயர்ந்துள்ளது. இதிலிருந்து 1972-73-ஆம் ஆண்டினை விட 1973-74-ஆம் ஆண்டில் 53 சதவீதம் கூடுதலாகக் கரும்பு பிழியப்பட்டது என்பது தெளிவாகிறது.

தமிழ்நாட்டிலுள்ள 9 கூட்டு பங்கு சர்க்கரை ஆலைகளும் 1972-73-ல் 27.18 இலட்சம் டன் கரும்பு பிழிந்திருக்க, 1973-74-ல் 33.11 இலட்சம் டன் கரும்பு பிழிந்துள்ளன.

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் உற்பத்தியளவைப் பொறுத்த வரை, 1972-73-ஆம் ஆண்டில் 1.10 இலட்சம் டன்னுக இருந்த சர்க்கரை உற்பத்தி 1973-74-ஆம் ஆண்டில் 1.73 இலட்சம் டன்னுக உயர்ந்துள்ளது. கூட்டுறவுத் துறையில், 1972-73-ஆம் ஆண்டில் எய்திய சர்க்கரை உற்பத்தியளவைக் காட்டிலும், 1973-74-ஆம் ஆண்டு 58 சதவீதம் கூடுதல் அளவு சர்க்கரை உற்பத்தியாகியுள்ளது.

கூட்டுப் பங்கு சர்க்கரை, ஆலைகளைப் பொறுத்தவரை சர்க்கரை உற்பத்தியளவு 1972-73-ல் 2.21 இலட்சம், டன்னுக இருக்க, 1973-74-ல் 2.70 இலட்சம் டன்னுக உயர்ந்துள்ளது. இந்திய அரசு, தற்போது கரும்புக்கு வரையறுத்துள்ள குறைந்த அளவு விலையானது, இம்மாநிலத்தில் கரும்பு பயிரிடுவதற்குரிய ஆர்வத்தைக் குறைக்கும் முட்டுக்கட்டையாக உள்ளது.

இதன் விளைவாக, கரும்பு பயிரிடும் பரப்பு குறைய நேரிடும்; அதுவும் குறிப்பாக நெல், வாழை முதலிய வேறு பயிர்கள் பயிரிடுவதற்குக் கிடைக்கின்ற கவர்ச்சிகரமான விலையையும், கரும்புப் பயிரிடும் செலவு உயர்வையும் கருத்திற்கொண்டு பார்த்தால், கரும்பு பயிரிடுவது இனி வெகுவாகக் குறைந்து விடும்.

**கரும்பு விலைபற்றிய மாநில அரசு தெரிவித்த கருத்துக்கள்**

கடந்த ஆண்டில், குறிப்பாக இரசாயன உரங்களின் விலை பெரிதும் உயர்ந்த காரணத்தால், கரும்பு பயிரிடுவதற்காகும் செலவு பெருமளவுக்கு உயர்ந்ததை யொட்டி, கரும்பு பயிரிடுவோர்க்கு ஆதாயமளிப்பதாயிருக்கும் வகையில் உள்ள நிலையை யொட்டி, கரும்புக்கு விலைகளை வரையறுக்குமாறு வேளாண் விளைபொருள் விலைகள் குறித்த ஆணைக்குழுவிடமும், இந்திய அரசிடமும் மாநில அரசு பரிவுரை செய்து வந்துள்ளது. மாநில அரசானது 8.5 சதவிகித சர்க்கரை உற்பத்தி அளவுடன் இணைத்து 1974-75—ஆம் ஆண்டில் கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூபாய் 125/- விலை வழங்கப்பட வேண்டுமென்று கருத்துத் தெரிவித்திருந்தும்கூட, இந்திய அரசானது 1973-74-ஆம் ஆண்டின் விலை அளவுக்கு மேல் டன் ஒன்றுக்கு ரூபாய் 5 மட்டும் என்கின்ற மிகக் குறைந்த அளவில் விலை ஏற்றம் அளித்து, கரும்பின் விலையை டன் ஒன்றுக்கு ரூபாய். 85 ஆக வரையறுப்பதென முடிவு செய்துள்ளது. கரும்புக்கு இந்த அளவு விலை வரையறுப்பதானது, கரும்பு பயிரிடும் செலவு உயர்வைச் சரிகட்டுவதற்கு முற்றிலும் போதுமானதாக இராது. இப்போது, ஏக்கர் ஒன்றுக்கு கரும்பு பயிரிட குறைந்தது ரூபாய் 1,100/- செலவு ஆகிறது. மீண்டும், 1975-76 சர்க்கரை ஆண்டில் கரும்புக்கு ஒரு டனுக்கு ரூபாய் 125/- என்னும் குறைந்த அளவு வரையறுக்கப்பட வேண்டுமென்று தமிழ் நாடு அரசு மறுபடியும் வற்புறுத்தியுள்ளது. மேற்சொன்னவாறு கரும்புக்கு ஆதாயமளிக்காத வகையில் விலை வரையறுத்ததன் காரணமாக, கடந்த சில ஆண்டுகளில் இம் மாநிலத்தில் கரும்பு பயிரிடப்படும் பரப்பு குறைந்துள்ளதை யொட்டி, தமிழ்நாடு அரசு தெரிவித்த கருத்துக்களுக்கு



இந்திய அரசு உரிய மதிப்பு அளிக்கும் என்று நம்பப்படுகிறது.

**சர்க்கரை ஏற்றுமதி !**

நமது நாட்டில் அண்மை ஆண்டுகளில் சர்க்கரை ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதனுல் நமக்கு அந்நியச் செலாவணி கிடைக்கிறது. அந்நிய வாணிபத்தில் இது ஒரு சிறப்பான அம்சமாகும்!

மின்சக்திப் பற்ருக்குறை, உலகின் பெரும்பகுதிகளில் சிறந்த கரும்புப் பயிர் விளைச்சல் தவறியமை ஆகிய காரணங்களால் உலக நாடுகளில் சர்க்கரை விலை பெரிதும் உயர்ந்தது. ஐந்து ஆண்டுகளாக டன் ஒன்றுக்கு ரூபாய் 1000-க்கு குறைவாக இருந்த T. O. B. விலை டன் ஒன்றுக்கு ரூபாய் 10,000 ஆக உயர்ந்தது. அனைத்து நாடுகள் அங்காடியில் ஒரு சமயம் டன் ஒன்றுக்கு 700 டாலர்களாக உயர்ந்தது. சர்க்கரையின் இந்த அந்நியச் செலாவணி உயர்வைச் சாதகமாக்கிக் கொண்டு, ஐந்து இலட்சம் டன் சர்க்கரையை ஏற்றுமதி செய்ய இந்திய அரசு திட்டமிட்டது. இதனுல் சுமார் ரூபாய் 275 முதல் 300 கோடி வரை அந்நியச் செலாவணி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன் எப்போதையும் விட அதிகமானதாகும். இவ்வாறு நாட்டின் அந்நியச் செலாவணி ஈட்டித் தரும் பொருள்களில் சர்க்கரையும் ஒன்ருக விளங்குகிறது. மேலும் மத்தியக் கருவூலத்திற்குச் சுமார் ரூபாய் 150 முதல் 170 கோடி வரை சேரும். 1974-75-ல் ஐந்து இலட்சம் டன் சர்க்கரையை ஏற்றுமதி செய்ய இந்திய அரசு ஏற்கனவே ஒப்புக் கொண்டுள்ளது.

இத்தேசிய நடவடிக்கையில் தமிழ்நாடு சர்க்கரைத் தொழில் குறிப்பிடத்தக்க பணியாற்றியுள்ளது. 1973-74-ல், ஏறத்தாழ 50,000 டன் சர்க்கரை பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. 1973-74-ல் மொத்த ஏற்றுமதியில் 17,000 டன்சர்க்கரையைத் தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் ஏற்றுமதி செய்துள்ளன என்பது பெருமைப்படத்தக்கதாகும். வெளிநாடுகளுக்கு கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் சர்க்கரை ஏற்றுமதி செய்தது இதுவே முதல் முறையாகும்.

1974-75-ல், இம் மாநிலத்தில் 21,000 டன் சர்க்கரையை ஏற்றுமதி செய்ய ஏற்கனவே ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. புதிய திட்டங்களைச் செயல்படுத்துவதை விரைவுப்படுத்தவும், தற்போதுள்ள சர்க்கரை ஆலைகளை விரிவுபடுத்தவும் பொருத்தமான இறக்குமதித் திட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று தமிழ்நாடு மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது. அப்போதுதான் டர்போ ஆல்டர்னேட்டர், (Turbo Alternators) கொதிகலன்கள் போன்ற அதிக மின் சுமை உள்ள கருவிகள் கூட்டுப் பொருளாக அல்லது மூலப் பொருளாகவும் அதற்குத்தேவைப்படும் துணைப் பொருளாகவும் இறக்குமதி செய்யப்படலாம். சர்க்கரை ஏற்றுமதி மூலம் சேர்ந்து வரும் ஆதாயத்தைப் பகிர்ந்து கொள்ள வேளாண்மை விலைக் குழு கருத்து தெரிவித்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. சர்க்கரைத் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்காக உபரியாக உள்ள தொகையிலிருந்து மைய அரசு நிதி ஒதுக்க வேண்டியது அவசியமாகும். அப்போதுதான் அனைத்து நாடுகள் அங்காடியில் சர்க்கரைக்குள்ள விலையேற்றத்தை வைத்து நமது நாடு

ரில், பெரிய இரசாயன உரத் தொழிற்சாலை ஒன்று நிறுவப் பட்டுள்ளது. இத்தொழிற்சாலை அமோனியா, யூரியா, நைட்ரஜன், பொட்டாசியம், சோடியம் ஆகியவற்றை உற்பத்தி செய்கிறது. இது ரூபாய் 7,337 இலட்சம் மூலதனத்துடன் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் ஏறத்தாழ 920 பேர் பணியாற்றுகின்றனர். 1974-ஆம் ஆண்டில் இது உற்பத்தி செய்த பொருள்களின் மதிப்பு ரூபாய் 5,194 இலட்சம் ஆகும். நைட்ரஜன், பொட்டாசியம், சோடியம் தயாரிக்கும் தொழிற்சாலையின் மூன்றுவது பிரிவு ஒன்றைக் கட்டுவித்துச் செயல்படத் தொடங்குவதற்காக இந்நிறுவனம் திருவாளர்கள் ''டார் ஆலிவர் இந்தியா நிறுவனத்துடன்'' ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது. இம்மூன்றுவது பிரிவு 1976-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் வாக்கில் கட்டி முடிக்கப்பட்டு, செயல்படத் தொடங்கி வைக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 10. கனரக வண்டிகள் தொழிற்சாலை, ஆவடி

இத்தொழிற்சாலை படையினருக்குத் தேவைப்படும் எல்லா வகையான போர்முனை வண்டிகளையும், ஏனைய கனரக வண்டிகளையும், கருவிகளையும் உற்பத்தி செய்கிறது. இந்தத் தொழிற்சாலையின் மூலதன முதலீடு சுமார் ரூபாய் 20 கோடி ஆகும். இது 5,758 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது.

### 11. படைக்கலன்கள் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி.





இத்தொழிற்சாலை பாதுகாப்புக் காரியங்களுக்கான துப்பாக்கிகளைச் செய்கிறது. இந்திய அரசு இத்தொழிற்சாலைக்கு ஏறத்தாழ ரூபாய் 14.5 கோடி மூலதன முதலீடு செய்துள்ளது. இத்தொழிற்சாலையின் பணி மனநிறைவளிப்பதற்காக உள்ளது.

### 12. சேலம் உருக்காலை

சேலத்தில் சிறப்பு உருக்காலை ஒன்றை நிறுவுவதென்று 1972-ஆம் ஆண்டு மே திங்களில் இந்திய அரசு, முதலீட்டு முடிவு எடுத்துள்ளது. அவ்வுருக்காலையில் கீழ்க் காணும் பொருள்கள் செய்யப்படும்:—

| தகடுகளும் துண்டுகளும் | ஆண்டொன்றுக்கு (டன்கள்) |
|---|---|
| துருப்பிடிக்காத எஃகு-குளிரூட்டி உருட்டி அடிக்கப் பட்டவை | 65,000 |
| வெப்பம் ஊட்டி உருட்டி அடிக்கப் பட்டவை | 5,000 |
| சிலிகான் உருக்கு (Silicon steel) குளிரூட்டி உருட்டி அடிக்கப்பட்டவை | 75,000 |
| ஏனைய சிறப்பு உருக்குகள்-வெப்பம் ஊட்டி உருட்டி அடிக்கப்பட்டவை | 50,000 |
| மொத்தம் | 1,95,000 |




இத்திட்டத்தைச் செயற்படுத்தும் பொருட்டு 1972-ஆம் ஆண்டு அக்டோபரில் சேலம் உருக்காலை நிறுவனம் அமைக்கப்பட்டது. இத்தொழிற்சாலையை இரண்டு கட்டங்களில் நிறுவுவதென்று இந்திய அரசு முடிவு செய்துள்ளது. உருக்காலைக்கும், நகரியப் பகுதிக்கும் நிலம் கையகப்படுத்தும் பணி பெரும்பாலும் முடிவடைந்து விட்டது. 31-3-1974-ஆம் நாள்வரை, ரூபாய் 4.75 கோடி செலவிடப் பட்டுள்ளது. 1974—75-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு ஏறத்தாழ ரூபாய் 9.75 கோடி ஆகியிருக்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய அரசு போதுமான நிதி ஒதுக்கீடு செய்யாத காரணத்தால், இத்தொழிற்சாலை குறித்த பணிகள் பெரும்பாலும் மிக மெதுவாகவே நடைபெறுகின்றன. 1974-75-ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப் பட்ட ரூபாய் 15 கோடிக்கு எதிராக ரூபாய் 3 கோடியாக உயர்த்தப்பட்டது. அவ்வாறிருப்பினும், இந்நிதி ஒதுக்கீடு தேவைக்குப் பெரிதும் குறைவாகவே உள்ளது. 1975-76-ஆம் ஆண்டுக்காக மத்திய அரசு வரவு-செலவு திட்டத்தில் செய்துள்ள நிதி ஒதுக்கம் ரூபாய் 3 கோடி அளவில் மிகச் சொற்பமாகவே உள்ளது. இந்த ஒதுக்கீடு முந்தைய நிதி ஆண்டின் ஒதுக்கீட்டைவிட குறைவானது.

### மாநில அரசுத்துறை-கூட்டுத்துறை

தமிழக அரசுத் துறையில் தொழில் திட்டங்கள் பல ஏற்படுத்தப் பட்டுள்ளன. மேலும் புதிய திட்டங்கள் பலவற்றை உருவாக்கிட திட்டமிடப் பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் சிமிட்டி, உருக்கு, சர்க்கரை, ஸ்கூட்டர், நைலான் தொழில்கள் ஆகியவை இடம் பெறுகின்றன.

அதுபோலவே, கூட்டுத் துறையில் பெரிய அளவில் சர்க்கரைத் தொழிற்சாலைகள், நூற்பு ஆலைகள் ஆகியவை ஏற்படுத்தப் பட்டுள்ளன. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் கூட்டுத் துறையில் பெரிய தொழில்களுக்கான 20 புதிய திட்டங்களை நிறைவேற்ற எடுத்துக் கொண்டுள்ளது. மேலும், பல திட்டங்களுக்கும் திட்டமிடப்பட்டு வருகிறது.

### தனியார் துறை

இம்மாநிலத்தில் 1974-ஆம் ஆண்டில் தனியார் தொழில் முனைவோர்களுக்கு வழங்கப் பட்ட உரிமங்களில், இயந்திரக் கருவிகளுக்கான கியர்கள் ::தப்படுத்தப்பட்ட தோல், ஸ்பைரல் ஹைபாய்ட் கியர்கள் (Spiral Hypoid Gears), 'ரீடுகான்டாக்ட்ஸ்', காகிதக் கூழ், ஒப்பம் கட்டும் காகிதம், மேலுறைக் காகிதம் ஆகியவை தயாரிப்பதற்கான தொழில்கள் இம்மாநிலத்தில் புதிதாக அமைக்கப்படவிருக்கும் குறிப்பிடத்தக்க தொழில் பிரிவுகளாகும்.

மேலும், பதப்படுத்தப் பட்ட தோல், கயிறு, விசைத்தறி, ஸ்பின் கியர்கள் மோட்டார் வண்டி அதிர்ச்சித் தடை கருவிகள் (Automobile Shock Absorbers), எஸ். ஜி. இரும்பு வார்ப்படங்கள், பி.எல்.எஸ். சோடியம், பதப்படுத்தப்பட்ட கடற் பொருட்கள், மோட்டார் வண்டி அச்சுக்கள், சாலிசிலிக் அமிலம் Salicylic Acid) சிவப்புப் பாஸ்வரம் உலர் மின்கலங்கள், ஃபைபர் கண்ணடி (Fibre glass), பாலதீயன் தொழில் (நுட்பம், செயற்கை ரப்பர் பாலங்கள், அச்சு வார்ப் படங்கள், கலப்பின எஃகு வார்ப்படங்கள், மென் ஃபெரைட்ஸ் (Soft Ferites) காரயாத சல்ஃபர் மற்றும் 'பென்சீன் ஹெக்ஸர் குளோரைடு' போன்றவை தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கான அனுமதிக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**பதிவு பெற்ற தொழிற்சாலைகளின் வளர்ச்சி :**

தமிழகத்தில் பதிவு பெற்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கையும், அந்தத் தொழிற்சாலைகளில் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கையும் நிலையாக உயர்ந்து வருவது கீழ்க்காணும் அட்டவணையிலிருந்து புலனாகின்றது.

அட்டவணை

| ஆண்டு | தொழிற்சாலைகளின் எண்ணிக்கை. | தொழிலாளர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1970 ... | 6,365 | 4,22,640 |
| 1971 ... | 6,412 | 4,32,488 |
| 1972 ... | 6,651 | 4,45,100 |
| 1973 ... | 6,816 | 4,53,000 |
| 1974 ... | 6,985 | 4,98,798 |

மேற்கண்ட அட்டவணையிலிருந்தும் தமிழகம் தொழில் வளர்ச்சியில் முன்னேறி வருகிறது என்பது புலனாகிறது.

**பதிவுபெற்ற நிறுவனங்கள்:**

கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையில் பெரிதும் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. அது, கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்து தெரியவருகிறது.

அட்டவணை

| ஆண்டு | நிறுவனங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | அரசுத் துறை | தனியார்துறை |
| 1969—70 ... | 13 | 103 |
| 1970—71 ... | 12 | 127 |
| 1971—72 ... | 27 | 141 |
| 1972—73 ... | 20 | 166 |
| 1973—74 ... | 37 | 212 |




# தொழில் நுட்பப் பயிற்சி நிலையங்கள்

கிண்டியிலுள்ள தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளி, பொறியியல் பட்டதாரிகளுக்கும், தகுதிப் பட்டயம் பெற்றவர்களுக்கும், தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெற்றவர்களுக்கும், அச்சு வடிவமைப்பு, அச்சு வார்த்தல், கருவிகள் செய்தல், இயந்திரங்களை இயக்குதல், உலையில் காய்ச்சி அடித்துப் பக்குவப் படுத்துதல் (Forge and Heat treatment) ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சியை அளித்து வருகிறது. இப்போது 60 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். பட்டதாரிகளுக்குத் திங்கள் தோறும் ரூபாய் 200/-ம், தகுதிப் பட்டயம் பெற்றவர்களுக்கு ரூபாய் 125/-ம், தொழில் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெற்றவர்களுக்கு ரூபாய் 75/-ம் பயிற்சி உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது. பயிற்சிக் கால அளவு, கருவி, அச்சு வடிவமைப்புக்கு 12 மாதமும், ஏனையவற்றிற்கு 18 மாதமும் ஆகும்.

அறிவியல் தொழில் நுட்பத் துறையில் ஏற்படும் முன்னேற்றங்களையொட்டி இருக்கும் வகையில், மின் அணுக் கருவிகள், ரப்பர் தொழில், நுட்பவியல் குளிர் வசதி இயந்திரம் போன்ற புதிய பாட முறைகளில் பயிற்சி அளிப்பதற்காக நான்காவது திட்டத்தில் ரூபாய் 22.35 இலட்சம் செலவில் விரிவுபடுத்தும் திட்டம் ஒன்றுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இந்தக் கூடுதல் பாட முறைகள் பொறியியல் பணியாளர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதுடன் தொழிற்சாலைகளின் நவீனத் தேவைகளை நிறைவு செய்யும். கூடுதல் கட்டட வேலை முடிந்து, தேவைப்பட்ட இயந்திரங்களும் சாதனங்களும் வாங்கப்பட்டுள்ளன. இந்த கூடுதல் பாடமுறைகளை விரைவில் தொடங்குவதற்கான தொடக்க ஏற்பாடுகள் நடந்தேறி வருகின்றன.

திண்டுக்கல்லில் அமைக்கப்பட்ட கருவிகள் அச்சு அமைப்புப் பயற்சி நிலையம், பற்பல பொறியியல் பிரிவுகளுக்கும், குறிப்பாக, பூட்டு தயாரிப்பதற்கும் வேண்டிய கருவிகளையும் அச்சுக்களையும் வடிவமைத்துத் தயாரிப்பதிலும் (நூலறிவிலும், செயல்றிவிலும்) சிறப்புப் பயிற்சியளித்து வருகிறது. பயிற்சிக் காலம் 3 ஆண்டுகளாகும். இப்பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்வதற்கான குறைந்த அளவு கல்வித் தகுதியானது பள்ளியிறுதித் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பயிற்சியாளர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூபாய் 50 பயிற்சி உதவித்தொகையாகக் கொடுக்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையத்தில் இதுவரை 92 பேர் பயிற்சி பெற்றுள்ளனர். தற்போது 60 பயிற்சியாளர்களுக்கு மூன்று தொகுதிகளாகப் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

# தொழில் நுட்பத் தகவல் பிரிவுகள்

தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்குத் தொழில் நுட்பத் தகவல் பிரிவுகள் மிகவும் இன்றியமையாததாக இருப்பதால் கிண்டி, மதுரை, பேட்டை, அம்பத்தூர், காட்பாடி ஆகிய 5 இடங்களில் நூலகங்களுடன் கூடியதொழில் நுட்பத் தகவல் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றினுள் கிண்டியிலுள்ள தொழில் நுட்பத் தகவல் பிரிவு மிகவும் முக்கியமானதாகும். நல்ல பல நூல்களைக் கொண்ட நூலகம் ஒன்று இந்தப் பிரிவில் உள்ளது. வெளியீடு-மொழி பெயர்ப்புப் பிரிவு ஒன்றும் இங்கு அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவில், தொழில் நுட்பத் திரைப் படங்களைத் திரையிடுவதற்கும், தொழில் நுட்பக் கருத்தரங்குகளை நடத்துவதற்கும் சிறந்த சாதனங்களைக் கொண்ட அரங்கு ஒன்று உள்ளது. [illegible] தயாரிப்புப் பிரிவு ஒன்றும், நுண் செய்திப் படங்கள் தயாரிப்புப் பிரிவு ஒன்றும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

சிறு தொழில் குறிப்பேடு, பெருந்தொழில் குறிப்பேடு, சிறு தொழில் வழி காட்டி நூல் போன்ற பயனுள்ள நூல்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் இப்பிரிவு வெளியிட்டு வருகிறது.

மதுரை, பேட்டை, அம்பத்தூர் காட்பாடி ஆகிய 4 இடங்களிலுள்ள தொழில் நுட்பத் தகவல் பிரிவுகள், தொழிற்பேட்டையிலும், தொழிற்பேட்டையைச் சுற்றிலும் உள்ள தொழிலதிபர்களுக்கு இது போன்ற வசதிகளைத் தங்களுடன் இணைந்துள்ள நூலகங்கள் மூலமாக அளிக்கின்றன. 1974-75ல் கிண்டி, அம்பத்தூர் ஆகிய 2 இடங்களிலுள்ள தொழில் நுட்பத் தகவல் பிரிவுகளில் இதுவரை 908 தொழில் நுட்ப நூல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. 18,363 தொழிலதிபர்கள் இந்த இடங்களைப் பார்வையிட்டுள்ளனர்.







தமிழ்நாடு அரசு எந்தத் திட்டமானாலும்-விரைவாகவும் தீவிரமாகவும்-முன்னோடியாகவும் செயல்படுத்தி வருகிறது. சமூக- பொருளாதாரத்துறையில் சாதனைப் பட்டியல்கள் குவிந்து வருவதைப் போல், பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையிலும் சாதனைகளைத் தொடர்ந்து செய்வதில் தமிழக அரசு முதன்மையாகத் திகழ்கிறது. உணவு-உடை-இருப்பிடம் இம்மூன்றும் தனிமனிதனின் தேவைகளாகும். இதில் பெரும் பகுதிப் பணியைத் தமிழக அரசு முடித்துவிட்டது என்றே சொல்லலாம். தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு வசதிகளை மக்களுக்கு ஏற்படுத்தித் தருகின்ற பணியையும் நிறைவேற்றி வருகிறது.

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு எல்லாவிதமான முயற்சிகளையும், ஒத்துழைப்பையும் கொடுத்து வருகிறது. விவசாயிகளுக்குத் தேவையான கடன்-தரமான விதைகள் - உரம் இவை யாவும் வழங்கி ஊக்குவித்து வருகிறது. அத்துடன் பணியை நிறுத்திவிடாமல் மேலும் பொதுப் பணித்துறையின் மூலம் வேளாண்மைக்குத் தேவையான தண்ணீரையும் கொடுத்து வருகிறது. பாசனத்திற்கு வழியில்லாத இடங்களில், புதிதாக அணைக்கட்டுகளைக் கட்டி நீரைக் தேக்கி வருகிறது. அதன்மூலம் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. விவசாயிகளின் துயர் துடைக்கப்படுகிறது. அத்துடன் உணவு உற்பத்தியும் பெருகுகிறது.

திருச்சி மாவட்டம் கடலூர் பகுதியில் பொன்னனி ஆற்று நீர் பாசனத்திற்குப் பயன்படாமல் சென்று கொண்டிருந்தது. அங்கு பொன்னனி ஆற்று நீர்த் தேக்கத்தை தமிழ்நாடு அரசு ஒரு கோடி ரூபாய் செலவில் அமைத்துள்ளது. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பொன்னனி ஆற்று நீர்த் தேக்கத்தை 13-7-75 அன்று திறந்து வைத்துப் பாசனத்திற்கு வழி செய்துள்ளார்கள். இந்த நீர்த் தேக்கத்தில் சுமார் 1,500 ஏக்கர் நிலம் பாசனவசதி பெறுகிறது. ஒருபோகச் சாகுபடிக்கும் வழியின்றி இருந்த நிலங்கள் இருபோகச் சாகுபடிக்குப் பாசன வசதி பெற்றுள்ளது. மேலும் இந்த நீர்த் தேக்கத்தால் நூற்றுக்கணக்காக கிணறுகளில் நீர்பிடிப்பு ஏற்பட்டு மேலும் ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

திருச்சி மாவட்டத்தில் கண்ணூத்து ஓடை நீர்த் தேக்கத் திட்டப்பணிகளை முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் துவக்கி வைத்துள்ளார்கள். இதன்மூலம் சுமார் 600 ஏக்கர் நிலத்திற்கு மேல் புதிய பாசன வசதி பெறுகின்றன. 200 ஏக்கர் நிலம் நிரந்தரப் பாசன வசதி பெறுகின்றன.

சென்னையில் பல்வேறு இடங்களில் சாலைகளில் வாகனங்களும் பாதசாரிகளும் கடந்து செல்வதற்கு நெருக்கடியும், தாமதமும் ஏற்படுவதால், அதைத்தவிர்க்க நெடுஞ்சாலைத் துறையின் மூலம் அரசு சுரங்கப் பாதைகளை அமைத்து வருகிறது. ஏற்கெனவே அண்ணா சாலையிலும், பூந்தமல்லி நெடுஞ்சாலையில் அரசுப் பொது மருத்துவமனை அருகிலும் சுரங்கப் பாதைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது மூர்மார்க்கெட் பகுதியில் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் சுரங்கப்பாதை அமைக்கப்பட்டு 15-7-75 அன்று முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சென்னை மெரீனா சாலையில் கண்ணகி சிலை அருகிலும் சுரங்கப் பாதை வேலைகள் நடைபெற்று வருகின்றன. நெரிசல் நேரங்களில் ஏற்படுகின்ற நெருக்கடியைத் தவிர்ப்பதற்காகச் சுரங்கப் பாதைகள் தொடர்ந்து அமைக்கப்பட்டு வருகின்றன.

எந்தத் துறையானாலும் தமிழ்நாடு அரசு சாதனைகளைப் புரிகிறது.; மக்கள் வேதனைகளைத் தீர்க்கிறது! பொதுப் பணித் துறையும், நெடுஞ்சாலைத் துறையும் பல்வேறு வசதிகளை அளித்து வருகின்றன! தமிழ்நாடு அரசின் பணிகள் தொடரும்! வெல்லும்!

ம. அரி.

# சென்னையில் புதிய சுரங்கப் பாதை





# பூம்புகார் பாவை மன்றத்தில்....



## அட்டை சொல்லும் செய்தி

ஆண்டநாள் ஆண்டு மாண்ட புகழ் படைத்த பூம்புகார்ப் பெருநகரம் மீண்டும் அப்புகழை அடைந்துவரும் இந்நாளில்—

முதல்பணியாகச் சிலப்பதிகாரக் கலைக் கூடம் அங்கே உருவாகியது!

இளங்கோவடிகளின் காப்பியச் சிலம்பு, சிற்பிகளின் கைவண்ணத்தாலும் கலைநயத்தாலும் சிற்பச் சிலம்பாக உருவாகிச் சிலப்பதிகாரக் கலைக்கூடமாகக் காட்சியளித்து வருகிறது.

எழுநிலை மாடமும் தோரணவாயில்களும் அக் கலைக்கூடத்தின் எழிலுக்கு ஏற்றம் கூட்டி, ஈடில்லாப் பெருமை சேர்க்கின்றன.

இத்தனையையும் உருவாக்கிப் பூம்புகாருக்குப் புதிய வாழ்வும் பெருமையும் அளித்து வரும் நமது முதல்வர் கலைஞர் அவர்கள், பூம்புகாருக்குப் பொலிவூட்டும் பணிகளைத் தொடர்ந்து செய்ய வகுத்தளித்த திட்டங்கள் தாம்—

பூம்புகாரிலே மீனவர்களுக்கு 800 புதிய குடியிருப்புகள், நெடுங்கல் மன்றம், இலஞ்சி மன்றம், பாவை மன்றம் இன்ன பிறவும் புதிய பொலிவுடன் அமைக்கப்பட்டுள்ள பாவை மன்றத்தில் திருக்குறள் இன்பத்துப் பாலிலுள்ள எட்டுக் குறட்பாக்கள் எழிலோவியச் சிற்பங்களாக உருவாக்கப்பெற்றுள்ளன. அந்தக் குறட்பாக்கள் வருமாறு:

''அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்''

''துஞ்சுங்கால் தோள்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து''

''வாளற்றுப் புற்சென்ற கண்ணும் அவர் சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்''

''எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட இடத்து''

''அவர்தந்தார் என்னும் தகையால் இவர் தந்துஎன்
மேனிமேல் ஊரும் பசப்பு''

''அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை.''

''யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்.''

''கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல.''

இக்குறள் எட்டுக்கும் எட்டுச் சிற்பங்கள். ஒவ்வொரு சிற்பமும் ஆறடி உயரம். வனப்புக் குலுங்கும் அந்தச் சிற்பங்கள் போன்று இது வரை யாரும் செய்யவில்லை. அதுவும் தமிழ் நாட்டில் திருக்குறளுக்கு விளக்கமாகச் சிற்பங்கள் செய்யப்பட்டிருப்பது இதுதான் முதல்தடவையாகும்.

குறளுக்குச் சிற்ப வடிவமைத்து, ஆளுயரத்துச் சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ள முதவிடம் பூம்புகாரிலுள்ள பாவைமன்றம் ஒன்றில்தான்!

பாவை மன்றத்திலுள்ள எட்டுத் தூண்களிலும் இந்தச் சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளன.

எழில் குலுங்கும் அந்தச் சிற்பங்களில் நான்கை இந்த இதழ் 'தமிழரசு' முகப்பில் காணலாம்.

—'மாறு'

# சிறு துளி பெரு வெள்ளம்

## தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் முதலீடு செய்யுங்கள்

TNSC BANK

டெபாஸிட்டுகளுக்கு எங்கள் வட்டி விகிதங்கள் :

1. கால் டெபாஸிட்டுகள்- ரூ 1000/-மும் அதற்கு மேலும் — வருடத்திற்கு
   - 15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை 3.25%
   - 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை 3.75%
2. தவணை டெபாஸிட்டுகள்- ரூ 100/-ம் அதற்கு மேலும்

| காலம் | வருடத்திற்கு |
|---|---|
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்கு குறைவாக | 5.75% |
| 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களுக்கு குறைவாக | 6.25% |
| 9 மாதங்களிலிருந்து 1 வருடத்திற்கு குறைவாக | 7.25% |
| 1 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 3 வருடங்களுக்கு குறைவாக | 8.25% |
| 3 வருடங்களும் அதற்கு மேலும் ஆனால் 5 வருடங்கள் வரை | 9.25% |
| 5 வருடங்களுக்கு மேல் | 10.25% |

3. சேவிங்ஸ் கணக்கு 5.75%
4. நடப்பு (current) கணக்கு வட்டி கிடையாது



**தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்,**
379, நேதாஜி சுபாஷ்சந்திர போஸ் ரோடு, சென்னை-600 001
தந்தி : 'URBANK' போன் : 20367 (3 லைன்கள்)
டெலக்ஸ் :MS 7225

கிளைகள் : அண்ணா நகர், அண்ணா சாலை (காமதேனு). அண்ணா சாலை (அண்ணா சிலை). அசோக் நகர், பெஸண்ட் நகர், எழும்பூர், காந்தி நகர். கிரீன்வேஸ் ரோடு, ஜவஹர் நகர், கெல்லீஸ், தங்கசாலை, மைலாப்பூர், மைலாப்பூர் குளம், நுங்கம்பாக்கம், புரசைவாக்கம், ராயப்பேட்டை, ராஜா அண்ணாமலைபுரம், சாந்தோம், சாஸ்திரி நகர், ஷெனாய் நகர், தியாகராய நகர் & திருவல்லிக்கேணி.

TNSCB : 122/75


# பார்த்தோம்! படித்தோம்!!

### வேண்டுவோர் பலர் :

தமிழரசு தொழில் வளர்ச்சி மலர் கண்டேன். எங்கே தேடினலும் கிடைக்காத தகவல்களைத் தொகுத்துத் தந்துள்ளீர்கள். ஆதாரப்பூர்வமான அந்தச் செய்திகள் என்று பயன்தரும். பாதுகாத்து வைத்துக் கொள்ளலாம். இது போன்று தொடர்ந்து ஒவ்வொரு துறையிலும் சிறப்பு மலர் வெளியிடுங்கள்.

—பத்தூர் மகாலிங்கம்,
சென்னை-35.

### தொடரும் கேள்வி ?....

தொடர்கதை பற்றி ஒரு முறை அறிவிப்பு வந்ததே அவ்வளவுதானு? தொடர்கதை வெளியிடுங்கள் என்று தொடர்ந்து கேட்கவேண்டுமா?

—பா. சிவஞானம்,
சேலம்-2.

### தொடரும் ஆசை !....

சென்ற ஆண்டு சிறுகதைப் போட்டி அறிவிப்பு வெளிவந்த பொழுது தொடர்ந்து ஆண்டு தோறும் சிறுகதைப் போட்டி அறிவிக்கப்படும் என்று வெளியிட்டிருந்தீர்கள். ஆனல் இது வரை எதுவும் அறிவிப்பு வரவில்லையே? ஆசையோடு உங்கள் அறிவிப்பை எதிர்பார்க்கிறேன்.

—ஆவாரணி நடராசன்,
சென்னை-17.

### பயனுள்ள பனை !

பனைமரம் பல வகைகளிலும் பயன்படுகிறது என்கின்ற உண்மையினை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது, 'பனை என்னும் வழங்கும் செல்வம்' கட்டுரை. வீட்டுக்கொரு கோழிப்பண்ணை அமைத்திடுவது போல — வீட்டுக்கொரு பனைத் தோட்டம் அமைக்கலாம் போல எனக்குத் தோன்றுகிறது! அவ்வளவு சிறந்த கட்டுரை இது.

—அ. சரசுவதி,

### சிறப்புமிக்க சிறுகதை !

திரு. சோம. மகாதேவன் எழுதிய "வாழ்விலோர் திருநாள்" சிறுகதை, சீரிய கருத்தைச் சித்திரிக்கிறது. விதவையின் கண்ணீரைத் துடைக்கச் சாரங்கன் எடுத்த முயற்சி, அந்த முயற்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கிற பழங்கால மூடப்பழக்கம், அதற்குத் தலைவிதி என்றபட்டயம் அத்தனையையும் சுக்கு நூறு ஆக்குகிற சாரங்களின் முயற்சி, அந்த முயற்சிக்கு முதுகெலும்பாக இருக்கும் "கைம்பெண் துயர் துடைக்க கலைஞர் தந்திருக்கும் திட்டம்"—அப்பப்பா! சிறப்பு மிக்க சிறுகதை.

—ஜி. சுப்பிரமணியன்,
நெய்வேலி-2.


ESTD: 21-3-52. தபால் மூலம் GOVT REGD: 3072.

## இலவசக் கல்விபோதனை

E குரூப் வகுப்புகள் ஆரம்பம் : 13-8-1975

ஆண்—பெண் இருபாலரும் 1975-76-ம் வருட சர்க்கார்-பல்கலைக் கழக தேர்வுகளில் தேர்ச்சி பெற உத்திரவாதத்துடன் மாதம் இருமுறை தபால் மூலம் பாடங்கள் அனுப்பி பயிற்சி அளிக்கப்படும்.

1. S. V. B. A., B. Com., B. Sc., March- 1976 (P.U.C./இண்டர் தேறியவர்கள் தகுதியுடையவர்கள்.) 2. B. L., M.A., M.Com., A.M.I.B.M., (பட்டதாரிகள் அருகதையுடையவர்கள்.) 3. ஆக்ரா-டில்லி-கர்நாடக் B.A., B.Com., B. Sc., (S. S. L. C. (அ) S. S. C. ஆ. மெட்ரிக் தேறியவர்கள் கலந்து கொள்ளலாம்.) 4. போபால்-ஆந்திரா-கர்னாடக்-டெல்லி இண்டர் (S.S.L.C./S.S.C. மெட்ரிக் படித்தவர்கள் தகுதியுடையவர்கள்.) 5. A. C. B- I. (London) S.S.L.C. மெட்ரிக் தேறியவர்கள் தகுதியுடையவர்கள், 6. Account Text Exmns. (I. M. C., S.S.L.C./S.S.C. மெட்ரிக் தேறியவர்கள் தகுதியுடையவர்கள்.) 7. டெலிபோன் ஆப்ரேட்டர்-டெலிகிராபிக் ஒயர்லெஸ். 8. சென்னை-மதுரை-திருப்பதி மெட்ரிகுலேஷன். 9. சென்னை-மதுரை P. U. C. 10, தமிழ் வித்துவான்-புலவர் தேர்வுகள். 11. விவசாயம். 12. போஸ்ட்மென். 13. போஸ்டல் கிளார்க். 14. கைத்தறி நெசவு. 15. அக்கவுண்டன்ஸி. 16. கிராம மணியம்-கர்ணம். 17. சர்வீஸ் கமிஷன் (தமிழ் அண்ட் ஆங்கிலம் அக்-75). 18. S.S.L.C. (8 ஆம் வகுப்பும் அதற்கு மேலும் படித்தவர்கள் தகுதியுடையவர்கள்.) 19. Com INTER. D. Com., B. Com., B. Com (Hons) M. Com. S. S. L. C. அல்லது P. U. C. தேறியவர்களும்-தவறியவர்களும் 75-நவம்பர் தேர்வில் கலந்து கொள்ளலாம். 20. பேசிக் ஆங்கிலம். 21. பிரி-மெட்ரிக். 22. ஹோமியோபதி.

நீங்கள் விரும்பும் வகுப்பில் சேர்ந்து பயிற்சி பெற உங்களை அன்புடன் அழைக்கிறோம். முழு விவரங்களுக்கு 25 பைசா தபால் தலையுடன் விண்ணப்பித்து

'தமிழகத்தின் தனிப் பெரும் தபால் கல்வி ஸ்தாபனம்'

Affiliated by I.A. & A.I.S. Educations & Com. University, New Delhi

**ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட்**

ரிஷிவந்தியம்--S.O., Pin : 606205. தென்னார்க்காடு மாவட்டம். தமிழ்நாடு




லாஸ்ஸோ அகன்ற இலைக் களைகளையும், புல்பூண்டு களையும் பயனுள்ள முறையில் கட்டுப் படுத்துவதனால், உங்கள் பருத்திப் பயிர் ரசாயன உரத்தின் உயர்ந்த பட்சப் பயனைப் பெறுகிறது. பூச்சிகளும் வெகுவாகக் குறைந்து விடுகின்றன. எனவே, நீங்கள் அதிக லாபத்தைப் பெறுகிறீர்கள்— லாஸ்ஸோவின் உதவியினால்!

களைகளைப் போக்கி விளைச்சலைப் பெருக்குங்கள்




லாஸ்ஸோ.

களைக்கொல்லி தயாரிப்பாளர்— Monsanto மான்ஸான்டோ

50% ஈஸி மற்றும் 10% குறுணையாகக் கிடைக்கிறது.

மான்ஸான்டோ கெமிகல்ஸ் ஆஃப் இந்தியா பிரைவேட் லிட்.
தலைமை அலுவலகம்: வேக்ஃபீல்ட் ஹவுஸ், 11, ஸ்ப்ரோட் ரோடு, பாலர்டு எஸ்டேட், பம்பாய் 400 001.
கிளைகள்: 3/8, அஸஃப் அலி ரோடு, புது டில்லி 110 001
19, ராஜேந்திர நாத் முகர்ஜி ரோடு, கல்கத்தா 700 001
310/311, லிங்கி செட்டி தெரு, சென்னை 600 001

மான்ஸான்டோ-இந்திய விவசாயிக்குச் சேவை புரியும் களைக்கொல்லி தயாரிப்போர்.

® மான்ஸான்டோ கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேட் மார்க் அங்கீகாரத்துடன் மான்ஸான்டோ கெமிகல்ஸ் ஆஃப் இந்தியா பிரை. லிட். உபயோகிப்பது.

Grant-22 Tm


## குறுவைப் பயிர் சாகுபடியைத் துரிதப்படுத்த அரசின் உதவிகள்

தஞ்சை மாவட்டத்தில் குறுவைப் பயிர் சாகுபடியைத் துரிதப்படுத்துவதற்காக சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வேளாண்மைத் துறையைச் சார்ந்த 70 டிராக்டர்களும் 3 பவர் டில்லர்களும் தயார் நிலையில் உள்ளன. குறுவை சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தங்களது வேளாண்மைப் பணிகளுக்கு மேற்படி டிராக்டர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். விவசாயிகள் தங்களது தேவைக்கு அருகிலுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களை அணுகி வேளாண்மைத் துறையின் டிராக்டர்களை வாடகைக்குப் பெறலாம்.

இவ்வரிய சந்தர்ப்பத்தை தஞ்சை மாவட்ட விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டு அதிகப் பரப்பளவில் துரிதமாக குறுவைப்பயிர் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் தேவையான விவரங்களுக்கு திருவாரூரில் இருக்கும் டிராக்டர் பணிமனை பொதுக் கண்காணிப்பாளரை அணுகவும்.

## மத்திய விற்பனை வரிச் சட்டம் 1956— 'சி' மற்றும் 'எப்' படிவங்கள் செல்லுபடியாகும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

1956-ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ், பிற மாநிலங்களிலிருந்து சரக்குகளை வாங்க விரும்பும் ஒவ்வொரு வணிகரும் மத்திய விற்பனை வரியில் சலுகையான விகிதமாகிய 3 சதவித விற்பனை வரியை அடைய விரும்பினால் அதற்குரிய 'சி' மற்றும் 'எப்' படிவங்களை தாக்கல் செய்ய வேண்டும். பழைய 'சி' மற்றும் 'எப்' படிவங்கள் சிறிது மாற்றத்துடன் 31.12.'74 வரை பயன்படுத்த அனுமதிக்கப்பட்டது. இந்திய அரசு இந்த படிவங்கள் சட்டப்படி செல்லும்படியாக கூடிய காலத்தை 31.12.'75 வரை நீடித்துள்ளது.

### கடன் நிவாரணச் சட்டம்

இந்தியாவில் எல்லா மாநிலங்களுக்கும் வழிகாட்டும் வகையில் கடன் நிவாரணச் சட்டத்தைத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

முன்பு விவசாயிகளுக்காகக்கடன் நிவாரணச் சட்டம் உள்ளது. இப்பொழுது பிறப்பிக்கப்பட்டுள்ள கடன் நிவாரணச் சட்டத்தால் விவசாயிகள் அல்லாத ஏழை எளிய மக்கள் வாங்கிய கடன்களுக்கு 22-7-'75 முதல் 15-1-'76 வரை வட்டி கிடையாது.


இலக்கியங்களுக்கு
இறவாப் புகழ் தருவது...

காகிதம்

ஹோமர் முதல் ஹெமிங்வே வரை,
காளிதாசர் முதல் காஃப்காவரை,
ஆதிசங்கரர் தொட்டு அரிஸ்டாடில் வரை,
திருவள்ளுவர் தொட்டு தோரூவரை......

*தரமான காகிதம், சிந்தனையாளர்களின் எண்ணங்களும், கருத்துக்களும் காலத்தால் அழிவுறா வண்ணம் காத்து எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்கி உதவுகிறது.*

**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்**

பள்ளிப்பாளையம்,
சேலம் மாவட்டம்
தமிழ்நாடு

SPB

*The Watermark of Quality*

எழுத, அச்சிட, உறையிட
உன்னதமான காகிதங்கள்

 பதிவு எண். M. 8676

# வெற்றியை நோக்கி....!



**அரசு அலுவலர்களுக்கு**
**குடும்பப் பாதுகாப்புத் திட்டம்**
**அதனைத் தொடர்ந்து**
**சமுதாயத்திலுள்ள அனைவரும்**
**பயனடையும் வகையில்**
**சமூகப் பாதுகாப்புத் திட்டம் !**

எல்லோரும்
இன்புற்றிருக்க
செயல்படுத்தும்
திட்டங்கள்
வெற்றி பெற்றிட
வலுமிக்க
அடித்தளம் அமைய

**உதவுவதே**
**அளவான குடும்பம்.**

— குடும்பநலத்



## மறவாதீர்கள்;

## உங்கள் மகள் ஒருநாள்

## மணமகளாக அமர வேண்டியவள்!



திருமணம் என்ருலே- அதுவும் உங்களது மகளின் திருமணம் என்ருல்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கிஞல் எதிர்காலத்தில் எந்த செலவையும சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுககு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்ருேம். மாதச் சேமிப்புத திட்டத்தின்படி ரு. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது—இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரு. | ரு. | ரு. |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1,650/- |

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002




நாளுக்குநாள்
நம்முடைய வாழ்க்கைக்கு
அரசு அளிக்கும்
பாதுகாப்புகள் ஏராளம்

அரசு அலுவலர்களுக்கு
குடும்பப் பாதுகாப்புத் திட்டம்
அதனைத் தொடர்ந்து
சமுதாயத்திலுள்ள அனைவரும்
பயனடையும் வகையில்
சமூகப் பாதுகாப்புத் திட்டம்!

எல்லாரும்
இன்புற்றிருக்கச்
செயல்படுத்தும்
திட்டங்கள்
வெற்றி பெற்றிட
வலுமிக்க
அடித்தளம் அமைய

உதவுவதே
அளவான குடும்பம்.



— குடும்பநலத்
தமிழ்நாடு

தமிழரசு
மலர்: 6
இதழ்: 4
16-8-'75

# பார்த்தோம்! படித்தோம்!!

## களிப்பு!

கவியரசு முடியரசன் அவர்களின் "கொடி கண்டேன்!" கவிதையைப் படித்தேன். களிகொண்டேன். பாவேந்தரின் பரம்பரையில் தாமும் ஒருவர் என்பதை ஒவ்வொரு வரியின் வாயிலாகவும் தெரிவித்திருக்கும் முடியரசனுருக்குப் பாராட்டு!

—இரா. கோதண்டபாணி,
சாத்தூர்.

## இணைப்பு!

இராஜாஜி மண்டபத்தில் சமீபத்தில் தமிழ்ச் சான்றோர்களின் உருவப் படங்கள் இடம் பெற்ற செய்தியைப் பத்திரிகைகளில் படித்தோம். அவற்றைக் காண்பதற்கு ஏங்கிக் கொண்டிருந்தோம். எங்களின் ஏக்கத்தைப் போக்கும் வகையிலே பன்னிரண்டு படங்களையும் வண்ணப் பக்கங்களில் அச்சிட்டு இலவச இணைப்பாக அளித்துள்ள 'தமிழரசு' இதழுக்கு நன்றிகள் ஆயிரம், ஆயிரம்!

—ஏ. சுப்பையா,
ஆர். எஸ். வேலன்,
துடியலூர்.

## வியப்பு!

பிற்பட்டோர் நலனில் தமிழக அரசு காட்டிவரும் அக்கறைக்கு விளக்கமாகக் காட்சி தருகிறது பிற்பட்டோர் நலத்துறை இயக்குநரின் பேட்டிக் கட்டுரை. படிக்கும் போது வியப்பு ஏற்படுகிறது. அடேயப்பா! பிற்பட்டோருக்கு எத்தனை எத்தனை நன்மைகளை இந்த அரசு வழங்கி வருகிறது!

—மு. மாரியப்பன்,
நிலக்கோட்டை.

## தொகுப்பு!

தமிழ்நாடு அரசின் கூட்டுத் துறையைச் சார்ந்த தொழிற்சாலைகளின் பட்டியலை விவரமாகவும், விளக்கமாகவும் தெரிவித்திருப்பது பாராட்டுக்குரியது.

—கே. கதிரேசன்,
காரியாபட்டி.

## பொறுப்பு!

'27 கோடி ரூபாய் செலவில் 25 ஆயிரம் வீடுகள்' —முதல்வர் உரைக் கட்டுரை கண்ணுற்றேன். ஏழை எளிய மக்களுக்கு அரசு அளித்து வரும் குடியிருப்புக் கட்டடங்கள் எழிலாகக் காட்சி தருகின்றன. பொறுப்புள்ள தமிழக அரசுக்கு நன்றி!

—எஸ். மீனாட்சிசுந்தரம்,
மதுரை.



# "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண....."



## நிலச்சீர்திருத்தம்

30 ஸ்டாண்டர்டு ஏக்கராக இருந்த உச்சவரம்பு
15 ஸ்டாண்டர்டு ஏக்கராகக் குறைக்கப்பட்டது!
கரும்புப்பண்ணை, மேய்ச்சல்நிலம், பால்பண்ணை
ஆகியவைகளுக்கு இருந்த விதிவிலக்குகள் நீக்கப்பட்டன!
உபரிநிலமென்று அறிவிக்கப்பட்ட பரப்பு — 1,01,120 ஏக்கர்
உடமையாக எடுத்துக் கொள்ளப்பட்ட பரப்பு — 78,956 ,,
நிலமற்றவர்களுக்கு வழங்கப்பட்ட பரப்பு — 58,536 ,,

நிலச்சீர்திருத்தத்தால் பயன் பெற்றவர்கள்-35.482 பேர்

இந்த நற்பணி தொடர்ந்து நடைபெறுகிறது.



## பிரதமரின் பொருளாதாரத் திட்டத்தைப் பின்பற்றி....

### 2 கிரவுண்டுக்கு மேல் வரி!

நகர்ப்புறங்களில் தனியாரின் நில அளவைக் குறைக்கும் சமதர்ம வழியில் உச்சவரம்புக்கு அடிகோலும் வகையில் வரிவிகித உயர்வு.

- குடியிருப்பு நிலம், குடியிருப்பு அல்லாத நிலமென இருவகைப் பிரிவு.
- அதற்கேற்ப வரி விதிப்பு!
- ஏற்கனவே இருந்துவரும் விதிவிலக்கில் ஏற்றதொரு திருத்தம்!

## குடியிருப்புச்சட்டமும், மனைவழங்கிடும் திட்டமும்!



- பதிவு செய்யப்பட்ட குத்தகைதாரர்கள் — 3,99,350
- பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த பரப்பு — 6,03,898 ஏக்கர்
- குடியிருப்பு அனுபோக உரிமைச் சட்டத்தின்கீழ், குடியிருப்பு மனைப்பட்டா பெற்றவர்கள் ... 1.74 இலட்சம் பேர் அவர்களில் பெரும்பான்மையினர் அரிசனங்களும், பிற்பட்ட வகுப்பினரும் ஆவார்கள்!
- வீட்டு மனைப்பட்டாவாக அரசு நிலங்களைப் பெற்றவர்கள் ... ... 5 இலட்சம் பேர்
- 2.36 இலட்சம் அரிசனக் குடும்பங்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்குவதற்காக வாங்கப்பட்ட நிலங்களுக்கு இதுவரை செலவிடப்பட்டுள்ள தொகை ...ரூபாய் 4.42 கோடி.
- கடந்த 8 ஆண்டில் அரிசனங்களுக்கு 83.968 வீட்டு மனைகள் வாங்கியதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை ரூ. 2.09 கோடி

## கடன் நிவாரணங்கள்



- 1972-ஆம் ஆண்டில் உழவர், குத்தகைதாரர், பாட்டாளிகள் கடன் நிவாரணம் பெற்றனர்.
- 1975-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் எல்லா உழவர்களுக்கும் கடன் நிவாரணம்!
- கடன் கொடுத்தவர்கள் கடனை வசூலிப்பதற்காக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியாது!
- வட்டி வசூலிப்பதையும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது!
- 1975-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் விவசாயிகள் அல்லாதோர்க்கும் கடன் நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது!
- 1975-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 22 ஆம் நாளுக்கு முன்வாங்கிய கடனுக்கு, 1975 ஜூலை 22 முதல் 1976 ஜனவரி 15 வரையான காலத்திற்கு வட்டி கிடையாது!
- அடகுக் கடைக்காரர்கள் பொருள்களை ஏலம் போட முடியாது!
- ஆறுமாத காலத்திற்கு அடகு வைக்கப்பட்ட பொருள்களுக்கு வட்டியும் கிடையாது!
- கடன் கொடுமையிலிருந்து இலட்சக்கணக்கான ஏழைகள் காப்பாற்றப்பட்டுள்ளனர்!

## எங்குமில்லா அளவுக்கு ஏழுலட்சம் மின் இணைப்புக் கிணறுகள்!

- இந்தியாவில் மொத்த பம்பு செட்டுகள் — 26,50,889
- அதில் தமிழகத்தில் மட்டும் — 7,13,312
- அதில் எட்டாண்டு காலத்தில் மட்டும் மின் இணைப்புப் பெற்றவை — 4,23,409



# தமிழ்நாடு அரசின் பொருளாதார முற்போக்குத் திட்டங்கள்!



## நெசவாளர் நெருக்கடி தீர்க்க நீண்டன அரசின் கரங்கள்!

- 16.5 கோடி ரூபாய் மதிப்புள்ள நூல் ''கோ-ஆப்டெக்ஸ்'' மற்றும் தமிழ்நாடு கைத்தறி நிதிக் கழகத்தின் மூலம் நெசவாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது!
- 15.8 கோடி ரூபாய் மதிப்புள்ள தேங்கிக் கிடந்த கைத்தறித் துணிகளை அரசே எடுத்துக் கொண்டு, அரசு நிறுவனங்கள் மூலமாக விற்பனை செய்யப்பட்டுள்ளது.
- கைத்தறி நெசவாளர் சேமிப்புப் பாதுகாப்புத் திட்டம் துவக்கப்படவிருக்கிறது. இத்திட்டத்தில் சேர்ந்துள்ள ஒருவர் 55 வயதிற்குள் இறந்து விட்டால், அதுவரை அவர் செலுத்தியுள்ள தொகை, அவருக்கு அரசு செலுத்தியுள்ள தொகை, அத்தொகைகளுக்குரிய வட்டியும் சேர்ந்த மொத்தத் தொகைக்குச் சமமாக ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் வழங்கும் தொகை ஆகியவை அவருடைய குடும்பத்திற்கு வழங்கப்படும்.



## மின்னொளியில்லாக் கிராமங்கள் இல்லை!

1966-67-ஆம் ஆண்டு வரை 20,250 கிராமங்களும், நகரங்களும், 4,354 அரிசனக் காலனிகளும் மட்டுமே மின்வசதி பெற்றிருந்தன.

கடந்த 8 ஆண்டில் மட்டும் மின் இணைப்புப் பெற்றுள்ள நகரங்கள், கிராமங்கள் — 40,985

கடந்த 8 ஆண்டில் மட்டும் மின் இணைப்புப் பெற்றுள்ள அரிசனக் காலனிகள் — 19,574

## பாசன வசதி-பசுமைப்புரட்சி!





- முதல் ஐந்தாண்டுத் திட்டம் முதல் 1967 வரையில் பாசன வசதிபெற்ற பரப்பு—6.26 இலட்சம் ஏக்கர்
- இந்த எட்டாண்டு காலத்தில் புதிய நீர்ப்பாசனத் திட்டங்களினால் பயன் பெற்ற பரப்பு ... 16.1 இலட்சம் ஏக்கர்
- புதிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு இதுவரை செலவிடப்பட்ட தொகை ... ரூ. 148 கோடி
- மேலும் 59 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன!

## பட்டிக்காடா? பட்டினமா? எங்கணும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம்!



- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 1971ல் அமைக்கப்பட்டது.
- கடந்த 4 ஆண்டில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை ரூ. 54.49 கோடி
- புதிதாக அமைக்கப்பட்டுள்ள குழாய்க்கிணறுகள்— 3,444
- புதிதாக வெட்டப்பட்டுள்ள கிணறுகள் — 27,310
- கட்டப்பட்டுள்ள மேல் நிலைத் தொட்டிகள் — 4,962



## தாழ்த்தப்பட்டோர்-மீனவர் வாழ்ந்திட தரமான வீடுகள் காணீர்!

- 1974-ஆம் ஆண்டு, தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் அமைக்கப்பட்டது.
- அரிசனங்களுக்கென இலவசமாக கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ள வீடுகள் — 1,00,000
- 1975 அக்டோபர் மாதத்திற்குள் கட்டப் படவிருக்கும் வீடுகள்— 30,000 (இந்த எண்ணிக்கையில் இதுவரை கட்டி முடிக்கப்பெற்ற மற்றும் முடிவு பெறும் தறுவாயில் உள்ள வீடுகளும் சேர்ந்துள்ளன)
- மீனவர்களுக்காகக் கட்டப்பட்டுவரும் வீடுகள்— 5,000

## தீவுகளாயிருந்த கிராமங்களை இணைத்திட தீவிரசாலை அமைப்புத் திட்டம்!



- சாலை வசதியின்றி மழைக்காலத்தில் தீவுகளெனத் திகழ்ந்த கிராமங்கள் நகரங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன!
- 1,500-க்கும் மேற்பட்ட மக்கள் வாழும் எல்லாக் கிராமங்களுக்கும் சாலைகள் அமைக்கப்பட்டு விட்டன!
- 1,500-க்குக் குறைவான மக்கள் வாழும் எல்லாக் கிராமங்களுக்கும் சாலை அமைக்கும் பணி விரைவாக நடைபெறுகின்றன!
- அரிசனக் காலனியிலிருந்து இடுகாட்டுக்குச் செல்லும் சாலைகள் முன்னுரிமை அளிக்கப்பட்டு நிறை வேற்றப்பட்டுள்ளன!

## மாணவ மணிகள் பயனுற மலிவு விலையில் நூல்கள்!




பள்ளிகளுக்கான பாடபுத்தகங்களை வெளியிடுதல் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளது !
மூன்றும் வகுப்புவரை இலவசமாகப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன !
இலவசமாகப் புத்தகங்கள் வழங்குவதால் 18 இலட்சம் குழந்தைகள் பயனடைகின்றனர் !
மூன்றும் வகுப்புக்கு மேற்பட்ட வகுப்பு மாணவர்களுக்குக் கட்டுப்படுத்தப்பட்ட விலையில்-முன்பு தனியார் வெளியிட்ட விலையில் மூன்றில் ஒரு பங்கு விலையில்-புத்தகங்கள் வழங்கப்படுகின்றன !

## மாதந்தோறும் மனு நீதித்திட்டம்



அதிகாரிகள் கிராம மக்களை நாடிச்சென்று முறையீடுகளைக் கேட்டுக் குறைபாடுகளை நீக்குகின்றனர்.

## வளருது தொழில்! பெருகுது வளம்!

பதிவு செய்யப்பட்ட சிறுதொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 11,830லிருந்து 42,323 ஆக உயர்ந்துள்ளது !
தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் குறைந்த வட்டியில் நீண்டகாலக்கடனும், குறுகிய காலக் கடனும் கொடுத்து உதவுகிறது !



நிதி பற்றுக்குறையினுல் நொடித்த தொழிற்சாலைகள் மீண்டும் இயங்குகின்றன !
தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் 164 பணிக்கூடங்களை அமைத்து 2,000 தொழில் ஆர்வலர்களுக்கும், 25,000 பேர்களுக்கும் வேலைவாய்ப்பை நல்கியுள்ளது !
இராணிப்பேட்டையில் 712 ஏக்கர் பரப்பளவில் ''சிப்காட்'' நிறுவன பெரியதொழில் தொகுதி உருவாகி வருகிறது! இத் தொழில் தொகுதி 3,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பளித்து, 25 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்களை உற்பத்தி செய்யும் !
''டிட்கோ'' நிறுவனம் கூட்டுத்துறையில் 37 திட்டங்களை ரூபாய் 340 கோடியில் உருவாக்கி வருகிறது.

## காந்திய வழியில்...



மதுவிலக்கைக் கடுமையாக நடைமுறைப்படுத்துகிரேம்.
200 ஆண்டுகளாக நடந்த குதிரைப் பந்தயத்துக்கு மூடுவிழா !
பரிசுச் சீட்டும் நிறுத்தப்படுகிறது !





## முதல்வர் பிறந்த நாளில் பிறந்த திட்டங்கள்!

### வீதியில் திரிந்தோர்க்கு வீடுகள் பாரீர்!



தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம்

1971

### விழியிழந்தோர் ஒளிபெறும் காட்சி!




- நடத்தப்பட்ட கண் சிகிச்சை முகாம்கள் — 262
- புரையோடிய கண்களுக்கு இலவச அறுவைச் சிகிச்சையும், இலவச மூக்குக்கண்ணாடியும் பெற்றவர் — 1,00,363

### இழுத்த கைரிக்ஷா எங்கே? ...........





1973 இலவச சைக்கிள் ரிக்ஷா இங்கே!

### ஊனமுற்றோர்க்கு உதவும் மனம் எங்கள் மனம்!



1974




## எட்டில் அடங்குமா! இவை மட்டுமா!

- காவல்துறை மேம்பாட்டுக்கோர் குழு 1971ல் அமைக்கப்பட்டது!
- பிற்பட்டோர் நலம பேண ஓர் குழு.
- தாழ்த்தப்பட்டோர்க்கு ஆலயங்களின் அறங்காவல் குழுவில் சட்டப்படி இடம்!
- அரிசன மாணவர் விடுதிகள் புதிதாக 167 திறக்கப்பட்டுள்ளன!
- பிற்பட்ட வகுப்பு மாணவர் விடுதிகள் புதிதாக 166 திறக்கப்பட்டுள்ளன.
- குற்றப்பரம்பரைப்பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கெனப் புதிதாக 20 விடுதிகள் திறக்கப்பட்டுள்ளன!

## ஏற்றமிகு எட்டாண்டுகள் உழை எளியோரின் வளமான வாழ்விற்கு வழி வகுத்து வருகின்றன

## பிரதமர் அறிவித்த எஞ்சிய திட்டங்களை நிறைவேற்றப் பீடுநடை போடுகிறது தமிழக அரசு



# வைகைக் கால்வாய்கள் சீரமைப்புத் திட்டம்

வைகை நதி வளம்மிகு மேற்குத் தொடர்ச்சி மலைகளில் சுமார் 1525 மீட்டர் உயரத்தில் உற்பத்தியாகி, தேனியாறு, சுருளியாறு, மஞ்சளாறு, வராகநதி முதலிய துணை நதிகளைத் தன்னுள் இணைத்துக் கொண்டு ஓடி வருகிறது. வைகை அணையில் நிறுத்தப் பெற்றுத் தேக்கப் பெற்றுப் பின்பு அங்கிருந்து புறப்படும் ஆற்றுள் புகுந்து பேரணை மதகினை அடைகிறது. பின்பு அங்கிருந்து, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களின் ஊடே ஓடி இராமநாதபுரம் பெரிய கண்மாயில் கலந்து அதனின்று வங்கக் கடலில் கலக்கிறது.

**வைகை நதியும் தற்போதைய பாசனமும்:**

மதுரை இராமநாதபுரம் மக்கள் வேளாண்மைக்குப் பெரும்பாலும் வைகை நதி நீரையே நம்பி உள்ளனர். வைகை வற்றாத ஜீவநதியல்ல. வைகை நதி வடகிழக்குப் பருவக்காற்றால் பெய்யும் மழையின் மூலம் வெள்ளத்தைப் பெறுகிறது.

பேரணை மதகிற்கும், வைகையின் கடைக்கோடிக்கும் இடைப்பட்ட நீண்ட இடைவெளியில் வைகையின் இரு மருங்கும் சுமார் 115 கால்வாய்கள் வைகையாற்றிலிருந்து பிரிந்து சுமார் 476 கண்மாய்களை நிரப்புகிறது. இத்தகைய கால்வாய்கள் மற்றும் கண்மாய்கள் மூலம், வைகை நீரைக் கொண்டு சுமார் 1,37,117 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வந்தன.

**வைகைச் சீரமைப்புத் திட்டத்தின் அவசியம்:**

வைகை நதியின் நீரை நம்பி உள்ள சுமார் 1,37,117 ஏக்கர் நிலங்களுக்கு 115 கால்வாய்கள் மூலமும், 476 கண்மாய்கள் மூலமும் வைகை நீர் கொண்டு செல்லப் பெற்றுப் பாசனம் நடந்து வந்தது. கால்வாய்களின் தலைப்பில் மடைகள் ஏதும் இல்லாமையால் அதிகமான வெள்ள நீர் கால்வாய் மூலம் சென்று கால்வாய்களையும் கண்மாய்களையும் உடைத்துச் சேதப்படுத்தியது. மேலும் விரிந்து பரந்த வைகை நதி தனது நீண்ட நெடும் பயணத்தில் அதிகமான நீரை நிலத்திற்கும் வெப்பத்திற்கும் பலிகொடுத்துக் கடைசியில் சிறிது நீரையே இட்டுச் சென்றது. வைகையில் ஆண்டுக்குச் சில நாட்களே வெள்ளம் வரும். இந்த வெள்ளத்தை உடன் தடுத்து, அனைத்துக் கண்மாய்களையும் நிரப்பிட வசதிகளோர் வாய்ப்போ அற்ற நிலையில் ஏராளமான நீர் வீணே கடலில் கலந்து வந்தது. வைகையில் சிறிய அளவில் நீர் வரும் பொழுது வைகையின் தலைப்புறம் உள்ளவர்கள் வைகையின் குறுக்கே மண் அணைகள் போட்டுத் தடுத்து வைகை நீரைத் தங்கள் நிலங்கட்கும், அதைச் சார்ந்த கண்மாய் கட்கும் இட்டுக் கொண்டு சென்று வந்தனர். வைகையின் கீழ்ப் பகுதி ஆயக்கட்டுகட்கு இதனால் நீர் செல்வது தடுக்கப்பட்டது. இதனால் வைகையின் கீழ்ப்பகுதி ஆயக்கட்டுக்கு எப்பொழுதுமே தண்ணீர்த் தட்டுப்பாடு இருந்து வரலாயிற்று. சுமார் 13,900 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற இயலாது நின்றது. வைகை நீரை வழங்குவதில் ஒழுங்குமுறை வேண்டும் எனவும், கால்வாய்கள் வெட்டி மடைகள் கட்டி, கீழ்க்கோடி ஏழை விவசாயிக்கும் சம உரிமை வழங்கிட வைகைச் சீரமைப்புத் திட்டம் வேண்டுமென மதுரை, இராமநாதபுரம் மாவட்ட மக்கள் பன்னெடுங்காலமாகப் போராடி வந்தனர். தமிழக அரசு தனது ஆணை எண்: 555 மூலம் இத்திட்டத்திற்கு 7-3-68 அன்று அனுமதி வழங்கியது. இன்றைய தமிழக அரசின் கனிவான இச்செயல் கண்டு கிழக்கு இராமநாதபுரம் மக்கள் மகிழ்வெய்துகின்றனர்.

பேரணை மதகிற்கும் கட்டப்பெற்று வரும் விரகனூர் மதகிற்கும் இடையே வைகை நதியிலிருந்து 17 வாய்க்கால்கள் பிரிந்து சுமார் 27334 ஏக்கர் நிலங்கட்கு வைகை நீரை நல்குகிறது. இப்பகுதியைப் பொறுத்தவரை சிக்கல்கள் ஏதுமில்லை. எனவே இந்த 17 கால்வாய்கள் வைகை நதியிலிருந்து புறப்படும் இடங்களில் தலைமதகுகள் கட்டி, நீரோட்டத்தைச் சீர் செய்யவும், தற்போதுள்ள கால்வாய்களைச் சீர்செய்திடவும், இத்திட்டத்தின் மூலம் வகை செய்யப்பட்டுள்ளது.

வைகையின் நீர்ப் போக்கைக் கட்டுப்படுத்திச் சிறந்த முறையில், வேளாண்மைக்கும் பயன்படுத்திட வேண்டி வைகை ஆற்றின் குறுக்கே, மதுரை நகருக்கு அருகில் உள்ள விரகனூருக்கு அருகில் ஒரு மதகு மற்றும் தலைமதகுகள் மணல் போக்கிகள் முதலியன கட்டிட

## ஏழைகள் மகிழக் குடிசைகளை மாற்றுகிறோம்-
## எழில்மாடங்களில் குடியேற்றுகிறோம்!




- தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் 1971ல் அமைக்கப்பட்டது
- சென்னையில் இதுவரை கட்டப்பட்டு வழங்கப்பட்டுள்ள குடியிருப்புகள் — 20.506
- கட்டி முடிக்கப்பட்டுள்ள மற்றும் முடிவு பெறும் தறுவாயில் உள்ள வீடுகள் — 4,754
- குடியிருப்புகள் அமைக்க இதுவரை செலவான தொகை — ரூபாய் 27.16 கோடி.

## சமதர்மப் பாதையில் போக்குவரத்து.



- 50 சதவீதப் பேருந்துகள் நாட்டுடைமைத் திட்டத்தின் கீழ் இயங்குகின்றன !
- தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகம் இந்த ஆண்டு ஜூலையில் துவக்கப்பட்டது.



- இந்தியாவிலேயே முதல்முதலாகப் ''பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்'' துவக்கப்பட்டுள்ளது.

''தமிழ்ப் பெரியார்,'' ''தமிழ் அண்ணா'' ஆகிய இரு கப்பல்களும் எண்ணூர் அனல் மின் நிலையத்திற்குத் தேவையான நிலக்கரியை ஏற்றிவரும் பணியில் ஈடுபட்டுள்ளன.

## தொழிலாளத் தோழனுக்கு
## நிர்வாகத்தில் பொறுப்பும்,
## முதலீட்டில் பங்கும்!

இந்தியாவிலேயே முதன்முறையாகத் தொழிலாளத் தோழர்கள் தங்கள் நிறுவனங்களின் நிர்வாகத்தில் பொறுப்பும், முதலீட்டில் பங்கும் பெறும்படியான ஒருசிறந்த திட்டத்தினைத் தமிழக அரசு நடைமுறைப் படுத்தி வருகிறது



## அரசுச் சார்புடைய அலுவலர் அனைவர்க்கும்
## குடும்பப் பாதுகாப்புத் திட்டம்



- எல்லா அரசு அலுவலர்களுக்கும் அரசுச் சார்புடைய நிறுவனங்களின் அலுவலர்களுக்கும் பயன்தரும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் 1974-ல் துவங்கப்பட்டது!
- அரசு அலுவலர் ஒருவர் பதவியில் இருக்கும் பொழுது இறந்துவிட்டால், அவருடைய குடும்பத்திற்கு வழங்கப்படும் தொகை ... ரூபாய். 10,000
- இத்திட்டத்தின்கீழ் இதுவரை பயன்பெற்ற குடும்பங்கள் ... 1,721.

## புதிய கல்லூரிகள்-
## புகுமுக வகுப்புவரை இலவசக் கல்வி!



கடந்த 8 ஆண்டுகளில் கலைக்கல்லூரிகளின் எண்ணிக்கை 105-லிருந்து 183-ஆக உயர்ந்துள்ளது! கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையும் 94,000-லிருந்து 2 இலட்சம் அளவுக்கு உயர்ந்துள்ளது! தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் புதிதாகத் தோன்றியுள்ளது! புகுமுக வகுப்புவரை இலவசக் கல்வி வழங்கப்படுகிறது!

கடந்த 8 ஆண்டுகளில் கல்விப் பணிகளுக்கான செலவு 44 கோடி ரூபாயில் இருந்து 118 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது!

## வேலைக்கோர் வாய்ப்பு-
## சேவைக்கோர் பயிற்சி!



- 1971-ஆம் ஆண்டு இளைஞர் அணித்திட்டம் தொடங்கப்பட்டது.
- இத்திட்டத்தின் கீழ் சுமார் 3,600 இளைஞர்கள் கிராமங்களிலும், மற்றும் பல்வேறு மருத்துவமனைகள், கருணை இல்லங்கள் ஆகியவைகளிலும் பணிபுரிந்து வருகின்றனர்.

ும், முகவை மாவட்டத்தில் ...ர்த்திபனூர் அருகே வைகை ...ன் குறுக்கே மற்றுமொரு ...தகும், தலைமதகுகள், மணற் ...பாக்கிகள் முதலியன கட்டிட ...ும் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போதுள்ள அனைத்துக் ...ால்வாய்களையும் சீரமைப்புச் ...செய்திடவும் தலைப்புகளில் ...டைகள் கட்டிக் கால்வாய் ...ளில் நீரோட்டத்தைக் ...ட்டுப்படுத்திடவும் தீர் ...ானிக்கப்பட்டுள்ளது.

**...பொறியியல் விவரங்கள்**

விரகனூர் மதகு ஒவ்வொன் ...ும் 12.20 மீட்டர் நீளமுள்ள ...8 கண்கள் உடையதாய் இருக்கும். இவற்றில் 1.98 மீட்டர் உயரமுள்ள இரும்புக் ...தவுகள் பொருத்தப்படும். வைகையில் மிக அதிகமான வெள்ளம் வரும்பொழுது இவைகள் மின்சாரச் சாதனங் ...ளால் இயக்கப் பெற்றுத் திறக்கப்படும். மதகின் இரு புறமும் மணல் போக்கியும், தலைமதகும் அமையும்.

விரகனூர் மதகிற்குக் கீழ் அமையவிருக்கும் இடது பிர தானக் கால்வாயின் மொத்த நீளம் சுமார் 31.68 கிலோ மீட்டர் ஆகும். இந்தப் பிர தானக் கால்வாய், வினாடிக்கு ...40 கன மீட்டர் தண்ணீரைக் கொண்டு செல்லும் திறன் பெற்றதாய் இருக்கும். வலது பிரதானக் கால்வாயின் மொத்த நீளம் சுமார் 49.90 கிலோ மீட்டர் ஆகும். இக் கால்வாய் வினாடிக்கு 19.60 கன மீட்டர் தண்ணீரை இட்டுச் செல்லும் திறன் பெற் றது.

பார்த்திபனூர் மதகு ஒவ் வொன்றும் 12.20 மீட்டர் நீள முள்ள 25 கண்களைக் கொண்ட தாய் இருக்கும். இடப்புறம் ஒரு மணல் போக்கியும் தலை மதகும் அதேபோல் வலப் புறம் ஒரு மணல் போக்கியும் தலைமதகும் அமையும். மதகுக் கண்களில் 1.83 மீட்டர் உயர முள்ள இரும்புக் கதவுகள் பொருத்தப் பெற்று மின் சாரச் சாதனங்களால் இயக் கப்படும் வசதி பெற்றதாய் அமையும்.

பார்த்திபனூர் மதகுக்குக் கீழே அமையவிருக்கும் இடது பிரதானக் கால்வாய் 45.018 கிலோ மீட்டர் உள்ளதாய் இருக்கும். இக்கால்வாய் வினாடிக்கு 50.40 கன மீட்டர்



**விரகனூர் மதகின் எழில்மிகு தோற்றம்**

நீரைக் கொண்டு செல்லும திறன் பெற்றது. வலது பிர தானக் கால்வாயின் நீளம் 44.06 கிலோ மீட்டர். இக் கால்வாய் வினாடிக்கு 47.60 கன மீட்டர் நீரைக் கொண்டு செல்லும் திறன் பெற்றது.

திட்டத்தின் மிக முக்கிய நோக்கம் என்னவெனில் வைகையில் ஆண்டுதோறும் பருவமழையின் போது வரும் வெள்ளத்தை எவ்வளவு விரை வில் முடியுமோ அவ்வளவு விரைவில் கால்வாய்கள் மூலம் கண்மாய்களுக்குத் திருப்பிப் பாசனத்திற்குப் பயன்படுத் திடத் திட்டமிடப்பட்டுள்ளது. அதே நேரம் வைகை அணை யிலிருந்து வைகை ஆற்றில் சிறிய அளவில் வரும் நீரையும் உடனே திருப்பிச் சிக்கனமாகப் பயன்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.

**திட்டத்தின் பயன்:**

**வேளாண்மை**

வைகைச் சீரமைப்புத் திட் டத்தின் மூலம் மதுரை மாவட் டத்தில் சுமார் 29,250 ஏக்கர் நிலமும் இராமநாதபுரம் மாவட்டத்தில் சுமார் 1,07,867 ஏக்கரும் நிலையான உறுதியான நீர்ப்பாசன வசதி பெறும். இதில் ஏற்கெனவே சாகுபடி செய்யாமல் (Gap) உள்ள சுமார் 10,000 ஏக்கரும் அடங்கும்.

**உணவு உற்பத்தி**

வைகைச் சீரமைப்புத் திட் டத்தின் மூலம் தீர்வையாக அரசுக்கு ஆண்டுதோறும் சுமார் ரூ. 350 லட்சம் வரு மானம் கிடைக்கும். இது தவிர இத்திட்டத்தின் மூலம் ஆண்டு தோறும் சுமார் 55,940 டன் டன் கூடுதல் உணவு உற்பத்தி யாகும்.

**வேலை வாய்ப்பு**

இத்திட்டம் நடைபெறுத லால், வறட்சிமிகு இராமநாத புரம் மாவட்டம் மற்றும் மதுரை மாவட்டத்தில் உள்ள சுமார் 3,000 பேர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

**திட்ட வேலைகளின் தற்போதைய முன்னேற்றம்:**

வைகைச் சீரமைப்புத் திட் டத்தின் தற்போதைய மதிப்பீடு ரூ. 785 லட்சம் பொருள்கள் விலையேற்றம் ஊதிய உயர்வு ஆகிய கார ணங்களினால் மதிப்பீட்டுச் செலவு கூடியுள்ளது.

1968-69-ல் சிறிய அளவில் பொறியாளர்களும் மற்ற அலு வலர்களும் நியமிக்கப் பெற்று வேலைகள் துவக்கப்பட்டன. 1971 முதல் ஓரளவு அதிக மான பொறியாளர்களும் மற்ற அலுவலர்களும் நியமிக்கப் பெற்று வேலைகள் துரிதப் படுத்தப்பட்டன. இத்திட்டத் தினை நிறைவேற்றிட வேண்டி மதுரையில் ஒரு கோட்டமும் பரமக்குடியில் ஒரு கோட்ட மும் நிறுவப்பட்டுள்ளது. கடந்த இரு ஆண்டுகளில் ஒவ் வொரு ஆண்டும் சுமார் ரூ. 110 லட்சம் செலவிடப்பட்டுத் திட்ட முன்னேற்றத்தில் ஒரு சாதனை செய்யப்பட்டுள்ளது. அண்மையில் மானாமதுரையில் மூன்றாவதாக ஒரு கோட்டமும் நிறுவப்பட்டுத் திட்டம் முழு வதையும் 1976-ல் முடிக்க ஏற் பாடு செய்யப்பட்டுள்ளது.

பார்த்திபனூர் மதகு சுமார் 125 லட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பெற்றுள்ளது. இதன் கீழ் உள்ள கால்வாய் களில் பாதி வேலைகள் முற்றுப் பெற்றுள்ளன. மிகுதி வேலை களும் ஓராண்டுக்குள் முடி வுறும்.

விரகனூர் மதகு வேலைகள் மற்றும் அதன் கீழ் உள்ள கால்வாய்கள் வெட்டும் வேலை களும் மிக விரைவாக நடை பெற்று வருகின்றன. இத்திட் டத்தினை விரைவில் முழுமை யாக முடித்திட வேண்டி, திட்டங்கள் வகுக்கப்பெற்று நிறைவேற்றப் பெற்று வரு கின்றன.

சென்ற 1973 ஆம் ஆண்டு நவம்பர்-டிசம்பர் பருவ மழைக் காலத்தில் முடிவு பெற்றிருந்த 12 கிலோமீட்டர் (மொத்த நீளத்தில் சுமார் 3-ல் ஒரு பகுதி) பார்த்திபனூர் கால்வாய்களில் வெள்ளோட்ட



**விரகனூர் மதகில் கதவுகள் பொருத்த...**

மாக, நீர்விடப்பட்டு சுமார் 13,000 ஏக்கர் நிலங்கட்குப் பாசன வசதி அளிக்கப்பட்டது. இச்சோதனை மிக வெற்றிகர மாக அமைந்தது. இதன் மூலம் வேளாண் பெரு மக்களி டையே மகிழ்ச்சியையும் நிறைவையும் காண முடிந்தது.

மொத்தத்தில், வைகைச் சீரமைப்புத் திட்டம் மதுரை- இராமநாதபுரம் மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்க ளின் வாழ்வில் புதிய நம்பிக்கை யினையூட்டும் திட்டம் ரூ. 785 லட்சத்தில் நிறைவேற இருக் கும் இம்மாபெரும் திட்டம். முகவை மாவட்டத்தின் மிகப் பெரிய திட்டமாகும். இத் திட்டம் நிறைவேறும்பொழுது கிழக்கு இராமநாதபுரம் வறட்சித் தொல்லைகளினின் றும் விடுபட்டு வளங்கொழிக் கும் பூமியாக மாறும் என்ப தில் ஐயமில்லை.


# FAMILY PLANNING AND HEALTH PROMOTION

**PHOTOPHONE**

**16mm Sound Projector**



- *Ideal for training doctors and nurses*
- *Effective in making people aware of the methods and benefits of Family Planning*
- *Indispensable for promoting clean, healthy habits*

*Anyone can operate it!*

*Films on various subjects readily available from your local sources.*

everest/334/PEL

Authorised dealers for State of Tamil Nadu and Pondicherry: Young India Films, Shanti Theatre Annexe, 9C Mount Road, Madras 6000 002. Phone: 85693.

# பல்கலைக் கழக மாணவர்களின் பயனுள்ள பணிகள்



மாணவர் அரங்கம்

கடமையைச் செய்தல்-கடுமையாக உழைத்தல்-சமுதாயத்திற்கு உதவுதல் இவையாவும் உயர்வுக்கு வழிவகுக்கும் செயல்களாகும். மாணவப் பருவத்திலேயே இத்தகைய செயல்களை மேற்கொண்டால், இலட்சியங்களுக்காகப் பாடுபட்டால், அது மென்மேலும் சிறப்பைத் தரும். தமிழ்நாடு அரசு எல்லாத் திட்டங்களுடன், சமூகப் பணிகளையும் தீவிரமாகச் செய்துவருகிறது. தனிப்பட்ட சமூகச் சேவை நிறுவனங்களும் பல உள்ளன. அதேபோல் ஒவ்வொரு மனிதனும் சமுதாயத்திற்குத் தன்னால் இயன்ற பணிகளை ஆற்றினால் நாடு உயர்வடையும்.

சென்னைப் பல்கலைக் கழக மாணவர்களும், மாணவிகளும் இந்தச் சமுதாயப் பணியில் முன்னணியில் நிற்கிறார்கள். சென்னை-மதுரை - அண்ணாமலை ஆகிய மூன்று பல்கலைக் கழகங்களிலும் தேசியத் தொண்டர் அணி (National Service Corpn.) என்ற மாணவர் அமைப்பை ஏற்படுத்தியுள்ளார்கள். கற்கும் காலத்தில் இவர்கள் கல்வியோடு நின்றுவிடாமல், பொறுப்பான சில கடமைகளையும் நிறைவேற்றி வருகிறார்கள். விடுமுறை நாட்களை வீணே கழித்திடாமல், சமுதாய மேம்பாட்டிற்காகப் பயன்படுத்தி வருகிறார்கள்.

தேசியத் தொண்டர் அணி 1969 நவம்பர் மாதம் முதல் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் பல்கலைக் கழகத்தில், பல்கலைக் கழக அளவிலான திட்ட ஒருங்கிணைப்பாளர்களின் உதவியுடன் நிருவகிக்கப்படுகிறது. மூன்று பல்கலைக் கழகங்களிலும் தொண்டர் அணியின் திரு [illegible] பொறுப்

பையும் கவனிக்கத் தனித்தனியே இயக்குநர்கள் நியமிக்கப்பட்டுச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள். பல்கலைக் கழகத்தின் மூலமாக மாநில, மத்திய நிதி உதவிகள் அளிக்கப்படுகின்றன. நிதியின் முழுப்பொறுப்பும் பல்கலைக் கழகமே நிருவகிக்கிறது.

1969-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தில் பத்துக் கல்லூரிகளில், இரண்டாயிரம் மாணவர் — மாணவிகளைக் கொண்டே தொண்டர் அணி அமைக்கப்பட்டது. தற்போது 42 கல்லூரிகளில் 4,000 பேர்களைக் கொண்டதாகத் தொண்டர் அணி விரிவுபடுத்தப்பட்டுப் பணியாற்றி வருகிறது. இவர்களில் 1020 பேர் மாணவிகளாவர். மதுரைப் பல்கலைக் கழகத்தில் 3,800 தொண்டர் அணியினரும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 200 தொண்டர் அணியினரும் சமூகப்பணியாற்றி வருகிறார்கள். இதில் பட்ட மேற்படிப்பு மாணவர்களும், மாணவிகளும் ஆர்வத்துடன் இணைந்து செயல்படுகிறார்கள். கோவை பி.எஸ்.ஜி. பொறியியற் கல்லூரி மாணவர்களும் பங்கேற்றுள்ளனர்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் தொண்டர் அணி தொடங்கப்படாத எல்லாக் கல்லூரிகளிலிருந்தும் புதிதாக ஆரம்பிப்பதற்குத் தொண்டர் அணி இயக்குநர் அவர்களுக்கு மனுக்கள் ஏராளமாக வந்துள்ளன. கல்லூரி முதல்வர்கள் மற்றும் மாணவர்களின் ஆர்வத்தை நிறைவேற்றும் வகையில் மேலும் பல கல்லூரிகள் தொண்டர் அணி அமைப்பதற்கு 4,000 மாணவ, மாணவிகளைச் சேர்க்க உள்ளனர். இந்தப் புதிய எண்ணிக்கையை எந்தெந்தக் கல்லூரிகளில் எவ்வளவு மாணவர்களைச் சேர்ப்பது என்ற ஒதுக்கீட்டை அரசே செய்து தரும்.

தேசியத் தொண்டர் அணித் திட்டத்தின் நோக்கம், சமூகத் தொண்டு மனப்பான்மையை மாணவர்களிடம் தோற்றுவிப்பதாகும். இதன் மூலம் மாணவர்கள் திறமையையும் பொது அறிவையும் பெறுகிறார்கள். புத்தகப் படிப்பு மட்டுமல்லாமல் சுயவேலை வாய்ப்பிற்கான பயிற்சியையும் பெறுகிறார்கள்.

கல்லூரிகளில் தொண்டர் அணியின் மாணவர்கள் எண்ணிக்கைக்குத் தக்கவாறு பல்கலைக் கழகத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்கிறார்கள். ஒவ்வொரு மாணவரும் ஓர் ஆண்டில் 120 மணி நேரம் பணியாற்றவேண்டும். அவர்களுக்கு இதற்கான சான்றிதழ்களும் (Certificates) வழங்கப்படுகின்றன. தொண்டர் அணியில் ஒரு மாணவருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 120 வீதம் செலவாகிறது.

பல்கலைக் கழக அளவிலும், கல்லூரிகளிலும் காரியங்களைத் திறமையாகச் செய்வதற்குத் துணைவேந்தர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலும் சிறப்பாக அமைந்துள்ளது. இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்குச் சமூகப் பணிப் பள்ளிகளின் ஒத்துழைப்பு [illegible] மாக உள்ளது.

தேசியத் தொண்டர் அணியின் பிரிவுகளுக்குக் கல்லூரி ஆசிரியர்களே தலைமையேற்றுள்ளார்கள். கல்லூரி முதல்வர்கள் திட்ட அமைப்பாளர்கள் மற்றும் மாணவப் பணியாளர்களால் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு குழுக்கள் ஆகியோரின் திறமையான வழிகாட்டுதலால், கல்வி-சமூகநலம்-சமுதாய வளர்ச்சி-சுகாதாரம் மற்றும் ஏனைய திட்டங்கள் வெற்றிகரமாக நடைபெறுகின்றன.

எல்லாக் கல்லூரிகளிலுமுள்ள தேசியத் தொண்டர் அணியினர், மாவட்ட, வட்ட அளவில் அரசின் பல்வேறு துறைகளோடு தொடர்பு கொண்டு ஆலோசனை பெற்றும் கூட்டமாகவும் சமூகப் பணிகளை நிறைவேற்றி வருகின்றனர். சுகாதாரம்-கல்வி-ஊர் வளர்ச்சி-வேளாண்மை ஆகிய அனைத்து அரசுத் துறைகளின் ஒத்துழைப்புடன் மாணவர்கள் மக்களுக்காகத் தங்கள் கடமையை ஆற்றி வருகிறார்கள்.

இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசு அலுவலர்களின் உதவியும் ஒத்துழைப்பும் தடங்கலின்றிக் கிடைக்கின்றன. நகர் மற்றும் கிராமப் புறங்களில் நலிந்த சமுதாயத்தினருக்கு இந்தப் பணிகளைச் செய்வது அவசியமாக உள்ளது. இவர்களுக்கு கல்வி-சுகாதாரம் துப்புரவு ஆகிய பணிகளைத் தொண்டர் அணியினர் கவனமாகச் செய்து வருகிறார்கள்.

''கண்ணுடைய ரென்போர்
கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்''

என்ற வள்ளுவரின் வாக்கிற்கொப்பத் தொண்டர் அணியினர் கல்லாமையை இல்லாமலாக்கக் கடும் உழைப்புத் தருகிறார்கள். முதியோர் கல்வித் திட்டத்தை நடத்தி, கல்வியறிவு பெற புதிய வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறார்கள். பள்ளிக்கூடங்களில் குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்கிறார்கள். அனாதைக் குழந்தைகளுக்கு இரவு வகுப்புக்கள் நடத்தி ஊக்கம் கொடுக்கிறார்கள்.

சுகாதாரத் திட்டத்தில் தீவிரக் கவனம் செலுத்தப்படுகிறது. பொருளாதார வசதியற்ற மக்களுக்கு இலவச உடல் பரிசோதனையும், மருத்துவ உதவியும் அளிக்கிறார்கள்.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் பரிசாக அளிக்கப்பட்ட கண் சிகிச்சை முகாம் மற்றும் ஊனமுற்றோர் மறுமலர்ச்சித் திட்டங்களுக்கும் தொண்டர் அணியினர் உதவி புரிகிறார்கள். இரத்த தானம் கொடுத்தல், மருத்துவமனைகளில் புற நோயாளிகளுக்கு உதவுதல், ஆகிய காரியங்களையும் செய்து வருகிறார்கள்.

குடிசைப் பகுதி மற்றும் கிராமப் பகுதிகளில் வளர்ச்சிப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர். மகளிர் மன்றம், சுகாதாரக் குழு போன்றவற்றை ஏற்படுத்துகிறார்கள். கல்விக் கண்காட்சி நடத்துகிறார்கள். கிராமப் பகுதிகளில் சிறுசேமிப்பின் அவசியத்தை வலியுறுத்துகிறார்கள்.

தேசியத் தொண்டர் அணியினரின் பணி வெறும் போதனைகளோடு நின்று விடுவதில்லை. உடல் உழைப்பையும் தருகிறார்கள். அதற்கான முகாம்களை நடத்துகிறார்கள். சமுதாய மேம்பாட்டிற்காகப் பள்ளிக் கட்டடம், படிப்பகம் கட்டுகிறார்கள். விளையாட்டு மைதானம் அமைக்கிறார்கள். சாலைகள் போடுகிறார்கள். சமுதாயத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறார்கள்.

மாவட்டங்களிலும், அகில இந்திய அளவிலும் வெள்ள நிவாரணம் - அகதிகள் மறுவாழ்வு முகாம்களில் மாணவர்களும் மாணவிகளும் நேரிடையாகப் பங்கு கொண்டு கடமையை நிறைவேற்றி வருகிறார்கள். 1973-ஆம் ஆண்டு கோடை விடுமுறையின் பொழுது எல்லாக் கல்லூரிகளிலும் பஞ்சத்தை எதிர்த்து இளைஞர் முகாம்கள் நடத்தப்பட்டன. 1974-ல் அசுத்தம் மற்றும் நோயை எதிர்த்து இளைஞர் முகாம்கள் நடத்தப்பட்டன. மே, ஜூன், செப்டம்பர், டிசம்பர் மாத விடுமுறை நாட்களில் 1500-க்கு மேற்பட்ட இளைஞர்கள் இதற்கான முகாம்களை நடத்திப் பங்கேற்றனர்.

தொண்டர் அணியின் திருச்சி ஜமால் முகமது கல்லூரிப் பிரிவிலுள்ள மாணவர்கள் சேலம் மாவட்டம் மோகனூர் ஊராட்சி ஒன்றியத்தில் வறட்சி நிவாரணப் பணிகளை 21.6.75 முதல் 30.6.75 முடிய மேற்கொண்டனர். இப்பணியின் முதற் கட்டமாக மோகனூரையடுத்துள்ள மூங்கில்பட்டி, ஆரியூர், தோரூர் கிராமங்களை இணைக்கும் விதத்தில் சுமார் 600 மீட்டர் தூரமுள்ள ஒரு புதிய சாலையை அமைத்துள்

கண் சிகிச்சை முகாம்களில், மாணவர்கள் தொண்டு புரிகிறார்கள்



ளார்கள். சாலையின் இருபுறமும் 3 அடி ஆழம் 4 அடி அகலம் கொண்ட வடிகால் அமைத்தனர்.

மருத்துவர்கள், நோயாளிகளுக்கு கண் அறுவைக்கு முன் மருந்தளிக்கும்போது உதவி செய்தார்கள். நோயாளிகளைப் படுக்கை அறையிலிருந்து அறுவைச் சிகிச்சை அறைக்கு தைரியம் கூறி அழைத்து வந்தார்கள். கண் அறுவை நடக்கும்போது அறுவை நிலையத்தில் மருத்துவர்களுக்கு உதவி செய்தார்கள். அறுவை முடிந்ததும் நோயாளிகளை அவரவர் அறைக்குத் தூக்கிச் சென்று படுக்கையில் படுக்க வைத்தார்கள்.

## பிளாஸ்டிக் பொருள் கண்காட்சி

ஐரோப்பாவில் உள்ள டஸ்ஸல்டார்பில் அக்டோபர் 7-ஆம் நாளிலிருந்து 14-ஆம் நாள் வரை நடைபெறவிருக்கும் உலக பிளாஸ்டிக், ரப்பர் பொருள் வணிகப் பொருட்காட்சியில் இந்தியா கலந்து கொள்ள இருக்கிறது. இந்தப் பொருட்காட்சி நான்காண்டுகளுக்கு ஒரு முறைதான் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கூறிய பணிகளைத் தொண்டர் அணியினர் சிறப்பான முறையில் செய்து முடித்ததால், 502 கண் நோயாளிகளைத் திறமை வாய்ந்த மருத்துவர்கள் ஒரே நாளில் அறுவைச் சிகிச்சை அளித்துப் புதியதொரு சாதனையை ஏற்படுத்த முடிந்தது.

தொண்டர் அணியின் பணி, நலிந்த சமுதாயத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுகிறது. இதன் மூலம் அவர்கள் நல்ல பயிற்சியைப் பெறுவதால், அது வாழ்க்கைக்குச் சிறந்த வழிகாட்டியாக அமைகிறது! இந்தச் சீரிய நோக்கம் வெற்றி பெற அரசின் ஒத்துழைப்பு நிரம்ப உண்டு! இந்த உதவிகளைப் பயன்படுத்திக் கொண்டு எல்லாக் கல்லூரிகளிலுமுள்ள மாணவர்களும் மாணவிகளும் தேசியத் தொண்டர் அணியில் சேர்ந்து மேலும் தங்களை உயர்த்திக் கொள்ள வேண்டும்.

—ம. அரி

# நகர்ப்புற நிலவரிச் சீரமைப்பு

சென்னை, மற்றும் மதுரை, கோவை, திருச்சி, சேலம் ஆகிய நகரங்களிலுள்ள ''நகர்ப்புற நிலவரி'' யைச் சீரமைத்துத் தமிழக அரசு ஓர் அவசரச் சட்டத்தைப் பிறப்பித்துள்ளது.

குடியிருக்கும் வீடுகள், அதையொட்டியுள்ள காலி நிலங்கள் குடியிருப்பு நிலம் என்ற வகையில் அமையும். அவ்வாறு தனியாக உள்ள காலி மனைகளும் குடியிருப்புநிலங்களாகக் கணக்கில் கொள்ளப்படும்.

மற்ற நிலங்களில் அனைத்தும் குடியிருப்பு அல்லாத நிலங்கள் என்ற வகையில் அமையும்.

சென்னை மாநகராட்சி எல்லைக்குச் சுற்றியுள்ள 16 கிலோ மீட்டர் தொலைவுவரை உள்ள நிலங்களெல்லாம் நகர்ப்புற நிலங்கள் என்று இதன்படி அறிவிக்கப்படுகிறது.

கல்வி மற்றும் கல்வி நிலையங்கள் இந்தச் சட்டத்திலிருந்து விதிவிலக்குப் பெற வேண்டுமென்றால் அந்த நிறுவனங்கள் அரசாங்கத்தாலோ அல்லது பல்கலைக் கழகத்தாலோ அங்கீகரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

**பகுதி 1 குடியிருப்பு நிலம். (Residential land)**

| நிலத்தின் அளவு | வரி விகிதம் |
|---|---|
| இரண்டு கிரவுண்ட், அல்லது அதற்குக் குறைவாக இருந்தால் | வரி கிடையாது. |
| இரண்டு கிரவுண்டுக்கு மேலேயும் ஐந்து கிரவுண்டுக்கு அதிகம் ஆகாமலும் இருந்தால் | மார்க்கெட் மதிப்பில் 0.7 சதவிகிதம். |
| ஐந்து கிரவுண்டுக்கு மேலேயும் பத்து கிரவுண்டுக்கு அதிகமாகவும் இருந்தால் | மார்க்கெட் மதிப்பில் 1.0 சதவிகிதம். |
| பத்து கிரவுண்டுக்கு மேலேயும், இருபது கிரவுண்டுக்கு அதிகமாகாமலும் இருந்தால் | மார்க்கெட் மதிப்பில் 2.0 சதவிகிதம். |
| இருபது கிரவுண்டுக்கு மேலே இருந்தால் | மார்க்கெட் மதிப்பில் 3.0 சதவிகிதம். |

**பகுதி 2 குடியிருப்பு அல்லாத நிலம் (Non-Residential land)**

| நிலத்தின் அளவு | வரி விகிதம். |
|---|---|
| இரண்டு கிரவுண்டுக்கும் அதற்குக் குறைவாகவும் இருந்தால் | மார்க்கெட் மதிப்பில் 0.5 சதவிகிதம். |
| இரண்டு கிரவுண்டுக்கு அதிகமாகவும் ஐந்து கிரவுண்டுக்கு அதிகம் இல்லாமலும் இருந்தால் | மார்க்கெட் மதிப்பில் 1.00 சதவிகிதம். |
| ஐந்து கிரவுண்டுக்கு அதிகமாகவும் பத்து கிரவுண்டுக்கு அதிகம் இல்லாமலும் இருந்தால். | மார்க்கெட் மதிப்பில் 2.0 சதவிகிதம். |
| பத்து கிரவுண்டுக்கு அதிகமாகவும் இருபது கிரவுண்டுக்கு அதிகமாக இல்லாமலும் இருந்தால் | மார்க்கெட் மதிப்பில் 4.0 சதவிகிதம் |
| இருபது கிரவுண்டுக்கு மேலே இருந்தால் | மார்க்கெட் மதிப்பில் 6.0 சதவிசிதம் |

இந்த அவசரச் சட்டம், ஜூலை திங்கள், 1-ஆம் தேதியிலிருந்து அமல் செய்யப்படுகிறது.

# எண்ணுக தமிழில்! எழுதுக தமிழில்!!

**கே: தமிழ் வளர்ச்சித் துறையின் தோற்றம் பற்றிக் கூற இயலுமா?**

ப: நாடு ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்ற பின்னரும் ஆட்சிமொழியாகவும், மேல்படிப்புப் பயிற்றுமொழியாகவும் தொடர்ந்து ஆங்கிலமே இருந்து வந்த நிலைமையை மாற்றும் வகையில் 1956-ல் தமிழ்நாட்டில் ஆட்சி மொழி தமிழ்தான் என்று சட்டம் இயற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து தமிழை ஆட்சிமொழியாகப் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் பல்வேறு துறைகளும் பிரிவுகளும் தமிழிலேயே செயல்படுவதற்கான அடிப்படைத் தேவைகளை எண்ணிப்பார்த்து, அவற்றையெல்லாம் நிறைவேற்ற அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டது, பல குழுக்கள், உட் குழுக்கள் அமைக்கப்பட்டன. அவற்றின் பரிந்துரைகளை ஏற்று அரசு அவ்வப்போது பற்பல ஆணைகள் பிறப்பித்தது.

கல்லூரிப் பாடப்புத்தகத்திற்கான அகராதிகள், ஆட்சிச் சொல்லகராதிகள் முதலியன வெளியிடப்பட்டன.

தமிழ் மொழியின் வளர்ச்சி குறித்துக் கருதவும், ஆலோசிக்கவும், பரிந்துரை கூறவும் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் ஒன்றை அரசு நிறுவியது. அதே நேரத்தில் தமிழ் மொழியை ஆட்சி மொழியாகச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆட்சி மொழிச் செயலாக்கக் குழு ஒன்றினையும் அரசு அமைத்தது. முன்னையது கல்வித் துறையுடனும் பின்னையது பொதுத்துறையுடனும் தொடர்பு கொண்டனவாகச் செயற்பட்டது.

மேற்கூறியவாறு தமிழ் வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள அனைத்துப் பிரிவுகளும் ஒரே கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரவேண்டும் என்னும் நோக்கில் கல்வித்துறைப் பிரிவு,

**அன்னைத் தமிழ் அரியணையில் வீற்றிருக்கும் இந்நாளில், எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற இலட்சிய நோக்கில் நாளும் நற்பணியாற்றி வருகிறது, தமிழ் வளர்ச்சித் துறை.**

**இத்துறை, தமிழ் மொழி வளர்ச்சிக்கும் வளத்துக்கும் ஆற்றி வருகின்ற சீரிய பணியினை இங்கே விளக்கிக் கூறுகிறார் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் திரு. கொண்டல் சு. மகாதேவன் அவர்கள்.**

பொதுத்துறைப் பிரிவு இரண்டையும் இணைத்துப் பொதுத் துறையுடன் இணைந்த ஓர் அமைப்பாகத் தமிழ் வளர்ச்சி இயக்ககம் 1965-ல் தோற்றுவிக்கப்பட்டது. செயலகத்துடன் இணைந்த பிரிவாகச் செயற்பட்டு வந்த இவ்வியக்ககம் 1971-ல் ஒரு தனித்துறைத் தலைமை அலுவலகமாக மாற்றி அமைக்கப்பட்டது.

**கே: இத்துறையின் நோக்கங்கள் என்னென்ன?**

ப: தமிழ் மொழியின் தொன்மை, சிறப்பு, தூய்மை ஆகியவை காக்கப்படவும் அதே நேரத்தில் அரசு நிர்வாகம் மற்றும் கல்வி, அறிவியல் துறைகளில்தமிழ் மொழி பயன்பாட்டை மிகுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தலும் இத்துறையின் தலையாய பணிகள் ஆகும்.

மேற்கூறிய செயற்பாடுகளுக்கு ஏற்ற வகையில் ஆட்சிச் சொல் அகராதிகள் அமைத்தல், மொழி பெயர்ப்புகளுக்கு ஏற்பாடு செய்தல், தட்டச்சுப் பொறிகளுக்கு ஏற்ற வகையில் தமிழ் எழுத்து வடிவங்கள் அமைத்தல், 'எண்ணுக தமிழில்' 'எழுதுக தமிழில்' என்னும் அடிப்படையில் பல துறை அறிஞர்களையும் தமிழில் நூல்களை எழுத ஊக்குவித்தல் ஆகிய பணிகளைச் சிறப்பாக மேற்கொண்டுள்ளது.

எதிர்கால ஆராய்ச்சியாளருக்குப் பயன்படும் வகையில் இதுகாறும் தமிழில் வெளியிடப்பட்டுள்ள நூல்கள் அனைத்தையும் தொகுத்துத் தமிழ் நூல் விவர அட்டவணை வெளியிடுதல், பிற மாநிலங்

தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர்
திரு கொண்டல் சு. மகாதேவன்
அவர்களின்
பேட்டி



ஓதாளர் குறவஞ்சி; நாட்டுப்புறப் பாடல்கள் திறனாய்வு, செடிலக்கரை நாகரிகம், தொல்காப்பியக் களஞ்சியம் ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன.

**கே: தமிழ் வளர்ச்சித் துறை நூல்கள் எவையேனும் வெளியிட்டுள்ளதா ?**

ப: ஆம். தமிழ் நூல் விவர அட்டவணைப் பிரிவு ஒன்று இத்துறையில் செயல்பட்டு வருகிறது. 1867-ம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் அச்சிடப்பெற்று பதிவாகியுள்ள நூல்கள் அனைத்தும் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் பாதுகாத்து வைக்கப் பெறுவதற்காக அனுப்பப்படுகின்றன. அங்கு, அந்நூல்கள் அனைத்தும் பொருட் பாகுபாட்டு அமைப்பில் வைக்கப்பெறாமல் பதிவு செய்யப்பெற்ற கால அடிப்படையில் ஒருங்கே வைக்கப் பெறுகின்றன. இந்நிலையில் ஆய்வு நிகழ்த்த விரும்பும் ஆய்வாளர்கள், வெளியாகியுள்ள நூல்களை அறிந்து, தமக்கு வேண்டிய நூல்களைப் பெற்று, ஆய்வு நிகழ்த்த இயலுவதில்லை. எனவே, 1867-ஆம் ஆண்டு முதல் 1957-ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பெற்ற தமிழ் நூல்களின் விவர அட்டவணையைத் தொகுக்கும் சீரிய நோக்குடன் தமிழ் நூல் விவர அட்டவணைப் பிரிவு தொடங்கப் பெற்றது.. இப்பிரிவு, ஆவணக் காப்பகத்திலிருந்து தமிழ் நூல்களைப் பெற்றுப் பொருட்பாகுபாட்டு அடிப்படையில் நூல்களைப் பகுத்து, நூல்களைப் பற்றிய விளக்கக் குறிப்புகளுடனும் நூல் அகரவரிசை, ஆசிரியர் அகர வரிசை முதலியவற்றுடனும் 'தமிழ் நூல் விவர அட்டவணை' என்ற பெயரில் வெளியிட்டு வருகின்றது. விவர அட்டவணை அச்சிடப் பெற்ற பிறகு நூல்கள், அட்டவணையிலுள்ள முறைப்படி வரிசை எண்ணிடப் பெற்று மீண்டும் ஆவணக் காப்பகத்திற்கே அனுப்பப்படுகின்றன. இதனால் ஒரு கால அளவிற்குள் ஒரு பொருள் தொடர்பாக வெளியான நூல்கள் அனைத்தும் ஓரிடத்தில் ஒழுங்குற அடுக்கப்பெற்று ஆய்வாளர்கள் பயனுற வழி வகுக்கப்படுகின்றது.

1867 முதல் 1900 வரை பதிவு செய்யப்பெற்ற நூல்கள் தொடர்பான குறிப்புகள் 'முதல் தொகுதி' என்ற பெயரிலும், 1901 முதல் 1910 வரை பதிவு செய்யப்பெற்றவை 'இரண்டாம் தொகுதி' என்ற பெயரிலும் வெளியிடப்பெற்றுள்ளன. மூன்று, நான்கு, ஐந்து தொகுதிகள் அச்சிடப்பெற்று வருகின்றன. 1867-ஆம் ஆண்டிற்கு முன்னர் வெளியான தமிழ் நூல்கள் தொடர்புடைய குறிப்புகள் அடங்கிய 'மரீடாக்' நூல் அட்டவணையுடன் 'டெய்லர்' நூல் அட்டவணை. பிரிட்டன் தொல்பொருட்காட்சிச் சாலையிலுள்ள தமிழ் நூல்களின் அட்டவணை ஆகியவற்றையும் இத்துறை இணைத்து வெளியிட்டுள்ளது.

> **தமிழை ஆட்சி மொழியாகச் செயற்படுத்துவதில், தரமான தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் ஒன்றைத் தயாரித்து வெளியிடுவது முக்கியம் என்று ஆட்சி மொழிக் குழு கருதியது. குழுவின் பெருமுயற்சியால் தயாரிக்கப்பெற்று, 16.9.65ல் வெளியிடப்பட்ட தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் சிறந்த சாதனையாகும்.**

இத்துறையில் தமிழ் நாட்டு வரலாறு எழுதும் ஒரு குழுவும் இடம் பெற்றுள்ளது. ஆங்கிலப் பள்ளியில் பயின்று வெளிவந்த நம்மைப் பார்த்து,

'சேரன் தம்பி
சிலம்பை இசைத்ததும்
தெய்வ வள்ளுவன்
வான்மறை செய்ததும்
பாரின் நல்லிசைப்
பாண்டியச் சோழர்கள்,
பாரளித்ததும்
தர்மம் வளர்த்ததும்
அன்ன யாவும் அறிந்திலர்'

என்றார் பாரதியார். எலிசபத் கால ஆட்சி முறையை அறிய 'சேக்ஸ்பியர்' நாடகங்கள் பயன்படுவதைப் போல, அகழ்வாராய்ச்சிக்கும் பயன்படுவதில்லையென மேனாட்டு வரலாற்றறிஞர்கள் வகுத்துரைக்கின்றனர். ஆனால் நம்நாட்டிலோ மனுநீதியைத் துணையாக வைத்துக் கொண்டு வரலாறு படைக்கலாம் என துணிபவர்களும்கூடச் சங்க இலக்கியங்களின் துணை கொண்டு எழுதும் வரலாற்றை ஏற்றுக் கொள்ள ஏனோ மறுக்கின்றனர். அயல் நாட்டில் உள்ளது போல் வரலாறு என்ற அளவில் கட்டுக்கோப்பாக அமைந்து எதிர்கால வீரர்களை உருவாக்கும் ஒரு சாதனத்தை இங்கு ஏனோ காண முடியவில்லை.

பேரறிஞர் அண்ணா மனம் வெதும்பிக் கூறுவது போல கரிகாலன், இராசராசன், குலோத்துங்கன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், ஆட்டனத்தி என்ற பெயர்ப் பட்டியலே நமக்கு எஞ்சி நிற்கிறது! இந்திய வரலாறு தொடங்க வேண்டிய இடம் பழைமைமிக்க காவிரிக் கரையே தவிர, நேற்றுத் தோன்றிய கங்கைக் கரையன்று என்பது வரலாற்றுப் பேராசிரியர்களின் கருத்தாகும். இச்சூழலிலே, தமிழையே தம் மூச்சாகக் கொண்டுள்ள தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தின் ஆய்வுக்கூடத்திற்கு அடிக்கல் நாட்டியபோது, தென்னகத்திற்கெனத் தனி வரலாறு எழுதப்பட வேண்டும் என்ற உயர் கருத்தினை வெளியிட்டார். அதைத் தொடர்ந்து மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் மு.வரதராசனார் அவர்களைத் தலைவராகவும், பேராசிரியர்கள், தமிழ் அறிஞர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகவும், தமிழ் வளர்ச்சி இயக்குநரைச் செயலாளராகவும் கொண்ட வரலாற்று வெளியீட்டுக் குழு ஒன்று நிறுவப்பெற்றது. தமிழ் நாட்டு வரலாற்றுப் பிரிவின் கீழ் செயற்படும் இக்குழு சங்க தொல்பழங்காலம், பல்லவ காலத் தமிழகம், பாண்டியர் காலத் தமிழகம், சோழப் பெருவேந்தர் காலத் தமிழகம் முதலிய பொருள்களில் கட்டுரைகளை உருவாக்கித் தொகுக்கும் நற்பணியில் ஈடுபட்டுள்ளது.

தஞ்சை, சரசுவதி மகாலில் உள்ள நூலகத்தில் அழியும் நிலையிலுள்ள சித்த மருத்துவ ஓலைச்சுவடிகளைப் படியெடுத்துப் பாதுகாக்கும் பணியினையும் இத்துறை மேற்கொண்டுள்ளது.

**கே: தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றித் தாங்கள் எழுதியும் பேசியும் வருகிறீர்கள். இது பற்றிச் சற்று விளக்கிட முடியுமா ?**

ப: எண்ணத்திலே வளர்ந்துவிட்ட நாம் ஏனோ எழுத்திலே தளர்ந்துவிட்டோம்! இன்று அலுவலகங்களில் நாவசைத்துப் பேசுவதிலும் கையசைத்து எழுதுவதே அதிகமாக நடந்தாக வேண்டியுள்ளது. எனவே பைய 'நாவை அசைத்து' 'உயர்ந்த நம் தமிழ்மொழி இன்று, 'கையினால் உரை' நிகழ்த்த வேண்டிய கலையிலும் சிறிது கருத்தைச் செலுத்தியாக வேண்டியுள்ளது! ஆம். இன்று ஒலி நுட்பம் குன்றிய ஆங்கிலம்கூடக் கையினால் உரை செய்வதில் வல்லமை உடையதாக உள்ளது. ஆனால் உலகமே தலைவணங்கும் வகையில் ஒலி நுட்பங்களை உருவாக்கி ஒரு தொல்காப்பியரை உலகுக்களித்த உயர் தனிச் செம்மொழியைப் பெற்றிருக்கும் நாம் ஏனோ கையினால் உரைக்கும் முறையில் பெற வேண்டிய வளர்ச்சி பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் இருக்கின்றோம். அதன் விளைவாக நம் அச்சும், தட்டச்சும் ஆங்கிலத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் பின் தங்கி நிற்கின்றன. இந்நிலைக்குத் தமிழன் உடனே தீர்வு கண்டாக வேண்டும்!

நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை என்பதை நாம் அறிவோம். அவ்வாறே நம் மொழியின் பிழையன்று நம் தட்டச்சு விரைந்து நகராமை என்பதையும் நாம் உணர்தல் வேண்டும்! எல்லாம் விதியின் பிழையே! ஆம். தமிழ் மொழியை எழுத நாம் மேற்கொண்டு வரும் வரி வடிவ எழுத்தமைப்பின் விதி முறையில் உள்ள பிழையேயாகும். விரும்பினால் விதியையும் நம் மதியால் வெல்லலாமென்றோ? இன்று நூற்றுக்கு எழுபது பேர் எழுத்து பற்றிக் கவலைப்படாது தம் கை கட்டைவிரலை மையில் ஒற்றிக் காகிதத்திலே புரட்டிக் கொண்டிருப்பதற்கு நம் எழுத்து வடிவத்தில் உள்ள முறைபாடே காரணமாகும்! இருந்தாலும், நம் எழுத்தில் உள்ள குறை நமக்குப் புலப்படுவதில்லை. அயலார் கண்களுக்கே அது புலப்படும்!

வெளிநாட்டிலிருந்து போந்த ஜோசப் பெஸ்கி எகர ஒகரத்தின் தலைச் சுழியை மாற்றி நெடிலுக்கு முறையே கீழ்க்கோடும் சுழியும் சேர்த்து 'எகர ஒகரத்தின் இயற்கையும் இற்றே' என்று நிலைநாட்டி வீரமாமுனிவராகத் திகழ்ந்தார். காலத்திற்குக் காலம் எழுத்துக்களில் ஏற்பட்ட இம்மாற்றங்கள் பற்றி எதுவும் அறியாத நாமோ 'தொல்லை வடிவின எல்லா எழுத்தும்' என்று மகிழ்ந்து கொண்டிருக்கின்றோம்! பகுத்தறிவுச் செம்மல் தந்தை பெரியார் ஒருவருக்குத்தான் தொல்லை தரும் ஐகார ஔகாரங்களை விடுக்கவும் மெய்யுடன் ஒட்டிக் கொண்டிருந்த ணை, னை, லை, ளை உருவங்களைப் பிரித்து ணை, னை, லை, ளை என அமைக்கவும், கீழ் விலங்கு மாட்டிக் கொண்டிருந்த ணா, னா, றா உருவங்களை விடுவித்துக் கால் கொடுத்து ணா, னா, றா என நடமாடச் செய்யவும் துணிவிருந்தது. ஆனால், நாமோ இன்னும் ஓலையும் எழுத்தாணியும் எழுது கருவிகளாக இருந்த காலத்தில் மெய்யின் வழியது உயிர்த் தோன்று நிலையே! என்னும் மொழியியலுக்கு முரணாக உருவு திரித்து உயிர் வடிவமே தோன்றாத நிலையில் படைத்துக் கொண்ட வளைவு நெளிவுகளையே இன்றைக்கும் எழுத்து உருவங்களாகக் கொண்டு அச்சையும் தட்டச்சையும் ஆமை வேகத்தில் நகர்த்திக் கொண்டிருக்கின்றோம்.

தமிழனைப் பகுத்தறிவுப் பாதையில் நடத்திச் செல்லும் தந்தை பெரியாரின் எழுத்து சீர்திருத்தத்தை உகர ஊகாரங்களுடன் கூடிவரும் உயிர் மெய் வடிவங்களுக்கும் தொடர்ந்து நாம் மேற்கொண்டு ஜூரம், ஜூலை என எழுதுவது போல் குடம், கூடம் என்பவற்றையும் குடம், கூடம் என எளிமையாக எழுதினால் நாட்டில் எழுத்தறிவு பெருகும்.

மேலும், அச்சும் தட்டச்சும் மலிந்துவிட்ட முற்போக்கு ஊழியில் வாழ்ந்து வரும் நாம் இனியும் இரயில் சீட்டுக்களில் கோட்டை 'கேட்டை' யாவதையும், வார இதழ்களில் கோவலன் 'கேவலன்' ஆவதையும் நகைச்சுவையாகக் கொண்டு தொடர்ந்து சுவைத்துக் கொண்டிருக்க முடியாது.

> **1975-76ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு மதிப்பீட்டில் தமிழ் வளர்ச்சிக்கான நிதி ஒதுக்கீடு ரூ.77 இலட்சங்களாகும். அதில் ரூ.40 இலட்சம் கல்லூரிகளில் தமிழைப் பாடமொழியாகக் கொண்டு பயிலும் மாணவர்களுக்கு உதவித் தொகையும் புத்தகச் செலவுத் தொகையும் அளிக்கச் செலவிடப்படும்.**

இன்று உலகில் ஒவ்வொரு நாடும் தன் கூட்டெழுத்து வடிவங்களுக்கு முழுக்குப் போட்டு விட்டு தனித் தனியாக உள்ள உரோமன் எழுத்து வடிவங்களை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இந்நிலையில் நம் எழுத்துருவங்களை நாம் காப்பாற்ற வேண்டுமானால் உயிரும் உடம்புமாம் முப்பது முதல் எழுத்துக்களை மட்டும் கொண்டு மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளியுமில்லாமல் மிக எளிமையாகக் 'கஓடடஐ' என்றும் 'கஓவஅலஅன' என்றும் எழுதி மகிழும் எளிய நிலை வருதல் வேண்டும்.

தமிழில், அகரம், தகரம், உகரம் ஆகிய மூன்று ஒலி எழுத்துக்களால் ஆன சொல்லை 'அதஉ' என எழுதுவதுதான் மொழியியல். 'அது' என ஈற்றில் உள்ள உகரம் கண்ணுக்குத் தோன்றாத வகையில் எழுதுவது 'சுருக்கெழுத்து முறை', என்று வேண்டுமானால் சமாதானம் கூறலாம். சகர, உகர, தகர, ககர, உகரச் சொல்லை 'சஉககஉ' என்று எழுதுவதே பொருத்தம். சுக்கு என்று எழுதுவதோ சுஞ்சு என்று மேலும் சுருக்கி எழுதுவதோ 'சுக்குச் செட்டே' ஆகும்! உயிரும் உடம்புமாம் முப்பது எழுத்துக்களில் எழுதும் நிலை வந்தால் தமிழ் கற்கும் அயல் நாட்டார் எண்ணிக்கையில் மிக, இமிழ்கடல் வேலி முழுவதும் தமிழ் நாடாக மலர்ந்து மணம் வீசும்.

இன்று இத்தகைய எழுத்துச் சீர்திருத்தங்களை ஓரளவேனும் மேற்கொண்டால் நம் தட்டச்சுகளில் இருபதுக்கும் மேற்பட்ட தட்டாணிகள் (Keys) மிச்சமாகும். இரு மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டுவிட்ட நாம் அடைப்புகளில் இன்றியமையாத இடங்களில் ஆங்கிலச் சொல்லை, ஆங்காங்கு அமைக்க வகை செய்யும் அளவில் நம் தமிழ்த் தட்டச்சுப் பொறியிலேயே 26 ஆங்கிலப் பேரெழுத்துக்களையும் இடம் பெறச் செய்துவிடலாம்! எழுத்து வடிவத்தில் சீர்திருத்தம் எந்த அளவிற்கு மேற்கொள்வது என்பது பற்றியும் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சித் துறை ஆழ்ந்து ஆய்ந்து வருகிறது.

**கே: அரசு ஊழியர்கள் தமிழில் கோப்புகள் எழுதி வருகின்றனர். அது வெற்றி கண்டுள்ளதா ?**

களில் தமிழ் பரவுவதற்கு வகை செய்தல் போன்ற பணிகளைச் செய்து முடிப்பது இத்துறையின் நோக்கங்களாகும்.

**கே: தமிழ் ஆட்சிமொழி சம்பந்தமாக நடைபெற்றுவரும் பணிகள் என்னென்ன ?**

பதில் :

'நகராட்சி, சிற்றூரின்
நல்லாட்சி, மாவட்ட
ஆட்சி என்று
புகல்கின்ற பலஆட்சிக்
கழகங்கள் எவற்றிலுமே
புகநினைப்பார்
தகுபுலமை குறிக்கின்ற
சான்றுதர வேண்டுமென்று
சட்டம் செய்தால்
அகலுமன்றோ தமிழ்நாட்டின்
அல்லலெல்லாம்
அல்லாக்கால்
அமைதி உண்டோ ?'

என்று வினவினர் பாவேந்தர் பாரதிதாசனார்.

பாரதிதாசனாரின் வினவிற்கு விடை கூறும் வகையில், ஆட்சி மொழிச் சட்டங்கள் இயற்றப்பட்டன. முதல் ஆட்சி மொழியைச் செயல்படுத்துவதற்கு மூன்று நிலைகள் உருவாக்கப்பட்டன. முதல் நிலையாக, சார்பு நிலை அலுவலகங்கள் அனைத்தும் தங்களுக்குள் கடிதப் போக்குவரத்துக்களைத் தமிழில் அனுப்ப வேண்டும் என்றும், இரண்டாம் நிலையாக துறைத் தலைமை அலுவலகங்கள் அனைத்தும் இம்முறையைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டுமென்றும், மூன்றாம் நிலையாகத் தலைமைச் செயலகம் ஆட்சி மொழிச் சட்டத்தின் வழி செயற்பட வேண்டும் என்றும் சட்டங்கள் வகுக்கப்பட்டன. தொடக்கத்தில் பொதுத் (தமிழ் வளர்ச்சி) துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள எல்லாப் பிரிவுகளிலும், அலுவலகங்களிலும் தமிழ் மொழி முழுமையாகச் செயற்படுத்தப்பட்டன. பின்னர், பொது (செய்தி விளம்பர)த் துறையிலும் ஆட்சி மொழித் திட்டம் செயற்படுத்தப்பட்டது. இதனையடுத்து, சட்டம், நீதி ஆகிய துறைகள் நீங்க, பிற துறைகள் அனைத்தும் ஆட்சி மொழிச் சட்டத்தை நிறைவேற்றத் தொடங்கின. தற்போது சட்டம், நீதி, சட்டமன்றம், சட்டப்பேரவை முதலிய துறைகளும் அரசு அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைப் பின்பற்றித்

தமிழ்த் திட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றன. தலைமைச் செயலகத்தில் உள்ள பல துறைகளில் அரசாணைகளும் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் வெளியிடப்படுகின்றன. 'ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின் முன்னேற்றம் ஒவ்வொன்றும் உன் முன்னேற்றம்' என்னும் உயர்மொழியை உளங்கொண்டு தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் ஒல்லும் வகையால் தமிழ்ப் பணியைச் செல்லும் வாயெல்லாம் செயலாற்றி வருகின்றது.

**மொழி பெயர்ப்பு :** நம் நாடு அயலாராம் ஆங்கிலேயர் தம் ஆளுகைக்குட்பட்ட காலந்தொட்டு அலுவலகங்களில் வரைவுகளை ஆங்கிலத்திலேயே எழுதிப் பழகி வந்த அரசு ஊழியர்கள் தமிழில் எழுதுவதற்குக் கலைச்சொற்கள் தேவைப்படும். அதற்கென இவ்வியக்ககத்தில் மொழி பெயர்ப்புப் பிரிவு ஒன்று செயற்பட்டு வருகின்றது. இப்பிரிவு, அரசுப் பணியாளர்கள் நாடோறும் நடைமுறையில் பயன்படுத்தும் சொற்களை மட்டும் மொழி பெயர்த்துத் தொகுத்து ஆட்சிச் சொல்லகராதி என்னும் பெயரில் வெளியிட்டு வருகின்றது. இம்மொழி பெயர்ப்புப் பிரிவு, துறைத் தலைவர்கள் அனுப்பும் சட்டங்கள், விதிகள், விதித் தொகுப்புகள், படிவங்கள் முதலியவற்றை மொழி பெயர்த்துத் தரும் பணியையும் மேற்கொண்டுள்ளது. தற்பொழுது இப்பிரிவு சிறப்புச் சொல்லகராதிகளையும் தொகுத்து வெளியிட்டு வருகிறது.

**பயிற்சி வகுப்புகள் :** ஆட்சிச் சொல்லகராதிகள் எத்தனையிருப்பினும் அன்றாட நடைமுறையில் வரைவுகளைத் தமிழில் எழுதும்பொழுது, சிக்கல்கள் தோன்றுவது இயல்பேயன்றோ? அத்தகைய சிக்கல்களைப் போக்கிச் சீராக்க மிகுந்த அளவில் ஊழியர்கள் பணிபுரியும் தலைமைச் செயலகம், சம்பளக் கணக்கு அலுவலகம் போன்ற இடங்களில் தமிழ் அறிஞர்களைக் கொண்டு பயிற்சி வகுப்புகள் அவ்வப்பொழுது நடத்தப்பட்டு வருகின்றன.

**ஆய்வுப்பணி :** ஆட்சி மொழித் திட்டம் அலுவலகங்களில் எந்த அளவு செயற்படுத்தப்படுகின்றது என்பதை நேரில் காண தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் துறைத் தலைமை அலுவலகங்கள், மாவட்டத் தலைமை அலுவலகங்கள் ஆகியவற்றை ஆய்வு நிகழ்த்துகின்றூர். பிற அலுவலகங்களில் ஆய்வு நிகழ்த்த ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு தனி அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். இப்பணியை மேற்கொண்டுள்ள தமிழ் வளர்ச்சி இயக்குநரும், ஆய்வுத் தனி அலுவலர்களும் தமிழ் மொழியை அரசு அலுவலகங்களில் விரைந்து செயற்படுத்த வேண்டுமென்ற அரசின் தூய நோக்கம் எந்த அளவு

> **ஒரு நாட்டின் ஆட்சி மொழி ஆவதற்கு, தாய்மொழி என்னும் தகுதிக்கு ஈடாக, வேறு எந்தத் தகுதியும் ஒரு மொழி பெற்றிடத் தேவையில்லை. ஆயினும், நமது தாய்மொழி, நமது தாய்மொழி என்பதால் மட்டுமன்று, வளமிக்கது என்பதாலும், எவரும் வியந்து பாராட்டத் தக்கதாகிறது. அந்த வளம் கெடாமலும், மேலும் வளருமாறு, செயல்களைச் செம்மையாக்கித் தருவது, நமது கடமையாகும். தமிழ், ஆட்சி மொழியாக எல்லாத் துறைகளிலும் திகழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்குவதில், வெற்றி பெற்றிட, எல்லோருடைய நல்லார்வம், நிரம்பத் தேவை.**
>
> **—அறிஞர் அண்ணா.**

செயற்படுத்தப்படுகின்றது என்பதை ஆய்வதுடன் அவ்வாறு செயல்படுங்கால் ஏற்படும் இடையூறுகளை அவ்வப்பொழுது களைந்து அரசு ஊழியர்களைத் தமிழின்கண் ஆற்றுப்படுத்தும் பணியையும் மேற்கொள்ளுகின்றனர். நம் தமிழ் நாட்டில் ஆட்சிமொழி சீரிய முறையில் விரைந்து செயற்படுத்தப் பெற்று வருகின்றதென்பதை, அண்மையில் ஆந்திர மாநிலத்திலிருந்து வருகை தந்த ஆட்சிமொழிக் குழு பாராட்டி உள்ளது என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

**கே: இத்துறை போட்டிகள் எவையேனும் நடத்துகின்றதா ?**



**சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு வழங்கப்படுகிறது.**

ப: ஆம். எல்லாத்துறைகளிலும் திறமையை வளர்த்து ஊக்குவிக்கப் போட்டிகள் இன்றியமையாதனவாகின்றன. எனவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் வரைவுகளைத் தமிழில் எழுதுங்கால் திட்ப நுட்பங்களுடன் சீரிய முறையில் எழுதும் பணியாளர் மூவரைத் தேர்ந்தெடுத்து அவருக்குத் தமிழ்நாடு அரசு, இத்துறையின் சார்பில் ரூபாய் 500, 300, 200 பரிசு வழங்கி ஊக்குவித்து வருகின்றது. இப்பொழுது இப்பரிசுத் திட்டம் தலைமைச் செயலகத்திற்கும் விரிவுபடுத்தப் பெற்றுள்ளது.

இத்துறை, நூல்களுக்குப் பரிசுகள் வழங்கி வருகின்றது. வளரும் மொழியில் நூல்கள் தோன்றிக் கொண்டே இருத்தல் வேண்டும். காலவெள்ளத்தால் அடித்துச் செல்லப்படாத பெரு நூல்களைத் தமிழ் மொழியில் படைத்துத் தரும் நூலாசிரியர்களைப் போற்றிப் பாராட்டுதல் அரசின் கடமையன்றோ? ஆண்டுதோறும் தமிழ் மொழியில் வெளிவரும் நூல்களை 21 தலைப்புகளாகப் பிரித்து ஒவ்வொரு தலைப்பிலும் வெளிவந்த சிறந்த நூல்களைத் தேர்ந்தெடுத்து, முதல் பரிசாக இரண்டாயிரம் ரூபாயும், இரண்டாம் பரிசாக ஆயிரம் ரூபாயும் வழங்கி வருகிறது. மேலும், அச்சகத்தாரும் நூல் வெளியீட்டார்களும் வாணிக நோக்கத்திற்காக மட்டுமின்றி வண்டமிழ் மொழியின் வளர்ச்சியினையும் உளங்கொண்டு நூல்களை வெளியிட முன்வர வேண்டுமென்ற எண்ணத்தில் தமிழக அரசு, தமிழ் மொழியில் சிறந்த நூல்களை வெளியிட விரும்புகின்றவர்களுக்கு இவ்வியக்ககத்தின் வாயிலாகப் பொருளுதவி செய்து வருகின்றது. அச்சிடத் தகுந்தது என வல்லுநர் குழு தேர்ந்தெடுத்த நூல் அச்சிடுவதற்காகும் பொருட்செலவில் பாதி அல்லது ரூபாய் 5,000 வழங்கி தமிழ் மொழிகளில் புதுப் புது நூல் வெளிவர வழி வகுக்கின்றது. இத்திட்டத்தின்கீழ் சீரிய நூல்களைப் பதிப்பித்து வெளியிட்ட பதிப்பாளர்களுக்கும் இவ்வாராய்ச்சி மன்றம் சான்றிதழ் வழங்கிச் சிறப்பித்து வருகின்றது.

**கே: நூல் வெளியிடத் தமிழ் வளர்ச்சித் துறை உதவி புரிகின்றதாமே ?**

ப: ஆம்.

'செந்தமிழிற் புதுப்புது நூல்
விளைப்பதற்குச்
செல்வத்தைச் செலவு
செய்தால்
நந்தமிழ் நாடுயராதோ?
நலிவெல்லாம் தீராவோ?'

என்று புரட்சிக் கவிஞரின் கருத்துக்களை உளங்கொண்ட

ப: ஆம். மைய அரசு, அயல் மாநில அரசுகள் ஆகியவற்றிற்கு எழுதும் கடிதங்கள் போன்ற சில விதிவிலக்குகள் தவிர மற்ற அனைத்துப்பொருள் பற்றியும் அனைத்துத் துறைகளிலும் நல்ல வெற்றியுடன் வரைவுகள் எழுதி வருகின்றனர். கோப்புகள் முற்றிலும் தமிழிலேயே வைக்கப்பட்டுள்ளன. சுற்றி வளைத்து ஆங்கிலத்தில் எழுதுவதைவிட நினைவில் எழும் எண்ணங்களை நேரே தமிழில் எழுதுவது எளிமையாகவும் இனிதாகவும் இருப்பதை அலுவலர்கள் உணர்ந்து வருகின்றனர். நீதிபதிகளும் கூடத் தமிழிலேயே தீர்ப்பு வழங்கத் தொடங்கிவிட்டனர். He who came here did this (எவர் இங்கு வந்தாரோ அவர் செய்தார்) என எழுதுவதைவிட 'வந்தவர் செய்தார்' என்று தமிழில் எழுதுவதில் காலமும், காகிதமும் மிச்சமாவது தெளிவு. 'I am suffering from severe fever, I request that I may kindly be granted casual leave for two days only' என்ற ஆங்கிலத் தொடரிலுள்ள அழகு இன்று அலுவலர்கள் எழுதுகின்ற 'கடுங் காய்ச்சலால் வாடுவதால், அருள்கூர்ந்து இரு நாள் மட்டும் தற்செயல் விடுப்பு அளிக்க வேண்டுகின்றேன்' என்னும் தமிழ்த் தொடரில் அப்படியே இடம் பெற்றுள்ளது.

**கே: தமிழ் வளர்ச்சித் துறையின் எதிர்காலத் திட்டங்கள் எவையேனும் உளவா?**

ப: வெளி மாநிலங்களிலுள்ள பல்கலைக் கழகங்களில் தமிழ் இருக்கையை நிறுவுவதற்கும், தமிழ்ப்பேராசிரியர் பதவியை ஏற்படுத்தவும், தமிழ்ப் பட்டப் படிப்பை ஊக்குவிக்கவும், தமிழ்மொழியில் ஆய்வுக் கூடங்கள் நடத்தவும் இவ்வரசு திட்டமிட்டு நிதியுதவி செய்து வருகின்றது; மேலும் உதவி செய்யத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை தமிழ்நாடு அரசு திருப்பதியிலுள்ள திரு. வேங்கடேசுவரப் பல்கலைக் கழகம், ஆக்ராப் பல்கலைக் கழகம், மேற்கு வங்காளத்தில் உள்ள விசுவபாரதி பல்கலைக் கழகம், திருவனந்தபுரத்திலுள்ள திராவிடமொழிகளின் சங்கம், கல்கத்தா பல்கலைக் கழகம் ஆகிய நிறுவனங்களுக்கு நிதியுதவி செய்து வருகின்றது. தமிழகத்தில் எழுத்து வடிவம் பெறாத நாட்டுப்பாடல்களைத் தேடித் திரட்டி நூல் வடிவத்தில் கொண்டு வரவும் திட்டமிட்டு அப்பணியைத் தொடங்கியுள்ளது.

தமிழகத்தில் ஆங்கில ஆட்சிக் காலத்தில் பொருட் குழப்பம் ஏற்படும் வகையில் ஒலி மாறி உருத்திரிந்து போன திருவையார் (திருவையாறு) வடவார் (வடவாறு) கல்லார் (கல்லாறு) போன்ற ஊர்ப் பெயர்களையெல்லாம் திருத்தம் செய்து புதிய பட்டியல் தயாரிக்க அரசு உரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

**கே: இலங்கை, மலேயா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் வாழும் தமிழர்கள் எழுதும் நூல்களுக்கும் பரிசுகள் வழங்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா?**

ப: ஆம். இனிவரும் ஆண்டுகளில் தகுந்த தமிழ் நூல்களுக்காக இலங்கைக்கு இரு பரிசுகளும், மலேயாவுக்கு இரு பரிசுகளும், சிங்கப்பூருக்கு ஒரு பரிசும் ஒதுக்கீடு செய்து வழங்கலாம் என்னும் கருத்து அரசின் ஆய்வில் உள்ளது.

இவ்வாறு தமிழ் மொழி வளர்ச்சிக்கும், வளத்துக்கும் அயராது பணியாற்றி அன்னைத் தமிழுக்கு அருந்தொண்டாற்றி வருகிறது தமிழ் வளர்ச்சித் துறை என்பதைப் பெருமிதத்தோடு கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

**பேட்டி: பி.வி.ஜி.**


பழ உதிராவைக குறைதது, உஙகள **மாமர, மிளகாய்ப்** பயிர்களின் விளைச்சலைப் பெருக்க, உபயோகியுங்கள்

# பிளானேபிக்ஸ்



**மா:** காயின் பிஞ்சுப் பருவத்திலேயே, 4,5 லிட்டர் நீருக்கு 4மி.லி. வீதம் பிளானேபிக்ஸ் தெளித்தால் அது மாமரப் பயிரிலே பழம் உதிருவதைக் கணிசமாகக் குறைக்கிறது என்றும், பழங்களின் அளவு, எடை, வைட்டமின் ஸி சத்து ஆகியவற்றைப் பெருக்குகிறது என்றும் கிடைத்துள்ள அறிகுறிகளிலிருந்து புலப்படுகிறது.



**மிளகாய்:** 4,5 லிட்டர் நீருக்கு 1மி.லி. பிளானேபிக்ஸ் வீதம் கரைதது, பூக்கும்போது ஒரு தடவையும், 3,4 வாரங்கள் கழித்து இரண்டாம் தடவையுமாக பிளானேபிக்ஸ் கரைசலை இரு முறைகள் தெளித்தால் அதைத் தொடர்ந்து விளைச்சல் பெருகியதாகத் தெரிய வந்துள்ளது. விவரமான தகவல்களை விசாரிக்கவும்.

**உஷார், மாற்றுக்களை ஏற்காதீர்—உயிர் போன்றது உங்கள் பயிர்ச் செல்வம்.**

**M&B May & Baker**

'பிளானேபிக்ஸ்' என்பது, மே & பேக்கர் லிட் டின் டிரேடு மார்க் ஆகும்.

மே & பேக்கர் (இந்தியா) பிரைவேட் லிட். பம்பாய் · கல்கத்தா · கவுஹாத்தி · இந்தோர் · லக்னோ · சென்னை · நியூ டெலலி · பாட்னா ·


# இதயத் துடிப்பை நிறுத்தி அறுவைச் சிகிச்சை!

விஞ்ஞானத்தின் உதவியினால் விந்தைமிகு செயல்கள் நிகழ்ந்து வருவதை நாம் காண்கிறோம்.

எல்லாத் துறைகளிலும் விஞ்ஞானம் நீக்கமற நிறைந்திருப்பதையும் நாம் பார்க்கிறோம். குறிப்பாக மருத்துவத் துறையில் அதன் தேவை மிக மிக இன்றியமையாத ஒன்றாக இருந்து வருகிறது.

அண்மையில் சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் நடந்த ஓர் அறுவைச் சிகிச்சை, அறிவியலின் மூலம் அனைத்தையும் சாதிக்கலாம் என்பதை எடுத்துக்காட்டியது.

இதயம் நின்று விட்டால் என்ன ஆகும்?

ஒன்றும் ஆகாது!

ஆம். ஒருவருக்கு இதயத்தினுள் கட்டி இருந்தது. அதை அப்புறப்படுத்த அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும். அதற்கு இதயத் துடிப்பையே நிறுத்தி வைத்து இந்த அறுவைச் சிகிச்சை நடந்தது.

அரசினர் பொது மருத்துவமனை கண்காணிப்பாளர் டாக்டர் ஏ.எல். அண்ணாமலை, இதயத்தில் கட்டி வந்த மூவருக்கு இந்த அறுவைச் சிகிச்சையைச் செய்து வெற்றி கண்டுள்ளார்.

இதுபற்றி டாக்டர் ஏ.எல். அண்ணாமலை அவர்கள் விளக்கிக் கூறுகிறார்:

இதயத்தில் கட்டி ஏற்பட்டு விட்டால் அதைப் புதிய 'செயற்கை இதய நுரையீரல் கருவி'யின் மூலமாக அறுவைச் சிகிச்சை செய்து அகற்றுவதில் டாக்டர்கள் வெற்றி பெற்று உள்ளனர்.

செயற்கை இதய நுரையீரல் கருவியின் துணை கொண்டு மருத்துவ நிபுணர்கள், இதயத்தில் ஏற்பட்டுள்ள கட்டியை அறுவைச் சிகிச்சை மூலம் குணப்படுத்தி விட்டனர். இந்த முறைக்குத் 'திறப்பு முறை இதய அறுவைச் சிகிச்சை' என்று பெயர்.

இந்த அறுவைச் சிகிச்சையின்போது இதயத்தின் வேலையையும், நுரையீரலின் வேலையையும் 'செயற்கை இதய நுரையீரல் கருவி' மேற்கொண்டுவிடும்!

இதயம் துடிக்காமலும், இரத்தம் இல்லாமலும் காலியாக இருக்கும்போது, இதயத்தில் அறுவைச் சிகிச்சை செய்து கட்டி அப்புறப்படுத்தப்படுகிறது. இந்த நூதனக் கருவி, இங்குள்ள பொறியாளர் உதவியுடன் சென்னையிலேயே தயாரிக்கப்பட்டதாகும். இதன் மூலம் இவ்வாறு புதிய அறுவைச் சிகிச்சை செய்வதில் வெற்றி கண்டுள்ளோம். இந்த கருவிகள் வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்படும் கருவியின் விலையில் கால் பங்கே ஆகிறது.

இந்த மருத்துவ மனையில், காலஞ்சென்ற பேராசிரியர் சதாசிவம் அவர்களால் இந்தப் புதிய அறுவைச் சிகிச்சை முறை தொடங்கப்பட்டது.

ரூபாய் மூன்றரை இலட்சம் செலவில் தற்போது 2 நவீன அறுவைச் சிகிச்சை அறைகள் கட்டப்பட்டுள்ளன. இவை விரைவில் செயல்படத் துவங்கும். இவை செயல்படத் துவங்கிய பிறகு ஒரு வாரத்திற்கு 4 அல்லது 5 செயற்கை முறை இதய அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்படும். இவ்வாறு வாரத்திற்கு 24 அறுவைச் சிகிச்சைகளைச் செய்ய முடியும் என்று எதிர்பார்க்கிறோம்.

நீல நிறக் குழந்தையின் இதயத்தில் அறுவைச்சிகிச்சை, இதயத்தில் இருக்கும் துளைகளை அடைத்தல், பழுதடைந்த இதய வால்வுகளை அகற்றி மாற்று வால்வுகள் பொருத்துதல் போன்ற பல வகையான அறுவைச் சிகிச்சைகளும் இவற்றில் அடங்கும். இது மட்டுமின்றி இதுவரை மூவாயிரத்திற்கும் மேற்பட்ட இதய அறுவைச் சிகிச்சைகள் இங்கு செய்யப்பட்டுள்ளன.

தமிழக அரசின் உதவிகள் மூலம் அன்னியச் செலாவணி தவிர்க்கப்பட்டுள்ளது. அத்துடன் அறுவைச் சிகிச்சையின் தரமும் உயர்ந்து மருத்துவ வட்டாரங்களில் நமது மதிப்பும் பன்மடங்கு உயர்ந்து உள்ளது. வசதி படைத்தவர்கள் மட்டுமே பெற்று வந்த புதிய முறையிலான அறுவைச் சிகிச்சை, இன்று ஏழை எளிய மக்களுக்கும் கிடைக்கக் கூடியதாக உள்ளது என்பதை இங்கே குறிப்பிடவேண்டும்.



டாக்டர் ஏ.எல். அண்ணாமலை.

# சுற்றுலாச் செல்வோம்










கடைக்கண் காட்டி அவள் சிரிக்கின்றாள்
கன்னித் தமிழ்மகள் அழைக்கின்றாள்!
(கடைக்கண்)

வடக்கே குமரனவன் திருத்தணியில்
வண்ணக் குமரியவள் தென்முனையில்
கிழக்கும் மேற்கும்சுற்றி வலம்வந்தால்
கிடைப்பது அமைதியன்றோ வருகஎன்பாள்
(கடைக்கண்)

தமிழகத் தலைவாயில் சென்னைநகர்
தமிழ் அர சாளுகின்ற நம்கலைஞர்
முதல்வரை முதன்முதலில் சந்திப்போம்
முத்தமிழ் வீற்றிருக்கக் கண்டுசெல்வோம்
(கடைக்கண்)

கடற்கரையில் அண்ணன் உறங்குவதை
கண்துளிர்க்கக் கண்டு விடைபெறுவோம்
கண்ணகி சிலைமுதலாய்க் காட்சிபல
கண்குளிரக் கண்டு தொடர்ந்திடுவோம்

கல்லெலாம் கதைசொல்லும் மல்லையிலே
காணலாம் சிவ நடனம் தில்லையிலே
நெல்லெலாம் கவி பாடும் தஞ்சையிலே
நிற்கின்ற இடமெல்லாம் கோயிலிலே

வெவ்வேறு நாடுகளின் பறவையினம்
வேடந் தாங்கலிலே மாநாடு
அவ்வை வாழ்ந்த இடம் தருமபுரி
யானைசூழ் முதுமலையோ அடர்காடு!



சித்தன்ன வாசல்வண்ணம் புதுக்கோட்டை
தீரன் கட்டபொம்மன் சுற்கோட்டை;
திப்பு சுல்தான்கோட்டை; மலைக்கோட்டை;
செந்திலும் பழநியும்நம் மனக்கோட்டை

அருவியின் அழகுபொலி குற்றாலம்
அகமெலாம் குளிரவைக்கும் கொடைக்கானல்
உதகை ஏர்க்காடு ஏலகிரி
ஒகயனக் கல்உருட்டும் காவேரி

இன்சுவை மாம்பழக் கனியுடனே
இரும்புக் கனியும்தரும் எழில் சேலம்
இரும்பையும் கனிவாக்கும் நெய்வேலி
இதயத்தைக் கனிவாக்கும் கொங்குநிலம்

பெரியவர்க் குரிய இடம் காஞ்சிபுரம்
பெண்ணுக்குப் பெருமைதரும் தென்மதுரை
சிலம்பு ஒலித்தநிலம் புகார்நகரம்
சேதுபதி இராம நாதபுரம்.

உண்ணுநீர் உதவும் கல்லணைகள்
உடுப்பது உறையூர்க் கைத்தறிகள்
என்ன இல்லை எங்கள் தமிழ்நாட்டில்
எல்லோரும் வருகஎன்றே வரவேற்போம்!
(கடைக்கன்)





கவிஞர்
உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்

# தொடர் கல்வியின் தேவையும் அதற்கான வாய்ப்புகளும்

—: தி. இரா. நடேசன் :—

கணிப்பி மையப்பொறுப்புப் பேராசிரியர் பொறி இயற்கல்லூரி, கிண்டி. சென்னை.

உடல் வலிமையைக்காட்டிலும் அறிவின் வலிமை ஆற்றல் மிக்கதென்பது அன்றாடம் கண்கூடாகக் காண்பதொன்றாகும். மதர்த்து வரும் வேழம், திமிர்ந்து பாயும் புலி, ஆர்த்து எழும் அரிமா, கரை பிறழ்ந்து ஓடும் காட்டாறு இவை எதன் முன்னும் மனிதனின் உடல் வலிமை துரும்புக்கு ஈடாம். ஆயினும் இவை யாவையும் வென்றடக்கும் ஆற்றல் மனிதனுக்கு உண்டென்றால் அதன் காரணம் அவன் பெற்ற அறிவின் ஆற்றலே! மீனை விட வேகமாக நீரிலும், பறவையை விட விரைவாக வானிலும் இன்று மனிதன் செல்லுகிறான் என்றால் அதன் அடிப்படை, அவன் பெற்றுள்ள அறிவின் திறனே!

அறிவு என்றால் என்ன? அறிவு என்ற சொல் "அறிவது" என்ற அடிப்படையிலிருந்து எழுந்தது. இயற்கை நிகழ்வுகளை உற்று நோக்கி அவற்றின் அடிப்படைத் தத்துவங்களை அறிந்து, அவற்றின் வாயிலாக இயற்கையைப் புரிந்துகொண்டு, புரிந்துகொண்டதன்மையால் இயற்கைநிகழ்வுகளைத் தனது நன்மைக்கும், வளர்ச்சிக்கும் ஆதரவாகப் பயன்படுத்திக் கொள்ளும் ஆற்றலே அறிவாம். அவ்வறிவே மனிதனின் முன்னேற்றத்திற்குக் காரணமாம். இன்றைய மனித நாகரிகம் முழுவதும் அறிவாற்றலின் பயனாய் விளைந்த கருவிகளையும், அமைப்புகளையும் அடிப்படையாகக் கொண்டு எழுந்து வளர்ந்து கொண்டிருக்கும் ஒரு கோபுரமே. இந்தக் கோபுரத்தின் தளம் ஒவ்வொன்றும் அந்தந்த நிலையில் மனிதன் பெற்ற மொத்த அறிவின் எதிரொளியாகும்.

அறிவு வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு மனித நாகரிகம் அமைந்திருப்பதால் மனித வாழ்க்கையே மிகவும் சிக்கல் மிகுந்ததாக ஆகிவிட்டது. பறவைகளும், மற்ற உயிரினங்களும் தங்களது குஞ்சுகளுக்கும், குட்டிகளுக்கும் கற்பிக்கும் காலமும் குறைவு; கற்பிக்கும் கல்வியும் குறைவு. உணவைச் சேகரிக்கவும், பகைவரைக் கண்டு கொள்ளவும், பறக்கவும் அல்லது இவை போன்ற சில அடிப்படைச் செயல்களைக் கற்றுக் கொள்வதுடன் மற்ற உயிரினங்களின் கல்வி நின்று போகிறது. ஆனால் இன்றைய மனிதனோ அவன் வாழ்நாளில் ஏறத்தாழ 25 சதவிகிதத்தை அறிவு திரட்டும் பணியில் செலவிட வேண்டிய நிலையில் உள்ளான்.

மனித அறிவு பல்கிப் பெருகும்போது அவைகளை வகைப்படுத்தி ஒழுங்குபடுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இதன் விளைவாகத்தான் வரலாறு, விஞ்ஞானம், பொருளியல், பொறியியல் என்று பல திறப்பட்ட துறைகளும் தோன்றின; இவற்றை முறையாகக் கற்றுக் கொள்ளப் பள்ளிகளும், கல்லூரிகளும் ஏற்படலாயின.

அறிவு வளர்ச்சியின் பயனாய் வேறொரு சிக்கலும் விளைந்தது. அறிவு வளர வளர மனிதனின் திறனும் வளர்ந்தது. வளர்ந்த அறிவுத்திறனைக் கொண்டு மனிதன் புதிய புதிய கருவிகளைச் செய்தான். இந்தக் கருவிகள் மனிதனின் அன்றாட வாழ்க்கையில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்ததோடு மனிதனின் அறிவு மேலும் வளரவும் வகை செய்தன. அதாவது அறிவு வளர்ச்சியின் பயனாய் மனிதன் படைத்த கருவிகளே மீண்டும் அறிவு வளர்ச்சிக்கு ஏதுவாய் அமைந்தன. இத்தகைய பின்னூட்டின் (Feed Back) விளைவாக அறிவு வளர்ச்சியின் வேகம் என்றும் காணா அளவிற்கு அதிகரிக்கலாயிற்று. மனித இனம் இன்று இந்தச் சூழ்நிலையில்தான் உள்ளது. குறிப்பாக, அறிவியல், பொறியியல், மருத்துவம், விவசாயம் போன்ற துறைகளில் இந்த வளர்ச்சி அளவிடற்கரியது. இதன் விளைவாக, நாள்தோறும் வளரும் இத்துறைகளிலுள்ளே பத்தாண்டுகளுக்கு முன் படித்த படிப்பும், கற்ற முறைகளும் இன்று பயனற்றதாய்ப் பழங்கணக்காய்ப் போய்விடுகின்றன. புதிய புதிய செயல்முறைகளும், உண்மைகளும் வெளியாகிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில், அன்று கற்றவை இன்று காலாவதியாகி விடுவதால் புதிய வழிமுறைகளையும் கண்டு பிடிப்புகளையும் அறிந்து பயன்படுத்தத் தவறினால் நாளை தொழிலிழந்து போக நேரும் என்பது இத்துறைகளில் முற்றும் பொருந்தும்.

மேற்கூறிய காரணங்களால் பொறியியல், மருத்துவம் போன்ற துறைகளில் ஈடுபட்டுப் பணிபுரிவோர் தாம் கல்லூரியில் பெற்ற கல்வியோடு நில்லாமல் அன்றாடம் நிகழும் மாற்றங்களையும், கண்டு பிடிப்புகளையும் பற்றி அறிந்து கொள்ள ஆய்வுக் கட்டுரைகளையும், தொழிற் பத்திரிகைகளையும், புத்தகங்களையும் படித்தாக வேண்டும். ஆனால் நடைமுறையில் இது மிகவும் கடினமானது. நாள் முழுவதும் தொழிலில் ஈடுபட்டிருப்போர் இத்தகைய ஆய்வுக்கட்டுரைகளையும், புத்தகங்களையும் படித்தறியப் போதிய நேரம் இருக்காது. நேரம் இருப்பினும் அறிய வேண்டியவற்றை முறைப்படுத்திக் கற்கும் திறனை எல்லோரும் பெற்றிரார்.

இந்நிலையில்தான் கல்லூரிகளில் குறிப்பாகத் தொழிற் கல்லூரிகளின் பணி தேவைப்படுகிறது. இந்நிறுவனங்கள், இளந்தலைமுறையினர்க்குக் கல்வியளிக்குங்கால் அறிவுத் துறையில் அன்றாடம் ஏற்படும் முன்னேற்றங்களை ஏற்று, அவ்வப்போது பாடத் திட்டங்களை மாற்றியமைத்துத் தேக்கமற்ற கல்வியை அளிக்கக் கடமைப்பட்டுள்ளன. அது மட்டுமின்றி, தொழில்துறையில் ஈடுபட்டிருக்கும் கடந்த கால மாணவர்களுக்கும் இந்நிறுவனங்களே புதிய அறிவைப் புகட்டும் பணியையும் ஏற்க வேண்டும். கடந்த கால மாணவராயினும், நிகழ்கால மாணவராயினும், எதையும் விரைவில் கற்பதற்கு ஏற்ற இடம் கல்விக் கூடமே!

ஏற்கெனவே தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ளோருக்கு அளிக்கப்படும் கல்வியும் முழு நேர மாணவராய்க் கற்கும் இளம் மாணவருக்கு அளிக்கப்படும் கல்வியும் ஒரு தன்மையாக இருக்க முடியாது. முதலாவதாக, தொழில்துறைகளில் இருப்போர் மாணவர்களைப்போல் ஆண்டுக்கணக்கில் முழு நேரக்கல்வி கற்க இயலாது. இவர்கள் கற்கும் கல்வி, பகுதி நேரக் கல்வியாகவும் குறுகிய காலப் பயிற்சியாகவும் இருத்தல் அவசியம். இந்தக் குறுகிய காலத்தில் அவர்கள் கற்க வேண்டிய பாடங்கள் உடனடிப்பயன் தரத்தக்கதாயும், சம்பந்தப்பட்ட தொழில்களில் ஏனைய நாடுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், புதிய முறைகள் ஆகியவற்றை அவர்களுக்கு எடுத்துணர்த்திப் பயன்பெறும் வழிமுறைகளைக் கற்பிப்பதாகவும் இருக்க வேண்டும்.

மேற்சொன்ன உண்மைகளைக் கருத்தில்கொண்டு தனது கடமையை முற்றும் உணர்ந்து, கிண்டிப் பொறியியல் கல்லூரி பலதிறப்பட்ட மாலைநேர வகுப்புகள், குறுகிய காலப் பயிற்சிகள் ஆகியவற்றைத் தொடர்ச்சியாக நடத்திக் கொண்டு வருகிறது. கல்லூரியின் பல திறப்பட்ட துறைகளும் இந்தப் பகுதி நேரக் கல்வியளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. குறிப்பாக, கணிப்பு மையம் (Computer Centre), பொது நலத்துறை (Public Health), பாடத் திட்டத் துறை. (Curriculam Development), கடைக்கால் மண்ணியல் துறை (Soil Machanics) ஆகிய துறைகள் இப்பணியில் பெரும் கவனம் செலுத்துகின்றன. இத்துறைகள் யாவும் சேர்ந்து சென்ற 4 ஆண்டுகளில் அறுபதிற்கு மேற்பட்ட பகுதி நேர (அல்லது குறுகிய காலப்) பயிற்சிகளை அளித்துள்ளன. இப்பயிற்சிகளுக்கு வருவோர் பலதிறத்தினர். அரசு அலுவலகங்களில் வேலை பார்க்கும் இயக்குநர்கள் முதலாக, கல்லூரியை விட்டு அப்போதுதான் வெளிவந்த புத்தம் புதிய மாணவர்கள் ஈறாகப் பலரும் இப்பயிற்சிகளைப் பெறுகின்றனர். கற்க வருவோரும், காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை, பம்பாய் முதல் கல்கத்தா வரை இந்தியத் துணைக் கண்டத்தின் எல்லா மாநிலங்களையும் சேர்ந்தவராவர். இன்றுவரை பலதிறப்பட்ட துறைகளிலும் நடத்தப்பட்ட இத்தகைய பயிற்சிகளின் எண்ணிக்கை பற்றிய விவரங்களைக் கீழே காணலாம்.

| எண். | துறை | பயிற்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கணிப்பி மையம் (Computer Centre) | 35 |
| 2. | மண்ணியல் துறை (Soil Mechanics) | 4 |
| 3. | பொதுநலத்துறை (Public Health) | 16 |
| 4. | நீரியல் துறை (Hydralics) | 3 |
| 5. | பாடத்திட்டத்துறை (Curriculam Development Centre) | 4 |
| 6. | மின்னாற்றல் துறை (Power System) | 1 |

நடத்தப்படும் குறுகிய காலப்பயிற்சிகள் யாவும் தொழில்துறைகளிலும், சமுதாயத்தின் பிற பிரிவுகளிலும் ஏற்படும் தேவைகளைக் கருத்தில்கொண்டே ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இப்பயிற்சிகளின் நோக்கமே, புதிய கருத்துக்களையும், செயல்முறைகளையும் உரியதுறைகளில் ஈடுபட்டிருப்போருக்குக் கொண்டு சேர்ப்பதும், தொடர்ந்து கற்கும் ஊக்கத்தை அளிப்பதுமேயாம்.



## கண்ணொளித் திட்டம்!

"உலகம் முழுவதும் கண் பார்வையற்றவர் தொகை 1 கோடியே 60 இலட்சம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. கண் பார்வையற்றவர்களின் குறைபாட்டை நீக்கத் தவறிவிட்டால் இந்தத் தொகை 3 கோடியாக மாறும் அபாயம் இருக்கிறது"– இவ்வாறு குறிப்பிட்டுள்ளார், அகில உலகக் குருட்டுத் தடுப்பு நிலையத்தின் தலைவரான சர். ஜான்வில்சன்.

அண்மையில் ஜெனிவாவில் நடைபெற்ற உலக நல்வாழ்வுக் கூட்டத்தில் பங்கு பெற்ற பிரதிநிதிகளிடம் சர். ஜான்வில்சன் மேலும் கூறினார்.

"பெரியம்மை நோயை ஒழிப்பதற்கு, முன்பு எடுத்துக்கொண்ட மாபெரும் முயற்சியைப் போலவே, விஞ்ஞான பூர்வமாகவும், அரசியல் வாயிலாகவும் முயற்சி செய்தால்தான் இலட்சக் கணக்கானவர்களின் பார்வையைக் காப்பாற்ற முடியும். மக்களுக்காகக் கிடைத்திருக்கும் அடிப்படை உரிமைகளில் ஒன்று, எதையும் பார்க்கும் உரிமை பெற்றிருப்பது. எவரும், இந்த அரிய உரிமையை வீணாக இழந்துவிடக்கூடாது"

# உலகமெலாம் தமிழ் பரப்பும் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்



உலக அளவில் தமிழை முழு நிலைப்படுத்த வேண்டும்.

உலக மொழிகள் அனைத்திலும் தமிழ் இலக்கியங்களைத் தந்திடுதல் வேண்டும்-என்னும் குறிக்கோள்களுடன் அமைக்கப் பெற்றது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

சென்னையில் 1968-ல் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது பேரறிஞர் அண்ணா அவர்களால் துவக்கப்பட்ட இந்த அமைப்பின் அவசியம் 1970-ல் பாரிசில் நடைபெற்ற மூன்றாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் உறுதிப்படுத்தப்பட்டது.

நமது பண்பாடு, மொழி ஆகியவற்றை உலக நிறுவனங்களுக்கு எடுத்துரைப்பது,

தமிழ் மொழியைப் பற்றிப் பிற நாட்டவர்கள் என்ன கேட்டாலும் அவர்களுக்கு எடுத்துரைப்பதற்கேற்ற வகையில் நூல்களை உருவாக்குவது,

ஆகிய பணிகளை இந்த நிறுவனம் செய்து வருகிறது.

அந்த வகையில் உதவுவதற்குரிய முறையில் இந்த நிறுவனம் நான்கு நூல்களை வெளியிட்டுள்ளது.

அந்நூல்கள்: 1. தமிழில் விடுகதைகள், (2) ஆராய்ச்சி முறைகள், 3. Tamil Research Through Journals, 4. A Course in Modern Standard Tamil.

A Course in Modern Standard Tamil என்னும் நூல் ஆங்கிலம் மட்டுமே அறிந்தவர்களுக்குத் தமிழைப் பயிற்றுவிப்பதற்குரிய வழிவகைகளை எடுத்துச் சொல்கிறது. துவக்கத்தில் பேச்சு நடையும், பின்னர் இலக்கிய நடையும் எடுத்துக் காட்டப்பெற்றுள்ளன. தமிழைக் கற்கும் புதியவர்களுக்கு-வேற்று மொழிக்காரர்களுக்கு மிகுந்த பயனளிக்கும் இந் நூலினை டாக்டர் பொன். கோதண்டராமன் தயாரித்து அளித்திருக்கிருர்.

தமிழ்மொழி குறித்து ஆராய்ச்சி இதழ்கள் பலவற்றில் வெளிவந்த கட்டுரைகள் பொருட்சுருக்கத்துடன் தொகுக்கப்பெற்றுள்ளன, Tamil Research Through Journals என்னும் ஆங்கில நூலில். ஆய்வாளர்களுக்கு மிக மிகப் பயன்தரும் இந்த நூலைத் திரு. அ. அ. மணவாளன தயாரித்துள்ளார்.

தமிழ்மொழியில், வாய்மொழியாகவே பல இலக்கியங்கள் உள்ளன. தாலாட்டு, ஒப்பாரி, விடுகதை ஆகியவை அத்தகைய இலக்கியங்கள் ஆகும். அவற்றை வரிவடிவமாக்குவது சிறந்த தொண்டு.

தமிழில் வழங்கும் 2500 விடுகதைகளைத் தொகுத்துத் 'தமிழில் விடுகதைகள்' என்ற நூலாக்கியுள்ளார், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் முதன்மை அலுவல் ஆட்சியரான டாக்டர் ச. வே. சுப்பிரமணியம்.

ஆராய்ச்சி முறைகள் குறித்துப் பல்வேறு துறை அறிஞர்கள் எழுதிய 9 ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய நூல் 'ஆராய்ச்சி நெறிமுறைகள்' ஆகும்.

இந்த நான்கு நூல்களின் வெளியீட்டு விழா மாண்புமிகு கல்வியமைச்சர் நாவலர் அவர்களின் தலைமையில் 10.6.'75 அன்று நாகர்கோவிலில் நடைபெற்றது.

சென்னையிலுள்ள பத்திரிகை நிருபர்களுக்கு இந்த நூல்களை 25-6-'75 அன்று தமிழாராய்ச்சி நிறுவனத்தின் முதன்மை அலுவல் ஆட்சியர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியம் அறிமுகம் செய்து, அவற்றின் பெருமைகளையும் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆற்றிவரும் தொண்டுகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

இந்த நிறுவனத்தின் எதிர் காலத் திட்டங்களைக் குறித்தும் அவர் வெளியிட்டார். அதில் குறிப்பிடத்தக்கது:

பிற மொழியாளர்களுக்கு அஞ்சல் படிப்பு மூலமாக தமிழைப் பயிற்றுவிக்கும் திட்டத்தை மேற்கொள்ள இருப்பது.

'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றனரின் உரை இந்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வாயிலாகச் செயலாக்கம் பெறுகிறது. 'தேமதுரத் தமிழோசை உலகம் எல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்னும் பாரதியின் கனவு நனவாக்கப்படுகிறது என்ருல், 'அது உண்மை! வெறும் புகழ்ச்சியில்லை!'

—த.பி.

புத்தகங்கள் வெளியிடுவதில், உலகத்தில் எட்டாவது இடத்தை இந்தியா பெற்றிருக்கிறது. இந்தியாவில் புத்தக வெளியீட்டில் தமிழ்நாடு நான்காவது இடத்தைப் பெற்றிருக்கிறது என்று யுனெஸ்கோ அறிக்கை கூறுகிறது.

இந்த ஆண்டின் முதல் 5 மாத காலத்தில் இந்தியாவுக்கு வந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1 இலட்சத்து 83 ஆயிரத்து 61. 1974-ஆம் ஆண்டில் இதே காலத்தில் வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை விட இது 12.2 சதவீதம் கூடுதல் என்பது குறிப்பிடத்தக்கது.



# பட்டுத் தொழில்

பட்டுத் தொழில் ஒரு வேளாண்மைத் தொழிலாகும். தருமபுரி மாவட்டத்தில் ஒசூர் தேன்கனிக்கோட்டை வட்டங்கள், கோயம்புத்தூர் மாவட்டம், கோபி வட்டத்தில் தாளவாடி பிர்க்கா, சேலம், வடஆர்க்காடு மாவட்டங்களின் சிறு பகுதிகள் ஆகிய இடங்களில் உழவர்கள் இத்தொழிலை ஒரு துணைத் தொழிலாகவே செய்து வருகின்றனர். பட்டுப் புழுக்களுக்குத் தேவையான முசுக் கொட்டை மரங்களைப் பயிரிடுதல், பட்டுப்புழு முட்டை உற்பத்தி, பட்டுப்புழு வளர்ப்பு, பட்டுப்புழு கூடு உற்பத்தி, முடிவாக, பட்டுப்புழுக் கூட்டிலின்று கச்சாப் பட்டுப் பிரிதெடுத்தல் போன்றவை இத் தொழிலில் அடங்கும். தற்போது 3,983.72 எக்டேர் நிலத்தில் முசுக்கொட்டை மரங்கள் பயிராகின்றன. 15,000 குடும்பங்கள் இத் தொழிலைச் செய்து வருகின்றன.

கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்பை அளிக்கும் இத் தொழிலை விரிவுப்படுத்தும் நோக்கத்துடன், முசுக்கட்டை மரம் நடுவதற்கான பதியன்களை பட்டுப்புழு வளர்ப்பவர்களுக்கு இலவசமாக வழங்குதல் பெயரளவு விலையில் சிறு புழுக்களை வழங்குதல், பட்டுப் புழுக்களை வளர்த்தல் குறித்து புதிய தொழில் முனைவோர்களுக்கும் மக்களுக்கும் கற்றுக் கொடுப்பதற்காக இம்மாநிலத்தில் 9 செய்முறை விளக்கப் பண்ணைகள் உள்ளன.

பட்டுப்புழு வளர்ப்போர் பெருமளவில் பயனடைவதற்காக அவர்களுக்குச் சிறு பட்டுப் புழுக்களை வழங்குவதற்காக 7 பட்டுப்புழுப் பண்ணைகள் உள்ளன.

தமிழ்நாட்டில் பட்டுப்புழு வளர்ப்போரின் தேவையை நிறைவு செய்யும் வகையில் ஒசூரில் ஒன்றும், தாளவாடியில் மற்ருென்றுமாக இரண்டு பட்டுப்புழு களஞ்சியங்கள் (முட்டை உற்பத்தி நிலையங்கள்) உள்ளன. மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பட்டுக் கூடுகளை வாங்க ஆறு. பட்டுப் புழுச்சந்தைகள் உள்ளன. ஒசூரில் உள்ள அரசு பட்டு நூல் பிரித்தெடுக்கும் பிரிவிலும், தாளவாடியிலுள்ள பட்டுநூல் பிரித்தெடுக்கும் பிரிவிலும் இக்கூடுகளினின்று பட்டுநூல் பிரித்தெடுக்கப்பட்டு பட்டாக மாற்றப்படுகிறது. ஒசூரில் பட்டு முறுக்கேற்றும் பிரிவு ஒன்றுள்ளது. கைத்தறித் துறையில் உடனடி விற்பனை வாய்ப்புள்ள பட்டுப்பாவு நூல்களை இப்பிரிவு தயார் செய்து வருகிறது.



இத்தொழில் வளர்ச்சியடையச் செய்வதற்காகத் தருமபுரி மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு அரசு தரிசு நிலங்களைக் குத்தகைக்கு விடுவதற்கான திட்டம் இவ்வாண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. 10,000 ஏக்கர் பரப்பளவில் வழங்குவதற்காகக் குத்தகைச் சீட்டுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. சுமார் 1,000 ஏக்கர் நிலத்தில் முசுக் கொட்டை மரம் முன்னரே பயிர் செய்யப்படுகிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக்கால இறுதியில் சுமார் 20,000 ஏக்கர் நிலத்தில் முசுக்கொட்டை பயிரிடுவதென்ற இலக்கை எய்தும் பெருந் திட்டமொன்று உள்ளது.

1971, மார்ச்சில் குன்னூரில் ஆராய்ச்சி வளர்ச்சி நிலையமொன்று ஏற்படுத்தப்பட்டது. இந்நிலையம் சுமார் 12 சிறந்த சேர்க்கை இனங்களைக் கண்டுபிடித்துள்ளது. சிறந்த முறையில் பட்டு பிரித்தெடுக்கும் தன்மையுடன் அதிக உயரமில்லாத பகுதிகளில் அறிமுகப்படுத்துவதற்கேற்றவை இவை. தமிழ் நாட்டின் வெவ்வேறு மாவட்டங்களில் களச் சோதனைகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்தொழிலை விரைவில் விரிவுப்படுத்த, முசுக்கட்டைகள் வழங்குதல், கோயம்புத்தூரில் மேலும் ஒரு புழுக்கூடு சந்தையைத் தொடங்குதல், சத்திய மங்கலம், ஒசூர் ஆகிய இடங்களில் ஆராய்ச்சி வளர்ச்சித் துணை நிலையங்கள் ஏற்படுத்துதல், இம்மாநிலத்தின் எஞ்சிய மாவட்டங்களில் முசுக்கொட்டை மர வளர்ப்புப் பண்ணைகளையும் முன்னேடி ஆராய்ச்சி நிலையங்களையும் தொடங்குதல் போன்ற பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் 1974-75-ல் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1975-76-ல், சேலம், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் பட்டுத்தொழில் வளர்ச்சி முமுரத் திட்டமொன்றை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

## முனைப்புத் திட்டம்:

தருமபுரி மாவட்டத்தில் 11,000 ஏக்கரில் பட்டுப்புழு வளர்ப்பதற்கான திட்டம் ஒன்றைச் செயல்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஒன்று இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பாசன வசதிகள் அளித்தல், முசுக்கொட்டைப் பதியங்கள் வழங்குதல், பட்டுப் புழு வளர்ப்பதற்கான சாத னங்களை வழங்குதல், வல்லுநர் உதவியளித்தல் போன்றவற் றைப் பட்டுப்புழு வளர்ப்ப வர்களுக்கு அளிப்பதற்கு இத் திட்டம் வகை செய்கிறது. இது இந்திய அரசின் பரிசீலனையிலுள்ளது.

# தெரிந்து கொள்ளுங்கள்!

**யு**னெஸ்கோ (UNESCO) என்றால் என்ன?

'ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான, பண்பாட்டு நிலையம்' என்று கூறுகிறோம். இது போன்ற பல்வேறு நிலையங்கள் உள்ளன. அங்டாட், யூனிடோ, யூஎன்டிபி- இப்படிப்பல சுருக்கப்பெயர்கள் உள்ளன. அவை என்ன என்பதைத் தெரிந்து கொள்வோமா?

அங்டாட் (UNCTAD)— வர்த்தகம், வளர்ச்சி குறித்த ஐ.நா மாநாடு. இது 1964-ல் ஐ.நா. பொதுச்சபையினால் நிறுவப் பெற்றது. அனைத்து நாட்டு வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்கும், பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கும், குறிப்பாகப், பல்வேறு மட்டங்களிலான பொருளாதார வளர்ச்சி உடைய நாடுகளிடையேயும், வளர்முக நாடுகளிடையேயும், வெவ்வேறு சமூக, பொருளாதார அமைப்புகளை உடைய நாடுகளிடையேயும் வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்காக இது நிறுவப்பெற்றது.

யூனிடோ (UNIDO):— ஐக்கிய நாடுகள் தொழில் வளர்ச்சி நிலையம். 1967-ல் ஐ.நா. பொதுச்சபையினால் ஐ.நா. கட்டமைப்பினுள் ஒரு சுயாட்சி உடைய அமைப்பாக நிறுவப்பெற்றது; வளர்முக நாடுகளின் தொழில் வளர்ச்சிக்கு உதவுவதற்கும், அதை விரைவுபடுத்துவதற்கும் இது ஏற்படுத்தப் பெற்றது.

யூஎன்டிபி :(UNDP):— ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம்; தொழில்நுட்ப உதவியின் விரிவுபடுத்தப் பெற்ற வேலைத் திட்டம், மற்றும் ஐ.நா. சிறப்பு நிதி ஒன்றாக இணைக்கப்பட்டதன் விளைவாய் 1965-ல் உருவாக்கப்பட்ட நிலையம். குறைந்த அளவு தேசிய வருவாய் உள்ள நாடுகளுக்கு அவை தமது சொந்த இயற்கை வளங்களையும் மற்றும் ஆள்- பல வசதிகளையும் முழுமையாகவும், பயனுறுதியாகவும் பயன்படுத்திக் கொள்வதை அடிப்படையாகக் கொண்ட இலாபகரமாக உற்பத்தி செய்கின்ற, மற்றும் இயக்காற்றலுள்ள சமுதாயங்களை உருவாக்குவதற்கு உதவுவது இதன் நோக்கமாகும்.

யூனிடார் (UNITAR):— பயிற்சிக்கும் ஆராய்ச்சிக்குமான ஐக்கிய நாடுகள் கழகம்; 1953-ல் பொதுச் சபையினால் நிறுவப் பெற்றது; முக்கிய குறிக்கோள்களை குறிப்பாக, சமாதானம், பாதுகாப்பைப் பராமரிப்பதிலும், பொருளாதார, சமூக வளர்ச்சியை ஊக்குவிப்பதிலும் நிறைவேற்றுவதிலும் ஐ.நா. சபையின் நடவடிக்கைகளின் பயனுறுதித் தன்மையை உயர்த்துவதற்கும் ஐ.நா. கட்டமைப்புக்குள் ஒரு சுயேச்சையான நிலையமாக இது நிறுவப்பட்டது.

யுனெஸ்கோ (UNESCO):— ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான, பண்பாட்டு நிலையம். 1946-ல் நிறுவப் பெற்ற இந்த அமைப்பு, ஐ.நா. வளர்ச்சித் திட்டத்தைச் செயலாக்குவதில் பங்கெடுத்துக் கொள்கிறது; குறிப்பாக வளர்முக நாடுகளில் தொழில் நுட்ப உயர் நிலைப் பள்ளிகள், ஆராய்ச்சி நிலையங்களை நிறுவுவதுடன் சம்பந்தப்பட்ட 'யூஎன்டிபி' திட்டங்களைச் செயலாக்கும் ஓர் அமைப்பாகும். நாடுகள் தமது இயற்கை வளங்களை நிர்ணயிப்பதிலும், வளரச் செய்வதிலும் இது உதவியளிக்கிறது. தொழில் வளர்ச்சியின், தொழில்நுட்ப முன்னேற்றத்தின் சமூக விளைவுகளை இது ஆராய்கிறது. பொருளியல் குறித்த, குறிப்பாகக் கல்வி, விஞ்ஞானம், பண்பாட்டு குறித்த புள்ளி விவரங்களைத் தொகுத்து வகைப் படுத்தியும் பரப்புகிறது.

இசிஇ: (ECE): ஐரோப்பாவுக்கான ஐ.நா. பொருளாதாரக் குழு; ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சியையும் அவற்றுக்கிடையே பொருளாதாரத் தொடர்புகளையும், பிற வட்டாரங்களிலுள்ள நாடுகளுடன் பொருளாதார ஒத்துழைப்பையும் ஊக்குவிப்பதற்காக 1947-ல் நிறுவப்பெற்றது.

இகாபே: (ECAFE):— ஆசியா மற்றும் தூரக்கிழக்கு நாடுகளுக்கான ஐ.நா. பொருளாதாரக் குழு; ஐ.நா. பொரு முடிவின்படி 1947-ல் நிறுவப் பெற்றது. இந்த நாடுகளிலுள்ள பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்துவதில் உதவுவதற்காகவும், அம்மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும் இந்த அமைப்பு நிறுவப் பெற்றது.

இசிஎல்ஏ (ECLA) :— இலத்தீன் அமெரிக்காவுக்கான ஐ.நா. பொருளாதாரக் குழு; 1948-ல் Ecosoc கினால் நிறுவப்பெற்றது; இலத்தீன் அமெரிக்க நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் அவற்றின் மக்களின் மேலதிக நல்வாழ்விற்கும் உதவுவதே இதனுடைய முக்கிய நோக்கம்.

இசிஏ (ECA): ஆசியாவுக்கான ஐ.நா. பொருளாதாரக் குழு. 1958-ல் Ecosoc கினால் ஏற்படுத்தப்பட்டது. ஆப்பிரிக்க நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்காகவும், அவற்றுக்கு இடையிலேயும், பிற நாடுகளுடன் வர்த்தக, மற்றும் பிற பொருளாதாரத் தொடர்புகளை ஊக்குவிப்பதற்காகவும் இது நிறுவப்பெற்றது.

ஐஏஇஏ (IAEA): — அனைத்து நாட்டு அணுசக்தி நிறுவனம் 1954 டிசம்பர் 4ஆம் தேதி ஐ.நா. பொதுச் சபை முடிவுக்கு ஏற்ப நிறுவப் பெற்றது. அணுசக்தியைச் சமாதான பூர்வமான செயல்களுக்குப் பயன்படுத்துவதில் ஒத்துழைப்பை வளர்ப்பது இந்த நிலையத்தின் நோக்கம். நிபுணர்களையும் சாதனங்களையும், குறிப்பாக வடிமனைகளுடன் கூடிய அணுமின் நிலையங்களின் நிர்மாணத்திற்காக வெளியில் அனுப்புவதன் மூலம் வளர்முக நாடுகளுக்கு இந்த அமைப்பு,தொழில்நுட்ப உதவி வழங்குகிறது.

டபிள்யூஎம்ஓ (WMO):— உலக வானிலையியல் நிலையம், வாழ்வுப் பாதுகாப்புத் துறையில் அனைத்துநாட்டு ஒத்துழைப்பை ஒருங்கிணைப்பதற்காகவும், மருத்துவப் பணிகளை மேம்படுத்துவதில் நாடுகளுக்கு உதவுவதற்கும் 1946-ல் நிறுவப்பெற்ற ஐ.நா.வின் ஒரு தனித் தேர்ச்சி நிறுவனமாகும் இது.

எஃப்ஏஓ (FAO):— ஐ.நா. சபையின் உணவு, விவசாய நிலையம், 1945-ல் துவக்கப்பட்டது. இதனுடைய அமைப்பு விதிகளின்படி, உலகிலுள்ள உணவு, விவசாய நிலைமைகளையும், உலக மார்க்கெட்டில் முக்கிய உணவுப் பொருள்கள், விவசாயப் பண்டங்களின் நிலைமையையும் ஆய்வு செய்வதும், விவசாயத்தில் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவது குறித்து ஆராய்ச்சியை ஏற்பாடு செய்வதும், தொழில் நுட்ப, பிற நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதும், விவசாய ஆராய்ச்சித் திட்டங்களைச் செயலாக்கி உதவுவதும் இதன் பணிகளாகும்.

ஐபிஆர்டி (IBRD) :— புனர் நிர்மாணத்திற்கும் வளர்ச்சிக்குமான அனைத்து நாட்டு வங்கி; ஐ.நா.வின் ஒரு தனி நிலையமாக 1945-ல் நிறுவப்பெற்றது. உலக வங்கி என்று பொதுவாக அறிமுகமாகியுள்ள இந்த நிலையம், பொருளாதாரத் துறையில் பின்தங்கிய நாடுகளுக்கு உதவும்படி பணிக்கப்பட்டுள்ளது.

ஐஎல்ஓ (ILO): அனைத்து நாட்டுத் தொழிலாளர் நிலையம். 1919-ல் துவக்கப்பட்டது. 1946 முதல் இது ஐ.நா. வின் ஒரு தனி முக்கியமான நிலையம் என்ற தகுதியைப் பெற்று வருகிறது. இதில் அரசுகள், முதலாளிகள், தொழிற்சங்கங்கள் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளன. அதிகாரப் பூர்வமாக இந்த நிலையம் வேலை நேரத்தைச் சட்டபூர்வமாக நிர்ணயம் செய்வதன் வாயிலாகவும், திருப்திகரமான வாழ்க்கைத் தரங்களை உத்தரவாதம் செய்யும் சம்பளங்களை ஏற்பாடு செய்வதன் வாயிலாகவும் தொழிலாளர்களின் நிலைமைகளை முன்னேறச் செய்வதற்கு முயல்கிறது.



## மாணவர் பணிக்கொடை

**செ**ன்னைப் பல்கலைக் கழகத்தின் ஆதரவில் தஞ்சையிலுள்ள மன்னர் சரபோசி அரசினர் கல்லூரியின், தேசிய தொண்டர் அணியினர் தஞ்சைக்கு அண்மையில் உள்ள காட்டூர் என்ற சிற்றூரில் 12 நாட்கள் முகாமிட்டு வறட்சி நிவா ரணப் பணியில் ஈடுபட்டனர். இப்பணியில் 60 கல்லூரி மாணவர்களும், 4 ஊர் இளைஞர்களும் முகாம் அமைப்பாளரான திரு. டி. சுவாமிநாதன் அவர்களும் கலந்து கொண்டு பணியாற்றினர்.

இம்முகாமில் மாணவத் தொண்டர்கள் தங்கள் உடலுழைப்பால் சிறு பாசனக் குளம் ஒன்றினைத் தூர் எடுத்துக் கரையினைப் பலப்படுத்தினார்கள். இவர்கள் செய்த வேலையின் மதிப்பு சுமார் ரூ. 3,000 ஆகும்.

வறட்சியின் காரணமாகத் தோன்றும் நோய்களை அகற்றும் பொருட்டு நோய்த் தடுப்பு முறைகளான அம்மை குத்துதல் போன்றவற்றில் ஈடுபட்டதுடன் ஊரில் உள்ள குடிநீர்க் கிணறுகள் சோதனை செய்யப்பெற்று, தக்க அளவு சலவைத்தூள் சேர்க்கப் பட்டது. மேலும், ஊராட்சி ஒன்றிய மருத்துவரின் உதவியுடன் இவ்வூர்ப் பள்ளிச் சிறுர்கள் மருத்துவச் சோதனை செய்யப் பெற்றனர். மருத்துவர் எழுதிக் கொடுத்த நோய்க்குறி, அதற்கான மருந்துகள் ஆகியவை சிறுரின் பெற்றோரிடம் தனிப்பட்ட முறையில் சேர்க்கப்பட்டன.

மேற்கூறிய பணிகளோடு ஊர் மக்களிடம் சேமிப்பு எண்ணத்தை உருவாக்கும் பொருட்டுச் சேமிப்புக் கணக்கும், தொடர் கணக்குகளும் துவக்கப்பட்டன. மாணவர்களின் முயற்சியால் இச்சிற்றூரில் வீடுகள் தோறும் கணக்குகள் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மாணவர்களின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டி ஊர் மக்கள் இசைத்தட்டுக் கருவி ஒன்றினைத் தொண்டர் அணிக்குப் பரிசாக அளித்து மகிழ்ந்தனர்.

# முன்னணியில் இருக்கும் தமிழ்நாடு

15 வெவ்வேறு அளவைகளைக் கொண்டு ஒவ்வொரு மாநிலமும் அடைந்துள்ள வளர்ச்சியைக் கணித்ததில் தமிழகம் முன்னணியில் இருப்பதாகக் கணக்கிடப் பட்டுள்ளது.

பெங்களூரில் கர்நாடக அரசின் புள்ளியியல் பிரிவில் பணியாற்றும் துணை நெறியாளர் ஒருவர் தம் சொந்தப் பொறுப்பில் இந்தக் கணிப்பை நடத்தியிருக்கிறார். வளர்ச்சிக்குரிய பொருளாதார அறிகுறிகளை ஆராய்ந்து அவை பற்றிய புள்ளி விவரங்களையே அவர் திரட்டியிடுக்கிறார்.

ஒரு மாநிலத்தில் மொத்த மக்கட் தொகையின் வருவாய் நிலையோடு ஒப்பிடும்போது அம்மாநிலத்தில் உழைக்கும் மக்களது சராசரி வருவாய், நிலைய நகர்ப்புற மக்களது சராசரி வருவாய் நிலை, மக்கள் தொகைக்கு ஏற்ப சராசரி தொழிற்சாலை உற்பத்தியின் அளவு,

மொத்த உணவு உற்பத்தியில் ஒரு குடிமகன் சராசரி நுகர்வதன் அளவு—பாசன வசதி பெற்ற நிலத்தின் அளவு—பயிர் நிலத்தின் அளவு—மின்சாரம் பயன் படுத்தப்படுவதன் அளவு—பத்தாயிரம் பேருக்கு இத்தனை மோட்டார் வாகனங்கள் என்ற அளவு—ஒவ்வொரு 100 கிலோ மீட்டருக்கும் கப்பி போட்ட சாலையின் நீளம்—ஒவ்வொரு பத்தாயிரம் பேருக்கு இத்தனை மோட்டார் வாகனங்கள் என்ற அளவு—ஒவ்வொரு 100 கிலோ மீட்டருக்கும் கப்பி போட்ட சாலையின் நீளம்,—ஒவ்வொரு பத்தாயிரம் பேருக்கும் கிடைக்கின்ற மருத்துவ வசதி—ஒவ்வொரு ஆயிரம் பேரிலும் பத்திரிகை படிப்போரின் எண்ணிக்கை—என்று இப்படி 15 வெவ்வேறு அளவைகளைக் கொண்டு, பொருளாதார அறிகுறிகளைக் கொண்டு வளர்ச்சியைக் கணித்திருக்கிறார்.

இந்த ஆய்விலிருந்து தமிழ்நாடு பொருளாதார வளர்ச்சியில் முதல் நிலையில் இருப்பதாக அவர் கூறியிருக்கிறார். தமிழகத்துக்கு அடுத்த நிலையில் மராட்டிய மாநிலமும் 3-வது இடத்தில் பஞ்சாபும், நான்காவது இடத்தில் கேரளமும், அதையடுத்து, மேற்கு வங்கம், குஜராத், கர்நாடகம், உத்தரப்பிரதேசம், பீகார், மத்தியப்பிரதேசம், ஆந்திரம், அரியானா, ஜம்மு—காஷ்மீர், ராஜஸ்தான், ஒரிசா, அசாம், இமசாலப் பிரதேசம் ஆகியவை உள்ளன என்றும் கூறியிருக்கிறார்.

ஒவ்வொரு மாநிலத்திலும் சில பகுதிகள் மிகவும் பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்றன. ''நாடு முழுவதும் ஒப்பு நோக்கும்போது இந்தக் கணிப்புக்கு ஒரு மாநிலத்தின் பொது நிலைமையையே கருத்தில் கொண்டு இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது'' என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

''மதுரை மாவட்டத்தில் 'பி' பிரிவு நகரமாக இருந்த 'பழனி' மே திங்கள் முதல் 'சி' பிரிவு நகரம் ஆகிறது'' என மைய அரசு அறிவித்துள்ளது.

* * *

கோயம்புத்தூர் நகராட்சியை மாநகராட்சியாக்கத் தமிழக அரசு முடிவெடுத்துள்ளது. நகராட்சித் தேர்தல் வரும்வரை, நிருவாகத்தைக் கவனிக்கத் தனி அதிகாரி நியமிக்கப் பெற்றுள்ளார்.

* * *

அலுவலகப் பணியின் பொருட்டு, சுற்றுப் பயணங்களுக்கும் வெளியூர் முகாம்களுக்கும் செல்லும் மாநில அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்பட்டுவரும் நாட்படியை ஜூலை முதல் நாளிலிருந்து தமிழக அரசு உயர்த்தியுள்ளது. அதன்படி, ரூ. 3, 4.50, 6, 8, 10, 12.50 என்று அரசு ஊழியர்களுக்கு இருந்து வந்த நாட்படிகள் முறையே 4.50, 6, 8, 10, 12.50, 15 என்று உயர்த்தப் பெற்றுள்ளன.

* * *

பள்ளியிறுதித் தேர்வில் 497 மதிப்பெண்கள் பெற்று, சென்னை மாநகராட்சிப்பள்ளிகளில் முதல் மாணவியாகத் தேர்ச்சி பெற்ற வள்ளி என்னும் மாணவியின் மேற்படிப்புக்கான வசதிகளை மாநகராட்சி செய்து தரும் என்று மாநகராட்சி ஆணையாளர் அறிவித்திருக்கிறார்.

* * *

உலகச் சந்தையில் நடைபெறும் மொத்தத் தோல் வணிகத்தில் 20 சதவீதம் இந்தியாவைச் சேர்ந்ததாகும். இந்தியாவின் அந்நியச் செலாவணியில் இரண்டாவது தொழிலாக விளங்கும் 'தோல் ஏற்றுமதி' ஆண்டொன்றுக்கு 200 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை நமக்குத் தேடித்தருகிறது.



மாண்புமிகு அமைச்சர்

# என்.வி.நடராசன் அவர்களின் இறுதிப் பயணம்

மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் கடந்த 2-8-'75 அன்று இரவு 2.45 மணிக்கு இயற்கை எய்தினார்கள். 3-8-'75 அன்று மாலை 5 மணியளவில், காவல்துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊர்தியில், அன்னாரின் உடல் இடுகாடு கொண்டு செல்லப்பட்டு, எரியூட்டப் பெற்றது.

அன்னாரின் மறைவை முன்னிட்டு, 4-8-'75 அன்று விடுமுறை நாள் எனத் தமிழக அரசு அறிவித்தது.

ஏராளமான பொதுமக்களும், அரசியல் தலைவர்களும், கலையுலகப் பெருமக்களும், மறைந்த அமைச்சருக்கு மலர் மாலைகள் சூட்டினர்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. பிரம்மானந்த ரெட்டியார் மலர் வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.

மறைந்த அமைச்சருக்குச் சூட்டப்பெற்ற புகழ்ச்சி மாலைகள் இங்கே தொகுத்துத் தரப் பெற்றுள்ளன.

## மேதகு ஆளுநர் கே. கே. ஷா.

புறக்கணிக்கப்பட்ட மக்களிடத்தில்—அவர்களைக் கைதூக்கிவிடவேண்டுமென்பதில் ஆழ்ந்த கவலை கொண்டு இயங்கியவர் பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் என். வி. நடராசன். புறக்கணிக்கப்பட்ட — ஒடுக்கப்பட்ட மக்களுக்குத் தொண்டு செய்யக் கிடைத்த வாய்ப்பு எதனையும் அவர் தவறவிட்டது கிடையாது. இயல்பில் பெருந்தன்மையானவர். சாதாரண மக்களோடு உணர்ச்சி கலந்த ஒன்றிப்பும் உடையவர். இந்நாட்டிலும் தமிழகத்திலும், புறக்கணிக்கப்பட்ட மக்களின் நெஞ்சங்களில் நீங்கா இடம் பெற்றுவிட்டார்.



மத்திய அமைச்சர் பிரம்மானந்த ரெட்டியார், இறுதி மரியாதை செலுத்துதல்.......



மேதகு ஆளுநர் அவர்கள் இறுதி மரியாதை செலுத்துதல்



முதல்வர் கலைஞர் அவர்கள், இறுதி மரியாதை செலுத்துதல்

## முதல்வர் கலைஞர்

கொள்கைப் பற்று-விடா முயற்சி—அயராத உழைப்பு—இனிமை—அடக்கம்—எளிமை—இவை அனைத்துக்கும் ஒரு மொத்த வடிவம்தான் மறைந்த தலைவர் என்.வி.என். அவர்கள்.

அவரது பல்லாண்டுக்காலப் பொதுவாழ்வு, இந்த நாட்டில் சுதந்தரப் போராட்டத்திற்காகவும்—மொழிகாக்கும் பணிக்காகவும்—சமுதாயச் சீர்திருத்தத் தொண்டுக்காகவும், பகுத்தறிவுப் பிரச்சாரம் புரிவதற்காகவும், பதவிப் பொறுப்பின் வாயிலாக ஏழைகளுக்கு உழைப்பதற்காகவும் செலவிடப்பட்டிருக்கிறது.

## கல்வியமைச்சர் நாவலர்

ஏழை, எளிய குடும்பத்திலே தோன்றிய தோழர் என்.வி.என். அவர்கள் நாட்டுப் பற்றோடும், மொழிப் பற்றோடும் பொதுத் தொண்டுக்குத் தம்மை ஒப்படைத்து, இறுதிவரையில் பெயரோடும் புகழோடும் வாழ்ந்து மறைந்து விட்டார். அவர் கொள்கை உறுதியோடு, அடக்கமே உருவாகக் கொண்டு அமைதியோடு அரும்பணியாற்றி வெற்றி கண்டார்.

## நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்

தமிழ்நாட்டின் வரலாற்றில் தந்தை பெரியார் அவர்களின் பகுத்தறிவுப் பணியுடனும்—அறிஞர் அண்ணாவின் அரசியல் தொண்டுடனும் பின்னிப் பிணைந்த பெருமை பெற்றவர் அருமை நண்பர் என்.வி.என்.

தேசிய இயக்கத்தில்—நாட்டு விடுதலை இலட்சியத்துக்காகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு இளமைக் காலத்திலேயே தாய் மொழிப் பற்றுக்கொண்டு, இந்தி மொழி ஆதிக்கத்தை எதிர்த்துப் போராட்டத்தில் குதித்த தியாகி அவர். அவரது இழப்பு, அவரது குடும்பத்திற்கு மட்டுமின்றித் தமிழ்நாட்டுக்கும் அமைச்சரவைக்கும் பேரிழப்பாகும்.



தந்தை பெரியார் அவர்களுடன்.........



எல்லைப்புற காந்தி கான் அப்துல் கபார் கான் அவர்களுடன்........




*மாண்புமிகு மேலவைத் தலைவர்*

## சி. பி. சிற்றரசு

கோட்டை வாயிலில் நுழைந்து கொண்டிருந்த என். வி. என் அவர்கள் 63-வது வயதில் திரும்பிவர முடியாத மரணவாயிலில் நுழைந்து விட்டார்.

"நாமே அறியாத ஒன்று, நமக்குத் தெரியாத ஒன்று, நம் கைநழுவிப் போகிறபோது நாம் அதிகமாகக் கவலைப்படுவதில்லை. ஆனால் நமக்கு விருப்பாகிப்போன ஒன்று, நாம் இழக்கக்கூடாத ஒன்று, நம்மோடு ஒன்றிய ஒன்று, நம்மை விட்டுப் பிரியும்போது அதிகத் துக்கப்படுகிறோம்" என்று கிரேக்க நாட்டு மன்னன் பெரிக்ளஸ் சொன்னபடி, தாங்கொணாத கவலைப்படுகிறோம்.

*மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர்*

## புலவர் கோவிந்தன்

நாட்டுப் பற்றைக் காட்டிலும் வலுவுடையது மொழிப்பற்று என்பதற்கு எடுத்துக் காட்டாக இருந்தவர் என் வி.என். அவரது பிரிவு தமிழகத்திற்கு ஈடு செய்ய இயலாப் பேரிழப்பாகும். சட்டமன்றத்தின் விதிகளுக்கு அடங்கிப் பணிபுரிந்தது, அவரது அடக்கத்திற்கும் சட்டதிட்டங்களை மதிக்கும் பெருந்தன்மைக்கும் எடுத்துக்காட்டு! வாழ்க அவர் புகழ்.



*மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர்*

## சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம்

பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு என். வி. என். அவர்களுடைய மறைவு தமிழ் இனத்திற்கு—குறிப்பாக, பிற்பட்ட சமூகங்களுக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். உத்தமமான ஒரு தமிழரை—தமிழ்மொழியின் காவலரை நாடு இழந்துவிட்டது. எனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முன்னாள் முதல்வர்*

## பக்தவத்சலம்

பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்களின் மறைவு தமிழகத்துக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். ஆரம்ப காலத்திலிருந்தே தொழிலாளர்கள் நலனில் அக்கறையும் ஈடுபாடும் கொண்டிருந்தவர் நடராசன் அவர்கள். பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆவதற்கு முன்பு தொழிலாளர் நலத்துறை அமைச்சராகப் பணியாற்றித் தொழிலாளர் நலனில் மிக அக்கறை காட்டி வந்தவர். எந்தக் கட்சியில் அவர் இருந்த போதும் கட்சியினிடத்தில் உண்மையாக இருந்தவர். எல்லோருடனும் நன்றாகப் பழகியவர்.



# விழுப்புரம் கோட்டத்தில் வீரிய ஒட்டுச் சோளம்

கடந்த 74-75-ஆம் ஆண்டு சம்பா பட்டத்தில்வடகிழக்குப் பருவ மழை போதிய அளவில் பெய்யாத காரணத்தால் எங்கும் வறட்சிநிலை காணப்பட்டது. இதன் காரணமாக ஏரிப் பாசனத்தில் மூலம் சாகுபடி செய்யப்படும் நெல் பயிர் பாதிக்கப்பட்டது மட்டுமல்லாமல், கிணறுகளில் போதிய நீர் இல்லாத காரணத்தால் நவரைப் பட்டத்தில் சாகுபடி செய்யும் நெல் பயிருக்குப் பதிலாக வேறு பயிர்கள் பயிரிடும் சூழ்நிலை ஏற்பட்டது. விழுப்புரம் வேளாண்மைக் கோட்டத்தில் வழக்கமாக நவரைப் பட்டத்தில் குழாய்க் கிணறுகள் மூலமாகவும், கிணறுகள் மூலமாகவும் நீர்ப்பாசனம் செய்யப்பட்டு வந்தது.

கிணறுகளில் உள்ள குறைந்த அளவுத் தண்ணீரைக்கொண்டு அதிக அளவுப் பரப்பிலே சாகுபடி செய்ய வேளாண்மைத் துறையினரால் திட்டமிடப்பட்டது. சாதாரணமாக ஒரு ஏக்கர் நெல் சாகுபடி செய்யக் கூடிய தண்ணீரின் அளவைக் கொண்டு இரண்டு அல்லது மூன்று ஏக்கரில் சிறு தானியப் பயிர் சாகுபடி செய்யக் கூடும் ஆதலால், சிறு தானியங்களைப் பயிரிடுமாறு உழவர் பெருமக்களுக்கு ஆலோசனை கூறப்பட்டது.

ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள எல்லா உழவர்களையும் சந்தித்து அவர்களுக்கு உள்ள நீர்ப்பாசன வசதி, மண்ணின் தரம் முதலியவைகளை ஆராய்ந்து தக்க பயிரைப் பரிந்துரை செய்ய ஒவ்வொரு பகுதிக்கும் துணை வேளாண்மை அலுவலர்கள் நியமிக்கப்பட்டுடனர். அவ்வலுவலர்கள் உழவர்களுக்கு ஆலோசனை கூறி, பண்ணைத் திட்டங்களும் தயார் செய்தனர். இந்தப் பண்ணைத் திட்டங்களின்படி உழவர்களுக்குத் தேவையான விதை, உரம், பூச்சி மருந்து வழங்கப்பட்டதுடன், மற்றும் கூட்டுறவுத் துறை மூலம் கடன் வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டன.

விழுப்புரம் கோட்டத்தைச் சார்ந்த கண்டமங்கலம் வட்டத்தில், கோடை சாகுபடித் திட்டத்தில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது! வழக்கமாக 100 ஏக்கருக்கும் குறைந்த பரப்பில் சாகுபடி செய்யப்பட்டு வந்த வீரிய ஒட்டுச் சோளம், கடந்த கோடைப் பருவத்தில் சுமார் 2,000 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டது. இந்த வட்டாரத்தில் சாதாரணமாக நவரைப் பட்டத்தில் குழாய்க் கிணறுகளைக்கொண்டு நெல், பருத்தி, ராகி போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்படும். கடந்த கோடையில் நீர் வசதிக் குறைவு காரணமாக நெல் பரப்பைக் குறைக்க வேண்டி வந்தது. பருத்தியின் வயது ஆறு மாதங்கள் ஆவதால் அதற்குப் பதிலாக குறுகிய கால வீரிய ஒட்டுச் சோளம் தேர்ந்தெடுக்கப்பட்டது. மேலும் வீரிய ஒட்டுச் சோளம் அதிக இலாபம் பெற முடியும். மேற்கூறிய காரணங்களால் இந்த வட்டாரத்தில் உள்ள உழவர்களுக்கு வீரிய ஒட்டுச் சோளம் பயிரிடுமாறு ஆலோசனை கூறப்பட்டது.

வீரிய ஒட்டுச் சோள ரகங்களான 'சி.எஸ்.எச். 1' -சி.எஸ். எச். 5' என்ற இரண்டு ரகங்களும் பயிரிடப்பட்டன. ஜனவரி, பிப்ரவரி, மாதத்தில் விதைக்கப்பட்ட பயிர்களில் அறுவடைக்குப் பின் மறுதாம்பும் விடப்பட்டது. ஏக்கர் ஒன்றுக்கு 36 : 18 : 18 என்ற உர அளவு பரிந்துரைக்கப்பட்டது. அடியுரமிடுவதற்குத் தேவையான காம்ப்ளக்ஸ் உரம், கூட்டுறவுத்துறை மூலமாகவும், தனியார் துறை மூலமாகவும் விநியோகிக்கப்பட்டது. மேலுரமிடுவதற்குத் தேவையான கால்சியம் அம்மோனியம் நைட்ரேட், கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் விநியோகிக்கப்பட்டது.

விழுப்புரம் வேளாண்மைக் கோட்டப் பகுதியில் வீரிய ஒட்டுச் சோள ரகங்கள் மூலம் ஏக்கர் ஒன்றுக்குச் சுமாராக 1.5 டன் மகசூல் கிடைத்துள்ளது. ஏக்கர் ஒன்றுக்குச் சாகுபடிச் செலவு ரூபாய் 300 முதல் 1,000 வரை ஆகியுள்ளது. நிகர இலாபம் ரூபாய் 1,000 முதல் ரூபாய் 1,500 வரை கிடைத்துள்ளது. வீரிய ஒட்டுச் சோளத்திற்குப் பதிலாக நெல் சாகுபடி செய்யப்பட்டிருக்குமானால், இதில் பாதிப் பரப்பு அளவே சாகுபடி செய்யப்பட்டிருக்குமாதலால், ஏக்கருக்கு ரூபாய் 700க்கு மேல் நிகர இலாபம் கிடைத்திருக்க வாய்ப்பு இல்லை.

வீரிய ஒட்டுச் சோள ரகங்கள் கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் சொரப்பூர், வீராணம், சொர்ணாவூர், ராம்பாக்கம், சிறுவந்தாடு, மண்டகப்பட்டு, நவமால்மருதூர், கலிஞ்சிக்குப்பம், புராண சிங்குபாளையம் ஆகிய கிராமங்களில் அதிகப் பரப்பளவில் பயிர் செய்யப்பட்டன. அக் கிராமங்களில் எல்லாம் வீரிய ஒட்டுச் சோள ரகங்கள் நல்ல மகசூல் அளித்துள்ளதால் உழவர்கள் பெரும் நன்மை அடைந்துள்ளனர்.

விழுப்புரம் வேளாண்மைக் கோட்டத்தில் சிறு தானியச் சாகுபடியில் ஏற்பட்டுள்ள ஒரு நல்ல மாறுதலை இந்தப் பகுதியில் உள்ள மற்ற கிராமங்களுக்கு மட்டும் அல்லாமல் மற்ற வட்டாரங்களிலும் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இறவையில் வீரிய ஒட்டுச் சோளம் நல்ல முறையிலே வளர்ந்ததைக் கண்ணுற்ற உழவர் பெருமக்களில் பலர் இதை மானாவாரிப் பருவத்திலும் சாகுபடி செய்ய முன்வந்துள்ளனர். மானாவாரிச் சாகுபடிக்கு ஏற்ற 'சி.எஸ்.எச். 5', கோவில்பட்டி நெட்டை' 'ஐ.எஸ். 3541' போன்ற சோள ரக விதைகள் எல்லா வேளாண்மைக் கிடங்குகளிலும் விற்பனை செய்யப்படுகின்றன.

உழவர் பெருங்குடி மக்கள் யாவரும் மேற்கூறிய உயர்ரகச் சோள வித்துக்களைப் பயிரிட்டு அதிகப் பலனை அடையக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



# வாழையில் குருத்து முடிச்சு நோய்

முக்கனிகளுள் ஒன்றான வாழையின் சிறப்பைப் பற்றி அறியாதவர் இலர். ஏழை, எளிய மக்களுக்கு மிக மலிவாகக் கிடைக்கக் கூடிய கனி வாழை ஒன்றே'.

"...பைந்தொடி" நின்று பயனுதவி நில்லா அரம்பையின் கீழ்க் கன்றும் உதவும் கனி" என்ற நன்னெறியின் கூற்றின்படி வாழையின் ஒவ்வொரு பாகமும் பயனுடையது அன்றோ! ஆனால் இந்த வாழையில் தான் எத்தனை நோய்கள்? தமிழ் நாட்டில் வாழையில் சமீப காலமாக "குருத்து முடிச்சு நோய்" (Bunchy Top) மிக அதிகமாகக் காணப்படுகிறது. இந்நோய் மிகுந்த சேதத்தை விளைவிக்கிறது. ஒரு வகை 'வைரஸ்' கிருமியின் மூலம் இந்நோய் உண்டாகின்றது. இந்நோய் முதன் முதலில் இலங்கையிலிருந்து இந்தியாவிற்குப் பரவியதாகக் கருதப்படுகின்றது. 1950-ஆம் ஆண்டு கேரள மாநிலத்தில் சுமார் 3,000 சதுர மைல் பரப்பில் இந்நோய் காணப்பட்டது. தமிழ்நாட்டில் தற்பொழுது மலைவாழை, சமவெளி வாழை ஆகிய இரு வகை வாழைகளிலும் அதிக அளவில் காணப்படுகிறது.

## நோயின் அறிகுறிகள் :

நோயின் அறிகுறிகள் முதலில் இலைகளில் காணப்படும். நோய் தாக்குதல் இரு நிலைகளில் காணப்படும். அவை முதல் நிலைத் தாக்குதல் (Primary infection), இரண்டாம் நிலைத் தாக்குதல் (Secondry infection) எனப்படும்.

## முதல் நிலைத் தாக்குதல் :

நோயுற்ற வாழையில் வரும் கன்றுகளை நட்டால் இந்நோய் காணப்படும். இதனை முதல் இலை வரும் பொழுதே அறியலாம். இலைகளின் அடிப்பாகத்தில் கரும் பச்சை நிறமான ரேகைகள் (Streaks) இலை நரம்புகளை ஒட்டிக் காணப்படும். சூரிய ஒளியின் முன்பு பிடித்துப் பார்த்தால் இந்த ரேகைகள் நன்கு தெரியும். நோயுற்ற இலைகள் வெளுத்தும், சிறுத்தும், இலையின் அகலம் மிகக் குறைந்தும் காணப்படும். சில சமயங்களில் நடுநரம்பிற்கு வலப் பக்கமுள்ள இலைப்பரப்பு பாதி சுருண்டு காணப்படும். இலைகள் முதிர்ச்சி அடையும் முன்பே விறைப்பாகும். இலைக் காம்புகள் மிகவும் குட்டையாக இருக்கும். இவ்வித இலைகள் புதிதாகத் தோன்றத்தோன்ற இவை ஒரே முடியில் நேராக, முடிக் கொத்துபோல் நிமிர்ந்து நிற்கும். இதன் காரணமாகவே இது 'குருத்து முடிச்சு நோய்' என்று வழங்கப்படுகிறது.

வாழை மரம் வளர்ச்சி மிகக் குறைந்தது, 2 அடி முதல் 3 அடி உயரமே இருக்கும். அதற்கு மேல் வளராது. இத்தகைய மரங்கள் குலை தள்ளாது. அப்படிக் குலை தள்ளினாலும் குலைகள் சிறுத்தும், தரத்தில் குறைந்ததாகவும் காணப்படும். இவை ஓர் ஆண்டிற்கு முன்பே இறந்துவிடும்.

## இரண்டாம் நிலைத் தாக்குதல் :

நோயுற்ற வாழையிலிருந்து அசுவணி என்னும் பூச்சிகள் மூலம், நோயில்லாத வாழைக்கு 'வைரஸ்' நோய்கள் பரவும். இவ்வாறு தாக்கப்பட்ட வாழை இளம் வயதில் பாதிக்கப்படாமல் முதல் நிலைத் தாக்குதலில் காணப்பட்ட எல்லா அறிகுறிகளுடனும் காணப்படும். சிறிது வயதான வாழையில் தாக்கினால் கடைசி இலைகளில் தான் நோயின் அறிகுறி தெரியும். ஆனால் மரம் குலை தள்ளும். ஆனால் குலைகளில் பருமன், எடை ஆகியவை நோய் தாக்காத மரத்தைவிடக் குறைவாக இருக்கும்.

இரண்டு நிலைகளிலும் தாக்கப்பட்ட வாழையின் கிழங்குகள் சிறுத்தும், வதங்கியும், காணப்படும். நோயுற்ற மரத்தின் தண்டுப் பாகம், கிழங்குடன் சேருமிடத்தில் சிறுத்தும் குறுகியும் காணப்படும். வேர்ப் பகுதி அழுகிவிடும். சில வேர்களில் குங்குும நிறப் பகுதிகள் காணப்படும். நோயுற்ற கிழங்கில் எண்ணற்ற குழிகள் அல்லது ஓட்டைகள் இருக்கும். முக்கிய வேர்களில் நுனியில் இருந்து கிழங்கை நோக்கி அழுகிக் கொண்டிருக்கும் பொழுதே கிழங்கில் வேர்கள் உண்டாகும். இவை நாளடைவில் குங்கும நிறமாக மாறி அழுகிவிடும்.

## நோய் பரவும் முறை :

இந்நோய் ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்திற்கு 'பென்ட்லோனியா நைக்ரோ நர்வோசா' (Pentalonia nigronervosa) என்ற அசுவணி மூலம் பரவுகிறது. குளிர் காலங்களில் (ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சு மாதங்களில்) இந்நோய் அதிகமாகக் காணப்படும். அசுவணியில் வாழை மரத்தில் வைரஸ் செலுத்தப்பட்டுச் சுமார் 1 அல்லது 2 மாதங்களுக்குள் நோயின் அறிகுறிகள் தென்படும். இப்பூச்சிகள் வாழை மரத்தின் நிலமட்டத்தில்அடிப் பாகத்திலுள்ள மண்பரப்பில் சில அங்குல ஆழத்தில் காணப்படும். வாழையின் குருத்திலும், நடு இலைப் பகுதியைச் சுற்றியுள்ள இலைக் காம்புகளிலும், காணப்படும். அசுவணிப் பூச்சி 1.5 முதல் 2 மணிவரை நோய் தாக்கப்பட்ட மரத்தின் சாற்றை உறிஞ்சினால் இந்நோயைப் பரப்ப இயலும். இவ்வாறு உறிஞ்சிய பின் இப்பூச்சி 13 நாட்கள் வரை நோயினைப் பரப்ப வல்லது. மிக அதிக அளவில் இந்நோய் பரவ முக்கிய காரணம், நோய் தாக்கப்பட்ட வாழைக் கன்றுகளை நடுவதேயாகும்.

## தடுப்பு முறைகள் :

நோய் வந்த பின் காப்பதை விட வரும்முன் காப்பதே சாலச் சிறந்தது. இந்த நோயைக் கட்டுப்படுத்தப் பின் வரும் முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

(1) நோய் தாக்கப்பட்ட மரத்திலிருந்து வரும் எல்லாக் கன்றுகளும் நோயை உண்டாக்கும். ஆகவே நோய்தாக்காத வாழையிலிருந்து வரும், கன்றுகளைத் தேர்ந்தெடுக்க வேண்

டும். நோய் பரவிய பகுதி என்று அறிந்த இடத்திலிருந்து கன்றுகளை வாங்கக் கூடாது.

(2) குருத்து முடிச்சு நோய் கண்டுள்ளது என்று தெரிந்தவுடன் அவ்வப்போது நோய் கண்ட மரங்களை வேருடன் எடுத்து அழித்து விடல் வேண்டும். நோய் தாக்கப்பட்ட மரத்திலும், அதனைச் சுற்றியுள்ள மற்ற வாழைகளிலும் சிறந்த அசுவணி கொல்லி மருந்தை (எண்டிரின் 0.25) அல்லது 'மெட்டாசிஸ்டாக்ஸ் 0.1 முதல் 0.5 சதம்) ஊற்ற வேண்டும்.

(3) நோயுற்ற மரச் சக்கைகளை மண்ணெண்ணெய் ஊற்றிக் கொளுத்தியோ குழியில் புதைத்தோ அழித்து விட வேண்டும். களைக் கொல்லியான '2—4டி', (2—4 டைக்குளோரோ பினுக்சி அசிட்டிக் ஆசிட்) என்ற மருந்தை, வெட்டிய மரத்தின் கீழ்ப் பகுதியில் ஊற்றினால் அல்லது தெளித்தால் தாக்கப்பட்ட வாழை மரம் விரைவாகச் சாக வழியுண்டு. பாதிக்கப்பட்ட மரத்தின் எந்தப் பகுதியையும் விட்டு வைக்கக் கூடாது.

அட்டையில்:
பொன்னணி ஆற்று அணை

அடுத்த இதழில்
சென்னை டெலிவிஷன் நிலையம்
சிறப்புக் கட்டுரை
இடம் பெறும்!

(4) அசுவணி மூலம் நோய பரவுவதைத் தடுக்க மாதம் ஒன்று அல்லது இரண்டு முறை அசுவணி பறக்கும் பருவம் அடையும் போது முன் கூட்டியே பூச்சிக் கொல்லி மருந்தைத் தெளித்தல் அவசியம். இதன் மூலம் அசுவணிகளைக் கட்டுப்படுத்தலாம்.

வாழையின் எல்லா ரகங்களிலும் இந்நோய்தாக்கும் தன்மை பெற்றுள்ளது. மேலும் நோய் வந்த பின் அதைக் கட்டுப்படுத்த இயலாது. ஆகவே மேற்கூறப்பட்ட தடுப்பு முறைகளைக் கையாண்டு வாழையின் குருத்து முடிச்சு நோயைத் தவிர்க்க உழவர்கள் யாவரும் முற்பட வேண்டும். முக்கியமாக நோய் தாக்காத கன்றுகளைத் தேர்ந்தெடுத்தலும், நோயுற்ற மரங்களை எடுத்து அழித்தலும், நோய் பரப்பும் அசுவணிப் பூச்சியைக் கட்டுப்படுத்தலும் மிகச் சிறந்த பலனைக் கொடுக்கும்.

தகவல்: டாக்டர் து. கி. கந்தசாமி; பேராசிரியர், தாவர நோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம். கோவை-3.





## நிருவாகக் கல்வி

மைய அரசு 1962-ஆம் ஆண்டில் இந்திய நிருவாகக் கழகத்தை ஏற்படுத்தியது. நிருவாகக் கல்வி, ஆய்வுக்கான தேசியக் கழகமாக இது விளங்கி வருகிறது.

அகமதாபாத்திலுள்ள இந்திய நிருவாகக் கழகம், நம் நாட்டிலேயே, நிருவாகக் கல்வி ஆய்வில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. நிருவாகத் துறையில் இரண்டு ஆண்டுக்காலப் பட்ட மேற்படிப்பு வகுப்பும், 3 ஆண்டுக்கால ஆய்வுக்கான வகுப்பு, நிருவாகிகளுக்கான நவீன நிருவாக முறைகள் பற்றிய வகுப்பு ஆகியவற்றை நடத்தி வருகிறது.

நிருவாகக் கல்வி கற்பிப்பதுடன், பல நிறுவனங்களுக்குக் கருத்துரைகளையும் அறிவுரைகளையும் இந்தக் கழகம் வழங்கி வருகிறது. இந்தக் கழகத்தின் நூல் நிலையம் ஆசியாவிலேயே மிகப் பெரியது.

பத்தாண்டுக் காலத்தில் 1000 ஆராய்ச்சிக்- கட்டுரைகள், 50 நூல்கள், பல்வேறு தனி உரை நூல்கள் ஆகியவற்றை வெளியிட்டுள்ளது. இவை யாவும் நிருவாகத்துறை சம்பந்தபட்ட பல்வேறு செய்திகளை அடிப்படையாகக் கொண்டவை.

இக்கழகத்தைச் சார்ந்த வேளாண்மை நிருவாகம் சம்பந்தமான நிலையம் தனது பணிகளின் வாயிலாக மிகப் புகழ் பெற்று வருகிறது.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின்

## புதிய கண்டுபிடிப்புகள்

**1. தழைச்சத்து, சூரிய காந்தியில் புரதச் சத்தையும், எண்ணெய் அளவையும் அதிகரிக்கிறது.**

சூரியகாந்திப் பயிரின் விளைச்சலை அதிகரிக்க செம்மண் நிலத்தில் எக்டேருக்கு 50 கிலோ தழைச்சத்தும், 75 கிலோ மணிச்சத்தும் போதுமானது என்றும், கரிசல் மண் நிலத்தில் இடும் உரத்தின் அளவிற்கு ஏற்ப விளைச்சல் அதிகரிப்பதாகவும் ஆராய்ச்சி முடிவுகள் அறிவிக்கின்றன. தழைச்சத்தும், மணிச்சத்தும் இடுவதால் புரதச் சத்தும் எண்ணெய் அளவும் அதிகரித்துள்ளது.

'கம்மாண்டர்', 'மின்கிருன் போன்ற சூரியகாந்தி ரகங்களில் 'லைசின்' அதிகமடங்கிய புரதச் சத்து அதிகம் காணப்பட்டது. இந்த இரு ரகங்களிலும் 'குளோரோ ஜெனிக் அமிலம்' மிகக் குறைவாக இருப்பதால் இந்த ரகங்கள் புரதம் தயாரிக்க மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

**2. நெற்பயிருக்கு நான்கு நிலைகளில் தழைச்சத்து!**

'கோ. 29,' 'காஞ்சி' ஆகிய நெல் ரகங்களுக்குப் பின்கண்ட நான்கு நிலைகளில் மேலுரமிடுவது சிறந்தது என்பது புலனாகியுள்ளது.

1. நடவு செய்யும்போது,
2. நடவு செய்து பதினைந்து நாட்களுக்குப் பின்,
3. பூ வருவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு,
4. பூ வந்து ஒருவாரத்திற்கு பின்.

மேற்கூறிய 4 நிலைகளிலும் 30 : 30 : 20 : 20 என்ற விகிதத்தில் தழைச் சத்தைத் தூவி விடுதல் சிறந்தெதனக் கண்டு அறியப்பட்டது.

'கோ. 29' நெல் தலை சாய்தலின்றியே எக்டேருக்கு 210 கி.கி. வரைத் தழைச்சத்தை ஏற்றுக் கொண்டு பயனளித்து உள்ளது.

**3. நெல்லுக்கு நீர்த் தேவைகள்!**

நெற் பயிருக்கு உரிய நீர்ப் பாசனத்தைப் பற்றிய ஆய்வு மூலம், மழைக் காலத்தில் 5 செ.மீ. ஆழத்திற்குத் தண்ணீரைத் தேக்கி வைக்கத்தேவையில்லை என்பது தெளிவாகியுள்ளது. ஏனெனில், பாய்ச்சப்படும் நீரின் அளவை விட, மழையின் பயன் அதிகமாக இருந்தது. மழைக் காலத்தில், பாசன நிலைகளால் (மட்டம்) விளைச்சல் வேறுபடவில்லை! ஆயினும் கோடைக் காலத்தில் பாசன நிலைகளால் குறிப்பிடத்தக்க அளவுக்கு மகசூலில் மாறுபாடு உள்ளன. மேலும் பயிர் வளர்ச்சிக் காலம் முழுவதும் தொடர்ச்சியாக 5 செ. மீ. ஆழத்திற்கு நீர் நிற்கும்படி செய்வது அதிக அளவு விளைச்சலைத் தந்துள்ளது.

**4. 'மக்னீசியம் சல்பேட்' உரம் நெல் மகசூலை அதிகப்படுத்துகிறது.**

மக்னீசியம் குறைவுள்ள நிலத்தில், எக்டேர் ஒன்றுக்கு 40 கிலோ கிராம் மக்னீசியம் சல்பேட் உரத்தை உபயோகிப்பது—பயனுள்ள தூர்களை அதிக எண்ணிக்கையில் வளரச் செய்வதின் மூலமும், மலட்டுத் தன்மையைக் குறைப்பதன் மூலமும்—24.7 சதவீதம் கூடுதல் நெல் விளைச்சலைக் கொடுக்கிறது. மக்னீசியம் பயன்படுத்துவதால் தானியப் புரச் சத்தும் அதிகரித்துள்ளது.

**5. நெல் விதைப்புச் சோதனை!**

ஐ. ஆர். 8 நெல் ரகத்தைத் தொடர்ச்சியாக மாதவாரியாக 28 மாதங்களில் பயிர் செய்யப்பட்டதிலிருந்து, சனவரி மாதத்தில் விதைக்கப்பட்ட பயிர் மிகக் கூடுதல் விளைச்சலையும், அதாவது எக்டேருக்கு 5,646 கிலோவும், செப்டம்பரில் விதைக்கப்பட்ட பயிர் மிகக் குறைந்த விளைச்சலையும் அதாவது எக்டேருக்கு 1,658 கிலோவும் கொடுத்துள்ளது தெரியவந்துள்ளது. நாளொன்றுக்குச் சராசரியாகக் கிடைத்துள்ள விளைச்சலைக் கணக்கிட்டால், எக்டேர் ஒன்றுக்கு சனவரி பட்டப் பயிர் 59 கிலோவும், செப்டம்பர் பட்டப் பயிர் 13.4 கிலோவும் கொடுத்துள்ளன. சனவரியில் 'ஐ. ஆர். 8' சாகுபடி செய்தால், ஜூன்—ஜூலை நடவை விட எக்டேர் ஒன்றுக்கு 2,698 கிலோ அதிக மகசூலும், ஆகஸ்ட் நடவை விட எக்டேர் ஒன்றுக்கு 1,765 கிலோ அதிக மகசூலும் கிடைத்துள்ளன.

தொடர்ந்து ஆறு தடவைகள் இந் நெல்லைப் பயிரிட்ட பின், நிலத்தில் அங்ககக் கரிம நிலைமை கூடுதலாகியிருப்பதை நில வள ஆய்வு வெளிப்படுத்தியது. நிலத்திலிருந்து பயிருக்குக் கிடைக்கக் கூடிய

தழைச் சத்து, மணிச் சத்து, சாம்பல் சத்துக்கள் பயிரிடும் பருவத்திற்கு ஏற்ப பாதிக்கப் படுகின்றன. நிலத்தில் உள்ள 'இசி', 'பி.எச்' என்பனவற்றில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழவில்லை.

**6. சாம்பல் சத்தை அளிப்பதன் மூலம் கோ. 7 ராகியின் விளைச்சலை அதிகப்படுத்தலாம்!**

மண்ணில் உள்ள சாம்பல் சத்தின் நிலைபற்றியும், 'கோ. 7' ராகியின் விளைச்சலில் அதன் பங்கு பற்றியும் ஆராய்ச்சி நடத்தியதில் இடம் பெயர்ந்து செல்லும் சாம்பல் சத்து பயிர் வளர்ச்சியின் ஆரம்ப காலத்தில் மிக அதிக மாகவும், நாளடைவில் குறைந்து வருவதாகவும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. எக்டேருக்கு 25 கிலோ வீதம் சாம்பல் சத்து இடுவது விளைச்சலை அதிகப்படுத்தியுள்ளது.

**7. தக்காளியின் ஊட்டச் சத்து தேவைகள்!**

தக்காளியின் ஊட்டச்சத்துத் தேவைகளை, இலைப்பகுப்பாய்வு மூலம் மதிப்பிடுவதற்கான மாதிரி எடுப்பதற்குப் பூக்கும் முன் உள்ள தருணமே (நாற்று நட்டு 25 நாட்களுக்கு பின்) சிறந்த தருணம் எனக் கண்டு அறியப்பட்டுள்ளது. இவ்வா ராய்ச்சியில் 2.81 சதவீதம் தழைச்சத்தும், 0.455 சத வீதம் மணிச் சத்தும், 1.975 சதவீதம் சாம்பல் சத்தும் தேவை என்று தெரியவந்துள் ளது. இது எக்டேருக்கு 150 கி.கி. தழைச்சத்தும், 100 கி. கி. மணிச்சத்தும், 50 கி.கி. சாம்பல் சத்தும் பயன்படுத்து வதற்கு ஒப்பாகும். இந்த அளவில் உரமிட்டால் சாதா ரண நிலையை விட 61 சத வீதம் அதிக மகசூல் பெற முடியும் என்பது தெரிய வரு கிறது.

**8. ரோஜா செடிக்குத் தீவிர வெட்டுதலும், இலைவழி உணவு அளித்தலும் மகசூலை அதிக மாக்குகிறது!**

ரோஜாச் செடிகளில் தீவிர மாக கவாத்துச் செய்தல் (அடி யிலிருந்து 12 செ.மீ. உயரத் தில், சென்ற பருவத்து மிலாறு களை வெட்டுதல்), 1.93 கி.கி. தழைச்சத்து, 1.34 கி.கி. மணி சத்து, 1.5 கி.கி. சாம்பல்சத்து ஆகியவற்றை இலைவழி அளித்தல், 'ஜிப்பிரல்லிக்' அமிலம், யூரியா, 'பொட்டாசி யம் டை ஹைட்ரஜன் பாஸ் பேட்' ஆகியவைகளைச் சம அளவில் கலந்து கலவையைத் தெளித்தல் ஆகிய மூன்று முறைகளும் ரோஜா செடி களில் அதிக பூக்கள் தோன்றச் செய்துள்ளன.

**9. உவர் நிலத்தைச் சீர்திருத்த வட ஆர்க்காடு மாவட்டத்தில் நடத்திய சோதனையின் முடிவுகள்!**

வட ஆர்க்காடு மாவட்டத் தில் உப்பினால் பாதிக்கப்பட்டு உள்ள மண்ணின் பௌதீக— இரசாயன குணங்களை ஆராய்ந் திடுவதற்காக மேற்கொள்ளப் பெற்ற ஆய்வு மூலம், மண் ணின் குணங்களை மேம்படுத்த வும், சீர்திருத்தப்பட்ட மண் ணின் விளை ) தரும் திறனை நிலைநிறுத்தவும எக்டேர் ஒன் றுக்கு இரண்டு ஆண்டுகட்கு ஒரு முறை 2 டன் ஜிப்சத்துடன் ஒவ்வொரு ஆண்டும் 10 முதல் 12 டன் தொழு உரமோ அல்லது தக்கைப் பூண்டோ அல்லது கரும்பாலைக் கழிவுப் பொருட்களோ சேர்க்க வேண்டும் என்பதும் தெரிய வருகிறது.



**10. 'பாஸ்பன்-டி' கனகாம்பரத்தின் மகசூலை அதிகரிக்கிறது.**

கனகாம்பரத்தில் 'பாஸ்பன் -டி', பூ பூப்பதை விரைவுபடுத் துவதுடன், (28 —30 நாட் கள்), பூங்கொத்துக்களின் நீளத்தையும், எண்ணிக்கை யையும் அதிகப்படுத்துவதோடு பூக்கும் தருணத்தையும் விரிவு அடையச் செய்கிறது.

**11. படிக்கும் போதே பணம் ஈட்டல்!**

''படித்துக் கொண்டே பணம் ஈட்டும்'' திட்டம் ஒன்று தமிழ்நாடு வேளாண் மைப் பல்கலைக் கழகத்தில் மூன்றும் ஆண்டு, இறுதியாண்டு பி.எஸ்சி. (வேளாண்மை) மாணவர்களுக்காக முறையே கோழி வளர்ப்பு, காய்கறி பயி ரிடல் ஆகிய தொழில்களுடன் தொடங்கப்பட்டது. ஐந்து பேர்களைக் கொண்ட இரண்டு மாணவர் குழுவினர் இறைச்சிக் காகக் கோழி வளர்க்கும் திட் டத்தில் பங்கு கொண்டனர். இதனால் கிடைத்த வருவாய்ப் பங்கீடு முதல் குழுவினருக்கு ரூபாய் 26.70-ம், இரண்டாம் குழுவினருக்கு ரூபாய் 133.60 -ம் ஆகும். காய்கறி பயிரிடும் திட்டத்தில் 20 மாணவர்கள் அடங்கிய குழு ஒன்று பங்கு எடுத்தது. அக்குழு ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் காய்கறிகளைப் பயிரிட்டு ஒவ்வொருவருக்கும் நிகர வருவாய் ரூபாய் 30 ஈட்டியது. இத்திட்டம் மாண வரிடையே நல்ல ஆதரவைப் பெறுகிறது.

இத்திட்டத்தில் மதுரை வேளாண்மைக் கல்லூரி மூன் றும் ஆண்டு பி.எஸ்சி (வேளாண்மை) மாணவர்கள் அறுவர் பங்கு கொண்டனர். இத்திட்டம் முட்டைக்காகவும், இறைச்சிக்காகவும் வளர்க்கும் குஞ்சுகளும் உற்பத்திச் செய் யும் கோழிப் பண்ணையுடன் தொடங்கப்பட்டது. ஒவ் வொரு மாணவருக்கும் மாதந் தோறும் ரூபாய் ஐம்பதும் அதன் மேலும் இலாபம் கிட்டி யமையால், மாணவர்களிடம் இத்திட்டத்திற்கு பெரும் வர வேற்பு உள்ளது.

**தகவல் :**
**தகவல் தொடர்பு நிலையம்;**
**தமிழ்நாடு வேளாண்மைப்**
**பல்கலைக் கழகம்,**
**கோவை—3.**





# வளரும் தமிழகம்....

**மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்**
**சி.வி.எம். அண்ணாமலை**

இன்று வளர்ந்துவரும் தமி ழகமானது ஒரு காலத்தில் பல் வளம் பெற்றுச் சிறப்புக்களின் இருப்பிடமாகவும் மனித வர்க்கத்தின் மாண்புகளை உலக மக்கள் நனிசிறந்து அறி தற்பொருட்டு வாழ்க்கை வளங் களைப் பற்றியும், வாய்மையும் ஒழுக்க நெறியும் பண்பாடும் ஏற்றத் தாழ்வற்ற மனப் போக்கும், ஒரு குலம் என்ற உன்னத இலட்சியப் பிடிப்பும் கொண்டு ஒன்றனைய அறிவான ஆண்டவனை அவனியோர் போற்றிடும் போற்றிலைப் பெற்றுத் திகழ்ந்தது.

அத்தகைய சிறப்பிற்குரிய தமிழக மக்களும், தமிழகமும் இடைக்காலத்தில் புகுத்தப் பட்ட பிற்போக்கு, சாதி, சமய, மதக் கொள்கைகளுக்கு இரையாகிப் பல்வேறு சாதி களாய் ஏற்றத் தாழ்வு உணர்வு களுக்கு அடிமையாகி அறிவின் வளத்தையும் ஒழுக்க உணர் வும், ஒன்றுபட்ட உரிமை வாழ் வும் குன்றியவர்களாய், இடைக்காலத்தில் இருந்து வந்துள்ளனர் என்பது நாட றிந்த பேருண்மையாகும்.

வாழ்விழந்து, வளம் இழந்து நீரின்றி வாடிடும் பயிர்களைப் போல், சமுதாயத்தில் உரிமை இழந்து - வாழ்விழந்து, வள மிழந்து சமநிலை பெற முடி யாதவர்களாய் கடைநிலையில் ஒதுக்குப் புறங்களில் தாழ்த் தப்பட்ட மக்களாய், முன் னேற்றத்தைப் பெற முடியா மல் பின்னடைந்த மக்களாய், இருந்து வருதலை மாற்றுவான் வேண்டி இன்றைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் எடுத்துக் கொண்டுள்ள சீரிய முயற்சியின் காரணமாகவும் முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் எண்ணத் தின் படப்பிடிப்பாகவும், இன- மத-வேறுபாடு இன்றிச் சமு தாயத்தில் சமநிலை காண எடுத்துக் கொண்டிருக்கின்ற சீரிய முயற்சியின் திருவினை தான் இன்றைய குடிசை மாற்று வாரியம்-மின்சார வாரியம்-அரிசன வீட்டு வசதி வாரியம்-குடிநீர் வடிகால் வாரியம்-மீன்வள மேம்பாட் டுக் கழகம் போன்ற அமைப்பு களின் மூலம் சாதித்து வரு கின்ற சாதனைகளாகும் என்ப தனை நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

முடை நாற்றம் வீசுகின்ற சாக்கடை ஓரங்களில் நித்த நித்தம் செத்துப் பிழைக்கும் ஏழை எளிய மக்களுக்குப் பாங் கான குடிகள்—

இருள் சூழ்ந்த கிராமங்களில் எழில் வளம் பாய்ச்சும் மின் ஒளி—தொற்று நோய் வருவ தற்குக் காரணமான குடிநீரை பாதுகாக்கப்பட்ட குடிநீராக் கும் வகையில் மேற்கொள்ளப் பட்டுள்ள குடிநீர் வழங்கும் திட்டம்.

தொழு நோயாளர்கள் மறு வாழ்வு பெற்றுத் திகழவும்— ஊனமுற்றவர்களை உரிய இடத் தில் தரத்தில் உயர்த்தி வாழ்க் கையில் வளம் காணப் புரட்சி கரமான மறுவாழ்வுத் திட்டம்.

கண்ணொளி இழந்து கவலை தோய்ந்த வாழ்க்கையுடன், இருந்து வருவோருக்குக் கண் ணொளி வழங்கும் திட்டம்- இதுபோன்ற திட்டங்களெல் லாம் முதல்வர் கலைஞரின் பிறந்த நாள் பரிசாகத் தமிழக மக்களுக்குக் கிடைத்து வருவ தால் தமிழகம் பாங்குடன் விளங்கிக் கொண்டிருக்கிறது.

இன்றைய ஆட்சி, பொறுப் புடன் செய்து வருகின்ற திட் டங்களின் பயனாக இன்றும் வளர்ந்துவரும் தமிழகத்தைக் காணுகிறோம்.

தமிழுக்கு முதலிடம், முன் னுரிமை தந்து தமிழ்ச் சான் றோர்களையும் - ஆன்றோர்களை யும் சிறப்பித்துப் பட்டயம் தந்து விழாவெடுத்துப் பரிசினை வழங்குவதோடு அமையாது—

சிலப்பதிகாரம் கண்ட பூம் புகாரை நிறுவி-கட்டபொம் மன் கோட்டையினைக் கட்டி— வள்ளுவன் கோட்டத்தை அமைத்து—வான் புகழ் கொண்ட தெள்ளு தமிழ் திருக் குறளைச் சிறப்பிக்கச் செய்த வல்லவரான தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், இந்தியத் துணைக் கண்டமே வியத்தகு நிலையில் விழுமிய சமுதாய நலப் பணிகளை அறிவித்துச் செயற்படுத்தி வருதலை நல் லோர் எல்லோரும் போற்றத தான் செய்வர்.

## மறவாதீர்கள்:

## உங்கள் மகள் ஒருநாள்

## மணமகளாக அமர வேண்டியவள்!



திருமணம் என்ருலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்ருல்—செலவுதான். அதற்கென இன்றே சேமிககத் துவங்கிஞல் எதிர்காலத்தில எநத செலவையும சமாளிக்க இயலும. உஙகள் சேமிப்புத தொகை உஙகளுககு தகக சமயததில் கைகொடுத்துதவும.

பல சிறப்பு அமசஙகளுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டஙகளே நாங்கள் வழங்குகின்ருேம். மாதச் சேமிப்புத திட்டத்தினபடி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுகொள்ளபபடும். ரெக்கரிங் டிபாசிட் திட்டததின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது—இதன் கீழ் கணக்குத் துவககியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1,650/- |

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002




இராசசிங்கமங்கலம் 'கண்மாயின் குறுக்கே கட்டவிருக்கும் பாலத்தின் எழில்மிகு தோற்றம்.

தமிழ்நாடு என்று நினைவு தோன்றுமிடத்தே, முகவை மாவட்டமும் அதன் நீடித்த பின் தங்கிய நிலையும் கவனத்திற்கு வருகிறது. அதிலும் திருவாடானை வட்டம் இன்னும் பிற்பட்ட நிலையில் இருந்து வருகிறது.

இயற்கையே வஞ்சித்துவிட்ட இப்பகுதி வாழ் மக்களுக்கு அவர்களுடைய நல்வாழ்வுக் கெனத் தமிழ்நாடு அரசு பசுமைப் புரட்சித் திட்டம், தொழில் முன்னேற்றத் திட்டம் உட்படப் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் மூலம் செயலாற்றி வருகிறது.

சாலைப் போக்குவரத்து நிலையைப் பொறுத்த மட்டிலும் இம்மாவட்டம் இன்னும் முழுமையான வளர்ச்சி அடையவில்லை. சாலை அமைப்பிற்குத் தேவையான கற்களும், செஞ்சரளும் இல்லாததோடு புயல் மற்றும் வெள்ளத்திஞல் பாதிக்கப்படுவதே இந்நிலைக்கான காரணங்களாகும். இருப்பினும் கடந்த ஏழெட்டு ஆண்டுகளில் அநேக சாலை அமைப்பு வேலைகள், புதிய பாலங்கள் கட்டும் வேலைகள் நடைபெற்று வருவதோடு, இருக்கும் சாலைகள் தரமும் உயர்த்தப்பட்டு இன்றைய பளுமிக்க பேருந்துகள், லாரிகள் செல்ல வகை செய்யப்பட்டுள்ளது. அண்மையில் உள்ள கிழக்குக் கடற்கரைச் சாலையில் நடைபெற்று வரும் பால வேலைகளும் இராமேசுவரத்தை இணைக்கும் பாம்பன் பாலமும் ஊரகச் சாலைகளின் திட்டத்தின் கீழும், வறட்சி நிவாரணப் பணி மூலம் பரவலாக மேற்கொள்ளப்படும் சாலைப் பணிகளும் முடிவுறும்போது இம்மாவட்டத்தின் போக்குவரத்துத் தேவைகள் பெருமளவில் நிறைவேறிவிடும்.

திருவாடானை வட்டத்திலுள்ள பழம் பெரும் ஊர்களில் இராசசிங்க மங்கலமும் ஒன்ருகும். இதற்குப் பெருமை கூட்டுவது இங்குள்ள பெரிய கண்மாயாகும். மேலும் இது தமிழ்நாட்டிலேயே வீராணத்திற்கு அடுத்த மிகப் பெரிய கண்மாயாகும். இக்கண்மாய்த் துறையின் நீளம் 19.8 கி.மீ. கண்மாயின் ஆழமான பகுதியில் நீரின் ஆழம் 3.25 மீட்டராகும். நீரின் கொள்ளளவு ஒரு மில்லியன் கன அடியாகும். இக்கண்மாய்க்குச் சருகணி ஆற்றிலிருந்தும், வைகை ஆற்றிலிருந்து தண்ணீர் வருகிறது. இதன் உட்பரப்பில் செங்குடி, ஏந்தல், வரவணி. பூலாங்குடி, அறியாங்கோட்டை, சாத்தனூர், வண்டல், கூட்டாம்புளி, காட்டுப்பரம்பக்குடி, எட்டியதிடல், கொட்டுப்புளி, முத்துப்பட்டினம், சீனங்குடி, சாத்தமங்கலம், சேத்திடல், மருதவயல், கல்லடிதிடல், விசவனூர், அடவிடங்கான், பாத்தவயல்; துகவூர், வடகடுக்கை, தென்கடுக்கை, கிளாஞ்சுனை, முத்தூர் சமுத்திரம், மஞ்சுப்பட்டினம், மாடக்கோட்டை, மறக்கான்குடியிருப்பு, செட்டியகோட்டை ஆகிய ஊர்களும், அவற்றின் கிளைக் கிராமங்களும் அமைந்துள்ளன. இவ்வூர் மக்கள் தங்களின் அன்ருடத் தேவைகளுக்கும், கல்வி, வசதி மருத்துவ வசதி, மற்றும் வணிக நிமித்தம், இராமநாதபுரம், காரைக்குடி, பரமக்குடி ஆகிய வெளியூர்களுக்குச் செல்லும் பொருட்டு மற்றும் பல்வேறு காரணங்களுக்கும் இக்கண்மாயின் குறுக்கே கடந்துதான் இராசசிங்க மங்கலம் வந்தடைய வேண்டியுள்ளது. இக்கண்மாய் நீர் பெருகும் சமயம் பல மாதங்களுக்கு மக்கள் பரிசில்கள் (படகு) மூலம்தான் செல்ல வேண்டும். சீரான போக்குவரத்து வாய்ப்பு இல்லாமையால் இவ்வட்டார மக்கள் பொருளாதார நிலை பாதிக்கப்பட்டுத் துயருற்று வருந்துகின்றனர். கண்மாய்க்

# இராசசிங்கமங்கலக் கண்மாய்ப் பாலத்திட்டம்


சி. வே. பத்மநாபன்,
தலைமைப் பொறியாளர்,
நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித்துறை,

அதுமட்டுமல்ல—

பெற்ற பிள்ளையிடம் தாய் தந்தையரும், உடன் பிறப்புகளும் காட்டாத பாசத்தை முதல்வர் அவர்கள், பட்டழிந்து வரும் விதவைகளிடமும் அனாதைச் சிறுவர்களிடமும் காட்டிவருகிறார். அப்படிப் பட்டவர்களுக்காகக் கருணை இல்லங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

1966-ல் நீதி நிர்வாகத்திற்காக ரூ. 2 கோடி செலவு செய்ததை மாற்றித் தற்போது சுமார் ரூ. 4 கோடிக்கு மேல் செலவு செய்யப்படுகிறது.

ஏழை எளிய மக்களும் கல்வி வசதி பெற 66-ல் ரூ. 45 கோடி என்று இருந்ததை மாற்றித் தற்போது 116 கோடி செலவிடுகிறோம்.

மருத்துவத் துறைக்கு 66-ல் ரூ. 11.73 கோடி என்று இருந்ததை மாற்றித் தற்போது 34 கோடிக்கு அதிகமாகவும்—

பசுமைப் புரட்சியை உண்டாக்கும் வேளாண்மைத் துறைக்கு 66-ல் ரூ. 11 கோடி என்றிருந்ததை மாற்றி இன்றைய தினம் ரூ. 23 கோடியாகவும்—

கால்நடை பராமரிப்புக்கும் கூட்டுறவுத் துறைக்கும் தனித்தனியே ரூ. 3 கோடி என்றிருந்தது. இப்போது ரூ. 5 கோடியாகவும் மாற்றப்பட்டுள்ளது.

அதேபோல' சமுதாய நலத் திட்டங்களுக்கென ரூ. 6 கோடி செலவிடப்பட்டது, இன்று ரூ. 29 கோடியாகவும்,—

> நல்ல பணிகள் வெற்றி பெறச் சில மறைபொருள்கள் உண்டு. அவை அளவற்ற பொறுமை, முடிவில்லா முயற்சி, அளவு கடந்த தூய்மை ஆகியவை.
>
> —விவேகானந்தர்.

தொழிலாளர் வேலைவாய்ப்புகளுக்காக ரூ. 2 கோடி என்றிருந்ததை மாற்றி ரூ. மூன்றரைக் கோடியாகவும்—

நீர்ப்பாசனத்திற்காக 66-ல் ரூ. 6.7 கோடியாக என்றிருந்தது. தற்போது ரூ. 16 கோடியாகவும். அதேபோலச் சமூக நலப் பாதுகாப்புத் திட்டத்திற்கென ரூ. 23 கோடியாகவும், மீன் வளத்துறைக்கு ரூ. ஒன்றரைக் கோடியும் செலவு செய்யுமளவுக்கு உயர்த்தியுள்ளது.

ஏழை எளிய மக்கள் மீன், பால், பழம், பருப்பு இவைகளின் மூலம் புரதச் சத்துக்களைப் பெற ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதன் மூலம் சமுதாய நலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுபோன்ற பணிகளின் மூலம் வளரும் தமிழகத்தில் மக்கள் ஏற்றம் பெற்று வருகிறார்கள்.

(சென்னை வானொலி நிலயத்தில் 20.7.75-ல் ஆற்றிய உரை.)


## சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை) எண் 151.
## சேலம்-1.

தபால் பை எண். 171

தொலைபேசி எண் : 2402

கிளைகள் : நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணாபுரம் சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, பெத்தநாய்க்கன் பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

சொந்த நிதி ரூ. 327 லட்சம்.

நடைமுறை மூலதனம் 1711 லட்சம்.

### வட்டி விகித அட்டவணை

கால் டெபாசிட்டுகள் : ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் (முன் அறிவிப்பு இல்லாமல்) $3\frac{1}{4}$%
ரூ. 10,000/-க்கும் அதற்கு மேலும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்) $3\frac{1}{2}$%

சேவிங்ஸ் டெபாசிட்டுகள் : ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும்
15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும் 3%
46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும் $3\frac{1}{2}$%

பிக்செட் டெபாசிட்டுகள் : ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு :

1. 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் 6%
2. 6 மாதத்திற்கும் அதற்குமேல் 9 மாதத்திற்குள் $6\frac{1}{2}$%
3. 9 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் $7\frac{1}{2}$%
4. 12 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் $8\frac{1}{2}$%
5. 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் $9\frac{1}{2}$%
6. 61 மாதத்திற்கும் அதற்குமேலும் $10\frac{1}{2}$%

நடப்புக் கணக்கு $\frac{1}{2}$%

சேமிப்புக் கணக்கு 6%

ரூ. 5000/-க்கு மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு. பிக்செட் டெபாசிட்டுகளின்மீது மாதாந்திர வட்டி உண்டு. ரெக்கரிங், பிராவிடெண்ட் டிபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்புகொள்க.

தி. பாலசுந்தரம், பி.ஏ.,
துணைப் பதிவாளர்,
நிர்வாக அதிகாரி.

எஸ். ஆறுமுகம்,
தலைவர்.




# தமிழ்நாட்டுக்குத் தாய்லாந்து அரிசி !!

வெளிநாட்டில் இருந்து அரிசி இறக்குமதி செய்யும்படித் தமிழக அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க, தாய்லாந்துநாட்டிலிருந்து 1 லட்சம் டன் அரிசியை மைய அரசு இறக்குமதி செய்கிறது.

தாய்லாந்து அரிசி முதலாவது கப்பலில் சென்னைத் துறைமுகத்திற்கு வந்தது. அர்கோசி என்னும் இந்தக் கப்பலில் 9800 டன் அரிசி வந்துள்ளது. இந்த அரிசியை மைய அரசின் உணவு நிறுவனம், தமிழ்நாட்டு அரசிடம் ஒப்படைக்கும் விழா 31.7.75 அன்று சென்னைத் துறைமுகத்தில் நடைபெற்றது.

உணவு நிறுவன வட்டார மேலாளர் டி.டி.பி. அப்துல்லா இந்த அரிசியை முதல்வர் கலைஞர் அவர்களிடம் ஒப்படைத்தார்கள். அதற்கு அடையாளமாக விழா மேடையில் ஒரு பொட்டலம் அரிசியை முதல்வர் கலைஞர் அவர்களிடம் கொடுத்தார்.

மாண்புமிகு உணவு அமைச்சர் மாதவன் அவர்கள் இந்த விழாவில் ''நமது தமிழ்நாடு அரசு எடுத்த முயற்சிக்கு இது ஒரு வெற்றிச் சின்னமாக அமைந்திருப்பதை நீங்கள் இங்கே காண்கிறீர்கள். இந்த வெற்றிக்கு உதவிய மத்திய அரசுக்கும் இந்திய உணவுக் கழகத்தினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

''இன்று வந்திருப்பதைப் போல் தொடர்ந்து வாரம் ஒருமுறை கப்பல்களில் அரிசி வந்துசேரும் என்ற நம்பிக்கையில் நாம் தொடர்ந்து முயற்சி செய்வோம்'' என்று குறிப்பிட்டார்.

பின்னர் முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றும் போது குறிப்பிட்டதாவது :

''இன்று தாய்லாந்திலிருந்து வந்துள்ள அரிசியைப் பெற்றுக் கொள்வதில் தமிழ்நாட்டு மக்களோடு சேர்ந்து எவ்வளவு மகிழ்ச்சியை நாம் அனைவரும் பெறுகின்றோம் என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். தமிழக அரசின் கோரிக்கையை மத்திய அரசு ஏற்று இந்த நல்ல விளைவை உருவாக்கித் தந்திருக்கிறது.

''நல்ல கோரிக்கைகள் தொடர்ந்துவலியுறுத்தப்படுமேயானல் நிச்சயமாக அவைகளுக்கு வெற்றி கிடைக்குமென்பதற்கு இது ஒரு நல்ல உதாரணமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

''அடிக்கடி இப்படி வாரம் ஒருமுறை தமிழ் நாட்டுக்கு வெளிநாட்டு அரிசி வருகிற சூழ்நிலையில் இருக்கவேண்டுமென்று உணவு அமைச்சர் மாதவன் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

''இப்போதுள்ள கஷ்ட நிலையில் மட்டும் அடிக்கடி இப்படி வந்தால் போதுமானது என்பதையும், விரைவில் நம்முடைய உணவுப் பற்றாக்குறை நீங்கி, தன்னிறைவு பெற்று, மற்றவர்களுக்கு, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நாம் வாரி வழங்கியதைப் போல ஒரு சூழ்நிலை உருவாக வேண்டுமென்று அனைவரும் எண்ணிக் கொண்டிருக்கிறோம்.

''அடுத்த கப்பல் அரிசியும் தமிழ்நாட்டுக்குக் கிடைக்கும், அதற்கு அடுத்த கப்பலும் கிடைக்கும் என்பதற்கான அறிகுறியாகத்தான் முதலில் கொடுத்த அரிசியைப் புகைப் படக்காரர்களின் தாமதத்தால் மீண்டும் அந்த அரிசிப் பொட்டலத்தை என்னிடம் கொடுக்கும் சூழ்நிலை ஏற்பட்டது என்பதை அறிவீர்கள்.

''இதுவே நமக்குத் தொடர்ந்து கிடைக்கும் அறிகுறி என்று தெரிவித்துக் கொண்டு இந்தக் கோரிக்கையில் முன்னின்று முனைந்த மத்திய அரசின் உணவு அமைச்சர் ஜெகஜீவன் ராமுக்கும் ஏனைய மத்திய அரசின் அமைச்சர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்''.

குக் குறுக்கே செங்குடியை இணைக்கும் வண்ணம் நல்லதொரு பாலம் அமைத்துத்தர வேண்டுமென இப்பகுதி வாழ் மக்கள் கடந்த பல ஆண்டுகளாகக் கோரிக்கை எழுப்பினர்.

கடந்த ஆண்டில் தமிழ் நாட்டில் ஏற்பட்ட வரலாறு காணாத வறட்சி நிலையில் மக்கள் துயரை நீக்க அரசு பலவகைப் பணிகளை மேற்கொண்டு மிக விரைவில் செயலாற்றியது. இதே அடிப்படையில் நெடுங்காலமாக இக்கண்மாயின் உட்புறத்தே உள்ள ஊர் மக்கள் அனுபவித்து வந்த தீராத துயரை நிரந்தரமாக நீக்க, சிறப்புத் திட்டமாக இக்கண்மாயின் குறுக்கே எழில்மிக்க ஒரு பாலத்தைக் கட்ட அரசு ரூபாய் 15.00 இலட்சம் அனுமதி அளிப்பதாக 30.1.1975-ல் இப்பகுதிக்கு வருகை தந்த தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள்.

இத்திட்டத்தின் பூர்வாங்க வேலைகள் முடிவடைந்து 12-7-1975-ல் தமிழ்நாடு அரசு உணவுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. செ. மாதவன் அவர்கள் தலைமையில் முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள், பாலத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

பாலத்திற்கு ரூ. 11.0 இலட்சமும் செங்குடி வரையிலும் அணுகுச் சாலை அமைக்க ரூ. 4. இலட்சமும் செலவிடப் படவிருக்கிறது.

பாலத்தின் குறிப்பிட்ட தகவல்கள் வருமாறு:

பாலத்தின் நீளம்—150.38 மீட்டர்.

கண்களின் அமைப்பு—8 மீட்டர் நீளமுள்ள 16 கண்கள்

தூண்களின் உயரம்—4.35 மீட்டர்.

பாலத்தின் அகலம்—7.50 மீட்டர்

அணுகுச் சாலையின் நீளம்—1805 மீட்டர்.

தேவைப்படும் சிமிண்ட்—1130 மெ.டன்.

தேவைப்படும் இரும்பு—72 மெ. டன்.

இப்பாலத்தின் கட்டுமான வேலைகள் நடைபெறும்போது பன்னிரெண்டு மாதங்களுக்கு ஏறத்தாழ 500 (ஐந்நூறு) பேருக்குத் தொடர்ந்து வேலை கிடைக்குமெனக் கணக்கிடப் பட்டுள்ளது.

இப்பாலம் முடிவுறும்போது இப்பகுதி மக்கள் வாழ்வு நல்வளம் பெருகவும் பொருளாதார முன்னேற்றமடையவும் வாய்ப்பு ஏற்படுவது திண்ணம்.



## அரும்பொருட் காட்சியகம்

உலகத்தின் மிகப் பெரிய வரலாற்று அரும்பொருட் காட்சியகம் எங்கே இருக்கிறது தெரியுமா? லெனின் கிராடில் இருக்கிறது. ஏறக்குறைய 40 ஆயிரம் விலங்குகளின் மாதிரிகளைக் கொண்ட இந்தக் காட்சியகம் 250 ஆண்டுகளுக்கு முன்னர் துவக்கப்பட்டது.

வெளிநாடு சென்றுவிட்டு ரஷ்யாவுக்குத் திரும்பிய பீட்டர் பெருவேந்தன், பல அபூர்வப் பொருட்களைக் கொணர்ந்தான். இந்தக் காட்சியகத்தை விரிவுபடுத்த ஆணையிட்டான். 1724ல் இந்தக் காட்சியகம் பார்வையாளர்களுக்குத் திறந்துவிடப் பெற்றது. அப்போது சேகரிக்கப் பெற்ற சில பொருட்கள் இன்றளவும் சேதமின்றிப் பாதுகாக்கப் பட்டு வருகின்றன். அவற்றில் குறிப்பிடத்தக்கவை: தென் அமெரிக்காவிலிருந்து கொண்டுவரப்பட்ட மிக நீளமான பாம்பு: 1716ல் ஆலந்திலிருந்து கொண்டுவரப்பட்ட 5 அடி நீளமும் 900 பவுண்டு எடையும் உள்ள கடல் ஆமை.

இன்னும் சில, நமக்குச் சிந்தனைகளை உருவாக்குகின்றன. இங்கு உள்ள சில மாதிரிகளை இனிமேல் நாம் உலகத்தில் காணவே முடியாது. சான்றாக, கடற்பசு ஒன்றின் எலும்புக்கூடு இடம் பெற்றுள்ளது. இந்தக் கடற்பசுக்கள் சுவையான மாமிசம் படைத்திருந்ததால் மனிதர்கள் அதனைக் கொன்று தின்றிருக்கிறார்கள். கடைசியாக 1854ல் தான் கடற்பசு காணப் பட்டிருக்கிறது. ஏறக்குறைய இந்த இருபது நூற்றாண்டுகளில் 106 வகைப் பெருவிலங்குகளையும், 139 வகைப் பறவைகளையும் மனிதர்கள் கொன்று தின்று பூண்டற்றுப் போகச் செய்துவிட்டனர் என்று கணக்கிடப் பட்டுள்ளது.






பதிவு எண். M. 8676



# பூம்புகார் கலைக்கூடம் காண வாரீர்



பூம்புகார் கலைக்கூடம், சீர்காழியிலிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவிலும், மாயவரத்திலிருந்து 29 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது.

**இவற்றைக் காண பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடத்திற்கு வருகை தாரீர்!**

இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.

பதிப்பாசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.



COMMISSIONER OF TAMIL NADU ARCHIVES & HISTORICAL RESEARCH
15 SEP 1975
EGMORE, MADRAS-8.







செழுமையான விளைச்சலைப்பெற மிக அவசிய
மானது சீரான நீர்ப்பாசனம். பம்ப் செட்களின்
மூலம் வயல்களுக்குத் தடையின்றி நீர்
பாய்ச்சவும், அவைகளை நல்ல முறையில்
இயங்கச் செய்யவும் எல் & டியின் டைரெக்ட்-
ஆன்-லைன் மற்றும் ஸடார் டெல்டா
மோட்டார் ஸ்டார்ட்டர்கள் சிறந்தவை.
இவை எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற
ரகங்களில் கிடைக்கின்றன.

விவசாயிகளின் நலனை மனதில் கொண்டு
லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட
வசதிகள் செய்கின்றனர்.

- பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்து கொடுக்கின்றனர்.
- சிறிய ஊர்களில்கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின்
விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன்
தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

ஸ்விட்ச்கியர் டிவிஷன்,
லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்
P.O. Box 8922, பம்பாய் 72 ☐ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 ☐ Post Bag 5247, சென்னை 2.


தமிழரசு • மலர்-6 • 1-9-75 • இதழ் 5

# ஆஸ்திரேலியாவில் தமிழ்நாடு அரசுக்குப் பாராட்டு



ஆஸ்திரேலியா கண்டம், மேற்கு ஆஸ்திரேலியா மாநில சட்டமன்ற உறுப்பினர் திரு. வில்லியம் வித்தர்ஸ் எம். எல். சி., (The Hon. William R. Withers., M.L.C.,) என்பவர் 1975-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் இந்தியாவுக்கு வந்தபோது தமிழ்நாட்டுக்கு வருகை தந்தார்.

அவர் தமிழ்நாட்டில் அரசுத் துறையின் பல்வேறு பணிகள் பற்றி அரசுத்துறைச் செயலாளர்களோடு கலந்து பேசியதுடன் மாமல்லபுரமும் சென்று வந்தார்.

திரு. வில்லியம் வித்தர்ஸ் மேற்கு ஆஸ்திரேலிய சட்டமன்றத்தில் உரை நிகழ்த்துகையில் தமது பயணம் பற்றியும் தமிழ்நாடு அரசு அரிசன மக்களுக்குச் செய்துவரும் அரும்பணிகள் பற்றியும் பாராட்டியுள்ளார். அது வருமாறு:

''சென்னையில், தமிழ்நாடு அரசின் அலுவலர்களுடன் பலமுறைச் சந்திந்தேன். சமுதாய நிலையிலும், பொருளாதார நிலையிலும் தாழ்த்தப்பட்டவர்களாக உள்ள அரிசனங்களுக்கு வீடு கட்டித் தருவதிலும், அவர்களுடைய நல்வாழ்வைப் பேணுவதிலும் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளைப் பாராட்டும் வாய்ப்பும் கிடைத்தது. தமிழ்நாடு அரசு தொழிற்சாலைகளுக்கு உதவுவதற்கான சில கவர்ச்சிகரமான கருத்துக்களைக் கொண்டுள்ளது. தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளைத் துவக்கிடப் பெருமுயற்சி செய்வதுடன், பல்வேறு சலுகைகளையும் அளிக்கிறது. அச்சலுகைகளில், தமிழ்நாட்டில் துவக்கப்படும் எந்த ஒரு வெளிநாட்டுத் தொழிற்சாலைக்கும் இரண்டு ஆண்டு காலத்திற்கு வரி கிடையாது என்பதும், புதியத் தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்காலத்தில் மின் கட்டணச் சலுகை அளிக்கப்படும் என்பதும் அடங்கியுள்ளது. அவைகள் சிறந்த கொள்கைகள் என்றும், எதிர்காலத்தில் நாம் சிந்திப்பதற்கு ஏற்றவை என்றும் நான் கருதுகின்றேன்.

''சுற்றுலா நகரமான மகாபலிபுரம் என்னைக் கவர்ந்தது. அந்நகரம் பழங்காலக் குகைகளாலும், சிற்பங்களாலும், சூழப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு அங்கு ஒரு சுற்றுலா நிலையத்தை ஏற்படுத்தியுள்ளது அதில் சிற்பக் கலைஞர்கள் பழங்காலக் கலைகளில் பயிற்றுவிக்கப்படுகின்றனர். அதனால் அந்நகர்களுக்கு வரும் சுற்றுலாபயணிகள், சிற்பக் கலைஞர்கள் சிற்ப

வேலையில் ஈடுபாட்டுள்ளதைக் காணமுடிகிறது.
இவ்வாறாக சுற்றுலாத் தொழில் வளர்க்கப்பட்
டுள்ளது. அதேநேரத்தில், பழங்கலைகள்,
மறைந்திடாதிருக்க வேண்டுமென்பதற்காக
அக்கலைகளில் மக்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்
படுகிறது. இம்முறை ஆஸ்திரேலியாவிலும்,
குறிப்பாக மேற்கு ஆஸ்திரேலியாவிலும் புகுத்து
வதற்கு ஏற்ற ஒரு சிறந்த யோசனையாகக்
கருதுகின்றேன். இதனால் மேற்கு ஆஸ்திரேலி
யாவிலுள்ள பழங்குடிமக்கள் தங்களுடைய
பழங்கலைகளைச் சார்ந்த அதே பணியில் ஈடுபட
முடியும். இத்தகைய ஊக்குவிப்புகளில் கவனம்
செலுத்தும்படி சுற்றுலா அமைச்சர் அவர்களும்,
இதன் தொடர்புடையவர்களும் நான் எழுதி
யுள்ளேன்.

''தமிழ்நாட்டில் எனக்கு உதவியவர்களுக்கு
இந்தச் சந்தர்ப்பத்தில், என் நன்றியைத்
தெரிவித்துக் கொள்ளவிரும்புகின்றேன். என்
நன்றிக்கு உரியவர்கள் 'பார்லிமெண்டரி
அசோசியேஷன்' செயலாளர் (திரு. எம்.
சண்முக சுப்பிரமணியம்), சமூகநலத்துறைச்
செயலாளர் (திரு. டி. கே. ஓசா), போக்கு
வரத்துத்துறையின் செயலாளர் (திரு. ஜே. எஸ்.
பாங்கோ), சட்டமன்றத்தின் பகுதி அலுவலர்
(திரு. ஜெ ரெஜினால்டு ஜான்). ஆகியோர்
களாகும், மேலும், பொதுப்பணித்துறையின்
செயலாளர் (திரு. ராம்சந்தர்), வீட்டுவசதித்
துறைச் செயலாளர் (திரு. எம். எம்.
ராஜேந்திரன்), கல்வித் துறைச் செயலாளர்
(திரு. என். கிருஷ்ணமூர்த்தி) ஆகியவர்
களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்
கொள்கின்றேன்.''

(ஆதாரம்: மாண்புமிகு வில்லியம் ஆர். வித்தர்ஸ் எம். எல். சி., அவர்கள் மேற்கு ஆஸ்திரேலியா சட்டமன்றப் பேரவையில் வழங்கிய "A Brief Report on a Remote Area World Study Tour" என்ற அறிக்கையில் பக்கம் 1,2-ல் காணப்படும் பகுதி)

# இல்லாமையை இல்லாததாக்கி நடப்பவைகள் நல்லவைகளாக அமைய அனைவரும் பாடுபடுவோம்!

இருபத்தெட்டு ஆண்டுகட்கு முன்பு மண்டிக் கிடந்த அடிமை இருளை விலக்கிக் கொண்டு தகதகாயமாய்த் தங்க நிறக் கதிரவன் விடுதலை வெளிச்சத்தை இந்திய மண்ணில் பரப்பிய அந்தத் திருநாளை எண்ணிக்கொண்டு பெருமிதம் அடையும் நாள்தான் இந்த ஆண்டு ஆகஸ்டு 15.

நமது தாய் மண்ணின் மீது ஆக்கிரமிப்பு நடத்திக் கொண்டிருந்த அந்நிய ஆதிகத்தை வேரோடு களைந்தெறிய ஒரு நாள் இரு நாள் அல்ல; பல்லாண்டுக் காலம் பல முனைகளில்—பல்வேறு முறைகளில்—விடுதலை விரும்பிகள் போராட்டத்தை நடத்த வேண்டியிருந்தது. தாயின் தளை அறுக்கப் புறப்பட்ட தானைத் தளபதிகளின் தலைகள் அறுக்கப்பட்டன என்பதை நமது வரலாறு வேதனையோடு புலம்பிக் கொண்டிருக்கிறது.

ஆனால் அந்தத் தியாக விளக்குகளின் கல்லறைகளோ, வெற்றிப் புன்னகையைச் சிந்திக் கொண்டிருக்கின்றன. குண்டுமாரி பொழிந்த களங்கள்! அங்கே குருதிமாரி பொழியச் சாய்ந்த உடல்கள்! ஓங்கார ஒலியோடு வாயை மூடித் தன் வயிற்றுக்குள்ளே விடுதலை வீரர்களைப் போட்டு அடைத்துக்கொண்ட சிறைக் கோட்டங்கள்! சித்திரவதைக் கதை பேசும் அடக்குமுறைச் சரித்திரங்கள்! இந்தப் பொல்லாத நிகழ்ச்சிகளின் தொகுப்புப் பின்னணியில் முகிழ்த்ததன்றோ இந்திய நாட்டுச் சுதந்தரப் பொன் மலர். அந்தப் பொன்மலர் மணமுடைத்து என்று பாரோர் ஏத்திப் புகழும்வண்ணம் அமைந்திடல் வேண்டுமென அண்ணல் காந்தியடிகள் கனவு கண்டார்.

சுதந்தரமுடன் இயங்கிடும் எத்தனையோ நாடுகளின் நிலையோடு ஒப்பிடுகையில் நமது இந்திய நாட்டு நிலைமை, முற்றிலும் வேறு பட்டது. ஊட்டச்சத்து வாய்ந்த உணவுதான் குழந்தைகளுக்கு வழங்கப்பட வேண்டுமென வேறு நாடுகளில் அறிவுரைகள் செயல் வடிவம் பெறுகின்றபோது, எந்தச் சத்து பற்றியும் கவலையில்லை; எதையாவது போட்டு கத்துகிற வயிற்றை அடைப்பதற்கு உணவு என்ற பெயரால் ஒரு பொருள் கிடைக்குமா? என ஏங்குகின்ற ஏழைகள்—இங்கே அங்கிங்கெனாதபடி அலைந்து கொண்டிருக்கின்றனர்.

காயும் கதிரவனை மறைக்கக் கையையே குடையாகக் கொண்டும்—மழையில் ஒதுங்க மரத்தடியையே மாளிகையாகப் பாவித்தும்—நமது மக்கட் தொகையில் பெரும்பகுதியினர் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கின்றனர்.




## சென்னை கோட்டை கொத்தளத்தில் ஆகஸ்ட் 15-ல் கொடியேற்றி வைத்து முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை

ஆண்டவனின் புத்திரர்கள் என்று அன்பொழுக அழைக்கப்படுகிற அரிஜனங்கள் இலட்சோப இலட்சம் பேர், வாழுகின்ற வீடுகள் குக்கிராமத்தைதுக் குப்பைத் தொட்டிகளாக இருக்கின்றன.

ஆருயிர்த் துணைவிக்கும், அருமை மிகு பிள்ளைகட்கும் முத்தமீந்து கட்டுமரத்தில் மிதக்கின்ற கடலாடும் தொழிலாளி—திரும்பி வந்தால் தான் நிச்சயமென வாழ்கின்ற பாட்டாளி—புயலின் சூழ்ச்சுக் காற்றில் சிதறிப் பறக்கும் ஓலைக் குடிசைகளைத் தான் தன் பாதுகாப்பு அரண்மனைகளாக எண்ணிக் கிடக்கிறான்.

உணவு வழங்கும் உழவன்—மானங்காக்க உடை தரும் நெசவாளி—வியர்வைத் துளிகளைத் தன்னைப் பெற்றெடுத்த இந்திய மண்ணுக்குப் பன்னீர்த் துளிகளாகத் தெளித்துக் கொண்டிருக்கும் தொழிலாளி—சுரங்கம் தோண்டுவோன்—முத்துக் குளிப்போன்—உலைக்கூடத்தில் வதைபடுவோன்—மண் சுமப்போன்—மரம் ஏறுவோன்— உடை வெளுப்போன்—முடி திருத்துவோன்—ஏதோ இரண்டெழுத்து படித்து எழுத்தர் பணி புரிவோன்—இன்னோரன்ன மக்கள் தொகுதியினர் வாழ்விலே இன்பத் தென்றல் வீசிடவில்லை. அதற்காக முயற்சிகள் எடுக்கப்படாமல் இல்லை. ஆனால் அந்த முயற்சிகள், முழுப் பயனையும் அளித்திடத் தக்க வண்ணம் அமைந்திடவில்லை. ஐந்து பேருக்காகத் தயாரிக்கப்படும் விருந்து, பரிமாறப்படுகிற நேரத்தில் பத்துப் பதினைந்து பேருக்கு என்ற நிலைபெற்று விடுமானால், அதனை அருந்தி மகிழ்வதில் முழுமை எப்படி இருந்திட இயலும்?

'எல்லையுடைய புவியின் மீது
எல்லையற்ற வளர்ச்சி சாத்தியமன்று'

என்பதை, ஒவ்வொரு தனி மனிதனும் உணர்ந்து, அதற்கேற்ப நடந்தால்தான் வளர்ச்சித் திட்டங்களின் முழுப் பயனை சமுதாயம் பெற்றிட முடியும்.

எத்தகைய பொருளாதார முன்னேற்றத் திட்டங்களைத் தீட்டினாலும், கட்டுக்கடங்காத வகையில் மக்கட் பெருக்கம் செல்லுமேயானால் திட்டமிடப்பட்ட பொருளாதாரத் திட்டங்கள் காட்டில் காய்ந்த நிலவாகத்தான் ஆகிவிடும்.

இத்துணைச் சிரமங்களுக்கிடையே மக்கட் பணி நடைபெறும்போது அரசின் முயற்சிகளைத் தகர்த்தெறியும் பொருளாதாரக் குற்றவாளிகள்—சமூக விரோதிகள், எரியும் வீட்டில் பிடுங்கிய வரை ஆதாயம் என்பதுபோலத் தங்கள் கைவரிசையைக் காட்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள். இந்த மக்கள் நல விரோதிகளைத் தடுத்து நிறுத்த—மத்திய அரசு எடுத்திடும் நடவடிக்கைகளில் தமிழக அரசு, தன்னுடைய ஒத்துழைப்பைத் தயங்காமல் தந்து வருகிறது. கடத்தல்காரர்—கறுப்புப் பண முதலைகள்—வரி ஏய்ப்போர்—கலப்பட வணிகர்—பதுக்கல் மனிதர் இவர்களைச் சமுதாயத்தின் ஓர் அங்கம் என்று கூறக் கூட நாகூசுகிறது. சமுதாயத்தை அழிக்கும் புற்று நோயாக அவர்கள் வளர்ந்து விட்டார்கள். அந்தக் கொடிய நோய் தடுக்கப்பட — அதன் கோரப் பிடியிலிருந்து நமது மக்கள் விடுவிக்கப்பட இந்திய அரசு எடுக்கும் எந்தக் கடுமையான நடவடிக்கைகளும் வரவேற்கத் தக்கவைகளேயாகும். அதற்கு எடுத்துக் காட்டாகத் தான், நமது மாநிலத்திலும் உள்ள கள்ளச் சாராயம் காய்ச்சுவோர்—கடத்தல் மன்னர்கள்—உணவு பதுக்குவோர்—கலப்படம் செய்வோர் நூற்றுக் கணக்கில் கைது செய்யப்பட்டுள்ளனர். முற்போக்குத் திட்டங்களில் நமக்குள்ள குன்றா ஆர்வத்தின் காரணமாக ஏற்கனவே ஏராளமான திட்டங்களை நிறைவேற்ற தொடங்கியுள்ளோம். மேலும் நிறைவேற்றிட அயராது பாடுபடுகிறோம். மக்களின் தேவைகளுக்கு இறுதியான எல்லைக் கோடுகளைகிழித்து விட முடியாது. அதை உணர்ந்த தமிழக அரசு "எவ்வளவு செய்ய வேண்டியிருக்கிறது" என எண்ணி மலைத்துப்போய் நின்றுவிடாமல் — முடிந்ததைச் செய்யத் தொடங்குவோம் என தன் இலட்சியப் பயணத்தை அடித்தளத்து மக்களின் மேன்மைக்காக மேற்கொண்டிருப் பதை அனைவரும் அறிவீர்கள். இந்தியாவை ஊனப்படுத்த எத்தகைய ஆபத்து எங்கிருந்து வந்தாலும், அது எத்தகைய வலிமையோடு வந்தாலும், அதனை எதிர்த்தொழிக்கும் பணிகளில் தமிழ் மக்கள் தோள் கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள் என்பதற்கு அடையாளம் தான் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பின்போது, ஆறு கோடி ரூபாயை யுத்த நிதியாகப் பிரதமர் அவர்களிடம் நாம் வழங்கிய நிகழ்ச்சியாகும்.





இந்திய விடுதலைக்காக சிறைப்பட்டோர்—செக்கிழுத்தோர்—செத்து மடிந்தோர் — கண்ட கனவாம்; இந்திய ஒற்றுமையைக் கட்டிக் காப்போமென இந்நாளில் சபதம் ஏற்றிடுவோம்.

பல்வேறு கலாச்சாரங்களை—பல மொழி பேசும் தேசிய இனங்களைக் கொண்ட—இந்தப் பெருநாட்டில் ''வேற்றுமையிலும் ஒற்றுமை'' என்ற கொள்கை வெற்றி பெற நமது பணி தொடர்ந்திட வேண்டும்.

இப்பணி, இந்திய நாட்டை மேலும் பலப்படுத்தும் வகையிலேயே நடைபெற்றிட வேண்டும்.

மாநிலத்துக்கு மாநிலம் இணக்கமான நல்லுறவுகள் தோன்றவும், —சிறுபான்மை மொழியினர் பாதுகாப்புப் பெற்றிடவும் — அந்தந்த மாநில மொழிகளுக்குரிய மாண்புகள் குலைந்திடாமல் சீரும் சிறப்பும் மிகுந்திடவும்—நாட்டின் நாலா திசைகளிலும் உள்ள கலைச் செல்வங்களுக்கு மதிப்பு—தியாகத் தலைவர்களுக்கு மதிப்பு — சான்றோர்களுக்கு மதிப்பு—என்ற முறையில் ஒரு திசையினர் மற்றொரு திசையினரை மதித்திட வேண்டும்.

அதில், நீண்ட நெடுங்காலமாக நமது தமிழ்நாடு மிகப் பெரிய உள்ளத்தோடு விளங்கி வந்திருக்கிறது. இப்போது தமிழகத்தை நாட்டின் பல பகுதிகள் பின்பற்றத் தொடங்கியிருக்கின்றன. குமரி முனையில் விவேகானந்தர் மண்டபம்!

டெல்லித் திருநகரில் குடியரசுத் தலைவர் திறந்து வைத்த திருவள்ளுவர் சிலை!

டெல்லியில் திரு. ஜெகஜீவன் ராம் தலைமையில் அமைந்துள்ள ராஜேந்திர பவன்—முன்னாள் குடியரசுத் தலைவர் ராஜேந்திரப் பிரசாத் பெயரால் அமையும் நினைவாலயம் —அதற்கு தமிழக அரசின் நிதி உதவி ஆறு மாதங்கட்கு முன்பே வழங்கப் பெற்றது ஒரு இலட்ச ரூபாய்.

இதோ, உத்திரப் பிரதேசத்தில் சுல்தான் பூர் என்னுமிடத்தில் மத்திய துணை அமைச்சர் கே. என். சிங் தலைமையில் உள்ள கமலா நேரு அறக்கட்டளை விஞ்ஞானக்கூடத்தில் அமைக்கப்படும் மருத்துவமனையின் ஒரு பகுதிக்கு நமது அறிஞர் அண்ணா பெயர் வைக்கப்படுவதற்காக தமிழ்நாடு அரசின் சார்பில் ஒரு இலட்ச ரூபாய் நிதி வழங்கியுள்ளோம்.

இத்தகைய நல்லுறவுப் பரிமாற்றங்களையே நாம் வெகுநாட்களாக வலியுறுத்தி வந்திருக்கிறோம். உறவுகள் நிலைக்க உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும், அந்த உரிமைகள் நியாயமானவைகளாக இருக்க வேண்டுமென்பதில் நமக்கு கருத்து வேற்றுமை கிடையாது.

இந்த நாளில் நாம் விரும்புவது; அனைவரும் மகிழத்தக்க வகையில், இயல்பான சூழ்நிலைகள் உருவாக வேண்டும்—கட்டுப்பாடு குலையாமல்!

இல்லாமையை இல்லாததாக்கி

பொல்லாததை நிலைத்து நிற்காமல் பொசுக்கி

நடப்பவைகள் அனைத்தும் நல்லவைகளாக

அமைய அனைவரும் பணிபுரிய வேண்டும்.

இதனைக் கூறி, என்னருந் தமிழ் நாட்டு மக்களுக்கு, விடுதலை நாள் விழா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# TAMIL NADU RENEWS PLEDGE TO PROTECT AND PRESERVE INDIA'S UNITY.

## THE MARTYRDOM OF FREEDOM FIGHTER'S SHALL NOT BE IN VAIN!

"Today — 15th August — is a day of rejoicing over the recollection of that day of days 28 years ago, when the golden sun of Freedom in effulgent splendour cleared away the engulfing mists, of serfdom and spread out the light of Independence through the length and breadth of the Indian soil.

In order to root out the foreign domination that was continuing its aggression on our motherland, freedom-lovers had to wage a struggle not for a day or two but through very many years, on numerous fronts, and adopting a variety of methods. **Our history sobs in anguish while recording the fact that the leaders of the battalions which had set out to break the shackles that bound the Mother were beheaded mercilessly.**

The tombs of those lamps of sacrifice, however, sport the smile of victory. Battlefields where bullets were sprayed in torrents ;—corpses that spurted blood as they were thrown to the ground ; prison-blocks that opened wide their demoniac mouths with a fiendish clamour to devour the freedom-fighters ; records of repression that speak volumes of the tortures inflicted — was it not against the back drop of the anthology of these gruesome events that the golden flower of Indian Independence came to bud and blossom ! And was it not also Mahatma Gandhi's dream that this flower of gold should come to be extolled by the world for acquiring fragrance too!

### PROBLEMS OF POVERTY

Compared to the conditions prevailing in many other free countries, the situation in India is vastly different. When other countries have realised the need for and taken action to see that only nutritious food should be given to children, here in our land there is practically no concern about nutrition ; rather, it is enough if food of some sort is found for the starving stomach. The sole concern of our poor — their numbers is legion — is to find even this morsel of food to keep the wolf at bay.

A vast majority of our population merely manage to exist, with their outstretched hands warding off the severity of the scorching sun and the tree-side alone serving as their mansion of shelter from the pouring rain.

The abodes of lakhs and lakhs of Harijans —fondly hailed as the children of God — are little more than the garbage-bins of the tiny villages.

The fisherman who gambles with his life on the seas every time he departs bidding farewell to his near and dear ones and sets sail on the catamaran and is sure of his life only when he sets foot again on the shore — is not so secure on land either, for a mere whiff of a gale can blow away, his frail palm—leaf huts and deprive him of his only shelter.

The zephyr of joy does not blow through the life of the vast masses of the working class — the farmer who brings up food, the weaver who provides cloth to preserve our dignity, the labourer whose sweat enriches this our mother-land, the miner, the pearl-diver, the blacksmith, the porter, the tree-tapper, the washerman, the hairdresser and the clerk who has merely mastered the three R's— these precious sons of our soil, do still find their lives blighted by negligence.

### MOONLIGHT WASTED ON FOREST

It is not as if efforts have not been initiated to improve the lot of these people. Only, those efforts have not been such as to yield adequate results. Who can savour a feast, if it is one which has been prepared for five but finds itself being served to 10 or 15 at the time of eating ?

If the society is to obtain the full benefits of developmental plans, then every individual has to realise, and also act on the realisation, that uncontrolled growth is not possible when the earth which supports us has no means to expand.

முதல்வர் கலைஞர் அவர்களின்
விடுதலை நாள் விழா உரையின்
ஆங்கில ஆக்கம்

Whatever be the plans drawn up for economic advancement, they would be as chimerical as moon-light in the forest, if population increases in uncontrolled manner.



## ENEMIES OF THE PEOPLE

Even while public service is being carried on in the midst of difficulties of these dimensions, there are persons who commit economic offences, and set at naught the endeavours of the Government ; these persons are anti-social elements and they are out to grab whatever is worth from the burning house. The Government of Tamil Nadu has been extending its unhesitant co-operation to the efforts of the Central Government to stamp out these evil practices.

Smugglers, blackmoney tycoons, tax-dodgers, adulterators and hoarders — one shudders even to mention these elements as a par of our society,— for they have grown as cancer in the body politic. However stern and drastic be the steps taken by the Government of India to curb this dreadful disease and to release our people from its vicious clutches — those measures deserve to be welcomed. In token of our resolve, the distillers of illicit arrack, smuggler-barons, hoarders and adulterators have been arrested in hundreds here in our State also.

## UNFLAGGING ARDOUR

Because of our unflagging ardour for progressive measures, we have been implementing a number of such schemes ; and we are working tirelessly to fulfil more such plans. The minimum needs programme can have no bounds. All of you are aware that, having realised this, the Government of Tamil Nadu has not stood aghast at the volume of work yet to be done but has, on the other hand, proceeded in right earnest on the journey towards its ideal by commencing whatever could be done for the uplift of the people at the lower strata.

Whatever be the dimension of the danger that arises to harm India, from wherever and however intense in form it may come, the people of Tamil Nadu are ever prepared to lend their strength to the task of dealing with and disposing of the threat ; and it was as a symbol of this determination that, at the time of the last Pakistani aggression, we handed over a sum of Rupees six crores to the Prime Minister as our contribution to the Defence Fund.

We shall take a pledge on this day to protect and preserve Indian Unity which was the dream of those who were imprisoned, who were yoked to the mill and who gave up their lives even, for the sake of India's freedom.

## TOWARDS MEANINGFUL UNITY

Our task must continue for making a success of the principle " Unity in diversity " in this vast country comprising a variety of cultures and national entities speaking different languages. This task should be carried out in a manner to strengthen India still further.

Those in one region of the country should display due regard to their counterparts in other regions so that States may come together in friendly relations, so that the linguistic minorities may have protection, so that the special characteristics of each of the State languages may not be whittled down but may be preserved and nurtured, so that the art-treasures in the four corners of the country may be accorded appropriate appreciation and so that the leaders who are the embodiment of sacrifice and the noble elders are held in esteem throughout the length and breadth of our country.

In this respect, our Tamil Nadu has been functioning with a very large heart for a very long time. And now other parts of the country have begun to emulate the example of Tamil Nadu. The Swami Vivekananda Memorial at Kanyakumari! And in the city of Delhi, the statue of Thiruvalluvar that was unveiled by the President of our Republic! Tamil Nadu had already sent its contribution of Rs. 1 lakh for the erection of the Rajendra Bhavan — a memorial for the former President of India, Dr. Rajendra Prasad — to the committee headed by Mr. Jagjivan Ram.

The Government of Tamil Nadu has also contributed a sum of Rupees one lakh to the Kamala Nehru Trust functioning under the chairmanship of Mr. K.N. Singh, Central Deputy Minister, to establish a post-graduate Medical Research Centre in Sultanpur, U.P., so that a section of the Hospital coming up as part of the above centre may be named after Dr. Anna.

## NORMALCY WITH DISCIPLINE

It is this type of exchange of friendly relations that we have been emphasising for long. Good relationship is sustained by well-preserved rights — and those rights have also to be reasonable is our conviction.

What we desire today is that normal conditions should emerge in a manner to enthuse the hearts of all and without impairing discipline.

All of us should engage ourselves in the task of putting an end to penury, of stamping out the evils and of ensuring that all that emerges shall only be the good things.

With these words, I offer Independence Day Greetings to the beloved people of my precious Tamil Nadu."

*(Text of speech delivered by Dr. Kalaignar M. Karunanidhi, Chief Minister of Tamil Nadu, at the Flag Hoisting ceremony held at Fort St. George, Madras on Independence Day, 15th August, 1975).*

# பார்த்தோம்! படித்தோம்!

## முன்னறிவிப்பு

ஒவ்வொரு இதழ் 'தமிழரசு' இதழிலும் அடுத்த இதழ் தமிழரசில் என்னென்ன வரும் என்பதை முன்னறிவிப்பாகத் தொடர்ந்து வெளியிடுங்கள். எப்பொழுதும் 'தமிழரசு' இதழ் வாங்கிக்கொண்டிருப்பவன் நான். வெளியூர் சென்றிருந்ததால் இரண்டு நாள் தாமதமாக வாங்க நேர்ந்தது. ஆனால் பன்னிரண்டு வண்ணப்படங்களை வெளியிட்ட தமிழரசு இதழைப் பார்க்கவே முடியவில்லை. எங்கள் ஊரில் எங்கு தேடியும் கிடைக்க வில்லை! எப்பொழுதும் கவன மாக இருக்க முன்னாலேயே வெளியிட்டால் எங்களுக்கு நன்மையாக இருக்கும்.

—எஸ். ஜனார்த்தனன், மதுரை—11.

## ஐயப்பாடு

'எண்ணுக தமிழில்! எழுதுக தமிழில்!' பேட்டிக் கட்டுரை சிறப்பாக அமைந்திருந்தது. தமிழுணர்வு அளிப்பதாகவும் இருந்தது. ஆனால், புதிய எழுத்துச் சீர்திருத்தம் என்று எழுதியிருப்பதுதான் புதிய குழப்பமாக உள்ளது. அது அவ்வளவு முக்கியமானதுதானா?

—பொன். இமயவரம்பன், சேலம்.

## விளக்கம்

உளுந்தூர்ப்பேட்டை சண்முகம் அவர்களின் கவிதையான 'சுற்றுலாச் செல்வோம்!' மிகச் சிறப்பான கவிதையாகும்! கன்னித்தமிழ் மகள் அழைப்பை விளக்கிடும் வகையில் அச்சிடப் பட்டிருந்த படங்கள் அருமை யான விளக்கமாகும்! சுவை கொள்ளா விருந்தாகும்.

—வெ. நாராயணன், வேலூர்.



## வேண்டுகோள்

வேளாண்மைக் கட்டுரைகள் செய்திகள் ஆகியவற்றை மட்டும் தனியாகப் பிரித்து எடுத்து 'பைண்டிங்' செய்து கொள்ளும் வகையில் 'தமிழரசு' இதழில் வெளியிட்டால் சிறப் பாக இருக்கும். மிகச் சிறந்த முறையில் வெளிவரும் வேளாண் மைக் கட்டுரைகளைப் பாது காப்புடன் எடுத்து வைத்துக் கொள்ள வசதியாகவும் இருக் கும். இது என்னுடைய வேண்டு கோள் மட்டுமல்ல! என்னுடைய நண்பர்களின் வேண்டுகோளும் இது தான்.

—துரை. முத்துவேலன், திருச்சிராப்பள்ளி.

## தொடர்க!

சமூகநலத்துறை அமைச்சரின் வானொலி உரையை வெளி யிட்டுள்ளீர்கள். இதுபோன்று வானொலியில் ஒளிபரப்பப்படும் மருத்துவச் செய்திகளைத் தொகுத்துச் சுருக்கமாக வெளி யிட்டால் பயனுள்ளதாக இருக் கும். இதனைத் தொடர்ந்து செய்யும்படி வேண்டுகிறோம்.

—எம். கணபதி, காஞ்சிபுரம்.

## எச்சரிக்கை

ஒரு சில 'தமிழரசு' இதழ்கள் கிடைப்பது அரிதாகிவிடுகிறது. அந்த இதழ்களுக்காக வாசகர்கள் மிகவும் எச்சரிக்கை யாக இருக்க— அந்த இதழில் என்ன வருகிறது என்பதை முன்னாலேயே பெரிய அள வில் — வாசகர்களின் கவனத்தைக் கவரும் வகையில் விளம்பரங்கள் செய்யுங்கள். நாங்கள் எச்சரிக்கையாக இருக்க முடியும்!

—தெ. சங்கரலிங்கம், திருநெல்வேலி—1.

## தெளிந்தோம்

தமிழ் நாட்டரசின் பொருளா தார முற்போக்குத் திட்டங்களைத் தெளிவாக்கிக் காட்டும் வகை யில் படங்களுடன் வெளி யிட்டிருந்த விவரங்களைப் படித்துத் தெளிவாகப் புரிந்து கொண்டோம். அதைப்படித்தால் இதுவரை தெளியாத உள்ளங் களும் தெளிவடையும்.

—தஞ்சை. வளவன், கோவை—6.

## மகிழ்ச்சி! நன்றி!

வைகைக் கால்வாய்கள் சீரமைப்புத் திட்டம் பற்றிச் சிறப் பான கட்டுரையை வெளி யிட்டுள்ளீர்கள். பார்த்திபனூர் மதகுகளைப் பார்க்கும்பொழுது இதைப்பற்றியெல்லாம் எங்கள் பகுதி மக்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் தமிழரசில் செய்தி வருவதில்லையே என்று வருந்தினேன். கடந்த தமிழரசு இதழில் கட்டுரையைக் கண்டு மகிழ்ந்தேன். நன்றி!

—சிவ. சேதுபதி, மானாமதுரை.



# தரத்திற்குப் பெயர் டான்சி



கே: தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் தோற்றம் பற்றிக் கூற இயலுமா?

ப: தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம், 'டான்சி' (TANSI) என்ற பெயரில் நாட்டு மக் களுக்கு நன்கு அறிமுகமாகி யிருக்கின்றது. இந்த நிறுவனம் 55 உற்பத்திக் கூடங்களைத் தன்னகத்தே கொண்டது. இந்த உற் பத்திக் கூடங்கள் மாநிலத் தின் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமூட்டுவதற்காகத் தமிழ் நாடு அரசு தொழில் துறை யினரால் முதலில் துவங்கப்பட் டவைகளாகும். ஏற்கெனவே அரசினரால் நடத்தப்பெற்று வந்த இத்தொழிற்சாலைகளை வாணிப அளவில் மாற்றிய மைத்துச் செயல்படும் வகை யில், தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் 1965-ஆம் ஆண் டில் நிறுவப்பட்டது.

**மக்களுக்குத் தேவையான தரமான பொருள்களைக் குறைந்த விலையில் வழங்குகிறது 'டான்சி' எனப்படும் தமிழ் நாடு சிறுதொழில் நிறுவனம். குறிப் பாகக் கட்டுமானப் பணியில் இதன் புகழ் கோபுரமென உயர்ந்திருக்கிறது. இதன் வளர்ச்சிப் பணிகளை விளக்கிக் கூறு கிறார் தமிழ்நாடு சிறு தொழில் நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு. ஆர். சண்முகம், ஐ. ஏ. எஸ். அவர்கள்.**



தமிழ்நாடு சிறுதொழில் நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு ஆர். சண்முகம் ஐ.ஏ.எஸ்., அவர்களின் —பேட்டி—

கே: 'டான்சி'யின் நோக்க மென்ன?

ப: சிறுதொழில் வளர்ச்சி யில் கண்ணுங்கருத்துமாக இருந்து அதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தல்; நியாய மான விலையில் தரமான பொருள்களைத் தயாரித்தல் போன்றவை இதன் நோக்கங் களாகும்.

கே: இதன் வளர்ச்சியைச் சற்று விளக்கிட முடியுமா?

ப: 1966-67-ல் ரூ. 479 இலட்சம் பெறுமானமுள்ள பொருள்களையே உற்பத்தி செய்து வந்துள்ள இந்த நிறு வனம், படிப்படியாக உற் பத்தியைப் பெருக்கி, 1973-74-ல் ரூ. 919 இலட்சமாக உயர்ந்துள்ளது என்பது குறிப் பிடத்தக்கது.

1974-75-ஆம் ஆண்டில் ஏறக்குறைய ரூ. 931 இலட்ச மாக உற்பத்தி இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவன்றி, இந்நிறுவனம் 1973-74—ஆம் ஆண்டு ரூ. 26.78 இலட்சம் நிகர இலா பம் அடைந்துள்ளது. நடப்பு ஆண்டிலும் இதே அளவு இலாபம் அடைவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

கே: டான்சியின் கீழ் மொத்தம் எத்தனை தொழிற் சாலைகள் இயங்கி வருகின்றன? அவை என்னென்ன?

ப: இந்நிறுவனத்தின் கீழ் மொத்தம் 55 தொழிற் சாலைகள் இயங்கி வருகின்றன. டான்சியின் கீழ் இயங்கி வரு...



மரத் தட்டுமுட்டுச் சாமான்கள் தொழிற்கூடம்

தொழிற்சாலைகள் செயல்படுகின்றன. கிண்டிக் கூடம், இந்தத் துறையில் அனைத்திந்திய தொழிற்சாலைகளுள் சிறந்ததாகக் கருதப்படுகிறது. இதன் உற்பத்திகள், தும்பா ஏவுகணை நிலையம், சித்தரஞ்சன் லோகோ தொழிற்சாலை போன்ற பெருநிலை தொழில் நிலையங்களுக்குப் பெரிதும் பயன்படுகின்றன.

**(6) இரும்பு வார்ப்படத் தொழிற்சாலைகள்:** இவை கிண்டி, காட்பாடி, தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் அமைக்கப் பட்டிருக்கின்றன. இங்கு உற்பத்திச் செய்யப்படும் வார்ப்படக் குழாய்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் ஆகிய இடங்களுக்குப் பெருவாரியாக அனுப்பப்படுகின்றன.

**(7) வேளாண்மை உபகரணங்கள் செய்யும் தொழிற்சாலை:** இந்தத் துறையில் பணியாற்ற இரண்டு தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. திருச்சியில் அமைக்கப்பட்டிருக்கும் விவசாயக் கருவிகள் தொழிற்சாலை கலப்பை, இழுவை (Trailer) போன்ற பொருள்களை உற்பத்தி செய்வதில் பெரும் பெயர் பெற்றிருக்கிறது. கும்பகோணத்தில் நடைபெறும் டான்சி தொழிற்சாலையில் (Brass and Steel Works) பூச்சி மருந்து தெளிக்கும் உபகரணங்கள் செய்யப்படுகின்றன.

**(8) தோல் தொழிற்சாலைகள்:** உலகத் தோல் சந்தைகளில் ஒவ்வொரு ஆண்டும் பங்கு பெற்றதன் பயனாக, டான்சியின் தோல் பதனிடும் தொழிற்சாலை (Tannery) அனைத்துலகிற்கும் நன்கு அறிமுகமாகியிருக்கின்றது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள விண்ணமங்கலம் என்ற ஊரில் இயங்கி வரும் இந்தத் தொழிற்சாலை பல்வேறு ஐரோப்பிய நாடுகளுக்கும் பதனிட்டத் தோல்களை ஏற்றுமதி செய்து வருகின்றது. டான்சி நிறுவனத்திற்கு விண்ணமங்கலத்தில் மற்றொரு தொழிற்சாலையும் உண்டு. அது ஆட்டு ரோமத் தொழிற்சாலை (Wool Processing Centre) ஆகும். இதன் உற்பத்தி அனைத்தும் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. ஒரு ஆண்டில் ரூ. 1 கோடி மதிப்புள்ள தோல் பொருள்களை இது உற்பத்தி செய்கிறது.

தோல் பிரிவிலுள்ள மற்ற மூன்று தொழிற்சாலைகளில் (Leather Works) இரண்டு சென்னை பெரம்பூரிலும், மற்றொன்று பல்லவபுரத்திலும் அமைந்திருக்கின்றன. பெரம்பூர் தொழிற்சாலைகள் காலணிகள் தயாரிப்பில் ஈடுபட்டிருக்கின்றன. காலணிகள் தவிர்த்து, தோலினாலான பொருள்கள் அனைத்தும், பல்லவபுரம், தொழிற்சாலைகள் மூலமே நிறைவேற்றிக் கொள்கின்றன.

**கே: 'ஏனைய பிற தொழிற்சாலைகள்' என்னென்ன ?**

ப: கிண்டியில் அமைக்கப் பட்டிருக்கும் கண்ணாடிப் பொருள் தொழிற்சாலை கல்வி நிலையங்களுக்கும், தொழில் நிறுவனங்களுக்கும் தேவையான கண்ணாடிக் கருவிகளைச் செய்து வருகின்றது. தமிழ்நாடு பால்வள நிறுவனத்தால் உபயோகிக்கப்படும் பால் சீசாக்கள் இந்தத் தொழிற்சாலையில் தயாரிக்கப்படுபவையேயாகும்.

மேற்கூறிய பிரிவுகளில் அடங்காது ஒன்பது தொழிற்சாலைகள் பல தரப்பட்ட உற்பத்திகளுக்காக இயங்கி வருகின்றன. இவற்றில் ஏழு தொழிற்சாலைகள் கிண்டியிலேயே அமைந்திருக்கின்றன. கிண்டியிலுள்ள தகடு அழுத்தப்பட்டறை (Sheet Pressing Works) அழுத்தப்பட்ட உபகரணங்களைப் பிற தொழிலகங்களுக்குத் தயார் செய்து கொடுக்கின்றது.

இங்குள்ள கொல்லுலையில் (Forging Works) தயாரிக்கப்படும் உபகருவிகள் திருச்சி கனரகத் தொழிற்சாலை போன்ற தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படுகின்றன. இயந்திர இயல் தொழிற்சாலையில் (Machine Shop) போர்க் கருவிகளுக்கான நுணுக்கமான சாதனங்கள் செய்யப்படுகின்றன. இந்தத் தொழிற்சாலை தகடு அழுத்தப்பட்டறையுடன் இணைந்து, ஆவடி போர் துறையினரால் செய்யப்பட்ட புகழ் வாய்ந்த விஜயந்தா கவச 240 பீரங்கி வண்டிக்கான உபகரணங்களை வெற்றிகரமாகச் செய்து தந்தது.

டான்சியின் அழுத்த அச்சு வார்ப்படத் தொழிற்சாலை (Die Castings) அனைத்து இந்தியாவிலும் நன்கு அறிமுகமாகி இருக்கிறது. இதில் தயாரிக்கப்படும் அழுத்த அச்சு வார்ப்படங்கள் மோட்டார் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள், மின் அளவிகள் போன்ற சாதனங்களுக்கு நன்கு உபயோகப்படுகின்றன.

எனாமல் பூசப்பட்ட செப்புக் கம்பிகளும், இரட்டை நூல் சுற்றிய செப்புக் கம்பிகளும் கிண்டியிலுள்ள மின்கம்பித் தொழிற்சாலையில் (Enamelled Wires Factory) செய்யப்படுகின்றன.

மின் கருவிகள் பிரிவில் (Electrical Works) மின் இயந்திரங்களும், பிற கருவிகளும் பழுது பார்க்கப்படுகின்றன. டான்சி அச்சகம் டான்சியின் தேவைகளை நிறைவேற்றுவதுடன், பிற அரசு நிறுவனங்களுக்கும் அச்சு வேலை செய்கின்றது.

திண்டுக்கல்லிலுள்ள பூட்டுத் தொழிற்சாலை இணைப்புப் பெட்டித் தொழிற்சாலைக்குத் (I.C.F.) தேவையான சிறப்புப் பூட்டுக்களை உற்பத்தி செய்வதுடன், நகராட்சிகளுக்கும், பால்வள நிறுவனத்திற்கும் வேண்டிய எஃகு விற்பனைச் சாவடிகளையும் (Steel Stalls) தயார் செய்கிறது.



இரும்பு பீரோக்கள்

கோயமுத்தூரிலுள்ள டான்சி கொல்லுலை (Forging Works) மின் வெப்பத்தால் இரும்பு எஃகு பொருள்களைச் சரிநிலைப்படுத்தும் சாதனங்களையும் பெற்றிருக்கின்றது.

இவையன்றி, முதல்வர் கலைஞர் அவர்கள் பிறந்த நாள் பரிசாக வழங்கப்பெறும் சைக்கிள் ரிக்ஷா, ஊனமுற்றோர்க்கான சக்கர வண்டிகள், இந்தி எதிர்ப்புத் தியாகிகளுக்கான பட்டயங்கள் ஆகியவை இந்நிறுவனம் தயாரித்துள்ளது. முட்டுக்காடு ஊனமுற்றோர் பயிற்சி நிலையத்துக்கான வடிவமைப்புகள், கட்டுமானப் பணிகள் போன்ற சமுதாயப் பணிகளிலும் இந்நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது.

**கே: இந்நிறுவனத்தின் சார்பில் எத்தனைத் தொழிலாளர்கள் பயன் பெறுகின்றனர்?**

ப: 4,500 தொழிலாளர்கள் 55 'யூனிட்'டுகளில் பணியாற்றுகிறார்கள். ஏறத்தாழ ரூ. 45 இலட்சத்திற்கும் கூடுதலாக ஊதியம் தரப்படுகிறது. நிர்வாகத்தினருக்கும் தொழிலாளருக்கும் சுமுக உறவு இருந்து வருவதையும் இங்குக் குறிப்பிட வேண்டும். இந் நிறுவனம் தனது ஊழியர்களுக்கும், அலுவலர்களுக்கும் டான்சி நகரில் வீடுகள் கட்டிக் கொள்ள கடன் வழங்கி உதவியுள்ளது. தொழிலாளரின் துயர் துடைக்கும் வகையில் அவர்களுக்கு எளிய தவணைகளில் திருப்பிச் செலுத்தக் கூடிய (அட்ஹாக்) முன்பணம் வழங்கியுள்ளது.

**கே: இதுபோன்ற நிறுவனங்கள் வேறு மாநிலங்களில் உள்ளனவா?**

ப: இது போன்ற நிறுவனம், இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் இல்லை. அரசு சார்பில் வெற்றிகரமாக நடந்து வரும் நிறுவனம்—பல் வேறு தொழில்களை ஒரே கூரையின்கீழ் செம்மையாகச் செய்துவரும் நிறுவனம் இது ஒன்றே என்று நாம் பெருமையாகக் கூறிக் கொள்ளலாம்.

**கே: இங்கு உற்பத்தியாகும் பொருள்கள் மேலை நாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றனவா?**

ப: ஆம். இந்நிறுவனத்திலுள்ள தொழிற்சாலைகளுள் விண்ணமங்கலத்திலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலையே மிகப் பெரியதாகும். இத்தொழிற்சாலை இந்திய மற்றும் உலகச் சந்தைகளுக்காகப் பதனிடப்பட்ட பல் வகைத் தோல் பொருள்களை உற்பத்தி செய்கின்றது. பதனிடப்பட்ட தோல் இத்தாலி, ஜெர்மன் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோம். 1973-74 ஆம் ஆண்டில் இத்தொழிற்சாலையிலிருந்து ரூ. 34 இலட்சம் மதிப்புள்ள பதனிடப்பட்ட தோல்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. பதனிடப்பட்ட உரோமம் ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பி வருகிறோம். இந்தத் தோல் லக்னோ போன்ற இடங்களில் மிகவும் விரும்பி வாங்கப்படுகின்றது.

**கே: 'டான்சி'யின் எதிர்காலத் திட்டங்கள் ஏதேனும் உள்ளனவா?**

ப: உள்ளன. இந்துஸ்தான் மெஷின் டூல்ஸ் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் சில குறிப்பிட்ட இயந்திரக் கருவிகள் தயாரிப்பதற்கான தொழிற்சாலை ஒன்று தொடங்கவிருக்கிறோம். இதுவன்றித் தோல் ஆடைகளைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலை ஒன்றையும், சைக்கிள் டயர் மற்றும் ட்யூப்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றையும் தொடங்கும் திட்டம் உள்ளது. இத்திட்டங்களுக்காக ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 125 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

'மோபெட்' (Moped) மோட்டார் சைக்கிள் உற்பத்தி செய்வதற்கான பூர்வாங்க வேலைகள் முடியும் தறுவாயில் இருக்கின்றமையால், டான்சி நிறுவனம் விரைவில் இந்த மோட்டார் சைக்கிள்கள் உற்பத்தியை மேற்கொள்ளும்.

இவ்வாறு மக்களின் தேவைக்கான பல்வேறு பொருள்களைத் தயாரித்து வழங்குவதில் இந்நிறுவனம் மகுடமாக விளங்குகிறது. தரமான பொருள்களை நியாயமான விலையில் எல்லோரும் பெற்று மகிழ்ந்திடும் வகையில் 'டான்சி' பெருமிதத்தோடு பீடு நடை போடுகின்றது என்பதைக் கூறிக்கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

பேட்டி : பி.வி.ஜ



மருத்துவமனைக்கான இரும்புக் கட்டில்கள்

பல திறப்பட்ட தொழிற்சாலைகள் ஒன்பது வகையாகப் பிரிக்கப்படுகின்றன. அவை:

1. பெரிய கட்டுமானத் தொழிற்சாலைகள் (Structural Works)

2. பொறியியல் தொழிற்சாலைகள் (Engineering Works)

3. தட்டுமுட்டுச்சாமான்கள் தொழிற்சாலைகள் (Furniture Works)

4. மரத் தட்டுமுட்டுச் சாமான்கள் தொழிற்சாலைகள் (Wooden Furniture Works)

5. இயந்திரக் கருவி செய்யும் தொழிற்சாலைகள் (Tool Rooms).

6. இரும்பு வார்ப்படத் தொழிற்சாலைகள் (Foundry)

7. வேளாண்மை உபகரணங்கள் செய்யும் தொழிற்சாலைகள் (Farm Implements Unit)

8. தோல் தொழிற்சாலைகள் (Leather Works)

9. ஏனைய பிற தொழிற்சாலைகள் (Other Works)

கே: இவை ஒவ்வொன்றைப் பற்றியும் கூற முடியுமா?

ப: (1) பெரிய கட்டுமானத் தொழிற்சாலைகள்: இது டான்சியின் மொத்த உற்பத்தியில் கால் பங்கு உற்பத்தியைச் செய்து விடுகின்றது. இத்துறையில் இயங்கிவரும் மூன்று தொழிற்சாலைகள் சென்னை அம்பத்தூரிலும், சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூர் அணையிலும், திருச்சியிலும் இயங்கி வருகின்றன. சென்னை தொழிற்சாலை, விசாகப்பட்டினத்திலுள்ள இந்துஸ்தான் கப்பல் தளத்திற்கும், திருச்சியிலுள்ள பாரத கனரகத் தொழிற்சாலைக்கும் திறம்பட கட்டுமான வேலைகள் செய்து வருகின்றது. மேட்டூர் அணையிலுள்ள தொழிற்சாலையில் கட்டுமான வேலைக்கான வசதிகளுடன், தென்னிந்தியாவிலேயே மிகப் பெரியதாக உள்ள முலாம் பூசும் அறையும் உள்ளது. இரயில்வேயுக்காக இந்தத் தொழிற்சாலையால் உற்பத்தி செய்து தரப்பட்ட 'மைக்ரோவேவ்' கம்பங்கள் அனைத்திந்திய பாராட்டைப் பெற்றுத் தந்திருக்கிறது. திருச்சியில் அமைந்திருக்கும் கட்டுமானத் தொழிற்சாலை, பாரத கனரகத் தொழிற்சாலைக்குத் தேவையான கட்டுமான வேலைகளைச் செய்து வருகிறது.



தோல் பதனிடும் இயந்திரம்



முதல்வர் கலைஞர் பிறந்தநாள் பரிசாக வழங்கப்பட்ட சைக்கிள் ரிக்ஷாக்கள்

தபால் தந்தி, இரயில்வே துறைக்குத் தேவையான கட்டுமான வேலைகளையும் இத்தொழிற்சாலை செய்துள்ளது.

தபால் தந்தி துறைக்கு டான்சி தயாரித்து அளித்த 110 மீட்டர் கோபுரம் ஸ்ரீஹரி கோட்டா வான வெளி ஆராய்ச்சி நிலையத்தாரால் ஆரியபட்டாவுடன் தொடர்பு கொள்ளப் பயன்படுத்தப்படுகிறது. சென்னை டெலிவிஷன் நிலையத்திற்கான 110 அடி கோபுரமும் 'டான்சி' தான் தயாரித்துள்ளது.

குடிநீர் வடிகால் வாரியத்திற்குத் தேவையான இரும்புக் குழாய்கள் வீட்டு வசதி வாரியம், நகராட்சிகளுக்குத் தேவையான பொருள்கள், ஆவடி டாங்க் தொழிற்சாலைக்குத் தேவையான உபகரணங்கள் முதலானவற்றை இந்நிறுவனம் தயாரித்து வழங்கி வருகின்றது.

(2) பொறியியல் தொழிற்சாலைகள்: இவை மாவட்டங்களில் பரவலாக அமைக்கப்பட்டிருக்கின்றன. மாயவரம், விழுப்புரம், கரூர், திருப்பூர், நாமக்கல், தஞ்சாவூர், கிருட்டினகிரி, தூத்துக்குடி, திருவண்ணாமலை, மதுரை, திருச்சி, விருதுநகர், கோயமுத்தூர் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. இந்தத் தொழிற்சாலைகள் அந்தந்த மாவட்டங்களிலுள்ள பொறியியல் தேவைகளை நிறைவேற்றுவதுடன் மின்சார வாரியத்திற்குத் தேவையான பாதை உபகரணங்களையும் செய்து வருகின்றன.

(3) தட்டுமுட்டுச் சாமான்கள் தொழிற்சாலை: எஃகு மேசை, நாற்காலி போன்ற தட்டு முட்டுச் சாமான்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் வேலூர், இராசபாளையம், பழனி ஆகிய இடங்களில் நடைபெறுகின்றன. உறுதியான அமைப்பிலும், மலிவான விலையிலும் தயாரிக்கப்படும் இந்த மேசை நாற்காலி, அலமாரி, கட்டில் போன்ற பொருள்கள் தொழிற்சாலை, அலுவலகங்கள், வீடுகள், மருத்துவ மனைகள் ஆகிய இடங்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

(4) மரத் தட்டுமுட்டுச் சாமான்கள் தொழிற்சாலை: மரத்தால் செய்யப்பட்ட மேசை, நாற்காலி, அலமாரி, கட்டில் போன்ற மரப்பொருள்கள் செய்யப்படும் ஒன்பது தொழிற்சாலைகள் பரவலாக கிண்டி, பொள்ளாச்சி, பத்தமடை, கிருட்டிணகிரி, கடலூர், மன்னார்குடி, சேலம், திருநெல்வேலி, மதுரை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்குத் தயாரிக்கப்படும் பொருள்களின் அழகிய வேலைப்பாடுகளும், உயர்ந்த தரமும் பொதுமக்களால் போற்றப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. தொழிலாளர்களுக்கு ஊக்க ஊதியம் (Incentive) வழங்கும் திட்டம் ஒன்றும் கிண்டியில் உள்ள மரவேலை தொழிற்சாலையில் அமலாக்கப்பட்டு வருகிறது.



அழகிய தோல் பொருட்கள்

(5) இயந்திரக் கருவிகள் செய்யும் தொழிற்சாலைகள்: கிண்டி, அம்பத்தூர், ஈரோடு ஆகிய இடங்களில் இத்




டான்சி டிரெய்லர்





# இந்தியாவில் வேலைக்குப் போகும் பெண்கள்! —ஒரு கணக்கு

1971-ஆம் ஆண்டுக்கான க்கள் தொகைக் கணிப்பின் டி இந்தியாவில் வேலைக்குச் சல்பவர்களின் எண்ணிக்கை மாத்தம் 18 கோடியே 4 லட்சமாகும். இதில் 3 காடியே 13 லட்சம் பேர் பண்கள். இது பெண்களின் மாத்தத் தொகையில் 11.9 தவீதம்தான். வேலைக்குச் சல்லும் பெண்களில் 80 தவீதத்துக்கும் அதிகமான பர்கள் விவசாயத் தொழிலில் டுபட்டுள்ளனர்.

1973-74-ஆம் ஆண்டில் ட்டில் பொதுத்துறையில் பண் ஊழியர்களின் எண் க்கை அதிகரிப்பு வீதம் 7.2 விகிதமாக இருந்தது. 1968 ம் ஆண்டில் 50 லட்சத்து 93 யிரம் பேர்கள் தொழிற் கங்களில் உறுப்பினர்களாக ருந்தனர். இதில் 4 இலட் து 20 ஆயிரம் பேர் பெண் ர்.

இந்தியா கிராமங்களில் வாழ் து என்ற கூற்று ஆண்களைப் ான்றே பெண்களுக்கும் ாருந்தும். நாட்டின் மொத் பெண்கள் எண்ணிக்கை 81 சதவீதம் அதாவது கோடியே 40 இலட்சம் ர் கிராமப்புறங்களைச் ர்ந்தவர்கள். நாட்டில் லைக்குச் செல்லும் பெண் ல் சுமார் 89 சதவீதத் ர் கிராமப்புறங்களில்



## உலக மகளிர் ஆண்டில் புதிய நாணயங்கள்

உலக மகளிர் ஆண்டையொட்டி 1975-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 15 ஆம் நாள் முதல் ஐம்பது ரூபாய், பத்து ரூபாய், 10 காசு மதிப்புள்ள புதிய நாணயங்கள் வெளியிடப் பெற்றுள்ளன. இந்த நாணயங்களில் சமத்துவம், முன்னேற்றம், அமைதி ஆகியவை மையக் கருத்துகளாக அமைந்திருக்கின்றன. இந்த மூன்று வகை நாணயங்களும் சட்டப்பூர்வமாக இந்தியச் செலாவணியேயாகும்.

வேளாண்மை அல்லது வேளாண்மையல்லாத மற்ற வேலைகளில் ஈடுபட்டுள்ளனராம்.

விவசாயம் தவிர அதிக அளவில் பெண்கள் தொழிற்சாலைகளில் பணி புரிகின்றனர். ஆனால் அவர்கள் எண்ணிக்கை 1963-ல் 10.37 சதவீதமாக இருந்தது. 1972-ல் 8.73 சதவீதமாகக் குறைந்தது.

பெண்கள் அதிக அளவில் தொழிற்சாலைகளில் பணி புரியும் மாநிலங்கள் வருமாறு: ஆந்திரப் பிரதேசம், குஜராத், கர்நாடகம், கேரளம், மகாராட்டிரம், தமிழ்நாடு, மேற்கு வங்காளம். தோட்டத்துறையில் பெண்கள் முறையே தேயிலை, காபி ரப்பர் தோட்டங்களில்தான் அதிக அளவில் பணி புரிகின்றனர்.

பொதுத் துறையில் பெண்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து வருகிறது. 1974-ஆம் ஆண்டில் நன்கு அமைந்த துறையில் 21 இலட்சத்து 88 ஆயிரம் பெண்கள் பணிபுரிந்தனர். இத்துறையில், பணி புரிபவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு கோடியே 92 லெட்சத்து 80 ஆயிரம். வர்த்தகம், போக்குவரத்து, தொலைத் தொடர்பு, இராணுவம் போன்ற துறைகளிலும் பெண்கள் பணிபுரிகின்றனர்.

பொதுத்துறையில் பணி புரியும் பெண்கள் பற்றி நடத்திய ஆய்வு ஒன்றிலிருந்து 1974 மார்ச் 31 ஆம் நாள் மாநில அரசுகளில் 42 சதவீதம் பெண்கள் பணி புரிந்தனர் என்று தெரிந்தது. உள்ளூர் அரசு நிறுவனங்களில் 34.3 சதவிகிதம் பெண்கள் பணி புரிந்தனர். ஓரளவுக்கு அரசுடன் தொடர்புடைய நிறுவனங்களில் 15.5 சதவிகிதம் பெண்கள் பணி புரிகின்றனர். மத்திய அரசில் 8.2 சதவிகிதம் பெண்கள் பணி புரிகின்றனர்.

பொதுத்துறையில் எழுத்தர்கள் போன்ற நிலைகளில் உள்ள பெண்களின் எண்ணிக்கை தனியார் துறையை விட அதிகமாக உள்ளது என்று இரு துறைகளையும் பற்றி நடத்திய ஆய்வு ஒன்றிலிருந்து தெரிகிறது. தொழில் அறிவு பெற்ற, தொழில் நுட்பம் இவற்றுடன் தொடர்புள்ள பணிகளில் ஈடுபட்டுள்ள பெண்களின் எண்ணிக்கை தனியார் துறையைவிடப் பொதுத் துறையில் அதிகம் என்று தெரிய வந்தது.

1974-ஆம் ஆண்டில் தேசிய வேலைவாய்ப்புப் பணியில் 6,13,437 பெண்கள் பதிவு செய்து கொண்டனர். பெண்களுக்காக மட்டும் என்று அறிவிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை 28,000. அதாவது பெண்களுக்கு மட்டும் என்று அறிவிக்கப்பட்ட வேலைகளில் சுமார் 87 சதவிகிதம் நிரப்பப் பட்டது.

வேலைவாய்ப்பு நிறுவனங்களின் பதிவேடுகளில் வேலை தேடும் பெண்களின் எண்ணிக்கை 1972-ல் 7 இலட்சத்து 63 ஆயிரமாக இருந்தது, 1974-ல் 9 இலட்சத்து 73 ஆயிரமாக ஆயிற்று.

1948-ஆம் ஆண்டுக்கான குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப் பட்ட அல்லது மாற்றியமைக் கப்பட்ட ஊதிய விகிதங்கள் ஆண்களுக்கும் பெண்களுக் கும் இடையே வித்தியாசம் பாராட்டுவதில்லை. எனினும், 1974 ஆம் ஆண்டில் ஊதிய விகிதங்கள் மாற்றியமைக்கப் பட்டபோதும் கூடச் சில தொழில்களில் ஆண், பெண் இரு பாலருக்கும் இடையே ஊதியத்தில் வித்தியாசம் காணப்படுகிறது. உற்பத்தி, தோட்டம், சுரங்கம் ஆகிய மூன்று துறைகளிலும் ஆண்களை விட பெண்களுக்கு குறைந்த ஊதியமே அளிக்கப் படுகிறது. உற்பத்தித் துறையில்தான் இந்த வித்தியாசம் மிகவும் அதிகமாகக் காணப் படுகிறது.

தீப்பெட்டித் தொழிலில் பெண்களைவிட ஆண்களுக்கு 4.5 மடங்கு அதிக ஊதியம் அளிக்கப்படுகிறது.

எனினும், நுண் ரசாயனங்கள் போன்ற சில துறைகளில் ஆண்களைவிட பெண்களுக்கு அதிக ஊதியம் அளிக்கப்படுகிறது.

தொடக்கத்தில் பல்வேறு சமுதாய காரணங்களுக்காக பெண்கள் தொழிற்சங்கங்களில் சேர்வதில் ஆர்வம் காட்டவில்லை. 1961-62 ஆம் ஆண்டில் இருந்ததை விட 1968 ஆம் ஆண்டில் தொழிற் சங்கங்களில் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை 14 சதவிகிதம் அதிகரித்தது. எனினும், 1965-ஆம் ஆண்டு வரை பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்து வந்தது. தொழிற்சங்கங்களில் 1965-ல் பெண் உறுப்பினர்கள் 5.9 சதவிகிதம் இருந்தனர். இது 1968 வரை சீராக அதிகரித்து 8.2 சதவிகிதமாக ஆயிற்று. உற்பத்தி, விவசாயம், வனத்துறை, மீன் துறை போன்ற துறைகளில் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. 1968-ஆம் ஆண்டில் இத்துறைகளில் 30 ஆயிரம் பெண் உறுப்பினர்கள் இருந்தனர்.

# சிறு துளி பெரு வெள்ளம்

**தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் முதலீடு செய்யுங்கள்**

டெபாஸிட்டுகளுக்கு எங்கள் வட்டி விகிதங்கள் :

1. சீசன் டெபாஸிட்டுகள் - ரூ 1000/-மும் அதற்கு மேலும் — வருடத்திற்கு
   15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை 3.25%
   46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை 3.75%
2. தவணை டெபாஸிட்டுகள் - ரூ 100/-ம் அதற்கு மேலும்

| காலம் | வருடத்திற்கு |
|---|---|
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்கு குறைவாக | 5.75% |
| 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களுக்கு குறைவாக | 6.25% |
| 9 மாதங்களிலிருந்து 1 வருடத்திற்கு குறைவாக | 7.25% |
| 1 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 3 வருடங்களுக்கு குறைவாக | 8.25% |
| 3 வருடங்களும் அதற்கு மேலும் ஆனால் 5 வருடங்கள் வரை | 9.25% |
| 5 வருடங்களுக்கு மேல் | 10.25% |

3. சேவிங்ஸ் கணக்கு 5.75%
4. நடப்பு (current) கணக்கு வட்டி கிடையாது

TNSC BANK



**தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்,**
379, நேதாஜி சுபாஷ்சந்திர போஸ் ரோடு, சென்னை-600 001
தந்தி : 'URBANK' போன் : 20367 (3 லைன்கள்)
டெலக்ஸ் : MS 7225

கிளைகள் : அண்ணா நகர், அண்ணா சாலை (காமதேனு), அண்ணா சாலை (அண்ணா சிலை), அசோக் நகர், பெஸண்ட் நகர், எழும்பூர், காந்தி நகர், கிரீன்வேஸ் ரோடு, ஜவஹர் நகர், கெல்லீஸ், தங்கசாலை, மைலாப்பூர், மைலாப்பூர் குளம், நுங்கம்பாக்கம், புரசைவாக்கம், ராயப்பேட்டை, ராஜா அண்ணாமலைபுரம், சாந்தோம், சாஸ்திரி நகர், ஷெணாய் நகர், தியாகராய நகர் & திருவல்லிக்கேணி.

TNSCB : 122/75


# நன்றிக்கு விலை....

சிறப்புச் சிறுகதை

~ ஆவராணி நடராசன் ~

தருமன் தன் கையிலுள்ள காகிதங்களை மீண்டும் படித்துக் கொண்டிருந்தான். அவன் மனத்தில் அலைமோதும் மகிழ்ச்சியை அடுத்தது காட்டும் கண்ணாடியாக முகம் காட்டியது.

கையிலுள்ள அந்தத் தாள்களைக் கடவுளைக் காண்பது போல் கண்டான். தருமன் இதுவரை கடவுளைப் பார்த்ததில்லை. அப்படிப் பார்த்தாலும், இப்படி மகிழ்ச்சியடைவானா என்பதும் சந்தேகம் தான்!

அந்தத் தாள்களைக் கடவுளுக்கு மேலாகப் பார்த்துப் பரவசமடைகின்றான் என்பதைப் பளபளக்கும் அவன் கண்கள் காட்டின. அவற்றில் முத்துக் கோத்தது போலத் திரண்டு நிற்கும் கண்ணீர்த் துளிகள், நன்றிப் பெருக்கையும், ஆனந்தத்தையும் வெளிப்படுத்தின. அந்தத் தாள்களை மடித்துப் பையில் வைத்துக் கொண்ட தருமன், மேல் துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டான். வேகமாக நடக்க ஆரம்பித்தான். இன்று தருமனின் நடையிலே அலாதியான கம்பீரம்.

இப்பொழுது எதிரே வரும் யாரும் தருமனைப் பார்த்து, ''நினைத்தது எல்லாம் நடக்குமா?'' என்று கேள்வி கேட்டால், அலட்சியமாகச் சிரிப்பான். இப்படிச் சந்தேகத்தோடு கேள்வி கேட்பது பிடிக்கவில்லை என்பான். நினைத்தது ஏன் நடக்காது என்று எதிர்க் கேள்வி கேட்பான். அவன் கையிலுள்ள தாள்கள் அவனை அப்படிக் கேட்க வைக்கும்.

ஆமாம். இரண்டு நாட்களுக்கு முன்பு அவன் குழம்பிய குழப்பம் என்ன? இதை எப்படித் தீர்ப்போம் என்று அவன் திண்டாடிய திண்டாட்டம் என்ன? எல்லாவற்றுக்கும் 'சஞ்சீவி' இப்படிக் கிடைத்ததும் சிக்கல் தீர்ந்து விட்டதால், தருமன் அப்படி உரிமையோடு கேட்பான்.

அவன் அப்படிக் கேட்கும் நியாயத்தையும் நாம் மறுக்க முடியாது. எல்லாம் அந்தத் தாள்கள் தந்தவைதாம்.

தருமனுடைய ராணுவ நடை இன்னும் வேகமாகியது. அந்த வேகத்தில் நாம் கொஞ்சம் பின்னோக்கிச் செல்வோம். அப்பொழுது தருமன் சொல்லும் நியாயமும் அந்தத் தாள்களின் மகிமையும் நமக்குப் புலப்படும்!

இப்பொழுது தருமன் செகந்திராபாத் பகுதியிலுள்ள பொல்லாரம் பகுதியில் இராணுவத்தில் சுமாரான பதவியில் இருக்கிறான்.

தருமனின் சொந்த ஊர், விழுப்புரத்துக்குப் பக்கத்தில் சிறிய கிராமம். ஆனால் படித்தது எல்லாம் வேலூரில்தான். வேலூரில் படிக்கும்பொழுது தான், தருமனுக்கு நண்பனானான் முருகையன்.

அவர்களின் நட்புக்கு ஈடாக 'நகமும் சதையும்போல்' என்று சொல்வது பழைய உதாரணமாகும். பேனாவும் மையும்போல, டயரும் ட்யூபும் போல, மின்சாரமும் வயரும் போல என்று எப்படி வேண்டுமானாலும் புதுப்புது உதாரணங்களை வைத்துக் கொள்ளுங்கள். அந்த அளவுக்கு மிக நெருக்கமான நண்பர்கள்.

ஒரு மரத்தில் வெடிக்கும் கிளைகள், வெவ்வேறு திசைகளுக்கு எதிரும், புதிருமாகச் செல்வது இயற்கை. ஒன்றுபட்ட அந்த நண்பர்களின் குணநலன்களும் அப்படித் தான் அமைந்தன.

முருகையன் இலட்சிய வெறி பிடித்த, புரட்சியுள்ளம் படைத்த இளைஞனாக வளர்ந்தான். தருமனோ-வேலை தேடி வாழ்க்கை நடத்தும் சராசரி மனிதனுடைய மனப்போக்கில் வளர்ந்தான். இதில் மிகவும் விசித்திரம், தருமனுக்கு எவ்விதக் குடும்பச் சுமையும் கிடையாது. ஆனால் குடும்பத்தின், முழுச்சுமையும், இலட்சியவாதியாக வாழக் கனவு கண்டு கொண்டிருந்த முருகையன் சுமக்க வேண்டிய கட்டாயம்! நோயாளியான தந்தை, நொண்டியான தம்பி, தங்கை ஒருத்தி இவ்வளவு பேரும், முருகையனின் ஆதரவு தனில் வாழ வேண்டியவர்கள்.

இலட்சிய வாழ்வு வாழ நினைத்தவன், பள்ளிப்படிப்பை முடித்தவுடன் குடும்பப் பொறுப்பைச் சுமக்க வந்துவிட்டான். ஆனால் அவன் இலட்சியக் கனவுகள் மறையவில்லை.

சக்தியுள்ள மனிதர்களே, சாதாரண வாழ்க்கை வாழத் தடுமாறும் காலம் இது. ஆனால் இலட்சிய நினைவுகளை மறக்காமல் வாழ நினைக்கும் இளைஞன் ஒருவன் நினைத்தபடி வாழ முடியுமா? வறுமையோடு போராடும் நிலைதான்.

நண்பனின் பரிதாபநிலையைக் கண்ட தருமன், அவனுடைய இலட்சியங்களுக்கு முடிவு கட்டிவிட்டுச் சராசரி மனிதனாக வாழ வேண்டினான். தருமனுக்குத்தான் தோல்வி! அந்தத் தோல்வியை, வெற்றியாக்கி, முருகையனின் வறுமையை விரட்டிட வழி வகுத்தான். அதுதான் முருகையனின் திருமணம்.

முருகையனின் மனைவியானாள் மயிலாம்பாள்.

மயிலாம்பாள், வசதியான குடும்பத்தின் வாரிசாக விளங்கிய ஒரே பெண். தருமனின் முறைப் பெண். தருமனுக்காகவே வளர்ந்தவள். தருமனின் பிடிவாதத்தால்தான் முருகையனை மாப்பிள்ளையாக ஏற்றுக் கொண்டார்கள் மயிலாம்பாளின் பெற்றோர். ஆனால் திருமணம் முடிந்தவுடன், இப்படி ஒரு மருமகனைப் பெறக் கொடுத்து வைத்தவர்கள் நாங்கள் என்று மகிழ்ந்தார்கள். அந்த மகிழ்ச்சியிலேயே இந்த உலகத்தை விட்டு விரைவாக விடை பெற்றுக் கொண்டார்கள்.

மயிலாம்பாளின் சொத்து முழுவதும் முருகையனின் ஆளுகைக்கு வந்துவிட்டது. அவன் பழைய முருகையன் அல்ல. புதிய முருகையனாகிவிட்டான்.

வறுமையில் வாடும்போதே, இலட்சிய வேட்கையுடன் திரிந்தவுடன், கைநிறையக் காசு வந்தவுடன் சும்மா இருப்பானா என்று தப்புக் கணக்குப் போட வேண்டாம். கை நிறையக் காசு வந்ததால், தான் உண்டு தன் குடும்பம் உண்டு என்று ஆகிவிட்டான். வசதியான வாழ்வு வந்தவுடன் இலட்சிய வேட்கை மறைந்திருப்பது அதிசயம் தானே!

நோயாளியான, முருகையனின் அப்பாவும் குணமாகி நடமாடினார். இரண்டு மூன்று ஆண்டுகள் வாழ்ந்துவிட்டு ஆனந்தத்தோடு கண்ணை மூடி விட்டார்.

நொண்டியான தம்பி நீண்ட நாள் மருத்துவச் சிகிச்சையால் கால் குணமாகி நன்கு நடக்க ஆரம்பித்தான்.

தங்கை தங்கத்திற்கு நிறையச் செலவு செய்து திருமணம் செய்து கொடுத்தான். தங்கத்தின் கணவருக்கு வனத் துறையில் வேலை.

இதற்கிடையில் இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையானான் முருகையன்.







## எங்கு போய் முடியும்?

**ஆண்டுக்காண்டு இந்த நாட்டில் கூடுதலாகும் மக்கள் தொகை 1,30,00,000. இப்படிக் கூடுதலாக வருபவர்களுக்கு நாட்டுக்கு ஓராண்டுக்குக் கூடுதலாகத் தேவைப்படுகிற பள்ளிகள் மட்டும் 1,25,500! இது ஓராண்டுக்கு மட்டும்! ஆசிரியர்கள் 3,72,500 புதிதாகப் போட்டாக வேண்டும். வீடுகள் 25,90,000 கட்டியாக வேண்டும். துணி 18,87.74,000 மீட்டர் நெய்தாக வேண்டும். உணவு 1,25,45,300 குவிண்டால் அதிகமாக உற்பத்தி செய்தாக வேண்டும். 40 லட்சம் வேலைகளை அதிகமாக உருவாக்கித் தரவேண்டும். இப்படியே ஒவ்வொரு ஆண்டுக்கும் கூட்டிப் பார்த்தால், எங்குபோய் முடியும் என்று சொல்லமுடியாது.**

அவனுடைய தம்பி இப்போது; தான் நொண்டியில்லை, நன்கு ஓடக்கூட முடியும் என்பதை அண்ணனிடமே நிருபிக்க, வீட்டிலிருந்த பணத்தைத் தூக்கிக் கொண்டு எங்கோ கண்காணாமல் ஓடிவிட்டான்.

முருகையனின் வாழ்க்கையில் முதலில் ஏற்பட்ட பேரிடி! ஓரே அடியுடன் நிற்கவில்லை. தொடர்ந்தது. பட்ட காலிலேயே படும் என்ற பழமொழியை மெய்யாக்கும் ஆசை போலும்!

முருகையனின் மனைவி மயிலாம்பாள் பேறு காலத்தில் மண்ணை விட்டே விடைப் பெற்றுக் கொண்டாள்.

பழைய வசதியுமில்லை. இரண்டு குழந்தையுடன் அவதிப்பட ஆரம்பித்தான். தங்கை எத்தனை நாள்தான் அண்ணனுடன் வந்து தங்கி இருப்பாள். முருகையன் வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருந்தான்.

இந்தச் சமயத்தில்தான் ஒரு நாள் முருகையன், தங்கத்தின், கணவரோடு ஜவ்வாது மலையிலிருந்து மோட்டார் சைக்கிளில் வரும்போது பெரும் விபத்துக்கு ஆளாகி, ஒரே சமயத்தில் இருவரும் உயிர் நீத்தனர். சினிமாவில் அடுத்து அடுத்து வரும் திருப்பம்போல முருகையன் வாழ்க்கை திடீரென்று முடிந்தது. அவன் குழந்தைகள் இரண்டும் அனாதைகள். தங்கையோ இளம் விதவை.

இந்த நேரத்தில்தான் ஊருக்கு வந்தான் தருமன். நண்பனின் முடிந்து விட்ட சரித்திரத்தை நினைத்து அவனால் அழத்தான் முடிந்தது. எத்தனை நாள் அழ முடியும்..? அடுத்ததை நினைக்க அவன் ஒருவன்தான் அங்கே இருந்தான். முருகையனின் குழந்தைகளின் எதிர்காலம் என்ன? முருகையனின் தங்கையின் எதிர்காலம் என்ன? இளம் விதவையாகவே அவள் வாழ வேண்டியது தானா? இப்படிக் கேள்விகளாலேயே நெஞ்சத்தை நிறைத்துக் கொண்டு திணறினான்.

அந்தக் குழந்தைகளை எடுத்துக் கொண்டு சென்று தருமனால் வளர்க்கவும் முடியாது. அவன் மனைவியும் ஒரு "மாதிரி" யானவள்.

தருமன் தடுமாறினான். மேலும் ஒரு மாதம் லீவு எடுத்துக் கொண்டான். பிரச்சினையைத் தீர்க்கத் திட்டம் வகுக்க முடியவில்லை அவனால். முருகையனின் தங்கை தங்கத்தின் கணவன் வனத்துறையில் வேலை செய்ததால் அரசு ஊழியர் குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தின்படி பத்தாயிரம் ரூபாய் பணம் வந்தது.

இந்தப் பத்தாயிரத்தை வைத்துக் கொண்டு, அந்தக் குழந்தைகளை வளர்த்து ஆளாக்கும் பொறுப்பைத் தங்கம் ஏற்றுக் கொள்வாளா? இருபது வயதுப் பெண்ணை அவள் எதிர்காலம் முழுவதையும் இந்தக் குழந்தைகளுக்காகத் தியாகம் செய்வாளா? இன்று செய்யத் துணிந்தாலும் தொடர்ந்து இந்த மனநிலையில் இருப்பாளா?

நண்பனுக்காக, அந்தக் குழந்தைகளுக்காகத் தருமன் பலரிடம் யோசனை கேட்டான். உதவியும் கேட்டான். உருப்படியாக ஒன்றும் அமையவில்லை.

தருமன் செய்வது அறியாது திகைத்தான் .... நாட்களும் ஓடின. அப்பொழுதுதான் அந்த அறிவிப்பு வெளி வந்தது.

மறுநாள், தங்கம், வேரில் பழுத்த பலா கோரிக்கையற்று இருக்கலாமா என்று பலர் ஓடி வந்தனர். முருகையனின் குழந்தைகள் பிரச்சினையும் தருமனுக்குத் தீர்ந்தது.

* * *

தருமனின் ராணுவ நடையின் வேகமும், முகத்திலிருந்த மகிழ்ச்சியும், அவன் கையிலிருந்த அந்தக் கடிதங்களினால் தான். ஆமாம், அவை கருணையில்லங்களில் குழந்தைகளைச் சேர்க்கத் தேவையான விண்ணப்பப் படிவங்கள்தான்.

அரசு, விதவைப் பெண்டிரின், மறுவாழ்வுக்கு உதவி அளித்திட முன் வந்தது, தங்கத்தின் வாழ்வில் ஒளியேற்றியது.

காலத்தால், அரசு செய்த இந்த நன்றிக்கு விலையில்லை ஈடில்லை என்பதை தருமனின் முகத்தில் வீசிய ஒளி பறைசாற்றியது!

உண்மை அதுதானே!

# வெற்றியை நோக்க....!

நாளுக்குநாள்
நம்முடைய வாழ்க்கைக்கு
அரசு அளிக்கும்
பாதுகாப்புகள் ஏராளம்

அரசு அலுவலர்களுக்கு
குடும்பப் பாதுகாப்புத் திட்டம்
அதனைத் தொடர்ந்து
சமுதாயத்திலுள்ள அனைவரும்
பயனடையும் வகையில்
சமூகப் பாதுகாப்புத் திட்டம்!

இப்படி அளிக்கப்படும்
பாதுகாப்புகளைப் போன்று
நமக்கு நாமே
உருவாக்கிக் கொள்ளும்
பாதுகாப்புத் திட்டம்
குடும்பநலத் திட்டம்!

எல்லாரும்
இன்புற்றிருக்கச்
செயல்படுத்தும்
திட்டங்கள்
வெற்றி பெற்றிட
வலுமிக்க
அடித்தளம் அமைய

உதவுவதே
அளவான குடும்பம்.



▼

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!!

— குடும்பநலத்துறை,
தமிழ்நாடு அரசு.

# பருத்தியைத் தாக்கும் நோய்களைத் தடுப்பது எப்படி?

தமிழகத்தில் நடப்பு 1975-76-ம் ஆண்டில் 3.7 இலட்சம் மெட்ரிக் டன்கள் பஞ்சு உற்பத்தி செய்ய வேண்டும் எனத் திட்டமிடப்பட்டிருக்கிறது. முன்னேற்ற விவசாய முறைகளினால் கிடைக்கும் பருத்தி உற்பத்திக்குப் பூச்சி, பூஞ்சாளங்களினால் ஏற்படும் அழிவை தடுத்துநிறுத்த வேண்டியது ஒவ்வொரு விவசாயியின் கடமையாகும். ஏனென்றால் 'வெட்டிசீலியம்' வாடல் போன்ற நோய்களினால் மகசூல் 70 சதவிகிதம் வரை குறையலாம் என்று கண்டறியப்பட்டிருக்கிறது. பருத்தியை, முக்கியமாக 'ஹெர்சூட்டம்', ஒட்டுப் பருத்தி ஆகிய வகைகளைத் தாக்கும் நோய்களும், நோய்க் குணங்களும் தடுப்பு முறைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## நாற்று நோய்கள்

இளஞ்செடி கருகல் (Seedling blight, Rhizoctonia root rot):—

விதைத்து 10-15 நாட்களுக்குள் வெளி வந்த இளம் பருத்திச் செடி. வாடிவிடும். இதை விவசாயிகள் 'வேர்ப் புழு' என்று கூறுகிறார்கள். இது 'ரைசோக் டோனியா பாட் டாட்டிக் கோலா' என்னும் பூசணத்தால் ஏற்படுகிறது. இதைத் தடுக்க விதைகளை 'காப்டான்' அல்லது 'விட்டா வாக்ஸ்-காப்டான்' ஆகிய ஏதாவது மருந்துடன் (ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் மருந்து) கலந்து விதைக்க வேண்டும். நோய் தோன்றியவுடன், தண்ணீர் ஒருமுறை கட்டுவது நல்லது. அடுத்த நாள், தாக்கப்பட்ட பாத்திகளிலும், அதைச் சுற்றிலுமுள்ள நலமுள்ள செடிகளின் தூரிலும் 0.1 சத 'பிராஸ்ஸிகால்' (பி.ஸி.என்.பி) என்ற மருந்தை மண் நனைய ஊற்ற வேண்டும். இம் மருந்து கிடைக்கவில்லை என்றால் 0.2 சத 'காப்டான்' அல்லது 'டீட்டர்' என்ற மருந்தை உபயோகிக்கலாம்.

## இலை நோய்கள்

பாக்டீரியாக் கருகல் (Bacterial blight, Black arm, Vein blight, anglur leaf spot):—

இந்த நோய் 'சாந்தமானஸ் மால்வாசீயாரம்' (Xanthomonas malvacearum) )என்னும் பாக்டீரியாவால் தோன்றுகிறது. கோவையைச் சுற்றி சில இடங்களிலும், பவானி சாகர், தொண்டாமுத்தூர், உடுமலைப்பேட்டை ஆகிய இடங்களிலும் விதைத்த 2 மாதங்களுக்குப் பிறகு தோன்றும். இராஜபாளையம், திரு. வில்லிபுத்தூர், வத்திராயிருப்பு ஆகிய இடங்களில் மாசிப்பட்ட பருத்தியை இந் நோய்க் கடுமையாகத் தாக்குகிறது. இலை நரம்புகளில் பழுப்பு நிறக்கோடுகளோடு, சிறு நரம்புகளை ஒட்டி, பழுப்பு நிறக் கருஞ்சிவப்புப் புள்ளிகளும் தோன்றும். இதனால் இலைகள் பழுப்படைந்து உதிர ஆரம்பிக்கும். நோய்க் கடுமையாகத் தோன்றினால், காயழுகலும், கிளைகளில் நீண்ட பிளவுகளும் தோன்றிச் செடி பெருவாரியாகக் காயும்.

இந்த நோய் விதைகள் மூலமாகவும், கீழே விழுந்த நோயுற்ற இலைகள் மூலமாகவும் (இலைகளில் 18 மாதங்கள் வரை பாக்டீரியா வீரியமுடன் இருக்கிறது), மழைச்சாரல் மூலமாகவும் பரவுகிறது. விதைகள் மூலம் பரவுவதைத் தடுக்க இளஞ்செடிக் கருகல் நோய்க்குக் கூறியபடி விதைகளை 'விட்டவாக்ஸ்காப்டன்' அல்லது 'காப்டான்' என்னும் மருந்துடன் கலந்து விதைக்க வேண்டும். அமில சிகிச்சை (Acid delinting) செய்யப் பட்ட விதைகளை விதைப்பது நலம்.

வளர்ந்த பயிரில் இந்நோய் தோன்றுவதைத் தடுக்க 'அக்ரிமைசின்-100' என்ற மருந்தை ஏக்கருக்கு 30 கிராம் என்ற அளவில் இலைகளில் தெளிக்க வேண்டும். இம்மருந்துடன் 'பிளைட்டாக்ஸ்', 'காப்பர் சாண்டோஸ்', 'பைட்டலான்' போன்ற 'காப்பர் ஆக்ஸிகுளோரைட்' மருந்துகளில் ஏதேனும் ஒன்றை ஏக்கருக்கு 750 கிராம் வீதம் கலந்து கொள்ள வேண்டும். பருத்தி விதைத்து 2 மாதத்திற்குப் பிறகு தொடங்கி, 3 வாரங்களுக்கு ஒருமுறையாக, ஆக மூன்று சுற்றுகள் தெளிக்க வேண்டும்.

பாக்டீரியாக்கருகல், 'வர



லட்சுமி', 'சி.பி.எஸ். 156' ஆகிய பருத்திகளையும் கடுமையாகத் தாக்குகிறது.

**ஆல்ட்டர் நேரியா இலைப்புள்ளி (Alternaria macrospora) :—**

இப்பூசண நோய், பருத்தி விதைத்த பின் செப்டம்பர், அக்டோபர், மாதங்களில் நல்ல மழை பெய்தால் கடுமையாகத் தோன்றுகிறது. 'வரலட்சுமி', 'சி.பி.எஸ். 156', 'எம்சியு. 5' ஆகிய பருத்தி ரகங்களைத் தாக்குகிறது. செடியின் இலைகளில் கருஞ்சிவப்புப் புள்ளிகள் (ஒரு சென்டிமீட்டர் குறுக்களவு வரை) தோன்றும். பல புள்ளிகள் ஒருங்கிணைந்து அதனால் இலைகள் காய்ந்து உதிரும். பெருவாரியாக இலைகள் உதிர்வதால் மகசூலும் குறையும். மகசூலின் 20 முதல் 25 சதவிகிதம் வரை இழப்பு தோன்றும்.

இதைத் தடுக்க விதைத்து ஆறு வாரங்களுக்குப் பிறகு தொடங்கி, மூன்று வாரங்களுக்கு ஒருமுறையாக, மொத்தம் நான்கு சுற்றுகள் பூசணநாசினி மருந்துகள் தெளிக்க வேண்டும். 'டைதேன் இசட்-78' அல்லது 'மில்டாக்ஸ்' ஆகிய மருந்துகளில் ஒன்றை ஏக்கருக்கு 750 கிராம் என்ற அளவில் தெளிக்க வேண்டும். இம்மருந்துகள் தெளிப்பதனால் பூசணங்களாலும், பாக்டீரியாவாலும் ஏற்படும் காய் அழுகல் என்ற நோயும், 'ஆல்ட்டர்நேரியா' என்னும் பூசண நோயும், ஒட்டுப் பருத்திகளில் அண்மையில் அதிகம் தோன்றி வருகிற 'பூ அல்லது காயின் காம்பழுகல்' நோயும் தடுக்கப்படும். இந்தக் காயழுகலால் பூ உதிர்வும் ஏற்படும். 'சுஜாதா' 'சுவின்' போன்ற 'பார்படன்ஸ்' பருத்தி ரகங்களில் பூ காய்ந்து செடிகளில் ஒட்டிக் கொண்டிருக்கும். பூவிலிருந்து காயாவது தடுக்கப்பட்டு, விளைச்சலும் பெருவாரியாக பாதிக்கப்படுகிறது.

## வேர் நோய்கள்

**வெர்ட்டிசிலியம் வாடல் (Verticillium wilt) :—**இது கம்போடியாப் பருத்தியைத் தாக்குகிறது. 'வெர்ட்சிலியம், டாலியா' (Verticillium dalliae) என்னும் பூசணத் தால் தோன்றுகிறது. இடைவிடாது செய்த தீவிரப் பிரச்சாரத்தால், இந்த நோய் நாளடைவில் குறைந்து வருகிறது. 1968-ஆம் ஆண்டு 200 எக்டேர்களில் தோன்றிய இந்நோய், 1973-ஆம் ஆண்டு சுமார் 50 எக்டேர்களில்தான் காணப்பட்டது.

இந்த் நோய், குளிர் காலத்தில் தான் தோன்றும். வெப்பநிலை 20 டிகிரி சென்டிகிரேடிற்குக் கீழே போகப் போக நோய்க் கடுமை உயர்ந்து உயர்ந்து வரும். பிணியுற்ற செடியின் இலை நரம்பிற்கு இடையேயுள்ள பாகமும், இலை ஓரமும் கருகிச் செடியின் கீழே இருந்து மேலாக இலைகள் உதிரும். தண்டின்பட்டையைச் சீவினால் பழுப்புநிறக் கோடுகள் தண்டு முழுவதும் காணப்படும். இலைகள் முழுவதும் உதிர்ந்து நுனியில் சில பச்சை இலைகள் ஒட்டிக் கொண்டிருக்கும் செடிகளை, நோயுற்ற வயல்களில் சாதாரணமாகக் காணலாம்.

இந்த நோயை மருந்திட்டு ஒழிப்பது மிகவும் சிரமமாக உள்ளது. மேலும் இவ்வாடல் நோயை அறவே ஒழிக்கும் சக்தியுள்ள 'பென்லேட் (Benlate) போன்ற மருந்துகள் வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது விலையும் அதிகம். எனவே, ஏனைய முயற்சிகளினால் தான் இந்த நோயைக் கட்டுப்படுத்த வேண்டும். இந்த வாடல் நோய் பெருவாரியாகத் தோன்றிய நிலத்தில் அடுத்த ஆண்டு பருத்தி பயிரிடக் கூடாது பயிற்சி சுழற்சியில் தானி'யப் பயிர் அவசியம் இருக்க வேண்டும். அப்படி பருத்தி சாகுபடி செய்ய வேண்டும் என்றால் இந்த நோயை எதிர்த்து நிற்கும் திறன் உள்ள 'சுவின்', 'சுஜாதா' அல்லது 'சி.பி.எஸ். 156' போன்ற பருத்தி ரகங்களைப் பயிரிடலாம். பருத்தி விதைப்பை காலத்தில் முடித்து விட வேண்டும்.

நிலத்திற்கு கம்போஸ்ட், தொழு உரம் போன்றவை அதிகமிடலாம். நோய் தோன்றியவுடன் நோய் மேலும் பரவாமல் தடுக்க 0.1 சதவிகித சர 'செரசான்' மருந்தை மண் நனைய ஊற்ற வேண்டும்.

மூன்று மாதப்பருத்தியில் நோய் வந்திருந்தால் ஒவ்வொரு ஏக்கர் பரப்பிற்கும் 7.5 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ், 5 கிலோ யூரியாவை இருநூறு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். இதனால் செடிகள், வாடல் நோயைத் தாங்கும் சக்தியைப் பெறுகின்றன.

'வெர்ட்டிசிலியம்' வாடல் நோய்த் தாக்கிய பருத்திக்கு அடிக்கடி தண்ணீர் கட்டக் கூடாது. பாதிக்கப்பட்ட செடிகளைப் பிடுங்கி அழித்துவிட வேண்டும். பருத்தி விளைந்த பின் நோயுற்றச் செடிகளைப் பிடுங்கி எறிந்து விட்டு, நிலத்தை ஆழ உழுவதும் நலம் பயக்கும்.

**'ஃபுசேரியம்' வாடல் நோய் (Fusarium wilt) :—**

கருங்கண்ணி போன்ற கரிசல் நிலப்பருத்தியை மாத்திரம் தாக்கி வந்த இந்தவாடல் நோய், கம்போடியாப் பருத்தியையும், 'சுவின்', 'சுஜாதா', 'வரலட்சுமி' போன்ற பருத்தி ரகங்களையும் அண்மைக்காலத்தில் தாக்கி வருவதைக் காண்கிறோம். இந்த வாடல் 'ஃபுசேரியம் வாஸ்இன்பெக்டம்' என்னும் பூசணத்தால் தோன்றுகிறது.

இந்த நோய் பெரும்பாலும் இறவை நிலமாக மாற்றப்பட்ட கரிசல் நிலங்களில் அதிகம் காணப்படுகிறது. பொட்டாஷ் சத்துக் குறைவாக உள்ள கரிசல் நிலங்களிலும், தோட்டக்கால் நிலங்களிலும் இவ்வாடல் நோய் காணப்படும். உவர் நிலங்களில் இந்நோய் அதிகமாகக் காணப்பட்டாலும், அமில அளவு அதிகமுள்ள நிலங்களிலும் இந்த நோய் தோன்றக் கூடும்.

பெரும்பாலும் விதைத்து மூன்று மாதங்களுக்குப் பிறகு இந்தநோய்த்தாக்கும். வறட்சி அதிகம் நீடித்து ஒரு மழை பெய்தவுடன் இந்த வாடலும் அதிகமாகும். 'வரலட்சுமி', சுவின், 'எம்.சி.யூ. 5' ஆகிய பருத்திகளிலும் இந்த நோய்த் தோன்றி வருகிறது.

நோய்த் தாக்கியசெடிகளின் இலைகள் கருகும். இக்கருகல் இலை ஓரங்களில் அதிகமாக இருக்கும். பெரும்பாலும்மேலிருந்து கீழ் இலைகளுக்கு கருகல் பரவி, உதிரும். இலைகள் உதிர்ந்து பின் வெறும் தண்டு மாத்திரம் காய்ந்து வாடிவிடும். நோயுற்ற செடியின்



1946-ல் இன்னொரு குழு அமைக்கப்பட்டது. பெரிய கப்பல்களை எல்லாப் பருவங்களிலும் ஏற்றுச் சமாளிக்கக் கூடியதாக ஆழ்கடல் துறைமுகம் ஒன்றைக் கிழக்குக் கரையில் அமைப்பது சம்பந்தமாக இந்தக் குழு ஆராய்ச்சி நடத்தியது. அதன் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு சென்னைத் துறைமுக வளர்ச்சிக்கென மேலும் திட்டங்கள் வரையப்பட்டன. ஆனால் நிதி பற்றாக்குறை காரணமாக இந்தத் திட்டங்கள் 1954 வரையில் செயல் படுத்தப்படவில்லை.

1951ல் சென்னைத் துறைமுகத்தில் ஒரே சமயத்தில் 9 கப்பல்கள் மட்டுமே வந்து தங்குவதற்குத் துறை வசதியிருந்தது. இது தவிர வேறு சில கப்பல்களுக்கும் நிலைகள் அமைக்கப்பட்டிருந்தன. இவை எல்லாமாகச் சேர்ந்து ஆண்டுக்கு 21.5 இலட்சம் டன் சரக்குகளைத் தான் ஏற்றி இறக்க முடிந்தது. துறைகளில் 19 கிரேன்கள்தான் இருந்தன. இதனால்எல்லாம் சென்னைத் துறைமுகம், எப்போதும் நெருக்கடி மிக்கதாகவே விளங்கி வந்தது.

நாட்டுவிடுதலைக்குப் பின்னர் சென்னைத் துறைமுகத்தில் நடைபெற்ற வளர்ச்சிப் பணிகள் வருமாறு:

தெற்குத் துறையின் தென் பகுதியில் பிரயாணிகளுக்காக அமைக்கப்பட்டிருந்த நிலையத்தில் நவீன வசதிகள் இல்லாத காரணத்தினால் வடக்குத்துறையில் பயணிகளுக்கென நவீன வசதிகளுடன் ஒரு நிலையமும் கொட்டகையும் அமைக்கும் வேலை தொடங்கியது.

சரக்குகளை பத்திரப்படுத்தி வைப்பதற்காக புதிய கிடங்கு ஒன்று அமைக்கப்பட்டது.

ஏற்கனவே இருந்த பட்டறையில் புதிய யந்திரக் கருவிகள் பொருத்தியும், கனச் சங்கிலிகளைப் பரிசோதனை செய்யும் யந்திரம் ஒன்றை நிறுவியும் சீர்திருத்தம் செய்தார்கள்.

ஜவாஹர் துறை, தெற்குத் துறை நிலைகள், கனி வளமும் கரியும் ஏற்றி இறக்கும் துறைகள் ஆகியவற்றுக்கென திட்டங்கள் வகுக்கப்பட்டன.

## சிறுவர் பகுதி

**சிறுவர்களின் பொது அறிவை வளர்க்கும் நோக்கோடு மிக முக்கியமான செய்திகள் இப்பகுதியில் தரப்படுகின்றன. இந்த இதழில் சென்னைத் துறைமுகம் பற்றி சில தகவல்கள் தரப்படுகின்றன.**

முதன்மை துறைமுக நீர்க் கட்டுக்குத் தெற்கே ஜவாஹர் துறை அமைக்கப்பட்டது. 518 மீட்டர் நீளமும் 152 மீட்டர் அகலமும் கொண்ட நீர் அடக்கப்பகுதி ஒன்றுடன் உருவான இந்தத் துறையில் ஆறு கப்பல்கள் ஒருங்கே வந்து தங்குவதற்கு நிலை வசதி அமைக்கப்பட்டது. கூடவே பண்டங்களைத் தாற்காலிகமாக வைப்பதற்குக் கொட்டகைகளும் தண்ணீர், மின்சார சப்ளை வசதிகளும், கப்பலுக்கு எண்ணெய் கொடுக்கும் வசதியும் அமைக்கப்பட்டன. பெரிய அளவில் உணவு தானியங்களை இறக்குவதற்கென மேற்குப் பகுதியிலுள்ள மூன்று நிலைகளும் உபயோகிக்கப்பட்டன. கிழக்கேயுள்ள மூன்று நிலைகளும் இருப்புக் கனி வளம் ஏற்றுவதற்கானவை.

துறைமுகத்தில் மேலும் அதிகக் கப்பல்கள் வந்து நிலை கொள்வதற்கு வசதியாக முதலாவது இரண்டாவது தெற்குத் துறைகளில் மரக் கட்டுமானங்கள் அமைத்து மேலும் இரண்டு நிலைகளை உருவாக்கினார்கள். இங்கே 9.8 மீட்டர், 9.1 மீட்டர் அளவுகளுக்கு நீரில் அமிழும் பெரியகப்பல்கள் வந்து நிலை கொள்ள முடியும். கனமான சரக்குகளைத் தூக்கி வைப்பதற்கென 50 டன் க்ரேன் ஒன்று முதலாவது தெற்குத் துறையில் நிறுவப் பட்டது.

மூன்றாவது, நாலாவது, ஐந்தாவது தெற்குத் துறைகள் புதிதாகக் கட்டப்பட்டன. மூன்றாவது நாலாவது துறைகளில் 9.1 மீட்டர் அளவுக்கு நீரில் அமிழக்கூடிய கப்பல்கள் வந்து தங்க முடியும். ஐந்தாவது துறையில் 7.9 மீட்டர் அளவுக்கு அமிழ்ப்பகுதி கொண்ட கப்பல்கள்தான் நிலைகொள்ள முடியும். மூன்றாவது தெற்குத் துறை இரும்புக் கனிவளம் ஏற்றுவதற்காகவும், நாலாவது ஐந்தாவது துறைகள் நிலக்கரி ஏற்றி இறக்குவதற்றன. இந்த மூன்று துறைகளையும் சேர்த்து சென்னைத் துறைமுகத்தின் மொத்தத் துறை நீளம் 2,987 மீட்டருக்கு அதிகரித்தது.

துறைமுகத்திற்கு இரண்டு இழுவைக் கப்பல்கள் வாங்கப் பட்டன. அவற்றில் தீயணைக் கும் கருவிகள் உண்டு. இந்தச் கப்பல்களைத் தவிர, தூர் வாரும் கலம் ஒன்றும், 12( டன் மிதப்புக் க்ரேன் ஒன்றுப் வாங்கப்பட்டன.

சரக்குக் கொட்டகைகளுப் பண்டக் கிடங்குகளும் சீ



செய்யப்பட்டுப் புதிய வசதிகள் ஏற்பட்டன.

புதிய சிக்னல் நிலையம் ஒன்றும், துறைமுக டிரயிடின் நிர்வாக அலுவலகத்திற்கு ஒரு புதிய கட்டடமும் அமைக்கப் பட்டன.

ஜவாஹர் துறையின்கிழக்குப் பகுதியில் மூன்று நிலைகளை ஆழப்படுத்தி அங்கே 11 மீட்டர் அளவுக்கு அமிழ் பகுதி கொண்ட பெரிய கனிவளக் கப்பல்கள் தங்கிப் போக ஏற்பாடாயிற்று.

ராயபுரம் பகுதியில் கடலிலிருந்து 5.7 ஹெக்டேர் பரப்புள்ள நிலப்பகுதியை உபயோகத்திற்குத் தகுதியாக மீட்க முடிந்தது.

துறைமுகப் பட்டறை புதிய மனையில் நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டது.

ஜவாஹர் துறையில் சரக்குகளைத் தாற்காலிகமாக வைப்பதற்கென மூன்ருவது கொட்டகை ஒன்று கட்டப்பட்டது.

கீழ்ப்பாக்கம் நீர் சப்ளை நிலையத்திலிருந்து சென்னைத் துறைமுகத்திற்கெனத் தனியாக 53 மில்லி மீட்டர் குறுக்களவு உள்ள தண்ணீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டன.

கிடுக்கி முறையில் சரக்குகளை அகற்றுவதற்கென டிரக்குகளும், நகரும் க்ரேன்களும் வாங்கப்பட்டன.

நாலாவது ஐந்தாண்டு பெரிய நடவடிக்கையாக இப்போதையத் துறைமுகத்திற்கு வெளியே வடக்குப் பகுதியில் பாரதித்துறை அமைக்கப்பட்டது. இதற்கு 23.20 கோடி ரூபாய் செலவாயிற்று. பாரதி துறையில், துவக்கத்தில், எண்ணெய்க் கப்பல் நிலை ஒன்றும் அமைக்கப்பட்டன. இவற்றில் 1,00,000 டன் கப்பல்கள் வந்து தங்க முடியும். இந்தத் துறையின் நீர் அடக்கப் பரப்பு 84.90 ஹெக்டேர் ஆகும்.

வடக்கிலும் கிழக்கிலும் இரண்டு நீர்த் தடைக் கட்டுமானங்கள் அமைத்து இந்தத் தேக்கப் பகுதியை உண்டாக்கினார்கள். இந்தத் துறைக்கு மேற்கே 49.47 ஹெக்டேர் நிலப்பரப்பை உபயோகத்திற்கு லாயக்காக மீட்டு, கனி





வளத் துறை ஒன்றை அமைக்கும் வேலை இப்போது நடைபெற்று வருகிறது. இங்கே பிற்காலத்தில் வேறு துறைகளையும் அமைக்க முடியும்.

சென்னைத் துறைமுகத்தில் இயங்கி வரும் எண்ணெய்த் துறை நாட்டிலுள்ள மற்றெல்லா எண்ணெய்த் துறைகளையும் விட ஆழமானது. தற்சமயம் 76,000 டன் எண்ணெய்க் கப்பல்கள் இங்கே வந்து போகின்றன. துறையில் எண்ணெய்க் குழாய்கள் அமைத்திருக்கிருர்கள். எண்ணெய் தாங்கிச் செல்வதற்கென ஐந்து பெரும் குழாய்கள் இருக்கின்றன; அவற்றில் மூன் மூன்று கச்சா எண்ணெய்க்காகவும், மீதி இரண்டும் சுத்தி செய்யப்பட்ட எண்ணெய்ப் பொருள்களுக்காகவும் ஏற்பட்டிருக்கின்றன. கச்சா எண்ணெயை ஒரு மணிக்கு 400 டன் வீதம் இந்தக் குழாய்கள் மூலம் அனுப்ப முடியும். சுத்தம் செய்யப்பட்ட எண்ணெய்ப் பொருள்கள் மணிக்கு 1,000 டன் வீதம் செல்ல முடியும். கப்பல்களின் அடிச் சுமையை அகற்றுவதற்கான வசதிகள் இங்கே உண்டு. பாரதித் துறையில் இப்போது கட்டப்பட்டு வரும் கனி வள கப்பல் யில், நிலைஒரு லட்சம் டன் கப்பல்கள் வந்து போக முடியும். இந்த நிலையில் கனி வளங்களை ஏற்றி இறக்குவதற்கென, முழுவதும் யந்திரங்களே உபயோகிக்கப்படும். துவக்கத்தில் இங்கே ஆண்டுக்கு 50 லட்சம் டன் இரும்புக் கனி வளத்தை ஏற்ற முடியும். இறுதியில் இதுவே 80 இலட்சம் டன்ளுக அதிகரிக்கும். ஒரு மணி நேரத்தில் 8,000 டன் கனிவளத்தைக் கப்பல் நிலை

இந்த ஆண்டுத் துவக்கத்திலேயே உபயோகத்துக்கு வந்து விடும்.

## துறைமுகத்தில் சாதனங்கள்

சென்னைத் துறைமுகத்தில் மின்சாரம் கொண்டு இயங்கும் 49 நிலையான க்ரேன்கள் இருக்கின்றன. இவை மூன்று டன் முதல் 13 டன் வரை எடையுள்ள சரக்குகளை ஏற்றி வைத்து இறக்கக்கூறியவை. தண்டவாளத்தில் நகரும் கிரேன் ஒன்றும் இருக்கிறது; இதுவும் சக்தி கொண்டு இயங்குவதுதான். 50 டன் எடை வரை தூக்கக்கூடிய க்ரேன் இது. இவை தவிர இடத்துக்கிடம் நகர்ந்து எடை தூக்கும் 40 க்ரேன்கள் இருக்கின்றன. இவை 1.5 டன் முதல் 10 டன் வரை தூக்கி வைக்கக் கூடியவை. இவை 1.5 டன் முதல் 10 டன் வரை தூக்கி வைக்கக் கூடியவை. 13 டன் வரை ஏற்றி இறக்கக்கூடிய வேறு இரண்டு கிரேன்களும், ஐந்து டன் வரை தூக்கிச் செல்லக்கூடிய கிடுக்கி முறை டிரக்குகள் 94-ம், வேறு 12 டிராக்டர்களும், 32 ட்ரெய்லர் வண்டிகளும் சரக்குகளை அகற்றிச் செல்வதற்கென இருக்கின்றன. ''வைகை'' என்னும் பெயரில் மிதப்புக் கிரேன் ஒன்று இருக்கிறது— 120 டன் வரையான சரக்குகளைத் தூக்கக் கூடிய கிரேன் இது. இந்த மிதப்பிலேயே 250 டன் வரை சரக்குகளை வைத்து எடுத்துச் செல்ல முடியும்.

சென்னைத் துறைமுகத்துக்குச் சொந்தமாக 64 கிலோ மீட்டர் நீளத்துக்கு ரெயில்வே அமைப்பு ஒன்று இருக்கிறது. இதன் மூலம் எல்லாத் துறைகளுக்கும் கொட்டகைகளுக்கும் சேமிப்பு கிடங்குகளுக்கும் போய் வர முடியும். துறைகள் அனைத்திலும் கப்பல்களுக்கு சப்ளை செய்வதற்கான குடிதண்ணீர் இணைப்பு இருக்கிறது துறைமுகத்துக்கு அப்பால் நிலை கொண்டிருக்கும் கப்பல்களுக்குக் குடிதண்ணீர் சப்ளை செய்வதற்கெனவே இரண்டு விசைப்படகுகள் இருக்கின்றன. துறைமுகத்தில் ஜவாஹர் துறையைத் தவிர மற்றெல்லாத் துறைகளிலும் கப்பல்கள் 24 மணி நேரமும் வந்து போக அனுமதி உண்டு. ஜவாஹர் துறையில் மட்டும் இரவு பத்து மணிக்கு மேல் கப்பல்கள் வர அனுமதி கிடையாது.

பண்டங்களைச் சேமித்து வைப்பதற்கென 16 கிடங்குகள் இங்கே இருக்கின்றன; இவற்றின் மொத்தப் பரப்பு 78,000 சதுர மீட்டர் சரக்குகளைத் தாற்காலிகமாய் அடுக்கி வைப்பதற்கான 10 கொட்டகைகள் இங்கே இருக்கின்றன; இவற்றின் மொத்தப் பரப்பு 47,000 சதுர மீட்டராகும். இவையணைத்துக்கும் ரெயில் இணைப்பும் சாலை இணைப்பும் உண்டு. இரண்டு டன் தூக்கக் கூடிய 17 யந்திரங்கள் இங்கே இடத்திற்கு இடம் நகர்ந்து செயலாற்றுகின்றன. நுண் நுண்ணிய பொருள்களையும், சேதமாகிவிசக்கூடிய பொருள்களையும் சேமித்து வைக்கத் தனி வசதி இருக்கிறது. இது தவிர இரண்டு லட்சம் சதுர மீட்டர் பரப்புக்குத் திறந்த வெளி இருப்பதால் இங்கேயும் சரக்குகளை அடுக்கி வைக்க முடியும். 10,000 டன் எண்ணெயைச் சேமித்து வைக்கக்கூடிய மூன்று டாங்குகள் துறைமுகத்தில் இருக்கின்றன. இவற்றிலிருந்து கப்பல்களுக்கும், கப்பல்களிலிருந்து இவற்றுக்கும் எண்ணெயைச் செலுத்துவதற்கு பம்ப் வசதிகள் இருக்கின்றன. மிருகக் கொழுப்பு, சர்க்கரைப் பாகு, உணவு எண்ணெய்கள் இவை போன்ற பொருள்களையெல்லாம் ஏற்றி இறக்கவும் இங்கே வசதியிருக்கிறது. ஃபாஸ்ஃபாரிக் அமிலத்தைச் சேமித்து வைப்பதற்கு, ஒவ்வொன்றும் 20,000 டன் கொள்ளக்கூடிய மூன்று டாங்குகளும் இங்கே இருக்கின்றன.




பாரதித் துறைக்கு வடக்கே மீன் துறை ஒன்றை அமைக்கவும் சென்னைத் துறைமுகம் முற்பட்டிருக்கிறது. மத்திய அரசின் உணவு விவசாய அமைச்சகம் இந்த செலவுக்குப் பணம் கொடுக்கிறது. இதன் முதல் கட்டத்தில், ஆண்டுக்கு 40,000 டன் அளவுக்கு கடல் உணவுப் பொருள்கள் இங்கே ஏற்றி இறக்கப்படும். இரண்டாவது கட்டத்தில் இது 80,000 டன்ளுக உயரும். இரண்டு நீர்த்தடைக் கட்டுமானங்கள் அமைத்து இங்கே நீர் அடக்கப் பகுதி ஒன்றை வரையறுப்பார்கள்; இங்கு தங்கும் நீர் 6 மீட்டர் ஆழம் இருக்கும். மீன் வலை இழுப்புப் படகுகள் 50-ம், 500 பாப்ளோ படகுகளும் இந்தத் துறை மூலம் துவக்கத்தில் பயனடையும். இறுதியில் , 150 ட்ராலர்களும், 500 பாப்ளோ படகுகளும் பயன்பெறும் சென்னைத் துறைமுகப் பகுதிகுள்ளேயே மீன் ஆதாரத் தொழில்களை அமைத்து நடத்தவும், வசதி செய்யப்பட்டிருக்கிறது. இந்த மீன் துறைக்குத் தேவையான நீர்த் தடுப்புக் கட்டுமானம் இப்போது கிழக்குப் பகுதியில் அமைக்கப்பட்டு வருகிறது. வடக்குக் மாகிவிடும். 1978-ஆம் ஆண்டுக்கு முன்னுல் இந்தத் திட்டம் நிறைவேறிவிடும் என்று நம்பப் படுகிறது.

## கதை, கட்டுரை, கவிதை எழுதுவோர் கவனத்திற்கு :

'தமிழரசு' இதழுக்கு, எழுத்தாள நண்பர்களிடமிருந்து கதை, கட்டுரை, கவிதை, ஏராளமான அளவில் வந்து சேருகின்றன. தகுதி பெற்றவை அவசியம் வெளியிடப்பெறும்; வெளியிடப் பெருதவற்றைத் திருப்பி அனுப்ப இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிருேம். எனவே எழுத்தோவியங்களை அனுப்புவோர், படி எடுத்துக் கொண்டு அனுப்புமாறு வேண்டுகிருேம்.

## மின்சார டைப்ரைட்டர்

சென்னையிலுள்ள இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனம் தயாரித்துள்ள மின்சார டைப்-ரைட்டர் இதுதான். இந்தியாவில் அரசுத் துறையில் தயாரிக்கப் பட்ட முதல் மின்சாரத்தட்டச்சுப் பொறியும் இதுவே. இதன் வடிவமைப்பு முழுவதையும் இந்துஸ்தான் டெலிபிரிண்டர் தயாரித்ததாகும்.





# விஜய்க்கான

## இன்றைய செலவு மும்மடங்கான நாளைய வரவு!

சிபாரிசு அளவுப்படி உரமிட்டால் வருவாய் அதிகரிக்கின்றது. லாபமும் கூடுதலாகக் கிடைக்கின்றது. உரத்தின் விலை அதிகமாக இருப்பதால் உரத்தின் அளவைக் குறைக்கலாம் என்று நினைக்கிறீர்கள். இது சரியல்ல. இதையே விவசாய ஆராய்ச்சிகள் நிரூபித்திருக்கின்றன.

உரமிடாமல் நெல் சாகுபடி செய்யும்போது ஏக்கருக்கு ஆகும் செலவு ரூ. 880/- விளைச்சல் 75 கிலோ கொண்ட 11 மூட்டைகள்.

சிபாரிசுப்படி விஜய் 17-17-17 மூன்று மூட்டைகளும் விஜய் யூரியா ஒரு மூட்டையும் உபயோகித்து சாகுபடி செய்யும்போது ஏக்கருக்கு ஆகும் செலவு ரூ.1420/- விளைச்சல் 75 கிலோ கொண்ட 32 மூட்டைகள்.

ஆக சிபாரிசுப்படி விஜய் உரத்திற்கான அதிகச் செலவு ரூ. 540/- அதே சமயம் கூடுதல் விளைச்சல் 21 மூட்டைகள். அதாவது கிடைத்துள்ள கூடுதல் வருவாய், மூட்டை 75/-வீதம் ரூ. 1575/-

விஜய் உரத்திற்கான உங்கள் செலவு மும்மடங்கு வரவைத் தருகிறது.

உழவர் துணைவன் விஜய்

உங்கள் வருவாய் மேலும் அதிகரிக்க விஜய் உரங்களைத் திறம்படப்பயன்படுத்த வேண்டும். இதற்கான செய்நேர்த்தி முறைகளைப்பற்றிய புத்தகத்தை கீழ்கண்ட முகவரியில் இலவசமாகப் பெறலாம்.

ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1, ராமகிருஷ்ணபுரம், தென்னூர், திருச்சி 620 017




HT-MFL-1007


# மிளகாயின் வேர்முடிச்சு நூற்புழு



நமது மாநிலத்தில் மிளகாய்ச் செடியை இலைசுருட்டை நோயும், காய் அழுகல் நோயும் பாதித்து, பெருமளவு நாசமுண்டாக்குகின்றன. சமீப காலத்தில் மிளகாயை வெகுவாய் பாதிக்கக்கூடிய நூற்புழுக்களும் உள்ளன என்று கண்டுபிடிக்கப்பட்டது.

மிளகாயைத் தாக்கும் நூற்புழுக்களுள் முக்கியமானது வேர்முடிச்சு நூற்புழு (Root Knot nematode). மிளகாயைத் தாக்கும் வேர்முடிச்சு நூற்புழுக்களில் மூன்று வகை உள்ளன. அவை, 'மிலாய்டோகைனி இன்காக்னிடா', (Meloidogine incognita), 'மிலாய்டோகைனி ஜவானிகா (M. javanica), 'மிலாய்டோகைனி அரினேரியா' (M. arenaria) எனப்படுகின்றன. அவைகளுள் 'மிலாய்டோகைனி அரினேரியா' என்னும் வேர் முடிச்சு நூற்புழுக்களே மிளகாய்ச் சாகுபடி செய்யும் நிலங்களில் பொதுவாகக் காணப்படுகின்றன.

இவ்வகை வேர்முடிச்சு நூற்புழுவால் பாதிக்கப்பட்ட செடியின் இலைகள் மஞ்சள் நிறமாகி சுருங்கி, குழிந்து காணப்படும். வேர்களில் சிறிய உருண்டை வடிவ முடிச்சும் தோன்றும். இத்தகைய முடிச்சுகளில் உருண்டை வடிவமுள்ள பெண்புழுக்களைக் காணலாம். இவை நூற்றுக்கணக்கான முட்டைகள் இடும் தன்மையுடையவை. தட்ப வெப்ப நிலைக்கு ஏற்றவாறு முட்டைகளிலிருந்து 10-15 நாட்களில் இளங்குஞ்சுகள் மெல்லிய, நீண்ட புழு வடிவத்தில் வெளி வருகின்றன. இவ்விளம் புழுக்கள் அண்மையிலுள்ள மிளகாய் வேரில், நுழைந்து ஊசி போன்ற வாயுறுப்பினால் சாற்றை உறிஞ்சி, உண்டு வளர்கின்றன.

பெண்புழு சிறிது சிறிதாக உடல் பெருத்து, நாளடைவில் முழு வளர்ச்சி அடைந்து உருண்டை வடிவமான குறுகிய கழுத்துடன் காணப்படும். ஆண்புழு உருவ அமைப்பில் நீண்டு காணப்படும். சிறிது காலம் வரைதான் இது வேரில் தங்குகிறது. பெண் புழுக்கள் வேரினுள் பல நாட்கள் வரை தங்கி வளர்வதாலும், அவை சுரக்கும் திரவத்தில் உள்ள வளர்ச்சி ஊக்கிகள் ( Enzymes ) காரணமாக வேரிலுள்ள திசுக்களின் செல்கள் (Plant cells)

விரைவில் பெருகுவதாலும், வேரின் வளர்ச்சி ஒரே சீராக அமையாமல், தடித்தும், உருண்டையாகவும் முடிச்சு போன்றும் தோற்றமளிக்கும்.

வெகுவாகப் பாதிக்கப்பட்ட செடிகள் பிடிப்பில்லாமல், உயிர்ச்சத்தும், நீருமின்றி, வெளுத்துக் காய்ந்து விடுகின்றன. நூற்புழு தாக்கப்பட்ட வயல்களில் பழுப்புத் தட்டிய இலைகளையுடைய செடிகள் ஆங்காங்கு காணப்படும். இதனால் மிளகாயின் விளைச்சல் சுமார் 50 சதவிகிதம் குறைந்து விடும். பொள்ளாச்சி, சூலூர், திண்டுக்கல் போன்ற இடங்களில் 'சாத்தூர் சம்பா', 'கோவில்பட்டி-1,' என்ற மிளகாய் ரகங்கள் இவ்வேர்முடிச்சு நூற்புழுவால் பெரிதும் பாதிக்கப்படுகின்றன.

வேர்முடிச்சு நூற்புழுக்களைக் கட்டுப்படுத்த கீழ்க்கண்ட முறைகளை மேற்கொள்ளலாம்.

1. தக்காளி, வெண்டை, கத்தரி போன்ற பயிர்களைச் சாகுபடிச் செய்த நிலத்தில் வேர் முடிச்சு நூற் புழு காணப்பட்டால், அந்நிலங்களில் மிளகாய்ப் பயிர் செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

2. வெயிற்காலங்களில் நிலத்தை இரண்டு அல்லது மூன்று முறை நன்கு உழுது அடி மண்ணை புரட்டிவிட வேண்டும்.

3. பாதிக்கப்பட்ட நிலங்களில் 'நெமகான்' (Nemagam) 'டி-டீ' போன்ற நூற்புழுக் கொல்லிகளைப் பூமியினுள் செலுத்தி, ஒரு மாதம் கழித்து மிளகாய் நாற்றுகளை நட வேண்டும். 'கார்போபியூரான்' 3 சதம் குருணை அல்லது 'டாசானிட்' 5 சதக் குருணைகளைச் செடிக்கு 1 கிராம் அளவில் நாற்று நட்டபின் வேர் பாகத்தைச் சுற்றி, நிலத்தில், இட்டு மண்ணால் மூடி, தண்ணீர் பாய்ச்சுவதன் மூலமும் வேர் முடிச்சு நூற்புழுக்களைக் கட்டுப்படுத்தி நல்ல பலன் பெறலாம்.

தகவல் : தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-3.

இதனால் சிறிது மழை பெய்தது.

''மழை பெய்விப்பதற்குத் தட்டையான மேகத்தைவிடக் கோபுரம் போல் இருக்கும் மேகந்தான் பொருத்தமானது. அப்படிப்பட்ட மேகத்திரள்கள் நிறையத் தெரிகின்றன; அந்த மேகத்திற்குள் இரசாயனப் பொடியைத் தூவியதும், மேகங்கள் குளிர்ச்சி அடைகின்றன; அவ்வாறு குளிர்ச்சி அடைந்ததும் கீழே உள்ள காற்று மேலே போகின்றது; அந்த மேகம் ஐஸ்பந்து போல் உருண்டு மழையாகப் பொழியும்'' இவ்வாறு செயற்கை மழை நிபுணர்கள் கூறுகின்றனர்.

செயற்கை மழை பெய்விக்க உதவும் மேகங்கள் 15 அல்லது 16 ஆயிரம் அடி உயரம் இருக்க வேண்டும். அப்போதுதான் எளிதாகச் செயற்கை மழை பெய்விக்க முடியும். 18 ஆயிரம் அடி உயரமுள்ள மேகங்கள் இருந்தால் இந்த முயற்சிக்கு நல்ல வெற்றி கிடைக்கும்.

மேகத்தின் உயரம் குறைவாக இருந்து விமானம் உள்ளே நுழைந்தால் இடி, மின்னல் இவற்றால் விமானத்திற்கு ஆபத்து ஏற்படும். எனவே, ராடார் கருவி மூலம் மேகங்களின் நிலையை நிபுணர்கள் தொடர்ந்து கண்காணித்துச் சாதகமான மேகக் கூட்டங்கள் ஏற்பட்டுத் தென்படும்போது, அவர்கள் தங்கள் பணியைத் தொடங்கி மழை பெய்வித்தனர்.

இப்படி அவர்கள், சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கும் ஏரிகள் உள்ள பூண்டி, ரெட்ஹில்ஸ் பகுதிகளில் தங்கள் பணியை மேற்கொண்டு, நல்ல மழையைப் பெய்ய வைத்தனர். இந்த முறையில் 6-8-75 வரை, பூண்டியில் 17 மி.மீ. மழையும், கேசவரத்தில் 13 மி.மீ. மழையும், சோழவரத்தில் 16 மி.மீ. மழையும், தாமரபாக்கத்தில் 11 மி.மீ. மழையும், செங்குன்றத்தில் 6.5. மி.மீ. மழையும், கொரட்டூரில் 3.4 மி.மீ. மழையும் நுங்கம்பாக்கத்தில் 6.6 மி.மீ. மழையும் மீனம்பாக்கத்தில் 17.1. மி.மீ. மழையும் பெய்துள்ளதாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

## இரத்த அழுத்தம் அளவுக்கு மிஞ்சியுள்ளதா?

இரத்த அழுத்தம் அதிகமானால் உயிருக்கு ஆபத்து என்பது நமக்குத் தெரியும். குறைந்த அளவில் இந்த நோய் உள்ளவர்கூட, அதனைக் கட்டுப்பாட்டுக்குள் வைக்கத் தக்க நற்பழக்க வழக்கங்கள் கொண்டவராக இருக்க வேண்டும். சில அடிப்படை முன்னெச்சரிக்கைகளாகப் பின் வருவனவற்றை அமெரிக்க மருத்துவக் கழகம் பரிந்துரைக்கிறது: (1) உங்கள் எடையைக் குறையுங்கள். (2) உப்பு சேர்க்காதீர்கள். இரத்த அழுத்தம் மிகுதியாக இருக்கும் நோயாளிகளுக்கு உப்பு உதவாது. (3) முறையாக உடற்பயிற்சி செய்யவேண்டும். குறிப்பாக நீச்சல் பயனுள்ளது. (4) ஓய்வு பெறப் பழகுங்கள். யோகாசனம் கூட பயிலலாம்.

ஆனாலும் தமிழக அரசி சாதனைகளையெல்லாம் குறை கூறியே பழகிப் போனவர்கள் குறை கூறுவதையே தொழிலாகக் கொண்டிருப்பவர்கள் வழக்கம்போல் அலறத் தவறவில்லை.

''இப்போது பூண்டிப் பகுதியில் பெய்தது இயற்கை மழையா செயற்கை மழையா என்பதை ஆராய ஒரு குழு நியமிக்க வேண்டும்; வேண்டாத இந்த வீண் முயற்சியால் கோடிக் கணக்கான பணம் விரையமாகியிருக்கிறது.

''செயற்கை மழை முயற்சியால் இன்னும் பல ஆண்டுகளுக்கு இயற்கை மழையே இருக்காது.

''செயற்கை மழை நீர் நல்லதல்ல.''

''இங்குள்ள நிபுணர்கள் யாரையும் கலந்து ஆலோசிக்காமல் செயற்கை மழை நிபுணர்களைக் கொண்டு வந்து விட்டார்கள்.''

—இத்தனை குற்றச்சாட்டுகள்! இவற்றுக்கெல்லாம் தக்க முறையில் பதில் கூறும் வகையில் வேளாண்மைத் துறைத் தனிச் செயலாளர் திரு. சொக்கலிங்கம் குறிப்பிட்டிருப்பதாவது:



பிரெட் கிளார்க்

''பூண்டிப் பகுதியில் கடந்த 1968 முதல் 74 ஆம் ஆண்டு வரை ஜூலை மாதத்தில் மழையே பெய்யவில்லை. ஆனால் இப்போது பூண்டிப் பகுதியில் 70 கோடி காலன் தண்ணீர் கிடைத்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் பூண்டி ஏரியில் இப்போது தண்ணீர் நிரம்பியுள்ளது போல நிரம்பியதைப் பார்த்ததே இல்லை என்று மக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

''இதன் விளைவாகவே, சென்னை நகரில் 3 நாட்களுக்கு ஒருமுறைதான் தண்ணீர் விட முடியும் என்று ஆகஸ்ட் மாதத்தில் ஏற்பட இருந்த பேராபத்து நீங்கியது.

''குடி நீர் வாரியம் தற்போது குழாய்கள் பதித்து வருகிறது. இன்னும் சில நாட்களில் பூண்டியில் உள்ள நீரை நாள் ஒன்றுக்கு மேலும் 5 மில்லியன் காலன் வீதம் வழங்கும்.

"மத்திய அரசுதான் அந்நியச் செலாவணிக்கு அனுமதி தர வேண்டும். சரியாக நவம்பர் மாதம் வரை நடைபெறும் செயற்கை மழைக்கு ரூ. 12.5 இலட்சம் செலவிடப்படும். இது மத்திய அரசுக்கும் தெரியும். ஆகையால் கோடி என்பதெல்லாம் கற்பனைச் செய்தி.

''டில்லியில் உள்ள வானிலை ஆராய்ச்சி நிபுணரான டாக்டர் கோட்டீஸ்வரனைக் கலந்து கொண்டு, 'இதில் வெற்றி கிடைக்கும்—நிச்சயமாகச் செய்யலாம்—நல்ல திட்டம்' என்று அவர் கூறிய பிறகே இத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. இங்குள்ள நிபுணர்களும் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

''தற்போது குடியாசுத் தலைவராக உள்ள பக்ருதீன் அலி அகமத், வேளாண்மை அமைச்சராக இருந்தபோது, இந்தச் செயற்கை மழைத் திட்டம் பற்றி முன்பே அவரிடமும் பேசப்பட்டது. அவரும் இதற்கு ஆதரவு தந்துள்ளார்.

''அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் நடைமுறையில் உள்ள இந்தச் செயற்கை மழைத் திட்டம், இந்தியாவில் தமிழ்நாட்டில்தான் முதன் முறையாகச் செயல்படுத்தப் பெற்று இலக்கியச் சாதனையாக்கப்பட்டுள்ளது.

''செயற்கை மழையால் இயற்கை மழை பாதிக்கும் என்பது மூட நம்பிக்கை- அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தில் செயற்கை மழைச் சோதனை அடிக்கடி நடைபெறும். இந்தச்சோதனையில் பெய்யும் மழையை விட இயற்கையில் பெய்யும் மழை அளவு உயர்ந்திருப்பதாகவே ஆராய்ச்சி நிபுணர்கள் கூறுகிறார்கள்.

''நாமே கண்கூடாகப் பார்க்கிறோம். ஒரு பகுதியில் செயற்கை மழை பெய்விக்கப்படும்போது இன்னொரு முனையில் இயற்கை மழையும் பெய்கிறது. எனவே செயற்கை மழையால் இயற்கை மழை பாதிக்காது.''

இந்த விளக்கம் குறை கூறுவோரின் செவிகளில் ஏறுமோ ஏறாதோ, செயற்கை மழையால் நல்ல பயன் விளைந்திருக்கிறது-சண்டித்தனம் செய்து கொண்டிருந்த மழை மேகத்தை அணுகிச் சுற்றிச் சுழன்று-இரசாயனப் பொடியைத் தூவி மழை பொழிய வைத்திருப்பது மாபெரும் வெற்றிதான்.

'மாரியன்ன வண்மையிற் சிறந்து' என்றும் 'மாரியும் உண்டு ஈண்டு உலகுபுரப்பதுவே' என்றும் இன்னும் பலவாறும் மாரியின் வள்ளல் தன்மையை வாயார மனமாரப் பாடிப் புகழ்ந்த பாவலர்கள் ஏராளம் ஏராளம்! ஆம். இப்போது, பெய்திந்த வையம் காக்கும் பெரு வானமே பொய்த்த போது— பெய்யத் தவறியபோது இங்கு ஏற்பட்ட வறட்சியை-வறுமையின் கொடுமையை - அழித்தொழித்து அதன் சுவடுகூடத் தெரியாமல் செய்யும் வகையில், 'பெய்யெனப் பெய்யும் மழை' யை—செயற்கை மழையைப் பெய்விக்கத் திட்டமிட்டுச் சோதனைகளையெல்லாம் சாதனையாக்கி வெற்றி கண்ட தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும், செயற்கை மழைத் திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவேற்றி வரும் அமெரிக்கச் செயற்கை மழை நிபுணர்களுக்கும் தமிழக மக்கள்-குறிப்பாகச் சென்னை நகரிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் வாழ்கிற மக்கள் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளனர்.

சாமி. பழ.

அதிக விளைச்சலுக்காக உங்கள் உங்கள் பருத்திப் பயிருக்குத் தேவை
பிளானோமைக்ஸ்*



சிபாரிசு செய்யப்பட்டுள்ளபடி பிளானோமைக்ஸ் உபயோகித்தீர்களானால், பூக்கள் உதிர்வதையும் காய்கள் உதிர்வதையும் கணிசமாகக் குறைத்து விளைச்சலைப் பெருக்க முடியும். இதுவரை பல்லாண்டுகள் பருத்திப் பயிருக்கு பிளானோமைக்ஸ் உபயோகிக்கப்பட்டு, எப்போதும் திருப்திகரமான பலன்களைத் தட்டாமல் பெற முடிகிறது.

மூலமுதல் தயாரிப்பையே உபயோகிக்க
உறுதி கொள்வீர். மாற்றுக்களை ஏற்காதீர்,
உஷார். உயிர் போன்றது உங்கள் பயிர்ச் செல்வம்.

* டிரேடு மார்க்

விவரமான தகவல்களை விசாரித்தறியவும்.

M&B May & Baker

மே & பேக்கர் (இந்தியா) பிரைவேட் லிட்.
பம்பாய். கல்கத்தா. கவுஹாத்தி. இந்தோர். லக்னோ. சென்னை. நியூடெல்லி. பாட்னா.

TAM

# செய்யெனப் பெய்யும் மழை

கடையெழு வள்ளல்களில் ஒருவரான பாரியின் வள்ளல் தன்மையினை—கொடை மடத்தின் சிறப்பினைப் புலவர்கள் பலரும் வியந்து பாராட்டியுள்ளனர். இன்றுகூட 'நீ என்ன பாரி வள்ளலா?' என்று சிலரைக் கேட்பதைப் பார்க்கிறோம்.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்த வள்ளல் பாரியை, அவரது நண்பரான புலவர் கபிலர்,

'பாரி பாரி என்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்;
மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே !!

என்று பாராட்டினார். ஆம்!

''உலகில் பொதுமக்களும் புலவர் பெருமக்களும் பாரி பாரி என்று இவன் ஒருவனையே கொடைக்கு எடுத்துக் காட்டாகப் புகழ்ந்து பேசுகின்றனர். ஆனால், இந்த உலகம் வறுமையால் நலிவுறுவண்ணம் காப்பவன் பாரி ஒருவன் மட்டுந்தானா? இல்லை இல்லை! மாரி (மழை) யும் உண்டு!'' என்று தேங்கு புகழ்ப் பாரியை ஓங்கு புகழ்க் கபிலர் உவந்தேத்துகிறார். 'பாரி மட்டும் இல்லை; மாரியும் உண்டு' என்று கூறுவதன் மூலம் அவர் பாரியின் புகழை-வள்ளல் தன்மையைக் குறைகூறவில்லை-குறைத்து மதிப்பிடவில்லை. கைம்மாறு கருதாமல்-பெய்திந்த வையம் காக்கும் பெருமழையைப் பாரியோடு ஒப்பிட்டதன் மூலம், பாரியின் புகழை மேலும் உயர்த்திக் காட்டுகிறார். உலகினைக் காத்திட மாரியும் பாரியும் அன்றி வேறல்லர் என்ற குறிப்பு வியந்து பாராட்டத்தக்கது.

பொதுவாக, மழையின் சிறப்பினையும் அதன் இன்றியமையாமையையும், மழையால் வையம் பெறுகிற எண்ணற்ற நன்மைகளையும் மழை வளம் குன்றினால் இவ்வுலகில் விளைகின்ற-எண்ணிப் பார்க்க முடியாத தீங்குகளையும் திருவள்ளுவர் 'வான் சிறப்பு' என்னும் அதிகாரத்தில் நிரலே விளக்குகின்றார்.

இங்கு தமிழகத்தில் பருவமழை பொய்த்ததன் காரணமாகச் சுழன்றடித்த வறட்சிச் சூறுவளியை எதிர்த்துச் சமாளிக்க-மக்கள் பட்டினிக்கும் பசிக்கும் பலியாகும் நிலையைத் தடுத்துக் காக்கப் போர்க்கால நடவடிக்கை போலத் தமிழக அரசு மேற்கொண்ட நிவாரணப் பணிகளுள் குறிப்பிடத்தக்க ஒன்று 'செயற்கை மழைத் திட்டம்.

முதல்வர் கலைஞரின் தலைமையில் இயங்கும் தமிழக அரசு, தமிழகத்தில் செயற்கை மழை பெய்விக்க 12 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டம் வகுத்தது. இத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றத் தமிழக அரசு, அமெரிக்காவிலுள்ள—'அட்மாஸ் பெர்க்இன் கார்பரேட்டட்' நிறுவனத்தின் ஒத்துழைப்பை விரும்பிக் கேட்டுக் கொண்டது. இவ்வழைப்பின்பேரில், அந்த நிறுவனத்தைச் சேர்ந்த 'செயற்கை மழை நிபுணர்' 'பிரெட் கிளார்க்' என்பார் 1975 ஆம் ஆண்டு ஜூலை 7 ஆம் நாள் சென்னை வந்து சேர்ந்தார். இவர், பொறியாளர்-செயற்கை மழை பெய்விக்கும் திட்டத்தினை உருவாக்குகிறவர்-இவர், ராடார் முதலிய கருவிகளைக் கொண்டு வந்து மீனம்பாக்கம் விமான நிலையத்தில் - அவற்றைப் பொருத்துகிற பணியை மேற்கொண்டார்.

அடுத்து, செயற்கை மழை பெய்விக்கும் பணியில் பிரெட் கிளார்க்குக்கு உதவியாகப் பணி புரியும் லிவர்க்கா, ராங்ஞே ஆகிய இருவரும் 12-7-75-ல் சென்னை வந்து சேர்ந்தார்கள்.



வைப்பர் கோமாஞ்சி விமானம் இதுதான்

லிவர்க்கா, விமானத்தில் பறந்து சென்று, மேகத்தின் மீது வட்டமிட்டு, 'சில்வர் அயோடைட்' என்னும் இரசாயனப் பொடியைத் தூவுகிறவர்

ராங்ஞே என்பவர் வானிலை நிபுணர்; காற்று வீசுகிற திசையையும் மேகம் வருகிற திசையையும், செயற்கை மழை பெய்விக்கப் போதுமான மேகம் இருக்கிறதா என்பதையும் கண்டுபிடித்துக் கூறுகிறவர்.

லிவர்க்கா, ராங்ஞே ஆகியோருடன், இரசாயனப் பொடி தூவும் 'வைப்பர் கோமாஞ்சி' என்ற வகையைச் சேர்ந்த விமானமும் சென்னை வந்து சேர்ந்தது.

பொறியாளர் பிரெட் கிளார்க், சென்னை வந்த மறுநாளே, மீனம்பாக்கத்தில் வானிலை ஆராய்ச்சி நிபுணர் ஜெயராமன் என்பவருடன் செயற்கை மழை பெய்விப்பது சம்பந்தமாக ஆலோசனை நடத்தினார். பிறகு, நுங்கம்பாக்கத்திலுள்ள வானிலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் இராம சாஸ்திரி, இணை வேளாண்மை இயக்குநர் திரு. நரசிம்மலு ஆகியோருடனும் ஆலோசனை நடத்தினார்.

'வைப்பர் கோமாஞ்சி' விமானம் சுமார் 20 அடி நீளமுள்ளது. இதன் இறக்கைகளின் நீளம் சுமார் 15 அடி. இந்த விமானத்தில், விமானம் ஓட்டுகிறவரைத் தவிர 3 பேர் உட்காரலாம். இதனை ஒருவரே அசைத்துவிட முடியும்.

விமானத்தின் இரண்டு இறக்கைகளிலும் இரண்டு என்ஜின்கள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த இறக்கைகளில் உள்ள 6 பெட்ரோல் தாங்கிகளிலும் 120 காலன் பெட்ரோல் நிரப்பலாம். இந்த விமானம் மணிக்கு 200 மைல் வேகத்தில் போகும். மேகக் கூட்டத்தில் இது சுமார் 120 மைல் வேகத்தில்தான் போகும். அடர்ந்த மேகக் கூட்டத்தில் போகும்போது, விரைந்து மேலும் கீழும், செங்குத்தாகவும் பக்க வாட்டிலும் குட்டிக்கரணம் போடுவதுபோல் பறக்கலாம்.

யானை வெடிகளைப் போல சுமார் இரண்டடி நீளமும், ஓர் அங்குல கனமும் கொண்ட கரியாலான 9 குழாய்களும் ஓர் அடி நீளமும் 2 அங்குல அகலமும் கொண்ட 3 குழாய்களுமாக மொத்தம் 12 குழாய்கள் விதம் இரண்டு இறக்கைகளின் பின்புறமும் 24 குழாய்கள் உள்ளன.

இந்தக் குழாய்களில் 'சில்வர் அயோடைட்' என்ற இரசாயனத் தூள் நிரப்பி வைக்கப்படுகிறது. இந்தக் குழாய்களுடன் மின்சாரக் கம்பிகள் பொருத்தப்பட்டுள்ளன. விமானிகளின் இருக்கைகளின் அருகில் இருக்கும் ஒரு பொத்தானை அழுத்தியதும் இந்தக் குழாய்கள் பற்ற வைக்கப்பட்டு அவை 'பொசு பொசு' வெனப் புகையுடன் கருகத் தொடங்கும்.

அப்போது இவை, சில்வர் அயோடைட்டை வெளியே மேகத்தில் தெளிக்கின்றன. இந்தக் கரிக்குழாய்கள் பாதி வரை எரிந்து அணைந்துவிடும்.

2 அடி நீள குழாய்களில் 18 கிராமும் 1 அடி நீள கனத்த குழாயில் 24 கிராமும் சில்வர் அயோடைட் இருக்கின்றது. சிறிய குழாய்கள் எட்டு நிமிடமும் பெரிய குழாய்கள் 12 நிமிடமும் எரியும்.

மழையை உருவாக்கும் ''தண்ணீர்க் கரு''வைக் குளிர்ச்சியாக்கி மழைத் துளிகள் உருவாகாமல் வறட்சி நிலை இருப்பதால் அந்தத் ''தண்ணீர்க் கரு''க்களை மழைத் துளியாக்க இந்தச் சில்வர் அயோடைட் துகள்களே உதவுகின்றன. இவை தூவப்பட்ட 20 நிமிடத்தில் அந்த இடத்தில் மழை பொழியும். சில்வர் அயோடைட் என்பது சிமெண்டு நிறத்தில் சிமெண்டு போலவே பொடியாக இருக்கும்.

விமானத்தில் விமானி லிவர்க்கா மட்டும்தான் செல்வார். என்ஜினியர் கிளார்க்கும்வானிலை ஆராய்ச்சி நிபுணர் ராங்கிஞேவும் மீனம்பாக்கத்தில் உள்ள ராடார் சாதனத்தின்முன் அமர்ந்து மழை மேகங்களை அந்த ராடார் மூலம் பார்த்து எங்கெங்கே மேகம் இருக்கிறது என்று ரேடியோ தொடர்பு மூலம் விமானிக்குத் தெரிவித்துக் கொண்டே இருப்பார்கள்.

இந்த 'ராடார்' சாதனத்தையும் இவர்களே கொண்டு வந்துள்ளார்கள்.

முதற்கட்டமாக, லிவர்க்கா 15.7.75ல் சென்னையை அடுத்துள்ள ஏரிகளின் மீது விமானத்தில் பறந்து சென்று, சில்வர் அயோடேட்டைத் தூவினார்

# பெருநகர் காண்போம் நெரிசலைத் தவிர்ப்போம்!

கிராமங்கள் - நகரங்கள் - பெருநகர்கள் இப்படி மூன்று வித இடங்களில் மக்கள் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். சென்னை போன்ற பெரிய நகரங்களில்- இருக்கின்ற வசதி-வாய்ப்பு-பொழுது போக்கு நிகழ்ச்சிகள்-மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றின் காரணமாக, கிராம-நகர மக்கள் பெருநகர்களுக்குக் குடியேறிய வண்ணமுள்ளனர்.

பெரிய நகரங்களில் வாழ்வதையே மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள். வசதி நிறைந்தோரும், வாய்ப்பற்றோரும் பெருநகரங்களை நாடி வருகிறார்கள். ஆனால் கிராமங்களைத் தேடிச் செல்வாரில்லை.

குடும்ப நலத் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு தீவிரமாக அமல்படுத்தி வந்தாலும், சென்னை நகரில் புதிதாகக் குடியேறுபவர்களின் காரணமாக மக்கள் தொகை அதிகரித்து வருகிறது; இட நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது.

ஒவ்வொரு பெரிய நகரத்தின் மக்கள் தொகையும், இருபது ஆண்டுகளுக்கொரு முறை இரண்டு மடங்காகப் பெருகி வருவதாகப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. சென்னை நகரின் தற்போதைய மக்கள் தொகை 25 இலட்சம் ஆகும். இது 1991 -ல் 58 இலட்சமாக இருக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதனால் மக்கள் தொகை மிகுந்த நகரம் எண்ணற்ற பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும். இடர்ப்பாடான போக்கு வரத்து - கட்டிக் குவித்த வீடுகள்-பற்றாக் குறை-ஒரு நெரிசல் மிக்க நகரம் என்ற நிலைக்கு அடுத்த பத்தாண்டுகளில் சென்னை ஆகி விடக்கூடும். இந்தப் பிரச்சினையைத் தமிழ்நாடு அரசு தொலை நோக்குக் கண்ணோட்டத்தோடு சிந்தித்துச் செயலாற்றி வருகிறது.

இந்த நிலை வந்திடாமல் தடுத்திடவும், மக்கள் மேலும் சிறந்த வாய்ப்பைப் பெறுவதற்காகவும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்குழுமம் (Madras Metropalitan Development Authority) என்ற அமைப்பைத் தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ளது. இதன் சுருக்கமான பெயர்தான் எம்.எம்.டி.ஏ. சென்னைப் பெருநகரின் நிகழ்காலத் தேவைகளை நிறைவேற்றுதல் மட்டுமன்றி, வளரும் நகரின் வருங்காலத் தேவைகளையும் மதிப்பிட்டு, நாளைய நிலைக்கேற்ப நகரை நடத்திச் செல்லும் வகையில் எம்.எம்.டி.ஏ. பணியாற்றி வருகிறது.

சென்னை போன்ற வளர்ந்து வ்ரும் ஒரு பெரியநகரில் தோன்றும் பிரச்சினைகளுக்கு விரைவான நடவடிக்கை எடுக்காவிட்டால், இங்கு வசிப்பது கூட நாளடைவில் கடினமாகி விடக்கூடும். திறமைவாய்ந்த வல்லுநர்களே திட்டமிட்டு இதனைத் தடுத்திட முடியும். நகர் வளர்ச்சிக்காகத் தற்போது உள்ள நிறுவனங்கள் அன்றாடப் பிரச்சினைகளிலேயே அமிழ்ந்து விடவேண்டியிருப்பதால் வளரும் நகரின் வருங்காலத் திட்டங்களில் முழுமையான கவனம் செலுத்திட முடிவதில்லை. ஆகையால் தான், ஆழ்ந்த கவனம் செலுத்தி இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண எம்.எம்.டி.ஏ சிறந்த திட்டங்களைத் தயாரித்து வருகிறது.

மக்கள் தொகைப் பெருக்கத்தை மதிப்பிடல், விரிவடையும் பகுதிகளை வரன் முறைப் படுத்தல், தொழில் வளர்ச்சிக்கேற்ற கருத்துக்களை எடுத்துரைத்தல், பெருநகரில் மக்கள் தொகை தேங்குவதைத் தவிர்த்தல் மற்றும் ஊர்ப்புறங்களை வளர்ச்சியுறச் செய்தல் ஆகிய அரும்பணிகளை எம்.எம்டி.ஏ. ஏற்றுச் செயலாற்றி வருகிறது.

இங்கேதான் மறைமலைநகர் உருவாகிறது



எம்.எம்.டி.ஏ. சென்னைப் பெருநகர் வட்டாரத்தைப் பற்றித் தேவையான ஆய்வுகளைக் கவனமாகச் செய்து ஒரு சிறப்புத் திட்டத்தைத் (Master plan) தயாரித்துள்ளது. சென்னையிலும், சுற்றுப்புறத்திலும் மக்களுக்கு வீடுகளை வரைமுறைப்படுத்திக் கட்டிக் கொடுத்து, வசதிகளை அளித்து, இத்திட்டம் நெருக்கடியைத் தவிர்க்கிறது. பெருநகர் வளர்ச்சித் திட்டம் 1170 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாக அமைந்துள்ளது. சென்னைப் பெருநகரில் சைதாப்பேட்டை வட்டம், பொன்னேரியின் ஒரு பகுதி திருவள்ளூர், திருப்பெரும்புதூர், மற்றும் சென்னை நகரில் ஓரத்திலுள்ள செங்கற்பட்டு வட்டத்தைச் சார்ந்த பகுதிகளும் இதிலும் அடங்கும். மேலும் திருவொற்றியூர், ஆலந்தூர் பல்லவபுரம், தாம்பரம் ஆகிய நான்கு நகராட்சிகளும் மற்றும் கத்திவாக்கம் மாதவரம், அம்பத்தூர் ஆவடி ஆகிய நான்கு நகர்களும், 20 நகரப் பஞ்சாயத்துக்களும், பல்வேறு கிராமங்களும் இத்திட்டத்தில் அடங்கும்.

நீண்ட காலத் தேவைக்கான கண்ணோட்டத்தோடு சிறப்புத் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பெருநகர் வட்டாரத்தில் தற்போதுள்ள மக்கள் தொகை, எதிர்காலத்தில் பெருகும் எண்ணிக்கை இவற்றை மனத்தில் கொண்டு அவற்றை எப்படிக் குடியமர்த்துவது என்று சிந்தித்து நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

இத்திட்டத்தின் நோக்கம் நிலங்களையும் கட்டட உபயோகத்தையும் ஒழுங்குபடுத்துவதாகும். நீர்வழங்குதல், வடிகால், வீட்டுவசதி, கல்வி, மருத்துவ வசதி, பொழுது போக்கு, தொழில், வேளாண்மை ஆகியவை அனைத்தையும் கவனத்தில் கொண்டு சிறப்புத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. தமிழ்நாடு நகர் அமைப்புச் சட்டம் சென்னை நகரில் 1920-ஆம் ஆண்டிலிருந்தே அமலில் இருந்த போதிலும் முழு நகரிலும் சென்னைப் பெருநகர் வட்டாரத்திலும் 15 சதவீதத்தினரே நகர் அமைப்புத் திட்டத்தைக் கடைப்பிடித்துள்ளனர். இந்நச் சிறப்புத் திட்டத்தைச் சென்னைப் பெருநகர் வளர்ச்சி வட்டாரம்முழுவதும் நகர் வளர்ச்சிக் கட்டுப்பாட்டைக் கடைபிடிக்க வகை செய்கிறது.



திட்டமிடப்பட்டுள்ள வணிக மையத்தின் மாதிரி வடிவம்

MMDA
Madras Metropolitan
Development Authority

கடந்த ஆண்டுகளில் கணக்கற்ற மக்கள் தொகைப்பெருக்கம் கடுமையான பிரச்சினைகளையும், எல்லாத் துறைகளிலும் பற்றாக்குறையையும் ஏற்படுத்திவிட்டது. குறிப்பாக குடிநீர் வழங்குதல், வடிகால், நில உபயோகம், வீடுகட்டுதல், குடிசை மாற்றுதல் போக்குவரத்து ஆகிய எல்லாத் துறைகளிலும் பிரச்சினைகள் தோன்றின.

அரசின் பல்வேறு துறைகளும், அரசு நிறுவியுள்ள குடிநீர் வடிகால் வாரியம், வீட்டு வசதி வாரியம், குடிசைமாற்று வாரியம், நெடுஞ்சாலைத்துறை மாநகராட்சி ஆகிய அனைத்து மக்களுக்கு வசதிகளைச் செய்ய சீரியமுறையில் நடவடிக்கைகளை எடுத்தும், முயற்சிகள் போதுமானதாக இல்லை.

பல்வேறு வகையில் வளர்ச்சி நடவடிக்கைகளுக்கு உதவி புரியவும், நகர் வளர்ச்சித் திட்டத்தைத் தயாரிக்கவும், பெருநகர்ப் பகுதி முழுவதும் முறையான வளர்ச்சி ஏற்படவும், தமிழ்நாடு அரசு 1972 நவம்பரில் தற்காலிகமாக (Adhoc Authority) அமைக்கப் பட்ட சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தி 1975 மார்ச் மாதத்தில் சட்டபூர்வமான (State lury body) அமைப் பாக ஏற்படுத்தியுள்ளது. இது சென்னையைச் சுற்றிப் புதிய நகரங்களை ஏற்படுத்தும் பணியைத் தொடங்கியுள்ளது. மணலியில், சென்னை பொன்னேரி நெடுஞ்சாலைக்குக் கிழக்கிலும் கொற்றலை ஆற்றின் தென் மேற்கிலுமாக உள்ள

## டெலக்ஸ் தொடர்பகங்களுக்குச் சிறப்பு மின் சாதனம்

டெலக்ஸ் தொடர்பகங்கள், சிறு தொலைபேசித் தொடர்பகங்கள் ஆகியவற்றை இயக்குவதற்குத் தேவைப்படும் மின்சாரத்தைச் சீரான முறையில் அளிப்பதற்கு வகை செய்யும் மின் சாதனம் (க்யூபிக்கில்) ஒன்றினை சென்னையிலுள்ள பொதுத்துறை நிறுவனமான 'ஹிந்துஸ்தான் டெலிபிரிண்டர்' நிறுவனம் உருவாக்கியுள்ளது.

டெலக்ஸ் தொடர்பகங்களின் பராமரிப்புத் தரத்தை மேம்படுத்த இந்தச் சாதனம் உதவுகிறது. தற்போது நம் நாட்டில் 58 டெலக்ஸ் தொடர்பகங்கள் இயங்கி வருகின்றன. அடுத்த மூன்று ஆண்டுகளில் மேலும் 30 தொடர்பகங்கள் ஏற்படுத்த உள்ளன. நீண்ட தூரத்திலுள்ள இடங்களுக்கு டெலக்ஸ் வசதி அளிக்கின்ற திட்டமும் வகுக்கப் பட்டு வருவதால், இத்தொடர்பகங்கள் தாங்கள் அளிக்கும் வசதியை மேலும் மேம்படுத்தும்.

சுமார் 420 ஏக்கர் நிலத்தை, நல்ல முறையில் வளர்ச்சியடையச் செய்யும் நோக்கத்தில் எம்.எம்.டி.ஏ. வாங்கியுள்ளது. ஊர்க்கடை முதல் உயர் அங்காடிகளும், ஆரம்ப உயர்நிலைக் கல்விக் கூடங்களும், கல்லூரிகளும், திறந்த வெளிகளும், . பூங்காக்களுமாகிய அனைத்திற்கும் இந்தரும் சிறந்ததொரு திட்டவரைப்படம், நடப்பு மற்றும் அடுத்த அரை ஆண்டில் செயலாக்கப்படும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

மணலியில் உள்ள இந்த வளர்ச்சி பெற்ற மனைகளை வாங்கிடுமாறு தனிநபர்களையும், நிறுவனங்களையும், கூட்டுறவுச் சங்கங்களையும் எம்.எம்.டி.ஏ. அழைக்கிறது. முழுமையாகவும் தவணைகளிலும் விற்பனைக்குரிய இந்த இடத்தின் தற்காலிக விலை ரூ. 8,5000/- (ஒரு கிரவுண்ட்) தவணை முறையெனில் ஆறு அரை ஆண்டுகளில் செலுத்தலாம்.

தனி நபர்களுக்குத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக, வீடுகளை வாடகைக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளைச்செய்ய எம்.எம்.டி.ஏ. தயாராக உள்ளது. தவிரவும் சொந்தமாகவே நிதியுதவியினால் அவர்களுக்கு வீடு கட்டித்தரும் பணியையும் எம்.எம்.டி.ஏ. மேற்கொள்ளும். இந்த நிறுவனமே கட்டி முடித்த வீடுகளையும் முழுமையான தொகை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

சென்னையிலிருந்து திருச்சி செல்லும் தேசீய நெடுஞ்சாலையில் 40 கி.மீ. தொலைவில் மறைமலை நகர் எனும் புதிய நகரம் அமைக்கப்பட உள்ளது. அங்கு 3000 ஏக்கர் நிலத்தில் 1,00,000 மக்களை 20 ஆண்டுக் காலத்தில் குடியமர்த்துவதற்கான திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு எதிர்காலத்தைக் கணக்கிட்டுச் செயல்படுகிறது. சாமான்ய மக்களுக்குச்சாதனைகளைக்குவிக்கிறது. எங்கும் காணாத புதிய திட்டங்களை நிறைவேற்றுகிறது. எம்.எம்.டி.ஏ. வின் புதிய நகரங்கள் தோன்றும், தமிழ்நாடு அரசு சாதனைகளில் புதிய வரலாறு படைக்கும்!

மா அரி.



# கம்பின் தேன் ஒழுகல் நோய்

கம்பின் தேன் ஒழுகல்நோய், 'ஏர்க்கட்' நோய் எனவும் அழைக்கப்படுகிறது. இந்நோய் 'கிளாவிசெப்ஸ் மைக்ரோசெபாலா'. என்னும் பூசணத்தினால் உண்டாகின்றது. இந்தியாவில் இந்நோய் முதன் முதலில் பம்பாய் மாநிலத்தில் 1957-ஆம் ஆண்டு காணப்பட்டது. 1966-67-ஆம் ஆண்டுகளில் இந்நோய் பம்பாய் மாநிலத்தைத் தவிர மற்ற மாநிலங்களிலும் பரவத் தொடங்கிற்று. குறிப்பாகத் தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், உத்தரப் பிரதேசம், டில்லி, பஞ்சாப், ஹரியாணு முதலிய மாநிலங்களில் வீரிய ஒட்டுக் கம்பு ரகங்களை இந்நோய் அதிகமாகத் தாக்கிற்று. இந்நோயால் மகசூல் குறைந்து விடுவதுடன், நோயுற்ற கம்பைச் சாப்பிடுவதால் மனிதர்களுக்கும், கால்நடைகட்கும் அபாயம் விளைகின்றது. ஏனென்றல் தாக்கப்பட்ட கதிர்களிலுள்ள' ஏர்க்கட் கிளிரோஷியா' நச்சுத் தன்மை உடையனவாக இருக்கின்றன.

## நோயின் அறிகுறிகள்

கம்பு பூக்கும் தருவாயில் காற்றின் ஈரப்பசை அதிகமாகவும், வெப்பநிலை குறைவாகவும் இருந்தால் இந்நோய் அதிகமாகக் காணப்படும் ஒரு கதிரில் கிட்டத்தட்ட எல்லாப் பூக்களும் பாதிக்கப்படும். பூசணத்தின் விதைகள் கருப்பைக்குச் சென்று, கருப்பையை அழித்து அந்த இடத்தில் இப்பூசணம் பெருகுகின்றது. இப்பூசணம் தாக்கிய 10, 13, நாட்களில் கணக்கற்ற பூசண விதைகளை உள்ளடக்கி தேன் போன்ற திரவம் ஒழுகிக் கொண்டிருக்கும். நோயுற்ற கதிர்களில் மணிகளுக்குப் பதிலாகப் பிசுபிசுப்பான, தித்திப்பும், பழுப்பு நிறமும் உடைய இத்திரவம் உண்டாகிறது. இந்நோயின் தீவிரம் அதிகமாக ஆக பலவகைப் பூச்சிகள் இச் சர்க்கரைப் பாகு போன்ற இனிப்புள்ள திரவத்தை உணவாகக் கொள்ள மிகுந்துவரும் திரவம் சுரந்து ஈடுேயுள்ள இலைகளிலும் தரையிலும் வடியும். கதிர் முழுதும் நாசமடைந்துவிடும்.

தேன்போன்ற ஒழுகல் கண்ட 10-15 நாட்களுக்குள் இப்பூசணத்தின் 'ஏர்கட்' விதை உண்டாகத் தொடங்குகின்றது. அவை முதலில் மெதுவாகவும், இளஞ்சிவப்பாகவும், பிசுபிசுப்புடனும் இருக்கும். அது நாளடைவில் முதிர்ந்து மிகவும் கடினமான, கறுத்த பொடி நிறமுள்ளதாக மாறும். ஒவ்வொரு தானியத்திற்கும் பதிலாக ஒரு 'ஏர்கட்' விதை உண்டாகும்.

பூக்கள் பூக்கும் தருவாயில் காற்றின் ஈரப்பசை அதிகமாகவும், மேகம் அடர்ந்தும் இருந்தால் இந்நோய் வெகு விரைவில் பரவும். ஆனல் மணிகள் முதிர்ந்து இருந்தால் இந்நோய் தாக்காது. பூசண விதைகள் 3 முதல் 5 மி.மீ. நீளமும், 0.3 முதல் 1.5 மி.மீ. பருமனும் கொண்டிருக்கும். பூசண விதைகள் பொதுவாக கம்பு விதைகளை விடப் பெரியதாகவும், தடித்தும், கெட்டியாகவும், கறுப்பு நிறமாகவும், நீளவாக்கில் பள்ளங்களுடனும் இருக்கும். இதன் நுனியில் பிசுபிசுப்பும் மென்மையாகவும் இருக்கும். சில 'ஏர்கட்' விதைகள் கம்பு அளவிலும் அதற்கு சற்றுச் சிறியதாக இருக்கும்.

## நோய் பரவும் வகை

இப்பூசணத்தின் 'ஏர்கட் ஸ்கிளிரோஷியா' எனப்படும் பாகம் அறுவடையின் போது நிலத்திலேயே விழுந்து விடுகின்றது. நிலத்தில் இவற்றிலிருந்து முளைத்துவரும் விதைகள் காற்றின் மூலம் கம்பின் பூக்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. ஒரு செடியிலிருந்து மற்றொரு செடிக்குத் தேன் போன்ற திரவத்தை சாப்பிடும் பூச்சிகள் மூலமும், மழைத் தண்ணீர் மூலமும் இந்நோய் பரவுகின்றது.

## தடுக்கும் முறைகள்

இப்பூசணத்தின் விதைகள் நச்சுப் பொருளாக இருப்பதால்' அறுவடையான பின்பு அவைகளைத் தானியத்தில் இருந்து பிரித்து எடுத்த பின்தான் தானியங்களை உணவாகப்' பயன்படுத்த வேண்டும்.



அறுவடையின்போது கம்பின் மணிகளில் 'ஏர்கட் ஸ்கிளிரோஷியா' கலந்திருந்தால் தானியத்தை நன்ருகப் புடைத்து. சலித்து எல்லா 'எர்கட்' விதைகளையும் அகற்றிவிட வேண்டும் மேலும் அகற்றப்படாமல் இருந்தால் தானியத்தை 20 சத சாதாரண உப்புநீரில் போட்டுக் கலக்கினல், 'ஏர்கட்' விதைகள் அனைத்தும் மேலே மிதக்கத் தொடங்கும். அவற்றை சல்லடை மூலம் அகற்றி தீயிட்டு கொளுத்திட வேண்டும். பிறகு தானியத்தை நல்ல நீரில் கழுவி உப்பை அகற்றியபின்பு. வெயிலில் காயவைத்து சேமித்து வைக்க வேண்டும்.

இந்நோய் கம்பின் கதிரை அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் வரை அதிகமாகத் தாக்குகின்றது. ஆகவே செப்டம்பர் 15க்கு பிறகு கம்பு விதைப்பதை நிறுத்திவிட வேண்டும். இதன் மூலம் கம்புப் பயிரை இந்நோய் தாக்காமல் தவிர்க்க முடியும்.

நோயுற்றக் கதிர்களை செடியுடன் அவ்வப்போது பிடுங்கி எரிந்து விட வேண்டும். இவ்வாறு செய்வதால் இந்நோய் மேலும் பரவாமல் தடுக்க முடியும்.

இந்நோயைத் தடுக்க விதைகளுடன் மருந்து கலந்து விதை விதைப்பது அவசியம். 'அக்ரசான்', 'செரசான்' போன்ற பூசணக்கொல்லி மருந்துகளில் ஏதேனும் ஒன்றை 1 கிலோ விதைக்கு 2 கிராம் மருந்து என்ற அளவில் கலந்துவிதைக்க வேண்டும்.

இந்நோயைக் குறைப்பதற்கு 'சிராம்' அல்லது 'டைதேன் இசட். 78' மருந்தை 300 (700 கிராம் மருந்தை 300 லிட்டர் தண்ணீரில் கரைத்து) கதிர்கள் பூட்டை வாங்கும் தருவாயிலிருந்து 10 நாட்கள் இடைவெளியில் இரண்டு அல்லது மூன்று முறை தெளிக்க வேண்டும்.

மேற்கூறியவாறு தடுப்பு முறைகளை மேற்கொண்டால் ஏற்படும் தேன் ஒழுகல் நோயால் ஏற்படும் தீங்குகளைத் தவிர்த்து கம்பு மகசூலைப் பெருக்க முடியும்.


இலக்கியங்களுக்கு
இறவாப் புகழ் தருவது...

காகிதம்

ஹோமர் முதல் ஹெமிங்வே வரை,
காளிதாசர் முதல் காஃப்காவரை,
ஆதிசங்கரர் தொட்டு அரிஸ்டாடில் வரை,
திருவள்ளுவர் தொட்டு தோருவரை......

தரமான காகிதம், சிந்தனையாளர்களின் எண்ணங்களும், கருத்துக்களும் காலத்தால் அழிவுரு வண்ணம் காத்து எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்கி உதவுகிறது.

சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்
பள்ளிப்பாளையம்,
சேலம் மாவட்டம்
தமிழ்நாடு

The Watermark
of Quality

எழுத, அச்சிட, உறையிட
உன்னதமான காகிதங்கள்

## மறவாதீர்கள்:

## உங்கள் மகள் ஒருநாள்

## மணமகளாக அமர வேண்டியவள்!



திருமணம் என்ருலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்ருல்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கினுல் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்ருேம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது— இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1,850/- |

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கண்டுபிடிப்புகள்!



### சிறு விவசாயிகள், விவசாயக் கூலிகள் வாழ்க்கைத் தரம்!

கோவை மாவட்டத்திலுள்ள காரமடை வட்டத்தில் சிறு விவசாயிகள், விவசாயக் கூலிகள் ஆகியோர்களின் வாழ்க்கைத் தரம் பற்றி ஆராயப்பட்டது. சிறு விவசாயிகளிடையே ஆண்டு வருமானம் ரூபாய் 300 முதல் ரூபாய் 6,800 வரையிலுள்ளது. அதே சமயத்தில் விவசாயக் கூலிகளிடையே ரூபாய் 300 முதல் ரூபாய் 3,000 வரையிலுள்ளது. தனி நபர் வருமானமும், செலவும் கணக்கிடுகையில் இரு சாராரிடமும் பற்ருக்குறையே உள்ளது. இருப்பினும் செலவைச் சரிக்கட்டுவதில் சிறு விவசாயிகளிடையே 61 சதவிகிதம் பற்ருக்குறையும், விவசாயக் கூலிகளிடையே 23 சதவிகிதம் பற்ருக்குறையும் காணப்படுகிறது. இரு சாராரும் உணவுக்குத் தங்கள் வருமானத்தில் 60 சதவிகிதத்துக்கு மேல் செலவிடுகிருர்கள். சிறு விவசாயிகளின் தனி நபர் கடன், விவசாயக் கூலிகளின் கடனைப் போன்று இரு மடங்காக உள்ளது.

### நிலவள வங்கியினுல் கிணறு தோண்டுவதற்குக் கொடுக்கப்பட்ட கடனுதவியால் ஏற்பட்டுள்ள மாறுதல்கள்.

நிலவள வங்கியினுல் கிணறு தோண்டுவதற்குக் கொடுக்கப்பட்ட நீண்ட காலக் கடனுதவியால் ஏற்பட்டுள்ள மாறுதல்களை ஆராய, தர்மபுரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டத்தில் ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வில் நிலவள வங்கியினுல் கடனுதவி பெற்றவர்களிடையே ஏற்பட்டுள்ள மாறுதலையும், கடனுதவி பெருதவர்களின் நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது. அதிலிருந்து கடனுதவி பெருதவர்கள் தங்களுடைய நிலம் முழுவதும் மானுவாரியாகவே பயிர் செய்கிருர்கள் எனவும், அதே சமயம் கடனுதவி பெற்றவர்கள் தங்கள் நிலங்களில் இன்னும் 59.73 சதவிகிதப் பரப்பில் மட்டுமே மானுவாரி ரகங்களைப் பயிரிட வேண்டியிருக்கிறது எனவும் தெரிய வருகின்றது.

கடனுதவி பெற்றவர்கள், பெருதவர்களைவிடக் குறைந்த அளவு அதாவது 69.39 சதவிகிதம் பரப்பில் மட்டுமே - உணவுப் பயிர் சாகுபடி செய்கிருர்கள். கடனுதவி பெற்றவர்களின் நிலங்களில் கிணறுகள் தோண்டிய பிறகு வாணிகப் பயிர்கள் அதிகமாகப் பயிரிடப்படுகின்றன. பயிரிடும் தீவிரம், ஒரு எக்டேருக்கு ஆகும் தொழிலாளர்களின் தேவை, பயிர்ச் செலவு ஆகியவைகள் கடனுதவி பெற்றவர்களைப் பொறுத்தவரை அதிகமாகின்றன. கடனுதவி பெற்றவர்களின் சேமித்து வைக்கும் தன்மையானது ரூபாய் 233-லிருந்து ரூபாய் 341 ஆக உயர்ந்துள்ளது. கிணறு தோண்டுவதற்காக வாங்கப்பட்ட கடனில்ஒரு பகுதி வேறு சில வேலைகளுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. கடனுதவி பெற்றவர்களுக்கு அதிகமாகக் கிடைக்கும் வருவாய் காரணமாக கடன்களைத் திருப்பிக் கொடுப்பதற்குள்ள சாதகமானச் சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ளன. விவசாயிகள் தாங்கள் முதலாவதாகச் செலவு செய்த பணத்தை மூன்று ஆண்டுகளில் திருப்பி எடுத்துவிட முடியும் என்று ஆய்வு சுட்டிக் காட்டுகிறது. கிணறு தோண்டுவதற்கு முன் குறைந்து காணப்பட்ட வருவாயின் அளவு, தோண்டிய பின் பெருகி வருவதையும் இந்த ஆய்வின் மூலம் உணர முடிகிறது.





# அரிசன கிறிஸ்துவர்களுக்குச் சலுகைகள்



கிறிஸ்துவ மதத்திற்குமாறிவிட்ட அரிசனங்களுக்கு மாநில அரசின் சார்பில் இதுவரையில் அரிசனங்களுக்கு கொடுப்பதுபோல்,

புறம்போக்கு நிலங்களை பட்டா செய்து கொடுத்தல், தனிப்பட்டோர் நிலத்தை கையகப்படுத்தி வீடுகட்ட பட்டா வழங்கல், கல்விச் சலுகைகள் அனைத்தும் தருதல் ஆகியவைகள் நடைமுறையில் இருந்த வருகின்றன.

இனிமேல், அரிசனங்களுக்குத் தற்போது மாநில அரசால் கொடுக்கப்பட்டு வரும் எல்லா சலுகைகளும் பொருளாதார முன்னேற்ற அடிப்படையில் கிறிஸ்துவ அரிசனங்களுக்கும் வழங்கப்படும்.

(1) 27 வகையான சிறு தொழில்களுக்கு வட்டியில்லாக் கடன் அளித்தல்;

(2) உழவு மாடுகள் வாங்க, விவசாய கிணறுகள் வெட்ட மானியம் வழங்குதல்;

(3) கைத்தொழில் கருவிகள் இலவசமாக அளித்தல்.

(4) அரிசன வீட்டு வசதி வாரியச் சார்பில் வீடு கட்டிக் கொடுத்தல்.

இவை போன்ற அரிசன மக்களுக்குத் தரப்படும் எல்லா பொருளாதார அடிப்படையில் சலுகைகளும் அரிசன கிறிஸ்துவ மக்களுக்கும் விரிவாக்கப்படும்.

அரிசனங்களுக்கு உத்யோகங்களுக்கான சிறப்புப் பயிற்சி பள்ளி அமைத்திப்பதில் அரிசன கிறிஸ்துவர்களுக்கும் இடமளிக்கப்படும்.

அரிசன கிறிஸ்துவர்களுக்கு மேற்கண்ட புதிய சலுகைகளுக்காகத் தேவைப்படும் அதிக நிதியாதாரத்துக்கான தனிநிதி ஒதுக்கீட்டை மாநில அரசு செய்யும்.

அரிசன கிறிஸ்துவர்களுக்கு விகிதாசார அடிப்படையில் கல்விச் சாலைகளில் சேருவதற்கும், வேலை வாய்ப்புக்களைப் பெறுவதற்கும் இப்போது முதல் தலைமுறைக்கு மட்டும், பிற்படுத்தப்பட்டோருக்குள்ள விகிதாசார சலுகையை அரிசன கிறிஸ்துவர்களுக்கு மாநில அரசு தந்து வருகிறது. இனிமேல் ''முதல் தலைமுறைக்கு மட்டும்'' என்ற நிபந்தனை நீக்கப்பட்டு இச்சலுகை எல்லா தலைமுறைக்கும் அரிசன கிறிஸ்துவர்களுக்குத் தரப்படும்.

# நன்றி! நன்றி! நன்றி!

அரிஜன கிறித்தவர்களுக்கு தமிழ்நாடு அரசு அளித்துள்ள சலுகைகளுக்கு நன்றி தெரிவித்து நூற்றுக்கணக்கான கடிதங்கள் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கட்கு வந்துள்ளன. அவற்றில் சில முக்கியமான கடிதங்கள் :—

ஆர்ச் பிஷப் அருளப்பா அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில் கிறித்தவத் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ''இத்தகைய சலுகைகளை இத்துணை சமதர்ம மனப்பான்மையுடன் அளித்துள்ளது இந்தியாவில் தமிழக மாநில அரசு ஒன்றே'' என்று குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். ''இது பிற மாநிலங்களுக்கும் வழிகாட்டும்'' என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தென்னிந்திய கிறித்தவர்த் திருச்சபையைச் சார்ந்த பேராயர் சுந்தர் கிளார்க் அவர்கள் ஏசுநாதர் அவர்களது வார்த்தைகளை மேற்கோள் காட்டி முதல்வர் கலைஞர் அவர்கட்கு நன்றி கூறியுள்ளார்.

## ஆர்ச். பிஷப் அருளப்பா

வணக்கத்திற்குரிய ஆர்ச். பிஷப் அருளப்பா அவர்களது கடிதம் வருமாறு :

மாண்புமிகு, தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கு...

தாழ்த்தப்பட்ட கிறித்தவ மக்களுக்குரிய சலுகைகள் பற்றி வெகு காலமாகச் செயல்பட்டு வந்த விண்ணப்பத்திற்குத் தாங்கள் பெருமனம் கொண்டு செவிசாய்த்தது பற்றித் தமிழகக் கிறித்தவ மக்கள் அனைவரும் அளவிலா மகிழ்ச்சியும் மனநிறைவும் அடைந்துள்ளனர் என்பதைத் தங்களுக்கு மிக மிக நன்றியுடன் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இத்தகைய சலுகைகளை இத்துணை சமதர்ம மனப்பான்மையுடன் அளித்துள்ளது இந்தியாவில் தமிழக மாநில அரசு ஒன்றே என்பதும் மிகவும் குறிப்பிடத்தக்கது. இது பிற மாநிலங்களுக்கும் வழி காட்டும் என நம்ப இடமுண்டு. இதற்காகத் தங்களுக்கு எவ்வளவு நன்றி கூறினும் செல்லும். நன்றி. நன்றி. நன்றி.

தங்களை நேரில் கண்டு நன்றி கூற வாய்ப்பளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

—இவ்வாறு எழுதியுள்ளார் ஆர்ச் பிஷப் அருளப்பா, அவர்கள்.

## சென்னைப் பேராயர் சுந்தர் கிளார்க்

வணக்கத்திற்குரிய தென்னிந்தியக் கிறித்தவத் திருசபையின் சென்னைப் பேராயர் சுந்தர் கிளார்க் எழுதியுள்ள கடிதமாவது:

அன்புள்ள ஐயா,

தாங்கள் தாழ்த்தப்பட்ட கிறித்தவ மக்களுக்குத் தற்போது செய்த உதவியை என்றும் மறவோம்; இயேசு பெருமான் கூறிய வார்த்தைகளைத் தாங்களே கூறி (கேளுங்கள் கொடுக்கப்படும் தட்டுங்கள் திறக்கப்படும்) எங்கள் ஏழை மக்களுக்குச் செயல்முறையில் சிறப்பித்ததற்காகப் பணிவுடன் நன்றி பாராட்டுகிறோம் நீவிர் செய்த இந்தப் பெருத்த சலுகைக்காக மனமார்ந்த நன்றி செலுத்துகிறோம். ஆசிர்வதிக்கப் பிரார்த்திப்போம்.

உங்களுக்கு என் அன்பு வணக்கம்.

— இவ்வாறு சென்னைப் பேராயர் சுந்தர் கிளார்க் எழுதியுள்ளார்.

## பேராயர் நியூபிகின்

பேராயர் நியூபிகின் சென்னை மாநகர பிஷப்பாக இருந்து அண்மையில் ஓய்வுபெற்றவர். இங்கிலாந்து நாட்டின் பிமிங்காம் நகரில் தங்கியுள்ள அவர் எழுதியுள்ள கடிதத்தின் விவரம் வருமாறு:

எனது அன்பிற்குரிய முதலமைச்சர் அவர்களே!

பிறருக்கு வழங்கப்படுவது போன்ற சலுகைகளைத் தாழ்த்தப்பட்ட கிறித்தவர்களுக்கும் வழங்கத் தங்கள் அரசு எடுத்த முடிவினைப் பற்றி இப்போது தான் அறிந்தேன். தங்களுடைய இந்தச் செயலைக் குறித்து எனது பாராட்டுதல்களைத் தெரிவிக்க இதனை எழுதுகிறேன். நெடுங்காலமாக மன வேதனையை அளித்து வந்த இந்த ஒரு விஷயம் இது. தங்களது செயல், மிகுந்த மனத் திருப்தியைப் பரவலாக ஏற்படுத்தும். எனது நன்றியைத் தயவுகூர்ந்து ஏற்றுக் கொள்ளுங்கள்.

எனது அன்பு வணக்கத்துக்கும் அன்புக்கும் உரியவரும், எனக்குப் பின்னால் நான் சென்னையில் வகித்து வந்த பொறுப்பினை ஏற்றுள்ளவருமான, பேராயர் சுந்தர் கிளார்க் அவர்களிடமிருந்து இத் தகவலை இன்று நான் பெற்றேன். எனக்கு இது எத்தகைய மகிழ்ச்சியை அளிக்கும் என்பதை அவர் அறிவார் என்பதால் இதுபற்றி நான் உடன் அறிய வேண்டும் என்று அவர் விரும்பியிருக்கிறார். எனக்குத் தாங்கள் ஒரு இனிய நண்பராக விளங்கியிருக்கிறீர்கள். இதேபோல அவரிடத்தும் தாங்கள் நட்புடன் இருப்பீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

போப், கால்டுவேல் ஆகியோரது (வெண்கலச்) சிலைகள் தயாராகி அவை மெரீனா கடற்கரையில் மீண்டும் வைக்கப்பட்டு விட்டன என்பதை அறிய நான் மகிழ்ச்சி அடைகிறேன். இது நிகழத் தாங்கள் தக்க நேரத்தில் அளித்த பேருதவிக்கு, நான் என்றும் தங்களுக்குக் கடமைப்பட்டவனாவேன்.

இந்த நாட்டிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் பொது மேடைகளில், பேசுகிற வாய்ப்புகள் பல பெற்றிருக்கிறேன். குடிசை வாழ் மக்களுக்காகத் தமிழ்நாட்டு அரசு ஆற்றியுள்ள மகத்தான தனிச் சிறப்புமிக்க பணிகள் பற்றிப் பல நேரங்களில் பேசிவருகிறேன். நான் செல்லுமிடங்களிலெல்லாம் மக்கள் இதில் அதிக அக்கறை செலுத்துகின்றனர்.

தங்களுக்கும் தங்கள் அரசுக்கும் இறைவன் தன் ஆசியை வழங்கி வழி காட்டி வர வேண்டும் என்று நான் தொடர்ந்துபிரார்த்தித்து வருகிறேன்.

வணக்கம் பல.

தங்களிடம் உண்மையுள்ள

வெஸ்லி நியூபிகின்.

**விவசாயக் கடனுதவி, கடன் இடைவெளி மதிப்பீடு.**

பரம்பிக்குளம் ஆளியார் பாசனத் திட்டம் மூலம் பயன் பெறும் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த உடுமலைப் பேட்டை, குடிமங்கலம் ஆகிய வட்டாரங்களில் விவசாயக் கடன் தேவை, கடன் இடைவெளி பற்றி மதிப்பிட்ட ஆராய்ச்சிகளிலிருந்து பண்ணையின் பரப்பு அதிகம் ஆக ஆக கடன் தேவை குறைகிறது என அறியப்படுகிறது. ஒரு ஏக்கர் நிலத்தில் பயிர் செய்வதற்கு ஆகும் செலவு சிறியப் பண்ணைகளில் அதிகமாக உள்ளது. நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் கடனுதவிகளை நடுத்தர, பெரிய விவசாயிகள் அதிகப் பயனாகப் பெறுகின்றனர். சிறிய விவசாயிகளின் கடன் தேவையில் 71 சதவிகிதத் அளவை 'லேவாதேவி' செய்பவர்களே பூர்த்தி செய்கின்றனர். மேலும் சிறிய விவசாயிகளிடையேதான் அதிகமாகக் கடன் இடைவெளி காணப்படுகிறது.



**தீவிர சாகுபடித் திட்டங்களின் முக்கியத்துவம்.**

தீவிர பருத்திச் சாகுபடித் திட்டம், விவசாயிகள் தங்கள் பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ளவும், பண்ணையின் நிர்வாக மேம்பாடுகளை மேற்கொள்ளவும் உதவியுள்ளது.

[illegible]

42

**[illegible]ய உற்பத்தியும், வியாபாரமும் :**

மிளகாய் உற்பத்தியிலும், வியாபாரத்திலும் உள்ள குறைபாடுகளையும் சிக்கல்களையும் பற்றி, பழனி வட்டத்திலுள்ள ஒட்டன்சத்திரம் வட்டாரத்தில் ஆராய்ச்சி செய்ததில் ஒரு குவிண்டால் பச்சை மிளகாய் உற்பத்தி செய்வதற்கு ரூபாய் 22.60-ம், உலர்ந்த மிளகாய் உற்பத்திக்கு ஒரு குவிண்டாலுக்கு ரூபாய் 143.63-ம் செலவு செய்யப்படுகிறது என்று தெரியவருகிறது. உலர்ந்த மிளகாய் உற்பத்தி செய்வதின் மூலம் எக்டேருக்கு நிகரஇலாபம் ரூபாய் 1,962-ம், பச்சை மிளகாய் உற்பத்தி மூலம் எக்டேருக்கு நிகர இலாபம் ரூபாய் 8,978-ம் கிடைப்பதால், உலர்ந்த மிளகாய் உற்பத்தியை விட, பச்சை மிளகாய் உற்பத்தியே அதிக இலாபம் கொடுக்கிறது என்பது புலனாகின்றது. பச்சை மிளகாய், உலர்ந்த மிளகாய் ஆகியவைகளின் உள்ளீடு—வெளியீட்டு விகிதம் முறையே 2.14, 1.44. இந்த ஆராய்ச்சி நீர்ப்பாசன முன்னேற்றத்திற்கும், அதிகமாக உரங்கள் உபயோகிப்பதற்கும் வழி வகுக்கிறது. உற்பத்தி செய்வோர், நுகர்வோர் கொடுக்கும் மிளகாய் விலையில் 65 முதல் 66 சதவீதம்தான் பெறுகின்றனர் என்றும் தெரிய வருகிறது.




**மிளகு உற்பத்தி, விற்பனை விலைகளின் மாற்றம்.**

மிளகு உற்பத்தி, விற்பனை, விலைவாசி நிலவரம் பற்றி கேரள மாநிலத்தில் உள்ள கோட்டயம் மாவட்டத்தில் வாழூர் வட்டத்தில் ஆராய்ச்சி செய்ததில், ஒரு ஏக்கர் மிளகு பயிர் செய்வதற்கு ரூபாய் 1,325 செலவாகிறது என்றும், அதில் 62 சதவிகிதம் ஒவ்வொரு ஆண்டும் மிளகு கொடியின் பாதுகாப்பிற்காகத் தொடர்ந்து செலவு செய்து கொண்டிருக்கவேண்டியுள்ளது என்றும் தெரிய வருகிறது. ஒரு வருமானம் ரூபாய் 750-ம், நிகர வருமானம் ரூபாய் 410.60-ம் கிடைக்கிறது. மிளகுத் தோட்டம் அமைப்பதற்கு ஆகும் செலவும், மகசூலும் எதிர் விகிதமான உறவுடையதாகத் தென்படுகிறது. அதே சமயத்தில் நிலத்தின் பரப்பும், மிளகுக் கொடியின் வயதும் விளைச்சலுக்கு நேர் விகிதமான உறவுடையவைகளாக இருக்கின்றன. வழூரிலிருந்து ஒரு குவிண்டால் மிளகை கொச்சிக்கு விற்பனை செய்வதற்குக் கொண்டு செல்ல ஆகும் செலவு ரூபாய் 9.51 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. உற்பத்தி செய்வோர், நுகர்வோரின் விலையில் 66.30 சதவிகிதம் பெறுகின்றனர். விற்பனை விலைக்கு ஏற்ப, மிளகு உற்பத்தி செய்யப்படும் பரப்பில் ஏற்படும் மாற்றம், பரப்பு குறைந்து வரும் தன்மையைக் காட்டுகிறது.

**கீழ்பவானி அணைத் திட்டத்தினால் பண்ணைத் திறன், மூலதன உருவாக்கம் இவற்றில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள்!**

கோபிசெட்டிப்பாளையம் வட்டத்தில் கீழ்பவானி அணைத் திட்டத்தினால் பண்ணைத் திறன், மூலதன உருவாக்கம் ஆகியவற்றில் ஏற்பட்ட மாறுதல்களை அறிய நடத்தப்பட்ட ஆராய்ச்சி கீழ்க்கண்ட முடிவுகளை வெளிப்படுத்தியுள்ளது.

கீழ்பவானி அணைத் திட்டத்தின் கீழ் உள்ள நிலங்களில் நெல், நிலக்கடலை, பருத்தி, மஞ்சள், கரும்பு, ராகி, கம்பு, எள் ஆகியவை நீர்பாசனத்தின் உதவியால் பயிர் செய்யப்படுகின்றன. ஆனால் இத்திட்டத்தினால் பயன் பெறாத நிலங்களில் மானாவாரியாக நிலக்கடலை, கம்பு, ராகி, சோளம் ஆகியவையே பெரிதும் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் உதவியால் நீர்ப்பாசனம் பெறும் நிலங்களில் குடும்பத்தினரே அதிக வேலை செய்வதுடன், கூலி ஆட்கள், நிரந்தரமான வேலை ஆட்கள் யாவரும் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றனர். கீழ்பவானி திட்ட விவசாயிகள், திட்டத்தினால் பயன்பெறாத மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக இலாபம் பெறுகின்றனர். மூலதனப் பெருக்கத்திற்காக முதலீடு செய்யக் கிடைக்கும் நிதி கீழ்பவானி திட்டப் பகுதியில் உள்ள ஒரு பண்ணைக்கு ரூபாய் 476.97 எனவும், இத்திட்டத்தால் பயன்பெறாத ஒரு பண்ணைக்கு ரூபாய் 167.21 எனவும் உள்ளது. முதலீடு செய்ய கிடைக்கும் தொகை, நிகரமாக பயிர் செய்யும் பரப்பையும், பயிர் விளைச்சல் திறனையும் பொறுத்துள்ளது என தீர்க்கமாக அறியப்படுகிறது. மூலதன உருவாக்கமாக ரூபாய் 510.78 கீழ் பவானி திட்ட பகுதியிலும், ரூபாய் 49.99 மற்ற நிலங்களிலும் கிடைத்துள்ளது.

கீழ்ப்பவானி விவசாயிகள் தங்கள் சேமிப்புத்தொகையை நில அபிவிருத்தியிலும், நீர்ப்பாசனத்திற்காகவும், விவசாயச் சம்பந்தமான வேலைகளுக்காகவும் பயன்படுத்துகின்றனர். மற்றவர்கள் தங்களுடைய குறைந்த சேமிப்பை கால்நடைகளுக்காகச் செலவு செய்கின்றனர்.

**விவசாயத்தின் வளர்ச்சி முறையும், தமிழகத்தின் பொருளாதார முன்னேற்றத்தில் அதன் தொடர்பும்.**

விவசாயத்தின் வளர்ச்சி முறையும், தமிழகத்தின் பொருளாதார முன்னேற்றத்தில் அதன் தொடர்பைப் பற்றியும் அறிய, செங்கற்பட்டு மாவட்டத்தில் நடத்திய ஓர் ஆய்வின் மூலம், வேளாண்மைத் தொழிலின் விரிவுக்கோ அல்லது தொழில் துறைக்கோ முதலீடு செய்யும் அளவுக்கு வேளாண்மை உபரி கிடைப்பது இல்லை என்றும், பயிரிடுதலைத் தீவிரப்படுத்துவதன் மூலமும், பண்ணையில் அதிக முதலீடு செய்வதன் மூலமும் இம்மாவட்டத்தில் வேளாண்மை உபரியை அதிகப்படுத்த முடியும் என்றும் தெரியவருகிறது. மேலும் இவ்வாய்ப்பு தொழிலாளியை வேளாண் துறையிலிருந்து அத்துறையின் உற்பத்தியைப் பாதிக்காமல் அகற்ற முடியாது என்பதைத் தெரியப்படுத்துகிறது. பல துறைகளுக்குள்ளான ஆய்வின்படி உற்பத்திப் பெருக்கம் 'ஆட்டோமோபைல்' துறையில் அதிகம் என்றும் (4.77), இதைத் தொடர்ந்து மின் விசைமற்றும்மின்னணுத்துறை (3.18), வேளாண்மைத் துறை (3.65) ஆகியவற்றில் உற்பத்திப் பெருக்கம் அதிகம் என்றும் தெரிகிறது. ஒரே சமயத்தில் தொழிலாளர்களையும், பாசன வசதியையும் அதிகப்படுத்துவதன் மூலம் நிகர இலாபத்தையும், வேலை வாய்ப்பையும் அதிகரிக்கலாம் என்று மாற்று முறைத் திட்டத்தின் முடிவுகள் தெரியப்படுத்துகின்றன.

**நெற்பயிரின் தண்டுப்பூச்சி, கரணை ஈயைக் கட்டுப்படுத்த குருணை வடிவப் பூச்சிக்கொல்லிகளின் ஆற்றல்.**

'கார்போ பியூரான்', 'போரேட்', 'குவின்ஸ் ஃபாஸ்,' 'ஃபென்தியான்' ஆகிய நான்கு குருணை வடிவப் பூச்சி கொல்லிகளையும், 'பேரத்தியான்,' 'என்ட்ரின்' ஆகிய திரவ மருந்துகளையும் நெற்பயிரில் காணப்படும் தண்டுப்பூச்சி, கரணை ஈ ஆகியவற்றை கட்டுப் படுத்த இரண்டு பருவங்களில் குறிப்பாக அவைகளைப் பயன் படுத்தும் பருவத்தை கண்டறிய-சோதனை செய்யப்பட்டது. 'கார்ப்போபியூரான்', 'போ 'போரேட்' ஆகிய மருந்துகளை நடவுக்குப் பின் 30-ஆம் நாள் தெளிப்பதைவிட, நடவு செய்த 15 அல்லது 20-ஆம் நாளில் முதல் தடவை இடுதல் தண்டுப் பூச்சியையும், கரணை ஈயையும் நன்கு கட்டுப் படுத்துகிறது என்பது தெரிய வருகிறது. குருணை வடிவ மருந்துகளைவிட இலைகளின்மீது தெளிப்பது குறைந்த ஆற்றல் உடையதாய் இருந்தது என்பதும் புலனாகியுள்ளது.



**பால் உற்பத்திப் பொருளியல் ஆராய்ச்சி.**

கோவை மாவட்டம், சுல்தான் பேட்டை வட்டாரத்தில் மேற்கொள்ளப்பட்ட பால் உற்பத்திப் பொருளியல் ஆராய்ச்சியில், ஒரு லிட்டர் பால் உற்பத்தி செய்வதற்கு ஆகும் சராசரி செலவு 79 பைசா எனக் கணக்கிடப்பட் டுள்ளது. பால் உற்பத்தி செய் வதற்கு ஆகும் உள்ளீடு-வெளி யீட்டு விகிதம் 1.04 என்ற நிலையில் உள்ளது. ஒரு கறவை எருமை மூலம் ஓராண்டில் நிகர வருமானமாக ரூபாய் 375.07 கிடைக்கிறது. இதில் குடும்பத்தினர் செய்யும் வேலைக்கு கூலி சேர்க்கப்பட வில்லை. தீவனப் பொருள் களின் மதிப்பு, பால்தரும் காலம், கறவை மாட்டின் தரம் முதலியவைகள் நேரடி யாகப் பால் உற்பத்திப் பெருக் கத்திற்கு உதவி செய்கின்றது.

**முன் பருவக் கருத்துக் காட்சி பற்றிய ஓர் ஆராய்ச்சி.**

பண்ணைச் சாகுபடி முறைகளை விவசாயிகளிடையே பரப்புவதில் வானொலி மற்றும் செய்தித்தாள்களைவிட, தமிழ் நாடு வேளாண்மைத் துறையினரால் நடத்தப் பெறும் முன்பருவக் கருத்துக் காட்சி பெரும் பணி யாற்றியுள்ளது. கல்வி கற்காத அல்லது குறைந்த கல்வி பெற்ற சிறு நிலம் கொண்ட விவசாயிகளே இந்தக் கருத்துக் காட்சியினால் பெரும் பயன்பெற்றனர். மாவட்ட வேளாண்மை அலுவலர்களின் தனி ஆர்வம், வழிகாட்டுதல், ஊக்குவித்தல் ஆகியவற்றாலும், விவசாயிகளின் கூட்டுறவுகளினாலும், காலத்தே கொடுத்த பயிற்சியினாலும் துணை வேளாண்மை அலுவலர்கள் தங்கள் விரிவினை வேலையை வெற்றிகரமாகச் செய்தார்கள். போதிய போக்குவரத்து வசதியின்மை, போதிய உதவியாளர்கள் இன்மை, மேலதிகாரிகள் அறிவுரைகள் கிடைக்கப்பெறாமை, போதிய கிடங்கு வசதியின்மை, அடைய முடியாத குறியீடுகள் ஆகியவை துணை வேளாண்மை அலுவலர்களுக்குரிய சில பிரச்னைகளாகும்.

எல்லாச் சத்துக்களும் அடர்ந்து காணப்படுவது, சிக்கனமானது, எளிதில் இடுவதற்கு ஏற்றதாக இருப்பது போன்ற காரணங்கள், 'என். பி. கே' கலப்பு உரத்தை விவசாயிகள் பயன்படுத்துவதற்குத் தூண்டு கருவிகளாக இருந்தன. புதிய கண்டு பிடிப்புகளை விவசாயிகள் கையாள, வானொலி ஒரு கருவியாக அமைந்தது.




தகவல் :—
தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோவை—3.



# சம்பா, தாளடிப் பட்டங்களில் நெல் உற்பத்தியைப் பெருக்கும் நுட்பங்கள்!

—'ஆர்.எம்.'

தமிழகத்தில் ஆண்டுதோறும் ஏறத்தாழ 66 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் நெல் பயிரிடப் பட்டு வருகிறது. இப்பரப்பளவில் பெரும் பகுதி சம்பா, தாளடிப் பட்டங்களிலேயே பயிராகிறது. பொதுவாகத் தென்மேற்குப் பருவ மழையும், வடகிழக்குப் பருவமழையும் சம்பா, தாளடிப் பட்ட நெல் சாகுபடிக்குத் தேவையான நீர்வசதியை அளித்து வருவதால் சம்பா, தாளடிப் பட்டங்களிலேயே தமிழக மெங்கும் பெரும் பரப்பளவில் நெல் பயிரிடப் படுகிறது. எனவே, தமிழகத்தின் அரிசி உற் பத்தியைப் பெருக்குவதற்குச் சம்பா, தாள டிப்பட்ட நெல் சாகுபடியில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டியது மிகவும் இன்றியமை யாததாகும்.

**சம்பா, தாளடிப் பட்டங்களில் உள்ள இன்னல்கள்**

குறுவைப் பட்டத்திலும், நவரைப் பட்டத் திலும் குன்றென மகசூல் குவித்திடுவதற்குத் தேவையான நல்ல வெய்யலும், மப்பும் மந் தாரமும் அற்ற வானிலையும் இயற்கையாகவே கிடைக்கிறது. ஆனல், சம்பா, தாளடிப் பட் டங்களில் பெரும்பாலும் வெய்யல் குறைந்த, மப்பும், மந்தாரமான வானிலையும், தொடர்ந்து பெருமழையும், சில சமயங்களில் புயலும் ஏற்படுவதால், பொதுவாகச் சம்பா, தாளடிப் பட்டங்களில் அதிக நெல் மகசூல் பெற முடிவ தில்லை. சம்பா, தாளடிப் பட்டங்களில் பெரும் பரப்பில் நெல் பயிரிடப்படுவதால், தேவை யான அளவிற்கு தொழுஎரு அல்லது பசுந் தாள் எரு போட முடியாத நிலையும் உள்ளது.

மேலும், மழையின் காரணமாகக் காலத்தில் களையெடுத்தல், மருந்து தெளித்தல், மேலுர மிடுதல் ஆகியபணிகள் தடைபடுவதுடன், தெளித்த மருந்தும், இட்ட மேலுரமும் மழையால் அடித்துச் செல்லப்பட்டு விடுகின் றன! வெய்யல் இல்லாத, மப்பும் மந்தார முமான சூழ்நிலை, பூச்சிகளையும், நோய்களை யும் தோற்றுவித்து நெல் மகசூலைக் குறைக் கின்றன! சில ஆண்டுகளில் வடகிழக்குப் பருவமழை பொய்த்து விடுவதால் (கடந்த ஆண்டினைப் போல்) நடவு செய்த பின் வளர்ச்சி நிலையிலும், பூக்கும் நிலையிலும், பூத்த நிலையிலும் நெற்பயிர்க் காய்ந்து போய் பெரும் சேதம் ஏற்படுவதுண்டு!

இத்தகைய இடர்பாடுகளுக்கு எதிராகத் தமிழக உழவர் பெருமக்கள், சம்பா, தாளடிப் [illegible] நெல் பயிரி[illegible] போராடி [illegible] கின்றன[illegible] டங்களி[illegible] சம்பா[illegible] முடியா[illegible] மக்கள்[illegible]

அவ[illegible] தாளடி[illegible] நெல் உற்பத்தி நுட்பங்களை (Production techniques). கண்டு தமிழக உழவர் பெரு மக்களுக்குக் காணிக்கையாகப் படைத்துள் ளோம்.

## உற்பத்தி நுட்பங்கள்

சம்பா, தாளடிப் பட்டங்களில் நெல் உற் பத்தியைப் பெருமளவில் பெருக்குவதற்குப் பின்கண்ட 10 நுட்பங்களையும் மேற்கொள்ளு மாறு தமிழக உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்ருேம்.

## முதலாவது நுட்பம்

**குறுகிய காலத்தில் அதிக மகசூல் தரும் உயர் விளைச்சல் ரகங்களையே பயிரிட வேண்டும்!**

இந்த நுட்பத்தின் அடிப்படையில் ஆராய்ந்து பார்த்தால் சம்பா, தாளடிப் பட்டங்களுக்குப் பின்கண்ட ரகங்களே ஏற்றவை என்பது தெளிவாகிறது.




[illegible]

| ரகத்தின் பெயர் | வயது (நாட்கள்) |
|---|---|
| ஐ. ஆர். 20 | 125 முதல் 130 |
| ஐ. ஆர். 8 | 130 முதல் 135 |
| பொன்னி | 135 முதல் 140 |

பொதுவாகச் சம்பா, தாளடிப் பட்டங் களுக்கு 150 நாட்கள் வயதிற்குட்பட்ட நெல் ரகங்களையே பயிரிடுதல் சிறந்தது. 'கோ-25' போன்ற நீண்டகால வயதுடைய ரகங்களைப் பயிரிடுவதைத் தவிர்ப்பதால், தண்ணீர் வசதி யுள்ள இடங்களில் சம்பா அறுவடைக்குப் பின் கோடைப் பயிர் செய்துப் பயனடைய லாம்.

தமிழமெங்கும் வழக்கமாக 15.4 இலட்சம் ஏக்கர் (6.25 இலட்சம் எக்டேர்) பரப்பில் 'கோ. 25' ரகம் ஒரு போக சம்பா நிலங் களில் பயிரிடப்பட்டுவருகிறது. இப்பரப் பளவு முழுவதிலும் 'கோ. 38' ரகத்தைப் பயி ரிட்டால், ஆண்டு ஒன்றுக்கு ஏறக்குறைய 25 கோடி ருபாய் அதிக வருவாய் தமிழக உழவர் பெருமக்களுக்குக் கிடைக்கும்!

அதுபோலவே, கோயம்புத்தூர், சேலம். மாவட்டங்களில் உள்ள 1.5 இலட்சம் ஏக்கர் ஒருபோக நன்செய் நிலகங்களில் 'திருச்செங் கோடு சம்பா' எனப்படும் 'கோ. 32' ரகத் திற்குப் பதிலாக, 'கோ-36' ரகத்தைப் பயி ரிட்டால் கோவை, சேலம் மாவட்ட உழவர் பெருமக்களுக்கு ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 3 கோடி ரூபாய் அதிக வருவாய் கிடைக்கும்!

**பழைய ரகங்களைப் பயிரிடாதீர்கள்!**

எனவே, சம்பா, தாளடிப் பட்டங்களில் இதுவரைப் பயிரிட்டு வந்த 'கோ-25', 'கோ-30', 'ஜி.இ.பி. 24', 'கோ. 19', 'ஏடிடீ. 19' 'எ.எஸ்.டி. 5', 'ஏ.எஸ்.டி. 11', 'கோ. 31', 'கோ-32', 'பி.சி.பி. 1', 'பி.டி. 15' போன்ற ரகங்களைப் பயிரிடுவதைத் தவிர்த்து மேற் கூறிய ரகங்களை மட்டும் பயிரிடுமாறு தமிழக உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின் ருேம்.

இந்த நேரத்திலே, "மழைக்கா[illegible] மப்பும் மந்தாரமாகவும் உள்ள வானிலை[illegible] கொண்ட சம்பா, தாளடி[illegible] 'ஐ. ஆர். 20', 'ஐ. ஆர். 8'[illegible] பயிரி[illegible]

பதிவு எண். M. 8677


# பூம்புகார் கலைக்கூடம்

## காண வாரீர்!



- கல்லெல்லாம் கதை சொல்லும் சிலப்பதிகாரக் காட்சிகள் !
- புதையுண்ட பூம்புகார் புது வடிவம் பூண்டுள்ளது !
- சிந்தைக்கும் கண்ணுக்கும் தெவிட்டாத தமிழ் விருந்து !
- மனதைக் கவரும் மாதவியின் அழகுச் சிலை.

**இவற்றைக் காண பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடத்திற்கு வருகை தாரீர்!**

பூம்புகார் கலைக்கூடம், சீர்காழியிலிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவிலும், மாயவரத்திலிருந்து 29 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது.

இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை, சென்னை-600009




16-9-1975

50 காசு



**எப்பருவத்திற்கும் ஏற்றது ஐ. ஆர். 20 ரகம்!**

'ஐ. ஆர். 20' ரகம், தமிழகமெங்கும் எல்லா பருவத்திற்கும் ஏற்றதாக உள்ளது என்பது பல்வேறு இடங்களில் நடத்தப் பெற்ற அனுசரணை ஆராய்ச்சிகளின் (Adaptive Research) மூலமாகவும், தேசியசெயல் விளக்கத்திடல்களின் ( National demonstration plots) மூலமாகவும் புலனாகியுள்ளது.

எல்லா மாவட்டங்களிலும் உள்ள முற்போக்கு உழவர் பெருமக்களும்— தொடர்ந்து 'ஐ. ஆர். 20' ரகத்தைப் பயிரிட்டு பெரு மகசூல் பெற்றபின்—'ஐ. ஆர். 20' ரகம் எல்லா பட்டத்திற்கும் ஏற்றது என்றும்' குறிப்பாகச் சம்பா, தாளடிப் பட்டங்களுக்கு ஏற்றது என்றும் கூறியுள்ளனர். எனவே, சம்பா, தாளடிப் பட்டங்களில் எந்தவித ஐயமும் இன்றி, 'ஐ. ஆர். 20' ரகத்தைப் பயிரிட்டுப் பெருமகசூல் பெற முயற்சி செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

**ஐ. ஆர். 8 ரகம் ஏற்றதா?**

'ஐ. ஆர். 8' ரகத்தைப் பொருத்தவரையில் மழை காலமும், மப்பும் மந்தாரமுமான வானி வானிலையும் கேடு விளைவிப்பவை என்பது ஓரளவிற்கே உண்மையாகும். முறையான சாகுபடியும், முன்னெச்சரிக்கையான பயிர்ப் பாதுகாப்பும் (Prophylactic Plant Protection measures ) மேற் கொண்டால், 'ஐ. ஆர். 8' ரகம், சம்பா, தாளடிப் பட்டங்களிலும் பெரும் மகசூல் தரும் என்பது திண்ணம்.

பரமபரைப் பரம்பரையாக உணவு உற்பத்தியில் பற்றுக்குறை மாநிலமாக இருந்த தமிழகம், 1968-69 முதல் 1973-74 வரை உபரி மாநிலமாகத் திகழ்ந்ததற்கு மூலகாரணம், 'ஐ. ஆர். 8' ரகம் அதிக பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டதே என்பதை அலசி ஆராய்வோர் இல்லை என்று மறுக்கமாட்டார்கள்!

''அரிசி பெரியதாக உள்ளது; பழைய சாப்பாட்டிற்கு ஏற்றதாக இல்லை'', என்ற காரணங்களினாலும்-சன்ன அரிசி கொண்ட 'ஐ. ஆர். 20' ரகம் வெளிவந்ததனாலும்-தமிழக உழவர் பெருமக்களில் பெரும்பாலோர் ஐ. ஆர். 20' ரக சாகுபடியிலும், 'ஐ. ஆர். ரகத்திலிருந்து தோன்றிய புதிய ரகங்களின் ( I.R. derivatives) சாகுபடியிலும் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளனர். 'ஐ. ஆர். 20' ரக நெல்லிற்கும், 'ஐ. ஆர். ரகத்திலிருந்து தோன்றிய ரகங்களுக்கும் அதிக விலை கிடைத்தும் 'ஐ. ஆர். 8' ரகத்தின் சாகுபடி குறைவுக்கு ஒரு காரணமாகும்.

**இணையற்ற நெல் ரகம்!**

மகசூல் அளிப்பதில், 'அதிசய நெல்' என்று பெயர் பெற்ற 'ஐ. ஆர். 8' ரகத்திற்கு ஒப்பான வேறு ரகம் இதுவரை வெளியாக வில்லை என்பதை உழவர் பெருமக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

''எவ்வளவு போசமான நிலையில் சாகுபடி செய்யப்பட்டாலும், மற்றச் சாதாரண ரகங்களை விட, 'ஐ. ஆர். 8' அதிக மகசூல் தருகிறது'' என்றும், ''ஐ. ஆர். 8 ரகத்தை அதிக விலைக்கு விற்கமுடியவில்லை என்றாலும், அது தரும் அதிக மகசூலால் மொத்த வருவாய் மற்ற ரகங்களைக் காட்டிலும் கூடுதலாகவே உள்ளது'' என்றும் கூறி, சில முற்போக்கு உழவர் பெருமக்கள் 'ஐ. ஆர். 8' ரகத்தைத் தொடர்ந்து பயிரிட்டு வருகின்றார்கள்!



கடந்த ஆண்டு ஏற்பட்ட வரலாறு காணாத வறட்சியின் காரணமாக உணவுப் பற்றுக் குறை ஏற்பட்டுள்ள இந்த நிலையிலே, ''வயிற்றுக்குச் சோறு வேண்டும் என்பதுதான் முக்கியமே தவிர, அச்சோறு சன்னமாக இருக்க வேண்டும் என்பது முக்கியமல்ல! சாதாரண ரகங்களின் சன்ன அரிசியில் உள்ள புரதச் சத்தை விட (6.8 சதம்), 'ஐ. ஆர். 8' ரக அரிசியில் புரதச்சத்தும் அதிகமாக (9.4 சதம்) உள்ளது! சராசரியாக ஒரு ஏக்கர் ஐ. ஆர். 8 நெல் மூலம் கிடைக்கும் அரிசியைக் கொண்டு ஒருவருக்கு 400 கிராம் வீதம் 5,040 பேர்களுக்கு உணவிட முடியுமென்றால், ஒரு ஏக்கர் சாதாரண ரக நெல்மூலம் 910 பேர்களுக்குத் தான் உணவளிக்க முடியும்.''

எனவே, முறையானச் சாகுபடி முறைகளையும், முன்னெச்சரிக்கையான பயிர்ப்பாதுகாப்பு முறைகளையும் மேற்கொண்டு சம்பா, தாளடிப்பட்டங்களில் 'ஐ. ஆர். 8' ரகத்தைப் பயிரிடுமாறு உழவர் பெருமக்களை வேண்டுகின்றோம். இது, உழவர் பெருமக்கள் நாட்டிற்குச் செய்யும் நற்பணியாகும்!

## 2-வது நுட்பம்

**தகுந்த காலத்தில நாற்றுவிட வேண்டும்!**

மழை பெய்து தண்ணீர் கிடைப்பதற்கு ஏற்ப, சம்பாவுக்கு ஆகஸ்ட் மாதம் முழுவதும் நாற்று விடும் பழக்கம் உள்ளது. சில இடங்களில் செப்டம்பர் மாதத்தில்கூட நாற்று விடுகிறார்கள். ஆனால் சம்பாவில் நல்ல மகசூல் பெறுவதற்கு ஆகஸ்ட் 15-ஆம் தேதிக்கு முன் நாற்று விடுவதே சிறந்தது.

தாளடிக்கு செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் நாற்றுவிடுதல் சிறந்தது.

அடுத்த இதழில் முடியும்



# வெற்றியை நோக்கி.....!

ாளுக்குநாள்
ம்முடைய வாழ்க்கைக்கு
அரசு அளிக்கும்
பாதுகாப்புகள் ஏராளம்

அரசு அலுவலர்களுக்கு
டும்பப் பாதுகாப்புத் திட்டம்
அதனைத் தொடர்ந்து
முதாயத்திலுள்ள அனைவரும்
பயனடையும் வகையில்
சமூகப் பாதுகாப்புத் திட்டம்!

[illegible]

எல்லாரும்
இன்புற்றிருக்கச்
செயல்படுத்தும்
ிட்டங்கள்
வெற்றி பெற்றிட
லுமிக்க
அடித்தளம் அமைய

உதவுவதே
அளவான குடும்பம்.



# தமிழரசு

மலர் 6. இதழ் 6.
16-9-1975

அரசுப் பண்ணைக் கழக
முதற்பண்ணைத் துவக்க விழாவில்
முதல்வர் கலைஞர் ஐ. ஆர். 20 ரக
நெல் நாற்றை நடுதல்



# அண்ணா பிறந்த மண்ணிலே

## அரசுப் பண்ணைக் கழக முதற்பண்ணை



அன்புள்ள நண்பா!

தமிழக வரலாற்றிலே 1975-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8-ஆம் நாள், ஒரு பொன்னாளாகும்!

ஆம்! நண்பா! பரம்பரை பரம்பரையாகத் தமிழகத்தில் பயனற்றுக் கிடந்து வந்த பதினோரு இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களைப் பயன்மிகு நிலங்களாக ஆக்கி, உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற இலட்சியத்துடன் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு அரசுப் பண்ணைக் கழகத்தின் முதற் பண்ணை துவக்கப்பட்ட அந்த நாளை ஒரு பொன்னாள் என்று கூறுவதில் தவறில்லை நண்பா!

''என்ன நண்பா? அரசுப் பண்ணைக் கழகத்தின் பண்ணைகள் தமிழகத்தின் தலையெழுத்தையே மாற்றி அமைத்துவிடும் என்று எண்ணி மகிழ்ந்து, அரசுப் பண்ணைக் கழகத்தின் முதற் பண்ணை துவக்கப்பட்ட நாளை ஒரு பொன்னாள் என்று கூறுகின்றாயா?'' என்று கேட்க நீ நினைக்கின்றாய் என்பதை நானறிவேன் நண்பா!

ஆம், நண்பா! நினைப்பது போல் நான் மிகவும் மகிழ்ச்சியாகத்தான் உள்ளேன்.

நான் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதற்கான காரணம் வேறொன்றும் உள்ளது. அதை முதலில் உனக்குத் தெரிவித்து என் மகிழ்ச்சியை உன்னுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். கடந்த கால நிகழ்ச்சி ஒன்று என் கண் முன்னால் நிற்கிறது! அதை உனக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றேன்!

### அண்ணாவின் இலட்சியம் நிறைவேறியது!

பால் போன்ற நிலவு காய்ந்து கொண்டு இருந்த நேரத்திலே—தமிழின் பெருமையை எண்ணி — தமிழனின் சிறப்பை எண்ணி மகிழ்ச்சி வெள்ளத்திலே திளைத்திருந்த தமிழர்களைப் பார்த்து, பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியது என் கண்முன்னால் நிற்கிறது!

''நமக்குப் பல வேலைகள் காத்துக் கிடக்கின்றன; வறண்டுபோன நிலங்களை விளைநிலங்களாக மாற்ற வேண்டும்; காடு திருத்திட வேண்டும்; வளம் பெருக்கிடவேண்டும்; இந்தப் பணிகளெல்லாம் பொதுமக்கள் அரசிற்கு ஒத்துழைப்புத் தர வேண்டும்; உள்ளத் திண்மையுடன் தமிழர்கள் செயல்பட வேண்டும்; இப்பணிகளைச் செய்யத் தயங்காதே தமிழா!'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியது இன்றும் என் நெஞ்சை விட்டு அகலா நிகழ்ச்சியாக விளங்குகிறது.

1968-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் சென்னை தீவுத் திடலில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டின் இறுதி நிகழ்ச்சியில்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் மேற்கண்டவாறு கூறினார்கள்.

நிகழ்ச்சி முடிந்து தீவுத் திடலை விட்டு வெளியே வரும்போது, ''பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியது நல்லதோர் திட்டம்தான்! ஆனால் நடை முறையில் செயல்படுத்துவது எளிதல்லவே!'' என்று நண்பர்கள் கூறினர்.

''நாம் கொண்டுள்ள இலட்சியங்கள் நல்லவை எனில், அவை நிச்சயம் ஒரு நாள் நிறைவேறும்'' என்பதற்கொப்ப, அண்ணாவின் இலட்சியங்கள் ஏழை, எளிய, சாமானிய மக்களின் நல்வாழ்வுக்கு வழி வகுப்பவையாக இருப்பதால் அவை நிச்சயம் நிறைவேறும்!'' என்று நான் அப்போது சொன்னேன்.

அது இப்போது நிறைவேறி விட்டது! அதுவும் யாரால் நிறைவேறியுள்ளது என்பதை எண்ணிப் பார்க்கையில், பாலோடு தேன் கலந்து பருகும்போது கிடைக்கும் மகிழ்ச்சி எனக்கு ஏற்படுகிறது!

### அண்ணா வழியில் கலைஞர்!

பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய வழியில் அயராது உழைத்துச் செயற்கரிய செயல்களைச் செய்து வரும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால், 'வறண்டு பயனற்றுக் கிடக்கும் பல இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை மேம்படுத்தி, நிலநீர் எடுத்துப் பாசனம் செய்து, உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும்' என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் இலட்சியம், அரசுப் பண்ணைக் கழகம் என்ற உருவிலே நிறைவேறியுள்ளது!

''கைராசிக்காரர்'' என்று போற்றப்படும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் அரசுப் பண்ணைக் கழகத்தின் முதற் பண்ணை, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த மாவட்டமான செங்கற்பட்டு மாவட்டத்தில் காஞ்சிபுரத்திற்கு மேற்கே 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள முசரவாக்கம் என்ற ஊரில் துவக்கப்பட்டுள்ளது.

அதனால்தான், நான் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளேன்! நான் மட்டுமல்ல நண்பா, தமிழகத்தில் உள்ள முற்போக்குக் கருத்துக் கொண்டவர்கள்—தமிழகத்தைச் செழிக்கச் செய்து ஏழ்மையை விரட்ட வேண்டும் என்று நினைக்கும் நல்லவர்கள்—பேரறிஞர் அண்ணா கூறியதுபோல், ''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்'' என்ற இலட்சியத்துடன் செயல்படும் வீரர்கள்—வேளாண்மைக் கூலிகளாக உள்ள ஏழை, எளிய, சாமானிய மக்கள்—ஆகிய அனைவரும் பெருமகிழ்ச்சி அடைந்துள்ளனர்!

### தமிழகத்தின் தலையெழுத்தை மாற்றியமைத்து விடும்!

அரசுப் பண்ணைக் கழகத்தின் பண்ணைகள் தமிழகத்தின் தலையெழுத்தையே மாற்றியமைத்து விடும் என்று நான் எண்ணுவதற்கான காரணங்கள் இதோ நண்பா!

தமிழ்நாடு அரசின் வரலாற்றிலே முதன் முதலாக, அரசுக்குச் சொந்தமான பரந்து கிடக்கும் தரிசு நிலங்களில் பயிரிட்டு, அரசின் சார்பில் அரிசியை உற்பத்தி செய்யும் ஒரு புதிய—ஆனால் அரிய—முயற்சியில் தமிழ்நாடு அரசு முனைந்துள்ளது! வழக்கமாக உழவர் பெருமக்களுக்கு வேளாண்மையின் நவீன நுட்பங்களை அறிவித்து, அவர்கள் தங்களுடைய நிலங்களிலே உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய வழி வகைகளைச் செய்து வந்த தமிழ்நாடு அரசு, தானே உணவு உற்பத்தியைப் பெருக்கும் முயற்சியில் ஈடுபட்டு மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்குகிறது!

''தம்பிக்கு'' என்ற தலைப்பில் மடல் எழுதித் தமிழகத்தை விழிப்புணர்வு பெறச் செய்த பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவாக இடம்பெறும் இம்மடல், 'அண்ணா வழியில் அயராது உழைத்திடும்' தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால், பேரறிஞர் அண்ணா அவர்களின் இலட்சியங்களில் ஒன்று நிறைவேற்றப்படுவதைத் தெள்ளிதின் விளக்குகிறது.



தற்பொழுது உலகெங்கணும் உள்ள நாடுகளில் நிலவும் உணவு தானியங்களின் விலை, ஏழை, எளிய, சாமானிய மக்களுக்கு எளிதில் கிடைக்காத நிலைக்கு உயர்ந்து காணப்படுகிறது! எனவே, எல்லா நாட்டு அரசுகளும் தங்கள் நாட்டு மக்களின் முக்கிய உணவுப் பொருளின் விலையைக் குறைத்திட முயன்று வருகின்றன! அதுபோலவே, தமிழ்நாடு அரசும் தமிழ்நாட்டு மக்களின் முக்கிய உணவான அரிசியின் உற்பத்தியை உயர்த்த வேண்டும் என்ற இலட்சியத்துடன், அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்களில் நெல் பயிரிட்டு —இலாப நட்டமில்லாமல்—நியாயமான விலையில் — தமிழக மக்களுக்கு —குறிப்பாக அரிசியை அதிக விலை கொடுத்து வாங்க முடியாத ஏழை, எளிய, சாமானிய மக்களுக்கு வழங்கிடும் கடமையைச் சிரமேற் கொண்டு செயலாற்றத் துவங்கியுள்ளது. அந்தச் செயலாக்கத்தின் அடையாளமே அரசுப் பண்ணைக் கழகத்தின் முதற் பண்ணைத் துவக்க விழா!

தமிழக வரலாற்றிலே 8—9—1975 ஒரு பொன்னாளா இல்லையா என்பதை இப்பொழுது சொல் நண்பா!

''ஆம்'' என்று நீ சொல்வதை என்னால் கேட்க முடிகிறது நண்பா!

அடுத்து, அரசுப் பண்ணைக் கழகம் துவக்கப்பட்டதன் நோக்கத்தையும் நீ அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகப் பின்கண்ட விளக்கத்தையும் அளித்துள்ளேன். கவனமாகப் படி நண்பா!

### அரசுப் பண்ணைக் கழகத்தின் இலட்சியம்!

தமிழகத்தின் மொத்தப் பரப்பு 320 இலட்சம் ஏக்கர். அப்பரப்பு பின்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது :

| | |
|---|---|
| (அ) பயிரிடுவதற்கு ஏற்றதாக இல்லாத—மலைப்பாங்கான, கட்டாந்தரையான, வறண்ட— நிலங்களின் பரப்பு .......... | 40 இலட்சம் ஏக்கர் |
| (ஆ) மேய்ச்சலுக்காகப் பயன் படுத்தப் படுகின்ற மரங்கள், தோப்புகள் மேய்ச்சல் நிலங்கள் அடங்கிய—காட்டு நிலங்களின் பரப்பு.. | 70 இலட்சம் ஏக்கர் |
| (இ) கிராமங்கள், நகரங்கள், நகராட்சிகள், சாலைகள், புகைவண்டிப் பாதைகள், தொழிற்சாலைகள் ஆகியவை அடங்கிய பரப்பு ... | 70 இலட்சம் ஏக்கர் |
| (ஈ) பட்டாதாரர்களால் இறைவையாகப் பயிரிடப்படும் பரப்பு ... | 70 இலட்சம் ஏக்கர் |
| (உ) இறைவைச் சாகுபடிக்குக் கிடைக்கக்கூடிய பரப்பு ... | 70 இலட்சம் ஏக்கர் |
| மொத்தம் | 320 இலட்சம் ஏக்கர் |

இறைவைச் சாகுபடிக்குக் கிடைக்கக் கூடிய 70 இலட்சம் ஏக்கர் பரப்பும் பின்கண்டவாறு அமைந்துள்ளன :

(இலட்சம் ஏக்கரில்)

| | | |
|---|---|---|
| 1. | பயிரிடுவதற்கு ஏற்ற ஆனல் பயி... ரிடப்படாமல் வீணுகக் கிடக்கின்ற —உடனடியாகப் பயிரிடுவதற்கு எடுத்துக் கொள்ளக் கூடிய — நிலங்கள் .................... | 11 |
| 2. | சமவெளியில் உள்ள மரங்கள் இல்லாத—நிலநீர் வளம் நிறைந்த— காட்டு நிலங்கள் ................ | 24 |
| 3. | தற்சமயம் பயிரிடப்படாமல், தரிசாகக் கிடக்கின்ற நிலங்கள் ..... | 21 |
| 4. | இதர தரிசு நிலங்கள் ............ | 14 |

மேற்கூறிய 70 இலட்சம் ஏக்கரில், வகை 1-ம், 2-ம் சேர்ந்த 35 இலட்சம் ஏக்கர் அரசுக்குச் சொந்தமானவை. 1961-ஆம் ஆண்டின் நிலப்பயன்படுத்தும் ஆணையைச் செயலுக்குக் கொண்டு வருவதன் மூலம் வகை 3 மற்றும் வகை 4-ல் கண்ட தரிசு நிலங்களை மேம்படுத்தி, பாசன வசதி அளித்து உணவு தானியப் பயிர்களைப் பயிரிடலாம்.

இவைகளில் வகை 1-ல் குறிப்பிடப்பட்டு உள்ள பயிரிடுவதற்கு ஏற்ற ஆனல், பயிரிடப்படாமல் வீணுகக் கிடக்கின்ற—அரசுக்குச் சொந்தமான—11 இலட்சம் ஏக்கர் நிலங்களையே, அரசுப் பண்ணைக் கழகம் எடுத்துக் கொள்ளவிருக்கிறது.

## மலர்ந்தது பண்ணைக் கழகம்!

இந்த நல்ல நோக்கத்தையே தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1-3-1975 அன்று தமிழக அரசின் நிதி நிலை அறிக்கையில் பின்கண்டவாறு குறிப்பிட்டார் :

''தமிழகத்தில் தற்பொழுது 11 இலட்சம் ஏக்கர் பரப்பளவிற்கு விளைநிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. இவற்றைப் படிப்படியாக விளைநிலங்களாக மாற்ற வேண்டியே, சென்ற ஆண்டில் தமிழ்நாடு அரசுப் பண்ணைக் கழகத்தினைத் தோற்றுவித்தோம்.''

கம்பெனிகள் சட்டத்தின் (சட்டம் 1, 1956) கீழ், 5—12—1974 அன்று 1 கோடி ரூபாய் மூலதனத்துடன் (ஒவ்வொன்றும்1,000 ரூபாய் மதிப்புள்ள 10,000 சம பங்குகள் கொண்டது) அரசுப் பண்ணைக் கழகம் பதிவு செய்யப்பட்டது.

அதன் பயனாய் அரசுப் பண்ணைக் கழகம் தமிழகத்தில் மலர்ந்தது!

அரசுப் பண்ணைக் கழகம் செயல்படத் துவங்குவதற்காகத் தமிழ்நாடு அரசு 10 இலட்சம் ரூபாய் பங்குத் தொகையைச் செலுத்தியுள்ளது.

புத்தம் புதிதாக உணவு உற்பத்தித் திட்டங்களின்கீழ் சாகுபடிக்குக் கொண்டு வரக் கூடிய நிலங்கள் பெருமளவில் விரிந்து பரந்து கிடந்தாலும், நிலநீர் வளம் அல்லது பாசன வாய்ப்பு உள்ள நிலங்கள் மட்டுமே அரசுப்



சமூக நலத்துறை அமைச்சர் தலைமை உரையாற்றுதல்.

பண்ணைக் கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

''பரந்து கிடக்கும் தரிசு நிலங்களைப் பண்படுத்திப் பயிரிடுவதற்குத் தேவையான தண்ணீர் வசதி கிடைக்குமா?'' என்ற ஐயம் உன் உள்ளத்திலே எழலாம் நண்பா! அந்த ஐயத்திற்கு இடமே வேண்டாம் நண்பா! ஏனெனில், தமிழகத்தில் நிலநீர் புதையலெனப் புதைந்து கிடக்கிறது நண்பா! மைய அரசின் நிலநீர் வாரியமும், தமிழ்நாடு நிலநீர் இயக்குநர் அலுவலகமும் தமிழக நிலத்தின்கீழ் இருந்து 3 மில்லியன் ஏக்கர் அடி அளவுத் தண்ணீரை வெளியே கொண்டு வர முடியும் என்று மதிப்பிட்டுள்ளன.

நில நீரை வெளியில் கொண்டு வருவதற்கான குழாய்க் கிணறுகளை இறக்க, தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறையின் துளையிடும் விசைக் கருவிகள் (பவர்டிரில்கள்) வாடகைக்குப் பெறப்பட்டு, குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அரசுப் பண்ணைக் கழகமும் துளையிடும் விசைக் கருவிகள் சிலவற்றை விரைவில் வாங்க விருக்கின்றது. தமிழ்நாடு வேளாண் தொழிற் கழகமும் பெருமளவில் துளையிடும் விசைக் கருவிகளை வாங்கி, அரசுப் பண்ணைக் கழகத்திடம் ஒப்படைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, நிலநீர் எடுப்பதில் பெரும் பிரச்சனை ஏற்படாது!

அரசுப்பண்ணைக் கழகம் மூலம் தமிழ்நாடு அரசுக்கு வருவாயும் கிடைக்கிறது நண்பா!

அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களை அரசுப்பண்ணைக் கழகம் ஆண்டொன்றுக்கு 50 ரூபாய் வாடகை வீதம் 35 ஆண்டுகளுக்குக் குத்தகை எடுத்துக் கொள்வதன் மூலம், தமிழ்நாடு அரசுக்குப் பல இலட்சம் ரூபாய் வருவாயும் கிடைக்கும்!

இத்தகைய அரசுப் பண்ணைகளை உருவாக்குவதற்குத் தேவையான நிதி உதவிகளை மாநிலக்கூட்டுறவு நிலவள வங்கி, கூட்டுறவு மைய வங்கி, அகதிகள் கூட்டுறவு வங்கி மற்றும் நாட்டுடைமையாக்கப்பட்ட 14 வணிக வங்கிகள் ஆகியவற்றிலிருந்து திட்ட அடிப்படையில் பெறப்பட விருக்கின்றன.

''பதினேரு இலட்சம் ஏக்கரிலும் இந்த ஆண்டிலேயே பயிரிடப்படுமா நண்பா?'' என்று கேட்க நினைக்கின்றாய். உன் ஆர்வத்தை நானறிவேன் நண்பா! ஆனல், அது அவ்வளவு எளிதல்ல நண்பா!

பதினேரு இலட்சம் ஏக்கரிலும் 5 ஆண்டுக் காலத்திற்குள் படிப்படியாகப் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் முதற்கட்டமாக இந்த ஆண்டிற்கு 60,204 ஏக்கரில் செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய 5 மாவட்டங்களில் பின்கண்ட அளவில் அரசுப் பண்ணைகள் அமைக்கப்படும்.

| | ஏக்கர் |
|---|---|
| செங்கற்பட்டு | 8,640 |
| தென் ஆர்க்காடு | 22,986 |
| புதுக்கோட்டை | 10,000 |
| தஞ்சாவூர் | 3,800 |
| திருநெல்வேலி | 14,778 |
| மொத்தம் | 60,204 |

## மணம் வீசுகிறது!

தற்பொழுது மேற்கூறிய 5 மாவட்டங்களிலும் அரசுப் பண்ணைக் கழகத்தின் மணம் வீசுகிறது!

செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சிபுரத்திற்கு மேற்கிலுள்ள முசரவாக்கம் கிராமத்தில் பஞ்சாயத்து புறம்போக்கு நிலமான 154 ஏக்கரில் தமிழ்நாடு அரசுப்பண்ணைக் கழகத்தின் முதல் பண்ணை ''கலைஞர் கருணாநிதி பண்ணை!'' என்ற பெயரில் நிறுவப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதியுடன் இங்கு சோதனைக் குழாய்கள் அமைத்துப் பார்த்ததில், மணிக்கு சுமார் 22,500 காலன் தண்ணீர் இறைக்கும் அளவிற்கு நீர்வளம் இருப்பது அறியவந்தது. நில நீர்த் துறையினரின் ஆலோசனைப்படி ஐந்து குழாய்க் கிணறுகள் நிறுவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுத் தற்போது மூன்ருவது குழாய்க்கிணறு முடிவடையும் தருவாயில் உள்ளது. இப்பண்ணையின் நீர்ப்பாசனத்திற்குத் தேவையான மின்சாரம் அளிக்க தமிழ்நாடு மின்சார வாரியம் தனி 'டிரான்ஸ் பார்மர்' அமைத்து எல்லா வகையிலும் ஒத்துழைப்புக் கொடுத்து வருகிறது.

இதேபோன்று, செங்கற்பட்டு மாவட்டத்தில் நீர் வளம், நிலவளம் உள்ள மேல் கதிர்ப்பூர், மேல் ஒட்டிவாக்கம், விச்சந்தாங்கல், குருவிமலை போன்ற இடங்களில் சுமார் 1,000 ஏக்கர் புறம்போக்கு நிலங்களில் குழாய்க் கிணறுகள் அமைக்கும் வேலை தொடங்கப்பட்டுள்ளது.

தஞ்சை மாவட்டத்தில் திருவாரூருக்கு அருகில் உள்ள சக்கரமங்கலம், தியாகராஜபுரம் கிராமங்களில் உள்ள தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான 100 ஏக்கர் நிலமும் தியாகராஜ சுவாமி தேவஸ்தானத்திற்குச் சொந்தமான 200 ஏக்கர் நிலமும் குத்தகைக்கு எடுக்கப்பட்டு, சாகுபடி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் இன்னிகுளம் கிராமத்தில் அரசு புறம்போக்கு நிலமான 461 ஏக்கரை எடுத்து நீர்ப்பாசன வசதிகள் செய்ய தீவிரமாக முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் 'குதிரைமொழித்தேரி' என்ற இடத்தில் 10,000 ஏக்கரில் பயிரிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் சாகுபடி துவங்க, வேலைகள், மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

தென்னார்க்காடு மாவட்டத்தில்,மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரைக்கு ஏற்ப 'ரூபநாராயண நல்லூர்' என்ற ஊரில் உள்ள 440 ஏக்கர் புறம்போக்கு நிலத்தில் சோதனைக் குழாய்கள் அமைக்கும் வேலை ஆரம்பிக்கப் பட்டுவிட்டது.

மேலும் நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்திற்குச் சொந்தமான சுமார் 2,514 ஏக்கர் நிலத்தை அங்குள்ள நீர் வசதியை உபயோகித்துப் பண்ணையினை நடத்த அக் கழகத்தாருடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் வெள்ளாள விடுதி கிராமத்தில் 657 ஏக்கர் புறம்போக்கு நிலத்தில் 600 அடி ஆழமுள்ள ஒரு சோதனைக் குழாய்க் கிணற்றில் மணிக்கு சுமார் 24,000 காலன் நீர்ப்பாசன வசதி கிடைக்கும் என்பது கணக்கிடப்பட்டு, மேலும் 12 குழாய்க் கிணறுகள் அமைத்து இந்நிலங்கள் முழுமையும் சாகுபடி செய்யத் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## பொற்காலம் பிறக்கப் போகிறது!

இவ்வாறு பூமிக்கடியில் புதையலெனப் புதைந்து கிடக்கும் நிலநீர் எடுத்து, 3 ஆண்டுக் காலத்திற்குள் ஏறத்தாழ 10 இலட்சம் ஏக்கர் வீணுகக் கிடக்கும் தரிசு நிலங்களை இறைவைப் பயிர் சாகுபடியின் கீழ் கொண்டுவர அரசுப் பண்ணைக் கழகம் திட்டமிட்டுள்ளது. அந் நிலங்களில் ஆண்டுதோறும் 2 போகம் பயிரிடவும், முதற்போகத்தில் உயர்விளைச்சல் தரும் குறுகிய கால நெல் ரகங்களையும், இரண்டாம் போகத்தில் வாணிபப் பயிர்களையும் அல்லது மரவள்ளிக்கிழங்கு அல்லது வீரிய ஒட்டுச் சிறு தானியங்களையும் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

வேளாண்மைத்துறை அமைச்சர் சிறப்புரையாற்றுதல்.



இடத்தில் 154 ஏக்கரா பண்படுத்தப்பட்டு, அதில் சாகுபடியைத் தொடங்கியிருக்கிறோம்.

### நந்தன் காலமா?

நான் வரும்போது என்னை ஒரு வயலில் இறக்கிவிட்டுக் கையில் நாற்றைக் கொடுத்து நடச் சொன்னார்கள். இன்னும் கொஞ்ச நேரம் வந்ததும் இன்னொரு வயலில் இறக்கிவிட்டு, அறுவடைக்குத் தயாராக இருந்த நெல் மணிகளை அறுவடை செய்யச் சொன்னார்கள். நான் கூடக் கற்பனை செய்து கொண்டேன்; இதென்ன நந்தன் காலமா, நட்டான், உடனே அறுத்தான் என்பதைப் போல இருக்கிறதே என்று எண்ணினேன். ஆனால் அது—மாதிரியாகச் செய்யப்பட்டதாகும். இருந்தாலும் இது—மாதிரியாகவே இருந்துவிடாமல், ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்தப் பணிகள் தொடரவிருக்கின்றன.

நான் இந்தக் கழகத்தின் தலைவர் சங்கரன் அவர்களைப் பார்த்து இந்தப் பண்ணை எப்போது முழுமையாக வேலையைத் தொடங்கும் என்று கேட்டேன். இந்தப் பண்ணை மாத்திரமல்ல; ஆயிரம் ஏக்கர் நிலம் இன்னும் நான்கைந்து மாதங்களில் நிச்சயமாகச் சாகுபடியைத் தொடங்கிவிடும் என்று அவர் என்னிடம் தெரிவித்தார்.

நான்கைந்து திங்களில் செங்கற்பட்டு மாவட்டத்தில் மாத்திரமல்ல, புதுக்கோட்டை, தஞ்சை, தென்னார்க்காடு, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலும் சுமார் ஐந்தாயிரம் ஏக்கர் வரையில் முதல் கட்டமாக பயிரிட முடியும் என்ற நம்பிக்கையையும் சங்கரன் என்னிடம் தெரிவித்திருக்கிறார்.

### பெயர்ப் பொருத்தம்!

நந்தனுக்குப் பயிரை உடனடியாக விளைவித்துக் கொடுத்தவர் சிதம்பரத்தில் இருந்த சங்கரன்தான்; நல்ல வேளையாக பெயர்ப் பொருத்தம் இந்தப் பண்ணைக் கழகத்திற்குப் பொருந்தியிருக்கிறது.

ஆகவே அப்படிப்பட்ட அற்புதத்தால் செய்ய முடியாவிட்டாலும், அயராத உழைப்பாலும், ஆர்வத்தாலும் இந்தப் பணியை முடிக்கக்கூடிய அதிகாரிகள்தான் நம்முடைய அரசுக்குத் தேவை. அப்படிப்பட்ட அதிகாரிகளைப் பாராட்டுவதற்கு இந்த அரசு என்றைக்கும் தயாராக இருக்கிறது. ஆனால், அரசின் கொள்கைகளைப் புரிந்து கொள்ளாமல், அரசின் இலட்சியங்களை அலட்சியப்படுத்தும் அதிகாரிகள் யாராக இருந்தாலும் அவர்களைத் தூக்கி எறியவும் இந்த அரசு தயாராக இருக்கிறது.

### அரசுப் பண்ணையினால் அரசுக்குக் கிடைக்கும் வருவாய்!

இந்த அரசுப் பண்ணைக் கழகத்திற்கு பெரும்பாலும் அரசு நிலங்கள் எடுக்கப்படுகின்றன. அதற்கு ஆண்டுதோறும் குத்தகை வழங்கப்படுகிறது. இந்த 60,000 ஏக்கர் நிலமும் எடுத்துக்கொள்ளப்பட்டுச் சாகுபடி செய்கிற நேரத்தில் அரசுக்கு ஆண்டுதோறும் குத்தகையின் மூலம் 30 இலட்சருபாய் கிடைக்கும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இதன் மூலம் கிட்டத்தட்ட இலட்சம் டன் உணவு உற்பத்தியை உருவாக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அரசு நிலங்கள் அல்லாமல் ஆலயத்தின் நிலங்கள் தரிசாகக் கிடைக்குமானால், அவைகளும் குத்தகைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு சாகுபடி செய்கிற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

### நிலமகள் கேலி செய்வாள்!

திருக்குறளில் வள்ளுவர் அழகாக "இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின், நிலமென்னும் நல்லாள் நகும்" என்று சொல்கிறார். அதாவது என்னால் எதுவும் செய்ய இயலாது என்று சோம்பேறித் தனமாக இருக்கிற உழவர் பெருமக்களைப் பார்த்து, நிலம் என்னும் பெண் சிரிப்பாளாம். ஆகவே அப்படிப்பட்ட கேலிச் சிரிப்புக்குப் பயந்து கொண்டு உழவர் பெருங்குடி மக்கள் நிலத்தைப் பண்படுத்தி, நிலத்தின் மூலமாகக் கிடைக்கின்ற பயனைப் பெற்றாக வேண்டும். இந்தியா அது நம்முடைய தமிழ்நாட்டின், இந்தியாவின் பொருளாதார வளத்தைப் பொறுத்த வரையில், விவசாயிகள் தாங்களாகவே அந்தக் காரியங்களில் ஈடுபட முடியாமல் எத்தனையோ தடைகள், முட்டுக்கட்டைகள் இருக்கின்றன. அவைகளை எல்லாம் தவிர்க்கத்தான் அரசின் சார்பில்—குறிப்பாக தமிழக அரசின் சார்பில் நல்ல விவசாயிகளுக்குத் தேவையான பல வசதிகளை எல்லாம் செய்து கொடுத்திருக்கின்றோம். கடன் வழங்கும் வசதி கூட்டுறவுத் துறை மூலம் பல மடங்கு இந்த ஏழெட்டு ஆண்டுக் காலத்தில் அதிகரித்திருக்கிறது.

நிலத்தடி நீர் பெரும்பாலும் இந்த அரசுப் பண்ணைகளுக்குப் பயன்படுத்தப்படவிருக்கிறது. ஆகவே நிலத்தடி நீரைப் பயன்படுத்தும் ஒரு புதிய நோக்கமும் இந்தப் பண்ணைகளால் நிறைவேறவிருக்கிறது.

### பொதுவுடைமைப் பூங்காவாகத் தமிழகத்தை ஆக்கிடுவோம்!

இந்த அரசுப் பண்ணைகளின் இறுதி வளர்ச்சிதான், நம்முடைய குறிக்கோளான எல்லாமே அரசுப் பண்ணைகள் வசம், விவசாயத் தொழிலாளர்கள் அனைவரும் அரசின் வசம் என்ற மூலக் கொள்கைக்கு வழி வகுக்க முடியும். இதை யாரோ சிலர் வாயளவில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இதனைச் செயல் வடிவப்படுத்த—அந்த உண்மையான பொதுவுடைமைத் தத்துவப் பூங்காவாக தமிழகத்தை ஆக்க இன்றைக்கு முசரவாக்கத்தில் விதை போடப்படுகிறது; இந்த விதை நல்ல முறையில் பசுமையாக வளர்ந்து அறுவடையைத் தரும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் கற்கண்டு நிகர் உரையை—இலட்சிய முழக்கங்களை நீ மட்டும் படித்துப் பெருமகிழ்ச்சி அடைந்தால் போதாது நண்பா! படித்துப் பட்டம் பெற்றுவிட்டு வேலை பார்க்க விரும்பாமல் பண்ணையைக் கவனிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ள நீ, உன் கிராமத்தில் முதல்வரின் கொள்கை பரப்பிடும் நல்ல தூதுவனாகவும் விளங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என் வேண்டுகோளை என்றும் மறுக்க மாட்டாய் என்று நம்புகின்றேன் நண்பா!

உன் அன்பு மறவாத,
ஆர். மாணிக்கம்.

# வேலை போச்சு

அவர் எழுதிக்கொடுத்தார், விசாலாட்சி விவாகம், என்று நான் விசாலாட்சி விவாதம் என்று அச்சுக்கோத்தேன்! தூக்கவேளை, கொஞ்சம் துக்க முங்கூடந் நான். எனவே, தவறு மேல் தவறாகி விட்டது.

சாமி காவடியானந்தர் என்று தெளிவாகத்தான் அவர் எழுதினார். நானோ அதை, காமி சாவடியானந்தர் என்று பிழையுடன் அச்சிட்டேன்.

அதுபோலவே,

காசுமாலை
காமாலை

மணி அரசு
பிணி அரசு

விசாலம்
விசாரம்

வேதம்
பேதம்

மொய்
பொய்

என்று பல பிழைகள் ஏற்பட்டுவிட்டன, என் அஜாக்ரதையினால். துண்டு விஷயந்தான் இவ்வளவுக்கும். அதிலும் எங்கள் ஆசிரியர் மணி மணியாக எழுதுவார்-அதாவது எழுத்துக் கோவையாக, அச்சுப் போலவே இருக்கும் விஷயம். இருக்கட்டும், அது தானா முக்கியம்? அவருக்குப் பக்கம் பக்கமாக எழுத வேண்டிய வேலை கிடையாது. சுருங்கக் கூறுவதே நுட்பம் என்பது அவருடைய இலட்சியம்! பத்திரிகையின் பக்கங்கள், பேனாவின் தயவினாலே அல்ல, காரியாலயக் கத்தரிக்கோலின் கருணையால், அழகாக இருக்கும்.

அச்சுப்பிழையை அடிதளமாக வைத்து ஓர் அருமையான சிறுகதையைத் தனது பேனாவால் வடித்துத் தந்திருக்கிறார் பேரறிஞர் அண்ணா. பல்லாண்டுகளுக்கு முன்பு வெளியாகிய இந்தச் சிறுகதையை, அண்ணா அவர்களின் 67 ஆம் பிறந்த நாளை முன்னிட்டு மீண்டும் வெளியிட்டுப் பெருமைகொள்கிறது 'தமிழரசு'
—ஆர்




"தம்பி! இது ஒரு பிரபல திருமணம்; அழகாக அச்சிட்டு இந்த விலாசத்துக்கு ஐம்பது பிரதிகள் அனுப்பி வைக்க வேண்டும். தெரிகிறதா" என்று கூறித் தாளைக் கொடுத்தார். நாளை மறுநாள் வருகிறேன் என்று துணை ஆசிரியருக்குக் கூறினார். துரிதமாக வெளியே சென்றார்.

தீபாராதனைக்குக் கற்பூரம் சரியாகக் கிடைக்காது கஷ்டப்பட்ட பக்தர்களின் தூதுக் கோஷ்டி அன்று கலெக்டர் பிரவுன் துரையைக் காணப் புறப்பட்டது. அவர், ஒரு கிராம வைத்தியசாலைத் திறப்பு விழாவுக்குச் சென்றிருந்தார். அந்தக் கிராமத்துக்குக் கிளம்பிற்று தூதுக் கோஷ்டி. எங்கள் ஆசிரியர், அந்தத் தூதுக் கோஷ்டிக்குத் தலைவர்! பெயரும் பொருத்தந்தான்; அனுமந்தராவ் அவருடைய திருநாமம்! சில சமயம் வீட்டிலே அவர் சிரமப்படுவதுண்டு, தன் மனைவியைப் பெயரிட்டு அழைக்க! அம்மையாருக்குச் சீதாலட்சுமி என்று பெயர் இருந்தது! ஆமாம், இவ்வளவு கூறின நான், பத்திரிகையின் பெயரைக் கூறவில்லையே; பாருங்கள் அவ்வளவு மறதி எனக்கு! 'வியாசர்' எங்கள் பத்திரிகையின் பெயர்.

"வியாசர்" பத்திரிகை ஆசிரியர் அனுமந்தராவ், தன் பாரியை சீதாலட்சுமியிடம் விடை பெற்றுக் கொண்டு, துணை ஆசிரியர் கருடாழ்வார் முதலியாரை நிர்வாகத்தைக் கவனிக்கும் பொறுப்பினராகத் தியமித்தும், கிண்டிக் குதிரைப் பந்தயத்திலே அந்தக் கிழமை ஓடும், அசுவ இலட்சண விளக்கப் புத்தகத்திலே அவர் ஈடுபட்டு, ஆசிரியர் தந்த

அரசுப் பண்ணைக் கழகத்தின் இம்முயற்சி
முழு அளவில் வெற்றி பெறும்போது ஆண்டு
தோறும் குறைந்தது 25 இலட்சம் டன்
உணவு தானியங்கள் கூடுதலாகத் தமிழகத்
தில் விளையும்! அதுமட்டுமல்லநண்பா! அதைப்
போல் பன்மடங்கு காய்கறிகளும் விளையும்!

இந்த ஆண்டில் முதற்கட்டமாக 60,000
ஏக்கர் தரிசு நிலங்கள் அரசுப்பண்ணைக் கழகத்
தின் மூலம் சாகுபடிக்குக் கொண்டுவரப்படு
வதால், கூடுதலாக 1 இலட்சம் டன் உணவு
தானியங்களும், 1.5 இலட்சம் டன் காய்கறி
களும் உற்பத்தியாகும் என்றும், அதன்
பயனாய்த் தமிழ்நாடு அரசுக்கு 6.5 கோடி
ரூபாய் இலாபம் கிடைக்கும் என்றும் எதிர்
பார்க்கப்படுகிறது!

அரசுப்பண்ணைகள் மூலம் பல்லாயிரக்
கணக்கான கிராமப்புற வேளாண்மைத்
தொழிலாளர்களுக்கும், இலங்கையிலிருந்து



'கண்ணகி' ரக நெல்லை முதல்வர் கலைஞர் அறுவடை
செய்தல்.

தமிழகம் திரும்பி வரும் அகதிகளுக்கும் வேலை
வாய்ப்பு அளிக்கமுடியும் என்றும் எதிர்பார்க்
கப்படுகிறது!

மேலும், அரசுப்பண்ணைக் கழகத்தின்
பண்ணைகள் தமிழக உழவர் பெருமக்களை
ஊக்குவிக்கும் மாதிரிப்பண்ணைகளாகவும்
அமையுமாதலின் அதன் மூலம் தமிழக
உழவர் பெருமக்களும் தங்கள் பண்ணைகளின்
உற்பத்தித் திறனைப் பெருக்கிப் பல கோடி
ரூபாய் அதிக வருவாய் பெறமுடியும்!

இதை எல்லாம் எண்ணிப் பார்க்கும்
போது தமிழகத்தில் பொற்காலம் பிறக்கப்
போகிறது என்ற எண்ணம் ஏற்படுகிறது
நண்பா!

''அந்த நாள் விரைவில் வராதா?''
என்று நீ எதிர்பார்ப்பாய் என்பதை நானறி
வேன் நண்பா! அந்த நாள் விரைவில் வரும்
என்பதை உறுதிப்படுத்துவதுபோல், முசரவாக்
கத்தில் அமைந்துள்ள அரசுப்பண்ணைக் கழக
தின் முதற்பண்ணைத் துவக்க விழாவில் மாண்பு
மிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர்
அவர்கள் ஆற்றிய உரை அமைந்திருந்தது!

அப்பண்ணையைத் துவக்கி வைக்கும்
முகத்தான் மாண்புமிகு தமிழக முதல்வர்
டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு வயலில்
'ஐ. ஆர். 20' நெல் நாற்று நடுவதைத் துவக்கி
வைத்ததுடன், மற்றொரு வயலில் விளைந்
திருந்த 'கண்ணகி' ரக நெல் அறுவடையைத்
துவக்கி வைத்தார். மேலும் விழாவின்போது,
இரண்டாவதாக அமைக்கப்பட்ட குழாய்க்
கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்கும் பணி
யையும் துவக்கி வைத்தார்! செங்கற்பட்டுத்
மாவட்ட சிறு உழவர் மேம்பாட்டுத்
திட்டத்தையும் துவக்கி வைத்தார்!

விழாவிற்குத் தலைமை வகித்த மாண்பு
மிகு சமூகநலத்துறை அமைச்சர் திரு
சி.வி.எம். அண்ணாமலை அவர்கள் தாமும் ஒரு
விவசாயி என்று பெருமையுடன் குறிப்பிட்டுக்
கொண்டதுடன், பசுமைப் புரட்சிக்குத் தமிழ்
நாடு அரசு செய்து வரும் விரைவான பணி
களைப் பற்றி விளக்கினார்.

சிறப்புரையாற்றிய மாண்புமிகு வேளாண்
மைத்துறை அமைச்சர் திரு சி.பா. ஆதித்த
னார், பார்-அட்.லா., அவர்கள் "குழாய்க்கிணறு
களை நம்பித்தான் நாம் இனி வாழ வேண்டும்''
என்று குறிப்பிட்டு, குழாய்க் கிணறுகளின்
இன்றியமையாமையை விவரித்தார்.

வரவேற்புரை நிகழ்த்திய செங்கற்பட்டு
மாவட்ட ஆட்சித் தலைவர் திரு திவான்
முகமது ஐ. ஏ. எஸ். அவர்கள். விரைவில்
மேலும் 1,000 ஏக்கர் அரசுப்பண்ணைக் கழகத்
திடம் ஒப்படைக்கப்படும் என்று உறுதி கூறி
னார்.

விழாவில் பேசிய அரசுப்பண்ணைக் கழகத்
தின் தலைவர் திரு. சங்கரன், ஐ. ஏ. எஸ்.
அவர்கள், அரசுப்பண்ணைக் கழகம் மேற்
கொண்டுள்ள பணிகளைப் பற்றி விரிவாகக்
கூறினார்.

அடுத்துப் பேசிய வேளாண்மைத்துறை
இயக்குநர் திரு அ. வேங்கடராமன், பி.எஸ்.சி
(வே.)., எம்.எஸ்., அவர்கள் ''காடுநீக்கி,
கல்பொறுக்கி, முள் அகற்றி, கழனியாக்கி,
மணி கொழிக்கும் விளைநிலமாக்கும்'' அரசுப்
பண்ணைக் கழகத்தின் பயன்கள் பற்றியும்,
சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தின் பயன்
களைப் பற்றியும் தெள்ளத் தெளிய விளக்கி
னார்.

அரசுப்பண்ணைக் கழக மேலாண்மை
இயக்குநர் திரு. பினாகபாணி, பி.எஸ்.சி(வே.).,
அவர்கள் நன்றி கூறினார்.

முதல்வர் அவர்களின் உரையைக் கேட்
கும் வாய்ப்பு நமக்குக் கிடைக்கவில்லையே
என்று நீ வருத்தப்படுவாய் என்பதை நானறி
வேன் நண்பா! அதனால் அவருடைய உரையை
அப்படியே ஈண்டு கொடுத்துள்ளேன். படித்துப்
பரவசமடை நண்பா!

# முதல்வரின் இலட்சிய முழக்கம்!



"முசரவாக்கத்தில் நடைபெறுகின்
இந்த இனிய விழாவிலே கலந்து கொண்
உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மகிழ்
யும், உற்சாகமும் கொள்கிறேன். இந்
நிகழ்ச்சியைப் பார்ப்பதற்கு, கேட்பதற்
மிகச் சுவையான நிகழ்ச்சியாக இல்லாமல்
இருக்கலாம். ஆனால், ஆழ்ந்து சிந்திப்பதற்கு,
கேட்பதற்கு மிகச் சுவையான நிகழ்ச்சி மாத்
திரமல்ல, பயனுள்ள நிகழ்ச்சியுமாகும். ஏன்
என்றால், கேட்க, பார்க்க, வேடிக்கைகளை
நிகழ்த்த, வேலைகளைச் செய்ய, வித்தகங்கள்
புரிய, விஞ்ஞானப் புதுமைகளைக் கண்டுபிடிக்க,
புதிய தத்துவங்களை உருவாக்க, அரசியல்
வாதங்களைச் செய்ய.. இவ்வளவிற்கும் உணவு
இருந்தால்தான், சோர்வில்லாமல் அந்தக் காரி
யங்களைச் செய்ய முடியும்!

## வயிற்றுக்குச் சோறிட வேண்டும்!

''எண்சாண் உடம்பிற்கும் சிரசே பிர
தானம்'' என்று சொல்வது, மூளை அங்கே
இருப்பதால் என்றாலும், அந்த மூளை வேலை
செய்ய வேண்டுமேயானால், ஒரு சாண் வயிற்
றுக்கு நாம் வேலை கொடுத்தாக வேண்டும்!
அந்த வேலை கொடுக்கப்படா விட்டால், அந்த
வயிற்றுக்குரியவர்கள் வேறு வேலைகளிலே தங்
களுடைய கவனத்தைச் செலுத்தத் தொடங்கி
விடுவார்கள்! அப்படிப்பட்ட வேலைகள் மகத்
தான இரத்தப் புரட்சிகளாக உலகத்தின் பல்
வேறு நாடுகளில் உருவெடுத்து இருப்பதை
நாம் கண்டிருக்கிறோம்! ஆகவே, அப்படிப்
பட்ட தீப்பிழம்புகளை, பெரும் புரட்சிகளை வர
விடாமல் செய்ய வேண்டுமேயானால் மனித'
னுடைய மிக மிக முக்கியத் தேவையான
—அவனுக்கு அறிவாற்றலை வழங்கக் கூடிய
சக்தியை உண்டாக்குவதற்கு உணவுத் துறை
யில் நாட்டை ஆளுகின்ற பொறுப்பை ஏற்றுக்
கொண்டவர்கள், தீவிர கவனத்தைச் செலுத்
தியாக வேண்டும். அப்படிப்பட்ட கவனம்
செலுத்தப்படுகின்ற பகுதிகளில் ஒன்றாகத்
தான் இன்று இந்தியாவில் தமிழ்நாடு இருந்து
வருகிறது!

இதற்கு நமக்கு அனுசரணையாக மத்திய
அரசின் உணவு அமைச்சர் திரு. ஜெகஜீவன்
ராம் அவர்கள் தாய்லாந்து அரிசி வேண்டு
மென்று நாம் கேட்ட நேரத்தில், தட்டிக்
கழிக்காமல், அதற்குத் துணை புரிந்து, தாய்
லாந்து அரிசி, சென்னைத் துறைமுகத்தில் வந்
திறங்கி, அதுவும் ஏழை எளிய மக்களுக்கு
விநியோகிக்கப்பட்டு, இப்போதுதான், அனை
வரும் சேர்ந்து 'அப்பாடா' என்று பெருமூச்சு
விடத்தக்க அளவிற்கு வறட்சியை வென்று
காட்டியிருக்கிறோம்!

## பசுமைப் புரட்சியில் வெற்றி கண்டோம்!

ஆனாலும் நிரந்தரமாக இப்படிப்பட்ட
சங்கடங்கள் நம்முடைய தமிழகத்தைத்தொட
ராமல் இருப்பதற்குப் பல நடவடிக்கைகளை
நாம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.
அண்ணா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சர்
பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, பசுமைப்
புரட்சியைத் தமிழகத்தில் உருவாக்க வேண்டு
மென்று திட்டமிட்டார். தொடர்ந்து அதைச்

கட்டாந்தரையாகக் கிடந்த நிலத்தில் விளைந்த
பயிர் கண்டு முதல்வர் வியப்புறுதல்.

செயல்படுத்துவதற்கான வாய்ப்பை அண்ணா
அவர்கள் பெற்றிருக்காவிட்டாலும், அவர்
வழி நின்று நடைபெறுகின்ற இந்த அரசின்
சார்பில், பசுமைப் புரட்சியிலே நாம் பெரும்
வெற்றியைப் பெற்றிருக்கிறோம்!

அதனுடைய அடையாளமாகத்தான்
இன்றைக்கு இவ்வளவு பெரிய சங்கடத்தைத்
தமிழகத்தில் நாம் சமாளித்தோம் என்றால்—
உணவுப் பற்றாக்குறையை நாம் சமாளித்தோம்
என்றால்—பசுமைப் புரட்சியில் நாம் பெற்ற
வெற்றியும் அதற்கு ஒரு காரணமாகும்!

தொடர்ந்து, தமிழகத்திலே தரிசு நிலங்
களாக இருக்கிற பகுதிகளை எல்லாம் வேளாண்
மையில் விரிவாக்கி, விவசாயத் தொழிலாளர்
களுக்கு வாய்ப்பு வசதிகளை வழங்குகின்ற
வகையில் ஒரு திட்டத்தை நாம் உருவாக்கி,
தமிழ்நாடு அரசுப் பண்ணைக் கழகம் என்கிற
ஒன்றை நிறுவி, அதனுடைய முயற்சிகள் இன்
றைக்கு மிக முனைப்பாகச் செயல்படத்
தொடங்கியிருக்கின்றன.

மிகப் பெரிய இந்தத் திட்டத்தின் தொடக்க
விழா இந்தச் செங்கற்பட்டில் நடைபெறக் காரணம்—
யார் எங்களை எல்லாம் பொது வாழ்க்கைக்கு
ஆளாக்கி விட்டாரோ, யார் எங்களுடைய அரசியல்
கண்களைத் திறந்து விட்டாரோ, அந்தத் திருமகன்
பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த இந்த மாவட்
டத்தில்தான் இந்த அரிய முயற்சியைத் தொடங்க
வேண்டுமென்று இந்தப் பணியின் தொடக்க
விழாவை இன்றைக்கு நாம் தொடங்கியிருக்கிறோம்.

பதினொரு இலட்சம் ஏக்கர் தமிழகத்தில்
தரிசு நிலங்களாகக் கிடக்கின்றன என்று கணக்
கிடப்பட்டிருக்கின்றன. முழுமையான புள்ளி
விவரம் இது அல்ல என்றாலும், மேலும் கொஞ்
சம் அதிகமாகக் கிடைக்கக்கூடுமென்றாலும்
கூட, பதினொரு இலட்சம் என்கிற இலக்கை
நாம் நான்கைந்து ஆண்டுக் காலத்தில் அடைந்து
விடுவது என்பது இயலாது. ஆகவே, முதற்
கட்டமாக 60,000 ஏக்கரா செங்கற்பட்டு,
தென்னார்க்காடு, தஞ்சை, புதுக்கோட்டை, திரு
நெல்வேலி ஆகிய மாவட்டங்களில், வருகின்ற
ஐந்தாறு ஆண்டுகளில் நாம் புதியதாகச் சாகு
படிக்குரிய நிலமாக மாற்றி, இங்கே பார்ப்
பதைப் போன்ற பெரிய பணிகளை நிறைவேற்
றுவதற்கு இந்தக் கழகம் திட்டமிட்டு, இந்த

செய்தியை நான் அவசரத்
திலே அச்சுப் பிழையுடன்
செய்து கொடுத்தபோது,
''ஏண்டா! தம்பி! (என்ன
எல்லோரும் தம்பி, தம்பி
என்று கூப்பிடுகிறார்களே,
இவன் சிறு பயலோ என்று
சந்தேகிக்காதீர்கள். எனக்கு
வயது 40. என் பெயர் தம்பி
முதலியார்) சரியாகத்தானே
செய்தாய்?'' என்று கேட்டு
விட்டு, ஒரு முறை ஒப்புக்கு
அதைப் பார்த்து, ''சரி'' போடு!
என்றார். மெஷின், அந்த
அபத்தத்தை ஏற்க மறுக்குமா
என்ன! அச்சுப் பிழை
மட்டுமா, அது எவ்வளவோ,
கருத்துக் கோளாறுகளைத்
தாங்கித் தாங்கி, உரம் பெற்ற
தாயிற்றே; அது 'மள மள'
வென்று அடித்துத் தள்ளி விட்
டது. பொழுது பொல பொல
வென விடிந்ததும் பத்திரிகை
யைப் பார்சல் செய்யும் வேலை
மட மடவென்று நடந்தது.

இரண்டாம் நாள் இரவு, தட
தடவென்று கதவைத் தட்டி
னான் ஆபீஸ் பையன். திறந்
தேன்; திடுக்கிட்டேன்; அவசர
அழைப்பு ஆசிரியரிடமிருந்து.
ஓடினேன், கிடு கிடுவென்று!

''தம்பீ! தலையிலே கல்
போட்டாயே!'' என்றார்
ஆசிரியர் அனுமந்த ராவ்.
கருடாழ்வாரைக் காணோம்.
பத்திரிகைக்கு அவர் கொடுத்த
தாளை எடுத்துவரச் சொன்
னார். கொண்டு வந்தேன், 'படி'
என்றார்; படித்தேன். அது இது:

பிரபல திருமணம்

''பலசரக்குக் கடையின்றிப்
பிரபஞ்சம் நிலைக்குமா? முடி
யாது! நமது ஊரிலே பல
சரக்குக் கடைகள் பல இருந்
தாலும், பண்டரி விலாஸ்
கடைக்கு ஈடாகுமா? ஆகாது!
அந்தக் கடைக்கு முடிசூடா
மன்னராக விளங்கும், முகுந்த
ராஜ முதலியாரின் மூத்த
குமாரி, சௌபாக்யவதி விசா
லாட்சி அம்மாளின் விவாகம்,
விமரிசையாக இன்று காலை
நடைபெற்றது. மணமகன்
மணி அரசு முதலியார், ஜெக
ஜோதியான வைரக் கடுக்
கன்கள் அணிந்து காட்சி அளித்
தார். ஸ்ரீமதி விசாலம் புதிய




காசுமாலையுடன் காட்சி தந்
கண் கொள்ளாக் காட்சிய
இருந்தது. ஸ்ரீமான் முதலி
ரின், வைதிக சிரத்தை
அறிந்த பிராமண சிரே
டர்கள், காலையிலே,
ஓதினர்! இது வேதய
யல்ல. பழைய புதிய
காலத்திலே ராஜாக்கள் முறை
தாயம்! இதுவே சம்பிர
முதலிய மாங்கலிய தாரணம்,
காரியங்களும் சம்பிரதாயக்
வேறிய பிறகு, இனிது நிறை
யூர்ச் சீமான்கள், உள்ளூர், வெளி
எழுதினர். மாலையிலே மொய்
யான சங்கீதக் கச்சேரி அருமை
பெற்றது. ஆனால் ஒரு நடை
இங்குக் குறிப்பிட விஷயம்
இருக்கிறது. சங்கீதம் வேண்டி
ரோக்தமாக இல்லை, சாஸ்தி
என்னமோ தமிழ் இசை அது
சிலர் கூறுகிறார்களே, என்று
அது. அதுவாம்

ஊர்வலம்
ஊரெங்கும் நடைபெற்றது;
இவ்வளவுக்கும் இதே பேச்சு.
தது போல சிகரம் வைத்
காலையும் மாலையும் இருந்தது,
துக்குச் சாமி காவடியானந்தர்
விஜயம் செய்தது. அவர் நமது
ஆசிரியர் அனுமந்தராவிடம்
அன்யோன்யமாகப் பேசியது
கண்டு 'கற்றோரைக் கற்றோரே
காமுறுவர்'' என்று பலர் கூறி
னர். முகஸ்துதியில் பிரியமில்
லாத நமது ஆசிரியர், அந்தப்
புகழுரையைக் கேட்டும் கேட்
காதவர் போலிருந்தது, குறிப்
பிடத்தக்கது.''

இதுதான் ஆசிரியர் தந்தது.
இதிலே தான், விசாலம்
விசாரமாகி, விவாகம் விவாத
மாகி, சாமி காவடியானந்தர்
காமி சாவடியானந்தராகி,
காசுமாலை காமாலையாகி, மணி
அரசு பிணி அரசாகி, வேதம்
பேதம் என்றாகி, மொய் பொய்
என்றாகி வெளிவந்தது. எல்
லாம் அச்சுப் பிழைதான்.
ஆனால் ஆசிரியர் அனுமந்த
ராவ், ''தம்பி! என் வாழ்க்
கையையே வதைத்து விட்
டாய்'' என்று போட்ட கூச்சல்
உண்மையாகவே, நான் செய்த
பிழை மிக மிகக் கொடுமை
யானது என்று உணர்த்திற்று.
உரத்த குரலிலே கூறிவிட்டார்.
''உன் கணக்குத் தீர்த்தாகி

''கைதவறி, மாற்றி மாற்றி அச்சடித்தேன் என்றுதானே சொன்னே! தவறிச் செய்தி இல்லே, சகல விஷயமும் தெரிந்துதான் அச்சடித்தேன். மரியாதையா பணத்தைப் போடு'' என்றேன். என்னடா இது, கொள்ளை அல்லவா அடிக் கிறேன் என்ற கோபமா உங் களுக்கு? இந்தக் கூத்திக் கள்ளன், சாமியார் வேஷத் திலே அடிச்ச கொள்ளையிலே இது எந்த மூலே? பணத்தைக் கொடுத்தான். விட்டேனா? ''சரி எங்க அச்சாபீஸ்காரன் உனக்குச் சினேகிதனாச்சே, அவனிடம் எப்படியாவது சொல்லி, மறுபடியும் நம்மை வேலையிலே சேர்த்துக் கொள் ளச் சொல்லணும் தெரியுதா?'' என்றேன்; 'சரி' என்றான் அழு குரலில்.

இருட்டு, நடுநிசி, ஒரு பயமும் இல்லாமல், வீட்டுக்கு நடந்தேன். அந்த இரண்டு சனியன்களும் கொஞ்சம் தொலைவாகவே என் பின்னால் வந்தார்கள். வீட்டுக்குப் போனேன். வேகமாகக் கதவைத் தட்டினேன். கொஞ் சம் அதிகாரக் குரலிலேயே, ''வேலாத்தா! வேல்! வேலா! அடீ, வேலாத்தா!'' என்று பல ரகத்திலே, பல சுருதியிலே கூப்பிட்டேன். எனக்கென்ன பயம்? எட்டு ரூபா இருக்கு அந்தக் கொட்டை கட்டி கொடுத்த பணம். ''ஏது அதி காரம் ரொம்ப தூக்குது'' என்று அர்ச்சனை செய்து கொண்டே கதவைத் திறந் தாள் வேலாத்தா; அழக்க மாகப் பயந்தைக் காட்டும் என் கண்களிலே அதிகாரப் பார்வையைக் கண்டாள். அவ ளாலே கோபத்தை அடக்க முடியவில்லே. ''வேலை போச் சின்னு கொஞ்சமாவது கவலே இருக்குதா உனக்கு? விடிய விடிய [illegible] எங்கியோ'' என்றாள். ''... கழுதே! வேலே போச்சாம் வேலே! வேலேன்னு சொல்லாதே! நாமக்கு இந்த போலீஸ் வேலே போச்சுன்னு சொல்லு' என்று கூறிக் கொண்டே எட்டு ரூபாயைக் கொட்டினேன்!



அவள் பார்த்த பார்வை இருக்கே, என்னவென்று சொல்லுவேன்! ''நாளைக்கு வேலைக்கும் போவேண்டி!'' என்றேன். 'ஏன்? எப்படி ஏது?' என்று அவள் எத்தனையோ தடவை கேட்டாள். ரொம்ப காலத்துக்கு முன்னாலே கொஞ்ச வாளே, 'ராசா இல்லே! கண்ணு இல்லே!'' என்று, அந்த பழைய நாடகப் போட்டாள். கடையில் பூரா விஷயமும் சொன்னேன். அவளுக்கு, வந்த சந்தோஷத்திலே— வெட்க மாகக்கூட இருக்கு சொல்ல— குமரி போலே—என்னையும் புதுமாப்பிள்ளைக் கோலத்திலே இருப்பதுபோலவே- எண்ணிக் கொண்டு ''அட என் ராசா!'' என்று சொல்லி.... ஒரு முத்தம் கூடக் கொடுத்தாள்!!!


பழ உதிர்வைக் குறைத்து, உங்கள் **மாமர, மிளகாய்ப்** பயிர்களின் விளைச்சலைப் பெருக்க, உபயோகியுங்கள்

# பிளானோபிக்ஸ்



**மா:** காயின் பிஞ்சுப் பருவத்திலேயே, 4,5 லிட்டர் நீருக்கு 4மி.லி. வீதம் பிளானோபிக்ஸ் தெளித்தால் அது மாமரப் பயிரிலே பழம் உதிருவதைக் கணிசமாகக் குறைக்கிறது என்றும், பழங்களின் அளவு, எடை, வைட்டமின் ஸி சத்து ஆகியவற்றைப் பெருக்குகிறது என்றும் கிடைத்துள்ள அறிகுறிகளிலிருந்து புலப்படுகிறது.



**மிளகாய்:** 4,5 லிட்டர் நீருக்கு 1மி.லி. பிளானோபிக்ஸ் வீதம் கரைத்து, பூக்கும்போது ஒரு தடவையும், 3,4 வாரங்கள் கழித்து இரண்டாம் தடவையுமாக பிளானோபிக்ஸ் கரைசலை இரு முறைகள் தெளித்தால் அதைத் தொடர்ந்து விளைச்சல் பெருகியதாகத் தெரிய வந்துள்ளது. விவரமான தகவல்களை விசாரிக்கவும்.

**உஷார், மாற்றுக்களை ஏற்காதீர்—உயிர் போன்றது உங்கள் பயிர்ச் செல்வம்.**

M&B May&Baker

'பிளானோபிக்ஸ்' என்பது, மே & பேக்கர் லிட்டின் டிரேடு மார்க் ஆகும்

மே & பேக்கர் (இந்தியா) பிரைவேட் லிட. பம்பாய் · கல்கத்தா · கவுஹாத்தி · இந்தோர் · லக்னோ · சென்னை · நியூ டெல்லி · பாட்னா

TAM


## பரம்பரை நோயைக் கட்டுப்படுத்த ஒரு புதுமை

**இன்றைய மருத்துவம்**

**ப**ரம்பரை நோய் மிகக் கொடிது!

ஆம். பரம்பரை பரம்பரை யாக வரும் சில கோளாறுகளைத் திருத்துவது கடினம். இந்தத் துறையில் நடத்தும் விஞ் ஞானிகள் மெதுவாக-ஆனால் உறுதியாக-முன்னேற்றம் கண்டு வருகின்றனர்.

வம்ச வழியாக வரும் கோளாறினால் தோன்றும் பல நோய்களுள் ஒன்று உடல் செல் களிலும், மூளையிலும் பிற முக்கிய உறுப்பு அளவுக்கு மிக அதிகமாகக் கொழுப்பு தேங்கி நிற்பதாகும்.

அபாயகரமான அளவில் கொழுப்பு சேருவதற்குக் காரணம் ஒரு முக்கிய என்சைம் இல்லாததுதான். உடலில் பல தரப்பட்ட முக்கிய வேலைகளைச் செய்யும் இரசாயனப் பொருட் களுக்கு 'என்சைம்கள்' எனப் பெயர்.

என்சைம்கள் புரதச் சத்துக்கள் ஆகும். உடலில் எல்லாச் செயல்களையும் கொண்டு நடத்த அவை உதவு கின்றன. உணவு செறித்தல், தசை, எலும்பு திசுக்கள் மற் றும் உறுப்புகள் உருவாதல் போன்ற ஒவ்வொரு செயலை யும் விரைவு படுத்தும் தூண்டு கோலாக விளங்குகிறது என்சைம்.

பழைய செல்கள் கழிந்து, புதியன தோன்றுவதால் உட லில் சாதாரணமாகச் சேரும் கொழுப்புக்களை ... அப்புறப் படுத்த முடியவில்லை. இந்தச் செல்களை அப்புறப்படுத்துவது ஒரு குறிப்பிட்ட என்சைமின் செயலாகும். அந்த என்சைம் இல்லாவிடில் இறந்து போன செல்களின் பொருள், உடலில் சேர்ந்து பெரும் தீங்கு விளை விக்கும். இத்தகைய நோய்களை உடலிலேயே தங்கியிருக்கும் நோய்கள் என்று குறிப்பிட லாம்.

ஒன்பது ஆண்டுகளுக்கு முன் னால் இது கண்டுபிடிக்கப்பட் டது. அந்த, என்சைம் என்ன என்று அறிந்து கொண்டுவிட் டால் சிக்கல்கள் அனைத்துக்கும் தீர்வு காணலாம்.

நோய் என்ன என்று அறிவது முதல் பிரச்சினை. நோயுற்ற குழந்தைகளின் பெற்றோர் களைச் சோதிக்க வேண்டியது அடுத்த பிரச்சினை. இங்குதான் விசித்திரமான நிலை ஏற் படுகிறது. இந்நோய்கள் குழந்தைகளுக்கு வரக்கூடும். ஆனால் பெற்றோர்களைப் பாதிக் காமலும் இருக்கலாம். ஏன்?, காரணங்கள் சிக்கலானவை.

பெற்றோர்களைப் பொறுத்த மட்டில் பெரும்பாலும் பிரச் சினைகள் எழுவதில்லை. ஒரு சில செல்களில் என்சைம் குறை வாகக் காணப்படலாம். உதா ரணமாக இரத்தத்தில் உள்ள வெள்ளையணுக்களிலோ, தோலி லுள்ள சில செல்களிலோ என்சைம் குறைவாக இருக்க லாம். நமக்குத் தேவையான ஒரு குறிப்பிட்ட என்சைம் அளவினைத் தீர்மானிக்க அவர் களின் வெள்ளையணுக்கள் அல்லது தோல் செல்களின் மாதிரிகளைப் பெறலாம். இதன் மூலம் நோய் இல்லாத பெற் றோர் பற்றி அறிய முடிகிறது.

எத்தனைக் குழந்தைகளுக்கு நோய் வருகிறது?

அது பரம்பரையைப் பொறுத் திருக்கிறது. நோயுள்ள பெற் றோர்களுக்குப் பிறக்கும் குழந் தையின் எதிர்காலம் என்ன என்பதைப் பற்றிக் குழந்தை பிறப்பதற்கு முன்பே புதிய முறைகள் மூலம் அறியலாம். தந்தைக்கோ தாய்க்கோ இருவருக்குமோ அல்லது நோய்கள் இருக்கின்றன என்று மருத்துவர்கள் முடிவுக்கு வந் தால், தன் கருப்பையில் உள்ள குழந்தையை அவர்கள் சோதனை செய்யலாம். இதற்கு அவர்கள் கருப்பையில் இருக் கும் சிசுவைச் சுற்றியுள்ள திரவத்தில் ஒரு துளி எடுத்துச் சோதனை நடத்துவர். குழந்தைக்குப் பெற்றோரின் நோய்கள் ஏதாவது வருமா என்பதனை இதன் வழியாக அறியலாம். கருப்பையில் வளரும் குழந்தையின் உடலில் இல்லாமல் போகும் செல்களை இந்தத் திரவத்தில் காணலாம். விடுபட்டுப்போன என்சைம் பற்றிச் சோதிக்க இத்தகைய செல்கள் பயன்படுகின்றன.

முக்கியமாகக் கொழுப்பு நோய்களை இரு வகையாகப் பிரிக்கலாம். அவை ஒன்று 'ஃபாப்ரே'; மற்றொன்று 'கௌஷே'. விடுபட்டுப்போன என்சைம்களை மாற்றுவதன் வழியாகக் கொழுப்பு நோயினால் அவதியுறுபவர் களுக்கு உதவி செய்ய முடியும் என்பது இப்பொழுது தெளி வாகியுள்ளது.

பெரும்பாலான நோயாளி களுக்கு மூளையில் எவ்விதச் சேதமும் ஏற்படுவதில்லை. அவர்களது பிரச்சினைகள் முற்றிலும் வேறானவை. 'ஃபாப்ரே' நோயினால் அவதிப் படுவோரின் குடலிலும், மண் ணீரலிலும், எலும்புகளிலும் குறிப்பாகச் சிறுநீரகத்திலும்- கொழுப்புகள் சேருவதுதான் அவர்களுடைய பிரச்சினை. இதனால் அவர்களுக்குப் பல தொல்லைகள் ஏற்படுகின்றன.

குறைவான என்சைமை ஊசி மூலம் செலுத்தி சிகிச்சை செய்ய முடியும் என மிக அண் மையில் கண்டுபிடித்துள்ளனர். எப்படி? குழந்தை பிறந்ததும் வெளியே வரும் நஞ்சு என்ற பிளஸன்டாவின் திசுக்களில் இந்த என்சைம்கள் இருப்ப தைக் கண்டு கொண்டனர். பிளஸண்டாவிலிருந்து இந்த என்சைம்கள் பிரிப்பதற்கு முயற்சி செய்தனர். பிளஸண் டாவும் மற்ற திசுக்களைப்போல ஆயிரக்கணக்கான புரதங்களை உடையதுதான். இந்தஇரண்டு நோய்களுக்கும் தேவையான குறிப்பிட்ட என்சைம்களை அதி லிருந்து பிரித்தெடுக்க கால தாமதம் ஆகிறது. அது அவ் வளவு எளிய பணியும் அல்ல. ஆனால், அந்த என்சைம்களை முதலில் ஃபாப்ரே நோயாளி களுக்கு ஊசி மூலம் செலுத்தி முதல் முயற்சியிலேயே வெற்றி கண்டுள்ளனர், விஞ்ஞானிகள்.

கௌஷே நோயாளிகளுக்கு இந்த என்சைம் மிகச் செம்

விட்டது. வேலைக்கு வேண்டாம் இனி; போ வெளியே'' என்றார். வெளியேசென்றேன், வேறென்ன செய்ய முடியும்! ஒரு துண்டு விஷயத்தை இவ்வளவு பிழைகளுடன் வெளியிட்டால், அச்சுக் கோப்பவனுக்கு, அச்சகத்திலே அலுவல் கிடைக்கத்தான் செய்யாது, என்ன செய்வது! ஏக்கம் கொண்டேன், 'தூக்கம் வரவில்லை. போக்கிடமின்றித் தவித்தேன்.

வேலை இல்லை என்ற உடனே வேலாத்தா-என் மனைவிக்குக் குல தெய்வத்தின் பெயரையே வைத்துவிட் டார்கள்-கொண்ட கோபம் இருக்கிறதே, இவ்வளவு அவ்வளவு என்று சொல்லி முடியாது. ''ஒரு நாளைக்கு, ஒரு வேளை சோத்திலே, தப்பித் தவறி ஒரு கல் இருந்து விட்டா, என்ன கோபம் வருது உங்களுக்கு? இத்தனை காலமா அச்சாபீசு வேலையிலே இருக்கிறிங்க, இவ்வளவு தப்புச் செய்யறிங்க. எவன் கொடுப்பான் வேலை?'' என்று பேசினாள். பேசினாள் என்றுஒப்புக்குச்சொல்கிறேன், அவபோட்ட கூச்சல் இருக்கே வேலாத்தாளே (குலதெய்வம்) வந்தது போலிருந்தது. என்னால் வேதனையைத் தாங்க முடியவில்லை. சே! குடும்பமும் வேண்டாம், இந்தக் குத்தல் குடைசலும் வேண்டாம். பேசாமே சன்யாசி ஆகிவிட வேண்டியது தான் என்று தீர்மானித்து, வேகமாக வீட்டை விட்டு வெளியேறினேன். நடந்து கொண்டே யோசித்தேன். வேலாத்தா போல, ஊரிலே எத்தனையோ அம்மணிகள் இருப்பார்களே, அவர்களிடந்தானே போய்ப் பிச்சை கேட்கணும்! ''தடியனாட்டம் இருந்து கொண்டு, பிச்சை எடுக்க வந்து விட்டாயா?'' என்று ஏசுவார்களே, என்ற பயம் பிறந்தது. சரி நிஜமாகவே சன்யாசி ஆக வேண்டியதில்லை, ஒரு நாளைக்காவது வீட்டுக்குப் போகாமலிருப்போம்; வேலாத்தா..''என்னமோ, ஏதோ'' என்று அழட்டும் என்று எண்ணினேன். எங்கெங்கோ சுற்றி விட்டு, இரவு பத்து மணி சுமாருக்கு, ஊர்க் கோடிச் சாவடியிலே போய்ப் படுத்தேன்; அரைத் தூக்கம். அந்தச் சமயத்திலே, ''நமச்சிவாயம்!'' என்று சத்தம் கேட்டது. சாவடிக்குச் சாமி காவடியானந்தர் வந்தார். நான் படுத்திருந்த மூலையிலிருந்து எழுந்திருக்கவு



மில்லை, பேச்சுக் குரலும் கொடுக்கவில்லை; நல்லவேளையாக அவர் என்னைப் பார்க்கவில்லை. பார்த்து விட்டால் என்ன செய்வது என்ற திகில் எனக்கு. ''அடே பயலே! நீ தானே, என்னை, காமி சாவடியானந்தர் என்று அச்சடித்தது'' என்று கேட்டு ஏதாவது மந்திரம் போட்டு விட்டால் என் கதி என்ன ஆகும்! நானோ பிள்ளை குட்டிக்காரன்! வாய் திறவாமல் சுருட்டிப் படுத்துக் கொண்டிருந்தேன்.

''ஏன் சாமி!'' என்று வேறோர் குரலும் கேட்டது. நான், சாமியார், ''நமசிவாயம்'' என்று சொன்னதும், ஆண்டவன் பெயரைச் சொல்கிறார் என்று நினைத்துக் கொண்டேன். அது ஓர் ஆசாமியினுடைய பெயர் என்று அப்போதுதான் தெரிந்தது. அவனும் சாமியாரும் ஏதேதோ பேசி விட்டு, அந்தக் கலியாணப் பேச்சையே ஆரம்பித்து விட்டனர். எனக்குப் ''பகீர்'' என்றாகி விட்டது. சரி, நம்மைத்தான் திட்டப் போகிறார்கள் என்ற நினைப்பிலே, அதற்குத் தகுந்தாற் போல, ''யாரு சாமி! பேப்பரிலே, எழுதினவன், தாறுமாறாக?'' என்று வேறு நமசிவாயம் கேட்டுத் தொலைத்தான். சாமியார் சிரித்து விட்டு, ''எழுதினவன் பேரில் தவறு இல்லை. அவனிடம் இருக்கிற கம்பாசிட்டர் ஒரு குருட்டுப்பயல் போலிருக்கு, அவன் அச்சுக் கோத்தபோது, தப்பும் தவறுமாகச் செய்து விட்டான்'' என்றார் சாமியார்.

''சிரிக்கிறீரே சாமி! அந்தப் பயல் செய்த காரியத்துக்கு என் எதிரே கிடைத்தானானா ....'' என்றான் நமசிவாயம், ஐயோ! வேலாத்தாளின் கோபமே, பரவாயில்லையே, அடிபட்டாலும் வசவு கேட்டாலும், நம்ம மனைவிதானே என்ற சமாதானமாவது இருக்கும். இந்தப் பயல் யாரோ, வழியே போகிறவன், இவனல்லவா 'கருவுகிறான்' என்று தோன்றிற்று. என்ன செய்வது? இடபேதம்! பேசாமல் கிடந்தேன். சாமியார் என் பக்கம் பரிந்து பேசலானார்! ''அவன் செய்த தவற்றிலே கூட எவ்வளவோ உண்மை இருக்கிறது நமசிவாயம். உண்மையைச் சொல்ல வேணுமானா, நான், காவடி கைங்கரியம் நடத்தி இந்தச் சாவடியைக் கட்டிச் சாமி காவடியானந்தர் என்று பெயரெடுத்தேன். அந்தக கம்பாசிட்டர் கைதவறுதலாக, காமி சாவடியானந்தர் என்று அச்சடித்து விட்டான். அது ஒன்று தவிர, மற்றது பெரும்பாலும், உண்மையே தான்'' என்றார். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது; நமசிவாயத்துக்கும் அப்படித் தானே இருந்திருக்கும்! நான் பேச முடியாத நிலை; அவனுக்கென்ன பயம், பேசினான் 'கோபமாகவே! ''வேடிக்கை பேசுகிறீர் சாமியாரே! அந்த முட்டாள், விசாலாட்சி விவாகம் என்பதை, விவாதம் என்று அச்சடித்திருக்கிறான், அவனுக்குப் பரிந்து பேசுகிறீர்களே!'' என்று கேட்டான். முட்டாளாம் நான்! என்ன செய்யலாம்! அவனும் அதையே தான் வேறே பாஷையிலே சொன்னான். ''உங்க புத்தி இருக்கே உலக்கைக் கொழுந்து'' என்று சொன்னான். கோபம் வந்தது எனக்கு. இவன் என்னைமுட்டாள் என்று அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறான்; போறாத காலம்; சாமியார், ''நமசிவாயம்! விவாகம் என்று அச்சடிப்பதை விட, விவாதம் என்று அச்சடித்தது தான் பொருத்தம். ஏனென்றால், இந்தக் கலியாணம், விசாலாட்சிக்குக் கொஞ்சம் கூட இஷ்டம் கிடையாது... அவள் தாயாரிடம் இது பற்றி விவாதித்தாள். புத்தி சொல்லப்போன என்னிடங்கூட விவாதித்தாள். ஆகவே அவள்



விவாகம் என்பதை விவாதம் என்று அச்சடித்தது, உண்மை, அவன் கை தவறுதலாலே, வெளிவந்தது என்றுதான் அர்த்தம்.'' என்றார். ''ஏன் விசாலாட்சிக்கு இஷ்டம் இல்லை?'' என்று கேட்டான் நமசிவாயம். சாமியார் கேட்டார் 'மாப்பிள்ளை பெயர் என்ன?' என்று. ''மணி அரசு'' என்றான் நமசிவாயம். அதைத் தானே அந்தப் பயல் ''பிணி அரசு'' என்று அச்சடித்தான் என்று கேட்டார் சாமியார். 'அதற்காகத்தான் அந்தப் பிரகஸ்பதியைப் பாராட்டுகிறீரா?'' என்று நமசிவாயம் கேட்டான். சாமியார், 'அவன் கை தவறி, மணி அரசு என்பதைப் பிணி அரசு என்று அச்சுக் கோத்தான். ஆனால் தெரிந்தே அப்படி அச்சடித்தாலும் தவறு இல்லை. ஏனென்றால் உண்மையிலேயே மாப்பிள்ளை நோயாளிதான். அவனுக்குக் காமாலை வியாதி' என்றார் சாமியார். நான் பூரித்துப் போனேன். ''நோயாளியை மணம் செய்து கொள்ளும் பெண்ணின் பெயர் விசாலம் என்று இருந்தால் என்ன, அவன் தவறாக அச்சடித்தானே விசாரம் என்று, அதுதான் பொருத்தம்'' என்று சாமியார் கூறினார். நமசிவாயத்தின் வாய் அடங்கிவிட்டது. எனக்கோ துடிதுடிப்பு, எழுந்து போய் சாமியார் காலிலே விழ வேண்டும் என்று! அடக்கிக் கொண்டு படுத்திருந்தேன்.

''யோசிக்கப் போனால் அந்தக் கம்பாசிட்டர் செய்தது ஒன்றுகூடத் தவறு கிடையாது. காசு மாலை மாப்பிள்ளை போட்டது; அவன் காமாலைக்காரன், ஆகவே காசு மாலை என்று அச்சிடாமல் காமாலை என்று அச்சிட்டதிலே எழுத்திலே பிழையே தவிர உண்மையிலே பிழையல்ல. வேதம் என்பதை பேதம் என்று அச்சடித்தான். வேதம் உண்மையிலேயே, ஜாதி குலம் முதலிய பேதத்தை ஏற்படுத்தத் தோன்றியதே. அது மட்டுமில்லை. அன்று வேதம் ஓதினார்களே அவர்கள் ஓதியது சரியான வேதம் அல்ல, ரொம்ப ரொம்பப் பேதம் இருந்தது, அந்த அரைகுறை ஆசாமிகளின் வேத பாராயணத்திலே. மொய், எழுதினாரே அதிலே பெரும்பகுதி பொய் தான்; வெறும் கௌரவத்துக்காக, எந்தெந்த ஊரிலிருந்தோ யாராரோ, ஐம்பதும் நூறும் மொய் அனுப்பினதாகப் பொய் சொன்னார். ஆகையால் மொய் என்பதற்குப் பதில் பொய் என்று அச்சடித்ததும் சரியே!'' என்றார் சாமியார். நமசிவாயத்தின் கோபம் என் மீது இருந்தது போய் விட்டது; முகுந்தராஜ முதலியார் மீது பாய்ந்தது.

''பெண்ணை ஒரு நோயாளிக்கா கலியாணம் செய்து கொடுத்தான் பாவம்! அந்தப் பெண் வேண்டாமென்று மறுத்துமா அதன் தலையிலே அந்தக் காமாலைக்காரனைக் கட்டி வைத்தான்'' என்று நமசிவாயம் ஏசலானான். 'இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறுவதை, அனுமதிக்கிறோம். ஆசீர்வாதம் செய்கிறோம், அவர் இஷ்டம் என்று கூறுகிறோம். அதனதன் விதி என்று கூறுகிறோம். இரண்டு பேருடைய வாழ்க்கையை அந்த ஒரு ஆசாமி தன் இஷ்டத்துக்கு ஏற்றபடி வளைத்து விட்டான். அதைத் திருத்தவும் முடியாது, கண்டிப்பதும் கூடாது. பாவம்! அந்தக் கம்பாசிட்டர், என்னமோ கை தவறித் தப்பாக அச்சுக் கோத்து விட்டான்; அவனை நான் மடையன், குருடன் என்றெல்லாம் திட்டினேன். விஷயத்தைப் பார்க்கப்போனா அவன் கைக்குத் தங்கத்தோடா அல்லவா போடணும் போல இருக்கு'' என்று கூறினான் நமசிவாயம்.

எனக்கு ஆனந்தம்! அவன் தங்கத் தோடா கூடப் போடத் தேவையில்லை, அவன் சொன்ன வார்த்தை, வைரத் தோடா போல இருந்தது. என் மனது குளிர்ந்தது. பிறகு வேறு ஏதோ தேவாரம், திருவாசகம் முதலிய சத் விஷயங்களைப் பேசிவிட்டு, நமசிவாயம் விடை பெற்றுக் கொண்டு போனான். எனக்கு இனியாவது எழுந்திருந்து போய்ச் சாமி காலிலே விழுந்து கும்பிடுவோமா என்ற எண்ணம் உண்டாயிற்று. ஆனால் ஒரு பயம் இருந்தது. நான் செய்த எல்லாத் தவறுகளுக்கும் சாமியாரே சமாதானம் சொல்லி விட்டார்; ஆனால் நானோ சாமியாரையே, காமி சாவடியானந்தர் என்றல்லவா.....?

காமி சாவடியானந்தருக்கும் தூக்கம் வரவில்லை; படுத்துக்கொண்டே பாடிக் கொண்டிருந்தார். பன்னிரண்டு மணி சுமாருக்கு, யாரோ வரும் சத்தம்!

''ஏது பாட்டு, பலே ஜோராக இருக்குதே'' என்று ஒரு குரல் கேட்டது. திடுக்கிட்டுப் போனேன். பெண் குரல்! பேசியது பச்சை! எனக்குத் தெரிந்தவள்! பலசரக்குக் கடையைக் கூட்டி மெழுகிச் சுத்தம் செய்பவள்; அவள் வருகிறாள்; சாவடிக்கு நடுநிசியில்! காமி சாவடியானந்தனே தான் இவன்! இதிலேகூட நான் அச்



சடித்ததிலே என்ன தவறு? செச்சே! அதற்கு மேலே, அங்கே நடந்த பேச்சை நான் எப்படிச் சொல்ல முடியும். சாமியாராம்! காவடியானந்தராம்! காமி, சாவடியிலே ஆனந்தராக இருந்தார். தேவாரமா பாடினார்? இல்லானு பாடினார்! பச்சை, சாமியாரிடம் விபூதிப் பிரசாதமா கேட்டாள்? 'எடு எடு! பணத்தை! ஏழுநாளா ஏச்சிக்கிட்டே வாரயே' என்றாள். விபூதிப் பையிலே இருந்து 'கல கல' வென்று ரூபாயைக் கொட்டினான் அந்தக் காமி. ஐந்து ரூபாயைக் கொடுத்தான் பச்சையிடம்.

''மிச்சத்தை இப்படிப் போடு சாமி'' என்று கூறிக் கொண்டே நான் போய் நின்றேன் பக்கத்திலே. அலறிப் போனான் அந்த ஆண்டி. அவளும் ஆந்தை போல விழித்தாள். சாமியாரை நான் பேசவிடவில்லை. 'மகா யோக்கியர் போல நான் செய்தமற்றத் தப்பெல்லாம் சரி என்று நமசிவாயத்துக்குச் சொன்னாயே, உன் பெயரைச் சாமி காவடியானந்தர் என்று அச்சடிக்கனும், காமி சாவடியானந்தர் தானே நீ'' என்று கேட்டேன். ஆசாமி கைப்பிடியாக அகப்பட்ட பிறகு பயமென்ன? பயம் போய் விடவே, புத்தியும் கொஞ்சம் தீட்சணியமாக வேலை செய்ய ஆரம்பித்தது,

> உழவனின் உள்ளத்திலே புயல் இருக்குமானால் வயலிலே வளம் காண முடியாது!
>
> — அண்ணா

மையாகப் பயன்பட்டு வருகிறது. அது குடலில் சேர்ந்துள்ள கொழுப்பை அப்புறப்படுத்துகிறது. ஒரே ஒரு ஊசியே பெருமளவு கொழுப்பினை நீக்கிவிடுவது அதன் தனிச் சிறப்பாகும். எனவே, கௌஷே நோயாளிகளுக்கு இந்த என்சைமை ஆறு மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது அதற்கும் அதிகமான இடைவெளிக்குப் பிறகோ செலுத்தினால்போதும். இதனால் பரம்பரை நோயினைக் குணப்படுத்த, இந்தப் புதிய என்சைம் மாற்றுச் சிகிச்சை முறை மிகவும் ஊக்கம் அளிக்கிறது.

தேவையான அளவு என்சைம்களை உற்பத்தி செய்வதுதான் இனி இருக்கும் மிகப் பெரிய பிரச்சினை. ஓர் ஊசிக்குத் தேவையான என்சைமினைப் பிரித்தெடுக்க பல மாதங்கள் ஆகின்றன. எனினும், குணப்படுத்த இயலாத பரம்பரை நோய்களை, என்சைம் மாற்றுச் சிகிச்சை மூலம் குணப்படுத்த இயலும் என்னும் உண்மையை விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

பரம்பரையாக ஏற்படும் எட்டு வகைக் கொழுப்பு நோயினால் வருந்துபவர்களுக்கு, இந்தச் சிகிச்சை முறை கை கொடுக்குமா?

கொழுப்பு, மூளை செல்களில் அதிக அளவில் தேங்குவதும் ஒருவகை நோய். ஆராய்ச்சியாளருக்கு இது மிகவும் கடினமான ஒன்று; அறைகூவல் போன்றது. மூளையில் சேர்ந்துள்ள கொழுப்பினை சிகிச்சை செய்வது இன்று சாத்தியமானதல்ல. இரத்தத்தில் செலுத்தப்படும் பொருள்கள் மூளையை அடையாதபடி தடை உள்ளதுதான் இதற்குக் காரணம். எனவே, மூளையில் என்சைம்கள் கொழுப்பை அடைந்து அதனை நீக்க இயலாது.

மூளையில் கொழுப்பு நோய்க்கு 'டேஸாசஸ்' நோய்' என்று பெயர். இது குழந்தைகளைத் தாக்குகிறது. பெரும்பாலும் உயிரைக் குடிக்கும் இந்த நோய்க்கும் சிகிச்சை அளிக்க முயற்சித்ததில், மேலே கூறிய தடுப்பான் அமைப்பு இருப்பதால் அது முட்டுக்கட்டை ஆகியது; வெற்றி கிட்டவில்லை. எனவே, புதிய முறைகளை ஆராய வேண்டியது அவசியமாகிறது.

புதிய முறைகள் கண்டுபிடிக்கப்படும்வரை, அத்தகைய நோய் குழந்தைகளுக்கு ஏற்படலாம் என்று கருதும் பெற்றோர்களுக்கு மருத்துவர்கள் தகுந்த ஆலோசனை அளிக்க வேண்டும். அவர்களை மருத்துவர் நன்கு சோதித்து அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு அத்தகைய கொடிய நோய்கள் தோன்றுமா என்பதை முடிவு செய்ய வேண்டும். எதிர்காலத்தில் தோன்றக் கூடிய அபாயத்தை உணரும் வாய்ப்பு அவர்களுக்கு இதனால் ஏற்படக் கூடும்.

வாஷிங்டனுக்கு அருகில் உள்ள அமெரிக்க தேசிய ஆராய்ச்சி நிலையத்தில் பணியாற்றுபவர் விஞ்ஞானி, டாக்டர் ரோஸ்கோ பிராடி; என்சைம்களின் முக்கிய பணி குறித்து அவர் இவ்வாறு விளக்கிக் கூறியுள்ளார்.


# EDUCATION

## IN SCHOOLS AND COLLEGES



PHOTOPHONE

**16 mm Sound Projector**

*makes even difficult subjects*

* Simpler to explain
* Easier to understand
* Hard to forget

Films on various subjects readily available from your local sources.

*Even a child can operate it!*

everest/335/PEL

Authorised dealers for State of Tamil Nadu and Pondicherry :

YOUNG INDIA FILMS,

Shanti Theatre Annexe, 9-C, Mount Road, Madras—600 002

Phone : 85693


# வேளாண்மை மறுமலர்ச்சிக்குப் பேரறிஞர் அண்ணா காட்டிய அரிய வழி!

உலகத்திலே விவசாயத்திலே தேறியிருக்கிற எல்லா நாடுகளையும் விட நம்முடைய நாடு உற்பத்தித் திறனில் கடைசிக் கட்டத்தில் இருக்கிறது. நீர்வளம் இருக்கலாம்; நிலவளம் இருக்கலாம்; உழைப்பு வளம் இருக்கலாம்; அதைப் பற்றி புலவர்கள் பாடிய பாடல்கள் வண்டிவண்டியாக இருக்கலாம்! ஆனால் விவசாய உற்பத்தியின் அளவை எடுத்துக் கொள்ளும் நேரத்தில், விவசாயத்திலே ஈடுபட்டிருக்கிற மற்ற நாடுகளைவிட நம்முடைய நாட்டு உற்பத்தியின் அளவு மிகக் குறைவு. நம்மைவிடக் குறைவான நிலம் வைத்துக்கொண்டு—நம்மைவிடக் குறைவான ஆட்களை வேலைக்கு வைத்துக் கொண்டு, பிறநாடுகள் நம்மைவிட அதிக அளவுக்கு உற்பத்தி செய்து நமக்கே உணவுப் பொருளைக் கடன் கொடுக்கக் கூடிய அளவுக்கு வளர்ந்திருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை.

அமெரிக்க நாட்டில் நூற்றுக்குப் பத்துப் பேருக்கு மேல் விவசாயத்தில் ஈடுபடவில்லை. நம்முடைய நாட்டில் நூற்றுக்கு எண்பது பேர் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் நூற்றுக்குப் பத்துபேர்கூட ஈடுபடாத அமெரிக்க நாட்டிலே—தானும் உணவு உற்பத்தி செய்து உண்டு, நமக்கும் மற்றவர்களுக்கும் தருகின்ற அளவிற்கு—அங்கே அமோகமான விளைச்சல் கிடைக்கிறது.

அமெரிக்க உழவன் ஒருவன் உழுது கொண்டிருக்கிறான் என்றால் அவனுக்கு மாத்திரம் அல்ல, அவனுக்கும் உலகத்திலே ஒரு கோடியிலே உள்ளவர்களுக்கும் சேர்த்து அவன் உழைத்துக்கொண்டிருக்கிறான்! ஆகையினாலே பொதுப்படையான ஓர் உண்மை-எல்லோரும் ஒப்புக் கொள்ளக் கூடிய உண்மை-உற்பத்தி பெருக்கியாக வேண்டும் என்பது.

## புதுமை மலர்கிறது!

உரம் போட்டால் உற்பத்தி பெருகும் என்பதை நாம் இருபது வருடங்களாகச் சொன்னாலும், முதல் பத்து வருடத்தில் யாருமே அதை ஒப்புக் கொள்ளவில்லை.




''உரம் போட்டால் பூமி வெந்து விடும்; உரம் போட்டால் சத்துக் குறைந்துவிடும். உரம் போடச் சொல்லச் சொல்வதே, யாரோ ஒரு உரக் கம்பெனியாரிடத்திலே கமிஷன் வாங்கிக் கொண்டு பேசுகிற பேச்சு'' என்றெல்லாம் ஒரு பத்து வருடங்கள் நாம் காலத்தை ஓட்டிவிட்டோம். ஆனால் இப்பொழுது இருபது வருடங்களாக சொல்லப்பட்டு வந்த உண்மைகளில், மிகப் பெரும்பாலான அளவிற்கு அந்த உண்மைகள் மக்களாலே ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டன. இனி அதைச் செயல் முறையிலே நடத்துவது எப்படி? அதற்கு அரசு என்ன துணை புரிவது? என்ற முறையிலேதான் அந்தக் கட்டத்திற்கு நாம் வந்திருக்கிறோம்.

ஆகையினால், 20 வருடங்கள் வீணாகிவிட்டன என்ற பொருள் அல்ல. 20 வருடங்களில் நாம் தெரிந்து கொண்டோம்; தெளிவு பெற்றோம்; துணிவு பெற்றோம்; இப்பொழுது செயலிலே ஈடுபட இருக்கிறோம். ஆகையினால் படிப்படியாக நாம் முன்னேறி வருகிறோம் என்பதனை இந்த 20 வருடங்களும் எடுத்துக் காட்டுகின்றன.

அதைப்போல உற்பத்திப் பெருக்கத்திலேயும் ஆண்டுக்காண்டு நாம் ஓரளவிற்கு வளர்ந்தபடிதான் இருக்கிறோம். உற்பத்திப் பெருக்கமே இல்லை என்று நாம் சொல்வதற்கில்லை; போதுமான அளவிற்கில்லை; தேவையான அளவிற்கு இல்லை. மற்ற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், சரியென்று சொல்லத் தக்க அளவு இல்லை என்றுதான் சொல்லுகிறோமே தவிர, முன்னாலேயே காடுகளாக இருந்த இடங்கள்—கரம்புகளாக இருந்த இடங்கள்—இன்றைய தினம் நிலங்களாக ஆக்கப்பட்டிருக்கின்றன!

முன்னாலே புன்செய்க் காடுகளாகஇருந்த நிலங்கள், இன்று நன்செய் நிலங்களாக மாறியிருக்கின்றன. முன்னாலே ஒருபோகமாக இருந்த இடம், இப்போது இருபோகமாக மாறியிருக்கின்றது. முன்னாலே கிடைத்ததை விட, இப்பொழுது அதிக நிலம் கிடைப்பதற்கு வழியிருக்கிறது.

## நமது கடமை

வடஆர்க்காடு மாவட்டம் நீர் வளம் அதிகம் உள்ள மாவட்டமல்ல! அதற்கென்று எங்கேயும் மேட்டூர் அணை இல்லை! அதற்குக் காவேரி அன்னையினுடைய கருணை கிடைப்பதில்லை! வறண்ட பிரதேசம்! அப்படிப்பட்ட புன்செய்க் காடுகளை நிரம்பி இருந்த வடஆர்க்காடு மாவட்

டத்தில், வெறும் கிணறுகளைத் தோண்டி, அதிலே மின்சாரப் பம்பு செட்டுகள் அமைப்பதன் மூலம்-பத்தே வருடத்தில்—முன்னாலே பற்றாக்குறையாக விருந்த அந்த மாவட்டம்—இன்றையத் தினம் உபரி மாவட்டமாகி இருப்பது மட்டும் அல்லாமல், ஒரு நிலத்தினுடைய அளவிலே கிடைக்கிற உற்பத்தியைக் கணக்கெடுத்தால் இரண்டாவதாகவோ, முதலாவதாகவோ அது வந்திருக்கிறது!

விவசாய உற்பத்தி பெருகினால், தமிழகத்தினுடைய உணவு நெருக்கடி பெரும் அளவிற்குத் தீர்க்கப்பட்டு விடும் என்று அமெரிக்கா வரையில் இன்றையத் தினம் அறிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்!

**ஆகையினால், உழவர் பெருமக்களாகிய உங்களுடைய புகழ் பெரிது. புகழ் பெருகப் பெருக பொறுப்பு பெரிதாகி விடும். பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளும்பொழுது பல சங்கடங்கள் வரும். ஒரு சமயம் இந்தத் தலைமுறை முழுவதுமே சங்கடத்திற்கு என்றே பிறந்த தலைமுறை என்றே சொன்னாலும் தவறு இல்லை!**

இந்தத் தலைமுறையிலேயே சங்கடங்களை நாம் தாங்கிக் கொண்டால்தான், வருங்காலத் தலைமுறைகள் நம்மைவிட நிம்மதியாக வாழ்வதற்கு வழி தேடிக்கொள்ள முடியும். உழவர் பெருங்குடி மக்களாகிய உங்களுக்கு நான் அதிகம் சொல்லத் தேவையில்லை.

விதை செத்துத்தான், பயிர் முளைக்கும்! விதை சாகாமல் பயிர் முளைப்பதில்லை! விதையை அப்படியே நாம் உண்டுவிட்டோமானால், பயிர் கிடையாது! அதைப்போல, உற்பத்தியாகிற செல்வம் அவ்வளவையும் இந்தத் தலைமுறையில் தின்று; தீர்த்துவிடுவதென்றால், அடுத்த தலைமுறைக்கு மிச்சம் ஏதும் இருக்காது!

ஆகையால்தான் நாம் உழைக்கிற உழைப்பு, நம்முடைய நல்வாழ்வுக்கு மட்டும் அல்ல! வருங்காலத் தலைமுறைக்காகவும் நாம் உழைக்கிறோம் என்பதை நாம் எண்ணிப் பார்ப்போமேயானால், வழி வழி வருகின்ற தலைமுறைகளுக்காக நாம் இந்தத் தலைமுறையில் சில சங்கடங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதைத் தேசியக் கடமையாக ஒவ்வொருவரும் கருத வேண்டும் என்று நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

## பசிப்பிணி மருத்துவர்

பசியைப் 'பிணி' என்று சொன்னவர்களே தமிழர்கள் தான்! மற்ற பிணிகளைப்போல, பசி என்பது ஒரு பிணி என்று சொல்லி, சங்க இலக்கியத்திலே வள்ளல்களை ''பசிப்பிணி மருத்துவர்'' என்றே அழைத்திருக்கிறார்கள். வள்ளல்களுக்கு, ''வள்ளல்கள்'' என்று பெயர் இடுவது மட்டும் அல்லாமல், ''பசிப் பிணி மருத்துவர்'' ''பசி என்ற நோயைத் தீர்க்கின்ற மருந்து கொடுக்கின்றவர்'' என்றும் அழைத்திருக்கிறார்கள்!



**பசிப்பிணி தீர்க்கின்ற மருத்துவர்களாக உங்களைக் கருதிக்கொள்ள வேண்டும். மருத்துவர்களுக்குச் சலிப்பிருக்கலாம்! களைப்பிருக்கலாம்! கட்டணம் போதுமானதாக இல்லை என்ற கவலை இருக்கலாம். ஆனால் இவைகள் எல்லாவற்றையும்விட பசிப்பிணியைத் தீர்த்தோம் என்ற தெம்பு இருக்கிறதே அதற்கு நிகர் எதுவும் ஆகாது!**

## பொற்காலம் எப்போது வரும்?

இன்னும் ஒரு 10 வருடம், 15 வருடத்திற்குப் பிறகு நிலத்திற்குச் சொந்தக்காரர் இவர் என்றோ, இந்த நிலத்திலே உழுகின்றவன் இவன் என்றோ, பேதம் பிரித்துக் காட்ட முடியாத அளவுக்கு நில உடைமையாளர்கள், அவர்களுடைய வீட்டுப் பிள்ளைகள் 'எம்.ஏ.' படித்தாலும், 'பி.ஏ.' படித்தாலும், 'பி.எஸ்.ஸி.' படித்தாலும், 'பி. காம்.' படித்தாலும் டிராக்டர்களை ஓட்டிக்கொண்டு தங்கள் நிலங்களைத் தாங்களே உழுகின்ற காலந்தான் நம்முடைய நாட்டின் பொற்காலமாக இருக்கும்!

மிராசுதார் என்றால் நிலத்துக்கு உடைமையாளர். அந்த உடைமையாளர்களாக இருப்பதற்கு அந்தஸ்து என்னவென்றால், உழைக்காமலே இருப்பது தான் என்ற பழைய மரபு நிச்சயமாக இருந்துகொண்டு வருகிறது. அதை அழித்து விட்டோம் என்று சொல்வதைவிட அது தன்னாலேயே அழிந்து கொண்டு வருகிறது எனலாம்!

## உணவு நெருக்கடியைத் தீர்ப்பது எப்படி?

**இனி, எந்த அளவுக்குத் தங்களிடத்தில் நிலம் இருந்தால் நேரிடையாகப் பார்க்க முடியுமோ, அந்த அளவுக்கு நிலத்தை வைத்துக் கொண்டிருப்பதுதான் பாதுகாப்புக்கும் நல்லது; பயிர் வளர்ச்சிக்கும் நல்லது; குடும்பத்திற்கும் நல்லது; நாட்டுக்கும் நல்லது! ஏராளமான அளவிற்கு நிலம் இருப்பது ஒரு காலத்தில் அந்தஸ்துக்கு அறிகுறி! ஏராளமான நிலம் இப்போது இருப்பது வாழ்க்கையினுடைய ஆபத்துக்கு அறிகுறி!**

ஆகையினால், கட்டுக்கடங்கிய அளவிற்கு நிலத்தை வைத்துக்கொண்டு, அதிலே உழுவதற்கென்றே ஒருவன் பிறந்தான் என்று கருதாமல், நம்முடைய நிலம் என்று நாம் உழ வேண்டும். நம்முடைய நிலம்; அதை நாம் கவனித்துக் கொள்ள வேண்டும் என்ற உணர்வு நிலஉடைமையாளர்களுக்கு வர வேண்டும். இன்று நில உடைமையாளர்களாக இல்லாமல் இருக்கின்ற விவசாயக் கூலிகளுக்கெல்லாம், நிலம் கிடைக்கின்ற ஒரு திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுகிற பொழுது அவர்களும் உடைமையாளர்களாக ஆகின்ற காலம் வந்து உடைமையாளர்கள், உழைப்பாளர்கள் என்ற இரண்டு வர்க்கம் இல்லாமல், உடைமைக்கும் சொந்தக்காரர்கள், உழைப்புக்கும் சொந்தக்காரர்கள் என்ற நிலை மலர வேண்டும்! அது இன்று பேசி, நாளை தீர்ந்து விடுகின்ற பிரச்னை அல்ல! ஆனால் இப்பொழுது நமக்கு இருக்கின்ற முக்கியமான பிரச்னை, 'நாம் உற்பத்தியைப் பெருக்குவதற்குச் செய்ய வேண்டிய காரியங்களைச் [illegible] இருக்கிறோமா?' என்பதுதான்!

நாம் என்று குறிப்பிட்ட நேரத்தில், நிலத்துக்கு உடைமையாளர்கள், அதிலே பாடுபடுகின்ற விவசாயப் பெருங்குடிமக்கள், அவர்களுக்குப் பொறுப்பாக விவசாயத்திற்குத் தேவையான வசதிகளைத் தேடிக் கொடுக்க வேண்டிய பொறுப்பிலே உள்ள அரசு ஆகிய இத்தனையும் சேர்ந்ததுதான் நாம் என்பது!

இதிலே மழையையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்! ஆனால் அது எந்த அரசுக்கும் கட்டுப்பட்டதல்ல! ஆகையினால், தற்பொழுது எடுத்துக் கொண்டிருக்கின்ற உற்பத்திப் பெருக்கத்தில் தனிக்கவனம் செலுத்தி அக்கறைக் காட்டுவீர்களேயானால், உணவு நெருக்கடியை நாம் தீர்த்துக் கொள்ளலாம்!

## நமக்கு ஏற்ற நல்லமுறை எது?

அமெரிக்காவிலே மிகக் குறைந்த அளவு உள்ளவர்கள், உழவுத் தொழிலில் ஈடுபட்டு நிறைந்த செல்வத்தை விவசாயத்திலே பெற்றுக்கொண்டு வருவதற்குக் காரணம், அவர்களுடைய உழவு எந்திர முறையில் அமைந்திருக்கின்ற எந்திரமயமாக்கப்பட்ட தன்மையாகும்!

மண்வளம் நம்முடைய நாட்டில் உள்ளதைவிட சில இடங்களில் அங்கு அதிகத் தரம் உள்ளதாக இருந்தாலும், பொதுவாக நம்முடைய நாட்டிலே மண்வளம் குறைந்தது என்று யாரும் சொல்வதற்கு இல்லை! ஆனாலும் ஒரு ஏக்கரில் நமக்குக் கிடைக்கின்ற விளைச்சலை விடப் பல மடங்கு அதிகமான அளவு விளைச்சல் அமெரிக்க நாட்டிலே கிடைக்கிறது! அதற்காக அவர்கள் அந்த நிலத்தை வளப்படுத்தி வைத்திருக்கிறார்கள்!

உரத்தைத் தாராளமான முறையில் அவர்கள் பயன்படுத்துவதன் மூலம்-நல்ல விதைகளைப் பயன்படுத்துவதன் மூலம் - சிறந்த பாசன முறைகளை மேற்கொள்வதன் மூலம் - நிறைந்த வெற்றியை கண்டு கொண்டு வருகிறார்கள்! ஆனாலும், அமெரிக்காவிலே கையாளுகின்ற பெரிய பண்ணைகள் நம்முடைய நாட்டுக்கு உகந்தவை அல்ல என்பதையும் நாம் எடுத்துச் சொல்லாமல் இருக்கக்கூடாது.

அமெரிக்காவிலே மக்கள் தொகை குறைவாக இருப்பதால், அங்கு அவர்கள் பெரிய, பெரிய பண்ணைகளை முழுவதும் எந்திர மயமாக்கி இருவர், மூவர் பெரிய பண்ணைகளைப் பார்த்துக் கொள்ளுகின்ற நிலைமை அங்கு உருவாக்கப்பட்டிருக்கிறது!

நான் அமெரிக்காவில் 'கான்சாஸ்' என்ற ராஜ்யத்திலே திலே 900 ஏக்கர் பரப்பளவுள்ள ஒரு விவசாயப் பண்ணையை பார்த்தேன். 900 ஏக்கர் பரப்புள்ள விவசாயப் பண்ணையைத் தகப்பன், மகன் ஆகிய இருவர் மட்டுமே பார்த்துக் கொள்கிறார்கள்! வேறு அவர்களுக்கு உதவிக்கு எந்த விதமான கூலியாட்களையும் வைத்துக் கொள்ளவில்லை. எந்திரத்தை பெருமளவிற்குப் பயன்படுத்தி, 900 ஏக்கர் நிலத்தையும் அவர்கள் பயன்படுத்தி, நல்ல முறையிலே பலனும் பெற்றுக் கொண்டு வருகிறார்கள்! ஆனால் நம் நாட்டில் மக்கள் தொகை அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, நாம் அந்த விதமான பண்ணைகளை அமைக்க முடியாது!

நமக்கு வழிகாட்டத்தக்க நிலையில் ஜப்பான் நாட்டு உழவு முறை இருப்பதைப் பார்த்து நான் பெரிதும் பாடம் பெற்றேன் என்று சொல்லிக் கொள்ள வேண்டும்! அங்கே இருப்பவை பெரிய பெரிய பண்ணைகள் அல்ல! நம்முடைய நாட்டைப் போலவே சிறிய அளவுள்ள நிலங்களை வைத்துக் கொண்டு, மிக அக்கறையோடு பாடுபடுவதாலே நிறைந்த பலனைப் பெற்றுக் கொண்டு வருகிறார்கள்!

முக்கியமாக ஜப்பான் நாட்டில் ஒருவன் தானே இயக்கிக் கொண்டு செல்லத்தக்க எந்திரக் கலப்பையை (பவர் டில்லர்) அதிக அளவிற்கு அவர்கள் உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள். நம்முடைய நாட்டில் அது வேகமாகப் பரவ வேண்டும் என்று நான் பெரிதும் விரும்புகிறேன்.



## மறுமலர்ச்சிக்கு வழி

**'பவர் டில்லர்'களை ஜப்பான் நாட்டில் பயன்படுத்துவதினாலே—விவசாயத்தை மிகத் தரம் குறைந்த ஒரு தொழில் என்று கருதாமல், எந்திரத்தோடு தொடர்பு கொண்ட ஒரு தொழில் என்று கருதி—படித்த இளைஞர்கள் எல்லாம் விவசாயத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள்!**

நம்முடைய நாட்டிலே பல இடத்திலே இருப்பதைப்போல நிலத்தையே கண்ணால் பார்க்காத நிலச் சொந்தக்காரர்கள் ஜப்பான் நாட்டில் இல்லை! நிலத்திலேயே அவர்கள் குடியிருக்கிறார்கள்! நிலத்திற்குப் பக்கத்திலேயே வீடு அமைத்துக் கொண்டு கண்ணும் கருத்துமாக அவர்கள் பாடுபட்டுக் கொண்டு வருகிறார்கள்!

**நம்முடைய நாட்டிலேயும் அதைப் போல நிலத்தின் அருகிலேயே குடியிருந்து கொண்டு அதைக் கண்ணும் கருத்துமாக கவனித்து, 'பவர் டில்லர்' போன்ற எந்திர வசதிகளைப் பெற்று, நல்ல முறையில் உரத்தையும் பயன்படுத்துவோமானால், ஜப்பான் நாடு முன்னேறியிருப்பதைப் போல நம்முடைய நாடும் முன்னேற முடியும்!**

நம்முடைய நாட்டில் உள்ள மிகப் பெரிய ஒரு குறை, நமக்குக் கிடைக்கக்கூடிய தண்ணீர் வளம் மிகக் குறைவு என்பது தான்! இந்தக் குறைவானத் தண்ணீர் வளத்தையும் நாம் பாழ்படுத்தி விடுவது மிக அதிகமாகயிருக்கிறது!

மற்றபடி நம்முடைய நாட்டில் விவசாயத்திலே ஏற்பட்டிருக்கின்ற புதிய விழிப்பு அதன் மூலமாக கிடைத்துக் கொண்டு வருகின்ற பெரிய வெற்றிகள் இவைகளையெல்லாம் உறுதிப்படுத்துகின்ற வகையில் இன்று தரிசாகக் கிடக்கின்ற—வளம் நிறைந்திருந்தும் பயன்படுத்தாமல் இருக்கின்ற-பண்ணைகள் ஏராளமான முறையில் புதுப்பிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறேன். அதற்குப் பொதுமக்களுடைய பேராதரவும், விவசாயத்திலே அக்கறை கொண்டுள்ளவர்களுடைய நல்ல உழைப்பும், சீரணித் தொண்டர்களுடைய ஒத்துழைப்பும் நிரம்ப தேவை என்பதனை இந்த நேரத்திலே சொல்லிக்கொண்டு என்னுடைய நன்றியறிதலைச் சொல்லிக் கொள்கிறேன்.

**[அமெரிக்கா சென்றுவந்தபின், முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் வானொலியில் ஆற்றிய உரையில் இருந்து தொகுக்கப்பட்டது.]**

## மறவாதீர்கள்;

## உங்கள் மகள் ஒருநாள்

## மணமகளாக அமர வேண்டியவள்!

திருமணம் என்ருலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்ருல்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கிஞல் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்ருேம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது— இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| ரெக்கரிங் டிபாசிட் | ரூ. | ரூ. | ரூ. |
| | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1,650/- |



இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002


# எல்லோர் நலம்பெற, ஏற்றதொரு திட்டம்!

கல் உடைப்போர்-கைவண்டி இழுப்போர்-சீறி வரும் கடல் அலையைத் தாண்டிச் சென்று ஆழ்கடலில் மீன் பிடிக்கும் மீனவர்கள் - தொழிற்சாலைத் தொழிலாளர்கள் இவர்கள் தான் குடிசைகளில் வாழ்பவர்கள். இல்லை! இல்லை ! ! ஒரு , காலத்தில் குடிசைகளில் வாழ்ந்தவர்கள்! இன்று கோபுரம் போன்ற வீடுகளின் சொந்தக்காரர்கள். புயலுக்கும், மழைக்கும், நெருப்புக்கும் ஓட்டைக் குடிசையில் அஞ்சி அஞ்சி வாழ்ந்தார்கள். இன்று உல்லாசமாய் வாழப் பாதுகாப்பான வீடு கிடைத்துள்ளது. இவர்களோ அன்ருடக் கூலிகள்! சொந்தமாய் வீடுகட்ட ஏது நிதி?

எழில்மிகு சென்னை மாநகரின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் குடிசைப் பகுதிகளில் வசிப்பவர். இங்கே தான் எத்தனை ஏற்றத் தாழ்வுகள் இருந்தன! மிகக் குறைந்த வருமானம் கொண்ட-மிகவும் பிற்படுத்தப்பட்ட-கதியற்ற மக்கள் இங்கே வாழ்கிருர்கள்! தாய்ப்பாலின்றித் தவிக்கின்ற தாய்கள்-சத்துணவின்றி மெலிந்திடும் குழந்தைகள் - சக்தியில்லாக் கர்ப்பிணிகள் இவர்கள் யாவரையும் இந்தக் குடிசைப் பகுதிகளில் காணலாம். இவர்கள் எல்லோரும் வாழ வசதியான வீடு வேண்டாமா? நலிந்திடும் உடலுக்கும் ஊட்டச்சத்துக் கொடுத்துதவ வேண்டாமா? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் நல்ல பதிலையும், பலனையும் தருவதுதான் தமிழ்நாடு அரசு!

'தமிழ்நாடு அரசு தான் நடந்துவந்த பாதையில் பார்வையைச் செலுத்தியது. சென்னை நகரிலிருந்த 1,202 குடிசைப் பகுதிகளையும் மாற்றி மாடிவீடுகளாக அமைப்பது என்று முடிவு செய்து, 1970 ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியம் அமைத்தனர். ஏழு ஆண்டுக் காலத்தில் குடிசைகள் யாவும் மாற்றப்பட்டு மாடி வீடுகளைக் கட்டி வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது. அடுக்குமாடி வீடுகளில் குடியமர்த்திச் சுயதேவைகளைப் பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகப் பல்வேறு பணி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் குடியிருப்போர் நலநிதியையும் ஏற்படுத்தி வைத்துள்ளது.

தங்குவதற்கு எல்லாவித வசதிகளும் நிறைந்தவாறு குடிசை மாற்று வாரியத்தால் வீடுகள் கட்டப்பட்டு, குடியமர்த்தப்பட்டு வருகிருர்கள். சென்னை நகரில் இதுவரை 20,506 குடியிருப்புக்கள் கட்டப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. கட்டி முடிக்கப்பட்டுள்ள மற்றும் முடிவு பெறும் தறுவாயிலுள்ள வீடுகள் 4,754 ஆகும். குடியிருப்புகள் அமைக்க இதுவரை செலவான தொகை ரூ. 27.16 கோடி ஆகும்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் தனித்தனியே தண்ணீர்க் குழாய் உள்ளது. மின்சார விளக்குகள் போடுவதற்கும் அனுமதிக்கப் பட்டுள்ளது. வீட்டு வாடகை ரூ. 40/- என மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் அரசு சலுகை அளித்துள்ளதால் மாதம் ரூ. 15/- மட்டுமே வாடகையாகச் செலுத்துகின்றனர்.

ஒவ்வொரு குடிசை மாற்றுப் பகுதியிலும் உயர்மட்ட நீர்த் தேக்கத்தொட்டிகள் அமைத்து மாநகராட்சித் தண்ணீர் வழங்கப்படுகிறது; அல்லது கிணறுகள் அமைத்துத் தண்ணீர் வழங்கப்படுகிறது. வீட்டுப் பிராணிகளை வளர்க்க தனிக்கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. அனாதைக் குழந்தைகள் காப்பகம், ஆரம்பப் பள்ளி, சமூக நிலையங்கள், விளையாட்டு மைதானம், மருத்துவமனை (Clinics), வியாபார நிலையம் யாவும் இங்கே உண்டு. குடிசைகள் யாவும் எல்லா வசதிகளும் கொண்ட மாடி வீடுகளாக்கப்பட்டுவிட்டன. எஞ்சிய பகுதிகளின் பணி தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது.

ஆரோக்கியமாய் வாழ, சத்தான உணவுகளை வழங்கிடவும் வாரியம் வகை செய்துள்ளது. குடிசைவாழ் பகுதிமக்கள் உழைப்பையே மூலதனமாகக் கொண்டுள்ளனர். பெண்கள் வீட்டு வேலையாட்களாகவும், வீடு கட்டும் பகுதிகளில் சித்தாட்களாகவும் பணியாற்றுகிருர்கள். 1965-ஆம் ஆண்டின் கணக்கின்படி 77 சதவிகிதக் குடிசைப்பகுதி குடும்பங்களின் மாத வருமானம் ரூ. 150-க்கும் குறைவாக உள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளது. இங்கு எல்லா இனத்தவரும் வசிக்கிருர்கள். பெரும்பாலானவர்கள் இந்துக்கள். இதில் 36 சதவிகிதத்தினர் தாழ்த்தப்பட்ட இனத்தவர். கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் நல்வாழ்வுப் பலன் ஆகியவற்றில் இவர்களுக்குச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

தமிழ்நாடு அரசு நகரிலுள்ள குடிசைப்பகுதிகளில் சிறப்புச் சத்துணவு வழங்கும் திட்டத்தையும் மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் கருவுற்ற பெண்கள், தாய்ப்பாலின்றித் தவிக்கும் தாய்கள், பள்ளிப் பாலர்கள், ஆகியவர்களுக்கு இலவசமாகச் சத்துணவுகளை ஆண்டில் 300 நாட்களுக்குக் கொடுத்து உதவி செய்கிறது.

தமிழ்நாடு அரசு சமூகநலத் துறை, சமூகநல நிறுவனங்கள் மற்றும் அமெரிக்கக் கூட்டுறவு நிவாரணம் (Co-operatives for American Relief Every Where) ஆகியவற்றின் சீரிய ஒத்துழைப்புடன் சத்துணவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. உழைப்பையே நம்பியிருக்கிற மக்களின் உடல் நலம் இன்றியமையாதது. குழந்தைகளின் எதிர்காலம் ஆரோக்கியமிழந்து பாதிக்கப்பட்டுவிடக் கூடாது. எனவே, சத்துணவுத் திட்டம் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

ஊட்டச்சத்துப் போதாமையை எதிர்த்துப் போரிட சத்துணவு வழங்குவதுமட்டு

போதாது. இத்திட்டத்தின் முழுப்பயனையும் அடையச் சத்துணவுக் கல்வித் திட்டத்தைப் போதிப்பதும் அவசியமாகிறது. சென்னையில் இத்திட்டம் 12 குடிசைப் பகுதிகளில் 6,323 குடும்பங்கள், 32,558 மக்களுக்கு முன்னுதாரணமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது.

சென்னை கிறித்துவ சமூக நிறுவனங்கள், குடிசைமாற்று வாரியம், குடியிருப்போர் நலக் குழு (New Residents Welfare Trust) ஆகியவை இணைந்து நகர்ப்புற சமூகப் பணியைத் தீவிரமாகச் செய்து வருகிறது. குடிசைமாற்று அளவில் பயிற்சி பெற்ற 14 குடியிருப்போர் நல அலுவலர்களை நியமித்துள்ளது (Residents Welfare Officers) மேலும் ஒரு தலைமை நிருவாக அலுவலரையும் நியமித்துள்ளது.

இரவு மதுரமாயிருந்தால், காலையிலே திரிந்துவிட்டால், சாக்கடைச் சேருகிறது. மாலையிலே, மாளிகைகளிலே மஞ்சரிகளின் கூந்தலுடன் கொஞ்சிய மலர், காலையிலே, கசங்கியும் வீசி எறியப்படுகிறது... குப்பையிலே! பொருட்கள் மட்டுமல்ல, எண்ணங்கள், ஏற்பாடுகள், முறைகள், நீதிகள் எனும் எவையும் அப்படித்தான். காலத்துக்கு ஏற்றதாக, நடைமுறைக்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.

...லாத் திட்டப்பகுதிகளிலும் ...க நலப்பணிகளை இவர்கள் ...னமாகச் செய்து வருகிறார்கள். மேலும் ஒரு மருத்... அலுவலர், சமூகநலப்பணிப் ...ண் மற்றும் 10 நல்வாழ்வுப் ...ண்கள் நியமிக்கப்பட்டு; ...ந்தைகள், குடும்பநலப் ...ிகளை இவர்கள் கவனித்து ...கிறார்கள். தாய்மார்கள் ... அமைத்தல், சீரான குடும் ...திற்கான பயிற்சி அளித்தல், ...யல், தோல்பை - தைத்தல் ...ய பயிற்சியளித்துக் கூடுதல் ...மானத்திற்கு வகை செய் ஆகிய பணிகளையும் செய்து ...கிறார்கள்.

...த்துணவுக் கல்வித் திட்டத் ...கீழ் எடுக்கப்பட்ட கணக் ... குறைந்த வருமானம் ...ளவர்களிடத்தில் சத்துணவு ...றி அறியாமையே மிகுந்து ...ளதெனக் கணக்கிடப்

"சங்கீதம் என்ன சார் பிரமாதம்? சாரீரம் கொஞ்சம் நன்ருக இருக்க வேண்டும்' சுருதியுடன் சேர்ந்து பாடவேண்டும். தாளம் தவறக்கூடாது. இவ்வளவு தானே!" என்று சொல்வதுண்டு. பாட ஆரம்பிக்கும் போதுதானே தெரிகிறது. சாரீரம் வித்வானுடன் ஒத்துழைக்க மறுப்பதும், சுருதியுடன் அவர் மல்லுக்கு நிற்பதும், தாளம் அவருக்குச் செய்யும் துரோகமும்! அது போலத்தான் சமத்துவம், சமதர்மம் போன்ற இலட்சியங்களைப் பேசுவது சுலபம். சாதிப்பது கடினம்.

## அண்ணா மொழி

கனியும் அழுகுவது காண்கிறோம் அந்த அழுகிய பழத்திலே பிறகு புழு நெளியவும் காண்கிறோம். 'மதுரம் தரும் பழமாயிற்றே, மாங்கனியாயிற்றே. நமது தோட்டத்திலே கிடைத்ததாயிற்றே, இதிலே நெளிவது புழுவாக இருக்க முடியாது; பழத்திலே சுவை இருக்கும்; புழு எப்படி இருக்க முடியும்? என்று யாராவது வாதாடுவார்களா? பழம் அழுகுவது போல்; மலர் கசங்கி மணத்தை இழந்து, பிறகு கெட்டவாடை கொள்ளுவது போல; தழை சருகு ஆவது போல; பலப்பல தத்துவங்களும், ஏற்பாடுகளும் காலச் சிறையிலே கிடந்து கிடந்து கெடுவதும், பல கேடுகளை உற்பத்தி செய்வதும், இயற்கையாக ஏற்படும் ஒரு நிகழ்ச்சி. இதனை உணர மறுப்பது உலகை அறியாதார் போக்கு.

பட்டுள்ளது. இத்திட்டத்தின நோக்கம் சத்துணவுபற்றித் தெரிந்து கொள்ளச் செய்வது மட்டுமல்ல; உணவுப் பழக்கத்தையே மாற்றுவதாகும். ஆரோக்கியம் பாதிக்கப்பட்டவர்களுக்கே ஆழ்ந்த கவனம் செலுத்தப்படுகிறது. சத்துணவு—சுத்தம்—சுகாதாரத்தைக் கடைப்பிடிக்க வழிகாட்டப்படுகிறது.

கருவுற்ற தாய் தினமும் உணவில் காய், கனிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். தொடர்ந்து மருத்துவரிடம் உடற்பரிசோதனை செய்து கொள்வதும் மிகவும் அவசியம். வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு 6 மாதத்திலிருந்து திட உணவு (Solid food) கொடுக்க வேண்டும்; குழந்தைகளுக்குக் காய்ச்சல், வயிற்றுக் கோளாறு ஆகிய நேரத்தில் பசியால் வாடவிடக்கூடாது. வீடு, சுற்றுப்புறம், குழந்தைகளைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். உணவு, குடிநீர் ஆகியவற்றைப் பாதுகாப்பாய் மூடி வைக்க வேண்டும். இவை யாவும் குடிசைப் பகுதிகளில் வலியுறுத்திச் சொல்லி, வழிகாட்டப்படுகிறது.

கல்வி விஸ்தரிப்பாளர்கள் (Extension Educators) குடிசைப் பகுதி வீடுகளுக்கு நேரில் சென்று சத்துணவு பற்றி எடுத்துச் சொல்லுகிறார்கள். ஒரு கல்வி விஸ்தரிப்பாளர் 15 நாட்களில் 48 வீடுகள் பார்வையிட்டு விளக்கமளிக்கிறார். மேலும் மூன்று போதனைக் கூட்டங்கள் நடத்துகிறார். ஒவ்வொரு திட்டப்பகுதியிலும் மாதம் ஒருமுறை படக்காட்சி (Film Show) காட்டப்படுகிறது. மேலும் சத்துணவுபற்றிச் சுவரொட்டிகள் மூலமும் விளம்பரப்படுத்தப்படுகிறது.

குடிசை வாழ்ந்தோர் அடுக்கு மாடி வீடு பெற்றனர்! நலிந்தோர் ஆரோக்கியம் பெறுகின்றனர்! "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கின்றேன்" என்று மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அவர்களின் எண்ணத்தைத் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது தமிழ்நாடு அரசு!

"எந்நன்றி கொன்றார்க்கும்
உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

—ம. அரி.

# அடி எடுத்தீர், முடித்தோம் அண்ணா!



—: கவிஞர் கா. வேழவேந்தன் :—

'குதிரைகளின் வால்களிலே நோட்டைக் கட்டி,
கொண்டதையும் இழக்கின்ற தீய தான
புதிர்போன்ற சதிராட்டப் பந்த யங்கள்
போயொழியும் நாள்எந்நாள் வருமோ? 'என்றே
எதிரொலித்தே வந்தீர்கள், அண்ணா! இன்றோ
எத்தனையோ மாநிலங்கள் தயங்கி னாலும்
ஒதுங்காமல் ஒழித்திட்டோம்; காந்தி யாரின்
உண்மைவழி வந்தவர்கள் நாமே யன்றோ?

'வெண்ணிறத்தின் ஆடைகளில் ஆடி நின்று
வேதனையில் நீச்சலிடும் கைம்பெண் வாழ்வின்
கண்ணீரும் மாறாதோ?' என்றே அன்று
கதைகதையாய் எழுதிவைத்தீர், அண்ணா! இன்றோ
பெண்ணொருத்தி விதவையென இருப்பா ளானால்
பேதையவள் கைப்பிடிக்கும் இளைஞ னுக்கே
எண்ணியிங்கே பத்தாயி ரம்ரூ பாயை
ஏற்றியிங்கே பாராட்டி வழங்கு கின்றோம்!

'கோடியிலே குடிசையிலே குப்பை யோடு
குப்பையென உழன்றிருக்கும் குப்ப னெல்லாம்
மாடியிலே வாழ்வதெந்நாள்?' என்றே நீங்கள்
வாய்வலிக்கக் கேட்டீர்கள், அண்ணா! இன்றோ
தேடுகின்ற விழியெல்லாம் மகிழும் வண்ணம்
திசையெங்கும் கோடிகளில் மாடி கட்டி
வாடுகின்ற ஏழைகட்கு வழங்கு கின்ற
வளக்காட்சி காண்பதற்கு வரக்கூ டாதா?

'கடலோடிக் கலம்செலுத்தி வணிகம் கண்ட
காட்சியெல்லாம் திரும்பாதா?' என்றே நீங்கள்
நெடுங்கனவு கண்டீர்கள்; கலைஞர் இங்கே
நீள் 'பூம்பு கார்க்கப்பல் கழகம்' கண்டு
கடல்வாணி கத்தாலே தமிழர் நாட்டின்
கவின்மிகுந்த வருவாயை உயர்த்து கின்றார்!
மடல்வரைந்து பாராட்ட நீங்கள் இங்கே
மறுபடியும் ஏனண்ணா வரக்கூ டாதா?



# அந்தத் தமிழ்ச் சொல்!

—: புலவர் பொன்னிவளவன் :—

காவியம் ஆயிரம் காட்டா இன்பம்
ஓவியம் ஆயிரம் ஊட்டா மகிழ்ச்சி
உள்ளது இங்கே ஒற்றைச் சொல்லில் !
'நல்லது; அச்சொல் எச்சொல்? சொல்!' எனில்
"அண்ணா" என்பதே அந்தத் தமிழ்ச்சொல் !
"அண்ணா ! அறிவின் மன்னா ! உங்களை
அண்ணா நாள்தான் எந்நாள் ? எங்களைக்
கண்ணாய் மதித்த காஞ்சியின் புதல்வரே !
முன்னாள் முதல்வரே ! முழுத்தமிழ்ப் புலவரே !
குயில்எதிர் பார்க்கும் கொழுந்து,மாங் கொழுந்து !
பயிர்எதிர் பார்ப்பதோ பக்குவ வான்மழை !
பயன்எதிர் பார்ப்பதே பலர்க்கும் பழக்கம் !
செயலால் எழுத்தால் செந்தேன் பேச்சால்
பயன்தந் தவர்நீர் ! பழமைக் கோபுது
பயம்தந் தவர்நீர் ! பழந்தமிழ்க் கோபுது
நயம்தந் தவர்நீர் ! நாள்தொறும் தொண்டின்
வயம்தந் தேஉமை வளர்த்தீர் ! உம்முன்
வேட்டைநாய் கூட மானாய் மாறும் !
ஊட்டினீர் அறிவை ; உணர்ச்சியை ! நாட்டில்
சருகுகள் மலர்களாய்ச் சரியாய் மாறின !
நிலக்கரித் துண்டென நினைத்தவர் திகைக்கப்
பழக்கத் தால்எமைப் பட்டை தீட்டினீர்;
வரலாற் றுப்புகழ் வைரங்க ளானோம் !
தரமும் திறமும் தந்தஉத் தமரே !

ஊமை நாக்குகள் உம்மால் பேசின !
தீமைநீர் இருந்த திசையை மறந்தது !
இச்சகம் மெச்சும் எழிற்சுவ ரொட்டி
அச்சகம் உம்மால் ஆதாயம் அடைந்தது !
ஒலிபெருக் கித்தொகை உம்மால் வளர்ந்தது !
வழிபெருக் கிப்புது வாழ்வுநீர் தந்தீர் !
கோட்டை தனது கொத்துச் சாவி
ஆட்சி பீடம் அனைத்தையும் தந்தது !
ஆட்சித் தேருக் கழகிய பாதைஉம்
மாட்சியால் அமைந்தது ! மதிப்பு மிகுந்த
ஆரூர் என்னும் தேரூர்க் கலைஞர்
சீருடன் உம்வழிச் செய்கிறார் பயணம் !
ஏழையர்க் கமைந்த ஏணிநீர் ! இந்த
ஞாலம் மதிக்கும் ஞானிநீர் ! பகையை
எரிக்கும் சூரியன் பெரியார் எனில்நீர்
சிரிக்கும் நிலவாய்ச் சிந்தை கவர்ந்தீர் !
படிப்பினை மதிக்கும் பாங்கினைத் தந்த
படிப்பினை நீங்கள் ! பைந்தமிழ் மக்கள்
கொடுப்பினை அவ்வள வேஎனப் பலரும்
குறிப்பிட ஓய்வுகொண் டுள்ளீர் இன்று !
மணக்கும் சந்தன மனிதரே ! உங்கள்
குணமே நமது கொள்கையை வரைந்தது !
சிந்தையில் இருந்து சிறப்பினைத் தரும்சொல் !
அந்தத் தமிழ்ச்சொல் ! "அண்ணா" எனும்சொல் !





சரித்திர மடியில் தங்கிக் கிடந்த
கருப்பிருள் போக்கிய காஞ்சி விடியலே !

அழுகையை உலர்த்திய அண்ணனே ! உனது
எழுதுகோல் துப்பிய எச்சிலே எங்கள்

தாகங் களுக்குத் தடாக மானது !
சோக நெருப்பைச் சுட்டுத் தீய்த்தது !

ஆயதோர் காலையில் ஆலய வீதியில்
நாயக னே!உன் நாத்திகம் கேட்கத்

தெய்வங் களெல்லாம் தேர்களில் வந்தன !
பொய்தான் தாமெனப் புலம்பிப் போயின!

அரிதாய்க் கிடைத்த அமுத சுரபியே!
பெரிய சாவினைப் பிச்சை கொண்டதே!

கடற்கரை மணலில் கண்ணை மூச்சி
நடத்து கிறாயே ! நாங்கள் உன்னை

எப்படித் தொடுவது? எப்படி ? நீதான்
உப்பு மணலுள் ஒளிந்துகொண் டாயே !

அணையா விளக்கின் அடிவெளிச் சத்தில்
இணையிலாக் காவியம் எழுதுகி றாயா ?

முத்தமி ழில்நீ முழக்கிய மொழிகளை
முத்துக் கடலலை மொழிபெயர்க் கின்றதா ?

தூயவன் மேனியைச் சுமந்தகல் லறையே !
நாயகன் பூமியே ! நான்கடி இமயமே !

அன்னைத் தமிழின் 'அ'கரம் போனபின்
என்ன கவிதைநான் எழுதப் போகிறேன் ?

ஏழு வண்ணம் இருந்தும் வானவில்
வாழு வதற்கு வானமே இல்லையே !

குறைந்து விடாமல் கோலம் இருக்க
வரைந்து வைத்த வாசலைக் காணோம் !

கல்லறை வாசலே ! கதவுகள் திறநீ !
பல்லவன் மேனியைப் பார்க்கப் போகிறேன் !

ஒருமுறை அன்னவன் உருவம் பார்த்தபின்
குருட னாகவும் கோடிச் சம்மதம் !

கண்டதும் அண்ணனின் காலடிப் பூவில்
என்னையே மாலையாய் இடப்போ கின்றேன் !

# நான்கடி இமயம்

—: கவிஞர் இரா. வைரமுத்து :—



# தோல்வி இல்லை!



குறைகண்டார் புகழுக்கே;
காணாத புகழ்கண்டார்!
தரைகண்டார்; தன்பேச்சைக்
கேட்பதற்கே நாளும் மக்கள்
அரைமனிதர் கால்மனிதர்
தாவக் கண்டார்!
எல்லாரும் தன்மக்கள்
நிறையக் கண்டார்!
நரைகண்டார் எனினும், செந்
தமிழுக்கோர் நரைகண்டால்
நடுக்கம் கொண்டார்.

பெரியாரைத் துணைக்கொண்டார்;
பெரியாரின் பின்நடந்தார்
தலைநி மிர்ந்தார்!
பெரியாரை என்றென்றும்
பெரியாராய்ப் போற்றியவர்
தலைவ ரானார்!
பெரியோரை அண்ணாவும்
பின்பற்றி அடக்கத்தால்
பெரியா ரானார்!
பெரியோர்கள் எல்லோரும்
பின்பற்றும் படிஎன்றும்
பிரியா ரானார்!

அவரைப்போல் யார்வளர்ந்தார்?
அவரைப் போல
அவரைப்போல் யார்வளர்த்தார்?
எவரைப்போய்க் காண்பதுநாம்-
என்னுமோர் கேள்விக்கே
இடம்த ராமல்
அவரைப்போல் சிலரையிங்கு
ஆக்கிவைத்த தலைவருண்டேல்
அவர்தான் என்போம்!
அவரைப்போல் தலைவரில்லை;
அவரைப்போல் தமையனில்லை!
அவரோ இல்லை!

அவர்பேச்சைப் பின்பற்றி
அவரைப்போல் பேசிவந்தால்
குழப்ப மில்லை!
அவர்எழுத்தைப் பின்பற்றி
அவரைப்போல் எழுதிவந்தால்
குற்றம் இல்லை!
அவர்வளர்ச்சி பின்பற்றி
அவரைப்போல் வளர்ந்துவந்தால்
வீழ்ச்சி இல்லை!
அவர்வழியைப் பின்பற்றி
அவரைப்போல் நாம்நடந்தால்
தோல்வி இல்லை!

—: புலவர் இளஞ்செழியன் :—



# இன்ப நாள்!

புலவர் தமிழ்ப்பித்தன்







அன்புநெறி வளர்த்துவந்த காந்தி என்னும்
அண்ணலினைப் பெற்றதனால் எந்த நாளும்
திண்ணமுறும் போர்பந்தர் என்னும் ஊரே!
திருவருட்பா நமக்களித்த வள்ளல் தம்மால்
வண்ணமுறும் வடலூரே! நாட்டைக் காக்க
வரிந்தெழுந்த பாரதியைப் பெற்ற தாலே
நண்ணுபுகழ் மிகஎய்தி விளங்கி நிற்கும்
நல்லூராம் எட்டைய புரமே; அன்பால்

இராமனுக்குக் கீர்த்தனைகள் பாடித் தந்த
இனியகவி அருணாசலர் பிறந்த தாலே
அருப்புகழ்தான் சீர்காழி பெற்றி ருக்கும்;
அன்றுடம் புதுமையொடு புரட்சி எண்ணம்
பராவிவரும் தேன்கவிதை வடித்துத் தந்த
பாவேந்தர் பிறந்ததனால் புதுவை வெல்லும்!
வராதுவந்த மாமணியாம் அண்ணா என்னும்
வைரத்தைப் பெற்றதனால் 'காஞ்சி' ஓங்கும்!

பல்லவரின் தலைநகரில் பிறந்தார், தூய
பால்போலும் மனம்படைத்த அண்ணா; யார்க்கும்
நல்லவராய் வாழ்ந்திருந்தார்; அவரை எண்ணின்
நம்நெஞ்சில் மகிழ்ச்சிஅலை நாளும் துள்ளும்!
உள்ளத்தால் பொய்யாமல் ஒழுகி நின்றே
உலகத்தார் உள்ளத்தில் இடமே பெற்ற
வள்ளலவர்; அள்ளுசுவைத் தமிழ்த்தேன் தந்த
வாய்மைமிகு பேரறிஞர்! வீரச் செம்மல்!

அன்னைமொழி உரிமைபெற உழைத்தார்; இந்த
அகிலத்தில் தமிழ்ப்பண்பை உயிராய்க் காத்தார்!
சென்னைமா நிலத்துக்குத் தமிழ்நா டென்ற
திருப்பெயரைச் சூட்டிட்டார்; மகிழ்ச்சி தந்தார்;
கண்ணியமாய்க் கடமைகளைக் கற்றுத் தந்தார்;
கட்டுபபா டென்பதனை உரமாய்த் தந்தார்;
எண்ணரிய நன்மைமழை பொழியச் செய்த
எந்தலவர் பிறந்தநாளே இன்ப நாளாம்!

அ றி வி ப் பு

# பல்லவன் போக்குவரத்துக் கழகம்

## சென்னை — 600002.

பேருந்துகளின் படிகளில் பயணம் செய்தல் மற்றும் பக்கவாட்டில் தொங்கிக் கொண்டு பயணம் செய்தல் சட்ட விரோதச் செயல்களுமல்லாமலும் ஆபத்திற்குரியது ஆகும். 10-9-1975 முதல், பயணிகள் பேருந்துகளின் படிகளில் அல்லது பேருந்துகளின் பக்க வாட்டில் பற்றிக் கொண்டும் பயணம் செய்வது கண்டுபிடிக்கப்பட்டால், அந்த பயணியை (ஆண்/பெண்) இக்கழகத்தின் பரிசோதகர்கள் காவல் துறையினரிடம் ஒப்படைப்பார்கள். ஆகையால் பயணிகள் நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பை நல்கி, பேருந்துகளின் படிகளில் பயணம் செய்வதையும், பக்கவாட்டில் பற்றிக் கொண்டு பயணம் செய்வதையும் தவிர்க்குமாறு வேண்டிக் கேட்டுப் கொள்ளப்படுகிறார்கள். சில பேருந்து நிலையங்களில் தனிப் பேருந்துகளை நிறுத்தி வைத்து, நெரிசல் நேரப் போக்குவரத்தினைச் சீர் செய்ய, தக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2. இந்த உத்தரவானது பல்லவன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கும், பயணச் சீட்டு வைத்திருப்போர்களுக்கும் மற்றும் பேருந்துச் சீட்டினை உபயோகிக்கும் மாணவர்களுக்கும் பொருந்தும்.

8—9—'75 | இர. தில்லைநாயகம்,
நிர்வாக இயக்குநர்.


## சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை) எண் 151.
## சேலம்-1.

தபால் பை எண். 171

தொலைபேசி எண் : 2402

கிளைகள் : நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணாபுரம் சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, பெத்தநாய்க்கன் பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

சொந்த நிதி ரூ. 327 லட்சம்.

நடைமுறை மூலதனம் 1711 லட்சம்.

### வட்டிவிகித அட்டவணை

கால் டெபாசிட்டுகள் : ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் (முன் அறிவிப்பு இல்லாமல்) $3\frac{1}{4}$%
ரூ. 10,000/-க்கும் அதற்கு மேலும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்) $3\frac{1}{2}$%

சிசன் டெபாசிட்டுகள் : ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும்
15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும் 3%
46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும் $3\frac{1}{2}$%

பிக்செட் டெபாசிட்டுகள் : ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு :

1. 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் 6%
2. 6 மாதத்திற்கும் அதற்குமேல் 9 மாதத்திற்குள் $6\frac{1}{2}$%
3. 9 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் $7\frac{1}{2}$%
4. 12 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் $8\frac{1}{2}$%
5. 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் $9\frac{1}{2}$%
6. 61 மாதத்திற்கும் அதற்குமேலும் $10\frac{1}{2}$%

நடப்புக் கணக்கு $\frac{1}{2}$%

சேமிப்புக் கணக்கு 6%

ரூ. 5000/-க்கு மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்பு பெட்டக வசதியுண்டு. பிக்செட் டெபாசிட்டுகளின்மீது மாதாந்திர வட்டி உண்டு. ரெக்கரிங், பிராவிடெண்ட் டிபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்புகொள்க.

தி. பாலசுந்தரம், பி.ஏ.,
துணைப் பதிவாளர்,
நிர்வாக அதிகாரி.

பி. காசி, பி.எஸ்.சி., எச்.டி.வி.,
காரியதரிசி.

எஸ். ஆறுமுகம்,
தலைவர்.


# சம்பா தாளடிப் பட்டங்களில் நெல் உற்பத்தியைப் பெருக்கும் நுட்பங்கள்!



— ஆர்.எம். (சென்ற இதழ் தொடர்ச்சி

### 3-வது நுட்பம்

**போதிய அளவு விதையை மருந்துடன் கலந்து நாற்று விட வேண்டும்!**

**விதையளவில் சிக்கனமாக இருந்துவிட வேண்டாம்!**

இதற்காக அதிக அளவு விதையை விதைப்பதும் தவறாகும்!

ஒரு ஏக்கர் நடவு செய்வதற்குத் தேவையான குறைந்தபட்ச விதையளவை பின் கண்டவைகளின் அடிப்படையில் கணக்கிட வேண்டும்.

(1) 1,000 விதைகளின் (தானியம்) எடை.

(2) முளைப்புச் சதவீதம்.

(3) நடவுசெய்யும்போது பயிருக்குப் பயிர் விடும் இடைவெளி.

நடவு செய்யும்போது வரிசைக்கு வரிசை 15 சென்டிமீட்டர் (6 அங்குலம்) இடைவெளியும், வரிசையில் பயிருக்குப் பயிர் 10 சென்டிமீட்டர் (4 அங்குலம்) இடைவெளியும் விட்டு (சாதாரண நடவு நட்டால் 15 சென்டிமீட்டர் X 10 சென்டிமீட்டர் இடைவெளி), தூருக்கு அல்லது குழிக்கு 2 பயிர் வீதம் வைத்து நடுவதற்கு,—விதை 80 சத முளைப்புத் திறன் கொண்டதாக இருந்தால்—பின்கண்ட அளவு விதையளவு பரிந்துரைக்கப்படுகின்றது.

| ரகத்தின் பெயர் | தேவையான விதை (கிலோ/ஏக்கர்) |
|---|---|
| 'ஐ. ஆர். 20' | 20 |
| 'பவானி' | 20 |
| 'பொன்னி' | 20 |
| 'ஐ. ஆர். 8' | 28 |
| 'கோ. 36' | 25 |
| 'கோ. 38' | 20 |

மேற்கூறிய அளவு விதையை 12 சென்ட் பரப்பில் நாற்றுவிடுதல் வேண்டும்.

ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'அக்ரசான்' அல்லது 'செரசான்' வீதம் கலந்த பின் விதைக்க வேண்டும்.

### 4-வது நுட்பம்

**நல்ல முறையில் நாற்றங்காலைப் பராமரிக்க வேண்டும்!**

நாற்றங்காலை இருப்புக் கலப்பையால் நன்கு உழுது, சமப்படுத்தி, களைகளை அகற்றி துப்புரவாக வைத்திருக்க வேண்டும்.

நாற்றங்காலில் ஒவ்வொன்றும் ஒரு சென்ட்

பரப்பளவுள்ள மேடைப் பாத்திகள் (54 அடி X 8 அடி) அமைப்பது சிறந்தது.

ஒவ்வொரு பாத்திக்கும் (ஒரு செண்ட் பரப்பு) 400 கிராம் தழைச்சத்து, 200 கிராம் மணிச்சத்து, 200 கிராம் சாம்பல் சத்து கிடைக்கும் அளவுக்கு இரசாயன உரம் இட வேண்டும். இந்த அளவுக்குச் சத்து அளிக்க 2 கிலோ 'யூரியா', 1.25 கிலோ 'சூப்பர் பாஸ் பேட்,' 320 கிராம் 'மியூரியேட் ஆப் பொட்டாஷ்' ஆகியவைகளை இட வேண்டும். வழக்கமாக நாற்று வளர்ச்சி குறைந்து காணப்படும் இடங்களில் மணிச்சத்து அளவை இரட்டிப்பாக (பாத்திக்கு 400 கிராம் விதம்) இட வேண்டும்.

நாற்று பறிப்பதற்கு ஒரு வாரம் முன்னதாக 20 மில்லிலிட்டர் 'பாரத்தியான்' மருந்தையும், 40 கிராம் 'டைத்தேன்' மருந்தையும், 40 லிட்டர் தண்ணீரில் கலந்து, 12 செண்ட் நாற்றங்காலில் தெளிக்க வேண்டும்.

நாற்றுகளைப் பறிக்கும்பொழுது ஒடிந்து சேதமாவதைத் தடுக்க, நாற்று பறிப்பதற்கு 6 நாட்கள் முன்பாக ஒரு செண்ட் நாற்றங்காலுக்கு 3 கிலோ 'டை-அமோனியம் பாஸ் பேட்' விதம் மேலுரமாக இடுதல் சிறந்தது.

## 5-வது நுட்பம்

**குறிப்பிட்ட நாட்கள் வயதுடைய நாற்றுகளை நட வேண்டும்!**

பூச்சிகள், நோய்களால் தாக்கப்படாது திடமாக உள்ள நாற்றுகளை 4 முதல் 5 இலை நிலையில் அல்லது 20 செண்டி மீட்டர் (8 அங்குலம்) உயரம் இருக்கும்பொழுது நடவு செய்வது சிறந்தது. பறித்த நாற்றுகளை உடனுக்குடன் நட்டுவிடுவதும் சிறந்தது.

மேலே பரிந்துரைக்கப்பட்டுள்ள ரகங்களின் நாற்றுகளை 25 முதல் 35 நாட்களுக்குள் நட்டுவிடுவது சிறந்தது. 45 நாட்கள் வயதுவரை நடவு செய்யலாமெனினும் அவ்வாறு செய்வதைத் தவிர்த்தல் நலம்.

செப்டம்பர் மாதம் 3-வது வாரத்திற்குப் பிறகு நாற்று விட்டால், வயதான நாற்றுக்களை (45 நாள் வயது வரை) நடுவதே இலாபகரமாக இருக்கும். பொன்னி ரகத்தை 50-வது நாளில் கூட நடவு செய்யலாம்!

குட்டையான ரகங்களின் நாற்றுக்கு அதிக அளவில் தூர் கிளைக்கும் திறன் உள்ளதால், காலந்தாழ்த்தி நடுவதால் (late planting) ஏற்படும் வளர்ச்சித் தடையை மீறி, அவ்வகை நாற்றுகள் நன்கு வளர்ந்து பயன் தரும். எனவே, பின்பட்ட நடவுக்கு குட்டையான ரகங்களின் நாற்றுக்களைப் பயன்படுத்துவதே சிறந்தது.

## 6-வது நுட்பம்

**நாற்றுகளை மேலோட்டமாகவும், நெருக்கமாகவும் நட வேண்டும்!**

நடவு வயலை, நடுவதற்கு 15 நாட்கள் முன்பாகவே போதிய அளவில் உழுது சேருக்க வேண்டும்.

நடவு வயலுக்கு ஏக்கருக்கு 10 வண்டி தொழுஎரு அல்லது கலவை எரு அல்லது 5 வண்டி தழைஎரு விதம், நடுவதற்கு 10 முதல் 15 நாள் முன்பாக இடவேண்டும்.

நடுவதற்கு முன்பு நடவுவயலைச்சமப்படுத்த வேண்டும். சமப்படுத்துவதற்கு ஆகும்






செலவை, அதன் மூலம் கிடைக்கும் அதிக மகசூலிலிருந்து ஈடு கட்டிவிடலாம்.

நாற்றுக்களை 3 செண்டி மீட்டர் (1.2 அங்குலம்) ஆழத்தில் மேலோட்டமாக நடவு செய்வதே சிறந்தது.

குறுகிய கால வயதுடைய உயர் விளைச்சல் ரக நாற்றுகளின் அடியில் உள்ள கணுக்களிலேயே தூர் கிளைக்கும் முளைகள் நிறைந்துள்ளன. ஆகவே, நாற்றுகளை ஆழமாக நட்டால், தூர் விடக்கூடிய முளைகள் சேற்றில் அமிழ்ந்துவிடும். அதனால் தூர் கிளைப்புக் குறைந்து, மகசூலும் குறைந்துவிடும். எனவே, ஆழமாக நடுவதைத் தவிர்க்க வேண்டும்.

ஒவ்வொரு குழிக்கும் அல்லது தூருக்கும் 2 முதல் 3 நாற்றுகளை மட்டுமே வைத்து நட வேண்டும்.

நெருக்கமாக நடுவது ஓரளவுக்கு மகசூலைப் பெருக்க உதவுகிறது. சாதாரண முறையில் பயிர் செய்யும்போது, நாற்றுகளை 15 செண்டி மீட்டர் X 10 செண்டி மீட்டர் (6 அங்குலம் X 4 அங்குலம்) இடைவெளி விட்டு ஒரு சதுர மீட்டருக்கு 66 தூர்கள் விதம் நட வேண்டும். சிறந்த முறையில் பயிர் செய்யும்போது 20 செண்டி மீட்டர் X 10 செண்டி மீட்டர் (8 அங்குலம் X 4 அங்குலம்) இடைவெளியில் ஒரு சதுர மீட்டருக்கு 50 தூர்கள் விதம் நடவு செய்யலாம்.

நடவு வயலில் 15 அடி தூர இடைவெளியில் 1 அடி அகல நடைபாதை விடுவது இன்றியமையாதது. இவ்வாறு செய்வதால் மேலுரமிடவும், மருந்து தெளிக்கவும் எளிதாக இருக்கும்.

பயிர் வேர்பிடிக்காமல் கரைந்து காலியாகக் காணப்படும் இடங்களில், 10 நாட்களுக்குள் மீண்டும் நடவு செய்து காலி இடத்தை நிரப்ப வேண்டும்.

நாற்றை மேலோட்டமாக நடவு செய்த பின், நடவு வயலில் அதிக தண்ணீர் இருக்கக் கூடாது. அவ்வாறு இருந்தால் பயிர் அழுகிவிடும். நடவு செய்த பின் 1 செண்டி மீட்டர் உயரத்திற்கு இலேசாகத் தண்ணீர் நிற்கச் செய்வதே சிறந்தது. இவ்வாறு இலேசாகத் தண்ணீர் நிற்கச் செய்வதால் விரைவாக வேர் பிடித்து, பயிர்பச்சைக்கட்டும்!

## 7-வது நுட்பம்

**ஏற்ற அளவில் இரசாயன உரமிட வேண்டும்.**

உயர்விளைச்சல் ரகங்களிலிருந்து பெரும் மகசூல் பெறுவதற்குரிய நுட்பங்களில் இரசாயன உரமிடுவது மிகவும் முக்கியமானது என்பதை உழவர் பெருமக்கள் மறந்துவிடக் கூடாது. சம்பா, தாளடிப்பட்டங்களுக்குப் பரிந்துரைக்கப்பட்ட நடுத்தர, நீண்டகால ரகங்களுக்குக் குறைந்தது பின்கண்ட அளவில் இரசாயன உரமிட வேண்டும்.

| | தழைச் சத்து | மணிச் சத்து | சாம்பல் சத்து. |
|---|---|---|---|
| அடியுரம் | 20 | 20 | 20 |

மேற்கூறிய அளவில் அடியுரமிட பின்கண்டவாறு உரமிட வேண்டும். 17:17:17 'காம்ப்ளெக்ஸ்' உரம் 120 கிலோ.

அல்லது

'டை-அமோனியம் பாஸ்பேட்' 44 கிலோ + யூரியா 26 கிலோ + மியூரியேட் ஆப் பொட்டாஷ் 33 கிலோ.

அல்லது

யூரியா 44 கிலோ + சூப்பர் பாஸ்பேட் 125 கிலோ + மியூரியேட் அப் பொட்டாஷ் 33 கிலோ.

அடியுரத்தைக் கடைசி உழவுக்கு முன்பாகச் சேற்றின் மேல் இட்டு உழுதுவிட வேண்டும்.

பிறகு 'பர்மிய சட்டம்' அல்லது தழை மிதிக்கும் கருவியைப் பயன்படுத்தி நிலத்தைச் சமப்படுத்துவது சிறந்தது.

## 8-வது நுட்பம்

**மேலுரத்தைப் பிரித்துப் போட வேண்டும்!**

சம்பா, தாளடி ரகங்களுக்கு 20 கிலோ தழைச்சத்தை மேலுரமாக இட வேண்டும். இந்த அளவில் மேலுரமிட 44 கிலோ யூரியா தேவைப்படும்.

மேலுரத்தை நடவு செய்த 20-வது நாள், 30-வது நாள், 45-வது நாள், 55-வது நாள் ஆக 4 தடவைகளில் ஒவ்வொரு தடவைக்கும் 5 கிலோ தழைச்சத்து (11 கிலோ யூரியா) வீதம் பிரித்துப் போடுவதே உயர்ந்த மகசூல் பெருவதற்குரிய வழியாகும்!

மேலுரமிடுவதைப் பின்கண்டவாறு இட வேண்டும்.

| மேலுரமிட வேண்டிய நாள் | யூரியா இட வேண்டிய அளவு |
|---|---|
| 20-வது நாள் | 11 கிலோ |
| 30-வது நாள் | 11 கிலோ |
| 45-வது நாள் | 11 கிலோ |
| 55-வது நாள் | 11 கிலோ |

மேலுரமிடுவதற்கு முன்பு தண்ணீரை வடித்துவிட்டு, மேலுரமிட்டு, 24 மணி நேரத்திற்குள் மீண்டும் தண்ணீர்ப் பாய்ச்சுவது சிறந்தது.

## 9-வது நுட்பம்

**களைகளை அறவே ஒழிக்க வேண்டும்!**

''களையெடாதப் பயிர் கால்பயிர்'' என்பதால், வயலை எப்பொழுதும் களையில்லாமல் துப்புறவாக வைத்துக் கொள்வது மிகவும் இன்றியமையாததாகும்.

வயலில் 5 சென்டி மீட்டர் அளவுக்குத் தண்ணீர் நிறுத்த வேண்டும். இதனால் களைகள் ஓரளவுக்குக் கட்டுப்படுத்தப்படும்.

காலத்தில் களையெடுக்க வேண்டும். களையெடுப்பதற்குப் போதிய கூலியாட்கள் கிடைக்காத இடங்களில், களைக்கொல்லிகளைப் பயன்படுத்தி களைகளை ஒழிப்பது சிறந்தது.

நடவு செய்வதற்கு முன்பாக 1.25 லிட்டர் 'மாசேடி' திரவத்தை 1 கிலோ மணலுடன் கலந்து சேற்றின் மேல் இடுவதால் களைகளை நன்குக் கட்டுப்படுத்த முடியும்.

## 10-வது நுட்பம்

**முன்னெச்சரிக்கையாகவும், முறையாகவும் பயிர்ப் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ள வேண்டும்.**

''வந்தபின் குணப்படுத்துவதைவிட வருமுன் காப்பதே மேல்'' என்பதற்கேற்ப, பூச்சி அல்லது நோய்கள் தோன்றுவதைத் தடுக்க முன்னெச்சரிக்கையாகப் பயிர்ப்பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ள வேண்டும். பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்த பின்கண்ட முறைகளைத் தவருமல் மேற்கொள்ளுதல் மிகவும் இன்றியமையாததாரும்.



1. ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'அகரசான்' அல்லது 'செரசான்' மருந்து வீதம் கலந்து விதைக்க வேண்டும்.

2. நாற்றங்காலுக்கு (12 சென்ட் பரப்பளவுக்கு) 20 மில்லி லிட்டர் 'பாரத்தியான்' அல்லது 40 மில்லி லிட்டர் 'என்ட்ரின்' அல்லது 11 மில்லி லிட்டர் 'பாஸ்பாமிடான்' மருந்துடன் 40 கிராம் 'டைத்தேன்' மருந்தையும் கலந்து 40 லிட்டர் தண்ணீரில் நன்கு கலக்கித் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

3. நடவு செய்த 20-வது நாள், 40-வது நாள், 60-வது நாள் ஆக 3 தடவை, பின்கண்ட மருந்துகளில் ஏதேனும் ஒன்றை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கரில் தெளிக்க வேண்டும்.

'பாரத்தியான்'—200 மில்லி லிட்டர்
அல்லது
'என்ட்ரின்'—400 மில்லி லிட்டர்
அல்லது
'பாஸ்பாமிடான்'—110 மில்லி லிட்டர்
அல்லது
'ஹிலியோடாக்ஸ்'—1,000 மில்லி லிட்டர்

கடைசி தடவை மருந்து தெளிக்கும்போது மேற்கூறிய மருந்துடன், 400 கிராம் 'டைத்தேன்' மருந்தையும் கலந்துத் தெளிக்க வேண்டும்.



4. நெற்பூக்களில் பால் பிடிக்கும் தருணத்தில் ஏக்கருக்கு 5 கிலோ 'பி.எச்.சி' 10 சதத் தூளையும், 5 கிலோ 'டி.டி.டீ' 5 சதத் தூளையும் கலந்துத் தூவ வேண்டும்.

**வேண்டுகோள்**

இதுவரைக் கூறிய 10 நுட்பங்களையும் தவருமல் மேற்கொண்டால், சம்பா, தாளடிப் பட்டங்களிலும் குன்றென நெல் மகசூல் குவித்திட முடியும். எனவே, மேற்கூறிய 10 நுட்பங்களையும் மேற்கொண்டு சம்பா, தாளடிப்பட்ட நெல் மகசூலைப் பெருக்கிப்பயனடைமாறு தமிழக உழவர் பெருமக்களை வேண்டுகின்றோம். ✱

# தமிழ்நாட்டிற்கு ஏற்ற தென்னை ரகங்கள்!



உயரமான தென்னை ரகத்தையும், குட்டையான தென்னை ரகத்தையும் கரு இணைப்புச் செய்து உருவாக்கப்பட்ட ஒட்டு வீரிய தென்னை ரகமே (Tall × Dwarf hybrid) சிறந்த மகசூல் அளிக்க வல்லது என்பது வேப்பங்குளம், தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொள்ளப்பெற்ற பரிசோதனைகளிலிருந்து தெரியவருகிறது. இந்த ரகத்திற்கு அடுத்தபடியாகக் 'கிழக்குக் கடற்கரை உயரம்' ( East Coast Tall ) என்ற ரகம் உயர்ந்த அளவுத் தேங்காயையும், கொப்பரை எடையையும் கொடுக்கிறது. 'கிழக்குக் கடற்கரை உயரம்,' உயரம் × குட்டை ஒட்டுவீரியரகம் ( T × D hybrid ), குட்டை ( Dwarf ) ரகம் ஆகியவைகளின் மகசூல் திறன் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| பொருளாதாரக் குணங்கள் (1) | உயரம் × குட்டை (2) | உயரம் (3) | குட்டை (4) |
|---|---|---|---|
| பூப்பதற்கு முன்னுள்ள காலம் (மாதங்கள்) | 53 | 86 | 39 |
| ஒருமரம், ஒரு ஆண்டில் தரும் சராசரி தேங்காய்கள் | 97.6 | 74 | 56 |
| ஒரு தேங்காயின் மொத்த எடை (கிராம்) | 889 | 645 | 519 |
| ஒரு தேங்காயில் உள்ள பருப்பின் எடை (கிராம்) | 222 | 167 | 107 |
| ஒரு மரம், ஒரு ஆண்டில் தரும் தேங்காய்ப் பருப்பின் எடை(கிலோ) | 23.5 | 12.4 | 6.0 |

உயரம் × குட்டை ஒட்டு வீரிய ரகத் தென்னை மரம் ஒன்று ஒரு ஆண்டில் சராசரியாக 97.6 தேங்காய் மகசூல் அளித்து, 'கிழக்குக் கடற்கரை உயரம்' ரகத்தைவிட 31.9 சதம் அதிக மகசூல் அளித்துள்ளது. சில ஆண்டுகளில் ஒட்டு வீரிய தென்னை ரகம் 150-க்கும் அதிகமானத் தேங்காய்களைக் கொடுத்துள்ளது. ஒட்டு வீரிய தென்னை ரகம் வாடல் நோயினல் பாதிக்கப்படுவதில்லை. இலைப்புள்ளி நோயையும் ஓரளவிற்குத் தாங்கிக் கொள்கின்றன. எனவே, உயரம் × குட்டை ஒட்டுவீரிய தென்னை ரகமே தமிழ்நாட்டில் பயிரிடுவதற்கேற்ற மிகச் சிறந்த பொருளாதாரப் பயன் தரும் ரகமாகும். வாடல் நோய் தாக்கிய தென்னந் தோப்பில் திரும்பவும் நடுவதற்கும் இந்த ரகம் பரிந்துரைக்கப்படுகிறது.

தகவல்: மண்டல தென்னை ஆராய்ச்சி நிலையம்,
வேப்பங்குளம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

பிறப்பிடம்? கவலை கொள்ளார். பாலாற்றில் நீர் ஏனில்லை? சொல்லத் தெரியாது. நூல் ஆலைகள் எவ்வளவு உள்ளன? கணக்கு அறியார். தாராபுரம் எந்தத் திசையில் இருக்கிறது? தெரியாது. தாமிரபரணி எத்தனை மைல் நீளம் ஓடுகிறது? திகைப்பர் பதிலறியாமல். அவர்கள் வாழும் மாவட்டத்தின் அளவு என்ன? 'தெரியாது' என்பர். மாகாணத்தின் வருமானம் என்ன? அறியார்கள்- அறிந்து கொள்ளவும் முயலமாட்டார்கள். அனுமத் பிரபாவம் தெரியும்; அரசமரத்தைச் சுற்றினால் என்ன பயன் கிடைக்கும் என்பதைக் கூறத் தெரியும். பேய், பில்லி, சூனியம் பற்றிய கதைகளைக் கூறத் தெரியும். அவர்கள் ஏறிச் செல்லும் ரயிலைக் கண்டு பிடித்தவர் யார் என்பது தெரியாது. அதிலேறிச் செல்லும் இடத்திலே அவர்கள் தரிசிக்கப் போகும் கருணானந்த சுவாமிகளின் கால்பட்ட தண்ணீர் கர்ம நோய்களைப் போக்கும் என்ற கதை பேசத் தெரியும்.

இது நமது மக்களின் மனவளம். இவர்கள் பெரும்பாலோர். இவர்களைக் கொண்டுள்ள நம் நாடு, அழிவுச் சக்தியில் அணுகுண்டு உற்பத்தியும், ஆக்கவேலைச் சக்தியில் சந்திரமண்டலத்திற்குச் சென்று வரும் ஆராய்ச்சியும் நடத்திக் கொண்டு வரும் உலகிலே ஓர் பகுதி! சரியா? நாட்டில் எதிர்காலத்தில் அக்கறை கொண்ட யாரும், இந்த நிலை சரி என்று கூற மாட்டார்கள்; சரியல்லதான். ஆனால் என்ன செய்வது என்று கேட்பர்? வீட்டிற்கோர் புத்தகசாலை அமைக்க வேண்டும்- மக்களின் மனத்திலே உலக அறிவு புக வழி செய்ய வேண்டும். நிபுணத்துவம் தரும் ஏடுகள் கூட அல்ல-அடிப்படை உண்மைகளையாவது அறிவிக்கும் நூல்கள் சிலவாவது வேண்டும்.

வீடுகளிலே நடைபெறும் விசேஷங்களின்போது, வெளியூர்கள் சென்று திரும்பும் போது, பரிசளிப்புகள் நடத்தும் போது, புத்தகங்கள் வாங்குவது என்று ஒரு பழக்கத்தைக் கொஞ்சம் வசதியுள்ள வீட்டார் சில காலத்துக்காவது ஏற்படுத்திக் கொண்டால், சுலபத்தில் ஒரு சிறு புத்தக சாலையை அமைத்து விடலாம்.

புத்தகசாலை அமைக்கும் போது, ஏற்கெனவே நமது மக்களின் மனத்திலே ஊறிப் போய் உள்ள, அர்த்தமற்ற, அவசியமற்ற கேடே கூடச் செய்யக்கூடிய எண்ணங்களை நிலை நிறுத்தக்கூடிய ஏடுகளைச் சேர்க்கக்கூடாது. சேர்த்தால் மனவளம் ஏற்படாது. மனம் சதுப்பு நிலமாகும். பழமைப் புழுக்கள் நெளியுமிடமாகும்.

புத்தகசாலை அமைப்பது என்று திட்டமிட்டுப் புது வருஷப் பஞ்சாங்கத்தில் ஒரு மூன்று தினுசும், பழைய பஞ்சாங்கக் கட்டு ஒன்றும், பஞ் பவளக்கொடி மாலையும், பஞ்சாமிர்தச் சிந்தும், பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதையும், பேய் பேசிய புராணமும், நல்லதங்காள் புலம்பலும் அரிச்சந்திரமயமான காண்டமும் ஆகியவற்றை அடுக்கி வைத்தால் நாம் கோரும் மனவளம் ஏற்படாது. நமது நாட்டை வஞ்சகர்களுக்கு ஏற்ற வேட்டைக்காடு ஆக்கும். தீக்குச்சி சேர்ப்பது போலாகும்.

உலக அறிவை, உருப்படியான காரியத்துக்குப் பயன்படும் அறிவைத் தரக்கூடிய புத்தகங்களைச் சேகரிக்க வேண்டும். பழைய முறைகளையும் எண்ணங்களையும் மேலும் ஊட்டக்கூடிய ஏடுகளைச் சேகரித்து அதற்குப் புத்தகசாலை என்று பெயரிடுவது, குருடர்களைக் கூட்டி வைத்து, அவர்கள் உள்ள இடத்துக்கு, வழிகாட்டுவோர் வாழும் இடம் என்று பெயரிடுவது போன்ற கோமாளிக்கூத்தாக முடியும்.

ஒவ்வோர் வீட்டிலும் வசதி கிடைத்ததும், வசதி ஏற்படுத்திக் கொண்டதும், அமைக்க வேண்டிய புத்தக சாலையில், நாட்டு வரலாறு, உலக நாடுகளின் நிலையைக் குறிக்கும் நூல்கள் இவை முதலிடம் பெற வேண்டும். பொருளாதாரத்தை, மக்களின் அறிவுக்குத் தெளிவும், ஆண்மைக்கு உரமும், ஒழுக்கத்துக்கு வலிவும் தரத்தக்க நூல்கள் இருக்க வேண்டுமே யொழிய, வாழும் இடத்தை வகையற்றது என்று கூறி, விண்ணுலகுக்கு வழிகாட்டும் நூல்களும், மாயா வாதத்தை [illegible]மருட்சியையும் தரும் ஏடுகளும், தன்னம்பிக்கையைக் கெடுத்து, விதியை அதிகமாக வலியுறுத்திப் பெண்களை இழித்தும் பழித்தும் பேசிடும் நூல்களும் இருத்தலாகாது.

பஞ்சாங்கம் அல்ல, புத்தகசாலையில் இருக்க வேண்டியது; அட்லாஸ்—உலகப்படம் இருக்க வேண்டும்.

இந்த அடிப்படைப் பிரச்சினையிலே நேர்மையான முறையையும், நெஞ்சு உரத்தையும் காட்டியாகவேண்டும். அப்போதுதான் வீட்டிற்கோர் புத்தகசாலை அமைப்பது என்பது அறிவுத் தெளிவுக்கு வழி செய்யும்—மனவளத்தை உண்டாக்கும்-நாட்டை வாழவைக்கும். புலியை அழைத்துப் பூமாலை தொடுக்கச் சொல்ல முடியாது. சேற்றிலே சந்தனவாடை கிடைக்குமென்று எண்ணக் கூடாது.

நமது பூகோள அறிவு, பதினான்கு லோகத்தைக் காட்டிற்று அந்த நாட்களில். நமது மார்க்க அறிவு நரபலியைக் கூடத் தேவை என்று கூறிற்று, அந்த நாட்களில். நமது சரித்திர அறிவு, பதினாயிரம் ஆண்டு ஒரு மன்னன் ஆண்டதாகக் கூறி வைத்தது. நமது பெண் உரிமையைப் பற்றிய அறிவு, காமக்கிழத்தி வீட்டுக்கு நாயகனைக் கூடையில் வைத்துத் தூக்கிச் சென்ற பத்தினியைப் பற்றி அறிவித்தது. நமது விஞ்ஞான அறிவு, நெருப்பிலே ஆறும், அதன் மீது ரோமத்தால் பாலமும் இருப்பதாக அறிவித்தது.

அப்படிப்பட்ட எண்ணங்களுக்கு ஆதாரமாக இருந்த ஏடுகளை இந்த நாட்களிலே நாம், வீட்டிலே புத்தகசாலையில் சேர்ப்பது, நாட்டின் நலனுக்கு நிச்சயமாகக் கேடு செய்யும்.

பூகோள, சரித, ஏடுகள் இருக்க வேண்டும்-நமக்கு உண்மை உலகைக் காட்ட, நமக்கு ஒழுக்கத்தையும், வாழ்வுக்கான வழிகளையும் காட்ட, வீட்டிற்கோர் திருக்குறள் கட்டாயமாக இருக்க வேண்டும்.

நமது தமிழகத்தின் தனிச் சிறப்பு என்று கூறத்தகும் சங்க இலக்கிய சாரத்தைச் சாமான்யரும் அறிந்து வாசிக்கக் கூடிய முறையில் தீட்டப்பட்ட ஏடுகள் இருக்க வேண்டும். குறைந்தபட்சம், மக்கள் முன்னேற்றத்துக்கும் வாழ்க்கை வசதிக்கும் உதவும், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைப் பற்றிய முக்கியமான தகவலைத் தெரிவிக்கும் நூல் இருக்க வேண்டும்.

நாட்டு விடுதலைக்கு உழைத்தவர்கள், மக்களின் மனமாசு துடைத்தவர்கள், தொலை தேசங்களைக் கண்டவர்கள், வீரர்கள், விவேகிகள் ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்பு ஏடுகள் இருக்க வேண்டும்.

இந்த அடிப்படையில் 'வீட்டிற்கோர் புத்தகசாலை' அமைத்துக் கொண்டால் நாட்டுக்கு நல்ல நிலை ஏற்படும். வீட்டிற்கோர் புத்தகசாலை தேவை-ஆனால் கேட்டினை நீக்கிடத்தக்க முறைகளைத் தரும் ஏடுகள் கொண்டதாக இருக்க வேண்டும் வீட்டிலே அமைக்கும் புத்தகசாலை.

[1949-ஆம் ஆண்டில் திருச்சி வானொலியில் ஆற்றிய உரை.]



## எழுத்தாளராக முடியுமா ?

எல்லாரும் எழுத்தாளராக முடியுமா ?

எல்லாரும் எழுத்தாளராக இயலாது. கொஞ்சம் படித்து விட்டால் எழுத்தாளராகி விடலாம் என்று எவரும் எண்ண வேண்டாம் !

கடின உழைப்பு இருந்தால் மட்டும் போதாது. விடா முயற்சியின்மை, மன உறுதியின்மை, தமது வாழ்வை முறைப்படுத்திக்கொள்ள இயலாமை முதலிய காரணங்களால் திறமை மிகுந்த பலர் அழிந்து போயினர்; எனினும், எழுத்தாளனுவதற்குக் கடின உழைப்பு மட்டும் போதாது.

உழைத்துக் கொண்டேயிருக்க வேண்டும்; உழைப்புக்கு முடிவேயில்லை. ஓர் எழுத்தாளரிடமிருந்து தாளையும் பேனவையும — அவரது உழைப்புக்குத் தேவையான எல்லாவற்றையும் பிடுங்கி விட்டாலும் கூட அவர் தமது கையில் எழுதிக் கொண்டு தான் இருப்பார் ! எழுத்தாளனுக்கு ஆளுமை வேண்டும். ஆளுமை என்பது பல அம்சங்களைத் தழுவி நிற்கின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக, தனது ஆளுமையைக் காப்பதற்கு — தான் தானகவே வாழ்வதற்கு — ஓர் எழுத்தாளனுக்குத் துணிவு வேண்டும். அவன் அவனாகவே வாழ வேண்டும்; வேடம் போடக் கூடாது.

— ஒரு சோவியத் நாட்டு நாவலாசிரியர்.

## தன் குருதியே தனக்கு உதவி

பெரிய அறுவைச் சிகிச்சைகளின் போது, முக்கியமாகப் பெரும் தமனிகள், இரத்தக்குழாய்கள் ஆகியவை சம்பந்தப்பட்ட அறுவைச் சிகிச்சைகளின் போது நோயாளி பெருமளவில் இரத்தத்தை இழக்கக்கூடும். இழந்த இரத்தத்தை ஈடு செய்ய வேறு இரத்தம் செலுத்துவதுதான் வழக்கம். செலுத்தப்பட்ட புது இரத்தம் அசுத்தமாகியிருந்தாலோ நோயாளியின் இரத்தத்திற்கு ஒவ்வாததாக இருந்தாலோ சிக்கல்கள் ஏற்பட்டுவிடும். மேலும் பல மருத்துவ மனைகளில் செலுத்துவதற்குப் போதிய இரத்தம் இருப்பில் இருப்பதில்லை. இதனால் பெருமளவு இரத்தம் தேவைப்படும்போது ஆபத்தான நிலை ஏற்படும் அல்லவா? அறுவைச் சிகிச்சையின்போது வெளியேறும் இரத்தத்தைச் சேமித்துச் சுத்தப்படுத்தி நோயாளிக்கு உடனே கொடுக்கும் இயந்திரம் ஒன்றைக் கலிஃபோர்னியாவிலே இர்வின் நகரில் இருக்கும் ஆய்வுக் கூடம் ஒன்று தயாரித்துள்ளது. அந்த இயந்திரத்தில் இரத்தம் செலுத்தும் கருவி ஒன்று உள்ளது. அத்துடன் பிளாஸ்டிக்கினாலான, நீண்ட உறிஞ்சு குழாய்களும் உள்ளன. உதாரணமாக அடி வயிற்றில் குண்டடிபட்ட காயத்திற்கு அறுவைச் சிகிச்சை செய்யும் போது அடிவயிற்றுப் பள்ளத்தில் இக்குழாய்களைப் பொருத்தியதும் ஒழுகிய இரத்தத்தை உடனே உறிஞ்சி எடுக்கிறது இயந்திரம். உறிஞ்சல் காரணமாகச் செல்லும் காற்றுக் குமிழிகளைச் சுத்தப்படுத்தும் முறையினால் அகற்றிவிடுகிறார்கள். எலும்புத் துகள்கள், துணிப்பிசிறுகள், ரவைக் குண்டுகளின் பாகங்கள் ஆகியவற்றையும் வடிகட்டி நீக்கி விடுகின்றனர். பின்னர் அந்த இரத்தம், கழுத்தில் உள்ள பிடரி நரம்பு போன்ற பெரும் நரம்புகள் வழியாக, மிகக் கவனமாகக் கட்டுப்பாட்டு விகிதத்தில் இரத்த ஓட்டத்தில் சேர்க்கப்படுகிறது. விபத்தினால் நோயாளி இழந்த இரத்தத்தை ஈடு செய்ய அதிக அளவில் இரத்தம் தேவைப்படும் போது எஞ்சிய இரத்தத்தின் உறைதிறன் கடுமையாகக் குறைந்து வருகிறது. இதைச் சரி செய்ய நோயாளியின் இரத்தத்தில் உறை பிளாஸ்மாக்களைச் சேர்க்கிறார்கள். அந்தப் பிளாஸ்மாக்களில் புதிய உறைபொருள்களும் அடங்கியிருக்கும்.

# வீட்டிற்கோர் புத்தகசாலை

## பேரறிஞர் அண்ணா



உலகிலே எங்கேனும் ஓரி
த்திலே ஏதோ ஒரு காரணத்
தால் நேரிடும் ஏதோ ஓர் சம்
வம், உலகின் மற்றப் பாகங்
ளைப் பாதிக்கும் நாட்களில்
ாம் வாழ்கிறோம். பாலஸ்
னத்தில் போர்; அதுபற்றிய
ாதப் பிரதிவாதம் பாளையங்
காட்டையில். இத்தாலியில்
லக்ஷன் என்றால், இங்கு
ந்தக் கட்சி அங்கு வெற்றி
பற வேண்டும் என்பதுபற்றி
வாதம். உலகத் தொடர்பு
திகரித்துவிட்ட, வளர்ந்து
காண்டே போகும் நாட்
ளிலே நாம் வாழ்கிறோம்.
ாழ்கிறோம் என்றால், நமது
ாழ்வையும் நாட்டின் வாழ்
வையும் வளமாக்கும் பெரும்
பாறுப்பை ஆயிரம் மைலுக்
ப்பாலிருந்து வந்தவர்களி
ம் ஒப்படைத்து விட்டல்ல.
ார் சிரத்திலே மணிமுடி
ஜாலிக்கிறது; எவர் கரத்
லே உடைவாள் மின்னுகிறது
ன்று பார்த்து, ஆட்சிப்
பாறுப்பை அப்படிப்பட்ட
ர்களிடம் ஒப்படைத்துவிட்டு
ல்ல, ஆட்சிப் பொறுப்பை
க்கள் ஏற்றுக்கொண்டு நாட்
ன் நாயகர் நாங்கள் என்று
ார்தட்டிக் கூறிக்கொண்
ள்ள நிலை இருக்கிறது. உல
க்கு இது நன்கு தெரியும்.
லகின் கவனம் நமது நாட்
ன் பக்கம் நன்றாகத் திரும்பும்
டியான முறையிலும் அளவி
ம் நாம் நமது நாட்டின்
ப்புப்பற்றியும், நமது ஆற்
லைப்பற்றியும் பாட்டு மொழி
லே பேசிவிட்டோம் - சற்று
திகமாகவேகூட. ''என்
டு பொன்னாடு, ஏது இதற்
ார் ஈடு'' என்று திருப்புகழ்
டினோம். இங்கு வானை

முட்டும் மலைகள், வற்றாத ஆறுகள், வளமான வயல்கள், கனி குலுங்கும் சோலைகள் ஏராளம்; முத்து உண்டு எமது கடலில்; தங்கம் உண்டு எமது பூமியில் என்று ஆனந்தக் களிப்புச் சிந்து பாடியிருக்கிறோம். எல்லாம் சரி; உமது நாட்டுக் கல்வி நிலையைக் கூறு என்று கேட்டால், நாம் வெட்கித் தலைகுனியும் நிலையில் இருக்கிறது. வேத வேதாந்திகள், சித்தாந்த, சிரோமணிகள், திரு அருளைப் பெற்றவர்கள் எமது நாட்டிலே உண்டு என்று பேசலாம்; பேசுகிறோம். இன்னும் சிலர் பேசிக்கொண்டே இருக்கத்தான் செய்கின்றனர். ஆனால் கண்ணனுக்குக் கையெழுத்துப் போடத் தெரியுமா என்றால், தலையை ஆட்டுகிறான்; முத்தனோ மறந்துவிட்டது என்று கூறுகிறான். முனியன் கையெழுத்திடுகிறான். ஆனால் முன்னெழுத்தும் கடையெழுத்தும் சரியாக இருக்கிறது. இடையில் உள்ள எழுத்துக்களோ சம்பந்தமற்றவையாக உள்ளன. இந்நிலை இருக்கிறது நாட்டு மக்களிலே மிகப் பெரும் பாலானவர்களுக்கு. கூரிய வாள், பலமான கேடயம், அஞ்சா நெஞ்சு; ஆனால் அந்த வீரனின் விழி பழுது. இந்நிலை நாட்டுக்குச் சிறப்பு அளிக்காது. நாட்டு நிலை உலக நிலைக்கு ஏற்ப வளர்ந்ததாக வேண்டும். இதற்கு வீட்டு நிலை மாற வேண்டும்- 'வீட்டிற்கோர் புத்தகசாலை' என்ற இலட்சியம், நாட்டுக்கோர் நல்ல நிலை ஏற்படச் செய்ய வேண்டும் என்ற திட்டத்துக்கு அடிப்படை. மலைகண்டு, நதிகண்டு, மாநிதிகண்டு அல்ல, ஒரு நாட்டை உலகம் மதிப்பது; அந்த நாட்டு மக்களின் மனவளத்தைக் கண்டே மாநிலம் மதிக்கும். மன வளம் வேண்டும்- மிக மிக விரைவில் மிக மிக அதிகமாக. எழுத்தறிவற்றவர் ஏராளம் இந் நாட்டில். இது பெருங்கேடு. கல்வி பெற்றவர்கள் அனைவருக்குமாவது மனவளம் இருக்கிறதா? அவர்களின் வீடுகளாவது, நாட்டுக்குச் சிறப்பளிக்கும் நற்பண்புகள் செழிக்கும் பண்ணைகளாக, நாட்டுக்கு வலிவும் வனப்பும் தேடித்தரும் கருத்துக்கள் மலரும் சோலையாக உள்ளனவா என்றால், இல்லை என்று பெருமூச்சுடன் கூறித்தான் ஆக வேண்டும்-உள்ளதை மறைக்காதிருக்க வேண்டுமானால், நாட்டு நிலை கண்டு உலகம் மதிக்க வேண்டுமானால் இந்தச் சூழ்நிலை மாறியாக வேண்டும். வீட்டிற்கோர் புத்தகசாலை என்ற இலட்சியத்தை நடைமுறைத் திட்டமாக்கி, சற்றுச் சிரமப்பட்டால் நமது நாட்டிலே நிச்சயமாக மனவளத்தைப் பெற முடியும். நமது முன் சந்ததியார்களுக்கு இருந்ததை விட, அதிகமான வசதிகள் நமக்கு உள்ளன. அவர்களின் காலம், அடவியில் ஆற்றோரத்தில், பர்ணசாலைக்குப் பக்கத்தில், ஆலமரத்தடியில் சிறுவர்கள் அமர்ந்திருக்க குரு, காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வந்து, பாடங்களைச் சொல்லித்தரும் முறை இருந்த காலம்; ஏடும் எழுத்தாணியும் இருந்த காலம்; இப்போதுள்ளது, உலகை நமது வீட்டுக்கு அழைத்து



வந்து காட்டக் கூடிய காலம்-பாமர மக்கள் பாராளும் காலம். மனவளத்தை அதிகப்படுத்த மார்க்கம், முன்பு இருந்ததைவிட அதிகம் உள்ள காலம். இதோ நான் பேசுகிறேன்-நீங்கள் கேட்கிறீர்கள். இடையே பலப்பல மைல்கள்-நானோ நீங்களோ, தவசிகளல்லர்-அருளால் அல்ல இந்த ஒலி அங்குக்கேட்பது-அறிவின் துணைகொண்டு, விஞ்ஞானி ஆக்கித்தந்த சாதனம் நமக்குக் கிடைத்திருக்கிறது. இவ்விதச் சாதனங்கள் இல்லாதிருந்த நாட்கள், நமது முன்னோர்கள் காலம்.

இவ்வளவு வசதிகள் நமக்கிருந்தும், ஏன், மன வளம் இவ்வளவு குறைவாக இருக்கிறது? வீடுகளிலே, மன வளத்தை அதிகரிக்கவோ, பாதுகாக்கவோ, நாம் முயற்சி செய்வதில்லை-வழிவகை தேடிக் கொள்வதில்லை.

பெரும்பாலான வீடுகளின் அமைப்பையே பாருங்கள். கூடம் இருக்கும்; விசேஷ காரியங்களுக்கும் பயன்படக் கூடத்து அறை இரண்டிருக்கும். அதிலொன்று பூட்டியே இருக்கும். சாவி வீட்டின் அதிபரிடமிருக்கும். மற்றோர் அறையிலோ, தொட்டிலோ, ஏணையோ இருக்கும். அங்குத் தூங்கும் குழந்தையை வேறொரு குழந்தை தொல்லைப் படுத்தும்; அதைவிடப் பெரிய குழந்தை, இதனைச் சமையலறையிலுள்ள தன் தாயிடம் சென்று கூறும். 'பூஜை அறையில் அப்பா இருப்பார்; போய்ச் சொல்' என்று தாய் கூறுவாள். அவர் அங்கு இருக்கமாட்டார். மாட்டுத் தொழுவத்துக்குப் பக்கத்திலுள்ள திண்ணையில் படுத்துக் கொண்டிருப்பார். நம் வீடு ஏறக்குறைய இது போலிருக்கும். கூடம்—பாதுகாப்பான அறை—படுக்கை அறை-சமையலறை பூஜை அறை-இவை எல்லாம் இருக்கும்-புத்தகம் உள்ள இடம், படிப்பதற்கென்று ஓர் அறை-தேடிப்பாருங்கள் மிகக் கஷ்டம். பல வீடுகளிலே, தூண்களின் மீது சாளரங்களின் இடுக்கில், பிள்ளையார் மாடத்தில் சில புத்தகங்கள் இருக்கும். ஆனால், புத்தகசாலை உண்டா? என்று கேளுங்கள்-பதில் கூற மாட்டார்கள்; ஒரு புன்னகை தோன்றும். 'பைத்தியக்காரா! இது வீடு. நீ என்ன இங்கு வந்து, புத்தக சாலை கேட்



கிறாயே!' என்று பொருள் அந்தப் புன்னகைக்கு!

வீடுகளில் மேஜை, நாற்காலி, சோபாக்கள் இருக்கும்; பீரோக்கள் இருக்கும்; அவைகளில் வெள்ளிப் பாத்திர தாம்பாளமும், விதவிதமான வட்டில்களும், பன்னீர்ச் செம்பும் இருக்கும்; பித்தளைப் பாத்திரங்கள் இருக்கும்; உடைகள் சிறுகடை அளவுக்கு இருக்கும். மருந்து வகைகள் சிறு வைத்திய சாலை அளவுக்கு இருக்கும். அப்படிப்பட்ட வசதியுள்ள வீடுகளிலேயுங் கூட, புத்தகசாலை இராது; இருக்க வேண்டுமென்று எண்ணம் வருவதே இல்லை! அவசியமும் தோன்றுவது இல்லை.

## அட்டை சொல்லும் செய்தி

'இந்தச் செப்புக்குடம் சீரங்கத்தில் வாங்கியது. தேவா கலியாணத்தின்போது திருப்பதியில் வாங்கினோம். இந்தத் 'தாம்பாளத்தைப் பெல்லாரிக்குச் சென்றோமே பெண் பார்க்க, அப்போது வாங்கினோம். இந்த இரத்தின ஜமக்காளத்தைக் கார்த்திகை தீபத்தின்போது திருவண்ணாமலையில் வாங்கினோம். சிதம்பரத்திலே ஆருத்திரா தரிசனத்தின்போது இதை வாங்கினோம்'' என்று நமது வீடுகளில் பல சாமான்களைக் காட்டுவர். சாமான் ஒவ்வொன்றுக்கும் ஒரு சரித்திரமே கூறுவார்கள். ஆனால் பத்து நல்ல புத்தகங்களைக் காட்டி இன்ன சந்தர்ப்பத்தில் இவைகளை வாங்கினோம் என்று கூற மாட்டார்கள்.

வீட்டில் அலங்காரத்தையும் விசேஷகால உபயோகத்திற்கான சாதனங்களையும் கவனிப்பது போல, வீட்டிற்கோர் புத்தகசாலை, சிறிய அளவிலாவது அமைக்க நிச்சயமாகக் கவனம் செலுத்த வேண்டும். அக்கறை காட்ட வேண்டும். அறிவு ஆயுதமாகிவிட்ட நாட்களிலே வாழும் நாம், இனியும் இந்தக் காரியத்தைக் கவனியாதிருப்பது, நாட்டுக்கு மறைமுகமாகச் செய்யும் துரோகச் செயலாகும்.

வீட்டிற்கோர் புத்தகசாலை நிச்சயம் வேண்டும்-வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம், அலங்காரப் பொருள்களுக்கும், போக போக்கியப் பொருள்களுக்கும் தரப்படும் நிலைமாறி புத்தகசாலைக்கு அந்த இடம் தரப்பட வேண்டும். உணவு, உடை, அடிப்படைத் தேவை. அந்தத் தேவையைப் பூர்த்தி செய்தானதும், முதல் இடம், புத்தகசாலைக்குத் தரப் பட வேண்டும்.

எவ்வளவு செலவு? ஏது அவ்வளவு பணம்? என்று கேட்பர். பலருக்குத் தேவையான அளவு புத்தகம் வாங்கத்தான் முடியாது-இந்தக் குறையைப் போக்கப் பொதுப் புத்தக சாலைகளை நடத்தி, சர்க்கார், நகரசபைகள், பொதுநலக் கழகங்கள் பணிபுரிய வேண்டும். ஆனால் சில அடிப்படை அறிவுக்குத் தேவையான புத்தகங்களையாவது, வீடுகளில் சேகரித்துப் பயன்படுத்தும் முறை இருக்க வேண்டும்.

பல புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்ள மட்டுமல்ல ஏற்கெனவே நமது மக்களுக்குத் தெரிந்திருக்கிற பல விஷயங்களை மறந்துபோகச் செய்வதற்குப் பல புத்தகங்கள் தேவை. நமது மக்களுக்குக் கைலாயக்காட்சிகள், வைகுந்த மகாத்மியம், வரலட்சுமி நோன்பின் மகிமை, நாரதரின் தம்பூரு, நந்தியின் மிருதங்கம், சித்ரபுத்திரரின் குறிப்பேடு, நரகலோகம், அட்டைக் குழி, அரணைக்குழிகள், மோட்சத்தின் மோகனம், இந்திரசபையின் அலங்காரம், அங்குப் பாடி ஆடும் மேனகையின் அழகு இவையெல்லாம் தெரியும். ஆறுமுகம் தெரியும்; அவர் ஏறும் மயில் தெரியும்; அம்மை வள்ளிக்கும், அழகி தெய்வயானைக்கும் ஏசல் நடந்தது தெரியும். இவையும், இவைபோன்றவையும் ஏராளமாகத் தெரியும்.

நந்திதுர்க்கமலை எங்கே? தெரியாது என்பர். நிதி மந்திரியின் பெயர் என்ன? அறியோம் என்பார்கள். காவிரியின்

# வரலாறு திரும்ப வேண்டும்

கொல்லிமலையில் நாமனைவரும் மகிழத் தக்க விதத்தில் எழுச்சியும் ஏற்றமும் நிறைந்த இந்த விழாவை ஏற்பாடுசெய்த நண்பர்களுக்கு நான் வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்த மாவட்டத்தில் ஆட்சித்தலைவர் சுவாமிநாதன் அவர்கள் தமது வரவேற்புரையில் இந்த விழா எத்தகைய சிறப்புடையது என்பது குறித்தும், இந்த விழாவை நடத்துவதற்கு அரசும் ஏனைய நண்பர்களும் எப்படியெல்லாம் ஒத்துழைப்புத் தந்தார்கள் என்பது குறித்தும் சுட்டிக் காட்டினார்.



அரசின் கொள்கையை — இலட்சியத்தை அதிகாரிகள் புரிந்து கொண்டிருந்தால்தான் அரசு விரும்பியது நாட்டிலே நடைபெற இயலும். பாரி விழா நடைபெறுகிறது; வள்ளுவருக்கு விழா எடுக்கப்படுகிறது; பூம்புகார் விழா நடைபெறுகிறது—என்கின்ற இந்த விழா நிகழ்ச்சிகளைக் கேள்விப்படும் நேரத்தில் நம்முடைய மாவட்டத்திலும் இப்படிப்பட்ட இலக்கிய விழாக்கள் நடைபெற வேண்டாமா? என்கின்ற ஏக்கம் எழ வேண்டும். அப்படி நடைபெற வேண்டுமென்ற ஆர்வம் கரைபுரண்டு ஓடுகிற நேரத்தில் அதை நிறைவேற்றுகின்ற மனத் தெளிவும் உற்சாகமும் அக்கறையும் பிறந்திட வேண்டும். அப்படிப்பட்ட ஆசை பிறந்த காரணத்தால்தான் இந்த விழா இங்கு எடுக்கப்படுகிறது. முன்பெல்லாம் ''அரசு எவ்வழியோ குடிகள் அவ்வழி'' என்று சொல்லுவார்கள். நான் இன்றைக்கு ''அரசு எவ்வழியோ அதிகாரிகள் அவ்வழி இருந்திடல் வேண்டும்'' என்று சொல்ல விரும்புகிறேன்.

சிலம்புச் செல்வரும், குன்றக்குடி அடிகளாரும், அமைச்சர் இராசாராம் அவர்களும் எடுத்துக் காட்டியதைப் போல இன்றையத் தமிழக அரசு தமிழுக்கு —தமிழன் மாண்புக்கு —தமிழர் மரபுக்கு—வரலாற்றுக்கு—இலக்கியச் செல்வங்களுக்கு —வீரத்துக்கு — பெருமைக்கு உலகத்திலே புதிய கீர்த்தியும் பெருமையும் கிடைத்திட வேண்டும் என்கிற எண்ணத்தோடு செயல்பட்டு வருகின்ற அரசாகும். நான் மாணவனாக இருந்த காலத்தில் காவிரி கடலோடு சேருமிடத்தைக் காண நேர்ந்தது. அப்போது கடலுக்கடியில்புதைந்து கிடக்கிற கரிகால் பெருவளத்தானுடைய பூம்புகார் பட்டினமும், நாளங்காடியும், பூதச் சதுக்கமும், கொற்றப்பந்தலும், தோரண வாயிலும் இந்தக் கடலுக்கடியில்அல்லவா ஆழ்ந்து கிடக்கின்றன? இவைகளை எப்படி வெளியே கொண்டு வர முடியும்? என்கிற எண்ணச் சுழற்சிக்கு என்னுடைய இதயம் ஆட்பட்டது. அன்றைக்கு, நான், அண்ணா அவர்கள் எதிர்காலத்தில் தமிழகத்தின் அரசுக் கட்டிலில் ஏறுவார் என்றோ, அப்போது நாம் கண்ட கனவுகள் எல்லாம் நிறைவேறும் என்றோ எண்ணவில்லை.

ஆனால் அன்றிருந்த ஏக்கம் இன்று நிறைவேறுகின்றதென்றால் அதற்கான ஒத்துழைப்பை, பக்க பலத்தை இன்றைக்கும் தந்து கொண்டிருப்பவர்களில் சிலராகத்தான் இங்கே வீற்றிருக்கிற சிலம்புச் செல்வரும், அடிகளாரும் இருக்கிறார்கள்.

பூம்புகாரைத் தொடர்ந்து பாஞ்சைப் பகுதியில் கட்டபொம்மனுக்கு நினைவுக் கோட்டை எழுப்பி இருக்கிறோம். இவைகளெல்லாம் வெறும்விழாக்களோடு முடிந்து விட்டால் போதுமா? என்ற கேள்விக் குறி எழாமல் இல்லை. அப்படி எழுந்த காரணத்தால் தான் விழாக் கோலம் மாத்திரம் போதாது; அந்தப் பகுதியிலே வாழும் மக்கள் விழாவின் பயனை அனுபவிக்க வேண்டும் என்ற கொள்கைகளையும் இந்த அரசு கடைப்பிடித்து, அதற்கு அடையாளமாகப் பூம்புகாரில் வாழும் மீனவப் பெருங்குடி மக்களுக்கு 1,000 வீடுகள் — ஒவ்வொரு வீடும் 4,000 ரூபாய் செலவில் கட்டப்பட்டு—அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவேதான் பாஞ்சாலங்குறிச்சியிலே கட்டபொம்மன் வாரிசுகள் யார் என்று தேடிப் பிடித்து அவர்களுக்கு நிலங்களைப் பட்டாச் செய்து கொடுத்து ஏறத்தாழ 202 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

அதையொட்டி இன்றுவிழா நடைபெறும் நேரத்தில் பெரு முயற்சியால் இந்தக் கொல்லிமலை வாழ்மக்கள் 405 பேருக்குப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவர்களுடைய குறைபாடுகள் என்னிடம் தரப்பட்டிருக்கின்றன. அவைகளெல்லாம் கவனிக்கப் பெற்று மலையிலே வேளாண்மை நடத்திக் கொண்டிருக்கிற பல்வேறு தொழில் செய்கின்ற மக்களுக்கு வாழ்வளிக்க, ஓரி காலத்தில் இந்த மலை எப்படியெல்லாம் வளம் கொழித்து இருந்தது, இன்று வளம் கொழிக்கும் மலையாக இருந்தாலும் வாழ்விலே வளம் கொழிப்பவர்களாக மக்கள் இல்லையே என்கிற கேள்விக்கு விடை அளிக்கக் கூடிய சூழ்நிலையைத் தமிழக அரசு நிச்சயமாகச் செய்யும்.

மலையிலே வளம் இருந்தால் மட்டும் போதாது; மலையிலே இருப்பவர்கள் மனத்திலும் வளம் இருக்க வேண்டும் என்பதற்காக இங்கே இருக்கிற அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர், மக்களுடைய பிரதிநிதிகள் ஆகியோரைக் கலந்து, இந்தப் பகுதியில் வாழ்கின்ற மக்கள் என்றென்றும் மகிழ்ச்சியோடு வாழ்வதற்கான சூழ்நிலை உருவாக்கப்படும். அப்படிப்பட்ட முறையீடுகள் முறைப்படி கவனிக்கப்பட்டு உரிய நேரத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஓரியின் பெயரால் இங்கே ஓர் உயர்நிலைப் பள்ளிக்குப் பெயர் வைக்கவேண்டுமென்று இந்தப் பகுதி மக்கள் முறையிட்டிருந்தார்கள். நேற்றைய தினம் ஓரியின் பெயரை அந்தப் பள்ளிக்கு வைப்பதற்கான ஒப்புதலில் நான் கையொழுத்து இட்டுவிட்டுத்தான் இந்த விழாவுக்கு வந்துள்ளேன், என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கொல்லி மலையின் பெருமை குறித்தும், புகழைக் குறித்தும் இதனை ஆண்ட ஓரி எப்படிப்பட்டவன் என்பது குறித்தும் முன்னால் பேசியவர்கள் சொன்னார்கள். ஓரியின் பெருமை, வீரம், வள்ளல் தன்மை இவைகள் பற்றி வன்பரணர், கழைதின் யானையார் ஆகிய புறநானூற்றுப் புலவர்கள் நேரடியாகப்பாடியது மாத்திரமின்றி, ஓரியைச் சுட்டிக் காட்டி கபிலர், கல்லாடனார், தம்பாலத்தனார், பரணர், பெருஞ்சித்திரனார், நத்தத்தனார் ஆகியோர் பல்வேறு பாடல்களில் பாடியுள்ளனர்.




ஓரி வில் வித்தையிலும் கைதேர்ந்தவன். வள்ளல்தன்மையிலும் கை தேர்ந்தவன். இந்த இரண்டும் ஒன்று சேர்ந்திருந்தது தமிழகத்திற்கு ஒரு பெரும் சிறப்பு என்பதை முன்னால் பேசியவர்கள் கோடிட்டுக் காட்டினார்கள். அவனுடைய வில்லாற்றல் எவ்வளவு சிறந்தது என்பதற்கு, 'அவன் யானை மீது எய்த அம்பு, புலியை வீழ்த்தி, மானை வீழ்த்தி, பன்றியை வீழ்த்தி, உடும்பை வீழ்த்திப் பிறகு நிலத்தில் பட்டு நிலைத்தது' என்று வன்பரணர் பாடுகிறார். அதுபற்றிக் குன்றக்குடி அடிகளார் கூறுகையில், ''உயரமாக இருக்கிற யானையிலே தொடங்கி, அதற்கு அடுத்த உயரமுள்ள புலியை வீழ்த்தி—அதற்கடுத்த உயரமுள்ள மானை வீழ்த்தி — அதற்கடுத்த உயரமுள்ள பன்றியை வீழ்த்தி, பிறகு அதற்கு அடுத்த உயரமுள்ள உடும்பை வீழ்த்தியது. இதல்லவா ஆற்றல்!'' என்று குறிப்பிட்டார். அதற்கு இந்த மலைப் பாங்கான பகுதி ஓரளவு உதவி செய்திருக்கிறது.

மலையின் உச்சியிலிருந்து அவன் அம்பு எய்ததால், அந்த அம்பு மேலேயிருந்து கீழ் நோக்கிச் சென்றதால் இது நடந்திருக்க இயலும். ஆகவே தமிழ்ப் புலவனுடைய கற்பனை எப்போதும் இயற்கையோடு இணைந்த கற்பனையாக இருக்கும்; அதிலே செயற்கை இருக்காது.

கற்பனையில் இரண்டு வகை உண்டு. ஒன்று பொய்யையும் கற்பனையாக ஆக்கி, மக்களை நம்பும்படிச் செய்கிற கற்பனை. இயற்கையோடு மிகைப்படுத்திச் சொல்கிற கூத்துக்களும் உண்டு. தமிழ்ப் புலவர்கள் மிகைப்படுத்திச் சொல்வார்கள். அவன் எய்த அம்பு யானையை வீழ்த்தியது என்று மட்டும் சொல்லியிருந்தால், அதனை எல்லா வேடர்களுந்தான் செய்வார்கள், இதென்ன பெரிய காரியம்? என்று அந்தப் பாட்டையே படிக்காமல்போய் விடுவார்கள். அவனுடைய வீரத்துக்கும் பேராற்றலுக்கும் —அம்பு எய்யும் சக்திக்கும் எடுத்துக் காட்டாகத்தான் வன்பரணர் இவ்வளவு கற்பனைகளை இயற்கையோடு இணைத்துத் தன்னுடைய பாடலில் நடமாட விட்டிருக்கிறார்.

இராமாயணத்திலும் ஓர் அம்பு புறப்படுகிறது. இராமனுடைய அம்பறாத்தூணியிலிருந்து அம்பு புறப்பட்டுச் செல்கிறது. அந்த அம்பு இராவணன் மீது பாய்கிறது. பாய்ந்து இராவணனுடைய நெஞ்சத்தில் எங்கேனும் சீதையின் நினைவு இருக்கிறதா? என்று தேடிப் பார்த்துவிட்டுப் பிறகு அவனுடைய உடம்பெல்லாம் பாய்ந்து சென்று, உடலில் எங்கேயாவது சீதையைப் பற்றிய எண்ணம் இருக்கிறதா? இரத்தத் துளிகளில் இருக்கிறதா? நரம்புகளில் இருக்கிறதா? என்று குடைந்துதேடிப் பார்த்து விட்டுப் பிறகு வெளிப்பட்டு, இராவணனுடைய

இரத்தத்தால் ஏற்பட்ட அந்தக் கறையைக் கழுவிக் கடலில் சென்று மூழ்கிக், குளித்து விட்டுப், பிறகு புறப்பட்டு, இராமனுடைய அம்பறாத் தூணிக்கே வந்து சேர்ந்ததாம் அந்த அம்பு!

எந்த ஓர் அம்பும் போன இடத்தில் போய்த், தங்கிவிடும் என்பதுதான் நியதி. போன அம்பு மீண்டும் திரும்பி வந்ததாகச் சொல்லப்பட்டிருப்பது தெய்வீக மெருகு கொடுக்கப்பட்ட கற்பனை.

ஓரி எய்த அம்பு தமிழ்ப் புலவரின் கற்பனை. இந்த இரண்டு கற்பனைகளையும் விளக்கவே இதைச் சொன்னேன்.

ஓரியைக் காரி வீழ்த்தினான். கடை எழு வள்ளல்களில் ஓரியும் ஒருவன்; காரியும் ஒருவன். ஆனால் ஓரியை வீழ்த்தக் காரி பயன்படுத்தப்பட்டான். ஓரியின் குதிரை பெயர் ஓரி.

காரியின் குதிரை பெயர் காரி. காரி தகடூரில் முள்ளூர் மலைப் பகுதியில் வாழ்ந்தான். ஓரிக்கும் காரிக்கும் போர் மூண்டிடக் காரணம் இடையில் வந்த சேர மன்னன். அந்தச் சேர மன்னன் தூண்டுதலால் காரி ஓரியை வீழ்த்தினான். சேர மன்னன் தந்த கொடையாகக் கொல்லி மலையைப் பெற்றுக் கொண்டான்' என்று தமிழ் இலக்கியம் கூறுகிறது. இது தமிழர்களின் இயல்பான குணம். இன்று நேற்று அல்ல. இலக்கியக் காலத்திலிருந்தே ; கடை எழு வள்ளல்கள் காலத்திலிருந்தே தமிழர்கள் தங்களைத் தாங்களே அழித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த இயல்புதான் எதிரிக்கு இடம் தந்து தமிழர்கள் தேய்ந்து போகக் காரணமாக இருந்தது என்பதை இது எடுத்துக் காட்டுவதே அல்லாமல் வேறல்ல.

சிலம்புச் செல்வர் அவர்கள் உரிய நேரத்தில் நொந்த உள்ளத்தோடு ஒன்றை இங்கே குறிப்பிட்டார்கள்.

''நான் இந்த அரசைப் பாராட்டினாலும் சிலருக்குக் கோபம் வருகிறதே!'' என்று அவர் வருத்தப்பட்டார். காரி, ஓரி ஆகியவர்கள் கதையைப் படித்துள்ள சிலம்புச் செல்வருக்கு இதில் வியப்புத் தோன்றத் தேவையில்லை. ஒரு தமிழன், இன்னொரு தமிழன் பாராட்டப்படச் சகிக்க மாட்டான்.

இப்போது ஏற்பட்டுள்ள சங்கடம் என்னவென்றால் இந்தத் தமிழனை இந்தத் தமிழர் பாராட்டுகிறார், இன்னொரு தமிழரால் சகித்துக் கொள்ள முடியவில்லை, என்ற நிலை தமிழகத்தில் இருக்கிறது. ஆனாலும் பாராட்டுகிறார்கள். கைம்மாறு கருதி இந்த அரசு காரியங்களைச் செய்யவில்லை. காலம் அவர்களுக்கு நிச்சயம் பதில் சொல்லும் என்கிற எண்ணத்தில் இந்த அரசு கடமையைச் செய்து வருகிறது. அது வீண் போகாது என்பதைக் காட்டுவதற்காக ஆஸ்திரேலிய நாட்டில் நிகழ்ந்துள்ள ஒன்றை இங்குக் கூற விரும்புகிறேன்.

ஆஸ்திரேலிய நாட்டின் மேலவை உறுப்பினர் வில்லியம் ஆர். விதர்ஸ், இவர் இந்திய நாடு முழுவதும், ஏன், உலகத்தின் பல்வேறு நாடுகளிலும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் சுற்றுப் பயணம் செய்துவிட்டு ஆஸ்திரேலியா சென்றார். அங்கே அவரும் மிக முக்கியமான வேறுபலரும் அங்கம் வகிக்கின்ற மேலவையில், தான் சென்று வந்த நாடுகளைப் பற்றி ஒரு குறிப்பேடு தந்தார். அதனுடைய பெயர் A Brief Report on Remote Area-world study Tour 'உலகைச் சுற்றிப் பார்த்தது பற்றிய தகவல்'' என்ற வகையில் அவர் அதைத் தாக்கல் செய்திருக்கிறார்.

''சுற்றுலா நகரமான மாமல்லபுரம் என்னைக் கவர்ந்தது. அந்த நகரம் பழங்காலக் குகைகளாலும் சிற்பங்களாலும் சூழப்பட்டது. தமிழ்நாடு அரசு அங்கு ஒரு சுற்றுலா நிலையம் ஏற்படுத்தியுள்ளது. அதில் சிற்பக் கலைஞர்கள் பழங்காலச் சிற்பக் கலையில் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். அதனால் அந்த நகருக்கு வரும்சுற்றுலாப் பயணிகள் சிற்பக் கலையிலும் சிற்ப வேலைப்பாடுகளிலும் ஈடுபாடு கொள்வதைக் காண முடிகிறது. இவ்வாறு சுற்றுலாத் தொழிலும் வளர்க்கப்படுகிறது. அதே நேரத்தில் தமிழ் நாட்டின் பழங்காலக் கலை



மறைந்திடாது இருக்க வேண்டுமென்பதற்காகவும் அங்கு 'இக் கலையில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இம்முறை ஆஸ்திரேலியாவிலும், குறிப்பாக மேற்கு ஆஸ்திரேலியாவிலும் புகுத்துவதற்கு ஏற்றது என்று நான் கருதுகிறேன்'' என்று கூறி இருக்கிறார்.

அதாவது ஆஸ்திரேலியாவில், குறிப்பாக மேற்கு ஆஸ்திரேலியாவில் புகுத்தப்பட வேண்டிய முறை ஒன்று தமிழ் நாட்டில் இருப்பதைக் கண்டு அதை வழி காட்டியாகக் கொள்ளலாம் என்கிறார். சுற்றுப்பயணம் செய்ய வந்த அவரைப் போன்ற அயல் நாட்டினரெல்லாம் இதை எடுத்துக் கூறுகிறார்கள். சிலம்புச் செல்வர், அடிகளார், தமிழ்ச் சான்றோர்கள், பெரும்புலவர்கள் ஆகிய நீங்களோ, 'இந்த அரசைப் பாராட்டினால் மனம் வருந்துகிறார்களே' என்கிறீர்கள்.

வெளிநாட்டார் தமிழ் நாட்டின் சாதனைகளைப் புகழுமளவு நமது சாதனைப் பட்டியல் விரிவாக இருக்கின்றது. அரிசன வீட்டு வசதி வாரியப் பணிகள், குடி நீர் வாரியப் பணிகள் அந்த ஆஸ்திரேலியாவில் பாராட்டப்பட்டுள்ளது. தமிழ் நாட்டின் முறையைப் பிற மாநிலங்களும் பின்பற்றலாம் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இவ்விழாவில் ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நாம் இலக்கிய வளம் உடையவர்கள்; கலை வளம் உடையவர்கள்; மொழி வளத்திலும் சிறந்திருக்கிறோம். தமிழைப் படிக்கிறோம். தமிழைப் படிக்கிற ஆர்வம் நமக்கிருக்கிறது. ஆனால் தமிழில் படிக்கிற ஆர்வம் இல்லை. தமிழைப் படிப்பதற்கும் தமிழில் படிப்பதற்கும் வேறுபாடு உண்டு. தமிழைப் படிப்பதென்றால் திருக்குறளை, சிலப்பதிகாரத்தை, கலித்தொகையைப் படிப்பதாகும்.

தமிழில் படிப்பதென்றால் விண்வெளிக் கப்பல் விடுவது எப்படி, என்பதைத் தமிழில் படிப்பதாகும். உலகில் வளர்ந்துள்ள விஞ்ஞானத்தை யெல்லாம் தமிழில் கொண்டு வந்து, தமிழில் படித்து, தமிழில் சிந்தித்து, தமிழில் செயல்படுவது என்ற அந்தக் காலத்தை நாம் அடைய இந்த விழாக்களெல்லாம் விதைகளாக அமையும்.

## உயிருள்ள புத்தகம்!

கடந்த ஆண்டு மாஸ்கோவில் உள்ள கலை, இலக்கிய வெளியீட்டகத்தார், திருக்குறளை இப்போது ரஷ்ய மொழியில் 25,000 பிரதிகள் வெளியிட்டுள்ளனர்.

அண்மையில் ரஷ்ய மொழியில் வெளியிடப்பட்டுள்ள திருக்குறள், செய்யுள் நடையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதனை மொழி பெயர்த்தவர் திரு. இப்ராஹிமோவ்.

இப்பணியைச் செய்து முடிக்க இவருக்குப் பரிமேலழகர் உரையும், டாக்டர் மு. வரதராசனாரும் வழிகாட்டியாகவிருந்தனர்.

இப்புத்தகத்தின் முன்னுரையில் இம் மொழிபெயர்ப்பாளர் எழுதுகிறார்:

''திருக்குறளானது தொலை தூரத்தில் உள்ள ஒரு நாட்டின் நினைவுச் சின்னம் மட்டும் அல்ல; அது ஓர் உயிருள்ள புத்தகமும் ஆகும்; உண்மை, நன்மை, மனிதநேயம் ஆகியவற்றைப் பரப்பும் ஆற்றல் வாய்ந்த நூல், திருக்குறள் தமிழ் மொழியில் திருக்குறள் இவ்வளவு செல்வாக்குப் பெற்றிருப்பதற்குக் காரணம், அதன் உள்ளடக்கத்தின் ஆழமும், செழுமையும் மட்டுமன்று, நம்மை வியப்பில் ஆழ்த்துகின்ற, கவித்துவ சக்தி மிக்க அதன் மந்திரச் சொல்லோசையும் ஆகும். பண்டைய இந்திய மனிதாபிமான இலக்கியமான திருக்குறளின் எண்ணற்ற மொழி பெயர்ப்புகள் பல நாடுகளில் வந்துள்ளன; இது ஓர் அமர இலக்கியம் என்பதற்கு அந்த மொழி பெயர்ப்புகள் ஒரு சான்றாக அமையும்.''

வரலாற்றுப் புத்தகங்கள் ஒழுங்காக எழுதப்படவில்லை. ''தமிழ் நாட்டின் வரலாறு காவிரிக் கரையிலிருந்து எழுதப்பட வேண்டும்; கங்கைக் கரையிலிருந்து எழுதப்படுவது கூடாது'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். கங்கைக் கரையிலிருந்து எழுதப்பட்ட காரணத்தால் காவிரிக் கரையின் மேன்மை ஏதோ ஒரு மூலைக்குத் தள்ளப்பட்டு விட்டது.

காவிரிக் கரைக்கு ஒரு தனி வரலாறு உண்டு; தனிக் கலாச்சாரம் உண்டு; தனிப் பண்பாடு உண்டு; நாகரிகம் உண்டு. இந்த வரலாறு எழுதும் பொறுப்பு ஒரு தனி எழுத்தாளனிடத்தில் அல்ல நாலரைக் கோடித் தமிழ் மக்களின் கையில் இருக்கிறது.

எனவே தான் அடிகளார் அவர்கள் இங்கே குறிப்பிட்டது போல் சிறு வயது முதலே வில்லெடுத்துப் பழகவேண்டும்; அந்த வீரம் தொடரவேண்டும்.

ஜீஜிபாய் தன் மைந்தன் சிவாஜிக்கு எப்படிப்பட்ட கதைகளைச் சொல்லி வீரனாக வளர்த்தாளோ, அப்படி, தாய்ப்பாலூட்டும் போதே வீரம் வளரச் செய்ய வேண்டும். தான் பாலூட்டி வளர்த்த தன் மகன் போரில் புறமுதுகிட்டான் என்றவுடன் அவன் பாலருந்திய மார்பையே அறுத்தெறியத் துடித்தெழுந்தாள் புறநானூற்றுத் தாய். அந்த வரலாறு தமிழகத்துக்குத் திரும்ப வேண்டும்.

இதற்கேற்றாற் போலத் தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளையும் பெண்களையும் வீரர்களாக — வீராங்கனைகளாக வளர்க்க வேண்டும்.

அகமும் புறமும் தமிழனுக்குச் சொந்தம். இலக்கியப் பெருமையும் காப்பியப் பெருமையும், உடையவன் தமிழன். இதனையெல்லாம் உணர்ந்து தரணி வாழ—தமிழ்ச் சமுதாயம் வாழ—தமிழ்நாடு வாழ—தமிழ் மொழி வளர—உறுதி எடுத்துக் கொள்வோம். இதுவே இந்த விழாவின் பயனாக அமையட்டும்!

**(6—9—'75-ல் சேலம், கொல்லி மலையில் நடைபெற்ற ஓரி விழாவில் முதல்வர் கலைஞர் ஆற்றிய சிறப்புரை.)**

# தூத்துக்குடியும் கல்பாக்கமும்

எரிபொருள் நெருக்கடி உலகம் முழுவதிலும் தீவிரமாகி வரும் இந்நாளில் அணு மின் சக்தி உற்பத்தியில் கவனம் திரும்பியிருப்பதும், உலகின் மற்ற தலையாய நாடுகளைப் போலவே இந்தியாவும் அணு மின் சக்தி உற்பத்தியில் முனைந்திருப்பதும் இயல்பேயாகும். முதலில் மராட்டியத்தில் தாராபுர், அடுத்ததாக ராஜஸ்தானில் ராணா பிரதாப் சாகர் என்று இரண்டு அணு மின் நிலையங்களை அமைத்த பின் இப்போது மூன்றாவதாக, தமிழ்நாட்டில் கல்பாக்கம் அணு மின் நிலையத்தை நிறுவுவதில் மத்திய அரசு முனைந்திருக்கிறது.

கல்பாக்கம் நிலையத்தைப் பற்றிப் பேசுமுன், தூத்துக்குடியில் உருவாகி வரும் கன நீர் ஆலையைப் பற்றிச் சொல்ல வேண்டும்.

## கனநீர் ஆலைகள்

இயற்கை யுரேனியம் மூலமான அணு மின் உற்பத்திக்கு இன்றியமையாத ஒரு சாதனம் கன நீர். தோற்றம், சுவை முதலிய பல அம்சங்களில் சாதாரணத் தண்ணீர்போலவே இருக்கும் கன நீர், அணு உலையில் சமனியாகப் பயன்படுத்துவதற்கு மிகவும் பொருத்தமானது. ட்யூடிரியம் எனப்படும் நீரக ஐசோடோப் வகை ஒன்று இந்தக் கன நீரில் இருக்கிறது. நாம் பயன்படுத்தும் சாதாரணத் தண்ணீரில் கூட சுமார் எட்டாயிரத்தில் ஒரு பங்கு கன நீர் இருக்கிறது. இருவகை நீர்களுக்கும் இடையே தோற்றத்திலும் குணத்திலும் மிகச் சிறிதே வேறுபாடு இருக்கிறது என்பதாலும், இயற்கையில் கன நீர் விகிதம் மிக மிகக் குறைவு என்பதாலும், கனநீர் தயாரிப்பது கடினமான, செலவு மிக்கதொரு பணியாகும். எனினும், அணு உலையில் அணுப் பிளப்பு மூலம் விளையும் நியூட்ரான்களின் வேகத்தை நிதானப்படுத்துவதற்குக் கன நீர் நிச்சயம் தேவை. நியூட்ரானின் வேகம் குறைந்தால்தான் இயற்கை யுரேனிய அணுப் பிளப்பின் முழுப் பலனையும் காண முடியும். நமது அணு மின் சக்தி உற்பத்தித் திட்டத்தில் இயற்கை யுரேனியமே எரி பொருளாக உபயோகிக்கப்படுமாதலால், இந்தத் திட்டத்தின் நிறைவேற்றத்துக்குப் பெருமளவு கன நீர் தேவைப்படுகிறது. துவக்கத்தில் ஒரு மெகாவாட் அணு மின் சக்தி உற்பத்தித் திறனுக்கு ஒரு டன் கன நீர், வீதம் வேண்டும். இத்துடன், துவக்க அளவில் சுமார் ஐந்து சதவீதம் வரை ஒவ்வோராண்டும் ஈடு சாதனமாகச் செலுத்த வேண்டும். அணு மின் நிலையம் ஒன்று 30 ஆண்டுக் காலம் செயலாற்ற முடியும் என்றால், அதன் உற்பத்தித் திறனில் ஒவ்வொரு மெகாவாட்டுக்கும் ஒன்றரை டன் கன நீர் இந்த ஈடு சாதனமாகத் தேவைப்படும். ஆகவே அணு மின் நிலையத்தின் ஆயுட்காலம் முழுமைக்கும், இதன் ஒவ்வொரு மெகாவாட் உற்பத்தித் திறனுக்கும் மொத்தம் 2.5 டன் கன நீர் வீதம் இருப்பது அவசியம்.

இந்திய அரசின் அணு சக்தித் துறை இப்போது கன நீர் உற்பத்திக்கென நான்கு ஆலைகளை நிறுவி வருகிறது. இந்த நான்கில் தூத்துக்குடி ஆலை இரண்டாவது ஆகும். முதலாவதான பரோதா ஆலை இப்போது உற்பத்திக்கு ஆயத்தமாகிவிட்டது. தூத்துக்குடிக்குப் பிறகு கோட்டாவிலும் தால்சேரிலும் முறையே மூன்றாவது, நான்காவது ஆலைகள் உருவாகும். இந்த நான்கு ஆலைகளுமாகச் சேர்ந்து ஆண்டொன்றுக்கு 300 டன் கன நீர் தயாரிக்கத் திறன் பெற்றிருக்கும்.

## தூத்துக்குடி ஆலை

தூத்துக்குடி ஆலை ஆண்டொன்றுக்கு 71.3 டன் கன நீர் தயாரிக்கத் திறனுள்ளதாக உருவாக்கப்படுகிறது. பரோதா ஆலையில் ஏற்பட்டிருக்கும் ஃப்ரெஞ்ச் முறையே தூத்துக்குடியிலும் கடைப்பிடிக்கப்படும். இதற்குத் தேவைப்படும் சேர்க்கை வாயு தூத்துக்குடியில் அமைந்துள்ள ஸதர்ன் பெட்ரோ கெமிக்கல்ஸ் இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷனிலிருந்து (ஸ்பிக்) கிடைக்குமாறு, ஸ்பிக் ஆலையுடன் இந்தக் கன நீர் ஆலை இணைப்பு வைத்துக் கொள்ளும். ஸ்பிக் அமோனியா ஆலையிலிருந்து வரும் சேர்க்கை வாயுவைப் பயன்படுத்தி அதிலிருந்து கன ஹைட்ரஜனை எக்ஸ்சேஞ்ச் கோபுரத்தில் பிரித்தெடுப்பார்கள். பிரித்தெடுத்த கன ஹைட்ரஜன் அமோனியா திரவத்துக்கு மாற்றப்படுகிறது. அந்தத் திரவத்தைக் காற்றில் எரிப்பதன் மூலம் கன நீர் கிடைக்கிறது. (இதையடுத்து, சேர்க்கை வாயு ஸ்பிக் ஆலைக்கே திருப்பியனுப்பப்பட்டு அங்கே அமோனியா உற்பத்திக்குப் பயனாகிறது.) இதுதான் கன நீர் தயாரிப்பதற்கான ஃப்ரெஞ்ச் முறை.

தூத்துக்குடி கன நீர் ஆலை அடுத்த ஆண்டு அமைத்து முடிக்கப்படும். அடுத்த ஆண்டே உற்பத்தியும் துவங்கிவிடும். இந்த ஆலையை நிறுவுவதிலுள்ள கடினமான கட்டங்களைப் புரிந்து கொள்வதற்கு ஓர் உதாரணம்: இங்குள்ள எக்ஸ்சேஞ்ச் கோபுரம் 375 டன் எடையும் 42 மீட்டர் நீளமும் கொண்டது. கோபுரத்தின் குறுக்களவு 2.45 மீட்டர். ஒரே அமைப்பாக இணைக்கப்பட்டுள்ள இந்தக் கோபுரத்தைத் தூத்துக்குடிக்கு கொண்டு வருவதும், ஆலைப்பகுதிக்கு எடுத்து வருவதும் பெரும் பிரச்சினைகளாகிவிட்டன. ஃப்ரான்சில் தயாரான இந்தக் கோபுரத்தை மேற்கு ஜெர்மன் கப்பலொன்றில் தூத்துக்குடிக்குக்கொண்டு வந்தார்கள். தூத்துக்குடியின் புதிய துறைமுகம் இந்தக் கப்பலை ஏற்றுக் கோபுரத்தை நேரடியாக வாங்கிக் கொள்ளும் ஆயத்தமாகவில்லையாதலால், துறைமுகத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் கப்பலை நிறுத்தி, இதற்கெனத் தயாரிக்கப்பட்டிருந்த ஒன்றில் கோபுரத்தைக் கப்பலிலிருந்து மாற்றினார்கள். அலைவேகத்துடன் இந்த மிதப்பு நகர்ந்து வந்து கடற்கரையில் தனியாக அமைக்கப்பட்டிருந்த முகப்பு ஒன்றில் கோபுரத்தை இறக்கியது. அப்படி இறக்குவதற்கு 'விஞ்ச்' போட்டு இழுக்க வேண்டியதாயிற்று. பிறகு கோபுரத்தை இரண்டு ட்ரெய்லர்கள் பொருத்திய வண்டியில் வைத்து, 12 கிலோ மீட்டர் தூரத்தைக் கடந்து ஆலைப்பகுதிக்குக் கொணர்ந்து சேர்த்தார்கள். முன்கூட்டி விரிவாகத் திட்டமிட்டு இந்தப் பணியை நிறைவேற்ற வேண்டியதாயிற்று. கரையில் இறக்கிய பிறகும், சாலை முதலிய வசதிகள் எவ்வாறிருக்கின்றன என்பதை ஆராய்ந்தறிந்துதான் கோபுரத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக நகர்த்திச் செல்ல முடிந்தது. வெளியார் உதவியின்றி நாமே இந்தப் பணியைச் செய்து முடித்தோம் என்பது பெருமைக்குரியது.

பரோதாவிலும் இப்படி ஒரு பிரச்சினை தோன்றியது. அங்கே எக்ஸ்சேஞ்ச் கோபுரம் 530 டன் எடையும் 53 மீட்டர் நீளமும் கொண்டது. கோபுரத்தின் குறுக்களவு 2.75 மீட்டர். ஒற்றை அமைப்பான இதைக் கப்பலில் வைத்து பாவ்நகர் துறைமுகத்தின் வெளிப்புறம் வரை கொண்டு வந்தார்கள். அங்கிருந்து கோபுரத்தை ஒரு மிதப்பில் வைத்து, பரோதா ஆலை இலக்கிலிருந்து 40 கிலோ மீட்டரிலுள்ள முஜ்பூர் என்னுமிடத்திற்குக் கொண்டு சேர்த்தார்கள். அங்கேயும் கடற்கரை முகப்பு ஒன்று அமைத்து அதில் கோபுரத்தை ஏற்றுச் சாலைகள் வழியே இரண்டு க்ராலர் வண்டிகளில் ஆலை இலக்குக்கு எடுத்துச் சென்றார்கள். க்ராலர்களையும் சேர்த்து மொத்தம் 700 டன் எடையுள்ள ஓர் அமைப்பு, பல்வேறு அளவுகளிலான 50 பாலங்களையும் 3 ரயில்வே லெவல்கிராஸிங்குகளையும் கடந்து மொத்தம் 40 கிலோ மீட்டர் தூரத்துக்குப் பயணம் செய்து, பரோதா போன்ற ஒரு பெரிய ஊர் வழியே ஆலை இலக்குக்கு வந்து சேர்வதற்கு 10 நாட்கள் இரவு பகலாக நகர வேண்டியிருந்தது.

தூத்துக்குடி எக்ஸ்சேஞ்ச் கோபுரத்தை ஆலை இலக்கில் நிறுவுவதும் எளிதான பணியாய் இருக்கவில்லை. ஒரு மட்டான பகுதிக்குள் இதை நிறுத்த வேண்டியிருந்தது என்பதால் இந்த வேலை அதிகக் கடினமாயிற்று. பொறியாளர்களும் நுட்ப நிபுணர்களுமாக 15 பேர் அடங்கிய குழுவினர் மூன்று வார காலம் விரிவாகத் திட்டமிட்டு இந்தப் பணியை எளிதாகத் தோன்றுமாறு செய்து முடித்தார்கள்.

> மலர்கொண்டு மாலை தொடுத்தலிலே கைத்திறன் இருக்கத்தான் செய்கிறது; ஆனால் கைத்திறன் முழுவதும் காட்டிக் காகிதப் பூ மாலை தொடுத்தால், பயன் என்ன? மாலைக்கு முதற்பொருள் மணமுள்ள மலர். அதுபோலப் பேச்சுக்கு முதற்பொருள் சுவையும் பயனும் உள்ள கருத்துக்கள்.
>
> — அண்ணா

கோபுரத்தை நிறுவும் வேலை தடங்கலேதுமின்றி ஜூலை மாதம் 18-ஆம் நாள் இரண்டரை மணி நேரத்தில் நடந்தேறியது குறிப்பிடத்தக்கது.

தூத்துக்குடி கன நீர் ஆலையின் அமைப்பில் இது ஒரு முக்கியமான கட்டம். இதைத் தாண்டியாகிவிட்டால் மீதமுள்ள வேலைகள் விரைவில் முடிவடைந்துவிடும். ஆயினும் குழாய்கள் அமைக்கும் வேலையும், இந்தச் சிக்கலான ஆலையைப் பரிசோதித்துப் பார்க்கும் வேலையும் நடந்தேறச் சிறிது காலம் பிடிக்கலாம். எப்படியிருந்தாலும் தூத்துக்குடி ஆலை 1976-ல் இயங்க ஆரம்பித்துவிடும். இதையடுத்து கோட்டா, தால்சேர் ஆலைகள் 1977-ல் முடிவடையும்.

தூத்துக்குடி ஆலையை நிறுவும் வேலை 1972 ஆகஸ்ட் மாதம் துவங்கியது. திட்டமிட்டதற்கு ஓராண்டு தாமதமாகவே அது பூர்த்தியாகவிருக்கிறது; ஏனென்றால் நடுவில் ரெயில்வே ஊழியர் வேலை நிறுத்தமும், கனமான சாதனங்களைக் கொண்டு சேர்க்கும் பொறுப்பும் வேலையைத் தாமதப்படுத்திவிட்டன. இந்த ஆலையை அமைக்க 22 கோடி ரூபாய் செலவாகும் என்று முதலில் கணக்கிட்டார்கள்; ஆனால் இப்போது இந்தச் செலவு 33 கோடி ரூபாய் வரை போகும் என்று தெரிகிறது. இதில் அந்நியச் செலாவணி 14.5 கோடி ரூபாய். அளவுக்கு இருக்கும். அந்நியச் செலாவணி மாற்று விகிதம் மாறுபட்டதன் விளைவாகச் சுமார் எட்டுக் கோடி ரூபாய் இப்போது அதிகப்படியாகச் செலவாகிறது. எனவே இறுதியாகக் கணக்கிட்டுப் பார்த்தால், முதலில் கணக்கிட்டதைவிடச் செலவு உண்மையில் மூன்று கோடி ரூபாய் அளவுக்குத்தான் அதிகமாகியிருக்கிறது என்பது புலனாகிறது.

கன நீர் திட்டங்களின் நிருவாகத் தலைவர் திரு. எஸ். பரீதுத்தீன், நிருபர்களிடம் கனநீர் உற்பத்திச் செலவை விளக்குகையில், வெளிநாடுகளிலிருந்து ஒரு கிலோ கிராம் கன நீர் தருவிப்பதற்கு 1,000 ரூபாய் செலவாகிறது என்றும், இதைவிடக் குறைவாகவே (சுமார் 800 ரூபாய் அளவுக்குத்தான்) இந்திய நாட்டில் உற்பத்திச் செலவு இருக்கும் என்றும் தெரிவித்தார்.

## கல்பாக்கம்

கன நீரைப் பயன்படுத்தி அணு மின் சக்தி உற்பத்தி செய்யவிருக்கும் கல்பாக்கம் நிலையத்தில் வேலை விறுவிறுப்புடன் நடந்தேறிக் கொண்டிருக்கிறது. சென்னைக்கு அருகேயுள்ள கல்பாக்கம் நிலையத்தில் இரண்டு பிரிவுகள் இருக்கும்; ஒவ்வொன்றிலும் 235 மெகாவாட் மின்சக்தி உற்பத்தி செய்யப்படும்.

முதலாவது பிரிவு சம்பந்தப்பட்ட கட்டட அமைப்பில் பெரும் பகுதி நடந்தேறிவிட்டது; அணு உலைக் கட்டடம், டர்பைன் அமைப்பு, ஸ்விச்யார்ட் கட்டடம், கடல் நீரை எடுத்து வர வேண்டிய சுரங்கப் பாதை ஆகியவையனைத்தும் அநேகமாகத் தயாராகிவிட்டன. நிலையத்தின் இரண்டு பிரிவுகளுக்குமாகச் சேர்த்து, குளிர்ச்சியாக்கும் சாதனமாக ஒரு நாளுக்கு 70 கோடி காலன் தண்ணீர் தேவைப்படும்; இதற்காகக் கடலுக்கடியிலேயே சுரங்கப் பாதை ஒன்று அமைத்துக் கடல் நீரை நிலையத்துக்குக் கொண்டு வருவதென்பது இந்நாட்டில் முதற்தடவையாக நடக்கும் முயற்சியாகும். குதிரை லாடம் போன்ற அமைப்பில் 468 மீட்டர் நீளத்துக்கு 3.8 மீட்டர் குறுக்களவுடன் கூடிய இந்தச் சுரங்கப் பாதை, கடல் நீரை உள்ளே கொண்டு வந்து சேர்ப்பதுடன், பயன்படுத்தலுக்குப் பின் மீண்டும் கடலிலேயே திருப்பிச் செலுத்தி விடுமாறு உருவாக்கப்பட்டிருக்கிறது.

நிலையத்தின் முதலாவது பிரிவு 1977 மத்தியிலும், இரண்டாவது பிரிவு 197[illegible]

மத்தியிலும் உற்பத்திக்கு ஆயத்தமாகிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கல்பாக்கம் நிலையத்தின் சாதனங்களில் பெரும்பகுதி இந்நாட்டிலேயே முதல் தடவையாகச் தயாராவது இதன் சிறப்பம்சம். வெளிச் சாதனங்களைப் பொறுத்தமட்டில் கனடா தனது விநியோகத்தை நிறுத்திக் கொண்டுவிட்டதால் இனி தேவைப்படுவனவற்றில் வேறு நாடுகளிலிருந்து தருவித்துக் கொள்ள முயற்சி நடந்து வருகிறது. கூடவே, கனடாவின் தீர்மானத்தை மாற்றவும் இந்தியா முயன்று கொண்டிருக்கிறது. நிலையத்தின் வடிவமைப்பு, பொறியியற் பணிகள், நிலையத்தின் பல்வேறு பிரிவுகளையும் நிறுவவது இவையனைத்தையும் வெளி உதவியின்றி நாமே செய்து கொள்கிறோம். நிலையத்துக்கான மொத்தச் செலவான 147.7 கோடி ரூபாயில் 30.5 கோடி ரூபாய் அளவுக்குத்தான் (சுமார் 20 சதவீதம்) அந்நியப் டணயாக இருக்கும். (ராஜஸ்தானின் ராணா ப்ரதாப் சாகர் அணு மின் நிலையத்தின் மொத்தச் செலவில் அந்நியப் பணம் 50 சதவீதமாகும்). பெரும்பாலான சாதனங்கள் மிக மிகத் துல்லியமான தர வரம்புகளுக்குக் கட்டுப்பட்டு முதன் முதலாக இந் நாட்டிலேயே தயாராக வேண்டியிருப்பதால் சில வகைத் தாமதங்களைத் தவிர்க்க முடியவில்லை. ஆனால் கல்பாக்கம் நிலையம் அமைப்பதில் இந்திய விஞ்ஞானிகளுக்கும் பொறியாளர்களுக்கும் கிடைக்கும் அரிய அனுபவமும் தேர்ச்சியும் வருங்காலத்தில் இந்நாட்டுக்கு எவ்வளவோ பயன் தரத் தக்கதாகயிருக்கும் என்பதை ஒரு மாபெரும் இலாபமாகக் கருத வேண்டும்.

கல்பாக்கம் நிலையத்தின் முதற்பிரிவில் உற்பத்தியாகும் மின்சக்திப் பிரிவில் முழுமையுயும் தமிழ்நாட்டுக்கே விநியோகமாகும். இரண்டாவது பிரிவில் தயாராகும் மின் சக்தியில் பாதியளவும் கூடத் தமிழ்நாட்டுக்கே கிடைக்கும். மற்ற பாதி ஆந்திரம், கேரளம், கர்நாடகம். ஆகிய மாநிலங்களுக்கும் கொடுக்கப்படும்.

இயற்கை யுரேனிய அணுக்கள் பிளவுபடும்போது மிகப்பெரிய எடுப்பில் வெப்பம் விளைகிறது; அந்த வெப்பத்தின் மூலம் உண்டாகும் நீராவி, டர்போ-ஜெனரேட்டர்களை இயக்க, அதன் விளைவாக மின் சக்தி கிடைக்கிறது. இயற்கை யுரேனியத்தில் யூ-238, யூ-235 என்ற இருவகை ஐசோடோப்புகள் இருக்[...]றன. இவ்விரண்டிலும் ஒரே எண்ணிக்கையில் எலெக்ட்ரான்களும் ப்ரோட்டான்களும் இருந்த போதிலும் நியூட்ரான்களின் எண்ணிக்கைதான் வேறுபடுகிறது. அதாவது யூ-238-ல் 146 நியூட்ரான்கள் இருக்கும் போது, யூ-235-ல் 143 தான் இருக்கின்றன. இந்த யூ-235 அணு, யூ-238 -ன் மிகுதியான நியூட்ரான்களின் மெதுவான மோதலால் பிளவுபடும்போது வெப்பமும் கதிரியக்கமும் விளைகின்றன; அதோடு, மேற்கொண்டு இரண்டு மூன்று நியூட்ரான்களும் கிடைக்கின்றன. இந்த ந்யூட்ரான்கள் மற்ற யூ-235 அணுக்களைப் பிளக்க, மேலும் வெப்பம், மேலும் கதிரியக்கம், மேலும் புதிய ந்யூட்ரான்கள், மேலும் அணுப்பிளப்பு என்ற முடிவற்ற தொடர் விளைவு நிகழ்கிறது. ந்யூட்ரான்களின் வேகத்தை விநாடிக்கு 42,000 கிலோமீட்டர் என்பதிலிருந்து விநாடிக்கு ஒன்றரைக் கிலோமீட்டராகக் குறைக்கும் அற்புதமான சமனப்பணியைத் தான் கன நீர் செய்கிறது.

மொத்தத்தில் தூத்துக்குடியும் கல்பாக்கமும் எதிர்காலத்தில் ஆற்றல் மிகுந்து விளங்குவது உறுதி.

## கரப்பான் பூச்சி



நம் வீடுகளில் கரப்பான் பூச்சிகளைப் பார்த்திருக்கிறோமல்லவா?

இந்தக் கரப்பான் பூச்சிகள் உலகின் மிகத் தொன்மையான உயிரினமாகக் கருதப்படுகின்றன. அவை உலகின் பல வேறு இடங்களில் கோடானு கோடி ஆண்டுகள் பரம்பரையாக இருந்து வருகின்றனவாம்.

'மடிரியா' என்ற கரப்பான் பூச்சி, ஆராய்ச்சிக் கூடங்களில் ஆய்வுக்குப் பெரிதும் பயனுள்ளவையாகும். இவை 1940-ஆம் ஆண்டில் கப்பல்கள் வழியாக மேற்கு ஆப்பிரிக்கா, இந்தியா போன்ற நாடுகளிலிருந்து அமெரிக்காவிற்கு வந்தனவாம்! இவற்றின் தலைமையகம் எது தெரியுமா? நியூயார்க்!

கரப்பான் பூச்சிகளின் இருப்பிடம்: தொலைபேசிக் கருவிகள், குளிர்காப்புப் பெட்டி, சமையலறை, சாக்கடை, உணவு விடுதி, ஈரக் கட்டடத்தின் அடித்தளம்.

கரப்பான் பூச்சியின் நெடி நிறைந்த நாற்றம் காரணமாக மற்ற விலங்குகள், பூச்சிகள் அதைச் சாப்பிடுவதில்லை. அந்த நாற்றமே கரப்பான் பூச்சிகளுக்குப் பாதுகாப்புக் கவசமாக அமைந்திருக்கிறது.

முறைப்படி கரப்பான் பூச்சிகள் வராமல் தடுக்க மருந்து தெளிக்க வேண்டும். இன்னொரு வழி: கரப்பான் பூச்சியின் முன்னால் கண்ணாடியைப் பிடித்தோமானால் அது பயந்து ஓடிவிடும்!






கல்லெல்லாம் கதை சொல்லும்
சிலப்பதிகாரக் காட்சிகள்!

புதையுண்ட பூம்புகார்
புது வடிவம் பூண்டுள்ளது!

சிந்தைக்கும் கண்ணுக்கும்
தெவிட்டாத தமிழ் விருந்து!

மனதைக் கவரும் மாதவியின் அழகுச் சிலை.

பூம்புகார் கலைக்கூடம், சீர்காழியிலிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவிலும், மாயவரத்திலிருந்து 29 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது.

இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை, சென்னை-600009




# வரலாற்றில் மைல் கல்

~ இரா. நாகசாமி ~

நெடுஞ்சாலையில் செல்லும்பொழுது அடுத்த ஊர் எவ்வளவு தொலைவில் இருக்கிறது என்று அறிந்து கொள்ள இக்காலத்தில் சாலையில் மைல் கற்கள் நடப்பட்டுள்ளதைக் காண்கிறோம். ஊர் நெருங்கும்போது அவ்வூரின் பெயர் என்ன என்று அறியவும் பெயர்ப் பலகை உள்ளது. இவ்வாறு சாலைகளில் பெயர்ப் பலகைகளையும், மைல் கற்களையும் நடுவது எப்பொழுது தோன்றியது? ஆங்கிலேயர்கள் வந்த பின்னர் அவர்கள்தாம் இதை நமக்குக் கற்றுக் கொடுத்தார்களா? என்ற வினாக்கள் நமக்கு எழத்தான் செய்கின்றன. ஆங்கிலேயர் வருவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கும் முன்னரே இம்மரபு தமிழகத்தில் இருந்திருக்கிறது என்பதை, அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட மைல் கற்கள் காட்டுகின்றன. இவற்றைத் தமிழ்நாடு அரசு, தொல்பொருள் ஆய்வுத் துறை கண்டுபிடித்துள்ளது.

ஒன்று தருமபுரிக்கு அருகில் உள்ளது. மற்றொன்று திருவண்ணாமலையில் உள்ளது. தருமபுரிக்கு அருகில் இருப்பது ஒரு மைல்கல். இதில் 14-ஆம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்தில் ''**அதியமான் பெரு வழி நாவற்தாவளத்துக்குக் காதம் 29**'' என்று எழுதப்பட்டிருக்கிறது. அதன்கீழ் இரண்டு பெரிய துளைகளும், ஒன்பது சிறிய துளைகளும் இடப்பட்டுள்ளன. இவை 29 என்பதைக் குறிக்கின்றன. இன்றைய தருமபுரியின் பண்டையப் பெயர் தகடூர் என்பதாம். தகடூரைத் தலைநகராகக் கொண்டு அதிகைமான் நெடுமான் அஞ்சியும், அவன் வழிவந்தவர்களும் ஆண்டிருக்கிறார்கள். 13-ஆம் நூற்றாண்டிலும் இவ்வழிவந்தவர்கள் குறுநில மன்னர்களாக ஆண்டிருக்கிறார்கள். அவ்வதிகைமான் பெயர் கொண்டு ஒரு பெருவழி இருந்திருக்கிறது. இம்மைல் கல் தகடூருக்கு மிகவும் அருகில் உள்ளது. தகடூரிலிருந்து வெளியே செல்லும் முக்கியப் பெருவழிக்கு அப்பொழுது **அதிகைமான் பெருவழி** எனப் பெயர் இருந்திருக்கிறது. நாவற்தாவளம் என்ற ஊர் தகடூரிலிருந்து 29 காதத்தில் இருந்திருக்கிறது. அதையே அக்கல் இவ்வாறு குறிக்கிறது. இதிலிருந்து 14-ஆம் நூற்றாண்டிலேயே நெடுஞ்சாலைகளில் கல்நட்டு, தூரத்தைக் குறிக்கும் மரபு தமிழகத்தில் இருந்தது என்பது தெளிவு.



திருவண்ணாமலையில் மலையைச் சுற்றிவரும் பாதையில் மற்றுமொரு கல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுவும் தற்கால மைல்கல் போலவே உள்ளது. இதில், மேலே ''**ஸ்வஸ்தி ஸ்ரீ விக்ரமபாண்டியன் திருவீதி நாலாம் வகுப்பு**'' என்று எழுதப்பட்டுள்ளது. 3 கிலோ மீட்டர் கடந்து சாலையின் இரு மருங்கும் சாலைக்குப் பக்கத்துக்கு ஒன்றாக இதேபோல் மற்றொரு கல் உள்ளது. அதில் ''**ஸ்வஸ்தி ஸ்ரீ விக்ரமபாண்டியன் திருவீதி ஆரும் வகுப்பு**'' என்று எழுதப்பட்டுள்ளது. இவற்றின் கீழே பாண்டிய இலச்சினையான இரு கயல்களும் நடுவில் செண்டும் காணப்படுகின்றன. இது 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. 13-ஆம் நூற்றாண்டில் இப்பகுதியை விக்ரம பாண்டியன் என்ற பாண்டிய மன்னன் ஆண்டிருக்கிறான். அவன் திருவண்ணாமலையைச் சுற்றிலும் திருவீதியை அமைத்திருக்கிறான். சுமார் 700 ஆண்டுகளுக்கும் முன்னரே அமைக்கப்பட்ட சாலை இன்றும் இருக்கிறது. அச்சாலையில் அன்று நடப்பட்ட கற்கள் இன்றும் உள்ளது கண்டு மகிழலாம். அவ்வீதியைப் பலபகுதிகளாகப் பிரித்து முதலாம் வகுப்பு, இரண்டாம் வகுப்பு என ஒவ்வொரு வகுப்பிலும் கல் பதித்திருக்கிறார்கள். அரச இலச்சினையோடு, வீதியின் பெயரும் வகுப்பும் பொறிக்கப்பட்ட கற்கள் அவை.

வீதிகளுக்கும், நெடுஞ்சாலைகளுக்கும் பெயர் வைக்கும் வழக்கம் சங்ககாலந்தொட்டே தமிழகத்தில் உண்டு. அவை தெய்வங்களின் பெயராலும், அரசனின் பெயராலும் அமைக்கப்படுவது கல்வெட்டுக்களில் காணப்படுகிறது. செம்பியன்மாதேவி சேரி, கண்டராதித்தன் வதி, திரிபுவனமாதேவி பேரங்காடி முதலியன கல்வெட்டுக்கூறும் செய்திகள். ஆனால் இவற்றைக் குறிக்கும் பெயர்ப் பலகை அல்லது கல் நடப்பட்டிருந்ததா என்பது பற்றி நமக்கு இதுகாறும் தெரியாது. இப்பொழுது தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை கண்டுபிடித்துள்ள இக்கற்கள் பெயர் பொறித்த மைல்கற்களும், பெயர்ப் பலகைகளும் நடும் மரபு தொன்று தொட்டே தமிழகத்தில் கடைப்பிடிக்கப்பட்ட மரபு எனப் புலப்படுத்துகின்றன. நெடுஞ்சாலை, சாலைத் துறைகள் பண்டைய தமிழகத்தில் எவ்வளவு சீராகச் செயலாற்றின என்பதற்கு இவை எடுத்துக்காட்டுகள். இந்திய வரலாற்றிலேயே இதுகாறும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளவற்றில் இவையே தொன்மையானவை.

# உலகு தந்தாய் அண்ணா



பொருளொன்றை இழந்துபின்னர் மீண்டும் பெற்றால்
பூரிப்பு (இ) ரட்டித்தல் உலகி யற்கை,
அருளொன்றும் ஆட்சியொன்றை அமைத்துக் காட்டி
அன்புவழி அறநெறிகள் அனைத்துந் தந்தாய்!
இருளார்ந்த கருஞ்சிறைக்குள் தனிவி டுத்தே,
எம்மண்ணா, யாமேங்க நீம றைந்தாய்!
மருளார்ந்த சூழலிலே மயக்கந் தீர்க்க
வானொளிரும் சுடர்க்கீற்றைக் கண்டு (உ) வந்தோம்

நம்பிக்கை தருமாமே துருவ விண்மீன்
நடுக்கடலில் தவிப்போர்க்கு வழியைச் சொல்லி?
தம்பியரின் படைவரிசை பெருத்த தேனும்
தக்காரை உட்கார வைத்துச் சென்றாய்!
வெம்பியோர்கள் மகிழ்வுற்றுத் தெம்பு கொள்ள—
விழமாட்டோம்; எழுவோமென் றச்சம் நீங்க—
அம்புலியாய், வெம்புலியாய், ஆளுக் கேற்ப
அடியொற்றி நின்துணையால் நடக்கின் றோமே!

'எரிப்பதற்குச் சுடுகாட்டை நோக்கி ஓர்நாள்
எம்முடலம் செல்லுகின்ற வரைக்கும் நாட்டை
அரிப்பதான வறுமையெனும் கரையான் புற்றை
அழிப்பதற்குப் போராடிப் பார்ப்போம்! ஏழை
சிரிப்பதற்கும் செழிப்பதற்கும் ஏற்ற தான
செயல்களிலே முயல்வதற்குத் தயங்கோம்!'' என்றே
நரிப்புதரைக் களைந்தெறிந்து, பாம்பு கொன்று,
நாட்டையுண்மை நாடாக்கி நீதான் தந்தாய்!







வழிகாட்டி ஒளிகாட்டும் விளக்குத் தூணாய்
வாழ்ந்தவரை இருந்தாயென் றுரைக்க மாட்டேன்!
பழிகூட்டி இழிவுரைக்கும் பாத கர்க்கும்
பாலிக்கும் பேரருளின் சுரங்கம் உன்றன்
விழிகாட்டும் மொழியேற்று நடப்ப தாலே
மேதினிக்கே எடுத்துக்காட் டானோம் நாங்கள்!
எழில்கூட்டும் நின்கருத்து மணத்தால் இங்கே
எத்துறையும் கமழ்கின்ற காட்சி கண்டோம்!

நடப்பதெல்லாம் நல்லாட்சி; உன்சொல் லாட்சி;
நன்மைகளோ கோடிகோடி அடுக்க டுக்காய்!
கடப்பதெல்லாம் வெறுப்பாறு; பொறாமைக் கால்வாய்!
கடமைக்கே முதலிடத்தை அளிப்ப தாலே
கிடப்பதெல்லாம் எச்சமாக எதுவும் இல்லை!
கீழிருந்தோர் மேலேறி எட்டாம் ஆண்டு
நடப்பதாக நாடெல்லாம் புகழ்ந்து பேசும்;
நன்றியுள்ள அன்புள்ளம் பெருமை கொள்ளும்!

பற்பலவாய்க் கிளைத்துள்ள சமுதா யத்தில்
பயனுறாத மனிதரென இலரே யாரும்!
அற்பமென இகழ்ந்துரைக்கும் பண்பே இன்றி,
அனைத்தையுமே துருவிநோக்கித் திறனைக் காட்டிச்,
சிற்பமெனப் பல்லாண்டு நிலைத்து நிற்கும்
செயலாற்றல் அயலார்க்கும் வியப்பு நல்கும்!
சொற்பகால வரலாற்றில் சுபிட்ச வாழ்வைச்
சுவைத்திருக்கச் சமைத்தளித்தாய்; உண்போம், என்றும்!



• கவிஞர் கருணாநந்தம்





'பாம்புகட்டும் எலிகட்டும் கூட நாட்டில்
பதுங்குதற்குப் புற்றுண்டு; வளைகள் உண்டு!
தேம்பிநிற்கும் நடைபாதை மனிதன் வாழத்
திருநாட்டில் குந்தமனை உண்டா?'' என்றே
காம்பறுந்த மலராகக் கிடந்த ஏழைக்
கந்தனுக்கே வாதாடி வந்தீர் அண்ணா!
நாம்இன்றோ பலலட்சம் மனைப்பட் டாக்கள்
நல்குகின்றோம் குடியிருப்புச் சட்டத் தாலே!

'ஒளிவழங்கச் சூரியனை ஏற்பீர்!' என்றே
உறுதிமொழி தேர்தலிலே தந்தீர் அண்ணா!
துளியேனும் பிசகாமல் இந்த மண்ணின்
துரைத்தனத்தை நமதரசு ஏற்ற பின்னால்
ஒளிவிளக்கே இல்லாத ஊர்கள் இங்கே
ஒன்றேனும் இல்லாமல் ஆக்கு தற்கு
வெளிமாநி லங்களிலும் விளக்குப் பெற்று
மின்மயமாய்த் தமிழ்நாட்டை மாற்று கின்றோம்.

'உழுபவனே உழைக்கின்ற நிலத்தில் சொந்த
உரிமைபெற்றோன் ஆவதெந்நாள்?' என்றே நீங்கள்
எழுதிவந்தீர், பேசிவந்தீர் ஓய்ந்தி டாமல்!
இதுவரைக்கும் செய்யாத சட்டத் தாலே
உழுபவர்க்கே நிலம்சொந்தம் ஆவ தற்கே
உயர்திட்டம் வகுத்திட்டோம்; இம்முன் னேற்ற
வழியினிலே தமிழ்நாடே இந்தி யாவின்
'வழி காட்டி' எனச்சொன்னார் நல்லோர் எல்லாம்!

'தீண்டாமைப் பாம்புவந்து தீண்டி டாத
தேக்கனைய சமுதாயம் சமைந்தி டாதா?'
ஆண்டாண்டாய் நாடகத்தில், கதையில் எல்லாம்
அன்றாடம் எழுதிவந்தீர் அண்ணா! இன்றோ
ஆண்டவனை அர்ச்சிக்கும் உயர்ந்த வேலை
அரிசனங்கள் பெறுவதற்கே சட்டம் செய்தோம்!
தீண்டாத 'நந்தர்' களின் மரபில் வந்தோர்
திருக்கோயில் அறங்காவல் பொறுப்பேற் கின்றார்!



# வெற்றியை நோக்கி....!

ருக்குநாள்
முடைய வாழ்க்கைக்கு
க அளிக்கும்
புகாப்புகள் ஏராளம்

அலுவலர்களுக்கு
ம்பப் பாதுகாப்புத் திட்டம்
னத் தொடர்ந்து
தாயத்திலுள்ள அனைவரும்
டையும் வகையில்
கப் பாதுகாப்புத் திட்டம்!

படி அளிக்கப்படும்
துகாப்புகளைப் போன்று
மக்கு நாமே
ருவாக்கிக் கொள்ளும்
துகாப்புத் திட்டம்
டும்பநலத் திட்டம்!

லாரும்
புற்றிருக்கச்
பல்படுத்தும்
டங்கள்
றி பெற்றிட
மிக்க
த்தளம் அமைய

வுவதே
வான குடும்பம்.




# தமிழரசு

மலர்:6 இதழ்:7
1-10-1975


"எளியவாழ்க்கை வாழ்தல், எல்லாரிடத்தும்
அன்புகாட்டல், உண்மையைக் கடைப்பிடித்தல்
உலகுக்குத் தொண்டு செய்தல், இறந்து
போனவர்களைவிட இன்று நடமாடுகிறவர்க்குழைத்தல்
இவையே எனது வாழ்க்கையின் குறிக்கோள்."

— அண்ணல் காந்தியடிகள்





# சென்னைப் பல்கலைக் கழக நூற்றுப் பதினெட்டாவது பட்டமளிப்பு விழாவில் முதல்வர் கலைஞர் ஆற்றிய பேருரை (20-9-1975)



பல்கலைக் கழக வேந்தரவர்களே!
இணை வேந்தர் அவர்களே!
துணை வேந்தர் அவர்களே!
பேராசிரியப் பெருமக்களே!
மாணவ உடன் பிறப்புக்களே!

மூத்ததொரு பல்கலைக் கழகம் இளமை முறுக்குடன் செயல்புரியப் புறப்படுங்கால் அதனை வாழ்த்திப் போற்றும் வாய்ப்பினைப் பெறுவதில், அங்கிருந்து கிளம்பிடும் அறிவுக் கதிர்களாம் பட்டம் பெற்ற மாணவர்களைக் கண்டு மகிழ்வதில் பெருமை கொள்கிறேன். சிந்தனைச் செல்வர்களின் கருத்துக் கருவூலங்கள் கால் முளைத்து நடமாடிய இடம் சென்னைப் பல்கலைக்கழகம் என்பதை நானிலமே அறியும். இதற்கோர் வரலாறு உண்டு. அந்த வரலாற்றுக்கோர் மாண்பும் உண்டு. மண்டிலங்கள் பலவற்றின் புகழ் மாலைகளை அணிந்த கழுத்துடன் உலா வரும் இதன் பெருமிதம் கண்டு பெருவகை கொள்ளாத நல்லார் இல்லை. இதன் வரலாற்று ஏட்டில் ஒரு திருப்புமுனையாகப்—பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவு. இன்று, முதல் தடவையாகத் தமிழிலே நடைபெறுகிறது; அதிலும் 117 பட்டமளிப்பு விழாக்களுக்குப் பிறகு இந்த நூற்றுப் பதினெட்டாவது பட்டமளிப்பு விழா தமிழிலே நடைபெறுகிறது; தாய்மொழியில் நடைபெறுகிறது என்பதை எத்துணை வியப்புடன் கூற வேண்டியிருக்கிறது என்ற வேதனையைக் கண்டீரா! தமிழில்தான் என்றால் பட்டமளிப்பு விழா உரையைப் படிக்க இயலும் என்பதால் அல்ல; ஆங்கிலத்திலும் படித்திடுவேன்; பேசுதற்கு இயலாவிடினும்! நிலை விளக்கமல்ல இப்போது தேவைப்படுவது! நமது நிலத்துக்குரிய வளமொழியாம் தமிழை, மணிமுடியில் வைப்பதற்கு நாமே தயங்கிடில்—தாயை இகழ்வதற்குச் சமமன்றோ! அதனால்தான் இந்தத் திருப்புமுனைத் திருவிழாவை இன்றைக்கு நான் என் தமிழை வணங்கித் தொடங்கி வைக்கிறேன்.

### உழைப்பில் பங்கு கொள்வீர்!

உலகின் பல பகுதிகளில் ஒருவரைப்பார்த்து ஒருவர் கையசைத்துக் காலசைத்து ஊளையிடுவதையே உரையாடலாகக் கொண்டிருந்த பழம்பெரும் காலத்தில், ஈராயிரம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இலக்கண எழில் கொஞ்சும் மொழியாக இன்பத் தமிழ் மொழி இருந்ததென்கின்றனர். எடுத்துக்காட்டுகள் ஏட்டில் அடங்கா; எண்ணிறந்தவை! அம்மொழி—செம்மொழி—நம்மொழி — தமிழ் மண்ணில் எல்லா இடத்திலும் கோலோச்ச வேண்டுமென்பதே தமிழ் நெஞ்சு கொண்டவரின் விழைவு! அது விரைவாக நிறைவேறவே உழைக்கிறோம். அந்த உழைப்பில் பங்கு கொள்ளப் பட்டம் பெற்றுள்ள உங்களையும் அழைக்கிறேன்.

### தாய்மொழிச் சிந்தனை

தாய்மொழியில் பேசுவது, எழுதுவது சிறப்பல்ல என்று கருதிடும் பொல்லாக் காலம் ஒன்றிருந்தது. பிற மொழியில் திறன் இருப்பதைக் காட்டிக் கொள்வதே பீடு என எண்ணினர். ''கோரிக்கையற்றுக் கிடக்குது அண்ணே—இங்கு வேரிற் பழுத்த பலா'' எனப் பாவேந்தர் பாடியது இளம் கைம்பெண்ணின் வேதனை குறிக்க மட்டும் எனக்கொள்ளாது, தமிழின் நிலை குறித்தும் பாடியதாகக் கொள்ளின் தவறில்லை. வளர்ந்துவரும் உலகின் அறிவார்ந்த விஞ்ஞானப் புதுமைகளுக்கேற்பத் தமிழில் சொற்கள் இல்லையே என்று வாதிடுவது, தமிழரையும் தமிழ் மொழியையும் வளர்க்கின்ற கடமையினின்றும் வழுக்கிக் கொள்வது தவிர வேறு என்ன ?

''சென்றிடுவீர் எட்டுத் திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்''

என பாரதியார் முழங்கினாரே; எந்தச் செல்வம் சேர்ப்பது குறித்து; கனகமணியா? கட்டித் தங்கமா? பட்டை தீட்டிய வைரமா? பவளமா? முத்தா? அவைகளையல்லவே அவர் குறித்தது; அவையனைத்தையும் புறங்காணும் அறிவொளியாம் அழியாச் செல்வத்தைத் தமிழில் கற்றுக்கொள்ளும் முயற்சியை அல்லவா அந்த முண்டாசுப் புலவர் சுட்டிக்காட்டுகிறார்! தாயின் தோள் மீது ஏறிக் காதலிக்காக மரக்கிளையில் கனி பறிப்போர் இருப்பதாலேதான் தமிழை மிதித்துக் கொண்டு, பிற மொழியை எட்டிப் பிடிக்கத் தாவுகின்ற கொடுமை இங்கே நடைபெறுகிறது. உலகத்தோடு தொடர்பு கொள்ள அடுத்து ஒரு மொழி தேவைதான். அது ஆங்கிலமேனும் துணையாக இருப்பதில் தவறில்லைதான். அதற்காகத் தாய்மொழியில் சிந்திப்பதையே மறந்து விடல் அநீதியன்றோ?

### சங்ககாலச் சால்பு

எத்துணைச் செழுமையைத் தமிழ் முன்பே பெற்றிருந்தால் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இலக்கணத்தை உருவாக்கியிருக்கக் கூடும் என்பதை நினைத்துப் பார்த்திடவேண்டும். அதற்கும் சிலபல நூற்றாண்டுகளுக்கு முன்பு பிறந்து, தவழ்ந்து, வளர்ந்த மொழி என்பதால் தானே அதன் வாயிலாகத் தமிழரின் சால்பை உணர முடிகிறது! அறிவிற் சிறந்த கல்வியாளர்கள், புலவர் பெருமக்கள் சங்க காலத்துத் தமிழரசர்களால் போற்றப்பட்டது மட்டுமல்ல; அவர்தம்

பொன்மொழி கேட்டுச் செங்கோலோச்சினர் என இலக்கியங்கள் இசைத்திடுகின்றன. புலி, தன் குட்டியைப் பாதுகாப்பது போல மக்களைப் பாதுகாத்த மன்னனின் பெருமை குறித்துப் புறநானூறு,

"புலிபுறங் காக்கும் குருளை போல
மெலிவில் செங்கோல் நீபுறங் காப்ப"

என்று ஒலிப்பதையும் கேட்கிறோம்; அதே வேளையில் அந்த மாமன்னர்களில் ஒருவனான பாண்டியன் நெடுஞ்செழியன் கல்வி அறிவின் மேன்மை குறித்துத் தன் நாட்டு மக்களுக்கு எழுதிக் காட்டிய புறநானூற்றுப் பாடலும் அக்காலத் தமிழ்ச் சமுதாயம், கல்வியின்பால் கொண்டிருந்த காதலை வெளிப்படுத்துகின்றது. அரசின் பண்பு எவ்வாறு இருந்திடல் வேண்டுமென்பதை நமது இலக்கியங்கள் கோடிட்டுக் காட்டுவது கண்டு மலைத்தல்லவா போகிறோம்—இன்றோ, நேற்றோ இல்லையே; இருநூறு முந்நூறு ஆண்டுகள் என்ற கணக்கும் இல்லையே—சங்க இலக்கிய மல்லவா தமிழர்களின் அரசுப் பண்பை வரையறுத்துக்கூறுகிறது! நால்வகைப் படை கொண்ட மாவீரனாயினும் அவன் கொற்றம், அறத்தையே அடிப்படையாகக் கொண்டதாம். தனது உற்றார் உறவினர் என்பதற்காக அவர்களைப் பேணலும், சுற்றமல்லாதார் என்பதனால் பேணமறுத்தலும் கூடாதென்பதை அந்நாள் தமிழ் வேந்தன் உணர்ந்து நடந்தானாம்.

"நான்குடன் மாண்ட தாயினு மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்
அதனால் நமரெனக் கோல்கோ டாது
பிறரெனக் குணங்கொல் லாது.."

இந்தப் புறநானூற்று வரிகள் மீட்டிக் காட்டும் தமிழரின் பண்பு கீதத்தை நாளெல்லாம் கேட்டு மகிழலாமே!

## தமிழால் முடியும்!

தொல்புவியில் தமிழினம் கொண்டிருந்த பெருமையை நான் ஒன்றிரண்டு தொகுத்துக் காட்டுதற்குக் காரணம் ஒரு வரலாற்று நூலை உங்கள் கரங்களில் வழங்குவதற்காக அல்ல; மங்கிய வரலாற்றை மீண்டும் எழுதிட நீவிர் வல்லவர் என்று தெரிந்திருப்பதாலேயே நினைவூட்டுகிறேன். அதற்குத் தமிழைக் கற்றால் பழைய வரலாறு புரியும். தமிழில் கற்றால் புத்துலகத்தோடு போட்டி போடும் புதிய வரலாறு எழுத இயலும். பத்தாண்டுகட்கு முன்பே, "தமிழால் முடியும்" என்ற உறுதி தோன்றியது. முயற்சி அரும்பியது. தமிழைப் பயிற்று மொழியாக்கும் நிலையை முழுமையாக்கிட ஏழாண்டுகட்கு முன்பு சூளுரை மேற்கொண்டோம். பயன் யாது? "பயிற்று மொழி" உணர்வைக் கெடுக்க, "வயிற்றுமொழி" உணர்வு தூண்டிவிடப்பட்டது. தமிழ், சோறிடாதோ? சோம்பிக்கிடக்குமோ? சோறும் தரும்—சுயமரியாதையும் தரும்—என்று எடுத்து வைத்த சான்றுகள் விழலுக்கிறைத்த நீராயிற்று—வெண்ணிலா, காட்டில் காய்ந்த கதையாயிற்று; விறுவிறுப்பான வேலை நிறுத்த நடவடிக்கைகள், மாணவர்களின் உணர்ச்சியைத் தட்டிவிட்டு எழுப்பப் பெற்ற கிளர்ச்சிகள், விளக்கம் பெறுவதற்கான அமைதியான தன்மையை திரை போட்டு மறைத்ததால் தமிழ்ப் பயிற்றுமொழித் திட்டம் தயங்கி நின்றது. இந்தத் தயக்கம் முழுமையாகப் போக்கப்பட்டுத் தாய்மொழிச் சிந்தனைக்கு முதலிடம் அமைந்திட எதிர்காலத்தைப் படைக்கப்போகும் மாணவர்களும், அவர்கட்கு வழிகாட்டுவோரும் பணியாற்றிட வேண்டும். ஆங்கில மொழியில் மேதைகளாயிருப்போர் தமிழ்ப் பயிற்றுமொழிக் கொள்கைக்குப் பகையாயிருப்பர் என்ற பொதுப்படையான வாதத்தை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். புலால் உண்ணுதவர்கள், மற்றவர்க்குப் புலால் உணவு சமைப்பதையும், பரிமாறுவதையும் பார்க்கிறோம் நம் அனுபவத்தில்; ஆகவே ஆங்கிலம் படித்த அறிஞர்கள் தமிழ்ப் பயிற்று மொழியை விரிவாக்கி வெற்றி காண்பதில் நம் உணர்வுகளுக்குச் செயல்வடிவம் தருவர் என்றே நம்புகிறேன். அந்த நம்பிக்கையில் ஒன்றைத் தெரிவிக்கிறேன். இது, முழுமையான வெற்றிக்கு முதல் கட்டமாக அமையட்டும்.

இப்போதுள்ள பல்கலைக் கழகப் பாடத் திட்ட முறையில் புகுமுக வகுப்பு, இளநிலைப் பட்டப் படிப்பு (பி.ஏ., பி.எஸ்ஸி.) இவற்றுக்கு மட்டும், தமிழ்ப் பயிற்றுமொழி இருந்து வருகிறது. பட்ட மேற்படிப்பு, முதுநிலைப் பட்டப் படிப்புக்களுக்கு (எம்.ஏ., எம்.எஸ்ஸி.) தமிழ்ப் பயிற்று மொழி இல்லை. இதனால் தமிழில் பட்டப் படிப்புப் பயின்றவர்கள், முதுநிலைப் பட்டப் படிப்பில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொள்வதற்கு வாய்ப்பற்றுப் போகிறது. எனவே, முதுநிலைப் பட்டப் படிப்புகளுக்கும் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு வருகிற திட்டத்தினைப் பல்கலைக் கழகத்தினர் தொடங்கி நிறைவேற்றினால் அளவிடற்கரிய மகிழ்ச்சியுடன் அரசு வரவேற்றுத் துணை நிற்கும்.

எம்மொழியில் பயில்வது என்ற கேள்விக்கே இத்தனை விளக்கங்களும், கருத்துக்களும் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்தன. இனி, எதனைப் பயில்வது என்பதும் விடை காணவேண்டிய தலையாய வினாவல்லவா?

## கற்பவை தேர்ந்தெடுப்பீர்!

"கற்கக் கசடற" என்ற வள்ளுவர், "கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என வலியுறுத்தியிருப்பதை மேலெழுந்தவாரியாக நோக்குவது உரிய பொருளைத் தராது. கற்பவை எவை என்பதை முதலிலேயே தேர்ந்து தெளிந்திட வேண்டும். கசடறக் கற்க வேண்டுமென்பது பொதுவான அறிவுரை. கற்பவை எவை என முடிவு செய்துகொண்டு கற்கத் தொடங்க வேண்டுமென்பதுதான் சிறப்புமிக்க அறிவுரை. அந்த அடிப்படையில் கலையியல் மட்டுமே பயில்வோர், அறிவியல் பாடங்களிலும் ஒன்றைக் கட்டாயமாகப் பயில்வதும்—அறிவியல் மட்டுமே பயில்வோர் கலையியல் பாடங்களில் ஒன்றைக் கட்டாயமாகப் பயில்வதும் நிறைவான ஆற்றலை அளித்திட வல்லது என்பது என் கருத்து. அறிவியல், கலையியல் இரண்டு துறைகளிலும் இணைந்த அறிவு மாணவர்க்கு இன்றியமையாததாகிறது. அதற்கேற்ப இப்போதுள்ள பாடத் திட்டங்களில் மாறுதல் செய்வது பற்றி ஆய்ந்து முடிவெடுப்பது நலமென நான் சுட்டிக்காட்டுகிறேன்.

ஊர்ந்து செல்லும் குழந்தைப் பருவத்திலேயே பல் முளைக்கும்போது கிராமப்புறங்களில் பல் கொழுக்கட்டை செய்துவைத்துப் படையலிட்டு, அகன்றதோர் தட்டில் அணிமணியும், கொழுக்கட்டையும் இட்டுக் குழந்தை எதனைத் தேர்ந்தெடுக்கிறது என்பதைக் கூர்ந்து கவனிக்கிறோம் ஆவல் மிகுதியோடு; இதனைப் புதிய யுகத்தை வரைய இருக்கும் மாணவரிடத்திலும் கண்டறிதல் தேவையன்றோ?

எல்லோருமே பேராசிரியப் பெருமக்கள் ஆகிவிடின், அவர்கள் இருந்து அறிவு போதிக்கும் கல்லூரிக் கட்டிடங்களைக் கட்டுவதற்கேற்ற பொறியாளர் எங்கிருந்து வருவர்? வரலாற்று மேதைகள் தோன்றி ஆராய்ச்சிக் கருவூலங்களை அள்ளி வழங்கிடல் களிப்பூட்டுவதுதான் எனினும், விஞ்ஞானத் துறையில் முகிழ்த்திடும் அற்புதங்களைக் கற்றறிந்த வித்தகர்களின் வளர்ச்சியைப் புறக்கணித்துவிட முடியாதே! எனவே, எல்லாத் துறைகளிலும் பரவலாக மாணவர் அணியினர் ஒளியுமிழ் கொற்கை முத்துக்களாக விளங்கிடுதல் வேண்டும். அதற்குத்தான் **"கற்பவை தேர்ந்து கற்றிடுக; கற்றபின் அதற்குத் தக நிற்க"** எனப் பொய்யா மொழியார் புகன்றார்.

## பட்டம் பெற்றோர் பணி

அறிவுக் கூடங்களில் இருந்து பட்டம் பெற்று வெளிச் செல்வோர், பகுத்தறிவுக் கதிர் பரப்பி, நமது நாட்டு மக்களை—முன்னேறும் உலகத்தோடு இணைந்து நடைபோடத்தக்கவர்களாக ஆக்கிடப் பாடுபட வேண்டும். சாதியென்னும் சங்கிலி, தாலைப் பிணைத்திட—சம்பிரதாயங்கள் என்னும் பேரால் மூடப்பழக்க வழக்கங்கள் முடிசூடிக் கொள்ள—இனியும் இடம் தருவது, இளைய தலைமுறையையும் திட்டமிட்டுக் கெடுக்கிறோம் என்றாகும். அறிவுலகை மலரச் செய்திடத் தொடக்கக் கல்விப் பருவத்திலேயே புதிய மாற்றங்களைச் செய்திட வேண்டும். முயற்சி திருவினையாக்கும் என்பதை மறந்துவிட்டு, எல்லா வற்றுக்கும் பொறுப்பை நம்மை மீறிய ஒரு சக்தியிடம் ஒப்படைத்துவிட்டு—வாழ்நாட்களை எண்ணிக் கொண்டிருப்பவன், தானும் வாழாமல் பிறர் வாழவும் பாடு படாத நடைப்பிணமாகிவிடுகிறான். இந்த இழிநிலை தவிர்க்கத்தான் அறிவாயுதம் கையில் ஏந்தியிருக்கிறீர்கள். அதனை மறந்திடாதீர் ; தொல்லைகள் புயலெனத் தாக்கிடினும் ஏற்ற கொள்கையில் நிலையாக நிற்பவனே இலட்சியவாதி. அந்தப் பட்டியலில் இன்று பட்டம் பெறுவோர் பெயரும் இடம் பெறுதல் வேண்டுமென விழைகின்றேன்.

இலட்சியம் பற்றி நான் கூறிடத் தொடங்கியதும், மதுரைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் **1967-ஆம் ஆண்டு முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா** அவர்கள் ஆற்றிய உரையில், இலட்சியம் பற்றி எடுத்துக் கூறிய கருத்துக்கள் என் நெஞ்சில் நிழலாடுகின்றன. அதனை இங்குக் குறிப்பிடுவது பொருத்தமென்பதால் சில வரிகளை நினைவூட்டுகிறேன் :—

"கடினமாக உழைத்தால் மட்டுமே வெற்றி தரக்கூடிய இலட்சியங்கள் நம் முன் நிற்கின்றன. ஆனால், அதே வரிசையில் வசீகரப் பூச்சுக்களுடன், மயக்க மூட்டத்தக்க பேச்சுக்களையும் குறிக்கோள் என்ற பெயரால் நிற்கவிடுகின்றனர். தெளிந்து அறிதல் வேண்டும். நாட்டிலே ஒற்றுமை வேண்டும்—இது குறிக்கோள். அனைவரும் ஏற்கத்தக்கது ; இதன் வெற்றிக்காக அரும்பணியாற்றுவது மாணவர் கடன். நாட்டின் ஒற்றுமைக்காக—உன் மொழி, உன் மரபு அழிந்திடவும், ஒருப்பட வேண்டும் ; பிறமொழியின் ஆதிக்கத்தை ஒப்புக்கொள்ள வேண்டும்—இஃது அறிவுள்ள எவரும் ஏற்க முடியாதது. தன்மானமுள்ள எவரும் எதிர்த்தாகவேண்டியது. இதனை இலட்சியமென்றோ திட்டமென்றோ கூறுவது, இலட்சியம் என்பதற்கே களங்கம் தேடுவதாக முடியும். நாட்டுப் பொதுச் செல்வம் நாளும் வளர வேண்டும்; அதற்கான முறையில் அனைவரும் உழைத்திட வேண்டும் — இஃது எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தக்க இலட்சியம். நாட்டுச் செல்வம் பெருகட்டும், அது நாலாறு பேர்களிடம் சென்று சிக்கிக் கிடப்பினும் கவலை வேண்டாம் என்றுரைப்பது இலட்சியமாகாது —அதனைக் கேலிக்கூத்தாக்குவதாகும்.

"கூடி வாழ்ந்தால் கோடி இன்பம்—இனிய எளிய இலட்சியம். கூடி வாழ்வோம்; 'உன்னிடம் உள்ளது எனக்கு, என்னிடம் உள்ளதும் எனக்கு'—என்று முறை வகுத்திடல் கூடிவாழ்வதாகாது. 'ஆட்டுக் குட்டியைத் தின்றுவிட்ட ஓநாய், அன்றோடு ஆடு ஒன்றாக இணைந்துவிட்டது. நாங்கள் இணைபிரியாச் சோதரர் ஆகிவிட்டோம்' என்று கூறுவது போன்ற முறையில், 'ஒற்றுமை' வேண்டுவோர் நடந்திடக் கூடாது என்பதனை அறிவுறுத்த வேண்டும்."

அண்ணா அன்று கூறிய இந்த மணிவாசகத்தைத் தெளிவுற நன்குணர்ந்தால் இலட்சியத்தில் குழப்பத்திற்கு இடமேயில்லையல்லவா ?

## விஞ்ஞான அறிவு வளர்த்திடுவோம் !

கல்லூரிப் படிப்பும் பயிற்சியும் பெறுகிற மாணவர்க்கு வெளியிலிருப்போர் தக்க உதவி செய்திடின் மாணவர் பலரின் வேலை வாய்ப்புப் பற்றிய கவலையும் மறையும். நல்ல திறமையாளரும் குறிப்பிட்ட காரியங்களுக்குக் கிடைத்திடுவர். பெரிய தொழில் நிறுவனங்கள் (Big Industrial Houses) தங்கள் தேவைக்கேற்ற பயிற்சியுடன் மாணவர்களைப் படிக்கவைப்பதும், பயிற்சிக்கான செலவை ஒப்புக்கொள்வதும் பல நாடுகளில் இன்று மேற்கொள்ளப் பட்டுள்ள முறையாகும். ஆனால் நமது நாட்டில் தொழில் நிறுவனங்கள் இதற்கெனச் செலவிடுவது குறைவேயாகும். தொழிற் கல்வியும், விஞ்ஞானக் கல்வியும் அதையொட்டிய பயிற்சிகளும் மாணவர்கட்குக் கிடைக்கத் தொழில் நிறுவனங்கள் பங்கேற்பதோடு செலவுகளையும் ஓரளவு ஏற்றிட முன் வருதல் வேண்டும். எதிர்காலம் பற்றிய நம்பிக்கையுடன் மாணவர்கள் கல்வி பயில இந்த முறை, உறுதியாக வாய்ப்பளிக்கும்.

பழைய முறைகளைக் களைந்துவிட்டு, விஞ்ஞான அறிவுக்கும் மனித சமுதாயத் தேவைகட்கும் ஏற்றவாறு கல்வி முறை மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்பதோடு, அந்தக் கல்விக்கும் அன்றாட வாழ்வுக்கும் தொடர்பு இருந்திடத்தக்க சூழலையும் ஏற்படுத்தியாக வேண்டும். விஞ்ஞானத்தின் முக்கியத்துவம் பற்றிக் கோத்தாரி குழுவினர் கூறியவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன் :—

"Science has radically transformed man's material environment. In the technologically advanced countries the average span of human life has increased by more than a third over the last hundred years. Science *is* universal and so *can* be its benefits. Its material benefits are immense and far-reaching—industrialisation of agriculture and release of nuclear energy, to mention two examples—but even more profound is its contribution to culture. Science is liberating and enriching of the mind and enlarging of the human spirit. Its fundamental characteristic has turned out to be the possibility of unlimited growth. Every advance in science deepens our understanding of Nature. But it also heightens the sense of ignorance. *Nature is inexhaustibly knowable.* Nothing comparable to the scientific revolution in its impact on man's development and outlook has happened since the Neolithic times."

### புதிய பல்கலைக் கழகங்கள்

கடந்த ஆண்டுகளில் கல்லூரிகளின் எண்ணிக்கை வளர்ந்துள்ளது. மாணவர்களின் தொகையும் வளர்ந்துள்ளது. அதற்கேற்பக் கல்வியின் தரமும் அமைந்திடல் வேண்டும். அதுமட்டுமல்ல ; பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப வருங்காலத்திற்கான கல்வித் திட்டத்தையும் இப்போதே வகுத்திடுதல் வேண்டும். கல்வியின் திறனை மேம்படுத்தக் கல்லூரிகட்குத் தன்னாட்சி வழங்கும் திட்டம் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பல்கலைக் கழகங்களின் கண்காணிப்புக் கட்டுப்பாட்டுக்குள் கல்லூரிகள் சுயாட்சித் தன்மையுடன் இயங்குவது அவைகளின் ஆற்றலை அதிகப்படுத்திட உதவும். அதற்கெனத் தேவைப்படும் தகுதி பெற்ற கல்லூரிகள் இந்தப் பயனை விரைவில் பெற இருக்கின்றன.

கல்லூரிகளின் பெருக்கத்தை மனத்திற்கொண்டு, நிர்வாக வசதிக்காகவும், அந்த அடிப்படையில் பரவலாகக் கல்லூரிகளின் மீது சிறப்புக் கவனம் செலுத்துவதற்கு ஏற்ற வகையிலும் மேலும் இரு பல்கலைக் கழகங்களைத் திருச்சியிலும், கோவையிலும் அமைத்திடவும், விஞ்ஞானம் மற்றும் தொழிற் கல்விக்கான பல்கலைக் கழகத்தைச் சென்னையில் நிறுவிடவும் ஊக்கமுடன் முயன்று வருகிறோம்.

அரசும், பல்கலைக் கழகங்களும், கல்வித் துறையாளரும், படித்துக் கொண்டிருப்போரின் நிகழ்காலம் நம்பிக்கைக்குரியதாக இருந்திடவும், எதிர்காலம் ஒளிமய

மாகத் திகழ்ந்திடவும், பட்டம் பெற்றுள்ள உங்களைப் போன்ருேரின் உறுதுணை கிடைக்குமென்ற ஆர்வத்தில் திட்டங்களைத் தீட்டுவதைக் காண்கிறீர்கள்.

**அறிவுச் சேமிப்பு வங்கியாவீர் !**

மராட்டிய மாவீரன் சிவாஜியை வீரனுக்கிய அவன் தாய் ஜீஜிபாய்போல, மாணவர்களை ஆற்றலாளர்களாக்கிட ஆசிரியப் பெருமக்கள் அக்கறை காட்டுதல் வேண்டும். "சான்ருேனுக்குதல் தந்தைக்குக் கடனே" என்ற தமிழ்ப் பாடலுக்கேற்பத் தந்தையின் நிலையிலிருந்து மாணவச் செல்வங்களைச் சான்ருேர்களாக மிளிரச் செய்திடல் வேண்டும்.

இன்று நாடெங்கும் கட்டுப்பாட்டுத் தன்மை பற்றிப் பேசப்படுகிறது. ஒழுங்கும் கட்டுப்பாடும் இளந்தலைமுறைக்கு மிகமிகத் தேவை என்பதையும், கடமை உணர்வும், கண்ணியமும் தேய்ந்து போகாமல் காப்பாற்றப்பட வேண்டுமென்பதையும், தொடர்ந்து நல்லறிஞர்கள் வலியுறுத்தி வந்துள்ளார்கள். சட்டத்தால் மட்டுமே எங்களைக் கட்டுப்படுத்த முடியும் என்று எண்ணிடாமல், சட்டம் தேவைப்படாமலே இளைஞர்கள், தங்களை ஒரு கட்டுப்பாட்டுக்குள் தாங்களே நிறுத்திக்கொள்ளவேண்டும். துள்ளும் பருவமிது; அறிவேன். அள்ளும் சுவை சேர் பாட்டுங் கூத்தும் நாடிடும் வயதுதான்; நான் மறுத்திட மாட்டேன். தடுத்திடவும் நினைப்பதில்லை. ஆனல், இந்தப் பருவத்தில்தானே ஒரு நாற்பது ஐம்பது ஆண்டு காலத்திற்குத் தேவைப்படும் அறிவுச் சேமிப்பு வங்கியை நிறுவி, அதனை விரிவுபடுத்தும் திட்டங்களைத் தீட்ட வேண்டியிருக்கிறது! இந்தப் பருவத்தைக் கோட்டை விட்டுவிட்டால், பின்னர் எத்துணை இடர்ப்பட வேண்டியுள்ளது, அந்தச் செல்வத்தைத் தேடிப் பெற்றிட, என்பதை மறந்திடலாகாது.

கல்வியெனும் ஏணி கிடைக்காததால் சமுதாயத்தில் உயர்நிலை அடைய முடியாமல் தாழ்த்தப்பட்டும், பிற்படுத்தப்பட்டும் கிடந்த மக்களுக்கு அறிவாரக் கல்வி வழங்கவும், அவர்கட்கு மேம்பாடு அளிக்கவும் பெருவாரியான சலுகைகள் வழங்கப்படுகின்றன. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையும், சலுகை வழங்கும் கொள்கையும் ஆழ்குழியில் கிடப்போரைக் கரையேற்றுவதற்குத் தானே தவிர, சாதிப் பிரிவுகளின் சர்ச்சைகளை வளர்க்கின்றவர்களை உற்சாகப்படுத்துவதற்காக அல்ல. கல்விக் கூடங்கள், நம் அனைவரையும் மனிதர்களாக—இந்த நாட்டுக் குடிமக்களாக—ஆக்குதற்குப் பயன்பட வேண்டுமேயல்லாமல், சாதிப் போரின் களங்களாக அமைந்திடலாகாது.

சாதி பேதக் கொடுமை—சாதிப்பற்று—இவைகளைச் சாடிடவும், சமுதாயத்தில் சமத்துவமும், பொருளாதாரத்தில் ஏற்றத் தாழ்வற்ற நிலையும் படைத்திடவும், பகுத்தறிவுக் கதிரை எங்கணும் பரப்பிடவும், நாடு, வீரர் கோட்டமாக, விவேகபுரியாக விளங்கிடவும், வளம் குலுங்கவும்—இன்று பட்டம் பெறும் நீவிர், தூய தொண்டுள்ளம் கொண்டு, பயணம் மேற்கொள்ள வேண்டுகிறேன். தாழாது முயற்சியில் நாட்டம் கொள்வோர், ஊழையும் வென்றிடுவர் என்ற குறள் மொழியை உம்மால் தான் மெய்ப்பிக்க முடியும் எனக் கூறி, வாழ்த்தி மகிழ்ந்து, விடைபெற்றுக் கொள்ளுகின்றேன்.



# வள்ளுவர் வாக்கும் அண்ணலின் வாழ்வும்

சாமி பழனியப்பன்

அறிவு மனித சமுதாயத்திற்கு இன்றியமையாத ஒன்று. எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தி இன்ப வாழ்வு வாழும் சமதர்மச் சமுதாய அமைப்பிற்கு அறிவே அடிப்படையாக அமைகிறது. மற்றவர்க்குக் கிடைக்காத-மற்றவர் துய்க்க முடியாத ஒன்று தனக்கும் வேண்டியதில்லை, என்ற பெரு நோக்கமும் அறிவின்பாற் பட்டதேயாகும்! அது மட்டுமா? தரணிக்கு உற்ற துன்பத்தைத் தனக்குற்றதாகக் கருதி, அந்துன்பம் நீக்கி, இன்பம் சேர்க்கும் முயற்சியில் அறிஞர்கள் தயங்காது ஈடுபடுவர். இவற்றிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டுவது அன்பு-அருள்-அறிவு இம் மூன்றும் ஒன்றுக்கொன்று நெருங்கிய உறவும் தொடர்பும் உடையன என்பதேயாம்!



அன்று நமது நாடு, 'தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு, நின்றது; அதனை வாழ்விக்க வந்த காந்தியடிகள் ஏழைமையால்—வறுமையால்—சரியான சராசரி உடை உடுத்திக் கொள்ளக்கூட இயலாமல் நைந்து சாவாரைக் கண்ணுற்று நைந்துருகினர். எல்லாத் துறையிலுமே எளிய வாழ்வை மேற்கொண்டார். சட்டை போடுவதை விட்டு விட்டார். முழங்கால் வரை மட்டுமே உடையுடுத்தினர். ஆம்! அந்தக் கோலந்தான் அவரை 'அரை நிர்வாணப் பக்கிரி' ஆக்கியது.

ஒரு சமயம் அரை நிர்வாணப் பக்கிரியான காந்தியடிகள், ஒரு கல்விக் கூடத்தைப் பார்வையிடச் சென்றார். சட்டை போடாத காந்தியடிகளைப் பார்த்ததும் ஒரு மாணவன் அவர் அருகில் வந்து,

'பாபுஜி! நீங்கள் ஏன் சட்டை போட்டுக் கொள்ளவில்லை?' என்று கேட்டான்.

'தம்பி! எனக்குச் சட்டை கிடையாது!' என்று சிரித்த வண்ணமே பதில் கூறினர், காந்தியடிகள்.

காந்தியடிகள் இவ்வாறு கூறியதும், 'ஐயோ! பாவம்! காந்தியடிகளுக்குச் சட்டை வாங்கப் பணமில்லைபோலும்' என்று கருதிக் கொண்டு,

'பாபுஜி! அப்படியானல் நான் என் அம்மாவிடம் சொல்லி உங்களுக்கு ஒரு சட்டை தைத்துக் கொடுக்கச் சொல்லட்டுமா?' என்று அன்போடும் பரிவோடும் கேட்டான்' அந்தச் சிறுவன்.

'ஆகா! வாங்கிக் கொடுக்கச் சொல்லு. ஆனல் எனக்கு ஒரு சட்டை போதாதே!' என்றார் நகைத்துக்கொண்டே. மாணவன் விடுவதாக இல்லை.

'பாபுஜி! பரவாயில்லை. எத்தனை சட்டை வேண்டுமென்று சொல்லுங்கள். என் அம்மாவிடம் சொல்லித் தைத்துத் தரச் சொல்கிறேன்' என்றான்.

காந்தியடிகள் மேலும் சிரித்துக் கொண்டே, 'தம்பீ! என்னுடைய சகோதரர்கள் நாற்பது கோடிப் பேர் இருக்கிறார்கள். எனவே அவ்வளவு பேருக்கும் உங்கள் அம்மா சட்டைத் தைத்துக் கொடுப்பதென்றால் நானும் சட்டை போட்டுக் கொள்ளத் தயார்' என்றார்.

அன்று நாற்பது கோடி இந்திய மக்களுக்கு உற்ற துன்பத்தைத் தனக்குற்றதாகக் கருதிக் காந்தியடிகள் ஏழைமையை-எளிமையை மேற்கொண்டு, எல்லாருக்குமாக உழைத்ததை அந்த இளஞ்சிறுவன் புரிந்து கொண்டானே இல்லையா நமக்குத் தெரியாது. பிறர்க்கு உற்ற துன்பத்தைத் தனக்குற்றதாகக் கருதிக் காந்தியடிகள் வாழ்ந்தார் என்பதை நாம் புரிந்து கொள்ளுகிறோம்.

'மற்றவர் துன்பத்தைத் தனக்குற்ற துன்பமாகக் கருதி, அத் துன்பத்தைப் போக்க முனையவில்லையானல், ஒருவன் பெற்றுள்ள அறிவால் என்ன பயன்?' என்ற திருவள்ளுவரின் குறளுக்கு, காந்தியடிகள் வாழ்க்கையில் நிகழ்ந்த இந்த நிகழ்ச்சி ஒரு சிறந்த இலக்கியமாக இல்லையா?

'அறிவினல் ஆகுவ
துண்டோ? பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்ருக்
கடை'.

**அட்டை சொல்லும் செய்தி**

சென்னை-கிண்டி காந்தி மண்டபத்தில் அண்ணல் காந்தியடிகள் 107-வது பிறந்தநாள் விழாவை ஒட்டி, இவ்வாண்டு முதல்வர் கலைஞர் கருணாநிதி இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெறுவதை அட்டைப்பட ஓவியம் விளக்குகிறது.

மனித வாழ்வு விழுமியது. அந்த விழுமிய மனித வாழ்வில் விலைமதிக்க முடியாத ஒரு சிறந்த-கருவி, 'காலம்' என்பது. அரிதின் முயன்று ஈட்டிய பொன்னையும் பொருளையும் ஒருகால் இழக்க நேரிட்டாலும் அவற்றைத் திரும்பப் பெற்று விடலாம். வாழ்க்கையின் குறிக்கோளை-பிறவிப் பயனை உணர்ந்த சான்றோர்கள் காலத்தின் அருமையை மிக நன்ருக அறிவார்கள். அத்தகையவர்கள் ஒரு நொடிப் பொழுதைக் கூடப் பாழ்பட விடமாட்டார்கள்-பயன் உள்ளதாகவே கழிப்பார்கள்.

காந்தியடிகள், காலத்தின் அருமையை-அதன் பெருமையை மிக நன்ருக உணர்ந்திருந்தார். எனவே, தாம் காலத்தைப் போற்றியதோடு, தம் உடனிருப்பவர்களும்

காலத்தைப் போற்ற வேண்டும் என்று கருதினார். குறிப்பிட்ட காலத்தில் தம்முடைய அலுவல்களைச் செய்து முடிப்பார்-பிறர் காலந் தாழ்த்திச் செய்கிறார்கள் என்றால், அந்தக் காலக் கொலைஞர்களிடம் சற்றுக் கடுமையாகவே நடந்து கொள்வார்.

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் பொதுப்பணியில் மிகத் தீவிரமாக ஈடுபட்டிருந்த காலம். இரவும், பகலும் பொதுப்பணிக்காக அயராமல் உழைத்து வந்தார். இதற்கிடையே, பகவத் கீதையை மனப்பாடம் செய்ய வேண்டும் என்ற ஆசை பிறந்தது. பொதுப் பணிக்கே நேரம் போதாத போது பகவத் கீதையை எப்படி மனனம் செய்வது என்று அவர் கருதவில்லை. அதற்கென ஒரு தனிநேரம் ஒதுக்கவும் வழியில்லை. என்ன செய்ய முடியும்? ஒரு நேரம் கண்டுபிடித்தார். ஆம். காந்தியடிகள் பல்துலக்கக் குறைந்தது அரைமணி நேரம் ஆகும். எனவே பல் துலக்கிய வண்ணமே பகவத் கீதையை—மனனம் செய்வதென முடிவு செய்தார். அம்முயற்சியில் ஈடுபட்டார்.

நாள்தோறும் பகவத் கீதையின் இரண்டு வரிகளை ஒரு சிறுதாளில்எழுதுவார். அதைப் பல்துலக்கும் இடத்திலுள்ள சுவரில் ஒட்டிவிடுவார். கை, பல் துலக்கிக் கொண்டேயிருக்கும். கண்ணும் கருத்தும் பகவத் கீதை வரிகளைப் பாடம் செய்வதில் பதிந்திருக்கும். முடிவு என்ன தெரியுமா? ஒவ்வொரு நாளும் இரண்டிரண்டு வரிகள் மனப்பாடம் ஆகிவிடும். இப்படியே பகவத் கீதையில் பதின்மூன்று அத்தியாயங்களையும் காந்தியடிகள் மனனம் செய்து விட்டார். காலத்தின் அருமையை உணர்ந்து, அதனை எவ்வளவு பயனுள்ளதாகக் கழித்திருக்கிறார்!

நாள் என்பது தன்னை ஒரு கால அளவு போல நமக்குக் காட்டி., நம் உடம்பிலிருந்து உயிரைப் பிரித்து அறுக்கும் வாளாகவே உள்ளது. ஆராய்ந்து அறியும் அறிஞர்க்கு இந்த உண்மை புலனாகும்' என்கிற திருவள்ளுவர் கருத்தோடு காலம் போற்றிய காந்தியடிகளின் இந்த நிகழ்ச்சியை ஒப்பிட்டுப் பாருங்கள்.





''நாளென ஒன்றுபோல்
காட்டி உயிர்ஈர்க்கும்
வாளது உணர்வார்ப்பெறின்.'

• • •

நாம் கொண்ட கொள்கையில் சிறிதும் தளர்வின்றி அதனை விடாப்பிடியாகச் செய்யும் ஒரு பெரும் பிடிவாதக்காரர் காந்தியடிகள். ஒவ்வொரு சமயத்திலும் அவர் வெற்றி பெற்றே இருக்கிறார்.

தென்னாப்பிரிக்க அரசாங்கம் இயற்றிய கறுப்புச் சட்ட எதிர்ப்புப் போராட்டத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு இந்தியாவுக்குத் திரும்பினார், காந்தியடிகள். ஆமதாபாத்துக்கு அருகில் கோச்ராப் என்னும் சிற்றூரில் ஓர் ஆசிரமத்தை ஏற்படுத்தினார். 'சத்யாக்கிரக ஆச்ரமம்' என்பது அதன் பெயர்.

ஆமதாபாத் செல்வர்கள் பலரும் இப்பணிக்குப் பொருளுதவி செய்ய முன்வந்தார்கள். ஆச்ரமம் நன்றாக நடைபெற்று வந்தது. அப்போது ஒருநாள், 'தீண்டாத வகுப்பைச் சேர்ந்த ஒரு குடும்பத்தார், தங்களை ஆச்ரமத்தில் சேர்ந்து கொள்ள விரும்புகிறார்கள். அவர்களை ஏற்றுக் கொள்க' என்று திருவாளர் தக்கர்பாபாவிடமிருந்து காந்தியடிகளுக்கு ஒரு கடிதம் வந்தது. இவ்வளவு விரைவில் இத்தகையதொரு சோதனை ஏற்படுமெனக் காந்தியடிகள் நினைக்கவே இல்லை. ஆச்ரமத்திற்குப் பொருளுதவி செய்து வரும் ஆமதாபாத் செல்வர்களுக்கு இது பிடிக்காது என்பதும் காந்தியடிகளுக்கு நன்றாகத் தெரியும். அதற்காகத் தமது அடிப்படைக் கொள்கையிலிருந்து மாற அவர் விரும்பவில்லை. ஆச்ரமத்திலிருந்த நண்பர்களில் சிலர் இந்தச் சோதனையை வரவேற்றார்கள். அன்னை கஸ்தூரிபா தம் எதிர்ப்பைத் தெரிவித்தார். அதையும் காந்தியடிகள் பொருட்படுத்தவில்லை. இறுதியாக, அந்த அரிசனக் குடும்பம் ஆச்ரமத்தில் குடியேறியது. இச் செய்தியைக் கேள்வியுற்ற ஆமதாபாத் செல்வர்கள் ஆச்ரமத்திற்குத் தொடர்ந்து பொருளுதவி செய்வதை நிறுத்திக் கொண்டனர். காந்தியடிகளுக்கும், ஆச்ரமத்திற்கும் தொடர்ந்து பல தொல்லைகள் கொடுக்கப்பட்டன. காந்தியடிகளையும் அவரது நண்பர்களையும் சாதியைவிட்டு விலக்கும் முயற்சியும் நடைபெற்றது. காந்தியடிகள் எதற்கும் அஞ்சவில்லை. கொண்ட கொள்கையில் சிறிதும் தளரவில்லை. ஆமதாபாத் செல்வர்களின் பொருளுதவி நின்றதால் ஆச்ரமம் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்தது.

ஒருநாள் காலை யாரோ ஒரு செல்வர் திடீரென்று ஆச்ரமத்திற்கு வந்தார். அவர், காரில் இருந்த வண்ணமே, 'காந்திஜீ! தங்கள் ஆச்ரமத்திற்கு நான் சிறிது பொருளுதவி செய்ய விரும்புகிறேன். ஏற்றுக் கொள்வீர்களா?' என்று கேட்டார்.

'கரும்பு தின்னக் கூலியா? தாராளமாகக் கொணருங்கள். நாங்கள் இப்போது பணமுடையால் அவதிப் படுகிறோம்' என்றார் காந்தியடிகள்.

வந்தவர் போய்விட்டார். மறுநாள் அதே மாதிரி திரும்பி வந்து, காரில் இருந்த வண்ணமே, காந்தியடிகளிடம் ஒரு பண முடிப்பைக் கொடுத்து விட்டுத் தாம் யார் என்பதையே சொல்லாமல் போய் விட்டார். அந்த முடிப்பில் ரூபாய் 13,000 இருந்தது! பணி தொடர்ந்து நடந்தது.

'தளர்ச்சியில்லாத ஊக்கமுள்ளவனிடத்தில் செல்வம் தானே அவன் உள்ள இடத்திற்கு வழிகேட்டுக் கொண்டு செல்லும்' என்ற திருவள்ளுவர் கருத்தோடு காந்தியடிகளின் இந்த நிகழ்ச்சியை இணைத்துப் பாருங்கள்.

''ஆக்கம் அதர்வினாய்ச்
செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை''

• • •

'நான் ஒரு நெசவாளி—உழவன்-அதுவும் தாழ்த்தப்பட்ட குலத்தைச் சேர்ந்தவன்' என்று கூறிக் கொள்கிற காந்தியடிகள், தீண்டாமை ஒழிப்புக்காகவும் தாழ்த்தப்பட்ட மக்களின் மேம்பாட்டிற்காகவும் முழுமூச்சாகப் பணியாற்றினார். 'இறைவன் படைத்தானே உலக மக்களைப் படைத்தான்! ஆண்டவனின் மக்கள் தாமே எல்லாரும்! அப்படியிருக்க அவர்களுள்ளே உயர்வு தாழ்வு வேறுபாடு இருக்கலாமா?' என்று கேட்கிற காந்தியடிகள், எல்லாரும் எல்லாத் தொழிலும் செய்யலாம். தொழிலில் தாழ்வும் உயர்வும் இல்லை. செய்யும் தொழிலால் ஒருவருக்குச் சிறப்பும் சிறுமையும் வந்தெய்துவதில்லை என்ற கொள்கையுடையவர். காந்தியடிகள் தமது அரசியல் ஆசானான கோகலேயின் சரிகைத் துண்டைச் சலவை செய்து கொடுத்தாராம். 'சலவைத் தொழிலாளியைவிட நன்றாகச் சலவை செய்திருக்கிறீர்' என்று கோகலே பாராட்டினாராம்.

முடிவெட்டிக் கொள்வதிலும் அவர் திறமை பெற்றிருந்தார்.



ஒரு சமயம் 1901-ல் கல்கத்தாவில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொள்ளக் காந்தியடிகளும் சென்றிருந்தார். மாநாட்டுப் பிரதிநிதிகள் தங்குவதற்கென்று ஏற்பாடு செய்யப் பெற்றிருந்த விடுதியில் எங்கெங்கு நோக்கினும் குப்பை கூளங்கள்! சுகாதாரக் கேடு! கழிப்பறைகள் சுத்தம் செய்யப் பெறவில்லை! இதைக் கண்ட காந்தியடிகள் விடுதிகளைத் தூய்மைசெய்தல் சம்பந்தமாகத் தொண்டர்களுடன் பேசிப் பார்த்தார். 'அதெல்லாம் தோட்டியின் வேலை' என்று கூறிக் கொண்டே தொண்டர்கள் போய்விட்டார்கள்.

பிறகு, ஒரு விளக்குமாறு கொடுக்கும்படி கேட்டார். அந்தத் தொண்டர்கள், அதையும் செய்யவில்லை. பிறகு காந்தியடிகள் எப்படியோ ஒரு விளக்குமாற்றைத் தேடி [illegible] வந்து குப்பைகளைக் கூட்டி வாரி எறிந்தார். அப்பொழுதும் அந்தத் தொண்டர்கள் அருகில் வரவில்லை.!

பிறகு ஒரு நாள், கிராம சேவை செய்யும் தொண்டர்கள் சிலர் காந்தியடிகளைக் காண வந்தார்கள். 'முதலில் கிராமத்தை நீங்கள் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். தோட்டி வேலை கூட நீங்கள் செய்ய வேண்டும்' என்றார் காந்தியடிகள்.

'தோட்டி வேலை செய்தால், கிராம மக்கள் பிறகு நம்மை மதிக்க மாட்டார்கள். பிற தொண்டுகளைச் செய்ய முடியாமல் போய்விடுமே' என்றனர் தொண்டர்கள். மறுநாளிலிருந்து, காந்தியடிகள் தினமும் எழுந்தவுடன் ஒரு தோண்டியும் சிறு மண்வெட்டியும் எடுத்துக் கொண்டு செல்வார். பாதையில் உள்ள கழிவுகளையும் குப்பைகளையும் தோண்டியில் எடுத்துப் போட்டுக் கொண்டு வந்து ஆச்ரமத்தில் உள்ள உரக் குழியில் கொட்டி எருவாக்கத் தொடங்கினார். பாரிஸ்டர் காந்தியடிகள், செய்யும் தொழிலால் சிறுமையும் சிறப்பும் இல்லை என்பதைச் செய் முறையால் எவ்வளவு அழகாக உணர்த்தியிருக்கிறார்.

'பிறப்பளவில் உயிர்களுக்குள் பேதைமையில்லை; செய்யும்-தொழிலால் தொழிலின் வேறுபாடுகளால் சிறப்புப் பொருந்தாது! என்ற வள்ளுவரின் வாக்கைக் காந்தியடிகளின் மேற்கூறிய நிகழ்ச்சியோடு ஒப்பிட்டுப் பாருங்கள்:

''பிறப்பொக்கும் எல்லா
உயிர்க்கும்; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை
யான்''

• • •

மேனாடு சென்று வழக்குரைஞர் தொழிலுக்குப் படித்து முடித்துத் திரும்பிய காந்தியடிகள் பம்பாயில் சிலகாலம் தொழில் நடத்திக் கொண்டிருந்தார். அப்போது அவருடைய இரண்டாவது மகன் மணிலால் காந்திக்குக் கடுமையான டைபாய்டு காய்ச்சல் வந்தது. சுபவாதமும் கூடச் சேர்ந்துகொண்டது. கேட்கவா வேண்டும்? இரவில் வாய்ப் புலம்பலும் அதிகமாயிருந்தது. காந்தியடிகள் மருத்துவரை அழைத்து வந்து காட்டினார். வந்த மருத்துவர் மணிலாலைச் சோதித்துவிட்டு, நோயாளிக்கு மருந்தைவிடக் கோழிமுட்டையும்- கோழிக்குஞ்சு ரசமுமே அதிகக் குணமளிக்கும் என்றார். புலால் மறுப்புக் கொள்கையில் தீவிரமாக இருந்த காந்தியடிகளுக்குத் தமது கொள்கையை விட்டுக் கொடுக்க மனம் வரவில்லை. எனவே, மருத்துவரை நோக்கி, ''நாங்கள் சைவ உணவுக்காரர்கள்; வேறு ஏதேனும் யோசனை சொல்லுங்கள்'' என்றார்.

''உங்கள் கொள்கையைப் பாராட்டுகிறேன். ஆனால், குழந்தையின் உயிருக்கே ஆபத்து ஏற்படலாம் என்றிருக்கும்போது வீண் பிடிவாதம் செய்யாதீர்கள்; இந்தக் குழந்தையின் பொருட்டு நீங்கள் உங்கள் கொள்கையை இப்போது சற்று விட்டுக் கொடுப்பது நலம்'' என்றார் மருத்துவர்.

'ஐயோ! குழந்தை இவ்வளவு ஆபத்தான நிலையில் இருக்கிறதே, நாம் இப்போதைக்கு நமது கொள்கையைச் சற்று விட்டுக் கொடுப்பதால் பெரும் பழி ஒன்றும் வந்துவிடாது' என்று காந்தியடிகள் நினைத்தாரா? இல்லை என்ன சொன்னார் தெரியுமா?



'மருத்துவராகிய தாங்கள் உங்கள் கடமையைச் செய்து விட்டீர்கள்; ஆனால் என் பொறுப்பை நான் விட்டுவிட முடியாது. புலாலும், முட்டையும் மனிதன் உண்ணக் கூடா என்பது எனது உறுதியான சமயக் கொள்கை. அது சரியோ தவறோ எனக்குத் தெரியாது. ஆனாலும் உயிர் வாழ்வதற்காகக் கூடச் சிற்சில காரியங்களைச் செய்யக்கூடாது. இது எனது உறுதியான நம்பிக்கை. ஆதலின் தங்கள் யோசனையை ஏற்க இயலாமைக்கு மிகவும் வருந்துகிறேன்' என்று கூறிவிட்டுத் தமக்குத் தெரிந்த சில மருத்துவ முறைகளைக் கையாண்டு மணிலாலைக் குணப்படுத்திவிட்டார்.

இன்னொரு சமயம் அன்னை கஸ்தூரிபாய்க்கு அறுவைச் சிகிச்சை செய்யப் பெற்றது. டர்பன் நகரில் புகழ் பெற்ற ஒரு மருத்துவரே சிகிச்சை செய்தார். இனி ஒன்றும் கவலையில்லை என்ற நிலை ஏற்பட்டது. காந்தியடிகள் கஸ்தூரிபாயையும் மருத்துவரின் பொறுப்பிலேயே விட்டுவிட்டு ஜோகன்ஸ்பர்க்குக்குச் சென்றார். சில நாட்களில் நிலைமை திரும்பி கஸ்தூரிபாய் மிகவும் வலிவிழந்து, படுக்கையில் எழுந்து உட்காரவும் முடியாத நிலைமை

பெற்றார். உடனே மருத்துவர் காந்தியடிகளைத் தொலைபேசியில் கூப்பிட்டு, 'நிலைமை மிகவும்நெருக்கடி-நோயாளிக்கு மாட்டிறைச்சிச் சாறு கொடுத்தால்தான் பிழைப்பார்; அதற்குத் தங்கள் இசைவு வேண்டும்' என்றார்.

காந்தியடிகள் என்ன செய்தார் தெரியுமா? 'நான் அதற்கு இசைவு கொடுக்க முடியாது. கஸ்தூரிபாயையே கேளுங்கள். அவள் சிந்தித்துப் பதில் கூறக் கூடிய நிலையில் இருந்தாள் அவள் விருப்பம் போல் செய்யுங்கள்' என்றார்.

'அதெல்லாம் முடியாது. நோயாளியின் விருப்பத்தைக் கேட்பது தவறு. என் விருப்பப்படி உணவு கொடுக்கக்கூடாதென்றால் நோயாளியின் உயிருக்கு நான் பொறுப்பாளியல்ல. தாங்கள் உடனே புறப்பட்டு வந்து பொறுப்பை ஏற்றுக் கொள்ளவும்' என்று கண்டிப்பாகக் கூறி விட்டார் மருத்துவர்.

காந்தியடிகள் அடுத்த வண்டியிலேயே டர்பன் நகருக்குப் புறப்பட்டார். மருத்துவரைச் சந்தித்து, 'கஸ்தூரிபாய் விரும்பினாலன்றி அவளுக்கு மாட்டிறைச்சிச் சாறு கொடுக்க நான் ஒருப்படேன். அதனால் அவளுடைய உயிருக்கே ஆபத்து வருவதாக இருந்தாலும் சரி' என்றார்.

காந்தியடிகளுக்கும் மருத்துவருக்கும் நீண்ட நேரம் விவாதம் நடைபெற்றது. முடிவாக, காந்தியடிகள் கஸ்தூரிபாயை அங்கிருந்து போனிக்ஸ் ஆஸ்ரமத்திற்கு அழைத்துச் சென்றார். அங்குத் தமது மருத்துவ முறைகளைக் கையாண்டு கஸ்தூரிபாயைக் குணப்படுத்தினார். தமது அருமை மகனும், அன்புத் துணைவியும் இறந்துவிடக்கூடும் என்ற நிலையிலும் அவர்களைப் பிழைக்க வைப்பதற்குக்கூட ஒன்றின் உயிரைக் கொல்லவும், புலாலைக் கொடுக்கவும் ஒருப்படாத காந்தியடிகளின் புலால் மறுப்புக் கொள்கை எத்துணைச் சிறப்புடையது என்பதை எண்ணிப் பாருங்கள்.

'ஒன்றன் உயிரைக் கொல்வதால் ஒரு கோடி நன்மைகள் விளைவதாயினும் அவற்றையெல்லாம் இழிந்தனவாகவே எண்ணுவர் சான்றோர்' என்னும் வள்ளுவர் வாக்குக்குக் காந்தியடிகள் வாழ்க்கை எத்துணைப் பொருத்தமாகக் காண்கிறது!

"நன்றாகும் ஆக்கம்
பெரிதெனினும்சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை."

• • •

நமக்குத் தீமை செய்தவரை மன்னிப்பது சிறந்ததுதான். எனினும் அதைவிடச் சிறந்தது ஒன்றுண்டு. அதுதான் தீமை செய்தவனிடத்தும் அன்பு காட்டுவது.

தென்னாப்பிரிக்க அரசாங்கம், இந்திய மக்களின் குடியுரிமையைப் பறிக்கும் ஒரு கொடிய சட்டத்தை உருவாக்கியது. காந்தியடிகள் அதனைக் கறுப்புச் சட்டம் என்று கூறி, அதை ஒழித்துக்கட்ட மாபெரும் போராட்டம் ஒன்றைத் துவக்கினார். அமைதியான முறையில் அந்தச் சட்டத்தை மீறிக் காந்தியடிகள் உள்படப் பல ஆயிரம் இந்தியர்கள் சிறை சென்றனர். பலர் சிறையிலேயே உயிர் துறந்தனர். சிறையில் காந்தியடிகளும் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தார். எனினும் அவர் சிறிதும் சோர்வில்லாமல், மகிழ்ச்சியுடன் இருந்தார். சிறையிலே அவர் செருப்புத் தைக்கக் கற்றுக் கொண்டார். அத்தொழிலில் நிபுணராகவும் ஆனார். அழகும் உறுதியும் மிக்க ஓர் இணை மூடு செருப்பு (Boots) தைத்தார். அதை என்ன செய்தார் தெரியுமா? அதுதான் பெரும் வியப்பு!

தென்னாப்பிரிக்காவில் கறுப்புச் சட்டத்தை உருவாக்கித் தன்னையும் பல ஆயிரக் கணக்கான இந்தியர்களையும் ஆற்றொணாக் கொடுமைகளுக்கு ஆட்படுத்தினானே தென்னாப்பிரிக்காவின் தலைமை அமைச்சர் தளபதி ஸ்மட்ஸ், அவனுக்கு அன்பளிப்பாக அனுப்பி வைத்தார். அத்துடன், சிறையில் இருக்கும் பொழுது 'என் கைகளால் தைக்கப்பெற்ற இந்தச் செருப்புகளைத் தங்கள் உபயோகத்திற்காக அனுப்பியிருக்கிறேன்' என்ற ஒரு குறிப்பையும் அனுப்பினார்.

கல்நெஞ்சக்காரனான அந்தப் பிரதம மந்திரியின் உள்ளம் என்னபாடு பட்டிருக்கும்! அவன் கண்களில் நீர் தாரைதாரையாக வழிந்தது! 'ஐயகோ! அவரைச் சிறையில் அடைத்ததற்கு எனக்கு இவை பரிசுப் பொருள்களா?' என்று வியந்தான். அதுமட்டுமல்ல, 'அந்த மகான் தனது கைகளால் தைத்த இந்தச் செருப்புக்களை எனது கால்களில் அணிய தகுதி எனக்கில்லை; இவற்றை நான் மிகவும் புனிதப் பொருள்களாகவே கருதுகிறேன். உரிய மரியாதையுடன் இவற்றை நான் பாதுகாப்பேன்!' என்று கூறித் தன் வாழ்நாள் முழுதும் அவற்றை மரியாதைக்குரிய புனிதப் பொருள்களாகவே போற்றி வந்தான். கல் நெஞ்சம் கொண்ட ஸ்மட்ஸைக் கலங்க வைத்தது எது? துன்பம் செய்தவருக்கும் நன்மை செய்யும் தூய உள்ளம் கொண்ட காந்தியடிகளின் இனிய பண்பன்றோ?

'தமக்குத் தீமை செய்தவருக்கும் நன்மையே செய்யாவிட்டால், சால்பு எனும் அருங்குணத்தால் உண்டாகும் நல்ல பயன் வேறு என்னவாக இருக்க முடியும்?' என்ற திருவள்ளுவரின் வாக்கைக் காந்தியடிகளின் இந்த நிகழ்ச்சியோடு ஒப்பிட்டுப் பாருங்கள்.

"இன்னா செய்தார்க்கும்
இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு"

• • •

காந்தியடிகள் பிரிட்டோரியாவில் சிலகாலம் தங்கியிருந்தார். அவர் எங்கிருந்தாலும், என்னதான் அலுவல்கள் இருந்தாலும் மாலை வேளையில் உலாவச் செல்லத் தவறுவதில்லை.

பிரிடோரியாவில் நடைபாதைவாசிகளுக்கென்ச் சாலையின் இருமருங்கும் கெட்டியான நடைபாதை போடப்பட்டிருக்கும். அந்தப் பாதை வழியேதான் காந்தியடிகள் நாள்தோறும் மாலைப் பொழுதில் நடந்து செல்வார். அந்தப் பாதையின் ஓரத்தில் பிரிடோரியாவின் முதலமைச்சராான குரூகரின் இல்லம் இருந்தது. அது மிகப் பெரிய மாளிகையன்று. மிக எளிய தோற்றமுடையதே! அந்த இல்லத்தின் வாயிலில் எப்போதும் காவற்காரன் ஒருவன் நின்று கொண்டிருப்பான். அஃதோர் அதை வைத்தே அமைச்சரின் இல்லம் என்று அறிந்து கொள்ள வேண்டும்.

ஒருநாள், வழக்கம் போல காந்தியடிகள் அவ்வழியாக நடந்து சென்றார். அப்பொழுது அந்த வாயிலில் நின்று கொண்டிருந்த காவற்காரன் நேரே காந்தியடிகளிடம் வந்தான். தனது செருப்புக் காலால் காந்தியடிகளை நன்றாக மிதித்தான். 'ஏய்! கறுப்புக் கூலி! உனக்கு எவ்வளவு திமிர் இருந்தால் முதலமைச்சர் குடியிருக்கும் தெரு வழியே நடந்து வருவாய்?' என்று கேட்டு உருமினான்.

எதிர்பாராத வண்ணம் தாக்குண்டதால் காந்தியடிகள் உருண்டு போய்க் கீழே விழுந்தார். திடுக்கிட்டவராய்த் திரும்ப எழுந்து வந்தார். தம்மைத் தாக்கியதற்குரிய காரணம் யாது? எனக் காவற்காரனைக் கேட்டார். அப்பொழுது எதிர்ப்புறத்தே குதிரையில் வந்து கொண்டிருந்த வெள்ளைக்கார நண்பர் காந்தியடிகளை அணுகினார்.

'மிஸ்டர் காந்தி! நான் இங்கு நடந்த அக்கிரமத்தை நேரில் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். இவனைச் சும்மா விடக் கூடாது. நீங்கள் இவன் மீது வழக்குத் தொடருங்கள். நான் உங்கள் சார்பில் சாட்சி சொல்கிறேன்' என்றார். அப்பொழுது காந்தியடிகள் மிகவும் அமைதியாக,

"நண்பரே! இதில் வழக்குத் தொடர என்ன இருக்கிறது? அது அவசியமில்லை. அவன் பல்லாயிரக்கணக்கான இந்தியர்களிடம் நடந்து கொள்வது போலவே என்னிடமும் நடந்து கொண்டிருக்கிறான். பாவம்! அவனுடைய அறியாமையை நான் மன்னிக்கிறேன்!' என்றார்.

இந்தச் செய்தி, செய்தித்தாள்களில் வெளியாயிற்று! இதனைப் படித்தறிந்த உலக அறிஞர்கள் காந்தியடிகளின் இந்தப் பொறுமைக் குணத்தைக் கண்டு வியந்தார்கள்; அன்னிபெசண்ட் அம்மையார் 'மகாத்மா' என்று பாராட்டினார். அன்றைக்கிருந்து உலக மக்களும் அவரை 'மகாத்மா' என்று அழைக்கத் தொடங்கினர்.

•

"குற்றம் செய்தவனைத் தண்டித்தவருக்கு அந்த ஒரு நாள் இன்பமாகத் தோன்றும்; அவ்விதம் தண்டிக்காமல், அவன் செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளும் குணக்குன்றுக்கு இவ்வுலகம் அழியும் வரை புகழ் நிலைத்து நிற்கும்!" என்ற வள்ளுவர் வாக்கிற்குக் காந்தியடிகளின் வாழ்க்கையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி இலக்கியமாக இல்லையா?

"ஒறுத்தார்க்கு ஒருநாளை
இன்பம்; பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்."

---

# பார்த்தோம்! படித்தோம்!!

**16-9-75** இதழில் "உணவு தந்தாய் அண்ணா" கவிஞர் வேழவேந்தனின், 'அடி எடுத்தீர் முடித்தோம் அண்ணா' புலவர் பொன்னிவளவனின், 'அந்த தமிழ்ச் சொல்' கவிஞர் வைரமுத்துவின் 'நான்கடி இமயம்' புலவர் இளஞ்செழியனின், 'தோல்வி இல்லை' புலவர் தமிழ்ப் பித்தனின், 'இன்ப நாள்' போன்ற கவிதைகள் "தமிழரசு"இதழை முழு நிறைவு செய்துள்ளது.

—எம். எஸ். நந்தா,
வேதாரண்யம்.

எல்லாத் தமிழரசு இதழிலும் மருத்துவக் கட்டுரைகளும், மருத்துவச் செய்திகளும் வந்தால் பயனுள்ளதாக அமையும்.

—சு. அமிர்தலிங்கன்,
சென்னை—14.

பொது அறிவை வளர்த்துக் கொள்ளத் 'தமிழரசு' பெருந்துணை புரிகின்றது. அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்து வெளியிடப்படும் புள்ளி விவரங்களும், தகவல்களும் என்போன்ற மாணவர்களுக்குப் பயன் தருவனவாக இருக்கின்றன.

—எம். செல்வராசன்,
திருவள்ளூர்.

'தமிழரசு' அறிஞர் அண்ணா சிறப்பிதழ் கண்டேன். தித்திக்கும் தீந்தமிழ்க் கவிதைகள் அறிஞர் அண்ணாவையே கண்முன் நிறுத்தின. அண்ணாவின் 'வேலை போச்சு' சிறுகதை சிரிப்புக்கும் சிந்தனைக்கும் விருந்தாய் இருந்தன.

—கே. சுபாஷிணி,
சென்னை—83.

அருமையாக அச்சாகிவரும் தமிழரசில் படக்கதை ஒன்று வெளியிட்டால் என்ன? தமிழரசின் அழகான அச்சுக்கு மகுடம் தரிப்பது போல் இருக்குமே!

—இரா. மலையப்பன்,
திருச்சிராப்பள்ளி.

தமிழரசு இதழில் தொடர்ந்து இடம் பெற்று வந்த 'கேளுங்கள் கொடுக்கப்படும்' பகுதி, இப்பொழுதெல்லாம் வருவதில்லையே! ஏன்? தொடர்ந்து வெளியிட்டால் எங்களைப் போன்ற விவசாயிகளுக்குப் பெரிதும் பயன்தரும்.

—உ. சுப்பையன்,
அ. இராமராஜ்,
வெம்பூர்.

## எளிதில் கிடைக்கும் புள்ளி விவரங்கள்....

தமிழரசு இதழைத் தொடர்ந்து படித்து வருகிறேன். எனக்குப் பாராளுமன்றச் சொற்பொழிவுகளுக்கு அவசியமும் கூட. மிகவும் பயனுள்ள புள்ளி விவரங்கள் இடம் பெற்று வருவது பாராட்டத்தக்கது. ஒரு நாள் செலவழித்தால் கிடைக்கக் கூடிய செய்தியை, புள்ளி விவரங்களைத் 'தமிழரசு' எளிதில் கொடுத்து விடுகிறது.

—ஈ. ஆர். கிருஷ்ணன்,
எம். பி.

'நன்றிக்கு விலை' என்னும் சிறுகதையைப் பார்த்தேன் — படித்தேன். முருகையன், அவன் மைத்துனன் முடிவு கண்டு கண்ணீர் வடித்தேன் ஆனால் அவனால் விட்டுச் செல்லப்பட்ட குழந்தைகள் இருவரையும், அவனது தங்கையையும் வளமுடன் வாழ வைக்க நமது தமிழ்நாடு அரசின் ஆதரவற்ற குழந்தைகளைக் காக்கும் கருணை இல்லமும் விதவைப் பெண்டிர்களின் மறுவாழ்வுத் திட்டமும் காலத்தால் செய்யும் இப்பேருதவி இருப்பது கண்டு நான் ஆனந்தக் கண்ணீர் விட்டேன் கதை முடிவில்.

—தெ. காதர் முகையதீன்,
பெருநாழி.



# உங்கள் குழந்தை புத்திசாலியா? மந்தமானதா?

''அடுத்தது காட்டும்
பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்''

என்ற குறள், ''அடுத்துள்ள பொருள்களை அப்படியே காட்டும் பளிங்குக் கற்களைப் போல், முகம், நெஞ்சத்தில் உள்ளதை அப்படியே எடுத்துக் காட்டும்!'' என்று விளக்குகிறது!

அதுபோலவே, குழந்தைகளின் கையெழுத்து-குழந்தைகளின் நடத்தையை-குணங்களை- வெளிப்படுத்தும் கண்ணாடியாக விளங்குகிறது! பொதுவாகப் பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளின் கையெழுத்து அழகாக இருக்க வேண்டும் என்று விரும்புகின்றார்கள். ஆனால் 'குழந்தைகளின் கையெழுத்தே அக்குழந்தைகளின் நடத்தையை வெளிப்படுத்தும் கண்ணாடி!' என்ற 'உண்மையைப் பெரும்பாலான பெற்றோர்கள் அறியாமல் உள்ளனர்!

குழந்தை புத்திசாலியாக இருக்கின்றதா அல்லது மந்தமாக உள்ளதா என்பதை அறிந்து கொள்ள விரும்பினால் முதலில் பெற்றோர்கள் அக்குழந்தையின் கையெழுத்தைக் கவனிக்க வேண்டும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் கையெழுத்தை நன்கு கவனித்துப் பார்த்து, கையெழுத்து அமைந்துள்ளதற்கேற்ப உடனடியாகத் தக்க முறைகளை மேற்கொண்டால் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் பல பிரச்சனைகளை-சங்கடங்களை-தவிர்த்திட முடியும் என்று கையெழுத்தைக் கொண்டு நடத்தையை ஆராயும் வல்லுநர்கள் ( Graphology eXperts ) கருதுகின்றார்கள். வெளிப்படுத்த முடியாமல் குழந்தையின் மனத்தில் உள்ள பயம் அல்லது பள்ளிக்கூடத்தில் தன் பணியை நிறைவாகச் செய்வதில் அக்குழந்தைக்கு உள்ள சங்கடம் அல்லது நண்பர்களுடன் நன்கு பழக முடியாமல் உள்ள சங்கடம் ஆகியவையெல்லாம் அக்குழந்தையின் கையெழுத்தில் பிரதிபலிக்கின்றன!

சிலநேரங்களில், குழந்தைகள் தங்கள் மனத்தில் சில கருத்துக்களைக் கொண்டிருக்கும். ஆனால் அக்கருத்தைப் பெற்றோர்களிடம் வெளிப்படுத்தினால் பெற்றோர்கள் தடுப்பார்கள், அல்லது திட்டுவார்கள் அல்லது தரக்குறைவாக நினைப்பார்கள் என்ற பயத்தால், வெளிப்படுத்த முடியாமல் தயங்குகின்றன! சில நேரங்களில், குழந்தைகள் தங்கள் எண்ணத்தை எவ்வாறு வெளிப்படுத்துவது என்று தெரியாமல் திண்டாடுகின்றன! இதன் காரணமாக குழந்தையின் மனத்தில் உள்ள அழுத்தம் ( Tension ) மலையென வளர்ந்து விடுகின்றது! அதனால், பள்ளிக்கூடத்தில் குழந்தையின் முன்னேற்றம் மிகவும் மெதுவானதாக இருக்கும் அல்லது மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கும்!

இம்மாதிரி இருக்கும்போது, குழந்தையின் கையெழுத்தை ஆராய்வதன் மூலம், பெற்றோர்கள் தங்கள் குழந்தையின் மனநிலையை உணரலாம்! இவ்வாறு ஆராய்வது குழந்தையின் மனத்தில் உள்ள தவறான கருத்துக்களை அகற்றிட உதவும். காலத்தில் நடவடிக்கை எடுப்பதன் மூலம், 99 சத அளவுக்கு குழந்தைகளை முன்னேற்றிவிட முடியும்.

இயல்பான, நோய் நொடியற்ற குழந்தையின் கையெழுத்து உறுதியானதாகவும், தெளிவானதாகவும் இருக்கும் கையெழுத்தில் காணப்படும் ஒரே அழுத்தம் ( Pressure ) ஒரே மாதிரியாக இருக்கும். 'காப்பி நோட்' புத்தகத்தில் உள்ளது போல் ஒரே மாதிரியாக-ஒப்பானதாக-இருக்கும். அவ்வாறு கையெழுத்து அமைந்திருக்குமானால், அது 'குழந்தை படிப்படியாக வளர்ந்து வருவதுடன் மகிழ்ச்சியாக உள்ளது' என்பதையும், அக்குழந்தைக்குப் பள்ளிக்கூடத்திலோ நண்பர் அல்லது அதனுடைய எந்தவிதத் களிடத்திலோ தொல்லையும் கிடையாது' என்பதையும் காட்டுகிறது. அத்தகைய குழந்தையின் மனம், உடல் ஆகிய இரண்டும் ஒரே நேரத்தில் வளருகின்றன.

உங்கள் குழந்தை எழுதிக் கொண்டிருக்கும் பொழுது கவனியுங்கள்! சில குழந்தைகள் மிகவும் மெதுவாக-பேனாவிலிருந்து வார்த்தைகள் வெளிவராதது போல் அல்லது வெளி வார்த்தைகள் எளிதில் வெளிவர முடியாது திணறுவது போல் எழுதுகின்றன. இது, உங்கள் குழந்தை உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டும் என்பதை உங்களுக்கு உணர்த்தும் ஓர் எச்சரிக்கையாகும். ஏனெனில், இது மூளை வளர்ச்சி குன்றுவதைக் காட்டும் அடையாளமாகும்! அதனால், உடனடியாக உங்கள் குழந்தையை கவனிக்க வேண்டும்.

சில நேரங்களில், வார்த்தைகளின் நடுவில் உள்ள எழுத்துக்கள் தொடர்பறுந்து உள்ளதைக் கா[illegible]ன்றன. அது எழுத்தோட்டம் உடைந்திருப்பதைக் ( Flow of writing is broken ) காட்டுகிறது. இது, தன்னுடைய எண்ணங்களை ஒன்றுபடுத்தி இணைப்பதில் குழந்தைக்கு உள்ள சங்கடத்தையும் (கஷ்டம்), மனத்தில் உள்ள போராட்டத்தினால் குழந்தையின் வளர்ச்சி தடைபடுவதையும் காட்டுகிறது.



சில குழந்தைகள், தாளின் மேல் மிகவும் அழுத்தமாக எழுதுகின்றன. இது குழந்தையின் மனத்தில் உள்ள அழுத்தத்தைக் ( Pressure on the mind ) காட்டும் அடையாளமாகும்! மிகுந்த அழுத்தத்துடனும், எழுத்தோட்டத்தில் வீச்சுக்கோடுகள் முடிவு பெறாமலும் ( without ending strokers ) எழுதியுள்ளது படிக்க முடியாத அளவுக்கு அமைந்திருக்குமானால், அது குழந்தையின் மனத்தில் உள்ள ரகசியமான பயத்தையும், நிம்மதியற்ற நிலையையும் ( Anxiety ) காட்டுகிறது.

இவ்வாறில்லாமல், தாளின் மேல் மிகமிக அழுத்தத்துடன் கடித்த எழுத்துக்கள் ( thick letters ) காணப்படின், அது குழந்தை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை விளக்குகிறது. ஆனால் மென்மையான, உறுதியற்ற மன வலிமை உள்ள குழந்தைகள் எழுதும் தாளின்மேல் மிகக் குறைந்த (இலேசான) அழுத்தத்துடன் எழுதுகின்றன. அதனால் கையெழுத்து தெளிவில்லாமல் (இலேசாக) காணப்படுவதுடன் ' t ' என்ற எழுத்தில் உள்ள குறுக்குச் சந்திப்பும் தெளிவின்றி மிக இலேசாக எழுதப்பட்டிருக்கும்.

மெதுவாக எழுதுவதும். வட்டமான எழுத்துக்கள் ( Rounded letters ) நிறைந்திருப்பதும் குழந்தை மெதுவாக வளர்கிறது என்பதைக் காட்டுகின்றன. அக் குழந்தைக்குப் பெற்றோர்களின் கவனிப்பும், அன்பும் தேவை. மிகுந்த கவனத்துடன் பெற்றோர்கள் அக்குழந்தையைக் கவனிக்க வேண்டும்.

இதற்கு எதிர்மாறாக, வேகமாக வளரும் குழந்தை குறுகிய கோணத்தில் ( Sharp angles ) [illegible]கின்றன. அக்குழந்தை [illegible] மற்றும் ' j ' என்ற எழுத்[illegible] புள்ளி வைப்பதில் [illegible]த்தாதுடன், [illegible] கோடு போடு[illegible]கின்றன. அத்தகைய குழந்தைகளுக்கும் உடனடி கவனிப்புத் தேவை. இல்லாவிட்டால், அக்குழந்தை ஒரு ( Rebel ) புரட்சிக்காரனாக வளரும்!

சில நேரங்களில் குழந்தைகள் ' h ', ' d ' எழுதும் போது, போன்ற எழுத்துக்களின் மேல் பகுதி வளைவும், ' g ', ' y ' போன்ற எழுத்துக்களின் கீழ்ப்பகுதி வளைவும் முழுமையாகவும், திறந்தும் இருப்பதை நாம் காண்கிறோம். இது குழந்தை மகிழ்ச்சியாகவும், நல்ல கொள்கைகளை ஏற்றுக் கொள்கின்ற பண்புகளுடனும் உள்ளது என்பதற்கான அடையாளமாகும்.

சில குழந்தைகள், குறைந்த நம்பிக்கையுடன் எழுதத் தொடங்கி நன்கு எழுதுகின்றன. ஆனால் விரைவில் அக்குழந்தைகளின் எழுத்தோட்டம் இலேசாகக் ( weak ) காணப்படுகின்றன. ஒரே வாக்கியத் தொடரில் - நல்ல தெளிவான எழுத்துக்களுடன் தொடங்கி, தெளிவற்ற - இலேசான - எழுத்துக்களுடன் முடிக்கப்பட்டிருத்தல் போன்ற இரு குறிப்பிடத் தகுந்த மாற்றங்கள் காணப்படுகின்றன. இது, குழந்தைக்குத் தன்னம்பிக்கை இல்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது.

தற்பொழுது, கையெழுத்தைக் கொண்டு, நடத்தை மதிப்பிடும் முதலியவற்றை ( Graphology ) புகழ் பெற்று வருகிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள, கையெழுத்தைக் கொண்டு நடத்தையைக் கூறும் புகழ் பெற்ற வல்லுநர்கள், குழந்தைகளிடையே பல்வேறு சோதனைகளை நடத்தியுள்ளனர். அவர்களின் சோதனை மிகச் சரியான முடிவுகளை வெளிப்படுத்தியுள்ளது. அவர்கள் குழந்தைகளிடையே நடத்தியச் சோதனைகள் அக்குழந்தைகளின் மனவளத்தை-கையெழுத்துக்களிலிருந்து - தெரியப்படுத்தியுள்ளன. அம்முடிவுகளில், 50 சதத்திற்கும் மேற்பட்டவை மிகச் சரியாக இருந்துள்ளன. சோதனைக்குட்படுத்தப்பட்ட குழந்தைகளைப் பற்றி நேரடியாக எதுவும் தெரியாதிருந்த போதிலும், அவ்வல்லுநர்களால் அக்குழந்தைகளின் மனவளத்தையும், குணங்களையும் பற்றி நன்கு தெரிவிக்க முடிகிறது.



வளரும் பருவ ஆண்டுகளில் ( Formative years ) குழந்தையின் மனவளத்தைப் பெற்றோர்கள் தெரிந்து கொண்டால், அவர்கள் அக்குழந்தையை அவ்வப்பொழுது வழிபடுத்தி, எதிர்காலத் தொல்லையில் இருந்து விடுவிக்கலாம்! இவ்வாறு செய்வதால், அக்குழந்தையிடம் தனி மனிதர் சிறப்பியல்புகளும், நற்குணங்களும் வளர்வதற்கு பெற்றோர்கள் உதவ முடியும்.

ஒரு குழந்தையின் கையெழுத்திலிருந்து அதன் நடத்தையைப் பற்றி முழு அளவில் முடிவுகூறிட முடியாததென்பது உண்மையெனினும், டாக்டர் பென்சன் அவர்கள் கூறியது போல், ''நடத்தையைப் பற்றிய பகுப்பாய்வு செய்வதற்குள்ள. இதர முறைகளுடன் இணைத்துப் பார்க்கும்பொழுது இம்முறை (கையெழுத்தைக் கொண்டு நடத்தையை மதிப்பிடும் முறை) பயனுடையதாகும்''.



# நுரையீரல் நோய்களும் மருத்துவமும்

மனித உயிர் இயக்கத்துக்கு மிக இன்றியமையாதன இதயம் நுரையீரல், மூளை ஆகிய மூன்று உறுப்புக்களாகும். இவற்றுள், நுரையீரல் மனிதன் இந்த மண்ணிலே பிறந்த கணம் முதல் வாழ்வின் இன்ப துன்பங்களுக்குக் கால்கோள் விழாவாக அவன் முதன்முறை அழுகின்ற போது விடுகின்ற மூச்சிலிருந்து, அவன் வாழ்வின் இறுதி வினாடியில் விடுகின்ற கடைசி மூச்சு வரை இடையறுது, ஓய்வேதுமின்றிப் பணியாற்றி வருவது உலகில் ஒரு விந்தையே!

மனித நெஞ்சம் பேசும் சுவையான கதைகள் ஆயிரம் ஆயிரம்! நெஞ்சத்தே கோயில் கொண்டிருக்கும் நுரையீரல் பேசும் சாகசக் கதைகளும் எத்துணை எத்துணையோ!

நுரையீரல் நோய்களில் மிக முக்கியமானதாக இந்தியத் துணைக் கண்டத்தில் கருதப்படுவது சயரோகமே. சயரோகத்தை ''என்புருக்கி நோய்'', என்ற பெயரால் பொருள்பட அழைக்கின்றோம். ''என்பு தோல் போர்த்த உடலினை,'' உருக்குவதால் ''என்புருக்கி நோய்'', என்ற பெயர் வந்தது. இந்திய மக்கள் தொகையில் 1.5 முதல் 2.5 விழுக்காடு மக்கள் நுரையீரல் சயரோகத்தால் பாதிக்கப்படுகின்றனர். இந்தியாவில் சயரோகத்தால் ஆண்டொன்றுக்கு 50,000 குழந்தைகள் இறக்கின்றன. சயரோகக் கிருமிகளைச் சுவாசிப்பதால் இது ஏற்படுகின்றது. சயரோக நோயாளி ஒரு நாளில் இருமுகின்ற போது 40 கோடிக் [illegible]ற்றோடு கலக்கின்றன. ஒரு மனிதன் ஒரு கிருமியைச் சுவாசித்தாலும் அவனுக்கு நோய் ஏற்பட முடியும். ஆக, ஒரு நோயாளி ஒரு நாள் இருமும் போது வெளியாகின்ற 40 கோடிக் கிருமிகள், ஒவ்வொன்றும் இந்தியக் குடிமகன் ஒவ்வொருவனையும் தனித் தனியாகத் தொற்றுவதாகக் கொண்டால், ஒரு சயரோக நோயாளியால் இந்திய மக்கள் 40 கோடிப் பேருக்கும் நோயைப் பரப்ப முடியும். சயரோகத்துக்கு அடிப்படைக் காரணம் வறுமையே. ஊட்டச் சத்து இல்லாத உணவு, காற்றோட்டமில்லாத சிறிய குடிசை வீடுகளில் நெருக்கமான சூழலில் வாழ்தல் ஆகியவை முக்கிய காரணங்கள். ஆகவேதான் வறுமை தாண்டவமாடும் நம் நாட்டில் இந்த நோய் அதிகம். நோயின் ஆரம்ப அறிகுறி, இருமல், மாலை வேளைகளில் காய்ச்சல், பசியின்மை, சோர்வு, உடலின் எடை குறைதல் ஆகியவை. பலர் இருமும் போது இரத்தம் கக்குவார்கள். இரத்தம் கக்குவது, ''நோய் ஆரம்பத்தின் முடிவும், வாழ்க்கை முடிவின் ஆரம்பமும்'', ஆகும். 30 ஆண்டுகளுக்குமுன், சயரோகம் ஒரு பயங்கர நோயாகக் கருதப்பட்டது. போதிய சிகிச்சை முறைகள் அப்போது இல்லை. ஆனால் இன்று ஸ்டெப்டோமைசின், ஐசோனியசைடு, பி.ஏ.எஸ். போன்ற அரிய மருந்துகள் வியத்தகு முறையில் குணம் தருகின்றன. இந்த மருந்துகள் குணமளிக்கவில்லை என்றால் பைராசினமைட், எத்தியோனமைட், காப்ரியோமைசின், சைக்கிலோசிரின், தையசிடசோன் ஆகிய பிற நவீன மருந்துகள் நோயைக் குணப்படுத்தப் பயன்படலாம். எதிரைஃபாம்பிஞம்பியூட்டால், ரைஃபாம்பிசின் ஆகிய மிக அண்மைக் கண்டுபிடிப்புக்கள் மிக அதிக அளவில் குணம் தருகின்றன. சிகிச்சை சயரோகத்துக்குச் சிகிச்சை பயன் யாக ஒரே மருந்தைப் பயன்படுத்துவது தவறு. எப்போதும் 2 அல்லது 3 மருந்துகளை இணைத்துப் பயன்படுத்த வேண்டும். நோயாளி குறைந்தபட்சம் நோய் கண்டு பிடிக்கப்பட்ட பின் 18 மாதம் இடைவெளி தொடர்ந்து, இன்றிச் சிகிச்சை பெறுவது மிக மிக அவசியம். மருந்துகளைப் போதிய அளவில், ஒழுங்காகப் பெறுவது இன்றியமையாதது. இந்த உண்மையை உணரா[illegible] பலர் ஒழுங்கைமாக [illegible]



டாக்டர் பி.எம்.ரெக்ஸ்

யம் செய்வதால் குணம்பெருது சானடோரியத்தில் பல்லாண்டுகளாக அடைக்கலம் புகுந்து சத்திர சிகிச்சை பெறும் நிலை ஏற்படுகின்றது. நோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து, போதிய சிகிச்சையை ஒழுங்காக மேற்கொண்டால் முழுக் குணம் ஏற்படும்; இதில் ஐயமேயில்லை! பிசிஜி எந்த அளவு நோயைத் தடுக்கும் என்பது விவாதத்திற்குரியது. அப்படியே அது நோய்க்குத் தடுப்புத் தந்தாலும், தடுப்பின் கால அளவு 5 ஆண்டுகளே.

நுரையீரலைப் பாதிக்கும் இன்னொரு முக்கிய நோய் ஆஸ்துமா. ஆஸ்துமா நோயாளியின் நுரையீரலில் உள்ள மூச்சுக் குழலின் மெல்லிய தசை சுருங்குவதால் மூச்சுத் திணறல் ஏற்படுகின்றது. நுரையீரலின் உள்ளே, மூச்சை உள்ளே எடுக்கும் போது சென்ற காற்று, மூச்சுக் குழலின் மெல்லிய தசை சுருங்குவதால் வெளியே வர முடியாமல் மூச்சுத் திணறல் வருகின்றது. பிறந்த சின்னஞ் சிறு குழந்தை முதல் கல்லறையிலே காலெடுத்து வைக்கின்ற பருவத்தினர் வரை, செல்வர், எளியர் என்ற சமுதாய வேறுபாடுகள், மகளிர், ஆடவர் என்ற பால் வேறுபாடுகள் இன்றி ஆஸ்துமா வருகின்றது. பெரும்பாலும் குளிர், பனிக் காலங்களில், விடியற்போதில் வரும்; இளஞாயிறு எழும் வேளையில், தன்னிலே மறைந்துவிடும். மீண்டும் மறுநாள் வரும். நோயாளி மூச்சு விடமுடியாது திணறுவார். பார்க்கப் பரிதாபமாக இருக்கும். உடல் முழுதும் வியர்வை கொட்டும். இந்த நோய் ஏன் வருகின்றது? பல காரணங்கள் : தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காரணத்தால் வரலாம்; முக்கியக் காரணமாக நான் கருதுவது ஒருவரின் மனோநிலையே. வாழ்க்கையில் நெருக்கடி, தேர்வுக்குச் செல்லும் மாணவர்க்கு உரிய பதட்ட நிலை, உணர்ச்சிகளுக்கு அடிமையாகின்ற கோபதாப நிலை ஆகியவைகள் அடிப்படைகள். சிலருக்கு ''அலர்ஜி''. எனும் ''ஒவ்வாமை'', காரணமாக இருக்கலாம். சில உணவு வகைகள், தக்காளி, சாத்துக்குடி, புதினு இலை, தேயிலை, முட்டை. இருல் மீன் போன்றவை காரணம். வீதியில் எழும் புழுதிப் படலம், படுக்கையில் உள்ள பருத்தி, கம்பளித் துகள்கள் இவற்றைச் சுவாசிப்பது ஒரு காரணம். வீட்டில் வளரும் கிளியின் இறகு, நாய், பூனைகளின் ரோமங்களும் ஒவ்வாமை நிலையை ஏற்படுத்தலாம். நோயாளிகள் தத்தமக்கு இவற்றில் எவை ஒத்துவரவில்லை என்பதனை நுண்ணறிவால் கண்டு, அவற்றை அறவே விலக்க வேண்டும். பாரம்பரிய நோய் என ஆஸ்துமாவைக் கோடிட்டுக் காட்டும் கருத்தும் பரவலாக ஏற்றுக் கொள்ளப்



இரண்டு நுரையீரல்களிலும் முற்றிய காசநோய். பல இடங்களில் நுரையீரல் அரிக்கப்பட்டிருக்கிறது.




| | | | | |
|---|---|---|---|---|
| நுரையீரல் | அ. | சிகிச்சைக்கு முன்பு | ஆ. | சிகிச்சைக்குப் பின்பு |
| காசநோய் | இ. | சிகிச்சைக்கு முன்பு | ஈ. | சிகிச்சைக்குப் பின்பு |

அக்டோபர் 16 இதழில் தொடங்குகிறது!

பட்டுக்கோட்டை குமாரவேல் எழுதும்

# நிழல்



புதிய தொடர்கதை


இலக்கியங்களுக்கு
இறவாப் புகழ் தருவது...

காகிதம்

ஹோமர் முதல் ஹெமிங்வே வரை,
காளிதாசர் முதல் காஃப்காவரை,
ஆதிசங்கரர் தொட்டு அரிஸ்டாடில் வரை,
திருவள்ளுவர் தொட்டு தோரூவரை......

தரமான காகிதம், சிந்தனையாளர்களின் எண்ணங்களும், கருத்துக்களும் காலத்தால் அழிவுறு வண்ணம் காத்து எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்கி உதவுகிறது.

சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்

பள்ளிப்பாளையம்,
சேலம் மாவட்டம்
தமிழ்நாடு

The Watermark
of Quality

எழுத, அச்சிட, உறையிட
உன்னதமான காகிதங்கள்


# அலைநீர் அணங்கு



'மலையமான்'

கத்திடும் அலைகடலே — உன்னை
எத்துணைப் பேர் புகழ்ந்தார்
அன்னைத் தமிழினைப்போல்
முன்னைப் பிறந்ததினால் — நீ
மெத்தவும் சீர்திகழ்ந்தாய்.

சான்றவர் மனப்பரப்பு — தன்னை
ஈன்றவள் அன்பாழம்
மூடன் சொல்கரிப்பு
நாடி வெல்துடிப்பு — நீ
பூண்டவன் எனல்உண்மை

மேலை நாட்டவர்தம் — கண்கள்
போலும் நிறம்கொண்டாய்
பாம்பின் நெளிவினைப்போல்
ஓங்கும் இசைப்பரப்பாய் — நீ
கோல அலைசிறந்தாய்

ஓயாக் கிழவியைப்போல் — சற்றும்
மாயாப் பேச்சுடையாய்
என்றும் உன்சொல்லோ
ஒன்றும் புரிவதில்லை — நீ
தேயாக் கருத்துடையாய்

நோயில் வருந்துவார் போல் — காதல்
வாயில் விழுந்தவர்போல்
விடுவாய் பெருமூச்சு
தொடுவாய் கரைநீட்சி — உள்
மேயும் நினைவேதுவோ?
காலைக் கதிரொளியில் — மஞ்சள்
சால முகம்பூசிப்
பொன்மை உடைசூடி
நன்மைத் துணைதேடி — நீ
மேலும் அலைந்திடுவாய்.

மாலை நிலவொளியில்—உன்றன்
நீல வதனத்தில்
சுண்ணம் பூசிடுவாய்
கண்ணால் பேசிடுமாம்—அதை
மூலை விண்மீன்கள்

முரட்டுச் சொல்உள்ளே—வாழும்
தெருட்டு நல்லெண்ணம்
சிப்பிப் பொன்வயிற்றில்
முத்தும் நன்கிருக்கும்—நீ
உருட்டும் அலை அடியில்

தாயின் மடியினில்—ஓடிப்
பாயும் மதலையர்போல்
மீனவர் மேல்திரிவார்
ஆனதை நீபுரிவாய்—உன்
சேய்கள் ஓம்பிடுவாய்

இரும்புப் பெட்டியிலே—ஆசை
விரும்பும் பணம்போல
மீன்கள் குவிந்திருக்கும்
நீண்ட திமிங்கிலங்கள்—அவை
பொருந்திக் காவலிடும்.

உறைந்த குருதியைப் போல்—கீழே
நிறைந்த பவளமுண்டு
கண்ணீர்ப் பனித்துளிபோல்
வெண்மைத் தனிப்பொருளும்—அவண்
இறைந்து கிடப்பதுண்டு.

விண்ணின் நிலாப்பழத்தைப் — பற்றி
உண்ண நினைத்திடுமோ?
உறங்கும் காதலனும்
கரையை எழுப்பிடுமோ — பாய்
வெண்மை அலைக்கரங்கள்!



# நுரையீரல் நோய்களும் மருத்துவமும்

மனித உயிர் இயக்கத்துக்கு மிக இன்றியமையாதன இதயம் நுரையீரல், மூளை ஆகிய மூன்று உறுப்புக்களாகும். இவற்றுள், நுரையீரல் மனிதன் இந்த மண்ணிலே பிறந்த கணம் முதல் வாழ்வின் இன்ப துன்பங்களுக்குக் கால்கோள் விழாவாக அவன் முதன்முறை அழுகின்ற போது விடுகின்ற மூச்சிலிருந்து, அவன் வாழ்வின் இறுதி விஞடியில் விடுகின்ற கடைசி மூச்சு வரை இடையருது, ஒய்வேதுமின்றிப் பணியாற்றி வருவது உலகில் ஒரு விந்தையே!

மனித நெஞ்சம் பேசும் சுவையான கதைகள் ஆயிரம் ஆயிரம்! நெஞ்சத்தே கோயில் கொண்டிருக்கும் நுரையீரல் பேசும் சாகசக் கதைகளும் எத்துணை எத்துணையோ!

நுரையீரல் நோய்களில் மிக முக்கியமானதாக இந்தியத் துணைக் கண்டத்தில் கருதப்படுவது சயரோகமே. சயரோகத்தை "என்புருக்கி நோய்", என்ற பெயரால் பொருள்பட அழைக்கின்ருேம். "என்பு தோல் போர்த்த உடலினை," உருக்குவதால் "என்புருக்கி நோய்", என்ற பெயர் வந்தது. இந்திய மக்கள் தொகையில் 1.5 முதல் 2.5 விழுக்காடு மக்கள் நுரையீரல் சயரோகத்தால் பாதிக்கப்படுகின்றனர். இந்தியாவில் சயரோகத்தால் ஆண்டொன்றுக்கு 50,000 குழந்தைகள் இறக்கின்றன. சயரோகக் கிருமிகளைச் சுவாசிப்பதால் இது ஏற்படுகின்றது. சயரோக நோயாளி ஒரு நாளில் இருமுகின்ற போது 40 கோடிக் [illegible] கலக்கின்றன. ஒரு மனிதன் ஒரு கிருமியைச் சுவாசித்தாலும் அவனுக்கு நோய் ஏற்பட முடியும். ஆக, ஒரு நோயாளி ஒரு நாள் இருமும் போது வெளியாகின்ற 40 கோடிக் கிருமிகள், ஒவ்வொன்றும் இந்தியக் குடிமகன் ஒவ்வொருவனையும் தனித் தனியாகத் தொற்றுவதாகக் கொண்டால், ஒரு சயரோக நோயாளியால் இந்திய மக்கள் 40 கோடிப் பேருக்கும் நோயைப் பரப்ப முடியும். சயரோகத்துக்கு அடிப்படைக் காரணம் வறுமையே. ஊட்டச் சத்து இல்லாத உணவு, காற்ருேட்டமில்லாத சிறிய குடிசை வீடுகளில் நெருக்கமான சூழலில் வாழ்தல் ஆகியவை முக்கிய காரணங்கள். ஆகவேதான் வறுமை தாண்டவமாடும் நம் நாட்டில் இந்த நோய் அதிகம். நோயின் ஆரம்ப அறிகுறி, இருமல், மாலை வேளைகளில் காய்ச்சல், பசியின்மை, சோர்வு, உடலின் எடை குறைதல் ஆகியவை. பலர் இருமும் போது இரத்தம் கக்குவார்கள். இரத்தம் கக்குவது, "நோய் ஆரம்பத்தின் முடிவும், வாழ்க்கை முடிவின் ஆரம்பமும்", ஆகும். 30 ஆண்டுகளுக்குமுன், சயரோகம் ஒரு பயங்கர நோயாகக் கருதப்பட்டது. போதிய சிகிச்சை முறைகள் அப்போது இல்லை. ஆனால் இன்று ஸ்டொப்டோமைசின், ஐசோனியசைடு, பி.ஏ.எஸ். போன்ற அரிய மருந்துகள் வியத்தகு முறையில் குணம் தருகின்றன. இந்த மருந்துகள் குணமளிக்கவில்லை என்ருல் பைராசினமைட், எத்தியோனமைட், காப்ரியோமைசின், சைக்கிலோசிரின், தையசிடசோன் ஆகிய பிற நவீன மருந்துகள் நோயைக் குணப்படுத்தப் பயன்படலாம். எதிரும்பியூட்டால், ரைஃபாம்பிசின் ஆகிய மிக அண்மைக் கண்டுபிடிப்புக்கள் மிக அதிக அளவில் குணம் தருகின்றன. சயரோகத்துக்குச் சிகிச்சை யாக ஒரே மருந்தைப் பயன்படுத்துவது தவறு. எப்போதும் 2 அல்லது 3 மருந்துகளை இணைத்துப் பயன்படுத்த வேண்டும். நோயாளி குறைந்த பட்சம் நோய் கண்டு பிடிக்கப்பட்ட பின் 18 மாதம் தொடர்ந்து, இடைவெளி இன்றிச் சிகிச்சை பெறுவது மிக மிக அவசியம். மருந்துகளைப் போதிய அளவில், ஒழுங்காகப் பெறுவது இன்றியமையாதது. இந்த உண்மையை உணராமை [illegible] பலர் ஒழுங்கீனமாக



டாக்டர் பி.எம். ரெக்ஸ்

[illegible] யசயவதால குணமமபெருது சானடோரியத்தில் பல்லாண்டுகளாக அடைக்கலம் புகுந்து சத்திர சிகிச்சை பெறும் நிலை ஏற்படுகின்றது. நோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து, போதிய சிகிச்சையை ஒழுங்காக மேற்கொண்டால் முழுக் குணம் ஏற்படும்; இதில் ஐயமேயில்லை! பிசிஜி எந்த அளவு நோயைத் தடுக்கும் என்பது விவாதத்திற்குரியது. அப்படியே அது நோய்க்குத் தடுப்புத் தந்தாலும், தடுப்பின் கால அளவு 5 ஆண்டுகளே.

நுரையீரலைப் பாதிக்கும் இன்னெரு முக்கிய நோய் ஆஸ்துமா. ஆஸ்துமா நோயாளியின் நுரையீரலில் உள்ள மூச்சுக் குழலின் மெல்லிய தசை சுருங்குவதால் மூச்சுத் திணறல் ஏற்படுகின்றது. நுரையீரலின் உள்ளே, மூச்சை உள்ளே எடுக்கும் போது சென்ற காற்று, மூச்சுக் குழலின் மெல்லிய தசை சுருங்குவதால் வெளியே வர முடியாமல் மூச்சுத் திணறல் வருகின்றது. பிறந்த சின்னஞ் சிறு குழந்தை முதல் கல்லறையிலே காலெடுத்து வைக்கின்ற பருவத்தினர் வரை, செல்வர், எளியர் என்ற சமுதாய வேறுபாடுகள், மகளிர், ஆடவர் என்ற பால் வேறுபாடுகள் இன்றி ஆஸ்துமா வருகின்றது. பெரும்பாலும் குளிர், பனிக் காலங்களில், விடியற்போதில் வரும்; இளஞாயிறு எழும் வேளையில், தன்னிலே மறைந்துவிடும். மீண்டும் மறுநாள் வரும். நோயாளி மூச்சு விடமுடியாது திணறுவார். பார்க்கப் பரிதாபமாக இருக்கும். உடல் முழுதும் வியர்வை கொட்டும். இந்த நோய் ஏன் வருகின்றது? பல காரணங்கள்: தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காரணத்தால் வரலாம்; முக்கியக் காரணமாக நான் கருதுவது ஒருவரின் மனேநிலையே. வாழ்க்கையில் நெருக்கடி, தேர்வுக்குச் செல்லும் மாணவர்க்கு உரிய பதட்ட நிலை, உணர்ச்சிகளுக்கு அடிமையாகின்ற கோபதாப நிலை ஆகியவைகள் அடிப்படைகள். சிலருக்கு "அலர்ஜி", எனும் "ஒவ்வாமை", காரணமாக இருக்கலாம். சில உணவு வகைகள், தக்காளி, சாத்துக்குடி, புதினு இலை, தேயிலை, முட்டை. இருல் மீன் போன்றவை காரணம். வீதியில் எழும் புழுதிப் படலம், படுக்கையில் உள்ள பருத்தி, கம்பளித் துகள்கள் இவற்றைச் சுவாசிப்பது ஒரு காரணம். வீட்டில் வளரும் கிளியின் இறகு, நாய், பூனைகளின் ரோமங்களும் ஒவ்வாமை நிலையை ஏற்படுத்தலாம். நோயாளிகள் தத்தமக்கு இவற்றில் எவை ஒத்துவரவில்லை என்பதனை நுண்ணறிவால் கண்டு, அவற்றை அறவே விலக்க வேண்டும். பாரம்பரிய நோய் என ஆஸ்துமாவைக் கோடிட்டுக் காட்டும் கருத்தும் பரவலாக ஏற்றுக் கொள்ளப்



இரண்டு நுரையீரல்களிலும் முற்றிய காசநோய். பல இடங்களில் நுரையீரல் அரிக்கப்பட்டிருக்கிறது.



அ



ஆ



இ



ஈ

| | | | | |
|---|---|---|---|---|
| நுரையீரல் | அ. | சிகிச்சைக்கு முன்பு | ஆ. | சிகிச்சைக்குப் பின்பு |
| காசநோய் | இ. | சிகிச்சைக்கு முன்பு | ஈ. | சிகிச்சைக்குப் பின்பு |



இடது நுரையீரலைச் சுற்றி நீர் கோத்திருக்கின்றது. ''புளூரசி'' காசநோயே இதற்குக் காரணம்.

படுகின்றது. தந்தை—தாய் வழிப்பட்ட தாத்தா, பாட்டி, மாமன், அத்தை, பெரியப்பா, சித்தப்பா, இவர்களுக்கு இந்த நோய் இருந்தால் இது வரலாம். எல்லோருக்குமே பாரம்பரியமாக இது வர வேண்டும் என்ற விதி இல்லை. சிகிச்சை என்ன? நோய்க்குரிய காரணத்தை ஆய்ந்து கண்டறிதல் நன்று. பாரம்பரிய நோய் எனில் காரணத்தைத் தடுப்பது அரிது. ஒவ்வாமை காரணமாயின் முன் சொன்ன ஒவ்வாத பொருட்களை உடனடியாக விலக்குதல் சால்பு. ஒவ்வாமைப் பொருள்களின் ''ஆண்டிஜனை'' நோயாளியின் முன் கையில் தோலின் அடியில் ஊசியால் செலுத்தி, நோயாளிக்கு ஒவ்வாத பொருளை மருத்துவர் கண்டுபிடித்து அவற்றை விலக்கச் சொல்லுகின்றனர். சுருங்கிய மூச்சுக் குழாயினை விரிவடையச் செய்ய, 'எபிட்ரின்', மாத்திரை பரவலாகத் தரப்படுகிறது. ''அட்ரினலின், என்ற ஊசி மருந்தும் தரப்படுகின்றது. செலுத்திய சில விநாடிகளில் வியத்தகு முறையில் மூச்சுத் திணறல் மறைகின்றது. மூச்சுக் குழாய் சுருங்குவதால் நோய்க் கிருமிகள் தேக்கமடைந்து தழைப்பதால் அவற்றை கொல்ல பெனிசிலின், சல்பா, டெராமைசின் தரப்படுகின்றது. மிஞ்சிய அளவில் நோய் இருப்பின் ''கார்டிசோன்'', தரப்படுகின்றது. சிலருக்குப் பிராணவாயு செலுத்தப்படும் நிலைகூட வரலாம். ஆஸ்துமா நோயாளிகள் தங்கள் எதிர்காலத்தைப் பற்றிக் கொஞ்சமும் அஞ்ச வேண்டியதில்லை. சந்தர்ப்ப `வசமாக ஆஸ்துமா நோயாளிகள் சிறந்த அறிவு ஆற்றல் மிக்கவராக இருக்கின்றனர். எல்லோரும் எந்தவிதக் குறைவுமின்றி எத்தகைய [illegible] பொறுப்புக்களையும் சிறப்போடு வகிக்கலாம் என்பதற்குச் சரித்திரம் சான்று பகருகின்றது.

உலகின் நாகரிக வளர்ச்சி, நுரையீரல்களுக்குப் புதியதாக வழங்கியதாகக் கருதப்படுவது நுரையீரல் புற்று நோயாகும். நாகரிக முதிர்ச்சி பெற்ற மேனாடுகளில் நுரையீரல் புற்றுநோய் பெருமளவில் நாள்தோறும் தோன்றி வருகின்றது. ஆடவர், பெண்டிருக்கு 6: 1 என்ற விகிதாச்சாரத்தில் இந்த நோய் வருகின்றது. பெரும்பாலும் 60 வயதைத் தாண்டிய பின்னரே நுரையீரல் புற்று நோய் வருகின்றது. சிகரெட் பிடிப்பதே இந்த நோய்க்குரிய காரணமாக இப்போது வரையறுக்கப்படுகின்றது. ஒரு மனிதன் சராசரி தினமும் பத்தோ அதற்கதிகமாகவோ சிகரெட் தொடர்ந்து 10 ஆண்டுகள் பிடித்தால், அவனுக்கு நுரையீரல் புற்று நோய் வருவதற்குரிய வாய்ப்பு அதிகமாக இருக்கின்றது, என ஆராய்ச்சி வல்லுநர் கூறுகின்றனர். சிகரெட்டிலுள்ள புகையிலையை விட, புகையிலை மடித்து வைக்கப்பட்டிருக்கின்ற காகிதம் கருகி, அந்தக் காகிதக் கரித் துண்டுகளைப் புகைத்து நுரையீரலின் உள்ளே மூச்சில் இழுப்பதால்தான் வருகின்றது. சிகரெட்டுகளில் தற்போது ''பில்டர்'', எனும் ''தடுப்பினை'', வைத்திருந்தாலும் இந்த ''பில்டர்'', எந்த அளவுக்குப் பாதுகாப்புத் தரும். என்பது ஒரு கேள்விக் குறியே. சிகரெட்டைப் புகைக்கும் போது ஒரு மனிதன் எந்த அளவு ஆழமாக அந்தப் புகையை மூச்சின் உள்ளே எடுக்கின்றான் என்பதே முக்கியம். நுரையீரல் புற்றுநோயின் அறிகுறியாக நெஞ்சு வலி, இருமல், ரத்தம் கக்குதல், மூச்சுத் திணறல் ஏற்படும். பசியின்மை, உடல் எடை குறைதல் ஆகியவை பிற அறிகுறிகள். இவை தோன்றின் உடனடியாக மருத்துவ ஆலோசனையை நாட வேண்டும். ஏனெனில் நுரையீரல் புற்றுநோயை ஆரம்ப காலத்திலேயே கண்டுபிடித்துச் சிகிச்சை பெறுவது இன்றியமையாதது. ஆரம்பக் கட்டத்திலேயே கண்டுபிடித்துச் சிகிச்சை பெற்றாலும், 5 ஆண்டுகள்தான் நோயாளி உயிரோடு வாழ முடியும் என்பது வேதனைக்கு உரியதொன்றுதான். நுரையீரல் புற்று நோய்க்கு, கதிர் இயக்க மருத்துவ முறை புற்று நோயைக் கட்டுப்படுத்தும் நவீன மருந்துகளான நைட்ரஜன் மஸ்டாட், மஸ்டின் ஹைடிரோ குளோரைடு ஆகியன ஊசி மூலமும் வாய் வழியாகவும் செலுத்தப்படுகின்றன. நல்ல வேளையாக நம் நாட்டில் இந்த நோய் அதிகமாகக் காணப்படவில்லை.



வலது நுரையீரலில் வட்ட வடிவமான புற்றுநோய் வளர்ச்சி

நம் நாட்டில் உலகம் வியக்கும் வண்ணம் தொழில் வளர்ச்சி தோன்றி ஊரெங்கும் தொழிற்சாலைகள், ஆலைகள் தோன்றி நம்மை மகிழ்ச்சியில் திளைக்க வைக்கும் அதே நேரத்தில், அத்தகைய தொழில் வளர்ச்சியால் நுரையீரலை எத்தகைய புதிய நோய்கள் தொற்றுகின்றன என்பதனையும் மருத்துவ உலகம் அக்கறையோடு கவனித்து வருகின்றது. நகர்ப் புறங்களில் ஆலைகளில் இருந்து வருகின்ற புழுதிப் படலங்கள், புகை மண்டலங்கள் அவற்றிலிருந்து நாம் சுவாசிக்கும் காற்றோடு கலந்த கரித் துகள்கள், மக்களைப் பெரும் அளவு பாதித்துக் காலமெல்லாம் தொல்லை தரும் நீண்ட நாளைய பிராங்கைடிஸ் எனும் இருமலைத் தோற்றுவிக்கின்றன. சுரங்கங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள், சிமெண்ட் ஆலைகளில் வேலை செய்யும் மக்கள், ஆகியோர் ''சிலிகா,'' என்ற மணல் துகள்களைச் சுவாசிப்பதால் அவர்கள் நுரையீரல் பாதிக்கப்பெற்று ''சிலிகோசிஸ்'' எனும் நுரையீரல் நோய் தோன்றுகின்றது. பருத்தி ஆலைகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் பருத்தித் துகள்களைச் சுவாசிப்பதால் ''பிசினோசிஸ்'' எனும் நுரையீரல் நோய்க்கு இலக்காகின்றனர். தொழில் காரணமாகத் தொற்றும் இத்தகைய நுரையீரல் நோய்களிலிருந்து தொழிலாளர் வர்க்கத்தைக் காப்பாற்றுவது எவ்வாறு என்பது இன்றைய மருத்துவ உலகுக்கு ஒரு சவாலாக இருக்கின்றது.



வலது நுரையீரலில் முக்கோண வடிவமான புற்றுநோய்

நுரையீரல் நோய்களில், ''இயோசினபீலியா'' எனும் நோய் பலருக்கும் தெரிந்த ஒன்று. இரத்தத்தில் உள்ள, ''இயோசினபில்'' எனும் ஒரு வகை வெள்ளை அணு அதிகரித்தலால் இயோசினபீலியா வருகின்றது. நம் நாட்டில் மிகமிகப் பரவலாகக் காணப்படுகின்றது. நாய் உடலில் இருக்கும் யானைக்கால் சம்பந்தப்பட்ட ''பைலேரியா'' கிருமிகள் மனித உடலில் தவறுதலாக நுழையும் போது நுரையீரலில் ''அலர்ஜி'' அல்லது ''ஒவ்வாமை'' நிலையை உருவாக்கி, இந்த நோயைத் தோற்றுவிக்கின்றது. இந்த நோயின் முக்கியத்துவம் இதற்குரிய அறிகுறிகள் முழுக்க முழுக்க சயரோகத்தைப் போன்றே இருப்பது தான். நோயாளிக்கு மாலை வேளைகளில் காய்ச்சல், பயங்கரமாக இருமல், இருமலில் இரத்தம், மேல் மூச்சு வாங்குதல், பசியின்மை, ஆகியன அறிகுறிகள். ''டை இதைல் கார்பமைசின்'' மாத்திரைகள் ஒரு வாரம் சாப்பிட்டால் வியத்தகு முறையில் நோய் மறைந்தோடி விடும்.



இரண்டு நுரையீரல்களிலும் பரவலாக முற்றிய புற்றுநோய்

நுரையீரல் நோய்களில் குறிப்பிடத் தக்க மற்றும் சில ''புளூரசி'', ''நிமோனியா'' எனும் சளிக் காய்ச்சல்,'' நுரையீரலில் சீழ் கட்டி'', ''லங் ஆப்சஸ்'', மூச்சுக் குழாய்களில் சீழ் தேக்கமுறும் ''பிராங்கியக் டேசிஸ்'', ஆகியனவாகும். சக்தி வாய்ந்த பெனிசிலின், டெராமைசின், ஆலியன்சோமைசின் போன்ற கிருமிக் கொல்லிகள் கண்டுபிடிக்கப் பட்ட பின் இந்த நோய்கள் பிரச்சினையாகவே இன்று கருதப்படவில்லை.

நுரையீரல் நோய்கள் வராது தடுப்பது எவ்வாறு? நாம் நுரையீரல் நோய் உள்ளவர்களின் அருகில் செல்லாமல் இருப்பதும், அவர்கள் விடும் மூச்சு நம் மேல் படாமல் பார்த்துக் கொள்வதும், அவர்களுக்கென உணவில் தனிப் பாத்திரங்கள் ஒதுக்குவதும் மிக அவசியம். முடிந்தால் வீட்டில் அவர்களுக்கெனத் தனி அறை ஒதுக்குவதும் பயன் தரும். ''வரு முன் காத்தல் அறிவுடைமை'', என்பது நோய்களைத் தடுப்பதற்குரிய பொது நியதி எனினும் நுரையீரல் நோய்களைப் பொறுத்த மட்டில் அது முற்றிலும் பயன் தரும் உண்மை ஆகும்.

# மறவாதீர்கள்:

# உங்கள் மகள் ஒருநாள்

# மணமகளாக அமர வேண்டியவள்!



திருமணம் என்ருலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்ருல்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கிஞல் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்ருேம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரிவிதிப்பின்றி ஏற்றுகொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது—இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1,650/- |

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002





# அஞ்சல் தலையில் அருணகிரிநாதர்

'முந்துத் தமிழ்மாலை' பாடிய சிந்துப் புலவர்களில் குறிப்பிடத்தக்கவர் அருணகிரியார். இவர், 15-ஆம் நூற்ருண்டில் திருவண்ணுமலையில் பிறந்தவர். சந்த விருத்தப் பெருங்கடலாகிய திருப்புகழ் பதிஞுயிரம் பாடியவர். இவரது பிறப்பு, பெற்ருேர், குலம் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. எனினும் தமிழகத்தில் ஆறு நூற்ருண்டுகளுக்கு முன் அவதரித்த பெருந்தகை அருணகிரியார்.

அருணகிரியார், இளமையில் சங்கத் தமிழ் இலக்கிய இலக்கணங்களையும், சைவத் திருமுறைச் சாத்திரங்களையும், இதிகாச புராணங்களையும் பயின்று, பின்னர் வடமொழி நூல்களிலும் தேர்ச்சி பெற்ருர்.

அருணகிரியார் தொடக்கக் காலத்தில் செல்வர்கள்மேல் கோவை, கலம்பகம், உலா, மடல் முதலான பிரபந்தங்களையே பாடிப் பொருள் தேடித் தேடிய பொருளையெல்லாம் விலைமகளிர்க்குச் செலவிட்டு வந்தார்—வாழ்ந்து வந்தார். இதஞல், குட்டம் முதலிய கொடிய நோய்களின் கொள்கலமாகி நொந்து வருந்திஞர். பிறகு, பெரியகுணதரர் என்பார், அறிவுரை கூறி அருணகிரியாரைத் திருத்திஞர் என்னும் செய்தியை அருணகிரியாரின் திருப்புகழிலிருந்து அறியலாம்.

அருணகிரியார், வாழ்க்கை அனுபவம் பெற்று—வாழ்க்கை என்னும் பெருங்கடலில் வீழ்ந்து, நீந்தி, அமிழ்ந்து, மூச்சுத் திணறி, இறுதியாக முத்தும் எடுத்து வந்த வித்தகர்.

அருணகிரியார் அருளிய நூல்கள், திருப்புகழ், திருவகுப்பு, கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தரந்தாதி, வேல் விருத்தம், மயில் விருத்தம், உடற்கூற்றுவண்ணம் முதலியன.

அருணகிரியார், வேதம் உபநிஷதம், ஆகமம், புராணம் முதலியவற்றிற்குக் குறிப்பிட்டுள்ள அரிய நுட்பங்களையெல்லாம் தெள்ளிதில் தெரிந்து சந்தப் பாடல்களை வடித்துத் தந்திருக்கிருர்.

அருணகிரியார் தொண்டின் நெறியை வலியுறுத்தப் புகுந்து தொண்டின் நெறி மறந்தவர்களை, 'வெற்று நிழலுக்கும் உதவா உடம்பு' என்கிருர்.

பகுத்துண்டு பல்லுயிரோம்பும் பண்பினை—குடிவாழ்க்கையினை,

'நொய்யின் அளவேனும்
பகிர்ந்து குடிமின்கள்'

என்று அவர் குறிப்பிடுகிருர். பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடியுள்ள அருணகிரியார், துளசிதாசர், குருநானக், துக்காராம், மீரா, சைதன்யர் ஆகிய வடபுல இசைப் பாடலாசிரியர்கள் வரிசையில் குறிப்பிடத் தக்கவர் ஆவார்.

இவ்வாறு, 'தொண்டின் நெறி'யையும், 'பகுத்துண்டு பல்லுயிரோம்பும்' பண்பினையும் இன்ன பிறவற்றையும் செந்தமிழ்ச் சிந்துக் கவிதைகளால் தேனெழுகப் பாடிய அருணகிரியாரின் ஆருவது நூற்ருண்டு விழா அண்மையில் சென்னையிலும், திருவண்ணுமலையிலும் ஒரு வாரம் சிறப்புறக் கொண்டாடப்பட்டது. தமிழகத்தின் பிற நகர்களிலும் கொண்டாடப்பட்டது.

இதையொட்டி, இந்திய அஞ்சல் துறை, அருணகிரியாரின் திருவுருவம் பொறித்த 20—50 காசு விலையுள்ள இலட்சம் அஞ்சல் தலைகளை வெளியிட்டுச் சிறப்புச்செய்தது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் நடைபெற்ற அருணகிரியார் விழாவில் தமிழகக் கல்வி, சுற்றுலா அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு, அருணகிரிநாதர் நினைவுச் சிறப்பு அஞ்சல் தலைகளும் உறைகளும் அடங்கிய ஆல்பத்தினை இந்திய தபால் தந்தி இலாகா உதவி அமைச்சர் திரு. ஜெகந்நாத பாடியா வழங்கிஞர்.

—சாமிபழ

தமிழ்நாடு முழுவதிலும் இடைநிலை ஆசிரியர்கட்குப் பயிற்சி அளித்திட தற்போது 106 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் உள்ளன. இவை தவிர, நர்சரி ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் மூன்று, இளஞ்சிருர் பள்ளி ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் இரண்டு, ஆங்கிலோ—இந்திய ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று, ஆகியவை செயல்படுகின்றன.

தமிழ் நாட்டில் தற்பொழுது ஆங்கில மொழிப் பயிற்சி மையங்கள் ஆறு செயல்பட்டு வருகின்றன. 1974 ஆகஸ்டில் மதுரை மாவட்டம் மேலூரிலும், வட ஆர்க்காடு மாவட்டம் வேலூரிலும், திறக்கப்பட்ட இரண்டு மையங்களும் இவற்றில் அடங்கும். 1967—68 முதல் 1974—75 முடிய உள்ள காலத்தில் மொத்தம் 11,773 ஆசிரியர்கள் (1974—75-ல் பயிற்சி பெற்ற 1,700 பேர்கள் உட்பட) பயிற்சி அளிக்கப்பட்டனர். இத் திட்டம்1975—76லும்தொடர்ந்து செயல்படும்.



# இந்தியாவிலேயே முதல் ஆசிரியர் கல்லூரி

"அதோ! பெட்டியும் படுக்கையுமா வருகிறரே அவர் யார்?''

''கையில் லாந்தர் விளக்குக் கூட வைத்திருக்கிருரே அவர் யானே?''

''அவரேதான்!''

''அவர்தான் ஆசிரியர் கல்லூரிக்குப் போகிறவர் . . .''

''என்ன? ஆசிரியர் கல்லூரிக்கா?''

''ஆமாம். . உங்களுக்குத் தெரியாதா? ஆசிரியர் கல்லூரிக்குத்தான் அவர் போகிருர்''.

''அது சரி. கையில் லாந்தர் விளக்கு ஏன்?''

1856-ஆம் ஆண்டு!

சென்னையில் ஆசிரியர் கல்லூரி (Teacher's College) துவக்கப்பட்ட காலம்.

அப்போது மின்வசதி எதுவும் இல்லாத சூழ்நிலை.

கல்லூரியிலே சேர்ந்து பயிற்சி பெற வருவோர் கையில் விளக்கையும் கொண்டு வர வேண்டும் என்ற நிலை இருந்தது போலும்!

ஆம். ஆசிரியர் என்பவர் விளக்காய் இருந்து அறிவொளி தருபவர் அன்ருே?

'எழுத்தறிவித்தவன் இறைவனுகும்' என்பதை நாம் படித்திருக்கிருேம். அந்த இறைவனை மாணவர் உலகுக்கு வழங்கிடும் மிகப் பழைமையான கல்லூரிதான் இது.

முதலில் இக்கல்லூரி 1856 முதல் 1862 வரை சென்னை வேப்பேரியில் இருந்தது. 1862 முதல் 1887 வரை இன்றைய அண்ணு மேம்பாலத்துக்கு அருகில் இருந்தது. 1887-லிருந்து சென்னை சைதாப்பேட்டையில் இக் கல்லூரி அமைந்து இன்றளவும் சீரும் சிறப்புமாக நடந்து வருகின்றது. முதலில் அவ்விடத்தில் வேளாண்மைக் கல்லூரி இருந்தது. பிறகு அது கோவைக்கு மாற்றப்பட்டது.

1956-ல் நூற்ருண்டு விழாக் கொண்டாடிய இப்பழம்பெரும் கல்லூரியின் பழைய மாணவர்கள், இந் நாடு மட்டுமின்றிப் பன்னுடுகளிலும் பரவி ஆசிரியர் உலகிற்கும் கல்வி முன்னேற்றத்திற்கும் நற்ருெண்டாற்றி வருகின்றனர்.

இந்தியாவிலேயே ஆசிரியர் பயிற்சிக்கென துவக்கப்பட்ட முதல் கல்லூரி இதுவே என்பதை நாம் பெருமிதத்தோடு குறிப்பிட வேண்டும். தமிழ் நாட்டிலேயே மிகப் பெரிய கல்லூரியான இதன் வயது எத்தனை தெரியுமா? 119.

இக்கல்லூரியில், பட்டம் பெற்றவர்கள் மட்டுமே ஆசிரியர் பயிற்சி பெறுவதற்குத் தகுதியானவர்கள்.

பட்டம் பெருதவர்கள் கைவினை ஆசிரியர் பயிற்சியில் சேர்ந்து பயிலலாம். அவர்கள் பள்ளி இறுதி வகுப்பில்தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

''ஆசிரியப் பணி மிகவும் பொறுப்புடைய தொன்று என்பதனை நான் நான்குணர்கின்றேன். பயிற்சி பெற்று முழுமையும் தகுதியுடைய ஆசிரியராக விளங்கவும் நான் அப் பொறுப்பினைச் செம்மையாக நிறைவேற்றவும் உண்மையுடன் உழைப்பேன். அவ்வாறு உழைக்கவும் ஆசிரியரது பண்புக்கும் மதிப்புக்கும் ஒரு சிறிதும் இழுக்கு நேராத வகையில் விளங்குவேன். . . ''

என்று நல்லாசிரியனுக விளங்கிட இங்குப் பயிலும் மாணவர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்கின்றனர்.

இக் கல்லூரியில் கீழ்க் காணும் பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன:

1. தமிழ்ப் புலவர் பயிற்சி வகுப்பு.

2. இளநிலை ஆசிரியர் பயிற்சி (B. Ed.,).

3. முதுநிலை ஆசிரியர் பயிற்சி (M. Ed.,)

4. மாதிரி உயர்நிலைப்பள்ளி.

5. குழவிப் பள்ளி.



நூலிழை நெய்யும் நேரிழை!

தமிழ்ப் புலவர்களுக்கான பயிற்சி வகுப்பு: சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரி தவிர, புதுக்கோட்டை அரசினர் ஆண்கள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, குமாரபாளையம் அரசினர் ஆசிரியர் ஆண்கள் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றிலும் தமிழ்ப் புலவர்க்கான பயிற்சி அளிக்கப்படுகின்றது. புலவர் அல்லது வித்துவான் பட்டம் பெற்ற தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே இங்குப் பயிற்சி பெறலாம்.



மேசைத் தருந்த தச்சுத் தொழில்

மதுரை, சென்னை மற்றும் அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தேர்வில் வெற்றி பெற்றவர்கள் மட்டுமே இப்பயிற்சி வகுப்பில் சேரத் தகுதி பெற்றவர்கள்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் வழங்கும் புலவர், பண்டிதர் சான்றிதழ் பெற்றவர்கள் இப் பயிற்சிக்குத் தகுதியில்லாதவர்கள்.

தமிழ்ப் புலவர்க்கான இப் பயிற்சிக் காலம் ஐந்து திங்கள் ஆகும். நவம்பர் முதல் நாள் தொடங்கி அடுத்த மார்ச் 31-ஆம் தேதி முடியவும், ஜூன் முதல் நாள் தொடங்கி அக்டோபர் 31-ஆம் நாள் முடியவும் ஆக ஆண்டுக்கு இரு பயிற்சி வகுப்புகள் உள்ளன.

தமிழாசிரியர்க்கான 'ஓவியப் பிரிவு' வகுப்புக்குள் நுழைகிருேம். ஆசிரியர்கள் துணைக் கருவிகள் செய்வதற்காக இந்த ஓவியப் பயிற்சி இவர்களுக்கு அளிக்கப்படுகிறது.



மாதிரிப் பள்ளியில் ஒரு வகுப்பு



குழவிப் பள்ளியில் மழலைகள்



தமிழ்ப் புலவர் பயிற்சி வகுப்பின் ஓவியப் பிரிவு

இளநிலை ஆசிரியர் பயிற்சி (B.Ed.,) : முழு நேரப்பயிற்சிக் காலம் ஓர் ஆண்டு. குறுகிய காலப் பயிற்சியும் உண்டு. இதற்கானப் பயிற்சிக் காலம் 4 மாதங்கள். ஆண்டுதோறும் ஜூலைத் திங்களில் இவ்வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

முதுநிலை ஆசிரியர் பயிற்சி (M. Ed.,) : இப் பயிற்சி பல் வேறு பணியிடங்களில் பணி புரிபவர் நலனுக்கென மாலை நேர வகுப்பாக அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் பயிற்சிக் காலம் இரண்டாண்டுகள். பாட வகுப்புகள் ஓராண்டும், ஆராய்ச்சிக் காலம் ஓராண்டும் ஆகும். இளநிலை ஆசிரியர் பட்டம் பெற்றோருக்கு அளிக்கப்படும் இப் பயிற்சியில் கல்வி உளவியல், கல்வி நிருவாகம் என இரு விருப்பப் பாடங்கள் உள்ளன. இவ்வகுப்பும் ஜூலை மாதமே ஆரம்பமாகின்றது.

மாதிரி உயர்நிலைப் பள்ளி : தமிழ் நாட்டிலேயே முதல் மாதிரிப் பள்ளியான இது நூறு ஆண்டுகளுக்கு முன்பே துவக்கப்பட்டது. இப்பள்ளி தற்போது இரு 'ஷிப்ட்'டாக இயங்கி வருகின்றது. காலை 9



முதல்வர்
திரு. எஸ். ஆர். மெசயதாஸ்
இக்கல்லூரியின் பழைய மாணவர்

மணியிலிருந்து 1 மணி வரை 8-லிருந்து 11வது வகுப்பும், பிற்பகல் 1 மணியிலிருந்து 5 மணி வரை 6லிருந்து 7 வது வகுப்பு வரையும் நடைபெறுகிறது.

இப்பள்ளியில் 62 ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். 1,328 மாணவர்கள் பயில்கின்றனர். அவர்களுள் 850 பேர் ஆண்கள். இப்பள்ளியில் பொறியியல், பணியக முறைக் கல்வி, மனை இயல் ஆகிய தொழிற் கல்வியும் கற்பிக்கப் படுகிறது.

ஆங்கில மொழி வாயிலாகவும் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. தேசிய மாணவர் படைப் பயிற்சியும், சாரணர் இயக்கப் பயிற்சியும் அளிக்கப் படுகின்றன. சிறுவர் செஞ்சிலுவைச் சங்கமும் இயங்கி வருகிறது. இப்பள்ளியில் மாணவர் முழு நல வளர்ச்சித் திட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதாவது ஒவ்வொரு மாணவனும் 200 மதிப்பெண்கள் பெறவேண்டும். உடற்பயிற்சிக்கு 50 மதிப்பெண்கள், நூலக அறிவு, ஒழுக்கம், நாள்தோறும் தவறாமல் வருகை ஆகியவற்றிற்கு முறையே 50 மதிப்பெண்கள். பள்ளித் தேர்வின்போது ஏதாவது ஒரு பாடத்தில் மதிப்பெண் குறைந்தால், பெற்ற மதிப்பெண்கள் கை கொடுத்து உதவும்.

மாணவர்கள் தம் அறிவை மேலும் வளர்த்துக் கொள்ள உதவிடும் வகையில், இலக்கிய மன்றம், யூக்ளிட் கணிதக் கழகம், அறிவியல் கழகம் ஆகியவை சிறப்பாகச் செயல் பட்டு வருகின்றன.

'விரிவுரைப் பணித் துறை' என்ற அமைப்பு ஒன்றும் இங்கு நன்கு செயல்பட்டு வந்திருக்கின்றது. இது உயர்நிலைப் பள்ளிகளின் கல்வித் தரங்களை உயர்த்துவதற்குத் துணை செய்கிறது. உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களையும், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆசிரியர்களையும் இணைத்துக் கல்வித் தரம் உயரத் துணை புரிகிறது. இவ்வமைப்பு. தலைமை ஆசிரியர்களுக்கான வழிகாட்டி நூல் ஒன்றையும் இத்துறை வெளியிட்டிருக்கிறது.

குழவிப் பள்ளி: நாளையத் தலைமுறைகளான இன்றைய குழந்தைகள் கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம் போன்றவைகளில் சிறந்து விளங்கிட வேண்டாமா?

அதற்கு வழி வகுக்கும் வகையில், பிஞ்சு மழலைகளின் குழவிப் பள்ளி ஒன்று இங்குச் சிறப்பாகச் செயலாற்றி வருகின்றது. 1910 முதல் நடந்து வரும் இப்பள்ளியில் மூன்று வயதுக் குழந்தைகள் கல்வி நலம் பெறுகின்றன.

குழந்தைகள் பூங்கா ஒன்றும் இங்கே இருக்கின்றது. இப் பகுதியில் 557 சிறுவர்களும், 501 சிறுமியர்களுமாக 1,058 பேர் பயில்கின்றனர். 28 இடைநிலை ஆசிரியர்களும், 3 சிறப்பு ஆசிரியர்களும், 4 பாலர் வகுப்பு உதவியாளர்களும் பணியாற்றுகின்றனர்.

கைக்கலை ஆசிரியர் பயிற்சி : இப்பயிற்சியில் இரு பிரிவுகள் உள்ளன. அவை: 1. தச்சுப் பிரிவு, 2. நெசவுப் பிரிவு. இவை 1914 முதல் இயங்கி வருகின்றன. நெசவுப்பிரிவின் பயிற்சிக் காலம்ஓராண்டாகும். தச்சுப் பிரிவின் பயிற்சிக் காலம் இரண்டாண்டுகள். இரு பிரிவுகளிலும் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு மாதம் ரூ. 18 உதவித் தொகை வழங்கப் படுகிறது. நெசவுப் பிரிவில் மட்டும் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். 1974—75 ஆண்டுகளில் கைவினை ஆசிரியர் பொதுத் தேர்வில் நெசவுப் பிரிவு மாணவர் 100 விழுக்காடும், தச்சு வகுப்பில் 94 விழுக்காடும் வெற்றி பெற்றுள்ளனர். கல்லூரி அனைத்துப் பிரிவு மாணவர்களுக்கும், மாதிரி உயர்நிலைப் பள்ளிமாணவர்களுக்கும் தச்சு வேலை, நூற்றல், நெசவு, செதுக்குதல், அட்டைகளில் உருவங்கள் செய்தல் போன்ற வேலைகளில் பயிற்சி தரப்படுகின்றது!

இக் கல்லூரியில் பயிலும் ஆசிரியப் பயிற்சி மாணவர்கள், சமூகப் பணி மன்றத்தின் சார்பில் மாதிரி உயர்நிலைப் பள்ளியிலுள்ள பிற்பட்ட மாணவர்களுக்கென இரவுப் பள்ளி நடத்துகின்றனர்.

ஆசிரியர் கல்லூரியில் நூலகம் ஒன்றும் இயங்கி வருகின்றது. சுமார் 25,000 நூல்கள் உள்ள இந்த நூலகத்தில் 17 வார, மாத இதழ்கள் வாங்கப் படுகின்றன.

இக் கல்லூரியில் பல்வேறு மன்றங்கள் செம்மையாகச் செயலாற்றி வருகின்றன. அவை : கல்லூரிப் பேரவை, தமிழ்மன்றம், ஆங்கிலமன்றம், கணித மன்றம், அறிவியல் மன்றம், உயிரியல் மன்றம், வரலாற்று மன்றம், புவியியல் மன்றம், தமிழாசிரியர் பயிற்சி இலக்கிய மன்றம், கைக்கலைப் பகுதி இலக்கிய மன்றம், சமூகப் பணி மன்றம்.

இக் கல்லூரியில் பாண்டிச்சேரி, ஆந்திரம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள் பயில்கின்றனர்.

இக் கல்லூரியில் கூட்டுறவுச் சங்கம் ஒன்றும் உள்ளது. இது மாணவர்களுக்குக் குறைந்த விலையில் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் முதலியன தருகின்றது.

காலஞ் சென்ற இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். இராதாகிருட்டிணன் மற்றும் பல அறிஞர் பெருமக்கள் இக் கல்லூரியில் ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களாவர். தற்போதைய கல்லூரி முதல்வர் திரு. எஸ். ஆர். மெசயதாஸ் இதன் பழைய மாணவர்.

மாணவ மணிகள் எல்லா வகையிலும் ஏற்றம் பெறும் வகையில் அவர்களுக்கு ஏணியாக இருப்பவர்கள் ஆசிரியப் பெருமக்கள். அப் பெருமக்களை உலகுக்கு வழங்கிடும் உயரிய கல்லூரியாக சைதை ஆசிரியர் கல்லூரி விளங்கி வருகிறதென்றால் அது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை!

—பி. வி. ஜி.

ஆசிரியர் பயிற்சி வகுப்பு



இளநிலை ஆசிரியர் பயிற்சி வகுப்பு





# அண்ணலின் அமுத மொழிகள்!

இம்சையிலும் அகிம்சை விழுமியது. தண்டித்தலினும் மன்னித்தல் ஆண்தகைமை. மன்னிப்பு வீரனை அணி செய்கிறது. தண்டிக்கும் அதிகாரம் உள்ளபோது, மன்னிப்பதே மன்னிப்பதாகும். மன்னிப்பு என்பது முழு வல்லமை கொண்டது.

*

அகிம்சைக்கு ஆண்மை தேவை. அதுவே வீரத்திற் சிறந்த வீரனின் அறம்.

*

கடமையை நிறைவேற்றி உரிமையைப் பெறும் நீதியே சத்தியாக்கிரகியின் சட்டம்.

*

கடமைக்காக உயிரைவிட ஒவ்வொரு மதத்தினரும் கற்றுக் கொள்ள வேண்டும். கடவுளின் பேரால் தேசத்திற்குப் பணிவதே அந்தக் கடமை.

*

கடமையைச் செய்[illegible] உரிமையைப் பெறுவ[illegible]யாகும்.

*

எல்லாரும் தத்தமது உரிமைகளை மட்டுமே வற்புறுத்துவதோடு நின்றுவிடுகிறார்கள். அத்தோடு கடமையையும் திறம்படச் செய்வார்களானால் குழப்பமோ அச்சமோ ஏற்படாது.

*

பகைவன் என்னைத் தாக்குகிறான். அப்பொழுது நான் அவனைத் தாக்குதல் ஆகாது. தாக்குவதென்பது இம்சையின் பாற்படும். பகைவன் என்னைத் தாக்கும் காலத்தும் அவனை [illegible] நேசித்தல் வேண்டும். அகிம்சை.

*

உண்மையான உரிமையின் பிறப்பிடம் கடமை.

*

நாம் எல்லாரும் நமக்குரிய கடமைகள் அனைத்தையும் நிறைவேற்றினோமானால், உரிமைகளை நாடிச் செல்ல வேண்டியதில்லை. அவை நம்மைத் தேடிவரும்.

*

இருபது ஆண்டுகளுக்கு முன்னரே நான் தமிழ் பயிலத் தொடங்கியதற்குக் காரணம், திருக்குறள் மூலத்தையே நேராகப் படித்தல் வேண்டும் என்று என் உள்ளத்தில் எழுந்த ஆசையேயாகும்.

*

தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போரில் தமிழ்மக்கள் புரிந்த துணையைப் போல வேறெந்த இந்தியரும் புரியவில்லை. அவர்களுக்கு நன்றியறிதல் காட்ட அவர்கள் நூல்களைப் பயில வேண்டுமென நினைத்தேன். அப்படியே அவர்கள் மொழியைப் பயில்வதில் ஊக்கமாக ஒரு திங்கள் கழித்தேன். அம்மொழியைப் பயிலப் பயில அதன் அழகை உணரலானேன். அது மனங் கவரும் ஓர் இனிய மொழி.

*

தமிழ்மக்கள் எனது இரத்தக் கலப்புற்ற உடன்பிறந்தவர் போலத் தோன்றுகிறார்கள்.

*

கல்வி என்பதற்கு நான் கொண்டுள்ள பொருள் ஒழுக்கத்தைப் படிப்படியாக வளர்ப்பது என்பதுதான். எழுத்திலக்கணம் பயில்வது மட்டும் கல்வியாகாது.

*

தமிழ்மொழிப் பயிற்சியைப் பற்றி நான் ஒன்றுங் கூறுவதில்லை என்று சிலர் என்மீது பழி சுமத்துவதாகக் கேள்வியுற்றேன். அப்பழி என்னை அணுகாது. என்னை நன்கறிந்தவர் என்மீது அப்பழி சுமத்தமாட்டார்கள். ஆங்கிலம் பயில்வதற்கு முன்னர்த் தமிழ்மொழி பயில வேண்டும் என்று நான் பலமுறை கூறிவந்திருக்கிறேன். 1915—ஆம் ஆண்டிலேயே ஆங்கிலத்தைவிடத் தமிழ்மொழியைச் சிறப்பாகக் கொள்ளுமாறு தமிழ்மக்களை வேண்டிக் கேட்டுக் கொண்டேன்.

*

தமிழ்மக்கள் தங்கள் தாய்மொழியாகிய தமிழ் பயிலவேண்டுவது அவர்களது இன்றியமையாக் கடமை. தமிழர் தம் மொழியை ஆங்கிலம் முதலிய மொழிகளைவிட முதன்மையாகக் கருதுதல் வேண்டும்.

*

தமிழ்மக்களுள் பண்டை நாளிலும்—இந்நாளிலும் கூடப் பல அறிஞர் இருந்தனர்; இருக்கின்றனர் என்பது அம்மொழியின் அமைப்பாலும், பயிற்சியாலும் அறியக் கிடக்கிறது. இந்தியாவில் ஓரினம் ஏற்படவேண்டுமாயின் சென்னை மாநிலத்திற்கு அப்பாலுள்ளவர்களும் தமிழுணரல் வேண்டும்.

*

தமிழ்மொழியில் புலமை பெறுதற்குரிய ஓய்வு எனக்கு ஆண்டவன் அருளினனில்லை. அதுகுறித்து நான் அடையும் வருத்தத்திற்கு ஓர் அளவில்லை.

*

[illegible] முன்னர் காந்தியடிகளை [illegible] நேரில் சந்தித்துப் பேசிய திரு. காந்தி அண்ணாமலை அவர்கள், தமிழரசு இதழுக்காக இரங்கூனிலிருந்து எழுதிய கட்டுரை.

# காந்தியடிகள் கற்பித்த தமிழ்ப்பாடம்



மகாத்மா காந்தியடிகளை நான் கண்டேன்; பேசினேன், அவருடைய அறிவுரையைப் பெற்றேன் என்று சொல்லும் போதே எனக்கு ஒரு பெருமிதம் உண்டாகிறது. என்னுடைய வாழ்நாளில் நான் பெற்ற இணையற்ற பெரும் பேறாகவே அந்தக் காட்சியைக் கருதுகிறேன்.

காந்தியடிகளுடைய பெருமை எங்கும் பரவி வந்த காலம் அது. அவர் தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்தார். நான் அப்போது குழந்தைப் பிராயம் உடையவன். காந்தியடிகள் எங்கள் ஊராகிய பள்ளத்தூருக்கு அருகில் உள்ள கானாடு காத்தானில் வந்து தங்கினார். அவர் தினந்தோறும் காலையில் உலாவச் செல்வது வழக்கம். அந்த முறையில் கானாடு காத்தானிலிருந்து ஒரு நாள் காலை நடந்தே பள்ளத்தூர் வந்து விட்டார். உலாவ வந்தது மாதிரி ஆயிற்று. ஒரு புதிய ஊரில் உள்ளவர்களைத் திருப்திப்படுத்தின மாதிரியும் ஆயிற்றென்று எண்ணியிருந்திருப்பார் போலும்.

அவருடைய வருகையை அறிந்த பள்ளத்தூர் அன்பர்கள் அவரை வரவேற்கச் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்தார்கள். ஒரு பெரிய மைதானத்தில் கூட்டத்துக்குத் திட்டம் செய்திருந்தார்கள். மகாத்மா வந்தார். அடேயப்பா! எத்தனை கூட்டம், நானும் கூட்டத்தோடு கூட்டமாகப் போனேன். அவருக்கு முன் தட்டுத் தட்டாகப் பழங்களைக் கொண்டு வந்து வைத்தார்கள். எல்லாவற்றையும் அரிஜனங்களுக்குக் கொடுக்கும்படி சொன்னார். தீண்டாமை ஒழிப்பைப் பற்றியே அன்று அவர் பேசினார்.

நான் சிறுபிள்ளை. அவர் பேச்சைக் கவனித்துத் தெரிந்து கொள்ளும் தகுதியில்லாதவன். ஆனாலும் சட்டை இல்லாமல் சரிகை அங்கவஸ்திரம் இல்லாமல் தலைப்பாகை இல்லாமல் உடம்பைத் திறந்து போட்டுக் கொண்டிருந்த ஒருவருக்கு இத்தனைக் கூட்டம் கூடுகிறதே என்ற வியப்பு மாத்திரம் உண்டாயிற்று. அவருடைய புன்முறுவல் பூத்த முகம் மாத்திரம் என்னுடைய இளைய நெஞ்சத்தில் நன்றாகப் பதிந்துவிட்டது. அவருக்கு அருகில் சென்று அவரைத் தொட்டுப் பார்க்க வேண்டுமென்று ஓர் ஆவல் எழுந்தது. என்ன பைத்தியக்கார ஆசை! அந்தக் கூட்டம் எங்கே! நான் எங்கே? நெடுந்தூரத்தில் இருந்தபடியே அவரைத் தரிசிக்கும் பாக்கியம் மட்டும் அன்று எனக்குக் கிடைத்தது.

பள்ளத்தூரில் அவரைப் பார்த்த பிறகு நான் பர்மாவுக்குச் சென்று விட்டேன். அங்கே நான் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது ஒருமுறை பர்மாவுக்கு மகத்மா வந்தார். அப்போதுகூட நெடுந்தூரத்திலிருந்துதான் பார்க்க முடிந்தது. ஆனாலும் அவரைப் பற்றி நான் அதிகமாக உணர்ந்து கொண்டேன். நான் காங்கிரஸ் நிகழ்ச்சிகளையெல்லாம் பிறர் வாயிலாகக் கேட்டுத் தெரிந்து கொண்டேன். அந்தக் காலம் முதற்கொண்டு எனக்குக் காந்தி என்றால் தெய்வம். கதர் ஆடையையே அணிந்தேன். கதர்க் குல்லாய்களைப் பலருக்கு வாங்கிக் கொடுத்தேன். எப்படியோ என்னை எல்லோரும் காந்தி அண்ணாமலை என்று அழைக்கத் தொடங்கினார்கள். அதற்கு முன் நான் வெறும் அண்ணாமலைதான்.

நான் மீண்டும் இந்தியாவுக்கு வந்தேன். ஒரு சமயம் மகாத்மா காரைக்குடிக்கு வந்தார். அப்போது நான் காங்கிரஸ் தொண்டன். காந்தியடிகள் தங்கியிருந்த இடத்தில் நான் ஒரு காவலனாக இருந்தேன். "அவர் தூங்குகிறார், இப்போது போகக் கூடாது, அவர் பிரார்த்தனை செய்கிறார், இப்போது உள்ளே விடமாட்டோம்" என்று சொல்வது என் வேலை. அப்போது நான் அருகிலிருந்து மகாத்மாவை பார்க்கும் பேறு கிடைத்தது.

இந்த நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் விடச் சிறப்பானது, நான் இன்று நினைத்தாலும் எனக்கு ஒரு தனியான கிளர்ச்சியை உண்டாக்குவது இனிச் சொல்லப் போவதுதான்.

திரிபுராவில் காங்கிரஸ் மாநாடு நிகழ்ந்தது. அதற்குக் காந்தியடிகள் வரவில்லை. அவர் ராஜ்கோட்டில் உபவாசம் இருந்தார். அவரைக் காணாதது எனக்குப் பெரிய ஏமாற்றமாக இருந்தது.


காந்தி அண்ணாமலை



ஆனாலும் அவர் வசிக்கும் சேவா கிராமத்துக்காவது போய்ப் பார்த்து விட்டுப் போகலாம் என்று எண்ணினேன். அதற்கு வாய்ப்பாக ஒருவேலையும் அங்கே இருந்தது. எங்கள் பக்கத்துப் பையன் ஒருவனை வார்தாவிலுள்ள நயீதாலிம் சங்கத்தில் சேர்க்க வேண்டியிருந்தது. ஆதலின் திரிபுராவிலிருந்து வார்தா சென்றேன். சேவா கிராமம் போனேன். அந்தப் பையனை அங்கே சேர்த்தேன். அப்போது அங்கே இருந்த அசோக் பாபு சௌதிரி என்பவர் எனக்குப் பழக்கமானார். காந்தியடிகளைப் பார்த்துப் பேச வேண்டும் என்று இருந்த என்னுடைய ஆர்வத்தை அவரிடம் சொன்னேன். அவர் பின் ஒரு முறை வந்தால் ஆறுதலாகப் பேசலாம் என்று சொன்னார். காந்தியடிகள் தங்கும் குடிசையையும் அதன் சுற்றுப் புறங்களையும் பார்த்து விட்டு வந்து விட்டேன்.


காந்தியடிகள் எழுதித் தரும் காட்சி.


சேவாக கிராமத்தில் காந்தியடிகளின் குடிசை




மறுபடியும் பர்மாவுக்குச் சென்று அங்கேயே தங்கிவிடுவது என்ற உறுதியோடு பயணத்துக்கு ஏற்பாடு செய்தேன். அதற்குமுன் தமிழ் நாட்டுப் பெரியோர்களையும், அகில இந்தியத் தலைவர்களையும் தரிசித்து அவர்களுடைய ஆசீர்வாதத்தைப் பெற வேண்டும் என்பது என் ஆசை. முக்கியமாக மகாத்மா காந்தியை இந்த முறை அவசியம் பார்த்துவிட்டுத்தான் பர்மா போக வேண்டும் என்ற ஆர்வம் கட்டுக்கடங்காமல் இருந்தது. சென்னைக்கு வந்து தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களையும், தமிழ்க் கடல் மறைமலையடிகளையும், தமிழ்த் தந்தை திரு.வி.க. வையும் தரிசித்து ஆசி பெற்றேன். பிறகு வார்தாவை நோக்கிப் புறப்பட்டேன்.

மகாத்மாவைக் கண்டால் இன்ன இன்னபடி நடக்க வேண்டும். இன்ன இன்ன கேள்விகளைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று பிரமாதமாக யோசனை செய்து கொண்டே போனேன். ஆசைக்கு அளவுண்டா?

வார்தாவில் போய் இறங்கினேன். சேவா கிராமத்தையும் அடைந்து விட்டேன். அப்போது மாலை நேரம். அப்போதே காந்தியடிகளைப் பார்க்க விரும்பினாலும் மறுநாளும் இருந்து நிதானமாகப் பார்க்கலாம் என்ற எண்ணத்தால் அப்படிச் செய்ய வில்லை. திரு. அசோக பாபு சௌதிரி எங்களுக்குத் தங்க இடங் கொடுத்தார். காலையில் காந்தியடிகளைக் காணலாம் என்று சொன்னார்.

எனக்கு இரவு தூக்கம் எளிதில் வரவில்லை. மறுநாள் மகாத்மாவைக் காணப் போகிறோம் என்ற உணர்ச்சியில் மிதந்தேன். ஆனால் பிரயாணம் பண்ணின அலுப்பினால் துயில் மெல்ல என்னை வந்து தழுவியது.

விடிந்தது. எழுந்தேன். காலைக் கடன்களை முடித்துக் கொண்டு நான் தேடிவந்த தெய்வத்தைத் தரிசிக்கப் புறப்பட்டேன். அன்பர் சௌதிரி அவர்கள் உடன் வந்தார். நாங்கள் போகும் நேரம் காந்தியடிகள் உலாவப் புறப்படும் நேரம். ஆனாலும் அமர்ந்து எங்களை வரவேற்றார் அந்தப் பெருமான். நான் செட்டி நாட்டிலிருந்து வந்திருப்பதைச் சௌதிரி பாபு சொன்னார். காந்தியடிகள் என்னுடைய ஊரைப் பற்றிக் கேட்டார். நான் சொன்னேன் பர்மாவுக்குப் போக இருப்பதைப்' பற்றியும் கூறினேன்.

உலாவப் புறப்படும் நேரம் என்பதை மகாதேவ தேசாய் அங்கே வந்து தம் கண் பார்வையால் குறிப்பித்தார். நான் அதை உணர்ந்து கையெழுத்து ஒன்று வேண்டுமென்று என்னிடமிருந்த சிறு குறிப்புப் புத்தகத்தைப் பணிவுடன் நீட்டினேன்.

''பணம் கொடுத்தால்தான் போடுவேன் என்பது தெரியும் அல்லவா? என்றார்,

''நன்றாகத் தெரியும்'' என்றேன்.

''ஐந்து ரூபாய் ஹரிஜன நிதிக்குத் தர வேண்டும் தெரியுமா?'' என்றார்.




## கலப்புத் திருமணம் ஊக்கம் பெற்றிட.....!

'கலப்புத் திருமணம்' முக்கியத்துவம் பெறவேண்டும் என்பதற்கென, இத்தகைய திருமணங்களைப் புரிந்து கொள்பவர்களுக்கு 'ஊக்கப்பணம்' அளிக்கும் திட்டம் ஒன்றினைத் தமிழ்நாடு, கேரளம், பீகார், மராட்டியம், குஜராத், திரிபுரா போன்ற மாநிலங்களும், புதுவை போன்ற மத்திய நிருவாகப் பகுதிகளும் அமல் நடத்தி வருகின்றன.

கடந்த 5 ஆண்டுகளில் இத்திட்டத்திற்காகத் தமிழ்நாடு அரசு ஒரு இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான தொகையைச் செலவிட்டுள்ளது. ஐந்தாவது திட்டக் காலத்தில் இத்திட்டத்திற்கென 10 இலட்சம் ரூபாய் நிதியும் ஒதுக்கியுள்ளது. நடப்பு ஆண்டிற்கென இரண்டு இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கலப்புத் திருமணம் செய்துகொள்ளும் தம்பதியர்களுக்குத் தங்கப் பதக்கமும், நற்சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

''அப்படியே தருகிறேன். ஆனால் ஒரு சிறிய வேண்டுகோள்.''

''என்ன?''

''தாங்கள் தென்னாப்பிரிக்காவில் இருந்தபோது தமிழ் எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டதாக எழுதியிருக்கிறீர்களே, தயவுசெய்து தமிழிலே கையெழுத்துப் போட்டுத் தர வேண்டும்'' என்று சொன்னபோது அவர் புன்னகை பூத்தார்.

''அப்படியா! அப்படியானால் இன்னும் ரூபாய் கூடத் தர வேண்டும்'' என்றார்.

''நான் பர்மா போகிறேன். சிக்கனமாகச் செலவு பண்ண வேண்டியவன். நான் பணக்காரன் அல்ல'' கல்கத்தா வழியாகப் போகிறேன் என்றேன்.

''கல்கத்தா பெரிய ஊர். ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். கண்டபடி செலவழித்தால் பாங்க்ரப்ட் ஆகிவிடுவாய்'' என்று கூறினார்.

பிறகு ''பணம் கூடத் தந்தால்தான் தமிழில் கையெழுத்துப் போடுவேன்'' என்றார்.

என் மடியில் வைத்திருந்த [illegible] விழுந்தது. அது எப்படி விழுந்தது, ஏன் விழுந்ததென்று எனக்குத் தெரியவில்லை.

''பார்த்தாயா! பணம் தானே உன்னிடமிருந்து நழுவி எனக்கு வரப்போகிறது. ஆறு ரூபாய் தந்துவிடு'' என்று சொல்லிச் சிரித்தார்.

எனக்குத் தெரியும் அது அதிகம் என்று. ''அப்படியானால் எனக்கு ஏதாவது ஒரு நீதியும் சேர்த்து எழுதித் தாருங்கள்'' என்று விடாப் பிடியாகப் பேரம் செய்தேன்.

''சரி'' என்று சொல்லிக் கையெழுத்துப் புத்தகத்தில், ''நீரில் எழுத்தாகும் யாக்கை'' என்று எழுதி அடியில் மோ. க. காந்தி என்று கையெழுத்திட்டார். என் காரியம் பலித்தது என்று எனக்கு உள்ளூர அளவற்ற களிப்பு உண்டாயிற்று.

''இது குறள் தானே?'' என்று கேட்டார் காந்தியடிகள். குமர குருபர முனிவர் பாடிய நீதி நெறி விளக்கத்தில் உள்ள ஒரு பாட்டின் ஓர் அடி அது. ஆனாலும் மகாத்மா என்றோ படித்த அதை நினைவில் வைத்துக் கொண்டு எழுதினாரே, அதுவே பெரிதல்லவா? நான் குறள் அன்று என்று சொல்ல வில்லை, பேசாமல் இருந்தேன். [illegible] பொருள் உனக்குத் தெரியுமோ?'' என்று கேட்டார்.

தெரிந்திருந்தாலும் அவரிடம் தெரியும் என்று சொல்லத் தைரியம் வரவில்லை. தெரியாது என்று சொன்னேன். அவர் நீரில்-எழுத்து-ஆகும்-யாக்கை என்று ஒவ்வொரு சொல்லாக எடுத்துச் சொல்லி அதற்குப் பொருள் சொன்னார். காந்தியடிகளை அந்தக் கணத்தில் எனக்கு ஆசிரியராகப் பாவித்து எனக்குக் கிடைத்த பேற்றை எண்ணி உணர்ச்சிப் பெருக்கில் ஆழ்ந்தேன்.

மகாதேவ தேசாய் மீண்டும் உலாவப் போக வேண்டுமென்பதைக் குறிப்பித்தார். காந்தியடிகள் உடனே எழுந்தார். உலாவப் புறப்பட்டு விட்டார். அந்தக்கூட்டத்தில் முன்னே கையில் கம்பு ஒன்றைத் தாங்கி திருமதி மீரா பென் நடந்தார். பின்னே காந்தியடிகள் சென்றார். உடன் சிலர் சென்றார்கள்.

அவர்களுடன் நானும் போனேன். அப்பா! என்ன வேகமாக நடந்தார் அந்தக் கிழவர். இரண்டு மைலுக்கு மேல் நடந்து திரும்பினார். அதுவரையில் சென்று நின்றேன். பாரத நாட்டைச் சுதந்திர வாழ்வுக்கு வேகமாக அழைத்துச் சென்ற அந்த மகானுடைய நிமிர்ந்த நடையிலே இருந்த காம்பீர்யத்தை என்னவென்று சொல்வேன். அந்த நடையில் உள்ள ஒழுங்கைச் சொல்வேனா! வேகத்தைச் சொல்வேனா?

நான் சேவாக் கிராமத்தை விட்டுப் புறப்பட்டேன். பர்மாவை அடைந்தேன். பாரத தேசந்தன்னை வாழ்விக்க வந்த காந்தி மகாத்மாவின் திருக்கரத்தால் எழுதித் தந்த அந்த அழகிய நீதி நெறி விளக்க அடியும் அவருடைய தமிழ்க் கையெழுத்தும் நான் என்றும் போற்றும் மாமணியாகத் திகழ்கின்றன. நீரில் எழுத்தாகும் யாக்கை என்று அவர் எழுதித் தந்தது உண்மைதான். ஆனால் அந்த மகானுடைய உருவம் உள்ளத்தே நான் பதித்துக் கொண்ட திருமேனி இன்றும் மங்காத ஓவியமாக இருக்கிறது. 'நீரில் எழுத்தாகும் யாக்கை' என்றுதான் எழுதித் தந்தார். ஆனால் நேரில் அவர் எழுதிய அவ்வெழுத்து இன்றும் என்னிடம் இருக்கிறது. அதை நிழற்படம் எடுத்து பல அன்பர்களுக்குக் கொடுத்து மகிழ்கிறேன். எனக்கு அந்த எழுத்தில் மகாத்மா காந்தி இன்னும் வாழ்கிறார்.

# சிறு துளி பெரு வெள்ளம்

## தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் முதலீடு செய்யுங்கள்

டெபாஸிட்டுகளுக்கு எங்கள் வட்டி விகிதங்கள் :

1. சீசன் டெபாஸிட்டுகள் - ரூ 1000/-மும் அதற்கு மேலும் — வருடத்திற்கு
   15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை 3.25%
   46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை 3.75%
2. தவணை டெபாஸிட்டுகள் - ரூ 100/-ம் அதற்கு மேலும்

| காலம் | வருடத்திற்கு |
|---|---|
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்கு குறைவாக | 5.75% |
| 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களுக்கு குறைவாக | 6.25% |
| 9 மாதங்களிலிருந்து 1 வருடத்திற்கு குறைவாக | 7.25% |
| 1 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 3 வருடங்களுக்கு குறைவாக | 8.25% |
| 3 வருடங்களும் அதற்கு மேலும் ஆனால் 5 வருடங்கள் வரை | 9.25% |
| 5 வருடங்களுக்கு மேல் | 10.25% |

3. சேவிங்ஸ் கணக்கு 5.75%
4. நடப்பு (current) கணக்கு வட்டி கிடையாது

TNSC BANK



**தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்,**
379, நேதாஜி சுபாஷ்சந்திர போஸ் ரோடு, சென்னை-600 001
தந்தி : 'URBANK' போன் : 20367 (3 லைன்கள்)
டெலக்ஸ் : MS 7225

கிளைகள் : அண்ணா நகர், அண்ணா சாலை (காமதேனு), அண்ணா சாலை (அண்ணா சிலை), அசோக் நகர், பெஸண்ட் நகர், எழும்பூர், காந்தி நகர், கிரீன்வேஸ் ரோடு, ஜவஹர் நகர், கெல்லிஸ், தங்கசாலை, மைலாப்பூர், மைலாப்பூர் குளம், நுங்கம்பாக்கம், புரசைவாக்கம், ராயப்பேட்டை, ராஜா அண்ணாமலைபுரம், சாந்தோம், சாஸ்திரி நகர், ஷெனாய் நகர், தியாகராய நகர் & திருவல்லிக்கேணி.

TNSCB : 122/75





**கோ**வை மாவட்டத்தில், 'காட்டுக் கண்டங்கத்தரி' என்ற களை வெகு வேகமாகப் பரவி வருகின்றது! இக்களையைத் தடுக்க உடனடியாக முயற்சிகள் மேற்கொள்ளாவிடில், அவை பயிர்களுக்கும், மனித உயிர்களுக்கும் தீங்கு விளைவிக்கும். இக்களைகள் அமெரிக்க நாட்டிலிருந்து உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டபோது, உணவு தானியங்களுடன் வந்திருக்கக்கூடுமெனக் கருதப்படுகிறது. காட்டுக் கண்டங்கத்திரி களைகளின் விவரங்களும், தடுக்கும் முறைகளும் கீழே விபரமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி, உடுமலை, தாராபுரம், குண்டடம், பொங்கலூர், பல்லடம், குலூர், இணைத்துக்கடவு, சர்க்கார் சாமக்குளம், சிங்காநல்லூர் ஆகிய இடங்களில் இக்களை மிக அதிகமாகப் பரவியுள்ளது. மேலும் மதுரை, சேலம் மாவட்டங்களிலுமாக மொத்தம் சுமார் 10,000 எக்டேர் நிலப்பரப்பில் பரவியுள்ளதாகத் தெரியவருகிறது. இக்களை பரவிய நிலத்தில், இலாபகரமாகப் பயிர்ச் சாகுபடி செய்ய இயலாது!

**களையின் தன்மைகள்**

படத்தில் காணப்பட்டுள்ளது போல் இதன் உயரம் சுமார் அரை அடி இருக்கும். ஆனால் வேரின் ஆழம் 10 — 12 அடி வரை நீண்டிருக்கும்! இந்த நீண்ட வேர்கள் நிலத்திலிருக்கும் சத்துநீர் ஆகியவற்றை உறிஞ்சி பயிர்களுக்குப் போட்டியாக வளர்ந்து, பயிரின் மகசூலை வெகுவாகப் பாதிக்கின்றன. இலைகள் கத்திரிச் செடியின் இலைகளைப் போன்று இருக்கும். தண்டு, இலைகள் ஆகியவற்றின் மீது சிறிய கூர்மையான முட்கள் இருக்கும். ஊதா நிறப்பூக்கள் காணப்படும்.

இச்செடியின் மிகச் சிறிய வேர்த்துண்டு கூட, இதனுடைய இனவிருத்திக்குப் போதுமானது! விதைகள் மூலமும் இக்களை பரவும் தன்மை கொண்டது. ஆகவே, இக்களை செடியை, பூப்பதற்கு முன் அழித்தல் சிறந்தது. மேலும் நிலத்தில் பயன்படுத்தும் கலப்பை முதலிய கருவிகளின் மூலமும் பரவும். எனவே, இக்களை உள்ள இடத்தில் பயன்படுத்தப்பட்ட கருவிகளைத் தூய்மை செய்த பிறகே, வேறு இடங்களில் உபயோகப்படுத்த வேண்டும்.

**தடுப்பு முறைகள்**

மேற்கூறியபடி இக்களையின் தண்டு, இலைபாகங்களில் சிறிய முட்கள் இருப்பதால் இவற்றைக் கைக்களை எடுப்பது அல்லது களைக் கொத்தினால் எடுப்பது போன்றவை மிகவும் சிரமமான வேலையாக இருக்கும். களைக்கொல்லிகளின் மூலம் கட்டுப்படுத்தும் முறையே சிறந்தது. '2, 4-டி' என்ற களைக் (2, 4.—D) கொல்லியை எக்டேருக்கு இரண்டு கிலோ வீதம் 800 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்தால், தற்காலிகமாக இக்களையைக் கட்டுப்படுத்தலாம்.

அகன்ற இலையுள்ள பருத்தி போன்ற தாவரங்கள் இருக்குமிடத்தில் '2, 4-டி' களைக் கொல்லியை உபயோகப்படுத்தலாகாது.

சோளம், கம்பு, ராகி, மக்காச்சோளம் ஆகிய பயிர்கள் உள்ள நிலங்களில் '2, 4-டி' களைக் கொல்லியை உபயோகப்படுத்தலாம்.

'டார்டான் 22கே' என்ற களைக்கொல்லி, இதுவரை சோதனை செய்த பலவித களைக்கொல்லிகளில் சிறந்ததாகத் தெரிகிறது. ஆனால் இதை, அமெரிக்க நாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டும். அதற்கான ஏற்பாடுகள், தமிழ்நாடு அரசின் மூலம் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த களைச்செடிகளை ஒழிக்க எல்லாரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். இவைகளைப் பற்றிய மேலும் விரிவான விபரங்களுக்கு "உழவியல்துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை-3" என்ற முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்:—

**தகவல் தொடர்பு நிலையம்,**
**தமிழ்நாடு வேளாண்மைப்**
**பல்கலைக் கழகம்,**
**கோயமுத்தூர்-3.**

'பெணவழிச் சேறல்' அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கும் கருத்துகள் இன்றும் பொருத்தமாய் — மிக மிகப் பொருத்தமாய் —இருப்பது வியப்பிற்கும் வேதனைக்குமுரியது. ஆம். வியப்பினும் வேதனையே அதிகம். ஈராயிரம் ஆண்டுகட்கு மேலாகியும் மனித வாழ்வில் திருவள்ளுவர் கண்டு கண்டித்த மாசுகள் மாறவில்லையே — மாற முடியவில்லையே என்பதுதான் வேதனைக்குக் காரணம். வேதனைக்குக் காரணம் — வேதன் — பிரம்மன் தான்; இயற்கைப் படைப்பிலேயே ஆண் பெண் இன்பத்திற்குப் பித்தனுகும் உடலமைப்பு உள்ளது. அதை வெல்லவல்ல இராமலிங்கரும் இராமகிருஷ்ணரும் கோடியில் ஒருவர் இருவரே. அடங்காமை —அடக்காமையிலும் அடக்கமே இன்பம் தரும் என்பதை யார் அறிவார்? எப்போது அறிவார். அவரே—அப்போதே ஞானியார் அடிகள் சொல்லியதுபோல இந்திரஜித்தனும் இந்திரிய ஜித்துகளே. உயர்ந்தோர்; உய்வோர். இன்பத்துக்கு எளியராதல் எளிது; ஆனல் துன்பம். துன்பத்துக்கு எளியராதல் அரிது ; ஆனல் இன்பம். 'பெண்வழிச்றேல்' அதிகாரத்திலும், 'பெண் அச்சம்' என்னும் தொடரே பெரும் பொருத்தம் என்பது அவ்வதிகாரம் திரும்பத் திரும்ப நினைவூட்டும் அச்சத்தாலேயே விளங்கும்.

இனி 'பெண்வழிச் சேறலி'ன் பின்பக்கமாய் அமைந்துள்ளது 'வரைவின் மகளிர்' வாழ்க்கை. இதுவே எண்ணத்தக்கது. இதனினும் கூர்ந்து எண்ணத்தக்கது மது, மாமிசம், சூது, மாது ஆகியநான்கையும் அறத்துப்பாலில் வைக்காமல் வைத்த பொருண்மை புரிந்து போற்றத்தக்கது. இவை நான்கும் சமூகத் தீமைகள் (Social Evils) என்று அச்சான்ருேர் கருதியமையே இதற்குச் சரியான காரணம் எனலாம். மேலும் இவை நான்கும் ஒன்ருெடொன்று நெருங்கிய நேயமுடையன என்பதும் எண்ணத்தக்கது. பெண்வழிச்சேறலின் ஒரு பின் விளைவே—பின்பக்க விளைவே—ஆண் விபசாரமும் பெண் விபசாரமும் என்னும் சமூக உளவியல் கருத்தையும் திருவள்ளுவர் அறிந்து இருத்தல் கூடும் என்பதும் நம் அறிவாணவத்தை அடக்குதற்கு உரியதாகும்.

இனி 'வரைவின் மகளிர்' அதிகாரத்தில் திருவள்ளுவர் தெரிவித்திருக்கும் கருத்துகளை வகை தொகை செய்து பார்ப்போம்.

1. பொது மகளிரை —ஆம். பொது என்ற சொல்லே பழந்தமிழில் இழிந்த பொருளிலும் இருக்கிறது. —திருவள்ளுவர் (அ) அன்பை இல்லாமல் பொருளையே விரும்புபவர்கள். (ஆ) நன்ருகச் செய்யப்பட்ட கைவளையல்கள் அணிந்திருப்பவர். (இ) துன்பத்தில் சிக்க வைக்கும் இன்பச் சொற்களைச் சொல்பவர்கள். (ஈ) பயன் எவ்வளவு என்று பார்த்துப் பண்பான சொற்களைப் பேசுபவர்கள். (உ) பொருட்பெண்டிர், பொருட்பொருளார். (ஊ) பொய்மை முயக்கம் செய்பவர். (எ) புன்னலம் உடையவர். (ஏ) பொது நலத்தார் தந்நலத்தார். (ஐ) தங்கள் அழகு முதலியவற்றுக்காகச் செருக்குபவர். (ஒ) அன்பு தவிர வேருனவற்றை நெஞ்சில் நினைப்பவர். (ஓ) மோகினி மயக்கு எனப்படும் மாய முயக்குடையவர். (ஔ) ஒழுக்க வரையறை இல்லாதவர்; சிறந்த அணிகலன்களை உடையவர் (ஃ) மெல்லிய தோள் உடையவர்கள் (அ1) இருமனப் பெண்டிர்.



இவ்வாறு திருவள்ளுவர் எடுத்துக்காட்டும் தீய பெண்மையின் அகத்தையும் புறத்தையும் கூர்ந்து பார்த்தால் இந்தத் தீமைக்கெல்லாம் ஒரே காரணம் பொருள்—காசுதான் என்பது தெள்ளத் தெளிவாக விளங்கும். எனவே காரல் மார்க்ஸ் வழியில் அந்தக் காசை கட்டுப்படுத்தி விட்டால் காசு—குற்றம் — என்ற மாசும் மாயும் என்பது மலை விளக்கு. இனி, இந்த வரைவின் மகளிர் மாய வலையில் விழாமல் இருக்க வல்லார் யார் என்பது பற்றி வள்ளுவர் கருத்துகள் யாவை என்று பார்ப்போம். (1) பொது மகளிர் இன்பச்சொல்லின் உண்மை —புன்மை அறிந்து விடுபவர். (2) அருட்பொருள் ஆயும் அறிவினவர். (3) மதி நலத்தின் மாண்ட அறிவினவர். (4) நிறை நெஞ்சவர். (5) ஆயும் அறிவினவர்.

''வரைவின் மகளிர்' அதிகாரத்தில் மூன்ரும் வகை — தொகைக்கு உரியது அறிவு கெட்டுப் பொது மகளிர் மயக்கில் வீழ்வது எத்தகையது என்பது பற்றியாகும்.

(1) இழுக்கு. (2) இருட்டறையில் அனுதைப் பிணத்தைத் தழுவியது போன்றது, (3) கீழ்மகன் ஆழ்ந்து கிடக்கும் நரகம்.

இனி, இந்த அதிகாரத்தில் மூன்றிடங்களில் தீய பெண்களின் தோளைத் திருவள்ளுவர் விதந்தோதுவது அவர்தம் நாகரிகப் பண்பைக் காட்டும் போதும்! வரைவின் மகளிர் வலையில் வீழாமல் காப்பது 'ஆயும் அறிவு' என்று ஈரிடங்களிலும், 'மாண்ட அறிவு' என்று ஓரிடத்திலும் குறிப்பது ஆய்தற்குரிய மாட்சியுடையது.

[illegible]ம் பெண்டிரும் கள்ளும் கவறும்
[illegible]க்கப் பட்டார் தொடர்பு.

என்று சமூகத் தீமைகளைத் தொகை செய்து திருவள்ளுவர் கூறுவது கருதத்தக்கது.

திருவள்ளுவர் திருக்குறளில் இதுவரை நாம் பார்த்த நான்கு அதிகாரங்களில் வாழ்க்கைத் துணைநலம் என்ற ஒரதிகாரமே நல்ல பெண்மணியைக் காட்டுவதாய் உள்ளது. ஏனைய மூன்று அதிகாரங்களும் கெட்ட பெண் மணிகளைக் காட்டுவதாகவே உள்ளது. ஏன்? இந்த (quantity) அளவு பெண்ணின் (quality) தன்மையைக் காட்டுவதா? இல்லை எனலாம். அப்படியானுல்? இது ஆண்மகன் வழுக்கலால் அடையும் வழுக்களைக் காட்டும் (quantity)—(quality)—(Identity) அளவு—தன்மை—அனைவு எனலாம்.

சரி, திருவள்ளுவர் எங்கேனும்—பொருட்பாலிலேனும் —நாடாளும் பெண்கள் —பெண்மை பற்றி நாவசைத்துள்ளாரா? அவ்வையை அறியாதவரா அவர்? இது ஒரு சிக்கலான கேள்விதான். ஆனல் இன்னும்கூட விதிவிலக்காய் இருக்கும் நிலைமை — தலைமை —பற்றி நேரடியாக ஏதும் கூறவில்லை என்றும்—எதிர்ப்பாக ஏதும் கூறவில்லை என்பதை எண்ணி—திருவள்ளுவரைத் திட்டாமல் விட்டு விடலாம். பாவம் அவரும் மனிதர்தானே!. தெய்வப் புலவரும் எல்லாம் அறிந்த வல்ல தெய்வம் இல்லையே! அவரும் ஆண்மகன் தானே! பெண்மணி இல்லையே! அவர் வாழ்ந்த காலமும் முதல் நூற்ருண்டின் தொடக்கம் தானே! இருபதாம் நூற்ருண்டின் முடிவு அல்லவே!

பெண்மை பற்றித் திருவள்ளுவர் கருத்துகளை ஆராயும்போது அவர் கல்வி—கல்லாமை இரண்டோடும் பொருத்திப் பெண்ணின் உடலையும் பெண்ணின் இன்பத்தையும் உவமை காட்டிச் சொல்லும் உண்மைகளை நினைவு கூருமல் இருக்க இயலாது.

அறிதோறு அறியாமை கண்டற்ருல் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு (1110)

இக்குறளுக்குப் பேராசிரியர் டாக்டர். மு.வ. அவர்கள் தெளிவுரை வருமாறு :

''செந்நிற அணிகலன்களை அணிந்த இவளிடம் பொருந்தும் தோறும் காதல் உணர்தல், நூற்பொருள்களை அறிய அறிய அறியாமை கண்டாற் போன்றது.''

கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று (402)

இக்குறளுக்குப் பேராசிரியர் டாக்டர் மு. வ.வின் தெளிவுரை வருமாறு :

(கற்றவரின் அவையில்) கல்லாதான் ஒன்றைச் சொல்ல விரும்புதல், முலைஇரண்டும் இல்லாதவள் பெண் தன்மையை விரும்பினுற் போன்றது.

இவ்விரு குறட்பாக்களும் அறிவுத் தொடர்புடையனவாய் இருக்கும் அருமைப்பாடு எண்ணி எண்ணி இன்புறத்தக்கது.

ஆம். கல்வி என்ற சொல்லில் உள்ள ஒற்று விலகினுல் கலவி தானே! ஏன்? கல்வியும் ஒரு கலவி தானே! கலவியும் ஒரு கல்வி தானே!

இனி, காமத்துப்பால் காட்டும் பெண்மையை எண்ணுவதும் இன்றியமையாக் கடமை. அந்தப் பெண்மை தன்னையும் தன் குடும்பத்தையும் — ஏன் — மன்பதையையுமே வாழ்விக்கும் பெண்மை. உளவியலும் உலகியலும் உடலியலும் உயிரியலும் உணர்ந்த உயர்ந்த பெண்மை.

இவ்வுண்மையை விளக்க இருக்கும் சிறிய நேரத்தில் பெரியதொரு சான்றை அரியதொரு எடுத்துக்காட்டாய்க் காண்போம்.

தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்ருல்
அம்மா அரிவை முயக்கு (1107)

இக்குறட்பாவுக்குப் பேராசிரியர் டாக்டர் மு.வ.வின் விளக்கம் வருமாறு :

''அழகிய மாமை நிறம் உடைய இவளுடைய தழுவுதல் தம் வீட்டிலிருந்து தாம் ஈட்டிய பொருளைப் பகுத்துக் கொடுத்து உண்டாள் போன்றது.''

பெண்மையின் பெருமையெல்லாம் தாய்மையிலேயே தழைத்து நிற்பது உலகறிந்த உண்மை. இதை மன்பதைப் புலவர் திருவள்ளுவர் எவ்வளவு தெளிவாகவும் திண்ணிதாகவும் உணர்ந்திருந்தார் என்பதற்கு அரும் பெருஞ்சான்று :



# வள்ளுவர் கண்ட பெண்மை



டாக்டர் ந.சஞ்சீவி

தமிழகத்தின் முழு மணிகளாய் விளங்கி உலகிற்கு ஒளி பரப்பி வருவன சில. அவற்றுள் இங்குக் குறிக்கத்தக்கன இரண்டு; ஒன்று, திருவள்ளுவரின் திருக்குறள்; மற்றொன்று கண்ணகியின் கற்பு.

*இது பேராசிரியர் டாக்டர் மு.வ.வின் இலக்கியத் திறனாய்வு மதிப்பீடு.*

திருவள்ளுவர் தம் உலகப் பொதுமறையாம் தமிழ் மறையில் பெண் என்ற சொல்லை 'பெண் வழிச் சேறல்' என்ற அதிகாரத் தலைப்பில் ஓரிடத்திலும் (அதி. 91) திருக்குறள் பாக்களில் பதினான்கு இடங்களிலும் (1093, 1084, 1272, 1311, 40, 56, 902, 907—1,2, 969, 910, 1137, 1230, 54); பெண்டிர் என்ற சொல்லை மூன்றிடத்திலும் (58, 913, 920); பெண்மை என்ற சொல்லை நான்கு இடத்திலும் (147, 150, 1280, 1258) எடுத்தாள்கிறார். இனி, பெண் என்ற சொல் வழிப்பட்ட பொருளைத் திருவள்ளுவர் அறத்துப்பாலில் (1) வாழ்க்கைத் துணைநலம்; (2) பிறனில் விழையாமை ஆகிய இரு அதிகாரங்களிலும், பொருட்பாலில் (1) பெண் வழிச் சேறல் (2) வரைவின் மகளிர் ஆகிய இரு அதிகாரங்களிலும், காமத்துப்பாலில் இருபத்தைந்து அதிகாரங்களிலும் கையாள்கிறார் எனலாம். ஈண்டுப் பெண்ணில்லா அறமும் பொருளும் கூட இருக்கலாம். ஆனால் இன்பம் அல்லது காமம் இல்லை என்பது எண்ணத்தக்கது.

திருவள்ளுவர் பெண்ணின் பெருநிலையாகிய தாய்நிலையை முப்பாலில் ஈரிடங்களிலே (69, 1047) தாயென்ற சொற் கொண்டு சுட்டுவதும் கருதத்தக்கது.

சற்றுமுன் சாற்றிய வகையில் அறத்துப்பாலில் இல்வாழ்க்கை அதிகாரத்தை அடுத்து வாழ்க்கைத் துணைநலம் அதிகாரமும் ஒழுக்கமுடைமையை அடுத்துப் பிறனில் விழையாமை அதிகாரமும் இருப்பது பொருத்தம்-எண்ணத்தக்கது. இப்பொருத்தத்துடன் பொருட்பாலில் பெண்வழிச் சேறல் என்ற அதிகாரத்தின் அடுத்த அதிகாரமாகவே வரைவின் மகளிர் அதிகாரம் அமைந்திருக்கும் பொருத்தம் ஆராயத்தக்கது. இவ்வாய்வின் மேலோட்டப் பயனே வாழ்க்கைத் துணைநலத்தில் வழு ஏற்பட்டாலே பிறனில் விழையும் பிழைநிலை ஏற்படும் என்பதையும் பெண் வழிச் சேரும் பித்தன் செயல் வரைவின்மகளிர் வாழ்வுக்கு வாய்ப்பளிக்கும் என்பதையும் விளக்கும். இவ்விளக்கத்தால் ஆண்—பெண் என்னும் அச்சாணியைச் சுற்றிச் சுழலும் வாழ்வே அறம், பொருள், என்னும் பேருண்மையும் பிறங்கும்.

...பமே வாழ்க்கையின் இருப்பம் — ...ம். இந்த விருப்பம் என்ற பொருளே பெண் என்ற சொல்லின் வேர்ப்பொருள். விருப்பத்தின் விளைவே வாழ்க்கை; விருப்பம் இல்லையேல் வாழ்க்கையும் இல்லை. பெண்ணின் பெருக்கமே வையகம்; பெண் இல்லையேல் ஆணும் ஏது? அனைத்துலக வாழ்க்கையும்

திருவள்ளுவர் தமது அறத்துப்பாலில் இல்லறத்துக்கே முதலிடம் தருகிறார். அந்த இல்லறத்தின் அச்சாணி பெண்ணென்றே அறைகிறார். இன்று போலவே அன்றும் ஆணுக்குப் புற வல்லாண்மையும் பெண்ணுக்கு அக வல்லாண்மையும் அமைந்திருந்தது எனலாம். வேறு சொற்களில் சொன்னால் ஆணின் ஆற்றல் வெளிப்படையானது—பருமையானது; பெண்ணின் ஆற்றல் மறைமுகமானது—நுண்மையானது எனலாம். இதனால் நடைமுறையிலேனும் ஆணுக்குப் பெண் அடிமை என்பது எழுவாய்ப் பாட்டிலோ பயன்பாட்டிலோ செயற்பாட்டிலோ இல்லை என்பதும் விளங்கும். ஆனால் இயற்கை அமைப்பிலேயே நுண்மையினும் பருமைக்கு உடனடியாகவும் (Immediate), வெளிப்படையாகவும் (apparent அல்லது obvious) அமைந்திருக்கும் ஆற்றலை எவரே மாற்ற இயலும்? மாற்றினாலும் ஆண்மையும் பெண்மையுமற்ற ஓர் அலி இனமே மனித இனமாகத் தோன்றி மாட்சி இழக்கக் கூடுமன்றோ? அத்தகைய அச்சத்திற்கு இந்த இருபதாம் நூற்றாண்டின் முக்கால் பகுதி முடியும் நேரம் ஆரம்பமாக உள்ளது அன்றோ? 'பெண்வழிச் சேறலை' அன்று கண்டித்துப் பாடிய திருவள்ளுவர் இன்று இருந்திருந்தால் பெண்கள் 'ஆண் வழிச்சேறலையும்' கண்டித்துப் பாடியிருப்பார் என்பது உறுதி எனலாம்.

திருவள்ளுவர் 'வாழ்க்கைத் துணைநலம்' அதிகாரத்தில் 'மனைத்தக்க மாண்பு' என்று கூறுவன பின்வரும் மூன்று எனலாம். (1) கணவன் வருவாய்க்கு ஏற்ப வாழ்க்கை நடத்தல் வேண்டும். (2) கற்பு. (3) நன்மக்கள் பேறு. இவ்வாறு திருவள்ளுவர் கருத்துகளைப் பாகுபாடு செய்வது சரியானால் அச்சான்றோரின் ஆழ்ந்த சிந்தனையின் அளவையியல் (Logic) போற்றத் தக்கதாகும். வருவாய்க்கு ஏற்ப வாழ்க்கை நடத்தல் உலகியல் கடமை. என்றும் ஒழுக்கத்தையே—கற்பையே—காக்கும் கடமை. பல பெண்கள் கற்பிழக்கக் காரணம்—அதுவும் இன்று அதிகமாக—வருவாய்க்கு ஏற்ப வாழ்க்கை நடத்தும் உள்ள உறுதி இல்லாமைதான். உறுதிதான் கற்பு. இத்தகைய உறுதி உடைய—உறுதி நிறைந்த—உறுதிமிக்க வாழ்க்கை உடையவர்க்கே நன்மக்கள் பேறு வாய்க்கும். அத்தகைய நன்மக்கள் பிறந்தாலே இந்த உலகம் உயரும்; உய்யும். இல்லையேல் இல்லைதான்; தொல்லைதான்.

இனி, 'பிறனில் விழையாமை' பற்றி அவர் தெரிவிக்கும் கருத்துகள் வருமாறு :

1. பிறனில் விழைதல் பேதைமை; இழிமை; தேராமை; பகை; பாவம்; அச்சம்; பழி.

2. பிறனில் விழையாமை அறம்; பேராண்மை; ஆன்ற ஒழுக்கு; நலம்.

ஈண்டும்—மீண்டும்—திருவள்ளுவர் பிறனில் விழையாமை—ஏன்?—பிழையாமை என்றும் சொல்லலாம்—அறம் பற்றித்தெரிவிக்கும் கருத்துகளில் உள்ள நடைமுறை ஞானம் (Practical Wisdom) கருதத்தக்கது.

'பிறனில் விழையாமை' அதிகாரத்தில் ஒருவன் மனைவியைப் 'பிறன் பொருளாள்' 'பிறனியலாள்', 'பிறன் வரையாள்' என்று சொல்வது சிலருக்கு எரிச்சல் தரலாம். ஆனால் திருவள்ளுவர் பூாலுணர்வோடு உரிமையின் உறுதிப்பாட்டை உணர்த்த இவ்வாறு சொல்வதாகக் கொள்வதே சாலும். இந்த அதிகாரத்தில் 'இல்' என்ற சொல்லைத் திருவள்ளுவர் இல்லாளுக்கு ஆக்கி உரைப்பது ஆழ்ந்துகருதத்தக்கது. இது திருவள்ளுவர் பெண்ணே — மனைத் தலைவியே — சங்க இலக்கியம் போற்றும் 'மனை விளக்கு' — என்னும் கருத்துக்கு உடன்பாடு உடையவர் என்பதை உணர்த்தும். பெண்ணை 'இல்லாள்' என்று சொல்லிவிட்ட பின்பு பெண்ணின் பெருமை பற்றிப் பேசுவதற்கு என்ன இருக்கிறது?

இனி, பொருட்பாலில் முன்னும் பின்னுமாக உள்ள 'பெண்வழிச் சேறல்', 'வரைவின் மகளிர்' என்ற அதிகாரங்களைப்பார்ப்போம். (1) தற்சிந்தனை இன்றி மனைவி சொல்லைக் கேட்பதால் பெரும்பயன் விளையாது. (2) ஆண் கடன் மறந்து பெண் பேச்சுக்கேட்பான் பெறும் ஆக்கம் பெரிய நாணத்தைத் தரும். (3) மனைவியிடம் தாழ்ந்து போவது இயல்பு—இயற்கை கூட இல்லை. (4) மனைவியிடம் பயப்படுபவனுக்கு மறுமை கூடக்கிடையாது; அவன் செயல் திறம் சிறக்காது. (5) மனைவிக்குப் பயப்படுபவன் நல்லவர்க்கும் நல்லதுக்கும் பயப்படுவான். (6) மனைவிக்கு அஞ்சுபவர் தேவவாழ்வு வாழினும் பெருமை இல்லாதவர். (7) பெண்ணுக்கு ஏவல் செய்யும் ஆண்மையினும் நாணமுடைய பெண்மையே நல்லது. (8) மனைவி விரும்பியவாறே நடப்பவர் நண்பர்களின் குறையைக்கூட முடிக்க மாட்டார்கள்; நல்லது செய்ய மாட்டார்கள். (9) அறமும் பொருளும் பிறவும் பெண் ஏவல் செய்வார்களிடம் இல்லை. (10) எண்ணிப் பார்க்கும் அறிவுடையார் எப்போதும் மனைவியின் ஏவல் கேளார்.



**ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய் (69)**

இக்குறளுக்குப் பேராசிரியர் டாக்டர். மு.வ. அவர்களின் தெளிவுரை வருமாறு :
தன்மகனை நற்பண்பு நிறைந்தவன் எனப் பிறர் சொல்லக் கேள்வியுற்ற தாய், தான் அவனைப் பெற்ற காலத்து உற்ற மகிழ்ச்சியை விடப்பெரிதும் மகிழ்வாள்.

இனி இரு தாய்மார் திருக்குறளில் எத்தகைய எதிர்நிலை இடம் பெறுகின்றனர் என்பது எண்ணி எண்ணி மகிழ்ந்து மகிழ்ந்து வியந்து வியந்து பாராட்டிப் பின்பற்றவும் தக்கது.

**அறஞ்சாரா நல்குரவு ஈன்றதா யானும்**
**பிறன்போல நோக்கப் படும் (1047)**

இக்குறளுக்குப் பேராசிரியர் டாக்டர் மு.வ. அவர்களின் தெளிவுரை வருமாறு :

''அறத்தோடு பொருந்தாத வறுமை ஒருவனைச் சேர்ந்தால் பெற்ற தாயாலும் அவன் அயலானைப்போல் புறக்கணித்துப் பார்கப்படுவான்''

இவ்வாறே உள்ள இன்னொரு குறள் வருமாறு :

**ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்**
**சான்றோர் முகத்துக் களி (923)**

இக்குறளுக்குப் பேராசிரியர் டாக்டர் மு. வ. வின் தெளிவுரை வருமாறு :

''பெற்ற தாயின் முகத்திலும் கள்ளுண்டு மயங்குதல் துன்பம் தருவதாகும். அப்படியானால், குற்றம் கடியும் இயல்புடைய சான்றோரின் முகத்தில் அது என்னவாகும்?''

இக்குறளோடு ஒருவகையில் ஒப்பிட்டும் ஒருவகையில் உறழ்ந்தும் நோக்கத்தக்க குறள் பின்வருமாறு :

**ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க**
**சான்றோர் பழிக்கும் வினை (656)**

இக்குறளுக்குப் பேராசிரியர் டாக்டர் மு.வ.வின் தெளிவுரை வருமாறு :

''பெற்ற தாயின் பசியைக் கண்டு வருந்த நேர்ந்தாலும், சான்றோர் பழிப்பதற்குக் காரணமான இழிவுள்ள செயல்களை ஒருவன் செய்யக்கூடாது''.

**திருவள்ளுவர் காட்டும் பெண்மை—தாய்மை அனைத்துலக ஆண்களும் மதித்து வழிபடத்தக்கது.**



தமிழ்நாட்டில் ஆசிரியர் கல்வியின் தரத்தை உயர்த்தும் பொருட்டு, ஆசிரியர் பயிற்சிக் கழகங்களில் பயிற்றுவிக்கப்படும் ஆசிரியர்களுக்கான பாடத் திட்டம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

முதல் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரையிலான மாணவ மாணவியருக்குக் கல்வி கற்பிப்பதற்குத் தேவையான அறிவையும், மனப்போக்கையும், பரிவு உணர்வையும், திறமையையும் ஆசிரியர்கள் பெற வேண்டும் என்பதே திருத்தப்பட்ட பாடத் திட்டத்தின் நோக்கமாகும்.

இதன்படி செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்குப் பாட நோக்குடனை 2 ஆண்டுப் பயிற்சி அளிக்கப்படும்.

புதிய கணிதம், மேம்படுத்தப்பட்ட விஞ்ஞானம், வரலாறு, பூகோளம், மொழிகள் ஆகியவற்றைப் போதிப்பதிலான பல்வேறு முறைகளைப் பயிற்சி ஆசிரியர்கள் கற்பதுடன், முதலாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரையிலான பாடத் திட்டங்களில் அடங்கிய விஷயங்களையும் முற்றிலுமாக அறிந்தாக வேண்டும். தவிர 9 முதல் 11-வது வரையிலான வகுப்புகளுக்குரிய சில முக்கிய பாட விஷயங்களையும் அறிந்தாக வேண்டும்.

சுகாதாரம், ஆரோக்கியம், சமூகக் கல்வி போன்ற புதிய பாடங்களும் பயிற்சி ஆசிரியர்களுக்கான பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

பாட போதனையில் புதிய உத்திகளைக் கையாளவும் பயிற்சி ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்படுவர். கைவேலை மற்றும் இதர நடவடிக்கைகள் மூலம் வேலை அனுபவம் பெறவும் புதிய பாடத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

ஆசிரியர் கல்வி டிப்ளமாவுக்கான பொதுத் தேர்வு முதலாண்டு முடிவிலும் இரண்டாவது ஆண்டு முடிவிலுமாக இரு கட்டங்களில் நடத்தப்படும்.

இப்புதிய பாடத் திட்டமானது 1975—77-ஆம் ஆண்டு பயிற்சி ஆசிரியர்களுக்கு ஆய்வு முறையில் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

# இது தமிழ்நாட்டின் மக்கள் இயக்கம்



## மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

## பேராசிரியர் க. அன்பழகன்

மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்-பிறப்பு விகிதத்தைக் குறைக்க வேண்டும்-பிறந்து விட்ட குழந்தைகளைக் காக்க வேண்டும் என்ற பெரு நோக்கில் நாட்டில் குடும்ப நன்னலத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நல்வாழ்வு, ஊட்டச் சத்துணவு அளித்தல், தாய்-சேய் நலம் காத்தல் ஆகிய பணிகளோடு, கூட இணைந்த திட்டமாகக் குடும்ப நன்னலத்திட்டம் நடைபெறுகிறது. இத்திட்டச் செயலாக்கத்தில் முனைப்பினையும்-விறுவிறுப்பையும் - வேகத்தையும் ஏற்படுத்த, பட்டி தொட்டிகள் முதல் நகரங்கள் ஈறாக உள்ள மக்களுக்கு விளக்கந்தந்து, ஏற்கச் செய்ய, செப்டம்பர் 15-ஆம் நாள் முதல் 30-ஆம் நாள் வரை நாடு முழுவதிலும் குடும்ப நன்னலத்திட்ட இரு வார விழா எடுக்கப்படுகின்றது.

தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில் அரசு அலுவலர்கள் நடத்தும் இயக்கமாக மட்டும் இத்திட்டம் செயல்படவில்லை. அமைச்சர் பெருமக்களும், சட்டப்பேரவை, மேலவை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்றவர்களும், அலுவல் சார்பற்ற மக்கள் தலைவர்களும், ஒருங்கிணைந்து செயல்படுத்தும். மக்கள் இயக்கமாகவே செயல்படுகிறது. அதனாலேதான் குடும்ப நலத் திட்டச் செயலாக்கத்தில் முன்னணியில் உள்ள இந்திய மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு தொடர்ந்து இருந்து வருகிறது. பிறப்பு விகிதம் கூட தமிழ்நாட்டில் 1000-க்கு 29 என்ற அளவினதாக இருக்கிறது. இந்திய நாட்டின் பிற மாநிலங்களில் நிகழ்ந்து வரும் பிறப்பு விகித அளவை ... மாநிலத்தின் பிறப்பு விகிதம் குறைவானது என்பதில் நாம் பெருமைப்படலாம். எனினும், தமிழ்நாட்டின் பரப்பை நோக்க இங்கு ஏற்பட்டு வரும் மக்கள் தொகைப் பெருக்கம் கவலையூட்டத்தக்கதாகவே இருந்து வருகிறது.

இந்தியா விடுதலை அடைந்த 1947 முதல் இன்று வரை—25 கோடி (250 மில்லியன்) மக்கள் கூடுதலாகி இருக்கிறார்கள். கூடுதலாகியுள்ள இந்த 25 கோடி அளவு மக்கள் தான், இந்தியாவிலும் பல மடங்கு பெரிய சோவியத் ரஷ்யா முழுவதிலும் இருக்கிறார்கள். இந்தியாவின் நிலப் பரப்பை விட ரஷ்யாவின் நிலப்பரப்பு ஆறு மடங்கு அதிகமானதாகும். கடந்த சில ஆண்டுகளாக இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாகி வரும் 1 கோடியே 30 லட்சம் மக்கள் தொகை, ஆஸ்திரேலியாவின் மக்கள் தொகைக்குச் சமமானதாகும். ஆஸ்திரேலியாவின் நிலப்பரப்பு இந்தியாவின் நிலப்பரப்பை விட இரண்டரை மடங்கு அதிகமானதாகும். இந்தப் புள்ளி விவரங்கள் இந்தியா எத்தகைய மக்கள் தொகைப் பெருக்கப் பிரச்சினையைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது என்பதற்குச் சான்றுகளாகும். உலகநாடுகளிலேயே மக்கள் தொகையில் முதலிடம் வகிக்கிறது சீனு என்றால், இந்தியா இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

இந்திய அரசின் நிதி உதவியோடு, தமிழ்நாடு அரசு தன் நிதியிலிருந்து பெரு நிதி ஒதுக்கி இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. ஆனால் அண்மைக் காலத்தில், ஆண்டுக்காண்டு இத்திட்டத்திற்கான இந்திய அரசின் நிதி உதவி குறைந்து கொண்டே வருவது வருந்துவதற்குரியது. குடும்ப நன்னலத்திட்டம் முந்துரிமை அளிக்கப்பட்டு, அவசியமான செலவுகளுக்குரிய நிதி உதவியை ஒதுக்கித்தந்து, செயல்படுத்த வாய்ப்பில்லாமல்போனால், பொருளாதார மறுமலர்ச்சித் திட்டங்களாலே பலன் ஏதும் ஏற்படாது. நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு கிட்டாது. அரசும் மக்களும் இணைந்து செயல்பட்டாலன்றி, திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியால் விரும்புகின்ற பயன் விளையாது. தனிப்பட்ட குடும்பங்களின் நலிவு நீங்க,—நாட்டின் சுமை குறைய—வளம் ஓங்க—வகையான வாழ்வுக்கு வழி அமைத்துக் கொள்ள—வழி செய்வது குடும்ப நன்னலத்திட்டமாகும்.

அண்மைக் காலங்களில் தொழிலாளர்கள் குடும்ப நலத் திட்டத்தை ஏற்கச் செய்வதில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. தொழிலாளர்களைக் குடும்ப நலத்திட்டம் ஏற்கச் செய்ய- ஊக்கப்படுத்த வேண்டுமென்று கருதிய தமிழக அரசு, தொழில் நிறுவனங்களுக்கெல்லாம் வேண்டுகோள் ஒன்றினை அனுப்பி, அந்தந்த நிருவாகம் விரும்பினால், அரசு அளிக்கும் ஈட்டுத்தொகையான ரூ. 60/- உடன் கூட, தங்கள் நிதியிலிருந்து ஊக்கத்தொகை வழங்கலாம் என்று கேட்டுக் கொண்டது. அந்த வேண்டுகோளுக்கிணங்க தமிழ் நாட்டி

# வில்லாளன் ஓரிக்குச் சொல்லாளன் எடுத்த விழா

— டாக்டர் மெ. சுந்தரம்



வல்வில் ஓரி—இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வீரத்தோடு விளையாடிய வெற்றி வேந்தன்; குறிஞ்சிக் கோமான். அக்கொல்லிமகன் விளைத்த வெற்றித் திறத்தை, படைத்த படைத் திறத்தைப் பாருக்கு உணர்த்த அவ்வில்லாளன் பெயரில் ஓர் இலக்கிய விழா கண்டார் தமிழக முதல்வர், தமிழவேள் டாக்டர் கலைஞர் அவர்கள். கலையுள்ளம் பெருக்கெடுத்து ஓடும் அக்கன்னித் தமிழ்மகன், தங்கள் மலையிலே, குன்றிலே—பன்னெடுங் காலத்திற்கு முன்னரே வாழ்ந்து கொற்றம் பரப்பிய கோமகனுக்கு விழா எடுத்திருக்கின்றார். அந்த நன்றிப்பெருக்கிலே—நற்றமிழ் உள்ளத்திலே கூடியுள்ள மலைவாழ் மக்கள் மலையின் மூலிகையைக் காட்டிலும் மிகுதியாகும்! மலையின் செடிகொடிகளைக் காட்டிலும் அதிகம் ஆகும்!

இங்குள்ள அறப்பளீசுவரர் ஆலயத்தில் ஆண்டுக்கு ஒரு முறை பதினெட்டாம்பெருக்கு திருவிழா நடக்கும். அப்பெருக்கு நாள் மக்கள் பெருக்கெடுத்துக் கூட்டமாக வருவார்கள். அத்திருவிழா நாளையே புறமுதுகு இடச் செய்த இவ்வியப்பரிய விழா இப்படி ஆயிரக் கணக்கான, மக்களை ஓரிடத்தில் சேர்த்தது இம்மலையின் வரலாற்றிலே இதுவே முதல் முறை என்று அங்கு வாழும் மலைவாசிஒருவர் கூறினார்.

மலை வளம் காணச் சென்ற சேரனைக் காணக் குன்றக் குறவர் மலைபடு பொருட்களைக் காணிக்கையாகத் தந்த சிலப்பதிகாரக் காட்சியினை இவ்விழா நினைவூட்டுகிறது. தமிழரின் களிப்பை 6—9—75, 10-30 மணிக் கணக்கில் கொல்லிமலையில் மலைவாணர் தமிழக முதல்வர், தமிழ வேள், டாக்டர் கலைஞர் அவர்களுக்குகையுறை பொருளினை— காணிக்கையினை நேரில் கண்டவர் புல்லரித்து நின்றனர். அக் காட்சியில் உள்ளத்தோடு ஒன்றிய, உணர்வோடு கலந்த, ஆயிரக்கணக்கான மக்களின் வரவேற்பு, தாய்ப் பசுவின் இனம் கண்டு கொண்ட கன்றின் நிலையைப் போன்றிருந்தது. தங்களை வாழ வைக்கும்—தங்கள் வாழ்வினை மலர வைக்கும் தலைவனை வரவேற்கும் பூரிப்பில் மக்கள் திளைத்தனர்.

14 நாட்டவர்—வாழவந்தி நாடு, அரியூர் நாடு, வயலூர் நாடு, திண்ணனூர் நாடு, குண்டூர் நாடு, எடப்புளி நாடு, திருப்புளி நாடு, சித்தூர் நாடு, தவத்தூர் நாடு முதலிய 14 நாட்டினரும் அவ்வந் நாட்டினில் பூத்த மலர்களால் ஆன 14 மாலைகளை முதல்வருக்கு அணிவித்தனர் — வரவேற்றனர். அம் மலர்கள் இங்குக் கதம்பப் பூ, தாமரைப் பூ, கடுகுப் பூ, காச்சப் பூ, கத்தரிப் பூ, அடுக்கு மல்லிகைப் பூ, ரோசாப் பூ, பிச்சிப் பூ முதலியனவாகும். வரவேற்ற காலத்தில் வாயிலின் ஆள் உயர இரண்டு, பூமாலைகள் முதல்வரை வரவேற்றன. இந்த வரவேற்பிற்குப் பாயிரம்செய்வது போல் அம் மலை வாணரின் தலைவன் வல்வில் ஓரி வடிவில் தன் வெள்ளைக் குதிரை மேலேறி வில்லும், அம்புமாகக் காட்சி அளித்து முதல்வரை வரவேற்ற காட்சி சங்க காலத்தை நினைவூட்டுவதாக அமைந்தது. இப்படியாகத்தான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஓரியும் வரவேற்றிருப்பான் என்று எண்ணத் தோன்றுகிறது.

வளப்பூர் நாட்டு ஊர்ப் பட்டக்காரரர் வல்வில் ஓரியாய் வேடம் தாங்கி குதிரை மீது இவர்ந்து தமிழக முதல்வரை, வரவேற்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. தொடர்ந்து ஒவ்வொரு நாட்டினரும் தத்தம் மலைப் பகுதி மலர்களால் ஆன மாலைகளை முதல்வருக்கு அணிவித்து வரவேற்றனர்.

சங்க கால துணங்கைக் கூத்தினை நினைவூட்டுவது போன்று ஆடவரும் மகளிரும் கைகோத்து நின்று ஆடினர். அப்போது அவர்கள் அம்மலைப் பகுதியில் பாடப் படும் கிராமப்பாடல்களைப் பாடி அம்மலையின்கண் பூத்த மலர்களைத் தூவி ஆடினர். முதல்வரை வாழ்த்தி வரவேற்றனர்.



[illegible] ஊர்தியில் சென்ற [illegible] தலைவனின் கரங்களைக் குலுக்குவதில் ஆர்வம் காட்டினர். அம்மலைப் பகுதி மாணவர்கள் கல்வி நலனுக்கென நிறுவப் பெற்ற உறைவிட உயர்நிலைப் பள்ளி மாணவர் வெள்ளுடையாம் சீருடை அணிந்து முதல்வரை வரவேற்றனர். பூங்குளம்பட்டி ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளி மாணவர்கள் அணி வகுத்து நின்று தங்களுக்குக் கல்விக் கண் கொடுத்த கலைநாயகனுக்கு வணக்கம் செலுத்தினர். இக் கல்விக் காட்சி, மாணவர் உள்ளங்களில் எங்ஙனம் குடிகொண்டு உள்ளார் என்பதை விளக்கப் போதிய சான்றாகும். பல்லியங்களான மேளம், பம்பை, தாரை, தப்பட்டை முதலியன தமிழரின் தானைத் தலைவனை மாட்சி கொண்ட தமிழவேளை வரவேற்றது.

குறிஞ்சிக் கோமான் வல்வில் ஓரி கொற்றம் பரப்பிய மண்ணில் அடியெடுத்து வைத்த அருந்தமிழ் காவலன் கலைஞரின் கரத்தில் காணிக்கைப்பொருள்களைக் கொடுத்தனர். பலா, கொய்யா, அன்னாசி, செவ்வாழை, முயல், தேன் முதலிய மலைபடு பொருள்களைத் தமிழவேள் கரத்தில் காணிக்கைப் பொருள்களை — கையுறைப் பொருள்களாகக் கொடுத்தனர். இங்ஙனம் காணிக்கை அளித்த மலைவாணர்க்குப் பழந்தமிழ் வழக்கின்படி பொற்கிழி — பொற்காசு கொடுத்துச் சிறப்பித்தார் முதல்வர். தமிழகத்தின் உயிர்நாடிச் செல்வன் அம் மலைவாழ் மக்களுக்கு நிலப் பட்டாக்களை வழங்கினார். ஓரி வாழ்ந்திருந்தால் எவற்றையெல்லாம் அளித்திருப்பானோ, அத்துணையும் மலைவாழ் மக்களுக்குக் கலைஞர் அவர்கள் அன்புடன் வழங்கினார்.

தளநாயகன் கொல்லிமலை மண்ணை மிதித்தவுடன் அவருடைய பிறந்த ஆண்டைச் சிறப்பிப்பது போல் 52 வெடி வெடித்தனர். வற்றாத கொல்லி ஆற்றில், வற்றாத தமிழ் உணர்வை வல்வில் ஓரி விழாவின் வாயிலாக ஊட்ட வந்த ஒண்தமிழ்க் கோமகனைக் காணக் குடும்பம் குடும்பமாகக் குழந்தை குட்டிகளுடன் அணி அணியாக வந்த காட்சி, தமது குடும்பத்தை வாழ வைக்கும் தானைத் தலைவனுக்குத் தமிழ்ப் பெருங்குடி மக்கள் செலுத்தும் நன்றிக் காணிக்கையாக அமைந்திருந்தது. அலை அலையாக வந்த மக்கள் திரளைக் கடந்து, அணி அணியாக வந்த இளைஞர் குழாமைக் கடந்து சென்ற கலைஞர் அவர்களுக்கும், மலையின் உச்சியில் மலைக்க வைப்பதோர் ஊரார் வரவேற்பு காத்திருந்தது உற்றவர் பெற்றவர்களைக் காட்டிலும் அவ்வூர் மக்கள் உவகைப்பெருக்கோடு அளித்த வரவேற்பினை ஏற்ற ஏந்தல் நேரே விழா மண்டபத்தை எய்தினர்.

விழா மண்டபமே வில் வடிவில் அமைக்கப் பெற்றிருந்தது. அடியில் அம்பறுத்தூணியிலிருந்து அம்பு புறப்படுவதைப் போன்ற காட்சியின் இணைப்பு. மேடை கலையுணர்ச்சியுடன் அமைக்கப் பெற்றிருக்கிறது. மேடையின் பின் நேர்வாயிலில் ஊர் காவல் கொண்ட ஓரியின் திருவுருவம் குதிரையின்மேல் அமர்ந்த கோலத்துடன் திகழ்ந்தது. அத் திருவுருவத்தினைக் கலைஞர், கூடியிருந்த ஆயிரக் கணக்கானவர் அகம் மிக மகிழத் திறந்து வைத்தார். சிலையின் நாற்புறமும் ஓரியின் வரலாற்றினை நாட்டினருக்கு உணர்த்தும் குறிப்புக்கள் கல்வெட்டில் அமைந்திருக்கின்றன. சிலையின் வலப்புறக் கல்வெட்டில் ஓரியின் காலம், அவனைப் பாடிய புலவர்கள், பாக்கள் இடம் பெறும் நூல்கள், அவனைப் பற்றிய வரலாற்றுச் செய்திகள் அனைத்தும் இடம் பெற்றிருந்தன. கல்வெட்டின் இடப்புறம் ஓரியின் வில்லாண்மையினைச் சிறப்பிக்கும் ''வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி''என்ற பாடல் 32 வரியில் (புறப்பாட்டு எண் 152) இடம் பெற்றிருந்தது. அப்பாட்டு முழுவதும் படிப்போர், தாமும் ஓரியாக மாறி, வில்லெடுத்து எறிய முற்பட்டாலும் வியப்பில்லை.

இப்புறநானூற்றுப் பாட்டு, விழாவில் பேசிய அனைவர் உரையிலும் ஒலியும் எதிரொலியுமாக ஒலித்தது. தொடக்கத்தில் வரவேற்புரை ஆற்றிய மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. அ.மு. சுவாமிநாதன் அவர்கள் பட்டி மண்டபத்திற்கு கால்கோள் விழாச் செய்தார்.

'வில் எப்படி நான்கு விலங்குகளை ஒருசேர எய்து வீழ்த்த முடியும்? அனைத்து விலங்குகளும் ஒரே வரிசையில் நின்றனவா? என்பன போன்ற சுவை நிறைந்த பட்டி மண்டபப் பாங்கில் அமைத்து விடுகிறார். அங்கிருந்தோரை விழா நிகழ்ச்சியில் ஈடுபாடும், ஆர்வமும் கொள்ளச் செய்தன. விழாவினைத் தொடங்கி வைத்து, சிலையினைத் திறந்து வைத்த தமிழக முதல்வர், தமிழவேள் டாக்டர் கலைஞர் அவர்கள் ''இப்பாட்டு ஓரியின் வில்லாண்மையை விளங்க வைத்தது. அம்பு வில்லிலிருந்து மிக வேகத்துடன் புறப்படும், பிறகு விலங்கினைத் தாக்கி, மிக்க வேகம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையும். அதன்படி குறிஞ்சி மலையின் உச்சியிலிருந்து விடுத்த அம்பு முதலில் வலிய யானையைத் தாக்கி, அடுத்து அதன் மேல் பாய வந்த புலியைத் தாக்கி, புலிக்கு இரையாகும் புள்ளி மானை உருட்டி, இறுதியில் அம்பின் வேகம் குறையவே புற்றில் இருந்த உடும்பில் தைத்து அத்துடன் நின்றுவிட்டது. இக் குறிஞ்சி நிலக் காட்சி இயற்கைக் காட்சியே. இதில் இயற்கைக்கு முரண் ஏதுமில்லை. ஆனால் இராமர் விடுத்த அம்போ இயற்கைக்கு மாறுபட்டு, முரண்பட்டு விளங்குகிறது. அது 7 மராமரங்களைத் துளைத்து, கீழே 7 உலகங்களையும் துளைத்து, மேலே 7 உலகங்களையும் துளைத்து, இனி மேல் துளைப்பதற்கு இடம் இல்லாமையால் இராமரிடமே திரும்பிவிட்டது என்கின்றனர். சென்ற அம்பு எப்படி அம்பறுத்தூணிக்கு வந்து சேரும்? இது இயற்கைக்கு முரண்பாடல்லவா!'' என்று வினாத் தொடுத்தார். ''இந்த விழாவின் வாயிலாக, நாம் மறந்திருந்த பழந்தமிழ் உணர்வுகளை நிறைவு செய்ய வேண்டும். ஓரி காட்டிய வீரத்தைத் தமிழ்ப் பெருங்குடி மக்கள் பெற வேண்டும். சங்க காலத்திலிருந்த இன உணர்வும், மொழி உணர்வும் தமிழ் நாட்டார் பெற்றுத் திகழ இவ்விழா வழியிட வேண்டும்'' என்று டாக்டர் கலைஞர் அவர்கள் உரையில் வெளியிட்டார்.

விழாவிற்குத் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மாண்புமிகு க. இராசாராம் அவர்கள் தலைமை தாங்கினார். தவத்திரு குன்றக்குடி அடிகளார் வல்வில் ஓரி இலக்கிய விழாச் சிறப்பு மலரை வெளியிட்டார்.

லுள்ள பல்வேறு தொழில் நிறுவனங்கள் தங்கள் தங்கள் தொழிலாளர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கி வருகின்றனர். அதனால் நிரந்தரக் கருத்தடை ஏற்கும் தொழிலாளர்களின் தொகையும் பெருகி வருகிறது. மேலும், இப்போது தொழிலாளர்களை இத்திட்டத்தில் ஈடுபடுத்த வேண்டுமென்பதற்காக, நிருவாகம், தொழிலாளர் சங்கம், அரசு ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் அடங்கிய குழு ஒன்று தேசீய மட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட குழு மாநில மட்டத்திலும் நிறுவப்பட இருக்கிறது. நிருவாகம், கருத்தடை ஏற்குமாறு தொழிலாளர்களைக் கட்டாயப் படுத்தக் கூடாது என்பது ஏற்கப்பட்டுள்ளது. ஆனால் ஊக்கப்படுத்தும் முறையில் தொழிலாளர்களிடையே குடும்பநலத் திட்டத்தைப் பரப்பிட—ஆவன செய்யப்பட்டு வருகிறது. தொழிலாளர்கள் இத் திட்டத்திற்கு முழு ஆதரவு தந்திட வேண்டுகிறேன்.

குடும்ப நலத்திட்டம் ஒன்றிரண்டு குழந்தைகளோடு நிறுத்திக் கொண்டு குடும்பம் நிறைவான வாழ்வு வாழ வழி வகுக்கும் திட்டமாகும். அன்றாட வாழ்க்கையை நடத்துவதில் எத்தனையோ சிக்கன முறைகளைக் கையாளுகிறோம். அதுபோல் குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதிலும் நாம் சிக்கனத்தைக் கையாள வேண்டும். அப்போதுதான் பிறந்த குழந்தைகளுக்கு நல்ல ஊட்டச் சத்துணவு அளித்து, முழுமையான கவனம் செலுத்தி வகையாக வளர்த்து நல்லறிவுடையராக்கி அவையத்து முந்தியிருக்கச் செய்ய முடியும்-தம் மகன் சான்றோன் எனக் கேட்டு மகிழ்வுறும் வாய்ப்பு பெற்றோர்க்கு ஏற்படும்-'இவன் தந்தை என்னோற்றான்கொல்' என்ற வள்ளுவரின் வாக்கும் பலிக்கும். அதற்குக் 'கரு'விலேயே 'திரு' பெற்றவர்களாக மக்களைப் பெற்றுப் பேணி வளர்த்திட வேண்டும். தமது குடும்பத்தைச் சிறு குடும்பமாக அமைத்துக் கொண்டாலன்றி இந்த வாய்ப்பை எந்தக் குடும்பமும் பெற்றிட முடியாது. 'கருவிலேயே திருவுடையராதல்' என்பது, தாய் வயிற்றில் இருக்கிறபோது தாயும் நல்ல உடல் நலத்தோடு இருந்து கருவில் வளரும் குழந்தைக்குத் தேவைப்படுகின்ற அதிக ஊட்டச்சத்து அந்தத்



தாயின் உணவிலேயே பெறப்பட்டு, அந்தச் சத்து அந்தக் குழந்தை உடம்பிலே ஊயிரிருக்குமானால் அந்த ஊட்டமே கருவிலேயே பெறப்பட்ட சிறந்த திருவாகும்.

ஆகவே கர்ப்பம் ஏற்பட்ட ஐந்து முதல் எட்டுமாத கால வரையிலான அந்த மூன்று நான்கு மாத காலத்தில் குழந்தையாக வளரும் கரு பெற வேண்டிய வளர்ச்சியைப் பக்குவமாகப் பெற்று அது பிறக்குமானால், ஐந்து வயது வரை அந்தக் குழந்தை பெற வேண்டிய வளர்ச்சிக்கு அதுவே அடிப்படையாக அமையும். அதற்காகத்தான் கர்ப்பமுற்ற தாய்மார்களுக்கு ஊட்டச் சத்துணவு தேவை என்று சொல்லப்படுகிறது. குடும்ப நலத் திட்டத்தின் கீழ் ஊட்டச் சத்து மருந்துகளும் வழங்கப்படுகின்றன. குழந்தைகளை அடிக்கடி பெற்றுக் கொண்டிருக்கும் தாய்க்கு ஊட்டச் சத்துணவு எங்கே கிடைக்கும்? பெற்ற குழந்தைகளையே தக்க உணவு கொடுத்து வளர்க்க முடியாத நிலையிலிருக்கும் தாய்மார்கள் ஏராளமான பேர் உள்ள நாடு நம்நாடு. நமக்கிருக்கும் வருவாய்க்குள் ஊட்டச் சத்துணவு உட்கொண்டு தாயும்-சேயும் உடல் நலத்தைப் பேண வேண்டுமானால் அதற்கும் சிறு குடும்ப முறையே துணையாகும்.

கருவுற்றபோது தாய்மார்கள் ஊட்டச் சத்துணவு உட்கொள்வதுடன் கூட, குழந்தைகளுக்குப் பாலூட்டும் காலத்திலும் புரதச் சத்து மிகுந்த உணவு உட்கொள்ள வேண்டும். இறைச்சி, மீன், முட்டை, பால், பருப்பு வகைகள் முதலியவற்றில் புரதச் சத்து மிகுதியாக உண்டு. ஏழைகளின் இறைச்சி எனப்படும் பருப்புகள், பயறுகள், பட்டாணி, கொட்டைகள் ஆகியவற்றிலும் புரதச் சத்து உண்டு. மேலும் பி1, பி2, வைட்டமின் சத்துக்களும் உண்டு. இவற்றையெல்லாம் வறுமைக்கு ஆளான ஏழை எளிய தாய்மார்கள், அதிகக் குழந்தைகளையும் வைத்துக் கொண்டு உண்பது என்பது இயலாத காரியம். நம் நாட்டுத் தாய்மார்கள் கணவனுக்கும் குழந்தைகளுக்கும் உணவு அளித்தபின் மீதியிருந்தால்தான் உண்பது பழக்கம். இல்லையென்றால், சாப்பிட்டு விட்டதாகக் கூறிப் பட்டினியாகவும் கிடப்பார்கள். இந்த நிலையில் தாய்ப்பால் கொடுக்கும் பருவத்தில் ஊட்டச் சத்தும், புரதச் சத்தும் பிறவும் நிரம்பிய உணவை உண்டு குழந்தைகளை வளத்தோடு வளர்க்கும் வாய்ப்பு, நிறைய குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளும் ஏழை எளிய தாய்மார்களுக்குக் கிட்டுவது அரிது. அதனால் தாயின் உடல் நலமும் கெடும்

குழந்தையின் நலமும் கெடும். தாயும், பிறந்துவிட்ட குழந்தைகளும் தேவையான சத்துணவுகளை உண்டு வாழ்வதற்குக் கூட குடும்பம் சிறியதாக-அளவானதாக இருக்க வேண்டும். அளவுக்கு மீறிய குடும்பமாக இருந்தால், அன்னை நலம், குழந்தை நலம் கெடுவதோடு நோய் நொடிக்கு ஆளாகி குடும்பத்தின் மொத்தச் சூழ்நிலையும் கெட்டுச் சீரழிந்து போகும். அதைத் தவிர்ப்பதற்காகவும் தாய்மார்கள் குடும்ப நலத் திட்டத்தை ஏற்க வேண்டும்.

மகளிர் ஆண்டான இந்த 1975—ஆம் ஆண்டில் தமிழ் நாட்டுத் தாய்மார்கள் இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்து, தங்கள் வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொள்ள உடல் நலத்தைக் காத்துக் கொள்ள நிரந்தரக் கருத்தடையை ஏற்க முன்வர வேண்டும்.

பிறந்த குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுப்பதை நிறுத்தியதும் அதன் வளர்ச்சி கெடாது நல்ல முறையில் ஊட்டம் மிகுந்த உணவு தரப்பட வேண்டும். பழம், பால், முட்டை தர வேண்டும். அவர்கள் தங்கள் குழந்தைகளிடத்தில் காட்டும் அன்பின் அளவுக்கு உணவு முதலியவற்றைக் கொடுக்க இயலாத நிலையில் தான் கோடிக்கணக்கான தாய்மார்கள் குடும்பம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஏதோ அவரவர்கள் உண்ணுகிற போது, அந்தச் சத்தற்ற உணவில் ஒரு கூறு பிள்ளைகளுக்கும் போட்டு, எப்படியோ பட்டினியைப் போக்கி, அந்தப் பிள்ளைகளுடைய வயிற்றை அடைத்து, ஒப்புக்கு வளர்த்து விடுகிற நிலைதான் இருக்கிறது. இந்த நிலை நீங்க வேண்டுமானால் ஒவ்வொரு தாயும் ஒன்றிரண்டு குழந்தைகளோடு நிறுத்திக் கொண்டு நிரந்தரக் கருத்தடை செய்து கொள்ள வேண்டும்.

அப்படி ஊட்டச் சத்துணவு, புரதச் சத்துணவு முதலியவற்றைக் குழந்தைகளுக்கு ஊட்டி வளர்க்க முடியாத காரணத்தால், சரியான மூளை வளர்ச்சியைப் பல பிள்ளைகள் பெறுவதில்லை. இந்த வகையான உணவு வழங்கப்படாத காரணத்தால், இயற்கையில் கண் பார்வையுடன் பிறந்த குழந்தைகள், கண் பார்வை மங்கிப் போகும் அவல நிலைக்குள்ளாகின்றனர். தகுந்த ஊட்டச் சத்துணவு பெறாததால் 5, 6, 7 வயது நிரம்பிய குழந்தைகள், எறத்தாழ 20,000 பேர்களுக்கு மேல் தமிழ்நாட்டில் கண்பார்வை இழந்து குருடாகியுள்ளனர். இயற்கையில் நல்ல கண்களோடு பிறந்தும், குழந்தைப் பருவத்தில் தக்க ஊட்டச் சத்துணவு கொடுக்கப்படாத காரணத்தால் - பிள்ளைகளைக் கணக்கின்றிப் பெற்று, அந்தப் பச்சிளங் குழந்தைகளுக்கு உரிய உணவு கொடுக்காத காரணத்தால், ஏதும் அறியாத குழந்தைகள் இந்த வேதனை மிக்க குருட்டு நிலைக்கு ஆளாகியிருக்கின்றனர், என்றால் அளவுக்கு மேல் பிள்ளைகளைப் பெறுவது எவ்வளவு பெரிய தீமைக்கு வழியாகி விடுகிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். பொறுப்பற்ற பெற்றோரின் செய்கையால் பூத்துவிட்ட அந்த மலர்கள், தாங்கள் செய்யாத குற்றத்திற்கு வாழ்நாள் தண்டனை ஏற்கின்றனர்.

கண்பார்வையிழந்த பின் நல்ல சத்துணவு கொடுத்தாலும் கண் பார்வை வராது. 'கண் கெட்ட பிறகு கதிரவனை வணங்குவது' என்ற ஒரு பழமொழியுண்டு. இந்த நாட்டில், அதே போன்றதுதான் குழந்தைகளுக்குத் துவக்கத்திலேயே சத்துணவு வழங்காதிருந்து, கண் கெட்ட பிறகு சத்துணவு முதலியவை வழங்குவது என்பதாகும். இப்படிப்பட்ட நிலையைப் போக்குவதற்காகத்தான், குடும்ப நன்னலத் திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கு வைட்டமின் 'ஏ' மருந்து இலவசமாக வழங்கப்படுகிறது. குழந்தைகளைக் குறைத்துப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்லும் இத்திட்டத்தின் கீழ், குவலயத்தில் பிறந்து விட்ட குழந்தைகளுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டி இது போன்ற மாத்திரைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. மேலும் குழந்தைகளுக்கு வரும் கக்குவான், தொண்டை அழற்சி, இசிவு நோய் போன்றவை வராமல் தடுக்கவும், தடுப்பு மருந்துகள் கொடுக்கப்படுகின்றன - தடுப்பு ஊசிகள் போடப்படுகின்றன. கருவுற்ற தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும், வைட்டமின் மருந்துகள் வழங்கப்படுகின்றன. தாயும்-சேயும் ஊட்டச் சத்துணவு இல்லையேல் நோய்க்கு ஆளாவர் எனத் தெளிந்து அந்நிலைக்கு ஆளாகாது நிரந்தரக் கருத்தடை ஏற்க அனைவரும் முன்வர வேண்டும்.

கடந்த ஆண்டுகளைப் போலவே, குடும்ப நலத்திட்டத்தில் தமிழ்நாட்டிற்கு இந்திய அரசு அளித்துள்ள இலக்கு மேல் சாதனையை ஏற்படுத்த வேண்டி பல மாவட்டங்களில் முனைப்பியக்கம் தொடங்கப்பட்டு விட்டது. இந்த இருவார விழா நிகழ்ச்சிகள் முனைப்பியக்க வெற்றிக்கு ஆக்கமும் ஊக்கமும் சேர்க்கும் வகையில் பயன்படுத்தப்பட வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முன்னின்று நடத்தும் இம் முனைப்பியக்கங்கள் வெற்றி பெற அனைத்துத் துறையினரும் உதவிட வேண்டும். சிறப்பாக மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலத்துறையினரும், உள்ளாட்சித் துறையினரும், வருவாய்த்துறையினரும் இணைந்து நின்று செயலாற்றி வெற்றி தேடித்தர வேண்டும். வழக்கம் போல் அலுவல் சார்பற்ற மக்கள் தலைவர்கள், சட்டப் பேரவை, மேலவை, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், நகராட்சி ஆகியவற்றின் தலைவர்கள் ஆகியோர் மக்களிடையே இத்திட்ட வெற்றிக்கு ஆதரவு திரட்டித் தர விரும்பி வேண்டிக்கேட்டுக் கொள்கிறேன். அதைப் பயன்படுத்திக் கொண்டு, சுணக்கமின்றிச் செயல்பட்டு, இலக்கினை விஞ்சிய சாதனையை உருவாக்க அனைவரும் முயல வேண்டும் என்பது என் வேண்டுகோள்.

நலிந்த மக்களை-தாழ்த்தப்பட்ட மக்களை-பிற்படுத்தப்பட்ட மக்களைக் கை தூக்கி விடத் தமிழக அரசு எத்தனையோ மறுமலர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அநாதைக் குழந்தைகளைக் காத்து வளர்க்க கருணை இல்லங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கருணை இல்லங்கள் எல்லாம் குழந்தைகள் காப்பகத்திற்கு ஒப்பானவை.

குழந்தைகளைக் காக்க அரசே கருணை இல்லங்கள் நடத்துகிறது என்ற எண்ணத்தில், யாரும் குழந்தைகள் பிறந்தால் எப்படியோ வளரும் என்று யாரும் கருதிவிடலாகாது. நாமே வளர்க்கக் கூடிய வசதி இருந்தால்தான் பெறலாம். அதுவும் அளவுடன் என்ற எண்ணம் நமக்கு வேண்டும். வாழ்வில் தங்கள் நிலையை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்று கருதுகிற ஒவ்வொரு குடும்பமும் இரண்டு குழந்தைகளோடு நிறுத்திக் கொண்டு, நிரந்தரக் கருத்தடையை ஏற்றுத்தங்களுக்குத் தாங்களே உதவிக் கொள்வதோடு, நமது நாட்டிற்கும் உதவ வேண்டும். அந்த வகையில் நாட்டு மக்களுக்கு விளக்கங்கள் தரவும், விரும்புகிறவர்களைக் கருத்தடை ஏற்கச் செய்யவும் இந்த இருவார விழா நிகழ்ச்சிகள் பயன்படுத்தப்பட வேண்டுமென அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

அளவான குடும்பமே—
வளமான வாழ்வுக்கு வழி!

கர்ப்பத்தடை முறையே—
குடும்ப நலத்துக்குத் துணை!

என்பதை மறவாதீர் !

**[ குடும்ப நலத்திட்ட இருவார விழாவினையொட்டி 16—9—1975 அன்று சென்னை வானொலியில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து .....]**

சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார். இவர்கள் தம் உரையில் 'வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி' என்னும் புறநானூற்றுப் பாடலின் சிறப்பை விளக்கினார்கள். இன உணர்வையும், மொழி உணர்வையும் தமிழ்ப் பெருங்குடி மக்கள் பெற்றிடும் இலக்க இப்பெரியோரின் உரை ஆற்றுப்படுத்துவதாக இருந்தது.

இதைத் தொடர்ந்து, பிற்பகலில் பட்டோற்றம், இலக்கை எய்தல், பறை அறிவித்தல், குறிபார்த்துச் சுடுதல் போன்ற வீர விளையாட்டு நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. கலை நிகழ்ச்சியில் தமிழ்க் கல்லூரி ஆசிரியர்களின் 'வல்வில் ஓரி' நாடகம் சிறப்பான முறையில் நடைபெற்றது. அந்நாடகத்தில் வணிகக் கோவலன் குறிப்பிடத்தக்கவன். இந்நாடகத்தின் புலவர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் வரலாற்றுப் பின்னணியில் உருவாக்கிய நாடகம் சிறப்பாக இருந்தது.

இரண்டாம் நாள் காலை நிகழ்ச்சியாக ஆராய்ச்சிக் கட்டுரைகள் படிக்கப்பட்டன. ஓரி மலையின் மேல் ஆராய்ச்சிச் சொற்பொழிவு நடந்தது இதுவே முதல் முறையாகும். இவ்வுரையரங்கத்திற்கு இர. சி. சுந்தரம் பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினார். டாக்டர் மெ. சுந்தரம், ஔவை துரை. நடராசன் ஆகியோர் விழாவில் பங்கு கொண்டனர். இவர்களின் உரைகளில் இருந்து வல்வில் ஓரியின் படைத் திறமையையும், கொடைத் திறமையையும் புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகிய நூல்களில் இருக்கும் சான்றுகளுடன் அறிகிறோம்.

இதனை அடுத்துத் தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் தலைமையில் சொற்பொழிவு நடைபெற்றது. அதன் தலைப்பு ''பண்டைய வேந்தர்களின் சிறப்பிற்குக் காரணம் படைத் திறனா? கொடைத் திறனா?'' என்பதாகும். புலவர் அறுவர் சொற்பொழிவாற்றினர். இறுதியில், 'வேந்தர்களின் சிறப்பிற்குக் காரணம் கொடைத் திறனே' என்று பல சான்றுகள் காட்டி நிறுவினார்.

விழாவின் இறுதியில் கவிஞர் முடியரசன் தலைமையில் கவி அரங்கம் நடைபெற்றது. வேந்தர், தேன், சந்தன மலர், கனி என்ற தலைப்பில் புலவர்கள் கவியரங்கம் நடைபெற்றது.

இவ் விழாவின் இறுதியில் இரண்டு நாள் இலக்கிய மணம் கமழ்ந்தவாறு இருந்தது. 3,500 அடிகளுக்கு மேல் உள்ள மலையில் ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள், பட்டி மன்றம், கவியரங்கம்—5,000 மக்களைக் கொண்டு அவையோராகக் நடைபெறுவது தமிழக வரலாற்றில் இதுவே முதன் முறையாகும்.

கொல்லிமலை — சேலத்திலிருந்து 43 கல் தொலைவில் உள்ளது. மலை, அடிவாரத்திலிருந்து 17 கல் தொலைவில் அமைந்துள்ளது. 20,000 மக்களைக் கொண்ட அம்மலைப் பகுதியில் குன்றின் மேல் இட்ட திருவிளக்காக இவ்விழா நிகழ்கிறது. மலைவாணர் வாழ்வில் முதல்வர் தமிழ்வேள், டாக்டர் கலைஞர் ஏற்றி வைத்த இவ்விலக்கியத் திருவிளக்கு, தமிழ் விளக்காய்—அணையா விளக்காய்—என்றும் ஒளிவிட்டு மலைவாணர் வாழ்வில் ஒளிகாட்டும் என்பது ஒருதலை!




அதிக விளைச்சலுக்காக உங்கள்
உங்கள் பருத்திப் பயிருக்குத் தேவை
பிளாஞேபிக்ஸ்*

சிபாரிசு செய்யப்பட்டுள்ளபடி பிளாஞேபிக்ஸ் உபயோகித்தீர்களானால், பூக்கள் உதிர்வதையும் காய்கள் உதிர்வதையும் கணிசமாகக் குறைத்து விளைச்சலைப் பெருக்க முடியும். இதுவரை பல்லாண்டுகள் பருத்திப் பயிருக்கு பிளாஞேபிக்ஸ் உபயோகிக்கப்பட்டு, எப்போதும் திருப்திகரமான பலன்களைத் தட்டாமல் பெற முடிகிறது.

மூலமுதல் தயாரிப்பையே உபயோகிக்க
உறுதி கொள்வீர். மாற்றுக்களை ஏற்காதீர்.
உஷார். உயிர் போன்றது உங்கள் பயிர்ச் செல்வம்.

விவரமான தகவல்களை விசாரித்தறியவும்.

M&B May&Baker

* டிரேடு மார்க்

மே & பேக்கர் (இந்தியா) பிரைவேட் லிட்.
பம்பாய். கல்கத்தா. கவுஹாத்தி. இந்தோர். லக்னோ. சென்னை. நியூடெல்லி. பாட்னா.

TAM


# டாக்டர் மு. வரதராசனாரின் வரலாற்றுக் கொள்கை



தமிழகத்தின் மறுமலர்ச்சி இயக்க வரலாற்றில் தம் பெயரினைப் பொன்னெழுத்துகளில் பொறித்து மறைந்த அறிஞர்கள் சிலராவர். அவர்களுள் டாக்டர் மு. வரதராசனார் ஒருவராவர். வெளிநாட்டு மக்கள் பெரும் புலமை வாய்ந்த தமிழறிஞராகவே அவரை அறிந்துள்ளனர். இந்திய மக்களோ சிறப்புமிக்க தமிழ்ப் பேராசிரியராகவும் புகழ்மிக்க நாவலாசிரியராகவும் அவரைப் பாராட்டுகின்றனர். தமிழ் மக்களோ அவரைத் தமிழ் அறிஞராகவும், கலைஞராகவும், சான்றோராகவும், வரலாற்று வல்லுநராகவும், மொழியியல் அறிஞராகவும், அறம்பாட வந்த அறவோராகவும் போற்றுகின்றனர். இவ்வகையில், அவர் பலபட்டைத் தீட்டப்பட்ட வைரமணியாக ஒளிர்கின்றார்.

பன்னெடுங்காலமாகத் தமிழகத்தின் வரலாற்றைத் தக்க அடிப்படைச் சான்றுகளைக் கொண்டு செம்மையான முறையில் எழுத வேண்டும் என்னும் எண்ணம் அறிஞர் பலர் உள்ளங்களில் எழுந்த வண்ணம் இருந்து வந்தது. தனி மனிதர் சிலர் தனித்தனியே தமிழக வரலாற்றை எழுதுவதைக் காட்டிலும், 'வரலாற்று ஆராய்ச்சியில் முன்னணியில் உள்ள அறிஞர் சிலரைக் கொண்ட குழுவினை அமைத்து, அக் குழுவினர் நடுவுநிலையில் நின்று நல்லதொரு வரலாற்றை எழுதுமாறு செய்ய அரசு முன்வர வேண்டும்' என்று அறிஞர்கள் அவ்வப்போது எடுத்துரைத்தனர். நெடுங்காலம் இந்த எண்ணம் 'ஊமையன் கண்ட கனவாகவே' இருந்து வந்தது. 1969-ஆம் ஆண்டில்தான் இம் முயற்சிக்கு ஏற்றவகையில் காலம் கனிந்தது. நம் தமிழக அரசு, பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனாரைத் தலைவராகக் கொண்ட ஒரு வரலாற்றுக் குழுவைக் கூட்டி, இவ்வரும்பணியில் ஈடுபடுமாறு பணித்தது.

சென்னைப் பல்கலைக் கழகத்தில், தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வந்த டாக்டர் மு. வ. அவர்களையே அரசினர் வரலாற்றுக் குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். இதற்குத் தமிழக அரசு இரண்டு சிறப்புமிக்க காரணங்களைக் காட்டியது. யாரும் ஐயுறவு கொள்ள இயலாத அளவிற்கு 'உண்மையான தமிழுணர்வு மிக்கவர் டாக்டர் மு. வ.' என்று அரசு அறிவித்தது. மற்றும், 'எளிதில் உணர்ச்சி வயப்பட்டு இரு எல்லைகளுக்கும் சென்றுவிடாமல் என்றும், எங்கும், எதிலும் நடுவு நிலையைப் போற்றும் தமிழறிஞர் டாக்டர் மு.வ. ஒருவரே' என்று அரசினர் ஆணித்தரமாக எடுத்துரைத்தனர். இந்நிலையில், பேராசிரியர் மு.வ. அவர்கள் புதிய பொறுப்பை மறுக்க இயலாது ஏற்க வேண்டி நேரிட்டது. இப் பொறுப்பை ஏற்று, ஒல்லும் வகையெல்லாம் ஓயாது, இப்பணி சிறக்க அவர் அயராது பாடுபட்டார்.

இதற்கு முன்னர், அவர் சில 'வாழ்க்கை வரலாற்று' நூல்களை எழுதியுள்ளார். எனினும் நாட்டு வரலாற்று நூல்களை வரைவதில் நாட்டமோ, பண்பாட்டு வரலாற்று நூல்களைப் படைப்பதில் பரிவோ அவர் கொண்டதாகத் தெரியவில்லை என்பர் சிலர். உண்மைதான். ஆனால், எண்பதுக்கு மேற்பட்ட அவருடைய படைப்புகளில், 'வரலாற்றைப் பற்றி அவர் கொண்டிருந்த கருத்துகள்' இலைமறை காய்போல இடம் பெற்றுள்ளன. அவற்றைத் தொகுத்து நோக்குவோமாயின், டாக்டர் மு. வ. அவர்களின் வரலாற்றுக் கொள்கை இனிது புலனாகும்.

## உண்மை வரலாறு எது?

'வரலாறு எழுதுவது எளிய செயல் அன்று' என்பதை டாக்டர் மு. வ. நன்குணர்ந்திருந்தார். ''கடந்தகாலம் என்னும் எல்லையில்லாப் பெருவெளியில் காலத் தச்சன் கட்டியுள்ள அனுபவம் என்னும் மாபெரும் கோபுரமே வரலாறு. இப் பழம்பெரும் கோபுரத்தின் கொடுமுடியில் ஏறி, அங்கிருந்து அப்பெருவெளியின் முழுத்தோற்றத்தைக் காண முயல்வது எளிய செயலன்று. எனினும், இளைஞர்கள் ஆற்றல்மிக்கவர்கள். அவர்கள் முயன்றால் அப்பெருவெளியின் முழுத்தோற்றத்தையும் காணலாம்'' என்பதை அவர் அடிக்கடி அறிவுறுத்துவார். இது வரலாறு எழுதுவதைப் பற்றி அவர் கொண்டிருந்த கருத்தினைத் தெரிவிக்கிறது.

'வரலாறு என்பது என்ன?' எனும் எண்ணம் நம் அகத்தே எழுவது இயற்கை. 'வரலாற்றிற்குப்' பலவகையான விளக்கங்கள் தரப்படுகின்றன. அவற்றை எல்லாம் அலசி, ஆராய்ந்த டாக்டர் மு. வரதராசனார் அவர்கள், ''மக்களினம், நினைவுக்கு எட்டாத தொல்பழங்காலத்தில்தொடங்கிய வாழ்க்கைப் பயணத்தில் இன்றுவரை அடைந்துள்ள வெற்றி தோல்விகளையும்


பேராசிரியர்
க.த.திருநாவுக்கரசு


பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனாரின் முதல் ஆண்டு நினைவு விழா அக்டோபர் 10-ஆம் நாள். அதனையொட்டி அவருடைய தமிழ்த் தொண்டினை நினைவு கூரும் வகையில் அவருடைய பழைய மாணவருள் ஒருவரான திரு. க. த திருநாவுக்கரசு அவர்கள் இக்கட்டுரையை எழுதியுள்ளார்.

கல்லெல்லாம் கதை சொல்லும்
சிலப்பதிகாரக் காட்சிகள் !

புதையுண்ட பூம்புகார்
புது வடிவம் பூண்டுள்ளது !

சிந்தைக்கும் கண்ணுக்கும்
தெவிட்டாத தமிழ் விருந்து !

மனதைக் கவரும் மாதவியின் அழகுச் சிலை.

பூம்புகார் கலைக்கூடம், சீர்காழியிலிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவிலும், மாயவரத்திலிருந்து 29 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது.

இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை, சென்னை-600009




ஆசிரியரும் வெளியிடுபவரும் : [illegible] அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை



பெருமை சிறுமைகளையும், வாழ்வு தாழ்வுகளையும் இன்ப துன்பங்களையும், ஏமாற்றங்களையும் சுவையோடு முறையாகக் கூறும் தொடர் கதையே வரலாறு'' எனக் கருதியதும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

**இலக்கியமும் வரலாறும்**

''இலக்கியமும் வரலாறும் இணைபிரியாத இரு சகோதரிகள்' என்பதை அவர் நன்குணர்ந்து இருந்தார். எனினும், அவற்றிற்கு இடையே உள்ள வேறுபாட்டை அவர் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

> ''வரலாறு வேறு; இலக்கியம் வேறு. இது உண்மைதான். புலவர்கள் இயற்றிய இலக்கியத்தில் உள்ளன எல்லாம் வரலாற்றுப் பகுதிகளே என ஏற்றுக் கொள்ள இயலாது. இலக்கியத்தில் உயர்வு நவிற்சி உண்டு. ஆனால், புலவர்கள் எல்லாவற்றையும் அளவு கடந்து உயர்த்திக் கூறுவதில்லை! சங்க இலக்கியப் புலவர்களோ உயர்வு நவிற்சியை வரையறை செய்து அளவுபடுத்தி ஆண்டிருந்தனர். வியப்புணர்ச்சி மிகுதியால் பாடும் இடங்கள் தவிர, மற்ற இடங்களில் பெரும்பாலும் உள்ளதை உள்ளவாறு கூறுதலே சங்கப் பாடல்களின் இயல்பு''[1]

இப்பகுதியால் மற்றோர் செய்தி புலனாகின்றது. சங்க இலக்கியப் பாடல்களை வரலாற்று ஆராய்ச்சிக்குரிய அடிப்படைச் சான்றுகளாகக் கொள்ளலாம் என்னும் கருத்துடையவர் பேராசிரியர் என்பது தெரிய வருகின்றது.

பண்டைத் தமிழகத்தின் வரலாற்றை அறிவதற்கு நாம் சங்க இலக்கியங்களையே பெரிதும் ஆதாரமாகக் கொள்ள வேண்டிய அவலநிலை இருந்து வருவதற்குரிய காரணத்தை அவர் எண்ணிப் பார்த்துள்ளார். வேறு வகையான சான்றுகள் பல கிடைக்காமற் போனதை எண்ணி, அவர் ''பண்டைத் தமிழகம் வரலாற்றைப் பற்றிக் கவலையுறாத நாடு. ஆதலின் வரலாற்றின் கண்கொண்டு புலவரைப் பற்றி ஆராய்வதற்கு ஒன்றும் இல்லை!''[2] என்று வருந்துகின்றார்.



பண்டைத் தமிழர் காலவழிச் செய்திக் கோவைகளையோ (Chroniless) வரலாற்றுக் குறிப்பேடுகளையோ எழுதிப் போற்றாமையால், இன்று, பண்டைய வரலாற்றை எழுதுவதற்கு உண்டாகும் இன்னல்களையும் இடையூறுகளையும் நடைமுறையில் நன்குணர்ந்தவர் நம் பேராசிரியரவர். அவருடைய உள்ளக் குமுறலை, இதயக் கொந்தளிப்பை,

> ''தனித்தனி மாந்தரின் பிறப்புநாள் நாழிகை முதலியவற்றைக் குறித்து வைக்கும் பழக்கம் உள்ள நாட்டில், நாட்டின் பொதுவான வரலாற்றைக் குறிக்கும் பழக்கம் இல்லாதிருந்தது வருந்தத்தக்கதே. தனியாட்களைப் போற்றும் அளவிற்கு நாட்டைப் பொதுவாகப் போற்றும் நல்ல கொள்கை இங்கு இன்னும் வேரூன்றவில்லை! பிற்காலத்து கல்வெட்டுக்களிலும் நாட்டுப் பெருநிகழ்ச்சி ஒன்றைக் குறிப்பிடும்போது நாட்டுக்குப் பொதுவான மரபை உடைய ஆண்டின் கணக்கால் குறிப்பிடாமல், அந்த அரசன் முடிசூடிய ஆண்டிலிருந்து கணக்கிட்டு அவனுடைய ஆட்சியில் இத்தனையாம் ஆண்டு என்று குறிப்பிடும் வழக்கமே காணப்படுகிறது. பொதுவான மரபை உடைய ஆண்டின் கணக்கால் குறிப்பிட்டிருந்தால் இன்றைய வரலாற்று ஆராய்ச்சிக்கு அது ஓரளவு துணைபுரியும். வரலாற்றில் எழுதுவோரின் மனப்பான்மைக்கு ஏற்பப் பொய்யும் திரிபும் புகுதல் எங்கும் உள்ள இயல்பே எனினும், அவற்றினிடையே கால ஆரா... பற்றிய உண்மை கா... தற்கேனும் வழி இரு...ருக்கும்''[3]

என்று வெளிப்படுத்தியுள்ளார்.

இப்பகுதியிலிருந்து, மூன்று கருத்துக்கள் தெளிவாகத் தெரிகின்றன. முதலாவதாகப் பொதுவான வரலாற்றுச் செய்திகளைப் பண்டைத் தமிழர் போற்றி எழுதி வைக்காததைக் குறிப்பிடுகின்றார்; இரண்டாவதாக ஒரு பொது ஊழிக்காலத் (Era) தைத் தமிழர் பயன்படுத்தாததைச் சுட்டுகின்றார்; மூன்றாவதாக, தம் வரலாறு எழுதுவோர், தம் விருப்பு வெறுப்பிற்கேற்பப் பொய்யும் திரிபும் கலந்த செய்திகளை வரலாற்று ஏடுகளில் நுழைத்துள்ளதை ஆசிரியர் நயமாகக் கூறுகிறார். இவை யாவும் 'அவருடைய வரலாற்று ஆராய்ச்சி மனப்பான்மை எத்தகையது?' என்பதை எளிதில் அறிந்து கொள்ளத் துணை புரிகின்றன.

**வரலாற்றுக் கலையைப் போற்றாதது ஏன்?**

'தமிழருக்கு வரலாற்றுணர்வு போதிய அளவு அன்றும் இல்லை; இன்றும் இல்லை! இதற்குக் காரணம் என்ன?' எனும் கேள்வி அவருடைய உள்ளத்தைப் பெரிதும் வாட்டியுள்ளது. இதற்குரிய காரணத்தை, அவர் பல கோணங்களில் ஆராய்ந்து பார்த்துள்ளார். அவர் கண்ட முடிவு,

> ''தமிழர் விளம்பரம் செய்து கொள்ளாத, வரலாறு எழுதி வைக்கவும் முயலாத ஒருவகைக் கூட்டம். தனித்தனியாக உயரும் பண்பாடு உண்டே தவிர ஒன்றுபட்டுக் கூட்டாக உயரும் இயல்பு இல்லாத இனம் தமிழர் இனம். ஆகையால் உலகறிய வாழத் தெரியவில்லை. செல்வாக்குப் பெற முடியவில்லை''

என்பதாகும். இன்றும் தமிழினத்தை அரித்துத் தின்னும் வேர்ப்புழுவாக இருப்பது இவ்வியல்பேயாகும்.

---

1. குடும்ப வழிபாடு, மதுரைக் கும்பாபிடேக மலர், மதுரை, 1963, பக்கம் 153.
2. ஓவச் செய்தி, பக்கம் 26.
3. மொழி வரலாறு பக்கம் 368-69



# எங்கள் பணி விவசாய வளர்ச்சிக்கே....

**வேளாண்மை தழைக்கவும், விவசாயி வாழ்க்கை செழிக்கவும்**
**45 ஆண்டுகளாக நற்பணி ஆற்றி வருவது**
**தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி**

தமிழகமெங்கும் ஆல்போல் படர்ந்துள்ள 223 பிரதம நிலவள வங்கிகள் மூலம்,
பல்வேறு வேளாண்மைப் பணிகளுக்குக் கடனுதவி புரிந்து வருகிறது.
விவசாய மேம்பாட்டுக் காரியங்களுக்கு நீண்டகால
கடனுதவி வழங்கும் கூட்டுறவு நிறுவனம்.

* *

**வேளாண்மை — எங்கள் சேவைக்குரிய ஒரேதுறை**
**உற்பத்திப் பெருக்கத்துக்கு உதவி — எங்கள் தொண்டு.**
**விவசாயி நல்வாழ்வு — எங்கள் இலட்சியம்.**

*

## தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி

32, லஸ் சர்ச் சாலை, : : சென்னை—600 004

**பி. எஸ். முத்துச்செல்வன்,** எம். எல். ஏ.,
துணைத் தலைவர்.

**எம். செல்வராசு,** எம். எல். ஏ.
தலைவர்.

**வி. பி. மல்ஹோத்ரா.**

# தமிழரசு

மலர்: 6 இதழ்: 8
16-10-1975.



## தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு**
**ஆணைப்படி வெளியிடப்பட்டது**

எண். 2] சென்னை, வியாழக்கிழமை, 1975 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2 ஆம் நாள்
[புரட்டாசி 16, இராட்சச (2006—திருவள்ளுவர் ஆண்டு)]

**தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர்**

## திரு. கு. காமராஜ் அவர்கள் மறைவு

நாள் : 2—10—1975

*அரசு ஆணை எண் : 3166*

முன்னாள் முதலமைச்சர் கு. காமராஜ் அவர்கள் 1975 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் இரண்டாம் நாள் வியாழக்கிழமை பிற்பகல் 3–15 மணியளவில் இயற்கை எய்தினார்கள் என்பதைத் தமிழக அரசு ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறது.

தலைவர் காமராஜ் அவர்கள் 1903 ஆம் ஆண்டில் பிறந்து, விடுதலைப் போராட்ட வீரராக வாழ்க்கையைத் தொடங்கி காந்தியவாதியாகத் திகழ்ந்து, காங்கிரஸ் கட்சியில் பல முக்கியமான பொறுப்புக்களை ஏற்றிருந்ததோடு, 1954 ஆம் ஆண்டு முதல் 1963 ஆம் ஆண்டுவரை தமிழ் நாட்டின் முதலமைச்சராகவும் அரும்பணியாற்றிய பெருந்தலைவராவார்.

அந்தப் பெரியவரின் மறைவு இந்தியப் பெருநாட்டிற்கு, குறிப்பாகத் தமிழகத்துக்குப் பேரிழப்பாகும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப. சபாநாயகம்,
தலைமைச் செயலாளர்.



ஹெலன் கெல்லருடன்

ஹம்பிரே—செஸ்டர் பவுலுடன்

எலிஸபெத் அரசியாருடன்



முதலமைச்சராக

பிரதமர் இந்திரா காந்தி—
பேரறிஞர் அண்ணாவுடன்

முதல்வர் கலைஞருடன்



# உழைப்பால் புகழின் உச்சியில் ஒளிவிட்ட

நேரு பெருமகனார்—மூதறிஞர் இராஜாஜியுடன்

பாபு இராஜேந்திர பிரசாத்துடன்

# தியாகச் சுடரின் வாழ்விலே...

டாக்டர் இராதாகிருஷ்ணனுடன்



ஜாகிர் உசேன்—இந்திரா காந்தியுடன்

மார்ட்டின் லூதர்கிங்குடன்

மார்ஷல் டிட்டோவுடன்



சேக் அப்துல்லாவுடன்

மாஸ்டர் தாராசிங்குடன்



கோஸிஜினுடன்

கோஸிஜினின் மகள்

# கண்ணீர்க் காணிக்கை

காமராசர் மறைவுச் செய்தி கேட்டுப்பெரிதும் துக்கமடைந்தேன். விடுதலைப் போராட்டத்தில் ஒரு சாதாரணத்தொண்டராக வாழ்க்கையைத் துவக்கி காங்கிரசிலும், அரசாங்கத்திலும், தேசிய வாழ்விலும் மிகப் பெரிய பதவிகளுக்கு அவர் உயர்ந்தவர். நிருவாகத் திறமையினுலும், விவேகத்தினுலும் உயர்ந்தவர் அவர்.

அவர் ஒரு மக்கள் தலைவர். பிரச்சினைகளைப் பற்றிய பரந்த அனுபவம் படைத்தவர். ஏழைகளுக்காக வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டவர். சங்கடங்களனைத்தையும் அவர் சமாளித்த விதம் அவரது பண்புகளுக்கும், நமது ஜனநாயக முறைக்கும் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

அவரது மறைவு மூலம் எல்லாத்தரப்பு மக்களின் மதிப்பையும் பெற்று, கணிசமான செல்வாக்கைச் செலுத்திவந்த ஓர் ஒப்பற்ற தலைவரை நம்மிடையேயிருந்து பறிகொடுத்து விட்டோம்.

அவரது மறைவு பொது வாழ்க்கையில் ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அவர் ஒரு பிறவித் தலைவர் அவருக்கு இணையாக மிகச் சிலரே இருக்க முடியும்.

இவரது அளவற்ற தேசப் பற்றையும் மக்களிடம் இவர் கொண்டிருந்த அந்தரங்கபூர்வமான ஈடுபாட்டையும் கருத்தில் நிறுத்தி நிரந்தர நினைவுச் சின்னத்தை எழுப்புவோமாக.

**—தலைமையமைச்சர், இந்திராகாந்தி**

தலைவர் காமராசரின் எதிர்பாராத திடீர் மறைவினுல் தமிழ்நாடு மட்டுமின்றி, நாடு முழுவதுமே மக்கள் தலைவரை, திறமையான நிருவாகியை, இரும்பு உள்ளம் படைத்த மனிதரைத், திடமான கொள்கைப் பிடிப்பு உள்ளவரை, இணையற்ற மதியூகியை, ராஜதந்திரியை இழந்து நிற்கிறது. அவரது நேர்மையும் அப்பழுக்கு அற்ற பொது வாழ்க்கையில் அவரது தன்னலமற்றஈடுபாடும் மிகவும் உயரிய தரம் படைத்தவை மிகவும் நெருக்கடியான கட்டங்களில், சிக்கலான சந்தர்ப்பங்களில், அவர் தீரத்துடனும், விவேகத்துடனும் செயலாற்றியவர். சந்தர்ப்பங்கள் அல்லது சிக்கல்கள் அவரைத் திகைப்படையச் செய்ததில்லை. அவரது தீர்க்கமான நோக்கும் சீரிய மதிப்பீடும் சங்கடமான பிரச்னைகளுக்குத் தீர்வு கண்டு இருக்கின்றன.

**—ஆளுநர் கே. கே. ஷா**

இளமைப் பருவத்திலேயே இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, அடக்குமுறைகள், சிறைவாசங்கள் அனைத்துக் கொடுமைகளையும் ஏற்று—தொண்டராய் வாழ்வைத் தொடங்கித் தொண்டர்களுக்குத் தலைமைதாங்கிக்களம் புகும் கர்ம வீரராகத் திகழ்ந்து—உழைப்பால் புகழின் உச்சியில் ஒளிவிட்டுக் கொண்டிருந்த தியாகச் சுடராம் தலைவர் காமராசரை இழந்து, நாடு கண்ணீர்க் கடலில் மிதக்கிறது. அண்ணல் காந்தியடிகளின் அருமை மிகு மாணவர்களில் ஒருவராக விளங்கியவர். நாட்டில் சிக்கல்கள் தோன்றியபோதெல்லாம் அவைகளைத் திடநெஞ்சுடனும், அமைதியான அணுகு முறையுடனும் தீர்த்து வைக்க அரும்பாடு பட்டவர். அவர் கட்சிக்குத் தலைமையேற்றிருந்த காலம், இந்திய நாட்டின் அரசியலுக்குச் சிறப்புச் சேர்ந்த காலமாகும். அவர், ஆட்சிக்குத் தலைமை ஏற்று இருந்த காலம், தமிழ்நாட்டின் பெருமைக்குப் பெருமை சேர்த்த காலம். பெரியாரின் பேரன்புக்குப் பாத்திரமான காமராசர், சிறந்த பகுத்தறிவுச் செம்மலாகவும் திகழ்ந்தார்.

குணாளர், குலக்கொழுந்து, தன்மானத் தமிழர் என்று பேரறிஞர் அண்ணு அவர்கள் காமராசரைப் பாராட்டிக் களித்ததுண்டு.

பண்டித நேரு பெருமகனுரின் ஆழ்ந்த நம்பிக்கைக்கும் அன்புக்கும் உரியவராக அவர் விளங்கினுர்.

கடந்த நான்கு ஆண்டுக் காலமாக அடிக்கடி அவரைச் சந்திக்கவும் உரையாடிடவுமான வாய்ப்புக்கள் எனக்கு ஏற்பட்ட போதெல்லாம் அவரது பழகிடும் இனிய பண்பையும், நட்பின் ஆழத்தையும், தமிழ்மக்களின் உணர்வுகளுக்கு அவர் அளித்த முக்கியத்துவத்தையும் இந்திய நாட்டு ஒற்றுமையில் அவர் கொண்டிருந்த நீங்காப் பற்றையும் நேரடியாகவே நெஞ்சோடு நெஞ்சம் இணைந்து உணர்ந்து கொள்ள என்னுல் முடிந்தது.

அவரது உழைப்பு—பின்பற்றத் தக்கது!

அவரது தியாகம்—காலம் எல்லாம் போற்றிப் புகழத் தக்கது!

அவரது திறமை—வியக்கத் தக்கது!

அவரது அரசியல் வாழ்வு — பெருமை மிகுபாரம்பரியத்தை உள்ளடக்கியது.

ஓர் உயர்ந்த இந்தியரை — ஓர் உணர்ச்சி வாய்ந்த தமிழரை—நாடு மதிக்கும் நல்ல தலைவரை, இழந்துவிட்டோம்.

அவருடைய கடைசிச் செய்தியாக ''மனித சமுதாயத்திலிருக்கும் போட்டி, பொருமை, ஏற்றத்தாழ்வுகளை நீக்க அமைதியான முறையில் காந்தியடிகள் காட்டிய வழியைப் பின்பற்றிப் பாடுபடுவோமாக!'' என்று காலையிலே தான் கூறினுர். அந்தச் செய்தி மாலை ஏடுகளில் வருவதற்கு முன் மறைந்துவிட்டார். இயற்கை விளைத்துள்ள கொடுமைகளின் இதுவுமொன்று!

தமிழ் நாட்டு மக்களின் சார்பில் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**—முதல்வர் கலைஞர்**



சென்னையில் நடைபெற்ற அனைத்துக் கட்சி இரங்கற்கூட்டம்

திட்டம்கூட இன்னும் நிறைவேற முடியாத அளவுக்கு அந்தத் திட்டம் முடங்கிக் கிடக்கிறது. இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில், இந்தத் திட்டம் ஆரம்பம் ஆனது என்பதுகூட மறைந்து விட்டது.

அந்த அளவுக்கு ஐந்தாண்டுத் திட்டம் நடைமுறையில் இருக்கிற காரணத்தால் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியிருக்கிறது. இவைகளுக்கு இப்போது நாம் எடுத்துள்ள முடிவு உடனடி பரிகாரம் ஆகிவிடுமா என்றால் ஆகாது. இது ஒரு தொடக்கம்தான். கிட்டத்தட்ட 90 ஆயிரம் பேர் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் 60 பேருக்குத்தான் இந்தத் திட்டத்தை நாம் தொடங்கி வைக்கிறோம். இந்த 60 பேர் 6 ஆயிரம் பேராகப் பெருக எத்தனையோ ஆண்டுகள் ஆகும். ஆனால் அப்படி எண்ணிக் கொண்டிருந்தால் இப்போது 60 பேரையும் நாம் வாழ வைக்க முடியாது. தைரியமாக இதைத் தொடங்கினால் அறுபது அறுநூறாகி, அறுநூறு ஆறாயிரமாகக் கூடும் என்ற உறுதியோடு தொடங்கப்பட்டிருக்கிற திட்டம்தான் இந்தத் திட்டம்.

இதற்கு மாநில அரசு கிட்டத்தட்ட 3 இலட்சம் ரூபாய் உதவி செய்திருக்கிறது.

மேலும் உதவி தேவைப்படுகிற நேரத்தில் நிதியமைச்சரிடம் கேட்டுப் பெறுவேன் என்று கல்வியமைச்சர் இங்கே தெரிவித்தார். அவர்களே இங்கே 500 கோடி ரூபாய் உள்ள தமிழ்நாடு வரவுசெலவு திட்டத்தில் கிட்டத்தட்ட 120 கோடியைத் தானே வாங்கிக் கொள்வதாகத் தெரிவித்தார். அதற்குக் காரணம் கல்வி இருந்தால்தான், கல்வித் துறையில் நல்ல வளர்ச்சி இருந்தால்தான், என்னதான் பொருளாதாரத் திட்டங்கள், சமுதாயத் திட்டங்கள் நிறைவேறினாலும் அறிவார்ந்த மக்கள் இல்லாத ஒரு நாட்டில் அவைகள் எல்லாம் பயனற்றுப் போய்விடும் என்பதால்தான் கல்வித் துறையில் தமிழக அரசு இந்த அளவுக்கு நாட்டம் கொண்டிருக்கிறது.

நாவலர் அவர்கள், பல்கலைக் கழகங்களுக்கு மத்தியிலிருந்து இன்றைக்குக் கிடைக்கிற உதவி எப்படி இருக்கிறது என்பதையெல்லாம் விளக்கினார்கள்.



அதைத் தொடர்ந்து நானும் ஒன்றை விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் சென்றமுறை திருச்சிக்கு வந்தபோது தமிழகத்தில் இருக்கிற பல்கலைக் கழகங்கள் எண்ணிக்கை மிகமிகக் குறைவு. இந்தியாவிலிருக்கிற வேறு மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் நேரத்தில் மிகமிகக் குறைவென்று எடுத்துச்சொன்னேன். பீகார் மாநிலத்தில் 8 பல்கலைக் கழகங்களும் குஜராத்தில் 8 பல்கலைக் கழகங்களும், மத்தியப் பிரதேசத்தில் 10 பல்கலைக் கழகங்களும் என்று இந்த புள்ளி விவரங்கள் நமக்குச் சுட்டிக் காட்டும் போது, தமிழகத்தைப் பொறுத்த வரையில் சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்கள், வேளாண்மைப் பல்கலைக் கழகம் என்று 4 பல்கலைக் கழகங்கள்தான் இங்கே இருக்கின்றன. மத்தியப்பிரதேசம், பீகார், குஜராத் என்று இப்படி மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும் நேரத்தில் 8 பல்கலைக் கழகங்களாவது தமிழ்நாட்டில் இருந்து தீர வேண்டும்.



எவ்வளவு கல்லூரிகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன? நிர்வாகம், அதிகாரம் இவைகள் எல்லாம் பகிர்ந்தளிக்கப்பட்டால்தான் எதுவும் ஒழுங்காக நடக்க முடியும். இல்லாமல் எல்லா அதிகாரங்களையும், நிர்வாகப் பொறுப்புகளையும் ஒருவர் தலையில் தூக்கிப் போட்டுக் கொண்டால், அவர்களும் உருப்படமாட்டார்கள்; மற்றவர்களையும் உருப்படவிட மாட்டார்கள். ஆகவே, பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும்.

அந்த அடிப்படையில்தான் இந்தியாவில் இருக்கிற மற்ற மாநிலங்களில் 8, 10 அளவில் பல்கலைக் கழகங்கள் இருக்கும்போது நம்முடைய தமிழகத்தில் 4 பல்கலைக் கழகங்கள் — மிக மிகக் குறைவாக இருக்கின்றன. ஆகவே, உடனடியாக மேலும் 2 பல்கலைக் கழகங்களை கோவையில் ஒன்றும், திருச்சியில் ஒன்றும் நிறுவுவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்கிறோம் என்ற கருத்தை நான் சொன்னேன். சட்டப்பேரவையிலும் அதை நாவலர் அவர்கள் அறிவித்தார்கள். இன்றைக்குப் பல்கலைக் கழக நிதி ஒதுக்கீடுக் குழு எப்படிப்பட்ட கருத்தைக் கொண்டிருக்கிறது என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். நான் இதைக் கண்டிப்பதற்காகக் கூறவில்லை. திருச்சி பல்கலைக் கழகம் அமைவதையும், கோவைப் பல்கலைக் கழகம் அமைவதையும் அவர்கள் ஒத்துக் கொள்கிறார்கள். ஆனால் திருச்சி பல்கலைக் கழகத்தின் அதிகாரம் திருச்சி நகரத்திலே இருக்கிற கல்லூரிகளை மாத்திரம் பொறுத்திருக்க வேண்டும். ஆனால் புதுக்கோட்டையில் இருக்கிற கல்லூரியும் சென்னைப் பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்தின்கீழ் இருக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். திருச்சியில் ஒரு பல்கலைக் கழகத்தை உருவாக்கிவிட்டு, திருச்சி நகரத்தில் மாத்திரம் இருக்கிற கல்லூரிகள்தான் அதில் அடங்கும் என்று கூறுகிறார்கள்.

ஒரு பொது மனிதன் இதைக் கூறக் கேட்டால்கூட அவர் கூடும். ''அப்படியானால் சென்னையில் இருக்கிற பல்கலைக் கழகம் சென்னை நகரத்தில் இருக்கிற கல்லூரிகளுக்கு மாத்திரம் பொறுப்பு ஏற்றுக் கொள்ளட்டுமே'' என்று கேட்கக் கூடும். சென்னையில் இருக்கிற பல்கலைக் கழகம் திருவெறும்பூரில் இருக்கிற கல்லூரிக்கும், புதுக்கோட்டையில் இருக்கிற கல்லூரிக்கும், முசிறியில் இருக்கிற கல்லூரிக்கும் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமாம். திருச்சிப் பல்கலைக் கழகம் திருச்சி நகரத்தில் மட்டும் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமாம். இதை ஒத்துக் கொண்டால்தான் பல்கலைக் கழக மானியக் குழு (யுனிவர்சிடி கிராண்ட் கமிஷன்) மானியம் கிடைக்கும் என்று அவர்கள் கூறுகிறார்கள். நாங்கள் இன்னும் அதை ஒத்துக் கொள்ளவில்லை. தொடர்ந்து கடிதப் போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நானும் கல்வி அமைச்சரும் மீண்டும் இதைப் பற்றி கலந்தாலோசித்து இந்தப் பல்கலைக் கழகங்கள் எல்லாம் அவர்கள் சொல்வதைப் போல 'யூனிட்டரி' என்ற அடிப்படையில் இல்லாமல் வட்டார அளவில் இவைகள் அமைவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

''கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக''

என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். ஆக,கல்வி என்பது ஏட்டுக் கல்வி மட்டுமல்ல'' கற்பவை எவை என்று தெரிந்து எடுத்து அவைகளைக் கற்க வேண்டும். இப்படிப்பட்ட திட்டம் தேவை என்று குறள் மூலம் அன்றைக்கே சொல்லியிருக்கிறார். ஆகவே கற்பதைக் கற்றிட வேண்டும். கற்றபின் அதற்குத் தக நின்றிட வேண்டும். அந்த அடிப்படையில்தான் கூட்டுக் கல்வித் திட்டத்தை இன்று நாம் தொடங்கி வைக்கிறோம். இது நல்ல முறையில் வளர்ந்து வளமை பெற்று விரிவடைந்து தமிழ்நாட்டு மக்களுடைய எதிர்காலத்தை ஒளிமயமானதாக்க வேண்டும்.

(திருவெறும்பூரில் உள்ள மண்டலப் பொறியியல் கல்லூரியில் தொழில் வாய்ப்பு—கூட்டுக் கல்வி நிறுவனத்தை 29—9—75 அன்று தொடங்கி வைத்து முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை).

# தாய்

அருப்புக்கோட்டை தவசிமணி

தெங்கின் குளுமையதும் தேனின் இனிமையதும்
பங்கமிலாத் தங்கத்தின் பான்மையதும்—துங்கமுற
வாய்த்ததுவாம் தாயின் மனமென்னும் பூங்கொடியில்
காய்த்திருக்கும் அன்புக் கனி.

கனிவான அன்புக் கடலாய் விளங்கும்
தனிமேன்மை யுற்றதோர் தாயாள்—இனிதாகத்
தாலேலோப் பாட்டிசைத்துத் தன்மகவுக்(கு) ஊட்டிடுவாள்
பாலோடு சேர்த்துநற் பண்பு.

பண்போடு நற்பாலும் உண்டு பசியாறி
மண்மேடு சென்று மகிழ்ந்தாடும்—பொன்போல்
இலங்கு சிறுகுழவி மென்தாள் இடறிவிழின்
கலங்கிடுமே தாயவளின் கண்.

கண்கள் துயிலாமல் காலத்திற் குண்ணாமல்
வெண்கமல மேனிநலம் வேட்பாடல்—தன்கடமை
யாவும் குழவிதனை ஏத்துதலே என்றேதாய்
சேவைமிகச் செய்வாள் தினம்.

தினமும், பணிசெய்து தேயுமுடல் ஓம்பாமல்,
தனமும் வெறுத்திருக்கும் தாய்போல்—மனமும்
குணமும் குறிக்கோளும் குற்றமிலாத் தூய
உணர்வும் உடையோர்யா ருண்டு.

உண்டொருவர் ஈடென்(று) உரைக்கவொணா நற்றாயை
அண்டுதுயர் தீர்க்கும் அருஞ்சக்தி—கொண்டதொரு
தெய்வமெனப் போற்றியவள் சேவடிக்கு வந்தனைகள்
செய்வதுவே என்றும் சிறப்பு.

சிறப்புத் தருமச் செயல்புரிய நாளும்
பொறுப்புச் சிறிதுமிலாப் புன்மைப் பிறவிகளைப்
புற்றிலுறை நாகம் புனல்வாழ் தவளைதனைப்
பற்றுதல்போல் பற்றும் பழி.

பழிக்கஞ்சாப் பாதகராய்ப் பாரினிலே வாழல்
இழுக்கன்றோ? ஆதலினால் இன்பக்—கொழுகொம்பாம்
தாயாளின் பொற்றாள் தனையென்றும் போற்றுமுயர்
சேயாக நாம்திகழ்வோம் தேர்ந்து.

—அந்தாதி வெண்பா

# தமிழரசு சிறுகதைப் போட்டி 1975

தமிழரசு இதழின் கடந்த ஆண்டு சிறுகதைப் போட்டி போன்று இவ்வாண்டும் சிறுகதைப் போட்டி அறிவிக்கப் படுகிறது.

**போட்டிக்குரிய விதிமுறைகள்**

* அரசின் ஆக்கப்பணிகளை அடித்தளமாகக் கொண்டு தமிழகச் சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் கதை அமைதல் வேண்டும்.
* கதை தமிழரசு இதழில் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
* ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
* தேர்ந்தெடுக்கப் பெறாத கதைகளைத் திருப்பி அனுப்ப இயலாது.
* போட்டிக்கனுப்பப்படும் கதைகளின் அஞ்சல் உறையின் மீது 'தமிழரசு சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிடுக.
* போட்டிக்குக் கதைகள் வந்து சேரவேண்டிய முடிவுநாள் 30—11—1975.

முதல் பரிசு ரூ. 500/-

இரண்டாவது பரிசு ரூ. 300/-

மூன்றாவது பரிசு ரூ. 200/-

தேர்ந்தெடுக்கப்படும் பரிசுபெறும் கதைகள [illegible] தகுதி யுடைய கதைகள் தமிழரசில் வெளியிடப்படும். அவைகளுக்கு வழக்கமான அன்பளிப்பு வழங்கப்படும்.

போட்டி முடிவு 1975 ஜனவரி 16 ஆம் நாள் இதழில் வெளிவரும்.


1.9.75 தமிழரசு இதழில் வெளிவந்த 'நன்றிக்கு விலை' என்ற சிறுகதை தமிழக அரசின் குடும்பநலத் திட்டம், கருணை இல்லம், கைம்பெண்களின் மறுவாழ்வுத் திட்டம் ஆகிய மூன்று கருத்துக்களையும் உள்ளடக்கி ரத்தினச் சுருக்கமாக வாசகர் கருத்துக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் நன்கு விளக்கிவிட்டது. இதுபோன்ற பலகதைகள் வெளிவர விரும்புகிறோம்.

—அ. அ. சுந்தரசாமி,
இராசிபாளையம்.

16.9.75 'தமிழரசு' இதழின் ஒவ்வொரு பக்கமும் பயன்தரத்தக்க வகையில் அமைந்திருந்தது. அமரர் அறிஞர் அண்ணாவின் பொன்மொழிகள், சிறுகதை, ஏன், எல்லாவற்றையும் அட்டைபோட்டு எங்கள் வீட்டில் பாதுகாத்து வைக்கும்படி செய்துவிட்டீர்களே! நான் தெரிந்து கொண்டேன், 'அண்ணாவுக்கு நிகர் அண்ணாதான்', 'தமிழரசுக்கு நிகர் தமிழரசு' தான் என்று.

—சா. குப்புசாமி,
சூலூர்.

'தமிழரசு' 16.10.75 இதழில் டாக்டர் பி.எம். ரெக்ஸ் அவர்கள் எழுதிய 'நரையீரல் நோய்களும், மருத்துவமும்' என்ற கட்டுரை அருமையான தமிழில் மிகவும் பயன்தரக் கூடியதாக இருந்தது. இத்தகைய மருத்துவக் கட்டுரைகள் தொடர்ந்து வந்தால் எல்லாருக்கும் நலம் பயக்கும்.

பார்த்தோம் படித்தோம்





# கட்டைப்பயறு காய்த்தது! சட்டைப் பை நிறைந்தது!

[illegible] கோவை நகரத் [illegible] ஆகும் [illegible] நிலத்தில் [illegible] தண்ணீர் [illegible] உதவி [illegible] இல்லையானது! [illegible] 'கோ-2' [illegible] வியக்கும் வண்ணம் [illegible] இலாபம் அடைந்துள்ளார். அவரைப் போல் மற்றவர்களும் பெரும் இலாபம் பெற்றிட வேண்டும் என்பதற்காக, அவர் மேற்கொண்ட சாகுபடி முறைகளை ஈண்டு விளக்கியுள்ளோம்.

திரு. சண்முகம் அவர்களின் நிலம், மண்-செம்மண் கலந்த இரு மண் பூமியாகும். அவர் கிணற்று நீரானது சிறிது உப்புக் கலந்த சப்பைத் தண்ணீராகும். அவர் முந்திய பயிரான பருத்தி மிலாரை அகற்றிய [illegible] பண்படுத்தினார். [illegible] 29-3-[illegible] அன்று [illegible] விதைத்து [illegible] விதைகளை [illegible] நீர் பாய்ச்சினார். [illegible] நாள் உயிர்த் தண்ணீர் பாய்ச்சினார்.

[illegible] பதினைந்தாம் நாள், நிலத்தில் மேலாகக் களைகளை எடுத்தார். அதைத் தொடர்ந்து பத்து கிலோ கூட்டு உரம் (17:17:17) மேலுரமாக இட்டு, நீர் பாய்ச்சினார். 45-வது நாள் இரண்டாம் முறையாகக் களைகளை எடுத்தார்.

தக்க பயிர்ப் பாதுகாப்பு இல்லையேல் எந்தப் பயிரும் விளையாது என்பது நாட்டறிந்த உண்மையாகும். எனவே, 'கோ-2' தட்டைப் பயறும் விதி விலக்கல்ல!

திரு. சண்முகம் அவர்கள் 'எண்டிரின்', 'தையோடான்', 'கெல்தேன்' 'செவின் 50', ஆகிய பூச்சிக் கொல்லி மருந்துகளை மாற்றி மாற்றி ஆறுமுறை தெளித்தார்.

"கிணற்றில் தண்ணீர்த் தட்டுப்பாடாக இருந்த காரணத்தால் முறையாக நீர் பாய்ச்ச முடியவில்லை" என்று கூறி அவர் வருத்தப்பட்டார். இருப்பினும் சுமார் 10-15 நாளைக்கொருதரம் நீர் பாய்ச்சினார். மொத்தமாகப் பத்து முறை தண்ணீர் [illegible]னார்.

முதன் முதலாக [illegible] அன்று காய் பறிக்கத் தொடங்கினார். அவரது நிலத்தில் 24-7-74 அன்று கடைசி முறையாகக் காய்கள் [illegible]டன. தனது [illegible] சென்ட் நிலத்தை இரண்டாகப் பிரித்து ஒரு நாள் விட்டு மறுநாள் காய்களைப் பறித்தார். இதனால் நாள்தோறும் [illegible] பறித்து, அருகிலுள்ள [illegible] அல்லது [illegible] [illegible] விற்[illegible] [illegible] 812 [illegible] நாள் [illegible] கிலோ காய்கள் [illegible] இரண்டு மாத காலத்தில் [illegible] பயறு காயின் விலை கிலோ ஒன்றுக்கு [illegible] ரூபாய் 1.10 [illegible] ஆனது. சராசரியாக கிலோ 90 காசுகளாகக் கணக்கிட்டுக் கொள்ளலாம்.

இவ்வாறு விற்றதின் மூலம் திரு சண்முகம் அவர்கள் தனது 10 சென்ட் நிலத்திலிருந்து மொத்த வருவாய் ரூபாய் 730 பெற்றார். செலவு சுமார் ரூபாய் 100 இருக்கும் என்று தெரிவித்தார்.

தம்பியின் செயலைக் கண்டதும், அவருடைய அண்ணன் திரு. பொன்னுசாமிக்கும் ஆசை வந்தது இயல்புதானே! அவரும் கடந்த ஆடிப்பட்டத்தில் சுமார் 30 சென்ட் நிலத்தில் 'கோ-2' தட்டைப் பயறு பயிர் செய்தார். தம்பி கையாண்ட முறைகளைச் செம்மையாக அண்ணனும், செய்து நல்ல மகசூலைப் பெற்றார்.

அண்ணன் தம்பியர் செய்த முறைகளைச் சுருக்கமாக அட்டவணையில் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

# தமிழகத்தில் தொழில் வாய்ப்புக் கூட்டுக் கல்வித் திட்டம்

மாணவர்களது எதிர்காலத்தை மேலும் ஒளிமயமாக்கத்தக்க வகையில் தமிழ ...த்தில் ''தொழில் வாய்ப்புக் ...ட்டுக் கல்வித் திட்டம்'' தொடங்கப் பெற்றுள்ளது.

கடந்த ஒரு ஆண்டுக்காலத்திற்கு மேலாகவே நம்முடைய திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் முனைப்பாக முயற்சிகள் மேற்கொண்டு, மணி, ...ந்தரம், ஜாகப் போன்றவர்களின் உறுதுணையோடு இந்தத் திட்டம் இங்கே தொடங்கி வைக்கப்படுகிறது.

நம்முடைய கல்வி பல்வேறு வகையிலும் சிறப்பெய்த வேண்டும். அந்தச் சிறப்பு மாணவர்களுடைய எதிர்காலத்தோடு தொடர்புடையதாக அமைய வேண்டும்.

மாணவர்களுடைய எதிர்காலம் நாட்டின் எதிர்காலத்தோடு தொடர்பு இருக்கிற ...ரணத்தால் இன்று ஏற்படு...ற இந்தத் தொடர்பு சமுதா...த்தின், நாட்டின் பொருளா...ரத்தையும் எதிர்காலத்தையும் பிரகாசம் மிக்கதாக ஆக்கு...தற்கு வலுவாக அமையும் ...ன்பதையும் சித்தித்து செயல் ...டுவதற்காகத் தொடங்கப்படு...ற திட்டம்தான் இந்தத் தொழில் வாய்ப்புக் கூட்டுக் ...ல்வித் திட்டம்.

இதைத் தமிழகத்திலே வேறு ...ந்த மாவட்டத்திலே தொடங்...வதைவிட—வேறு கல்லூரி...ளிலே தொடங்குவதைவிட ...ங்கே தொடங்குவது மிகவும் ...றப்புடையதாகும். ஏன் என்...ல் இன்று அவசர நிலை காரண...ாகக் கட்டுப்பாட்டுத் தன்மை ...ாணவர்களிடத்தில் வலிந்து புகுத்தப்பட்டிருக்கிறது என்றாலும், சட்டங்கள் இல்லாமலேயே கட்டுப்பாட்டோடு நடக்கத் தெரிந்தவர்கள் நீங்கள் என்பதைச் செயலளவில் காட்டி வருகிற மாணவர்கள் நிறைந்திருக்கிற ஒரு கல்லூரியில் இந்தத் திட்டத்தைத் தொடங்குவது சாலச் சிறப்பு உடையதாகும். இதிலிருந்து ஒவ்வொரு கல்லூரியிலும் இருக்கிற மாணவர்கள் உங்களை இந்த முறையில் பின்பற்றுவார்களேயானால் அவர்களும் இப்படிப்பட்ட பயன்களைப் பெறக்கூடும் என்பதற்கு இதைத் தவிர வேறு அடையாளங்கள் தேவையில்லை.

நம்முடைய கல்வி இன்றைக்குப்படித்து முடிந்து ஏதாவது ஒரு வேலையைத் தேடுகிற அளவோடு முடிந்து கொண்டிருக்கிறது. ஏட்டுக் கல்வியைத் தவிர வேறு கல்வித் துறை நம்முடைய நாட்டில் அறிமுகமாகவில்லையா என்றால் ஆகியிருக்கிறது; மருத்துவக் கல்வியென்றும், விவசாயத் துறைக் கல்வி என்றும் இன்றைக்கு இருக்கிறது. வேளாண்மைத் துறைக் கல்வியைப் பயின்றோர் அதிலே சிறப்பெய்தி அது மூலமாகத் தங்களுடைய வாழ்க்கையை நடத்தி சமுதாயத்திற்கும் நாட்டுக்கும் பயன்பட முன் வருகிறார்கள் என்றாலும் வேளாண்மைத் துறையில் பயிரிடுவது வேறு. எந்தெந்தப் பயிர்களை எந்தெந்தக் காலத்தில் பயிரிட வேண்டும், எந்த நெல்லை எந்த நெல்லோடு இணைத்தால் ஒரு புதிய நெல் கிடைக்கும். அது குறைந்த காலத்திலே மிகுந்த பயனை விளைவிக்குமா? என்பதில் அந்தத் துறையில் உள்ளோர் சிறந்து விளங்குகிறார்கள்.

ஆனால் ஒரு துறையோடு அந்தத் துறைக்குத் தேவையான கருவிகளைச் செய்தல், டிராக்டர் போன்றவைகளைப் பழுது பார்த்தல், அவைகளைச் செய்வதற்கான பயிற்சியைப் பெறுகிற மாணவர்களுக்கான பயிற்சி இன்றைய தினம் சிறப்பாக வழங்கப்படவில்லை என்பதை எல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் தொழிலுக்கு நல்ல வாய்ப்பை அளிக்கக் கருதும் அதே நேரத்தில், நல்ல கல்வி முறையாக இருக்கத் தக்கதுமான இந்த முறை தொடங்கப்படுகிறது.

முதல் கட்டமாக 60 மாணவர்கள் இந்தப் பயிற்சிக்காகச் சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள். கருவி, கட்டடக் கலை, மின் நூற்பாலை ஆகிய இந்த மூன்று பிரிவுகள் இதிலே இருக்கின்றன. இது தொழில் கல்வித் திட்டமே தவிர, ஒரு காலத்தில் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட—பல்வேறு எதிர்ப்புகளுக்கு ஆளான குலக் கல்வித் திட்டம் அல்ல. கடந்த ஏழு எட்டு மாதங்களுக்கு முன்பு ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் ராஜாஜி நினைவாலயத்தைச் சென்னையில் திறந்து வைக்க வந்தபோது, ஒன்றைக் குறிப்பிட்டார்:

''ஒரு காலத்தில் ராஜாஜி அவர்கள் தொழில் வளர... தொழில் வாய்ப்பு பெருக ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வந்தார். ஆனால் அது சரியாகப் புரிந்து கொள்ளாத காரணத்தால் அந்தத் திட்டம் ... முறையில் மக்களிடம் ... மாக முடியாமல் ... நின்று விட்டது. அதை ... டும் பரிசீலிக்கலாம்'' என்று எடுத்துச் சொன்னார்.



நான் அவர் பேசி முடித்த பிறகு, அவரிடம் உரையாடினேன். நான் ''நீங்கள் தொழில் கல்வித் திட்டத்தையும், குலக் கல்வித் திட்டத்தையும் ஒன்றாக இணைத்துக் கருத்துப் பரிமாறியிருக்கிறீர்கள். நாங்கள் ஒரு காலத்தில் எதிர்த்தது தொழில் முறைக் கல்வித் திட்டத்தை அல்ல. ஒரு மகன் தன்னுடைய தந்தை செய்த தொழிலைத்தான் செய்ய வேண்டுமென்ற தன்மைக்குத் தள்ளப்படுகிற கல்வி கூடாது என்ற வகையில்தான் அன்றைக்குத் தமிழகத்தில் எதிர்ப்பு எழுந்ததேயல்லாமல், ஒரு மாணவன் தான் பட்டப் படிப்பை முடித்துவிட்டு இன்றைக்குத் தனக்கு என்று அவன் விரும்பித் தெரிந்தெடுத்துக் கொள்கிற ஒரு தொழில் கல்வியை இந்த அரசு ஆதரிக்கிறது. அதற்கான திட்டத்தையும் தீட்டியிருக்கிறது. அன்றியும்கூட இப்படிப்பட்ட திட்டத்திற்கான கால்கோள் விழா விரைவில் நடக்க இருக்கிறது'' என்பது பற்றிய விளக்கத்தை நான் சொன்னேன்.

அவர் சென்னையிலிருந்து புறப்பட்டு திருச்சியில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வந்தபோது மாவட்ட ஆட்சித் தலைவர் இந்தத் திட்டம் பற்றி அவரிடம் எடுத்துச் சொல்லி இது பற்றிய விளக்கத்தை எல்லாம் அவர் ஆர்வத்தோடு அறிந்து, அதற்கான ஆதரவை உடனேயே நல்கினார்.

மாணவர்கள் தங்களுடைய படிப்பை ஏதோ ஒரு வேலை தங்களுக்குக் கிடைக்க வேண்டும், தங்களுடைய குடும்பத்தைக் காப்பாற்றியாக வேண்டும், வாழ்நாளை ஓட்டவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் படிப்பது சரிதானா என்ற கேள்வி இன்று எழுகிறது. அது சரியல்ல என்பதற்கான ஆயிரம் வாதங்களை அடுக்கினாலும், அவனை நம்பி இருக்கிற குடும்பத்தை அந்த மாணவன் படித்து வேலைக்குப் போய்த்தான் அந்தக் குடும்பம் வாழ முடியும் என்ற நிலைமையில் இருக்கிற குடும்பங்களை நாம் மறந்து விடுவதற்கில்லை. ஆகவேதான் வசதியுள்ள மாணவர்கள் தங்களுடைய படிப்பை முடித்து விட்டு குடும்பத்தின் பெருமைக்கு ஏதோ ஒரு வேலையில் அமர வேண்டும் என்ற கௌரவத்திற்காக இல்லாமல், வசதி படைத்த மாணவர்கள் தாங்கள் படித்துப் பட்டம் பெற்ற பிறகு நாட்டுக்குத் தேவையான எத்தனையோ புதுப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட தொழில் கல்வியைப் பயின்று, தொழிற்சாலைகளை அமைத்து இலட்சக்கணக்கானவர்களுக்கு வேலை கொடுக்கின்ற தன்மையிலே அதை உருவாக்க வேண்டும்.

## முதல்வர் கலைஞர்

வசதி பெற்ற மாணவர்கள் படித்தோம், முடித்தோம், ஏதோ ஒரு எழுத்தர் வேலை இருக்கிறது என்று எண்ணுகிற காரணத்தாலேதான் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகும் காட்சியைக் காண்கிறோம். வேலையில்லாத் திண்டாட்டம் போகத்தான் இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு ஐந்தாண்டுத் திட்டங்கள் என்று வரையறுக்கப்பட்டு, முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் என்ற அளவில் வளர்ந்து, அதன் காரணமாக ஒரு அளவு வேலையில்லாத் திண்டாட்டம் போக்கப்பட்டது. இன்றைக்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்கப்பட்டு, அது நடக்கச் சக்தியற்று ஒரு ஆண்டுத் திட்டம், என்ற அளவில் 2, 3 ஆண்டுகளைத் தள்ளி, கடைசிக் காலத்தில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் என்ற பெயரைப் பெற்று இரண்டாண்டுக் காலம் நடைபெற்று பிறகு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் என்ற பெயரால், ஏற்கனவே ஐந்தாண்டுத் திட்டங்களுக்குச் செலவழிக்கப்பட்ட தொகையினைவிட அதிகமாக ஒதுக்கப்பட்டு, உதாரணமாக 25 ஆயிரம் கோடிரூபாய் பழைய ஐந்தாண்டுத் திட்டத்திற்கு என்றால், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 55 ஆயிரம் கோடி ரூபாய் என்ற அளவுக்கு வரைவுகள் எல்லாம் தயாரிக்கப்பட்டு அதற்காக முதலமைச்சர்கள் எல்லாம் கூடி தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்து ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் என்று தொடங்கப்பட்டாலும் கூட கிட்டத்தட்ட தொடங்கப்பட்டு 2 ஆண்டுக் காலம் ஆகியும்கூட, முதலாண்டுத்

| செய்முறைத் தகவல் | திரு. சண்முகம் | திரு. பொன்னுசாமி. |
|---|---|---|
| 1. நிலத்தின் பரப்பு | ...10 சென்ட் | 30 சென்ட் |
| 2. விதைத்த தேதி | 23-4-74 | 27-7-74 |
| 3. அறுவடை முடிந்த தேதி | 24-7-74 | 2-12-74 |
| 4. அடியுரம் | இல்லை | 10 டன் தொழு உரம் |
| 5. மேலுரம் | 10 கிலோ கூட்டு உரம் | 25 கிலோ 'சி.ஏ. என்.' உரம். |
| 6. மருந்து தெளித்தது | 6 முறை | 6 முறை |
| 7. நீர்ப்பாய்ச்சுதல் | 10 தடவை | 8 தடவை |
| 8. மகசூல் (கிலோ) | 812 | 2,349 |
| 9. ஏக்கருக்கு மகசூல் (கிலோ) | 8,120 | 7,830 |
| 10. மொத்த வருமானம் | 730 | 2,115 |
| 11. ஏக்கருக்கு வருமானம் (ரூபாய்) | 7,300 | 7,050 |
| 12. செலவு ஏக்கருக்கு (ரூபாய்) | 1,000 | 1,000 |
| 13. நிகர வருவாய் ஏக்கருக்கு (ரூபாய்) | 6,300 | 6,050 |

'கோ-2' தட்டைப் பயறு பயிர் செய்ததில் தம்பி, அண்ணன் ஆகிய இருவரும் ஒருமித்து ஒப்புக் கொண்ட கருத்துக்களாவன.

1. 'கோ-2' ரகத் தட்டைப் பயறு குறுகிய காலப் பயிராக (120 நாட்கள்) உள்ளது.

2. குறைந்த உரமே இட்டால் போதுமானது!

3. பயறு வகையாக இருப்பதால், காற்றில் உள்ள தழைச் சத்தை ஈர்த்து நில வளத்தை அதிகரிக்கச் செய்கிறது!

4. மேலும் உதிர்ந்த தழைகள் மக்கி நல்ல எருவாக அமைகிறது!

5. அடுத்த பயிருக்கு அடியுரம் இடவேண்டிய அவசியமில்லை!

6. நகர்ப்புறத்தின் அருகாமையில் இருப்பதால், விற்பனை செய்வதற்கும் எளிதாக இருக்கிறது.

7. குடும்பப் பெண்களையும், பள்ளிக் குழந்தைகளையும் நாள் தோறும் வேலை செய்யத் தூண்டுகிறது!

8. மற்ற பயிர்களுக்கு வேண்டிய, குறிப்பாக பருத்திக்குத் தேவையான உரம், பூச்சி மருந்துகள் வாங்கவும், மின்சாரக் கட்டணம் செலுத்தவும், குடும்பச் செலவைத் தாக்குப் பிடிக்கவும் உதவியாக இருக்கிறது.

எனவே, நகர்ப்புறங்களை ஒட்டி அமைந்துள்ள கிராமங்களில் உள்ள சிறு விவசாயிகள் 'கோ-2' தட்டைப்பயறு சாகுபடி செய்தால், அவர்களுடைய சட்டைப்பை நிறையும் என்பது எங்கள் கருத்து!

தகவல்:

தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3.

**"அண்ணா நினைவு—டாக்டர் கருணாநிதி விருது" ஒன்றினையும் "அண்ணா நினைவு—டாக்டர் நெடுஞ்செழியன் விருது" ஒன்றினையும் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது**

## "அண்ணா நினைவு—டாக்டர் கருணாநிதி விருது"

அதிக மதிப்பெண்கள் எடுக்கும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் பொருளாதார நிலையில் நலிவடைந்த பிற வகுப்பு மாணவர்களுக்கு இலவசக் கல்வியும், இலவசப் புத்தகமும் அளிக்கப்படும்

**மொத்த விருதுகள் 125**

| | |
|---|---|
| தாழ்த்தப்பட்டோர், மலைச்சாதியினருக்கு | 50 |
| பிற்பட்டோர், மிகப்பிற்பட்டோருக்கு | 50 |
| பொருளாதார நிலையில் நலிவடைந்த பிறவகுப்பு மாணவர்களுக்கு | 25 |

கல்லூரியில் புகுமுக வகுப்பைத் தாண்டி, பட்டப் படிப்பிற்கும், பட்டப் படிப்பிலிருந்து முதுநிலைப் பட்டப்படிப்பிற்குச் செல்லும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும், மற்றும் பிற வகுப்பைச் சேர்ந்த பொருளாதாரத்தில் நலிந்த நிலையில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும், அவர்களை ஊக்குவிக்கும் விதத்தில் அவர்களுடைய மொத்த மதிப்பெண்களைக் கணக்கிட்டு, ஒவ்வொரு பாடத்திலும் அதிக மதிப்பெண்கள் வாங்கிய-முதலாவது, இரண்டாவது மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு இலவசப் படிப்பும் இலவசப் புத்தகமும் வழங்கும் திட்டம் -'அண்ணா நினைவு-டாக்டர் கருணாநிதி விருது'-என்ற வகையில் அமையும்.

இவ்விருது அளிக்கும் அறக்கட்டளைக்குத் தேவையான நிதி முதலமைச்சரின் சமூக நல சிறப்பு நிதியிலிருந்து வழங்கப்படும். இந்த அறக்கட்டளையின் நிருவாகம் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களால் நடத்தப்படும்.

இத்திட்டத்தின்படி

பட்டப் படிப்பில் ' 15 பாடங்களிலும், முதுநிலைப் பட்டப்படிப்பில் 10 பாடங்களிலும் சேர்கின்ற மாணவர்களுக்கு இந்த இலவசக் கல்வி வசதியும் இலவசப் புத்தக வசதியும் கொடுக்கப்படும்.

ஒவ்வொரு பாடத்திலும் அதிக மதிப்பெண்கள் பெற்ற தாழ்த்தப்பட்ட, மற்றும் மலைச்சாதி வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள்

இருவருக்கும்

பிற்பட்ட, மற்றும் மிகப் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள்

இருவருக்கும்

பொருளாதாரத்தில் நலிவடைந்த நிலையில் பிற வகுப்பைச் சேர்ந்த மாணவர்

ஒருவருக்கும்

மொத்தம் உள்ள — 125 விருதுகளில்

தாழ்த்தப்பட்டோர்,
மலைசாதியினருக்கு — 50 விருதுகளும்

பிற்பட்டோர், மிகப்
பிற்பட்டோருக்கு —50 விருதுகளும்

பொருளாதார நிலையில்
நலிவடைந்த பிற வகுப்பு
மாணவர்களுக்கு —25 விருதுகளும்

இத்திட்டத்தின்படி தமிழையும், ஆங்கிலத்தையும் பாட மொழியாகக் கொண்டு படிக்கின்ற இருவகை மாணவர்களுக்கும் இவ்விருதுகள் வழங்கப்படும்.

தமிழைப் பாட மொழியாகக் கொண்டு படிக்கின்ற மாணவர்களுக்கு ஏற்கெனவே அரசு புத்தகச் செலவிற்காக ரூ. 180/- வழங்குகிறது.

இத்திட்டத்தின்படி தமிழைப் பாடமொழியாகக் கொண்டு படிக்கின்ற மாணவர்கள் இவ்விருது பெற தகுதி உடையவர்களாக இருப்பார்களேயானால் அவர்கள் ஏற்கெனவே பெற்றுவரும் ரூ. 180/- உடன் இத்திட்டத்தின் கீழ், மேலும் விருதுகள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| பட்டப்படிப்பு மாணவர்களுக்கு புத்தகத்திற்காக வழங்கப்படும் மொத்தத் தொகை ... ... | ரூ. 250 |
| (மற்றும் கல்வி இலவசம்) | |
| முதுநிலை பட்டப்படிப்பு மாணவர்களுக்குப் புத்தகத்திற்காக வழங்கப்படும் மொத்தத் தொகை ... | ரூ. 250 |
| (மற்றும் கல்வி இலவசம்) | |

## "அண்ணா நினைவு—டாக்டர் நெடுஞ்செழியன் விருது"

சிறந்த தேர்வு முடிவுகளை அளிக்கும் கல்லூரிகளை ஊக்குவிப்பதற்காக "அண்ணா நினைவு—டாக்டர் நெடுஞ்செழியன் விருது" ஒன்றினைத் தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளது.

இந்த விருது சுழற்கோப்பை வடிவில் இருக்கும். சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த 4 கல்லூரிகளுக்கும், மதுரைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த 4 கல்லூரிகளுக்கும் —ஆக மொத்தம் 8 சுழற்கோப்பைகள் அளிக்கப்படும்.

அத்துடன் சிறந்த கல்லூரியாகத் தேர்ந்தெடுக்கப்படும் கல்லூரியின் முதல்வருக்கு ரூ. 3,000/- ரொக்கப்பரிசும், இரண்டாவதாகத் தேர்ந்தெடுக்கப்படும் கல்லூரி முதல்வருக்கு ரூ. 2,000/- ரொக்கப் பரிசும் அளிக்கப்படும்.

## மறவாதீர்கள்;

## உங்கள் மகள் ஒருநாள்

## மணமகளாக அமர வேண்டியவள்!

திருமணம் என்ருலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்ருல்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கினுல் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்ருேம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது—இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1,650/- |



இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002





**வி**த்து எதுவோ அதுவே விளைந்து பயன்தரும். அது போல நல்ல செயல் நன்மையே பயக்கும். தீய செயல் தீமை பயக்கும். நாம் செய்யும் நன்மை அன்றே பலன் தராவிட்டாலும், நாம் செய்யப்போகும் நல்ல காரியங்களைச் செய்ய முன்வந்து உதவும். நாம் செய்யும் தீமையும் நம் நிழல் போலத் தொடர்ந்து வேறு காலங்களிலும் தீமை செய்யும்.

தீ, ஒரு பொருளை மட்டும் தான் அழிக்கும். ஆனுல் நாம் செய்யும் தீமை, நிழலாகத் தொடர்ந்து நம் வாழ்வையே அழித்துவிடும்.

தீமை செய்தவர்களுக்குத் தீமையே செய்து அவர்களைத் தண்டிக்கலாம். ஆனுல் பயன்?

# நிழல்

பட்டுக்கோட்டை குமாரவேல்

தண்டித்தவர் மனம் கெடும். அதனுல் தீமைக்குத் தீமை செய்து வாழ்பவரை உலகம் மதிப்பதில்லை. மனச் செருக்கினுல் தீமை செய்கிருர் என்பதை அறிந்து, அவர் செயலுக்காக வருந்தி வாழ்பவரைத்தான் உலகம் பாராட்டும்.

''பாவி'' என்று பிறர் நொந்து சொல்லும் சொல்லுக்கு ஆளாகாமல் வாழ வேண்டும். உயிர்கள் வினை செய்தல் இயற்கை. ஓர் உயிரை ஓர் உயிர் தின்று வாழ்கிறது. மகிழ்கிறது. எந்தக் குற்றமும் செய்யாமல் வீதியில் ஓடிக் கொண்டிருக்கும் நாயை வீதி வழிச் செல்லும் ஒருவன் கல்லால் அடிக்கிருன். வலி தாங்காமல் அது கால் நொண்டிக் கத்திக் கொண்டு ஓடுகிறது. அடித்தவன் அதைப் பார்த்து மகிழ்கிருன். பயனில்லாமல் பிற உயிரைத் துன்பத்திற்காளாக்குவதும் தவறு. பயனில்லாமல் பிறர் வாழ்வில், தொழி

வில் இன்னல் செய்து மகிழ்வது குற்றம்.

இன்னல் பொறுக்காதவர்கள் துன்பம் தாங்காமல் துன்பம் செய்தார்க்குத் துன்பம் செய்யத் துணிந்துவிடுகிறார்கள். ஏன், கொலைகள் செய்து உயிரை உடலிலிருந்து பிரித்து விடுகிறார்கள். அவன் செய்த கொலை துன்ப நிழலாகத் தொடர்ந்து அவனையே கொலை செய்துவிடுகிறது. போரால் கொலை, பேராசையால் கொலை, பசியால் கொலை, உயிரை உடனே போக்கிக் கொள்ளச் செய்து கொள்ளும் தற்கொலை. இவை அத்தனையும் நம் நிழலாக நம் உயிரோடு பின் தொடர்கிறது.

நம் மகிழ்ச்சிக்காகப் பிறர் மனம் நோக வாழ்வது தவறு. ஒருவர் உழைப்பை மற்றவர் எடுத்துக் கொள்வதும் கொடுமை. ஆனால், பலர் உழைப்பால் ஒருவன் செல்வந்தனாகிறான் என்றாலும் உழைக்கும் மக்கள் அவனைத்தான் வாழ்த்துகிறார்கள், வாழ வைக்கிறார்கள். வாழவும் நினைக்கிறார்கள். இவைகளைச் சிந்தித்தால் மக்கள் மனத்தில் மனப் புரட்சி ஏற்படும்.

நம்முடைய துன்பங்கலந்த இன்பங்களும், இன்பங்கலந்த துன்பங்களும் நம்முடைய படைப்புக்களே. நம்முடைய வாழ்வின் முடிவுகளை நாமே எழுதிக் கொள்கிறோம். நாம் செய்யும் நன்மையும் தீமையும் தான் நம் நிழல்களாகத் தொடர்கின்றன.

பொருந்தா உணவை உண்டவர்கள் அதனால் விளையும் துன்பத்தை வெளியாக்க எடுக்கும் வாந்தியைப்போல, அவரவர்கள் செய்த வினைகளின் பயன்களை அவரவர்களே முயன்று அவரவர்களே அனுபவிக்க வேண்டுமென்பதே இயற்கை நியதி. அவரவர் விருப்பு வெறுப்புகளுடன் செய்யும் செயல்கள் வாழ்வில் நெஞ்சுக்கு நீதி சொல்லிக் கொண்டிருக்கத் தவறுவதில்லை.

**வே**தாரண்யம் புகையிலை வியாபாரி சுந்தரபாண்டியன் அவர்களின் செல்வன் விநாயகத்திற்கும், கோயம்புத்தூர் காண்டிராக்டர் கருணாகரன் அவர்களின் செல்வி சந்திராவிற்கும் கோவை மணமகன் இல்லத்தில் சிறப்பாகத் திருமணம் நடந்து கொண்டிருந்தது.



காட்சிப் பொருளாக அலங்கரிக்கப்பட்ட பந்தல்; வண்ண விளக்குகள் மின்னிக் கொண்டிருந்தன. வாணவேடிக்கை ஒருபுறம். வீதியெல்லாம் வாழை, தென்னை, கமுகு, தாழை, பனங்குலைகள் பந்தலிலே தொங்கிக் கொண்டிருந்தன. மாவிலையும் தோரணமும் திருமணத்திற்கு வருவோரை 'வருக! வருக!' என்று காற்றிலே ஆடி வரவேற்றுக் கொண்டிருந்தன.

வீதியின் இருமருங்கிலும் நீண்டமின் குழல் விளக்குகளைக் கட்டி இரவைப் பகலாக்கி இருந்தார்கள். மயிலாட்டம், உறுமிமேளம், சிலம்பு விளையாட்டு முன்செல்லப் பின்னால் நாதசுர இசை. தங்க ரதத்திலே பவனி வரும் பழனி முருகனைப் போல, மின் விளக்குகளால் அலங்காரம் செய்யப்பட்ட அன்ன ரதத்திலே சுந்தர பாண்டியனின் மகன் விநாயகம். அவர் பக்கத்திலே உறவினர், நண்பர்கள் புடைசூழ காண்டிராக்டர் கருணாகரன் வந்து கொண்டிருந்தார்.

அலங்கார ரதத்தின் முன்னே சென்ற நண்பர்கள் சந்தனம், தாம்பூலம் பன்னீரோடு ஊரையே திருமணத்திற்கு அழைத்தார்கள். தோரணங்களாகக் கட்டிப் பட்டாசுகளை வெடித்தனர். மத்தாப்புச் சரங்களைக் கொளுத்தினர்.

மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலம் முடிந்தது. மஞ்சள் ஆரத்தி எடுத்துத் திருஷ்டி கழித்தனர். மாப்பிள்ளை விநாயகத்தை வீட்டிற்குள் அழைத்தார்கள். விருந்து நடந்தது. மறுநாள் திருமணம் சிறப்பாக நடந்து கொண்டிருந்தது. கோவில்களிலிருந்து விபூதி பிரசாதங்கள் வந்தன. தலைவர்கள் வந்திருந்து வாழ்த்தினார்கள். வாழ்த்துக்கள் வெளிநாடுகளில் இருந்தும் வந்து குவிந்தன. அமைச்சர்கள் வந்து ஆசி கூறினார்கள். அதிகாரிகள் வந்திருந்தனர்.

திருமணம் முடிந்து வரவேற்பு விழா மாலை நடைபெற்றது. மணமகள் சந்திராவுக்கு அவள் தந்தை கருணாகரன் கொடுக்கும் சீர்வரிசைகளை அலங்காரப் பா[illegible] வைத்திருந்தார்கள். நண்பர்களும் உறவினர்களும்கொடுத்த பரிசுகளும் அங்கே வைக்கப்பட்டிருந்தன. இசைக் கலைஞர்கள் இசை முழங்க வரவேற்புரைகளும், பாராட்டு விழாவும் நடந்தது.

வரவேற்பு விழா சிறப்பாக முடிந்ததும் விருந்து நடந்தது. பரிமாறும் உணவு வகைப் பெயர்கள் ஒரு தாளில் அச்சடிக்கப்பட்டு ஒவ்வொரு இலையின் முன்னாலும் வைக்கப்பட்டிருந்தன. வியாபாரத்தில் நண்பர்களாக இருந்த கருணாகரனும், சுந்தரபாண்டியனும் சம்பந்திகளாகி விருந்துக்கு வந்திருந்தோரை உபசரித்துக் கொண்டிருந்தார்கள். விருந்துண்டு விடைபெற்றுக்கொண்டிருந்தவர்களின் கைகளில் திருமணத் தாம்பூலப் பைகள். ஏழைகளுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, கைநிறையக் காசு கொடுத்தனுப்பினார்கள். திருமணத்திற்கு வந்து திரும்பிச் செல்வோர்க்கெல்லாம் பிரயாணச் சீட்டுகள் வாங்கிக் கொடுக்க ஆட்கள் அமைத்திருந்தார்கள். விருந்தினர்கள் விடைபெற்றுக் கொண்டனர்.

மணமகனின் தந்தை சுந்தரபாண்டியன் தன் சொந்த ஊரான வேதாரண்யத்திற்கு மணமக்களை அழைத்துப் போனார். பாதுகாப்புக்காக முன்னே ஜீப்கார் ஒன்று செல்ல, அதன் பின்னால் குளிர்சாதனக் கார் ஒன்றில் மணமக்கள் சென்றார்கள். அதைத் தொடர்ந்து இருபது கார்கள் சென்றன.

சரித்திரம் காணாத திருமண வைபவத்தைப் பார்த்த மக்கள் மண்ணுலகக் குபேந்திரர்கள் என்று பேசிக்கொண்டனர். வகை வகையான உணவுப் பதார்த்தங்களைச் சாப்பிட்ட ஏழைகள் கருணாகரனையும், சுந்தர பாண்டியனையும் அன்னதாதா என்று பாராட்டினர். கையில் காசும், உடுக்க உடையும் பெற்றுக் கொண்ட மக்கள் பூலோகத்திற்கு வந்திருக்கும்





# உதகையில் கைம்பெண்களுக்குத் திருமணம்



முதல்வர் கலைஞர் அவர்களின் கைம்பெண்கள் மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் 22—9—75 அன்று உதகமண்டலம் காந்தலில் உள்ள அண்ணா திருமண மண்டபத்தில் 5 கைம்பெண்களுக்குத் திருமணம் மிகவும் சிறப்பாக நடத்தப்பெற்றது. இத்திருமண விழா மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. செல்வராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவர் மாலைகளை எடுத்துக் கொடுக்க மணமக்கள் மாலை மாற்றிக் கொண்டனர். இவ்விழாவில்,





எஸ். கலீல் — எம். பஞ்சமணி
வி. எஸ் இராசு — எம். லில்லி
எம். மைக்கேல் — ஜெய்னாபி
ஐ. முகமது யூசுப் — பத்மாவதி
ஜி. கோபால் — மேரி



ஆகியோருக்குத் திருமணம் நடத்தப்பெற்றது. இவர்கள் வேறுபட்ட மதத்தினைச் சார்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

புண்ணிய மூர்த்திகள் என்று வாழ்த்தினார்கள். மக்களின் பாராட்டையும், வாழ்த்தையும் பெற்ற கருணாகரனும், சுந்தர பாண்டியனும் வாழ்க்கையில் பெருவாழ்வு வாழ்ந்து புகழுடம்பு எய்திவிட்டதாகப் பெருமைப்பட்டனர்.

வேதாரண்யம் வியாபாரி சுந்தர பாண்டியன் வீட்டில் மணமக்களுக்கு வரவேற்பு நடந்து கொண்டிருந்தது. வரவேற்புக்கு வந்தவர்கள் வாசலிலே போட்டிருந்த அலங்காரப் பந்தலைப் பார்த்து அயர்ந்து போய் நின்றனர். தஞ்சை மாவட்டத்து வளமையும், பெருமையும் பறைசாற்றிக் கொண்டிருந்தன. அந்தப் பந்தலைப் போட்டவர்களை வந்தவர்களெல்லாம் வாழ்த்தினர். தென்னங்கீற்றினால் செய்த அந்த அரண்மனை நுழைவாயிலுக்குள் நுழைந்தவுடன் சந்தனத்தை ஏந்தியபடி ஒருவர் நின்றார். ஒருவர் பன்னீர் தெளித்துக் கொண்டிருந்தார். அவர் பக்கத்திலே நின்றவரின் கையில் மலர்க்கொத்துகள். அதைக் கையில் எடுத்துக் கொண்டதும் கற்கண்டை நீட்டினார் மற்றொருவர். அதை எடுத்து வாயில் போட்டுக்கொண்டு கையில் உள்ள மலரை முகர்வதற்குள் ஒருவர் ஜவ்வாதுப் பொட்டுக்களை நெற்றியிலே முத்திரையிட்டுக் கொண்டிருந்தார்.

ஜவ்வாது மணத்தோடு உள்ளே நுழைந்ததும் ஆடல் ஒரு பக்கம். மற்றொரு பக்கம் பாடல். இவைகளில் எதை ரசிப்பது என்று முடிவு செய்வதற்குள் ஒருவர் சிற்றுண்டிக்கு அழைத்துக் கொண்டிருந்தார்.

இத்தனை ஏற்பாடுகளையும் சிறப்பாகச் செய்திருந்த சுந்தர பாண்டியனை அவர் சம்பந்தி கருணாகரன் பாராட்டி மகிழ்ந்தார். ஆனால் சுந்தரபாண்டியன் மகிழவில்லை. அவர் முகம் ஏனோ திடீரென்று பேயறைந்ததுபோல பீதியினால் மாறியிருந்தது. வரவேற்பு விழாவிற்கு வந்திருக்கும் கூட்டத்தில் யாரையோ ஒருவரை அவர் கண்கள் பார்த்து விட்டதால் நினைவிழந்து நிம்மதியற்று நின்றுகொண்டிருந்தார். சம்பந்தி கருணாகரன் அதன் பிறகு பேசிய பேச்சுக்கள் அவர் காதில் விழவே இல்லை. அவர் கண்கள் அந்தக் கூட்டத்தில் நிழலாகக் கலந்து விட்ட உருவத்தையே தேடிக் கொண்டிருந்தன. தன்னோடு பேசிக் கொண்டிருந்த கருணாகரனையும் மறந்து, கூட்டத்திற்குள் நுழைந்து தேடினார். சம்பந்தியின் நிலை கண்ட கருணாகரன் அவர் மனநிலையைப் புரிந்து கொள்ள அவர் பின்னால் ஓடினார். ஆனால் அவரைப் பின் தொடர முடியவில்லை.

மணமக்கள் ஊர்வலத்திற்காக அலங்காரம் செய்யப்பட்ட காரை கருணாகரன் முன் கொண்டுவந்து நிறுத்தினார்கள். தெய்வ ரதமெனச் சிங்காரிக்கப்பட்டிருந்த காரில் தன் மகளும் சுந்தர பாண்டியன் மகன் விநாயகமும் உட்கார்ந்து ஊர்வலமாகச்செல்வதுபோலக் கற்பனை செய்து பார்த்து மகிழ்ந்தார். மணமக்களைச் சிங்காரித்து ஊர்வலத்திற்காக அழைத்து வர ஆட்களை அனுப்பிவிட்டுச் சம்பந்தி சுந்தர பாண்டியனைப் பார்க்கத் திரும்பினார்.

திடீரென்று இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்த மின் விளக்குகள் அணைந்துவிட்டன. எங்கும் இருள். மக்களின் கூச்சல். குழப்பம். குழந்தைகளின் அலறல். பெண்களின் கூக்குரல்! எதிர்பாராத நிகழ்ச்சியென நினைப்பதற்குள் மீண்டும் மின்சாரம் வந்துவிட்

# புதுவாழ்வு

— அம்புஜம் —



சோழவந்தானிலிருந்து, திருமங்கலம் செல்லும் சாலையில், வைகையாற்றின் தென் கரையில், நாகமலைத் தொடரின் மடியில் ''தாராப்பட்டி'' என்னும் சின்னஞ்சிறு கிராமத்தை அனைவரும் காணலாம்.

ஆற்றுப்படுகையில் உயர்ந்து வளர்ந்துள்ள தென்னை மரங்கள் நெல், கரும்பு, வாழை, வெற்றிலைக் கொடிக்கால் ஆகிய வற்றைத் தாங்கி நிற்கும் அழகிய வயல் வெளிகள்!

உதயசூரியன் உலகுக்கெல் லாம் ஒளி கொடுத்து, உயிர் பெறச் செய்தாலும், தென்னை ஓலை வேய்ந்த குடிசையில், தனிழந்த கூடாய், முடங்கிப் படுத்திருக்கும் தேனம்மாளின் இதய இருளை அகற்ற இயலா மல் தவித்தது.......

''ஏளா மூதேவி...கழுதை.. ஞ்சிப் பொழுது வந்திருச்சு... னியனே...எழுந்திரு....சாணி ள்ளலே..வாசத் தெளிக்கலே ..மாட்டுத் தொழுவம்... ட்டலே........அதில்லாமலா இருவது வயசிலேயே தாலி றுத்திட்டுத் தாங்குறே...... மூதேவி......''

—பேச்சியம்மாள் கிழவி மாமியார்'' பதவியில் அமர்ந்து கொண்டு, மருமகள் தேனம்மாளைத் துயில் எழச் செய்யப் பள்ளியெழுச்சிபாடிக் கொண்டிருக்கிறாள்....

டொக்.. டொக்..டொக்.... பேச்சியம்மாளின் பொக்கை வாயில் அசைபோட ''வெற்றிலை'' தயாராகிக் கொண்டிருக்கிறது...அரச சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் நினைவுகளோடு, கால்களை நீட்டி, ஒன்றன்மேல் ஒன்றிட்டு, ஒருவிதத் தாள லயத்தோடு, மருந்து தயாரிக்கும் மருத்துவன்போல், உலக்கையில் வெற்றிலை இடித்துக் கொண்டிருந்தாள் பேச்சியம்மாள் கிழவி!

தேனம்மாள் விழித்துக் கொண்டாள்..கிழவியின் வசவுகளைக் கேட்டுப் பழகிவிட்ட காரணத்தால், எங்கோ கரையும் காக்கைகளின் குரலொலியில் கவனம் செலுத்தியவாறு சோம்பல் முறித்து, மல்லாந்து படுத்துக் கொண்டாள்.

எழுந்திருக்க மனம் இல்லை. அவள் நினைவுகள் மடல் விரித்தன...

தாராப்பட்டியை மதுரை செல்லும் சாலையில் இணைக்கும் மாட்டு வண்டிப் பாதையில், ஊரின் தென் கிழக்கேயுள்ள மாரியம்மன் கோவில் திருவிழாக் காட்சி அவள் நெஞ்சத் திரையில் நிழலுருப்பெறுகிறது

சென்ற வருடம் ''ஜல்லிக் கட்டு'' நடந்த நாளில், 'மனோகரன்'—மனோரஞ்சிதமாய் மலர்ந்து, தேனம்மாளின் இதய மஞ்சத்தில் மணம் பரப்பிய அந்த நிகச்சி! இன்னும் அதை அவள் மறக்கவில்லை....

சிறிய கிராமத்திலிருந்து, மதுரை மாநகரம் சென்று, அந்த ஊருக்கே முதல் மாணவனாகக் கல்லூரியில் ''பி.ஏ.,''-படித்து வருபவன்தான் மனோகரன்! அந்த மனோகரனும், அவளும்.......

தேனம்மாளின் கனவு கல்யாணத்தில் முடிந்தாலும், நினைவுகள் நிகழ்ச்சிகளாகுமுன் மனோகரன் தேனம்மாளைத் தேனெடுத்த கூடாக விட்டு விட்டுச் சென்றான்....

தேனம்மாளின், தேன்கூட்டில், குடித்தது போதுமென்றோ என்னவோ திடீரென மனோகரன் மாண்டு போனான்...ஒரு நாள் இரவு மதுரையிலிருந்து ஊர்வரும் வழியில் நாகம் தீண்டி மடிந்து போனான்.......



பேச்சியம்மாள் கிழவியும் 'தாலி'' அறுந்தவள் தான்'' என்றாலும் கணவன் கருப்பத் தேவரோடு, கரும்பான வாழ்வை ஐம்பது ஆண்டுகள் ருசித்து முடித்த பெருமை பெற்றவள் கிழவி!

தேனம்மாளின் துன்பங்களை பேச்சியம்மாள் கிழவி உணரா மலில்லை......

அவளை வாழ வைக்கத்தான், அவள் மீது கொண்டுள்ள அளவு கடந்த அன்பின் காரணமாகத்தான் தேனம்மாளின் மீது பாசம் கலந்து வசவுகளைத் தினமும் பூச்சொரிவு செய்து கொண்டிருக்கிறாள்.....

வாழ்வே முடிந்து விட்ட தென்ற மனக்கலக்கத்தில், பித்துப் பிடித்தவள் போல் தேனம்மாள் வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.....

தேனம்மாளிடம் தேன் குடிக்க, தமது தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளப் பலபேர் தவம் கிடந்தார்கள்.. ஆனால் எவரும் அவளுக்கு மறு வாழ்வு தர முன் வரவில்லை...

ஒரு வேனிற்காலத்தின் வைகறைப் பொழுது........!

தேனம்மாளின் தாய்மாமன் ஒரு தினசரிப் பத்திரிகையோடு வீடு வந்து சேர்ந்தான். டேராடூனில், நாடு காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள வேலப்பன், விடுமுறையில் நல்ல செய்தியோடு வந்து சேர்ந்தான்.

மாண்புமிகு தமிழக முதல்வர்-டாக்டர் கலைஞர் அவர்கள் விதவைகளை மறுமணம் புரிவோருக்கு ரூபாய் பத்தாயிரம் பரிசளிக்கப்படும் என்ற திட்டத்தினை அறிவிக்கும் செய்தியினை ஊரில் உள்ளவர்களுக்குப் பிள்ளையார் கோவிலில் உட்கார்ந்து உரக்கப் படித்துக் காட்டிக் கொண்டிருந்தான் வேலப்பன்.

''தாராப்பட்டி''-கிராமத்தின் ''காரியஸ்தன்'' கந்தசாமியின் கண்களுக்குப் பத்தாயிரம் ரூபாய்கள், பத்தாயிரம் பவுன்களாக மினிர்ந்தன! அரசாங்க அலுவல் ஒன்றில் நல்ல விதமாய்ப் பணியாற்றி வரும் தன் மகன் சுகுமாரனுக்குத் தேனம்மாளை மணம் முடிக்கத் திட்டமிட்டார் கந்தசாமி!

தேனம்மாளை ஒரு காலத்தில் காதலித்துத் தோல்வி கண்ட சுகுமாரன் தேன் குடிக்கக் கூலி கேட்கவில்லை........

''தேனம்மாள்-சுகுமாரன்'' திருமணம் ஊர்ப்பெரியவர்கள் முன்னிலையில் இனிது நிறைவேறியது.

• • •

''தனது பிறந்த நாள் பரிசுகளாக எவரும் எண்ணிப் பார்த்திடாத திட்டங்களை, சமுதாயத்தின் அடித்தளத்தில்,....சாக்கடைப் புழுக்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் எண்ணிறந்த விழியிழந்த மாந்தருக்கு ஒளி தந்த கலைஞர், ஊனமுற்றவர்களுக்கு ஊன்று கோல் தந்த முதல்வர், தொழுநோய் இரவலர்க்கு இல்லம் கண்ட... கலைஞர்-மனிதனை, மனிதன் இழுத்து வாழும் கொடுமை நீங்கிட இலவச சைக்கிள் ரிக்ஷா வழங்கிய வள்ளல்...சமூக நலத் திட்டம் தந்திட்ட சரித்திர நாயகன்!

வாழ்விழந்த விதவைகள் புது வாழ்வு பெற்றிட இலவச தையல் இயந்திரங்கள் தந்தார். ஏழைகள் ஏற்றம் பெற எண்ணற்ற திட்டங்களை நாளும் தந்திடும் முதல்வர், அரசு ஊழியர் பணியாற்றும் காலத்தில் இறந்து விட்டால் ரூபாய் பத்தாயிரம் தந்தது போல் விதவைகளுக்குப் புது வாழ்வு தரவும் ரூபாய் பத்தாயிரம் தந்தார்! தேனம்மாள் புது வாழ்வு பெற்றாள்.

தேனம்மாள்-சுகுமாரன் எல்லா நலமும் பெற்று வாழ வாழ்த்துகிறேன்.''

திருமண விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கிய நாட்டாண்மைக்காரர் தனது உரையை முடித்தார்...!

நான் புதுவாழ்வு பெற்ற தேனம்மாளை மட்டுமல்ல அவளுக்குப் புதுவாழ்வு தந்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையும், அவரது அரசையும் வாழ்த்திக்கொண்டு வந்து சேர்ந்தேன்.

இதுவரை தமிழகத்தில் விதவை மறுவாழ்வுத் திட்டத்தால் புது வாழ்வு பெற்றவர்கள் [illegible] போல் என்று நினைக்கும் பொழுது, அவர்கள் வாழ்வு மலர உதவிய முதல்வர் கலைஞரை வாழ்த்திக் கொண்டே விழி மூடி உறங்கிட முயன்றேன்.



# அண்ணாசாலையில் 'கருணாநிதி பில்டிங்'

"நுடிப்பாற்றல் மிக்க தொலைநோக்கோடு எனது பெருமதிப்பிற்குரிய நண்பர் தமிழக முதல்வர் கருணாநிதி அவர்கள் பல்வேறு சமூக நலப் பணிகளைச் செய்து வருகிறார்.

"அவர் திட்டங்கள் தீட்டிச் செயல்பட்டு வரும் பணிகளுள், குறைந்த வருமானமுள்ளோருக்கும் பொருளாதாரத்தில் நலிந்து போயிருப்போருக்கும் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகளைக் கட்டித் தரும் பணி மகத்தானதாகும்:

"இப்படிப்பட்ட அரிய செயல்களைச் செய்து வரும் முதல்வருடைய பெயரை இக் கட்டடத்திற்குச் சூட்டியிருப்பது சாலப் பொருத்தமானது ஆகும்."

—என்று அண்ணாசாலையில் வானளாவ எழுந்திருக்கும் 'கருணாநிதி பில்டிங்' கட்டடத்தைத் திறந்து வைத்து மேதகு தமிழக ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் பெருமிதத்தோடு குறிப்பிட்டார்கள்.

'கருணாநிதி பில்டிங்'

கட்டடக் கலைக்கு ஓர் எடுத்துக்காட்டாய்த் திகழ்கிறது.

பதினொரு அடுக்கில் பாங்காய்க் காட்சி அளிக்கும் இக் கவின்மிகு கட்டடம், ரூ. 66 இலட்சம் செலவில் கட்டப்பட்டதாகும்.

மனைவளம் ஓங்கிட மகத்தான பணிகளை ஆற்றிவரும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், வணிக நோக்குடன் கட்டியுள்ள மிகப் பெரிய முதல் கட்டடம் இதுவே என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.



பகலிலும்....

இக்கட்டடத்தின் உயரம் 140 அடி. கான்கிரீட்டாலான இது 181 அடி நீளமும், 12 அடி ஆழ வலிமையான அடித்தளமும் கொண்டது. 1,34,000 சதுர அடி பரப்பளவு கொண்ட ஆர்.சி. வடிவமைப்புள்ள இந்தக் கட்டடம், சென்னை மாநகரிலுள்ள உயரமான கட்டடங்களைவிடப் பெருமளவு அலுவலக வசதிகள் நிறைந்ததாக அமைந்துள்ளது.

"கருணாநிதி பில்டிங்" கட்டத் தொடங்கியபோது, கட்டடம் கட்டுகிற குழுவுக்கு இது ஒரு மிகப் பெரிய சவாலாகவே இருந்தது. ஏனென்றால், அடித்தளம் தோண்டும்போது மண் வெகு லேசாக இருந்ததால், பாரம் நிறைந்த அடித்தளத்தைத் தாங்குமா என்பது பிரச்சினையாகவே இருந்தது. அடித்தளம் அமைப்பதற்காக நிலத்தை ஆழ்ந்த போது நிலத்தின் மேல் மட்டத்திற்குக் கீழ் 94 அடி ஆழத்துக்குக் கீழேதான் பாறையைக் காண முடிந்தது. வழக்கமாக இவ்வளவு ஆழம் தான் அடித்தளம் (பைல் அடித்தளம்) அமைத்திடல் வேண்டும் என்ற முறையை அடியோடு மாற்றத் துணிவான முடிவினை மேற்கொண்டு, சென்னை நகரிலுள்ள மற்ற எல்லா உயரமான கட்டடங்களையும்விட இக் கட்டடத்திற்குச் சிக்கனமான செலவில் அடித்தளம் அமைக்கப்பட்டது" என்கிறார் தலைமைப் பொறியாளர் திரு. பி. ஏ. ஜெயபாலன்.

செப்டம்பர் திங்கள் 24ஆம் நாள் நடந்த "கருணாநிதி பில்டிங்' திறப்பு விழாவிற்குத் தொழிலாளர் நல அமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள் தலைமை வகித்தார்கள். அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:

"1971-ஆம் ஆண்டு ஆண்டொன்றுக்கு ஐந்தரைக்கோடி ரூபாய் மட்டுமே செலவழிக்கும் நிலையிலிருந்த வீட்டு வசதி வாரியம், இப்போது ரூபாய் 14 கோடி செலவழிக்கும் அளவுக்கு வளர்ந்துள்ளது.

"1971-ஆம் ஆண்டு வீட்டு வசதியை ஏற்படுத்தித் தருவதில் 7-வது இடத்திலிருந்த தமிழகம், இப்போது இந்தியாவிலேயே முதலிடத்தை வகித்து வருகிறது. பிற மாநிலத்து அமைச்சர்களெல்லாம் நமது வீட்டு வசதி வாரியத் திட்டங்களை வாங்கிக்கொண்டுபோய்த் தங்கள் தங்கள் மாநிலங்களில் [illegible]

## அட்டை சொல்லும் கட்டுரை

"சென்னை நகரில் பல்வேறு இடங்களில் 10 மாடிக் கட்டடங்களைக் கட்ட வீட்டு வசதி வாரியம் திட்டமிட்டுள்ளது. சென்னையையே ஒரு குட்டி நியூயார்க் நகரமாக மாற்றவும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் திட்டம் தீட்டிவருகிறது.

"கலைஞர் அவர்களின் சாதனை எல்லாத் துறைகளிலும் மிளிர்ந்து கொண்டிருப்பதைப் போலவே, வீட்டு வசதி வாரியத்திலும் மிளிர்ந்து கொண்டு இருக்கிறது. எனவே, இப்படிப் பட்ட சாதனைகளை அடுக்கு அடுக்காகச் செய்து வரும் கலைஞர் அவர்களின் பெயரை இக்கட்டடத்திற்குச் சூட்டுவது மிக மிகப் பொருத்தமாகும்."

பொதுப்பணித் துறை அமைச்சர் திரு ப. உ. சண்முகம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:—

"இதுபோன்ற கட்டடங்கள் பெருமளவில் கட்டப்பட்டால் அரசு அலுவலகக் கட்டடங்கள் வாடகைக் கட்டடங்களில் இருக்கும் நிலை தவிர்க்கப்பட்டு வாடகையினால் அரசுக்கு ஏற்படும் இழப்பும் தவிர்க்கப்படும். வானளாவிய இக்கட்டடத்திற்கு ஏழை எளியோருக்கு வீடுகளை அடுக்கடுக்காகக் கட்டித் தரும் முதல்வர் கலைஞர் அவர்களின் பெயரை வைப்பது மிக மிகப் பொருத்தமானதாகும்."

துவக்கத்தில் அனைவரையும் வரவேற்றுப் பேசிய வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு க. வே. இராமநாதன் அவர்கள், "சென்னை நகரில் அலுவலகக் கட்டட வசதி நெருக்கடியைத் தீர்த்து வைக்கிற வகையில் இந்த 11 அடுக்குக் கட்டடம் அமைந்திருக்கிறது. இது பல மாடிக் கட்டடங்களுக்கெல்லாம் முன்னோடி. வாரியம் 100க்கு 85 சதவீதம் ஏழை எளியவர்களுக்காக வீடுகள் கட்டச் செலவிடுகிறது என்பதைப் பெருமிதத்தோடு குறிப்பிட வேண்டும்" என்றார்.



இரவிலும்....

டது. நடந்த கூச்சலும் குழப்பமும் பீதியால் ஏற்பட்டதே தவிர அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்பட்டுவிடவில்லை. கருணாகரன் மனம் நிம்மதியடைந்தது. ஆனால் அவர் மனத்தில் ஏனோ இருள் சூழ்ந்து கொண்டது. புயலுக்கு முன் மாறிவிடும் வானம் போல அவர் மனம் இருண்டு விட்டது.

இனம்புரியாத பயம் அவரை ஆட்கொண்டுவிட்டதால் மணமகளான தன் செல்ல மகள் சந்திராவைப் பார்க்க வேகமாக நடந்தார். மணமக்கள் ஊர்வலத்திற்குப் புறப்படக் குறிப்பிட்ட நேரம் வந்து விட்டது. தன்னைக் காப்பாற்றிக் கொள்ளக் கள்ளக்கடத்தல் சரக்கைக் கடலில் தூக்கி எறிந்துவிடத் தீர்மானிப்பது போல, தன் மகளைக் காப்பாற்ற ஊர்வலத்தையே நிறுத்த முடிவு செய்தார். தன் முடிவைச் சம்பந்தி சுந்தரபாண்டியனிடம் சொல்ல விரைந்தார்.

கருணாகரனும் சுந்தர பாண்டியனும் சந்திப்பதற்குள் இடி முழக்கம் போன்றதொரு சப்தம்.......ஊர்வலத்திற்காக அலங்காரம் செய்யப்பட்டிருந்த கார் சுக்கு நூறாக உடைந்து சிதறி விழுந்தது. காரைச் சுற்றி நின்ற குழந்தைகள் சிலர் இறந்தனர். பலருக்குப் பயங்கரமான காயங்கள். ஊர்வலம் செல்ல வேண்டிய காரில் யாரோ வெடிகுண்டு வைத்து மணமக்களைக் கொல்லச் சதி செய்திருக்கிறார்கள் என்று தெரிந்ததும் சுந்தரபாண்டியன் நினைவிழந்து விட்டார்.

ஒரே கூச்சல். குழப்பம். எதிர்பாராத விபத்துக்கள் ஏற்படும் என்று நினைத்து வரவழைத்திருந்த தீயணைக்கும் படையினர், காயமுற்றவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர்.

பெற்றோர்கள் செய்த புண்ணியம்தான் மணமக்கள் உயிர் தப்பினார்கள் என்று மக்கள் பேசிக் கொண்டனர். ஊர்வலத்தை நிறுத்திவிட்டு மணமக்களைக் கருணாகரன் கோவைக்கு அழைத்துச் செல்ல முடிவு செய்துவிட்டார். இத்தனை ஆண்டுகள் வேதாரண்யத்தில் ஏகச் சக்கரவர்த்தியாக இருந்து வந்தவர் சுந்தரபாண்டியன். அவர் நெஞ்சையே உலுக்கிவிட்ட சம்பவம் அவரைப் படுக்கையில் நோயாளியாகப் படுக்க வைத்து விட்டது.

ஊர்வலத்திற்காக அலங்கரிக்கப்பட்ட காரை, அத்தனை பேர் கூடி நின்று அலங்கரித்துக் கொண்டிருக்கும்போது, யார் அந்த காருக்குள் வெடிகுண்டை வைத்திருக்கமுடியும்? காருக்குள் குண்டை வைக்கத்தான் மின் 'விளக்கை அணைத்து யாரோ சதி செய்திருக்க வேண்டும். மணமக்களின் உயிரைக் குடிக்க எந்தப் பாதகன் குண்டு வைத்தானோ!

சுந்தரப்பாண்டியன் மகளின் திருமண வரவேற்பில் குண்டு வீச்சு என்று பத்திரிகைச் செய்தி வரவில்லை. காரின் டயர் வெடித்து ஆட்கள் காயமடைந்தார்கள் என்று வாக்குமூலம் கொடுக்கச் சொல்லி விட்டார் சுந்தரபாண்டியன். என் மகன் இறந்துவிட்டான்,

எங்கள் குழந்தை இறந்து விட்டது. என் கணவனைப் பலி வாங்கி விட்டது என்று போலீசாரிடம் புகார் சொல்லிக் கொள்ள யாரும் முன் வரவில்லை. அன்று பலி வாங்கப்பட்ட அத்தனை உயிருக்கும் வக்காலத்து வாங்கிக் கொண்டார் சுந்தரபாண்டியன். அவர் வாழ்நாளில் எத்தனையோ உயிர்களுக்கு எமனாகவும், எத்தனையோ உயிர்களைக் காக்கும் கடவுளாகவும் வாழ்ந்து வந்த மாமனிதர் அவர். குடித்த உயிர்களும் அதற்காக அவர் கொடுத்த உயிர்களும் ஏராளம். இரண்டையும் ஒரு தராசில் போட்டு எடை பார்க்க முடியுமா? உலகில் குற்றங்களைச் செய்து விட்டுக் கடவுளுக்குப் பக்தர்களாகி விட்டால் அவர்கள் செய்த குற்றங்கள் போய்விடுமா? விஷஊசிபோட்டுக் கொலை செய்து, வேண்டிய பணத்தைக் கொள்ளையடித்து, ஏழுமலையானுக்குத் திருமணம் செய்து விட்டால் செய்த பாவம் மறைந்து விடுமா? அது நிழல் போலத் தொடர்ந்து என்றைக்காவது ஒருநாள் அவனைக் காட்டிக் கொடுத்துவிடும். இன்றைய வாழ்வில் அந்த உண்மையைப் பார்க்கிறோம்.

இப்படித்தான் வாழ வேண்டுமென்று பெரியோர் நமக்கு வழி வகுத்தார்கள். அதை அழித்து எப்படியும் வாழலாம் என்று பலர் தனி வழி வகுத்துக் கொள்கிறார்கள். இப்படி வாழ்ந்தவர்களின் முடிவு வரும் போது அவர்கள் செய்த பாவங்களைச் சொல்லிக் கடவுளிடம் மன்னிப்புக் கேட்காமலிருப்பதில்லை. நீ குற்றவாளி; அதனால் உனக்கு நான் இந்தத் தண்டனையைக் கொடுக்கிறேன் என்று இயற்கையும் சொல்லாமலிருப்பதில்லை.

அவர்கள் செய்த குற்றங்கள் அவர்களின் நிழலாகவே தொடர்ந்து அவர்கள் கண் முன்னேயே தண்டனையைக் கொடுத்து விடுகிறது.

ஒருவன் உரிமையைப் பறித்து மகிழும் மற்றவன் தன் உரிமைக்காக அடுத்தவனைக் கையேந்தும் நிலையைப் பார்க்கிறோம். நாம் எதைச் செய்கிறோமோ அதை மற்றவர்கள் செய்ய நாம் அனுபவிக்கிறோம். நாம் ஒருவருக்கு நல்லது செய்தால், நம்மால் பயன் அடைந்தவர் நமக்கு நல்லதைச் செய்வார் என்று எதிர்பார்க்க வேண்டியதில்லை. நாம் செய்த நல்ல செயல் நாம் எதிர்பார்க்காத வேறொருவரால் நன்மை உண்டாக்கச் செய்து விடும். இதைப்போலத்தான் நாம் செய்யும் பாவமும், தீமையும் நம்மால் தீமை அடைந்தவர்களால் நமக்குத் தீங்கு ஏற்படுவதில்லை. வேறு யாராவது ஒருவரால் ஏமாற்றப்படுவோம். யாராவது ஒருவரால் கொடுமைப்படுத்தப்படுவோம் என்று நம் நினைவுக்கு வருவதில்லை. கீழே கிடந்தெடுக்கும் பொருள் பிறருடையது என்று நமக்குத் தெரியும். அது யாருடையது என்று தேடி அலைந்து நாம் கொடுப்பதில்லை. அதிர்ஷ்டவசத்தால் புதையல் கிடைத்து விட்டதாக நாமே எடுத்துக் கொள்கிறோம். ஆனால் நாம் நம் பொருளை இழக்கும் போது வேதனைப்படுகிறோம்.

சுந்தரபாண்டியன் மனநோயால் படுத்த படுக்கையாகி விட்டார். நிலவை மேகங்கள் மறைத்துச் செல்வது போல, அவர் நினைவுகள் அவர் கண்ணெதிரே நிழலாக வந்து மறைந்தன. தான் செய்த நல்லவைகளும் தீயவைகளும் அவர் மனத் தராசில் உயர்ந்து தாழ்ந்து கொண்டிருந்தன. அவர் செய்த தீமைக... இருந்த தட்டுத் தாழ்ந்து இரு... தது. அவர் செய்த நன்மைக... இருந்த தட்டு உயர்ந்து நின்... றது.

படுக்கையில் படுத்திருந்த சுந்தரபாண்டியனுடைய உட... நிலையைக் குணப்படுத்... உயர்ந்த டாக்டர்களை... கொண்டு வந்து பார்த்தார் அவர் மகன் விநாயகம். அ... ருக்கு உற்ற நண்பரா... கருணாகரன், சென்னை... யிலிருந்து ஒரு நடமாடும் மருத்துவமனையையே சுந்தரபாண்டி... யன் வீட்டில் கொண்டு வந்து நிறுத்தினார். சுந்தரபாண்டி... யன் உடலை அங்கம் அங்கமாக பரிசோதனை செய்தனர் டாக்... டர்கள்.

"உங்களுக்கு உடம்பு... கென்ன?" என்று மகன் விநா... கம் தந்தையைக் கேட்டா... சுந்தரபாண்டியன் கண்... கலங்கின.

"சொல்லுங்கள், வக்கீ... லும் மருத்துவரிடமும் உ... மையைச் சொல்ல வேண்... என்று நீங்கள்தானே சொ... வீர்கள்?" மகன் விநாய... கேட்ட கேள்விக்குத் தந்... யால் பதில் சொல்ல மு... வில்லை.

பரிசோதனை செய்த டா... டர்களால் அவர் உட... வியாதியைக் கண்டுபிடி... முடியவில்லை. "என்ன வை... யம்? என்ன டாக்டர்க... என்று அலுத்துக் கொண்... சம்பந்தி கருணாகரன்.

திருமணம் முடிந்ததும் ம... மக்கள் திட்டப்படிக் கோ... செல்லாமல் வேதாரண்... தில் தங்கிச் சுந்தரபாண்டி... னின் உடல்நிலையைப் பா... துக் கொண்டிருந்தார்... சுந்தரபாண்டியனின் வியா... நண்பரும் சம்பந்தியாகி... வருமான கோவைக் கரு... ணால் சுந்தர பாண்டியனை... நிலையில் விட்டுப் போக... வில்லை. ஒன்றுபட்டு வா... ஒருயிராய்ப் பழகவும் ... காரணமாக இருந்த சு... பாண்டியனை, கருணாகர... எப்படிப் பிரிந்து வாழமுடி...

## செங்கற்பட்டு மாவட்டத்தில்

செங்கற்பட்டு மாவட்டத்தில் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளும் இதர வங்கிகளும் மொத்தம் 134 உள்ளன. கிராமப் புறங்களிலும் உழவர்கள் தற்போது வரும் சம்பாப் பருவத்தில் நல்ல அறுவடை காணும் பொருட்டு அவர்களுக்குக் குறைந்த காலக் கடன் கொடுத்துதவ, இந்த வங்கிகள் சிற்றூர்களைத் தத்தெடுக்கும் திட்டத்தை மேற்கொண்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் கிராமியக் கூட்டுறவுச் சங்கங்கள் சரியாகப் பணிபுரியாத சிற்றூர்களைத் தெரிந்தெடுக்கும் பொருட்டு காஞ்சிபுரம் கூட்டுறவு மத்திய வங்கியும், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளும் ஒருங்கிணைந்து செயற்படும். காஞ்சிபுரம், வாலாசாபாத், பூவிருந்தவல்லி, குன்றத்தூர், திருவள்ளூர் மற்றும் கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள சிறு உழவர்கள் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து குறைந்த காலக் கடன் பெறும் பொருட்டுச் சிறு உழவர்களின் சார்பில் உறுதி கூறச் 'சிறு உழவர்கள் மேம்பாட்டுக் கழகம்' முன் வந்துள்ளது.

இந்த ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள சிறு உழவர் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து அடையாளக் கார்டுகளைக் காட்டிக் குறைந்த காலக் கடன்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அனைத்துலக மேம்பாட்டுக் கழக உதவியுடன், தமிழ்நாடு வேளாண்மைக் கடன் திட்டத்தின்கீழ் இயந்திரக் கலப்பை (டிராக்டர்) வாங்க ரூ. 55,000 முதல் ரூ. 70,000 வரையில் வேளாண் பெருமக்களுக்குக் கடன் வழங்கப்பட உள்ளது. 464 கடன் மனுக்கள் இது வரையில் பெறப்பட்டுள்ளன.

காஞ்சிபுரத்தில் செயல்பட்டு வரும் 'சேவை இல்லம்' (கில்ட் ஆஃப் சர்விஸ்) மூலம் ரூ. 3,000-க்கு ஒரு அறக்கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது. பள்ளி இறுதித்தேர்வில் செங்கற்பட்டு மாவட்டத்தில் முதன்மையாகத்தேர்ச்சி பெறும் மாணவரின் மேற்படிப்பிற்கு உதவித் தொகை வழங்கப்படும். ஒரு பதக்கமும் பரிசாக வழங்கப்படும்.

1974—75-ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் செய்யப்பட்ட அறுவைச் சிகிச்சையின் எண்ணிக்கை 25,119 ஆகும். இவ்வாண்டும் இதைவிட அதிகமான அளவிற்கு அறுவைச் சிகிச்சைகள் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

மதுராந்தகம் ஏரியில் வலது புறத்திலுள்ள, வலதுபுறமாகச் செல்லும் கால்வாயைத் தூர் வாரி மேம்படுத்துவதற்கென ரூ. 80 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசின் கருத்திற்கு அனுப்பப் பெற்று உள்ளது. ஏரியின் வலது புறக் கரையிலிருந்து செல்லும் கால்வாயை 25 கிலோ மீட்டர் தொலைவிற்குத் தூர் எடுத்தல் மற்றும் இந்த ஏரியிலிருந்து 41 ஏரிகளுக்குத் தண்ணீர் செல்லும் பொருட்டு 16 கிலோ மீட்டர் தொலைவிற்குக் கிளைக் கால்வாய்களையும் தூர் எடுத்தல் போன்ற பணிகளும் இதில் அடங்கும்.

இதனால் இந்த ஏரியின் ஆயக்கட்டிலுள்ள 5,790 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுவது உறுதிப்படுத்தப்படுவதுடன், இந்த ஆயக்கட்டில் இதுவரை பலனடையாத 435 ஏக்கர் நிலங்களும், இதனால் பாசன வசதி பெறும்.

இந்தத் திட்டத்தினால் 3,103 டன் உணவு உற்பத்திப் பெருகுவதற்கான வாய்ப்பு ஏற்படும்.

## முட்டையில் இரும்பு!

முட்டைகளில் இரும்புச் சத்து உள்ளன; அதனை உடல் எப்படி ஏற்றுக் கொள்கிறது என்பது குறித்து இப்பொழுது புதிய தகவல் கிட்டியுள்ளது.

முட்டையின் மஞ்சள் கருவில் நிறைய இரும்புச் சத்துள்ளது நெடுங்காலமாகத் தெரிந்திருக்கும் உண்மை. ஆனால் பிற இரசாயனப் பொருள்களின் உதவியின்றி, உடல் பயன்படுத்திக் கொள்ள முடியாத உருவில் இரும்புச் சத்து முட்டைக் கருக்குள் புதைந்துள்ளது.

எலிகளை வைத்துச் சோதனை செய்ததில் வைட்டமின் 'சி' முட்டை மஞ்சள் கருவிலிருந்து இரும்புச் சத்தினை விடுவித்து உடலுக்குக் கிடைக்கச் செய்கிறது. எனவே, மேலை நாட்டினரின் வழக்கமான காலை உணவு இதுவரை கருதி வந்ததைவிட ஊட்டம் மிகுந்தது எனத் தெரிகிறது. ஆரஞ்சு ரசமும், அதனை அடுத்து முட்டையும் காலை உணவில் அருந்துவதே மேலை நாட்டு வழக்கம். ஆரஞ்சு ரசத்தில் வைட்டமின் 'சி' நிறைய இருக்கிறது. முட்டையில் இரும்புச் சத்துள்ளது.

கட்டடத்தின் பதினொன்றாவது அடுக்கில் நின்று கொண்டு நம் கண்களைச் சுழலவிடுகிறோம். நாம் காண்பது என்ன சென்னை நகரமா?

சிங்காரச் சென்னையின் சீர்மிகு காட்சி நம் சிந்தையை மகிழ்விக்கிறது. அலைகடல், துறைமுகம், அழகிய கட்டடங்கள், பச்சைப் பசேலென மரங்கள்—சென்னை மாநகரமே புதுப் பொலிவுடன் காட்சி அளிக்கின்றதே!

'கருணாநிதி பில்டிங்' இடவசதியை நோக்கும்போது எல்.ஐ.சி. கட்டடத்தையும் மிஞ்சும் வகையில் உள்ளது. 2,300 டன் சிமெண்டும், 465 டன் எடையுள்ள எச்.எஸ்.டி. தூண்களும் இதனைக் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டிருப்பதால், இது காலமெல்லாம் மிக்க உறுதியோடு நிலைத்து நிற்கும்.

அழகிய வடிவமைப்புடன் கட்டப்பட்டுள்ள இக்கட்டடத்தில் 16,000 சதுர அடிக்குமேல் அலுமினியத்தால் பாதுகாக்கப்பட்ட கண்ணாடிக் கதவுகள் பொருத்தப்பட்டுள்ளன. பளபளப்பான தரை அமைப்பு கட்டடத்திற்கு மேலும் எழில் சேர்க்கின்றது.

விண்ணுயர நிமிர்ந்து நிற்கும் இக்கட்டடத்தின் சுற்றுச் சுவர்கள், தடுப்பு இடைச்சுவர்கள் ஆகியவை செங்கற்களுக்குப் பதிலாகத் தக்கைக் கற்களால் கட்டப்பட்டதாகும். இந்தக் கற்கள், வீட்டு வசதி வாரியத்தின் ஓர் அங்கமாய் இயங்கும் ...ண்ணூர் தக்கைக் கல் தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகின்றது.

கட்டுமானத்தில் தக்கைக் கற்களைப் பயன்படுத்துவதால் என்ன நன்மை?

அடித்தளச் சிக்கனம்.

வெப்பத் தாக்குதலிலிருந்து ...படுதல்.

... பரவாமல் தடுத்தல்.

...ிரைடுருவலைத் தவிர்த்தல்.

கட்டட வேலையில் தாமதமின்மை.

...த்தனை நன்மையும் தக்கைக் ... தருகிறது. ஆகவே, ...கைகல் வீடுகள் கட்டத் ... கல் என்று சொல்லலாம் ...லவா?

பகலிலும்....




அவசர நிலைமை ஏற்பட்டால் கட்டடத்தில், வெளியிலிருந்து எந்த ஒரு மாடிக்கும் செல்லும் வகையில் ஒவ்வொரு மாடியிலும் வசதி செய்யப்பட்டு உள்ளது.

கட்டடத்தின் மேல் மாடியில் 500 பேர் அமரக் கூடிய அழகிய அரங்கு ஒன்றும் காட்சியளிக்கிறது.

இந்தக் கட்டடத்தின் மூலம் மாதமொன்றுக்கு 1 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் வாடகை கிடைக்கும்.

நாளும் வளர்ந்துவரும் நகர வளர்ச்சிக்கு இதுபோன்ற கட்டடங்கள், வீட்டு வசதி வாரியத்தின் அரிய திட்டங்கள் கைகொடுத்து உதவும் என்று நாம் நம்பலாம்.

கட்டடக் கலையில் மேலை நாட்டினருக்கு இணையாகத் தமிழகக் கட்டடக்கலை நிபுணர்கள் விளங்குகிறார்கள் என்பதற்குக் 'கருணாநிதி பில்டிங்' ஒரு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்!

—பி.வி.ஜி.

இரவிலும்....



# பயிர்களுக்கு மட்டுமல்ல! மனித உயிர்களுக்கும் தீங்கு விளைவிக்கும் புதிய நச்சுக்களை!



'பார்த்தினியம்' (Parthenium hysterophorus) என்னும் நச்சுக்களை தமிழ்நாட்டின் சில பகுதிகளில், குறிப்பாகக் கோவை மாவட்டத்தில் சாலையோரங்களிலும், இரயில்பாதையின் இருபுறங்களிலும், தரிசு நிலங்களிலும், விளைநிலங்களிலும் மிக வேகமாகப் பரவி வருகிறது! இக்களை, பயிர்களுக்கு மட்டுமின்றி; மனிதர்களுடைய உடல் நலத்திற்கும் தீங்கு விளைவிக்கக்கூடியது!

அண்மையில் மகாராட்டிர மாநிலத்தில் பலருக்குப் பெருந்தீங்கு விளைவித்த இக் களைக்குக் 'காங்ரஸ்புல்' என்றும் 'சட்டாக் சந்தினி' அல்லது 'காரட் களை' என்றும் பெயர் உள்ளது.

## தீமைகள்

இக்களையின் மகரந்தத் தூள்கள் காற்றில் மிதந்து, மனித உடலில் படியும்போது, தோல் நோய்களை உண்டாக்குகின்றன. ...

...தில் கண்களைச் சுற்றி ஒருவித நமைச்சல் உண்டாகும்! பிறகு இது முழங்கை, முழங்கால்களுக்கும், கழுத்தைச் சுற்றியும் பரவி தோலில் வெடிப்பை உண்டாக்கும். இந்த வெடிப்புகளின் மூலம் பலவித நோய்க் கிருமிகள் உள்ளே புகுந்து, உடலில் தாங்கொணாத இடையூறுகளை ஏற்படுத்தி, இறுதியாக உயிரையே குடித்து விடுகிறது! காற்றில் மிதக்கக் கூடிய இக்களையின் மகரந்தத் தூள், 'தோல் அழற்சி', 'ஆஸ்துமா' போன்ற உடலில் அயர் பொருள் நுழைவின் விளைவாக ஏற்படும் வீக்க நோய்களை (Allergic diseases) ஏற்படுத்துகின்றன. இக்களையிலுள்ள 'பார்தெனின்' என்னும் நச்சுப் பொருள் நரம்புத் தளர்ச்சியை உண்டாக்குகிறது!

விளைநிலங்களில் இவை பயிரின் மகசூலைப் பெரிதும் பாதிக்கின்றன. இதைக் கட்டுப்படுத்தாது விடுவோமானால், மிகவிரைவில் பல இடங்களிலும் பரவி, பொதுச் சுகாதாரத்திற்கும், பயிர் விளைச்சலுக்கும் பெருங்கேடு விளைவிக்கும் என்பதில் ஐயமில்லை.



இலையின் தோற்றம்

## களையின் தன்மைகள்

'கம்பாசிட்டே' (Compositae) என்னும் தாவர குடும்பத்தினைச் சேர்ந்த இக்களை சுமார் 3 முதல் 5 அடி உயரம் வரை வளரும் தன்மை உடையது. தண்டு முழுவதும் வெண்மையான சிறுஇழைகள் காணப்படுகின்றன. இக்களையின் இலைகள் பார்ப்பதற்கு 'காரட்' செடியின் இலைகள் போன்று இருக்கும். சிறிய வெண்மையான பூக்கள் கொத்துக் கொத்தாகச் செடியின் நுனியிலும், பக்கவாட்டிலும் காணப்படும். விதை மூலம் பரவக்கூடியது. ஆண்டு முழுவதும் ஆயிரக்கணக்கான விதைகளை உற்பத்தி செய்யும் திறனுடையது. ஆகவே, வெகு எளிதில் பரவும் தன்மையுடையது.



பூக்கள்

## தடுப்பு முறை

இக்களையின் இளஞ்செடிகளைக் கட்டுப்படுத்த 2,4-டி (2, 4-D) அல்லது 'எம்.சி.பி.ஏ' (M C P A) என்னும் களைக்கொல்லியை எக்டேருக்கு 2 கிலோ வீதம் 900 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்கவும். முதிர்ந்த செடிகளுக்கு 2, 4-டி (2, 4-D) 'பாரகுவாட்' ( Paraquat ...) ஆகிய களைக்கொல்லிகளின் கலவையை (ஒவ்வொன்றும் எக்டேருக்கு இரண்டு கிலோ வீதம்) 700 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பான் மூலம் தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.



செடியின் விரிவான தோற்றம்

தரிசு நிலங்களில் இக் களைகளுக்குத் தீவைத்தும், இதைக் கட்டுப்படுத்தலாம். இக் களையை ஒழிக்க ஆராய்ச்சியாளர்கள், பொதுச் சுகாதாரப் பணியாளர்கள், வேளாண்மை துறையினர் மற்றும் பொது மக்கள் ஆகிய யாவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டால் ஒழிய, இக் களையை ஒழிப்பது கடினம்!

மேலும் விரிவான விவரங்களுக்கு 'உழவியல் துறை' தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை-3' என்ற முகவரிக்கு அஞ்சல் மூலமாகவோ, நேரிலோ தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்:—

தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக்கழகம்,
கோவை-3.


# சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை) எண் 151.
## சேலம்-1.

தபால் பை எண். 171 — தொலைபேசி எண் : 2402

கிளைகள் : நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணாபுரம் சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, பெத்தநாய்க்கன்பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

சொந்த நிதி ரூ. 327 லட்சம்.

நடைமுறை மூலதனம் 1711 லட்சம்.

வட்டிவிகித அட்டவணை

கால் டெபாசிட்டுகள் : ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் (முன் அறிவிப்பு இல்லாமல்) 3½%
ரூ. 10,000/-க்கும் அதற்கு மேலும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்) 3½%

சேவிங்ஸ் டெபாசிட்டுகள் : ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும்
15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும் 3%
46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும் 3½%

பிக்செட் டெபாசிட்டுகள் : ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு :

1. 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் 6%
2. 6 மாதத்திற்கும் அதற்குமேல் 9 மாதத்திற்குள் 6½%
3. 9 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் 7½%
4. 12 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் 8½%
5. 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் 9½%
6. 61 மாதத்திற்கும் அதற்குமேலும் 10½%

நடப்புக் கணக்கு ½% — சேமிப்புக் கணக்கு 6%

ரூ. 5000/-க்கு மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு. பிக்செட் டெபாசிட்டுகளின்மீது மாதாந்திர வட்டி உண்டு. ரெக்கரிங், பிராவிடெண்ட் டிபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்புகொள்க.

இ. பாலசுந்தரம், பி.ஏ., துணைப் பதிவாளர், நிர்வாக அதிகாரி.
பி. காசி, பி.எஸ்.ஸி., எச்.டி.வி., காரியதரிசி.
எஸ். ஆறுமுகம், தலைவர்.




# வறண்ட பகுதிக்கு வளமூட்டும் பரப்பலாறு அணை!

— எம். அண்ணாமலை —

மதுரை மாவட்டத்தில் பழநி வட்டத்தில் பரப்பலாறு அணை, நீண்ட காலமாகக் கவனிக்கப்படாதிருந்த திட்டங்களில் ஒன்று பரப்பலாறு நீர்த்தேக்கம் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும், பொருளாதாரத் துறையில் பின்தங்கிய பகுதிகளுக்கும் (இலாபத்தை நோக்கமெனக் கருதாது) நீர்ப்பாசன வசதிகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு 1970-ஆம் ஆண்டு தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்டு 30.8.75 அன்று தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் பொன்னான கைகளால் நிறைவேற்றப்பட்டது. பல விவசாயக் குடும்பங்களின் இதயங்களில் மகிழ்ச்சி அலைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

கொடைக்கானலின் பருவநிலையை ஒத்த பரப்பலாறு நீர்த்தேக்கம் கடல் மட்டத்திலிருந்து சுமார் 610 மீட்டர் உயரத்தில் உள்ளது.

பரப்பலாறு நதி, அமராவதி ஆற்றின் பெரும் உப நதிகளில் ஒன்றாகும். இந்நதி பழநி-கொடைக்கானல் வட்டங்களிலுள்ள மலைகளிலுள்ள வடக்குச் சரிவில் உற்பத்தியாகி, மதுரை மாவட்டம்-பழநி வட்டம் வழியாகவும், திருச்சி மாவட்டம்-கரூர் வட்டம் வழியாகவும் சென்று அமராவதி ஆற்றில் கலக்கிறது.





பரப்பலாறு, பழநி வட்டம் ஒட்டன்சத்திரம் பகுதியிலும், திருச்சி மாவட்டம்-கரூர் வட்டம் அரவக்குறிச்சிப் பகுதியிலும் பாய்ந்து செல்கிறது. இப்பகுதிகள் மதுரை, திருச்சி மாவட்டங்களில் மிக வறண்ட பகுதிகள்; பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள். இப்பகுதி மக்களின் நெடுநாளையக் கனவு இப்போது நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத்திட்டம் பொருளாதார அடிப்படையில் இலாபகரமானதல்ல என ஒதுக்கி வைக்கப்பட்டு நீண்ட காலமாக இப்பகுதி மக்களின் இன்பக் கனவு நிறைவேற்றப்படாமல் இருந்தது. இப்பொழுது முதல்வர் கலைஞர் அவர்களால் நிறைவேற்றப்பட்டுள்ள இந்த நாள், இப்பகுதி மக்களின் வாழ்வில் இன்பத்

## குழந்தைகளைத் திட்டாதீர்!

உங்கள் குழந்தை வம்பு செய்கிறதா? அப்படியானால் குழந்தைகளைத் திட்டாதீர்கள், அடிக்காதீர்கள்!

குழந்தைகளின் உடல் வளர்ச்சியும் சரி, அறிவு வளர்ச்சியும் சரி, இல்லத்தில் உள்ள சூழ்நிலையையே பெரும்பாலும் பொறுத்திருக்கின்றன. சூழ்நிலைகள் குழந்தைகளின் வளர்ச்சிக்குப் பொறுப்பாக இருக்கும் ஹார்மோன்களைப் பாதிக்கின்றன.

குழந்தையை எப்போதும் திட்டுவதும், அடிப்பதும், உணவுகொடுக்காமல் பட்டினி போடுவதும், தனிமையில் வைப்பதும் மன வளர்ச்சியை மிகவும் கெடுத்துவிடும். குழந்தை அறிவில்லாமலும் போகும்'' என்று எச்சரிக்கை செய்யும் ஆய்வாளர்கள், இவ்வாறு நாம் குழந்தையைத் திட்டுவதால் அவர்கள் குள்ளமாகவும் ஆகிவிடுவார்கள் என்கிறார்கள்.

அப்படியானால் வளர்ச்சி குன்றிப் போன குழந்தைகளுக்குச் சிகிச்சை செய்து குணப்படுத்த முடியுமா?

மேலே சொன்ன மாதிரி வளர்ச்சி குன்றிப்போன 16 குழந்தைகளுக்குச் சிகிச்சையளித்ததில் முதலில் அக்குழந்தைகளின் இல்லங்களிலிருந்து அவர்களை வெளியேற்றிக் கொண்டு வந்தவுடனேயே அவர்களுடைய ''குள்ளத்தனம்'' நீங்கத் தொடங்கியது. படிப்படியாக அறிவும் உடலும் வளரத் தொடங்கி, நன்கு பேசவும் தொடங்கினராம். முன்பெல்லாம் அவர்கள் ஊமைகளைப் போலவே வாயடைத்துப் போயிருந்தனர். அமெரிக்காவில் இச்சிகிச்சை நடைபெற்றது.



ஏற்கெனவே பாசனம் பெற்று வரும் பழநி, கரூர் வட்டங்களிலுள்ள சுமார் 1323 ஏக்கர் நிலங்களுக்கு நிலையான பாசன வசதி கிடைத்து வந்ததுடன் புதிதாகச் சுமார் 1200 ஏக்கர் நிலங்களுக்கும் பாசன வசதி கிடைத்துள்ளது. இத்திட்டத்தில் மண் அணை எதுவுமே இல்லை; முழுக்க முழுக்கக் கல் அணைதான்.

பரப்பலாறு அணைத்திட்டத்தின் மதிப்பீடு சுமார் ரூ. 90.14 இலட்சம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| பரப்பலாறு அணையின் நீளம் | ... | 81 மீட்டர் (266 அடி) |
| உயரம் | ... | 38 மீட்டர் (125 அடி) |
| நீர்ப்பிடிப்புப் பரப்பு | ... | 72 ச.கி.மி. (29 ச. மைல்) |
| கொள்ளளவு | ... | 4.73 மி. மீட்டர் (167 மி.க. அடி) |
| ..ச்ச வெள்ளப்போக்கு | ... | 74 க.மீ. (2700 க. அடி) வினாடிக்கு வினாடி அணையின் வழிகால் திறக்கு 13 எண்கள் |
| | | 9.75 மீ. (32 அடி), 4.75 மீ (15 அடி) |
| ..ற்றுமடை | ... | 1 என் 1.52 மீ. 1.83 மீ. (5அடி) (6அடி) |
| ..சன அணைக்கட்டுகளின் எண்ணிக்கை | ... | 8 |
| ..சனப் பரப்பு | ... | 536 எக்டேர் (1323 ஏக்கர்) |
| ..ய பாசனப்பரப்பு | ... | 405 எக்டேர் (1000 ஏக்கர்) |
| ..டத்தின் கூடுதல் உணவு உற்பத்தி: (ஆண்டொன்றுக்கு) | ... | 1370 டன். |

தமிழக அரசு, பொறுப்பேற்ற இந்த 8 ஆண்டுகளில் பழநி மலைத் தொடர்ப் பகுதியில் 17 கோடி ரூபாய் செலவில் திட்டமிட்டு, குடகனாறு, மருதாநதித் திட்டம், பாலாறு-பொருந்தலாற்றுத் திட்டம், வரதமாநதித் திட்டம், பரப்பலாறுத் திட்டம் ஆகியவைகளைச் செயல்படுத்தி வருகிறது.

பழநி-கொடைக்கானல் மலைப்பாதையும் ஒரு கோடி ரூபாய் செலவில் திட்டமிடப்பட்டு முடிவாகும் நிலையில் உள்ளது. பழநி வட்டம் ஒட்டன் சத்திரத்திலிருந்து பாய்ச்சலூர் வரை மலைப் பாதை அமைக்க ரூ. 48 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

மன்னர்கள் காலத்திலிருந்து நாடு விடுதலை அடையும்வரை, தமிழ்நாட்டில் நீர்ப்பாசன வசதி பெற்ற நிலங்கள் 44 இலட்சம் ஏக்கர். 1967-ஆம் ஆண்டுவரை-விடுதலை பெற்று 20 ஆண்டுக் காலம் வரை 8 இலட்சம் ஏக்கருக்குத்தான் பாசனவசதி இருந்தது. 1967-க்குப் பின்னர்-இந்த 8 ஆண்டுக்காலத்தில் புதிதாக 15 இலட்சம் ஏக்கருக்குப் பாசன வசதி அளித்து, இப்பொழுது 67 இலட்சம் ஏக்கர் பாசன வசதி பெற்றுள்ளது. இந்த அளவை மேலும் பெருக்கத் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதோடு மட்டுமல்லாது அணையின் அருகே கண்ணைக் கவரும் இனிய காட்சிகளைக் காணவரும் சுற்றுலாப் பயணிகளுக்கு 'விருந்தினர் இல்லம்' ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. இவ்விடத்தில் உள்ள இயற்கையின் எழில் கொஞ்சும் சந்தன மரக்காடுகள் நறுமணம் கொடுத்து, வருவோரை இன்முகங்காட்டி வரவேற்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்த அணைக்குக் கீழே 1 கிலோ மீட்டர் தொலைவில் 'தாழையூத்து' எனும் அழகான அருவி ஒன்று உள்ளது. விரைவில் ''பரப்பலாறு நீர்த்தேக்கம்'' அழகான வைகை அணையைப்போல் சுற்றுலாப் பயணிகள் கண்டு இன்புறும் இடமாக மாறுவது உறுதி.



## ஆலை பெயரில் இனிய அலை

''ஆலைகள் வைப்போம், கல்விச் சாலைகள் வைப்போம்'' என்றார் புதுமைக் கவி பாரதி. அவரது எழுச்சிக் கவிதைகள் எதிரொலிக்கும் இந் நாட்டில் அவரது எண்ணங்கள் ஈடேற தமிழக அரசு செயத்தக்கனவற்றைச் செயலாக்கி வருகிறது.

கல்வியைப் பொறுத்த மட்டில் அரசின் வருவாயில் பெரும் பகுதியைச் செலவிட்டு அறியாமை இருளை அகற்றிடத் திட்டங்கள் பல நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. ஆற்பாலை முதல் எண்ணற்ற பயன்தரு ஆலைகளை அமைத்துத் தொழிற்பேட்டைகளை நாட்டில் அரசு உருவாக்கி வருகிறது. நலிந்த பஞ்சாலைகள் சீர்பெறத் 'தமிழ்நாடு பஞ்சாலை இணையம்' அமைக்கப்பட்டது.

வேளாண்மைத் தொழில் புரிவோருக்கு உழு கருவிகள் வழங்கிடவும், மற்ற உதவிகட்கும் 'வேளாண்மைத் தொழிற் கழகம்' உருவாகி இயங்கி வருகிறது. வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டு நடைபெறும் தொழில்களில் சர்க்கரை உற்பத்தித் தொழிலும், அதன் தொடர்புடைய சில தொழில்களும் சேர்கின்றன. சர்க்கரை இனிய பொருள்! பலருக்கும் தேவைப்படும் நல்ல பொருள், எனவே, சர்க்கரை உற்பத்தித் தொழில் பொதுத் துறையில் இருக்க வேண்டும் என்ற தமிழ்நாடு அரசின் நோக்கம் இன்று வடிவம் பெற்றது.

இதனைக் கருத்திற் கொண்டு ஐந்தாவது திட்டக் காலத்தில் தமிழக அரசு சர்க்கரை உற்பத்தித் துறைக்காக ரூ. 8.50 கோடி முதலீடு செய்துள்ளது.

தமிழ்நாட்டில் இதுநாள் வரை தனியார் துறையிலும், கூட்டுறவுத் துறையிலுமே சர்க்கரை ஆலைகள் இருந்து வந்தன. தனியார் துறை சர்க்கரை ஆலைகளில் கரும்புக்குப் போதுமான விலை தருவது இல்லை என்ற குறைபாடு இருந்து வந்தது. இதன் காரணமாகக் கரும்பு பயிரிட்ட விவசாயிகள் பெருத்த நட்டத்திற்கு உள்ளானார்கள். நலிந்த விவசாயிகளின் ஏக்கம் நீங்கிட, சர்க்கரை ஆலைகள் அனைத்தும் அரசுத் துறையே மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கோடு 'தமிழ் நாடு சர்க்கரைக் கழகம்' துவக்கப்பட்டது. இக்கழகத்தின் மூலம் அரசினர் துறையில் எட்டுப் புதிய ஆலைகள் தொடங்கப்படும்.

செப்டம்பர் திங்கள் 11-ஆம் நாள் தமிழ்நாட்டு மக்களுக்கு- வேளாண்மைப் பெருங்குடி மக்களுக்கு ஒரு நன்னாள்!

அன்று தஞ்சைக்கு அருகே உள்ள குருங்குளத்தில் தமிழக முதல்வர் அவர்கள், தமிழ் நாடு சர்க்கரைக் கழகம் முதலாவதாக அமைக்க இருக்கும் சர்க்கரை ஆலைக்கு அடிக்கல் நாட்டினார்கள். இந்த ஆலைக்கு ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம் அமைத்திடப் பாடுபட்ட பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரிடப்பட்டிருக்கிறது. இந்த ஆலை நிறுவுவதற்கான உரிமம் 1975 மே மாதத்தில் தான் பெறப்பட்டது. இன்னும் 2 ஆண்டுக் காலத்திற்குள் இந்த ஆலை சர்க்கரை உற்பத்தியைத் தொடங்கிவிடும்.

ஆறு கோடி ரூபாய் செலவி அமைக்கப்பட இருக்கும் இந் ஆலையில் தொடக்க காலத்தி 800 பேர் பணி புரிவர். இ ஆலை நாள் ஒன்றுக்கு 1,2 டன் கரும்புச் சாறு பிழி உற்பத்தித் திறன் கொண்ட இதன் மூலம் ஆண்டுதோ 17,000 டன் தூய வெண் யான உயர் ரகச் ச பளிங்குச் சர்க்கரை உற்ப செய்ய முடியும்.

ஐந்தாவது திட்டக் கா தில் புதிய சர்க்கரைத் தொ சாலைகள் நிறுவுவதன் மூல தற்போதுள்ள தொழிற்ச களை விரிவுபடுத்துவதன் மும் தமிழ்நாடு சர்க் உற்பத்தியில் தன்னிறை பெறும் என்று உறுதிய தெரிகின்றது.

—கோ

11. சி. முனியாண்டி—சென்னை நகர ஆய்வாளர்.

12. கே. கணேசன்—உணவுக் குற்றத் தடுப்பு ஆய்வாளர், சென்னை.

13. கே.கே. அசோகன், ஆய்வாளர்—ஊழல் ஒழிப்புப் பிரிவு, கோவை.

14. கே. இராமதாசு, ஆய்வாளர்—தனிப் பிரிவு, செங்கற்பட்டு.

15. வி. ஜெயராஜ், ஆய்வாளர்— அருப்புக்கோட்டை.

16. ஏர்னஸ்ட் ஜெசுடியன், ஆய்வாளர்— சென்னை.

17. சி.ஆர். நடனம். துணை ஆய்வாளர், மேற்கு தஞ்சை.

18. ஏ.எம். கவுஸ், துணை ஆய்வாளர்—திருச்சி ஆயுதக் காவற்படை.

19. எம். மணிவேலு, உதவித் துணை ஆய்வாளர், வட ஆர்க்காடு.

**பதக்கத்தோடு ரூபாய் ஓர் ஆயிரம் பரிசும் பெறுவோர் விவரம்:—**

20. எஸ்.எம். நகுலன், தலைமைக்காவலர், உணவுப் பிரிவு.

21. எம். நடராசன், தலைமைக்காவலர், ஊழல் ஒழிப்புப் பிரிவு, சென்னை.

:2. எம். முனுசாமி—தீயணைப்புப் படை ஓட்டுநர்.

3. எஸ். ரகமன், காவலர் நெல்லை ஊழல் ஒழிப்புப்பிரிவு.

. சி. என். சுப்பராயலு—காவலர், சென்னை போக்குவரத்துப் பிரிவு.

**ரதீரச் செயல்களுக்காகப் பதக்கமும் பாய் 3 ஆயிரம் பரிசும் பெறுவோர் வரம்:—**

. சி. ஐ பி. தனராஜ் (துணைக்கண்காணிப்பாளர்) குற்றப் புலனாய்வுப் பிரிவு.

ஆர் தட்சிணாமூர்த்தி (துணை ஆய்வாளர்) குற்றப் புலனாய்வுப் பிரிவு.

. சி. போலா ரெட்டி, காவலர், தமிழ்நாடு க்காவல் பிரிவு, ஆவடி.











# கேளுங்கள் கொடுக்கப்படும்

**— ஆர்.எம்**

**வினா:** தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், தனது 52-வது பிறந்த நாளையொட்டி அறிவித்த விதவை மறுமணத் திட்டம் ஒன்றும் புதிய திட்டமல்ல என்றும், இராஜாராம் மோகன்ராய் அவர்களால் கொண்டுவரப்பட்டது என்றும் வேறு மாநிலங்களில் முன்பே நடைமுறையில் உள்ள திட்டம் தான் என்றும் ஒரு நண்பர் கூறுகிறார். அவருடைய கருதுத் சரியானதா?

எனக்கு நீண்ட நாட்களாகவே ஒரு விதவைக்கு வாழ்வு அளிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்து வந்தது. ஆனால் அதற்கான தைரியம் இதுநாள் வரை இல்லாமல் இருந்தது. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் விதவை மறு



மணத் திட்டத்தை அறிவித்த உடன், ஒரு விதவையை மறுமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற துணிவு எனக்குப் பிறந்துள்ளது. எனவே, விதவையை மணம் செய்து கொண்டால், என்னென்ன சலுகைகள் கிடைக்கும் என்பதையும், எந்த முறையில் மணம் செய்து கொள்வது என்பதையும், பரிசு பெறும் முறையையும் விளக்கிக் கூறும்படி வேண்டுகின்றேன்.

—மா. வில்லவன்,
மேலமாசி வீதி, மதுரை

**விடை:** ''மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு!'' என்ற உண்மையை ஒப்புக்கொள்ளும் அளவுக்கு உங்கள் நண்பரின் மனம் பக்குவம் அடையவில்லை என்று நினைக்கின்றேன்! அதனால்தான், உலகிலேயே முதன் முதலாக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் கொண்டு வரப்பட்ட விதவைத் திருமணத்தை ஊக்குவிக்கும் சமுதாயப் புரட்சித் திட்டதைப் 'புதியதல்ல' என்று உங்கள் நண்பர் கூறியுள்ளார். அவருடைய கூற்று, ''முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைப்பது போல்'' உள்ளது என்பதில் ஐயமில்லை! உங்கள் நண்பர் கூறியது உண்மையல்ல என்பதை விளக்கிடுவதற்காக முதலில் விதவைத் திருமண வரலாற்றை ஈண்டு விளக்கிடுகின்றேன்.

**விதவைத் திருமண வரலாறு**

புகழ்பெற்ற சீர்திருத்தவாதியான இராஜாராம் மோகன்ராய் அவர்கள், ''சதி'' எனப்படும் உடன்கட்டை ஏறும் கொடிய வழக்கத்தைத்தான் (கணவன் இறந்தவுடன், மனைவியையும் கணவனுடைய உடலுடன் உயிரோடு வைத்து எரித்தல்) வெகுவாகச் சாடினார். அவ்வழக்

... சட்டமும் பேசி, வாதாடி, கொண்டு வந்தார். கணவனை இழந்த பெண்கள் விரும்பினால் மறுமணம் செய்து கொள்ளலாம் என்றும் கூறினார். ஆனால் அதற்கு அரசினரின் ஆதரவு பெற, அவரால் முடியவில்லை!

**'இந்தியாவின் தந்தை'** என்று போற்றப்படும் **அண்ணல் காந்தி** அடிகளும் விதவைத் திருமணத்தை ஆதரித்தார். ஆனால் இந்தியா விடுதலை அடைந்த பிறகு கூட அதற்கான சட்டத்தைக் கொண்டு வரவும், எந்த ஆதரவு அளிக்கவும் அரசும் முயற்சிக்கவில்லை!

**''பகுத்தறிவுப் பகலவன்''** என்று போற்றப்படும் தந்தை பெரியார் அவர்கள்தான் விதவைத் திருமணத்தை ஆதரித்துப் பிரச்சாரம் செய்ததுடன், 1929-ஆம் ஆண்டிலேயே முதன் முதலாக ஒரு விதவைக்குத் திருமணம் செய்து வைத்து, சமுதாய சீர்திருத்தவாதிகளுக்கு ஓர் முன்னோடியாக விளங்கினார்!

தந்தைப் பெரியார் அவர்களைப்போல், **அறிஞர் அண்ணா** அவர்களும் விதவைத் திருமணத்தை வற்புறுத்தி பிரச்சாரம் செய்ததுடன், விதவைத் திருமணங்களை முன் நின்று நடத்தி வைத்துள்ளார். விதவைத் திருமணத்தின் வரலாறு பற்றிப் பேரறிஞர் அண்ணா அவர்கள் 1948-ஆம் ஆண்டில் ''திராவிட நாடு'' இதழில் விரிவாகக் கூறியுள்ளார்!

''கோரிக்கையற்றுக் கிடக்கு
தண்ணே—இங்கு
வேரிற் பழுத்த பலா!''

—என்று நமது **புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்** அவர்கள் இளம் கைம் பெண்களின் வேதனையைக் கண்டு மனம் உருகிப் பாடினார்!

இவ்வாறு பிரச்சாரத்தில் இருந்து வந்த விதவைத் திருமணத் திட்டத்திற்கு இந்தியாவிலேயே, ஏன்? உலகிலேயே முதன் முதலாகச் சட்டபூர்வமான ஆதரவு அளித்து விதவைத் திருமணம் செய்து கொண்ட கணவன் மனைவி ஆகிய இருவருக்கும் ரூபாய் 5,000 பரிசு வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்த பெருமை தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு உரியது என்பதை நல்ல

# எக்ரோமின்
## சிலேடெட் தாவர உணவு

**பயிர் விளைச்சலை 20% அல்லது அதற்கு மேலும் அதிகமாக்குகிறது.**




● எக்ரோமின், ஒரே சிலேடெட் தாவர உணவாகும், தண்ணீரில் கரைகிறது. கரைக்கும் மற்றும் பரப்பும் சாதனம் சுலபமாக கிரகிக்கப்பட உதவுகிறது.
● எக்ரோமின் இலைத்தெளிப்பாகும். மற்ற எக்ரோ கெமிகல்களுடன் இதை உபயோகிக்கலாம்
● எக்ரோமின், தானியங்கள், எண்ணெய்வித்துக்கள், மசாலாப் பொருள்கள், இலைப் பயிர்கள், பழங்கள் மற்றும் தோட்டப் பயிர்களுக்கென வெவ்வேறு அமைப்புகளில் 1 கிலோ கிராம் ½ கிலோ கிராம் பேக்குகளில் கிடைக்கிறது.






**எக்ரோமின்**

சிக்கனமாக பயிர் விளைச்சலை அதிகமாக்கும் சிலேடெட் தாவர உணவு.

® ரெஜிஸ்டர்ட் டிரேட் மார்க்

எக்ரோமின் பற்றிய அதிகப்படி விவரங்களை அறிய இந்த முகவரிக்கு எழுதவும்:
ஏரீஸ் எக்ரோ-வெட் இண்டஸ்ட்ரீஸ் ப்ரை. லிட்.
தபால் பெட்டி எண் 9417,
பம்பாய் 400 093.

அக்ரோமின் விநியோகஸ்தர்கள் :—

எஸ். எல். என். எஸ். ஏஜென்ஸிஸ், 19, முனிசிபல் பில்டிங்ஸ், சீனிவாசா பூங்கா, சேலம்-636002. இண்டோமேக் கார்ப்பொரேஷன், 3, கொல்லன்பட்டரைத் தெரு, கீழவெளி வீதி, மதுரை-1. தேனி அக்ரி சர்வீஸஸ், பவர் ஹவுஸ் ரோடு, லெட்சுமி தியேட்டர் அருகில், தேனி. விவேகானந்தா என்டர்பிரைசஸ், 101, மருத்துவமனைச் சாலை, சீர்காழி அஞ்சல், தஞ்சாவூர் மாவட்டம். அன்னபூரணு என்டர்பிரைசஸ், ஜவஹர் பசார், கரூர்.




# காவல் துறையினருக்கு முதலமைச்சர் விருது

**பே**ரறிஞர் அண்ணு அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் 1969-ஆம் ஆண்டு முதல் காவல்துறையினருக்கு முதலமைச்சர் விருதுகளைத் தமிழ்நாடு அரசு வழங்கிவருகிறது.

இவ்வாண்டு காவல்துறையினருக்கு முதலமைச்சர் பதக்கம்—வீரமானியம்—வழங்கும் விழா வடஆர்க்காடு மாவட்டம் வேலூரில் செப்டம்பர் 14-ஆம் நாள் நடைபெற்றது.



கொட்டும் மழையில் நடைபெற்ற இவ்விழாவில் முதல்வர் கலைஞர் அவர்கள் வீர விருதுகளை வழங்கினுர்கள்.

தங்கள் சிறந்த தொண்டின் மூலம் இவ்வாண்டு முதலமைச்சர் விருது பெற்ற காவலதுறை அதிகாரிகள், காவலர்கள் விவரம் வருமாறு:—

1. வி.ஜி. மனோகரன்—ஊழல் ஒழிப்புப் பிரிவில் கண்காணிப்பாளர்
2. ஞானசம்பந்தம்—குற்றப் புலனுய்வுப் பிரிவில் கண்காணிப்பாளர்
3. சி.வி. சந்திரசேகரன்—ஆவடி ஆயுதக் காவல் படை துணைத் தளபதி



**பதக்கத்தோடு 3 ஆயிரம் ரூபாய் பரிசு பெறுவோர் விவரம்:—**

4. ஆர். சுப்புராயன்—சென்னை நகர காவல் துறைத் தலைமையக உதவி ஆணையர்
5. எம்.எம். வாசுதேவய்யா,—மாநகர் உதவி ஆணையர், சென்
6. எஸ். மோத்தா—துணைக்கண்காணிப்பா திருச்சி தனிக் காவல் பி
7. வி. நடராசன், துணைக்கண்காணிப்பாள மதுரை—ஊழல் ஒழிப்புப் பி
8. எஸ். வெள்ளிங்கிரி, துணைக்கண்காணிப்பாளர், கோவை—மதுவிலக்குப்பி
9. ஜி. கே. சீனிவாசன்—தீயணைப்பு அதி

**பதக்கத்தோடு 2 ஆயிரம் ரூபாய் பெறுவோர் விவரம்:—**

10. எஸ். மயில்சாமி, ஆய்வாளர்—சேலம் ஊழல் ஒழிப்புப்

ஊராம 'அக்ரசான்' அல்லது 'செரசான்' மருந்தை நன்கு கலக்கிய பின்பு விதைக்கவும்.

தண்டு அழுகல் நோயைத் தடுக்க நிலத்தில் .உள்ள தண்ணீரை வடித்து விட்டு 'ஈர செரசான்' (Wet Ceresan) மருந்தில் 1 கிலோவை 1,000 லிட்டர் தண்ணீரில் கலந்து மண்ணை நனைக்கவும். இவ்வாறு மூன்று முறை செய்தால், தண்டு அழுகல் நோயைத் தடுக்கலாம்.

நீர்த் தேங்காத மேட்டு நிலங்களில் அண்ணாமலை கத்தரி, கோவில்பட்டி மிளகாய் ஆகிய இரகங்களைத் தற்பொழுது பயிர் செய்யலாம்.

தெளிப்பான்களை இலவசமாகப் பெற முடியாது. ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் தெளிப்பான்களைக் குறைந்த விலையில் பெறலாம். இவ்வாறு வாங்க உங்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உள்ள துணை வேளாண்மை அலுவலர் அவர்களுக்கு மனு செய்யவும். ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் அவர்களிடமிருந்து குறைந்த வாடகையிலும் தெளிப்பான்களைப் பெறலாம்.

**வினா** : இன்னும் 15 நாளில் 'ஐ.ஆர். 20' நெல் அறுவடை செய்யவிருக்கின்றேன். அதன் பின் ''பொன்னி'' பயிரிடலாம் என எண்ணுகின்றேன். ஐப்பசி மாதத்தில் பொன்னி நாற்று விட்டு நடலாமா? நடலாம் எனில், தயவு செய்து பொன்னியின் சாகுபடிக் குறிப்புகளைக் கூறவும்.

—ப. ராசு,
மெயின் ரோடு,
பெரம்பலூர்,
திருச்சி மாவட்டம்.

**விடை** : ''பொன்னி'' ரகத்தைப் புரட்டாசி - ஐப்பசி (செப்டம்பர் - அக்டோபர்) மாதங்களில் நாற்று விட்டு டலாம்.

ஒரு ஏக்கர் ''பொன்னி'' டவு செய்ய 12 சென்ட் ாற்றங்காலில், 18 கிலோ தையை விதைக்க வேண்டும். ரு கிலோ விதைக்கு 2 கிராம் அக்ரசான்' அல்லது 'செர ான்' மருந்து கலந்த பிறகே தைக்க வேண்டும்.

நாற்று விட்ட 23-வது ளில், நாற்று பசுமையாக தேவைக்கு ஏற்ப, ஒரு சென்ட் பாத்திக்கு 1 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 0.5 கிலோ யூரியாவை நாற்றங்காலில் மேலுரமாக இட வேண்டும். ஏனெனில், நாற்று பசுமையாக இருந்தால்தான், நட்டவுடன் வேர் பிடித்துப் பச்சைக் கட்டும்! நாற்றங்காலுக்கு மேலுரமிட்ட பிறகு, 12 சென்ட் நாற்றங்காலுக்கு 20 மில்லி லிட்டர் பாரத்தியான் அல்லது 40 மில்லி லிட்டர் என்ட்ரின் மருந்தையும், 40 கிராம் டைத்தேன் மருந்தையும் 40 லிட்டர் தண்ணீரில் கலந்துத் தெளிக்க வேண்டும்.

நடவு வயலுக்கு ஏக்கருக்கு 12 வண்டி தொழு எரு இட்டு நன்கு உழுதுச் சேறுக்க வேண்டும். கடைசி உழவில் ஏக்கருக்கு 20 கிலோ தழைச் சத்து, 20 கிலோ மணிச் சத்து, 20 கிலோ சாம்பல் சத்து ஆகியவற்றை அடியுரமாக இட வேண்டும். இந்த அளவுச் சத்து அளிக்க பின் கண்டவாறு உரமிடலாம்.

120 கிலோ 17:17:17 'காம்ப்ளெக்ஸ்' உரம்.

அல்லது

44 கிலோ டை-அமோனியம் பாஸ்பேட் + 26 கிலோ யூரியா + 33 கிலோ மியூரியேட் ஆஃப் பொட்டாஷ்.

அல்லது

44 கிலோ யூரியா + 125 கிலோ சூப்பர் பாஸ்பேட் + 33 கிலோ மியூரியேட் ஆஃப் பொட்டாஷ்.

நாற்று விட்ட 30-வது நாளில் நாற்றைப் பறித்து நட வேண்டும். நடவு செய்யும் போது வரிசைக்கு வரிசை 6 அங்குல இடைவெளியும், வரிசையில் பயிருக்குப் பயிர் 4 அங்குல இடைவெளியும் விட்டு நடவு செய்வது சிறந்தது. வரிசை நடவு செய்ய முடியா விட்டால், ஒரு சதுர மீட்டர் பரப்பில் 66 குத்துகள் (தூர்கள்) இருக்கும்படி, 6 அங்குலம் × 4 அங்குலம் இடைவெளி விட்டு நெருக்கமாக நட வேண்டும்.




மட்டா ஆழத்தில் மேலோட்டாகவும், ஒவ்வொரு குத்திலும் 2 முதல் 3 பயிர் வீதம் வைத்தும் நடவு செய்ய வேண்டும்.

நாற்று நட்ட 21-ஆம் நாள்களை எடுத்து விட்டு முதல் தடவையாக ஏக்கருக்கு 13 கிலோ தழைச் சத்தை (28.6 கிலோ யூரியா) மேலுரமாக இடவும்.

நாற்று நட்ட 55-வது நாள் இரண்டாவது தடவையாக ஏக்கருக்கு 7 கிலோ தழைச் சத்தை (15.4 கிலோ யூரியா) மேலுரமாக இடவும்.

நடவு வயலுக்குப் பின்கண்டவாறு 3 தடவை மருந்துத் தெளித்தல் சிறந்தது.

முதல் தடவை—நடவு செய்த 21-வது நாள்.

2-ஆம் தடவை — நடவு செய்த 42-வது நாள்.

3-ஆம் தடவை — நடவு செய்த 63-வது நாள்.

ஒவ்வொரு தடவையும் பின் கண்ட மருந்தில் ஒன்றையும், 400 கிராம் 'டைத்தேன்' மருந்தையும் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கையால் இயக்கும் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

200 மில்லி லிட்டர் 'பாரத்தியான்''.

அல்லது

400 மில்லி லிடர் (என்ட்ரின்'.

அல்லது

110 மில்லி லிட்டர் 'பாஸ்பாமிடான்'.

அல்லது

1,000 மில்லி லிட்டர் 'ஹிலியோடாக்ஸ்'.

நெல் பூவில் பால் பிடிக்கும் சமயத்தில் 5 கிலோ 'பி.எச்.சி' 10 சதத் தூளையும், 5 கிலோ 'டி.டி.டீ.' 5 சதத் தூளையும் கலந்து ஒரு ஏக்கரில் தூவான் மூலம் தூவ வேண்டும்.

மேற்கூறிய சாகுபடி முறைகளைத் தவறாது மேற்கொண்டால் ஒரு ஏக்கரில் இருந்து 45 மூட்டைகள் (3,375 கிலோ) வரை மகசூல் பெறலாம்.

★

# கிண்டி பொறியியல் கல்லூரியில்..

— அ. இளங்கோ —



**பொ**றியியல் கல்விக்கான பாடத்திட்டங்கள் சமுதாயத்தின் தேவைகளை ஒட்டியனவாக அமைதலை உறுதி செய்யும் பொருட்டு 1971-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஒரு கல்வித் திட்ட வளர்ச்சி மையம் கிண்டி பொறியியல் கல்லூரியில் நிறுவப்பட்டது. மையத்தின் முக்கிய குறிக்கோள்களாவன:

1. நாட்டின் பல்வேறு தொழில்துறைகளின் தேவைகளைச் சரியாக மதிப்பிட்டு, அத்தேவைகளை நிறைவு செய்வதற்கேற்ப இருக்கும் கல்வித் திட்டங்களைப் புதுப்பித்தல், புதிய கல்வித் திட்டங்களையும் வகுத்தல்.

2. பழைய, புதிய கல்வித் திட்டங்களைத் தக்க முறையில் மதிப்பிடுதல்.

3. பயிற்றலைச் செழுமைப் படுத்துதற்குரிய துணைக்கருவிகளைப் புனைந்து உருவாக்குதல்.

4. தொழில் நுட்பத்துறை ஆசிரியர்களின் தர உயர்வுக்கான வழிமுறைகளை வகுத்தல்.

இவையன்றி ''பொறிபுனை வும் வரைவியலும்'' (Machine Design and Drafting) ''அள வீட்டியல்'' (Metrology) ''தொலைக்காட்சிப் பொறி யியல், ''தொழில் மின்னணு வியல்'' (Industrial Electronics). ''கட்டடமதிப் பீட்டியல்'' முதலான துறை களில் கல்வித் திட்டங்கள் வகுக் கப்பட்டு விரைவில் செயல் படுத்தப்படவிருக்கின்றன.

மற்றும் நான்கு பாடங்களுக் குத் துணை நூல்களும் (Teachers and Students Guides) ஸ்லைடுகள், சார்ட்டுகள் முதலி யனவும் தயாரித்துள்ளது. அன்றியும் பல்தொழிற்கல்லூரி களுக்கான 30 பாடநூல்கள் தயாரித்து வெளியிடும் பணி யிலும் தொழிற்கல்வி இயக்க கத்திற்கு உறுதுணை புரிந்து வருகின்றது.

5. கல்வித் திட்டங்களை அன்றுடம் ஆய்ந்து செழுமைப் படுத்தக் கருத்தரங்குகளுக்கு ஏற்பாடு செய்தல்.

6. பொறியியலில் பாட நூல்கள் தயாரிப்பதை ஊக்குவித்தல்.

7. கல்வித்திட்ட செய்தி மையமாகப் பணியாற்றல்.

இம்மையம் தொடங்கிய சமயத்தில், மையத்தை உரிய வகையில் நெறிப்படுத்த, அமெரிக்க தேசிய அறிவியல் நிறுவனத்தின் சார்பில், ஹென்றி ஹார்விட்ஸ், வில்லியம் ரோஜர்ஸ் எனும் இரு அமெரிக்கப் பேராசிரியர்கள் பணியாற்றினர். ''உற்பத்தி உலோகவியல்'' (Production Metallurgy) என்னும் ஓராண்டுக் கல்வித்திட்டத்தை வகுப்பதில் பேராசிரியர் ஹார்விட்ஸ் துணைபுரிந்தார். பேராசிரியர் ரோஜர்ஸ் மையத்தின் அமைப்புமுறை பற்றி வழி காட்டியுதவியதுடன் கல்வித் திட்டம் பற்றி ஐந்து சிறு நூல்கள் எழுதியுள்ளார்.

இம்மையம் கிண்டி பொறியியல் கல்லூரியின் பட்ட மேற் கல்விப் பிரிவின் ஒரு துறையாக நான்கு அலுவலர்களுடன் இயங்கி வருகிறது. மையத்தின் பணிகளுக்கு உதவியாக வரைவியல் பிரிவு (Drafting Section) ஒன்றும், படிமப்பிரிவு (Reprography Section) ஒன்றும், ஒரு நூலகமும் கொண்டு விளங்குகின்றது. மையத்தின் பணிகளில் பல்வேறு தொழில் துறைவல்லுநர்கள், பேராசிரியர்கள் முதலியோர் கலந்து கொண்டு புதுப் புதுக் கல்வித் திட்டங்கள் வகுக்கும் பணியில் துணை செய்கின்றனர். மையத்தை மேலும் விரிவுபடுத்தி பாடத்துணைக் கருவிகள் உற்பத்தி, கல்வித் துறை ஆராய்ச்சிகள் முதலான புதிய பணிகளையும் மேற்கொண்டு பொறியியற் கல்வியின் வளர்ச்சிக்கு ஓர் அடிப்படைக் கருவியாக இம்மையத்தை உருவாக்க ஓர் பத்தாண்டுத் திட்டமும் அண்மையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இம்மையம் இதுவரை வகுத்துள்ள கல்வித் திட்டங்களாவன:

| | | |
|---|---|---|
| 1. உற்பத்தி உலோகவியல் (Production Metallurgy) | — | ஓராண்டு டிப்ளமா மேற்கல்வி |
| 2. பெட்ரோலிய இரசாயனத் தொழில் நுட்பம் (Petro Chemical Technology) | — | ,, |
| 3. உற்பத்திப்பொறிகளின் புழங்கலும், பழுதுபார்த்தலும் (Mechine Tool Maintenance and Repairs) | — | மூன்றரையாண்டு தொழிற் பயிற்சி டிப்ளமா கல்வித் திட்டம். |
| 4. விற்பனைக்கலை (Salesmanship) | — | ஓராண்டு சான்றிதழ் கல்வி |

களில் வழங்கப்படவில்லை. தற்பொழுது திருச்சியில் இந்த ரக விதைகள் கிடைப்பது கடினம். எனவே, உங்கள் மாவட்ட வேளாண்மை அலுவலர் அவர்களைச் சந்தித்து ''பூசா-33'' விதை வேண்டும் என்று கூறி அவ்விதைகளை வரவழைத்துத் தரும்படி கேட்டுக்கொள்ளலாம். அல்லது பின்கண்ட முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம் :

'ஜே' பண்ணை,
புதுப்பாக்கம் கிராமம்
(அஞ்சல்),
செங்கற்பட்டு மாவட்டம்.

புதுவை மாநிலத்தில் பல தனிப்பட்ட உழவர்கள் இந்த ரக விதைகளை விற்கிறார்கள். அவர்களிடமிருந்தும் விதைகளைப் பெறலாம்.

இந்த ரகம் இன்னும் பரிசோதனை நிலையிலேயே இருப்பதால், திட்ட வடிவமான சாகுபடி முறைகளைத் தற்பொழுது கூற இயலவில்லை. இருப்பினும் 16—10—74 தேதிய 'தமிழரசு'' இதழில் குறிப்பிட்டுள்ளது போல ஏக்கருக்கு 18 கிலோ விதை வீதம் நாற்று விட்டு, ஏக்கருக்கு 24 கிலோ தழைச்சத்து, 16 கிலோ மணிச்சத்து, 16 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அடியுரமாக இட்டு, 18 கிலோ தழைச்சத்தை மூன்று தடவைகளில் மேலுரமாக இட்டுச் சாகுபடி செய்யலாம். இதன் வயது 108 நாட்கள். உயர் விளைச்சல்களுக்குச் செய்யும் இதர சாகுபடி முறைகளையே இதற்கும் மேற்கொள்ளலாம்.

''சி. எஸ். எச். 5'' ரக வீரியச் சோளத்தை டிசம்பர், ஜனவரியில் விதைத்து, நாற்று விட்டு நடவு செய்யலாம். இதன் சாகுபடி முறை முழுவதும் 16—1—1975 தேதிய தமிழரசு இதழில் 7, 8 பக்கங்களில் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அதனைப் படித்து சி.எஸ்.எச். 5' (சி.ஒஎச். 1) ரகச் சோளத்தில் சாகுபடி முறையைத் தெரிந்து கொள்ளுங்கள். அல்லது கொஞ்சம் பொறுத்து இருந்தால், டிசம்பர் திங்களில் 'தமிழரசு' இதழில் - பருவத்திற்கு முன்னாக மீண்டும் இதன் சாகுபடி முறைகளை வெளியிடும்போது தெரிந்து கொள்ளலாம்.



## "சி.எஸ்.எச் 5" சோளம்

**வினா:** 1—6—1975 தேதிய தமிழரசு'' இதழில் கத்தரி வெண்டையைத் தாக்கும் பூச்சிகளை ஒழிக்கப் புதிய முறை என்ற தலைப்பின் கீழ், கண்ட விவரங்களைப் படித்து மிகவும் குழப்பம் அடைந்தேன்.

''டெமிக்'' 10 சதம் மருந்தைத் தயாரிப்பவர்கள் (யூனியன் கார்பைடு) 'நிச்சயமாக இந்தக் குருணை வடிவ மருந்தை பருத்தியைத் தவிர, வேறு எந்தப் பயிருக்கும் போடக் கூடாது என்று சிபாரிசு செய்கிறார்கள். அப்படி மீறிப் போட்டால், அதன் விஷ சக்தி உணவு மூலம் நமக்கும் பரவும் என்று உறுதியாகக் கூறுகிறார்கள். மேலும் ஒரு கிலோ ரூபாய் 26.35. ஒரு எக்டேருக்கு 10 கிலோ போட்டால் நிச்சயம் இலாயம் கிடைக்காமல் போய்விடக் கூடுமல்லவா? உதாரணமாக மேற்படி கம்பெனியின் பெரிய பொறுப்பில் உள்ள அதிகாரியிடம், 'மிளகாய்க்குப் போடலாமா?' என்று கேட்டேன். 'கண்டிப்பாய் போடவேண்டாம்' என்று கூறினார். ஆகவே, எது சரி என்று அடுத்த இதழில் திருத்தம் வெளியிடுவீர்கள் என்று நம்புகின்றேன்.

—அ. இராமலிங்கம்;
விவசாயம், வியாபாரம்,
விருபாட்சி,
பழனி வட்டம்,
மதுரை மாவட்டம்.

**விடை:** நீங்கள் குழப்பம் அடைந்ததற்குக் காரணம், ''கத்தரி வெண்டையைத் தாக்கும் பூச்சிகளை ஒழிக்கப் புதிய முறை'' என்ற கட்டுரையை நீங்கள் ஆழ்ந்து படிக்காததே காரணமாகும். கட்டுரையில் ''டெமிக்'' 10சத குருணையைக் கத்தரிச் செடிக்கு நாற்று நட்ட 15-வது நாளிலும், வெண்டைச் செடிக்கு விதைத்த 10-வது நாளிலும் போடும்படியே பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. இம்மருந்து கத்தரிச் செடியிலும், வெண்டைச் செடியிலும் 40 முதல் 50 நாட்கள் வரைதான் செடியினுள் இருந்து, செடியின் சாற்றை உறிஞ்சி வாழக் கூடிய பூச்சிகளான அசுவணி, தத்துப் பூச்சி, சிலந்திப் பூச்சி ஆகியவைகளைக் கட்டுப்படுத்துகிறது என்றே கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

பொதுவாகக் கத்தரி நாற்று நட்ட 50 நாட்களுக்குப் பிறகே காய் கொடுக்கத் துவங்குகிறது. அதுபோல், வெண்டையும், விதைத்த 40 முதல் 50 நாட்களுக்குப் பிறகே காய் கொடுக்கத் துவங்குகிறது. எனவே, காய் கொடுக்கத் துவங்கும் நேரத்தில் 'டெமிக்' மருந்தின் நச்சுத் தன்மை குறைந்துவிடும். ஆகவே, ''டெமிக்'' 10 சத மருந்துக் குருணையைக் கத்தரிக்கு நாற்று நட்ட 15-வது நாளிலும், வெண்டைக்கு விதைத்த 10-வது நாளிலும் இடுவதில் தவறு இல்லை.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பூச்சி இயல் துறையில் பணியாற்றும் ஆராய்ச்சியாளர்களே, அக்கட்டுரையில் கண்ட கருத்துக்களைத் தெரிவித்துள்ளதால், கத்தரிக்கும், வெண்டைக்கும் ''டெமிக்'' 10 சத குருணை மருந்தை இடுவது பற்றி நீங்கள் குழப்பம் அடையவே வேண்டாம்.

எக்டேருக்கு 10 கிலோ மருந்து என்றால் ஏக்கருக்கு 4 கிலோ அளவுதான் ஆகும். 4 கிலோவுக்கு ஆகும் செலவைப்பார்த்தால், சில சமயம் முதலுக்கே மோசமாகிவிடும் ! [...]றியுள்ளதுபோல, 1 [...] ரூபாய் 26.25 வீதம் என்று வைத்துக் கொண்டால், 4 கிலோவுக்கும் செலவு ரூபாய் 105.40 ஆகும். இவ்வாறு மருந்து தெளிப்பதற்காக ஏக்கருக்கு மருந்துக்காக மட்டும் ரூபாய் 105.40 செலவிட்டால் இலாபம் கிடைக்காமல் போய் விடக் கூடுமல்லவா என்று தாங்கள் கேட்பது நியாயமான கேள்விதான் என்றாலும், இந்த அளவு செலவுச் செய்தால்தான் நிகர இலாபம் அதிகமாகும். இல்லாவிட்டால், மகசூல் பெருமளவில் குறைந்து, நட்டம் ஏற்பட்டுவிடும். எனவே, பயிர்ப் பாதுகாப்பிற்காகச் செய்யும் செலவு என்றுமே வீண் இல்லை என்று நம்பலாம்!

மிளகாய் செடி காய்த்துக் கொண்டிருக்கும் பொழுது ''டெமிக்'' போட வேண்டாம் என்று அக்கம்பெனியின் அதிகாரி கூறியிருக்கலாம். எனவே, அதை வைத்து கத்தரிக்கும், வெண்டைக்கும் ''டெமிக்'' போடக் கூடாது என்று தாங்கள் கருதுவது சரியல்ல! இந்த விளக்கத்திற்குப் பிறகும் உங்களுக்குக் குழப்பம் தீரவில்லை ஏனில், நீங்கள் குறிப்பிட்ட கம்பெனியின் அதிகாரிக்கு எழுதி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளது 'சரியா? தவறா?' என்று கேளுங்கள். அவர் கத்தரி, வெண்டை ஆகியவைகளுக்கு 'டெமிக்' போடுவது தவறுதான் என்று கூறினால், தயவு செய்து எங்களுக்கும் தெரிவிக்கவும். நாங்கள் தொடர்புடையவர்களுக்கு எழுதிக் கேட்டு, முடிவை மற்றவர்களுக்கும் தெரிவிக்கலாம்.

**வினா:** எங்கள் ஊர் மலைப் பிரதேசம். இப்பொழுது இங்கு மழைக் காலம். 'ஐ. ஆர். 20', 'ஜெயா' பயிர் செய்ய உள்ளோம். தூர் அழுகல் நோய், தண்டு அழுகல் நோய் வரக்கூடும். இதைக் கட்டுப்படுத்த எந்த மருந்தை உபயோகிக்க வேண்டும்? அண்ணாமலைக் கத்தரி, கோவில்பட்டி மிளகாய் இரகங்களை நீர் தேங்காத மேட்டு நிலத்தில் பயிர்செய்யலாமா? இலவசமாகவோ அல்லது பாதி விலைக்கோ தெளிப்பான்கள் வாங்க யாருக்கு விண்ணபிக்க வேண்டும்? தெளிப்பான்கள் குறைந்த விலையில் எங்குக் கிடைக்கும்?

—விஜயலட்சுமி,
சேக்கல்முடி தோட்டம்.

**விடை:** மழை காலத்தில் ஏற்கனவே 'ஐ. ஆர். 20', 'ஜெயா' போன்ற இரகங்களைப் பயிரிட்டு, நல்ல மகசூல் பெற்று இருந்தால், இப்பொழுது அவைகளைப் பயிரிடுங்கள். இல்லையெனில், மலைப்பகுதியில் டிசம்பர் முதல் வாரத்தில் நாற்றுவிட்டு, 25 நாட்களில் நடவுசெய்யவும். அப்படிச் செய்தால் கோடை அறுவடை மழைக்கு முன் செய்து, நல்ல மகசூல் பெ[...] லாம். இந்தப் பருவத்தி[...] மலைப் பிரதேசத்தில் மே[...] கண்ட இரகங்களைப் பயிரி[...] டால், மழை மற்றும் குளிர்ச்[...] யின் காரணமாக அந்த இரக[...] கள் நோய் மற்றும் பூச்சிகளா[...] பெரிதும் பாதிக்கப்பட்டு ம[...] சூல் குறையும். எனவே யோசித்துச் செய்யுங்கள்.

## "கேளுங்கள் கொடுக்கப்படும்" பகுதி பற்றிய முக்கிய அறிவிப்பு

சிறப்பாகத் தமிழக உழவர் பெருமக்களுக்கு ஏற்படும் ஐயங்களைத் தீர்த்து வைப்பதற்காகவும், பொதுவாகத் தமிழகத்தின் பொதுமக்களுக்குத் தமிழ்நாடு அரசின் திட்டங்களைப் பற்றி விளக்கிடுவதற்காகவும், 'தமிழரசு' இதழில் ''கேளுங்கள் கொடுக்கப்படும்'' என்ற பகுதி வெளியிடப்பட்டு வந்தது. இப்பகுதிக்கு நாளொன்றுக்கு 50 முதல் 100 கேள்விகள் வரத் தொடங்கின. அவைகளில் பல அரசியல் பிரச்சினை கலந்ததாகவும், சட்டப் பிரச்சனை மிகுந்ததாகவும் இருந்ததால் அவைகளை நீக்கிவிட்டு முக்கியமான கேள்விகளுக்கு மட்டுமே பதிலளித்து வந்தோம். அதனால் சிலர் தங்கள் கேள்விகளுக்குப் பதில் வரவில்லை என்பதால், ''கேளுங்கள் கொடுக்கப்படும்'' பகுதி தேவையில்லை என்று கூறி தாறுமாறான முறையில் மடல் எழுதத் தொடங்கினார்கள்.

இந்த நிலையில்தான், ''கேளுங்கள் கொடுக்கப்படும்'' என்ற பகுதி ''பயனுடையதா? அல்லது பயனற்றதா ?'' என்ற உண்மையைத் தெரிந்துகொள்ள விரும்பி, திடீரென அப்பகுதியை நிறுத்திவிட்டோம்.

'' தமிழரசு இதழில் 'கேள்வி—பதில்' பகுதி இல்லாததால் தமிழரசு இதழைப் படிக்கவே விருப்பம் இல்லை. மீண்டும் 'கேள்வி—பதில்' பகுதியை இணைப்பீர்களா?'' என்று மதுரை மாவட்டம், பழனி வட்டம், விருப்பாட்சி என்ற ஊரைச் சார்ந்த திரு. அ. இராமலிங்கம் என்பவர் கேட்டுள்ளார். இது போல், பல உழவர் பெருமக்களிடமிருந்தும், தொழில் துவங்க முனையும் ஆர்வலர்களிடமிருந்தும், குறிப்பாக வேலைதேடும் பட்டதாரிகளிடமிருந்தும் 'கேள்வி—பதில்' பகுதியை மீண்டும் இணைக்கும்படி வேண்டுகோள்கள் வந்த வண்ணம் உள்ளன. எனவே, ''கேளுங்கள் கொடுக்கப்படும்'' பகுதி பயன் உடையது என்பது தெளிவாகி விட்டது.

ஆகவே, இந்த இதழ் முதல் மீண்டும் ''கேளுங்கள் கொடுக்கப்படும்'' பகுதி தொடர்ந்து வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அரசு இதழ் என்பதால், ஒரு கட்டுத் திட்டத்திற்கு உட்பட்டே பதில் அளிக்கமுடியும். எனவே, கேள்விகேட்பவர்கள் ஒவ்வொருவரையும் அரசியல் கலக்காமல், சட்டபிரச்சனைக்குப் உட்படுத்தாமல் ஒன்றிரண்டு கேள்விகளை மட்டும் கேட்கும்படி பணிவுடன் வேண்டுகின்றோம்.

சில கேள்விகளுக்குப் பல ஆதாரங்களை ஆராய்ந்தே பதில் அளிக்க வேண்டியுள்ளது. மற்[...] றும் சில கேள்விகளுக்கு த[...] தொடர்புடைய அலுவலர்களிட[...] மிருந்து கேட்டு அறிந்தே பதில் அளிக்க வேண்டியுள்ளது அதன்காரணமாக சிலருடை[...] கேள்விகளுக்கு உடன் பதி[...] அளிக்க முடிவதில்லை எனவே கேள்வியை அனுப்பிவிட[...] உடனே அடுத்த இதழிலே[...] பதில் அளிக்கும்படி கேட்[...] வேண்டாம் என்றும் வேண்[...] கின்றோம்.

—'ஆர். எம்.




**the conqueror comes to tamilnadu**

Guarantee & after sales service.
Available in 3 attractive models-
* Sartaj,
* Sanjeev,
* Sangam.
Book your set today.

STANDARD TV India's largest TV Group.

After capturing Amritsar, Bombay, Delhi & Poona, the much longed for TV is entering the Madras Metropolis - to conquer most of your pleasant evenings.

Standard TV! - combines tomorrow's TV technology today- with all the convenient features- Vivid picture clarity. Excellent sound reproduction. Lower power consumption. Longer life. Superb finish.

*Sole Distributors for Tamilnadu :-*

**SUDARSAN TRADING CO LTD.,**
16/1, Whites Road, Madras-14.

Authorised Dealers:—
GAMBION ELECTRONICS, 12, First Main Road, Gandhi Nagar, Madras-20. V. G. PANNEERDAS & CO., 51, Jeenis Road, Madras-15. 27, Ranganathan Street, Madras-17. 27, Rattan Bazaar, Madras-3. 7/8, Mount Road, Madras-2. STANDARD FURNITURE CO., 32, General Patters Road, Madras-2. SUNIL BROTHERS, Congress Buildings, 111/29, Mount Road, Madras-6. 68/2A, Arcot Road, Madras-24. SHAKTHI TRADING CO., 13, Ritchie St., Madras-2. SUJATHA AGENCIES, 55/56, Arcot Road, Madras-24.

ARIES/330/STC





'குதிரை வாலி' என்பது ஒரு வகை உணவு தானியப் பயிர்! இது, குறைந்த பரப்பளவில் பயிராகும் சிறு தானிய வகையை (Minor millets) சார்ந்தது. அரிசியைப் போல் சோறு சமைப்பதற்கு, குதிரை வாலியும் பயன் படுகிறது. மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த புன்செய் நிலச் சிறு உழவர்களின் உணவில் குதிரைவாலி முக்கிய இடம் பெறுகிறது.

**அரிசியைவிட குதிரை வாலி சிறந்தது!**

குதிரைவாலி தானியத்தில், அரிசியில் உள்ளதை விடக் குறைந்த அளவு மாவுப் பொருள்களும் (Carbo-hydrate), அதிக அளவுக் கொழுப்புச் சத்தும் (Fat), தாதுப் பொருள்களும் (Mineral matter) இரும்புச் சத்தும் (Iron), பாஸ்பரஸ் சத்தும் (Phosphorus) சுண்ணும்புச் சத்தும் (Calcium) பின்கண்டவாறு அடங்கியுள்ளன.

**ஊட்டச்சத்தின் அளவுகள் :**

| | குதிரை வாலி (சதம்) | அரிசி (சதம்) |
|---|---|---|
| புரதச் சத்து ... | 6.22 | 6.85 |
| கொழுப்புச் சத்து ... | 2.23 | 0.55 |
| மாவுப் பொருள் ... | 65.41 | 79.41 |
| சுண்ணும்புச் சத்து ... | 0.019 | 0.007 |
| பாஸ்பரஸ் சத்து ... | 0.282 | 0.108 |
| தாதுப் பொருள்கள் ... | 4.44 | 0.50 |
| இரும்புச் சத்து (மில்லிகிராம்/கிராம்) ... | 2.86 | 1.02 |
| புரதச்சத்தில் உள்ள உயிரியல் மதிப்பு (Biological value of proteins) ... | 88 | ... |

குதிரை வாலியை (Echinocholoa Colona Var Frumentacea) தெலுங்கில் 'ஒடாலு' (Oodalu) என்றும், இந்துஸ்தானியில் 'சான்வா' (Sanwa) என்றும் கூறுகின்றனர்.

குதிரைவாலி உணவுப் பயிர் மட்டுமல்ல; ஊட்டச்சத்து மிகுந்த கால்நடைத் தீவனப் பயிருமாகும்! குதிரைவாலி பயிரின் தட்டையை கால்நடைகள் விரும்பி உண்கின்றன.

வளர்ச்சி நிலைக்கு ஏற்ப, குதிரைவாலி தீவனத்தில் பின்கண்டவாறு சத்துகள் உள்ளன.

**தீவனத்தில் உள்ள சத்துகள்**

| | பூ பூத்த உடன் தீவனத்தில் உள்ள சத்துக்கள் | கதிர் முற்றிய நிலை தீவனத்தில் உள்ள சத்துக்கள் |
|---|---|---|
| தண்ணீர் ... | 10.24 | 10.47 |
| புரதச் சத்து ... | 8.41 | 6.12 |
| 'ஆல்புமினுய்ட்ஸ்' ... | 5.79 | 4.49 |
| 'ஈதர் எக்ஸ்ட்ராக்ட்டிவிஸ்' | 2.54 | 1.52 |
| நைட்ரஜன் இல்லாத வடிசல் (Extract) ... | 32.03 | 43.33 |
| நார்ப்பொருள் ... | 35.86 | 29.10 |
| சாம்பல் ... | 10.92 | 9.41 |

தீவன மதிப்பையும், தாதுப் பொருள்களின் அடக்கத்தையும் பொறுத்த வரையில், குதிரை வாலியின் தட்டை, சோளத் தட்டைக்கு இணையானதாகும்!

**உலகில் குதிரைவாலி!**

உணவுப் பயிராகவும், கால்நடைத் தீவனப் பயிராகவும் விளங்கும் குதிரைவாலி, ஆப்பிரிக்கா, இந்தியா, சைனு, ஜப்பான், அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகியவற்றில் பயிரிடப்படுகிறது. சைனுவிலும், ஜப்பானிலும் நெல் சாகுபடி பயன் தராதபோது, குதிரைவாலியை மாற்றுப் பயிராகப் (Substitute) பயிரிடுகின்ருர்கள். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மக்காச் சோளம் நன்கு பயிராகாத இடங்களில் குதிரை வாலியைத் தீவனப் பயிராகச் சாகுபடி செய்கின்ருர்கள். பஞ்சாப் மாநிலத்தில் குதிரை வாலியைப் பயிரிட்டு, அப்படியே உழுது மடக்கித் தழை எருவாகப் பயன்படுத்துகின்ருர்கள்.

**வறட்சியைத் தாங்க வல்லது!**

மற்ற சிறு தானியங்களைப் போலவே குதிரைவாலி, வளங் குறைந்த நிலங்களிலும், வறட்சி நிலையிலும் பயிராகக் கூடியது! அதே நேரத்தில் மற்ற சிறு தானியங்களுக்கு இல்லாத ஒரு சிறப்புக் குணத்தைக் குதிரைவாலி கொண்டுள்ளது. அதாவது தண்ணீர் தேங்கி நிற்கும் நிலையைத் (Water logged condition) தாங்கிக் கொள்ளும் சக்தி, குதிரைவாலிக்கே உரிய சிறப்புக் குணமாகும்!

இதன் காரணமாகக் குதிரைவாலியை, ஏரிகளின் உட்பகுதிகள், அடிக்கடி வெள்ளத்தால் மூழ்கக் கூடிய ஆற்றங்கரைப் பகுதிகள் போன்ற கரையோரப் பள்ளமான நிலங்களிலும் (Low-lying lands) பயிரிட முடிகிறது.

# மனிதனும் கொசுவும்

ஆண்டாண்டுக் காலமாக கொசுக்கள் மானிட வர்க்கத்தோடு உடனுறைந்து வருகின்றன. நகர்ப் பகுதிகளிலும் நாட்டுப் புறங்களிலும் வாழும் மக்கள் நன்கறிவர். தங்கள் நல்வாழ்வுக்குக் கேடு விளைவிப்பவை கொசுக்கள் என்பதை இரவு நேரங்களில் வருகைபுரிந்து, உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேறுபாடின்றி யாவருக்கும் தம் நச்சுக் கடியைப் பகிர்ந்தளிப்பவை இக் கொசுக்கள். இவற்றின் கடியினால் இராக் காலங்களில் உறக்கமிழந்து தவிக்கும் உணர்வு மிக்கோர் பற்பலர். தொல்லை தருபவை கொசுக்கள் என்பதை எல்லாரும் தெரிந்திருக்கிறார்கள் என்ற போதிலும், இவை மக்களிடையே நோயைப் பரப்பும் தன்மையும் வாய்ந்தவை என்பது பலருக்கும் தெரியாது.

**நோய் பரப்பும் கொசுக்கள் :**

கொசுக்கள் மூலமாக மக்களிடையே பல நோய்கள் பரவுகின்றன. இவற்றுள் தலையாயது நம் மாநிலத்தைச் சேர்ந்த கிராமப் பகுதிகளிலும், சிற்சில நகர்ப் புறங்களிலும் இந்நோய் பெரிதும் விரிவாகப் பரவலாயிற்று. இந்நோய் காரணமாக விட்டு விட்டு காய்ச்சல் தொடர்ந்து பல ஆண்டுகளுக்கு வருகிறது. நோய்க்குள்ளானோர் சோகை, மண்ணீரல் வீக்கம், பலக் குறைவு ஆகியவற்றால் பாதிக்கப்படுகின்றனர். மலேரியாவால் பீடிக்கப்பட்டோரில் நூற்றுக்கொருவர் சாக்காடு மெய்தினர். இந்நோயைக் கட்டுப்படுத்தாத நிலையிலுள்ள நாட்டின் வேளாண்மை-தொழில் வளர்ச்சி முதலியன தடைபடவும் ஏதுவாகிறது.

நம் மாநிலத்தில் பொதுவாகப் பரவி நிற்கும் மற்றுமொரு நோய் யானைக்கால் வியாதியாகும். இந்நோயும் ஒருவருக்கொருவர் கொசுக்கள் மூலமே பரவுகிறது. இந்நோய் தொற்று ஏற்பட்டவுடன் முதலில் காய்ச்சலும், கவட்டியில் வீக்கமும் உண்டாகின்றன. தொடர்ந்து தொற்று ஏற்படுவதால் கால்கள், விதைப்பை, மார்பகம் ஆகிய பகுதிகளில் வீக்கம் ஏற்பட்டு யானைக்கால் நோய் முற்றிய நிலையடைகிறது. இந்நோயினால் பாதிக்கப்பட்டோர் உடற்கூறு தொடர்பான இயலாமைக்குள்ளாவதோடு, சமுதாயம் கற்பித்துள்ள கலங்கத்திற்கும் ஆளாகி உள்ளம் வெதும்பி நிற்கின்றனர். பரவலாகத் தெரியாத, ஆனால் குறிப்பிடத்தக்க இதர நோய்கள் 'டெங்கு'க் காய்ச்சல், ஜப்பானிய மூளைவீக்க நோய் ஆகியவையாகும். இந்நோய்கள் நகரப் பகுதிகளில் உண்டாகின்றன. பெருவாரியாகப் பரவி வரும் தொற்று நோயாகவும், குறிப்பிட்ட பகுதியில் மட்டும் பரவி நிற்கும் நோயாகவும் இது காணப்படுகிறது. 'டெங்கு'க் காய்ச்சல் சாதாரணமாக மழைக் காலத்துக்குப் பின் உண்டாகிறது. கொடுமையான இந்நோய்த் தொடர்பாக காய்ச்சலும் மேலிடுகிறது. ஜப்பானிய மூளை வீக்க நோய் நகரங்களிலும், மாநகரங்களிலும் ஏற்பட்டு, பீடிக்கப்பட்டோரின் மத்திய நரம்பு மண்டலத்தையே தாக்க முற்படுகிறது.

கொசுவினால் பரவும் மற்றுமொரு பயங்கர நோய் 'மஞ்சள் காய்ச்சல்' ஆகும். இந்தியாவில் இந்நோய் இல்லை என்றாலுங்கூட, இது பரவுவதற்கான எல்லா சூழ்நிலையும் இங்குத் தென்படுகின்றன. துரதிருஷ்டவசமாக இந்நோய் இங்குத் தோன்றிவிடுமானால், காட்டுத் தீ போல் பரவி ஏராளமான உயிர்களைக் கொள்ளை கொள்ளும் நிலை நேரிட்டு விடக்கூடும்

தொல்லைகள் குறைய, பரவிடும் நோயினைத் தடுக்க கொசுக்களின் கொட்டத்தைக் கட்டுப்படுத்துதல் அவசியமாகிறது.

**கொசுக்கள் விளைவிக்கும் பிரச்சினை:**

கொசுக்களின் பிரச்சினை நேரிடுவதெப்படி? தனி மனிதன், அவன் சார்ந்து வாழும் சமூகம் ஆகியோரின் வாழ்க்கை முறைகளைப் புரிந்து கொண்டோர்க்கு இக்கேள்விக்கு விடையளிக்க இயலும். வீட்டில் வளரும் விலங்குகளைப் போலவே, கொசுக்களும், மக்களுடன் இணைந்து வாழ்கின்றன. வீட்டினரும் வீட்டு விலங்குகளும் இக்கொசுக்கள் எளிதில் இரத்தம் குடித்து வாழ வாய்ப்பாக உள்ளனர். அது மட்டுமல்ல, வீட்டின் சுற்றுப்புற சூழ்நிலைகளும் கொசுக்களின் இனப்பெருக்கத்துக்கும் துணைபுரிகின்றன. பருகவும், சமைக்கவும் துப்புரவு செய்யவும் வேளாண்மைத்தொழில் முதலியவற்றுக்குப் பயன்படும் தண்ணீர் மனிதரின் சுற்றுப் புறப் பகுதிகளில் இன்றியமையாதலன்றும்.

தோன்றி வளர்ந்து பெருகவும், இனப் பெருக்கத்தை உண்டாக்கவும் கொசுக்களுக்குத் தேவைப்படுவதும் தண்ணீரேயாகும். தோன்றிப் பெருகுவதற்கு உகந்த ஒவ்வொரு ரகக் கொசுக்களும் ஒவ்வொரு குறிப்பிட்ட இடத்தைப் பற்றுக் கோடாகக் கொள்ளுகின்றன. தூய நீர் தென்படும் ஆறுகள், அருவிகள் வாய்க்கால்கள், குளம் குட்டைகள் முதலியவற்றில் சில கொசுக்கள் குடியேறுகின்றன. உவர்ப்புத் தண்ணீர் நிறைந்த கிணறுகளில் தங்குகின்றன. சில கொசுக்கள் சாக்கடை நீரே ஏற்றதென வாசம் செய்கின்றன. பட்டண வாசத்தில் பழக்கப்பட்ட சில ரகக் கொசுக்கள் உள்ளன. அவை மாடியிலுள்ள தண்ணீர்த் தொட்டிகள், மரத்தொட்டிகள், பீப்பாய்கள், கூரைவாய்கள், ரப்பர்டையர்கள், மாவரைக்கும் கற்கள், உடைந்த சட்டிகள் முதலியவற்றில் தேங்கி நிற்கும் தண்ணீரில் தங்குகின்றன. நகர்ப்புற வளர்ச்சியாலும், தொழில் வளர்ச்சியாலும் வீட்டுக்கும் தொழிலகத்துக்கும் தண்ணீர் பயன்படுத்துவது அதிகப்படலாயிற்று. நன்முறையில் திட்டமிடப் பெறாத வகையிலான நகர்ப்புற வளர்ச்சி, தண்ணீர் வழங்குவதில் பற்றாக்குறை, கழிவுப் பொருள்கள் சாக்கடை நீர் ஆகியவற்றுக்கான போதிய வடிகால் வசதியில்லாமை முதலியவை காரணமாக மக்கள் தண்ணீரைத் தேக்கி வைக்கும் முறைகளும் சுகாதாரக் குறைவான சூழ்நிலையில் வாழும் தன்மைகளும் நேரிடலாயின. இவையெல்லாம் கொசுக்களுக்குத் தங்கள் இனப்பெருக்கத்தை மேலும் பல மடங்கு வளர்த்துக் கொள்ள வாய்ப்பளித்து விடுகின்றன. எனவே, கொசுப் பெருக்கப் பிரச்சினை தண்ணீர் வழங்குதல்-வடிகால் முறை ஏற்பாட்டுத் திட்டங்களையே நேரடியாகச் சார்ந்துள்ளது எனலாம். மக்களின் அலட்சியப் போக்கும் அறியாமையுமே கொசுக்களின் பெருவாரி வளர்ச்சிக்குத் துணை செய்கின்றனவென்றால் மிகையாகாது. இவ்வகையில், நகர்ப்புறங்களில் மக்கள் தாமே வழி வகுத்துக் கொடுக்கும் கணக்கற்ற கொசு உற்பத்தி நிலைகளும், அடர்த்தியாக வாழும் மக்கள் நெருக்கமும் குறைவற்ற கொசு வளர்ச்சிக்கு நிறைவான துணை போகின்றன.



**கொசுக்களின் வாழ்வியல்**

கொசுக்களின் வாழ்வியல் நான்கு கட்டங்களாக அமைந்துள்ளன-முட்டை-புழு வடிவப் பூச்சி (மூன்றும் நிலையாகிய) கூட்டுப் புழுப் பருவப்பூச்சி முதிர்ச்சியுற்ற நிலை.

தண்ணீர் தேங்கியுள்ள இடத்தில் பெண் கொசு முட்டைகளையிடுகிறது. அதன் வாழ்நாளாகிய ஏறக்குறைய ஒரு மாதத்தில் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை பெண் கொசு 100 முதல 150 முட்டைகள் வரையில் இடுகிறது. இடப்பட்ட 24 மணி நேரத்துக்குள் ஒவ்வொரு முட்டையிலிருந்து புழுவடிவப் பூச்சி வெளியாகிறது. 'லார்வா' எனப்படும் இப்புழுவடிவப் பூச்சியால் தண்ணீரில் மட்டுமே உயிர் தரிக்க முடியும்.

இப்படியாகத் தண்ணீரில் திளைத்து, வளர்ந்து நான்கு கட்ட வளர்ச்சிப் பருவத்தைத் தாண்டி, ஏறத்தாழ ஒரு வார காலத்தில் அரைப் புள்ளி உருவிலான 'ப்யூபா' எனப்படும் கூட்டுப் பருவப் பூச்சி நிலையினையடைகிறது. அடுத்த 24 மணி நேரத்தில் இதிலிருந்து முதிர்ச்சியுற்ற நிலையில் கொசு தோன்றிவிடுகிறது. இப்படித் தோன்றிய கொசுக்கள் நிலத்தில் வாழும் தன்மையுடையவை. ஆண் கொசுக்கள் மிகக் குறுகிய காலமே வாழக் கூடியவை. செடி, கொடிகள் மூலம் கிடைக்கும் சாறுகளே இவற்றின் உணவாகும். ஆண் கொசுக்கள் மூலம் கருவுறும் பெண் கொசுக்கள் உணவுக்கென மனித இரத்தம் அல்லது விலங்குகளின் இரத்தத்தை நாடிச் செல்கின்றன. கருவுற்ற பெண் கொசு நிறைவு நிலையடைய வேண்டுமானால் இரத்தம் உறிஞ்சி உணவு பெற வேண்டியது அவசியமாகிறது. இப்படி இரத்தம் உட்கொண்ட பெண் கொசு வீடுகளிலும் மாட்டுக் கொட்டகைகளிலும் தங்குகிறது. உட்கொண்ட இரத்தம் செரிக்கவும், கரு முட்டை முதிர்ச்சியடையவும் இரண்டு நாட்கள் பிடிக்கின்றன. முட்டைகளை இட்ட பிறகு மீண்டும் இரத்த உணவை நாடிச் சென்று திரும்பத் திரும்ப தன் பணியைத் தொடருகிறது பெண் கொசு.

இரண்டு நாட்களுக்கொரு முறை இரத்தம் உறிஞ்சும் பழக்கம் வைத்துள்ள இப் பெண் கொசு, ஒரு நபரிடமிருந்து இன்னொருவருக்கு வெகு எளிதில் நோய்த் தொற்றுதலை ஏற்படுத்திக் கொண்டே செல்லும் தன்மையைப் பெற்றுள்ளது.

**கொசுப் பிரச்சினைக்குத் தீர்வு காண ?**

இரண்டு முறைகளில் இப் பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிக்கலாம். (1) தொல்லை தொந்தரவைப் போக்கிக் கொள்ள கொசுக்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துதல். (2) நோயைக் கட்டுப்படுத்துதல் நோய்களை ஒழிக்க வேண்டுமாயின், கொசுக்களை ஒழிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. நோயினை ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குத் தொற்ற வைக்கும் நிலை ஏற்படாத வகையில் கொசுக்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அன்றியும், கொசுக்களை அறவே ஒழிப்பதென்பது கடினமான காரியம். மனிதரின் சுற்றுச் சார்பு சூழ்நிலையில் தக்கதொரு மாற்றத்தை உண்டாக்கினாலொழிய இது இயலாது. கொசுத் தொல்லையைத் தடுக்க-கொசு வளர்ச்சியைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கலாம். கொசு உற்பத்தி நிலைகளைக் கண்டறிந்து அவற்றைக் குறைப்பது அல்லது களைவது மூலமாகக் கொசுக்களின் தொல்லையைத் தடுத்து நிறுத்தலாம். கொசுக்களைக் கட்டுப்படுத்துவதென்பது 'லார்வா' எனப்படும் புழுவடிவப் பூச்சி உற்பத்தியினை இரசாயன முறைகள் மூலம் கட்டுப்படுத்துதல் ஆகும். டி, டி, டீ. போன்ற பூச்சிக் கொல்லி மருந்துகளை வீடுகளில் வீசித் தெளிப்பதன் மூலமும் கொசுக்களைக் குறைக்கலாம். ஆயினும் இன்றியமையா சந்தர்ப்பங்களைத் தவிர, மற்றபடி நகர்ப் புறப் பகுதிகளில், இம்முறை மேற் கொள்ளப்படுவதில்லை. காரணம், இம் மருந்துக்காகும் அதிகப்படியான செலவு, மருந்தடிக்கும் பணியைப் போதிய அளவுக்கு நிறைவேற்றுவதில் ஏற்படும் கஷ்டம் நகர்ப்புறங்களில் உள்ள கொசுக்கள் இப் பூச்சிக்கொல்லி மருந்துகளையும் சமாளித்து உயிர்வாழும் தன்மையை விரைவில் பெற்று விடுதல் போன்றவையாகும்.

கொசுக்கள் உற்பத்தியாகி வளர தண்ணீர் தேவையென்பது யாவரும் அறிந்ததே. தேங்கி நிற்கும் கொசு உற்பத்திக்கு உதவும் அபாய கட்டத்துக்கு வரவேண்டுமென்றால், குறைந்த பட்சம் ஒரு வார காலத்துக்காவது அத்தண்ணீர் தேங்கி நின்றாக வேண்டும். தொல்லை விளைவிக்கும் கொசுக்கள் முழு வளர்ச்சியுற்று வெளியேற இக்கால கட்டம் தேவைப்படுகிறது. ஆகவே, இத்தகைய கொசு உற்பத்தி நிலைகள் ஆங்காங்கு உண்டாவதைத் தடுக்க வேண்டியது முதற்கண் அவசியமாகும். இரண்டாவதாக, கொசுக்களைத் தண்ணீரை நெருங்க விடாமல் தடுப்பதற்கான முறைகளை மேற்கொள்ள வேண்டும். இறுதியாக, இவையெல்லாம் சாத்தியப்படவில்லையானால், கொசு உற்பத்திக்குத் தகுதியற்றதாக அத் தண்ணீரை ஆக்குவதற்குத் தெரிந்த முறைகள் அனைத்தையும் செயல்படுத்தப்பட வேண்

### தமிழகத்தில் குதிரைவாலி !

தமிழகத்தில் ஆண்டுதோறும் ஏறத்தாழ 25,270 எக்டேர் பரப்பில் குதிரை வாலி பயிரிடப்படுகிறது. இதில் 98 சத வீதம் இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களிலும் பயிராகிறது. தமிழ் நாட்டில் வழக்கமாகக் குதிரை வாலி சாகுபடி செய்யப்படும் பரப்பு பின்கண்டவாறு அமைந்துள்ளது.

| மாவட்டத்தின் பெயர் | பரப்பளவு (எக்டேர்) |
|---|---|
| இராமநாதபுரம் ... | ... 13,920 |
| மதுரை ... | ... 6,700 |
| திருநெல்வேலி ... | ... 4,010 |
| திருச்சி ... | ... 170 |
| சேலம், தருமபுரி... | ... 170 |
| கோயம்புத்தூர் ... | ... 70 |
| செங்கற்பட்டு ... | ... 30 |
| தென்னார்க்காடு | ... 20 |
| வடஆர்க்காடு ... | ... 180 |
| தஞ்சாவூர் ... | ... — |
| நீலகிரி ... | ... — |
| கன்னியாகுமரி ... | ... — |
| மொத்தம் | ... 25,270 |

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் காணப்படும் கரிசல் மண்ணில், கருங்கண்ணிப் பருத்தியுடன் கலப்புப் பயிராகப் பின்பருவத்தில் (Rabi season) குதிரைவாலி விதைக்கப்படுகிறது. சில பகுதிகளில் மணற்பாங்கான நிலத்திலும் குதிரைவாலி பயிராகிறது. முன்பருவத்திலும் (Khariff season) குதிரைவாலி நன்கு பயன்தருகிறது.

#### குதிரைவாலியின் குணங்கள்

குதிரைவாலி பயிரின் வயது 115 முதல் 120 நாட்களாகும். இதன் பயிர் ஒவ்வொன்றும் 7 முதல் 10 தூர் கிளைக்கக் கூடியது. தனிப் பயிராகச் சாகுபடி செய்யும்போது, குதிரைவாலி எக்டேருக்கு ஏறத்தாழ 700 கிலோ மகசூல் தரவல்லது. பசுந் தீவனமாகப் பயிரிடும்போது, எக்டேருக்கு 30 டன் தீவனம் தரக்கூடியது.

குதிரைவாலியில் தன் மகரந்தச் சேர்க்கையே நடைபெறுகிறது. செயற்கை முறையில் அயல் மகரந்தச் சேர்க்கையையும் குதிரைவாலியில் ஏற்படுத்தலாம்.

விதைத்த பிறகு ஏறத்தாழ 60 நாட்களில் குதிரைவாலி பூக்கத் தொடங்குகிறது. பூங்கொத்து வெளியில் வர 9 முதல் 13 நாட்கள் ஆகும். பூங்கொத்தில் உள்ள சிறு சிறு பூக்கள் மேலிருந்து கீழ்நோக்கிப் பூத்து வரும். இரகத்தையும், பூங்கொத்தின் உருவத்தையும் பொறுத்து, குதிரைவாலியில் பூக்கும் காலம் 20 முதல் 30 நாட்கள் வரை நீடிக்கும். (நெருக்கமாக உள்ள பூங்கொத்து மலர அதிக காலமும், விரிந்துள்ள பூங்கொத்து மலர குறுகிய காலமும் ஆகும்). பூங்கொத்தில் உள்ள சிறு சிறு பூக்கள் பூக்கத் தொடங்கிய பிறகு 30 முதல் 35 நாட்களில் தானிய மணிகள் முதிரும்.

பயிர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவும், பயன் தரும் தூர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவும் குதிரைவாலியின் மகசூல் அமைகிறது.

ஒவ்வொரு கதிரிலும் 1,500 முதல் 1,900 தானிய மணிகள் இருக்கும். 1,000 தானிய மணிகளின் எடை ஏறத்தாழ 3.5 கிராம் இருக்கும்.

குதிரைவாலி தானியத்தின் மொத்த எடையில் 35 சதம் உமியாகும். (இது நெல்லில் உள்ள உமியின் எடைக்குச் சமமாகும்).

உமி நீக்கிய பிறகு, குதிரைவாலியை அரிசியைப் போல் சமைத்து உண்ணலாம்.

### 'கே. 1' குதிரைவாலி!

தமிழ் நாட்டில் இதுவரை 'கே. 1' (K. 1) அல்லது 'கோவில்பட்டி-1' குதிரைவாலி என்ற ஒரே ஒரு மேம்படுத்தப்பட்ட ரகமே வெளியிடப்பட்டுள்ளது. தென்காசி ரகத்திலிருந்து நேர்வழித் தேர்வு மூலம் உருவாக்கப்பட்டு, 1970-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட இந்த ரகம் பின்கண்ட சிறப்புக் குணங்களைக் கொண்டுள்ளது.

#### சிறப்புக் குணங்கள்

1. தனிப் பயிராகப் பயிரிடும்போது எக்டேருக்கு 1,000 கிலோ மகசூல் தரவல்லது!

2. நாட்டு ரகங்களை விடக் குறைந்த கால வயதுடையது. 90 முதல் 100 நாட்களில் அறுவடைக்கு வந்துவிடும்! இதனால் பல பயிர் சாகுபடிக்கு ஏற்றது.

3. ஐப்பசி (அக்டோபர்—நவம்பர்) மாதத்தில் விதைப்பதற்கு ஏற்றது!

4. பூச்சிகள் மற்றும் நோய்களால் அதிகம் பாதிக்கப்படாதது!

5. நாட்டு ரகங்களை விட உயர்ந்த அளவாக 23 சத அளவு, குறைந்தது 10 சத அளவும் அதிக மகசூல் தரவல்லது!

### சாகுபடிக் குறிப்புகள்

'கே. 1' குதிரைவாலி பயிடக் கீழ்க்கண்ட சாகுபடி முறைகளை மேற்கொள்ளும்படி. பரிந்துரைக்கப்படுகிறது :



## ஒரு 'கண்'ணோட்டம்

நம் நாட்டில் பார்வையற்றோர் தொகை ஏறத்தாழ 60 லட்சம் என்று மதிப்பிடுகிறார்கள். கிட்டத்தட்ட இது பம்பாய் மக்கள் தொகைக்குச் சமம்; அல்லது சென்னை நகரில் வாழ்வோரைப்போல இரு மடங்கு. கண் சரிவரத் தெரியாதவர் நம் நாட்டில் 2½ கோடிப் பேர்; ஏறத்தாழ தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் பாதி!

இந்தியாவில் 32 கண் வங்கிகள் உள்ளன. இவற்றின் பணிகளைப் புதுடில்லியிலுள்ள தலைமைக் கண் வங்கி ஒழுங்குபடுத்தி நடத்துகிறது. அகில இந்தியக் கண்தானச் சங்கம் மக்கள் தமக்கு அருகிலுள்ள கண் வங்கிகளில் கண் தானம் செய்யுமாறு வேண்டிக் கொள்கிறது; கண் கொடை வழங்குவது பற்றிய விவரங்களும் தெரிவிக்கிறது. கண் விழிப்படலம் மாற்றும் அறுவை மருத்துவத்தில் நம் நாட்டில் ஆண்டுக்கு 10 அல்லது 15 பேர்தான் பயிற்சி பெறுகின்றனர்.

**நிலம் தயாரித்தல் :** நிலத்தை 2 அல்லது 3 முறை உழுது நன்கு புழுதியாக வைத்திருக்க வேண்டும். கடைசி உழவில் எக்டேருக்கு (அதாவது 2.47 ஏக்கருக்கு) 15 டன் (30 வண்டி) கலவை எரு அல்லது தொழு எரு வீதம் இட்டு, மண்ணுடன் நன்கு கலக்குமாறு உழுதுவிட வேண்டும்.

**இரசாயண உரமிடல் :** நிச்சயமாக மழை பெறக்கூடிய இடங்களில் அல்லது பாசனம் செய்து பயிரிடக் கூடிய இடங்களில் எக்டேருக்கு 45 கிலோ தழைச் சத்து, 23 கிலோ மணிச் சத்து கொடுக்கும் இரசாயன உரங்களை அடியுரமாக விதைக்கும்பொழுது இடலாம். இந்த அளவில் இரசாயன உரமிட ஏக்கருக்கு 8 கிலோ தழைச் சத்து (90 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 40 கிலோ யூரியா), 9 கிலோ மணிச் சத்து (56 கிலோ சூப்பர் பாஸ்பேட்) இட வேண்டும்.

**விதையளவு :** தனிப் பயிராகச் சாகுபடி செய்ய ஏக்கருக்கு 4 முதல் 5 கிலோ விதையை விதைக்க வேண்டும். பருத்தியுடன் கலப்புப் பயிராக சாகுபடி செய்ய ஏக்கருக்கு ... விதையை விதைக்க வேண்டும்.

**மருந்து கலக்குதலும், விதைத்தலும் :** ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'அக்ரசான்' அல்லது 'டீ.எம்.டீ.டி' வீதம் கலந்து விதைக்க வேண்டும்.

**பயிர்க் கலைத்தல் :** விதைத்த 3 வாரத்திற்குப் பிறகு, ஒவ்வொரு பயிருக்கும் இடையில் 20 சென்டி மீட்டர் (8 அங்குலம்) இடைவெளியிட்டு, நெருக்கமாக இருக்கும் பயிர்களைக் கலைத்து விட வேண்டும்.

**களை எடுத்தல் :** விதைத்த 3 வாரத்திற்குப் பிறகு, பயிர்க் கலைப்புச் செய்த பிறகு முதல் தடவை களை எடுக்க வேண்டும். முதல் களை எடுத்தவுடன், 2 முதல் 3 வாரங்களுக்குப் பிறகு இரண்டாம் முறை களை எடுக்கவேண்டும்.

**பயிர்ப் பாதுகாப்பு :** பொதுவாகப் பூச்சிகளாலும், நோய்களாலும் குதிரைவாலி தாக்கப்படுவதில்லை! ஆனால் குருத்து ஈக்களால் (Shoot fly) மட்டுமே ஓரளவுக்குச் சேதம் ஏற்படும்.

முளைத்த ஒரு வாரத்திற்குள் குதிரைவாலியின் இளம் பயிர்களை குருத்து ஈக்களின் புழுக்கள் (maggots) தாக்குகின்றன. இவ்வாறு தாக்கப்பட்ட பயிர்களின் நடுக்குருத்து சேதமடைந்து காய்ந்துவிடும் (Dead heart). இக்குருத்து ஈக்களின் தாக்குதலைக் கட்டுப்படுத்த 1 மீட்டர் படைச் சாலுக்கு 1.5 கிராம் 'போரேட்' (திமெட்) குருணைகள் வீதம் விதைப்பதற்கு முன் படைச் சாலில் இடுதல் சிறந்தது. அல்லது ஏக்கருக்கு 150 மில்லி மீட்டர் 'எண்ட்ரின்' மருந்தையும், 100 மில்லி லிட்டர் 'மெட்டாசிஸ்டாக்ஸ்' மருந்தையும் தெளிக்கலாம்.

ஆனால் இவ்வாறு இரசாயன மருந்துகளைத் தெளிப்பதற்கு அதிகச் செலவாகும். மானாவாரிப் பயிரான குதிரைவாலிக்கு இந்த அளவுக்குச் செலவு செய்வது இலாபகரமாக இருக்காது! எனவே, இவ்வாறு அதிகச் செலவு செய்து மருந்து தெளிப்பதற்குப் பதிலாக, அதிக அளவு விதைகளை விதைத்தல், குருத்து ஈக்கள் தாக்கியப் பயிர்களை அகற்றுதல் போன்ற சாகுபடி நுட்பங்களை மேற்கொள்வதே சிறந்தது.

#### அதிக மகசூல் பெற்றிடலாம்!

மேலே பரிந்துரைக்கப்பட்ட முறையில் 'கோவில்பட்டி-1' ரக 'கே. 1' எனப்படும் குதிரைவாலியைத் தனிப் பயிராகப் பயிரிட்டால், எக்டேருக்கு 1 டன் மகசூல் வீதம் பெறமுடியும் என்பது திண்ணம். இந்த ரகத்தைத் தமிழகத்தில் வழக்கமாகக் குதிரைவாலி பயிரிடப்படும் பரப்பு முழுவதும் பயிரிட்டால், தமிழகத்தில் ஆண்டுதோறும் கூடுதலாக 1,750 டன் உணவு தானியம் விளையும். எனவே, குதிரைவாலி பயிரிடும் உழவர் பெருமக்கள் அனைவரையும், 'கே. 1' குதிரைவாலி பயிரிடும்படி வேண்டுகின்றோம்.

—'ஆர். எம்'

டும். இத்தகைய குறிக்கோள்கள் நிறைவேற்ற வேண்டுமானால் சமுதாயத்தைச் சார்ந்த குடும்பங்கள் ஒவ்வொன்றும் அடியிற்கண்ட முறைகளை நடைமுறைக்குக் கொணர முன் வர வேண்டும்.

**தனிப்பட்ட குடும்பத்தார் மேற்கொள்ள வேண்டிய முறைகள்:**

1. கொசுவலை கட்டி படுக்க வேண்டும்.

2. வீட்டினுள் கொசுக்கள் புகாதவாறு கதவுகளுக்கும், சன்னல்களுக்கும் கொசு நுழைய முடியாத கம்பி வலைகளைப் பொருத்த வேண்டும்.

3. படுக்கை அறைகளில் கொசுத்தொல்லையை ஒழிக்க 'பிரித்ரம்' (Pyrethrum) மருந்தினை வீசித்தெளிக்கவேண்டும்.

4. கொசுக்களை அழிக்க புகை மூட்டம், கயிற்றுச்சுருள், நறுமண தூபச் சுருள் முதலியவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

5. வீட்டுக் கிணற்றிலும், மாடியிலுள்ள தண்ணீர்த் தொட்டியிலும் வாரமொரு முறை 'கம்புசியா' மீன்களை விடுமாறு துப்புரவுப்பணியாளரைக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

6. வீட்டு மாடியிலுள்ள தண்ணீர்த் தொட்டிகளில் கொசுக்கள் புகுந்து முட்டையிடாதவாறு கம்பி வலைகளைப் பொருத்த வேண்டும்.

7. வீட்டினுள் சிமெண்டுத் தொட்டிகளை வாரத்துக்கொரு நாள் தண்ணீரின்றி காலியாகக் காய வைக்க வேண்டும்.

8. தோட்டத்தில் தண்ணீர் தேங்காமல் நீர் வடிச் செல்லும் குழியொன்று அமைக்க வேண்டும்.

9. வீட்டுக்கழிவு நீர் சாக்கடையைத் துப்புரவாக வைத்துக் கொள்ள வேண்டும்.

10. தண்ணீர் தேங்கி நிற்கக் கூடிய தேவையற்ற உடைந்த சட்டிகள், உடைந்த கண்ணாடிச் சீசாக்கள், தேங்காய் மூடிகள் முதலியவற்றை அவ்வப்போது உடைத்து வெளிக் கடத்த வேண்டும்.

11. தெருப்பக்கம் சாக்கடைக் குழி இல்லாதவாறு கழிவு நீரை தெருக்களிலுள்ள வடிகால் குழாய்களில் இணைத்துவிட வேண்டும். இது சாத்தியமில்லையெனில், வாரமொருமுறை எண்ணெய் அடிக்குமாறு துப்புரவுப் பணியாளரிடம் கூறவேண்டும்.

12. மலம்-சிறுநீர் போன்ற கழிவுப்பொருள்களைச்சேகரித்து கிருமிகளையும் நாற்றத்தையும் போக்குவதற்காகக் கட்டப் பெற்றுள்ள சிறு கிணற்று (செப்டிக் டேங்கு) டன் இணைக்கப்பட்டுள்ள தண்டுக் குழாய் வழியே கொசுக்கள் புகவோ, வெளிவரவோ இயலாதவாறு தக்க வலைக் கம்பி மூடிகளைப் பொருத்த வேண்டும்.

13. மேற்குறிப்பிட்ட சிறு கிணறு பழுதுபட்டிருந்தால், உடனே சரி பார்த்து செப்பனிட வேண்டும்.

14. குடிதண்ணீர் எடுக்கும் வீட்டுக் கிணறுகளை கொசுக்கள் புகாதவாறு சிமெண்டு கான்கிரீட் மூடி போட்டு, தண்ணீர் இறைத்துக் கொள்ள குழாய் அமைத்திட வேண்டும்.

15. பயன்படுத்தாத நன்றாக மூடிப் போட்டுவிட வேண்டும்.

16. கூரை வாய்கள் இருப்பின், அவை வார்ப்பு இரும்பினால் ஆக்கப்பட்டவையாகவும் தக்க முறையில் கீழ்நோக்கி சரிவாகப் பொருத்தப்பட்டவையாகவும் இருக்க வேண்டும்.

17. வீடு கட்டும்போது அமைக்கப் பெறும் நீர் தொட்டிகளுக்குப் பயன்படு தும் சிமெண்டிலும், கான்கிரீ டிலும் போதிய அளவு 'சி சால்' மருந்தினைக் கலந்து கட்ட வேண்டும். இதனு தேங்கும் தண்ணீர் தெளிவா இருக்கும்.

18. பூந்தொட்டிகளி சிறிது உப்பு தூவி வைக்க வேண்டும்.

19. வீட்டில் அலங்கார நீர்த்தொட்டிகள் இருப்பின் அவற்றில் அவ்வப்போது 'கம்பூசியா' மீன்களைப்போட்டு வைக்குமாறு துப்புரவுப் பணியாளரிடம் கூற வேண்டும்.

20. வீட்டின் உள்ளும் புறமும் தண்ணீர் தேங்கி நிற்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

**சமூகத்தில் கூட்டாக மேற்கொள்ள வேண்டிய முறைகள் :**

1. சுற்றுச் சார்பு இடங்களைத் துப்புரவாக வைத்துக் கொள்ள வேண்டும். கொசு உற்பத்தி நிலைகளாகக் கழிவுநீர் வடிகால்கள், வண்டல் படிந்த பகுதிகள், வாய்க்கால்கள், பொதுவாகத் தண்ணீர் படியும் பாயும் பகுதிகள் ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும். செடிகொடி செத்தைகளை அப்புறப்படுத்த வேண்டும். 'செப்டிக்' கிணறுகளின் தண்டுக் குழாய்களைத் தக்க முறையில் கம்பி வலைகளால் மூட வேண்டும். கெட்ட நாற்றம், நச்சுக் காற்று பரவாத வகையில் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். பயனற்ற கிணறுகள் முதலியவற்றை மூடிபோட்டு விடவேண்டும்.

2. கொசு உற்பத்தி நிலைகளில் வாரமொரு முறை எண்ணெய் பாரிஸ்கிரீன், பிரித்ரம், ஓபி, கலவைகள் ஆகியவற்றால் சுத்தம் செய்ய வேண்டும்.

3. கிணறுகள் தண்ணீர்த் தொட்டிகள் முதலியவற்றில் 'கம்பூசியா' மீன்களைப்போட்டு வைக்க வேண்டும். கழிவுநீர் தேங்கிக் கிடக்கும் இடங்களில் 'குப்பி' மீன்களைப் போட்டு வைக்க வேண்டும்.

4. 'பிரித்ரம்' மருந்தை வீசித் தெளிக்க வேண்டும்.

5. குடியிருக்கும் வீடுகளில் டி.டி.டீ. பி.எச்சி. மருந்துகளை வீசித் தெளிக்க வேண்டும்.





பத்தாயிரம் ரூபாயாகக் கிடைக்கும்'' என்று முதல்வர் கருணாநிதி இங்கே பேசும்போது குறிப்பிட்டார். விதவைத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்காக முதல்வர் கருணாநிதி அவர்கள் வகுத்துள்ள இந்த உதவித் திட்டம் அற்புதமானது. 7 ஆண்டுகள் அத் தம்பதிகள் சேர்ந்து வாழ்ந்துவிட்டால் அவர்களிடம் நிச்சயம் இல்லற ஒற்றுமை ஏற்படும். அரசு வழங்குகிற உதவியின் நோக்கமும் நிறைவேறும். கைம்பெண்களின் மறுவாழ்வுக்காக முதல்வர் கருணாநிதி வகுத்துள்ள இவ்வரிய திட்டத்தை அனைத்துத் தரப்பினரும் வரவேற்கின்றனர்.

கைம்பெண்களுக்குத் தையல் இயந்திரங்கள் வழங்கியுள்ளதன் மூலம் அவர்களின் நல்வாழ்விற்குத் தமிழக அரசு ஊன்றுகோலை வழங்கியுள்ளது. இத்திட்டங்கள் மூலம் ஒரு சமூக நல அரசு நிறைவேற்ற வேண்டிய கடமைகளைத் தமிழக அரசு செவ்வனே நிறைவேற்றி வருகிறது.

முதல்வர் கருணாநிதியின் பிறந்தநாள் விழாவில் அவரது இல்லம் சென்று அவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து மாலையணிப்பதோடு நின்றுவிடாமல் அபலைகளுக்காகவும், ஆதரவற்றவர்களுக்காகவும் அவர் வகுத்துள்ள மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதி உதவி செய்ய வழி வகுக்கும் நாளாக அவரது பிறந்தநாள் அமைந்துள்ளது.

அறநிலையத்துறை 75 சதவிகிதம் அரசு 25 சதவிகிதம் நிதியுதவி செய்து கருணை இல்லங்களில் அனாதைச் சிறுவர்களுக்கு வாழ்வளிக்கப்படுவதைக் கண்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

நல்ல வசதியோடு வளமான வாழ்க்கை வாழ்பவனைவிட, ஏழைதான் ஆண்டனுக்கு மிக நெருக்கமானவன். அவனுக்குத் துன்பமும் துயரமும் வரும்போதெல்லாம் அவன் ஆண்டவனை நினைக்கிறான். அப்படிப்பட்ட ஆண்டவனுக்கு நெருக்கமான ஏழைகளுக்கும் அபலைகளுக்கும் உதவி செய்பவர்களை நினைவிலே வைத்திருந்து அருள் புரிய ஆண்டவன் தவற மாட்டார்."

—ஆளுநர் கே. கே. ஷா.

"பெரியாரும், அண்ணா அவர்களும், காந்தியடிகளும் இந்த நாட்டிலே எப்படிப்பட்ட மறுமலர்ச்சிகள் ஏற்பட வேண்டும் என்று விரும்பினார்களோ, அவைகளை எல்லாம் எங்களால் இயன்ற அளவிற்கு செய்து வருகிறோம்.

என்னுடைய பிறந்தநாள் என்கிற அடையாளத்தின் அடிப்படையில் கடந்த நானைந்து ஆண்டுக்காலமாக தமிழ்நாட்டுப் பெருங்குடி மக்கள் வாரி வழங்குகிற நன்கொடைகளைக் கொண்டும், அதற்கு மேல் எஞ்சியுள்ள செலவினங்களுக்கான தொகையை அரசின் சார்பிலும் வழங்கி-ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டமும்-ஏழையெளிய தாய்மார்கள் பெரியவர்களுடைய மங்கிய பார்வையை மீண்டும் ஒளி பெறச் செய்கிற காரியமும்-அனாதைச் சிறுவர்களுக்கு ஆலயங்களோடு ஒட்டியிருக்கின்ற கருணை இல்லங்களும், தொழுநோய் கொண்டிருக்கிறவர்களுக்கு மாடகூடங்கள் அமைத்து அவர்களுக்கு சுகமான வாழ்வளிக்கின்ற வாய்ப்பு வசதிகளும்-கைரிக்ஷாக்களை அறவே அகற்றி அதற்குப் பதிலாக இலவச சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்கும் திட்டமும்-



[redacted]டபெற்று மேலும் சமூகநலத் திட்டங்கள், பலவற்றைச் செம்மையாக நடத்துகின்ற முயற்சியில் இந்த அரசு தொடர்ந்து நடைபோட்டு வருகிறது.

அத்தகைய திட்டங்களில் ஒரு கூறாகத்தான் கைம்பெண்டிருக்கான இந்தத் திட்டங்களை நாங்கள் வகுத்திருக்கிறோம். கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்ள வேண்டுமென்று விரும்பினால் அவர்களுக்கு மறுமணம் செய்து வைக்கின்ற காரியத்தை ஒருவரையொருவர் மனதை மாற்றி எடுத்துச் சொல்லி இதனால் தவறு ஏதும் கிடையாதென்று பிரச்சாரம் செய்து அவைகளின் மூலமாக விதவைத் திருமணங்களை ஊக்கப்படுத்தலாம் என்றாலும்-அவர்களுடைய வாழ்வில் பொருளாதார பிடிப்புத் தேவை —அதற்கான உற்சாகத்தை அவர்களுக்கு உண்டாக்க வேண்டும் என்று எண்ணிய இந்த அரசு கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு அறிவித்த திட்டம்தான் ஆதரவற்ற கைம்பெண்களுக்கு மறுவாழ்வு அல்லது நல்வாழ்வுத் திட்டமாகும்.

இதன்படி இன்றைக்கு ஆயிரம் கைம்பெண்களுக்குத் தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. இவைகள் மாத்திரமல்லாமல், 45 வயதிற்கு மேற்பட்ட விதவைகளுக்கு முதியோர் மாதாந்திர மானியத் தொகை வழங்குவதென்றும் தீர்மானித்து, அதுவும் செயல்பட்டு வருகிறது. விதவைத் திருமணங்களை ஆதரிப்பதற்காக ஐந்தாயிரம் ரூபாய் சேமிப்பு பத்திரம் வழங்கப்படுகிறது. நேற்று முன்தினம் நான் தஞ்சை மாவட்டத்தின் சில பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்தபோது, நான்கு தம்பதிகள் விதவைத் திருமணத்தை என்னுடைய முன்னிலையில் நிறைவேற்றிக் கொண்டார்கள். இப்போது இந்த மேடையில் விதவைத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகள் ஐந்தாயிரம் ரூபாய்க்கான சேமிப்பு பத்திரங்களைப் பெற்றார்கள்.

இந்த ஐந்தாயிரம் ரூபாய் இன்னும் ஏழாண்டுக் காலத்திற்குப் பிறகு 9,786 ரூபாயாக மாறி அவர்களுடைய கைக்குக் கிடைக்கும். அதாவது ஏறத்தாழ பத்தாயிரம் ரூபாயாகக் கிடைக்க இருக்கிறது. திருமணம் செய்து கொண்டவுடனேயே ஐந்தாயிரம் ரூபாய் ஏன் ரொக்கமாகக் கொடுத்து விடக் கூடாது என்று கேட்கலாம்; அந்த விதவைப் பெண்களின் வாழ்வு பத்திரமாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் சேமிப்புப் பத்திரமாக இது வழங்கப்படுகிறது. இல்லா விட்டால் ஒருவர் ஒரு விதவைப் பெண்ணைத் திருமணம் செய்து, ஐந்தாயிரம் ரூபாயை வாங்கிக்கொண்டு, மறுநாள் அந்தப் பெண்ணையும் ஏமாற்றி, ஐந்தாயிரம் ரூபாய் கொடுத்த அரசாங்கத்தையும் ஏமாற்றிச் சென்று விட்டால், அதற்கு ஒரு பத்திரம் இருக்காது; பாதுகாப்பு இருக்காது; ஆகவேதான் சேமிப்புப் பத்திரமாக இன்று வழங்குகின்றோம்.

ஏழாண்டுக்காலம் அவர்கள் ஒருவரோடொருவர் மனமொத்து வாழ்ந்து, அதற்குப் பிறகு அவர்கள் இருவரும் இணைந்து, அந்தத் தொகையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில்தான் சேமிப்புப் பத்திரமாக அவைகள் இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ''கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே இங்கே வேரிற் பழுத்த பலா' என்று வேதனையால் வாடிக் கொண்டிருக்கிற கைம்பெண்டிரின் நிலையைப் பற்றி எடுத்துச் சொன்னார். அவைகள் வெறும் கவிதை வரிகளாக அமைந்து விடாமல்-செயல் வடிவங்களாக அமைகின்ற காட்சியை இந்த அரசு நடத்திக் காட்டுகின்றது."

— முதல்வர் கலைஞர்



# வெற்றியை நோக்கி....!

ளுக்குநாள்
முடைய வாழ்க்கைக்கு
சு அளிக்கும்
துகாப்புகள் ஏராளம்

சு அலுவலர்களுக்கு
ம்பப் பாதுகாப்புத் திட்டம்
தனைத் தொடர்ந்து
தாயத்திலுள்ள அனைவரும்
னடையும் வகையில்
கப் பாதுகாப்புத் திட்டம்!

ப்படி அளிக்கப்படும்
துகாப்புகளைப் போன்று
க்கு நாமே
ருவாக்கிக் கொள்ளும்
துகாப்புத் திட்டம்
டும்பநலத் திட்டம்!

லாரும்
ன்புற்றிருக்கச்
யல்படுத்தும்
டங்கள்
ற்றி பெற்றிட
மிக்க
த்தளம் அமைய

தவுவதே
வான குடும்பம்.




தமிழரசு
மலர்: 6
இதழ்: 9
1.11.1975




அண்ணல் காந்தியடிகள், தந்தை பெரியார், பேறிஞர் அண்ணா ஆகியோர்
காண விரும்பிய மறுமலர்ச்சியைத் தமிழ்நாட்டில் உருவாக்கும் வகையில் ஆதரவற்ற
கைம்பெண்களுக்கு ஆயிரம் தையல் இயந்திரங்கள் வழங்கு விழா சென்னையில்
22.10.75 அன்று நடைபெற்றது.

முதல்வர் கலைஞர் அவர்கள் 52-வது பிறந்த நாள் விழா திட்டமான—
அனாதைச் சிறார்கள், ஆதரவற்ற கைம்பெண்களின் நல்வாழ்வுத் திட்ட விழாவைத் தமிழ்
நாடு சமூக நலத்துறை நடத்தியது. இவ்விழாவில் ஆளுநர் கே. கே. ஷா அவர்கள்
தலைமையில் முதல்வர் கலைஞர் அவர்கள் தையல் இயந்திரங்களை வழங்கினார்கள்.

"அனைத்துநாட்டு மகளிராண்டான இந்த ஆண்டு உலகின் பல்வேறு நாடுகளில் பல்வேறு விதமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. மேலை நாடுகளில் அனைத்துநாட்டு மகளிர் ஆண்டில் ஆண்களுக்குச் சமமாகப் பெண்களுக்கு உரிமை வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.

இந்திய நாட்டில் பெண்களைப் பொருளாதார ரீதியாக முன்னேற்ற வேண்டும் என்று தலைமையமைச்சர் இந்திரா தெரிவித்துள்ளார். உடல் ஊனமுற்ற பெண்களுக்கும், கைம்பெண்களுக்கும், வயோதிகக் கைம்பெண்களுக்கும் தமிழக அரசு செய்துவரும் மேம்பாட்டுத் திட்டங்கள் சிறப்பானவை.

ஒய்வூதியம் வயதான கைம்பெண்களுக்கு வழங்கும் தமிழக அரசின் திட்டம் பாராட்டுக்குரியது. இதைவிட யாரும் சிறப்பாகச் செய்ய முடியாது.

இங்கே இருக்கிறாளே ஒரு பெண் (மறு மணம் செய்து கொண்ட ஓர் இளம் பெண்ணைக் காட்டி) இவளுடைய வயது என்ன இருக்கும்? இப்பெண் மிகவும் இளமையாக இருக்கிறாள். இப்படிப்பட்ட இளம் கைம் பெண்களுக்குத் தமிழக அரசு நல்வாழ்வு வழங்கியுள்ளது.

"விதவைத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்கு 5,000 ரூபாய்க்கான சேமிப்புப் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. அவை 7 ஆண்டுகள் கழித்து ஏறத்தாழ அவர்களுக்குப்





# தஞ்சைமாவட்டத்தில் ரூ.11 கோடி செலவில் வடிகால் திட்டம்

**1922**-ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்திலே மங்கநல்லூரிலே பிறந்து-பிறந்தது மங்கநல்லூர் என்பதால்—ஆடுதுறையிலே புகுந்து; புகுந்த இடத்துக்கு பெருமை சேர்த்து இன்று தன்னுடைய பொன் விழாவினைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்ற இந்த ஆராய்ச்சிப் பண்ணை தமிழகத்தினுடைய உணவு நிலைக்கு இன்றியமையாத தொண்டினை ஆற்றி வருகிறது.

1922-ஆம் ஆண்டில் ஆடுதுறையில் தொடங்கப் பெற்ற ஆராய்ச்சி இன்னும் முற்றுப் பெறவில்லை; தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆராய்ச்சிக்கு எல்லை கிடையாது. அது வளர்ந்து கொண்டே இருக்கக்கூடிய இலக்கணத்தை உடையது. அந்த நிலையில்தான் ஆடுதுறை



ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையம் - பொன்விழா வாயிலை முதல்வர் கலைஞர் அவர்கள் 20.10.75 அன்று திறந்து வைத்தார்கள்.

ஆராய்ச்சிப் பண்ணையில் வெளியிடப்பட்டுள்ள ரகங்கள் மட்டுமல்லாமல், புதிய புதிய ரகங்களை நாட்டுக்கு-உலகிற்கு-இந்தத் துறைக்கு அறிமுகப் படுத்துகின்ற புதிய புதிய வெற்றிகளைத் தொடர்ந்து ஈட்டித் தந்த வண்ணம் இருக்கிறது. இந்த வெற்றியைத் தந்த ஆராய்ச்சியாளர்கள் அனைவருக்கும் நான் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டு மக்களின் பசிப்பிணியைத் தீர்ப்பதில் இந்த ஆராய்ச்சி முயற்சி முக்கியமான ஒன்றாகும். கரிகால் பெருவளத்தான் காலத்தில் கட்டப்பட்ட கல்லணையின் மூலமாக நீர்ப்பாசன வசதி தஞ்சைத் தரணிக்குக் கிடைத்தது; அன்று இருந்த மக்கள் தொகைக்கு, உற்பத்தியான நெல்மணிகளும் தமிழகத்துக்குப் போதுமானதாக இருந்தது என்றெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அதற்கு ஒரு திருத்தத்தை நான் கூறுவதை அவர்கள் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள் என்றே கருதுகிறேன். பட்டினப்பாலையில் காவிரிப் பூம்பட்டினத்தின் பெருமையைச் சொல்கின்ற நேரத்தில்-

''ஈழத்து உணவும், காழகத்து ஆக்கமும்..'' என்றும் குறிப்பிடப்படுகிறது. ஆகவே உணவுப்பற்றாக் குறையின் காரணமாக-ஈழத்து உணவு தமிழகத்துக்கு வரக்கூடிய சூழ்நிலையைத்தான் பட்டினப்பாலை நமக்கு விளக்கிக் கொண்டிருக்கிறது.

கரிகால் பெருவளத்தான் காலத்திற்குப் பிறகு தமிழகத்தை ஆண்டு கொண்டிருந்த பழம்பெரும் மன்னர்கள் காலத்திலும், தஞ்சையிலே பாளையக்காரர்கள் ஆண்ட காலத்திலும், பிறகு வெள்ளையர்கள் இந்தியத் துணைக் கண்டத்தை அடிமைப்படுத்தி ஆண்டு கொண்டிருந்த அந்தக் காலத்திலும், எந்த வளர்ச்சி கட்டுப்பட்டாலும், இந்த உணவு உற்பத்தி வளர்ச்சி கட்டுப்படக்கூடாது என்கிற ஒரு குறிக்கோளைப் பழைய காலத்து மாமன்னர்கள் ஆனாலும், நம்மை அடிமைப்படுத்த வந்த ஆங்கிலேயர்களானாலும் மறந்திடாமல் அந்தக் காரியத்தைச் செய்து அதற்கொரு அடிப்படை அமைத்துக் கொடுத்த காரணத்தினால்தான் 1922-ல் அமைத்துக் கொடுத்த அந்த அடிப்படையில் ஆடுதுறையில் நடத்தப்பட்ட நல்ல ஆராய்ச்சியின் பயனால்தான் 1966-ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே இரண்டரை இலட்சம் ஏக்கருக்கு மேல் குறுவை சாகுபடி செய்ய முடியும் என்ற நிலைக்கு நாம் உயர்ந்தோம்-உணவு உற்பத்தித் துறையிலே.

1967-ல் அண்ணா அவர்கள் தலைமையிலே ஆட்சிப்பொறுப்பு மாறிய பிறகு-பொதுப்பணித் துறைப் பொறுப்பை நான் ஏற்றிருந்த போது, அந்தத் துறையிலேதான் நீர்ப்பாசனத் துறையும் இணைந்திருந்த காரணத்தினால், குடந்தையிலே—வேளாண்மைத் துறை அதிகாரிகள்-வேளாண்மைத் துறை வல்லுநர்கள் மற்றும் நண்பர் மன்னை, நண்பர் மணி போன்றவர்களும், வேறு பல நிலக்கிழார்களும் கலந்து கொண்டு கருத்துக் கூறியதன் அடிப்படையில், இருக்கின்ற நீரைக் கொண்டு இரண்டரை இலட்சம் ஏக்கரை ஏன் ஐந்து இலட்சமாக ஆக்கக் கூடாது என்ற ஒரு கேள்வியை எழுப்பி அதிகாரிகள் எல்லாம் அச்சம் தெரிவித்த போதும், துணிந்து இந்த முயற்சியிலே நாம் ஈடுபட்டுப் பார்ப்போம் என்று முயற்சி எடுத்துக் கொண்டு இப்போது 5 இலட்சம் ஏக்கராக மாற்றியிருக்கிறோம் என்றால், இதற்கு அரசு கொண்ட துணிவும், அதிகாரிகளுடைய ஒத்துழைப்பும் தஞ்சைச் சீமையிலே இருக்கின்ற விவசாயிகள் தந்த உறுதுணையும் தான் காரணம் என்று கூறிக் கொள்கிறேன்.

அரசு தன்னைத்தானே பாராட்டிக் கொள்ளக்கூடாது-அதிகாரிகளை அதிகம் பாராட்டக் கூடாது; சில நேரங்களில் அவர்களை உற்சாகப் படுத்தாமலும் இருந்து விடவும்கூடாது—என்பதால் நான் இருவரையும் விட்டுவிட்டுத் தஞ்சை மாவட்டத்திலேயிருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இந்த நல்ல விழாவிலே தமிழ்நாட்டு மக்களின் சார்பில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பாசன வசதிகள் பெருக்கப் பட்டால்தான் — எவ்வளவு ஆராய்ச்சிகள் உருவாக்கப்பட்டாலும் அதனுடைய பயனை நாம் முழுதாக உணர முடியும்; அனுபவிக்க முடியும்.

பாசன வசதியைப் பொறுத்த மட்டில் நமக்கு நீண்ட நெடுங் காலமாக இருந்து வந்த பல உரிமைகள் எல்லாம் இன்று கேள்விக் குறிகளாக ஆகிவிட்ட நேரத்தில் அவற்றிற்கு நல்ல முடிவு காண வேண்டும் என்ற சங்கடமான சூழ்நிலையில் நல்ல முடிவு ஏற்படும் என்ற ஆர்வத் துடிப்போடு தஞ்சைத் தரணி மக்களும்-பொதுவாகத் தமிழ் நாட்டு மக்களும் இன்று இருந்து கொண்டிருக்கிறோம்.

## முதல்வர், கலைஞர்

பாசனவசதி அதிக அளவுக்கு பெருக்கப்பட வேண்டும் என்பது இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அறிவித்துள்ள 20 அம்சத் திட்டங்களில் ஒன்றாகும்.

பழம் பெரும் மன்னர்கள் ஆண்ட அந்தக் காலத்திலிருந்து 1947-ஆம் ஆண்டு வரையில்—வெள்ளையன் வெளியேறிய அந்தக் காலம் வரையில் தமிழ் நாட்டில் பாசன வசதி பெற்ற மொத்த நிலம் 44 இலட்சம் ஏக்கராகும்.

வெள்ளையன் வெளியேறிய பிறகு-நாடு விடுதலை பெற்ற பிறகு நம்முடைய தமிழகத்தில் 1967 வரையில் 20 ஆண்டுக் காலத்தில் மேலும் பாசன வசதி பெற்றது எட்டு இலட்சம் ஏக்கர்.

நம்முடைய தமிழ்நாட்டில் 1966-ஆம் ஆண்டு முடிய 52 இலட்சம் ஏக்கர் பாசனவசதி பெற்றது.

ஆனால் இந்த எட்டாண்டுக் காலத்தில் - நான் பெருமையோடு கூறுவதாக யாரும் கருத வேண்டாம்; - மேலும் 15 இலட்சம் ஏக்கரா இந்த 8 ஆண்டுக் காலத்திலே பாசன வசதி பெற்று 44 இலட்சமாக இருந்தது 52 இலட்சமாக இருபது ஆண்டுகளில் மாறியது-இந்த எட்டாண்டுகளில் இன்று 67 இலட்சமாக மாறியிருக்கிறது என்பதை நான் உங்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பாசன வசதி நதி நீரை நம்பி மாத்திரம் இருந்திடவில்லை. நதி நீரை நம்பி 50 ஆண்டுக் கால ஒப்பந்தத்தினைக் கர்நாடக மாநிலத்தோடு ஏற்கெனவே செய்து கொண்டு - அதிலே ஏற்பட்டுள்ள இடையூறுகளினால் நம்முடைய தஞ்சைத் தரணியின் வேளாண்மைத் துறை முன்னேற்றம் எந்த அளவுக்கு சீர் கெட்டுள்ளது என்பதை நான் சொல்லாமலே நீங்கள் எல்லாம் புரிந்து கொண்டிருப்பீர்கள்.

தஞ்சையைப் பொறுத்த வரையில் ''நவீனமயப் படுத்துதல்'' - என்பதற்காக உலக வங்கியிலே கடன்பெற்று, நவீனப்படுத்துகின்ற முறை—தண்ணீரைச் சிக்கனப்படுத்துகின்ற முறை - அது இங்கே கடைப் பிடிக்கப்படுமேயானால் 40 கோடி ரூபாய் செலவாகும் என்பதனால்-நமது அதிகாரிகள், பொறியாளர்கள் அனைவரும் திட்டம் தயாரித்து -உலக வங்கிக் குழுவினரும் அதற்கு இணக்கம் தெரிவித்து - காவிரி நதி தீரத்தில் தஞ்சை மாவட்டத்தில், நவீனப்படுத்துகின்ற முறையை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்று அறிவித்து, அதற்கான அனுமதியை மத்திய அரசிடம் நாம் பெற முடியாமல் போனதற்குக் காரணம் காவிரி நீர்த் தகராறு என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அந்த அனுமதி ஏற்கெனவே நமக்குக் கிடைத்திருந்து; ஒரு வேளை இடையிலே கர்நாடகம் அதிலே தலையிடாமல் இருந்து, இந்த அனுமதி தருவதால் எந்தத் தவறும் கிடையாது என்ற உண்மையை அவர்கள் உணர்ந்திருப்பார்களேயானால் இன்று கர்நாடக மாநிலம் தமிழகம் பெற வேண்டிய தண்ணீரை இந்த அளவுக்குக் குறைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லுகின்ற நேரத்தில்-ஏற்கெனவே நாம் நவீனப் படுத்தலைச் செய்து முடித்திருப்போமேயானால் அவர்கள் சொல்லுகின்ற அளவுக்குக் கூட தண்ணீரைக் குறைத்துக் கொள்ள முடியுமா என்றும் பரிசீலித்திருக்க முடியும்.




குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எல்லாச் சத்துக்களும் அவசியம். அதுபோலவே பயிரின் வளர்ச்சிக்கு தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மூன்றும் அளித்தால்தான் முழுப்பலனைத் தரும்.

தற்போது உரங்களின் விலை அதிகமாக இருப்பதால் தழைச் சத்தைத் தரும் யூரியாவை மட்டும் இட்டால் போதும் என்று நீங்கள் கருதலாம்.

ஆனால் யூரியாவை மட்டும் இட்டால் பயிர்கள் பூச்சி நோய்களினால் அதிகமாக பாதிக்கப்படும். வறட்சியைத் தாங்காது. மேலும் நாளடைவில் மண்ணின் தன்மை கெடும். அதனால் விளைச்சலும் குறையும். அன்றியும் மணி, சாம்பல் சத்துக்கள் இல்லையென்றால் யூரியாவின் உற்பத்தித் திறனும் குறையும்.

தழைச்சத்துடன் மணி சாம்பல் சத்துக்களை இடும்போது விளைச்சல் கூடுதலாகி லாபம் அதிகரிக்கிறது. இதனை ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன.

| ஏக்கருக்கு இட்ட உரம் | ஏக்கருக்கு சாகுபடி செலவு ரூ. | ஏக்கருக்கு விளைச்சல் (75 கிலோ மூட்டை) | வருவாய் (மூட்டை ரூ. 82.50 வீதம்) ரூ. பை. |
|---|---|---|---|
| 50 கிலோ தழைச்சத்து மட்டும் | 1080 | 20 | 1650.00 |
| 50 கிலோ தழைச்சத்துடன் 25 கிலோ மணிச்சத்து | 1255 | 25 | 2062.50 |
| 50 கிலோ தழைச்சத்துடன் 25 கிலோ மணி, 25 கிலோ சாம்பல் சத்துக்கள் | 1305 | 32 | 2640.00 |

MFL-1044A

அதாவது தழைச்சத்துடன் மணி, சாம்பல் சத்துக்களையும் சேர்த்து இடுவதற்கான கூடுதல் செலவு ரூ. 225தான். ஆனால் இதன்மூலம் கிடைத்த கூடுதல் வருவாயோ ரூ. 990.

இப்படி கூடுதல் வருவாயை தருவதற்கான தழை, மணி, சாம்பல் ஆகிய மூன்று சத்துக்களையும் கொண்டது விஜய் 17-17-17. ஆகவே உங்கள் பயிருக்கு விஜய் 17-17-17யும், விஜய் யூரியாவையும் சேர்த்து இடுங்கள்.

VIJAY
MADRAS FERTILIZERS

விஜய் உரங்களைப்பற்றி மேலும் அறிய கீழ்கண்ட முகவரியிலிருந்து இலவசமாக வெளியீடு ஒன்றைப் பெறலாம்.

ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமசந்திரபுரம், திருச்சி 620 017







இன்பங்கள் சூழ்கின்ற போது—நெஞ்சை
எட்டிப் பிடித்துக் களிப்பிக்கும் மாது
துன்பங்கள் வந்துற்ற போதும்—என்னைத்
தொட்டுப் பிடித்துக் களிப்பாள்எப் போதும்.

தனியாக நான்வைகும் வேளை—என்பால்
தாவிக் குதித்துச் சிரிப்பாள்அப் பாவை
இனிதாக வாய்த்துள்ள கோவை—வாயால்
ஈந்தாளே அவ்வின்பம் எந்நாளும் தேவை.

கண்ணுக்குள் கண்ணாக நிற்பாள்—காதல்
காட்டாற்று வெள்ளத்தைக் கண்டேத விப்பாள்
பெண்ணுக்குள் ஒன்றாகி நிற்பேன்—ஆ ஆ
பேரின்பம் பேரின்பம் விண்ணுக்கும் அப்பால்.

கவிமாது முன்வந்த காலை—இன்பங்
காணாமல் கூடாமல் வேறென்ன வேலை
அவளாகத் தான்வந்து மாலை—சூட்டி
அணைப்பாள் தொடுத்தே கொடுப்பேன்பா மாலை.

கண்காட்டி விட்டங்குச் செல்வாள்—நானும்
கைகாட்ட என்பால்வந் தேதேதோ சொல்வாள்
பண்காட்டும் பாட்டொன்று சொல்வேன்—இன்னும்
பாடென்று பாடென்று நெஞ்சிற்பு கல்வாள்.

நெஞ்சங்கள் ஒன்றாகும் போது—மற்ற
நினைவேதும் இல்லாமல் செல்வேன்விண் மீது
கொஞ்சுங்கள் கொஞ்சுங்கள் என்றே—வஞ்சி
கொஞ்சுவாள் நின்றே.
கொண்டாடி மன்றாடிக் கொஞ்சுவாள் நின்றே.

என்பாட்டில் இன்பங்கள் கண்டாள்—விஞ்சும்
எழில்கொண்ட பொற்பாவை நீள்காதல் கொண்டாள்
பின்பாட்டுப் பாடாமை கண்டாள்—என்னைப்
பித்தாக்கி நீங்காத சொத்தாக்கிக் கொண்டாள்.

கவியரசு முடியரசன்

# உருவாகி வரும்



# குடகனாறு அணைக்கட்டு



உணவு-உடை-இருப்பிடம் இம்மூன்றும் ஒவ்வொரு மனிதனின் அடிப்படைத் தேவைகளாகும்! இத்தேவைகளை நிறைவு செய்ய அரசு தீவிரமாகப் பணியாற்றி வெற்றி கண்டு வருகிறது. உணவு உற்பத்தியைப் பெருக்குதல்-தொழிற்சாலைகள் தொடங்குதல்-வேலைவாய்ப்பை அதிகரித்தல் இவையாவும் . அரசின் தலையாயக் கடமைகளாகும். எனவேதான், தமிழ்நாடு அரசு பசுமைப் புரட்சியைப் பரப்பி வருகிறது; உழவுத் தொழிலை ஊக்குவித்து வருகிறது.

''உழுதுண்டு வாழ்வரே
வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்வார்''

என்பது வள்ளுவரின் வாக்கு. உழவுத் தொழில் ., அன்றும் இன்றும் என்றும் போற்றுதலுக்குரிய தொழிலாகத்தான் இருக்கிறது.

''நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோன் உயரும்''

என்ற ஔவையின் பொன்மொழியைத் தமிழ்நாடு அரசு உணர்ந்து செயல்பட்டு வருகிறது. இயற்கை வளம் நிறைந்திருந்தும் ஆண்டுதோறும் ஏற்படுகின்ற வறட்சி முன்னேற்றத்திற்கு இடையூறாக இருந்து வருகிறது. வறட்சியையும், வளமைக்குப் பயன்படுத்துவோம் எனத் தமிழ்நாடு அரசு கால்வாய்கள் அமைத்தல்-கண்மாய்கள் தூர் எடுத்தல்-சாலைகள் !அமைத்தல் ஆகிய பணிகளை ஏராளமாகச் செய்து வருகிறது.

தமிழ்நாடு நீர் வளத்தினை நல்லமுறையில் பயன்படுத்தி வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கி வருகிறது. ஏரிகள்-குளங்கள்-கண்மாய்கள் அமைத்து, மழைக்காலங்களில் வருகின்ற ஆற்று வெள்ளத்தைத் தேக்கிப் பாசனத்திற்குப் பயன்படுத்துகிறது. நிலத்தடியிலுள்ள நீரையும் வெளிக்கொணர்ந்து வேளாண்மைக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

உழவுத் தொழில் உலகத்திற்கே இன்றியமையாதது! அதற்கு நீர்வளம் நிரம்ப வேண்டும். இதற்காக ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசு பல்வேறு இடங்களில் அணைக்கட்டுகளைக் கட்டி நீரைத் தேக்கி வருகிறது.

மதுரை மாவட்டத்தில் வேடசந்தூர் வட்டம் மிகவும் வறண்ட பகுதியாகும். அதேபோல் திருச்சி மாவட்டத்தில் உப்பிடமங்கலம், வெள்ளியணைப் பகுதியும் வறட்சியால் ஆண்டுதோறும் பாதிக்கப்படும் பகுதிகளாகும்.

''பாலைவனம் சோலைவனம்
ஆக வேண்டும்
பசுங்கிளிகள் அங்கிருந்து பாட
வேண்டும்''

என்று பாரதியார் கூறியுள்ளார். அதேபோல் அந்த பாதிக்கப்பட்ட பகுதிகள் வளம்பெறும் வகையில் வேடசந்தூர் வட்டத்தில் குடகனாறு அணைக்கட்டு கட்டப்பட்டு வருகிறது. வறண்ட பகுதி விரைவில் சோலையாக மாறுமென்பதில் ஐயமில்லை.

குடகனாறு அணைக்கட்டு வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும். குடகனாறு அணைக்கட்டு என்றதும் அப்பகுதி மக்களுக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் நினைவுதான் தோன்றும். 1957 ஆம் ஆண்டு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் திருச்சி மாவட்டம் குளித்தலைத் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அப்பொழுது உப்பிடமங்கலம், வெள்ளியணைப் பகுதிகள் குளித்தலைத் தொகுதியில் இணைக்கப்பட்டிருந்தன. வறண்ட அப் பகுதிகளுக்குக் குடகனாறு நீரைக் கொண்டு வந்தால் வளம் பெறும் என்ற நம்பிக்கையை மக்களுக்கு அளித்தார். அதற்கான முயற்சியைச் செய்வேன் என வாக்குறுதியையும் கொடுத்தார். பின்னர் இக்கோரிக்கையைச் சட்டமன்றத்திலும் எழுப்பினார். அக்கோரிக்கை இன்று கலைஞர் அவர்களே முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள நேரத்தில் நிறைவேற்றப்படுகிறது. வாக்குறுதி தந்து கோரிக்கை எழுப்பியவர் அவர் கரத்தால் தன் கோரிக்கையை நிறைவேற்றுகிறாரென்றால் அப்பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ!

குடகனாறு பழனி மலையின் கீழ்ப்பகுதியில் கிழக்குச் சரிவில் உற்பத்தியாகி, மதுரை மாவட்டம் திண்டுக்கல், வேடசந்தூர் வட்டத்தின் வடக்கு நோக்கியும், திருச்சி மாவட்டம் கரூர் வட்டத்தின் வழியாகவும் பாய்ந்து இறுதியில் கரூர் அமராவதி நதியுடன் இணைகிறது. இந்த ஆற்றின் நீளம் 109 கிலோ மீட்டர்கள். இந்த நதி வேடசந்தூர், கரூரில் வறண்ட பகுதிகளில் பாசனத்திற்குப் பயனின்றி இதுநாள்வரை ஓடிக்கொண்டிருந்தது.

குடகனாறு அணைக்கட்டு மதுரை மாவட்டம் வேடசந்தூர் பகுதிக்கும், திருச்சி மாவட்டம் வெள்ளியணை உப்பிடமங்கலம் பகுதிகளுக்கும் பாசனத்திற்கு நீர்வழங்கும். இரு மாவட்டங்களிலும் வறண்ட பகுதிகள் வளம் பெறுகின்றது.

இத்திட்டத்திற்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 25-8-73 அன்று











அப்படிப் பரிசீலிக்கக்கூட முடியாத அளவுக்கு நவீன மயப்படுத்தும் திட்டத்திற்கான அனுமதி நமக்குக் கிடைக்காமல் முடங்கிப் போய்விட்டது. அது முடங்கிப் போனாலும் - பொதுப் பணித்துறையின் சார்பில் கட்டம் கட்டமாக ஒவ்வொரு கட்டத்திலும் நவீனப்படுத்துகின்ற இந்தத் திட்டம் இன்றைக்குத் தஞ்சை மாவட்டத்திலே நிறைவேறி வருவதை விவசாயப் பெருங்குடி மக்கள் நிலக்கிழார்கள் நன்றாக அறிவார்கள்.

இந்த ஆண்டு, கடந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சிக்கு மாறாக அதிகமாகவே கொஞ்சம் மழை கிடைத்து வெள்ளம் ஏற்பட்டு விடுமோ என்ற சூழல் ஏற்பட்டபோது நான் தஞ்சைக்கு வந்து வேளாண்மைத்துறை அதிகாரிகளையும், பொறியியல் துறை அதிகாரிகளையும் அழைத்து தஞ்சையினுடைய வடிகால் பகுதிகளைக் கீழ்ப் பகுதியிலிருந்து - வடிகால் திட்டத்தைப்பற்றி ஆராய்ந்து அதற்கான திட்டம் ஒன்றை எனக்குத் தயாரித்துத் தாருங்கள் என்று கேட்டு, அந்த ஆராய்ச்சி ஓரளவுக்கு முடிவுற்று, ஏறத்தாழ 10 கோடி அல்லது 11 கோடி ரூபாய் அளவில் அந்த வடிகால் திட்ட முறைகளும் இங்கே நடைமுறைப்படுத்தப்படலாம் என்கின்ற அறிக்கையை என்னிடத்திலே தர இருக்கிறார்கள்.

அது உடனடியாகச் செய்து முடிக்கக் கூடியது அல்ல.

ரூ.11கோடி என்பது இருக்கிற நிதி ஆதாரத்தில் அவ்வளவு சுலபமானதும் அல்ல. அதனை ஒவ்வொரு ஆண்டும் செலவு செய்வது என்றால் பத்துப் பன்னிரண்டு ஆண்டுகள் ஆகும்.

அதை மூன்று நான்கு கட்டங்களாகப் பிரித்துக்கொண்டு ரூபாய் பத்து அல்லது பதினொரு கோடிக்குத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த வடிகால் திட்டம், தஞ்சை மாவட்டத்திலே நிறைவேற்றப்படுமானால் இது தஞ்சை மாவட்டத்திற்கு மாத்திரம் பயன்படுகிற திட்டம் அல்ல - பயிர் கெடாமலும், உடனடியாகத் தேங்குகின்ற தண்ணீரை வெளிப்படுத்துகின்ற வழியேற்படுத்தியும் — நல்ல உற்பத்தியைத் தஞ்சையிலே செய்து, அதன் மூலமாக நாம் தமிழகத்தையே வாழ வைக்க முடியும் - அது தஞ்சைக்காகச் செலவழிக்கின்ற

பணம் என்று தமிழ்நாட்டு மக்கள் யாரும் கருத மாட்டார்கள்.

தமிழ்நாட்டு மக்களுக்காகத் தஞ்சையிலே கொண்டு வந்து கொட்டுகிற பணம் என்பதைத் தமிழக மக்கள் அனைவரும் உணருவார்கள்.

அமைச்சர் ஆதித்தனார் அவர்கள் சில வேலைகளை இங்கே சொன்னார்கள். நான் எப்போதும் அவர் சொன்ன வேலைகளைச் செய்து முடித்து வெற்றிக் கனி தருவது வழக்கம் என்றும் சொன்னார்கள். இன்று அவர் கனி தராவிட்டாலும், இவ்விழாவில் மலர் ஒன்று வெளியிட்டிருக்கிறார். அந்த மலர் கனியாகுமென்று நான் நம்புகின்றேன். அமைச்சர் ஆதித்தனார் வெற்றிக் கனியைப் பற்றிக் கூறி இடையிலே சொன்ன கருத்துக்கு ஜூலை மாதத்திலேயே நடவு ஆரம்பமாகி விடுமேயானால், செப்டம்பர் மாதத்திலேயே அறுவடை முடிந்து விடுமேயானால் பூச்சிகளால் பயிர்களுக்குத் தொந்தரவு ஏற்படாது என்று சொன்னார்கள்.

அதற்குத் தண்ணீர் தேவை. அந்தத் தண்ணீரை நாம் எங்கிருந்து பெற வேண்டும் என்பது நமக்குத் தெரிந்த ஒன்று. அதையே திரும்பித் திரும்பி பேசிப் பயனில்லை.

இந்த ஆண்டேகூட யார் கருணை செய்தாலும், செய்யாவிட்டாலும் நான் கருணை செய்கிறேன் என்று மழைக் கரம் நீட்டினதால் நாம் தப்பித்தோம். மழைக்கரம் நீட்டப்படாதிருந்தால் என்ன ஆகியிருக்குமோ தெரியாது.

ஆகவே, மழையை நம்பி, மற்ற மாநிலத்திலிருந்து நமக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீரை நம்பி, மத்திய அரசின் நல்ல எண்ணத்தை நம்பியிருக்கின்ற நாம், செப்டம்பரிலேயே அறுவடை செய்வது எப்படி?

தண்ணீர் வந்த பிறகுதானே பயிரிட முடியும்?

இந்தக் கேள்விக்குத்தான் அமைச்சர் சொன்ன பதில்: கிணறுகளைத் தோண்டுவோம் - பம்பு செட்டுகளை வைப்போம் - துளைக் கிணறுகளை அமைப்போம் என்கின்ற அந்தக் கருத்துகளை வேளாண்மைத் துறை அமைச்சர் இங்கே

வெளியிட்டார்கள். இந்தியா முழுவதுமுள்ள 22 மாநிலங்களில் 26 இலட்சம் பம்பு செட்டுகள் இருக்கின்றன.

இந்த இருபத்தாறு இலட்சம் பம்பு செட்டுகளில் தமிழ்நாட்டில் மட்டும் இருக்கின்ற பம்பு செட்டுகள் ஏழு இலட்சத்துச் சொச்சம்.

இதைப் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் 1967-ஆம் ஆண்டு இரண்டு இலட்சமாக இருந்த பம்பு செட்டுகள் இந்த எழெட்டு ஆண்டுகளில் மேலும் 5 இலட்சம் பம்புசெட்டுகள் அதிகப்படுத்தப்பட்டு மொத்தம் ஏழு இலட்சத்துக்கு மேற்பட்ட பம்புசெட்டுகள் உள்ளன.

பம்புசெட்டுகள் மின்சாரத்தால் ஓடுபவை.

மிகக் குறைவான எண்ணிக்கை தவிர மற்றவையெல்லாமே மின்சாரத்தால் ஓடுபவை.

ஏன் இன்னும் ஒரு இலட்சம் பம்புசெட்டுகள் தஞ்சாவூருக்கு வைத்துக் கொடுக்கக்கூடாது? என்று அமைச்சர் ஆதித்தனார் கேட்கக்கூடும். நண்பர் மன்னை அவர்களும் அதை வழிமொழியக் கூடும்!

ஆனால் அதற்கு நிதி இல்லை என்றாலும் - நிதியிருப்பதாகவே ஒப்புக் கொண்டாலும்கூட, பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் தேவை அல்லவா?

அந்த மின்சாரத்திற்கு எங்கே போவது? அந்த மின்சாரம் எப்போது கிடைக்கும்?

கல்பாக்கம் எப்போது முடிவடையும்?

நெய்வேலி இரண்டாவது திட்டம் என்று தொடங்கப்படும்?

வரி விதிக்காத முறையில் நிதிகளைத் திரட்டி பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை விரிவாக நிறைவேற்ற ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட வளர்ச்சிக் கழகம் (District Development Corporation) ஒன்றை நிறுவ தமிழ்நாடு அரசு முடிவு எடுத்துள்ளது. இதன் முன்மாதிரியாக தர்மபுரி மாவட்டத்தில் இக்கழகத்தை இவ்வாண்டு நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்போது தொடங்கினாலும் இன்னும் ஏழு ஆண்டுகளாவது ஆகும். 1965-லேயே பக்தவத்சலம் கேட்டார். அப்போதே வேலை தொடங்கியிருந்தால், இப்போது மேலும் சில ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்திருக்கக் கூடும்.

இதுவரையில் நெய்வேலியில் இரண்டாவது சுரங்கப் பணி இன்னும் ஆரம்பமாகவில்லை.

நாம் நீர்நிலை மின்சாரத்தை நம்பியிருக்க முடியவில்லை. நீர்நிலை மின்சாரம் கிடைப்பது குறைவு. ஆகவே நாம் அனல் மின்சாரத்தை, அணு மின்சாரத்தைத்தான் நம்ப வேண்டியிருக்கிறது.

அவைகளை உற்பத்தி செய்யக்கூடிய ஆற்றல், அனுமதி வழங்கக்கூடிய உரிமை, இயந்திரங்கள் வாங்குவதற்கு நிதி தர வேண்டிய கடமை எல்லாம் மத்திய அரசிடம் இருக்கிறது.

இவ்வளவு சங்கடத்துக்கிடையேயும் மேலும் பம்பு செட்டுகள் போடலாம் என்றால், அதற்கு மின்சாரம் இல்லாமல் தொல்லை - அது தட்டுப்பாடு இருந்த நேரத்தில் மின்சாரம் விவசாயத்துக்குக் கிடைக்காது என்கிற நிலை— அதனால் தொழிற்சாலைக்காவது மின்சாரத்தை நிறுத்தி வேளாண்மைக்குக் கொடு — என்று குரல் கிளம்பும்; அந்தக் குரல் கிளம்பினால் அதை ஓர் அரசு மதித்தாகவேண்டும்! மதித்தால்தான் வயிற்றுக்குச் சோறு கிடைக்கும். அதற்காக எத்தனைத் தொழிற்சாலைகள் மூடப்பட வேண்டும்? அந்தத் தொழிற்சாலைகளை நம்பியிருக்கின்ற தொழிலாளர்களின் நிலை அதனால் என்ன ஆகும்? தொழிலாளர்களுக்கு யார் ஊதியம் அளிப்பது?- இப்படி ஒன்றோடு ஒன்று சங்கிலித் தொடர் போல போய்க் கொண்டிருக்கும்!




புதச்சத்திற்கு ஒரு முக்கிய மூலகாரணமாக கடல் ஆமைகளும், அவைகளின் முட்டைகளும் அமைகின்றன. முட்டை, இறைச்சி தவிர்த்து, ஆமைகளின் வயிற்றிலுள்ள எலும்புகளிலிருந்து கிடைக்கும் குறுத்தெலும்புகள் போன்ற பொருட்கள் 'சூப்' தயாரிக்கப் பயன்படுகின்றன. இளம் வயதுடைய பெண் ஆமைகள் ஒரே தடவையில் சுமார் 120 முட்டைகள் வரை இடுகின்றன. அதிசயிக்கத்தக்க வகையில் பெருஞ்சாதனையின ஏற்படுத்தியுள்ளது ஒரே தடவையில் ஏறத்தாழ 226 முட்டைகளை இட்டதாகும். கடல் ஆமைகளின் சராசரி வாழ்வுக் காலம் சுமார் 30 ஆண்டுகளிலிருந்து 50 ஆண்டுகள் வரையாகும். அவைகள் வாழும் இடங்களில் இயற்கை, சுற்றுப்புறச் சூழ்நிலை இவைகளில் கோளாறு ஏற்படாத நிலைகளில் சில ஆமைகள் ஏறத்தாழ 90 ஆண்டுகளிலிருந்து 120 ஆண்டுகள் வரை வாழ்கின்றன. பிலிப்பைன்ஸிலுள்ள அனைத்துத் தீவுகளிலும் பசுமை நிறம் கொண்ட ஆமைகள் காணப்படுகின்றன. ஏனெனில் அங்கு கடல் வாழ் உயிரினங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் அதிக அளவில் கிடைக்கின்றன. இந்த இனவகை ஆமைகள் முக்கியமாக போர்னியோவின் வடக்குக் கரையிலுள்ள 'ஆமைத் தீவி'ல் தான் அதிக அளவில் காணப்படுகின்றன. பிலிப்பைன்ஸ் அரசின் மீன்வள நிறுவனம் 5 ஆண்டுகளுக்கு ஆமைகளைப் பிடிக்கவோ அல்லது உயிர்வதை செய்யவோ கூடாது என்கின்ற தடை ஒன்றினையும் விதித்துள்ளது.

இவ்வளவு சங்கிலிப் பிணைப்புகளும் இருக்கின்ற காரணத்தினால்தான் அமைச்சர் சொன்ன கருத்தை ஒப்புக் கொள்ள முடியாமல் நான் திண்டாடுகிறேனே அல்லாமல், அவர் சொன்ன கருத்தை நான் ஒப்புக் கொள்ளக்கூடாது என்பது அல்ல; ஒப்புக் கொள்ள இயலாத சூழ்நிலை இருக்கிறதே அதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்.

என்றாலும் - என்றாவது ஒரு நாள் அமைச்சர் ஆதித்தனார் இங்கு சொன்ன அந்தக் கருத்து செயல்படுத்த வேண்டிய கருத்து என்பதை நான் நன்றாக உணருகிறேன்.

குழாய்க் கிணறுகள் மின்சார உபயோகம் இல்லாமல் கூட வேறு எண்ணெயின் மூலமாக இயங்கக் கூடிய அளவில் அமைக்கலாம் என்றாலும் — அவற்றிற்குத் தேவையான எந்திரங்களுக்கு மத்திய அரசு ஒதுக்க வேண்டிய கோட்டாவை ஒதுக்கவில்லையே என்று எந்திரங்களை உற்பத்தி செய்பவர்கள் கூறுகிறார்கள்.

இவ்வளவு சங்கடங்களும் இருப்பதால்தான் தஞ்சை மாவட்டத்திலே அதிகமான குழாய்க் கிணறுகள் - அல்லது பம்புசெட்டுகள் அமைத்திட முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறோம்.

மேலும் தஞ்சை மாவட்டத்திலே இப்படிப்பட்ட அருமையான ஆராய்ச்சிகள் நடைபெறுவதற்கான ஊக்கத்தை இந்த ஆடுதுறை ஆராய்ச்சிப் பண்ணை தொடர்ந்து உருவாக்கியிருப்பதை நான் மகிழ்ந்து, வாழ்த்தி, இத்தகைய ஆராய்ச்சிலே ஈடுபட்டிருக்கிற நண்பர்களுக்கெல்லாம் என்னுடைய பாராட்டுகளையும் உற்சாக மொழிகளையும் உரைத்து, அவர்களுடைய கடமை உணர்வு தமிழகத்தைக் காப்பாற்றுமாக என்று கூறிக்கொண்டு - அவர்களுடைய பொறுப்பு, நுண்ணறிவு, ஆர்வம், எதிர்காலத் தமிழகத்தை ஒளி மயமாக ஆக்குமாக என்று அவர்களை வாழ்த்துகிறேன்:

**[தஞ்சை மாவட்டம் ஆடுதுறையில் வேளாண்மை ஆராய்ச்சிப் பண்ணை பொன் விழாவில் முதல்வர் ஆற்றிய உரை 20.10.75]**

# டிஐஐஸி பற்றி புள்ளி விவரங்கள் கூறிடும் உண்மையைக் காணீர்!

## தொழில் முதலீட்டுத் துறையில் முன்னேற்றம் கண்டிடும் இயக்கமிது.

*தற்போது...*

தொழில் துவக்க முதலீடு மற்றும் அதன் பலவகை அம்சங்களைப் பற்றியும் ஆழ்ந்த அனுபவம் கொண்ட முன்னணி நிறுவனமாக டிஐஐஸி அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

*புள்ளி விவரங்கள் கூறும் உண்மை இதோ...*

1974-75ல் டிஐஐஸி அளித்த மொத்த உதவித் தொகை ரூ. 17.75 கோடிக்கு உயர்ந்தது. இந்த பெரும் வளர்ச்சி கடந்த ஆண்டைவிட 207% அதிகமாகும். சிறுதொழில்களுக்கு அளிக்கப்பட்ட நிகர உதவித் தொகை சுமார் ரூ. 6.25 கோடியாகும். விண்ணப்பவாரியாக பார்த்தால், 80% இந்த துறைக்கே அளிக்கப்பட்டுள்ளது. பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் அமைப்புகளுக்கு சலுகை நிபந்தனைகளின் பேரில் டிஐஐஸி அளித்த நிகர உதவி ரூ. 9.03 கோடியாகும். இது கடந்த ஆண்டைவிட 201% அதிகமாகும்! சுறுசுறுப்பான தொழில் துறையில் டிஐஐஸிக்கு முக்கிய பங்குண்டு.




**தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்**
"அருள்மனை"
26, ஒயிட்ஸ் ரோடு, சென்னை-600 014
நிர்வாக இயக்குநர்: S. N. பாய்

கிளைகள்:
கோயமுத்தூர்
மதுரை
சேலம்
தஞ்சாவூர்
திருநெல்வேலி
& வேலூர்

**டிஐஐஸி**
இதயபூர்வமான நிதியுதவி




உப்பிட மங்கலத்தில் அடிக்கல் நாட்டுவிழா நடத்தி வைத்தார்கள். இத்திட்டத்திற்கு ரூ. 212 இலட்சம் செலவிட மதிப்பீடு செய்யப்பட்டது. ஆனால் முழுவேலையும் முடிவுறும் தருவாயில் தற்போது ரூ. 320 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

வேடசந்தூரிலிருந்து 11 கிலோ மீட்டர் தொலைவில் அழகாபுரி என்ற இடத்தில் குடகனாறு அணைக்கட்டு அமைந்துள்ளது.

இத்திட்டத்தினால் மதுரை மாவட்டத்தில் 2,230 ஏக்கர் நிலமும், திருச்சி மாவட்டத்தில் 2,910 ஏக்கர் நிலமும் புதிதாகப் பாசனம் பெறுகிறது. மேலும் 356 ஏக்கர் தரிசு நிலம் புதிய பாசனம் பெறுகிறது. மொத்தம் 5,496 ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. ஏற்கெனவே பாசனத்திற்கு வசதி உள்ள 819 ஏக்கர் நிலம் போதுமான தண்ணீர் இல்லாமல் இருப்பதால் அதற்கும் நீர் வழங்க வழி செய்யப்பட்டுள்ளது.

தென்மேற்குப் பருவமழையாலும், வடகிழக்குப் பருவமழையாலும் குடகனாறு அணைக்கட்டிற்குத் தண்ணீர் கிடைக்கிறது. அக்டோபர், நவம்பர் மாதங்களில் இந்த ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. 2,173 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிலிருந்து இதற்குத் தண்ணீர் வரத்து உள்ளது.

அணைக்கட்டில் நீர் தேங்கி நிற்கும் இடத்தின் பரப்பளவு சுமார் 1216 ஏக்கர்களாகும். மதுரை மாவட்டத்தில் உள்ள பெரிய அணைக்கட்டுகளில் இதுவும் ஒன்றாகும். குடகனாற்றில் இது 12-வது அணைக்கட்டாக அமைந்துள்ளது.

இந்த அணைக்கட்டிலிருந்து இரண்டு கால்வாய்கள் அமைக்கப்படுகிறது. முதல் கால்வாய் 9 கிலோ மீட்டர் தூரத்திற்கு அமைக்கப்பட்டு பாசனத்திற்கு நீர் வழங்கப்படுகிறது. மற்றொரு கால்வாய் 48 கிலோ மீட்டர் நீளத்தில் அமைக்கப்பட்டு அதன்வழியாக வெள்ளியணை, உப்பிடமங்கலம், புதூர், வீரராக்கியம் ஆகிய ஊர்களிலுள்ள கண்மாய்களில் பாசனத்திற்கு நீர் நிரப்பப்படுகிறது. கால்வாய்களில் நீர் எடுத்துச் செல்லும்பொழுது கசிவு ஏற்படுவதைத் தடுக்க பாலித்தின் அட்டைகளை வைத்து அதன்மேல் சிமெண்ட் பலகைகளைப் போடுகிறார்கள்.

நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 12.3 மில்லியன் கனமீட்டர். நீர்பாசனத்திற்குப் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள ஆயக்கட்டுகள் ஒருபோகமாகும். இந்தப் பகுதி முழுவதும் நெற்பயிர்செய்வதற்குத் தகுதியான செழுமையான வண்டல் மண்ணும் சிவப்புக் களி மண்ணும் கலந்த நிலமாகும்.

இத்திட்டத்திற்கு 1,151.75 ஏக்கர் பரப்பு உள்ள நிலம் கையகப்படுத்தப்பட்டு அதில் வேலைகள் நடைபெறுகிறது. தண்ணீர் தேங்கும் பகுதியில் 38 ஓட்டு வீடுகள், 93 குடிசை வீடுகள், 92 கிணறுகள் உள்ளன. இங்குள்ள அனைவருக்கும் வீட்டுமனைப் பட்டா இலவசமாக வழங்கப் பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட வீடுகள், கிணறுகள் யாவற்றிற்கும் ஈட்டுத்தொகையும் தரப்பட்டு வருகிறது.

இந்த அணையின் நீளம் 7,956 அடி, அகலம் 16 அடி ஆகும். அணைக்கட்டின் ஓரத்தில் மிக அழகான பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. வேடசந்தூரிலிருந்து குடகனாறு அணைக்கட்டு செல்ல 11 கிலோ மீட்டருக்குக் கப்பிரோடு புதிதாகப் போடப்பட்டுள்ளது. இந்த அணைக்கட்டு வேலை ஆரம்பமான பின்னர், வேடசந்தூர் நகரமே எழில் மிகு நகரமாக ஆகி வருகிறது.

இத்திட்டத்தால் வறண்ட நிலங்கள் விளை நிலங்களாக்கப் படுகிறது. சுமார் 3,000 தொழிலாளர்களுக்கு அணை கட்டும் வேலையில் தினமும் வேலை வாய்ப்பளிக்கப்படுகிறது. கால்வாய் வெட்டும் வேலையில் சுமார் 600 தொழிலாளர் ஈடுபட்டுள்ளனர். இப் பின்தங்கிய பகுதியில் இத்திட்டத்தால் 18 மாதங்களாகத் தொழிலாளர்களுக்கு நன்கு வேலைவாய்ப்புக் கிடைத்து வருகிறது.

இத்திட்டத்திற்குக் குடியிருப்புக் கட்டடங்களின் வேலை முடிந்துவிட்டன. மண் அணை, பாசன மதகுகள், வழிந்தோடி ஆகிய வேலைகள் விரைவில் முடியும் தருவாயிலுள்ளன.

புதிதாகப் பாசனம் பெறும் 5,496 ஏக்கரில், ஏக்கருக்கு 0.8 டன் தானியம் வீதம் 4,396.8 டன் மொத்த உணவு தானிய உற்பத்தி இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. தரிசு நிலப்பாசனத்தில் 409.5 டன் தானிய உற்பத்தி இருக்குமெனக் கணக்கிடப் பட்டுள்ளது.

குடகனாறு அணைக்கட்டு அப் பகுதிக்கு வேண்டுமென்று பதினெட்டு ஆண்டுக் காலத்திற்கு முன்னால் முதல்வர் கலைஞர் அவர்களின் இதயத்தில் தோன்றியது. இன்று அவரால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த அணைக்கட்டால் பாசனம் பெறும் பகுதிகள் யாவும் வானம் பார்த்த பூமியாய் இருந்தவைகளாகும். தொடர்ந்து வானம் பொய்த்ததால் பாலைவனமோ என அஞ்சத் தோன்றியது. சோலையாய் மாற்றுகிறது தமிழ்நாடு அரசு; மக்களின் வாழ்த்தைப் பெறுகிறது குடகனாறு அணைக்கட்டின் பணிகள் நிறைவெய்தி விரைவில் திறக்கப்பட உள்ளது.

—ம. அரி.

என்பவன் நாகசாமியின் ஒரே புதல்வன். சுந்தரபாண்டியனுக்குப் பெரு வாழ்வு கிடைக்க வழிகாட்டிய மனோகரன் தன்னையும் மிஞ்சிவிடுவான் என்று அவனை வஞ்சகமாகக் கொன்று புதைத்துவிட்டார். மீன் பிடிக்கப் போன கணவனை கடல் விழுங்கியது தெரியாமல் நாளை வருவான் என்று கடற்கரையில் காலமெல்லாம் காத்திருக்கும் காதலியைப்போல நாகசாமியும் அவன் மனைவியும் காத்திருந்தார்கள்.

கப்பலில் சென்ற மகன் இன்று வருவான், நாளை வருவான், மற்றொரு நாள் வருவான் என்று காத்திருந்த நாகசாமியின் மனைவி தன் மகன் மனோகரன் வராத ஏக்கத்தில் அவன் நினைவாகவே இறந்துவிட்டாள். பாசத்தோடு வளர்த்த பிள்ளையையும் கட்டிய மனைவியையும் இழந்த நாகசாமி துடித்தான். துயரடைந்தான். கண்ணீரும் கம்பலையுமாகச் சுந்தரபாண்டியனிடம் ஓடிப்போய்க் கதறினான்.

பொன்னையும் பொருளையும் கொடுத்து மண்ணுலகில் மகிழ்ச்சியோடு வாழ் என்றார் சுந்தரபாண்டியன். நரபலியாக்கப்பட்ட நாகசாமியின் மகன் மனோகரன் மலேயா போயிருப்பதாகச் சொல்லச் சொன்னார். சுந்தரபாண்டியன் லஞ்சமாகக் கொடுத்த பொன்னையும் பொருளையும் தூக்கி எறிந்து ''வஞ்சகா, பஞ்சமா பாதகா! என் மகன் எங்கே? என் மகன் எங்கே? என்று கதறினான் நாகசாமி. கெஞ்சிக் கேட்டான். ''கொடுமை!.. கொடுமை'' என்று ஊரைக் கூட்டுவதாக ஓலமிட்டான். பட மெடுத்த நாகமாகிவிட்ட நாகசாமியை நையப்புடைத்தார் சுந்தரபாண்டியன். கடற்கரைக் காட்டிலே நாகசாமியைத் தூக்கி எறிந்து விடச் சொன்னார். அடிபட்ட நாகம் நல்ல காற்றை உணவாக்கிக்கொண்டு உயிர் தப்பி, அடித்தவனைக் கடித்துக் கொல்லக் காத்திருக்குமென்று சொல்வதுபோல அழிந்து போனதாகக் கருதப்பட்ட நாகசாமி மாறுவேஷத்தில் தன்னை மறைத்துக் கொண்டு சுந்தரபாண்டியனைப் பழிதீர்த்துக் கொள்ளக் காத்திருந்தானா?

காலம் கனிந்தது. கடவுள் தந்த வழியென மணமக்கள் இருந்த காரில் டிரைவராக உட்கார்ந்தான். நாகசாமி ஓட்டிய கார் கோயம்புத்தூரை நோக்கிப் புயல் வேகமாக, ஓடிக் கொண்டிருந்தது. புயல் காற்றை விட வேகமாக மின்னலை விட விரைவாகக் காரை ஓட்டினான் நாகசாமி. காருக்குள் உட்கார்ந்திருந்த மணமக்கள் விநாயகமும், சந்திராவும் பயந்து நடுங்கினர். கிரீச்சிட்ட சப்தத்துடன் சாலைத் திருப்பங்களில் கார் திரும்பும் போதெல்லாம் சந்திரா வீரிட்டுக் கதறி விநாயகத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள். அதைக் கேட்ட நாகசாமி பயங்கரமாகச் சிரித்தான்.

''டிரைவர் காரை நிறுத்து. காரை நிறுத்து'' காருக்குள் மணமகனாக உட்கார்ந்திருந்த விநாயகம் எவ்வளவோ கூச்சலிட்டுத் தடுத்தும் நாகசாமி கேட்கவில்லை. சொர்க்கத்திற்கு அழைத்துப் போவதாகச் சொல்லி மணமக்கள் ஏறியிருந்த காரை வேகமாக ஓட்டிக்கொண்டு போனான். காரை நிதானமாக ஓட்டாமல் இவ்வளவு வேகமாக ஓட்டும் காரணம் புரியாத மணமக்கள் குழப்பம் அடைந்து தெய்வத்தை வேண்டினார்கள். அவர்கள் வணங்கிய தெய்வம் முன்னே வந்து காப்பதுபோல ரெயில்வே கேட்' குறுக்கே வழிமறித்து நின்றது.

மணமக்கள் வந்த கார் அதன் அருகில் போய் நின்றதும், காரிலிருந்து இறங்கிய கிழவன் தொலைவில் போய் நின்று சுருட்டைப் பற்ற வைத்தான். மின்னலெனப் பறந்து வந்த காரைத் தொடர்ந்து மற்றொரு காரில் வந்த கருணாகரன் அவருடைய காரிலிருந்து இறங்கினார். தந்தையைக் கண்ட அவர் மகள் சந்திராவும் மாப்பிள்ளை



விநாயகமும் இறங்கினார்கள். கிழவன் காரை ஓட்டிவந்த விதத்தைச் சொன்னார்கள். சந்திரா பயந்து வீரிட்டுக் கத்தியதைச் சொன்னார் விநாயகம்.

''எங்கே அந்த டிரைவர்-ராஸ்கல்''

''அதோ''

மரத்தடியில் நின்ற கிழவனைக் காட்டினாள் சந்திரா. ''ஏய் டிரைவர்-வா. இப்படி'' சப்தமாகக் கோபத்தோடு கூப்பிட்டார். டிரைவர் திரும்பினான்.

''இவன் இல்லே.....எங்க காரை ஓட்டிவந்த டிரைவருக்கு நரைத்த தாடி மீசை இருந்தது'' என்று மாப்பிள்ளை விநாயகம் படபடப்போடு சொல்லி விட்டுச் சந்திராவைப் பார்த்தார்.

''ஆம்...இவனில்லே. அவன் இவனில்லே.''

சந்திரா பேச்சை முடிப்பதற்குள் இவன் நம்ம சமையல்கார சாம்பசிவமாச்சே என்றார் கருணாகரன். சாம்பசிவம் நடந்து வந்து கொண்டிருந்தான். மகள் சந்திரா, தந்தை சொன்னதை ஒப்புக் கொண்டாள்.

இவன் இங்கே எப்படி வந்தான்? ஏன் வந்தான்? எதற்காக வந்தான்? கருணாகரனின் உள்மனம் கேள்விமேல் கேள்வியாகக் கேட்டுக் கொண்டது. சமையல்கார சாம்பசிவத்துக்குக் கார் ஓட்டத் தெரியுமா? , என்ற கேள்விக் குறியோடு, அவர் எதிரே வந்து கொண்டிருந்த சாம்பசிவத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

காரை ஓட்டிவந்தவன் கிழவனாயிற்றே. அவன் எங்கே போனான்? மாப்பிள்ளை விநாயகத்தின் மனத்தில் எழுந்த கேள்விக்குறி பெரிதாகிக் கொண்டிருந்ததால், அவர் கண்கள் அந்தக் கிழவனையே தேடி வட்டமிட்டுக் கொண்டிருந்தன. கருணாகரனிடம் தன் மனத்தில் எழுந்த சந்தேகத்தைச் சொல்லாமலே காரின் பின்னால் போய்ப் பார்த்தார். அவர்கள் வந்த கார் டிக்கி கொஞ்சம் திறந்திருந்தது. படீர் என்று திறந்து பார்த்தார்...அதில் வைத்த பெட்டிகள் அப்படியே இருந்தன. பக்கத்தில் ஒரு ஆள் உட்காரும் அளவுக்கு இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. டிக்கியை மூடிவிட்டு ரெயில்வே கேட் கீப்பர் அறையை நோக்கி வேகமாக நடந்தார். ஓடினார். ஓட்டமும் நடையுமாகச் சென்று அறைக்குள்ளேபோய்ப் பார்த்தார். மாப்பிள்ளை விநாயகம் எங்கே ஓடுகிறார். யாரைப் பார்க்க ஓடுகிறார் என்று மகளைக் கேட்காமலே பார்த்துக் கொண்டிருந்தார், கருணாகரன். சாம்பசிவம் கருணாகரன் முன்னால் சிரித்தபடி நின்றான்.

''ஏம்பா..நீயா காரை ஓட்டி வந்தே?'' கருணாகரன் மறுபடியும் சாம்பசிவத்தைக் கேட்டார்.

''ஆமாங்க''

''இல்லே...ஒரு கிழவன் ஓட்டி வந்தான். இவன் எப்படியோ எதுக்காகவோ இங்கே வந்து நிற்கிறான்'' சந்திரா சொன்னாள்.

மாப்பிள்ளை விநாயகம் வேகமாகத் திரும்பி வந்து ''நிச்சயமாக எங்க காரை ஓட்டிவந்தவன் நரைத்த தாடி மீசை வைத்த கிழவன்தான்'' என்று உறுதியாகச் சொன்னார்.

சமையல்காரச் சாம்பசிவத்தைக் கோபக்கனல் வீசும் கண்களோடு பார்த்தார் கருணாகரன். கருணாகரனுக்குக் கோபம் வந்தால் அதன் விளைவு என்ன என்று தெரிந்து வைத்திருந்த சாம்பசிவம் தன் சட்டைக்குள்ளிருந்து நரைத்த ஒட்டுத் தாடி மீசைகளை எடுத்துக் கொடுத்தான்.

''உண்மையாகவே நீதான் காரை ஓட்டி வந்தாயா? உனக்குக் கார் ஓட்டத் தெரியுமென்று இதற்கு முன் சொன்னதில்லையே'' கருணாகரன் நயமாகக் கேட்டார்.

''சந்தர்ப்பம் கிடைக்கலேங்க. எனக்குக் கார் ஓட்டத் தெரியும். நான் கார் ஓட்டறேன்னு சொன்னா ஐயா நம்ப மாட்டீங்க. காரை வேகமாக ஓட்டுற திறமை எனக்கு இருக்குன்னு சொல்லாமச் சொல்லத்தான் இந்தத் தாடி மீசைகளை வைச்சிக்கிட்டு நானே வேகமாக ஓட்டினேன். உங்ககிட்டே சொல்லாமக் காரை ஓட்டி வந்ததுக்கு மன்னிச்சுக்குங்க எஜமான்'' என்று பணிவோடும் பயத்தோடும் கும்பிட்டான் சமையல் சாம்பசிவம்.

கருணாகரன் சமையல் சாம்பசிவத்தை நம்பிவிட்டார். அவர் மகள் சந்திரா ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுத் தன் மனத்தில் எழுந்த பயத்தைப் போக்கிக் கொண்டாள்.

''குபு குபு'' என்ற சப்தத்தோடு வந்த ரெயில், கேட்டைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தது. கருணாகரனுடைய மனத்தில் எழுந்த சந்தேகம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து கொண்டிருந்தது.

ரெயில்வே கேட் திறக்கப்பட்டதும் கருணாகரனின் காரில் ம்ணமக்கள் ஏறிக் கொண்டார்கள். கருணாகரனே காரை ஓட்டினார். மணமக்கள் ஏறி வந்த காரைச் சமையல்காரச் சாம்பசிவம் ஓட்டினான். கோயம்புத்தூரை அடைந்த கார் கருணாகரன் பங்களாவில் போய் நின்றது. காரிலிருந்து இறங்கிய மணமக்களைக் கும்ப விளக்கேற்றி மஞ்சள் ஆரத்தி எடுத்து வீட்டிற்குள்ளே அழைத்தனர்.

மணமக்களை வரவேற்கக் காத்திருந்த கருணாகரனின் நண்பர் மேகநாதன் தம்பதிகளிடம், மாப்பிள்ளை விநாயகத்தை அறிமுகம் செய்து வைத்தார். மணமக்கள் இருவரும் மேகநாதனையும் அவர் மனைவியையும் வணங்கினார்கள். பின்னர் மணமக்களைப் பார்க்க உறவினர்களும் நண்பர்களும் வந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

கருணாகரனும் அவர் நண்பர் மேகநாதனும் சுந்தரபாண்டியன் உடல் நிலையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். வேதாரண்யத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட அசம்பாவிதத்தைப் பற்றியும் அதைத் தொடர்ந்து சுந்தரபாண்டியன் உடல்நிலை பாதிக்கப்பட்டதையும் நண்பர் மேகநாதனிடம் சொன்னார் கருணாகரன். கருணாகரனை அவர் மனைவி கூப்பிடுவதாக அழைப்பு வந்தது. வீட்டிற்குள்ளே போய், உடனே சிரித்தபடி வெளியே வந்தார் கருணாகரன்.

''என்ன கருணாகரன் உங்க முகமலர்ச்சியிலும் மகிழ்ச்சியிலும் நான் கலந்து கொள்ளக் கூடாதா? சொல்லுங்கள்'' என்று கேட்டார் மேகநாதன்.

மேகநாதனின் அருகே வந்த கருணாகரன் அவர் கையைப் பிடித்துக் தனியே அழைத்துக் கொண்டு போய் மணமக்களின் முதல்இரவு ஏற்பாடு பற்றி சொன்னார்.

''எனக்கு அது மறந்தே போச்சு. வயசாச்சு பாருங்க மிஸ்டர் கருணாகரன் இந்த விஷயத்தை நாமாகச் செய்துவிடக் கூடாது. சம்பந்தி வீட்டாரையும் கலந்து செய்ய வேண்டிய காரியம்'' என்றார்.

''சுந்தரபாண்டியன் யார்? நான் யார்? நான் எதை செய்தாலும் நல்லதைத்தான் செய்வேன் என்று சுந்தரபாண்டியனுக்குத் தெரியும். அதே போல அவர் எந்த முடிவு செய்தாலும் நல்ல முடிவாகத் தான் இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கும் உண்டு. இந்தத் திருமணம்கூடச் சுந்தரபாண்டியன் முடிவுப்படி நடந்தது தானே,'' என்றார் கருணாகரன்.

''சரி, கருணாகரன்! நேரமாயிற்று. எதற்கும் சம்பந்தி வீட்டாரோடு பேசி முடிவு செய்யுங்களேன். அதோ என் மனைவி வருகிறாளே. மணமக்களின் முகமலர்ச்சியைப் பார்த்தால் நீங்க முடிவு செய்தபடி இன்றே நடக்க வேண்டியது தான் போலிருக்கிறது'' மேக



''வேளாண்மைச் செம்மல்கள்'

1973-74-ல் நடந்த தமிழ்நாடு மாநில நெல் விளைச்சல் போட்டியில் முதல் பரிசு பெற்றுள்ள திரு. ஜே. சண்முகம் சோளம் விளைச்சல் போட்டியில் முதல் பரிசு பெற்ற திரு. ஆர். சிவசாமி இருவருக்கும் ''வேளாண்மைச் செம்மல்'' பட்டம் வழங்கப்படும்.

திரு. ஜே. சண்முகம் சேலம் மாவட்டம், இடப்பாடி வட்டம் கூடக்கல் கிராமத்தைச் சேர்ந்தவர். ஆர். சிவசாமி கோவை மாவட்டம் மாடம்பாளையத்தைச் சேர்ந்தவர்.

..நாதன். பேசி முடிப்பதற்குள் கருணாகரன் மனைவி அவர்களிடம் வந்து சேர்ந்தாள்.

"என்ன மரகதம்"

"நானைக்கு வைச்சுக்கலாம்னு ..ம்மா சொல்லிட்டாங்க"

..." இழுத்தாற்போல ..ம்மதம் தெரிவித்தார் கருணாகரன்.

"ரொம்ப நல்லாப் போச்சு மிஸ்டர் கருணாகரன். மணமக்களின் முதல் இரவையும் தனிலவையும் அவர்கள் சந்தோஷமாகக் கழிக்க ஊட்டியிலுள்ள என் பங்களாவைக் கொடுக்கலாமென்று நினைக்கிறேன். நீங்க சம்மதம் கொடுத்தால் இப்போதே பங்களாவில் உள்ள மேனேஜருக்குப் போன் செய்து எல்லா ஏற்பாடுகளையும் செய்திடுவேன். என்ன சொல்றீங்க? உங்களுக்கு உதவ எனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கிறீங்களா!"

"உங்களுக்குச் சிரமமாச் சென்னு நினைக்கிறேன். வேறே ஒண்ணுமில்லே. நீங்களும் என் உயிர்த்தோழர். சரி உங்க விருப்படியே செய்யுங்களேன்" மகிழ்ச்சியில் கருணாகரனின் கையைப் பிடித்துக் குலுக்கிவிட்டு ஊட்டிக்குப் போன் செய்தார் மேகநாதன். ஊட்டியிலுள்ள பங்களாவில் மணமக்கள் விநாயகம், சந்திரா இருவரின் முதல் இரவுக்கான எல்லா ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருந்தன.

மறுநாள் மணமக்கள் ஊட்டிக்குப் புறப்பட்டார்கள். அவர்கள் ஏறிவந்த கார் ஊட்டியிலுள்ள மேகநாதன் பங்களா போர்டிகோவில் போய் நின்றது. காரிலிருந்து மணமக்கள் இறங்கியதும் அன்று சாரில் வந்தபோது வழியில் சிரித்த டிரைவர் கிழவனின் சிரிப்பு எங்கிருந்தோ கேட்டது. அந்தச் சிரிப்பொலியை மணமகன் விநாயகம் மட்டும்தான் கேட்டார். சந்திராவின் காதில் அந்தச் சிரிப்பொலி விழவே இல்லை. சந்திரா அங்குள்ள கண்கவர் காட்சிகளை எல்லாம் பார்த்துத் துள்ளிக் குதித்து ஓடினாள். ஆடிப்பாடி மகிழ்ந்தாள். விநாயகம் தேனுண்ட வண்டுபோலச் சந்திராவின் பின்னால் போய்க் கொண்டிருந்தான். இடையிடையே அந்தக் கிழட்டு டிரைவரின் சிரிப்பொலி காதில் விழுந்து கொண்டிருந்தது.

வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த மேகநாதனின் பங்களா வைரங்கள் பதித்த மாளிகை போலிருந்தது. நண்பர்கள் கருணாகரன், சுந்தரபாண்டியன் இருவரையும் பெருமைப்படுத்தும் வகையில் ஒரே நாளில் நடக்கும்படி, இயல், இசை, நாடகம் மூன்றுக்கும் ஏற்பாடு செய்துவிட்டார் மேகநாதன். முத்தமிழ் நிகழ்ச்சிகள் முழங்க வந்தவர்களுக்கெல்லாம் விருந்தும் நடந்து கொண்டிருந்தது.

ஆடல் பாடல்களில் தன்னை மறந்து மகிழ்ந்திருந்த விநாயகத்தின் நினைவில் கல்லூரி நண்பர்களும் அவனை விரும்பிக் காதலித்த பெண்களும் வண்ணப்படத்தின் நிழலாக வந்து மறைந்தனர். இசை விருந்து முடிந்து, வயிற்றுக்கும் விருந்து உண்டபின், மணமக்களைத் தனியறைக்குள் அனுப்பினர்.

வண்ண விளக்குகளாலும் வாசனைத் திரவியங்களாலும் அழகுற விளங்கிய திருவாளர் மேகநாதன் மாளிகையில், படுக்கை அறைக்குள் மணமக்கள் நுழைந்ததும், இளம் தளிர்களான விநாயகத்தின் உள்ளத்திலும் சந்திராவின் உள்ளத்திலும் புதுப்புது எண்ணங்களை உண்டாக்கின. மது அருந்திய வண்டுகளைப்போலப் போதை கொண்டு நின்றனர். ஒருவரை ஒருவர் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து நின்றனர். சந்திராவின் ஒளிவீசும் கண்கள் விநாயகத்தைப் பார்க்கப் பார்க்க, விநாயகம் மலைப் பாம்பின் கண்களை உற்றுப் பார்த்து விட்ட உயிரைப் போலச் சந்திராவிடம் சென்று கொண்டிருந்தான். இன்ப உணர்ச்சிகளைத் தட்டி வாவா வென்று அழைப்பது போலச் சந்திராவின் முகத்தில் விளையாடும் கண்கள் இமைகொட்டி அழைத்தன. விநாயகமும் சந்திராவும் கண்களால் பேசிக் கொண்டார்கள். இரு மனமும் ஒருமனமாக உறுதி கொண்டது. அவர்கள் கைகள் இரண்டும் இறுகப் பிடித்து உறுதி செய்து கொண்டன.



பால், பழம், தெவிட்டாத தேன், ஒரு பக்கம் அசல் நெய்யினால் செய்யப்பட்ட அல்வாவும், கேக்கும்! மறுபக்கம்- மணக்கும் மல்லிகையும் மணம் கவரும் ஜவ்வாதும்! எங்கும் மணம் வீசிக் கொண்டிருந்தன! வண்டின் இசைக்கு மலர் மகிழ்ந்தாடுவதுபோலச் சந்திரா விநாயகத்தின் மடியில் படுத்து இமை மூடி மகிழ்ந்தாள்.

புதுவாழ்வு துவங்கப்போகும் தன் மகன் விநாயகத்தைப் பற்றிச் சுந்தரபாண்டியன் வேதாரண்யத்தில் இருந்தபடி கற்பனை செய்து கொண்டிருந்தார். ஆனால் ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்த காரில் யாரோ வைத்த வெடிகுண்டு அவரை மீண்டும் குழப்பத்தில் ஆழ்த்தியது. மணமக்கள் கோவை போய்ச் சேர்ந்ததைத் தாபத்தோடு டிரங்கால் போட்டுத் தெரிந்துகொண்டு பெருமூச்சு விட்டார். தன் ஒரே மகன் விநாயகத்தின் வாழ்வை எப்படி அமைப்பது என்று அவர் மனம் திட்டமிட்டுக் கொண்டிருந்தது.

கருணாகரனும் அவர் நண்பர் மேகநாதனும் வெற்றிகரமாக முதல் இரவு விழாவை ஏற்பாடு செய்துவிட்டதாகப் பெருமைப்பட்டுக் கொண்டனர். கருணாகரன் மேகநாதனிடம்விடைபெற்றுக்கொண்டு கோவைக்குப் புறப்பட்டு விட்டார். அவர் காரின் வேகத்தைவிட வரவேற்பு ஊர்வலத்திற்காக வந்திருந்த காரில் வெடித்த குண்டின் நினைவுகள் அதிகமாக வந்து கொண்டிருந்தன.



# தலைக்கு விலை என்ன?

## சாமி பழனியப்பன்

'இன்பக் கதைகள் எல்லாம்-உன்னைப் போல் ஏடுகள் சொல்வதுண்டோ?

என்ற புதுமைக்கவி பாரதியாரின் இனிய பாடல் வரிகள் 'அன்பு செய்வதிலே நிகரற்ற அருமைக் குழந்தைகட்கு மட்டுமன்று, ஆயிரமாயிரம் கதைகள் கூறிச் சிந்தைக்குத் தெவிட்டாத விருந்தளிக்கும் அஞ்சல் தலைகளுக்கும் பொருந்தும்.

அஞ்சல் தலைகள் மூலம் ஒரு நாட்டின் கலை, இலக்கியம், பண்பாடு, நாகரிகம், சமயம், மண்ணியல், உயிரியல், சமுதாயப் பழக்கவழக்கங்கள் ஆகிய பல்துறைகளையும் அறிந்து கொள்ளலாம்-வரலாறு கற்கலாம்-வாழ்வியல் கற்கலாம். நமக்குப் பல்கலைகளை-பல்துறைக் கல்வியைக் கற்றுக் தரும் பல்கலைக் கழகங்களாகவே அவை விளங்குகின்றன!

பிரிட்டனில் அஞ்சல்தலை ஒட்டும் வழக்கம் 1840-ஆம் ஆண்டு தொடங்கியது. அதைத் தொடர்ந்துதான் அஞ்சல்தலை சேகரிக்கும் பழக்கமும் ஏற்பட்டது. பிரிட்டன் எப்போதுமே தனக்கென ஒரு தனித் தன்மையைக் கடைப்பிடிக்கும் இயல்புடையது. எப்போதும் அரச மரபினரின் உருவங்களையே அந்த நாடு தன் அஞ்சல் தலைகளில் அச்சிடும். ஆனால் கடந்த 15 ஆண்டுகளாக, பிரிட்டன் இவ்வகையில் தன் கொள்கைகளை முழுக்க முழுக்க மாற்றி, அவ்வப்போது குறிப்பிட்ட நிகழ்ச்சிகளையொட்டிய வண்ண ஓவியங்களைக் கொண்ட அஞ்சல் தலைகளையும், நினைவு அஞ்சல் தலைகளையும் வெளியிட்டுப் பெரும் அளவில் பணமாக்கி வருகிறது.

நாம் இன்று கடிதங்களை அனுப்பப் பயன்படுத்துகிற அஞ்சல்தலைகளை முதன்முதலில் ஆசியாவில் அறிமுகப்படுத்திய நாடு எது? முதல் அஞ்சல் தலை எப்போது எங்கே வெளியிடப்பட்டது என்னும் செய்திகளை அறியும்போது உண்மையிலேயே நாம் பெரிதும் பெருமிதமும் பெருமையும் அடைவோம். ஆம். அஞ்சல் தலையை அறிமுகப்படுத்திய முதல் ஆசியநாடு இந்தியாதான். 1852 ஆம் ஆண்டு ஜூலை முதல் நாளில் சிந்து மாநிலத்தின் ஆணையாளராக இருந்த பார்ட்ஸ்ஃப்ரெர் என்பவரால் அந்த மாநிலத்தில் அஞ்சல்தலை வெளியிடப்பட்டது. அது, 'சிந்து அஞ்சல்' முறையாக இன்றும் பெரிதும் மதிக்கப்படுகிறது.

சிந்து மாநிலத்தில் 'அஞ்சல் தலை' முறை வெற்றி பெற்றதைத் தொடர்ந்து இந்தியா முழுதுக்குமாக விரிவாக்கப்பட்டது. முதன் முதலில் இந்திய அஞ்சல் தலைகள் 1854 ஆம் ஆண்டில் கல்கத்தாவில் கற்பலை அச்சு முறையில் அச்சிடப்பட்டன. இவற்றில் அரசி விக்டோரியாவின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. அப்போது வெளியிடப்பட்ட அந்த அஞ்சல் தலைகளின் நாற்புறத்து ஓரங்களிலும் இப்போது உள்ளதுபோல் துளைகள் (Perferations) இல்லை. அது மட்டுமல்ல-அவற்றை ஒட்ட வேண்டுமென்றால் நாம் பசை தடவித்தான் ஒட்ட வேண்டும். இப்போது உள்ளதுபோல பசைகூடத் தடவப்பட்டிருக்கவில்லை.

இந்தியாவின் டெபுடி சர்வேயர் ஜெனரலாக இருந்த காப்டன் துய்லியரிடம் 1853-ல் அஞ்சல்தலைகளை அச்சிடும் பொறுப்பைக் கொடுத்திருந்தார்கள். பயன் படுத்தும் காகிதம், • மை பற்றிய சில சங்கடங்கள் அவருக்கு ஏற்பட்டன. 1854 மே நான்காம் நாள் 1,147 ஷீட் காகிதங்களில் கிட்டத்தட்ட 1.5 இலட்சம் அஞ்சல்தலைகள் அச்சாயின. அரை அணா, ஓர் அணா, இரண்டு அணா, நான்கு அணா என்று நான்கு வகை அஞ்சல் தலைகளே முதலில் அச்சாயின. 1855 வரைதான் இந்தியா தனக்குத் தேவையான அஞ்சல்தலைகளை இங்கே அச்சிட்டுக் கொண்டது. 1856 முதல் 1926 வரை கிட்டத்தட்ட 7 ஆண்டுக்காலம் இலண்டனில் தாமஸ் டி. லா. ரூ. கம்பெனி, கிழக்கிந்தியக் கம்பெனிக்காகவும் இந்திய அரசாங்கத்துக்காகவும் அஞ்சல் தலைகளை அச்சிட்டது.

வாழ்க்கைத் தராசில் சுந்தரபாண்டியனும் கருணாகரனும் இரண்டு தட்டுக்கள். கருணாகரன் உயர்ந்த குடும்பத்தில் பிறந்து தாழ்ந்து மீண்டும் வளர்ந்தவர். சின்ன வயதிலேயே தந்தையை இழந்து தாயின் உழைப்பால் வளர்ந்தவர். அவள் உழைப்பால் வளர்ந்த உடம்பினால் பெட்டிக்கடைப் பையனாக, மளிகைக் கடையில் வேலை பார்த்தார். வயதும் அறிவும் வளர்ந்தது. கடமை எழுந்து நிற்கச் செய்தது. கண்ணியத்தைத் தாயிடம் கற்றார். கட்டுப்பாட்டைத் தந்தையிடம் பெற்றுக் கொண்டார். தன் உழைப்பால் கிடைத்த ஊதியத்தைக் கொண்டு பெட்டிக்கடை வியாபாரத்தைத் தொடங்கினார். சுந்தரபாண்டியனின் நட்பால் பெரிய வியாபாரப் பிரமுகராகிப் புகழோடு வாழ்பவர்.

அன்று கள்ளத்தோணியில் அனாதையாக வந்த சிறுவன் தான் இன்றைய சுந்தரபாண்டியன். உழைப்பாளர்கள் மத்தியில் அவன் வாழ்ந்ததால் சூரியனைப் போலத் தானும் வாழ்வில் பிரகாசிக்க எண்ணினான். உழைத்து உழைத்து உயர்வடையப் பாடுபட்டான். அவனை வளர்த்த உழைப்பாளிகள் உழைப்பையெல்லாம் ஒருசிலர் கொண்டு செல்வதையும் உழைக்கும் மக்களெல்லாம் உண்ண உணவில்லாமல் உடுக்க உடையில்லாமல் வாழ்வதையும் பார்த்து மனம் வெறுத்தான். ஒருவர் உழைக்கவும் இன்னொருவர் உழைக்காமல் உயரவும் ஏற்பட்டிருக்கும் சமூகக்கொடுமை வளர உணர்ச்சி வயப்படும் போதும், அவரை முட்டாள் என்று சமூகம் ஏளனம் செய்தது. "இருப்பவனையும் இல்லாதவனையும் படைத்தவர் கடவுள். ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன் ஏழையாகத்தான் வாழ்ந்து சாகவேண்டும். தாழ்ந்த குடியில் பிறந்தவன் தாழ்ந்தவனாக வளர்ந்துதான் வாழ்ந்து மடிய வேண்டும். இதுதான் சமூகம் மக்களுக்கு வகுத்துக் கொடுத்திருக்கும் விதிமுறைகள்" என்று நொந்து சாகும் குடும்பங்களைப் பார்த்து அவர் மனம் வேதனைப் பட்டார்.

உழைப்பவர் உயர உழைக்கும் கரங்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்று அவர் எதிரே ஓயாமல் ஓலமிட்டுக் கொண்டிருக்கும் எண்ண அலைகள் அவர் கண்களைத் திறந்தன. கடல் அலைகளை எதிர்த்துச் செல்லும் படகினையும் ஆற்றின் வேகத்திலே ஒடிந்து விடாமல் வளைந்து கொடுக்கும் நாணலையும் பார்த்து வாழ்வில் உயர உறுதி எடுத்துக் கொண்டார்.

அவர் வாழ்ந்த இடத்தில் ஒற்றுமை கிடைக்கவில்லை. வளரும் கூட்டத்தின் கரங்களை ஒன்று சேர்க்க முயன்றும்



பயனில்லை. கடலில் வீசப்பட்ட பந்து போல அவர் சிந்தனைகளுக்குக் கிடைத்த பதிலெல்லாம் "வாழ்க்கையில் உயர்ந்தவர்கள் செய்யும் கொடுமைகளைச் செய். உழைப்பாளர்கள் ரத்தத்தைக் குடித்து உழைப்பின்றி உயரும் மனிதனாகிவிடு" என்ற உபதேசங்கள் தாம். அந்த உபதேசங்கள் அவர் காதில் வேதோபதேசங்களாகப் பட்டன. எந்தக் கள்ளத் தோணி அவரை அனாதையாகக் கொண்டு வந்ததோ, அதே கள்ளத்தோணியையே தன் வாழ்க்கைப்படகாக்கிக் கொண்டார். பழி பாவங்களைத் துணையாக வைத்துக் கொண்டார். அதன்மூலம் தன்னை உயர்த்திக் கொள்ளப் பாடுபட்டார். தன் வாழ்வில் துன்பம் கொடுத்தோரைப் பழி தீர்த்துக் கொண்டார். கொடுமை செய்தவர்களைக் கொலை செய்தார். தான் செய்யும் பாவங்களைப் போக்கத் தனக்கு உதவியாகக் கருணாகரனை நண்பராக்கிக் கொண்டு

வாழ்வில் உயர்ந்தார். பணத்தைச் சேர்த்துவிட்ட சுந்தரபாண்டியனை ஊர் பாராட்டியது. கோவிலுக்கும், ஏழைக் குடில்களுக்கும் நன்கொடை கொடுத்துக் கோவில் படிக்கட்டுகளிலே தம் பெயரைப் பொறித்துக் கொண்டார். காலம் ஓட ஓட அவர் செய்த கொடுமைகள் மறைந்துவிட்டன. அவர் செய்த பாவங்களை மறந்து "கொடை வள்ளல்" என்று சமூகம் அவரைப் பாராட்டத் தொடங்கியது. தனக்கு வாரிசாகப் பிறந்த விநாயகத்திற்கு அவர் வாழ்வில் உறுதுணையாக நின்ற கருணாகரனின் மகளையே திருமணம் செய்துவைத்து ஊரறிய ஊர்வலம் விட நினைத்தார். ஊர்வலம் புறப்பட இருந்த காரில் குண்டு வெடித்ததும், அவர் இதயமே வெடித்து விட்டது. அடங்கிய எரிமலையாகக் கீழே உட்கார்ந்து விட்டார், சுந்தரபாண்டியன்.

வியாபாரத்தில் கொடி கட்டிப் பறந்து கொண்டிருக்கும் தன்னைப் பழி தீர்த்துக் கொள்ளத் துணிந்தவன் யார் என்று புரியாமல் திகைத்தார். அவர் சேர்த்து வைத்திருக்கும் பல இலட்ச ரூபாய் சொத்திற்கும் ஒரே வாரிசாகப் பிறந்து வளர்ந்துள்ள தவப்புதல்வனின் உயிருக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று அவர் மனம் நினைத்தது. அவர் இதயம் நின்று நின்று ஓடிக் கொண்டிருந்தது.

அவர் உடல்நலம் பெற அவர் வாழ்க்கையில் கும்பாபிஷேகம் செய்த கோவில்களிலிருந்து சுவாமி பிரசாதங்கள் வந்த வண்ணமிருந்தன. சில நாட்கள் கழிந்த பின் எந்த நிலையிலும் தன்னைப் பார்த்துக் கொள்ள டாக்டர்கள் துணை இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையோடு மணமக்களைக் கருணாகரனோடு கோவைக்கு அனுப்பி வைக்க முடிவு செய்தார் சுந்தரபாண்டியன். மணமக்களான சந்திராவும் விநாயகமும் சுந்தரபாண்டியன் தம்பதியரை வணங்கி ஆசிபெற்றுக் காரில் ஏறினர். வழக்கமாகக் காரை ஓட்டும் டிரைவர் திடீரென்று வராததால் வயதான ஒருவன் காரில் வந்து உட்கார்ந்தான். மின்னல் வேகத்தில் கார் புறப்பட்டது. இந்தக் கிழவன் யார்? மணமக்கள் செல்லும் காரை வலிய ஓட்ட வந்த காரணம்? மற்றவர்கள் நினைத்தார்கள்.

விலங்கினங்கள் உயிர்வாழ ஒன்றை ஒன்று கொன்று தின்று வாழ்வது இயற்கை. ஆறறிவு படைத்த மனிதனும் உயிரைக் கொல்கிறான். குறைவாழ்வில் கொலைக்கோ, தற்கொலைக்கோ ஆளான உயிர் ஆவியாகி அவதிப்பட்டுத் தன்னைக் கொன்றவனைப் பழிதீர்த்துக் கொள்ள முனைகிறது என்பது சிலர் நம்பிக்கை. பிறர் கொடுமையால் தன்னைத் தானே அழித்துக் கொள்ள விரும்பாத உயிர் ஓடுமீன் ஓடி உறுமீன் வருமளவும் வாடியிருக்கும் கொக்காக

வாழ்கிறது. பழி தீர்த்து
கொள்ள, யானை போல
காத்திருக்கிறது. வாடி நி
கும் கொக்காகக் காத்திருக்கு
யானையாகச் - சுந்தரபாண்
யனைப் பழிதீர்த்துக் கொள்ள
காத்திருந்தவன் தான் இ
போது மணமக்கள் ஏறியிருந்
காரை ஓட்டிச் சென்ற டி
வர்!

டிரைவராகப் போன அந்
கிழவன், சுந்தரபாண்டிய
பண்ணையிலிருந்து மறைந்
மனோகரனின் தந்தை நா
சாமி என்று சுந்தரபாண்
யனிடமே சொன்னார்கள்.

அந்த நாகசாமி தா
காரோட்டிப் போனான் என்
வார்த்தைகளைக் கேட்ட சுந்
பாண்டியனுக்கு மீண்டும் மய
கம்.

கடந்தகால நினைவுக
சுழல் விளக்குகளைப் போ
அவர் முன்னே வட்டமிட்ட

கிழவன் நாகசாமி ஒரு க
நாகம் என்று சுந்தரபாண்டி
னுக்குத் தெரியும். அவர
பெருவாழ்விற்காகப் ப
கொடுக்கப்பட்ட மனோகர

② 

# நிழல்

பட்டுக்கோட்டை குமாரவேல்



1909-ல் தந்திக் கட்டணத்துக்காக அஞ்சல் தலைகளைக் கட்டணமாகச் செலுத்தியாக வேண்டும் என்று ஆணை விதித்தபோது ரூ. 10, ரூ. 15, ரூ. 25 அஞ்சல் தலைகள் புழக்கத்துக்கு வந்தன.

நாசிக்கில், 1926-இல் செக்யூரிட்டி ப்ரெஸ் என்ற அச்சகம் அமைத்தபோது இந்திய அஞ்சல் தலைகளை அச்சிடும் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்தார்கள். அந்த அஞ்சல்தலைகள் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் உருவம் பதித்தவை. 1929-ல் முக்கியமான ஒரு செட் ஏர் மெயில் அஞ்சல்தலையை வெளியிட்ட பெருமை இந்தியாவையே சாரும்.

உலகில் முதன் முதலாக விமானம் மூலம் கடிப் போக்குவரத்தைத் தொடங்கிய நாடும் இந்தியாவே யாகும். 1911, பிப்ரவரி 18-ஆம் நாள் அன்று 6,500 கடிதங்கள் விமானம் மூலம் அலகாபாத்திலிருந்து நைனிக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

1931 வரை இந்திய அஞ்சல்-தந்தித் துறை சித்திரங்கள் அமைந்த தலைகள் அச்சிடுவதைத் தவிர்த்தது; அரச உருவத்தை எளிய முறையில் அச்சிடுவதே புனிதம் என்று இந்தத் துறை கருதி வந்தது.

யுத்தத்தின்போது, இந்திய அஞ்சல் தலைகள் ஒரு புதிய கோணத்தில் பயன்பட்டன. அஞ்சல்துறையோ அஞ்சல் தலைகளைச் சேகரிப்பவர்களோ இதை எதிர்பார்க்கவில்லை. தாற்காலிகமான உலோகக் குறைவால் முக்கியமாகச் செம்புத் தட்டுப்பாட்டால் சில்லறை நாணயங்கள் கிடைக்காமல் போய்விட்டன. அப்போது அஞ்சல்தலைகள் நாணயம் போல் பயன்பட்டன.

இதுவரை வெளிவந்துள்ள அஞ்சல் தலைகளில் மிகவும் சிறியது பொலீவியா நாட்டில் வெளிவந்ததுதான். அதன் அளவு 0.45'' × 0.4''. மிகப் பெரிய அஞ்சல்தலை அமெரிக்கா வெளியிட்ட அஞ்சல் தலையே யாகும். அதன் அளவு 3.75'' × 2''

சாதாரணமாக, அஞ்சல் தலைகள் நீண்ட சதுர வடிவில் தான் அச்சாகின்றன. சில நாடுகள் முக்கோணம், 'டைமண்ட்' வடிவங்களில் வெளியிடுகின்றன. துருக்கியும்
















பெல்ஜியமும். எண்முக்கோண வடிவில் அஞ்சலை தலைகளை வெளியிட்டுள்ளன.

இந்தியாவின் புதிய தலைநகராக 1931-ல் புதுடில்லி பிரகடனம் செய்யப்பட்டது. இதனையொட்டி வெளியிடப்பட்ட அஞ்சல் தலைகளே முதன் முதலில் இந்தியாவில் நினைவு அஞ்சல் தலை வரிசையாகத் துவங்கியவையாகும். ஆனால், பொதுவாக விடுதலைக்கு முன் இங்கிலாந்திலிருந்து நம்மை ஆட்சி புரிந்து கொண்டிருந்த மன்னர்களின் மணிமுடியணிந்த தலைகளைக் கொண்ட அஞ்சல்தலைகளே வெளியிடப்பட்டன. அந்த அஞ்சல் தலைகள் யாவும் எத்தகைய மாற்றமுமின்றிச் சாம்பல் அல்லது மர நிறங்களில் ஒரேமாதிரியாகவே அச்சிட்டு வெளியிடப்பட்டன.

### விடுதலையின் நினைவாக

அன்னியர் ஆட்சியிலிருந்து 1947-ல் தான் நமது நாடு விடுதலையடைந்தது. இவ்வெற்றியின் நினைவாக 1947-ல் 'ஜெய்ஹிந்த்' அஞ்சல் தலை வரிசை வெளியிடப்பட்டது. அவை அசோகரின் தலைநகர், உயரப் பறக்கும் தேசியக் கொடி, விமானம் ஆகிய உருவங்களைக் கொண்டவை.

இந்தியா விடுதலை அடைந்த பின்னர், இந்திய வாழ்வின் அம்சங்கள் பலவற்றையும் விளக்குகின்ற அஞ்சல்தலைகளும், நினைவு அஞ்சல் தலைகளும் ஏராளமாக வெளியிடப்பட்டிருக்கின்றன. வனவிலங்குகள், மதங்கள், ஐந்தாண்டுத் திட்டங்கள் போன்ற தேசிய வளர்ச்சி நடவடிக்கைகள், செறிந்த கட்டடக்கலை, தொல்பொருள் பாரம்பரியச் சின்னங்கள், வரலாறு,'' சமூக-கல்வி அம்சங்கள் தேசியத் தலைவர்கள், விடுதலைப் போர் வீரர்கள், தத்துவஞானிகள், அறிவியலாளர்கள், சர்வதேச நிறுவனங்கள் தொடர்புடைய நிகழ்ச்சிகள், புகழ்பெற்ற வெளிநாட்டினர் போன்ற பல்வேறு அம்சங்கள் பற்றியும் இதுவரை 350 அஞ்சல் தலைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

### காந்தியடிகள்

விடுதலை நாள் முதல் ஆண்டு நிறைவையொட்டி, தேசத் தந்தை காந்தியடிகள் உருவம் பொறித்த அஞ்சல் தலைகள் நான்கு வெளியிடப்பட்டன. இவற்றில் சில கவர்னர் ஜெனரலின் உபயோகத்துக்காக 'சர்வீஸ்' என்ற வார்த்தையைத் தாங்கி வந்தன. இந்த அஞ்சல் தலைகள் யாவும் இப்போது எளிதில் கிடைக்கக் கூடியன அல்ல. இவற்றின் மதிப்பும் மிக அதிகம். பத்து ரூபாய் சர்வீஸ் தலைகள் ஒவ்வொன்றும் இப்போது 40 ஆயிரம் ரூபாய் மதிப்புடையதாகும்.

1969-ல் காந்தியடிகள் பிறந்த நாள் நூற்றுண்டையொட்டி நான்கு அஞ்சல் தலைகள் வெளியிடப்பட்டன. இந்தியா மட்டுமின்றி 141 உலகநாடுகள் காந்தியடிகளின் நினைவு அஞ்சல் தலைகளை வெளியிட்டு அண்ணல் அஞ்சலி [illegible] காந்திக்கு

காந்தியடிகள், ஜவஹர்லால் ஆகியோரின் தலைமையில் விழிப்புற்ற விடுதலை இயக்கத்தில் பங்கு கொண்ட மக்கள் ஏராளம். உழவர் முதல் தொழிலாளர், பெண்டிர், இளைஞர், முதியோர், ஏழை, பணக்காரர் எனப் பல்வகைப்பட்ட மக்களும் கலந்து கொண்டு இயக்கத்தை வலுமிக்கதாக்கினர். இத்தகைய விடுதலை வீரர்கள், தேசியத் தலைவர்கள், தியாகிகள் ஆகியோர் நினைவாக அஞ்சல்-தந்தித்துறை பல்வேறு அஞ்சல் தலைகளை வெளியிட்டு இருக்கிறது. விடுதலைப் போரில் உயிர் நீத்த தியாகிகள், விடுதலை வீரர்கள் ஆகியோருக்கு நமது சுதந்திர வெள்ளி விழா ஆண்டு அஞ்சலியாக 1972-ஆம் ஆண்டு அக்டோபர் 2-ஆம் நாளில் ஒரு அஞ்சல்தலை வெளியிட்டது. இதேபோல் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் 25-ஆவது ஆண்டு நிறைவன்று 1967-ல் அஞ்சல்-தந்தித்துறை ஒரு சிறப்பு அஞ்சல் தலை வெளியிட்டு மரியாதை செய்தது.

### பசுமைப் புரட்சி

வேளாண்மைத் துறையில் நாம் அடைந்துள்ள பெரும் வளர்ச்சியைப் பாராட்டும் வகையில் 1968 ஜூலை 17-ல் கோதுமைப் புரட்சி பற்றியும், மற்றும் இத்துறைத் தொடர்புடைய உலக வேளாண்மைப் பொருட்காட்சி டிராக்டர், பட்டினியிலிருந்து விடுதலை, ஜெய் கிஸான் ஆகிய அஞ்சல் தலைகளை இந்திய அஞ்சல்—தந்தித் துறை வெளியிட்டிருக்கிறது.

### தொழிற் புரட்சி

தொழில் துறையில் சில பொருட்களின் உற்பத்தியில் தன்னிறைவு பெறும் அளவுக்கு நாம் முன்னேறியுள்ளோம். அஞ்சல்-தந்தித் துறையும், டாடா எஃகு ஆலை, கௌஹாத்தி சுத்திகரிப்பு ஆலை, மின்சார என்சின்கள், சித்தரஞ்சன் ரயில் எஞ்சின் தொழிற்சாலை, எஃகு ஆலைகள், ஆலவாய், சிந்திரி இரசாயன உரத் தொழிற்சாலைகள் ஆகியவை மீதான அஞ்சல் தலைகளை வெளியிட்டுச் சிறப்புச் செய்தது.

### பாதுகாப்பு

பாதுகாப்புத்துறை பற்றிய பீரங்கிப்படை, ஹெலிகாப்டர் காவல் வீரர், பாராசூட், ஐ.என்.எஸ். நீலகிரி (போர்க் கப்பல்) 'கலைமான்-வேடன்' போர் விமானங்கள், 'நாட்' விமானங்கள் முதலிய அஞ்சல் தலைகளும் வெளிவந்துள்ளன.

நமது படையினருக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் வகையில் ஒரு பல வண்ண அஞ்சல் தலையும் வெளியிடப்பட்டுள்ளது.

### நீதி-சுற்றுலா

மற்றும் நீதித்துறைக்காக, சென்னை, பம்பாய், கல்கத்தா, அலகாபாத் உயர்நீதி மன்றங்கள் முதலிய அஞ்சல் தலைகளும், சுற்றுலாவுக்காக தாஜ் மஹால், செகந்திராபாத், ஆக்ரா, காஷ்மீர், தால் ஏரி, ஹம்பி ரதம், சோமநாதர் ஆலயம் முதலிய அஞ்சல் தலைகளும்,

### விலங்குகள்

விலங்குகள் வரிசையில் இமாலய பண்டா, யானை, புலி













சிங்கம், புள்ளிமான், காண்டாமிருகம், காட்டெருது ஆகிய அஞ்சல்தலைகளும்,

### பல்துறை

பறவைகள் வரிசையில் மரங்கொத்தி, பரிதிப் பறவை முதலியனவும், கப்பல் போக்குவரத்தின் நினைவாக போர்க் கப்பல்கள் ஜலஹரா, நீலகிரி, எண்ணெய்க் கப்பல் ஆகிய அஞ்சல் தலைகளும்,

தொல்பொருள்களினை நினைவூட்டும் இடைக்கால தீபலட்சுமி, சிற்ப. வேலைப்பாடு, தியாகி நினைவுச் சின்னம், பாட்னு (வெள்ளையனே வெளியேறு) ஆகிய அஞ்சல் தலைகளும்,

1949-ல் பித்தாகூர் வரிசை அஞ்சல் தலைகளும் வெளியிடப்பட்டுள்ளன.

### வண்ண அச்சு

பண்டைய நாகரிகமும், செறிவு மிக்க கலாச்சார பாரம்பரியமும் உடைய இந்தியாவில், மக்களின் உடைவகைகள், கலைகள், விழாக்கள், வரலாறு என அஞ்சல் தலைக்கு ஏற்ற அம்சங்கள் ஏராளமாயுள்ளன. காட்சிகளைப் பல வண்ணங்களிலும் அழகுற வெளியிடுவதற்கான நவீன பல வண்ண அச்சு இயந்திரம், நாசிக் பாதுகாப்பு அச்சகத்தில் இப்போது அமைக்கப்பட்டிருக்கிறது. இனி எந்த வண்ணத்தில் வேண்டுமானாலும் அஞ்சல் தலைகளை வெளியிட முடியும். இவை யாவும் இந்தியாவில் அஞ்சல் தலை ஆய்வும் தொகுப்பும் சிறப்பாக வளர்ந்து வருவதைக் காட்டுனவவாகும்.

### அஞ்சல் தலைச் சேகரிப்பு

அஞ்சல் தலைகள் சேகரிப்பதை வெறும் பொழுது போக்காக மட்டுமல்ல-பல்வேறு சுவைமிக்க-பயனுள்ள வரலாறுகளைக் கற்றுத்தரும் வரலாற்றுப் பொன்னேடுகள் ஆகவும் கருதி அப்பணியை ஏராளமான பேர் மேற்கொண்டுள்ளனர். உலகெங்கிலுமாக ஏறத்தாழ 5 கோடிப் பேர் அஞ்சல் தலைச் சேகரிப்பில் ஆர்வத்தோடு ஈடுபட்டுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

அஞ்சல் தலைகள் சேகரித்துப் பரிமாற்றம் செய்து கொள்வதன் மூலமும், விற்பனை செய்வதன் மூலமும் பலர் பெரும் வருமானம் பெறுகின்






றனர். அமெரிக்காவில் உள்ள சுமார் 50 ஆயிரம் பேர் இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 5 கோடி டாலர் வருமானம் பெறுகின்றனராம். இந்த அஞ்சல் தலைகள் பரிவர்த்தனை மூலம், இந்தியாவுக்கு ஓராண்டுக்கு 26 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி கிடைக்கிறது என்பது பலரால் நம்ப முடியாத செய்தியாகக்கூட இருக்கலாம். எனினும் உண்மை!

### தவருக அச்சான அஞ்சல் தலைகள்

கல்கத்தாவிலேயே இரண்டணு அஞ்சல் தலைகள் அச்சிடப்பட்டன. பிழைகள் மலிந்திருந்த இவை, பலவகையிலும் மாற்றங்களுடன் இருந்தன. என்ருலும், உலகெங்கிலும், உள்ள அஞ்சல் தலைச் சேகரிப்பாளர்கள் இவற்றைக் கிடைத்தற்கரிய கருவூலங்களாகவே கருதுகின்றனர். அதுவும், தலைகீழாக அச்சிடப்பட்டிருந்த நாலணு அஞ்சல் தலைகளுக்கு அதிக முக்கியத்துவமும் மதிப்பும் அளிக்கப்பட்டது.

*1854*-ல் வெளியான ராணியின் அஞ்சல் தலையில் உருவம் தலைகீழாக அச்சிடப்பட்டிருக்கிறது.

*1881*-ல் அச்சான கௌதமாலாவின் 'பறவையும் கூண்டும்' என்ற அஞ்சல் தலையில் பறவை கூண்டிற்குள் தலைகீழாக அச்சிடப்பட்டிருந்தது.

*1888*-ஆம் ஆண்டு, இங்கிலாந்தில் வெளியான' ஒரு பென்ஸ் அஞ்சல் தலையில் விக்டோரியா ராணியின் உருவம் இரண்டு பக்கங்களிலும் அச்சாகியுள்ளது. அதுமட்டுமல்ல இருபுறங்களிலுமே பசை தடவப்பட்டிருந்ததாம்.

*1921*-ல் வெளிவந்த ஜமாய்க்கா நாட்டு இரண்டரை பென்ஸ் அஞ்சல் தலையில் யூனியன் ஜாக் கொடி தலைகீழாக அச்சாகியுள்ளது.

### 1 செண்ட் தலையின் விலை 28 இலட்சம் ரூபாய்!

ஒரு சமயம் அஞ்சல்தலைகள் பிரிட்டனிலிருந்து அச்சிட்டு வரத் தாமதமாகி விட்டது. உடனே பிரிட்டிஷ் கஜாளுவில் இருந்த அஞ்சல்துறை அதிகாரி தற்காலிகத் தேவைக்காக எண் கோண வடிவில், சில அஞ்சல் தலைகளை அச்சிட்டு, அவற்றில் ஒரு சிறு அடையாளமிட்டு உபயோகத்துக்குக் கொண்டு வந்தார். பாய்மரக் கப்பல் ஒன்று கடலில் மிதக்கும் காட்சியைச் சித்திரிக்கும் அந்த அஞ்சல் தலைகள், பழுப்பு நிறத்தாளில் கறுப்பு மையால் அச்சிடப்பட்டன. அவற்றில் சில, 4 சென்ட் என்று அச்சிடப்படுவதற்குப் பதில் 1 சென்ட் என்று தவருக அச்சிடப்பட்டு விட்டன. இந்த அஞ்சல்களில் ஒன்று வெர்னன் வாகன் என்ற 8 வயதுச் சிறுவனிடம் சிக்கிக் கொண்டது. பின்னர் இந்த அஞ்சல் தலையை அந்தச் சிறுவனிடமிருந்து 4 அமெரிக்கர்கள் கூட்டணியாகச் சேர்ந்து விலைக்கு வாங்கினுர்கள். அவர்கள் வாங்கிய விலை என்ன தெரியுமா? 28 இலட்சம் ரூபாய்! உலகிலேயே அதிக விலைக்கு விற்கப்பட்ட விலை மதிப்புள்ள அஞ்சல்தலை இதுதான்!

### 10 ரூபாய்த் தலையின் விலை 40 ஆயிரம் ரூபாய்!

*1948*-ஆம் ஆண்டு, மூதறிஞர் இராஜாஜி அவர்கள் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த நேரம். அப்போது தான் 10 ரூபாய் விலையுள்ள-காந்தியடிகள் உருவம் பொறித்த அஞ்சல் தலைகள் வெளியிடப்பட்டன. இராஜாஜி அவர்கள், அவற்றில் 100 அஞ்சல் தலைகளில் மட்டும் சர்வீஸ் ( Service ) என்று மேலச்சு (Over print) செய்து தரும்படி கோரினுர். அதன்படி அச்சிடப்பட்டுப் பயன்படுத்தப்பட்ட அஞ்சல்தலை ஒன்றின் விலை, விலைப்பட்டியலில் ரூ. 10 என்பதற்குப் பதிலாக ரூ. 10 ஆயிரம் என்று குறிக்கப்பட்டுள்ளது. எனினும் அந்த அஞ்சல்தலையை ரூ. 40 ஆயிரம் வரை வாங்குகின்றனர். இந்தியாவில் வெளியிடப்பட்ட அஞ்சல் தலைகளில் அதிக விலை மதிப்புள்ள அஞ்சல்தலை இதுதான்!

அஞ்சல் தலைகள் சேகரிக்கும் பழக்கம் உலகெங்கிலும் நீண்ட நெடுங்காலமாக இருந்து வந்தபோதிலும் இந்தியாவைப் பொறுத்த வரை, சுதந்திரத்திற்குப் பிறகுதான் அது வளர்ந்து வருகிறது. அஞ்சல் தலைகள் சேகரிப்பில் ஆர்வமுடையோர்களை ஊக்குவிக்கவும் அவர்களுக்கு அப்பணியில் வழிகாட்டியாக ஆலோசனைகள் கூறி உதவவும் அஞ்சல் சேகரிப்பு நிலையங்கள் ( Philatalic Bureau ) அமைக்கப்பட்டுள்ளன. 1972-ல் டில்லி, பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய முக்கியப் பெருநகரங்களில் மட்டுமே அஞ்சல் தலைச் சேகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. பின்னர், இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலத்தவர்களும் விரும்பிக் கேட்டுக் கொண்டதற் கிணங்க, இப்






எல்லா மாநிலங்களி ... ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாநிலங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளவை தவிர 'போர்ப் பணி' புரிவோருக்காக 2 அஞ்சல் தலைச் சேகரிப்பு நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### இந்தியாவில் அஞ்சல் தலைச் சேகரிப்பு நிலையங்கள்

1. ஆமதாபாத், 2. அலகாபாத், 3. பெங்களூர், 4. போப்பால், 5. பம்பாய், 6. கல்கத்தா, 7. சண்டிகார் 8. கட்டாக் 9. ஐதராபாத் 10. ஜெய்பூர் 11. கான்பூர் 12. லக்னே 13. சென்னை 14. நாகபுரி 15. புதுடில்லி 16. பாட்ளு 17. ஷில்லாங் 18. சிம்லா 19. ஸ்ரீநகர் 20. திருவனந்தபுரம் 21. சித்தூர் ஆகிய 21 தலைநகரங்களில் 21 அஞ்சல்தலைச் சேகரிப்பு நிலையங்களும், போர்ப்பணி புரிவோருக்காக

22. BPO C/o 56 APO

23. BPO C/o 99 APO

ஆகிய இரு நிலையங்களும் உள்ளன.

### அண்ணு சாலையில்...

தமிழகத்திலுள்ள அஞ்சல் தலைச் சேகரிப்பாளர்களுக்கு அத்துறையில் உதவும் பொருட்டுத் தமிழகத்தின் தலைநகரான சென்னை, அண்ணுசாலையில் உள்ள தலைமை அஞ்சல் தந்தி நிலையத்தில் தமிழகத்தைச் சேர்ந்த அஞ்சல்தலைச் சேகபாளர்களும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த அஞ்சல் தலைச் சேகரிப்பாளர்களுமாக இரண்டாயிரத்திற்கும் அதிகமானவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். உறுப்பினர்கள் ரூ. 50-ம் அதற்கு மேலும் முன்பணம் கட்டிக் கணக்கு வைத்திருக்கிருர்கள். உறுப்பினர்களின் கோரிக்கைக்கு ஏற்ப முதல்நாள் உறையில் அவ்வப்போது புதிதாக வெளியிடப் பெறுகிற அஞ்சல் தலைகளை ஒட்டி அவற்றில் முத்திரையிட்டு அனுப்பப் பெறுகிறது. முன்பணம் கட்டிக் கணக்கு வைத்திருக்கும் உறுப்பினர் கணக்கில் இதற்குரிய கட்டணமும், அவற்றை அனுப்புகிற செலவிற்காக ( Packing Charge ) ஒரு சதவீதமும் பற்றெழுதப்படும்.

சென்னை அண்ணுசாலையிலுள்ள அஞ்சல்தலைச் சேகரிப்பு நிலையத்தைத்தொடர்ந்து தமிழகத்தில் உதகமண்டலம் (நீலகிரி), கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய ஐந்து ஊர்களிலும் 'முதல்நாள் வெளியீடு' என்று பொறிக்கப்பட்டுள்ள சிறப்பு முத்திரையிட்டு வழங்கும் நிலையங்கள் (Philatalic Centres) நிறுவப்பட்டுள்ளன. பாளையங்கோட்டை, தஞ்சாவூர், வேலூர், சேலம் ஆகிய நகரங்களிலும் இந்நிலையங்களை நிறுவ அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

### முத்திரைகள்

இதுதவிர, சுற்றுலாத்துறையில் பயணிகளுக்கு ஆர்வமூட்டும் வகையில், 15-3-67-ல் மாமல்லபுரத்திலுள்ள அற்புதக் கற்கோவிலையும், 16-12-74-ல் தஞ்சைப் பெரிய கோவிலையும், 17-12-74-ல் திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையையும், 5-4-75-ல் முதுமலை வனவிலங்குச் சரணலயத்தையும், 3-7-74-ல் வேடந்தாங்கல் பறவைகள் சரணலயத்தையும், ஆங்காங்குள்ள துணை அஞ்சல் நிலையங்கள் முத்திரைகளாகக் குத்தியுள்ளது நினைவு கூர்தற்குரியது.

### ''த.நா. பெக்ஸ்''

அஞ்சல் தலைகள் சேகரிப்பதையும் அவற்றைப் பற்றி ஆய்வுகள் நடத்துவதையும் குறித்திடப் பயன்படுகிற ஒரு சொல் 'ஃபிலாட்டலி' என்பது. இரண்டு கிரேக்கச் சொற்களை இணைத்து உருவாக்கப்பட்ட ஒரு தனிச் சொல்லே 'ஃபிலாட்டலி'. இந்தச் சொல்லை உருவாக்கியவர், ஃபிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த எம்.ஜி. ஹார்பின் என்பவர்.

'ஃபிலாட்டலி'-இன்று உலகெங்கிலும் பரவலாக வளர்ந்துள்ளது. அஞ்சல் தலை சேகரிப்பாளர்கள் (Philatalists) அஞ்சல் தலைகளை நாடு சம்பந்தப்பட்டவை (Geographical) பொருள் சம்பந்தப்பட்டவை (Thearitical) என இருபெரும் பிரிவுகளாகப் பிரித்து, வகைப்படுத்தித் தொகைப் படுத்துகின்றனர். மலர்கள், வனவிலங்குகள், பறவைகள் கொடிகள், வானூர்திகள், இரயில்வண்டிகள், விளையாட்டுகள், கட்டடங்கள் இசை, சமயம், என்பன போன்ற பல்வேறு உட்பிரிவுகளில் அவற்றை வகைப்படுத்துவதே தற்போதைய . முறையாகும்.

பொதுவாக, வகைவகையான பல்லாயிரக் கணக்கான அஞ்சல் தலைகளைச் சேகரித்து அவற்றை அடுக்கிப் பார்க்கின்ற காட்சி கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் கவின்மிகு கண்காட்சியாகும். பல நாடுகளில் வெளியிடப்பட்டுள்ள பல அஞ்சல் தலைகள் வண்ணக் களஞ்சியங்களாகவே விளங்குகின்றன. இவ்வாறு பல்வேறு நாடுகளும் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளியிட்ட வண்ணக் களஞ்சியங்களை- ஏடுகள் சொல்லாத எத்தனை எத்தனையோ நிகழ்ச்சிகளை- உண்மைகளை - வரலாறுகளை நமக்குச் சொல்லித் தருகிற அஞ்சல் தலைகளைச் சேகரிக்கும் அஞ்சல் தலைச் சேகரிப்பாளர்களுக்கும், அஞ்சல்தலைகளைக் கண்டு மகிழ விரும்புவோர்க்கும், அஞ்சல்தலைகள் மூலம் 'கல்வி' கற்க விரும்புவோர்க்கும் பயன்படும் வகையிலும், அவர்களது ஆர்வத்தைத் தூண்டி வளர்க்கும் எண்ணத்திலும் இந்திய அஞ்சல் தந்தித் துறை அஞ்சல் தலைக் கண்காட்சிகளை மாநில அளவிலும் இந்தியா அளவிலும் நடத்தி வருகிறது. உலக அஞ்சல்தலைக் கண்காட்சியை 'இண்டிபெக்ஸ்' (I N D I P E X) என்றும் தமிழ்நாட்டு அளவில் நடைபெறும் கண்காட்சியை 'தநா






பெக்ஸ்' (TANAPEX) என்றும் கூறுகின்றனர்.

'இண்டிபெக்ஸ்' என்று அழைக்கப் பெறும் உலக அஞ்சல் தலைக் கண்காட்சி, புதுடில்லியில் ஆசியா 72 நடந்த மைதானத்தில் நடைபெற்றது. இந்தியா அஞ்சல் தலை வெளியிட்ட நூற்றாண்டு விழாவை யொட்டி, இந்திய அஞ்சல் தந்தித் துறை, 1954-ல் ஒரு கண்காட்சியை நடத்தியது. இதில் 130 நாடுகள் கலந்து கொண்டன. உலகத்திலேயே மிகவும் சிறந்ததும், விலை உயர்ந்துமான-ஏன் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள இங்கிலாந்து அரசியின் அஞ்சல் தலை ஆல்பம் இந்தக் கண்காட்சியில் இடம் பெற்றிருந்தது.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலும், 1974, 1975 ஆகிய இரண்டாண்டுகளிலும் முறையே கோயம்புத்தூரிலும் உதகமண்டலத்திலும், தமிழகத்திலுள்ள அஞ்சல் தலை சேகரிப்போர் இரண்டு அஞ்சல்தலைச் சேகரிப்புக் கண்காட்சிகளை நடத்தினர். சென்னையிலுள்ள அஞ்சல் தந்தித் துறையினர், துறையின் சார்பில் 1973 ஆம் ஆண்டில் ஒன்றும் 1975 ஆம் ஆண்டில் ஒன்றுமாக இரண்டு அஞ்சல்தலைக் கண்காட்சிகளைச் சென்னையில் சிறப்பாக நடத்தியிருக்கின்றனர். 1973-ஆம் ஆண்டு நடைபெற்ற அஞ்சல் தலைக் கண்காட்சி 'தநாபெக்ஸ் 73' (TANAPEX—73). 1975-ல் நடைபெற்ற அஞ்சல் தலைக் கண்காட்சி (TANAPEX 75) தநாபெக்ஸ் 75.






### தநாபெக்ஸ்—73

1973-ல் நடைபெற்ற, அஞ்சல்தலைக் கண்காட்சி சென்னை நேரு ஸ்டேடியத்தில் ஏப்ரல் 20-ஆம் நாளிலிருந்து 23-ஆம் நாள் முடிய நான்கு நாட்கள் நடைபெற்றது. ஏறத்தாழ 2,000 அஞ்சல் தலைகள் 150 பிரேம்கள் (Frames) காட்சிக்கு வைக்கப்பெற்றன. அப்போது தமிழகத்தை நினைவுறுத்தும் வகையில் வானளாவிய கோபுரத்தையும் கோபுரத்தின் நடுவில் ஆடற்கலையை வலியுறுத்த, ஆடலார் கோமான் என்று பாராட்டப் பெறும் நடராசரை (புடைப்பு முறையில் தங்கநிறத்தில்)யும் (Embosing) அமைத்து அஞ்சல் சிறப்பு உறையாக-வெளியிட்டு அஞ்சல் தந்தித் துறையினர் விற்பனை செய்தனர். நான்கு நாட்களிலும் மொத்தம் 20 ஆயிரம் உறைகள் விற்பனையாகியுள்ளன. இவ்வாறு விற்பனை செய்யப் பெற்ற உறைகளில் தமிழகத்தின் கலைத்திறனை எடுத்துக் கூறும் வகையில் நான்கு நாட்களிலும் முறையே பரதநாட்டியம், மாமல்லபுரம் கற்கோவில், கரகம், பொய்க்கால் குதிரை ஆகிய காட்சிகளை முத்திரைகளாக இட்டு வழங்கினார்கள். இந்தக் கண்காட்சியை ஏறத்தாழ 25 ஆயிரம் பேர் பார்வையிட்டார்கள்.






### தநாபெக்ஸ்—75

அடுத்து 1975-ல் நடைபெற்ற அஞ்சலைக் கண்காட்சி சென்னை இராஜாஜி மண்டபத்தில் ஐந்து நாட்கள் நடைபெற்றது. 6-9-75-ல் தமிழ்நாடு ஆளுநர் மேதகு கே.கே. ஷா அவர்கள் கண்காட்சியைத் தொடங்கி வைத்தார்கள். மத்திய அஞ்சல் தந்தித்துறைத் துணை அமைச்சர் திரு. ஜெகந்நாத் பகாடியா, கண்காட்சியை யொட்டி தநாபெக்ஸ் 75 சிறப்பு மலரை வெளியிட்டார்.

இந்தக் கண்காட்சியில் 160 பேர் நீண்டநாட்களாக அரிதின் முயன்று தாங்கள் சேகரித்த ஏறத்தாழ 50,000 அஞ்சல் தலைகளைக் கொண்ட 350 பிரேம்கள் காட்சிக்கு வைக்கப் பெற்றிருந்தன. இவற்றில் இந்தியா, அமெரிக்கா, காங்கோ, நைஜீரியா, மொரீஷியஸ், மெக்சிகோ, மொராக்கோ இங்கிலாந்து, அரபுக் குடியரசு இரஷ்யா, பிரேசில், பூடான், கயானா, ஹங்கேரி, அயர்லாந்து, ஈரான், சோமாலியா, தென் ஏமன், சிரியா, மேற்கு ஜெர்மனி, கிரீசு போன்ற 39 நாடுகள் 'உலகம் பெரியார்' காந்தியடிகளைப் போற்றி வெளியிட்ட 74 விதமான காந்தி அஞ்சல் தலைகள் சிறப்பிடம் பெற்றிருந்தன. உலகக் கண்ணோட்டத்தில் காந்தியடிகள் எத்தகைய இடத்தை பெற்றிருந்தார் என்பதனை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இவை தவிர, வனவிலங்குகள் வரிசை, பறவைகள் வரிசை, தொல்பொருள்வரிசை காய்கறிகள் வரிசை, விளையாட்டு வரிசை, இந்தியாவில் நாடகங்களில் பயன்படுத்தப்படும் முகமூடிகள் வரிசை ஆகியனவும் மீன்கள், பாலங்கள் ஆகியனவும் டில்லியில் உள்ள தேசிய அஞ்சல்தலைப் பொருட்காட்சியில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள அரிய அஞ்சல் தலைகளும், இந்தியாவில் அஞ்சல் தலைச் சேகரிப்பில் புகழ்பெற்ற 11 பேர் சேகரித்து வைத்துள்ள அஞ்சல் தலைகளும் இடம் பெற்றிருந்தன.




'தநாபெக்ஸ்-75' கண்காட்சி 5 நாட்கள் நடைபெற்றது. முதல் நாள், மராத்தியர் காலத்தில் தஞ்சையில் அறிமுகப்படுத்தப்பட்ட- கலைவண்ணமும் தொழில் நுணுக்கமும் வாய்ந்த தஞ்சாவூர்க் கலைத் தாம்பாளம், இரண்டாம்நாள் மதுரை மீனாட்சி அம்மன் கோவில், மூன்றாம்நாள் 'சிற்பக் கலை'யின் சிறப்புத் தவழும் மாமல்லபுரத்திலுள்ள யானைகளின் சிற்பம், நான்காம்நாள், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் ஒருமைப்பாட்டுணர்வினை உணர்த்தும் வகையில் பாண்டிச்சேரியில் புதிதாக உருவாக்கப்பெற்ற 'ஆரோவில்' நகரம், ஐந்தாம் நாள் தமிழினத்தின் தனிப்பெருந் திருநாளான பொங்கல் விழாவினை நினைவுறுத்தும் வகையில் கோலமிட்ட பொங்கற் பானை கரும்பு ஆகிய காட்சிகளை அழகுற அச்சிட்ட சிறப்பு உறைகள் வெளியிடப்பட்டன. இவற்றில் ஒவ்வொரு நாளும் முறையே அவற்றோடு தொடர்புடைய வகையில் பாவைவிளக்கு, கோயில் தேர், வண்ணக்கோலம், நாதசுரம், கிராமங்களில் சதுக்க பூதத்தின் சாத்தன் உருவம் என்று கருதப்பெறுகிற ஐயனார் முத்திரைகள் சிறப்பு உறைகளில் குத்திக் கொடுக்கப்பெற்றன. தநாபெக்ஸ் 75'-ஐ யொட்டி மொத்தம் 50 ஆயிரம் சிறப்பு உறைகள் வெளியிடப்பட்டன.

முதல் தடவையாக, அஞ்சல் தலைச் சேகரிப்புப் பற்றிய கருத்தரங்கம் ஒன்று இங்கு நடத்தப்பட்டது. குழந்தைகளுக்கான போட்டியும் நடைபெற்றது. எந்த நாட்டைச் சேர்ந்த அஞ்சல் தலை என்று கண்டுபிடித்துச் சொல்வதும் வினாடி விடையளித்தலுமே குழந்தைகளுக்கான போட்டிகள். இவற்றில் 282 குழந்தைகள் கலந்துகொண்டன. இந்தப் போட்டிகளில் கலந்துகொண்ட எல்லாக் குழந்தைகளுக்கும் தகவல் தொகுப்பு (Folder) களும் சிறப்பு உறைகளும் கொடுக்கப்பட்டன. முதல் பரிசு பெற்ற 10 குழந்தைகளுக்கு அஞ்சல்தலைகளடங்கிய ஆல்பமும், அஞ்சல் தலைகளும் பரிசளிக்கப்பட்டன. வினாடி விடையளிப்புப் போட்டியில் வெற்றி பெற்ற 3 குழந்தைகளுக்கு ஆல்பமும் அஞ்சல் தலைகளும் பரிசாக வழங்கப்பட்டன.

9-9-75-ல் கல்வி, சுற்றுலா அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், அஞ்சல் தலைச் சேகரிப்புப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளும், பாராட்டுப் பத்திரங்களும், பட்டயங்களும் வழங்கி, உரையாற்றுகையில் 'எல்லா மாவட்டத் தலைநகர்களிலும் இந்தக் கண்காட்சியை நடத்தலாம் என்றும் இதற்குக் கல்வித் துறை இயன்ற உதவிகளைச் செய்யும் என்றும், பள்ளிகளில் அஞ்சல்தலைச் சேகரிப்பினை ஒரு பாடமாக்குவது பற்றி ஆலோசிப்பதாகவும் கூறினார்கள்.

கண்காட்சியின் இறுதி நாளான 10-9-75 பிற்பகல் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கண்காட்சியைப் பார்வையிட்டார்கள். தமிழக அஞ்சல் துறைத் தலைமை அலுவலர் திரு. எம். ஜானகிராமன் முதல்வர் அவர்களுக்குக் கண்காட்சியைச் சுற்றிக் காட்டிச் சிறப்பு உறைகளடங்கிய ஆல்பம் ஒன்றையும் சிறப்பு மலர் ஒன்றையும் வழங்கினார்கள்.

இந்த அஞ்சல் தலைக் கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப் பெற்ற அஞ்சல்தலைகளின் எண்ணிக்கை 50 ஆயிரம்; இந்தக் கண்காட்சியை யொட்டி வெளியிடப்பட்ட சிறப்பு உறைகள் 50 ஆயிரம்; இந்தக் கண்காட்சியினை 5 நாட்களிலுமாகப் பார்வையிட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 1 இலட்சத்து 25 ஆயிரம். ஆம். தமிழ்நாட்டில் அஞ்சல்தலைச் சேகரிப்புக் கலை, விரைந்து பெருகி வருகிறது. அண்மையில் சிறப்பாக நடைபெற்ற இந்த தநாபெக்ஸ்-75' இவ்வாண்டு இறுதியில் கல்கத்தாவில் நடைபெற இருக்கும் தேசியக் கண்காட்சிக்கு ஒரு முன்னோடியாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. இந்த நேரத்தில், மத்தியப் பிரதேசத்தில் 2 அஞ்சல் தலைச் சேகரிப்பு நிலையங்களும் உத்தரப் பிரதேசத்தில் 3 அஞ்சல் தலைச [illegible]ப்பு நிலையங்களும் [illegible]த்தில் 2 அஞ்சல் த[illegible]கரிப்பு நிலையங்களும் [illegible]ட்டு வரும் போது, அஞ்ச[illegible] வட்டத்தில் பாண்டிச்சே[illegible] இணைந்து விளங்கும் தமி[illegible]டில் மட்டும் ஒரேயொரு [illegible]சல் தலைச் சேகரிப்பு நிலை[illegible]ன் இயங்கி வருகிறது எ[illegible] அஞ்சல் தலைச் [illegible]ளரிடையே ஒரு [illegible]குறையாகவே இரு[illegible]றது. எனவே, [illegible]டில், மேலும் சில முக்கியமான பெருந் தலைநகர்களில் மதுரை,-கோயம்புத்தூர் திருச்சிராப்பள்ளி போன்ற நகரங்களிலும், பாண்டிச்சேரியிலும் அஞ்சல்தலைச் சேகரிப்பு நிலையங்களை ஏற்படுத்துவது மூலம் தமிழ்நாட்டிலுள்ள அஞ்சல் தலைச் சேகரிப்பாளரிடையே நிலவும் மனக்குறையை நீக்கலாம். அஞ்சல் தலைச் சேகரிப்பாளர்களின் ஆர்வத்தை மேலும் நல்ல முறையில் தூண்டி வளர்க்கலாம்.

# பருத்திக்குச் சிக்கன பாசன முறை

தமிழகத்தின் தொழில்வளத்தையும், பொருளாதாரத்தையும் பெருக்கும் முக்கியப் பயிர்களில் பருத்தியும் ஒன்ருகும். தமிழ்நாட்டில் பருத்தி சுமார் 3.10 இலட்சம் எக்டேர் நிலத்தில் பயிரிடப்படுகின்றது. அதில் 83,000 எக்டேருக்குப் பெரும்பாலும் கிணற்று நீரால் பாசனம் செய்யப்படுகின்றது. மொத்தம் பயிரிடப்படும் பரப்பில் பாசன பருத்தி மூன்றில் ஒரு பங்கு இருப்பினும், மகசூலில் இது இரண்டு பங்கு அளவு கொடுக்கின்றது. இந்த முக்கியப் பயிரின் உற்பத்தியைத் திருத்திய கட்டுக்கோப்பு சாகுபடி முறைகளாலும், உள்ளீடுகளைத் திறமையாகப் பயன்படுத்தியும் வெகுவாகப் பெருக்கலாம். நீர், பருத்தி உற்பத்திக்கு ஓர் முக்கியமான உள்ளீடு ஆகும். ஆனல், நீர், பொதுவாகத் தமிழ்நாட்டிலும், குறிப்பாக கோவை, சேலம் மாவட்டங்களிலும்-ஓர் அரியப் பொருளாகக் கருதும் காலம் வந்துவிட்டது. மற்றும் இதை ஆழக் கிணற்றிலிருந்து வெளியே கொண்டுவர ஆகும் செலவு மிகவும் அதிமாக உள்ளது. அவ்வாறு இருக்க, இந்த நீரை சிக்கனமாகப் பயன்படுத்தி எவ்வாறு அதிக மகசூலைப் பெறுவது என்பதைக் கண்டறிவதற்காகத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் முடிவுகளை வேளாண்குடிப் பெருமக்களாகிய உங்களுக்குத் தெரிவிக்க ஆசைப்படுகின்றேன்.

பொதுவாக நம் மாநிலத்தில் பருத்திக்கு கீழ்க்கண்ட முறைகளில் நீர் பாய்ச்சப்படுகின்றது.

1. சால் முறை (Furrow)
2. பாத்தி முறை (Basin)
3. பரவல் பாசன முறை (Border)

மேலே கண்ட பல்வேறு பாசனமுறைகளை ஒப்பிட்டுப் பார்த்து, நீரை சிக்கனமாகப் பயன்படுத்த எந்தமுறைப் பாசனம் மிகவும் சிறந்தது என்பதைக் கண்டுபிடிக்க, 'எம். சி.யு. 5' பருத்தியில் ஆராய்ச்சி நடத்தப்பட்டது. இந்தப் பரிசோதனையில் நீண்ட சால், பரவல், சிறுசால், பாத்தி ஆகிய முறைகளை ஐந்து முறையாகப் பிரித்து பரிசோதிக்கப்பட்டது. இந்தப் பரிசோதனையில் சாலின் நீளம், பரவல் பாசனத்தின் அகலம், நீளம் முதலியவைகளை மண்ணின் நீர் எடுக்கும் தன்மை, நிலச் சரிவு, நீரின் அளவை முதலியவைகளைக் கணக்கில் கொண்டு நிர்ணயிக்கப்பட்டது. அதன்படி சால் 100 அடி (30மீட்டர்) நீளமும் பரவல் முறையில் 100 அடி நீளமும், 10 அடி அகலம் கொண்டதாகவும், பாத்தி, 20 அடிக்கு 10 அடி அகலம் கொண்டதாகவும், குறுகிய சால் 20 அடி நீளம் கொண்டதாகவும் இருந்தது. எல்லா வயல்களுக்கும் நீர் ஒரே சிராகப் பாய்ச்சப்பட்டது. பிறகு பருத்தியின் மகசூலை நான்கு முறை, ஒருவார இடைவெளியில் எடுத்துக்கணக்கிடப்பட்டது.

இந்த ஆராய்ச்சிகளின் முடிவின்படி பருத்தி விளைச்சலில் எல்லாப் பாசன முறைகளிலும் ஒரே மாதிரி மகசூல் கொடுத்தது. ஆனல் நீர் உபயோகித்த அளவு பாத்தி பாசனத்தைவிட நீண்ட சால் பாசன முறையில் 30 சதவீதம் குறைவாகவே இருந்துள்ளது. அதாவது ஒரு குறிப்பிட்ட நீர் அளவில் பருத்தியின் உற்பத்தி நீண்ட சாலில் 18.1 கிலோ கிராமாகவும், சிறு சாலில் 16.5 கிலோ கிராம் ஆகவும், பாத்தியில் 12.2 கிலோ கிராமாகவும், பரவல் பாசனத்தில் 10.8 கிலோ கிராம் எனவும் கணக்கிடப்பட்டது. எனவே, நீண்ட பாசன முறையை உபயோகித்த புருத்திக்கு நீரை வெகுவாகச் சிக்கனப்படுத்த முடியும் என அறியப்பட்டது. மற்றும் இந்த முறையில் களையின் பாதிப்பும், மற்ற முறைச் பாசனத்தைவிடக் குறைவாகவே இருந்தது. ஆகையால் 'எம்.சி.யு. 5' பருத்திக்கு நீண்ட சால் பாசன முறையை உபயோகித்து நீரை மிச்சப்படுத்த முடியும்.

2. அதிக இடைவெளிவிட்டு சால் அமைத்து, சாலின் இருபுறமும் பயிர் செய்தல் (Strip Furrow Irrigation) இவற்றில் முதன் முறையில், முதல் 2 பாசனத்தின்போது எல்லா சாலிலும் எப்போதும் மாதிரி தண்ணீர் பாய்ச்சுவது தண்ணீர் விட்டு கட்ட வேண்டும். ஆனல் அடுத்து வரும் ஒரு பாசனத்தின்போது, சால் விட்டு ஒரு சாலில் தண்ணீர் கட்ட வேண்டும். இதைத் தொடர்ந்து அடுத்த பாசனத்தின்போது, இதற்கு முன்னல் செய்த பாசனத்தின்போது நீர் கட்டப்படாத சால்களில் மட்டும் தண்ணீர் கட்ட வேண்டும். இவ்வாருக ஒவ்வொரு பாசனத்தின்போதும் ஒரு சால் விட்டு ஒரு சாலில் தண்ணீர் விட்டுப் பார்த்ததில், எல்லா சால்களிலும் தண்ணீர் விட்டபோது கிடைத்த மகசூலின் அளவே இதிலும் கிடைத்தது. ஆனல் தண்ணீரில் சுமார் 30-40 சதவீதம் அளவு மிச்சப்படுத்தமுடிந்தது. இந்த முறை மணற்பாங்கான நிலத்திற்கு மிகவும் ஏற்றது.

அடுத்த முறையில், (அதாவது அதிக இடைவெளிவிட்டு சால் அமைத்து சாலின் இருபுறமும் பயிர் செய்யும்முறை), ஒரு சாலில் நீர் பாய்ச்சினல் அது இரண்டு வரிசையில் இருக்கும் பயிர்கட்கும் பயன்படும். மேலும் சாலுக்குச் சால் அதிக இடைவெளி இருப்பதால், அதில் ஒரு குறுகிய காலப் பயிர் வகைகளை பயிரிட முடிகின்றது. உதாரணமாகச் சாலுக்குச் சால் 75 [illegible] இடைவெளி இருக்கும் ஒரு சாலில் ஒரே வரிசை பருத்தியை நட்டு நீர்ப் பாய்ச்சுவது வழக்கம். இப்புதிய முறையில், சாலுக்குச் சால் 90 செ. மீ. தூரமும், சாலின் அகலம் 60 செ. மீ. ஆகவும் இருக்கும்படி போடப்பட்டன. சாலின் இருபக்கமும் இரு வரிசை பருத்தி நட்டு நீர் பாய்ச்சப்பட்டது. இந்த ஆராய்ச்சியில் கண்ட முடிவுப்படி விளைச்சலில் குறைவு இன்றி நீரில் 50 சதவீதம்வரை மிச்சப்படுத்த முடிந்தது. இத்துடன், சால்களுக்கு நடுவில் பயிரிடப்பட்ட பச்சைப் பயிரின் மூலமாக ஓரளவு மகசூலும் கிடைக்கப்பெற்றது. ஆகையால், கிணற்றுப் பாசனத்தில், நீரை மிச்சப்படுத்த மேற் சொன்ன இரு முறைகளையும் கையாளலாம்.

பருத்தி சாகுபடிக்கு மேற்பரப்புப் பாசன முறைகளைத் தவிர, தெளி நீர்ப் பாசன முறையையும் பயன்படுத்தலாம். கோவையில் நடத்திய ஆராய்ச்சி முடிவுபடி இம்முறைப் பாசனத்தில், மேற்பரப்பு முறையைக் காட்டிலும் 20-30 சதவீதம் நீரைக் குறைவாகப் பயன்படுத்தி, அதே மகசூலை எடுக்க முடியும் என அறியப்பட்டது. ஆனல் தெளி நீர் சாதன அமைப்பு நிறுவ ஒரு எக்டேருக்கு 5,000 முதல் 6,500 ரூபாய் வரை செலவு ஆகும்.

மேற்கூறிய பாசனத்தைக் காட்டிலும் மிகவும் சிக்கனமாக நீரை உபயோகித்து நல்ல மகசூல் எடுக்க, புதிய முறை ஒன்றைச் சமீப காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. அதை உழவர்கள் விரிவாகப் பயன்படுத்துகிருர்கள். அந்த முறையைச் சொட்டு நீர்ப் பாசனம் அல்லது 'துளி நீர்ப் பாசனம்' என்பார்கள். இந்தப் பாசனம் உண்மையிலேயே பாசனக் கலையில் ஒரு முன்னேற்றமாகும்.

சால் பாசன முறையை உபயோகித்து இன்னும் தண்ணீரை எவ்வளவு சிக்கனமாகப் பயன்படுத்த முடியும் என மேற்கொண்டு ஆராய்ச்சி நடத்தப்பட்டது. அதில் கீழ்க்காணும் இரு முறைகள் கையாளப்பட்டு பரிசோதனைச் செய்யப்பட்டது.

1. சால் முறையில் ஒன்று விட்டு ஒரு சாலில் பாசனம். செய்தல் (Alternate Furrow Irrigation)

2. அதிக இடைவெளிவிட்டு சால் அமைத்து, சாலின் இருபுறமும் பயிர் செய்தல் (Strip Furrow Irrigation) இம்முறையில் செடிகளுக்குத் தேவையான நீரைத் தேவைப்படும்பொழுது வேரின் பக்கத்தில் கொடுக்க முடிகின்றது. இம்முறையில் தண்ணீரை 'ஆல்கத்தின்' குழாய் மூலம் எடுத்துச் சென்று, ஒவ்வொரு செடியின் வேருக்கும் அதன் தேவைக்கேற்ப கொடுக்கப்படுகிறது. இந்தப் பாசன முறையில் நீரின் தேவை, சாதாரண முறைப் பாசனத்திற்குத் தேவைப்படும் அளவு நீரில் மூன்றில் ஒரு பங்கே ஆகும். ஆனல் பயிர் மகசூலில் மேற்பரப்பு பாசனத்தில் கிடைத்த அளவே கிடைக்கின்றது. ஆனல், இந்த முறைப் பாசனத்தை அமைப்பதற்கு ஒரு எக்டேருக்குச் சுமார் 10,000 ரூபாய் செலவு ஆகும். இந்த முதலீடு மேற்சொன்ன நீர்த் தேவை, மகசூல் முதலியவைகளைப் பார்க்கும்போது அதிகமல்ல எனக் கூறலாம்.

நீர் தட்டுப்பாடான இந்தக் காலத்தில், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த ஒவ்வொரு உழவர் பெருமகனும் முயல வேண்டும். அப்பொழுதுதான் கிடைக்கும் தண்ணீரைக்கொண்டு அதிகப் பரப்பளவில் பயிர் விளைவித்து மக்கள் பெருக்கத்திற்குத் தேவையான உணவு உற்பத்தியைச் செய்ய முடியும். எனவே, இதுகாறும் கூறிய மேற்சொன்ன முறைகளை அவரவர்கட்கு ஏற்ற முறையில் நடைமுறையில் கொணர்ந்து, நீரைச் சிக்கனமாக உபயோகித்துத் தங்கள் வீடும் நாடும் நலம் பெற வழி வகுத்துக் கொள்ள வேண்டும் என்று தமிழக உழவர் பெருமக்களை வேண்டுகின்றேன்.

—ஆர். கே. சிவனப்பன்,
பேராசிரியர் மற்றும் தலைவர்,
நிலநீர் நிருவாகத்துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்.

---

தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் முதலாவது பிரிவு 1978-79ஆம் ஆண்டில் செயல்படத் துவங்கும்.

மேட்டூர் நீங்கலாக, மாநிலத்தின் இதர நீர் மின்விசை நிலையங்களில் இப்போதைய மொத்த மின்விசை உற்பத்தி ஒரு நாளைக்கு 186 கோடியே 30 இலட்சம் யூனிட்களாகும். சென்ற ஆண்டு அக்டோபர் மாதத்தில் இங்கு ஒரு நாளைக்கு 165 கோடி யூனிட்கள்தான் மின்விசை உற்பத்தி ஆயிற்று.

மேட்டூரில் மட்டும் இப்போது நாள்தோறும் 21 கோடியே 30 இலட்சம் யூனிட் மின்விசை உற்பத்தியாகிறது. சென்ற ஆண்டு அக்டோபரில் இங்கு ஒரு நாளைக்கு 10 கோடியே 80 இலட்சம் யூனிட் மின்விசைதான் உற்பத்தி ஆயிற்று.

எண்ணூர் மின் நிலையத்தில் 60 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட முதலாவது பாய்லரைப் பழுது பார்க்கும் பணி முடிவடைந்துவிட்டது. இதேபோல 60 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட இரண்டாவது பிரிவைப் பழுது பார்க்கும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

இங்கு 110 மெகாவாட் உற்பத்தித்திறன் கொண்ட 3-வது பிரிவைப் பழுது பார்க்கும் பணி விரைவில் துவக்கப்பட இருக்கிறது. இதேபோல 110 மெகாவாட் உற்பத்தித் திறன் உள்ள 4-வது பிரிவைப் பழுது பார்க்கும் பணி, திருச்சி பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் ஆலையின் உதவியுடன் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த 4 பிரிவுகளும், 1976 சனவரிக்குள் முழு அளவில் திறம்படச் செயல்படத் துவங்கிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எண்ணூரில் 5-வது பிரிவு ஒன்று நவம்பரில் இயக்கி வைக்கப்படும். இதன் உற்பத்தித் திறன் 110 மெகாவாட் ஆக இருக்கும்.

தமிழ்நாட்டில் சுமார் 7 இலட்சத்து 20 ஆயிரம் விவசாயப் பம்பு செட்டுகள் உள்ளன. இந்தியாவில் உள்ள மொத்த விவசாயப் பம்பு செட்டுகளில் 28 முதல் 30 சதவிகிதம் தமிழ்நாட்டில்தான் இருக்கின்றன.

இந்த ஆண்டில் ரூ. 40 கோடிக்கு மின்விசை இயந்திரங்கள் வாங்குவதற்கான திட்டமொன்றை மின்சார வாரியம் தயாரித்துள்ளது.





# சொன்னால் நம்பமாட்டீர்கள்!



"ஸஹாரா பாலைவனத்தின் ஒரு பகுதி, மத்திய ஆசிய பாலைவனங்கள், பாலஸ்தீனம், மெஸபடோமியப் பாலைவனங்களின் ஒரு பகுதி- இவையாவும் ஒரு காலத்தில் பூத்துக் குலுங்கும் பூஞ்சோலைகளாய் இருந்தன!" என்று சொன்னால் நம்பமாட்டீர்கள்—ஆனால் உண்மை!

"மொஹஞ்சதாரோ ஹரப்பா முதலிய நகரங்கள் பூமியில் புதையுண்டு விடவில்லை-புதைக்கப்பட்டன!" என்று சொன்னால் நம்பமாட்டீர்கள்- ஆனால் உண்மை!

"இன்று பஞ்ச கோலத்தில் வறட்சிமிகுந்து காட்சியளிக்கும் பிஜப்பூர் ஒரு காலத்தில், ஒரு மன்னரின் கோலமிகு தலைநகராயிருந்தது!" என்று சொன்னால் நம்பமாட்டீர்கள்—ஆனால் உண்மை!

"மாவீரன் அலெக்சாண்டர் ஆட்சிபுரிந்த காலத்தில்,'கட்ச்'சின் வடபகுதியிலும், தெற்கு பஞ்சாபிலும் நிழல் தரும் தருக்களும், உள்ளங்கவர் நகரங்களும் இருந்தன. அந்த இடத்தைத்தான் இன்று ராஜஸ்தான் பாலைவனத்தின் ஒரு பகுதி ஆக்கிரமித்துக்கொண்டு இருக்கிறது!" என்று சொன்னால் நம்பமாட்டீர்கள்—ஆனால் உண்மை!

"தபதி நதியிலே நாவாய்கள் மிதக்க, முத்துக்களையும் இன்ன பிற பொருட்களையும் வியாபாரத்திற்காகக் கரையேற்றி வணிகம் செய்து எட்டு இலட்சம் மக்கள் இன்பமாக வாழ்ந்த பூமிதான் சூரத்! ஆனால் கடந்த ஐம்பது ஆண்டு காலத்திற்குள், நாவாய்கள் கூட மிதக்க முடியாத அளவுக்குத் தபதி நதியின் ஆழம் குறைந்து, வணிகம் குலைந்து, எட்டு இலட்சம் என இருந்த மக்கட்தொகை எட்டாயிரமாகக் குறைந்து பரிதாபமாக காட்சியளிக்கிறது!" என்று சொன்னால் நம்பமாட்டீர்கள்—ஆனால் உண்மை!

"ஐந்தாண்டுகட்கு முன்பு 80,000 சதுர மைல்களாயிருந்த இராஜஸ்தான் பாலைவனம், கங்கைச் சமவெளியை நோக்கி ஆண்டுக்கு அரை மைல் வீதம் முன்னேறிக்கொண்டு வருகிறது!" என்று சொன்னால் நம்பமாட்டீர்கள்—ஆனால் உண்மை!

"குஜராத்தில் வேளாண்மைக்குப் பயன்படுத்த முடியா அளவிற்கு. மண் அரிப்பினால் பாதிக்கப்பட்ட நிலம், 10 இலட்சம் ஏக்கர்கள்; அதுவே ராஜஸ்தான் மாநிலத்தில், 4 இலட்சம் ஏக்கர்கள்; பஞ்சாப் மாநிலத்தில் 4 இலட்சம் ஏக்கர்கள்; ஆந்திர மாநிலத்தில் 10 இலட்சம் ஏக்கர்கள்; தமிழ் நாட்டில் 12 இலட்சம் ஏக்கர்கள்; ஆக மொத்தம் 200 மில்லியன் ஏக்கர் நிலம் நமது நாட்டில் மண்ணரிப்பினால் பாதிக்கப்பட்டு உடனடியாகக் கவனம் செலுத்தப்பட வேண்டிய நிலையிலுள்ளது!" என்று சொன்னால் நம்பமாட்டீர்கள்-ஆனால் உண்மை!

இப்படி நம்மால் நம்பமுடியாத பல பயங்கர விளைவுகளுக்குக் காரணம் என்ன தெரியுமா?

நாம் உடனே சொல்லி விடுவோம் சுலபமாக! "அதுதான் இயற்கையின் கோர விளையாட்டு" என்று. ஆனால் உண்மை அதுவல்ல!

மனிதன் இயற்கையோடு விளையாடிய மிக மோசமான விளையாட்டின் விளைவுதான் மேலே கண்ட விளைவுகள்!

"அப்படி இந்த மனிதன் என்னதான் செய்தான்?" என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

இயற்கை மனிதனுக்கு அளித்துள்ள அரிய கருவூலங்கள் சூரிய ஒளி, நீர், காற்று, நிலம் ஆகிய நான்குமாகும். ஆனால் இந்த நான்கிலும் மிகவும் முக்கியம் வாய்ந்தது "மண்"! அதுதான் நிலம். இந்த 'மண்' இன்றி நீரும், காற்றும், ஒளியும் இருந்து எந்தப் பயனும் இல்லை! ஆனால் இந்த மனிதன் என்ன செய்தான் தெரியுமா?

முக்கியத்துவம் வாய்ந்த இந்த மண்ணை மட்டும் ஏனோ அவன் அதிகமாகப் புறக்கணிக்க ஆரம்பித்தான்! இந்த புறக்கணிப்புப் பணியில் நம் நாட்டு மக்கள் மட்டுமல்ல; இவ்வுலகின் எல்லாப் பகுதி மக்களுமே ஈடுபட்டனர்! இவன் மண்ணைப் புறக்கணித்தான்-மண் இவனைப் புறக்கணிக்க ஆரம்பித்தது! இயற்கையுடன். இவன் மோதலாமோ? விளைவு என்னவாயிற்று பார்த்தீர்களா?

சரி, இந்தப் புறக்கணிப்பு எப்படி நிகழ்ந்தது என்று பார்ப்போம்!

"காடு திருத்தி நாடாக்குவோம்!" என்று இந்த மனிதன் ஒரு புது இயக்கத்தை ஆரம்பித்தான்! இயற்கை இந்த மண்ணிற்கு அளித்திருந்த அழகான பாதுகாப்புக் கவசமான காடுகளை அழித்தான்!

மனிதனின், உடைகளைக் களைவதுபோல் காடுகளைக் களைந்தான்!

அதோடு விட்டானா? உடைகளைக் களைந்ததோடு திருப்தி அடையாமல், ''தோலையும் உரிப்பதுபோல், மண்ணின் மீது அமைந்திருந்த தோல் போன்ற புல்வெளிகளையும் தனது ஆடு மாடுகளை மேய்த்து நிர்மூலமாக்கினான்!

நிலத்தை உழுது பயிரிட்டால் இலாபம் வரும் என்று எண்ணி பயிரிடவும் ஆரம்பித்தான். பயிர் செய்யும்போது ஒரே பயிரை மீண்டும் மீண்டும் பரம்பரை, பரம்பரையாகப் பயிர் செய்தான்! அந்த முறையினால் மண் தனது சக்தியை இழந்தது!

பாதுகாப்பற்ற மேல் மண், மழைபெய்தவுடன் கரைந்து ஓட ஆரம்பித்தது! காற்றடித்தவுடன் பறக்க ஆரம்பித்தது! நாளடைவில் மேல் மண்—அதாவது உரச்சத்து மிகுந்த மண் யாவும் ஆற்றோடு போய், ஏரிகளையும் குளங்களையும் ஆறுகளையும், மண் மேடுகளாக்கி ஆழக் குறைவாக்கியது! அதுமட்டுமல்ல, தொடர்ந்து மண் அரிக்கப் பட்டதால் நிலத்தில் சிறிய பிளவுகள் தோன்றி நாளடைவில் பெரிய பள்ளங்களாக ''ரவைன்ஸ்'' என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள்) மாறி விளைநிலங்களை நாசமாக்கியது!

''வடஇந்தியாவில் உள்ள சம்பல் பகுதியில் இப்படி ஏற்பட்ட ''ரவைன்களில்'' — அதாவது பள்ளத்தாக்குகளில்- கொள்ளையர்கள் தங்கள் குடியிருப்புகளை அமைத்து, போலீசார் அணுக முடியாதவாறு சுகமாக வாழ்கின்றனர்!'' என்று சொன்னால் நம்பமாட்டீர்கள்; ஆனால் உண்மை!

காடுகள் அழிக்கப்பட்டதால் பருவமழை தவறியது. வெப்பக் காற்று வீசத் தொடங்கியது. அதிவேகமாக வீசும்போது இதுவே மணற்காற்றாக மாறி மண்ணை ஓரிடத்திலிருந்து பெயர்த்து, மற்றோரிடத்தில் குன்றுபோல் குவித்து விளைநிலத்தின் இடத்தை அடைத்துக் கொண்டது. தமிழ்நாட்டில் போடிநாயக்கனூர் பகுதிகளில் இத்தகைய குன்றுகளைக் காணலாம்! ஆக இந்நிலையிலாவது மண்ணின் மகிமையை மனிதன் புரிந்து கொள்ளத் தவறினால் - சோலையெல்லாம் பாலையாகி விடும்-தமிழகத்தின் நெற் களஞ்சியங்களெல்லாம் தார்ப்பாலைவனம் போலாகி விடும்!

''இதற்கு என்ன செய்யலாம்? இதை எவ்வாறு மக்களுக்குப் புரியவைப்பது? சொன்னாலும் மக்கள் இதை ஏற்றுக் கொள்ளுவார்களா? ஏற்றுக் கொள்ளக்கூடிய கண்கூடான பிரச்சினையே என்றாலும், நம் மக்கள் இன்னும் இதை இயற்கையின் கோர விளையாட்டு என்றே நம்பி வருவதால்— இதை நம்மால் வெல்ல முடியும் என்ற நம்பிக்கையை எப்படி அவர்கள் உள்ளத்தில் ஏற்படுத்துவது?''

இந்தப் பிரச்சினைகளையெல்லாம் நன்றாக ஆராய்ந்து முடிவெடுக்க வல்லுநர்களும், விஞ்ஞானிகளும், பொறியாளர்களும் கூடி விவாதித்தார்கள்; நன்கு ஆலோசனை நடத்தினார்கள். அவ்விவாதத்தின் விளைவுதான் அரசினரால் ஏற்படுத்தப்பட்ட ''மண்வளப் பாதுகாப்புத் திட்டம்!''

''திட்டத்தைச் சிறப்பாகத் தீட்டிவிட்டோம்! அதனை மக்களிடையே பரப்புவது எப்படி? மக்கள் அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமே? வள்ளுவரின் குறளையே சங்கப்புலவர்கள் ஏற்க மறுத்தனராம்! பிறகு அவ்வைப்பிராட்டியார் தலையிட்டு, அதன் அருமையை உணர வைத்ததாக வரலாறு! வள்ளலார் பெருமானே தனது நன்னெறிக் கொள்கைகளை மக்கள் ஏற்றுக் கொள்ளாத போது ''கடை விரித்தோம் கொள்வாரில்லை'' என்று மனம் வெதும்பிப் பாடிவைத்தார்! ஆயினும் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறையினர் மனம் தளரவில்லை! முயற்சியை மேற்கொண்டோம் — கசந்து முகம் திருப்பினோரையும் மீண்டும் மீண்டும் அணுகினோம்!



எத்தனையோ இடங்களில் மண்வளப் பாதுகாப்பு வேலைகளில் ஈடுபடச்சென்றவேளாண்மைப் பொறியாளர்களை அடித்து விரட்ட கிராமமே திரண்டு வந்தது! ஒரு பெரிய வேள்வியில் ஈடுபட்ட உணர்வோடு அவர்களை பொறுமையோடு அணுகினோம். மீண்டும்மீண்டும் சொன்னதையே சொன்னோம் திருப்பித் திருப்பிச் சொன்னால் பொய்யே உண்மைபோல் காட்சியளிக்கும் என்பார்கள்! ஆனால் நாங்கள் சொன்னதோ 'உள்ளங்கை நெல்லிக்கனி' போன்ற உண்மையாயிற்றே! எனவே, எங்கள் முயற்சி பலனளிக்க ஆரம்பித்தது! அவர்கள் நாங்கள் கூறியதைச் செவிமடுக்க ஆரம்பித்தார்கள். அதன் பயனாக 1949-ஆம் ஆண்டிலிருந்து ''மண்வளப் பாதுகாப்புத் திட்டம்'' செயல் பட ஆரம்பித்தது.''

''இந்தத் திட்டத்தினால் ஒரு விவசாயி என்னென்ன பயன் பெற முடியும்? என்ற கேள்வி எழுகின்றதல்லவா? அதற்கான பதிலையும் கூறுகிறேன் கேளுங்கள்''

''புதியதாக அதாவது இதுவரை வேளாண்மை செய்யாத ஒரு நிலத்தை நீங்கள் பயன்படுத்த விரும்பினால் உங்கள் ஊருக்கு அருகாமையிலுள்ள உதவி வேளாண்மைப் பொறியாளர் அலுவலகத்தை அணுகி உங்கள் பிரச்சினையைக் கூறுங்கள். உடனடியாக அவர் தங்கள் நிலத்தைப் பார்வையிட்டு தன் உதவியாளர்கள் மூலமாக தங்கள் நிலத்தை நில ஆய்வு (சர்வே) செய்து, உங்கள் நிலத்தைச் சாகுபடிக்கு ஏற்றதாக மாற்றியமைத்திட என்னென்ன செய்ய வேண்டும் என்பதற்குரிய ஆலோசனைகளை வழங்குவார்-இதற்காக நீங்கள் கட்டணம் ஏதும் செலுத்த வேண்டியதில்லை'' என்று சொன்னால் நம்பமாட்டீர்கள்— ஆனால் உண்மை!

''அவரது ஆலோசனையின்படி நீங்கள் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தில் பங்கெடுத்துப் பயன்பெற விருப்பம் தெரிவித்தால், அதற்குரிய பணிகளனைத்தையும் தமிழ்நாடு வேளாண்மைத் துறையினரே செய்து முடித்திடவும் செய்வார்கள். உடனடியாக நீங்கள் பணம் செலுத்திட வேண்டுமா எனில் அதுதான் இல்லை! தங்கள் நிலத்தினை சீர்செய்ய [illegible] மொத்தச் செலவையும் தவணை முறைகளில் நீங்கள் 10 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தலாம்! இதில் 25 சதவீதம் மான்யமும் உண்டு!'' என்று சொன்னால் நம்பமாட்டீர்கள்—ஆனால் உண்மை!

''உங்களது நிலம் மலைப் பிரதேசங்களில் அமைந்திருந்தால் மான்யம் 40 சதவீதம் உண்டு! சரி, கடன்தொகையை நீங்கள் திருப்பிச் செலுத்திட உடனடியாக வசதி வேண்டாமா? அதையும் இந்த அரசு கவனத்தில் கொண்டு, நீங்கள் உங்களது முதல் தவணையை நிலம் சீர்திருத்திய மூன்றாவது ஆண்டிலிருந்து செலுத்த ஆரம்பித்தால் போதுமானது என்றும் சட்டம் இயற்றியுள்ளது. இதைப் படிக்கும்போதே உங்களுக்கு ஆச்சரியமாக உள்ளது அல்லவா?''

''இன்னும் கேளுங்கள்! ஏற்கெனவே விவசாயம் செய்து கொண்டு இருக்கும் நிலத்தில் திடீரென்று மகசூல் குறைவதைக் காண்கிறீர்களா? அஞ்ச வேண்டாம்! மண்வளப் பாதுகாப்பு திட்டத் உதவி வேளாண்மைப் பொறியாளரை அணுகினால் அவர் உங்களது நிலத்திலிருந்து 'மண் மாதிரிகளை எடுத்து, மண் ஆராய்ச்சி நிபுணர்களுக்கு அனுப்பி, உங்களது மண்ணில் எவ்விதச் சத்துக்கள் குறைவாக இருக்கின்றன என்பதையறிந்து, அதற்கு என்னென்ன நிவர்த்தி முறைகளைக் கையாள வேண்டும் எனும் ஆலோசனைகளையும் கூறுவார். இதற்கும் நீங்கள் கட்டணம் ஏதும் செலுத்த வேண்டியதில்லை. மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் நீங்கள் பெறக்கூடிய எல்லா வித பயன்களையும் எழுதுவதென்றால் ஒரு தனிப்புத்தகமே எழுத வேண்டும்! இருப்பினும் கடைசியாக ஒன்றே ஒன்று மட்டும் கூற விரும்புகிறேன்.''

''மண்ணைப் பாதுகாப்பது எப்படி என்பதைத் தெரிப்பது மட்டுமின்றி, விவசாயத்திற்குப் பயன்படும் நீரை எப்படி சிக்கனமாக-அதிகம் பயனளிக்கக் கூடிய வகையில்-பயன்படுத்தலாம் என்பதையும் தெரிவிப்பார். மண்வளப் பாதுகாப்புத் திட்ட உதவி வேளாண்மைப் பொறியாளர் இவ்வாறு தெரிவிப்பதோடு மட்டுமன்றி தங்கள் நிலத்தில் நீர்வசதி உள்ள இடத்திலிருந்து நிலத்தின் பல பகுதிகளுக்கும் நீரை விண் சேரழிவின்றி எடுத்துச் செல்ல வழிவகைகளையும் செய்து கொடுப்பார். அதுவும் கடன் திட்டத்தின் மூலமாக!' என்று நான் சொன்னால் நம்ப மாட்டீர்கள்—ஆனால் உண்மை!

''இப்படியெல்லாம் அரிய திட்டங்களை எடுத்துச் சொல்ல நாங்கள் சென்றபோதுதான் மேலே சொன்னபடி ஒரு கிராம மக்கள் எங்களை விரட்டி அடித்தார்கள்! போடி நாயக்கனூர் அருகே ஒரு வேடிக்கையான சம்பவம் நிகழ்ந்தது.

''போடிநாய்க்கனூர் பகுதியில் காற்றில் அடித்து வரப்பட்ட மண் ஒரு பெரிய கோபுரம் போல ஒருவரின் நிலத்தில் இருந்தது! இதை அப்படியே விட்டு வைத்தால், அடுத்த ஆண்டு காற்றுக் காலத்தில் அந்தக் கோபுரம் அடித்துச் செல்லப்பட்டு மற்றவர் நிலத்தையும் பாதிக்கும். எனவே மண்வளப் பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்தி அந்த மண் கோபுரத்தை அங்கேயே நிரந்தரமாக இருக்கும்படி செய்து விடுகிறோம் என்று நாங்கள் அறிவுரை வழங்கியபோது, அந்நிலத்தின் சொந்தக்காரர் சொன்னார். அந்தப் பதில் எங்களைத் திகைப்பில் ஆழ்த்தியது:

'இந்த ஆண்டு எனது விளைச்சல் நிலத்தில் ஒரு ஏக்கரை நான் இழந்துவிட்டேன். அடுத்த ஆண்டு காற்றடிக்கும் போது இதுதானாகவே அடுத்தவரின் நிலத்துக்குப்போய்விடும்! அதை ஏன் நீங்கள் நிரந்தரமாக்கி எனக்கு நிரந்தரமாக ஒரு ஏக்கர் நிலத்தை நட்டமாக்குகிறீர்கள்! இதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்! அதையும் மீறி நீங்கள் செயலில் இறங்கினால் கொலையே செய்துவிடுவேன்'' என்று கூறி மிரட்டினார்.

''அவருடைய மிரட்டலுக்கு பயந்து விடுவோமா நாங்கள்? ஒருவாரம்அவரிடம்தொடர்ந்து பட்டிமன்றம் நடத்தி அவரை ஒப்புக் கொள்ளச் செய்தோம்! இது எங்கள் அன்றாட வாழ்க்கை!

''தற்பொழுது மண்வளப் பாதுகாப்புத் திட்ட அலுவலகங்களைத் தேடி வேளாண்மைக் குடிமக்கள் வந்து ஆலோசனை பெறுவதோடு மட்டுமல்லாமல், எங்களது கடமைகளை நிறைவேற்ற ஆக்கமிகு ஒத்துழைப்போடு ஊக்கமும் தருகிறார்கள்!'' என்று சொன்னால் நம்ப மாட்டீர்கள்; ஆனால் உண்மை!

அ. சொக்கலிங்கம்,
உதவி வேளாண்மைப்
பொறியாளர், (நிலவளம்),
வேளாண்மை இயக்ககம்,
சென்னை-600005.

மாமன்னன் அலெக்சாந்தர் வெள்ளிப் பாத்திரங்களில் குடிதண்ணீர் எடுத்துச் சென்றதாகச் சொல்வார்கள். கிருமிகளால் தண்ணீர் கெடாமலிருப்பதற்காகவே அவர் அவ்வாறு செய்தாராம். கிருமிகளைக் கொல்லக் கூடிய ஆற்றல் வெள்ளிக்கு உண்டு என்று அண்மையில் விண்வெளி விஞ்ஞானிகள் மீண்டும் கண்டுபிடித்தனர். விண்வெளி வீரர்கள் கொண்டு சென்ற குடிதண்ணீர் கெடாமல் காக்க அவர்கள் அதை வெள்ளிக் கொள்கலங்களில் கொண்டு சென்றனர்.



அமெரிக்காவில் நீச்சல் குளங்களைத் தூய்மைப் படுத்த ஒரு நிறுவனம் வெள்ளி அயனிகளைப் பயன்படுத்துகிறது. வழக்கமாகத் தண்ணீரைத் தூய்மைப்படுத்த 'குளோரின்' உபயோகிக்கிறார்கள். இது கண்களில் எரிச்சல் ஏற்படுத்துகிறது. மேலும் தண்ணீரில் ஒரு நாற்றமும் வீசுகிறது. வெள்ளி அயனிகளைப் பயன்படுத்துகையில் இந்த அல்லல்கள் எல்லாம் ஏற்படுவதில்லை.

# நிலத்தை வளப்படுத்தும் நுண்ணுயிர்கள்

உலகில் எத்தனையோ வகையான நுண்ணுயிர்கள் இருக்கின்றன. அவைகளில் பலவற்றால் மனிதர்க்குத் தீங்கு நிகழ்வதுண்டு. அதனால் நுண்ணுயிர்கள் அனைத்தும் தீங்கு செய்வன என்று முடிவு கட்டிவிட முடியாது. சில நுண்ணுயிர்கள் நன்மையும் செய்கின்றன.

நமக்கு இன்றியமையாத உணவை நாம் பெரும்பாலும் நிலத்தில் விளைவித்துப் பெறுகின்றோம். பயிரை விளைவிக்கும்போது நிலத்திலுள்ள வளம் குறைகின்றது. வளமில்லாத நிலத்தில் பயிர் செய்வதால், நல்ல மகசூல் கிடைக்கமாட்டாது. நிலத்தில் குறைந்து போன வளத்தை நிறைவு செய்வதற்காக நாம் நிலத்திற்கு உரமிடுகிறோம். இந்த உரம் நல்ல முறையில் பயிருக்குப் பயன்படுவதற்கும் நிலத்தின் வளம் பெருகுவதற்கும் சில நுண்ணுயிர்கள் உதவுகின்றன.

இப்பொழுதெல்லாம் நாம் வீரியவித்து, இருபிறவி வித்து முதலான கலப்பின வித்துக்களை உபயோகிக்கிறோம். இவ்வித்துக்கள் ஒரே மாதிரியான அளவு உரமிட்டு வெவ்வேறிடங்களில் ஒரே மாதிரியாகப் பயிரிட்டுப் பரிசோதித்துப் பார்த்தபோது இடத்துக்கு இடம் மகசூலின் அளவுகளில் சில வேறுபாடுகள் காணப்பட்டன. ஒரே மாதிரியான வித்தையும், ஒரே அளவான உரத்தையும் போட்டு ஒரே மாதிரியாக எல்லாச் சாகுபடி நடவடிக்கைகளையும் செய்யும்போது, இடத்துக்கு இடம் மகசூலில் மாறுபாடு காண்பதற்குக் காரணம் என்னவென்று ஆராயப்பட்டது. மண்ணிலுள்ள சில நுண்ணுயிர்களின் நடவடிக்கைகள் காரணமாகச் சில இடங்களில் உரத்தில் ஆற்றல் முழுவதும் பயிர்களால் உபயோகித்துக் கொள்ளப்படுகிறதென்றும், மற்றும் சில இடங்களில் உரச்சத்து முழுமையும் உபயோகிக்கப்படாமல் விடப்படுகிறதென்றும் கண்டறியப்பட்டது. இது தெரிந்ததும் இந்த நுண்ணுயிர்களின் நடவடிக்கைப் பற்றி விரிவாக ஆராய்ச்சிகள் நடத்தினர்.

பயிர்களின் வளர்ச்சிக்கு 'நைட்ரஜன்' எனப்படும் 'தழைச்சத்'தினை ஒருவகை நுண்ணுயிர் பூமிக்குள் இழுத்துப் பயிர்களுக்கு எளிதில் கிடைக்கும்படியாகச் செய்கின்றது.

மண்ணிலுள்ள நீரில் கரையாததும் உபயோகமானதுமான ஒரு சில தாதுச்சத்துக்களையும், பாஸ்பரத்தையும் பயிருக்கு உதவக்கூடிய உருவத்தில் கரைத்துத் தருகிற வேறு சில நுண்ணுயிர்களும் பூமிக்குள் இருக்கின்றன. இந்நுண்ணுயிர்கள் உள்ள நிலங்களில் வளம் அதிகரித்துக் காணப்படுகிறது.

வித்துக்களுக்குள்ளே [illegible] போன்ற ஒருசில நுண்ணுயிர்களை விஞ்ஞான ரீதியில் உட்செலுத்தித் தேவையான உரமும் போட்டுப் பார்த்ததில் அந்த உரச் சத்துக்கள் எல்லாம் நன்கு பயன்படுத்திக் கொள்ளப்பட்டு மகசூலும் அதிகரிப்பது தெரிந்தது. ஒரு சில புல்லினத் தாவரங்களில் 'பாக்டீரியா' முண்டுகளை உட்செலுத்திப் பயிரிட்டுப் பார்த்தபோது ஒன்றுக்கு இரண்டு மடங்கு மகசூல் கிடைத்தது. சோயாபீன், பட்டாணி, கடலை, உளுந்து, தட்டைப்பயறு, குதிரை மசால், துவரை முதலான பயிர்களில் 'லெகூம் பாக்டீரியா' நுண்ணுயிர்களைச் செலுத்திப் பார்த்தபோது அபரிமிதமான மகசூல் கிடைத்தது.

புதுடெல்லி இந்திய விவசாய ஆராய்ச்சி நிறுவனத்திலுள்ள நுண்ணுயிர் ஆய்வுப் பகுதியினர் குதிரை மசால், கடலை, பட்டாணி, துவரை, உளுந்து, சோயாபீன், தக்கைப் பூண்டு முதலான பயிர்களுக்கு உதவியாயிருக்கக்கூடிய சில வகை நுண்ணுயிர் முண்டுகளைத் தயாரித்து அவற்றை நாட்டின் பல்வேறு பகுதியிலுள்ள விவசாயிகளிடம் கொடுத்துப் பரிசோதித்துப் பார்த்தனர். அப்போது இப்பயிர்களின் மகசூல் 20 முதல் 200 சதவிகிதம் வரை அதிகரிக்கிறதென்று தெரிந்தது. எந்த நிலத்திலும் முதன் முறையாக இந்த நுண்ணுயிர்களைப் புகுத்திப் பரிசோதிக்கும்போது மிகத் தெளிவான வித்தியாசம் மகசூலில் காண்கிறது.

நெல் வயல்களில் "புளு கிரீன் ஆல்கே" நுண்ணுயிர்களின் நடவடிக்கைகளைப் பரிசோதித்துப் பார்த்ததில் மேலும் அதிகமான மகசூல் பெருக்கம் ஏற்பட்டது.

இப்படிப் பலவகையாலும் மண்ணின் வளத்துக்கும் பயிரின் செழிப்புக்கும் உதவுகின்ற நுண்ணுயிர்கள் பற்றி நடக்கும் ஆராய்ச்சிகள் மேலும் பல உண்மைகளை நமக்குப் புலப்படுத்தக்கூடும். இதன் மூலம் நிலவளத்தைப் பெருக்கி உற்பத்தியை மேலும் அதிகரிக்கச் செய்ய முடியும் என்று நம்பலாம்.

தகவல் :—
இந்திய வேளாண்மை
ஆராய்ச்சிக் கழகம்,
புதுடெல்லி.

இந்தியாவில் பார்வையற்றோர்களுக்கான பள்ளிகள் 150 உள்ளன. இவற்றில் பெரும்பான்மையானவற்றைப் பொதுநல நிலையங்களே நடத்துகின்றன. இவற்றில் படிக்கும் பார்வையற்ற குழந்தைகளின் எண்ணிக்கை 10,000 ஆகும்.

பார்வையற்றோர்க்குக் கல்வியறிவு புகட்டும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி தரும் நான்கு வட்டார நிலையங்களுக்கும் மைய அரசு 1963 முதல் உதவி வழங்கி வருகிறது. சென்னை, பம்பாய், கல்கத்தா, தில்லி ஆகிய இடங்களில் இந்த நிலையங்கள் அமைந்துள்ளன. இவை ஆண்டுதோறும் 40 முதல் 45 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கின்றன.

# தமிழ் நாட்டில் தழைத்தோங்கும் கல்வி

—ஆர். பெருமாள்.
பள்ளிக் கல்வி இயக்குனர்.

இந்தியா விடுதலை பெறுவதற்கு முன் பெரும்பாலும் அரசுத் துறைகளின் பணிகளைச் செய்வதற்குத் தேவைப்படும் அளவில் தான் அக்காலத்திய கல்விமுறை இருந்தது. இடைக்கால ஆட்சிக் காலத்திலும் கூட, பெரும்பகுதி மக்களுக்குக் கல்வி அறிவு தரும் வசதிகள் இல்லாமல் இருந்தன.

மக்களாட்சி வந்த பிறகுதான் கல்வி வளர்ச்சியில் கவனம் செலுத்தப்பட்டது. இலவசக் கல்வி, கட்டாயக் கல்வி போன்ற முன்னேற்றத் திட்டங்கள் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டன.

1944-ஆம் ஆண்டு சர் ஜான் சார்ஜெண்ட் என்பவர் இந்தியாவிலுள்ள எழுத்தறியாமையை, இருபது ஆண்டுகளுக்குள் போக்கிவிட வேண்டும் என்கின்ற நோக்கத்தோடு ஒரு கல்விமுறைத் திட்டத்தை வகுத்தார். ஆனால் மக்களால் அமைக்கப்பட்ட அரசு அதைவிட மிகக் குறுகிய காலத்தில் கல்லாமையைப் போக்கிட முடியுமென்று கருதியது. அதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டது. அவ்வப்போது ஏற்பட்டு வரும் முன்னேற்றங்களின் அளவையும் பயனையும் கணக்கிட்டு, கல்வி வளர்ச்சியை மேலும் விரிவுபடுத்தத் தகுந்த திட்டங்கள் வகுக்கப்பட்டன.

இதன் அடிப்படையில், 1948-49-ல் பல்கலைக் கழகக் கல்வியைப் பற்றி ஆராய டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் தலைமையில் ஒரு குழுவும், [illegible]-53-இல் டாக்டர் ஏ.எல் முதலியார் தலைமையில், உயர்நிலைக் கல்வி பற்றி ஆராய ஒரு குழுவும், 1964-66-இல் அனைத்துப் பிரிவு கல்வி முறைகளைப் பற்றி ஆராய டாக்டர் டி.எஸ். கோத்தாரி தலைமையில் ஒரு குழுவும் நிறுவப்பட்டன.

இக்குழுவினர் ஆய்ந்து பரிந்துரைத்த அறிக்கைகளின்படி, பாலர் பள்ளி முதல் பல்கலைக் கழகக் கல்வி வரை, மக்களின் தேவைகளுக்கும், மாறிவரும் காலநிலைமைகளுக்கும் ஏற்றவாறு, மத்திய மாநில அரசுகள் கல்வி முறையில் தக்க திருத்தங்களைச் செய்து வருகின்றன.

தமிழ்நாட்டில் தொடக்கக் கல்வி, உயர்நிலைக் கல்வி, தொழில் சார்புக் கல்வி, முதியோர் கல்வி ஆகியவற்றில் தமிழக அரசின் செயல்முறைச் சார்பான விளக்கங்கள் இங்குத் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன.

## பள்ளிகளில் மாணவர் சேர்க்கை

கீழே தரப்பட்டுள்ள புள்ளி விவரங்கள், பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதையும் படித்தவர்களின் தொகை மிகுந்துள்ளதையும் காட்டும்.

| | 1965-66 இலட்சம் | 1974-75 இலட்சம் |
|---|---|---|
| வயதுத்தொகுதி 6 முதல் 11 வரை | 45.11 | 55.60 |
| 11 முதல் 14 வரை | 10.66 | 14.56 |
| 14 முதல் 17 வரை | 5.51 | 7.52 |

## வயது மிகுந்தவர்க்குக் கல்வி வசதி

பள்ளி செல்ல வேண்டிய பருவத்தில், கல்வி பயிலும் வாய்ப்பை இழந்த வயது வந்தோர்க்கு எழுத்தறிவை அளிக்கும் நோக்கோடு சில மாவட்டங்களில் உழவுத் தொழிலோடு இணைந்த நடைமுறை எழுத்தறிவிப்புத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. 'இளைஞர் பணி அணி'' யின் தொண்டை பயன்படுத்தியும் கல்வி மையங்கள் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஏற்பாடுகள் மூலம் அதிகமானவர்கள் எழுத்தறிவு பெற வாய்ப்புகள் ஏற்படும். நாட்டில் கல்லாமை அதிக அளவு நீங்கும்.

## தொடக்கக் கல்வி

1974-ஆம் ஆகஸ்டு மாதத்தில் உயர்துவக்கப் பள்ளிகள் உட்பட 32,565 பள்ளிகள் இருந்தன. அவற்றில் 1,78,766 ஆசிரியர்கள் (கூடுதலாக நியமிக்கப்பட்ட 25,000 ஆசிரியர்கள் உட்பட) பணி புரிகின்றனர். கல்வி கற்கும் சிறுவர் சிறுமியரின் எண்ணிக்கை 61.14 இலட்சமாகும். தொடக்கப் பள்ளிகளில் ஆசிரியர் மாணவர் விகிதம் தற்போது 1:35. கூடிய வரை இடைநிலை ஆசிரியர்களையே பாடம் கற்பிக்க நியமிப்பதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளது. கல்வியின் தரத்தை உயர்த்துவதற்குப் பாடத் திட்டங்களை மாற்றியமைத்து, அப்பாடங்களைப் போதிக்க ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. தொடக்கப்பள்ளி, உயர் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களில் சுமார் 90,000 பேருக்கும், உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களில் சுமார் 12,000 பேருக்கும் இதுவரை பணியிடைப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

அறிவியல் பாடத்தைப் பயிற்றுவிக்கும் தரத்தை உயர்த்துவதற்கான திட்டம் ஒன்று 1974-75-ஆம் ஆண்டு மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள 1,550 தொடக்கப் பள்ளிகட்கும், 1,800 உயர் தொடக்கப் பள்ளிகட்கும் பய

னளிக்குமாறு "யூனிசெப்" உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ரூ. 20 இலட்சம் செலவில் அறிவியல் ஆய்வுக் கருவிகள் அடங்கிய பெட்டிகள் பள்ளிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

**தொழிற் கல்வி:** மாணவர்கள் தாம் வாழுமிடத்திற்கேற்ற பயனுள்ள தொழில்களைக் கற்றுக்கொள்ளும் பொருட்டும் தொழில் நுணுக்கத்தையும், உற்பத்தித் திறத்தையும் அறிந்து கொள்ளும் பொருட்டும், தொடக்கப் பள்ளிகளிலும் கைத்தொழிற் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

**இலவச உணவு :** ஒன்று முதல் எட்டு வகுப்புகளில் பயிலும் 19.58 இலட்சம் மாணவர்களுக்கு நண்பகல் உணவு வழங்கப்படுகின்றது. 1975-76 இல் நண்பகலுணவுத் திட்டத்திற்காக ஏறத்தாழ 4.5 கோடி ரூபாய் செலவிடப்படும். 200 நாட்களுக்கு ஒரு மாணவருக்கு ஒரு நாளைக்கு 6 காசு வீதம் வழங்கப்பட்டு வந்ததை, 1974-ஆம் ஆண்டு அக்டோபர் முதல் 10 காசாக உயர்த்தியுள்ளனர். "கேர்" நிறுவனத்தின் உதவியால் பகலுணவு தயாரிக்கத் தகுதியான மைய சமையலறைகள் சுகாதார முறைப்படி ஏற்படுத்தப்பட்டுள்ளன. பள்ளிகளுக்கு உணவை எடுத்துச் செல்ல 224 டெம்போ உந்து வண்டிகளையும் இந்நிறுவனம் வழங்கியுள்ளது. இவ்வண்டிகளையும், சமையலுக்குத் தேவையான கருவிகளையும் பழுது பார்க்க "கேர்" நிறுவனத்தின் உதவியுடன் ரூ. 15 இலட்சம் செலவில் தென்னார்க்காடு மாவட்டத்தில் ஒரு பணிமனை நிறுவப்பட்டுள்ளது.

**இலவசப் புத்தகங்கள் வழங்குதல்:**

1974-75-இல் மாணவ மாணவியர்க்கு இலவசப் புத்தகங்கள் வழங்க பாடநூல் நிறுவனம் ஏறத்தாழ 20 இலட்சம் ரூபாய் செலவிட்டுள்ளது.

**பள்ளிக் கட்டடங்கள்**

ஒவ்வொரு தொடக்கப் பள்ளிக்கும் கட்டடங்கள் கட்டுவதற்கு அளிக்கப்படும் மானியம் ரூ. 8,000-லிருந்து ரூ. 10,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அவ்வாறே உயர் தொடக்கப்பள்ளிக்கு மானியம் ரூ. 13,000 - லிருந்து ரூ. 17,000 ஆக உயர்த்தப்பட்டுள்



**ஆசிரியர்களுக்கு வீடுகள்**

கிராமங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வீட்டு வசதிகள் தரப்பட்டுள்ளன. இதுவரை 1,600 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

**உயர்நிலைப்பள்ளிக் கல்வி**

தமிழகத்தில் 2,882 உயர்நிலைப்பள்ளிகள் உள்ளன. அவற்றில் பயில்வோர் 16.55 இலட்சம் மாணவர்கள். பணிபுரியும் ஆசிரியர்கள் 69,500.

**கல்வித்தர உயர்வு**

கல்வியின் தரத்தை உயர்த்தவும், கணித அறிவியல் அறிவை மேம்படச் செய்யவும் புதிய பாடத்திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இப்பாடத் திட்டத்தின் கீழ் ஆறும் வகுப்பிலிருந்தே இயல்பியல், வேதியியல், உயிரியல் ஆகியவை அறிவியலில் தனித்தனி பாடங்களாகக் கற்பிக்கப்படுகின்றன. அறிவியல் ஆய்வுக்கருவிகள் வாங்குவதற்கும், ஆய்வுக் கூடங்களை அமைப்பதற்கும் அரசு நிதியுதவி அளிக்கிறது. தொடக்கநிலை வகுப்புகளிலிருந்தே புதிய கணிதம் கற்பிக்கப்படுகிறது. 1975-76 முதல் ஒன்பதாம் வகுப்பு வரை எல்லாப் பாடங்களிலும் இப்புதிய பாடத் திட்டம் நடைமுறைக்கு வருகிறது.

**அறிவியல் கல்வி**

தற்போது அறிவியல் கல்வி கற்பிப்பதற்கு உதவும் வண்ணம், 17 நடமாடும் அறிவியல் ஆய்வுக்கூட வண்டிகள் உள்ளன. இதன் எண்ணிக்கை மேலும் கூடும். மாநில அறிவியல் கல்வி நிறுவனம், அறிவியற் கல்வியின் வளர்ச்சி, அறிவியல் பாடத் திட்டத்தின் மறுசீரமைப்பு, ஆசிரியரின் வெளி பயிற்சி, ஆய்வுகள், விரிவுப்பணிகள் ஆகிய யீடுகள், வற்றைக் கவனித்து வருகிறது. பள்ளிகளில் தொலைக்காட்சிக் கருவிகள் நிறுவுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

**நூலகங்கள்**

தமிழ்நாட்டில் நூல் நிலையச் சட்டத்தின் கீழ் நூலகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. 13 மாவட்ட மைய நூலகங்களும் 1,441 கிளை நூலகங்களும் இயங்குகின்றன. மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் பல நடமாடும் நூலகங்களை நடத்தி வருகின்றன. 197[illegible] ஆகஸ்டு முதல் பொது நூலகங்களுக்குத் தனியாக இயக்குநர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்போது நூலகங்கள் தவிரப் பள்ளி நூலகங்களும் ஒவ்வொரு பள்ளியிலும் ஏற்படுத்தப்பட்டு விரிவுபடுத்தப்படுகின்றன. இதற்கு அரசு மானியம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ. 500 மதிப்புள்ள . பொருத்தமான நூலகப் புத்தகங்கள் வாங்கி வழங்கப்பட்டு உள்ளன. சுமார் 2,472 உயர் நிலைப்பள்ளிகள் இத்திட்டத்தில் பயன்பெற்றுள்ளன.

**உயர்நிலைத் தொழிற் கல்வி**

தொழிற் கல்வி பயிற்சி தருவதற்காக 1974-75-இல் 1[illegible] உயர்நிலைப்பள்ளிகள் பல்வகை பயிற்சிப் பள்ளிகளாக (Comprehensive High Schools) மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் வானொலிப் பெட்டி பழுது பார்த்தல், மின் இயக்[illegible] பின்னுதல், உந்துவண்டி பழுது பார்த்தல், வேளாண்மைப் பொறியியல் ஆகியவை பாட நேரங்களுக்குப் பின்னர் கற்பிக்கப்படுகின்றன. நாளடைவில் மேலும் பல பள்ளிகளில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

**மாநிலக் கல்வி ஆய்வு நிறுவனம்**

இஃது பள்ளி நிலையில் பணியிடைப்பயிற்சிக்கான பொறுப்பை ஏற்றுள்ளது. பல்வகைப் பணியிடைப் பயிற்சித் திட்டங்களை நிறைவேற்றி வருவதோடு, கற்பித்தல் முறைகள், பாடத்திட்ட முன்னேற்றம் முதலானவற்றில் ஏற்படும் பல்வகைப் பிரச்சினைகள் குறித்த ஆய்வுகளையும் இந்நிறுவனம் நடத்தி வருகிறது. இந்த ஆய்வு நிறுவனம் 1975 பிப்ரவரி முதல் அரசுத் தேர்வுகள் இயக்குநரது நேரடி நிருவாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் பாதி எண்ணிக்கை போதிய இடவசதி பெறுதவை. எனவே அரசு உயர்நிலைப் பள்ளிகளின் கட்டடங்களுக்கென 4 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது. நகராட்சி மற்றும் உதவி பெறும் பள்ளிகளுக்கும் 7 இலட்சம் ரூபாய் கட்டட மானியமும், அரசு (கழக) உயர்நிலைப்பள்ளிகளுக்குக் கட்டடம் கட்டவும், பழுதுபார்க்கவும் 18 இலட்சம் ரூபாய் மானியமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**படிப்புதவித் தொகைகள்**

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இரண்டு மாணவர்கள் வீதம், கிராமப் புறத்தைச் சார்ந்த கல்வியில் சிறந்த மாணவர்களுக்கு உதவித் தொகைகள் 1971-72- ஆம் ஆண்டிலிருந்தே வழங்கப்படுகின்றன. உதவித்தொகை பெற்ற மாணவர், பள்ளிக் கல்வியை முடித்து வெளிவரும் வரை இவ்வுதவித் தொகையை பெறுவர். ஆண்டுதோறும் உதவித்தொகையைப் பெறும் மாணவர் எண்ணிக்கை 2,000 ஆகும். இதுவன்றி பர்மா இலங்கை அகதிகள், முன்னாள் இராணுவத்தினர், தாழ்த்தப்பட்ட இனத்தவர், பழங்குடி மக்கள், தங்கக்கட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லவர்கள், அரசியல் தியாகிகளது பிள்ளைகள் போன்



றோர்க்கும் தாராளமான கல்விச் சலுகைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

**நடமாடும் மருத்துவ ஊர்திகள்**

9 மாவட்டங்களில் பள்ளிப் பிள்ளைகளின் மருத்துவச் சோதனைக்கென நடமாடும் மருத்துவ வண்டிகள் இயங்கி வருகின்றன. மற்ற மாவட்டங்களுக்கும் இது விரிவாக்கப்படும்.

**பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்**

இதுவரை 518 பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன. பங்கேற்ற பள்ளிகள் 69,635. ரொக்கமாகவும், நன்கொடையாகவும் கிடைத்த நிதி ரூபாய் 13.05 கோடி ஆகும். பொது மக்களின் நன்கொடையைக் கொண்டு, ஏறத்தாழ 40 இலட்சம் மாணவர்களுக்கு 2.57 கோடி ரூபாய் செலவில் இலவசச் சீருடைகள் இதுகாறும் வழங்கப்பட்டுள்ளன.

**ஒலி, ஒளிக்கல்வி**

பாட்போதனையில் வியத்தகு முன்னேற்றத்தைக் கொண்டு வரவும், உலகின் அறிவியல் வளர்ச்சிக்கேற்பப் பாடங்களைக் கற்பிக்கவும், அவற்றைப் பயில்வோர் எளிதில் புரிந்து கொள்ளவும் ஒலி, ஒளிக்கல்வி உதவுகிறது.

இத்திட்டத்தின் கீழ்,

1. தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகட்கு 16 மி.மீ. திரைப்பட வீழ்த்தி அரசாங்கச் செலவில் வழங்கப்படவிருக்கிறது.

2. பள்ளிகட்குத் தொலைப் படக்காட்சிக் (T.V) கருவிகள் இலவசமாக வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**அகமதிப்பீட்டுத் திட்டம்**

மாணவரின் முழு வளர்ச்சித் திட்டத்தைக் கவனிக்கவும், அவர்களின் கல்வி வளர்ச்சியுடன் சமூக, பண்பு, தொழில் வளர்ச்சிகளையும் கவனிக்கவும், அகமதிப்பீட்டுத்திட்டம் 270 பள்ளிகளில் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கான பயிற்சி முகாம்களும் தலைமை ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்டுள்ளன. இத்திட்டம் மேலும் பல பள்ளிகளுக்கு விரிவுபடுத்தப்படும். அகமதிப்பீட்டுத் திட்ட நிறுவனம் தற்போது அரசுத் தேர்வு இயக்குநரின் மேற்பார்வைக்கு மாற்றப்பட்டு இயங்கி வருகிறது.

**அரசுப் பாடநூல் வெளியீடு**

பாடநூல் நிறுவனம் தரமான நூல்களை உருவாக்கி, மலிவு விலையில் விற்கிறது. புதிய பாடநூல்களை இந்நிறுவனம் அவ்வப்போது வெளிக்கொணர்கிறது. சிறுபான்மை மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம், உருது ஆகிய மொழிகளில் வரலாறு, புவியியல், கணிதம் போன்ற பாடங்களுக்கும் அரசுப்பாடநூல்களை இந்நிறுவனம் வெளியிடுகிறது.

**ஆங்கில போதனைப் பயிற்சி நிலையம்**

ஆங்கிலத்தை முறையாக நம் பள்ளிகளில் கற்பிக்கவேண்டிய அவசியத்தை உணர்ந்த தமிழ்நாடு அரசு, தற்போது ஆங்கில மொழிப் பயிற்சி மையங்களைச் செயல்படுத்தி வருகிறது. இம்மையங்கள் மூலம் ஆசிரியர்களுக்கு ஆங்கிலப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பெங்களூரிலுள்ள மண்டல ஆங்கிலக்கல்வி நிறுவனத்தில் இதுகாறும் 349 பட்டதாரி ஆசிரியர்களும், 42 மாவட்டக் கல்வி அலுவலர்களும், 166 பள்ளித்துணைத் தணிக்கை அலுவலர்களும் பயிற்சி பெற்றுள்ளனர்.

பொருளாதாரப் பற்றாக்குறையுடைய நகராட்சி மன்றங்களால் நடத்தப்பட்டு வந்த 16 உயர்நிலைப்பள்ளிகளை 1972-73 முதல் 1974-75வரையுள்ள காலத்தில் தமிழக அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இதற்

காக ஆண்டுதோறும் அரசுக்கு சுமார் 20 இலட்சம் ரூபாய் செலவாகிறது.

## பொது விவரங்கள்

### இளஞ்சிறார் பள்ளிகள்

5 வயதுக்கும் குறைந்த சிறுவர் சிறுமியருக்கான 40 இளஞ்சிறார் பள்ளிகள் தற்போது நம் மாநிலத்தில் கல்வித்துறை ஒப்புதலைப் பெற்று, அரசு மானியம் பெற்று நடந்து வருகின்றன.

### உடல் ஊனமுற்றோர்க்கான பள்ளிகள்

உடல் ஊனமுற்ற சிறுவர்களுக்காகத் தற்போது இம் மாநிலத்தில் 27 ஊனமுற்றோர் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. பார்வை இழந்த சிறுவர்களுக்காக 12 பள்ளிகளும், காதுகேளாத சிறுவர்களுக்காக 14 பள்ளிகளும், தொழு நோயால் வருந்தும் சிறுவர்களுக்காக 2 பள்ளிகளும், மூடமான பிள்ளைகளுக்காக ஒரு பள்ளியும் நடைபெற்று வருகின்றன. இப்பள்ளிகளில் ஏறத்தாழ 3,000 பிள்ளைகள் கல்வி கற்கின்றனர்.

### கைத்தொழில் பயிற்சி மையங்கள்

தொடக்கப்பள்ளிப் படிப்பை முடித்து இடையில் படிப்பை நிறுத்திவிட்ட 11-14 வயதுத் தொகுதியிலுள்ள சிறுவர்களுக்குக் கைத்தொழிற் பயிற்சி அளிக்க 9 மையங்கள் இயங்கி வருகின்றன.

### விளையாட்டும், உடற்பயிற்சிக் கல்வியும்

அனைத்துப் பள்ளிகளிலும் உடற்பயிற்சிக் கல்வி கட்டாயமானதாகும். மாநில மாவட்ட விளையாட்டுக் கழகங்கள் விளையாட்டுப் போட்டியை வளர்ப்பதில் பெரும் பங்கேற்று வருகின்றன. இதுவரை 8 நகரங்களில் விளையாட்டு அரங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் குடியரசுத் தினத்தில் மாணவர்களுக்கும், பொங்கல் தினத்தில் பொது மக்களுக்கும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பெற்று பரிசுகள் வழங்கப்படுகின்றன. அரசு உத்திரவுப்படி தற்போது உடற்பயிற்சிக் கல்வி உயர்நிலைப் பள்ளிகளில் ஒரு தேர்வுப் பாடமாக ஆக்கப்பட்டு உள்ளது. மாணவர்களின் விளையாட்டுத் திறனை வளர்க்க ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு நிதி உதவியுடன் மாவட்ட விளையாட்டுக் கழகங்கள் பணியாற்றுகின்றன.

### சாரணர், சாரணியர் இயக்கங்கள்

தமிழ்நாட்டுச் சாரணர் கழகம், மொத்தம் 73,504 சாரணர், சாரணியர்களைக் கொண்டுள்ளது. 5,000 சாரணர், சாரணியர் ஒவ்வொருவருக்கும் ரூ. 40 வீதம் இலவச உடை வழங்க 1974-75-இல் ரூ. 2 இலட்சம் மானியம் அளிக்கப்பட்டுள்ளது. 1975-76-லும் இதே தொகை மானியம் அளிக்கப்படும்.

### தேசிய மாணவர் படை

உயர்நிலைப் பள்ளிகளில் 757 தேசிய மாணவர் படை இளநிலைப் பிரிவுகள் இயங்குகின்றன. சுமார் 800 அலுவலர்கள் பணிபுரிகின்றனர். கடற்படை, விமானப்படை, தரைப்படை ஆகிய முப்பிரிவுகளில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

### கீழ்த்திசைக் கல்விப் பள்ளிகள்

12 வடமொழி கற்பிக்கும் பள்ளிகளும், 5 அரபு மொழி கற்பிக்கும் பள்ளிகளும் மாநிலத்தில் நடைபெற்று வருகின்றன. இவைகளும் சாதாரண உயர்நிலைப் பள்ளிகளைப் போல் அரசிடமிருந்து மானியம் பெற்று வருகின்றன.

### இளைஞர் நிலையங்கள்

மத்திய அரசு கல்வித்துறை 1973 நவம்பர் முதல் கடலூர், வேலூர், சேலம், திருச்சி ஆகிய நான்கு இடங்களில் "நேரு இளைஞர் நிலையங்களை" நடத்தி வருகிறது. இவை இளைஞர்கட்குப் பொதுக்கல்வி, அறிவியல், நாடகக்கலை, உடற்பயிற்சி ஆகியவைகளில் ஊக்களிக்கின்றன.

### குழந்தைகள் இல்லங்கள்

தமிழ்நாட்டில் 379 குழந்தை இல்லங்கள் மாநில அரசு மானியத்துடன் நடைபெறுகின்றன. இவைகளில் 66,788 சிறுவர் சிறுமியர் தங்கிப் படிக்கின்றனர். 5 முதல் 20 வயது வரையுள்ள மாணவர்களே இவ்வில்லங்களில் சேர்க்கப்படுகின்றனர். ஒரு சிறுவனுக்கு ரூ. 12 வீதம் மானியம் வழங்கப்படுகிறது. 1974-75 இல் தமிழக



அரசின் மானியச் செலவு ரூ. 68.64 இலட்சமாகும்.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞரின் பிறந்த நாளான 3.6.1975 அன்று 52 "கருணை இல்லங்கள்" திக்கற்ற சிறார்களின் பராமரிப்பிற்காகத் தமிழகத்தில் திறக்கப்பட்டுள்ளன. இப்பணி இந்து சமயஅறக் கட்டளை ஆட்சித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### ஆசிரியர் நலன்

தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் தற்போது ஏறத்தாழ 2.5 இலட்சம் ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். வேறு பல மாநிலங்களைப்போல் அல்லாமல், தமிழ்நாட்டில் தனியார் பள்ளி ஆசிரியர்களின் ஊதியச் செலவு முழுவதையும் மாநில அரசே ஏற்றுக் கொண்டுள்ளது. இம்மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளி ஆசிரியர்களுக்கும் வழங்கும் ஊதியச் செலவு 1975-76-இல் சுமார் ரூ. 85 கோடியாகும்.

உயர்நிலைப் பள்ளிகளில் 10 ஆண்டுப் பணியினை முடித்த பட்டதாரி ஆசிரியர்கட்கும், முதல்நிலைத் தமிழாசிரியர்கட்கும், பி.டி. தரத்தைச் சார்ந்த பிற சிறப்பு ஆசிரியர்கட்கும் தேர்வுநிலைப் பதவிகளைத் தரும் ஆணை 1-4-1973 முதல் செயலாக்கப்பட்டுள்ளது.

வித்வான் அல்லது புலவர் பட்டத்துடன் தமிழாசிரியர் பயிற்சி அல்லது இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்று, அத்துடன் தேவையான அளவு பொதுக் கல்வித் தகுதியும் பெற்றிருப்பின் அவர்கள் அனைவரும் முதனிலைத் தமிழாசிரியர்களாகக் கருதப்படுவர். இவர்களுள் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் என்ற பிரிவு நீக்கப்பட்டுள்ளது. ஆனால் தேவையான அளவு பொதுக் கல்வித் தகுதி பெறுமையால் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களாக உள்ளவர்கள் 10 ஆண்டுகள் பணிமுடிப்பின் முதனிலைத் தமிழாசிரியராக நியமனம் பெறுவர்.

ஈட்டிய விடுப்பைப் பணமாகப் பெறுவதற்குரிய உரிமை உட்பட, மாநில அரசு ஊழியர்களுக்கான விடுப்பு உரிமைகள் அனைத்தும் தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கட்கும் அளிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் இருவருக்கும், தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் இருவருக்கும், மாநில அரசு விருதுகள் ஆண்டுதோறும் தொடர்ந்து வழங்கப்படுகின்றன.

ஓய்வு ஊதியம் ஆசிரியருக்கு அளிக்கப்படத் தொடங்கியது சுயாட்சி காலத்தில்தான். ஆசிரியர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையே ஓய்வூதியம் என்ற நிலைமாறி தற்போது அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் முறையிலேயே ஆசிரியர்களுக்கும் ஓய்வூதியம், பணிக்கொடை ஆகியவை கணக்கிடப்பட்டு வழங்கப்படுகின்றன. பொதுவாக ஆசிரியர் நலனை தற்கால அரசு முனைந்து கவனித்து வருகிறது என்பதை உணரலாம்.

ஆசிரியரின் நன்மையைக் கருதி தேசிய நிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டு உள்ளது. இந்த நிதியிலிருந்து மிகவும் வறுமையில் வாடும் ஆசிரியருக்கு உதவி அளிக்கப்படுகிறது. 1974-75-இல் சுமார் 500 ஆசிரியர்களுக்கு ஏறத்தாழ இரண்டு இலட்சம் ரூபாய் இந்நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

### தமிழகத்தில் கல்விப்புள்ளி விவர ஆய்வு (Educational Survey)

மைய அரசின் கோரிக்கைக்கிணங்க தமிழகத்தில் கல்வி சம்மந்தமான புள்ளி விவர ஆய்வு நடைபெற்று மார்ச்சு 75 இல் முடிவுற்றது. இதற்காக ரூ. 2.15 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இப்புள்ளி விவர ஆய்வு எதிர்காலத்தில் கல்வித் துறையில் மிக முக்கிய மாற்றங்களைச் செய்யப் பெரிதும் பயன்படும்.

"கல்விப்பணியே கடவுட் பணி" என்பதனைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு புகுமுக வகுப்பு வரை இலவசக் கல்வியை ஏழை எளியவர்கள் பயன்பெறும்பொருட்டு வழங்கியுள்ளது. சாதி, இனம், மதம் எனும் வேறுபாடின்றி அனைவருக்கும் கல்வியை அளிப்பது இன்றைய தமிழக அரசே ஆகும். ஆல்போல் தழைத்தோங்கும் கல்வி அமுதத்தினை பெருவாரியான மக்கள் பெற்று உயர்ந்திட ரூ. 118 கோடி வரை கல்வியின் வளர்ச்சிக்கென ஒதுக்கியுள்ளது போற்றற்குரியது. 1967-க்குப் பின்னர் கல்வியின் வளர்ச்சி மிக வேகமாகப் பல முனைகளிலும் முன்னேறி வருவது குறிப்பிடத்தக்கது. தமிழக அரசால் ஏழைக் குழந்தைகள் கல்வி பெற பல வழிகள் பிறந்துள்ளன; உரிய வாய்ப்புகள் வளர்ந்துள்ளன; அவர்தம் கல்வி அறிவு ஏற்றம் பெற்றுள்ளது. படிப்பின் மூலம் மாணவரிடையே பண்பையும் சிறந்த நிலையையும் உருவாக்கும் ஆசிரியர் வாழ்க்கைத் தரத்தையும் தமிழக அரசு மேம்படுத்தியுள்ளது பாராட்டுக்குரியது. இந்தியாவிலுள்ள இதர மாநிலங்கள் அனைத்திற்கும் தமிழ்நாடு அரசின் கல்வித் துறை முன்னோடி, வழிகாட்டி எனில் அஃது உண்மையே.

# தமிழரசு
## சிறுகதைப் போட்டி
## 1975

### போட்டிக்குரிய விதிமுறைகள்

* அரசின் ஆக்கப்பணிகளை அடித்தளமாகக் கொண்டு தமிழகச் சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் கதை அமைதல் வேண்டும்.
* கதை தமிழரசு இதழில் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
* ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
* தேர்ந்தெடுக்கப் பெறாத கதைகளைத் திருப்பி அனுப்ப இயலாது.
* போட்டிக்கனுப்பப்படும் கதைகளின் அஞ்சல் உறையின் மீது 'தமிழரசு சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிடுக.
* போட்டிக்குக் கதைகள் வந்து சேரவேண்டிய முடிவுநாள் 30—11—1975.

**முதல் பரிசு ரூ. 500/-**
**இரண்டாவது பரிசு ரூ. 300/-**
**மூன்றாவது பரிசு ரூ. 200/-**

தேர்ந்தெடுக்கப்பட்டுப் பரிசுபெறும் கதைகள் தவிர, தகுதியுடைய கதைகள் தமிழரசில் வெளியிடப்படும். அவைகளுக்கு வழக்கமான அன்பளிப்பு வழங்கப்படும்.

போட்டி முடிவு 1976 ஜனவரி 16-ஆம் நாள் இதழில் வெளிவரும்.



# சட்டம் தரும் சம்மதம்

— எஸ். முத்துராமலிங்கம் —

கருச்சிதைவு நீண்ட நெடுங் காலமாக உலகின் பல்வேறு நாடுகளில் நடைமுறையில் இருந்து வருகிறது என்பதற்கு சான்றுகள் பல உள்ளன. கருச்சிதைவு செய்வது அல்லது செய்து கொள்வது சட்டத்திற்குப் புறம்பானது என்றிருந்தபோதிலும் மறைவாக-இரகசியமாக-யாருக்கும் தெரியாமல்-கணவனேகூட அறியாமல்-கருச்சிதைவு செய்து கொள்வதால் உடல் நலம் கெடும் என்று உணர்ந்த நிலையிலும் உலகில் கோடிக் கணக்கான தாய்மார்கள்—இந்தியாவில் இலட்சக் கணக்கான தாய்மார்கள் கருச்சிதைவு செய்து கொண்டார்கள்.

## கிரேக்கத்தின் கருத்து

கருச்சிதைவு செய்து கொள்வது என்பது ஒழுக்கத்திற்கு, நேர்மைக்கு இழுக்கு ஏற்படுத்துவது என்ற கருத்து ஒரு காலத்தில் உலகில் நிலவியது. இதையொத்த கருத்து 2300 ஆண்டுகளுக்குமுன் கிரேக்கத்தில் இருந்தது. 'நினைத்தபோதெல்லாம் கருச்சிதைவு செய்யக் கூடாது. இயற்கை தருவதைப் பேணுதலும், காப்பாற்றுவதும் மருத்துவ உலகத்தின் கடமை-அழிப்பதல்ல.' என்று அந்தக் காலகட்டத்தில் வாழ்ந்த கிரேக்க மருத்துவர்களின் அலுவல் முறையிலான அறிக்கையொன்று கூறுகிறது.

அதுமட்டுமல்ல.''மிக அவசியமான சிறப்புக் காரணங்களுக்காக மட்டும் கருச்சிதைவு செய்வது உகந்தது. மண வாழ்க்கையின் விளைவாக உண்டான குழந்தையைப் [illegible] பெற்றெடுப்பதிலிருந்து [illegible] வேண்டும் என் [illegible] குழந்தை பெற்றால் பெண்ணின் உடல் வனப்புக் கெட்டுவிடும் என்பதாலோ கருச்சிதைவு செய்யக் கூடாது. உடலியல் காரணங்களால் குழந்தை பிறப்பது கடினம் அல்லது ஆபத்து என்கிற அபாய நிலையிலேயே கருச்சிதைவு செய்யலாம்,'' என, 1800 ஆண்டுகளுக்கு முன் பண்டைய ரோமில் வாழ்ந்த புகழ்பெற்ற மருத்துவர் ஒருவர் கூறியுள்ளார்.

## கரு உயிர் பெறுவது எப்போது?

மத-அடிப்படையில்-தத்துவ அடிப்படையில், உண்டான 'கரு உயிர் பெறுவது எப்போது' என்பதில் உலகில் பல்வேறு கருத்துக்கள் நிலவி வந்திருக்கின்றன. பண்டைய கிரேக்கத்தில் வாழ்ந்த தத்துவஞானி அரிஸ்டாட்டில், ஆண் என்றால் கருத்தரித்த 40 நாட்களில் அது உயிர் பெறுகிறதென்றும், பெண் என்றால் கருத்தரித்த 90 நாட்களில் உயிர் பெறுகிறதென்றும் கருதினார். ரோமன் நாட்டுச் சட்டப்படி, ஆணோ, பெண்ணோ எதுவாக இருந்தாலும் கருத்தரித்த 40 நாட்களுக்குப் பின் உயிர் பெறுகிறதென்றும், அதற்கு முன் செய்யப்படும் கருச்சிதைவு கொலையாகக் கருதப்படாது என்றும் கருதப்பட்டது. 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கத்தோலிக்கத் தத்துவ அறிஞர் அகுய்னஸ் பாதிரியார் (St. Thomas Aquinas) என்பவர், கருப்பைக்குள் வளரும் குழந்தை எப்போது முதன் முதலாக அசைகிறதோ அப்போது முதலே உயிர் பெற்று விடுகிறது என்றார். இந்தப் பண்டையச் செய்திகளெல்லாம் கருச்சிதைவு நீண்ட நெடுங்காலமாக உலகில் இருந்து வந்திருக்கிறது என்பதற்குச் சான்றாக அமைகின்றன.

## உலகநாடுகளின் நிலை

கருச்சிதைவிற்கு உலகில் பலத்த எதிர்ப்பும் இருந்தது. பிரான்சு நாட்டுப் புரட்சியைப் பற்றி அறிந்தவர்களுக்குக் 'கில்லட்டின்', நினைவில் நின்று நிழலாடும். கருச்சிதைவு செய்தால் 'கில்லட்டின்' துணையால் கொல்லப்படுவார்கள் என்று, 1939—ஆம் ஆண்டு பிரான்சு நாட்டுச் சட்டம் கூறுகிறது. 1942-ஆம் ஆண்டு கருச்சிதைவு செய்த ஒருவர் அத்தகைய தண்டனைக்கு உள்ளானார் என்பது வரலாற்றுக் குறிப்பு. அச்சட்டம் இப்போது பயன்படுத்தப்படவில்லை என்றாலும், சட்டப் புத்தகத்தில் இன்றும் இருந்து வருகிறது. கருச்சிதைவைச் சட்டபூர்வமாக்காத நாடுகள் உலகில் இருந்து வருகின்றன.

சோவியத் ரஷ்யா 1920-ஆம் ஆண்டு கருச்சிதைவு செய்வதைச் சட்டபூர்வமாக்கியது. 1936-ஆம் ஆண்டில் அச்சட்டத்தில் இருந்த கட்டுப்பாடுகள் சிலவற்றைத் தளர்த்தியது. 1954-55-ல், கருச்சிதைவு செய்து கொள்ள விரும்புகிற பெண் தங்குதடையின்றி உடன் செய்து கொள்ள வழியமைத்துச் சட்டமாக்கியுள்ளது. அமெரிக்க நாட்டு மாநிலங்களில் 19-ஆம் நூற்றாண்டின் மத்தியிலேயே வரம்பிற்குட்பட்ட கருச்சிதைவுச் சட்டம் நிலவி வந்தது எனக் கூறலாம். 1973-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் கருச்சிதைவினைச் சட்டபூர்வமாக்கித் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அமெரிக்க உச்ச [illegible] மன்றம் இனப்பெருக்கப் பா[illegible]

[illegible] சட்டத்தின்கீழ் (Eugenic Protection Law) 1948-ஆம் ஆண்டும், பொருளாதாரக் காரணங்களுக்காக 1949—ஆம் ஆண்டும் ஜப்பானில் கருச்சிதைவு சட்டபூர்வமாக்கப்பட்டது. அதையடுத்த பத்தே ஆண்டுகளில் ஜப்பானின் பிறப்பு விகிதம் முன்பிருந்ததில் சரிபாதியாகக் குறைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சீனநாட்டில் கருச்சிதைவு சில கட்டுப்பாடுகளுடன் 1954-ஆம் ஆண்டில் முதன்முறையாக நிறைவேற்றப்பட்டது. 1957-ஆம் ஆண்டில் பெரும்பான்மையான கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டுச் சீனாவில் இப்போது கருச்சிதைவு சர்வசாதாரணமாக நடந்தேறிவருவதாக அறியப்படுகிறது. இங்கிலாந்தில் 1967-ஆம் ஆண்டு கருச்சிதைவுச் சட்டம் நிறைவேற்றப்பட்டு அமலில் இருந்து வருகிறது.

உலக நாடுகளில் கருச்சிதைவுச் சட்டம் அமலுக்கு வருவதற்குள் முறைகேடான கருச்சிதைவு செய்துகொண்ட காரணத்தால் சில நாட்டில் 32 சதவிகிதத்தினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டனரென்றும் ஒரு புள்ளி விவரம் கூறுகிறது. அதேபோல் அமெரிக்க நாட்டின் சிறந்த நகரமாகிய நியூயார்க்கில் 46 சதவிகிதத் தாய்மார்கள் முறைகேடான கருச்சிதைவு செய்து கொண்டதால் இறந்தனர் என 1964-ஆம் ஆண்டு புள்ளி விவரம் கூறுகிறது. இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் தவிர்க்க வேண்டும்-தாய்மார்களுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டும் என்ற பெருநோக்கில், உலகிலுள்ள 55 நாடுகளில் கருச்சிதைவு வெவ்வேறு காரணங்களுக்காகச் சட்டப்பூர்வமாக்கப் பட்டுள்ளது. 1975-ஆம் ஆண்டு மத்தியில் உலக மக்கள் தொகை 396.7 இந்த மக்கள்தொகையில் 71 சதவிகித மக்கள் மேற்சொன்ன 55 நாடுகளில் வாழ்கின்றனர்.

## இசுலாமிய நாடுகளின் நிலை

1971-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் பெய்ரூட்டில் நடந்த கருச்சிதைவு சம்பந்தப்பட்ட கருத்தரங்குகளில் பரிமாறிக் கொள்ளப்பட்ட தகவல்களின் படி இசுலாமிய நாடுகளில் கருச்சிதைவு செய்து கொள்ளும் தாய்மார்களின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டிருப்பதாகக் கூறப்பட்டது. சிறப்பாகத் துருக்கி, ஈரான், ஐக்கிய அரபுக் குடியரசு, ஈராக், லெபனான், ஜோர்டான், மொராக்கோ ஆகிய நாடுகளில், 'சிறுகுடும்பம்' அமைத்துக் கொள்ள விரும்பும் தாய்மார்கள் அடிக்கடி கருச்சிதைவு செய்து கொள்வதாகவும், அதுவே ஒரு சமூகப் பிரச்சினையாக வளர்ந்து வருவதாகவும், தெரிவிக்கப்பட்டது. ஈரான், கருச்சிதைவுச் சட்டத்தைத் தளர்த்த வேண்டுமென்றது. இதே அடிப்படையில் கருத்தரங்களில் கலந்து கொண்ட இஸ்லாமிய நாடுகள் தங்கள் தங்கள் நாடுகளில் சட்டம் அனுமதிக்காவிட்டாலும் எந்த அளவு கருச்சிதைவு நடந்தேறி வருகிறது என்பதைப் புள்ளி விவரத்துடன் எடுத்துக் கூறின. 'வாழ்க்கைக்குரிய தவிர்க்க முடியாத தேவைகள் தடைக்கற்களை மீறிச் செல்கின்றன என்ற திருக்குர்ஆன் கூறும் கொள்கையின் அடிப்படையில் ஜோர்டான், லெபனான், துருக்கி, துனிசியா ஆகிய நாடுகள் கருச்சிதைவுக்குச் சட்ட சம்மதம் அளித்துள்ளன.

## இந்தியாவில்.....

இந்தியாவில் கருச்சிதைவு சட்டப்படி குற்றமாகக் கருதப்பட்டு வந்தது. அப்போதெல்லாம் பயிற்சியோ, அனுபவமோ இல்லாதவர்கள்(quacks) கருச்சிதைவு செய்து வந்தார்கள். கருச்சிதைவுக்காகச் செல்லும் தாய்மார்கள் அவர்களை முழுமையாக நம்ப வேண்டியிருந்தது. திரைமறைவில் கருச்சிதைவு தொழில் செய்தவர்கள் மிக மோசமாக நடந்து கொண்டார்கள். ஈகையோ இரக்கமோ இன்றி கருச்சிதைவுக்கென வந்தவர்களிடம் கொடூரமாக நடந்து பணம் பிடுங்கினார்கள். இவர்கள் செய்யும் கருச்சிதைவால், தாய்மார்களுக்கு உடல் அளவில் தொல்லை ஏதும் ஏற்படாது என்ற உறுதி கிடையாது. கருச்சிதைவு இவர்களிடம் செய்து கொண்ட தாய்மார்கள் பலரின் உயிருக்கு ஆபத்து நேரிட்டதுண்டு. இப்படியிருந்து ஆண்டுதோறும் இந்தியாவில் 40 இலட்சம் தாய்மார்கள் கருச்சிதைவு செய்து கொண்டார்கள். இவற்றையெல்லாம் தவிர்க்க வேண்டுமென்பதற்காகத்தான், 1971-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் இந்திய அரசு கருச்சிதைவுச் சட்டத்தை (Medical Termination of pregnancy Act) நிறைவேற்றியது. இச்சட்டம் 1972 ஏப்ரல் முதல்நாள் முதல் அமலுக்கு வந்தது.

## கடவுளும் கருச்சிதைவும்

கருச்சிதைவு என்பது கடவுளுக்கு விரோதமான செயல் என்று பலர் நினைக்கிறார்கள். 'கரு'வைக் கலைப்பது என்பது ஒரு உயிரைக் கொலை செய்வதற்கு ஒப்பானது என எண்ணி மனத்தாலே துன்பப்படுபவர்கள் ஏராளம். கடவுளுக்கு விரோதமான செயல் அல்ல கருச்சிதைவு என்பதற்கு நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தந்துள்ள விளக்கமே போதுமான எண்ணத் தெளிவை ஏற்படுத்தும்.

''கருச்சிதைவு என்பது-கரு உண்டாகிவிட்ட நிலையிலே கலைக்கப்படுவது என்பது-ஏதோ ஒரு தனி உயிருக்கு ஆபத்து, கடவுளுக்கு எதிரான செயல் என்றெல்லாம்கூட உள்ளபடியே நம்பிக் கொண்டு வருத்தப்படுபவர்கள் பலபேர் இருக்கிறார்கள். ஒருவேளை கருச்சிதைவு என்பது, கரு முதிர்ந்த நிலையிலே செய்யப்படுமானால் தாயின் உடலுக்கு குந்தகமானது, கேடானது என்பதுதான் விஞ்ஞான உண்மை. கருச்சிதைவு நிலையிலே கலைந்து போகிற கருவெல்லாம் தனி உயிர் அல்ல. இந்த உடம்பினுடைய ஒன்றாகத்தான் அந்தக் கரு இருக்கிறதே தவிர, தனி உயிருக்குள்ள தன்மையை அது பெற்றிருக்கவில்லை. தனியான வளர்ச்சியைக் கரு பெறாத கட்டத்திலேதான், கருச்சிதைவு செய்யப்படுகிறது. குழந்தைகள் ஒரு இருபது நாட்களுக்கு முன்னாலே பிறந்துவிட்டால், விஞ்ஞான முறையிலேகூட அதைக் காப்பாற்றுவது கடினம். எனவே, உடம்பின் கூறாக இருந்தபோதிலும் அது கலைந்து போகுமானால்கூடப் பாதகமில்லை. பாவமென்று கருதப்படுவதற்கு இடமில்லை. குழந்தையே தோன்றாமல், கருத்தரிக்காமலே தடுத்துக்கொள்ள முடியுமானால், அது கடவுளுக்கு எதிரான செயல் அல்ல.

''கடவுள் தன்மை என்பதை ஒரு தத்துவ அடிப்படையில் எண்ணிப் பார்ப்பவர்களுக்கு இது புரியும். பிறப்பு, வளர்ப்பு, வாழ்வு அதற்குப்பின்னர் அழிவு, அல்லது சாவு இவை

## மறவாதீர்கள்:

## உங்கள் மகள் ஒருநாள்

## மணமகளாக அமர வேண்டியவள்!



திருமணம் என்ருலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்ருல்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கிஞல் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்ருேம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது—இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1,650/- |

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002


கடவுள் செயல் என்று சொல்லப்படுகிற தத்துவத்தை எண்ணிப் பார்ப்பவர்களுக்கு இதிலே அதிக வேற்றுமை தெரியாது. ஆனல், அந்தத் தத்துவத்தை எண்ணிப்பார்க்காமல், அழிவு ஆண்டவனுக்கு ஒவ்வாத காரியம் என்று கருதிக் கொண்டு, கருத்தரித்ததாலேயே, ஏதோ உயிர் உண்டாகிவிட்டது போலவும், அந்தத் தனி உயிரை நாம் கெடுத்து விடுவது போலவும் அதனல் கடவுளுக்கு விரோதமான காரியத்தில் ஈடுபடுவதைப் போலவும் பலவாறு கருத்தடையைப் பற்றி எண்ணுகிறவர்கள், ஆழ்ந்து சிந்திப்பார்களேயாளுல், இதிலே எதுவும் கடவுளுக்கு விரோதமானதுமல்ல-இது பிற உயிருக்குச் செய்கிற கேடுமல்ல-ஒரு தனி உயிருக்குச் செய்கிற தொல்லையுமல்ல என்பது புரியும்.

''நடந்துபோகிறபோது நூற்றுக்கணக்கான எறும்புகள் அல்லது புழுப்பூச்சிகள் அழியத்தான் செய்கின்றன. சமண முனிவர்களைப் போலப் புழு பூச்சிகளை அழிக்காமல் நடப்பது என்பது நடக்கக்கூடியது அல்ல. நாம் அறியாமல் அழிபவை அல்ல. நாம் அறிந்து அழியும் புழு பூச்சிகளே ஏராளம்.

நாம் உண்பதற்காகக் கொலை செய்யப்படுகின்ற உயிர்கள் இன்னும் ஏராளம். ஆக உயிரைக் கொல்லுகின்ருேம் எனச் சொல்லி, கருச்சிதைவு கடவுளுக்கு விரோதமானது என்று கூறுவது தவறு'' என்ற மாண்பு மிகு பேராசிரியர் அவர்களது விளக்கம் கருச்சிதைவு குறித்து பலர் கொண்டுள்ள தவருன எண்ணத்தைப் போக்க உதவும்.

மேலும் அமெரிக்க பெண் பிணி இயல் மருத்துவர் டாக்டர் செலிக் நியூபார்ட் (Dr. Selic Neubardt) தமது புத்தக மொன்றில் (Aconcept of controception)

"I belive the basic obligation we have to a new human being is that it be wanted. We will never all be created equal, but we will be able to come closest to that ideal when we are all born wanted. It is therefore logical that I accept abortion. The only ethical and moral position I can take is to allow any woman who does not want to be pregnant to be aborted-with dig-

இந்தியாவின் மக்கள் தொகை 56 கோடி என்று நமக்குத் தெரியும். ஆனல் உலகின் மக்கள் தொகை எவ்வளவு தெரியுமா? 400 கோடி! நம் காலத்தில் ஆரம்ப நூற்ருண்டுகளில் இவ்வுலகில் 23 கோடி மக்கள் இருந்தனர். உதாரணமாக, நெப்போலியனின் போர்களின் இறுதியில் உலகில் மக்கள் தொகை ஏற்கெனவே 100 கோடியை எட்டியிருந்தது. தவிர, மக்கள் தொகை வேகமாக உயர்ந்து கொண்டு வந்தது. இதற்கு முன்பு மக்கள் தொகை 1,000 ஆண்டுகளுக்கு ஒரு சதவிகிதத்திற்கும் குறைவாகவே உயர்ந்து வந்தது. இருப்பினும் 19-வது நூற்ருண்டின் இறுதியில் மக்கள் தொகை வளர்ச்சிக்கு ஒரு ஆண்டிற்கு ½ சதவிகிதமாகியது. 1930-ஆம் ஆண்டுகளில் உலகின் மக்கள் தொகை 200கோடியாகிறது. 1961-ல் 300 கோடியாக உயர்ந்தது; இன்ருே 400 கோடி மக்கள் இவ்வுலகில் வாழ்கின்றனர். இவ்வுலகில் மக்கள் தொகை உயர்ந்து கொண்டே போகிறது. ஒரு ஆண்டில் ஏறக் குறைய 13 கோடியே 60 இலட்சம் பேர் பிறக்கின்றனர். 5 கோடி 60 இலட்சம் பேர் இறக்கின்றனர்.


இலக்கியங்களுக்கு
இறவாப் புகழ் தருவது...

காகிதம்

ஹோமர் முதல் ஹெமிங்வே வரை,
காளிதாசர் முதல் காஃப்காவரை,
ஆதிசங்கரர் தொட்டு அரிஸ்டாடில் வரை,
திருவள்ளுவர் தொட்டு தோரூவரை......

தரமான காகிதம், சிந்தனையாளர்களின் எண்ணங்களும், கருத்துக்களும் காலத்தால் அழிவுரு வண்ணம் காத்து எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்கி உதவுகிறது.

**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்**

பள்ளிப்பாளையம்,
சேலம் மாவட்டம்
தமிழ்நாடு

SPB

The Watermark of Quality

எழுத, அச்சிட, உறையிட
உன்னதமான காகிதங்கள்

nity, by the physician of her choice, and at price compatible with other medical survices,''

என்று கூறியுள்ளது, கூர்ந்து நோக்கத்தக்கது. எனவே, கருச்சிதைவு என்றதும் கசப்பான உணர்வு கொள்ளாது அது எவ்வளவு அவசியமானது என்பதை உணர வேண்டும்.

**தமிழகத்தில்**

கருச்சிதைவுச் சட்டத்தை இந்திய அரசு நிறைவேற்றி விட்ட போதிலும், தமிழ்நாடு அரசு தன் நிதியிலிருந்து செலவிட்டு இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. கருச்சிதைவுத் திட்டத்தை நிறைவேற்ற இந்திய அரசு எவ்வித நிதி உதவியும் அளிக்கவில்லை.

தமிழகத்திலுள்ள மருத்துவக் கல்லூரிகளைச் சார்ந்த மருத்துவ மனைகள் 9, மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் 13, வட்ட மருத்துவமனைகள் 28, தன்னியக்க நிறுவனங்கள் 6 ஆக மொத்தம் 56 இடங்கள் கருச்சிதைவு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளன. இப்போது மேலும் 24 நிலையங்களை கருச்சிதைவு செய்ய அரசு அனுமதித்துள்ளது. எனவே, மொத்தம் 80 நிலையங்கள் கருச்சிதைவு செய்ய அனுமதித்த நிலையங்களாகத் தமிழகத்தில் செயல்படும்.

**பயிற்சி**

தமிழக அரசின் ஏற்பாட்டின் பேரில் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளில், கருச்சிதைவு செய்வதில் பெண் மருத்துவர்களுக்கு 15 நாட்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது. உலக சுகாதார நிறுவனத் திட்டமொன்றின்கீழ் சென்னை எழும்பூர் தாய்-சேய் நல மருத்துவமனையிலுள்ள பெண் பணி இயல் நிலையத்தில் (Institute of Obstetrics & Gynaecology) நான்கு வாரக் காலப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அரசுத் திட்டத்தின்கீழ் 200 மருத்துவர்களும், உலக சுகாதார நிறுவனத் திட்டத்தின்கீழ் 30 மருத்துவர்களும் 1974-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் 1975-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் வரை (15-9-75 ஆம் நாள் கிடைத்த தகவலின்படி) பயிற்சி பெற்றுள்ளார்கள்.

**யாருக்குக் கருச்சிதைவு?**

உருவாகிவிட்ட கரு தொடர்ந்து வளருமானால், அது அந்தப் பெண்ணின் உடல் நலத்திற்கோ, உள்ள நலத்திற்கோ-நிகழ்காலத்தில் அல்லது வருங்காலத்தில் ஊறினை விளைவிக்கும் என்ற நிலையில் கருச்சிதைவு செய்யலாம். பிறக்கப் போகும் குழந்தைக்கு உடல் அளவிலோ, உள்ள அளவிலோ ஊனம் ஏற்படும் என்றாலும்-கற்பழிப்பின் காரணமாகக் 'கரு' உண்டாகிவிட்டது என்றாலும், கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்திய போதிலுங்கூட கரு உண்டாகி விட்டது என்றாலும் கருச்சிதைவு செய்யலாம். கருச்சிதைவுக்குள்ளாகும் பெண்ணின் வயது, அவருக்கு இருக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை, அவரது கடைசிக் குழந்தையின் வயது, அவர் என்ன வேலை செய்கிறார், என்ன வருமானம் என்ற விவரங்கள் எல்லாம் கருத்திற்கொண்டு கருச்சிதைவு செய்யப்படும்.

வீட்டு விலக்காகவில்லை என்பது தெரிந்த உடன் கருச்சிதைவு செய்து கொள்வது என்பது மிகப் பாதுகாப்பானது. அப்படிக் கருச்சிதைவு செய்து கொள்ள விரும்புபவர்களை அநேகமாக மயக்க மருந்தில்லாமல் புற நோயாளிகளாகவே கருதி மருத்துவம் அளித்து விடலாம். கரு உண்டாகி 12-வது வாரத்திற்கு முன்பாக, பெண் உறுப்பின் வழியாக மருத்துவ முறைப்படி இலகுவாக அகற்றி விடலாம்-கரு உண்டான 12-வது வாரத்திற்குப் பின்-20-வது வாரத்துக்குள் என்றால், கருச்சிதைவு அவசியம் என்பது குறித்து இரண்டு மருத்துவர்கள் சான்றிதழ் வழங்க வேண்டும். இக்காலத்தில் கருப்பையைச் சுத்தம் செய்ய அதனுள் மருந்து செலுத்த வேண்டியது அவசியமாகும். இப்போது கருச்சிதைவு செய்து கொள்வது என்பது, கரு உண்டாகி 12-வது வாரத்துக்கு முன் கருச்சிதைவு செய்து கொள்வதைவிட ஆறு மடங்கு கடினமானதாகும். இருந்தாலும் ஒரு குழந்தை பிறப்பதைவிடப் பாதுகாப்பானது.

அரசு அனுமதித்துள்ள மருத்துவமனையில் இருக்கும் பயிற்சி பெற்ற மருத்துவர், பெண்ணின் சம்மதத்துடன் கருச்சிதைவு செய்யலாம். கணவன் ஒப்புதல் அளிக்க வேண்டுமென்பதில்லை. கருச்சிதைவுக்குள்ளாகும் பெண் வயதுக்கு வராதவராகவோ, பைத்தியம்பிடித்தவராகவோ, அறிவுத் திறன் அற்றவர்களாகவோ இருந்தால் பெற்றோர் அல்லது பாதுகாப்பாளரின் ஒப்பம் அவசியம்.

விரும்பாத நேரத்திலோ அல்லது கைக்குழந்தை தாய்ப் பால் குடித்துக் கொண்டிருக்கும் போதோ ஏற்படும் 'கரு' உயிர் உண்டாவதற்கு முன்பே கருச்சிதைவினால் கலைக்கப்படுகிறது. இதனால் தாயின் உடல் நலமும், அவர் கையிலுள்ள சேயின் நலமும் காக்கப்பட்டு, தாயின் முழு அன்பும் அந்தக் குழந்தைக்குக் கிடைக்கச் செய்கிறது.

வேண்டாத நேரத்தில் உண்டான விரும்பத்தகாதக் கருவைக் கலைக்க ஒரு பெண் விரும்பும்போது, குடும்ப நலத் திட்டத்தின் அவசியத்தை முழுமையாக உணருகின்றார். அந்த நேரத்தைப் போல வேறு எந்த நேரத்திலும் அவ குடும்பநலத் திட்டத்தின் அவசியத்தை அவ்வளவு முழுமையாக அவர் உணருவதில்லை. அந்தத் தாய் இரண்டு குழந்தைகளையுடையவராக இருந்தால் மிகுந்த விருப்பத்துடன் பெண் ஒப்புதல் அளித்து அறுவைச் சிகிச்சை செய்து கொள்வார். போதிய குழந்தைகள் இல்லையென்றால் கருச்சிதைவுக்குப் பின், கருத்தடை வளையம் (லூப்) பொருத்திக் கொள்ளுமாறு எடுத்துச் சொல்லி ஏற்கச் செய்யலாம். திரும்பத் திரும்ப கருச்சிதைவு செய்து கொள்வது என்பது பாதுகாப்பானதல்ல.

கருச்சிதைவு செய்து கொள்பவர்கள் குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள வேண்டுமென வற்புறுத்தக் கூடாது. சட்டப்படி அது அவர்களது விருப்பத்தைப் பொறுத்தது.

1972-73 ஆம் ஆண்டு முதல் 1975-76 ஆகஸ்டு வரை 30,110 தாய்மார்கள் தமிழகத்தில் கருச்சிதைவு செய்து கொண்டுள்ளார்கள். இவர்களில் 22,342 பேர்கள் கருச்சிதைவுடன் பெண் அறுவைச் சிகிச்சையும் செய்து கொண்டுள்ளார்கள். தாய்மார்கள் இலவசமாகவும், பாதுகாப்புடனும், பயிற்சியும் அனுபவமும் பெற்ற மருத்துவர்களிடம் கருச்சிதைவு செய்து கொள்ள அரசு அனுமதி பெற்ற மருத்துவமனைகளையே நாடவேண்டும்.

# இந்தியாவிலேயே சீரான சாலைகள் தமிழ்நாட்டில்தான் அதிகம்

இந்தியா எங்கே உள்ளது என்றால் அதனுடைய கிராமங்களிலேதான் உள்ளது எனலாம். பெரும்பான்மை மக்கள் கிராமங்களிலே வசிக்கிறார்கள். என்பதனாலே மட்டுமல்ல. இந்தியாவைப் பிணித்துள்ள அத்தனை நோய்களும் கிராமங்களைப் பிடித்துள்ளது என்பதால்.

வறுமை
அறியாமை
தீண்டாமை
உறையுளின்மை
குடிநீரின்மை
நலமின்மை
வேலையின்மை
போக்குவரத்து
வசதியின்மை
மக்கள் தொகைப் பெருக்கம்
மின்வசதியின்மை

போன்ற பல சமுதாயப் பொருளாதார நெருக்கடிகள் தாக்குவது கிராமங்களையே. ஆகவே நாட்டின் வளர்ச்சி, கிராமங்களின் வளர்ச்சியைப் பொறுத்ததே. கிராமங்கள் வளர்ந்தால் நாடு வளரும். ஊர்மக்கள் முன்னேறினால், நாடு முன்னேறும். ஊர் முன்னேற்றம் தினையளவு எனில், நாடு முன்னேற்றம் பனையளவினதாகும். இவை குறித்தே கூறினார் பேரறிஞர் அண்ணா:

''சிற்றூர்கள் பெற்றிடும் வளர்ச்சியே சமுதாய மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையாகும். நாட்டின் நல்வாழ்வு எழுச்சிக்கும் அஃதே அடையாளமாகும்''.

நந்தமிழ்நாட்டில் 58,595 பேரூர்களும் சிற்றூர்களும் உள்ளன. தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் பெரும்பாங்கினர், 100-க்கு 70 பேர் ஊர்ப்புறங்களிலேயே உள்ளனர். 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி 4 கோடியே 12 இலட்சம் பேரில், 2 கோடியே 87 இலட்சம் பேர் கிராமங்களில் வாழ்கின்றனர். 1961-ஆம் ஆண்டு கணக்கெடுப்போடு ஒப்பிடும்பொழுது, மற்றொரு உண்மையும் புலனாகிறது. மக்கள்தொகை பெருகப் பெருக, அப்பெருக்கத்தினில் பாதியளவு நகரங்களுக்குச் சென்று குடியேறுகிறது. பெருநகரங்களிலும் மாநகரங்களிலும் குடிசை வாழ்வோர் தொகை அதிகரிப்பதும், அவர்கள் வாழ்விற்கென பெருந்தொகை செலவிடப்படுவதும், கிராமங்கள் வளராததாலேயே என்பதையும் உணரலாம். நமது நகரங்கள் நரகங்களாக ஆகாமல் தடுக்கவேண்டுமானால் கிராமங்களின் வளர்ச்சி விகிதம் கூடுதலாக்கப்படுவதன் மூலமே முடியும். ஆகவே கிராமங்களின் வளர்ச்சி நாட்டின் மொத்த வளர்ச்சி.

தமிழக அரசு இதை நன்குணர்ந்துசெயல்பட்டுவருகிறது. சமுதாய வளர்ச்சித் திட்டம் 1952-ஆம் ஆண்டு அக்டோபர் 2-ந் தேதி காந்தி அடிகள் பிறந்த நாளன்று, தொடங்கப் பெற்றது. 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் தமிழ்நாடு சட்டம் செயலுக்கு வந்தது. அதன்படி, இன்று தமிழ்நாட்டில் 12,632 ஊராட்சிகள், 591 பேரூராட்சிகள், 12 நகரியங்கள் அடங்கிய 374 ஊராட்சி ஒன்றியங்கள், ஊர் வளர்ச்சிக்குப் பாடுபடும் ஒப்பற்ற அமைப்புகளாக இயங்கி வருகின்றன. கிராமப்புறங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், வளர்ச்சிப் பணியில் அம்மக்களை ஈடுபடுத்துவதற்கும் அரசின் திட்டங்களை வட்டார அளவில் நிறைவேற்றுவதற்கும் பாடுபட்டு வருகின்றன.

மேலும் இவை மக்களாட்சி மலர்வதற்கு உண்மையான அடிப்படைகளாக இயங்குகின்றன. கிராம அளவில் ஊராட்சி மன்றமும், வட்டார அளவில் ஊராட்சி ஒன்றியமும், மாவட்ட அளவில் மாவட்ட வளர்ச்சி மன்றமும், மாநில அளவில் மாநில அரசும், சட்டமன்றமும், நாட்டளவில் இந்திய அரசும் பாராளுமன்றமும் என கீழிருந்து மேலாக மக்களாட்சி முறையான அமைப்புகள் வலுப்பெற, வளர இவை பேருதவி புரிகின்றன. பொதுத் தொண்டாற்றுவோருக்கும், பொறுப்பு வகிப்போருக்கும் இவை சிறந்த மக்களாட்சி பயிற்சிக் கூடங்கள் எனின் மிகையாகாது.

இவ்வமைப்புகள் மூலம் கிராமங்கள் பெற்றுள்ள பயன்கள் மகத்தானவை. குறிப்பாக மின்வசதி, குடிநீர் வசதி, சாலை வசதி, பள்ளிக்கூட வசதி என அடிப்படைத் தேவைகளை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளலாம். தமிழகத்தின் அனைத்துக் கிராமங்களிலும் மின்சார வசதி ஏற்கெனவே அளிக்கப்பட்டு விட்டது. வேளாண்மைக்கு, வீதிக்கு, வீட்டுக்கு என அனைத்துக்கும் பயன்படுவது மின்சாரம். இவ்வசதியைத் தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் தந்து, ஊர்களை நாகரிக நகரங்களாக்கிய பெருமை நமக்கே உண்டு.

நோயற்ற வாழ்வே குறை



அமைச்சர் இராமச்சந்திரன்

வருமுன்னர்க் காப்பது நல்லது. நோய்களுக்குக் காரணம், நல்ல பாதுகாக்கப்பட்ட குடிநீரின்மை. இக்குறை போக்கிட தீவிர முயற்சிகள் அண்மைக் காலமாக மேற்கொள்ளப் பட்டுள்ளன. 1967-ஆம் ஆண்டில் 47,900 குடிநீர்க் கிணறுகளும் 2,240 மேல்நிலைக் குடிநீர்த் தொட்டிகள் மட்டுமே இருந்தன. ஆனல் 1974- ஆம் ஆண்டு இறுதிவரை 75,210 குடிநீர்க் கிணறுகளும், 6,380 மேல்நிலை நீர்த்தொட்டிகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதனுல் பயன்பெறும் மக்கள் தொகையினர் சுமார் 22 இலட்சம் பேர். குடிநீர் வாரியமும், ஊராட்சி ஒன்றியங்களும் இப்பெரும் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, இடைவிடாது செயல்பட்டு வருகின்றன.

அனைத்து ஊர்களுக்கும் தார்சாலை அமைத்திடுவது நமது நோக்கம். ஆனல் நிதிப் பற்ருக்குறை காரணமாக இவற்றை, படிப்படியாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. இருப்பினும் இன்று தமிழகத்தில் 1015 கிலோ மீட்டர் நீளத்திற்கு, குறிப்பாக நீலகிரி மாவட்டத்தில் தார்சாலை போடப்பட்டுள்ளது. இந்திய நாட்டிலேயே மிக அதிகமான மேற்பரப்பு சீராக்கப்பட்ட சாலைகள் தமிழ்நாட்டில்தான் உள்ளன. மேலும் தற்போது எவ்விதச் சாலைகளாலுமே இணைக்கப்படாத ஊர்களுக்குச் சீரான பருவ நிலைக்கேற்ற சரளைக்கற்களாலான சாலைகள் அமைக்கும் புதிய திட்டம் துவங்கப்பட்டுள்ளது. இவ்வசதியைத் துரிதப்படுத்தும் முயற்சிகள் தொடருகின்றன.

தமிழகத்தில் 22,587 ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் உள்ளன. பள்ளிகள் இல்லாத கிராமங்கள் இல்லை எனலாம். அந்த அளவுக்கு ஊர்தோறும் பள்ளிகள் இயங்கிவருகின்றன. குறைந்த அளவு ஒரு மைல் தூரம் இருந்தால் அவ்வூரில் பள்ளிகள் அமைக்கப்படுகின்றன. ஆயினும் இவைகள் அனைத்தும் நல்ல கட்டடங்களில் அமையப் பெறவில்லை. 22,587 பள்ளிகளில் 17,271 பள்ளிகள் மட்டுமே நல்ல கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இக்குறை போக்கிடுவது அவசியம். 1975-76-ஆம் ஆண்டில் மட்டும் இதற்கென ரூ. 50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

எலலா ஊர்களிலும் பள்ளிகள் அவைகளும் நல்ல கட்டடத்தில் அமையவேண்டும் என்ற குறிக்கோளுடனேயே ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் செயல்பட்டு வருகின்றன.

எல்லாருக்கும் மருத்துவ வசதி அளித்திடுவது என்பது எளிதான காரியமன்று. இருப்பினும், வட்டார அளவில் குறைந்த அளவு மருத்துவ வசதியாவது அளித்திடுவது நம் கடன். தடுப்புச்சிகிச்சை அளித்திடவும் நோய்ச்சிகிச்சை தந்திடவும் தமிழகத்தில் 381 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அமைந்துள்ளன. இவை தவிர, ஊராட்சி ஒன்றியப்பகுதிகளில் 2,785 தாய் சேய் நல நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன.

மேலும் ஒரு முக்கியப் பணி, கிராமப்புறங்களில் தேவைப்படும் பணி, மக்கட்தொகைக் கட்டுப்பாடு. இதில் சிறப்பிடத்தைத் தமிழகம் வகித்து வருகிறது. இத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவது ஊராட்சி ஒன்றியங்களின் கடமையாகும். திருத்தப்பட்ட குடும்ப நல வேலைத் திட்டத்தில், தமிழகத்தில் 374 ஒன்றியங்களும் கொண்டு வரப்பட்டுள்ளன.

1979-ஆம் ஆண்டில் பிறப்பு விகிதத்தை 1000-க்கு 25 ஆக குறைப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

நாட்டு நடப்புகளை ... டங்களையும் அவ்வப்போது மக்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். திட்டங்களைப் புரிந்து கொள்ளவும் செயல்படவும் இது பெரிதும் துணை செய்யும். ஆகவே வானொலி, தொலைக் காட்சி வசதிகள் கிராமங்களுக்குச் செய்து தருவது முக்கியம். தற்போது சுமார் 40,500 வானொலிப் பெட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. 13,600 கிராம வானொலி மன்றங்களும் உள்ளன. இவற்றை ஊக்குவிப்பதற்கென ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட அளவில் சிறந்த வானொலி மன்றத்திற்கும், மாநில அளவில் சிறந்த வானொலி மன்றத்திற்கும் நூல்களும் சுழற்கேடயமும், பரிசாக அளிக்கப்படுகின்றன.

1975-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15-ம் நாள் முதல் சென்னையில் இயங்கிவரும் தொலைக்காட்சி நிலையத்தின் மூலம் 15 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள ஊர்ப்புறங்களில் தொலைக்காட்சி அமைக்க இயலும். 1976-ஆம் ஆண்டு பொங்கல் விழாவிற்குப் பிறகு, இந்நிலையம் 80 கிலோ மீட்டர் தொலைவு வரை ஒலி, ஒளி பரப்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது செங்கற்பட்டு மாவட்டத்தில் 33 ஊராட்சி ஒன்றியங்களிலும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் 2 ஊராட்சி ஒன்றியங்களிலும் உள்ள மக்கள், இத்தொலைக்




காட்சியைக் காணும் வாய்ப்பு பெறுவர்.

ஏழ்மையின் அடித்தட்டில் என்றும் உழல்வது கிராமப் புறங்களில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களேயாவர். திண்டாமை, வறுமை, அறியாமை ஆகிய மூன்று பெரும் பிணிகள் இம்மக்களைப் பிடித்துள்ளன. தமிழகத்தின் மக்கள் தொகையில் 1971-ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்குப்படி, தாழ்த்தப்பட்டோர் தொகை 76 இலட்சம் பேர். இவர்கள் நிலை உயர்ந்திட, பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றுள் சிறப்பு மிக்கது, இவர்களுக்கென தாழ்த்தப்பட்டோர் நல வீட்டு வசதிக் கழகம் கட்டித்தரும் வீடுகளேயாகும். கிராமங்களில் இதுவரை அரசாங்கம் கட்டும் பொதுக் கட்டடங்களே சுற்கட்டடங்களாகக் காட்சியளித்தன. ஆனல் இன்று ஊர்ப்பகுதியில் தாழ்த்தப்பட்டோருக்கென அமையும் அழகிய வீடுகள் கண் குளிரும் காட்சிகளாகும். ஊரையும் மிஞ்சும் நவீன நகரங்கள்போல் இன்று தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகள் அமைந்துள்ளன. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 11,936 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1975-ஆம் ஆண்டு முடிவிற்குள் 30,000 வீடுகள் கட்டுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

மின் வசதி
குடிநீர் வசதி
சாலை வசதி
பள்ளிக்கூட வசதி
மருத்துவ வசதி
வானொலி வசதி
தொலைக்காட்சி வசதி
வீட்டு வசதி

போன்ற இவைகளெல்லாம், ஊர்மக்களுக்குத் தேவையான பொது வசதிகள். ஆனல் வசதிகள் மட்டுமே போதாது. வசதிகளைப் போல வாழ்வும் முக்கியம். கிராமப் புறத்து மக்கள் வாழ்வதற்கு வகை செய்வது வேளாண்மையும் வேளாண்மை சம்பந்தப்பட்ட தொழில்களுமேயாம்.

இவ்வேளாண்மைத் தொழிலில் முன்னேற்றம் இருப்பினும் எதிர்பார்த்த அளவு முன்னேற்றம் ஏற்படவில்லை. ''உழுபவனுக்கே நிலம் சொந்தம்'' என்ற அறிஞர் அண்ணா அவர்களின் கொள்கை இன்னும் வெற்றி பெறவில்லை. இன்னும சிறு நிலச் சொந்தக்காரர்கள், பெரு நிலப்பிரபுக்கள் என மூவகையினரும் உள்ளனர். நிலப்பிரபுத்துவத்தைப்போக்க எடுத்த நடவடிக்கைகள் பயனளிக்கவில்லை. இன்னும் தீவிரமாக்கப்பட வேண்டும் என்பதே, இந்தியப் பிரதமரின் இருபது அம்ச பொருளாதாரத் திட்டமுமாகும்.

இந்தியாவில் ஏழ்மையிருப்பது பெரும்பங்கு கிராமப் புறங்களில். அதில் நூற்றுக்கு நூறு அங்கம் வகிப்பது. வேளாண்மைத் தொழிலாளர்கள். ஏழ்மையை ஒழித்திட இருக்கும் ஒரே வழி, வேளாண்மைத் தொழிலாளர்கள் வாழ்வதன் மூலமே. நிலமற்றோராய், இருக்க இடமற்றோராய், ஏழைகளாய், இருக்கும் இப்பெருந்தொகையினர் ஊக்கம் பெறுவதிலே தான் நமது முன்னேற்றம்.

நில உச்சவரம்புச் சட்டம்
குடியிருப்பு மனைச் சட்டம்
பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம்
கடன் நிவாரணச் சட்டம்
குறைந்த அளவு ஊதியச் சட்டம்

போன்றவைகள், பெரிதும் குறை போக்குவதற்கே.

மேலும் ''உழுவோருக்கு நிலம் உடைமையாக வேண்டும்'' என்ற குறிக்கோளோடு, சாகுபடி செய்யும் குத்தகைதாரர்கள் (நிலச் சொந்தக்காரரின் உரிமைகளை வாங்குவதற்கான உரிமைகள் பற்றிய) சட்டவரைவு (Tamil Nadu Cultivating Tenants Rights to purchase Land Owners Rights Bill) ஒன்று உருவாகி, அது தமிழ்நாடு சட்டமன்றங்களின் கூட்டுத் தேர்வுக் குழுவில் (Joint Select Committee) ஆய்வில் இருந்து வருகிறது.

தான் உழும் நிலம் தனக்கு என்றால்தான், அக்கறை மிகும்; உற்பத்தி பெருகும்; உணவுப் பற்றுக்குறை நீங்கும். நேரடித் தொடர்பற்ற நிலப்பிரபுத்துவத்தை நீக்கி, ''உழுபவனுக்கே நிலம் சொந்தம்'' எனும் இவ்வரிய திட்டத்தை நோக்கி, செயல்படச் சூளுரை மேற்கொள்வதே ஊரக வளர்ச்சித் திட்ட விழாவின் முக்கிய குறிக்கோளாகும்.''

[ஊரக வளர்ச்சித்திட்ட வார விழாவின் தொடர்பாக 6-10-1975-ஆம் நாளன்று வானொலியில் ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை அமைச்சர் சு. இராமச்சந்திரன் ஆற்றிய உரை]

## நவீன அச்சு இயந்திரம்

இது என்ன நவீன டைப்ரைட்டரா? இல்லை.

'இந்துஸ்தான் மெஷின் டூல்' நிறுவனம் தற்பொழுது தானியங்கி அச்சு இயந்திரம் ஒன்றினைத் தயாரித்துள்ளது. அதுதான் இது. 'சூப்பர் ஏஜிரியா' என்னும் பெயர் கொண்ட இந்த இயந்திரம் இத்தாலிய நிறுவனம் ஒன்றின் கூட்டுடன் தயாரிக்கப் பெற்றதாகும்.

ஏனைய நிறுவனங்கள் தயாரிக்கும் அச்சு இயந்திரங்களை விட இது அதிக விலை கொண்டிருந்தாலும் தரம் மிகுந்ததாகவும், அதிக வேகமுள்ளதாகவும் அமைந்துள்ளது.

இது சிங்கிள் டெமி அளவு கொண்டது. இயந்திர இயக்க மிகுதிறன் வாய்ந்தது. பல்வேறு வகையான காகிதங்களில் சிறந்த முறையில் பல வண்ணங்களில் அச்சிடலாம். பெரும்பாலும் உள்நாட்டு உறுப்புகளைக் கொண்டே இது தயாரிக்கப்பட்டுள்ளது.

மதுரை அரசினர் அச்சகத்திற்கு 4 ஆஃப் செட் அச்சு இயந்திரங்களையும் இந்நிறுவனம் வழங்கியுள்ளது.

மணிக்கு 5,000 பிரதிகள் அச்சடிக்கும் திறன் கொண்ட இவ்வியந்திரத்தின் விலை ரூ. 1,91,500. டிசம்பருக்குள் வாங்குவதாக இருந்தால் இதன்விலை ரூ. 31,500 குறைவாக இருக்கும். இந்த இயந்திரத்திற்கான உதிரிப்பாகங்கள் சென்னை அலுவலகத்திலேயே கிடைக்கும். இயந்திரம் பழுதுபட்டுவிட்டால், உடனே அதனைச் சரி செய்வதற்கென இருவர் அமர்த்தப்பட்டுள்ளனர்.

கச்சிதமான, அழகிய வடிவமைப்புக் கொண்ட இவ்வியந்திரம் மேல்நாட்டுத் தரத்துக்கு இணையானது.






மேக்கிரி மங்கலத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள திருமண மண்டபத்தை முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

# படமும் செய்தியும்



காஞ்சிபுரத்தில் கட்டப்பட்டுள்ள கலைஞர் கருணாநிதி விளையாட்டு அரங்கத்தைக் கல்வி சுற்றுலாத் துறை அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் 16.10.75 அன்று ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

சென்னை மாநகர் மக்கள் சார்பில், சென்னை நகர ஷெரீப் அவர்களால் ராஜாஜி மண்டபத்தில் முன்னாள் முதல்வர் திரு. கு. காமராஜ் அவர்கள் மறைவுக்கு இரங்கல் கூட்டம் நடத்தப்பட்டது. (17.10.75)





திருவிடை மருதூரில் 20.10.75 அன்று முதல்வர் கலைஞர் அவர்களால் மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி திறந்து வைக்கப்பட்டது.

ஆடுதுறையில் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை அலுவலகம் 20.10.75 அன்று முதல்வர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.





சென்னை மாநகர் மக்கள் சார்பில், சென்னை நகர ஷெரீப் அவர்களால் ராஜாஜி மண்டபத்தில் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் மறைவுக்கு இரங்கல் கூட்டம் நடத்தப்பட்டது. (16.10.75)











தஞ்சாவூர் மாவட்டம் மேக்கிரி மங்கலத்தில் அரிசன வீட்டு வசதிக் கழகத்தின் சார்பில் கட்டப் பட்ட குடியிருப்புகளை முதல்வர் கலைஞர் திறந்து வைத்தார்.

ரூபாய் 55 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள மதுரை மாநகராட்சியின் அலுவலகக் கட்டடமான 'அறிஞர் அண்ணா' மாளிகையை முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள். (21.10.75)





தமிழ்நாடு கல்வி அறக் கட்டளையின் திறமைமிகு ஏழை மாணவர் இல்லமான ரோட்டரி கட்டடத்திற்கான கால்கோள் விழா 16.10.75 அன்று வேலூரில் நடைபெற்றது.

# படமும் செய்தியும்








# பூம்புகார் கலைக்கூடம் காண வாரீர்!

- கல்லெல்லாம் கதை சொல்லும் சிலப்பதிகாரக் காட்சிகள்!
- புதையுண்ட பூம்புகார் புது வடிவம் பூண்டுள்ளது!
- சிந்தைக்கும் கண்ணுக்கும் தெவிட்டாத தமிழ் விருந்து!
- மனதைக் கவரும் மாதவியின் அழகுச் சிலை.

**இவற்றைக் காண பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடத்திற்கு வருகை தாரீர்!**

பூம்புகார் கலைக்கூடம், சீர்காழியிலிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவிலும், மாயவரத்திலிருந்து 29 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது.

இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை, சென்னை-600009







ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.



## வெற்றியை நோக்க்....!

க்குநான்
முடைய வாழ்க்கைக்கு
சு அளிக்கும்
துகாப்புகள் ஏராளம்

அலுவலர்களுக்கு
பப் பாதுகாப்புத் திட்டம்
னத் தொடர்ந்து
நாயத்திலுள்ள அனைவரும்
டையும் வகையில்
கப் பாதுகாப்புத் திட்டம் !

படி அளிக்கப்படும்
துகாப்புகளைப் போன்று
க்கு நாமே
ருவாக்கிக் கொள்ளும்
துகாப்புத் திட்டம்
டும்பநலத் திட்டம் !

லாரும்
புற்றிருக்கச்
ல்படுத்தும்
டங்கள்
றி பெற்றிட
மிக்க
தளம் அமைய

வுவதே
ான குடும்பம்.



# தமிழரசு

## நேருவுக்குப் பிடித்த பாடல் !

"கடமை பெரிது; உழைப்புத்தான் உண்மையான செல்வத்தைப் படைக்கும்" என்று கூறி இறுதிவரை கடமையாற்றிய நேரு, தமக்குப் பிடித்தமான பாடல் ஒன்றைத் தம் கைப்படவே எழுதி வைத்திருந்தார். அமெரிக்கக் கவிஞர் ராபர்ட் ஃப்ராஸ்ட் எழுதிய அந்த ஆங்கிலக் கவிதை இதோ!

*The Woods are lovely, dark and deep*
*But I have Promises to Keep,*
*And miles to go before I Sleep*
*And miles to go before I Sleep.*

மேற்குறித்த பாடலின் தமிழாக்கம் :

அடர்ந்த காடுகள்-அழகிய காடுகள்
அவை என்னைக் கவர்கின்றன !
ஆனால், கடமைகள்-எனது கடமைகள்
அவை என்னை அழைக்கின்றன !
போகிறேன் நான் போகிறேன் !-இனிப்
போகவேண்டியது நெடுந்தூரம் !-இனிப்
போகவேண்டியது நெடுந்தூரம்.


மலர் 6 இதழ் 10

16-11-1975




# நிதி நெருக்கடியிலும் நாம் அளிக்கும் சலுகைகள் ஏராளம்!



துணை மானியக் கோரிக்கையில் சுமார் நாற்பத்தைந்து கோடி ரூபாய்க்கு இந்த மன்றத்தின் ஒப்புதல் கேட்டு—அதிலே பத்து கோடி ரூபாய் எதிர்பாராத செலவுகளுக்காக என்ற வகையில் ஒதுக்கப்படுவது போக, 35.55 கோடி ரூபாய்க்கான விவரங்கள் இந்த மதிப்பீட்டு அறிக்கையில் விரிவாக எடுத்துவைக்கப் பட்டிருக்கின்றன.

இந்தத் தொகை மிக முக்கியமான பணிகளுக்காக—வறட்சிக் காலத்தில் பாதிக்கப்பட்ட ஏழை எளிய விவசாயிகளுக்காக — சமுதாய நலத் திட்டங்களுக்காக —தாழ்த்தப்பட்டவர்களுக்கு மிக முக்கியமாகத் தேவைப்படுகிற வீட்டுவசதி பலஆண்டுக்காலமாக நினைத்துக் கூடப்பார்க்கப்படாமல் இருந்து இரண்டாண்டுகளுக்கு முன்னால் தான் இதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு, அரிசனங்களுக்காகத் தனியாக வீட்டு வசதி வாரியம் அமைக்கப்பட்டு அதற்காக எல்லாம் தொகைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

''மத்திய அரசு தருகின்ற வறட்சி நிவாரணத் தொகையை திட்டத் தொகையிலிருந்து கழித்துக் கொள்ளக் கூடாது ; அப்படித்திட்டத் தொகையில் கழித்துக் கொண்டால், வறட்சிப் பணி என்கிற பெயரால் திட்டங்கள் நிறைவேற முடியாது ; அப்படிப்பட்ட ஒரு இக்கட்டான நிலை அரசுக்கு ஏற்பட்டு விடும். ஆகவே திட்டத் தொகையில் கழித்துக் கொள்ளாமல் கொடுத்தால் நாங்கள் வாங்கிக் கொள்கிறோம்'' என்று சொன்னேன். அதைத்தான் இன்றளவும் வலியுறுத்தி வருகின்றோம். அண்மையில் டெல்லியில் பிரதமரைச் சந்தித்த போதும், சென்னைக்கு அவர்கள் வந்திருந்த போதும் இதைத்தான்சொன்னேன். ஆனால் அவர்கள் அப்படி எதுவும் வறட்சி நிவாரணத்திற்காகத் தர இயலாது என்று கூறிவிட்டார்கள்.

கொடுத்தத் தொகை ஏழு கோடி ரூபாய். அதிலும் எழுபது சதவிகிதம் கடன்; முப்பது சதவிகிதம்தான் மானியம். நமக்கு வறட்சிப் பணிகளுக்காக ஆகியிருக்கிற செலவு ரூ. 58.8 கோடி ரூபாய்.

1974—75-ல் திட்டத்திற்கு அப்பாற்பட்ட சிறப்புச் செலவாக 8.8 கோடி ரூபாய்; திட்டச் செலவாக 10 கோடி. ஆக 18.8 கோடி ரூபாய் 1974—75-இல் செலவழிக்கப்பட்டது.

1975—76-இல் பணிகளுக்காக 15.8 கோடி; தக்காவி கடன்களுக்காக 3 கோடி; 'டீசல் சப்சிடி' டீசல் இயந்திரங்களுக்கு மானிய உதவி 1.2 கோடி. ஆக 28.8 கோடி ரூபாய். 1974 முதல் 1975—76 வரையில் திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவாக ஆகியிருக்கிறது. திட்டச் செலவாக 1975—76-இல் 20 கோடி; ஆக மொத்தம் 30 கோடி. இரண்டையும் கூட்டினால் 58.8 கோடி ரூபாய்.

இந்த 58.8 கோடி ரூபாய் அன்னியில்தான் பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு — வறட்சியின் காரணமாக—அவர்கள் சில வரிகளை வசூலிக்க வேண்டாமென்று நாம் கூறியதற்கேற்ப அவர்களுடைய இழப்பை ஈடுகட்டுவதற்கு, இவைகளுக்கு மேலாக ஆறு கோடி ரூபாய்; அவைகளுக்கு வழங்கயிருப்பதை நாம் மறந்து விடக் கூடாது.

நிலவரி வஜா, கடன் ஒத்தி வைப்பு ஆகிய வகைகளில் பத்துக் கோடி ரூபாய் மேலும் இந்த அரசுக்குச்செலவாகியிருக்கிறது.

நகரங்களில் குடிநீர் வசதித் திட்டங்களை ஏற்பாடு செய்து தர சுமார் மூன்று கோடி ரூபாய் செலவாகி இருக்கிறது.

நீங்கள் முப்பது கோடி ரூபாய் திட்டச்செலவுகளைத்தானே செய்தீர்கள்? என்ற வாதம் இங்கே எழுப்பப்பட்டது. திட்டச்செலவு என்றாலும்கூட திட்டமிடப்பட்ட இடங்களிலே இருந்து திசை திருப்பப்பட்டு வறட்சியால் பாதிக்கப் பட்ட இடங்களுக்கு அந்தச் செலவுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இது ஒரு கட்டம்; அடுத்த கட்டம், திட்டச் செலவு என்றால் அதற்கென்று ஒரு கால வரையறை வகுத்து, இப்போது தொடங்கி, இப்போது முடிய வேண்டும் என்று இருக்கும். அப்படிப்பட்ட காலவரையறையைக் காமல், இந்த வறட்சிக் காலத்திலேயே இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணமெல்லாம் வறட்சியால்பாதிக்கப்பட்டபகுதிகளுக்குச் செலவிடப்பட வேண்டும் என்று செலவு செய்திருக்கிறோம்.

இந்த முறையில்தான் திட்ட ஒதுக்கீட்டிலிருந்து 1974—75-ல் பத்து கோடி ரூபாயும், 1975—76-இல் இருபது கோடி ரூபாயும் நாம் வறட்சிப் பணிகளுக்காகச் செலவிட்டிருக்கிறோம். இந்தச் செலவினங்களையெல்லாம் நாம் சுட்டிக் காட்டித்தான் — நம்முடைய நிதி நிலைமையை உணர்ந்து, மத்திய அரசு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டோம்.

வறட்சிப் பணிகளுக்கு மாத்திரமல்ல; மது விலக்கின் காரணமாக இந்தியாவிலேயே பெரும் இழப்பிற்கு ஆளாகியிருக்கிற மாநிலங்கள் இரண்டு. ஒன்று குஜராத்; இன்னொன்று தமிழ்நாடு. இந்த மாநிலங்களுக்குப் பிரதமர் அண்மையில் அறிவித்த பன்னிரண்டு அம்சத்தோடு இன்னொரு அம்சத்தையும் சேர்த்து மதுவிலக்கை நடைமுறைப் படுத்துகின்ற மாநில அரசுகளுக்கு நஷ்டஈட்டுத் தொகை தரப்படும் என்று வருமா? இந்தப் பார்களேயானால் மற்ற மாநிலங்களையும் அது ஊக்கப்படுத்துவதாக அமையும் என்று நான் கேட்டுக் கொண்டேன்.

அதுபற்றி ஒரு அமைச்சரவைக் கூட்டம் டெல்லியில் நடைபெற இருக்கிறது என்பதை அறிந்து 'டெலக்ஸ்' மூலமாகப் பிரதமரை நான் கேட்டுக் கொண்டேன் ; தொடர்ந்து கடிதமும் அனுப்பினோம்; ஆனால் வந்திருக்கிற செய்தி, மதுவிலக்கிற்காக நஷ்டஈடு எதுவும் அதை அமல்படுத்துகின்ற மாநிலங்களுக்குத் தருவதற்கில்லை என்ற அளவில்தான் வந்திருக்கிறது. அது மிக மிக, வருந்தத் தக்க செய்தியாகும்.

ஏறத்தாழ 58 அல்லது 59 கோடி ரூபாய் மதுவிலக்கின் காரணமாக நாம் இழப்பிற்கு ஆளாகியிருக்கிறோம். குதிரைப் பந்தயத்தை ஒழித்ததிலும், பரிசுச் சீட்டை நிறுத்தியதின் மூலமாகவும் 5 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பிற்கு ஆளாகியிருக்கிறோம்.

ஆகவேதான் இந்த நல்ல காரியங்களை — காந்தியடிகளுடைய கொள்கைகளைப்பின்பற்றி நடத்துகின்ற இந்த அரசுக்கு உற்சாகம் அளிக்கின்ற அளவில் மத்திய அரசு நிதி உதவி தரவேண்டும் என்று நாம் கேட்டோம்.

ஜேம்ஸ் அவர்கள் நேசமணி பாலம் இன்னும் கட்டி முடியவில்லை என்ற குறைபாட்டை இங்கேசொன்னார். அந்தப் பாலத்திற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்ற போது, யாருடைய வேண்டுகோளும் இல்லாமல் இந்தப் பாலத்திற்கு நேசமணி அவர்களின் பெயர் வைக்கப்படும் என்று நானேதான் சொன்னேன். அதற்கு நன்றியெல்லாம் கூடத் தெரிவித்துக் கொண்டார்கள்.

அதனுடைய வேலை இன்னும் முடியாமல் இருப்பதற்குக் காரணம், நாம் தந்த மதிப்பீட்டின்படி டெண்டர் யாரும் கோரவில்லை; அதனால்தான் தாமதப்பட்டது; ஆகவே மறுபடியும் டெண்டர் விட வேண்டிய நிலைமை ஏற்பட்டு, இப்போது வேலைகள் தொடங்குகின்ற தருவாயில் இருக்கின்றன என்ற தகவலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜேம்ஸ் அவர்கள் இன்னொரு குறைபாட்டையும் சொன்னார். கன்னியாகுமரி மாவட்டத்தில் எல்லைப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பலருக்கு மாதாந்திர மானியம் தரப்படவில்லை என்று சொன்னார். எல்லைப் போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக, ஓய்வூதியம் பெறுபவர்களுடைய எண்ணிக்கை 51 பேராகும்; அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ள மனுக்களின் எண்ணிக்கை 56; அந்தப் பரிசீலனை முடிந்ததும் அவர்களுக்கும் வழங்கப்படும்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டதற்காகக் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 28 பேருக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இரண்டு பேர்களுடைய மனுக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன. தியாகிகள் ஓய்வூதியம் 37 பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இதில் ஆறு பேர் இறந்து விட்டார்கள் ; இப்போது 31 பேர் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் ; மேலும் இறந்த இரண்டு தியாகிகளின் மனைவிகளுக்குத் தியாகிகள் ஓய்வூதியம் வழங்கப் பட்டு வருகிறது.

தமிழ் நாட்டில் இந்திஎதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு மொத்தம்இதுவரை 1,376 பேர்களுக்கு ஓய்வூதியம் தரப்பட்டிருக்கிறது.

## முதல்வர் கலைஞர்

அரவாக்குறிச்சி சட்ட மன்ற உறுப்பினர் ஜபார் அவர்கள் தொகுதி ஏதோ அவருடைய போய்விட்டது. கேட்பாரற்று சொன்னார். என்றெல்லாம் சொல்லிக் கொண்டே வந்தவர், நொய்யல் திட்டத்தைப் பற்றி அவரே சொல்லி, அதற்கு இந்த அரசு ஏற்கனவே ஒப்புதல் வழங்கியிருப்பதையும் குறிப்பிட்டார். அவரே பேசும் போது, இதிலே இருக்கின்ற இடைஞ்சல்கள் என்னென்ன என்றும் சொன்னார். கர்நாடக மாநிலத்தோடு காவேரி பற்றிய பிரச்சினை இன்னும் தீராமல் இருக்கின்ற காரணத்தினால் உள்ள இடர்ப்பாடுகளை அவர் விளக்கினார். அந்த இடர்ப்பாடுகள் நீங்கிய பிறகு நிச்சயமாக நொய்யல் திட்டம் மேற்கொள்ளப்படும் என்பதை நான் அவருக்கு உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

போனஸ் பற்றியும், அதனால் இன்று இடர்ப்பாடுகளுக்கு ஆளாகியிருக்கிற தொழிலாளர்கள் பற்றியும் இங்கே சுட்டிக் காட்டப்பட்டது. நம்முடைய அரசைப் பொறுத்த வரையில் தொழிலாளர்கள் நன்மையில் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதும், சில ஆலைகள் மூடப்பட்டோ அல்லது வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்டோ தொழிலாளர்கள் கஷ்டப்படும் நேரத்தில் இந்தியாவிலேயே இந்த அரசு ஒன்றுதான் பாதிக்கப்பட்டிருக்கிற தொழிலாளர்களுக்கு நிவாரண நிதியை இலட்சக்கணக்கில் வழங்கிய அரசு ஆகும்.

அண்ணா காலத்தில் கோவை மில் தொழிலாளர்களுக்கு ஒரு இலட்ச ரூபாய்க்கு மேற்பட்ட தொகையை அவர்களுக்கு நிவாரணமாக வழங்கினார். அண்ணாவிற்குப் பிறகு இந்த அரசு கிட்டத்தட்ட ஐந்து இலட்ச ரூபாய் கோவையில் உள்ள ஆலைத் தொழிலாளர்களுக்கு நிவாரணத்திற்காக வேலை நிறுத்தத்தின் போதும், கதவடைப்பின்போதும் வழங்கியிருக்கிறது.

அண்மையில் கூட நான் கோவைக்குச் சென்றபோது 'மது நூற்பாலை'' மூடப்படுகின்ற நிலையில் இருப்பதை எடுத்துச் சொன்னார்கள். அங்கேயிருக்கிற 400 தொழிலாளர்கள் தீபாவளி நேரத்தில் கூட தங்களுடைய வீடுகளில் மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லை என்று சொன்னார்கள். அதையெல்லாம் கேட்டுக் கொண்டு, நான் சென்னைக்கு வந்ததும் எண்பதாயிரம் ரூபாய் நபர் ஒன்றுக்கு 200 ரூபாய் வீதம் தீபாவளிநேரத்தில் இந்த அரசின் சார்பில் கடனுதவி வழங்க உத்தரவிடப்பட்டு, அந்த எண்பதாயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.

**ஏ. சுப்பிரமணியம் :** அந்த ரூபாய் வழங்கியதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் இரண்டரை இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நூலை அரசாங்கத்தின் பேரில் ரூமில் போட்டு அடமானம் செய்து கொண்ட பிறகுதான் அந்தப் பணம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அந்த நூலை விற்று, அந்தப் பணத்தை அரசாங்கத்திற்குக் கட்ட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில்தான் தரப் பட்டிருக்கிறது.

**முதலமைச்சர் :** கடனைக் கொடுக்கும்போது ஒரு முதலாளியிடம் இந்தப் பிடி கூட வைத்துக் கொள்ளாமல் எப்படித்தான் கொடுப்பது, அந்த முதலாளி தொழிலாளர்களுக்கு இதைத் தர வேண்டும்; அப்படியிருக்கும் போது, ஆற்றில் போட்டாலும் அளந்து போட வேண்டும் என்பார்கள் ; ஆகவேதான் அளந்து போடப்பட்டிருக்கிறது.

**ஜேம்ஸ்** : இந்த அரசைப் பொறுத்த வரையில் போனஸ் சம்பந்தமாகத் தொழிலாளர்களுக்கு எல்லாம் செய்வதாகச் சொன்னார்கள். ஆனால் முதலாளிகள் இரண்டு கணக்குகளைக்காட்டி தொழிலாளர்களை ஏமாற்றுகிறார்கள். அதை தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**முதலமைச்சர்** : இந்தப் போனஸ் பிரச்சினை அவசரச் சட்டத்தினால் நெருக்கடி நிலையால் நமக்குக் கிடைத்த ஒரு 'நல்ல பரிசு' என்று தங்கமணி சரியாகச் சொன்னார். இதில் ஜேம்ஸ் அவர்கள் சொல்கிற பிரச்சினை இருக்குமானால், அதை அரசு ஆராய்ந்து ஏற்ற நடவடிக்கை எடுக்கும்.

அடுத்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த அரசு என்ன செய்தது என்ற கேள்வியை அடிக்கடி இங்கே கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக சத்தியவாணிமுத்து அம்மையார் இந்தக் கேள்வியை ஒவ்வொரு உரை நிகழ்த்துகின்ற நேரத்திலும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

1972-73-ஆம் ஆண்டில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகச் செய்யப்பட்ட மொத்தச் செலவு, 7.59 கோடி ரூபாய்; 1973—74-இல் 10.15 கோடி ரூபாய்; 1974—75-இல் 12.89 கோடி ரூபாய் ; 1975—76-இல் 18.88 கோடி ரூபாய் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இந்த அரசு செலவு செய்கிறது.

இந்தத் தொகையில் மத்திய அரசின் கடன் உதவி நமக்கு எவ்வளவு கிடைத்தது என்றால், 1972—73-இல் 39 இலட்சம் ; 1973—74-இல் 66 இலட்சம் ; 1974—75-இல் 52 இலட்சம் : 1975—76-இல் 50 இலட்சம் ரூபாய்.

ஏதோ தாழ்த்தப்பட்டவர்களை மறந்து விட்டு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத்தான் அள்ளி அள்ளிக்கொடுக்கிறது இந்த அரசு என்ற குற்றச்சாட்டிற்கு நான் சொல்ல விரும்புவது எல்லாம் —

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 1972—73-இல் 4.97 கோடி ரூபாய்; 1973—74-இல் 5.37 கோடி ரூபாய்; 1974—75-இல் 5.68 கோடி ரூபாய்; 1975—76-இல் 5.81 கோடி ரூபாய் என்ற வகையில்தான் நாம் உதவிகளைச் செய்து வருகிறோம்.

இந்தத் துணை மதிப்பீட்டின் ஆறாம் பக்கத்தில் நான் குறிப்பிட்

''தாழ்த்தப் பட்ட இந்துக்களுக்குத் தற்பொழுது வழங்கப்பட்டு வரும் எல்லாச் சலுகைகளையும் (எல்லாச் சலுகைகளையும் என்றால், ஏற்கனவே வழங்கப்பட்டு வருகின்ற சலுகைகளையும் சேர்த்து மிச்சமுள்ள எல்லாச் சலுகைகளையும்) கிறித்தவ மதத்திற்கு மாறியுள்ள தாழ்த்தப்பட்டவர்களுக்கும் நீட்டிப்பது என அரசு முடிவு செய்துள்ளது. கல்வி நிலையங்களில் சேர்த்துக் கொள்ளுதல், அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு ஆகியவற்றைப் பொறுத்த வரையில் கிறித்தவ மதத்திற்கு மாறிய தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இணையாகக் கருதப்படுவர். அவர்களுடைய சந்ததியினர் அந்தச் சலுகைகளுக்கு அருகதை அற்றவர்கள் என்று இதுவரை இருந்துவந்த நிலைமையை மாற்றி அவர்களின் சந்ததிகளும் பிற்படுத்தபட்ட வகுப்பினராகக் கருதப்படுவர் என்றுமுடிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்தச் சலுகைக்காகத்தேவைப்படும் நிதி இது வரையில் அரிசன நல மானியத்தில் ஒதுக்கியுள்ள தொகைக்குக் கூடுதலாக மேலும் ஒதுக்கப்படும்.

இந்தக் கருத்தை நான் இந்த மன்றத்தில் தெரிவித்தேன். அதன்படி இந்தக் கருத்தின் அடிப்படையில் சொல்ல வேண்டுமேயானால், கல்வி நிலையங்களில் ஒதுக்கப்படும் சலுகைகளும், அரசுத் துறையில் வேலை வாய்ப்புந் தருவதும் ஒரு தலைமுறைக்கு மட்டுமே தரப்பட்டு இருந்தது—74-ஆம் ஆண்டு ஆணைப்படி, அதாவது இந்த இரண்டு ஆண்டுச் சலுகைகளும் கிறித்தவ மதத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டவர்களுக்கு அவர்களை பிற்படுத்தப்பட்டவர்களாக கருதி பிற்படுத்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 31 சதவிகிதத்தில் சேர்த்து அளிக்கப்பட்டது.

ஆனால் 1975-ஆம் ஆண்டுஅரசு ஆணைப்படி இரண்டுசலுகைகளும் எல்லாத் தலைமுறைகளுக்கும் அவர்களுக்குப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு உள்ள விகிதாச்சாரத்தில் தரப்படுகிறது.

1974-ஆம் ஆண்டு அரசு ஆணையில்

''As regards the other concessions. They are eligible irrespective of generations''.

—என்று குறிப்பிட்டிருப்பது —

குடியிருப்புக்கு நிலம் தருதல், விவசாயத்திற்கு நிலம் கொடுத்தல், குடியிருப்புகளுக்குப் பாதை அமைத்தல், குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்குதல் ஆகியவை மாத்திரம்தான் இருந்தன.

ஏனைய பொருளாதார சலுகைகள் தரமுடியவில்லை. காரணம் அந்தச் சலுகைகள் மத்திய அரசு சட்டத்தின் கீழ் (Centrally Assisted Scheme) செயல்பட்டு வந்தது. ஆனால், 1975-ஆம் ஆண்டு அரசு ஆணையின்படி அந்தச் சலுகைகளையும் கிறித்துவ மதம் மாறிய தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தருவதாக முடிவுசெய்யப்பட்டுள்ளது. அதற்குள்ள நிதியை மாநில அரசு அளிக்கும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

1975-ஆம் ஆண்டு அரசு ஆணையின்படி கிடைக்கும் புதிய சலுகைகள் :

1. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுகள் முதலானவற்றுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம்.

2. வீடுகள் கட்டி ஒதுக்குவது.

3. பால் விநியோகக் கூட்டுறவுத் திட்டத்தின் கீழ் நிதியுதவி அளித்தல்.

4. வேளாண்மைக் கருவிகள் வாங்க, உழவு மாடுகள் வாங்க, பாசனக் கிணறுகள் தோண்ட கடன் மற்றும் மானியமாக — நிதியுதவி அளித்தல்.

5. கைக்குத்தலரிசி, கூடை முடைதல் போன்ற குடிசைத் தொழில்களுக்கு உதவுவது.

6. தொழில் நுட்பம் தெரிந்தோர்க்கு மானிய உதவி அளித்தல்.

7. சிறு வியாபாரம் செய்வதற்கான கடன்கள் வழங்குதல்.

—என்று இந்த ஏழு சலுகைகளும் எல்லா அரிசனங்களுக்கும் தரப்படுவதைப் போல கிறித்தவ அரிசனங்களுக்கும் தருவது என்று இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

[தமிழ்நாடு சட்டப் பேரவையில் துணை மானியக் கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளித்து 4—11—75 அன்று முதல்வர் கலைஞர் அவர்கள் [illegible] உரையிலிருந்து]

# பழமொழிகளில் பெண்கள்



எஸ். சண்முகசுந்தரம் எம்.ஏ.,

பழமொழிகள்-அனுபவ விதைகளின் அறுவடை மணிகள். கடந்த காலப் பண்பாட்டின் காலடிச் சுவடுகள். நிகழ்காலப் பழக்க வழக்கங்களின் நினைவுச் சின்னங்கள். எதிர்கால வாழ்வுக்கு-வளத்துக்கு எடுத்துக் காட்டுகள்.

அறிவுரைக்காகச் சில-அன்புரைக்காகச் சில-கிண்டலுக்காகச் சில-கேலிக்காகச் சில- எடுத்துக்காட்டுக்காகச் சில-எழுச்சிக்காகச் சில என்று பல மொழிகள் பழமொழிகளாக விளங்குகின்றன.

பழமொழிகளுக்குப் பழைய மொழிகள் என்றும் பொருள் கொள்ளலாம். பழையமொழிகள் எல்லாம் பழமொழிகள் இல்லை. பழையமொழிகள் மட்டுமே பழமொழிகள் என்பதும் இல்லை. ஏனெனில் இன்று தோன்றும் புதுமொழிகளும்-பொன்மொழிகளும் கூடப் பழமொழிகள் ஆவதுண்டு. பழமொழிகளுக்குப் பழம்போன்ற மொழிகள் என்றும் பொருள் கொள்ளலாம். பழம் என்பது இங்குச் சுவையைக் குறிக்கவில்லை. ஏனென்றால் இனிப்பு மட்டுமல்ல எரிப்பும் கசப்பும்கூடப்பழமொழிகளில் உண்டு. பழம்போன்ற மொழிகள் என்பதுஇங்குக்கனிவை முதிர்ச்சியைக் குறிக்கும்.

இப் பழமொழிகளில் பெண்கள் பெறும் இடத்தையும் இப்பழமொழிகள் பெண்களைப் பற்றி என்ன நினைக்கின்றன-எதை நினைவூட்டுகின்றன-எதை நீதியாக்குகின்றன என்பதையும் நாம் சிறிது காணலாம்.

**தாய்மை**

பெண்மையில் தாய்மையே சிறப்பைப் பெறுகின்றது. இறைவனால் எல்லா இடங்களிலும் இருக்க இயலாது என்பதற்காகவே தனக்குப் பதிலாகத் தாயைப் படைத்தான் என்பார்கள். ஒருமேனாட்டு அறிஞன் தாயின் காலடியில் சொர்க்கத்தைத் தேடியிருக்கிறான்.

இத் தாயைத் தமிழகப் பழமொழிகள் தெய்வமாகவே வரிக்கின்றன. 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பது பழமொழி. முதலில் அறிந்த தெய்வம் அன்னையும் பிதாவும்தான். இருவரிலும் முதல் தெய்வம் அன்னைதான். பிறந்ததும் பெற்றவள் முகத்தையே குழந்தை நோக்குகிறது. அவள்தான் அதற்குத் தந்தையை அறிமுகப்படுத்துகிறாள். தாய்மைக்கு ஈடாக எதுவுமில்லை-எங்குமில்லை. எனவேதான் 'பேயானாலும் தாய், நீரானாலும் மோர்' என்கிறது பழமொழி. மோர் எவ்வளவுதான் நீர்க்கலப்புள்ளதாக இருந்தாலும் அதை மோர் என்றுதான் அழைப்பர். அதுபோல் தாய் எவ்வளவு தான் கொடுமையானவளாக இருப்பினும் அவள் தாய்தான். தாய்க்குப் பணியாதவன் வேறு யாருக்கும் பணிய மாட்டான். இதையே, 'தாய்க்கு அடங்காதவன் ஊருக்கு அடங்கான்' என்கிறது பழமொழி. அதுபோல் தான், 'அன்னைக்கு உதவாதவன் ஆருக்கும் உதவான்' என்றும் பழமொழி கூறுகிறது.

தாயும் குருவும் ஒரே தரத்தினர். அரிச்சுவடி சொல்பவர் குரு என்றாலும் அதற்கு முன்பே தாய் தான் அறிந்த சுவடிகளை குழந்தைக்குச் சொல் மெயல்லாம் குழந்தைக்குச் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்து விடுகிறாள். ஒரு சிறந்த தாய் சிறந்த வாத்திச்சியாகவும் இருக்கிறாள். எனவே 'குருமொழி கேளாதவனும் தாய்வார்த்தை கேளாதவனும் பாழ்' என்று பழமொழி கூறுகின்றது. அதுமட்டுமல்ல 'தாய் வார்த்தை கேளாத பிள்ளை நாய் வாய்ச் சீலை' என்றும் கூறியது. நாயின் வாயில் அகப்பட்டச் சேலை கிழிபடுவதுபோன்று தாய் வார்த்தை கேளாதவனும் உலகில் கிழிபடுவான் என்பது உண்மை.

**பழமொழிகள் :**

'பெற்றமனம் பித்து பிள்ளை மனம் கல்லு' என்பது பழமொழி. பிள்ளைகள் எப்படி இருப்பினும் பெற்ற மனம் அவர்களுக்காகவே துடிக்கிறது. இன்னொரு பழமொழி 'தாய் மனம் பித்து தந்தைமனம் கல்லு' என்றும் கூறுகின்றது. தந்தையின் மனத்தைக் கல்லாக்குகிறது. பிள்ளை மனங்கள் கல்லாவதற்குச் சான்றாக இன்னொரு பழமொழி நிற்கிறது. 'ஒரு பிள்ளை பெற்றவளுக்கு உறியிலே சோறு; நாலுபிள்ளை பெற்றவளுக்கு நடுத்தெருவிலே சோறு' என்ற பழமொழி பல பிள்ளைகள் பெற்றும் பயன்காணாத தாயை நினைவூட்டுகிறது. பிள்ளைகளைக் குற்றம் சொல்லியும் பயனில்லை. அவர்கள் மனத்தைக் கல் என்பதும் தவறு. 'தாய் எப்படி இருப்பளோ அப்படி இருக்கும் குழந்தைகள்' என்று கூறி இன்னொரு பழமொழி முன்னைய மொழியை மறுக்கின்றது. 'தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை' என்று கூறும்போது உண்மை என்றே எண்ணத் தோன்றுகிறது. பெண் பிள்ளைகளுக்குத் தாய் இருக்கும் வரைதான் பிறந்தகத்தில் சிறப்புண்டு. தாய் போய்விட்டால் அங்கே அவர்களுக்கு மதிப்பில்லை மரியாதையில்லை. இதை 'தேரோட போச்சு திருநாள்; தாயோட போச்சு பிறந்தகம்' என்று பழமொழி விளக்குகிறது..

தாயையும் தாரத்தையும் சில பழமொழிகள் ஒப்பிட்டுப் பார்க்கின்றன. தாரம் எவ்வளவுதான் சிறப்பாகஅமைந்தாலும் தாய்க்கு பின் தாரம்' என்பது ஒரு பழமொழி. தாய்க்குப் பின்தான் தாரம். இதற்குக் காரணம் கூறுகிறது இன்னொரு பழமொழி. 'பெற்றவள் வயிற்றைப் பார்ப்பாள்; பெண்சாதி மடியைப் பார்ப்பாள்' என்று கூறும்போது பெற்றதாய் தன் பிள்ளையின் வயிற்றை உணவு உண்டுவிட்டானா இல்லையா என்று பார்ப்பாள் என்றும் பெண்சாதியோ கணவன் சம்பளம் வாங்கிக் கொண்டு வந்து விட்டானா இல்லையா என்று அவனது மடியைப் பார்ப்பாள் என்றும் விளக்கம் கொள்ளலாம்.



**மனைவி :**

மனைவி என்ற நிலையில் பெண்களுக்குரிய நிலைமைகளைச் சில பழமொழிகள் விளக்குகின்றன. சில, பெருந்தன்மையான குணங்களையும், சில- அவர்களின் சிறுமைப் பண்புகளையும் செப்புகின்றன. 'மனைவி இல்லாத புருஷன் அரை மனிதன்' என்பது ஒருபழமொழி. மனிதனை முழுமையாக்குவது மனைவிதான். தனக்கென வாழ்ந்தவனைப் பிறருக்கென வாழவைக்கும் பொறுப்பு மனைவிக்கே உண்டு. கட்டுப்பாடு இன்றிக் கண்டபடி அலைபவனின் கால்களுக்குப் பொன் விலங்காவாள் மனைவி. இதையே, 'பெண்சாதி காற்கட்டு பிள்ளை வாய்க்கட்டு' என்று பழமொழி கூறும்.

மனைவியைத் தேர்ந்து கொள்ளும் முறைகளையும் பழமொழிகள் வரையறுக்கின்றன. சாலையின் செம்மையைப் பார்த்துத்தான் ஒருவன் பயணத்தைத் தொடங்க வேண்டும்-அது போன்றே கடமைகளைச் செய்யும் நல்ல மனைவியையே துணையாக்க வேண்டும். இதை, 'வேலையைப் பார்த்துப் பெண்ணை எடு; சாலையைப் பார்த்து ஊருக்கு நட' என்று பழமொழி கூறுகிறது.

முறையற்ற மோசமான மனைவிகள் பேய்க்கு நிகராவர் என்பதைச் சில பழமொழிக்ள் நினைவுறுத்துகின்றன. 'பிரியம் இல்லாத பெண்டாட்டிக்குப் பேய் நன்று' என்றும், 'பெண்சாதி பேச்சைக் கேட்பவன் பேய் போல அலைவான்' என்றும் பழமொழிகள் எச்சரிக்கின்றன.

**மாமியார் :**

மாமியார் என்ற நிலையில் பெண்கள் அதிகார வர்க்கத்தின் அங்கத்தினர்களாகின்றனர். மருமகள்களை ஆட்டிப் படைக்கும் ஆணவக்காரிகளாகவும் சூனியக்காரிகளாகவும் மாறிப்போய் விடுகின்றனர். 'பானை ஒட்டினாலும் மாமியார் ஒட்டாள்' என்ற பழமொழி மாமியார் மருமக்களின் ஒட்டா உறவினைச் சுட்டும். 'பெண்ணுக்கு மாமியாரும் பிள்ளைக்கு வாத்தியாரும்' என்ற பழமொழி மாமியார்களின் வாத்திச்சி வேலையை விளக்குகின்றது.

'மாமியார் உடைத்தால் மண்கலம் மருமகள் உடைத்தால் பொன்கலம்' என்ற பழமொழி மாமியார்களின் கொட்டத்தை அம்பலப்படுத்துகின்றது. 'மகன் செத்தாலும் சாகட்டும் மருமகள் கொட்டம் அடங்கினால் போதும்' என்ற பழமொழி மாமியார்களின் கொடூரமான எண்ணத்தை எடுத்துக் காட்டுகிறது. ''வந்த அளவிலே சிறுக்கி பந்தடித்தாள், வரவர சிறுக்கி கழுதை மேய்க்கிறாள்'' என்ற பழமொழி மாமியார்களின் எரிச்சல் எரிமலைகளைப் படம் பிடிக்கின்றது.

எனவேதான் பழமொழிகள், 'மாமியார் மெச்சிய மருமகள் இல்லை மருமகள் மெச்சிய மாமியார் இல்லை' என்றும் 'மாமியார் இல்லாத மருமகள் உத்தமி; மருமகள் இல்லாத மாமியார் குணவதி' என்றும் கூறுகின்றன.



**மருமகள் :**

மருமகள் என்ற நிலையில் பெண்கள் அடக்கப்படுகிறார்கள். அடங்கி ஒடுங்கிப் போன அப்பாவி மருமகள்கள் வேறு வழியில்லாததால் வெறுவாயையே மெல்லுகிறார்கள்.

''மாமியாரும் சாகாளோ; என் மனக்கவலை தீராதோ'' என்று ஒருத்தி மனக்கவலையில் மௌனமாகச் சபிக்கிறாள். 'வரவர மாமியார் கழுதைப் போலானாள்' என்று ஒருத்தி தன் உள்ளக் கருத்தை ஊமையாக்காமல் ஓசைப்படுத்துகிறாள். மாமியார் மீதுள்ள வெறுப்பு மருமகளின் மனதைக் கல்லாக்குகின்றது. எனவேதான் ஒரு பழமொழி, 'மாமியார் செத்து ஆறும் மாதம் மருமகள் கண்ணில் தண்ணீர் வந்தது' என்று கூறுகிறது. செத்து ஆறும் மாதம் கண்ணில் கண்ணீர் அல்ல தண்ணீர் வந்ததாகக் கூறுவதினின்றும் மருமகளின் மனம் எவ்வளவு தூரம் வெறுப்பும் விரக்தியும் கொண்டு விளங்குகிறது என்பது புரிகிறது.

**கிழவிகள் :**

கிழவிகள் என்ற நிலையில் முதுமையான பெண்கள் குடும்பத்தில் வேண்டாதவர்களாக மாறுகின்றனர். முதுமையில் முணு முணுப்பும் முறைப்பும் பெண்களுக்கு அதிகமாகிறது. இறந்த கால எண்ணங்கள் அவர்களிடையே ஏக்கங்களை வளர்க்கிறது. குடும்பப் பூசல்களை இவர்களே உருவாக்குகின்றனர். வயது ஆக ஆக பற்கள் விழுவதுபோல நாவும் உதிர்ந்து விட்டால் இதுபோன்ற தொந்தரவும் தொல்லைகளும் இல்லாமலிருக்கும்.

'கிழவியும் காதம் குதிரையும் காதம்' என்ற பழமொழி, குதிரையை நாம் நெருங்காதது போன்று கிழவிகளையும் நெருங்கக் கூடாது என்று அறிவுறுத்துகிறது. 'கிழவி இருந்த வீடும் கிளி இருந்த காடும் ஆகா ஈடேறாது' என்ற பழமொழி கிழவிகளால் வீடு பாழாவதைத் தடுக்க முயல்கிறது. எனவேதான் கிழவிகள் இறந்தாலும் கொட்டும் முழக்கும், பாட்டும் பாடையும், அமர்க்களப்படுகின்றது போலும்!

**கைம்பெண்டிர் :**

பெண்களின் கைம்மைநிலை மிகவும் இரங்கற்குரியது. 'வாழாத பெண்களைத் தாழ்வாக உரைக்காதே' என்று ஒரு பழமொழி கூறுகிறது. 'வாழாப் பெண் தாயோட' என்பதால் அவர்கள் இரக்கங்களையே யாசிக்கும் எளிய பிறவிகளாகின்றனர்.

'தாலியறுத்தவள் ஏன் இருக்கிறாள்; தாரந்தப்பினவனுக்குப் பொங்கிப் போட' என்ற பழமொழி கைம்பெண்டிரை இழிவுபடுத்துகிறது. 'வாழாத பெண்ணுக்கு மை ஏண்டீ பொட்டு ஏண்டீ மஞ்சள் குளிப்பேதடி' என்ற பழமொழி விதவைகளின் வேதனையைக் கிளறி விடுகின்றது. 'தாலியறுத்தவள் வீட்டிலே தலைக்குத் தலை பெரியத்தனம்' என்ற பழமொழி விதவைகளின் வீட்டுநிலையை விளக்குகின்றது. 'தாலியறுத்தவளுக்கு மருத்துவச்சி உதவி ஏன்' அவர்களே மருத்துவச்சியாகப் பணிபுரிகின்றனர்.

**பெண்ணின் பெருமை :**

'ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே' என்பதால் பெண்ணின் பெருமை பெரிதுபடுத்தப்படுகின்றது. பெண்மையால் ஆக்கவும் முடியும் அழிக்கவும் முடியும் என்பதால் அந்த மாசக்தியை மக்கள் மிகவும் போற்றுகிறார்கள். 'மனிதன் ஆரம்பமாவதும் பெண்ணாலே பெண் அடங்கி ஒடுங்குவதும் பெண்ணாலே' என்று சொல்லுவதால் பெண்மை சிறப்புகின்றது.

'பத்தினியைத் தொட்டதும் துரியோதனன் கெட்டதும்' என்ற பழமொழி பத்தினிப் பெண்ணின் பெருமையையும் பறைசாற்றுகின்றது.

**பெண்ணின் சிறுமை :**

பெண்களின் சிறுமையையும் பழமொழிகள் சித்திரிக்கத் தவறவில்லை. 'பெண் புத்தி பின் புத்தி' என்பதால் பெண்மையின் திடமில்லாத புத்தியையும் 'பெண்கள் இருக்குமிடம் சண்டைகள் பெருத்த இடம்' என்பதால் பெண்களின் ஒற்றுமையின்மையையும், 'பெண்ணின் கோணல் பொன்னிலே நிமிரும்' என்பதால் பெண்களின் நகை ஆசையையும், 'பெண்மூப்பான வீடு பேரழிந்து போம்' என்பதால் பெண்களால் குடும்பம் குலைவதையும் அறிந்து கொள்ளலாம்.

பெண்கள்மீது நம்பிக்கைக் கொள்ளக் கூடாது என்றும் சில பழமொழிகள் வற்புறுத்துகின்றன. 'சேலைகட்டிய மாதரை நம்பாதே' என்று ஒருவர் பாடினார். 'மாற்றானை நம்பினாலும் மாதரை நம்பாதே' எனவும், 'பேயை நம்பினாலும் பெண்ணை நம்பாதே' எனவும் பழமொழிகள் போதிக்கின்றன.



பெண்ணாகப் பிறப்பதே இழிவு என்றும் நினைத்தனர். எனவே தான் 'ஆணாய் பிறந்தால் அருமை பெண்ணாய் பிறந்தால் எருமை' என்று கூறுகின்றனர். 'அடுக்களைப் பெண்ணுக்கு அழகு எதற்கு?' என்று ஒரு பழமொழி வினவுகிறது.

பெண்கள் ஆண்களைக் கெடுத்து வருகிறார்கள் என்றும் சில பழமொழிகள் கூறுகின்றன. அரிவை மொழி கேட்டால் அறிஞனும் அபத்தன் ஆவான்' என்றும் 'அடுத்துக் கெடுப்பான் கபடன், கொடுத்துக் கெடுப்பான் மார்வாடி, தொடுத்துக் கெடுப்பாள் மடந்தை' என்றும் பழமொழிகள் பயமுறுத்துகின்றன.

**நம்பிக்கைகள் :**

பெண்ணின் பிறப்பை வைத்துச் சில பழமொழிகள் சில நம்பிக்கைகளை நவில்கின்றன.

'அஞ்சாவது பெண்பிறந்தால் அரசாளும் ஆண்டியாவான்' 'ஆறும் குழந்தை பெண்ணாகப் பிறந்தால் ஆறான குடித்தனமும் நீறாய் விடும்' என்றும், 'ஆறாவது பெண் பிறந்தால் ஆறு ஆக்கினாலும் ஆக்கும் நூறு ஆக்கினாலும் ஆக்கும்' என்றும், 'எட்டாம் பேறு பெண் பிறந்தால் எட்டிப் பார்த்த வீடு குட்டிச்சுவராகும்' என்றும், 'மூலத்தில் பிறந்தவள் முத்தத்து மாமியாரை மூலையில் இருத்துவாள்', என்றும் நம்பிக்கைகள் பழமொழிகளாகின்றன.

**பெண்களுக்காக நீதிகள் :**

பெண்களுக்கென்று சில நீதிகளைச் சில பழமொழிகள் கூறுகின்றன. 'பெண்டிர்க்கு அழகு எதிர்பேசாதிருத்தல்' என்றும்; 'வாய் பாத்தவள் வாழ்வு இழந்தாள்' என்றும் 'ஆளனில்லாத மங்கைக்கு அழகு பாழ்' என்றும், 'அடக்கமும் பெண்ணுக்கழகு' என்றும் 'பெண்யென்றால் பேயும் இரங்கும்' என்றும்; 'இடுப்பு சுருங்குவது பெண்களுக்கு அழகு' என்றும், 'இராசாமகள் ஆனாலும் கொண்டவனுக்குப் பெண்தான்' என்றும், 'குலமகட்கு அழகு கொழுநனைப் பேணுதல்', என்றும், 'ஆணை அடித்து வளர் பெண்ணைப் போற்றி வளர்' என்றும் கூறுகின்றன.

இவ்வாறு பழமொழிகள் மூலம் பெண்களின் தாய்மை, மனைவி, மாமியார், மருமகள், கிழவி, கைம்பெண் போன்ற பலநிலைகளைக் காணலாம். பெண்களுக்கான நீதிகளையும் நம்பிக்கைகளையும் வரையறுக்கின்றன. பழமொழிகள் எல்லாம் அமலாக்கப்படாத சட்டங்கள், என்றாலும் இவை கிராமிய மக்களால் அன்றாடம் வாழ்வில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.



## தமிழரசில் எழுதுங்கள்!

நான் வெளிநாடுகளுக்குச் சென்றுவந்தபோது ''இனியவை இருபது'' என்ற நூலை எழுதினேன். அது நூலாக வருவதற்கு முன்பு அரசின் சார்பில் வருகிற 'தமிழரசு' பத்திரிகையில் கட்டுரையாக வந்தது. அதை நான் வேறு என்னுடைய கட்சி ஏடுகளில் எழுதாமல் அரசு ஏட்டில் எழுதியதற்குக் காரணம்—நான் அரசுச் செலவில் சென்றுவந்ததால் அதை அரசு இதழிலேயே எழுதினேன். நூல் வெளியிடுவதைப் பற்றிப் பிரச்சினை இல்லை.

அடுத்தடுத்து, சொக்கலிங்கம் போன்ற அதிகாரிகள் மேல்நாடுகளுக்குச் சென்று வருகிற நேரத்தில்—அவைகள் நூலாக வருவதற்கு முன்பு—அரசின் வார இதழில் அவைகள் கட்டுரையாக வெளிவரவேண்டும் என்பது என்னுடைய விருப்பம். அதனை அரசு அதிகாரிகள் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் 'தமிழரசு' இதழை விரும்பிப் படிக்கின்ற ஆர்வம் மேலும் வளர வேண்டும். அதனுடைய எண்ணிக்கை அதிகமாக வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேனே யல்லாமல் வேறல்ல.

—''ஜப்பானில் நான் கண்டதும் கேட்டதும்''
என்ற நூல் வெளியீட்டு விழாவில்
முதல்வர் கலைஞர்.

# நேருவின் வாழ்விலே...



இந்தியா முழுவதும் அரிசி பங்கீட்டுக் கொடுத்து வந்த காலம். மக்களுக்குப் போதுமான உணவுப்பொருள் வேண்டும் என்று நேரு கருதினார். தமது பங்கீட்டு அட்டையைக் கையில் எடுத்துக் கொண்டு, கடைக்குப் போனார். அங்கு, கூட்டத்தினர் ஓர் ஒழுங்கு முறையின்றிக் கடையை முற்றுகையிட்டிருப்பதைக் கண்டார். உடனே, அங்கிருந்த கூட்டத்தினரை ஒழுங்காக வரிசையில் நிற்கச் செய்து, அவ்வரிசையின் இறுதியில் தாமும் போய் நின்று கொண்டார்.

நேரு, வரிசையில் நிற்பதைக் கண்டவர்கள், அவரிடம் போய், 'உங்கள் பங்கீட்டு அட்டையைக் கொடுங்கள்; நாங்கள் வாங்கிக் கொடுக்கிறோம்' என்றனர். அதற்கு அவர் கண்டிப்பான முறையில் மறுப்புத் தெரிவித்து, வரிசையாக நின்றே முறைப்படி தமது பங்கினை வாங்கிச் சென்றார்.

* * *

நேரு, பல ஆண்டுகள் காங்கிரஸ் தலைவராகப் பதவி ஏற்றுப் பணிபுரிந்திருக்கிறார். ஒருமுறை, அவர் தொடர்ந்து தலைவராகப் பதவியில் இருப்பதைக் கண்டித்து 'மாடர்ன் ரெவ்யூ' என்ற பத்திரிகையில் 'சாணக்கியன்' என்பவர் ஒரு கட்டுரை எழுதியிருந்தார்.

''நேரு, சமத்துவம், குடியரசு என்று பேசிக் கொண்டிருந்தால் காலப்போக்கில் தன்னுடைய வெறி மிகுந்து பிற்காலத்தில் ஒரு சர்வாதிகாரியாக மாறிவிடுவார். எனவே, அவரை முழுதும் நம்பி, அவரிடம் இந்தியாவையோ காங்கிரசையோ ஒப்படைப்பது தவறு'' என்று அந்தக் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தது.

நேருவைக் கண்டித்து எழுதிய அந்தச் சாணக்கியன் யார் என்பது இதழின் ஆசிரியருக்குத் தெரியாது — வாசகர்களுக்குத் தெரியவில்லை. இறுதியில், நேருவே, வேண்டுமென்றே தம்மைப் பற்றித் தாமே இப்படி ஒரு கட்டுரை எழுதினார் என்பதும், இக்கட்டுரையைப் படித்துத் தம்மைப் பற்றி வாசகர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள இவ்வாறு செய்தார் என்பதும் பின்னர் தெரிய வந்தது.

* * *

1928-ஆம் ஆண்டு சைமன் குழுவினர் இந்தியாவுக்கு வந்தனர். இந்தியக் காங்கிரஸ் கட்சியினர்



நாடெங்கும், கூட்டங்கள் நடத்தி அந்தக் குழுவினரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இலட்சுமணபுரியில் நேருவின் தலைமையில் எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது. குழுவினர், புகைவண்டி நிலையத்தில் வந்து இறங்குவதாக இருந்தது. நிலையத்தின் வாயிலில் மாபெரும் எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. பெருங்கூட்டம் கூடி விட்டதைக் கலைப்பதற்காகக் காவலர், கூட்டத்தினர் மீது தடியடிப் பிரயோகம் நடத்தினர். கூட்டத்தின் முன்னால் நின்று கொண்டிருந்த நேருவின் மீதும் அடி பல முறை பலமாக விழுந்தது.

நேருவின் முகம் சினத்தால் சிவந்தது. தன்னைத் தடிகொண்டு தாக்கிய காவலனைக் குதிரையிலிருந்து கீழே இழுத்துப்போட்டு அவனுடைய கைத்தடியையே பிடுங்கி அவனை நையப் புடைக்க வேண்டும் என்று எண்ணினார். ஆனால், தன் கட்சிக் கட்டுப்பாடு நினைவுக்கு வரவே, தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, அடி தன் முகத்தில் விழாமல் கையால் தடுத்துக் கொண்டார்.

* * *

வேட்டையாடுவது என்பது நேருவுக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. என்றாலும், கொடிய வனவிலங்குகளைத் தவிர வேறு விலங்குகளையும் பறவைகளையும் அவர் கொல்வதில்லை.

நேரு ஒரு சமயம் இமயமலைச் சாரலில் உள்ள ஒரு காட்டில் வேட்டையாடச் சென்றார். எதிர்பாராத விதமாக அவரது துப்பாக்கிக் குண்டு, ஒரு மானின் காலில் பட்டுவிட்டது. மான் கீழே விழுந்து, வலி தாங்காமல் துடிதுடித்தது. மானின் துடிப்பும், மிகவும் பரிதாபத்துக்குரிய அதன் பார்வையும் நேருவின் நெஞ்சத்தைத் துடிக்க வைத்துவிட்டன. அவரது கண்கள் கலங்கின. அது முதல், அவர் வேட்டையாடுவதையே விட்டு விட்டார்.

* * *

நேரு கடமையுணர்வு மிக்கவர்; வேலையில் மூழ்கிவிட்டால் வேறு எதையும் நினைத்துப் பார்க்க மாட்டார்.

1962-ல் கிருஷ்ணாபுரியில் காங்கிரஸ் மாநாடு நடந்து கொண்டிருந்தது. நேரு, மாநாட்டரங்கில் — தமது இருக்கையில் அமர்ந்திருந்தார். திடீரென்று பத்துப் பதினைந்து படப்பிடிப்பாளர்கள் சூழ்ந்து கொண்டு, நேருவின் காலணியைப் பல்வேறு கோணங்களில் படமெடுத்தனர். குனிந்து வளைந்து நேருவின் வலது கால் காலணியைப் படமெடுத்தனர்.

முதலில் படப்பிடிப்பாளர்கள் ஏன் இப்படிச் செய்கிறார்கள் என்பது நேருவுக்குப் புரியவில்லை.

வியப்பிலே மூழ்கிய நேரு அந்தப் படப்பிடிப்பாளர்களையே பார்த்து, ''அங்கே என்ன இருக்கிறது?'' என்று கேட்டார்.

அவர்கள் அந்தக் காலணியைச் சுட்டிக் காட்டிய பின்தான், தாம் அணிந்திருக்கிற காலணியில் பெருவிரலுக்கு அருகில் ஓர் ஓட்டை இருப்பதைக் கண்டார். தாமே சிரித்துக்கொண்டார்.

— தொகுப்பு:



### தமிழ்நாட்டின் பெருமை!

உயர்ந்த அறிவாற்றலுடைய சென்னை (தமிழ்நாடு) அன்றும் இன்றும் புகழ்பெற்ற தத்துவமேதைகளையும், கணக்கறிஞர்களையும், அறிவியல் வல்லுநர்களையும் உண்டாக்கியுள்ளது — உண்டாக்கி வருகின்றது. சென்னை, எனது உள்ளத்தை மிகக் கவர்ந்துள்ள இடமாகும்.

### தமிழ் இலக்கியங்களின் பழமை!

பாண்டிய மன்னர்களின்கீழ் மதுரை தமிழ்க்கலையின் நடுநாயகமாக விளங்கியது. அங்கே தமிழ்ப் புலவர்களும் தமிழறிஞர்களும் சங்கமாகக் கூடித் தமிழ் ஆய்ந்து வந்தனர். பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பெரும்பான்மையானவை கிறித்தவ ஊழியின் தொடக்க காலத்தைச் சேர்ந்தவை.

### தோல்வி அரிது!

எந்த ஒரு நல்ல காரணத்திற்காகவும் இறக்கத் தயாராயிருப்பவர்கள் அரிதாகவே தோல்வியுறுகின்றனர்.

### படிக்கும் பழக்கம்

நம் நாட்டில் புத்தகங்களையும் இதழ்களையும் படிப்போர் தொகை மிகக் குறைவு. இதற்குக் காரணம் படிப்பின்மையன்று; இங்கு, படித்தவர்கள் கோடிக் கணக்கில் இருக்கிறார்கள். ஆனால், படிக்கும் பழக்கத்தை வைத்துக் கொண்டிருக்கிற பொது மக்களின் எண்ணிக்கை ஒரு குறிப்பிட்ட அளவிலேயே உள்ளது.

### நாட்டின் வளமும்—அழிவும்

ஒரு நாட்டின் வளம் அந்த நாட்டில் வேலை செய்வோரின் எண்ணிக்கையைப் பொறுத்தே மதிக்கப்படுகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு நாட்டின் அழிவுக்குக் காரணம்.

### நாடு இறவாதது!...

''நாடு என்பது இறவாத ஒன்று; மக்கள் வருவார்கள், போவார்கள். ஆனால், நாடு என்றும் அழியாத ஆற்றலைத் தன்னுள் அடக்கி வைத்துக் கொண்டிருக்கிறது.

### நோக்கம்!...

நாம் சிறியவர்கள்; எனினும் நாம் ஈடுபட்டிருக்கும் பணி மிகப் பெரியது. எனவே, நாம் ஈடுபட்டுள்ள பணியின் பெருமையில் ஒரு பகுதி நம்மீது படிந்து விடுகிறது.

### வாழ்க்கைக்குச் சிறப்புத் தருவது!

வாழ்க்கைக்குச் சிறப்புத் தருவது போராட்டம்தானேயன்றி அதன்

### கலைத்துறையில் மூத்தது!

கலைத் துறையைப் பொறுத்த வரை வட இந்தியாவைவிடத் தென்னிந்தியாவில்தான் பழங்காலத்துச் சின்னங்கள் அதிகம்.

### பத்தில் ஒன்று!...

சினிமாவுக்குப் போகிறவர்கள் சினிமாவுக்காகச் செலவு செய்கிற பணத்தில் பத்தில் ஒரு பங்கினைப் புத்தகத்திற்குச் செலவிட்டாலே இந்தியாவில் ஏராளமான புத்தகங்களை விற்பனை செய்ய முடியும்.



# கோட்டை என நிலைப்பார் நாட்டில்

பாஞ்சை சுவர்க்கமெனப் பாரோர் வணங்கிவரப்
பூஞ்சை படர்நிலத்தில் புன்னை என நின்றபுலி
மின்னல் படித்தறிய மிளிர்வாள் சுழற்றுமுகில்
அன்னை நிலத்திற்(கு) ஆன்ற தொருவேலி
மாற்றார் மனங்கலக்கும் மாயப் பெருங்கூற்று
போற்றும் குடிவெம்மை போக்கும் மலைக்காற்று
வெள்ளை மனமில்லா வெள்ளை இனத்தாரின்
கொள்ளை மரஞ்சாய்க்கக் கூவும் புயற்காற்று
தூக்கில் உறங்குவதைத் தொட்டில் விளையாட்டாய்
ஊக்க முடனேற்ற உண்மைப் பெருமறவன்
கயிறே ஆருகக் காலன் தனைவென்று
கயத்தாறு தன்னைக் கயிலையாய் மாற்றியவன்
மானக் கவரிமா மாளும் நிலைசொல்லும்
கானக் குறட்கெடுத்துக் காட்டை எழுதியவன்
கோட்டை மறவன் குறையிலாக் கட்டபொம்மன்
கோட்டை அமைத்தாரும் கோட்டை எனப்புகழால்
நாட்டில் நிலைப்பார்காண் நன்கு நலம்பெருகி!

—: ந. புவனேந்திரன் :—

# வழிகாட்டும் தமிழ்நாடு!

## குடியரசுத் துணைத்தலைவர் புகழ்மாலை

மதுரைப் பல்கலைக்கழகத்தில் அக்டோபர் திங்கள் 9-ஆம் நாள் நடந்த பட்டமளிப்பு விழாவில் இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் ஜட்டி அவர்கள் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:

"பட்டமளிப்பு உரை நிகழ்த்துமாறு என்னை அழைத்தற்காகப் பல்கலைக்கழக வேந்தருக்கும், அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"இந்த [illegible] அழைத்திருப்பதை ஒரு பெரிய கௌரவமாகக் கருதுகிறேன்.

"இந்த அழைப்பை மிகுந்த பணிவோடு ஏற்றுக் கொண்டேன். ஏனென்றால், இந்தப் பல்கலைக்கழகத்தின் பணிகளை அறிந்து கொள்வதற்கும், பெருமை வாய்ந்த மீனாட்சி ஆலயத்துக்கு வருகை தருவதற்கும் மிகுந்த ஆர்வம் கொண்டிருக்கிறேன். எனது வருகை பயனுள்ளதாக இருக்கக் காண்கிறேன். இந்த நாளின் இனிய நினைவுகள் எப்போதும் என் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும்.

"புலவர் பலர் கடைச் சங்கம் அமைத்துக் கூட்டங்கள் நடத்தியதும், நமது நாட்டின் மிகப் புராதன, அறிவின் உறைவிடங்களில் ஒன்றுமான மதுரையில் பல்கலைக்கழகம் அமைத்ததற்காகத் தமிழ்நாடு அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன்.

"இந்த இளம் பல்கலைக் கழகம், திறமை வாய்ந்த துணை வேந்தர்களின் வழி நடத்துதலுடனும், மாநில அரசாங்கம், பல்கலைக்கழகப் பண உதவிக் கமிஷன் ஆகியவற்றின் உதவியுடனும் பத்தே ஆண்டுகளில் நல்ல முன்னேற்றம் அடைந்திருப்பது கண்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

"திருக்குறள் ஆராய்ச்சிக் காகத் தனிப் பிரிவும், ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய மாநில அரசாங்கங்களின் உதவியுடன் தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளின் வளர்ச்சிக்காகத் தனித்தனிப் பிரிவுகளும் ஏற்படுத்தி இருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தப் பல்கலைக்கழகத்தில் [illegible]

"இந்தப் புராதன நகரத்தின் புகழ் வாய்ந்த பாரம்பரியத்துக்கு ஏற்றதாகவே இந்தச் சாதனைகள் அமைந்திருக்கின்றன. இந்தச் சாதனைகளுக்காக இப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர்களையும், ஆசிரியர்களையும், மாணவர்களையும் பாராட்டுகிறேன். இது குறித்து அவர்கள் பெருமைப்படுவது நியாயமே. வரும் ஆண்டுகளில் இந்தப் பல்கலைக் கழகம் மேன்மேலும் வளர்ச்சி அடையும் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை.

"கல்வித்துறையில் சிறப்பான வளர்ச்சி அடைந்திருப்பதற்காக இந்தச் சமயத்தில் தமிழ்நாடு அரசாங்கத்தையும் பாராட்ட விரும்புகிறேன். இந்த மாநிலம் கல்வித் துறையில் மிகவும் முன்னேறி இருக்கிறது. இங்குத் துவக்கப்பட்ட பல கல்விப் பரிசோதனைகள் நாட்டின் பல பாகங்களில் பரவியிருக்கின்றன. மதிய உணவுத் திட்டம், பள்ளிக்கூடச் சீரமைப்புத் திட்டம் ஆகியவை இரண்டு சிறந்த உதாரணங்களாகும். கல்வி நிறுவனங்களுக்கு வெளியே சுயமாகப் படித்து முன்னேறும் முறைக்கு இந்த மாநிலம் முக்கியத்துவம் கொடுத்து முன்னணியில் இருப்பதும் எனக்குத் தெரியும். தமிழ்நாட்டில் உருவாக்கப்படும் பயனுள்ள கல்விப் பரிசோதனைகளை இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களும் கவனமாக ஆராய்ந்து அவற்றால் பயனடையும் என்று நம்புகிறேன்."

## வட ஆர்க்காடு மாவட்டத்தில் ....

தமிழகத்திலேயே முதல் நகராண்மைக் கழகம் நிறுவப்பட்ட பெருமை வட ஆர்க்காடு மாவட்டம் வாலாஜாபேட்டை நகரத்தையே சாரும்.

* * *

வேலூரில் உள்ள காவல்துறையினரின் 'விரல் ரேகை நிலையம்' உலகிலேயே மிகப் பழமையான விரல் ரேகை நிலையமாகும்.

* * *

தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய சிறைச்சாலையும், பெண்களுக்கெனச் சிறைச்சாலையும் உள்ள இடம் வேலூர் ஆகும்.

* * *

தென்னகத்தில் ஏற்பட்ட முதல் ரயில் பாதை சென்னையில் இருந்து வட ஆர்க்காடு மாவட்டம் வாலாஜா சாலைக்குத்தான் போடப் பட்டது. போடப்பட்ட ஆண்டு 1856.

* * *

தமிழ்நாட்டில் இரண்டு இடங்களில் மட்டுமே சந்தனமர ஏலம் நடைபெறுகிறது. அதில் ஒரு இடம் வட ஆர்க்காடு மாவட்டம் திருப்பத்தூர். ஆண்டு ஒன்றுக்கு ஒர் கோடி ரூபாய் மதிப்புள்ள சந்தன மரங்கள் ஏலம் விடப்படுகின்றன.

# மாடி ரயில் வருகிறது!



மாடி வீட்டில் குடி இருந்திருக்கிறோம்.

மாடிப் பேருந்திலும் சென்றிருக்கிறோம்.

'மாடிப் பூங்கா'வில் கூட உலவி இருக்கிறோம். ஆனால், மாடி ரயிலில் ஏறி இருக்கிறோமா? கொஞ்சம் பொறுங்கள். மாடி ரயில் இப்போது தயாராகிக் கொண்டிருக்கிறது. விரைவில் அது நம்மைச் சுமந்தபடி ஓடப்போகிறது!

சென்னைப் பெரம்பூரிலுள்ள இணைப்புப் பெட்டித் தொழிற்சாலையில், இந்தியாவிலேயே முதல் தடவையாக இந்த மாடி ரயில் பெட்டிகள் செய்யும் வேலை துவங்கியுள்ளது. முதல் இரண்டு மாடி ரயில் பெட்டியின் கூண்டுப் பகுதி முடிவடைந்துள்ளது. பரிசோதனைக்குப் பிறகு தொடர்ந்து இது நிறைவேற்றப்படும். இரண்டடுக்குள்ள இப்பெட்டி 140 பயணிகளுக்கு இடவசதியை அளிக்கும். பகல் நேர-குறை தூரப் பயணங்களுக்கு மட்டும் இந்த ரயில் விடப்படும். இப்பெட்டிகள், அகலமான ஜன்னல்களைக் கொண்டிருக்கும். உயரத்திலிருந்து நன்கு கண்டு களிக்கும் வண்ணம் இது அமைந்திருக்கிறது.

1955-ஆம் ஆண்டு காந்தியடிகள் பிறந்த நாளன்று துவக்கப்பட்ட இந்த இணைப்புப் பெட்டித் தொழிற்சாலையின் வயது எத்தனை தெரியுமா? இருபது ஆண்டுகள்.



ஆண்டிற்கு 350 மூன்றும் வகுப்பு-தற்பொழுதைய இரண்டாம் வகுப்பு கூண்டுப் பெட்டிகளை மட்டுமே உற்பத்தி செய்வதற்காக இது துவக்கப்பட்டது.

1973-74-ல் மிக அதிக அளவான 750 பெட்டிகளை உற்பத்தி செய்தது ஒரு மாபெரும் சாதனையாகும். இப்பொழுதும் இது ஆண்டிற்கு 750 பெட்டிகள் உற்பத்தி செய்கின்றது. இத்தொழிலகம் இதுவரை (31-8-75) 10,910 ரயில் பெட்டிகளைத் தயாரித்துள்ளது.

இதுவரை 56 வகைகளில் ரயில் பெட்டிகள் செய்யப்பட்டுள்ளன. முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, தூங்கும் வசதிகள் கொண்ட பெட்டிகள் உட்காரும் வசதிகள் (Chair Cars) கொண்ட பெட்டிகள், உல்லாசப் பயணப் பெட்டிகள் குளிர் சாதனம் பொருத்தப்பட்ட பெட்டிகள், சாப்பிடும் வசதிகள் நிறைந்த பெட்டிகள், ராஜதானி விரைவு வண்டிக்கான பெட்டிகள், மின் ரயில் பெட்டிகள், டீஸல் ரயில் கார்கள் போன்றவை இவைகளில் சில. பிராட்கேஜுக்கு மட்டுமின்றி, மீட்டர்கேஜ் பாதைக்கான ரயில் பெட்டிகளும், இங்குத் தயாரிக்கப்படுகின்றன.

நமது நாட்டிற்குத் தேவையான பல வகைப் பெட்டிகள் அண்மையில் செய்து முடிக்கப் பட்டுள்ளன. அவைகளில் ஒன்று குளிர் சாதனம் பொருத்தப்பட்ட தூங்கும் வசதி கொண்ட ரயில் பெட்டிகள். ஒரு பெட்டியில் 48 பேருக்கு இடவசதி உண்டு.

இப்பொழுது, தானே இயங்கும் குளிர் சாதன தூங்கும் வசதி கொண்ட பெட்டிகள் தயாராகிக் கொண்டிருக்கின்றன. முடிந்த சில இவ்வகைப் பெட்டிகள் பரிசோதனைக் கட்டத்தை இப்பொழுது முடித்துள்ளன. முதன் முறையாக நம் நாட்டிலேயே தயாரான குளிர் சாதனங்கள் இப்பெட்டிகளில் பொருத்தப்பட்டுள்ளன.

சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய நகர்ப்புற மின் போக்குவரத்திற்கான ரயில்களும் இங்குத் தயாரிக்கப்படுகின்றன.

பகல் பயணத்திற்கு மிகவும் வசதியான நாற்காலிப் பெட்டிகளும் அண்மையில் தயாரிக்கப் பட்டுள்ளன. முதல், இரண்டாம் வகுப்புகளைத் தனித்தனிப் பெட்டிகள் வசதியாக உட்கார்ந்து பயணம் செய்ய ஏற்றவைகளாகும். ஒரு வகை முதல் வகுப்புப் பெட்டிகளில் சுழலும் நாற்காலிகளும் பொருத்தப்பட்டுள்ளன.

இங்கு செய்யப்பட்ட ரயில் பெட்டிகளைக். குறிப்பிட்ட திட்டப்படி சில ஆண்டுகளுக்கொருமுறை பராமரிக்கும் வேலையையும் இத்தொழிற்சாலை இப்பொழுது எடுத்துக் கொண்டுள்ளது.

மிக அதிக பத்திரமான பயணத்தை அளிக்கும் வகையைச் சார்ந்துள்ளது இத்தொழிலகத்தில் தயாராகும் இணைப்பு ரயில் பெட்டிகள்.

உதாரணமாக, இரண்டாம் வகுப்பு இருக்கைகளின் அகலம் அதிகரிக்கப்பட இருக்கின்றது. ஒதுங்குமிடங்கள் அளவில் பெரியதாகவும், அதிக வசதிகள் உள்ளனவாகவும் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ரயில் பெட்டிகளின் அமைப்பிலும் சிறிது மாறுதல்கள் ஏற்பட இருக்கின்றன. பெட்டிக்கான பயணிகள் எண்ணிக்கை அதிகரிக்கப்பட இருக்கின்றது. அதிக ஒளிதரும் மின்விளக்குகள், அளவில் பெரியதான மின் விசிறிகள், பாத்ரூமிற்கு வெளியில் வாஷ் பேசின்கள், ஒவ்வொரு பெட்டியிலும் அதிக அளவு தண்ணீர் பிடிக்கும் நிரப்பான்கள் போன்றவை குறிப்பிடக்கூடியவைகளாகும்.



வேகமாகச் செல்லும் போகிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. மணிக்கு 130 கி.மீ. வேகம் செல்லும் இந்தியாவின் மிக வேகமான ராஜதானி விரைவு ரயிலுக்கான பெட்டிகள் இத்தொழிற்சாலையில் தயாரானவையே. டீஸல், மின் என்ஜின்களின் வேகத்திற்கு ஈடு கொடுக்கும் வகையில் பெட்டிகளின் வேக ஓட்டத் தரமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. மணிக்கு 150 கி.மீ. வேகமாக இயங்கும் போகிகள் தயாரிக்கப்பட இருக்கின்றன.

அயல் நாடுகளுக்கு ரயில் பெட்டிகளும், போகிகளும் ஏற்றுமதி செய்யும் ஒரே தொழிற்சாலை இணைப்புப் பெட்டித் தொழிற்சாலைதான்.

இதன் மூலம் நடுவில் விட்டுப் போன—தமிழகத்தில் புராதன அயல் நாட்டு வாணிபத் தொடர்பு தொடர உதவுவதோடு, வளர்ந்து வரும் நமது பொருளாதாரத் திட்டங்களுக்கு மிகவும் தேவையான அந்நியச் செலாவணியையும் ஈட்ட முடிகின்றது. பர்மா, தாய்லாந்து, தாய்வான், ஜாம்பியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்யப்பட்டுள்ளன.

டான்சானியா நாட்டிற்கு 17 ரயில் பெட்டிகள் செய்தளிப்பதற்கான 'ஆர்டர்' இப்பொழுது கிடைத்துள்ளது. 15 மூன்றும் வகுப்பு, 2 இரண்டாம் வகுப்புப் பெட்டிகளுக்கான இந்த ஆர்டரின் மொத்த மதிப்பு சுமார் இரண்டு கோடி ரூபாயாகும். அடுத்த ஆண்டு ஜூன் மாதத்தில் இப்பெட்டிகள் ஏற்றுமதி முடிவடையும்.

# உள்ளத்தில் இல்லை ஊனம்....

அவருக்குக் கண்பார்வையோ இல்லை.

ஒரு காலும் இல்லை.

'பாவம், அவரால் என்ன செய்ய முடியும்?' என்றுதானே நமக்கு எண்ணத் தோன்றும்?

உடலில் ஊனம் இருந்தாலும் உள்ளத்தில் ஊனம் சிறிதுமில்லை அவருக்கு!

சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் ஆங்கில விரிவுரையாளராக உள்ள திரு. ஜி. ஜெயராமன், எட்டு வயதிலேயே கண்பார்வை இழந்துவிட்டவர். ஒரு காலை இழந்த இவர், செயற்கைக் காலுடன் நடக்கிறார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில், எம்.ஏ., பட்டம் வாங்கிய முதலாவது கண்பார்வையற்ற மாணவர் இவர்தான்!

படிப்பில் கெட்டிக்காரராக இருந்த இவர், உதவிச் சம்பளம் பெற்று அமெரிக்காவுக்கும், பிரிட்டனுக்கும் போய் வந்திருக்கிறார்.

கடந்த ஆண்டு ஸ்டேட் பாங்கு, ஒரு டைப்ரைட்டர், ரேடியோ டேப் ரிக்கார்டர், ஆகியவற்றை வாங்குவதற்கு அவருக்குக் கடன் கொடுத்தது. இப்போது தமது பாடங்களை டேப் ரிக்கார்டரில் பதிவு செய்து கொள்கிறார். இதனால் நேரமும் சிரமும் குறைகிறது.

டைப்ரைட்டர் இருப்பதால் இவர் இப்போது ஏராளமாக எழுதிக் குவிக்கிறார். அவர் வைத்திருக்கும் ரேடியோ எல்லாச் செய்திகளையும் அவருக்குத் தருகிறது.





# வீடு பெற வருக!

**கே: தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் தோற்றம் பற்றிக் கூற வேண்டுகிறேன்.**

ப: தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு வீட்டுவசதிச் சங்கங்களுக்குத் தலைமைச் சங்கமாக மாநில அளவில் தற்போது இயங்கிவரும் இச்சங்கம் 'சென்னைக் கூட்டுறவு மத்திய வீடு அடமான வங்கி' என்ற பெயரில் 1959-ல் துவக்கப்பட்டது.

இச்சங்கத்தைத் துவக்குவதற்கு முன்னர் தமிழ்நாட்டில் சென்னையில் இரண்டு தலைமைக் கூட்டுறவு வீடு அடமான வங்கிகளும், கோவையில் ஒன்றும், ஈரோட்டில் ஒன்றும், தஞ்சையில் ஒன்றும் ஆக ஐந்து தலைமைக் கூட்டுறவு வீடு அடமான வங்கிகள் பணியாற்றி வந்தன. இந்த வங்கிகள் வீட்டின்பேரில் உள்ள கடன்களைத் தீர்க்கவும், வீட்டை மேம்படுத்தவும் நிதியுதவி புரிந்து வந்தன. அவ்வங்கிகளுக்குத் தேவையான நிதியுதவியை அப்போதிருந்த தென் இந்தியக் கூட்டுறவுக் காப்பீட்டுக் கழகத்திலிருந்து பெற்று வந்தன.

மேற்படி வங்கிகளின் பணியினைப் பாராட்டிய தமிழக அரசு எல்லா நகராட்சிகளிலும் வீடு அடமான வங்கிகள் துவக்கப்பட வேண்டும் என்ற முடிவெடுத்தது. காப்பீட்டு நிறுவனங்கள் தேசிய மயமாக்கப்பட்ட பின்னர் ஏற்கெனவே இயங்கிவந்த வீடு அடமான வங்கிகள், புதியதாகத் துவக்கப்படவிருக்கும் வீடு அடமான வங்கிகள் ஆகியவற்றுக்கு நிதியுதவி புரிய ஒரு மைய அமைப்பு தேவைப்பட்டு, காலம் சென்ற கூட்டுறவாளர் ஈரோடு திரு. ஆர். கே. வெங்கிடசாமி நாயக்கர் மற்றும் தற்போதைய மத்தியச் சங்க நிருவாகக் குழுவினர்களாக உள்ள திரு. பழனியப்ப முதலியார், திரு. வாகீசம் பிள்ளை ஆகியோரின் முயற்சியுடன், மத்தியக் கூட்டுறவு வீடு அடமான வங்கி தோற்றுவிக்கப்பட்டது.

'வீட்டைக் கட்டிப்பார்; கல்யாணத்தை நடத்திப்பார்' என்பார்கள்.

சென்னை மாநகர் போன்ற வளர்ந்து வரும் நகரங்களில் வீட்டு வசதிப் பிரச்சினை மிகமிக இன்றியமையாத ஒன்றாக இருந்து வருகிறது.

தனக்கென ஒரு வீட்டை அமைத்து நிம்மதியாக வாழ மனிதன் விரும்புகிறான். 'வீட்டு மனை இருக்கிறது. ஆனால் வீடு கட்ட அவ்வளவு பணத்துக்கு எங்கே போவது?' என்ற ஏக்கப் பெருமூச்சுக்கு இடமில்லாமல் அவனுக்கு வீடு கட்டக் கடன் தந்து கைதூக்கி விடுகிறது, 'தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம்'. இதன் அரிய பணிகளை விளக்கிக் கூறுகிறார் அதன் தலைவர் திரு. பழனிவேல் ராஜன் எம்.எல்.ஏ., அவர்கள்.

அண்மையில் மறைந்துவிட்ட பெருந்தலைவர் காமராஜ் அவர்கள்தான் இச்சங்கத்தைத் தொடங்கி வைத்தார்கள். வீடு அடமான வங்கிகள் தவிர பல்வேறு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களையும் மையச் சங்கத்துடன் இணைத்துக் கொள்ளும் படித் தமிழக அரசு ஆணை பிறப்பித்ததன் பேரில் மையச் சங்கத்தின் பெயர் 'தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம்' என மாற்றம் செய்யப்பட்டது.

**கே: இச்சங்கத்தின் நோக்கம் என்ன?**

ப: மையச் சங்கம் அதனுடன் இணைந்த தலைமைச் சங்கங்கள் மூலம் புதிய வீடு கட்டுவதற்கும், வீட்டை விரிவுப் படுத்தவும், வீட்டை மேம் படுத்தவும், வீட்டின் பேரில்

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத் தலைவர்

திரு பழனிவேல்ராஜன் எம்.எல்.ஏ

அவர்களின் பேட்டி





திரு. பி. கஸ்தூரிப்பிள்ளை, இணைத் தலைவர்.

உள்ள முன் அடமானக் கடன்களைத் தீர்க்கவும் நிதியுதவி புரிவதே முக்கியமான நோக்கமாகக் கொண்டுள்ளது. வீடு மேம்படுத்தவும், முன் அடமானக் கடனைத் தீர்க்கவும், வீடு அடமான வங்கிகள் மூலம் நிதியுதவி அளிக்கப்பட்டு வந்த போதிலும் தற்போது புதிய வீடு கட்டுவதற்கான பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

**கே: எத்தனை வீடு கட்டும் சங்கங்கள் உள்ளன? அவை என்னென்ன? அவற்றைப் பற்றி விளக்கந்தர இயலுமா?**

ப: கூட்டுறவு வீடு அடமானச் சங்கங்களைத் தவிர, கட்டடச் சங்கங்கள், வீடுகட்டும் சங்கங்கள், வீட்டமைப்புச் சங்கங்கள், கிராமீய வீட்டுவசதிச் சங்கங்கள், தொழிலாளர் வீட்டு வசதிச் சங்கங்கள், வீட்டு மனைச் சங்கங்கள் ஆகிய சங்கங்கள் உள்ளன. அவற்றில் வீட்டுமனைச் சங்கங்கள் தவிர மற்ற சங்கங்கள் மையச் சங்கத்தில் இணைந்து கடன்பெற முடியும். கட்டடச் சங்கங்கள் அதன் உறுப்பினர்களுக்குப் புதிய வீடு கட்ட நிதியுதவி புரிந்து வருகின்றன. வீடு கட்டும் சங்கங்களில் சிலவும், வீட்டமைப்புச் சங்கங்களும் அங்கத்தினர்களுக்காக வீடு கட்டித்தரும் பணியில் ஈடுபடுகின்றன. தொழிலாளர் வீட்டு வசதிச் சங்கங்கள் பல்வேறு தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதியைச் செய்து தருகிறது. அண்மைக்காலம் வரை அவைகளுக்கு அரசு மான்யமும், தொழிற்சாலைகளின் நிருவாகத்தினர்கள் உதவியும் கூட கிடைத்து வந்தன. மையச் சங்கத்துடன் இதுவரை இணைந்துள்ள பல்வேறு வீட்டு வசதிச் சங்கங்கள் 202-ம், கிராமீய வீட்டு வசதிச் சங்கங்கள் 124-ம் ஆகும்.

**கே: வீடு கட்டும் சங்கங்களுக்குத் தமிழ்நாடு அரசு நிதி உதவி ஏதேனும் தருகின்றதா?**

ப: வீடுகட்டும் சங்கங்களுக்கு அரசு நிதியுதவி உண்டா என்று கேட்டால், 1972 வரை மேற்படி சங்கங்களுக்கு அரசு நிதியுதவி புரிந்து வந்தது என்று சொல்லலாம்.

மையச் சங்கத்திற்கு நிதியுதவி பற்றிக் குறிப்பிடும் போது, தமிழக அரசு இச்சங்கத்தில் ரூ. 85 இலட்சம் ரூபாய்க்குப் பங்குகள் எடுத்துள்ளது பற்றிக் குறிப்பிட வேண்டும். இச்சங்கத்துக்குத் தேவையான பெரும்பான்மையான நிதியை ஆயுள் காப்புறுதிக் கழகத்திலிருந்து இச்சங்கம் பெற்று வருகிறது. அப்படி ஆயுள் காப்புறுதிக் கழகத்திலிருந்து பெறும் ஒவ்வொரு கடனுக்கும் தமிழக அரசு உத்தரவாதம் அளித்துள்ளது. தமிழக அரசின் உத்தரவாதத்தின் பேரில் ஆயுள் காப்புறுதிக் கழகம் இதுவரை அனுமதித்துள்ள கடன் 24.92 கோடி ரூபாயாகும்.

அதைத்தவிர மையச் சங்கம் பெறும் தவணை வைப்புத் தொகைகளுக்கு (Fixed Deposits) ஒரு கோடி ரூபாய் தமிழக அரசு உத்தரவாதம் அளித்துள்ளது.

**கே: 'வீடு அடமான வங்கிகள்' —இவை பற்றிச் சற்று விளக்கம் தரவும்.**

ப: முன்னரே குறிப்பிட்டது போல 'வீடு அடமான வங்கிகள்' வீட்டின்பேரில் உள்ள முன் அடமானக் கடன்களைத் தீர்க்கவும், வீடு பழுது பார்த்தல், மேம்பாடு செய்தல், விரிவாக்கல் ஆகிய பணிகளுக்கு நீண்ட காலக் கடன் கொடுத்து வந்தன. தற்போது மேற்படி பணிகளுக்கு நிதியுதவியைக் குறைத்துப் பெருமளவில் புதிய வீடு கட்ட மட்டுமே கடன்கள் வழங்கப்படுகின்றன.

மையச் சங்கத்துடன் இதுவரை இணைந்துள்ள வீடு அடமானச் சங்கங்கள் 121 ஆகும்.

**கே: தனி நபருக்கு உச்ச அளவு கடன் எவ்வளவு தரப்படுகிறது?**

ப: தனிநபர் ஒருவருக்கு 15 ஆண்டுகளில் மாதாந்தரத் தவணைகளில் திருப்பிச் செலுத்தும் கடனை அதிக அளவு ரூ. 30,000 தரப்படுகிறது. கிராமீய வீட்டு வசதிச் சங்கமாக இருந்தால், தனிநபருக்கு ரூ. 10,000 வரை அரையாண்டுத் தவணைகளில் திருப்பிச் செலுத்துமாறு கடன் அனுமதிக்கப்படுகிறது.

**கே: சங்கத்தில் உறுப்பினராகச் சேருவது எப்படி?**

ப: மையச் சங்கத்தைப் பொறுத்தவரை அதன் உறுப்பினர்கள் தலைமை வீடு அடமானச் சங்கங்கள், மற்றும் பல்வேறு வீட்டு வசதிச் சங்கங்கள் அல்லது தவணை வைப்புத் தொகை முதலீடு செய்பவர்களே அதன் அங்கத்தினராக முடியும்.

தலைமைச் சங்கம் 8.000 ரூபாய் செலுத்தி மையச் சங்க அங்கத்தினராகலாம். தலைமைச் சங்கம் மையச் சங்கத்திற்குச் செலுத்தியுள்ள பங்குத் தொகையின் பேரில் 12 மடங்கு வரை கடன் பெற முடியும். கடன் பெற விரும்புகின்ற அங்கத்தினர் தலைமைச் சங்கத்தில்தான் அங்கத்தினராக முடியும். அதற்கு அந்த உறுப்பினருக்குச் சங்க விவகார எல்லைக்குள் ஒரு வீடு அல்லது வீட்டு மனை சொந்தமானதாக இருக்க வேண்டும். அவர் வீடு கட்ட கடனுக்கு விண்ணப்பித்தால் அங்கத்தினராகலாம்.

கடன் அனுமதிக்கப்பட்ட அங்கத்தினர், தான் பெறும் கடனுக்குப் பத்தில் ஒரு பாகத்தைப் பங்குத் தொகையாகச் செலுத்த வேண்டும். அனுமதிக்கப்பட்ட கடன் நான்கு தவணைகளில் அங்கத்தினருக்கு வழங்கப்படுகிறது. அதாவது முதல் தவணை 30 சதவீதத்தை வீட்டு வேலையைத் துவக்கவும், அடிக்கல் முடிந்தவுடன் இரண்டாவது தவணை 30 சதவீதத்தையும், சன்னல் மட்டம் வந்தவுடன் 35 சதவீதத்தையும், கட்டடம் முழுவதும் முடிந்த பின்பு மீதமுள்ள 5 சதவீதத்தையும் பெறலாம்.

**கே: வீட்டு வசதி வாரிய மனைகளுக்காகச் சங்கம் கடன் வழங்குகிறதா?**

ப: சாதாரணமாக அங்கத்தினர் தன்னுடைய வீட்டு மனைக்கான எல்லா உரிமைப் பத்திரங்களையும் தந்துதான்

சமுதாயத்தில் மலிந்துள்ள ஏற்றத்தாழ்வினை ஒழுங்குப்படுத்தும் பணியே கூட்டுறவு இயக்கத்தின் தலையாயக் கொள்கையாகும். ஏழை விவசாயிகளின் துயரங்களைத் துடைப்பதற்காக இவ்வியக்கம் இந்தியாவில் 1904-ஆம் ஆண்டு தோன்றிற்று. அதன்பின் இவ்வியக்கம் பல கிளைகளாகப் பிரிந்து மனிதனின் தேவைகளை நிறைவேற்றி வருவதோடு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பாடுபட்டு வருகிறது.

இப்பணியில் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அரசு தனது முழுப்பங்கையும் ஏற்றுக்கொண்டுள்ளது. வீட்டு வசதியைப் பெருக்கிடத் தமிழக அரசு வீட்டு வசதி வாரியம், குடிசைமாற்று வாரியம், அரிசன வீட்டு வசதிக் கழகம், கிராமப்புற வீட்டு வசதிக் குழு ஆகியவற்றை உருவாக்கி சிறப்பாகச் செயலாற்றி வருகின்றது. அவை செயல்படும் சிறப்பிற்குத் துணையாகக் கூட்டுறவுத் துறை மூலம் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் வீட்டுவசதி சம்பந்தமான தன் பணிகளைச் செவ்வனே ஆற்றி வருவதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

கடன் பெற முடியும். இருப்பினும் வீட்டு வசதி வாரியத்தால் ஒதுக்கப்பட்ட மனைகளைப் பொறுத்தவரை சம்பந்தப்பட்டவர்களுக்குக் கிரயப் பத்திரம் உடன் பதிந்து கொடுக்கப்படுவதில்லை. அதற்கு ஐந்து ஆண்டுகளாவது ஆகிறது. எனினும் மனைக்காக நிர்ணயிக்கப்பட்ட உத்தேச கிரயத் தொகை முழுவதையும் (Full Tentative cost of site) ஒருவர் செலுத்தியிருந்தால் அவர் தலைமைச் சங்கம் மூலமாகக் கடன் பெற முடியும்.

வீட்டு வசதி வாரியமே வீடு கட்டித் தரும் சமயத்தில், முன் பணத்தைத் தலைமைச் சங்கம் கடனாக வழங்குவதற்கு இல்லை. முன்னரே குறிப்பிட்டதுபோல் உத்தேசக் கிரயத் தொகை முழுவதையும் மனைக்காகச் செலுத்தியிருந்தால் தலைமைச் சங்கம் வீடுகட்ட கடன் வழங்க இயலும்.

**கே: இதுவரை எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப் பட்டுள்ளன?**

ப: சங்க ஆரம்ப முதல் அதாவது 1959-ஆம் ஆண்டு முதல் 1975 மார்ச்சு 31-ந் தேதி முடிய சுமார் 10,401 புதிய குடியிருப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. மற்றும் 14,021 வீடுகள் கட்ட கடன் அனுமதிக்கப் பட்டு கட்டட வேலை நடைபெற்று வருகின்றன.

**கே: கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் ஏதேனும் உள்ளனவா?**

ப: மையச் சங்கம் தலைமைச் சங்கங்கள் மூலமாக இதுவரை அனுமதித்துள்ள கடன் 42.48 கோடி ரூபாயாகும். அதில் பட்டுவாடா செய்யப்பட்ட கடன் 31.39 கோடி ரூபாயாகும். தமிழ்நாடு முழுவதும் நடுத்தர, குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வீட்டு வசதியைப் பெருக்க வேண்டுமானால் ஆண்டொன்றுக்கு 25 கோடி ரூபாய் தேவைப்படும். ஆனால் ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து நாம் எதிர்பார்க்கின்ற அளவுக்குக் கடன் வசதி கிடைக்காததால் ஜூலை மாதம் முதல் கடன் மனுக்கள் பெறுவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனினும் ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து இந்த நிதியாண்டிற்குள் மேலும் 12 கோடி ரூபாய் கடன் பெற முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

கிராமிய வீட்டு வசதியைப் பெருக்கும் நோக்கத்துடன், கிராமிய வீட்டு வசதிக் குழுவின் (Rural Housing Cell) நடவடிக்கைகளை மையச் சங்கத்துடன் இணைத்து முதல் கட்டமாக 50 வட்டங்களில் புதிய சங்கங்கள் ஆரம்பிக்கும் ஒரு கருத்தும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

கட்டடம் கட்டுவதற்குத் தேவையான செங்கற்கள் அங்கத்தினர்களுக்குச் சுலபமாகக் கிடைக்கும் வகையில், மாநிலத்தில் சில இடங்களில் செங்கல் சூளைகள் ஆரம்பிக்கவும் தமிழக அரசின் அனுமதியை மையச் சங்கம் கோரியுள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம், வீட்டு வசதிப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் வகையில் பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்றது.

குருவிக்குக்கூட ஒரு கூடு இருக்கிறது. ஆனால், மனிதன் தனக்கென ஒரு வீட்டை அமைத்துக் கொள்ள அவனுக்குக் கைகொடுத்து உதவுகிறது இந்தச் சங்கம்.

அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளில், வீட்டு வசதிப் பிரச்சினை தலைதூக்கி நிற்பதை நாம் பார்க்கிறோம். இதற்கு இந்தச் சங்கம் இனிய நண்பனாக இருந்து ஏற்றத் தாழ்வற்ற சமதர்மச் சமுதாயத்தை உருவாக்கப் பாடுபடுகிறது என்பதைப் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பேட்டி: பி.வி.ஜி.



தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கக் கட்டடம்





# பாப்பா எழுந்திரு

கவிஞர் ஈரோடு தமிழன்பன்

பாடசாலை போக வேண்டும்!
பாப்பா எழுந்திரு! — செல்வப்
பாப்பா எழுந்திரு! — அன்புப்
பாப்பா எழுந்திரு! — அழகும்
பையை நீயும் கையில் தூக்கிப்
பார்த்து நடந்திடு!

கேடு நீக்கும் கல்வி கற்கச்
சிந்தை யில்லையா! — கண்ணே!
சிந்தை யில்லையா! — பெண்ணே!
சிந்தை யில்லையா — நீ
கெட்டிக்காரன் ஆக வேண்டும்
விருப்பம் இல்லையா!

அறிவைப் பெருக்கும் நூல்கள் யாவும்
அறிய வேண்டுமே! — மணியே!
அறிய வேண்டுமே! — கனியே!
அறிய வேண்டுமே! — அறிந்து
அளவில்லாத நன்மை பெற்று
வாழ வேண்டுமே!

நெறியில் வாழ்வைச் செலுத்தும் கலைகள்
நினக்கு வேண்டாமா! — நிலவே
நினக்கு வேண்டாமா! — மலரே!
நினக்கு வேண்டாமா! — பெற்று
நீயும் கலைஞன் ஆக வேண்டும்
நினைப்பு வேண்டாமா!

கல்வி கற்றால் கவலை யில்லை!
கருத மாட்டாயா! — அமுதே!
கருத மாட்டாயா! — தேனே!
கருத மாட்டாயா! — கருதிக்
கற்று நாட்டை உயர்த்த நெஞ்சில்
கருத்துக் கொள்ளாயா!

கல்விக் கூடம் கனியின் தோட்டம்!
கனிகள் வேண்டாமா! — நல்ல
கனிகள் வேண்டாமா! — இன்பக்
கனிகள் வேண்டாமா! — உன்
கையை வீசி நடக்க நீயும்
முந்த வேண்டாமா!

எங்கள் அங்கத்தினர்களுக்கும், வாடிக்கையன்பர்களுக்கும்
"சிந்தாமணியின்" நல் வாழ்த்துக்கள் !

தரமான சரக்கு! சரியான எடை!! குறைந்த விலை!!!

உங்கள் குடும்பத் தேவைகளனைத்தும் ஒரே இடத்தில் பெற நம்பிக்கையான இடம்

**சிந்தாமணி கூட்டுறவுச் சிறப்பு அங்காடி**
**திருச்சிராப்பள்ளி**

தலைமையகம் : புத்தூர்.
தொலை பேசி : 3311, 3355

கிளைகள் : தெப்பக்குளம், பெல் (கைலாசபுரம்).
தொலை பேசி : 5519 280

உங்கள் தேவைக்கு எங்கள் சேவை நிலையங்கள்

- தையல் நிலையம்
- கடிகாரம் பழுது பார்க்கும் நிலையம்
- ரேடியோ மற்றும் மின்சாதனம் பழுதுபார்க்கும் நிலையம்
- ஆயுர்வேத மருந்து விற்பனை மற்றும் இலவச ஆலோசனை நிலையம்

அழைக்கின்றோம் அன்பாக! அளிக்கின்றோம் தரமாக!!

வணிகத்தைப் பெருக்கிடுவோம்! கூட்டுறவை வளர்த்திடுவோம்!!

எங்கள் உளங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்

**திருச்சிராப்பள்ளி மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம் லிட்.**
ஆர். 683
(ஹோலிகிராஸ் காலேஜ் சமீபம்), திருச்சிராப்பள்ளி-620 002.

உங்கள் கண்ணோட்டத்திற்கு:

| | | | |
|---|---|---|---|
| பங்கு மூலதனம் : | 7.60 | மொத்த உறுப்பினர் : | 16,600 |
| மொத்தக் கிளைகள் : | 11 | 74-75-ம் ஆண்டு விற்பனை : | 3 கோடி |

சங்கத்தின் சிறப்பான அங்கங்கள்:

அமராவதி கூட்டுறவுச் சிறப்பு அங்காடி — கரூர்
அமராவதி கூட்டுறவுச் சிறப்புச் சிற்றங்காடி — மணப்பாறை
அமராவதி கூட்டுறவுப் பண்டகசாலை — திருச்சி
அமராவதி கைலாசபுரம் ஷாப்பிங் சென்டர் 'ஏ'
அமராவதி கைலாசபுரம் ஷாப்பிங் சென்டர் 'பி'
அமராவதி ராம்ஜி நகர் (பஞ்சுமில்)
அமராவதி கலைஞர் கருணாநிதி நகர்
அமராவதி புலியூர் கிளை (கரூர்) செட்டிநாடு சிமெண்ட் தொழிற்சாலை

சிறந்த அச்சு வேலைகளுக்கு:
"ராக்—கோ—அச்சகம்"
திருச்சிராப்பள்ளி.

"மக்கள் சேவையே எங்களின் மகத்தான பணி"

ச. சுந்தரம், பி. பி. கே. ராஜாசிதம்பரம்,
செயலாளர்.

சிறுவர் அரங்கம்




## (1) கடல் எப்படித் தோன்றியது?

"அண்ணா, அண்ணா! அந்தக் கடலைப் பார்த்தீர்களா? எவ்வளவு அழகாய் இருக்கிறது"

"கடல் மட்டுமா அழகாய் இருக்கிறது? அதோ! அந்தக் கடல் அலைகூடத்தான் அழகாய் இருக்கிறது. இயற்கையின் படைப்பிலே எல்லாமே அழகாகத்தான் இருக்கும். வண்ண வண்ண மலர்களும், வகை வகையான மரஞ்செடி கொடிகளும், மலைகளும், வானும் நிலவும் எவ்வளவு அழகாய் இருக்கின்றன"

"ஆமாம் அண்ணா!. பௌர்ணமி நிலவு வெளிச்சத்திலே இந்தப் பரந்த கடலைப் பாருங்களேன். பாற்கடலாய்க் காட்சியளிக்கிறது!"

அலை கடலோரம்!

அண்ணனும், தங்கையும் பேசிக் கொண்டிருக்கின்றனர். காற்று வாங்கக் கடற்கரைக்கு வந்தவர்கள் சிற்றுண்டி உண்பதும், சிரித்து மகிழ்வதுமாக இருக்கின்றனர். சிறுவர் சிறுமிகள் மணலில் வீடுகட்டி ஆடிப்பாடுகின்றனர். சிலர் கடல் நீர் காலை நனைக்கும்படி நின்று மகிழ்கின்றனர். வேர்க்கடலை, பட்டாணி சுண்டல், ஐஸ் போன்ற பல்வேறு குரல்கள் ஏககாலத்தில் ஒலிக்கின்றன. அழகிய பொம்மைகள், பிளாஸ்டிக் சாமான்கள் போன்ற கடைகளுக்கும் அங்கே குறைச்சலில்லை.

ஆனந்தி வைத்த கண் வாங்காமல் அலை கடலையே பார்த்துக் கொண்டிருந்தாள். உயர்நிலைப் பள்ளி மாணவியான ஆனந்திக்குக் கதைகள் என்றால் உயிர்; அதுவும் உண்மைக் கதை என்றால் நேரம் போவதுகூடத் தெரியாமல் கேட்டுக் கொண்டிருப்பாள்.

ஆனந்தியின் அண்ணன் இரத்தினம் ஒரு பள்ளி ஆசிரியர். ஒரே தங்கையான அவளைக் கடற்கரை, கலைக்காட்சி, அரும்பொருட் காட்சி, விலங்குக் காட்சிச்சாலை, சுற்றுலா இப்படி எல்லா முக்கிய இடங்களுக்கும் தன்னுடன் அழைத்துப் போகத் தவறமாட்டார்.

வழக்கம்போல அன்றைக்கும் ஆனந்தியைக் கடற்கரைக்கு அழைத்து வந்திருந்தார் ரத்தினம். ஆனந்தி கண் கொட்டாமல் கடலையே பார்த்துக் கொண்டிருந்தாள். இன்றைக்கும் ஏதாவது கேள்விகள் கேட்டு 'அது என்ன ? இது எப்படி?' என்று திணற வைக்கப் போகிறாளோ? என்று இரத்தினம் நினைப்பதற்கும் ஆனந்தி கேள்வி கேட்பதற்கும் சரியாக இருந்தது—

"அண்ணா! இந்தக் கடல் எப்படித் தோன்றியது?"

சிந்தனையிலிருந்து விடுபட்ட அவள் அண்ணன், "ஓ, அதுவா? சொல்கிறேன் ஆனந்தி" என்று அவள் கேள்விக்கு விடை கூற ஆரம்பித்தார்.

"விந்தை உலகமான இந்தக் கடல் தோன்றியதை மனிதன் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே! ஏனென்றால் அவன் தோன்றுவதற்கு முன்பேயே இந்தக் கடல் தோன்றிவிட்டது!

"சூரியனைப் போல இந்தப்பூமி ஒரு காலத்தில் நெருப்பாக இருந்தது. அப்போது அதனை, நீரெல்லாம் நீராவியாகச் சுற்றிக்கொண்டிருந்தது. காலப் போக்கில் நீராவி குளிர்ந்தது. அதன் விளைவு? மேகம் திரண்டன. இடி, மின்னல், காற்று, பெருமழை! இப்படிப் பல ஆண்டுகள் அடாது மழை பெய்தது. அனற்பிழம்பான பூமியின் மேற்புறம் குளிர்ந்து இறுகியது. பூமியில் பள்ளங்கள் உள்ள இடங்களிலெல்லாம் நீர் நிறைந்தது. அவையே கடலாகப் பெருங்கடலாக மாறின. இப்படித்தான் கடல் தோன்றியது!"

"அப்படியா? கேட்கவே விந்தையாக இருக்கிறதே"

"விந்தைதான் ஆனந்தி. இந்த உலகமே ஒரு விந்தைதானே! இதிலே உள்ள ஒவ்வொரு உயிரும் ஒரு விந்தைதான். அவ்வளவு ஏன், இந்தக் கடலுக்குள்ளே வாழ்கிற அத்தனை உயிர்களும் விந்தைதான். அது மட்டுமா? கடலுக்கடியில் மலைத்தொடர்கள்,

[illegible] எரிமலைகள் ஆகியவை யும் உள்ளன. ஆனந்தி! இவற்றைப் பற்றியெல்லாம் பிறகு சொல்கிறேன். ஆமாம், கண்டம் என்றால் என்ன? இதற்குப் பதில் சொல் பார்க்கலாம்?''

''கண்டம்தானே? இதைப் பற்றித்தான் என்னுடைய பாடப் புத்தகத்தில் நிறையப் படித்திருக்கிறேனே! பூமியின் மேற்பரப்பில் துண்டிக்கப் படாத பெரிய நிலத் தொகுதிக்குத்தான் கண்டம் என்று பெயர். இதன் எல்லாப் பக்கங்களிலோ அல்லது ஒரு சில பக்கங்களிலோ கடல் சூழ்ந்திருக்கும்...'' என்று ஆனந்தி சொல்லி முடிப்பதற்குள் இரத்தினம், ''ஏதேது பாடத்தை அப்படியே ஒப்புவிக்கிறே போலிருக்கே!'' என்றார் சிரித்துக்கொண்டே.

''அண்ணா! நான் இன்னும் முடிக்கவில்லையே! ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகியவை எல்லாம் கண்டங்களாகும்.''

''ரொம்பச் சரி. நீ படித்ததை நன்றாக நினைவு வைத்திருக்கிறாய் ஆனந்தி! இந்தக் கண்டத்துக்குக் 'கண்டம்' வந்துவிட்டால் ஆபத்துத்தான்....''

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள் அண்ணா?''

''இந்தக் கண்டங்கள் இருக்கின்றனவே இவை மழையினாலும், காற்றினாலும் பாதிக்கப்படுவதுண்டு. அப்போது மண் முதலானவை கரைகின்றன. கரைந்தவை ஆற்றினால் அடித்துச் செல்லப்பட்டுக் கடலில் கலக்கின்றன. கடலில் இவை படிவதால் கடலின் படுகை மீண்டும் உறுதி பெற்றுக்கீழே அழுந்துகிறது. கண்டம் மேலே எழுகிறது. இப்படிக் கடல்படுகை அழுந்துவதும், அதன் விளைவாகக் கண்டம்மேலே எழுவதுமாக இருக்கும்.''

''அடிக்கடி இதுபோல் நடந்து கொண்டே இருக்குமா அண்ணா?''

''ஆமாம், ஆனந்தி. முன்பு தென் அமெரிக்காவும், அண்டார்க்டிகாவும், ஆஸ்திரேலியாவும் ஒரே கண்டமாகத்தான் இருந்தன. பண்டைக் காலத்திலிருந்த குமரிக்கண்டத்தைப் பற்றி நீ கேள்விப்பட்டிருப்பாய். நம் நாட்டின் தெற்கில் இருந்த இது கடலில் மூழ்கி மறைந்துவிட்டது. இதன் மிச்சம் மீதிதான் இன்றைய இலங்கை!''

''அப்படியா?''

''ஆமாம், ஆனந்தி! இதே போல் வட இந்தியாவில் முன்பு கடலாக இருந்த பாகம் மேலே எழுந்ததன் விளைவுதான், இமய மலையும், வட இந்தியச் சமவெளியும் என்றால் விந்தையாக இல்லையா?''

''இயற்கையின் விந்தையே விந்தை!'' என்ற ஆனந்தி, எதிரே ஆள் உயரம் அலை எழும்புவதைப் பார்த்து, ''அண்ணா! அண்ணா! அதோ அலை எவ்வளவு உயரம் எழும்புகிறது பாருங்களேன்....'' என்றாள்.

''இன்று அலை சற்று அதிகமாகத்தான் இருக்கும் ஆனந்தி!''

''ஏன் அண்ணா?''

''நிலவு இருக்கிறதல்லவா?''

''நிலவுக்கும் அலைக்கும் என்ன சம்பந்தம் அண்ணா?''

''இருக்கிறது ஆனந்தி. முதலில் அலை எப்படி உண்டாகிறது என் [illegible] அலைக்குக் காற்றுதான் முக்கியக் காரணம். காற்றானது அதன்மீது வீசுவதால் அலைகள் தோன்றுகின்றன. பூமிக்குப் புவி ஈர்ப்புச்சக்தி இருப்பது போல, சூரியனுக்கும் நிலவுக்கும்கூட ஈர்ப்புச் சக்தி இருக்கின்றது; அதுதான் கடல் நீரை மேலே இழுக்கும் சக்தி. நிலவு, பூமிக்கு அருகில் இருப்பதால் சூரியனைவிட அதன் ஈர்ப்புச் சக்தி அதிகமாகின்றது. இன்று பௌர்ணமி அல்லவா? அதாவது முழு நிலவின்போது கடல் அலைகள் சற்று சீறிப்பாயும்...'' என்று இரத்தினம் சொல்லிக் கொண்டிருந்தார். கடல் அலைகளின் இரைச்சல் காதைத் துளைத்துக் கொண்டிருந்தது.

''அது சரி அண்ணா! கடல் நீர் மட்டும் ஏன் நீலமாய் இருக்கிறது?''

''இதற்குச் சூரியன்தான் காரணம்''

''சூரியனின் ஒளி வெண்மையாகத்தானே இருக்கிறது?''

''ஆமாம். அந்த ஒளியை ஒரு முப்பட்டைக் கண்ணாடிக்குள் ஊடுருவ விட்டால் ஏழு நிறங்களை நாம் காணலாம்.''

''வானவில்லைப் போலத்தானே?''



[illegible] ஒளியில் இந்த ஏழு வண்ணங்களும் ஒளிந்து கொண்டிருக்கின்றன. சூரிய ஒளி கடலினுள் நுழைந்ததும் சிவப்பு, மஞ்சள் மற்ற வண்ணங்கள் மறைந்து விடுகின்றன. ஆனால் பச்சை, நீல நிறத்தை மட்டும் கடல் நீர் வெளிவிடுகிறது. இதனால் கடல் நீர் நீல நிறமாய்க் காட்சியளிக்கிறது.''

அண்ணனும் தங்கையும் அறிவியலில் மூழ்கிக் கொண்டிருந்த போது ஒருவன் 'மாங்காய் தேங்காய் பட்டாணி சுண்டல்!' என்று கூவிக் கொண்டே வந்து அவர்கள் சிந்தனையைக் கலைத்தான். இரத்தினம் அவனை அழைத்து இரண்டு பொட்டலம் சுண்டல் வாங்கிக் கொண்டார். இருவரும் அதைச் சுவைக்க ஆரம்பித்தனர்.

''ஐயோ! ஒரே உப்பு.....'' ஆனந்தி விழுங்க முடியாமல் கீழே காரித் துப்பினாள்.

உடனே இரத்தினம், ''உப்பில்லாப் பண்டம்தான் குப்பையிலே என்பார்கள். சுண்டலில்தான் உப்பு இருக்கிறதே...'' என்றார்.

''என்ன அண்ணே, கிண்டலா? அளவுக்கு மிஞ்சினா அமிர்தமும் நஞ்சுண்ணு சொல்வாங்களே அது உங்களுக்குத் தெரியாதா என்ன? இந்தச் சுண்டலிலே தாராளமாக உப்பை அள்ளிப் போட்டிருக்கிறாரே, அதை எப்படித்தான் தின்னுவது?''

''உண்மைதான் ஆனந்தி, உப்பு என்றதும், இந்த உப்பை உலகுக்கு வழங்கி வருகிற கடலை நாம் உள்ளளவும் நினைக்கணும். உப்பிட்டவரை உள்ளளவும் நினைன்னு சும்மாவா சொன்னாங்க பெரியவங்க?..''

''ஆமா, இந்த உப்பு, கடல் நீரிலே மட்டும் எப்படிக் கலந்திருக்கிறது? ஆற்றிலோ ஏரியிலோ அல்லது குளம் குட்டைகளிலோ உள்ள நீரில் உப்பு இல்லையே!'' என்றாள் கையால் மண்ணைத் துழாவியபடியே ஆனந்தி.

''அப்படிக் கேள் ஆனந்தி!'' என்ற இரத்தினம், சற்றுத் தொலைவில் சோடா விற்றுக் கொண்டிருந்தவனைக் கூப்பிட்டார்.

''என்ன? தாகமா அண்ணா? நமக்கு எதிரே இவ்வளவு தண்ணீர் இருந்தும் தாகம் தீரக் குடிக்க முடியலேபார்த்தீங்களா?'' என்றாள் சிரித்துக் கொண்டே ஆனந்தி.

இரத்தினம் சோடாவை வாங்கிக் குடித்துவிட்டுச் சொல்வதற்கு அறிகுறியாகத் தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

''ஒரு சில ஆறு, ஏரிகளிலும் கூட உப்பு இருக்கத்தான் செய்கின்றது. ஆறு, ஏரி, குளங்கள் போன்ற நீர்நிலைகளுக்குக் காரணம் மழையே அல்லவா? இந்த மழைநீர் ஆறாகவும், ஏரியாகவும் உருவாகிக் கடைசியில் கடலில் வந்து கலக்கின்றனவல்லவா? அவ்வாறு இவை ஓடிவரும்போது மண்ணிலும், பாறைகளிலும் உள்ள உப்புக்களைக் கரைத்துக் கொண்டு வருகின்றது. இந்நிகழ்ச்சி அவ்வப்போது நடைபெறுவதால் காலப்போக்கில் உப்பின் அளவு கடலில் ஏறிக்கொண்டே போகிறது. இவையன்றிக் கடல் நீரானது எப்பொழுதும் ஆவியாகிக் கொண்டே இருக்கின்றது. கடல் நீர் ஆவியாக மாறும் போது அதில் கலந்துள்ள உப்பு மட்டும் ஆவியாவதில்லை. ஆகவே, உப்பு அப்படியே கடலில் தங்கி விடுகிறது. இதனால்தான் கடல் நீர் உவர்ப்பாக இருக்கிறது.''

''ஆறுகளிலும், குளங்களிலும், ஏரிகளிலும் உப்பு இருக்கின்றது என்று சொன்னீர்களே. அதைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்?''

''அண்மையில் சோவியத் நாட்டில் இதுவரை கண்டுபிடிக்கப் படாத ஆறு, ஏரிகளை விஞ்ஞானிகள் இப்போது கண்டு பிடித்திருக்கிறார்கள். அவை மனிதன் செல்ல முடியாத மலை முகடுகளில் அதாவது கடல் மட்டத்திலிருந்து 2000 மீட்டர்கள் உயரத்தில் உள்ளனவாம்......''

''இந்த ஏரியில் உப்பு இருக்கிறதா, அண்ணா?''

''ஆமாம். இந்த ஏரிகளில் உள்ள நீரில் பலதரப்பட்ட உப்புகளின் கலப்பு அதிகமாக உள்ளது. ஒரு லிட்டர் நீரில் 235 கிராம் உப்பு கலந்துள்ளதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்த ஏரிகள் பனியால் மூடப்பட்டு இருப்பினும் தண்ணீரின் வெப்ப நிலை 40 டிகிரி செண்டி கிரேடாக உள்ளது. உப்பு அதிகமாக உள்ள இந்தப் பூரிதக் கரைசல் எப்படி வெப்பமாக இருக்கிறது தெரியுமா?''

''ம்..சொல்லுங்கள்..''

''இந்த ஏரிகள் ஒரு பெரிய நில வெடிப்பின் அருகில் உள்ளன. பூமிக்கடியில் இருக்கும் வெப்பம் இந்த வெடிப்பு மூலம் ஏரிகளுக்குச் செல்லலாம். தவிர நீரில் கரைந்துள்ள உப்புக்களின் காரணமாகச் சூரிய சக்தியை ஈர்த்துத் தேக்கி வைத்துக் கொள்ளும் தன்மையையும் அவை பெற்றுள்ளன. இதேபோன்று, அமெரிக்காவிலுள்ள ஏரியிலும் உப்பு அதிகமாக இருக்கிறது.''

''அப்படியா அண்ணா?''

''ஆமாம் ஆனந்தி. நல்ல நீரில் இருப்பதைவிட கடல் நீரில் சுமார் 200 மடங்கு உப்பும் பொருள்கள் கரைந்திருக்கின்றன. இந்தப் பொருள்களின் அளவு 3.5 சதவிகிதம். இந்தப் பரந்த கடலில் சுமார் 10 இலட்சம் கோடி டன் எடையுள்ள உப்பு இருக்கின்றதாம். கடல் நீரில் கரைந்துள்ள உப்பில் 88.5 சதவிகிதம் சோடியம், மக்னீசியம் குளோரைடுகளும் மீதியாக மக்னீசிய, கால்சிய, பொட்டாசிய சல்பேட்டுகளும் உள்ளன.

''நாம் உட்கொள்ளும் சாதாரண உப்பை சோடியம் குளோரைடு என்கிறோம். அதாவது உப்பைப் பிரிக்கும்போது சோடியமும் குளோரினும் நமக்குக் கிடைக்கின்றன. சோடியத்திலிருந்து சோடியம் ஹைட்ராக்சைடு என்ற காரப் பொருள் தயாரிக்கப்படுகிறது....''

''இந்தப் பொருள்களால் நமக்கு என்ன நன்மை?'' என்று ஆனந்தி கேட்டுக் கொண்டிருக்கும்போது, ஒரு சிறு நண்டு ஆனந்தியின் காலை உரசிக்கொண்டு விரைந்தது.

''இந்தச் சட்டை எவ்வளவு வெண்மையாக இருக்கிறது பார்த்தாயா?''

''ஆமாம். உப்பைப்போல வெண்மையாக இருக்கிறது.''

''அழுக்குத் துணிகளை இப்படி வெள்ளை வெளேரென்று வெளுப்பதற்கு இந்த ஹைட்ராக்சைடிலிருந்து துணி வெளுக்கும் சோடா தயாரிக்கப்படுகிறது. இவையன்றி ரொட்டிச் சோடா, புகைப்படம் கழுவ உதவும் 'ஹைப்போ' எனும் பொருளும் இதன் மூலம் தயாராகின்றன. குளோரைடிலிருந்து பொட்டாசியம் குளோரேட், பிளீச்சிங் பவுடர். ஹைட்ரோ குளோரிக் அமிலம் முதலியவை தயாரிக்கப்படுகின்றன. இவை மட்டுமா? உன் காதிலே 'ஜம்' மென்று காட்சியளிக்கிறதே [illegible] பிளாஸ்டிக் கூடக் குளோரினிலிருந்தே தயாரிக்கப்படுகின்றது.''

''உணவுப் பொருள்களைப் பல நாட்களுக்குக் கெடாமல் பாதுகாப்பதும் இந்த உப்புத்தான் என்று அம்மா சொல்லக் கேட்டிருக்கிறேனே'' என்று ஆனந்தி சொன்னாள்.

''ஆமாம். அந்த அரிய சக்தி உப்புக்கு இருக்கிறது. உப்பானது உணவுப்பொருளுக்கு மட்டுமின்றி பலவிதமான தொழில்களுக்கும் உற்ற நண்பனாக இருந்து வருகிறது. தோலைப் பதப்படுத்துதல், சோப்பு செய்தல் ஆகியவற்றுக்கும், சாயத் தொழில், கண்ணாடித் தொழில், காகிதத் தொழில், நிலத்திலிருந்து கிடைக்கும் எண்ணெய்யைச் சுத்தமாக்குதல் போன்றவற்றுக்கும் உப்பு இன்றியமையாத பொருளாக இருந்து வருகிறது....''

''அடேயப்பா! உப்பு நம்முடைய சாப்பாட்டுக்கு மட்டும் தான் பயன்பட்டு வருகிறது என்று இத்தனை நாளும் எண்ணியிருந்தேன். இன்றுதான், அது எத்தனைத் தொழில்களுக்கு உதவியாக இருந்து வருகிறது என்று அறிந்து கொண்டேன்.'' என்றாள் ஆனந்தி.

உடனே இரத்தினம், ''இதைச் சொன்னால் நீ நம்புவாயோ; நம்ப மாட்டாயோ. நாம் உட்கொள்ளும் சாதாரண உப்பு எரிமலைகளிலிருந்துதான் தோன்றியதாம்!'' என்று சொன்னதும் ஆனந்தி, ''என்ன அண்ணா இது, எரிமலையிலிருந்து நெருப்புதானே கிடைக்கும்? உப்பு எங்கேயாவது கிடைக்குமா?'' என்றாள் கேலியாகச் சிரித்துக்கொண்டே.

—வளரும்.

# தமிழ்நாட்டில் உலோகக் கனிமப் படிவங்களை உண்டாக்கிய ஊழிகள் (MINEROGENTIC EPOCHS IN TAMILNADU)

டாக்டர் இரா. இராமசாமி,
தமிழ்நாடு ஞாலவியல் துறை.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் எரிமலைப் பிதுக்கங்களும், பாறைக்குழம்பு ஊடுருவல்களும் நிகழ்ந்துள்ளன. இதனால் உலோகக் கனிமச் செறிவும், உலோகக் கனிமப் படிவங்களும் (Ore Deposits) தோன்றியுள்ளன. குறிப்பிட்ட ஊழிக் காலத்தில் குறிப்பிடத் தகுந்த சிலவகைத் தனிமங்களே (Elements) செறிந்துள்ளன. ஆகையால் இக்குறிப்பிடத்தகும் தனிமங்களைக் கொண்டு இவ்வூழிகளைப் பெயரிடலாம்.

தனிப் பெரும் தன்மை வாய்ந்த பொன்—வெள்ளி ஊழிக் கால இயக்கங்கள் கோலார் பொற் கனிக்களத்திற்கு நேர்எதெற்காக உள்ள தர்மபுரி, சேலம், நீலகிரி கோயமுத்தூர் மாவட்டங்களிலும், குரோமிய நிக்கல் ஊழிக் கால இயக்கங்கள் தர்மபுரி, சேலம், கோயமுத்தூர் மாவட்டங்களிலும், பிளாட்டினம் — இரும்பு—தைத்தானிய ஊழி திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களிலும்; தாமிரம், ஈயம், துத்தநாக ஊழி வட ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களிலும், கரித்தனிம ஊழி மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களிலும் ; சீரியம், யுரேனியம், தோரியக் கதிரியக்க ஊழி கன்னியாகுமரி, திருநெல்வேலி, தர்மபுரி, வடஆர்க்காடு, தஞ்சாவூர், இராமநாதபுர மாவட்டங்களிலும்; பேரியத் தனிம ஊழி வடஆர்க்காடு, தர்மபுரி மாவட்டங்களிலும் ; வெள்ளீய உல்புர மாலிபிடின ஊழி மதுரை, கோயமுத்தூர் மாவட்டங்களிலும் நிகழ்ந்துள்ளன.

## தமிழ்நாட்டில் உலோகக் கனிமப் படிவங்களை உண்டாக்கிய ஊழிகள்

| எண். | ஊழியக்காலம் | தனிமச்செறிவு | கனிமப் படிவத்தை உண்டாக்கும் பாறைகள் | வயது ஆயிரமாயிர ஆண்டுகள் | புவியமைப்புச் சுழற்சி வட்டம் |
|---|---|---|---|---|---|
| 1. | பொன், வெள்ளி ஊழி | இரும்பு, மங்கனீசு, பொன், வெள்ளி, இட்டிரியம் | அதிபேசிக்குப் பாறைகள், நைசு, சிஸ்டுப் பாறைகள் | 3,000 | தார்வார் |
| 2. | குரோமிய, நிக்கல் ஊழி | குரோமியம், பிளாட்டினம், இரும்பு, தைத்தானியம், நிக்கல், வனடியம், கோபால்ட்டு, ஸ்காண்டியம், இலித்தியம், இண்டியம் | அதிபேசிக்குப் பாறைகள், நைசுப் பாறைகள் | 2,500 | தார்வார் |
| 3. | தாமிர-ஈய துத்தநாக ஊழி | தாமிரம், நிக்கல், பாஸ்பரஸ், ஈயம், துத்தநாகம், காட்மியம், பாதரசம் | பைராக்சினேட்டு, சார்னகைட்டுப் பாறைகள் | 2,000 | கிழக்குத் தொடர்ச்சி மலைகள் |
| 4. | கரிம ஊழி | ஸ்ரான்சியம், கால்சியம், மாங்கனீசு, மக்னீசியம், உல்பரம், ஸ்காண்டியம், கரி, சோடியம். | சயனேட்டு, கிரானேட்டு, காரத்தன்மையுள்ள பாறைகள், சோடா கிரானேட்டுகள் | 1,600 | கிழக்குத் தொடர்ச்சி மலைகள் மலைகள் |
| 5. | கதிரியக்க, சீரிய, தோரிய, ஊழி | சீரியம், நியோபியம், தாந்தாலம், தோரியம், யுரேனியம், சிர்கோனியம், வெள்ளீயம், மாலிபிடினம், பேரியம் | காரத்தன்மையுள்ள பாறைகள், கார்பானைட்டுகள் | 900 | சாத்பூரா |
| 6. | வெள்ளீய, உல்புர மாலிபிடின ஊழி | வெள்ளீயம், உல்பரம், மாலி பிடினம், பேரியம், பொட்டாசியம் | கிரானேட்டுகள், இலாம்ரேபயர்கள், பொட்டாசியப் பாறைகள் | 600 | இந்தியப் பெருங்கடல் |

[illegible]ந்கண்ட அட்டவணை இது [illegible]வரை கிடைத்துள்ள கனிமப் படிவுகளின் வயதைக் கதிரியக்க முறையில் கணித்தும் அவற்றின் காலவரை அடுக்கியல் புவி அமைப்புப்புலங்களைக் கொண்டும் (Chrono Stratigraphic Trends) தயாரிக்கப்பட்டுள்ளது.

பாறைகளிலும், கனிமங்களிலும் குறிப்பிட்ட அருகிய தனிமங்களின் (Trace Elemental Concentration) செறிவைக் கொண்டு பாறைகளின் வயதையும் ஊழிக்காலத்தையும் கூறலாம். குறிப்பிட்ட சில தனிமங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பல ஊழிக்காலங்களில் தொடர்ந்து உண்டாகியிருந்தாலும் அவற்றுடன் சார்ந்த பிற தனிமங்களின் உச்ச செறிவைக் கொண்டு ஊழிக் காலத்தின் வயதைக் கண்டுபிடிக்கலாம். இரும்பு, தாமிரம், கால்சியம், மங்கனீசு, அலுமினியம் போன்ற தனிமங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட ஊழிகளில் செறிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தனிமங்கள் பாறைக்குழம்புப் படிகச் செறிவுடன்மட்டுமல்லாது எஞ்சிய கனிமப் படிவங்களாகவும், பிந்திய நிலைச் செறிவாலுண்டானவையாகவும் இருப்பதால் அவைபல்வேறு ஊழிக்காலத்தைக் காட்டுகின்றன. தமிழ் நாட்டில் இரும்புக் கனிமப் படிவுகளும், சுண்ணாம்புப் பாறைப் படிவங்களும் (Crystaline Lime Stone Deposits) இவ்விதமுண்டானவையாகும்.

ஒவ்வொரு ஊழிக்காலத்திலும் குழம்புப் படிகப் பாறைகள் தோன்றுகின்றன. இவற்றில் குரோமியம், நிக்கல், கோபால்ட்டு ஸ்காண்டியம், இட்டிரியம், வனடியம், இலிதியம், இண்டியம், தாமிரம், ஸ்ரான்சியம், ஈயம் [ காரீயம் (Lead) ], வெள்ளீயம் (Tin), பேரியம் ஆகிய தனிமங்கள் தொடர்ச்சியாகச் செறிவுறுகின்றன. பல்வேறு வகையான தனிமங்களும் உள்ளடங்கிய சிலிக்கேட்டுக் கனிமங்கள் [illegible]ன்மையே கால ஊழிகளிலும், போரேட்டுகள், ஆர்சனேட்டுகள், பாஸ்பேட்டுகள், சல்பேட்டுகள், கார்பனேட்டுகள் பிற்பட்ட ஊழிகளிலும் காணப்படுகின்றன. உடன்தோன்றும் கனிமங்களின் (Mineral Paragenesis) வயதைக் கண்டுபிடித்தும் ஊழிக் காலத்தைக் கூறலாம். எனவே பாறைகளில் உள்ள உடன்தோன்றும் கனிமங்களையும், கனிம இயலையும் ஆராய வேண்டும்.

தமிழ்நாட்டில் பெரிய அளவில் கனிமப் படிவுகளை இவ்வூழிகள் பல்வேறு புவி அமைப்புச் சுழற்சி வட்டங்களில் (Tectonic Cycles) தோற்றுவித்துள்ளனவா என்பது குறித்து ஆராய்ச்சி நடந்து வருகின்றது. உலோகக் கனிமப் படிவுகளை உண்டாக்கும் ஊழிகள் உலகளாவிய வண்ணத்தில் நிலவியிருந்தமையால் தமிழ் நாட்டில் இவ்வூழிகளின் தடயங்கள் தென்படுகின்றன.


## சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை) எண் 151.
## சேலம்-1.

தபால் பை எண். 171 தொலைபேசி எண் : 2402

கிளைகள் : நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணாபுரம் சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, பெத்தநாய்க்கன் பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

சொந்த நிதி ரூ. 327 லட்சம். நடைமுறை மூலதனம் 1711 லட்சம்.

### வட்டிவிகித அட்டவணை

கால் டெபாசிட்டுகள் : ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் (முன் அறிவிப்பு இல்லாமல்) $3\frac{1}{4}\%$
ரூ. 10,000/-க்கும் அதற்கு மேலும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்) $3\frac{1}{2}\%$

சிசன் டெபாசிட்டுகள் : ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும்
15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும் 3%
46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும் $3\frac{1}{2}\%$

பிக்செட் டெபாசிட்டுகள் : ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு :
1. 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் 6%
2. 6 மாதத்திற்கும் அதற்குமேல் 9 மாதத்திற்குள் $6\frac{1}{2}\%$
3. 9 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் $7\frac{1}{2}\%$
4 12 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் $8\frac{1}{2}\%$
5. 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் $9\frac{1}{2}\%$
6. 61 மாதத்திற்கும் அதற்குமேலும் $10\frac{1}{2}\%$

சேமிப்புக் கணக்கு 6%

நடப்புக் கணக்கு $\frac{1}{2}\%$

ரூ. 5000/-க்கு மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு. பிக்செட் டெபாசிட்டுகளின்மீது மாதாந்திர வட்டி உண்டு. ரெக்கரிங், பிராவிடெண்ட் டெபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்புகொள்க.

இ. பாலசுந்தரம், பி.ஏ., துணைப் பதிவாளர், நிர்வாக அதிகாரி.
பி. காசி, பி.எஸ்.சி., எச்.டி.வி., காரியதரிசி.
எஸ். ஆறுமுகம், தலைவர்.

# நிழல் ③

## பட்டுக்கோட்டை குமாரவேல்

புதுமணத் தம்பதிகளின் புது வாழ்வு-வாழ்வை வெளியிலுள்ள இளம் உள்ளங்கள் கற்பனை செய்து கொண்டிருந்தன. இன்ப உலகம் எப்படி இருக்கும்? சொர்க்கத்தின் முதல்படிதான் முதல் இரவோ என்று புரியாத உள்ளங்கள் ஏக்கத்தோடு துடித்துக் கொண்டிருந்தன. புதுமணத் தம்பதிகளின் சிரிப்பொலிகள் கேட்டன. சந்திராவின் வளையல்களின் ஒலிக்கு அவள் கால்களில் போட்டிருந்த சலங்கைக் கொலுசின் சப்தம் நாட்டியமாடியது. கால் விரல்களில் போட்டிருந்த மெட்டிகள் தாளம் போட்டன.

இரகசியப் பேச்சும், பெருமூச்சும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளும் ஒலிகளும் வெளியே இருந்தோருக்குக் கேட்டன. பிறகு கொஞ்ச நேரம் கழித்து எங்கும் அமைதி நிலவியது.

இரவு முடிந்து புதுமணத் தம்பதிகள் எழுந்து வருவார்கள் என்று எதிர்பார்த்தான் மேகநாதனின் சமையல்காரன் சங்கரன். காப்பி கொடுப்பதற்காக வெளியே காத்து நின்றான். இரண்டு மூன்று முறை சாத்தியிருக்கும் கதவுவரை போனான். கதவைத் தட்டாமலே திரும்பி வந்துவிட்டான். காலை மணி எட்டு என்று கடிகாரம் சொல்லிக் கொண்டே ஓடிக்கொண்டிருந்தது. வெளியில் படுத்திருந்த உறவினர்கள் புதுமணத் தம்பதிகளைப் பார்க்கக் காத்து நின்றனர்.

எட்டி எட்டிப் பார்த்து ஏமாற்றம் அடைந்த குமரிப் பெண்கள் கூட இன்னமுமா தூக்கம் என்று அசந்து விட்டனர். மணி ஒன்பதாகி விட்டது. கோவையிலிருந்து சமையற்காரனுக்குப்போன் செய்தார் மேகநாதன்.

''இரவு தாளிடப்பட்ட கதவு இன்னும் திறக்கப்படவில்லை'' சமையல் சங்கரன் பதில் சொன்னான்.

''பொழுது விடிந்து ஒன்பது மணி ஆகியும் இன்னும் கதவு திறக்கவில்லையா?'' அடுத்த விநாடியே மேகநாதன் ஊட்டிக்குப் புறப்பட்டு விட்டார்.

மேகநாதனின் கார் மணமக்கள் இருந்த அவர் பங்களா வாசலில் வந்து நின்றது. சமையற்காரன் ஓடிவந்து காரின் கதவைத் திறந்தான். மேகநாதனின் கண்கள் கேள்விக் குறியாக நின்றன.

''சாவித் துவாரம் வழியாகப் பார்த்தேன். இருவரும் நன்றாகத் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். கதவைத் தட்டி எழுப்புவதாகச் சொன்னவர்களையும் தடுத்து விட்டேன்.'' என்றான் சமையல்கார சங்கரன்.

வாலிபனைப்போல மேகநாதன் மாடிப்படி ஏறி ஓடினார். சாவித் துவாரம் வழியே பார்த்தார். சமையற்காரன் சொன்னதுபோல அறைக்குள் விநாயகம் படுக்கையில் இல்லை. மணமகள் சந்திரா மட்டும் படுக்கையில் படுத்திருந்தாள். மணமகன் விநாயகம் எழுந்து விட்டான் என்று எண்ணிக் கதவைத் தட்டினார் மேகநாதன். யாரும் கதவைத் திறக்கவில்லை. மறுபடியும் பலமாகத் தட்டினார். சந்திரா எழுந்திருக்கவில்லை. கடிகாரத்தில் வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் முட்களைப் போல அவர் விநாடி எண்ணங்கள் அவருக்கு முன்னே ஓடிக்கொண்டிருந்தன. சாத்தியிருந்த அறைக்கதவை மேலும் தட்டினார். பலமுறை பலமாகத் தட்டியும் கதவு திறக்கவில்லை. படுக்கையில் படுத்திருந்த சந்திராவும் எழவில்லை. மேகநாதனின் இதயம் கனத்தது. திக்கென்றது. மணமக்களைப் பார்க்கக் கீழே காத்திருந்தவர்களை மேலே வரக்கூடாதென்று உத்தரவிட்டார். வேலையாளைக் கூப்பிட்டுக் கதவின் தாழை உடைக்கச் சொன்னார்.

அறைக்குள் போனார் மேகநாதன். சந்திரா அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். சந்திராவைத் தட்டி எழுப்பினார் மேகநாதன். கனவு கண்டு விழிப்பவளைப் போலத் திடுக்கிட்டு எழுந்தாள் சந்திரா. கணவன் விநாயகம் எங்கே என்று கேட்டார் மேகநாதன். போதைகொண்டவளைப் போல சந்திரா விழித்தாள். என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் தடுமாறினாள்.

பக்கத்திலிருந்த குளிக்கும் அறைக் கதவு உள்ளே தாளிட்டிருந்ததால் கதவைத் தட்டினார். கதவு திறக்கப்படவில்லை. பலமுறை தட்டியும் அறைக் கதவு திறக்கப்படாததால் வீட்டின் பின்புறமாக வரும் கழிவுக்குழாய் வழியாக ஏறிக் குளிக்கும் அறையின் ஜன்னல் பக்கமாக எட்டிப் பார்க்கச் சொன்னார். குழாய் வழியாக ஏறி ஜன்னல் வழியாக வேலைக்காரன் பார்த்ததும் 'வீல்' என்று கூச்சலிட்டான்.

''என்னடா?'' என்று மேகநாதன் கத்தினார்.

அந்த மாப்பிள்ளைப் பையன் பிணமாகக் கிடக்கிறார் எஜமான். அந்தக் காட்சியைப் பார்க்கவே பயமா இருக்குங்க'' அலறிப் புடைத்துக் கொண்டு தென்னை மரத்திலிருந்து இறங்கும் குரங்கைப் போல வேகமாக இறங்கினான் வேலையாள்.

''வீல்'' என்ற வேலைக்காரனின் சப்தம் மேகநாதனின் நெஞ்சத்தைக் கலக்கி விட்டது.

கோவையில் இருக்கும் நண்பர் கருணாகரனுக்கும் வேதாரண்யத்திலிருக்கும் சுந்தர பாண்டியனுக்கும் போனில் விவரத்தைச் சொல்லிவிட்டுப் போலீசுக்கும் போன் செய்துவிட்டார்.

இரவில் இன்ப உலகத்தில் பறந்து கொண்டிருந்த இரண்டு ஜீவன்களில் ஒன்று உயிரற்ற பிணமாகக் கிடந்தது. அன்றில் பறவைகளைப்போலக் கொஞ்சி விளையாடிய பறவைகளில் ஒன்று ஏனோ இறந்துவிட்டது! தூக்கக் கலக்கத்தில் விழித்த சந்திரா தன் கணவனின் நிலை தெரிந்து மயங்கிக் கீழே விழுந்து விட்டாள்.

மயங்கி விழுந்த சந்திராவை மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டு வருவதற்குள் மணமகனின் மர்மச்சாவு அக்கம் பக்கமெல்லாம் பரவி ஊரே கூடிவிட்டது. விடிய விடிய எரிந்து கொண் ... விளக்குகளின் ...

அழகைப்பற்றியும், மணமக்களை வரவேற்க மேகநாதன் ஏற்பாடு செய்திருந்த ஆட்டத்தை நினைவு படுத்தியும் அங்கலாய்த்தனர் மக்கள். முதல்நாள் பாட்டைக் கேட்டு மகிழ்ந்த மக்கள் மறுநாள் பாவம் என்றனர். எப்படித்தான் அந்தப் பாவி மகன் இவளை மறந்து இறந்தானோ? என்று சந்திராவின் நிலைபார்த்த மக்கள் அனுதாபத்தால் கண்கலங்கி நின்றனர். மேகநாதன் புயலில் அகப்பட்ட தென்னை மரம்போலத் தலைசுற்றி நின்றார்.

கருணாகரனிடமும் சுந்தர பாண்டியனிடமும் நட்பைத் தேடிக் கொள்ள அவர் பட்ட பாடும் அதற்காக அவர் செய்த செலவுகளும் கொஞ்சநஞ்சமல்ல. நண்பர்கள் இருவரும் தன்மீது நம்பிக்கை வைக்க அவர் செய்த வேலைகள், தியாகங்கள், செலவுகள் ஏராளம். அத்தனைத் தியாகங்களும் செலவுகளும் ஒரே இரவில் பயன் தரமுடியாமல் தரைமட்டமாகி விட்டதே என்று மனம் நொந்துபோய் உலவிக் கொண்டிருந்தார்.

போலீஸ் வந்தது. மாடியிலுள்ள குளிக்கும் அறைக்குள் பிணமாகக் கிடந்த விநாயகத்தை போலீசார் நன்றாகப் பார்த்தார்கள். அவர்கள் குறிப்பெடுத்துக் கொண்டபின், விநாயகத்தின் உடம்பைப் பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். வேதாரண்யத்திலிருந்து விநாயகத்தின் தந்தை சுந்தரபாண்டியன் வந்தார். அலறித் துடித்தார். அவர் மனைவி மண்ணிலே புரண்டழுதாள். மகனை இழந்து தவிக்கும் கோடீஸ்வரன் சுந்தரபாண்டியன் தம்பதிகளைப் பார்த்த மக்கள் கண்களெல்லாம் குளமாகி நின்றன.

வாழ்விழந்த மணமகள் சந்திராவின் நிலையை நினைத்து அழுவதா? தனக்கு வாழ்வளித்த நண்பர்களின் நிலை கண்டு துடிப்பதா? வாழ்நாளில் சேர்த்த செல்வங்களுக்கெல்லாம் ஒரே வாரிசாக வளர்ந்திருந்த விநாயகத்தை இழந்து புழுவாய்த் துடிக்கும் சுந்தரபாண்டியனைப் பார்த்துக் கலங்குவதா? கண்கலங்கி நிலை தடுமாறிக் கொண்டிருந்தார் மேகநாதன்.

மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனை முடிந்ததும் சடலமாகக் கிடந்த விநாயகத்தை அவன் தந்தை சுந்தரபாண்டியனிடம் ஒப்படைத்தார்கள். விநாயகத்தின் இறுதிச் சடங்குகளைச் செய்ய முதல் நாள் இரவு மணமக்களை ஏற்றி வந்த அலங்காரக் காரிலேயே வைத்து மயானத்திற்கு கொண்டு போனார்கள். முதல்நாள் மகிழ்ச்சியோடு ஊர்வலமாக வந்த ஊரார் மறுநாள் கண்ணீரோடு ஊர்வலமாக



யானத்திற்குச் சென்றனர். சவ
ர்வலத்தின் முன்னே வாழ்
ழந்த சந்திராவின் தந்தை
ருணாகரன் தலை குனிந்து சென்று
காண்டிருந்தார். அவர் பக்கத்
திலே அநியாயமாகத் தன் மீது
ரோ சுமத்திவிட்ட பழியைத்
ங்கிக் கொண்டிருந்த மனச்
மையோடு மேகநாதன் நடந்து
காண்டிருந்தார். அவர்களுக்குப்
ன்னால், தான் பெற்ற தவப்
தல்வன் மாயமாய் மாண்ட
ரணம் புரியாமல் கால்கள்
ன்னப் பின்ன நடந்து போய்க்
காண்டிருந்தார் சுந்தரபாண்
யன். அவருக்குப் பின்னால்
வர் காலத்தில் சேர்த்த பணத்
திற்காக அவர் செய்த குற்றங்கள்
ழலாகச் சென்று கொண்டிருந்
ன. அந்த நிழல்களோடு நிழ
லாகச் சென்ற வயதான உருவம்
ட்டும் பைத்தியம் போலத்
னே சிரித்துக் கொண்டு சென்
து. அங்கு நடந்த சம்பவத்
தைப் பார்த்த உயிர்களும்
ட்ட மக்களும் கலங்கிக் கண்
ர் வடித்துக்கொண்டு போகும்
பாது அந்தக் கிழவன் மட்டும்,
னே சிரித்துக் கொண்டுபோகக்
ரணம்! பைத்தியமா? பழி
ர்த்துக் கொண்ட பெருமிதமா?
ராரின் கண்களெல்லாம் குள
க அந்த உருவம் மட்டும்
கிழ்ந்திருக்கக் காரணம்? யார்
ந்த உருவம்? ஏன் சிரித்தது?

. சட்டமும் சமூகமும் யாரையும்
காலை செய்ய அனுமதிப்ப
ல்லை. தற்கொலை செய்து
காள்ளவும் விடுவதில்லை. சமூகம்
ற்றவாளியைக் காட்டிக்
காடுத்துவிடும். சட்டமும்
தடிப் பிடித்துத் தண்டித்து
டும்.

விநாயகத்தின் உயிர் அவன்
டலிலிருந்து பிரிந்ததற்குக்
ரணம் கொலையா தற்கொலையா
ன்று ஆராய்ந்து தண்டிக்கக்
வல் துறையினர் தீவிரமாகப்
ன் விசாரணை செய்தபின்
ந்த பங்களா உரிமையாளரான
மகநாதனையும் அங்கு வேலை
ய்த ஆட்கள் சிலரையும் கைது
ய்தனர்.

குற்றவாளியைக் கண்டுபிடிக்க
ந்திருந்த போலீஸ் இன்ஸ்பெக்
ர் புண்ணியகோடிக்குத் திரு
ளர் மேகநாதன் மனைவி மரக
ம் பெரிதும் உதவியாக இருந்
ள். குற்றவாளியைக் கண்டு
டிப்பதில் மரகதத்திற்கு இருந்த
ர்வத்தையும் பரபரப்பையும்
ர்த்த புண்ணியகோடி திகைத்
ர்.

கைது செய்யப்பட்டவர்களில்
வர் தன் கணவன் என்று

## நினைவிருக்கட்டும்!
**"தமிழரசு"**
**சிறுகதைப் போட்டி 1975**
**முடிவு நாள்: 30—11—75**

தெரிந்தும் கலங்காமல் நேர்மைக்
காகப் பாடுபடும் பெண் உள்ளத்
தைக் கண்டு சிரித்தார். ஒரு
பெண்ணின் வாழ்வைக் கண்டு
மகிழ்பவளும் பெண்தான். பொறு
மைப்பட்டு அழிப்பவளும் பெண்
தான். பெண்ணால் ஆக்கவும் முடி
யும், அழிக்கவும் முடியும் என்ப
தைப் புண்ணியகோடி உணர்ந்த
வர்தான். காரணமில்லாமல் ஒரு
பெண் ஒரு காரியத்தில் முனைப்ப
பாக இருப்பதில்லை என்பதையும்
தெரிந்தவர். மரகதத்தின் ஆர்
வத்துக்கு வெளிப்படையாக
மதிப்புக் கொடுத்து அவள் நம்பிக்
கையை அதிகப்படுத்தினார். அந்த
வழக்கின் உண்மையை உணர்ந்து
விட்டதுபோல மகிழ்ந்த புண்ணிய
கோடி முதலில் மரகதத்தின்
கணவர் மேகநாதனை நீதியின்
முன்னால் நிறுத்தி விசாரித்தார்.
மேகநாதனின் வாக்கு மூலத்தை
டேப்-ரிக்கார்டர், பதிவு செய்து
கொண்டிருந்தது.

''மிஸ்டர் மேகநாதன். இந்த
வழக்குப் பற்றி நீங்கள் என்ன
சொல்லுகிறீர்கள்'' போலீஸ்
இன்ஸ்பெக்டர் தன் விசார
ணையை ஆரம்பித்தார். உடல்
வியர்த்து உள்ளம் நொந்துபோய்
நின்று கொண்டிருந்த மேக
நாதன் அவர் போட்டிருந்த மேல்
துண்டால் முகத்தைத் துடைத்
துக் கொண்டு பேச ஆரம்பித்
தார்.

''இந்தத் திருமணத்தில் எதிர்
பாராத சம்பவம் ஏதாவது ஒன்று
நடக்குமென்று எனக்கு அப்
போதே தோன்றியது. காத்தி
ருந்தவன் கனியை நேற்று வந்த
வன் கொண்டுபோக முடியுமா?
இந்தத் திருமணத்திற்கு முன்பே,
இந்த திருமணம் தடைப்பட்டுக்
கருணாகரனின் மகள் சந்திரா
வுக்கு வேறு இடத்தில் திருமணம்
நடக்குமென்று நினைத்தேன்.
ஆனால் நான் நினைத்தது ஒன்று
நடந்தது ஒன்று.''

போலீஸ் இன்ஸ்பெக்டர் புண்
ணியகோடி பெருமூச்சு விட்டுக்
கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்
தார். மேகநாதன் தொடர்ந்து
பேசினார்.

''கோவை தொழிலதிபர்
கருணாகரன் மகள் சந்திராவின்
மேல் கோவை கண்டிராக்டர்
குப்புசாமியின் மகன் சேகருக்கு
ஒரு கண். சந்திரா சிறு குழந்தை
யாயிருந்த காலத்தில் இருந்தே
ஒருவரை ஒருவர் பார்த்துப்
பார்த்து மகிழ்ந்து ஓடியாடி விளை
யாடியபோதே வளர்ந்த ஆசை
அது''

சந்திரா, கால் கொலுசு 'கலீர்
கலீர்' என ஒலிக்க நடப்பாள்.
துள்ளிக் குதிப்பாள். அவள் சிரிப்
பொலியில் அவன் சிரித்து மகிழ்
வான். அவளும் மகிழ்வாள்.
நாட்கள் செல்லச் செல்லப்
பாவை வளர்ந்தாள். பாவை
வளர வளரப் பேச்சுத் தொடர்ந்
தது. பேச்சு வளர வளர உறவு
வளர்ந்தது. உறவு வளர வளர
உணர்ச்சி வளர்ந்தது. உணர்ச்சி
வளர வளரச் சேகரின் கனவுகள்
வளர்ந்தன.

கல்லூரிக்குச் செல்லும் சந்தி
ராவை வழியில் நிறுத்திப் பேசிக்
காதல் பாட்டுப் பாடுவான் சேகர்.
சந்திரா மகிழ்வாள். இது தெரிந்த
கருணாகரன் திகைத்தார், பயந்
தார். தன் குலக்கொடி சந்தி
ராவை வேறு கொம்பில் படர
ஏற்பாடு செய்துவிட்டார். சேக
ரின் காதலை மொட்டுகள் கூத்தி விட்
டன. துடித்தான். அவளும்
துடித்தாள்... அழுதான். அவன்
உள்ளம் குமுறியது. மாளிகை
யும் குடிசையும் மகிழ்ந்து வாழ
முடியுமா? மலையும் மடுவும் ஒன்றாக
முடியுமா? கொம்புத் தேனுக்கு
ஆசைப்பட்ட முடவனான சேக
ருக்குக் ''கிட்டாதாயின் வெட்
டென மற'' என்ற பழமொழி
யைச் சொல்வாரில்லை. திராட்
சையை அடைய முடியாத நரி
போல, அவன் மனம் மறந்து
திரும்ப நினைக்கவில்லை. அவன்
மனத்திலே மூண்டுவிட்ட காதல்,
தீயாக மாறிவிட்டது. தீப்பிழம்
பாக மாறிவிட்டான் சேகர். இது
தெரிந்த நானும் பயந்து கொண்
டிருந்தேன்.

''சந்திராவுக்கும் விநாயகத்
திற்கும் திருமணம் நடந்து நான்
நடத்திய வரவேற்பு வைபவத்
தில் அவனும் கலந்து கொண்
டான். ஆம். உண்மைதான்.
அவனை நான் என் இருகண்களால்
நன்றாகப் பார்த்தேன். உரிமை
யைப் பறிகொடுத்த உள்ளத்
தோடு சந்திராவைப் பார்த்தான்.
இளமையும் இன்பமும் பூத்துக்
குலுங்கும் வண்ணத் தோட்டத்
திலே இளந்தென்றல் ஓடி விளை
யாடியது. சேகரின் உள்ளத்திலே
சந்திராவிடமிருந்த ஆசை மீண்
டும் தலைகாட்டியதை என்னால்
உணர முடிந்தது.

''மணமக்களின் முதல் இரவுக்
காக என் பங்களா அலங்காரம்
செய்யப்பட்டிருக்கிறது என்று
தெரிந்துதான் சேகர் கோவை
யிலிருந்து ஊட்டிக்கு வந்திருக்க
வேண்டும். மோப்பம் பிடிக்கும்
துப்பறியும் நாயைப் போல வந்
தான். வேடிக்கை பார்க்க வந்தி
ருக்கும் மக்களோடு மக்களாகப்
பங்களாவிற்குள் வந்துவிட்டான்.
அவன் பங்களாவை விட்டு
வெளியே போகும்போதுதான்
ஏதோ திட்டமிட்டுத்தான் வந்தி
ருக்கிறான் என்று தெரிந்து கொண்
டேன். அவனைக் கண்டதும்,
சேகர் சந்திராவிடம் கொண்ட
காதல் என் நினைவுக்கு வந்தது.
ஒரு சாதாரண எறும்பு பெரிய
யானையை என்ன செய்துவிட
முடியும் என்று என் மனம் நினைத்
தது; அதே சமயம் சிறு எறும்பு
காதில் நுழைந்ததால் துடிதுடிக்
கும் யானையின் நினைவும் வந்தது.
மனத்தில் ஏதோ இனம் புரியாத
குழப்பம். கோவை செல்வது
போலக் காரில் புறப்பட்டுச்
சென்று பிறகு வழியில் திரும்பி
ஊட்டிக்கே வந்துவிட்டேன்.
அன்று இரவில்கூட தனியாக
பங்களாவைச் சுற்றி வந்தேன்.

''மனத்தில் ஏதேதோ விபரீத
எண்ணங்கள். அந்த எண்
ணங்களைத் தடுத்து நிறுத்துவது
போல பங்களாவில் கட்டிக் கிடந்த
நாய் பலமாக ஓயாமல் குரைத்
தது. இருள் சூழ்ந்திருந்த இடத்
திற்கெல்லாம் அந்த நேரத்தில்
யார் போய்ப் பார்க்க முடியும்?
பங்களாவில் காவல் புரிந்த காவல்
காரனுக்கு நாய் குரைத்த கார
ணம் தெரியவில்லை. அதை
அதட்டி உள்ளேகொண்டுபோய்க்
கட்டிவிட்டு வெளியே வந்து
திரும்பவும் படுத்துக் கொண்
டான்.

''பனியின் வாடைக் காற்று
அதிகமாக வீசியதால் முகம் தெரி
யாமல் தன்னைப் போர்வையால்
முழுதும் மூடிக்கொண்டு படுத்துக்
கொண்டான். என் பங்களாவைக்
காவல் புரியும் இலட்சணத்தை
என் கண்களால் பார்த்தும் சப்தம்
போட்டுக் கண்டிக்க முடியாத
நிலை. நானே என் பங்களாவை
அன்று கண்விழித்துக் காவல்
காத்தேன். மணி இரவு ஒன்று
அடித்த சப்தம் ''டங்'' என்று
அந்த கும்மிருட்டின் நிசப்தத்தை
கலைத்துக் கொண்டு கேட்டது.

''பங்களாவின் மாடி வராண்
டாவிற்குள் ஒரு உருவம் குதித்து
ஓடியது போலிருந்தது. அது
உருவமா அல்லது பிரமையா
என்று எண்ணியவாறே செடிக்கு
பின்னால் இருந்த நான் எழுந்தி

**தமிழரசு 16-11-'75**
**இதழுடன்**
**இலவச இணைப்பு**
**20**
**அம்சம்**

ருந்தேன். அப்போது என்
கோட்டை யாரோ பிடித்திழுத்
தார்கள். இரத்தம் உறைந்து
போய் விட்டதுபோல் இருந்தது.
நான் கத்த முயன்றும் என்னால்
கத்த முடியவில்லை. என்னுள்
ஏற்பட்டிருந்த பயம் வாயி
லிருந்து வார்த்தைகள் வெளிவர
முடியாமல் அடைத்துவிட்டது.
மெதுவாகத் திரும்பினேன். நான்
போட்டிருந்த கோட்டைப் பிடித்
திழுத்தது வேறு யாருமல்ல
மறைந்திருந்த செடியின் முள்
தான்.

''வெடித்து விடுவது போலத்
துடித்துக் கொண்டிருந்த என்
நெஞ்சுக்குள் நிறையக் காற்றை
இழுத்துப் பெருமூச்சு விட்டுக்
கொண்டு மறுபடியும் பங்களா
வைப் பார்த்தேன். பங்களா
விளக்குகள் ஒவ்வொன்றாக
அணைந்தன. எல்லாரும் ஆழ்ந்த
நித்திரையில் இருந்தார்கள்.
இரண்டு நிழலுருவங்கள்
வராண்டாப் பக்கம் வந்து மறைந்
தன. அதன் பிறகு யாரோ மெது
வாகச் சாத்தியிருக்கும் கதவைத்
தட்டுவது போலச் சப்தமும் கேட்
டது. செடி மறைவில் இருந்த
நான் கொஞ்சம் அருகில் சென்று
பார்க்க நினைத்து மெதுவாக
நடந்தேன். என்னை அந்த வேளை
யில் அங்குக் காண நேர்ந்தால்
என்ன நினைப்பார்கள்? என் கௌர

வம் என்ன ஆவது? மறைவாகவே
நின்று பார்த்தேன்.

''டுமீல்'' என்ற சப்தம் கேட்
டது. என் பங்களாவில் எரிந்து
கொண்டிருந்த விடி விளக்கு
அணைந்து விட்டது. பயந்து
அசையாமல் நின்றேன். யாரோ
திணறிக் கொண்டு அலறும்
சப்தம் கேட்டது. நெஞ்சம் துடி
துடிக்க பங்களாவை உற்றுக் கவ
னித்தேன். கால்கள் சக்தி
யிழந்துவிட்டதால் ஓட முடியா
மல் நின்றேன். கத்தினால் என்
உயிருக்கு ஆபத்து நேருமோ
என்று பயந்து நின்று உற்றுக்
கவனித்தேன். மாடி வராண்டா
விலிருந்து கீழே ஒரு உருவம்
தாவிக் குதித்தோடியது. அந்த
உருவம் காதலில் தோல்வி கண்ட
சேகராகத்தானிருக்கும். அதைத்
தொடர்ந்து பங்களாவின் முன்
நின்ற மரத்தின்கிளை அசைந்தது.
நான் பார்ப்பது கனவா நினைவா
என்று தெளிவடைய முடியாத
நிலையில், பயத்தால் உந்தப்பட்ட
நான், திரும்பிப் பார்க்கவில்லை,
என் காரை எடுத்துக் கொண்டு
கோவைக்குக் கிளம்பிவிட்டேன்.

''மேகநாதன் தன் முகத்தில்
கொட்டிக் கொண்டிருந்த வியர்
வையைத் துடைத்துக் கொண்டு
பெருமூச்சு விட்டார்!''

''மிஸ்டர் மேகநாதன் உங்கள்
வாக்குமூலப்படி சந்திராவின்
கணவன் விநாயகத்தைக் கொன்
றது சேகர்தான் என்று சொல்லு
கிறீர்கள். அப்படித்தானே!''

''உண்மைதான் இன்ஸ்பெக்
டர். என் பங்களாவில் நடந்திருக்
கும் கொலை, சந்திராவின் மேல்
ஆசை வெறி கொண்டிருந்த
சேகர் செய்ததுதான். அவன்
தான் மணமகன் விநாயகத்தைக்
கொன்று பிரேதத்தை பாத்
ரூமுக்குள் போட்டு உள்தாளிட்டு
ஜன்னல் வழியாக வந்திருக்கிறான்.

''சேகர் திட்டமிட்டுச் செய்த
கொலைதான் இது. இந்தக்
கொலையை அவனே செய்திருக்க
வேண்டும். அல்லது யாரையாவது
அவன் கையாளாக வைத்துச்
செய்திருக்க வேண்டும்.''

''மேகநாதனின் வாக்குமூலத்
தைப் பதிவு செய்த டேப்-ரிக்
கார்டரை நிறுத்தினார் போலீஸ்
இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி!
அவர் கண்கள் மேகநாதனை
விழுங்கி விடுவதைப் போல உற்
றுப் பார்த்துக் கொண்டிருந்தன.
அவர் மனத்தில் ஓடிக் கொண்
டிருந்த எண்ணங்கள்தான் என்ன?

(தொடரும்)

## மறவாதீர்கள்;

## உங்கள் மகள் ஒருநாள்

## மணமகளாக அமர வேண்டியவள்!



திருமணம் என்ருலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்ருல்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கிஞல் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்ருேம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது—இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1,650/- |

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002

# நோபல் பரிசு

மருத்துவத்துறையில் 1975-ஆம் ஆண்டிற்கான நோபல் பரிசு இரு அமெரிக்க டாக்டர்களுக்கும், ஒரு இத்தாலிய டாக்டருக்கும் கூட்டாக வழங்கப்பட்டுள்ளது.

அவர்களின் விவரம் வருமாறு: 1. டேவிட் பால்டிமோர், இவர் அமெரிக்காவில் மெசச்சுசட்ஸ் தொழில் நுட்பக் கழகத்தில் பணி புரிகிருர். 2. ஹோவர்ட்டெமின், இவர் அமெரிக்காவில் விஸ்கான்சின் பல்கலைக் கழகத்தில் பணி புரிகிருர். 3. ரெனுடோடல் பெக்கோ—இவர் இத்தாலியர்.

புற்று நோய் ஆராய்ச்சிக்காக இவர்களுக்கு இந்த நோபல் பரிசு வழங்கப்பட்டது.

பௌதிகத்துறையில், 1975-ஆம் ஆண்டிற்கான நோபல் பரிசு, டென்மார்க் நாட்டைச் சேர்ந்த இரு பேராசிரியர்களுக்கும், ஓர் அமெரிக்கப் பேராசிரியருக்கும் கூட்டாக வழங்கப்பட்டுள்ளது.

இவர்களில் பேராசிரியர் ஆரேபோர், பேராசிரியர் பென் மோட்டல்சன் ஆகிய இருவரும் டென்மார்க்கைச் சேர்ந்தவர்கள். பேராசிரியர் ஜேம்ஸ் ரெய்ன் வாட்டர் அமெரிக்காவைச் சேர்ந்தவர்.

அணு பௌதிகத்துறை ஆராய்ச்சிக்காக இவர்களுக்கு இந்தப் பரிசு வழங்கப்படுகிறது. இவர்களுக்கு 63 ஆயிரம் ஸ்வீடிஷ் க்ரோனர் (ரூ. 12 இலட்சத்து 42 ஆயிரம்) பகிர்ந்தளிக்கப்படும்.

இவர்களில் பேராசிரியர் ஆரே போரின் தந்தை பேராசிரியர் நீல்ஸ்போர் என்பவரும் நோபல் பரிசு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. 1922ல் பௌதிகத் துறையில் அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

இரசாயனத் துறையில் 1975-ம் ஆண்டிற்கான நோபல் பரிசு, இங்கிலாந்தில் வசிக்கும் ஆஸ்திரேலியர் பேராசிரியர் ஜான் வார்கப் கார்ன்போர்த் என்பவருக்கும், சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த பேராசிரியர் விளாடிமிர் பிரிலாக் என்பவருக்கும் கூட்டாக வழங்கப்பட்டுள்ளது. இவர்கள், உயிரியல் தன்மை வாய்ந்த மருந்து உற்பத்தியை எளிய முறையில் அமைத்துள்ளனர்.

* *

ஹைடிரஜன் குண்டு கண்டு பிடித்த ரஷிய விஞ்ஞானிக்குச் சமாதானத்திற்கான "நோபல் பரிசு" வழங்கப்பட்டுள்ளது.

அவரது பெயர் அந்திரேய் திமிர்த்ரேவிச் சாகரோவ். 51 வயதான இவர் ஒரு அணு விஞ்ஞானியாவார். ரஷ்யாவில் ஹைடிரஜன் குண்டைக் கண்டு பிடித்த இவருக்கு, 1975-ஆம் ஆண்டிற்கான சமாதான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

நோபல் பரிசுத் தொகை 63,000 சுவீடன் "க்ரோனுர்" (நாணயம் பத்தரை இலட்சம் ரூபாய்). இதோடு ஒரு தங்கப் பதக்கமும் அளிக்கப்படும்.

நார்வே நாட்டுத் தலைநகரான ஆஸ்லோ நகரில் டிசம்பர் திங்கள் 10ந் தேதி நடக்க இருக்கும் விழாவில் இவருக்கு இந்தப் பரிசு வழங்கப்படும்.

"மனித குலத்தில் அமைதி நிலவுவதற்காக, அச்சமின்றிப் போராடியதற்காக" இவருக்கு இந்தப் பரிசு வழங்கப்படுவதாக நார்வே நாட்டு நோபல் பரிசுக் குழு அறிவித்துள்ளது.

* *

இத்தாலிய நாட்டைச் சேர்ந்த யூஜினியோ மாண்டேல் என்ற 79 வயதுக் கவிஞருக்கு 1975-ஆம் ஆண்டின் இலக்கியத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. மாயைகளுக்கு உட்படாமல் வாழ்க்கையைப் பார்வையிட்டு மனிதாபிமான உணர்வுகளைக் கலை உணர்வோடு சித்திரித்த அவரது கவிதைக்காக இப்பரிசு வழங்கப்படுகிறது.

இவருக்கு வரி விலக்குடன் 1 இலட்சத்து 43,000 டாலர் பரிசும், தங்கப்பதக்கமும், சான்றிதழும் வழங்கப்படும். டிசம்பர் 10-ந் தேதி ஸ்வீடன் மன்னர் இப்பரிசை வழங்குவார்.

* *

தமிழ்நாட்டிலேயே சிறந்த கிராமமாகத் திருச்சி மாவட்டம் உப்பிலியாபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 'தலைமலை' கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கிராமத்திற்கு 1000 ரூபாய் பரிசும், நற்சான்றிதழும் வழங்கப்படும்.

## கழிவுகளிலிருந்து செல்வம்!

'ஓட்டை, உடைசல், ஈயம், பித்தளை, கிழிந்த டயர்கள்! முதலியன மலைபோல் குவிந்து கிடக்கின்றனவா? அவற்றை ஒழிப்பது மட்டுமல்ல; அவற்றிலிருந்து பயன்படக்கூடிய பொருள்களை மீட்கும் வழியையும் கண்டு பிடித்திருக்கிறது. ஒரு பல்கலைக் கழகம்.

சிறிய டிரக் போன்ற நடமாடும் ஊர்தி, அதிலே இருக்கும்; அமைப்பு கழிவுப்பொருள்களைத் தூளாக்கி விடுகிறது. தூளிலிருந்து பல மூலப் பொருள்கள் தனியாகப் பிரிக்கப்பட்டு விடுகின்றன. குறிப்பாக டயர்களிலிருந்து மீண்டும் பயன்படுத்தக்கூடிய ஏராளமான கம்பிகளையும் துணியையும் மீட்கிறது இந்த அமைப்பு, ஒரு நிமிடத்தில் 30 டயர்களை இது 'பைசல்' செய்யக்கூடியுதாம். எனவே, ஒரு ஆண்டுக்கு ஒரு கோடியே பத்து இலட்சம் டயர்களை அது பைசல் செய்துவிடும்.

கம்பிகளின் மேல்பூச்சிக்களை அகற்றவும், பெரும் கம்பிக் குவியல்களைச் சுத்தமான செப்புக் கம்பிகளாக மாற்றவும் கூடியது இந்த அமைப்பு. சுருக்கமாகச் சொல்வதாஞல் எப்பொருளையும் மாற்றிவிடக் கூடியது இந்த அமைப்பு—இங்கல்ல, அமெரிக்காவில்!

# இதோ சத்துணவு!



டாக்டர்

**கி.இரா. சுவாமிநாதன்,**

**உதவி இயக்குநர்,**

**கால்நடைப் பராமரிப்புத் துறை.**

மனிதனின் உடல் வலுவிற்கும், மூளை வளர்ச்சிக்கும் சத்துணவு தேவை என்பது நாம் அறிந்ததே.

சத்துணவு என்று சொல்லுங்கால், பல்வேறு வகையான சத்துப் பொருட்களுள் புரதம், உயிர்ச்சத்து, மாவுச் சத்து (கார்போஹைடிரேட்டு), தாதுப் பொருட்கள், கொழுப்பு போன்றவை முக்கியமானவை. அவற்றுள் தலையாயது புரதமேயாகும். ஏனெனில், உடல் இயக்கத்திற்கு உயிராக இருக்கும் மூளையின் வளர்ச்சி, திசுக்களின் வளர்ச்சி ஆகியவை அம்மனிதன் உட்கொள்ளக் கூடிய உணவுப் பொருட்களிலிருந்து கிடைக்கும் புரதத்தினையே சார்ந்துள்ளன.

இளமையில் தேவையான அளவு புரதம் கிடைக்காமையினால் மூளை வளர்ச்சி குன்றிவிட்டால், அம்மனிதனால் முழு மனிதனாக வாழ இயலாது. அறிவோடும், திறத்தோடும் செயல்பட இயலாது. புரதப் பற்றாக்குறை வருங்காலச் சந்ததியினை அங்கஹீனமாகவும், ஆரோக்கியம் அற்றதாகவும், அறிவீனக் கூட்டமாகவும் ஆக்கிவிடக்கூடியது.

மேலும், பிஞ்சு மனத்தில், துள்ளித் திரியும் வாழ்வின் உதய கால நேரத்தில் வெம்பி விழுந்த பிஞ்சாக — கருகிய மொட்டாக —இளமையில் மாள வைக்கும் கொடுமை, எண்ணிப் பார்க்கவே இதயத்தைப் பிழிவதாகும்!

இன்றைய இந்திய மக்களின் உணவுப் பழக்க வழக்கங்கள் உணவுப் பொருட்களின் பற்றாக்குறை, சமூக அமைப்பு, மக்களது அறியாமை, மத நம்பிக்கைகள், மக்களது வாங்கும் சக்தி போன்ற காரணங்கள் புரதப் பற்றாக்குறையினை நீக்கத் துணை செய்வதாக இல்லை.

வளர்ச்சியுற்ற பல்வேறுநாட்டு மக்கள் உட்கொள்ளும் உணவுப் பொருட்களோடு, இந்திய மக்கள் உட்கொள்ளுவதை ஒப்பிட்டு பார்க்குங்கால், நாம் எந்த அளவு சத்தற்ற உணவினை உண்டு வருகிறோம் என்பது நன்கு புலனாகும். இந்நிலையினை மாற்றி அமைப்பது அவசியமாகும்.

நமக்குத் தேவையான புரதம், நாம் உணவாகக் கொள்ளும் காய்கறிகள், கீரை வகைகள், பருப்பு வகைகள் முதலியவற்றிலும், பால், முட்டை, இறைச்சி முதலியவற்றிலிருந்தும் கிடைக்கிறது. அவற்றுள் காய்கறி, முதலியவற்றிலிருந்து கிடைக்கும் புரதத்தைவிட பால், முட்டை, இறைச்சி முதலியவற்றிலிருந்து கிடைக்கும் புரதம் முழுமையானது. ஏனெனில், புரதம் என்பது பல்வேறு வகையான 'அமினோ அமிலங்கள்' என்னும் நுண்மையான சத்துப் பொருட்களால் ஆனது. நமக்கு அவை மிகவும் தேவையானவை. காய்கறி, கீரைகளில் கிடைக்கும் புரதத்தில் இவை மிகக் குறைந்த அளவில் உள்ளன. ஆனால் பால், முட்டை, இறைச்சி ஆகியவற்றில் இவை மிகுதியான அளவிலும், சீரான விகிதங்களிலும் அமைந்து உள்ளன. நாம் உட்கொள்ளும் உணவுப் பொருட்களில் உள்ள புரதத்தில், இந்த அமினோ அமிலங்களில் ஏதேனும் ஒன்று குறைந்து காணப்பட்டாலும், அப்புரதமானது கழிவுப் பொருளாக வெளியேறிவிடுகிறது. இந்த அடிப்படையில் பார்க்கும்போது, பால், முட்டை, இறைச்சிபோன்ற உணவுப் பொருட்களில் கிடைக்கும் புரதமே உயர்வாகக் காணப்படுகிறது. மேலும் அது எளிதில் செறிக்கக் கூடியதும் ஆகும்.

வளர்ச்சியுற்ற நாடுகளில் மக்கள் தங்களது உணவில் பால், முட்டை, இறைச்சி போன்றவற்றைப் பெருமளவில் சேர்த்துக் கொள்ளுகின்றனர். அமெரிக்காவில் தனி மனிதன் ஓர் ஆண்டில் சராசரி 104 கிலோ கிராம் முட்டை, இறைச்சி ஆகியவற்றைத் தன் உணவில் சேர்த்துக் கொள்ளும்போது, இந்தியாவில் ஒரு மனிதன் சராசரி 5 கிலோ கிராம் மட்டுந்தான் சேர்த்துக்கொள்ளுகிறான்!

உலகெங்கிலும் உள்ள மாடுகளில் ஐந்தில் ஒரு பங்கு நம் நாட்டில் உள்ளது! எருமையினம் சரிபாதி உள்ளது. ஆனாலும் இந்த கால்நடைகளை எந்த அளவுக்கு நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்று ஒரு கணம் சிந்தித்தால், நம் நிலை நம்மையே திடுக்கிட வைக்கும்! உலகில் உள்ள நாடுகளில் ஓராண்டில் 5,923 ஆயிரம் டன் இறைச்சி உற்பத்தி செய்யப்பட்டால், அதில் இந்தியாவின் பங்கு 357 ஆயிரம் டன் ஆகும். அதே நேரத்தில் ரஷ்யாவின் பங்கு பத்து இலட்சம் டன் ஆகும். உணவு நெருக்கடியும், உணவில் புரதப் பற்றாக்குறையும் நிறைந்துள்ள காலக் கட்டத்தில் இந்திய மக்கள் தங்கள் நாட்டில் உள்ள கால்நடைகளை எந்த அளவுக்குப் பயன்படுத்தி உணவுப் பற்றாக் குறையினையும், உணவில் புரதப் பற்றாக் குறையினையும் களைவது என்று சிந்தித்துச்செயல்படுவது, ஒவ்வொரு பொறுப்புள்ள குடிமகனின் கடமையுமாகும்.

ஒவ்வொரு இந்தியனும், ஒரு நாளில் சராசரியாக உட்கொள்ளும் பாலின் அளவு 131 கிராம் ஆகும். இந்தியர் குறைந்த அளவே பால் அருந்தக் காரணம், நமது மாட்டினம் தரும் பாலின் அளவு மிகக் குறைவு. இந்தியப் பசுக்கள் ஆண்டொன்றுக்குத் தரும் பாலின் சராசரி அளவு 173 கிலோ கிராம் ஆகும். மேலைய நாட்டுப் பசுக்கள் தரும்பாலுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இது எவ்வளவு குறைவு என்று தெரியும்.



தமிழகத்தைப் பொறுத்த வரை, பால் தரும் சக்தி குறைவான மாடுகளின் தரத்தை உயர்த்திப் பல்வேறு திட்டங்கள் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. உயர் ரகக் காளைகளின் விந்தினைப் பக்குவப்படுத்தி, தரக்குறைவான நாட்டுப் பசுக்களைச் செயற்கை முறையில் கருவூட்டிக் கலப்பின[illegible] உருவாக்கி வருகிறோம். நாம் சந்தி[illegible] வரும் உணவுப் பற்றாக்குறையினை—உணவில் புரதப் பற்றாக் குறையினை—நம் எதிர்காலச் சந்ததிகள், சந்திக்க நாம் இடம்தர மாட்டோம் என்ற உறுதியினைத் தமிழ்நாடு கால்நடைப்பராமரிப்புத் துறை மேற்கொண்டிருக்கிறது. தமிழக மக்களிடையே கால்நடைப் பராமரிப்புப் பணியில் அண்மைக் காலமாக ஏற்பட்டு வரும் விழிப்புணர்ச்சி, கால்நடை வளர்ப்பில் பெரும் அக்கறையினையும் கிளறிவிட்டு உள்ளது. தரமிழந்த காளைகளை இன விருத்திக்குப் பயன்படுத்துதல் கூடாது. அவைகளை ஆண்மை நீக்கி, வயல் வெளியில் உழைக்க - வண்டியிழுக்கப்பயன்படுத்துதல் வேண்டும் அல்லது உணவுக்குப் பயன்படுத்த வேண்டும்.

போர்க்கால அவசரத்தோடு—கால்நடைப் பராமரிப்புத் துறையின் இலட்சியப்பயணம் தொடர்கிறது! நம் நாட்டுப் பசுக்களிடமிருந்து உயர் ரகக் கன்றுகளைப் பெறும் பணி விரிகிறது!

இதனால், நம் தமிழகத்திலேனும் குழந்தைகள் முதல் முதியவர் வரை தங்களுக்குத் தேவையான பாலினை அருந்திடச் செய்ய இயலும்.

உயர் ரக இனக் காளைகளை உருவாக்கும் உலைக்கூடங்களாகத் தமிழகத்தில் உள்ள மாவட்டக் கால்நடைப்பண்ணைகள் திகழ்கின்றன. பல்வேறு [illegible] வேறு நாடுகளில் இருந்து வரவழைக்கப்பட்டு, இனச் சேர்க்கை செய்யப்பட்டு, எந்தெந்த இனம் இந்திய மண்ணுக்கும், இங்குள்ள தட்ப—வெப்ப நிலைகளுக்கும், இங்குக் கிடைக்கும் கால்நடைத் தீவனங்களுக்கும் [illegible]றதாக இருக்கும் [illegible] விரிவான ஆராய்ச்சி இப்பண்ணைகளில் நடைபெற்று வருகின்றன.

இன்றுள்ள சூழலில் 'ஃபிரிசியன்', 'ஜெர்சி', 'சிந்தி' ஆகிய இன மாடுகள் அதிக அளவில் பால் தரக் கூடியனவாக உள்ளன. தமிழக மக்கள் தங்களது கால்நடைகளின் தரத்தினை உயர்த்த முன்னர் சொன்ன உயரினக் காளைகளைப் பயன்படுத்துதல் நலம்.

உணவுப்பொருட்களில் அடுத்து இடம் பெறுவது, புரதச் சத்து நிரம்பிய கோழிக் கறியும், கோழி முட்டையும் ஆகும். பொதுவாகப் பிற நாடுகளுடன் ஒப்பிடுகையில் மக்கள் தொகைக்கும், அந்நாட்டில் உள்ள கோழிகள் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதத்திற்கும் உள்ள உறவு இந்தியாவில் இல்லை! எண்ணிக்கையில் மட்டும் அல்ல, முட்டையிடும் தரத்திலும் நம் நாட்டுக் கோழிகள் மிகவும் பின் தங்கிய நிலையில்தான் உள்ளன!

இந்தியாவில் ஒரு கோழி ஓர் ஆண்டில் சராசரியாக 60 முட்டைகள்தான் இடுகின்றன! ஆனால் அமெரிக்காவில் ஓர் ஆண்டிற்கு 193 முதல் 212 வரை முட்டைகள் இடும் கோழியினங்கள் உள்ளன! இதன் காரணமாக ஒரு இந்தியனுக்கு ஓர் ஆண்டிற்கு 12 முட்டைகள்தான் கிடைக்கின்றன. இந்தியாவில் ஓராண்டில் சராசரியாக ஒரு மனிதருக்குக் கிடைக்கும் கோழிக்கறி 131 கிராம்தான். அமெரிக்கா விலோ ஒரு மனிதருக்கு 13.18 கிலோ கிராம்களும், பிற ஐரோப்பிய நாடுகளில் 2.47 கிலோகிராம் களும் கோழிக்கறி கிடை[க்கி]றது. இந்நிலை [illegible] மா[illegible] கால்நடை[illegible] பண்ணைக[ள்] த[மிழக]த்தின் பல்வேறு இட[ங்களி]லும் கோழியின விரிவாக்[க] யங்கள் ஏற்படுத்தப்பட்டு ரக 'வெள்ளை லெக்ஹா[ர்ன்]' போன்ற கோழிகள் பெரும[ளவில்] உற்பத்தி செய்யப்பட்டு, [illegible] மக்களுக்கு நியாயமான வி[லையில்] வழங்கப்படுகின்றன. [illegible] மூலம் தமிழகத்தில் மு[ட்டை] உற்பத்தி அதிகமாகி வருகின்[றது]. கோழிகளை வளர்ப்பது [கடினம்] இல்லை. வீடுகளில் விரய[மாகும்] தானியங்கள், உணவுப் பொ[ருட்]கள், கழிவுகள் தவிடு போ[ன்ற]வற்றைத் தீவனமாகக் கொ[டுத்துக்] கோழிகளை வளர்க்கலாம். [கோழி] வளர்ப்பிற்குப் பொருட்[செலவு] அதிகமில்லை. அவர்கள் வீ[ட்டுக்] குழந்தைகளுக்கு நாளுக்கு [ஒன்று]கொரு முட்டையாவது கி[டைக்]கும். நாட்டின் உணவுப் ப[ற்றாக்]குறையை நீக்கவும், நம் வீ[ட்டுப்] பிள்ளைகள் ஆரோக்கியமுள்[ளவர்]களாக — உடற்கட்டோடு —உடல் வளர்ச்சிக்கும், பல[த்திற்]கும் ஏற்றவாறு மூளை வ[ளர்ச்சி] பெற்று அறிவுள்ள[வர்க]ளாகத் திகழவும் ஒவ்வொ[ரு] வீட்டிலும், நான்கு அல்லது [ஐந்து] முட்டையிடும் கோழிகளை வ[ளர்க்]கலாம். தங்களுக்குத் தே[வை]யான உணவுப் பொருட்[களைத்] தாமே உற்பத்தி செய்து கொ[ள்ள] வேண்டும்.

மேலும், மிகக் குறைந்த கா[லத்]தில் மிக விரைவில் பெருகக்[கூடிய] இனம் பன்றியாகும். அவ[ற்றில்] வெள்ளை யார்க் ஷயர் (V[Large White] York Shire) பன்றியினம் [அதிக அள]வில் பெருகுகிறது. மிக [அதிக] அளவில் இறைச்சி கொடு[க்கக்] கூடியதும் இவ்வினமே! பன்[றிக்] கறியும் சுவை நிரம்பிய[து]; புரதம் நிரம்பியது! [illegible] பன்றியினத்தை அதிக அள[வில்] வளர்ப்பது அவசியம்



கக் குறைவான பலனை க்கக் கூடிய கால்நடைகளை களானாலும், ஆடுகளானாலும் ழிகளானாலும்—உணவுக்காக த்து விடலாம். அவை நல்ல நடைகளுக்குக் கிடைத்துள்ள வசதிகளைப் பாழாக்கும் களாகும்! கால்நடைப் பரா புத் துறை அலுவலர்களது வுரையைப் பெறறு உயர் ரக மாடுகளையே மக்கள் வாங்க ண்டும். மேலும், அரசு ணைகளில் உள்ள 'வெள்ளை க்ஹார்ன்' போன்ற கோழி யே வாங்குதல் வேண்டும்.

அரசுடைமையாக்கப்பட்ட ங்கிகள் மூலம் நிதியுதவி ற்று, சிறு கோழிப் பண்ணை, [illegible]ப்பண்ணை, ஆட்டுப் பண்ணை, பன்றிப் பண்ணை அமைத்து அந்தந்தப் பகுதிகளில் பால், முட்டை, இறைச்சி முதலியவை [illegible] உற்பத்தியைப் பெருக்கி உணவில் [illegible] நிறைவு பெற வேண்டும்.

கல்வியறிவு வளர நம் மக்களுக்கு விஞ்ஞானப் பார்வை வர வேண்டும். நம் உணவுப் பழக்க வழக்கங்களில் இது ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும். இளந்தலை முறையை ஆரோக்கியமிக்கதாய், அறிவும் ஆற்றலும் உள்ளதாய் விளங்கச் செய்ய, உணவுப் பழக்க வழக்கங்களில் ஒரு புரட்சிகர மாற்றம் தேவை. காலத் தேவையை [illegible]க்கிற் கொண்டு, நாம் அந்த மாற்றத்தைப் படிப்படியாகக் கொணர்தல் வேண்டும். ஒளிமிக்க எதிர்காலம் நம நாட்டிற்கு கிடைக்கும் என்று நம்பி செயல்படுவோம்.


**[தமி]ழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட், ரெ. X. 406**

வேப்பேரி : : சென்னை-600 007

" வெங்கடசாமி வாசகம் நிலையம் "

14, ரித்தர்டன் சாலை, வேப்பேரி, சென்னை600 007

தொலைபேசி : 30877, 30878
செயலாளர் : 33000

தந்தி : " ஹவுஸ்பாங்க் "
தபால் பெட்டி : 486

தலைவர் : திரு. பழனிவேல்ராஜன், பி.எஸ்.சி., பி.எல்., எம்.எல்.ஏ.,
உப-தலைவர் : திரு. பி. கஸ்தூரி பிள்ளை
பொருளாளர் : திரு. எஸ். பழனிசாமி, எம்.ஏ.,

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் | .. | ரூ. 5 கோடி |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | .. | ரூ. 2,81,55,425/- |
| [அ]டகு வைக்கப்பட்ட பிரதம சங்கங்களுக்கும், கட்டடச் சங்கங்களுக்கும் வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை | .. | ரூ. 22,23,28,765/- |

இச்சங்கத்துடன் இணைக்கப்பட்ட [பிர]தம வீடு அடமான சங்கங்கள், வீடு கட்டும் சங்கங்கள், கிராமியக் [கூ]ட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் அ[வை]களின் அங்கத்தினர்களுக்குப் புதிய வீடு கட்ட 15 வருட நீண்ட [கா]லக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன.

[இ]து சம்பந்தமான விவரத்திற்கு அருகிலுள்ள பிரதம வீடுஅடமான அல்லது வீடு கட்டும் சங்கத்தை அணுகவும்.

தவணைவைப்புத் தொகைகள் பெற்றுக் கொள்ளப்படும்.
(முதலும் வட்டியும் திருப்பி அளிக்க தமிழ்நாடு அரசாங்கம் உத்தரவாதம் அளித்துள்ளது)

அங்கத்தினர் ஒருவருக்கு வழங்கும் உச்சக்கடன் அளவு

| | | |
|---|---|---|
| புதிய வீடுகள் கட்டுவதற்கு | .. | ரூ. 30,000/- |
| புதிய வீடுகள் கட்டுவதற்கு (கிராமப்புற வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம்) | .. | ரூ. 10,000/- |

பூ. கு. பத்மநாபன், பி.ஏ., எச்.டி.சி.,
இணைப்பதிவாளர்—செயலாளர்.




# தஞ்சைத் தரணியில் வேளாண்மை வளர்ச்சி!


எஸ். பாண்டிபெருமாள்,
பி.எஸ்.சி. (வே)

திட்ட இயக்குநர்,
தீவிர சாகுபடித் திட்டம்,
தஞ்சாவூர்.


சீரும் சிறப்பும் கொண்டது தஞ்சை. பன்னெடுங்காலமாக நாகரிகத்தின் நாற்றங்காலாகச் சுடர்விட்டுள்ளது. வானளாவிய கோபுரங்கள், காவிரியாற்றுக்கு அணையிட்ட அற்புதம் தொடர்ந்து நிலைத்துள்ள கலைகள், நஞ்சைக்கு ஏற்ற சாகுபடி முறைகள், தோப்புக்கள், துரவுகள் அனைத்தும் தஞ்சையின் சிறப்புக்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன.

இச்சிறப்பிற்கு காவிரி ஆறுதான் அடிப்படையாக உள்ளது! காவிரியின் நீரைப் பரவலாகப் பயன்படுத்தக்கூடிய நில அமைப்பையும் தஞ்சை கொண்டுள்ளது. கல்லணைப்பக்கம் உயர்ந்தும், கிழக்கும் தெற்கும் நோக்கிப் படிப்படியாகத் தாழ்ந்தும் இருக்கிறது. அதன் காரணமாக இயற்கையாகவே காவிரி சிறு சிறு ஆறுகளாகவும், வாய்க்கால்களாகவும் பிரிந்து பிரிந்து தமிழ் மக்களின் வளமான வாழ்விற்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொள்கிறது.

இன்றே, தமிழகத்தின் வளமான வாழ்விலே தஞ்சை ஓர் ஒப்பில்லா இடத்தை வகிக்கிறது. தமிழகத்தின் நெல் உற்பத்தியில் கால்பகுதி தஞ்சையில் விளைகிறது! இவற்றின் காரணமாக, தமிழகத்தின் உணவுத் தேவையை அளிப்பதில் தஞ்சை மாவட்டம் முதலிடம் வகிக்கிறது. "தமிழகத்தின் நெற்களஞ்சியம்" என்ற பேறும் பெற்றுள்ளது!

தமிழகத்தில், [உட]னடியாக உற்பத்தியைப் பெருக்க வாய்ப்புகள் நிறைந்த மாவட்டம் என, தஞ்சை மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஏனெனில் இம்மாவட்டத்தில் பின்கண்டவாய்ப்புகள் உள்ளன.

1. சுமார் 12.5 இலட்சம் ஏக்கராவிற்கு நிரந்தர நீர்ப்பாசன வசதி உள்ளது.

2. தமிழகத்தின் மொத்த நெற்சாகுபடிப் [பர]ப்பில் ஏறக்குறைய காற்பகுதி இங்கு உள்ளது.

3. இம்மாவட்டத்தில் பெரும்பான்மையான விவசாயிகள் கல்வியறிவு உள்ளவர்கள். ஆகவே அவர்கள் அவ்வப்பொழுது ஏற்படும் மாறுதல்களைச் சுலபமாக ஏற்றுக்கொள்ளும் தன்மையுடையவர்கள்

4. பொதுவாகப் பார்க்கும் பொழுது இயற்கையின் விபரீதங்கள் குறைவு.

எனவே, 1960-ல் தமிழ் புத்தாண்டு நாளன்று தீவிர சாகுபடித் திட்டம் (IADP) இம்மாவட்டத்தில் துவக்கப்பட்டது.

1960-ல் தஞ்சையின் 36 வட்டாரங்களில் 23 வட்டாரங்களில் மட்டும் நெற்பரப்பில் 20 சத விகிதப் பகுதியில் துவக்கப்பட்ட இத்திட்டம், படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு 1964-65-லிருந்து எல்லா வட்டாரங்களிலும் செயல்படுகிறது.

துவக்கத்தில் ஏற்கனவே ஆராய்ந்துள்ள முடிவுகளையும், ரகங்களையும் ஒருங்கிணைந்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இந்நிலையில்தான் "சாகுபடித் தொகுப்பு" என்ற கருத்துச் செயலாற்றப்பட்டது. அதன்படி அதிக உற்பத்தியின் அடிப்படை, சிறந்த ரகமாகும். அதன் திறனைப் பெறத்தக்கஅளவு உரிய காலத்தில் உரமிடல், தக்க முறையில் பயிரிடல், செழித்து வளரும் பயிருக்குத் தகுந்த காப்பு அளித்தல் என்ற நான்கு முறைகளையும் இணைத்து ஒவ்வொரு ரகத்திற்கும் தனித் தனியாக சாகுபடித் தொகுப்பு உருவாக்கப்பட்டது.

நிலவாகிற்கு ஏற்ற ரகங்களைத் தேர்ந்தெடுத்து விவசாயிகளிடம் அவற்றிற்கான சாகுபடித் தொகுப்பை உணர்த்துவது அடிப்படையாகும். அதன்படி குறிப்பிட்ட அளவு விதை, உரம், மருந்து சாகுபடிச் செலவிற்கான நிதி, முதலியவற்றை விவசாயிகளுக்கு வழங்குவது வெற்றிக்கு அடித்தளமாகும். உழவியலுக்குத் தேவையான

உற்பத்திப் பொருள்களைக் காலத்தே பெற்றிட கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் வசதி வழங்கப் படுகிறது.

## பொறுக்கு விதை

அதிக விளைச்சலுக்கு அச்சாக உள்ளது நல்ல தரமுள்ள விதை! ஆரம்பத்திலிருந்தே பரிந்துரைக் கப்பட்ட பொறுக்கு ரகங்கள் பரவ, தரமான விதைகள் வினியோகிக்கப்பட்டன

1964-ல் ஒரு சீரிய ரகமாக 'ஆடுதுறை27' ரகம் வெளியிடத் தயாராகியது. அனைத்துலக உணவு, மற்றும் விவசாய நிறுவனத்தின் ஆதரவில் 'கட்டாக்' மத்திய நெல் ஆராய்ச்சி நிறுவனத்தில் ஜப்பானிய ரகங்களுடன் இந்திய ரகங்கள் கரு ஒட்டுச் செய்யப்பட்டன. கரு ஒட்டுக்கள் தேசத் தின் பல பகுதிகளில் உள்ள நெல் ஆராய்ச்சி நிறு வனங்களுக்கு அனுப்பப்பட்டன. ஆடுதுறையில் தான் 'ஜி.இ.பி. 24' என்ற ரகமும், 'நாரின் 8' என்ற ரகமும் கரு இணைப்புச்செய்ததன் பயனாய் 'ஆடுதுறை 27' என்ற ஒரு ரகம் உருவாகியது. குறைந்த வயது, தரமான அரிசி, அதிக உரமேற்று அதிக விளைச்சல் அளிக்கும் திறன் முதலியவற்றை இந்த ரகம் கொண்டிருந்தது. மற்ற ரகங்களை விட கணிசமான அதிக மகசூல் கொடுத்தது.

இந்த ரகம் வெளியிடத் தயாராகிய நிலையில் வேறு எந்தப் பகுதியிலும் நடந்தறியாத அற்பு தத்தை தஞ்சையில் தீவிரச்சாகுபடித் திட்டத்தினர் நிகழ்த்தினர். ஆராய்ச்சியில் உள்ள பொழுது



1964-ல் 200 ஏக்கரில் முன்னோடி விளக்கமாய் பயிரிட்டுச் சோதித்து விதை சேகரிக்கப்பட்டது. 1965-ல் 200 ஏக்கரில் ஒரு பெரும். விளைக்கப் பண்ணை அமைத்து, விதைப்பெருக்கமும் செய்தனர். இந்தரகம் ஏக்கருக்கு 1,753 கிலோ மகசூல் கொடுத்தது. இம்மகசூல் தஞ்சையின் சராசரியை விட 50 சதவிகிதத்திற்கு மேல் இருந்தது. எனவே, இந்த ரகம் விவசாயிகளை வெகுவாகக் கவர்ந்தது! 1966-ல் கிராமம் கிராமமாக உயர் அலுவலர்கள் சென்று பிரச்சாரம் செய்து இரண்டு லட்சம் ஏக்கர் பரப்பிற்குப் பரப்பினர். 1967 குறுவைப் பயிரின் பெரும்பான்மையான பகுதியில் இந்த ரகம் பரவி யது. இவ்வாறு குறுகிய காலத்தில் வேறெந்த ரகமும் இவ்விதம் பரவியதே இல்லை! இதற்கு ஒரு காரணம் ஆடுதுறை 27 ரகத்தின் சிறப்புத் தன்மை யாகும். அத்துடன் தஞ்சை விவசாயிகளிடையே முன்னேற்றத் துடிப்பையும் நல்லதொரு மன மாற்றத்தையும் ஏற்படுத்தியதற்கு இது ஒரு சான் றாகவும் உள்ளது.

## இரசாயன உரம்

'ஏரினும் நன்றால் எருவிடல்' என்ற வள்ளுவர் வாக்குக்கு ஒப்ப நிறைந்த விளைச்சல் பெற போது மான அளவு உரமிட வேண்டுமென்பதை யாவரும் அறிவோம்.

தஞ்சை மாவட்டத்தில் இரசாயன உரங்களை இதுவரை உபயோகிக்கும் அளவைப் பார்த்தால், கடந்த 15 ஆண்டுகளில் நல்ல வளர்ச்சி ஏற்பட்டுள் ளதைக் காணலாம். தீவிர சாகுபடித் திட்டம் ஆரம்பிப்பதற்கு முன், உர உபயோகம் சராசரி யாக ஏக்கருக்கு 1.8 கிலோ தழைச்சத்தும், 1 கிலோ மணிச்சத்து, மிகக் குறைந்த அளவில் பொட்டாசு என்ற அளவில்தான் இருந்து 1974-75-ல் இந்த நிலை 10 மடங்கு அதிகரித்துள்ளது. உரம் எல்லா உழவர் பெருமக்களுக்கும் எளிதாகக் கிடைக்க, 500-க்கும் மேற்பட்ட கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்கள் மூலமும், 400-க்கும் மேற்பட்ட தனியார் துறையின் மூலமும் வினி யோகம் செய்யப்பட்டு வருகிறது.

### உரவினியோகம்

| ஆண்டு | வினியோகிக்கப்பட்ட மொத்த உரங்கள் (டன்கள்) | | | ஏக்கருக்குச் சராசரியாக (கிலோவில்) | |
|---|---|---|---|---|---|
| | அ. சல் பேட் | சூப்பர் பாஸ்பேட் | மியூரியேட் ஆப் பொட்டாசு | தழைச் சத்து | மணிச் சத்து |
| 1959—60 | 17000 | 12000 | ... | 1.8 | 1.0 |
| 1960—61 | 17460 | 13574 | 55 | 2.2 | 1.1 |
| 1961—62 | 20940 | 17687 | 191 | 2.2 | 1.5 |
| 1962—63 | 23326 | 28422 | 323 | 2.7 | 2.5 |
| 1963—64 | 29020 | 34748 | 779 | 3.1 | 2.9 |
| 1964—65 | 41890 | 45562 | 1347 | 4.5 | 3.9 |
| 1965—66 | 64037 | 33907 | 1299 | 7.5 | 3.2 |
| 1966—67 | 74127 | 32568 | 1405 | 9.6 | 3.1 |
| 1967—68 | 89334 | 59819 | 2379 | 10.2 | 5.5 |
| 1968—69 | 94737 | 66789 | 2710 | 10.8 | 6.1 |
| 1969—70 | 105028 | 73236 | 4965 | 12.25 | 8.75 |
| 1970—71 | 119755 | 83400 | 9381 | 14.36 | 8.85 |
| 1971—72 | 137715 | 98075 | 13585 | 16.43 | 9.36 |
| 1972—73 | 154316 | 99202 | 14186 | 18.70 | 9.61 |
| 1973—74 | 163765 | 93406 | 15268 | 19.33 | 9.10 |
| 1974—75 | 138625 | 62806 | 16873 | 18.12 | 6.56 |

## பயிர்ப் பாதுகாப்பு

''நீரினும் நன்றதன் காப்பு'' என்ற பொய்யா மொழிப் புலவரின் கூற்றுக்கு ஏற்ப தஞ்சையில் அதிகமான பரப்பில் உயர்விளை ரக நெற்சாகுபடி யாகும் நிலையில், காலநிலைக் கோளாறுகளினால் பூச்சிநோய்களின் தாக்குதல் கூடுதலாக உள்ளன! குறுவை அறுவடை தருணத்தில் 'பல்காரிட்' என்ற தத்துப்பூச்சியும் சம்பா தாளடிப் பயிர்களில் 'குருத்துப்பூச்சி', 'இலைசுருட்டுப்புழு', 'கொலை நோய்' 'இலைப்புள்ளிநோய்' முதலியவையும் தாக்குகின்றன. இவற்றைத் தவிர வேறுசில பூச்சி களும், நோய்களும் தயாராகக் காத்திருக்கின்றன.

கடந்த காலத்தில் பயிர்ப் பாதுகாப்பு வெகு வாகப் பரவியுள்ளது. சாகுபடிப் பணிகளில் ஒன்றாக இடம் பெற்றுள்ளது. அதன் காரணமாக இவற்றைக் கட்டுப்படுத்தும் இரசாயனங்களின் வினியோகமும் சுமார் 50 மடங்காக உயர்ந்துள்ளது.

## குறுகிய காலக் கடன் வினியோகம்

தஞ்சையிலே, இரு கூட்டுறவு மத்திய வங்கிகள் தஞ்சாவூரிலும் கும்பகோணத்திலும் செயல்படுகின் றன. இவை கிராம நாணயச் சங்கங்கள் மூலம் நிதி உதவி அளிக்கின்றன. பொருட்கள் குறிப்பாக உரவகைகளை அளிக்க தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை ஒன்றியமும், வட்ட விற்பனைச் சங்கமும் பொறுப் பேற்றுள்ளன.

ஒவ்வொரு ஆண்டிலும் எல்லா உறுப்பினர் களுக்கும் ஆண்டுக்கடன் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதனபடி பின்னர் நிதி, பொருட்கள் முதலியவை வழங்கப்பட்டு அறுவடை முடிந்தபின் திரும்பப் பெறப்படுகிறது.

1960-61-ல் ரூபாய் 15 லட்சம் மட்டுமே வழங்கப்பட்ட குறுகிய காலக் கடன் 1974-75-ல் சுமார் 14 கோடி அளவிற்கு அதிகரித்துள்ளது!



இந்த அனுபவம் புதியதொரு வாய்ப்பைக் காண்பித்தது. சரியான பட்டத்தில் நீர் கிடைத் தால், வழக்கமான பரப்பைவிட கூடுதலான பகுதியில் குறுவை பயிரிட்டு பின்னர் தாளடிப் பயிரையும் சாகுபடி செய்ய இயலும் என்பதுதான் இப்படிப்பினை!

இதனை அடுத்து 1967-68-ல் சம்பா பயிரிடும் பகுதிகளை குறுவைத் தாளடிப் பகுதிகளாக மாற்ற தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதன் பயனாகக் குறுவைத் தாளடிப் பரப்பு கணிசமாக அதிகரித்துள்ளது.

1968-69-லும் அதனைத் தொடர்ந்தும் இம் முயற்சி தீவிரப்படுத்தப்பட்டது. இதன் விளை வாகத் தஞ்சையின் சாகுபடிப் பரப்பு குறுவையில் 2 இலட்சம் ஏக்கரிலும், தாளடி 1.5 இலட்சம் ஏக்கரிலும் அதிகரித்துள்ளது.



### இருபோகமாக மாற்றும் முயற்சியில் ஏற்பட்ட முன்னேற்றம்.

| ஆண்டு | குறுவை | தாளடி | சம்பா | மொத்த நெல் பரப்பு |
|---|---|---|---|---|
| | (இலட்சம் ஏக்கரில்) | | | |
| வழக்கமாகப் பயிரிடப்பட்ட பரப்பு | 3.00 | 2.70 | 9.00 | 14.70 |
| 1967—68 | 5.19 | 3.23 | 7.26 | 15.68 |
| 1968—69 | 5.00 | 3.39 | 7.70 | 15.99 |
| 1969—70 | 5.10 | 3.88 | 7.80 | 16.78 |
| 1970—71 | 5.12 | 3.79 | 7.82 | 16.73 |
| 1971—72 | 5.11 | 3.85 | 7.80 | 16.76 |
| 1972—73 | 5.12 | 4.07 | 7.58 | 16.77 |
| 1973—74 | 5.21 | 4.37 | 7.36 | 16.94 |
| 1974—75 | | | | |
| (புதுக்கோட்டை மாவட்டத்திற்குச் சென்ற பகுதிகள் நீங்கலாக) | 4.57 | 3.67 | 7.06 | 15.30 |
| | | | | 0.24 கோடை நெல் சாகுபடி |

## இருபோக சாகுபடி

தஞ்சையின் நிகர நஞ்சைப்பகுதி 12 இலட்சம் ஏக்கராகும். வழக்கமாக அதில் 3 இலட்சம் ஏக்க ரில் மட்டும் இருபோகங்களில் நெல் பயிரிடப்பட்டு வருகிறது. ஏனைய பெரும்பகுதிகளில் ஒருபோக மாகச் சம்பா சாகுபடி செய்யப்பட்டு வந்தது.

தஞ்சையிலே 3 இலட்சம் ஏக்கர் அளவிற்கு மேல் இருபோகமாக நெல் சாகுபடி செய்ய இய லாது என்ற எண்ணம் இருந்தது. ஆனால் 1966-ல் மேட்டூர் நீர்த்தேக்கத்தில் குறைந்த அளவு நீர் உள்ள நிலையில் குறுவை சாகுபடிக்குக் காலம் தாழ்த்தி நீர் விடப்பட்டது. இருப்பினும் அவ் வருடத்தில் சம்பாப்பட்டத்தில் குறுவை நடப்பட்ட பொழுதிலும் மொத்த நெல் பரப்பு குறையாத வகையில் இருபோக சாகுபடி நடைபெற்றது.

மேற்கண்ட புள்ளி விவரங்களில் இருந்து கிடைக்கும் நீரிலே, சாகுபடிப் பரப்பை அதிகரிக்கும் முயற்சி பெருமளவில் வெற்றி பெற்றுள்ளது என்று தெரிகிறது. தனியான அரசினரின் முதலீடு இல்லா மல், சுமார் 2.24 இலட்சம் ஏக்கர் அதிக பரப்பில் நெல் சாகுபடி அதிகரிப்பது மாபெரும் சாதனை யாகும்! அதன் பயனாக மொத்த விளைச்சல் அதி கரித்ததுடன் கூட, தஞ்சை உழைப்பாளிகளுக்கு கணிசமான அளவில் உழைக்கும் வாய்ப்புக்களும் பெருகி உள்ளது.

| நெல் விளைச்சல் முன்னேற்றத்தால் ஏற்ப... | |
|---|---|
| புதிதாகக் கொண்டு வரப் பட்ட இருபோக சாகுபடிப் பரப்பு | 2.24. இலட்சம் ஏக்கர். |

| | |
|---|---|
| இதன் மூலம் கிடைத்த கூடுதல் விளைச்சல் | 2.24 இலட்சம் டன்கள். |
| திருந்திய சாகுபடிமுறையை மேற் கொண்டதனல் கூடுதல் விளைச்சல் | 6.16 இலட்சம் டன்கள் |
| நாட்டிற்குக்கூடுதல் உணவு உற்பத்தி | 8.40 இலட்சம் டன்கள் |
| இதன்மூலம் உழவர் பெருமக்களுக்குக் கிடைத்த கூடுதல் வருவாய் | ரூ. 84 கோடி |

### உழுபடைச் சாதனங்கள்

தஞ்சையிலே நிலத்தயாரிப்பு மிகவும் குறுகிய காலத்தில் நடைபெற வேண்டியுள்ளது. ஆற்றில் நீர் வந்ததும் நாற்றுவிட்டு முடிந்ததும் குறுவைப் பகுதி சேறு கலக்கப்பட்டு நடப்படுகிறது. நல்ல உழுபடைச்சாதனங்கள் இன்றி நன்கு பண்படுத்துவதற்கு இயலாது. தாளடிச் சமயம் ஒரு பக்கம் அறுவடையும், மற்றொரு பக்கம் நடுகையும் நடைபெறுகின்றன. இந்நிலையிலும் துரிதமாக உழவுச் சாதனங்கள் தேவையாகின்றன! விளைந்த விளை பொருள்களையும், உற்பத்திப்பொருள்களையும் ஏற்றிச் செல்ல விசை வாகனங்களும் தேவைப்படுகின்றன.

இதனை உணர்ந்து உழவர் பெருமக்களுக்கு வாடகைக்கு விசை உழவு சாதனத்தையும், 'டிரயிலர்' களையும் கொடுத்துதவ திருவாரூரில் ஒரு விசை உழவுக்கருவிப் பட்டரை செயல்பட்டு வருகிறது. இது விவசாயிகளின் கருவிகளைச் செப்பனிடும் பணியையும் மேற்கொண்டுள்ளது.

கடந்த ஆண்டுகளில் அரசினர் விசைக்கருவிகளை வாடகைக்கு விட்டதன் மூலம் உழவு செய்யப்பட்ட பரப்பு.

| ஆண்டு | ஏக்கர் |
|---|---|
| 1963—64 | 14,294 |
| 1964—65 | 16,719 |
| 1965—66 | 12,124 |
| 1966—67 | 15,539 |
| 1967—68 | 20,305 |
| 1968—69 | 18,930 |
| 1969—70 | 28,185 |
| 1970—71 | 25,235 |
| 1971—72 | 25,754 |
| 1972—73 | 16,935 |
| 1973—74 | 20,246 |
| 1974—75 | 40,536 |

### சிறிய பாசன ஆதாரங்கள்

தஞ்சையின் நெல் சாகுபடி ஆற்றில் நீர் வந்த பின்னர் துவக்கப்படுகிறது. தாளடிப் பயிர் முற்றும் நிலையில் நீர்க்கட்டுப்பாடு ஏற்பட்டு மகசூல் குறைந்து விடும் நிலை எப்போதும் உள்ளது. இந் நிலையை மாற்றவும், நஞ்சைத் தரிசுகளில் கோடைப் பயிர்கள் பயிரிட்டு வருவாயைப் பெருக்கவும் வேறு பாசன வசதி தேவை! எனவே பாசன வசதியைப் பெருக்க குழாய்க் கிணறுகள், ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பின்வருமாறு உள்ளது.

| ஆண்டு | குழாய்க் கிணறுகள் | ஆழ்குழாய்க் கிணறுகள் |
|---|---|---|
| 1960—61 | 243 | 50 |
| 1961—62 | 200 | 51 |
| 1962—63 | 152 | 54 |
| 1963—64 | 218 | 57 |
| 1964—65 | 248 | 56 |
| 1965—66 | 1,852 | 84 |
| 1966—67 | 1,703 | 114 |
| 1967—68 | 1,300 | 203 |
| 1968—69 | 1,532 | 366 |
| 1969—70 | 1,557 | 366 |
| 1970—71 | 956 | 314 |
| 1971—72 | 1,400 | 287 |
| 1972—73 | 1,503 | 227 |
| 1973—74 | 1,548 | 525 |

### மண்வளப் பரிசோதனை

விவசாயிகளின் கழனிகளில் மண்வளத்தைப் பரிசோதித்து அதன்படி தக்க அளவுகளில் உரமிடப் பரிந்துரைக்க 1960-ல் ஆடுதுறையில் ஒரு மண்வளப் பரிசோதனை நிலையம் ஏற்படுத்தப் பட்டது. 1960-61-ல், 610 மண் மாதிரிகள் சோதனை செய்யப்பட்டு பரிந்துரை செய்யப்பட்டன. 1973-74-ல் 52,213 மண் மாதிரிகள் சோதனை செய்யப்பட்டன.

### நிலவள நீர் பராமரிப்புத் திட்டம்

ஆற்று நீர் தேக்கப்பட்டுச் சீராகக் கிடைக்கும் நிலையில்லா அக்காலத்தில், பெரும் வரப்புகள் அமைத்து நீரைத் தேக்கி கொள்ளுவது அவசியமாக இருந்தது. இன்று மேட்டூரில் நீர்த் தேக்கப்பட்டு, சீராக நீர் கிடைக்கும் நிலையில் இவ்வரப்புகள் தேவையில்லை.



வயல் தினம்

மற்றும் நஞ்சையின் பல பகுதிகளில் ஒவ்வொரு வயலுக்கும் தனியாகப் பாய்கால்களும், வடிகால்களும் இல்லா நிலையில் ஒரு கழனியிலிருந்து அடுத்ததற்கு நீர் பாய்ந்து வடிந்து கொள்ளுகிறது. அதன் காரணமாக அளவுடன் நீர் கட்ட முடிவதில்லை. நன்கு மேலுரமிடவும் இயலுவதில்லை.

இத்தகைய நிலையைமாற்றியமைக்க மண்வள நீர்ப்பராமரிப்புத் திட்டம்' என்பது, முன்னோடித் திட்டமாக 1967-ல் நீடாமங்கலம் சித்தமல்லியில் துவக்கப்பட்டது. 391.25 ஏக்கர் பகுதியில் வரப்புகள் எடுக்கப்பட்டு நேர் வரப்புகளாக சிறிய அளவில் 0.5—1.0 ஏக்கர் வயல்களாகப் பிரிக்கப்பட்டு அமைக்கப்பட்டன. தனியான பாய்கால்களும், வடிகால்களும் உருவாக்கப்பட்டு கழனிகள் சமப்படுத்தப்பட்டன.

இதன் பயனாக, தேவைப்பட்டபொழுது சீராக நீர் தேக்கிப் பயிரிட முடிகிறது. இதனால் எலிகளின் தொல்லை குறைந்துள்ளது. கழனிகளின் பரப்பு இரண்டு சதவீதம் கூடியுள்ளது. மகசூலும் அதிகரித்து வருகிறது. 1974-75-ம் ஆண்டு வரை சுமார் 19,350 ஏக்கரில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது



### அனுசரணை ஆராய்ச்சி

உயர் விளைச்சலுக்கு முக்கிய உறுதுணையாக இருப்பவைகளில் நல்ல உயர் விளைச்சல் நெல் ரகங்கள் முதன்மையானவையாகும். ஆராய்ச்சி நிபுணர்கள் இவ்வுயர் விளைச்சல் ரகங்களை விரிவாக்கப் பணியாளர்களின் உதவியோடு, முன்னோடி விவசாயிகளின் நிலத்தில், விவசாயிகளின் சூழ்நிலையில் புதிய ரகங்களைப் பயிரிட முடியுமா என ஆராய்ந்து, அதன் நல்ல முடிவுகளை மற்ற விவசாயிகளும் ஏற்றுக் கொள்ள வைக்க நன் பெறும் முதல் முயற்சியே ''அனுசரணை ஆராய்ச்சி அனுசரணை ஆராய்ச்சி எங்குமேயில்லாத ஓ புத்தொளியாகத் தஞ்சையில் 1969-ம் ஆண் லிருந்து செயல்பட்டு வருகிறது. இந்த அனுசரணை ஆராய்ச்சியின் மூலம் குறுவைப் பட்டத்திற் குறைந்த வயதுள்ள, அதிக உரமேற்று, சாயாம நேராக நிமிர்ந்து, குன்றெனக்குவிந்திடும் ரகமா ''கருணு'' 1969-70-ம் ஆண்டில் தேர்ந்தெடுக்க பட்டு, உழவர் பெருமக்கள் பெரிதும், விரும் பயிரிட்டு வருகின்றனர். மேலும் அனுசரணை ஆராய்ச்சியின் மூலம் நமக்குக் கிடைத்த உய விளைச்சல் ரகங்கள் 'ஐ. ஆர். 20,' 'கரிகாலன்' 'கண்ணகி', 'ஆடுதுறை-31' 'பூச. 33,' 'ஐஇ 1722' ஆகியன. விஞ்ஞான வளர்ச்சியின் பயனு உருவாகிய புது ரகங்களில் நமது பகுதிக்கு ஏற் ரகங்களைத் தேர்ந்தெடுக்க குறுவை, சம்பா தாளடிப் பட்டங்களில் அனுசரணை ஆராய்ச்சிக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### செய்தியும் விளம்பரமும்

திட்டமிட்ட கருத்துகள், விவசாயிகளுக் எட்ட விரிவாக்கப் பணியாளர்களுக்கு தனிப்பட் பயிற்சியளித்து 1,000 கிராமங்களில் விவசா விழாக்கள் நடைபெற்று வருகின்றன. இவ்விழா களில் கருத்துக் காட்சிகள், நிழல்பட விளக்கங்கள் செய்முறை விளக்கங்கள் முதலியவைகள் மூல செய்திகள் அறிவிக்கப்படுகின்றன. செய்திக செய்திகள் பழுதில்லாமல் முழுமையாக நேரடியாகப் கிடைக்க வானொலியின் மூலம் அவ்வப்பொழுது ஒலிபரப்பப்பட்டு வருகிறது. தேவைப்படு பொழுது புரட்டிப் பார்த்து தகவல் பெற பி சுரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

பத்திரிகைகளின் உதவியைப் பெற்று, ப கருத்துக்கள் பெரும் பகுதியினருக்குக் கிடைக் வழிவகை செய்யப்பட்டுள்ளது. 'பார்த்தல்' 'கேட்டல்' என்ற நிலையிலிருந்து 'பின்பற்றுதல் என்ற நிலைக்குத் துரிதமாக விவசாயிகளை இட்டு செல்ல, விளக்கப் பாத்திகள் அமைக்கப்பட்டுள்ளன சிறுசிறு பாத்திகளாக செய்து காண்பிப்பன விடுத்து, மூன்று ஏக்கர்களில் விளக்கத் தளைகளும் 25 ஏக்கரில் விளக்கப் பண்ணைகளும் அமைக்க பட்டு, பலருக்கும் நம்பிக்கையூட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தீவிரசாகுபடித் திட்டத்தின் கீழ் மேற்கொள் ளப்பட்ட மேற்கூறிய முயற்சிகளின் பயனாய் 1960-61-ல் 13.6 இலட்சம் டன்னாக இருந்த மாவட் தஞ்சை நெல் உற்பத்தி 1973-74-ல் 22 இலட்ச டன்களாக உயர்ந்துள்ளது. இப்பெரும் வெற்றி யின் மூல ஆதாரங்களான தஞ்சைவாழ் உழவர் பெருமக்கள், தீவிர சாகுபடித்திட்டப் பணியாளர் வானொலி, செய்தித்தாள், இறுதியாக, முக்கியமாக இவற்றிற்கெல்லாம் முதுகெலும்பாக இருந்த தமிழ்நாடு அரசு ஆகியோருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம் 'ஆனை கட்டிப்போரடித்த தமிழ்நாடு!' என்று அக்காலத்தே கூறுவர். அதையே சிறிது மாற்றி 'டிராக்டர் ஓட்டிப் போரடிக்கும்!' புதிய பொற்காலத்தை உருவாக்குவோம்.

''கதிர் ஒரு முழமே நீளம், கட்டு முக்கலமே காணும்'' என்று தில்லை நடராசர் நந்தனுருக்கு நெல்லை விளைவித்ததாகக் கூறுவார்கள். அதை இந்தக் காலத்தில் மனித சக்தியின் மூலம் நிறை வேற்றிக் காட்டுவோம் என்று சூளுரைப்போமாக.

# மண்ணை அறிந்து பயிர் செய்யுங்கள்

**வே**ளாண்மைக்கு மண் மிகவும் இன்றியமையாதது. நீரில் வளரும் தாவரங்கள் பல இருந்தாலும், பெரும்பாலான பயிர்களுக்கு நிலத்து மண்ணே ஆதாரமாகும். தாவர வளர்ச்சிக்கு வேண்டிய சகலவித சத்துணவுகளும் மண்ணிலிருந்தே கிடைக்கின்றன. தாவரங்களின் வேரைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அவற்றைக் கீழே விழாமல் பாதுகாப்பதும் தாவரங்களுக்குத் தேவைப்படுகின்ற ஈரப்பதத்தைச் சேமித்து வைத்துக் கொடுப்பதும் மண்ணேயாகும். தாவரங்களுக்கு இன்றியமையாத உயிர்வளி (பிராணவாயு), தழைச்சத்து (நைட்ரஜன்) முதலியவையும் மண்ணிலிருந்தே கிடைக்கின்றன. இதனால் தாவர உற்பத்தியாகு [illegible] நிலத்து [illegible] தரத்தையும், அதன் [illegible] தன்மைகளையும் [illegible] இருக்கிறது. அதனால் மண்ணின் பல்வேறு தன்மைகளையும், வகைகளையும் நாம் தெரிந்து கொண்டால், ஒரு நிலத்தின் பயிர் உற்பத்தி சக்தி எவ்வளவு என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். மண்ணின் தன்மைகளை அறிந்து கொள்ளாமல், பயிரிடத் தொடங்கினால் விரும்புகின்ற அளவு மகசூல் கிடைக்காமல் போட்ட முதலீடும் வீண் நட்டமாகிவிடும். எனவே, நிலத்து மண்ணைக் கூர்ந்து கண்ட முறையில் ஆராய்ந்து அதன் தன்மைகளை அறிந்து விவசாயம் செய்ய வேண்டும்.

முதலாவதாக, மண்ணின் அமைப்பு, அதிலுள்ள இந்திரியப் பொருள்கள், தாவரங்களின் வேர் புகக்கூடியத் தன்மை, தண்ணீரைச் சேகரித்து வைக்கக் கூடிய ஆற்றல் ஆகியவற்றை அறிய வேண்டும். பிறகு வேரின் வளர்ச்சியைத் தடுத்து விடக் கூடிய கிட்ட அமைப்புக்கள் அல்லது பாறைகள் இல்லாமல் இருக்கின்றனவா என்று தெரிய வேண்டும். மண்ணில் உவர்த் தன்மையோ, களர்த் தன்மையே இருக்குமானால் அதில் பயிர்கள் செழித்து வளராது. எனவே, இத்தன்மைகளையும் [illegible] வேண்டும்.

மேலே கூறப்பட்ட பலவற்றை நில அளவு மூலம் அறியலாம். இப்படி மண்ணின் தன்மையைப் பகுத்துப் பார்த்துப் பயிரிடத் தகுதியான நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள், பழத் தோட்டம் அல்லது காடுகள் மட்டும் வளர்க்கத் தகுதியுள்ள நிலங்கள் என்று அவற்றைப் பிரித்துக் கொள்ள வேண்டும். இப்படி நில அளவு மூலம் மண்ணைப் பரிசோதித்து நிலங்களைத் தரப்படுத்திவிட்டால், பொருத்தமில்லாத பயிர்களை நிலங்களில் விளைவித்து நட்டமடைவதைத் தடுத்து விட முடியும்.

தாவரங்கள் செழிப்பாக வளர்வதற்குத் தேவையான பற்பல தாவரப் பொருள்களும், மூலகங்களும் மண்ணிலிருந்தே கிடைக்கின்றன. அவற்றுள் தழைச்சத்து (நைட்ரஜன்), மணிச்சத்து (பாஸ்பரஸ்), சாம்பல் சத்து (பொட்டாசியம்), சுண்ணாம்புச் சத்து (கால்சியம்) 'மெக்னீசியம்' முதலிய மூலகங்கள் பயிருக்கு அதிக அளவில் தேவைப்படும். இரும்பு, 'மாங்கனீஸ்', 'போரான்' முதலான மற்றும் சில மூலகங்களும் தாவரங்களுக்குச் சிறிய அளவில் தேவைப்படுகின்றன. இந்த மூலகங்கள் ஒவ்வொன்றும் தேவையான அளவில் பயிருக்குக் கிடைக்காவிட்டால் மகசூல் குறைந்துவிடும். இவைகள் மண்ணில் எந்த அளவில் இருக்கின்றன என்பதை இரசாயனப் பரிசோதனை மூலம் தெரிந்து கொள்ள வேண்டும்.

இவற்றில் குறைகள் இருப்பின் அவற்றை நிறைவு செய்வதற்கு ஏற்றதான இரசாயன உரங்களையும், எருக்களையும் நிலத்தில் போட வேண்டும். இதனால் நில அளவு மட்டுமன்றி இரசாயன முறை மண் பரிசோதனையும் தேவைப்படுகிறது.

நிலத்தின் தரம், மண்ணிலுள்ள குற்றம் குறைகள், உரங்களால் குறிப்பிட்ட நிலத்தில் கிடைக்கின்ற பலன்கள் முதலியவற்றையெல்லாம் விவசாயிகள் தெரிந்து கொள்வது இன்றியமையாததாகும். எனவே இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகமும், மற்றும் விவசாயப் பல்கலைக் கழகங்களும நாடு முழுவதும் மண் பரிசோதனை ஆராய்ச்சிகளை நடத்திப் பல புள்ளி விவரங்களைக் கண்டறிந்து விவசாயிகளுக்கு அவ்வப்போது தெரிவித்து வருகின்றன. விவசாயிகள் இந்த மண் பரிசோதனைப் புள்ளி விவரங்களையும், பிற ஆராய்ச்சி உண்மைகளையும் கேட்டறிந்து நிலத்தின் தன்மைக்கு ஏற்ப விவசாயத்தை அறிவியல் ரீதியில் நடத்துவார்களானால் கணிசமான இலாபம் பெற வாய்ப்புகள் பெருகும்.

தகவல்:

இந்திய வேளாண்மை
ஆராய்ச்சிக் கழகம்,
புதுடெல்லி.



**அ**னைத்திந்திய வானொலியின் சென்னை நிலையம், விரைவில் கல்லூரி மாணவர்களுக்காகப் பாடத் திட்ட அடிப்படையில் அமைந்த கல்வி நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒலிபரப்பும். இளைஞர்களுக்கான வானொலி நிகழ்ச்சிகளில் இவை அடங்கும்.

மதுரைப் பல்கலைக் கழகம் நடத்தி வரும் அஞ்சல் வழிக் கல்வி முறைக்கு உதவும் விதத்தில் அமைந்த கல்வி நிகழ்ச்சிகளைத் தயாரித்து அளிப்பது சம்பந்தமாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. தானாகக் கல்வி கற்றுக் கொள்பவர்கள், வானொலி நிகழ்ச்சிகளின் மூலம் பயனடைவதற்கான வாய்ப்புகளும் அளிக்கப்படும்.

# இனிப்பு நல்லதா?

"**அ**திகமாக இனிப்புப் பண்டங்கள் சாப்பிட்டால் பற்கள் கெட்டுவிடும்" என்று பெற்றோர்கள் அடிக்கடி குழந்தைகளை அச்சுறுத்துவது வழக்கம்.

இனிப்பு உடலுக்கு நல்லது அல்ல என்பது தற்போதைய கணிப்பு. எனினும் உடல் உறுப்புகளுக்குச் சக்தியளிக்கும் மூலப் பொருளாகிய கார்போ—ஹைடிரேட்டை நாம் புறக்கணித்து விடவும் முடியாது. உண்மையைக் கூறப்போனால், நீரழிவு, ஊளைச் சதை, இருதயக் கோளாறு போன்ற நோயினால் அவதியுறுவோர், சர்க்கரையையும், இனிப்பையும் தவிர்த்தல் அவசியம் ஆகும்.

இருப்பினும் உடல் நலத்துடன் இருப்பவர்கள் சர்க்கரையைச் சேர்த்துக் கொள்ளலாம் என்பது மட்டும் அல்ல; கண்டிப்பாகச் சேர்த்துக் கொள்ளவும் வேண்டும். ஆனால் எப்படி, எப்பொழுது, எவ்வளவு என்பதுதான் கவனிக்க வேண்டிய விஷயம்.

நமது பற்கள் ஒருவகை சிப்பியினால் மூடியுள்ளன; பற்சிப்பியில் அநேகமாக எல்லா மூலகங்களும் காணப்படுகின்றன. பற்சிப்பி நீண்ட காலம் அழியாமல் இருக்கக்கூடிய அசாதாரண சக்தி வாய்ந்தது ஆகும்.

ஏறக்குறைய எல்லாருமே பற்சொத்தை, பல் வலியினால் அவதியுறுகிறார்கள். நீண்ட காலமாகவே இந்த நோய்க்கான காரணத்தைமருத்துவர்கள்ஆராய்ந்து வருகின்றனர். கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டுக்கு முன்பு, பற்சிப்பியை அழிக்கக்கூடிய பொருள் அமிலம் ஒன்றுதான் என்று முடிவுக்கு வந்தனர். ஆனால் இது ஓரளவுக்குத்தான் உண்மை. உதாரணமாக எலுமிச்சம் பழத்தைச் சாப்பிடும் பொழுது, உடனேயே வாயில் ஏராளமாக உமிழ்நீர்ச் சுரந்து, அந்த அமிலத்தை நீர்த்ததாக மாற்றி விடுகிறது. அப்படியானால் பற்சிப்பி சிதைவதற்கான காரணம் தான் என்ன?

பொதுவாக இனிப்புப் பண்டங்களைச் சாப்பிட்ட பின்பு, பற்களின் மீது 'சாக்கரின்' தங்கிவிடுகிறது. அது பாக்டீரியாக்களினால் பாலிமர் கூட்டுப் பொருள்களாக மாற்றப்பட்டு, சிப்பியின் மீது மெல்லிய காரையாகப் படிகிறது. அக்காரைக்குக்கீழ் உருவாகும் அமிலத்தினால்தான், பற்சிப்பி அழிகிறது. பற்கள் சொத்தையாவதற்கு, அவற்றின்மீது படியும் காரையும் ஒரு காரணம்.

அதிக அளவு உட்கொள்ளப்பட்ட சர்க்கரையானது கல்லீரலிலும், குறிப்பாகக் கணையத்திலும் சில இயக்கக் கோளாறுகளை ஏற்படுத்துகிறது. இதனால் உடலின் வளர்சிதை மாற்றம் பாதிக்கப்படுகிறது; அதன் தாது உப்புச் சமநிலையிலும் கோளாறு ஏற்படுகிறது. பற்கள் பலவீனமடைகின்றன. அப்பொழுதுதான் பற்காரையின் அடியிலுள்ள அமிலம் வேலை செய்யத் தொடங்குகிறது. காரை உருவாவதற்குச் சிறிதளவு சர்க்கரையே போதுமானது.

எனவே, ஆரோக்கியமான ஒருவர் எவ்வளவு சர்க்கரை சாப்பிடுகிறார் (ஒரு அளவுக்கு உட்பட்டுத்தான்) என்பது முக்கியம் அல்ல; ஆனால், எவ்வளவு நேரம் இனிப்பு, பற்களுடன் தொடர்பு கொண்டுள்ளது அல்லது பற்களின் மீது இனிப்பு தங்குகிறது என்பது தான் முக்கியம்.

பிசின் போன்ற லாலி பாப், இனிப்புபிஸ்கெட்டுகள், இனிப்புப் பண்டங்கள் போன்றவை பற்களின் மேற்பரப்பில் ஒட்டிக் கொண்டு வெகு நேரம் அங்கேயே இருக்கின்றன.

வெகுநேரம் இருப்பதால் அதனைக் கரைக்கக் கூடிய உமிழ் நீரும் போதுமான அளவுக்குச் சுரப்பது இல்லை. நோயாளிக்கு நாம் தரும் ஆலோசனை இதுதான்:

"நீங்கள் இனிப்புப் பண்டங்களைச் சாப்பிடாமல் இருக்க விரும்பாவிட்டால், குறைந்த அளவு சாப்பிட்ட பின்பு உங்கள் பற்களைக் கழுவிச் சுத்தப்படுத்துங்கள்."

"குழந்தைகளுக்குச் சாப்பிடும் போது இனிப்புப் பண்டங்களைக் கொடுங்கள். இடைவேளையில் இனிப்புப் பண்டங்களை உட்கொள்ள வேண்டாம். மேலும் குழந்தைகள் படுக்கச் சென்றதும் இனிப்புப் பண்டங்கள் தருவது மிகவும் தீங்கு பயப்பதாகும். பற்களை எப்போதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

"காலையில் தூங்கி எழும் போதும், இரவு படுக்கச் செல்ல முன்பும் பல் துலக்குவது போதுமானதாகும். பலவீனமான பற்சிப்பி உள்ளவர்கள் பற்பசை இல்லாமல் வெறும் பிரஷினால் மட்டும் பல் துலக்கலாம்."

தாது உப்புகளும், வைட்டமின்களும் நிறைந்த சத்துள்ள உணவு, பற்களைப் பாதுகாக்கவும், பற்களின் தற்காப்புத் தன்மையை அதிகரிக்கவும் மிகச்சிறந்ததாகும்.

## பெயரை மாற்ற விரும்புவோர் கவனிக்க!

அரசின் முன் அனுமதியில்லாமல் பெயர்கள் மாற்றம் செய்யக் கூடாது என்று கூறும் உள்நாட்டுப் பாதுகாப்புப் பராமரிப்புச் சட்ட 35-வது விதியைத் தமிழ்நாடு அரசு மீண்டும் வெளியிட்டிருக்கிறது. இந்த விதி நன்கு பொதுமக்களுக்குப் பிரசாரம் ஆக வேண்டும் என்பதற்காக இது இரண்டாவது முறையாக வெளியிடப்பட்டிருக்கிறது.

பெயர் என்பதில் குடும்பப் பெயர் போன்றவையும் அடங்கும். எழுத்துக்கூட்டும் முறையை மாற்றினால்கூட பெயரை மாற்றியதாகக் கருதப்படும்.

அவசரக் கால அறிவிப்புக்கு முன் தமக்கிருந்த பெயரை யாரும் மாற்ற வேண்டும் என்றால், அதை மாற்ற விரும்பும் தேதிக்கு ஒரு மாதம் முன்கூட்டியே மாநில அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். இந்த விதியை ஒருவர் மீறினால் 2 ஆண்டு சிறைவாசமோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ அவருக்கு விதிக்கப்படலாம்.

ஆனால் (1) திருமணமாகும்போது, ஒரு பெண் தனது பெயருடன் சேர்த்துப் போட்டுக் கொள்ளும் கணவன் பெயர் (2) ஏதாவது பதவி, பட்டம் முதலியவை பெறுவது, தொடர்ந்து ஏற்படும் பெயர் (3) மத்திய அல்லது மாநில அரசுகளின் உத்தரவின்மீது நிர்ணயமாகும் பெயர் ஆகியவைகளின் விஷயத்தில் இவ்விதி அமலாகாது.

இதோ, இந்தியாவின் பசுமைப் புரட்சிக்கு ஒரு விஞ்ஞானரீதியான துணை

எக்ரோமின்®
சிலேடெட் தாவர உணவு

பயிர் விளைச்சலை 20% அல்லது அதற்கு மேலும் அதிகமாக்குகிறது.




தாவர போஷாக்குச் சத்துக்களை உபயோகிப்பதன் மூலம் உங்கள் பயிர் விளைச்சலை வெகுவாக அதிகமாக்கிக் கொள்ள முடியும் என்பதை தீவிரமான ஆராய்ச்சி நிரூபித்துள்ளது.

- எக்ரோமின் ஒன்று மட்டுமே சிலேடெட் தாவர உணவாகும்.
- எக்ரோமின் நீரில் முற்றிலும் கரைந்து விடுகிறது.
- எக்ரோமின் சிறப்பாகக் கிரகிக்கப் படுவதற்கென கரைக்கும் மற்றும் பரப்பும் சாதனம் அடங்கப் பெற்றது.
- எக்ரோமின் ஒரு இலைத் தெளிப்பாகும்—மற்ற அக்ரோ—கெமிகல்களுடன் இதை உபயோகிக்கலாம்.
- எக்ரோமின் ரசாயன உரங்களின் பயனை அதிக அளவில் பெற உதவுகிறது.
- எக்ரோமின், தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், வாசனைத் திரவியங்கள் இறைப் பயிர்கள், பழங்கள், மற்றும் தோட்டப் பயிர்களுக்கென, வெவ்வேறு அமைப்புகளில் கிடைக்கிறது.

**எக்ரோமின்**

**சிக்கனமாக பயிர் விளைச்சலை அதிகமாக்கும் சிலேடெட் தாவர உணவு.**

® ரெஜிஸ்டர்ட் டிரேட் மார்க்.

எக்ரோமின் பற்றிய அதிகப்படி விவரங்களை அறிய இந்த முகவரிக்கு எழுதவும்:
இண்டஸ்ட்ரீஸ் ப்ரை. லிட்.
தபால் பெட்டி எண் 9417,
பம்பாய் 400 093.

**Distributors :**

S.L.N.S. AGENCIES, 19, Municipal Bldg., Srinivasa Park, Salem-636002.
INDOMAG CORPORATION,
3, Kollanpattarai Street, East Veli Street, Madurai-1.

# தழைத்தோங்கும் தர்மபுரி

(சின்னாறு அணைத்திட்டம்)



—ப. சாமிநாதன்.

தர்மபுரி மாவட்டம் தழைத் தோங்கிடத் தமிழக அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களில் 'சின்னாறு அணைத் திட்டம்' குறிப்பிடத்தக்கதாகும். சேலத்தினின்று தனி மாவட்டமாகப் பிரிக்கப்பட்டுப் பத்து ஆண்டுக் காலத்தில் இம்மாவட்டம் மிகவும் பின் தங்கிய நிலையினின்று இன்றைய அரசின் அரும் பெரும் திட்டங்களால் முன்னேற்றப்பாதையில் நாளும் வளர்ந்து வருகிறது.

தர்மபுரி மாவட்டத்தில் பாசன வசதியைப் பெருக்கவும், அதன் மூலம் இப்பகுதியில் உணவு உற்பத்தியை அதிகரிக்கவும், குடிநீர் வசதியைப் பெருக்கும் வகையிலும் தேன்கனிக்கோட்டை வட்ட எல்லையில் மாரண்டஅள்ளி பகுதியிலும் ஓடும்சின்னாற்றின் குறுக்கே புதிதாக ஓர் அணை கட்ட தமிழக அரசு அனுமதித்து அணை கட்டும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

சின்னாறு அணைக்கட்டின் நீளம் 365 மீட்டர். 63.63 அடி (19.40 மீட்டர்) உயரத்திற்குத் தண்ணீர் தேக்கி வைக்கப்படும். இந்த அணைக்கட்டிற்கு நீர்ப் பிடிப்புப் பகுதி டெங்கனிக் கோட்டைக் காட்டுப் பகுதியில் 240 சதுர மீட்டர் பரப்பளவு ஆகும். இந்த அணையின் கொள் அளவு 500 எம்.சி.ஃபீட்.

புதிதாக அணைக்கட்டுக் கட்டும் போது அப்பகுதியில் சில கிராமங்கள் பாதிக்கப்படுவதுண்டு. ஆனால் சின்னாறு அணைக்கட்டின் மூலம் எந்த ஒரு கிராமமும் பாதிக்கப் படவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

அணைக்கட்டு கட்டிமுடிக்கப் பட்டு நீர் தேக்கப்படும் போது, சாதனக்கல் என்றகிராமத்திற்குச் செல்லும் சாலை பாதிக்கப்படும். எனவே பஞ்சப்பள்ளி கிராமத்திலிருந்து சாதனக்கல் கிராமத்திற்கு ரூ. 2.5 இலட்சம் செலவில் புதிய சாலை போடவும் அரசு திட்டமிட்டுள்ளது.

சின்னாறு அணைக்கட்டு, வரும் நவம்பர் மாதம் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அணைகட்டி முடிந்தவுடன் பாசனத்திற்கு உடனடியாகத் தண்ணீர் திறந்து விடப்படும்.

சின்னாறு அணைக்கட்டுத் திட்டத்திற்குத் தமிழக அரசு ரூ. 2 கோடி ஒதுக்கியுள்ளது.

**வேளாண்மை :** சின்னாறு அணைகட்டின் மூலம் தர்மபுரி மாவட்டத்தில் 4,500 ஏக்கர் நிலம் நீர்ப் பாசன வசதி பெறும். இதில் 2,000 ஏக்கர் புதியதாக நீர்ப் பாசன வசதியையும், 2,500 ஏக்கர் நிலம் நிலையான நீர்ப் பாசன வசதியையும் பெறும். மேலும் இந்த அணைக்கட்டின் மூலம் ஜர்தலாவ் ஏரியின் கீழ்ப் புதிதாக 354 ஏக்கர் நிலம் பாசன வசதியைப் பெற்று நெல், கரும்பு போன்ற பயிர்கள் விளையும் நிலமாக மாறும்.

**உணவு உற்பத்தி :** இத்திட்டத்தின் மூலம் ஆண்டு தோறும் சுமார் 2,800 டன் உணவு தானிய உற்பத்திக் கூடுதலாகக் கிடைக்கும்.

**வேலை வாய்ப்பு :** சின்னாறு அணை கட்டும் திட்டத்தின் மூலம் தினந்தோறும் 1,000-க்கும் மேற்பட்டவர்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

**குடிநீர் வசதி :** சின்னாறு அணையிலிருந்து தர்மபுரி நகருக்குக்குடிநீர் கொண்டு வரும் ஒரு கோடி ரூபாய்ச் செலவிலான திட்டம் ஒன்றினை குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்டுள்ளது. இத்திட்டம், வரும் டிசம்பர் மாதம் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சின்னாறு அணைக்கட்டுத் திட்டம் தர்மபுரி மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்வில் ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கும் என்ற நம்பிக்கையினையூட்டும் திட்டமாகும்.

தர்மபுரி மாவட்டம் பின் தங்கிய நிலையினின்று, தழைத்து ஓங்கும் தர்மபுரியாக மாறித் தமிழக அரசு மேற்கொண்டுள்ள ஆக்கப் பணிகளில் சின்னாறு அணைத் திட்டம் குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்த இதழில்
தமிழ்நாடு மின்வாரியத்தின் சாதனைகளை விளக்கும் சிறப்புக் கட்டுரை இடம் பெறும்.



# அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் ஆற்றிடும் சீரிய பணிகள்!

அரிசன மக்களில் பெரும் பகுதியினர் ஆண்டாண்டுக் காலமாக மண் குடிசைகளில் தான் வாழ்கின்றார்கள்! மழைக் காலத்தில் அவர்களின் குடிசைகள் தீவுகளெனத் திகழ்கின்றன! அதனால் அவர்கள் படும்பாடு சொல்லுந்தரமன்று!

மழைக்காலத்தில் மட்டுமல்ல, கோடைக் காலத்திலும் அரிசன மக்கள் கொடுமைக்கு ஆளாகின்றார்கள்! அரிசன மக்களின் அறியாமை காரணமாக, இருக்கின்ற குடிசைகளும் தீயினால் பாதிக்கப்பட்டு, தெருவிலோ அல்லது மரத்தடியிலோ புகலிடம் தேடவேண்டிய நிலைமை அவர்களுக்கு ஆண்டுதோறும் ஏற்பட்டு வருகிறது!

அரிசன மக்களில் கணிசமான தொகையினர் சொந்தத்தில் வீட்டுமனை இல்லாததால், மற்றவர்களின் குடிசைகளில் ஒண்டுக்குடித்தனமாகவோ அல்லது மரத்தடியிலோ வாழ்ந்து வருகின்றனர்!

அப்படிப்பட்டவர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கினாலும், அம்மனையில் வீடுகட்டிக் கொள்வதற்குத் தேவையான பணவசதி அவர்களுக்குக் கிடையாது!

இவைகளையெல்லாம் நினைத்துப் பார்த்து, ஒரு நல்ல நெஞ்சம் கலங்கியது!

''இவ்வாறு வீட்டுவசதி இல்லாமல் இன்னலுறும் அரிசன மக்களுக்கு மழையாலும், புயலாலும், தீயினாலும் பாதிக்கப்படாத வீடுகளை கட்டிக் கொடுக்க முடியாதா?'' என்று அந்த நல்ல நெஞ்சம் சிந்தித்தது!

அடுத்து, ''வீட்டு வசதி இல்லாமல் வாடிடும் அரிசன மக்கள் எத்தனை பேர்கள் இருப்பார்கள்?' என்று அந்த நெஞ்சம் கணக்கிட்டது!

1971-ஆம் ஆண்டில் நடைபெற்ற மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டிலுள்ள மொத்தம் 412 இலட்சம் மக்கள் தொகையில், 76.42 இலட்சம் மக்கள் அதாவது 18.56 சத மக்கள் அரிசனங்களே என்றும், தமிழ்நாட்டில் ஏறத்தாழ 14.5 இலட்சம் அரிசனக் குடும்பங்கள் இருக்கின்றன என்றும், அரிசனங்களின் வீட்டுவசதிப் பிரச்சினையைத் தீர்ப்பதென்றால் குறைந்தது 10 இலட்சம் வீடுகள் கட்ட வேண்டும் என்றும் அந்த நெஞ்சத்திற்குத் தெளிவாகியது!

''10 இலட்சம் வீடுகள் கட்டுவதென்றால் காலமும், பணமும் அதிகமாகுமே!'' என்று எண்ணி அந்த நெஞ்சம் முதலில் சிறிது கலங்கினாலும், நெஞ்சத் துணிவுடன், ''படிப்படியாகவாவது அந்த அளவுக்கு வீடுகட்டி, இலவசமாக அரிசனங்களுக்கு வழங்கிட வேண்டும்!'' என்று முடிவு செய்தது!

ஏழை எளியவர்களின் வாழ்வை வளமாக்கி, ஏற்றத்தாழ்வற்ற சமதர்மச் சமுதாயத்தை அமைத்திடுவதையே இலட்சியமாகக் கொண்டு அயராது உழைத்து வருகின்ற அந்த நெஞ்சம், காலங்காலமாகச் சமுதாயத்தின் அடித்தளத்திலே ஆழ்த்தப்பட்டு, பஞ்சைகளாய்-பாமரர்களாய் - தாழ்த்தப்பட்டவர்களாய் - ஒதுக்கப்பட்டவர்களாய் - நாதியற்றவர்களாய் வாழ்ந்து வந்த அரிசன மக்களுக்கு மழையாலும், புயலாலும், தீயினாலும் பாதிக்கப்படாத -அனைத்து வசதிகளும் கொண்ட- ஒரு இலட்சம் வீடுகளை 1976-ஆம் ஆண்டிற்குள் கட்டி, இலவசமாக வழங்கப்படும் என்று அறிவித்தது!

அந்த நெஞ்சம், நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கான திட்டமெனில் தொல்லை பலவற்றை ஏற்றுக்கொண்டு துணிந்து செயல்படும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் நெஞ்சமே என்று நான் உங்களுக்குக் கூறிடத் தேவையில்லை! எனினும், அவ்வாறு கூறாது விடுவதும் முறையல்ல!

ஏனெனில், அண்ணல் காந்தியடிகள் கண்ட கனவை நிறைவேற்றப் பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய வழியில், அரசியல் நோக்கத்துடன் அல்லாமல், தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் — மனிதாபிமானத்துடன்—மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தான், இந்தியாவிலேயே முதன் முதலாக அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தைத் துவக்கினார் என்பது தமிழகத்திற்குக் கிடைத்த பெரும் பேருக உள்ளது!

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்த திட்டத்தைச் செயல்படுத்த 1974-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15-ஆம் நாள், 'தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம்' துவக்கப்பட்டது. கம்பெனிகள் சட்டத்தின் கீழ்த் துவக்கப்பட்ட தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம், 1-3-1974 முதல் செயல்படத் துவங்கியது.

ஒரு இலட்சம் வீடுகள் கட்டப்பட வேண்டுமென்ற திட்டத்தின் கீழ், முதலாவதாக 1975-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் இறுதிக்குள் 30,000 வீடுகள் தமிழகமெங்கும் கட்டி முடிக்கப்படும்.



ஆர். ஏ. சித்தாராமதாஸ் ஐ.ஏ.எஸ்.,
தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர்

இதற்குத் தேவைப்படும் 12 கோடி ரூபாயைத் தமிழ்நாடு அரசு ஒதுக்கியுள்ளது.

ஒவ்வொரு வீட்டின் அடித்தள பரப்பும் சுமார் 240 சதுர அடி கொண்டதாகவும், புகையடையாத சமையல் அறை, குளிக்கும் அறை, கக்கூஸ், காற்றோட்டத்திற்கு ஏற்றதான சன்னல்கள் போன்ற சுகாதார வசதிகளுடன் கூடியதாகவும் கட்டப்பட்டு வருகிறது. இவ்வீடுகள் உலகநாடுகள் சபையினால் (U.N.O.) நிர்ணயிக்கப்பட்ட, அனைத்துலக தரத்திற்குச் (International Standard ) சமமாக உள்ளது. ஒவ்வொரு வீட்டின் மதிப்பும் ரூபாய் 4,000. மலைப்பகுதியில் இவ்வீட்டின் மதிப்பீடு சுமார் ரூபாய் 6,000 வரை ஆகிறது.

இதுவரை தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக கட்டி முடிக்க ஒதுக்கப்பட்ட வீடுகள், கட்டி முடிக்கப்பட்ட வீடுகள், அதற்குச் செலவிடப்பட்ட தொகை ஆகிய விவரங்கள் அட்டவணை 1-ல் தனியே கொடுக்கப்பட்டுள்ளது.

அரிசன மக்களுக்காக வீடுகள் கட்டுவதற்குரிய ஊரும், இடமும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரைக்கு ஏற்பவே

## அட்டவணை — 1

### அரிசன மக்களுக்காக 31-12-1975—க்குள் கட்டி முடிக்கப்பட வேண்டிய வீடுகள்

| மாவட்டத்தின் பெயர் (1) | ஒதுக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை (2) | 31-12-75-க்குள் கட்டி முடிக்க வேண்டிய வீடுகளின் எண்ணிக்கை (3) | 31-10-75 வரை கட்டி முடிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை (4) | ஒதுக்கப்பட்ட தொகை 12-11-75 முடிய (ரூபாய்) (5) |
|---|---|---|---|---|
| 1. செங்கல்பட்டு ... | 2,380 | 1,874 | 900 | 81,51,000 |
| 2. வட ஆற்காடு ... | 2,902 | 2,902 | 1,088 | 64,98,000 |
| 3. தென்னாற்காடு ... | 5,102 | 3,169 | 1,352 | 79,07,950 |
| 4. சேலம் | 3,042 | 3,027 | 1,516 | 98,10,000 |
| 5. தர்மபுரி ... | 1,695 | 1,695 | 491 | |
| 6. கோயம்புத்தூர் ... | 2,860 | 2,118 | 989 | 1,16,49,500 |
| 7. நீலகிரி ... | 645 | 645 | 176 | |
| 8. திருச்சி ... | 4,062 | 3,852 | 2,422 | 1,24,03,905 |
| 9. புதுக்கோட்டை ... | 1,086 | 1,068 | 448 | |
| 10. தஞ்சாவூர் ... | 4,400 | 2,817 | 971 | 89,12,000 |
| 11. மதுரை ... | 2,464 | 2,334 | 886 | 94,12,000 |
| 12. ராமநாதபுரம் ... | 1,814 | 1,672 | 521 | |
| 13. திருநெல்வேலி ... | 2,068 | 2,230 | 871 | 60,80,000 |
| 14. கன்னியாகுமரி ... | 597 | 597 | 156 | |
| எல்லா மாவட்டங்களுக்கும் தளவாட சாமான்கள் வாங்கியவை. | | | | 88,37,651 |
| மொத்தம் ... | 35,117 | 30,000 | 12,787 | 8,96,62,006 |

தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இவ்வாறு தேர்ந்தெடுக்கும் போது, அரிசன நலத்துறையினரால் ஏற்கனவே வீட்டுமனைகளுக்காகக் கையகப்படுத்தப்பட்ட (ஆர்ஜிதம்) இடங்களில், வீடுகள் கட்டுவதற்கு முன்னுரிமை அளித்து பரிசீலிக்கப்படுகிறது. கட்டிமுடிக்கப்பட்ட வீடுகள் அனைத்தும், ஏற்கனவே அந்தந்த இடத்தில் வாழ்ந்து வந்த அரிசனக் குடும்பங்களுக்கே உரிமைப்படி வழங்கப்படுகின்றன. வழங்கப்பட்ட வீடுகளைக் கண்காணிப்பது வீடுகளைப் பெற்றுக் கொண்டவர்களின் பொறுப்பாகும். எனினும் மேற்படி குடியிருப்புகள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கீழ் பணியாற்றும் அரிசன நல அதிகாரிகள் மூலமாகப் பொதுவான கண்காணிப்புக்குள்ளதாகும்.

இந்தியத் துணைக் கண்டத்திலே தமிழ்நாட்டில் தான், அரிசன மக்களுக்காக அதிக அளவு வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளதுடன், எல்லா வசதிகளும் நிறைந்த தரமான வீடுகள் கட்டி இலவசமாக வழங்கப்படுகின்றன!

அரிசன மக்களுக்காகத் தமிழ்நாட்டில் கட்டப் பெற்று இலவசமாக வழங்கப்படும் வீடுகளைப் பார்வையிட்ட பிற மாநிலத் தலைவர்களும், அமைச்சர்களும், அயல்நாட்டவர்களும் இத்திட்டத்தை மட்டும் பாராட்டாமல், இத்திட்டத்தின் காரணகர்த்தாவான மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையும் பாராட்டியுள்ளனர்!

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தைப் பிற மாநில அரசுகளும் செயல்படுத்த முயன்று வருகின்றன. எனவே, அரிசனங்களுக்காக வீடுகட்டி இலவசமாக வழங்குவதில், தமிழ்நாடு முன்னோடியாக விளங்குகிறது என்றால் மிகையல்ல!



## மீனவர்களுக்கான வீடுகள் கட்டும் திட்டம் :—

கடலை நம்பி வாழ்ந்து கடுங் காற்றுக்கும், கடல் கொந்தளிப்புக்கும், பேய் மழைக்கும் இரை போல் குடிசைகளில் பாதுகாப்பின்றி வாடும் மீனவர் பெருங்குடி மக்களுக்கான வீடுகள் கட்டித் தரும் பணியினையும், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைத்துள்ளார்கள். அதன்படி செங்கை, தென்னார்க்காடு, புதுக்கோட்டை, இராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி, தஞ்சை ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 5,000 வீடுகள் கட்டுவதற்குத் திட்டமிட்டு, முதற் கட்டமாக 3,147 வீடுகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மாவட்ட வாரியாக மீனவர்களுக்காகக் கட்டப்பட்டு வரும் வீடுகள் பற்றிய விவரங்கள் கீழே இணைப்பு 2-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் :—

தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம், ஏழை அரிசன மக்களுக்கும், ஆதிவாசிகளுக்கும் குடியிருக்க, சுகாதார வசதிகளுடன் கூடிய தரமான வீடுகளைக் கட்டிக் கொடுப்பதைத் தனது தலையாய பணியாக மேற்கொண்டிருப்பினும், அவ்வாறு வீடுகள் கட்டும் இடங்களில் உள்ள அரிசனங்களின் நல்வாழ்வுக்காக, கீழ்க்கண்ட பொருளாதார வளர்ச்சித் திட்டங்களையும் மேற்கொள்கிறது.

### 1. தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும் திட்டம் :-

சாதாரணமாகச் சமுதாயத்தில் அன்றாட வாழ்க்கைக்குப் போதிய வருவாய் இல்லாமல் ஏழ்மை நிலையில் இருக்கும் ஏழை அரிசனங்களுக்காக மாவட்டங்கள் வாரியாக சிறு சிறு கூட்டுறவுத் தொழிற் சங்கங்கள் ஆரம்பித்து, அந்தந்த மாவட்டங்களில் கிடைக்கும் மூலப்பொருள்களைக் கொண்டே இயங்கக்கூடிய சிறு தொழிற் கூடங்களை அமைத்து, அதில் உற்பத்தியாகும் பொருள்களைக் கூட்டுறவுத்துறை வழியாக பல்வேறு விற்பனை நிலையங்களுக்கும் அனுப்பி, அவற்றின் வாயிலாக எல்லோருக்கும் வேலை வாய்ப்புக் கிடைக்கச் செய்வதோடு, அதில் வரும் இலாபத்தையும் அரிசனத் தொழிலாளர்களுக்கே கிடைக்கச் செய்வதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

மேற்கண்ட பெருநோக்கோடு, வட ஆர்க்காடு, மதுரை, தென்னார்க்காடு மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில், கீழே அட்டவணை 3-ல் குறித்தவாறு சிறிய தொழிற்சாலைகளைக் கூட்டுறவு முறையில் அமைத்து அரிசனப் பெருமக்களால் நடத்தப்படுவதற்கான திட்டங்களை தமிழ்நாடு அரிசன வீட்டு வளர்ச்சிக் கழகம் மேற்கொள்ளத் தயாராக உள்ளது. பல தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து பொருளுதவியை நாடியுள்ளோம்.

### 2. ஆட்டோ ரிக்ஷாக்கள் வழங்கும் திட்டம் :-

இத்திட்டத்திற்கான நிதி வசதிகள் தனியே ஒதுக்கப்படாததால், முதலில் அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் தனது நிதியிலிருந்து வழங்கி, பின்னர் சம்பந்தப்பட்ட தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக, உரிய பயனாளிக்குக் கடன் வழங்க ஏற்பாடு செய்து அந்தப் பணத்தைத் திரும்பவும் அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழக நிதியில் சேர்த்து ஈடுகட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வழங்கப்பட்ட ஆட்டோ ரிக்ஷாக்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## அட்டவணை — 2

### மீனவர்களுக்கான வீடு கட்டும் திட்டம்

| மாவட்டம் (1) | நிர்ணயிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை (2) | எடுத்துக்கொண்ட வீடுகளின் எண்ணிக்கை (3) |
|---|---|---|
| 1. செங்கற்பட்டு சென்னை | 1,202 | 905 |
| 2. தென் ஆற்காடு | 420 | — |
| 3. தஞ்சாவூர் (பூம்புகாரில் கட்டப்பட்ட 500 வீடுகளும், வாணகிரியில் கட்டப்படுகிற 500 வீடுகளும் நீங்கலாக) | 899 | 300 |
| 4. புதுக்கோட்டை | 442 | 442 |
| 5. ராமநாதபுரம் | 350 | 350 |
| 6. திருநெல்வேலி | 480 | 480 |
| 7. கன்னியாகுமரி | 670 | 670 |
| | 4,463 | 3,147 |

| ஆட்டோ ரிக்ஷா வழங்கிய இடமும், தேதியும் | எண்ணிக்கை | கிரயத் தொகையுடன் செலவான தொகை |
|---|---|---|
| | | ரூ. பை |
| நாகபட்டினம் (அக்டோபர் '74). | 3 | 31,669.24 |
| திருவலஞ்சுழி (நவம்பர் '74) | 3 | 33,531.93 |
| திருக்குவளை (மார்ச் '75) ... | 3 | 33,841.00 |
| காட்டுப்பாக்கம் (ஜனவரி '75) | 2 | 22,229.00 |
| ஆக மொத்தம் | 11 | 1,21,271.17 |

# டான்சியின் எழில் படைப்புகள்!

காலத்தை வெல்லும் டான்சியின் தயாரிப்புகள் மர மற்றும் எஃகு சாதனங்கள் டான்சியின் மேன்மையான படைபபுகள். நாளைய வடிவமைப்புகளில்

இன்றே வழங்கப்படும் இச்சாதனங்கள் நீடித்து உழைப்பவை, நாற்காலிகள், மேசைகள், பீரோக்கள், கட்டில்கள் முதலிய பற்பல எழில்மிகு தயாரிப்புகளை வழங்குவது டான்சி.



டான்சி

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்,
26, ஒயிட்ஸ் ரோடு,
சென்னை-600 014




## அட்டவணை — 3

## அமைக்கப்படவிருக்கும் தொழிற் கூட்டுறவு சங்கங்களின் விவரங்கள் :—

| திட்டத்தின் பெயர் (1) | அமைக்க உத்தேசிக்கப்படும் சங்கங்களின் எண்ணிக்கை (2) | வேலை வாய்ப்பு பெறவிருக்கும் நபர்களின் எண்ணிக்கை (3) | திட்டத்தின் மொத்த செலவு (4) | பயிற்சிக்கான செலவு (5) | நிலையான மூலதனச் செலவு (6) | வேலைக்கான மூலதனச் செலவு (7) |
|---|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் | இலட்சக் | கணக்கில் | ) |
| **வட ஆர்க்காடு மாவட்டத்தில் :** | | | | | | |
| (1) ஆட்டுரோமம் மற்றும் கம்பளம் ஏற்றுமதி செய்யும் கூட்டுறவுச் சங்கங்கள் ... | 4 | 400 | 28.840 | ... | 7.400 | 21.440 |
| **வட ஆர்க்காடு மாவட்டத்தில் :** | | | | | | |
| (2) தோல் பதனிடும் பணிக்கான கூட்டுறவு தொழிற் சங்கங்கள் பேரணாம்பேட், வாணியம்பாடி, ராணிப்பேட்டை. ... | 4 | 400 | 38.520 | ... | 24.400 | 14.120 |
| **மதுரை மாவட்டத்தில் :** | | | | | | |
| (3) ஆட்டுரோமம் சேகரித்தல் மற்றும் கம்பளி நெய்தலுக்கான கூட்டுறவு தொழிற்சங்கம், திண்டுக்கல். | 1 | 60 | 3.685 | 0.450 | 1.500 | 1.735 |
| **தென் ஆற்காடு மாவட்டத்தில் :** | | | | | | |
| (4) குன்னம் அல்லது வைஞர் கிராமத்தில் கருங்கல் செதுக்குதல் மற்றும் பளபளப்பாக்கும் கூட்டுறவு தொழிற்துறைச் சங்கம் அமைத்தல்... | 1 | 370 | 5.147 | 1.300 | 1.600 | 2.247 |
| **தஞ்சாவூர் மாவட்டத்தில் :** | | | | | | |
| (5) சிமெண்ட் குழாய் உற்பத்தி செய்யும் கூட்டுறவுத் தொழிற்சங்கம்... | 1 | 40 | 1.890 | ... | 0.600 | 1.290 |
| மொத்தம் ... | 11 | 1,270 | 78.082 | 1.750 | 35.500 | 40.832 |

இவை தவிர தென் ஆற்காடு மாவட்டத்தில் கடலூரில் 17-1-1975-ல் வழங்கப்பட்ட 5 ஆட்டோ ரிக்ஷாக்களுக்கான கிரயத் தொகையினை கடலூர் யூனைடெட் கமர்ஷியல் வங்கியிடமிருந்து கடனாகப் பெற்று, மேற்படி ஆட்டோ ரிக்ஷாக்களை உரிய பயனாளர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

### இனி வழங்க வேண்டிய ஆட்டோ ரிக்ஷாக்கள்:-

தற்சமயம் 11 ஆட்டோ ரிக்ஷாக்கள் வழங்கப்பட வேண்டியதற்கான நிலையில் உள்ளன. இவற்றில் 5 'பாடி' கட்டப்பட்டு தயாராக உள்ளன. பாக்கி 6 ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு 'பாடி' கட்டப்பட வேண்டும். இதற்கான நிதி வசதி முழுவதும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிதி வசதிகள் கிடைத்தவுடன் மேற்படி ஆட்டோ ரிக்ஷாக்கள் உரிய பயனாளர்களுக்கு வழங்கப்படும்.

இப்படி வழங்கப்படும் கடன் தொகையினை 36 மாதத் தவணைகளில், 11 சதவீத வட்டியுடன் திரும்பப்பெற சம்பந்தப்பட்ட வங்கிகள் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.



### 3. கறவை மாடுகள் (பசு, எருமை) வழங்கும் திட்டம் :-

இத்திட்டமானது ஒவ்வொரு அரிசன பயனாளிக்கும் ரூபாய் 1,650/-க்கு மேற்படாத வகையில் இரண்டு கறவை மாடுகள், இரண்டு வெவ்வேறு காலக்கட்டங்களில் வாங்குவதற்கு வகை செய்கிறது. இக்கடனானது 4 சதம் குறைந்த வட்டி விகிதத்தில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி, இதுவரை வழங்கப்பட்ட கறவை மாடுகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வழங்கப்பட்ட இடம் (1) | வழங்கப்பட்ட கறவை மாடுகளின் எண்ணிக்கை (2) | பயன் பெற்றவர் எண்ணிக்கை (3) |
|---|---|---|
| காட்டுப்பாக்கம், செங்கை மாவட்டம் ... | 10 | 10 |
| ஆமூர், திருச்சி மாவட்டம். ... | 6 | 6 |
| தென்னமநாடு, தஞ்சை மாவட்டம் ... | 9 | 9 |
| திருவலஞ்சுழி, (தஞ்சை மாவட்டம்) ... | 10 | 10 |
| மானுங்கோரை (தஞ்சை மாவட்டம்) .. | 10 | 10 |

இவை தவிர, மார்ச் 1975-ல் தஞ்சை மாவட்டம் சித்தமல்லி கிராமத்தில், 10 கறவை மாடுகள் அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழக நிதியிலிருந்து கடனாக அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணத்தை 24 மாதத் தவணை முறையில் திரும்ப பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 4. கோழிகள் வளர்ப்புத் திட்டம் :-

அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தால் கட்டப்படும் வீடுகளில் குடியமர்த்தப்பட்டுள்ள ஏழை அரிசனங்களின் வருமானத்தைப் பெருக்கும் வகையில், அவர்களுக்குக் கோழிகள் வழங்குவதும் ஒரு திட்டமாகும். இத் திட்டத்தின் படி ஒவ்வொரு அரிசன பயனாளருக்குப் ரூபாய் 250/- வரை கடன் அனுமதிக்கப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் 10 கோழிகள், அதற்கான உணவு, கோழி வீடு ஆகியவற்றிற்கும் இதுவகை செய்கிறது. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் இக்கடன் வழங்க முன்வராத காரணத்தால், அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் இத்திட்டத்தை தனது நிதியிலிருந்தே செயல்படுத்தியது. இக்கடன் 12 தவணைகளில் மாதம் ரூபாய் 20/- வீதம் 11 தவணைகளிலும், கடைசித் தவணையாக ரூபாய் 30/-ம் ஆக 4 சத வட்டியுடன் வசூலிக்கப்பட வேண்டியதாகும். கீழ்க்கண்ட இடங்களில் இதுவரை இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

| வழங்கப்பட்ட இடம் (1) | பயனாளர் எண்ணிக்கை (2) | வழங்கப்பட்ட கோழிகள் (3) | மொத்தக் கடன் தொகை (ரூபாய்) (4) |
|---|---|---|---|
| **தஞ்சை மாவட்டம் :** | | | |
| 1. திருவலஞ்சுழி ... | 10 | 100 | 8,581.80 |
| 2. மேலவிடையால் ... | 10 | 100 | |
| 3. தென்னம நாடு ... | 10 | 100 | |
| 4. மானுங்கோரை ... | 10 | 100 | |
| **திருச்சி மாவட்டம் :** | | | |
| 1. தேவராய நேரி (நரிக்குறவர்) ... | 12 | 120 | 2,697.47 |
| **தஞ்சை மாவட்டம் :** | | | |
| 1. திருக்குவளை ... | 10 | 100 | 5,186.26 |
| 2. எடையார் ... | 10 | 100 | |

### 5. 'கேர்' கோதுமை விற்பனைத் திட்டம் :-

"கேர்" நிறுவனம் வழங்கிய கோதுமை விற்பனை வழி கிடைக்கும் பணத்தைக் கொண்டு, பொருளாதார வளர்ச்சி நிதியினை ஏற்படுத்தி அதன் மூலம் அரிசன குடியிருப்பு இல்லங்களில் சமுதாய நலப்பணி மன்றங்கள் அமைத்து, அரிசனப் பெண்மணிகளுக்கு வேலைவாய்ப்பு (தையல், சத்துணவு தயாரித்தல்) ஏற்படுத்துவதோடு, குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் சுகாதார வசதியும் ஏற்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்படி இதுவரை கீழ் கண்ட இடங்களில் சமூக நலப்பணி மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

செங்கல்பட்டு மாவட்டம் :-

| | |
|---|---|
| காட்டுப்பாக்கம் | 1 |
| தாமல் | 1 |
| வாலாஜா பாத் | 1 |
| கொட்டிவாக்கம் | 1 |

### வேண்டுகோள்

இதுவரை கூறியவற்றிலிருந்து, தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம், தமிழகத்திலுள்ள அரிசன மக்களுக்கும், மீனவர்களுக்கும் வீடுகள் கட்டி இலவசமாக வழங்கும் பணியைத் தலையாய கடமையாகக் கொண்டிருப்பதுடன், அரிசன மக்கள் பொருளாதார மேம்பாடு அடைய வேண்டுமென்பதற்காகப் பல்வேறு பொருளாதார வளர்ச்சித் திட்டங்களையும் செயலாற்றி வருகிறது என்பது தெளிவாகிறது. தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டுள்ள பணி உடனடியாக முடிந்துவிடக் கூடியதல்ல! பல கோடி ரூபாய் செலவில், 10 ஆண்டுகாலமாவது செயல்பட்டால்தான், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் இலட்சியமான 10 இலட்சம் வீடுகளைக் கட்டி அரிசனங்களுக்கு இலவசமாக வழங்க முடியும். எனவே, இம்மாபெரும் பணியில் தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் வெற்றி பெறவும். அதன் மூலம் அரிசன மக்கள் பயன் பெறவும் தமிழகத்திலுள்ள அரிசன மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.





# தமிழ் உணர்வை வளர்ப்பதில் முன்னணியில் திகழ்வோம்!

பல்வேறு தலைப்புகளில் நூல்கள் எழுதப்பட்டு முதல் பரிசுகளாக பன்னிரண்டும், இரண்டாவது பரிசுகளாக எட்டும் ஆக இருபது பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

பரிசுகளுக்காக வந்த நூல்களின் மொத்தக் கணக்கு 144.

144 என்பது சட்டத்திலே வேறு கணக்கு; ஆனால் எந்தவிதமான தடையும் இல்லாமல் அந்த 144-இந்தத் தீர்ப்புக் குழுவினர், நீதிபதிகள் அனைவரும் நுழைந்து அதிலே இருபது நூல்களைத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர்.

இந்தப் பரிசுக்குரிய நூல்களை எழுதியவர்களில் இருவர் இன்று நம்மிடையே இல்லை; ஒருவர் அவ்வை டி. கே. சண்முகம்; இன்னொருவர் கவிஞர் வாணிதாசன்.

உருவ அளவில் அவர்கள் நம்மிடையே இல்லாவிட்டாலும், அவர்களுடைய புகழ் ஒளியின் அளவில் நம்மிடையே என்றென்றும் நிலைத்திருக்கக்கூடியவர்கள். இறவாப் புகழ்பெற்ற அவர்கள் நேரிடையாக இந்தப் பரிசைப் பெறக்கூடிய சூழ்நிலை—அதை வழங்கக்கூடிய வாய்ப்பு எங்களுக்கு இல்லாமல் போய்விட்டது என்றாலும் அவர்களுடைய புகழை மனத்திலே நிறுத்தி இந்தப் பரிசுகளை இங்கே நாம் வழங்கியிருக்கிறோம்.

இந்த அரிய நூல்களை எழுதியவர்களுக்கெல்லாம் என்னுடைய வாழ்த்துக்களை மீண்டுமொரு முறை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட திறமையாளர்கள் பக்கம் என்றென்றும் தமிழக அரசு இருக்கும்; இப்படிப்பட்ட திறமையாளர்களை வளர்க்க இந்த அரசு மேலும் தொடர்ந்து பணியாற்றும்.

தமிழக அரசைப் பொறுத்தவரையில் அவ்வை துரைசாமி பிள்ளை அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போலத் தமிழை வளர்ப்பதில் தமிழ் உணர்வுகளை வளர்ப்பதில் தமிழர்களின் வரலாறுகள் மங்காமல் காப்பாற்றப்பட வேண்டும் என்ற முனைப்பான முயற்சியில் ஈடுபடுவதில் கடந்த சில ஆண்டுக் காலமாகக் காட்டி வருகின்ற நிலைமைகளை நீங்கள் நன்கு உணர்வீர்கள்.

எந்த அளவிற்கு நம்முடைய தமிழ்ச் சான்றோர்களுடைய வரலாறுகள் மக்களுடைய உள்ளத்தில் பதிய வேண்டும் என்பதற்காக நாம் எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகளை எழுதிக் காட்டுவதைவிட—பேசிக் காட்டுவதைவிட மூதறிஞர் ராஜாஜி மண்டபத்தில் உட்கார்ந்திருக்கிற நீங்கள் ஒருமுறை உங்கள் கண்களைச் சுழலவிடுவீர்களானால், இந்த மண்டபத்திலே சென்ற ஆண்டு கண்ட படங்கள் என்னென்ன அந்த வெள்ளைக்காரர்களின் படங்கள்—நமக்குத் தொடர்பில்லாத பலருடைய படங்கள் இங்கே இருந்தன. அவைகள் எல்லாம் மறைந்து, தமிழ்நாட்டைச் சேர்ந்த சான்றோர்களுடைய படங்கள் இந்த மண்டபத்தில் அணி செய்வது ஒன்றே போதும், தமிழ் உணர்வை வளர்க்க இந்த அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்கு எடுத்துக்காட்டாக.

தமிழர்களுடைய இலக்கியம் மறையாமல் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகத்தான் கரிகால் சோழன் காலத்தில் இருந்த காவிரிப்பூம்பட்டினத்தை இன்று புதிய பூம்புகாராகப் படைத்து, அங்கே சிலப்பதிகாரக் காவியத்தையே சிலை வடிவத்தில் உருவாக்கியிருக்கிறோம்.

நீண்டகால வரலாற்றைக் கொண்டதாக இல்லாவிட்டாலும் அண்மைக்காலத்திய வரலாறு என்றாலும், ஆயிரம் ஆண்டு காலத்திற்குப் பிறகு அதுவும் நீண்ட வரலாறாக ஆகும் என்ற எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு பாஞ்சைப் பகுதியில் பறங்கியரை எதிர்த்துப்போரிட்டு வீர மரணமடைந்த கட்டபொம்மனுக்கு நினைவுச் சின்னமாகக் கோட்டை எழுப்பியிருக்கிறோம்.

தேவநேயப் பாவாணர் தலைமையில் அகரமுதலி தயாரிக்கும் பெருமுயற்சியை இந்த அரசின் சார்பில் இன்றைக்கு நடத்திக் கொண்டிருக்கிறோம்.

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டிற்குப் பிறகு, பாரிசில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் நான் பேசுகின்ற நேரத்திலே, தமிழ்ச் சொற்களை, இலட்சக்கணக்கான சொற்களை மக்கள் புரிந்து கொள்கிற வகையில், மறைந்தும், அழிந்தும் போய்விட்ட சொற்களை எல்லாம் வெளிக்கொணர வேண்டும் என்ற அடிப்படையில் பெரிய அகராதி ஒன்று தயாரிக்கப்பட வேண்டுமென்று சொன்னேன்.

அந்தக் கருத்து செயல்பட வேண்டும் என்பதற்காக நாவலர் அவர்களுடன் கலந்து பேசி,—தமிழாற்றல், இலக்கியப் புலமை, நடமாடும் பல்கலைக் கழகம்என்று அண்ணா அவர்களால் பாராட்டப்பட்ட நாவலர் அவர்களுடைய தமிழார்வத்தைப் பரிமாறிக் கொள்கிற வகையில் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லி அகரமுதலியைத் தயாரிக்க - அந்தப் பொறுப்பை தேவநேயப் பாவாணர் அவர்களிடம் ஒப்படைத்து, அது தயாராகிக் கொண்டிருக்கிறது.

அந்த நூல் முழுமை பெற்று வெளிவருமேயானால் தமிழர்களுக்குக் கிடைத்த ஒப்பற்ற கருவூலமாக நிச்சயமாக இருந்திடும்.

அதையும் இந்த அரசின் சார்பில் செலவைப்பற்றிக் கவலைப்படாமல் இன்று நாம் செய்து கொண்டிருக்கிறோம்.

மறைந்த மேதை டாக்டர் மு.வ. அவர்களுடைய தலைமையில் தமிழர்களுடைய வரலாறு எழுதப்பட வேண்டும் என்று நாங்கள் முயற்சி எடுத்து அவருடைய தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டு, பல பகுதிகளாக அந்த நூல்கள் வெளியிடப்பட வேண்டுமென்று எடுத்துச் சொல்லி, அதிலே முதல் பகுதியை இன்று வெளியிட்டிருக்கிறோம்.

இந்த நூலின் விலை பதினைந்து ரூபாய் ஆகும்; இதற்கு மேல் விலை என்றாலும் கூட, விலையைப் பார்க்காமல், உங்களுடைய வீட்டு நூலகத்தில் இருக்க வேண்டிய நூல்களில் இதுவும் ஒன்று என்கிற அந்த உணர்ச்சியை ஒவ்வொரு தமிழ் மகனும் பெற்றாக வேண்டும்.

## முதல்வர் கலைஞர்

இந்த நூலோடு தொடர்பு கொண்டவர்கள் என்ற வகையில் கா. அப்பாத்துரையார், அனுமந்தன், அ. இராகவன், சி.ஈ. இராமச்சந்திரன், ச. சரவணன், எ. சுப்பராயலு, செங்கைப் பொதுவன், சு. செல்லப்பன், தங்கவேலு, க.த. திருநாவுக்கரசு, நாகசாமி, கே. கே. பிள்ளை, கொண்டல் மகதேவன், கா. மீனாட்சிசுந்தரனார், மு. வரதராசனார், மயிலை சீனி வெங்கடசாமி ஆகிய இந்த பதினாறு பேர்களும் தொடர்பு கொண்டு நூலை வெளிக் கொணர்ந்திருக்கிறார்கள்.

இதைத் தொடர்ந்து, அடுத்த தொகுதி கிட்டத்தட்ட தயாராகி விட்டது என்று நான் கருதுகின்றேன். இன்னும் இரண்டொரு மாதங்களில் இதனுடைய இரண்டாவது தொகுதி வெளியிடப்படவிருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிலத்திற்கு முதலில் தமிழ்நாடு என்றோ, தமிழ் நிலம் என்றோ பெயர் இல்லாமல், தமிழ் என்று மொழியின் பெயரால் இந்த நிலம் அழைக்கப்பட்டது என்கிற ஒரு அருமையான கருத்தும் இந்த நூலில் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குச் சான்று 'தமிழ் கூறும் நல்லுலகம்' என்ற சொற்றொடர். இதற்குத் தமிழ்நாடு, தமிழ் நிலம் என்றெல்லாம் பெயர் வருவதற்கு முன்பு தமிழ் என்ற மொழியின் பெயரால் அழைக்கப்பட்டது.

இன்னும் கூட தேவநேயப் பாவாணர் ஆராய்ச்சியில் ஒன்றைச் சொல்கிறார். உலகத்திலே தமிழுக்கு முதலில் மொழி என்றுதான் பெயர்; தமிழ் என்று பிறகு வந்தது; ஆரம்பத்தில் ஒரே ஒரு மொழிதான் இருந்தது; அது தமிழ்; ஆகவே அதனை மொழி என்றே குறிப்பிட்டார்கள். பிறகுதான் பல மொழிகள் தோன்றி, அதிலிருந்து நம்முடைய மொழியைப் பிரித்துக் காட்டத் தமிழ் மொழி என்று சொல்லப்பட்டது என்று கூறுகிறார். அதற்கு அவர் சொல்கிற எடுத்துக் காட்டு, ஒரு ஊரில் ஒரே மரம் இருந்தால், வீட்டுப்பிள்ளை எங்கே போய் இருக்கிறான் என்று கேட்கின்ற நேரத்தில், மரத்தடிக்குப் போய் இருக்கிறான் என்று சொல்வார்கள். பல மரங்கள் இருந்தால் பையன் எங்கே என்று கேட்கிற போது மாமரத்தடிக்குப்போயிருக்கிறான், தென்னை மரத்தடிக்குப் போயிருக்கிறான் என்று சொல்வார்கள். அதைப் போல ஒரேயொரு மொழி இருந்தபோது அதை மொழி என்று மட்டும் சொன்னார்கள். பல மொழிகள் வந்த பிறகு பிரித்துக் காட்ட இது தமிழ்மொழி என்று சொல்கிறோம். ஆகவே முதலில் மொழி என்றுதான் இருந்தது. இப்படிப்பட்ட ஆராய்ச்சிகள் எல்லாம் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன.

இப்படிப்பட்ட மொழிவளம், நிலவளம், நீர்வளம், மனவளம், அறிவு வளம், கலை வளம், கலாச்சார வளம், பண்பாட்டு வளம் எல்லா வளங்களும் பெற்ற நம்முடைய தமிழ் கூறும் நல்லுலகத்தைப் பற்றிய வரலாறு வெளிவரும் இந்த இனிய முயற்சி வெற்றி பெற்று விழாவாக இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த முயற்சி மேலும் தொடர்ந்து நடைபெற தமிழ்ச் சமுதாயப் பெருங்குடி மக்களுடைய வாழ்த்துக்கள் நிச்சயமாக கிடைக்கும் என்று நம்புகிறேன்.

[தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றத்தின் சார்பில் சிறந்த நூல்களுக்குப் பரிசளித்துத் தமிழ் நாட்டு வரலாறு முதல் தொகுதியை வெளியிட்டு 21-11-75 அன்று சென்னை ராஜாஜி மண்டபத்தில் முதல்வர் கலைஞர் ஆற்றிய உரையிலிருந்து]



சிறு தொழிலுக்கோர் உறுதுணை..... எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்

அரிசிமில், மாவுமில், ஆயில் மில், மர அறுவைத் தொழில் போன்ற சிறு தொழில் நிறுவனங்களில் இயங்கும் மோட்டார்களைச் சீராகச் செலுத்த, சிறந்த ஒரு சாதனம் எல் & டி ஸ்டார்ட்டர். எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸ்டார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

உங்கள் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

· பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று, வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்துகொடுக்கின்றனர்.

· சிறிய ஊர்களில் கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

L&T Switchgear

ஸ்விட்ச்கியர் டிவிஷன்,
லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்
P.O. Box 8922, பம்பாய் 72 ☐ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 ☐ Post Bag 5247, சென்னை 2.


# தமிழரசு


மலர் : 6
இதழ் : 11


பண்டையப் புகழ்வாய்ந்த 'மாமல்லபுரம்'- மகாபலிபுரம் என்று இடையே வழங்கப்பட்டு வந்தது. அது மீண்டும் அப்பெயரிலேயே வழங்கப் பெற வேண்டும் என்ற தமிழக அரசின் வேண்டுகோளுக்கு மத்திய அரசு இசைவளித்துள்ளது. எனவே, இனி 'மாமல்லபுரம்' என்ற பெயராலேயே அழைக்கப்படும்.







# பைந்தமிழ்த் தேர்ப் பாகனும் பத்திரிகைத் தொழிலும்

—சிவ.குமரன்

கவியரசர் பாரதியார் பற்றிப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் பாடிய வரிகள்.

'பைந்த.மிழ்த்தேர்ப் பாகன், அவனொரு
செந்தமிழ்த் தேனீ சிந்துக்குத் தந்தை
குவிக்கும் கவிதைக் குயில் இந்நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு,
காடு கமழும் கற்பூரச் சொற்கோ
கற்பனை ஊற்றும் கதையின் புதையில்
திறம்பாட வந்த மறவன் புதிய
அறம் பாட வந்த அறிஞன்.....''

இவைகளுக்கு இணையாக இன்னொருவர் பாரதியைப் பாட முடியுமா என்பது ஐயமே.

அந்தப் பைந்தமிழ்த் தேர்ப்பாகன், பாட்டுக்கொரு புலவனாக நாட்டுக்கு அறிமுகமாகியிருந்தாலும் பத்திரிகைத் தொழில் மிகவும் விரும்பியவராகத் திகழ்ந்தார்.

எட்டையபுரம் சமஸ்தானத்தில் அரசவைப் புலவராகப் பாரதியார் தமது இருபத்திரண்டாம் வயதுக்குள்ளாகப் பணியாற்றினார். 1904-ஆம் ஆண்டில் ஏறத்தாழ 100 நாட்கள் தமிழாசிரியராக மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றினார். அதே ஆண்டில் சென்னைக்கு வந்து சேர்ந்தார். அங்கு, சுதேசமித்திரன் பத்திரிகையில் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார்.

'கவிச்சக்கரவர்த்தி' சுப்பிரமணிய பாரதி சரிதம் என்ற நூலில் ஆக்கூர் அனந்தாச்சாரியர் அவர்கள் கோடிட்டுக் காட்டிருப்பது போல, 'எவருக்கும் கட்டுப்படும் சுபாவம் பாரதியாரிடம் இல்லாமல் இருந்ததன் காரணமாகவே அவர் முதலில் தாம் ஏற்றுக் கொண்ட பொறுப்புகளிலிருந்து விலகிக் கொண்டிருக்கலாம். எப்படியோ பத்திரிகைத் தொழிலில் பாரதியாருக்கு ஈடுபாடு உருவாகிவிட்டது.

பாரதியார் எட்டையபுரத்தில் இருந்தபொழுது எழுதி அனுப்பிய கவிதை, மதுரையிலிருந்து வெளிவந்த 'விவேக பாநு' என்ற மாதப் பத்திரிகையில் 'தனிமை இரக்கம்' என்ற தலைப்பில் 1904-ஆம் ஆண்டில்' வெளிவந்துள்ளது. இதுதான் முதன் முதலில் வெளிவந்த பாரதியார் கவிதை என்கிறார்கள்.

1904-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சுதேசமித்திரனில் உதவி ஆசிரியராகச் சேர்ந்தாலும் அவருடைய சொந்தக் கருத்துக்களை அப்பத்திரிகையில் எழுத வாய்ப்புகள் அமைந்திடவில்லை. ஆனால் அதே அலுவலகத்திலிருந்து 'சக்கரவர்த்தினி' என்ற திங்கள் இதழ் வெளியாகியது. அதற்கு, பாரதியார் ஆசிரியராகப் பணியாற்றினார்.

அங்கேயும் தொடர்ந்து பாரதியார் பணியாற்றவில்லை. 'இந்தியா' பத்திரிகையின் ஆசிரியரானார். இந்தியா வாரப் பத்திரிகை 1906-ஆம் ஆண்டு வெளி வந்தது. 1908-ஆம் ஆண்டு வரை சென்னை 34, பிராட்வேயிலிருந்து வெளிவந்தது இப்பத்திரிகை. அந்தநாளில் மிகவும் பரபரப்பான வெள்ளையர் ஆட்சி, இந்தியா பத்திரிகை மீது எப்பொழுதுமே ஒரு கண் வைத்திருந்தது. பத்திரிகை வேகத்தைக் குறைத்துக் கொள்ள பாரதியாரின் நண்பர்கள் பலமுறை வற்புறுத்தினார்கள். ஆனால் பாரதியார் ஒப்பவில்லை.

பாரதியார் அவர்கள் இந்தியா பத்திரிகை நடத்திய முறை அந்தக் காலத்தில் மிகவும் புதுமையாக இருந்தது. பாரதியார், பத்திரிகையில் ஓவியங்கள் இடம் பெறுவதை மிகவும் விரும்பினார். சனிக்கிழமைதோறும் வெளிவந்த இந்தியா பத்திரிகையின் விலை ஓரணாதான். நான்காயிரம் பத்திரிகை வரை 'இந்தியா' விற்பனையாயிற்று. அப்பத்திரிகையின் சந்தா விவரத்தை பாரதியார் குறிப்பிட்டிருந்த முறையே சுவையானது. அது வருமாறு:

நமது பத்திரிகையின் சந்தா விவரம்.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| எல்லா கவர்ன்மெண்டாருக்கும் ஜமீந்தார்கள் ராஜாக்கள் ஆகியோருக்கு | 50 | 0 | 0 |
| மாதம் ரூ. 200-க்கு மேற்பட்ட வருமானம் உடையவர்களுக்கு | 30 | 0 | 0 |
| மற்றவர்களுக்கு | 15 | 0 | 0 |
| | 3 | 0 | 0 |

'தமிழால் பாரதி தகுதி பெற்றதும், தமிழ் பாரதியால் தகுதி பெற்றதும்' நாம் அறிவோம். அந்த 'மக்கள் கவி' பிறந்த இல்லத்தை நமது அரசு விலைக்கு வாங்கி நினைவுச் சின்னம் அமைத்துள்ளது. சென்னை பாரதி சங்கத்தினருக்குப் பாரதியார் அரங்கம் அமைத்திட 63 மனைகளை இலவசமாக வழங்கியுள்ளது நமது அரசு. அரங்கம் அமைத்திட நிதி உதவியும் அளிக்கப்படும் என்று நமது முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

பாரதியார் பிறந்த ஆண்டு 11—12—1882 ஆகும். அவருடைய பிறந்தநாள் டிசம்பர் 11-ந் தேதி கொண்டாடப்படுவதை நினைவு கூரும் வகையில் இக் கட்டுரை வெளியிடப்படுகிறது.

பாரதியார் இந்தியாவில் 'சிவாஜி தன் சைநியத்தாருக்குக் கூறியது' என்று அகவல் எழுதி வந்தார். அவருடைய வீர உணர்வுக்கு எடுத்துக் காட்டாக அது விளங்கியது.

'அந்நிய ஆட்சியைக் கண்டித்து 'இந்தியாவில் வரும் கட்டுரைகளும் செய்திகளும் இருந்தன. இவை, சட்ட வரம்பை மீறியவை' என்று பரவலாகப் பேசப்பட்டது. விளைவு, நேரம் பார்த்திருந்த அந்நிய ஆட்சி தன் சட்டத்தால் கொட்டியது. நல்ல வேளையாக இந்தியா பத்திரிகையின் சட்டபூர்வமான ஆசிரியராகப் பாரதியார் இல்லை.

சீனிவாசன் என்றவர் பெயரில் ஆசிரியர் பதவி இருந்ததால் அவர் கைதானார். அந்நிய ஆட்சி பாரதியாருக்கும் வாரண்டு பிறப்பித்தது. ஆனால், பாரதியார் தப்பிப் புதுச்சேரி சென்றுவிட்டார்.

இந்தியா பத்திரிகையுடன் 'பாலபாரதம்' என்ற ஆங்கில வாரப் பத்திரிகையையும் திறமையாக வெளியிட்டார் என்ற தகவல் திரு. பெரியசாமி தூரன் அவர்களின் 'பாரதி தமிழ்' நூலில் காணப்படுகிறது.

இந்தியா பத்திரிகை புதுச்சேரிக்கு மாற்றப்பட்டு மறுபடியும் பழைய வேகத்தில் வெளிவந்தது.

சென்னையிலிருந்த பொழுது 'இந்தியா'வுக்குக் கிடைத்த ஆதரவு, அது புதுச்சேரிக்கு மாறிய பிறகு கிடைக்கவில்லை!

1909-ஆம் ஆண்டில் வெள்ளையர் ஆட்சியிலுள்ள இந்தியப் பகுதிக்கு 'இந்தியா' வரக்கூடாது என்று அந்நிய ஆட்சியினர் விதித்த தடையே பெருங்காரணமாகும்.

இலண்டனிலிருந்து வ.வெ.சு. ஐயர், கரிபால்டியின் வாழ்க்கை வரலாறு ராணி லட்சுமி பாய் சரித்திரம், லண்டன் கடிதம் முதலியவற்றை இந்தியாவுக்கு எழுதி அனுப்பினார்.

பத்திரிகையில் ஓவியங்களை வெளியிடுவதில் மிகவும் விருப்பமுடைய பாரதியார் 'கார்ட்டூன்' வெளியிடுவதில் அக்கறை காட்டினார்.

இந்தியாவில் அந்தக் காலத்திலேயே 'கேலிச் சித்திரங்கள்' வெளியாகியுள்ளன. மிதவாதிகளைப் பாரதியார் கடுமையாகச் சாடியுள்ளார். அண்ணல் காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் நடத்திய அறப்போராட்டத்தைப் பாராட்டியும் இந்தியாவில் செய்திகள் வெளியாகியுள்ளன.

சென்னை, 83, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையிலிருந்து 'விஜயா' என்ற நாளிதழ் புதுச்சேரிக்கு மாறியது. அந்த நாளிதழுக்கும் பாரதியார் ஆசிரியரானார். 'இந்தியா' பத்திரிகை வெளி வந்து கொண்டிருந்தவரை 'விஜயா' நாளிதழும் வெளிவந்திருக்கிறது.

அரவிந்தர் நடத்திய கர்மயோகி என்ற பத்திரிகையை ஒட்டி பாரதியார் 'கர்மயோகின்' என்ற மாதப் பத்திரிகையை வெளியிட்டார். 1909-ஆம் ஆண்டில் இது வெளிவந்தது.

இதற்கிடையில் பாரதியார் மிகவும் பெருவிருப்பங்கொண்டு திட்டமிட்ட பத்திரிகை 'சித்ராவளி'. முழுக்க முழுக்க ஓவியங்களை வெளியிட்டு அவைகளுக்குத் தமிழிலும் ஆங்கிலத்திலும் விளக்கங்களைத் தர வேண்டும் என்பது பாரதியாரின் பெருவிருப்பம். ஆனால் அது கைகூடவில்லை என்றே தெரிகிறது.

சென்னையில் முன்பு நடத்திய 'பால பாரதம்' என்ற ஆங்கிலப் பத்திரிகையை மீண்டும் புதுச்சேரியில் நடத்த பாரதியார் திட்டமிட்டார்.

புதுவையிலிருந்து வெளிவந்த 'சூரியோதயம்' என்ற பத்திரிகைக்கு பாரதியார் ஆசிரியரானார்.

பாரதியாரின் இன்னொரு விருப்பம் 'இந்தியா' பத்திரிகையை வாரமிருமுறை கொண்டு வர வேண்டும் என்பது. ஆனால் இவைகள் அனைத்தும் நிறைவேற அந்தக் காலச் சூழ்நிலைகள் இடந்தரவில்லை.

இவைகளை எண்ணிப் பார்க்கும் பொழுது 'நமக்குத் தொழில் கவிதை' என்ற அக்கவிஞர் பெருமகன் பத்திரிகைத் தொழிலில் பெரும் நாட்டம் கொண்டிருந்தார் என்பது புலனாகிறது.

புதுச்சேரியிலிருந்து கிளம்பித் திருநெல்வேலி மாவட்டம் கடையத்திற்குச் சென்ற பிறகும் இங்கிருந்து 'அமிர்தம்' என்ற இதழை வெளியிடத் தீர்மானித்தார். ஆனால் அவர் முயற்சிக்குப் பயன் கிட்டவில்லை. ஆகவே மீண்டும் சுதேசமித்திரனில் உதவி ஆசிரியரானார். மறையும் வரையில் இப்பணியில் இருந்தார்.

பத்திரிகைத் தொழிலில் பெருவிருப்பங்கொண்ட அந்தச் செந்தமிழ்த் தேனீயின் புகழை இன்று நாட்டிலுள்ள பத்திரிகைகள் எல்லாம் பாடுகின்றன. சென்னை பாரதி சங்கத்தார் பாரதியார் பெயரில் கலை அரங்கம், அமைத்திட 63 மனைகள் இடத்தைத் தமிழக அரசு அளித்துள்ளது. எட்டையபுரத்தில் பாரதியார் பிறந்த வீட்டையும் நமது அரசு விலைக்கு வாங்கி அதனை நினைவுச் சின்னமாக ஆக்கியுள்ளது.

இவ்வாறு, பல்வகையிலும் நினைவுச் சின்னங்களை அந்த விடுதலைக் கவிக்கு அமைப்பது நம் கடமையேயாகும்!



# இங்கே ஓர் இலக்கியச் சுரங்கம்

இலக்கிய மணம் எங்கும் கமழ்ந்து கொண்டிருக்கும் காலம் இது!

அதுவும், தமிழ் இலக்கிய மணம் இன்று தரணியெங்கும் உலா வந்து கொண்டிருக்கும் நேரம் இது!

தொன்மை நூலாம் தொல்காப்பியம் முதல் இருபதாம் நூற்றாண்டில் வெளிவந்த எண்ணிலா நூல்கள் வரை இன்று எங்கும், எல்லார்க்கும் கிடைக்கிறதென்றால் அதற்குக் காரணம் அச்சுக்கலையே அன்றோ?

ஓலைச்சுவடி வடிவத்திலே இருந்த பண்டை இலக்கியச் செல்வங்களைப் பாதுகாத்து, ஆய்ந்து ஆராய்ந்து எழுதி அச்சு வாகனத்துக்குக் கொண்டு வர அப்பப்பா! எத்தனைப்பாடு!

யாழ்ப்பாணம் சி. வை. தாமோதரம் பிள்ளை, டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் போன்ற மூதறிஞர்களின் அயராத உழைப்பின் பயனாக, இலக்கியப் புதையல்கள் தமிழ் மக்களுக்குக் கிடைத்தது பெரும் பேறாகும்.

அவ்வாறு எண்திசையும் தமிழ் இலக்கிய மலர்கள் மணம் வீசித் திகழவும், இலக்கிய மணிகள் ஒலித்துப் பரவவும் தமிழ்ப்பணி புரிந்து வருகிறது, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

1920-ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்ற இக்கழகம் இன்று ஆல்போல் தழைத்து வளர்ந்திருக்கிறது. இதனை நிறுவியர் 'கழகத் தந்தையார்' என அழைக்கப்பெறும் திரு. வ. திருவரங்கம் பிள்ளை அவர்கள்.

கழகம் தோன்றியதே ஒரு சுவையான கதைதான்.

திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில் பிறந்த திரு. திருவரங்கம்பிள்ளை, தம் பதினோராம் ஆண்டில் தந்தையாரை இழந்தார். ஐந்தாம் படிவம் அளவே படித்த அவர் தமது பதினேழாம் வயதில் 1907-ல் வேலை தேடி இலங்கைக்குச் சென்றார். அங்குத் திருநெல்வேலியார் நடத்தும் வணிக நிலையமொன்றில் பணி புரிந்தார்.

தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிக் கடலான மறைமலையடிகளாரின் தனித் தமிழ் நூல்களைக் கற்றும், அவர் தம் அரிய சொற்பொழிவுகளைக் கேட்டும் மகிழ்ந்த திருவரங்கனார் அவர்பால் பேரன்பும் பெருமதிப்பும் வைத்திருந்தார்.

1914-ஆம் ஆண்டில் தனித் தமிழின் தந்தை மறைமலையடிகளாரை இலங்கைக்கு வருமாறு அழைத்தார். அடிகளாரின் அரிய சொற்பொழிவுகளை இலங்கை மக்கள் கேட்டு இன்புறுவதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்தார். 1917-ஆம் ஆண்டு அடிகளார் மீண்டும் இலங்கை சென்றார். அடிகளாரின் வாழ்வு வளம் பெறுவதற்கும், அவரது ஆராய்ச்சித் திறன் உரம் பெறுவதற்கும் வழி வகுத்தவர் திருவரங்கனாராவார். அந்த நன்றியை மறவாத அடிகளார், தம் அருமை மகளாகிய நீலாம்பிகையாரைத் திருவரங்கனாருக்குத் திருமணம் புரிந்து வைத்தார்.

தந்தையான மறைமலையடிகளாருக்கே தனித்தமிழ் ஆர்வத்தை ஊட்டிய நீலாம்பிகையார் தனித்தமிழில் பல நூல்கள் வரைந்துள்ளார். அவர் தனித் தமிழ்க் கட்டுரைகள், வடசொற்றமிழகர வரிசை முதலான பதின்மூன்று நூல்கள் இயற்றித் தனித் தமிழ் உணர்ச்சியைக் கழகத்தின் வாயிலாகப் பரப்பினார்.

கொழும்பு நகரில் இருந்தபோது திருவரங்கனார், தம் உயிர் நண்பராய் விளங்கி வந்த வி. சங்கரநாராயணபிள்ளை என்பவரின் பெயருடன் தம் பெயரையும் இணைத்து 'திருசங்கர் கம்பெனி' என்னும் பெயரில் ஒரு புத்தக வணிக நிலையமொன்றை 1917-ல் நிறுவினார். 1918-ல் இப்புத்தக நிலையம் சென்னைப் பவழக்காரத் தெரு, 2-ஆம் எண்ணுள்ள இல்லத்திற்கு மாற்றப்பட்டது.

திருநெல்வேலியில் தமிழ்ப் பற்றுமிக்க மா. திரவியம்பிள்ளை என்பவர் மறைமலையடிகளாரிடத்தில் பேரன்பு கொண்டிருந்தார். அவர் மூலம் திருவரங்கனாரின் இனிய நட்புக் கிடைத்தது. அவ்வயயம் திரு. தி. செ. விசுவநாத பிள்ளை என்னும் தமிழன்பர், தமிழும் சைவமும் தழைப்பதற்குப் பதிப்புக் கழகம் ஒன்று தொடங்க வேண்டும் என்ற தம் பேராவலை வெளியிட்டார். அதன் விளைவாக எழுந்ததே தெ. இ. சை. சி. நூ. ப. கழகம்! தென்னகத்தில் ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் செயல்பட்டு வரும் கூட்டுக் கம்பெனி நிறுவனம் இது ஒன்றுதான்.

1921-ல் சென்னையில் 'திருசங்கர் கம்பெனி' இருந்த பவழக்காரத் தெரு, 2-ஆம் எண் இல்லத்தில் ஓர் அறையில் திருவரங்கனாரின் அருமைத் தம்பியாரும் இன்றையக் கழக ஆட்சியாளருமான திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்களை முகவராகக் கொண்டு கழகத்தின் கிளை நிலையம் ஒன்று தொடங்கப்பெற்றது. அதுமுதல், புத்தக வணிகம், கழகத்தின் பெயராலேயே நடைபெற்று வந்தது.

இன்று 1590 நூல்கள் வரை வெளியிட்டுள்ள இக்கழகம், முதன் முதலில் வெளியிட்ட நூல் விநாயகர் அகவல், கந்தர் கலிவெண்பா இவை இரண்டும் அடங்கிய 'திருவடிப் புகழ்மாலை' என்னும் மலராகும். இதையடுத்து, 'சோமேசர் முதுமொழி வெண்பா உரை' 'திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி உரை' ஆகியவை வெளிவந்தன. ஒரு ஆண்டுக்குச் சுமார் 30 நூல்கள் வீதம் வெளியிடப் பெறுகின்றன.

தமிழ்நாட்டில் பண்டைய தமிழ் இலக்கிய நூல்களைப் பெருமளவில் வெளியிடும் ஒரே பதிப்பகம் என்ற பெருமையுடன் தலை நிமிர்ந்து நிற்கிறது, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

''திருநெல்வேலிச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் போலும் ஒருநல்ல தமிழ்வளர்க்கும் நிறுவனமும் கண்டதில்லை..'' எனப் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களால் பாராட்டப் பெற்ற கழகம் தமிழ் மொழி, தமிழினம், தமிழ்நாடு ஆகியவற்றை மூச்சாகக் கொண்டு அதன் முன்னேற்றத்தில் அக்கறையும் ஆர்வமும் கொண்டு நாளும் நற்பணியாற்றி வருகிறது. இது 1970-ஆம் ஆண்டில் தம் பொன்விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடியது.

தொன்மை நூலாம் தொல்காப்பியம் முதல் பார்ப்பவர் கண்ணும் கருத்தும் கவரத்தக்க வகையில் பல்துறை நூல்களை வெளியிட்டுத் தமிழ்ப் பெருங்குடி மக்களின் இல்லங்களிலும் உள்ளங்களிலும் நீங்கா இடம் பெற்று வருகின்றது கழகம்.

இது அச்சிட்டு வழங்கியுள்ள எண்ண இனிக்கும் எண்ணிலா நூல்கள்தான் எத்தனை! எத்தனை!

தமிழ் இலக்கண இலக்கிய நூல்களான தொல்காப்பியம், நன்னூல் முதலான பிற இலக்கணங்கள், சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், புராணங்கள், சிற்றிலக்கியங்கள், ஆராய்ச்சி நூல்கள், இலக்கியத் திறனாய்வு, சொற்பொழிவு நூல்கள், திருக்குறள் பதிப்புகள், மொழிநூல்கள், சமயம் சம்பந்தமான நூல்கள், வரலாறு, வாழ்க்கை வரலாறு ஆகியவையும், மறைமலையடிகளாரின் அனைத்து நூல்களும் இங்கே பாங்குற அச்சிடப்பெற்று வெளியிடப் பெற்றுள்ளன.

இவையன்றி ஜேம்ஸ் ஆலன் எழுதிய சிந்தனை நூல்களும், குழந்தைகளுக்கான ஆங்கில நூல்களும் வெளியிடப் பெற்றுள்ளன.

நீதிக்கதைகள், கதை நூல்கள், இலக்கியக் கதைகள், மேனாட்டுக் கதைகள், சிறுவர் இலக்கியம், பெரிய எழுத்துக் கதை நூல்கள், அறிவியல் கதைகள், நீதிநூல்கள், அகராதி நிகண்டு பொருளாதாரம் ஆகிய நூல்களும் கழகத்தின் சார்பில் வெளிவந்துள்ளன. இனி வர வேண்டிய நூல்களோ ஏராளம் உள்ளன. அச்சுக்கு வரவிருக்கும் அரிய கையெழுத்துப் பிரதிகள் ஓர் அலமாரியில் அடுக்கி வைக்கப்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம்.



திரு. திருவரங்கனார்.

கழகத்தின் சார்பில் திருக்குறள் திருப்பணியும் செவ்வனே நடைபெற்று வருகின்றது. டாக்டர் ஜி. யூ. போப்பையரின் திருக்குறள், நாலடியார் ஆங்கில மொழி பெயர்ப்பு நூல்கள் வெளியிடப் பெற்றுள்ளன. இவர் பயன்படுத்திய திருக்குறள், நாலடியார் இன்னும் மறைமலையடிகள் நூல் நிலையத்தில் கண்டு மகிழலாம்.

டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் எழுதிய 'திருக்குறள் தெளிவுரை' 29-ஆவது பதிப்பாக வெளிவந்துள்ளது. இப்போது இதுவரை எட்டு இலட்சம் பிரதிகள் விற்பனையாகியுள்ளன. வேறு எந்தத் தமிழ் நூலும் இது வரை இத்தனை இலட்சம் பிரதிகள் விற்பனையானதில்லையாம்.

திரு. வ. சுப்பையா பிள்ளை



1932-ஆம் ஆண்டு முதல் 'திருக்குறள் நாட்குறிப்பு' ஒன்றும் வெளியிடப் பெற்று வருகின்றது. நாட் குறிப்பேட்டின் ஒவ்வொரு பக்கத் தலைப்பிலும் திருக்குறள் பாவொன்று கருத்துரையுடன் அச்சிடப் பெற்றுள்ளது.

பல்வேறு அறிஞர்களால் மொழி பெயர்க்கப்பட்ட திருக்குறள் வந்துள்ளன.

பிறநாட்டாரும் தமிழின் தொன்மையினையும், இனிமையினையும் அறிந்து கொள்ளும் வகையில் ஆங்கிலத்தில் தமிழ் இலக்கண நூல்கள், தமிழ் வரலாறு, பத்துப்பாட்டு, நீதி நூல்கள் முதலியன வெளி வந்துள்ளன.

தமிழ்ச் சிந்தனையே உருவான கழக ஆட்சியாளர் 'தாமரைச் செல்வம்' திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள் தம் 79-ஆவது வயதிலும் இளமைச் சுறுசுறுப்போடு பணியாற்றி வருவதைப் பார்க்கும்போது நம்மால் வியக்காமலிருக்க முடியவில்லை. தமிழுக்கு மூப்பேது? அது என்றும் இளமையுடையது அன்றோ?

''என் தமையனார் (திருவரங்கனார்) அரங்கைக் கட்டித் தந்தார். நான் ஆடுகிறேன்'' என்று அடக்கமாகக் கூறும் ஆட்சியாளர் ''தமிழ் மக்களிடையே படிக்கும் ஆர்வம் இன்னும் வளரவேண்டும். நல்ல நூல்களைப் படிக்கின்ற மனப் பக்குவத்தை அவர்கள் பெறவேண்டும். ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு சிறு நூலகத்தை அமைத்து அதன் மூலம் நம் குழந்தைகள் அறிவு நலம் பெறுவதற்கு நாம் வழிகோல வேண்டும்'' என்று தன் அவாவினைத் தெரிவிக்கிறார்.

இவர்தம் முயற்சியாலும் தூண்டுதலாலுமே தென்னகப் புகை வண்டி நிலையங்கள் சிலவற்றின் பெயர்கள் திருத்தியமைக்கப்பட்டன. பீச்சு, 'கடற்கரை' எனவும், போர்ட் 'கோட்டை' எனவும், பார்க் 'பூங்கா' எனவும் ஜங்ஷன் 'சந்திப்பு' எனவும் தின்னவெலி 'திருநெல்வேலி' எனவும், திருவாலூர் 'திருவாரூர்' எனவும், மாயவரம் 'மாயூரம்' எனவும் மாற்றம் பெற்றன.

திருக்கோவில்களில் மலர்தூவி வழிபாடு செய்வது தமிழ்மொழியில் இருக்க வேண்டும் என்பது இவரது விருப்பம். மக்களின் பிறமொழிப் பெயர்களும், இல்லங்களின் பிறமொழிப் பெயர்களும், தனித் தமிழ்ப் பெயர்களாக மாற்றி அமைப்பதற்கு இவர் தொகுத்து வெளியிட்டிருக்கும் 'மக்கட் பெயர் அகரவரிசை'

'இல்லப் பெயர் அகர வரிசை' ஆகிய நூல்கள் பயன்படுகின்றன. அண்மையில் சென்னையிலுள்ள தமிழக அரசு மாளிகைகளின் பிற மொழிப் பெயர்களை மாற்றித் தூய தமிழ்ப் பெயர்களை வைப்ப தற்கு இவர் செய்த முயற்சியே காரணமாகும்.

தமிழின் அருமைபெருமையினை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்ற பெரு நோக்கோடு செயல்பட்டு வரும் கழகம், 'இலக்கியப் பேழை'களை உருவாக்கி இப்பணியில் ஒரு முன்னோடியாக விளங்கி வருகிறது.

'பழந்தமிழ் இலக்கியப்பேழை' 'தமிழர் சமய இலக்கியப் பேழை' ஆகியவை அழகுற தயாரிக்கப் பெற்று இப்போது விற்பனைக்குக் கிடைக்கின்றன. தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்குக் காப்பியங்கள் ஆகியவை பழந்தமிழ் இலக்கியப் பேழையில் உள்ளன. இதன் விலை ரூ. 550.

சைவம்-வைணவம் சம்பந்தமான 54 நூல்கள் தமிழர் சமய இலக்கியப் பேழையில் உள்ளன. இதன் விலை ரூ. 650. இப்போது பள்ளி மாணவர்க்கான 'பள்ளி மாணவர் பல்வகை நூல்கள்' என்னும் மாணவர்க்கான பேழை ஒன்று தயாராகி வருகின்றது. கதை, கட்டுரை, நீதி, நாடகம், அறிவியல், வரலாறு போன்ற முந்நூற்றுக்கு மேற்பட்ட நூல்கள் இப்பேழையில் அடங்கியுள்ளன.

ஆல்போல் தழைத்துள்ள கழகத்தின் கிளைகள் தமிழகத்தின்

**கழக அலுவலகக் கட்டடம்.**



**ஆ**ணிடம் இல்லாத எத்தனையோ சிறப்புக்கள் பெண்களுக்குச் சொந்தம். பெரிய பெரிய தியாகங்களைச் செய்தவண்ணம் சிரிக்கவும் வேதனைகளை மௌனமாகச் சகித்துக் கொள்ளவும் கனிவும் பணிவுமாக அன்புகாட்டி ஆதரிக்கவும் பெண்ணால்தான் முடியும். அதனால்தான் தாய்மைப் பொறுப்பை இயற்கை அவளிடம் விட்டிருக்கிறது.

**—அண்ணல் காந்தியடிகள்.**

பிற மாவட்டங்களிலும் பரவியுள்ளன. நல்ல நூல்கள் எல்லா இடங்களிலும் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற கருத்தில் சென்னை தவிர திருநெல்வேலி, மதுரை, கோவை, குடந்தை, திருச்சி ஆகிய நகரங்களில் இதன் கிளைகள் தோன்றியுள்ளன.

கழகத்தின் சார்பில், 'செந்தமிழ்ச் செல்வி' என்னும் ஒரு இலக்கிய இதழும் வெளியிடப் பெறுகின்றது. சிந்தைக்கு விருந்தூட்டும் செந்தமிழ்க் கட்டுரைகளைத் தாங்கிய இத்திங்களிதழ் கடந்த 50 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றது.

தமிழ்மொழி பற்றி அறிந்திட தமிழகம் வந்த பிறநாட்டு நல்லறிஞர்கள் பலர், கழகத்திற்கு வருகை தந்து இதன் பணிகளைப் பாராட்டியுள்ளனர். அவர்கள் வருமாறு: 1. சுயீம் ராபின், ஹீப்ரு மொழிப் பேராசிரியர் ஹீப்ரு பல்கலைக் கழகம், ஜெருசெலம். 2. டாக்டர் ஆர். இ. ஆஷர், எடின்பர்க் பல்கலைக் கழகம், இங்கிலாந்து. 3. டாக்டர் கமில் சுவலபில், நெதர்லாந்து, 4. ஆல்பர்ட் பிராங்க்ளின், அமெரிக்கா. 5. செம்பியன், ரஷ்யா. 6. பென்ட்டி ஆல்ட்டோ, பின்லாந்து (சிந்து வெளி நாகரிகம் திராவிடர் நாகரிகமே என்பதை நிரூபித்தவர்).

மேனாட்டு நூல்களுக்கு இணையாகத் தமிழ் நூல்களைக் கட்டடம் செய்து நல்ல அமைப்போடு வெளியிட்டு இக்கழகம் பல பரிசுகளும், பாராட்டுகளும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

புத்தகப் பணி மட்டுமன்றி தமிழ் உணர்ச்சியூட்டும் பல்வேறு இலக்கிய மாநாடுகளையும் இக்கழகம் நடத்தி வந்தது. இவை



**தமிழர் சமய இலக்கியப் பேழை**

யன்றிக் கழகத்தின் சார்பில் அறநிலையங்களும் செவ்வனே நடைபெற்று வருகின்றன. சைவ சித்தாந்த சங்கம், தென்னிந்தியத் தமிழ்ச் சங்கம், சிவஞான முனிவர் நூல் நிலையம்-படிப்பகம், திருவள்ளுவர் செந்தமிழ்க் கல்லூரி, பல்லாவரம் மறைமலையடிகள் கலை மன்றம், மறைமலையடிகள் நூல் நிலையம், குமர குருபரர் குழந்தைப் பள்ளி, நீலாதையற் பள்ளி ஆகிய திருப்பணிகளில் ஈடுபாடு கொண்டு 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற இலட்சிய நோக்கில் வீறுநடை போடுகின்றது கழகம். இந்தியாவில் வேறு எந்தப் புத்தக விற்பனையாளரும் கழகத்தைப் போல் அரிய ஆராய்ச்சி நூலகத்தை அமைத்திருப்பதாகத் தெரியவில்லை.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்னும் தலையாயக் கொள்கையுடன் கடந்த 55 ஆண்டுகளாக அயராது பாடுபட்டு வரும் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ஓர் இலக்கியச் சுரங்கம் என்றால், அது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை!

**—பி. வி. ஜி.**

# தேசமெலாம் பாராட்டு

## கவிஞர் கருணானந்தம்



**வா**டியநெற் பயிரையெலாம் கண்ட போழ்தும்
வருந்திமனம் நைந்துருகி நிற்க வில்லை;
தேடியேஇவ் வறட்சியினைத் தீர்க்கும் மார்க்கம்
திகைப்பின்றி மிகைபடவே விரைந்து கண்டோம்
ஓடியநீர் கண்மாயில் உயரும் வண்ணம்
ஓடைகேணி ஏரிகுளம் ஆழம் செய்தோம்!
கூடியஇத் துயரத்தை வாய்ப்பாய் ஏற்றுக்
குடிமக்கள் மிடிஒழிக்கக் கொடிபி டித்தோம்!

வறுமையினால் ஒருமனிதன் செத்தா னேனும்
வரலாறு சிரங்குனிய வைக்கும் அன்றோ?
பொறுமையுடன் ஏளனத்தைப் புல்லி தாக்கிப்
போர்க்கால நடவடிக்கை மேற்கொண் டோம்நாம்!
வெறுமையாக வாய்மெல்லும் வன்க ணாளர்
வேலையின்றிப் பல்நெரித்து வீணே நின்றார்!
குறுமுயலின் ஓட்டமென நமது செய்கை
குள்ளநரிப் புதருக்குள் வெட்கிச் சாகும்!

கேட்டவர்க்குக் கிடைக்குமெனல் பழைய கொள்கை;
கேளார்க்குங் கிட்டுதல்நம் புதிய நன்மை!
கேட்டவர்க்குங் கிடைக்காத காலங் கண்டோர்
கிறுகிறுப்பில் முணுமுணுத்தல் கேட்கின் றோம்நாம்!
நாட்டவர்க்கு நலன்செய்தல் அரசுக் கட்டில்
நாடியோர்க்குக் கடன்எனினும் தேடி வாக்குப்
போட்டவர்க்கும், போடாத நல்ல வர்க்கும்
பொதுநலத்தால் பங்குதரல் புதுமை தானே?

சிந்தனைக்குத் தூக்கமின்றிப் பகலும் அல்லும்
செழுமைமிகு வளமைகொஞ்சச் சேரி மாய
நொந்தனைக்குட் பட்டோர்கள் நோயின் நீங்கி
நூறாண்டுப் பெருவாழ்வு நுகர்வ தற்குத்
தந்துதந்து திட்டங்கள் ஒன்றை யொன்று
தள்ளிவிட்டு முந்திவர அள்ளி வீசிச்
செந்தமிழ்போல் வழிகாட்டும் சீரைப் பாடித்
தேசமெலாம் பாராட்டும்; செவியில் தேன்தேன்!

''காட்டுக்குள்ளே போன அழகம்மாள் மறுபடியும் திரும்பி வரலே. மகளைத் தேடி அவளுடைய தாயும் தகப்பனும் உற்றார் உறவினரும் வரதுக்குள்ளே 'அழகம்மாளைக் காணுமே', எங்கே அழகம்மான்னு நீதி கேட்கப் போன கூட்டத்தையே ஆட்டி வைச்சு, போலீசையும் கூப்பிட்டு விட்டார் சுந்தரபாண்டியன்.

''எங்கே மகள்னு சுந்தரபாண்டியனைக் கேட்கத் துடிச்ச அழகம்மாளோட இனத்தார் 'எங்களைப் போலீசிடமிருந்து காப்பாத்துங்க எசமான்'னு அவர் கால்லே விழுந்தாங்க. அப்போ சுந்தரபாண்டியன் அய்யாவே தன்னைக் காப்பாத்திக்கிட்டதுக்காகப் பெருமூச்சு விட்டாரு.

''காணுமல் போன அழகம்மாள் காட்டு மிருகங்களுக்குப் பலியாகிட்டான்னு அதை ஜோடிச்சு அவங்களைப் போலீசுலேருந்து காப்பாத்திட்டாரு. வருஷங்கள் சுரேஷை வாலிபனுக வளர்த்துச்சு. சுரேஷை வளர்த்தபாட்டி அவனுக்கு விவரத்தைச் சொல்லிட்டு உயிர்விட்டா. நேரிடையாச் சொத்து கேட்க வழியில்லாத சுரேஷ் சுந்தரபாண்டியனுக்கு அடிமைபோல ஊர்லே வளர்ந்தான். அவர் போற இடத்துக்கெல்லாம் அவர் நிழல் போல வருவான், போவான்.

**ஏ**ழைக்கு இழைக்கப்படும் இன்னலுக்கு இன்னல் இழைத்தவர்களே பிறகொரு நாள் இதம் செய்திட முன் வந்தாலும் நொந்து போன ஏழையின் வாழ்வை- இரக்கம், கருணை, உதவி மூலம் மலரச் செய்திட முடியாது. கசங்கிய மலர் மீண்டும் தண்ணீருக்குப் பதில் பன்னீர் தெளித்தாலும் எழில் பெற முடிகிறதா?

—அறிஞர் அண்ணா

''சொத்துரிமைக்காகக் காத்திருந்த சுரேஷ் சமயம் பார்த்து விநாயகத்தைக் கொன்று பழி தீர்த்துக் கொள்ள ஒரு கோஷ்டியோட வந்தான். என்னை மிரட்டினன். வேறே வழியில்லாமே நானும் மேல் மாடிக்குப் போற வழியைக் காட்ட நடந்தேன்.

''ரகசியப் பாதை வழியா நான் முன்னே போக அவங்கள்ளாம் பின்னே வந்தாங்க. புது மணமக்கள் இருந்த அறைக்கதவை நெருங்கினுங்க. துப்பாக்கி ஏந்திய முகமூடி உருவங்கள்ளே ரெண்டு பேரு, என் கண்ணைக் கட்டி வெளியே கொண்டு வந்து உட்கார வைச்சாங்க.

''அவ்வளவுதான் சார் எனக்குத் தெரியும். அப்புறம் நான் மயக்கமாயிட்டேன் போலிருக்கு. கண் விழிச்சப்போ நல்லா விடிஞ்சு போச்சு!

''சார். சுரேஷ்தான் சார் அந்த விநாயகத்தைக் கொலை செய்திருக்கணும். விநாயகம் உயிரோட இருக்கிறவரை சுரேஷ் தனக்குச் சொத்து கிடைக்காதுன்னு நினைச்சான். சுந்தரபாண்டியனுக்குத் தன்னைத் தவிர வேறே வாரிசில்லாமலேயே செய்துட்டான் சார். என்னை விட்டுடுங்க சார். நான் உள்ளதைச் சொல்லிட்டேன். என்னை விட்டுடுங்க சார்.''

ராமு களைத்துப் போய்க் கண்களை மூடிக்கொண்டு கீழே உட்கார்ந்து விட்டான். வாச்சுமேன் ராமு சொன்ன வாக்குமூலத்தைக் கேட்டுக் கொண்டிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி சிறிது நேரம் கண்களை மூடினுர். ஏதோ யோசித்தார். அப்போது அவர் முன்னுல் தோட்டக்கார ரெங்கனைக் கொண்டு வந்து நிறுத்தினுர்கள்.

''என்னை அடிக்காதீங்க. ஐஸ் கட்டியிலே வைக்காதீங்க. நான் உண்மையைச் சொல்லிடறேன்'' தோட்டக்கார ரெங்கன் தன் வாக்கு மூலத்தைக் கொடுக்க முன்வந்தான்.

இன்ஸ்பெக்டர் புண்ணியகோடியின் களைப்பைப் போக்க வீட்டிற்குள் அழைத்தாள் மரகதத்தம்மாள். தோட்டக்கார ரெங்கனின் வாக்கு மூலத்தை வாங்கச் சொல்லி அவருக்குத் துணையாக வந்திருந்த சப்-இன்ஸ்பெக்டரிடம் சொல்லிவிட்டு மேகநாதன் வீட்டிற்குள் சென்றுர் இன்ஸ்பெக்டர்.

மரகதம் அன்போடு கொடுத்த பலகாரத்தையும் பழவகைகளையும் புண்ணியகோடி சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

1974-75-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட நெற்பயிர்களின் விவரம் :

**ஆடுதுறை—30 :** 85 முதல் 90 நாட்களில் அறுவடைக்கு வரக்கூடியது. இதன் அரிசியில் 11·25 சதவிகிதப் புரதச்சத்து உள்ளது. ஏக்கருக்கு 1,500 கிலோ மகசூல் தரும். பிந்திய பட்டத்திற்கும், குறைந்த காலத்திற்கே தண்ணீர் வசதி கிடைக்கக் கூடிய இடங்களுக்கும் ஏற்றது.

**ஆடுதுறை—31 :** குறுவைக்கு ஏற்ற சிறந்த ரகம்; 100 முதல் 105 நாட்களில் அறுவடைக்கு வருவதுடன், ஏக்கருக்கு 2,500 கிலோ மகசூல் தரவல்லது.

**கோ. 38 :** வயது 145 முதல் 150 நாட்கள். ஏக்கருக்குக் குறைந்தது 2,500 கிலோ மகசூல் தரவல்லது. சம்பா, தாளடிப் பட்டங்களுக்கு ஏற்றது. தமிழ்நாட்டில் 'கோ—25' (ரப்பர் சம்பா) பயிராகிவரும் 6·25 இலட்சம் எக்டேர் பரப்பு முழுவதிலும் 'கோ—38' ரகத்தைப் பயிரிட்டால், ஏறத்தாழ ஆண்டு ஒன்றுக்கு 25 கோடி ரூபாய் அதிக வருவாய்த் தமிழக உழவர் பெருமக்களுக்குக் கிடைக்கும்!

**கோ. 39 :** 90 முதல் 95 நாட்களில் ஏக்கருக்கு 2,275 கிலோ மகசூல் தரவல்லது. குறுவைக்கு ஏற்றது. இந்த ரகத்தை 2 இலட்சம் ஏக்கரில் பயிரிட்டால், தமிழ் நாட்டில் ஆண்டிற்கு 12 கோடி ரூபாய் மதிப்புள்ள அளவுக்கு நெல் உற்பத்தியைப் பெருக்க இயலும்.



சென்னைக் குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய குழந்தை இலக்கியப்போட்டியில், கவிதைக்கான முதல் பரிசினை-ஏ.வி.எம். அறக் கட்டளையின் தங்கப் பதக்கத்தை நமது துணையாசிரியர் திரு. பி. வி. கிரி அவர்கள் பெற்றுள்ளார்.

திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள் தலைமையில், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் பரிசு வழங்கினுர்கள்.

——ஆசிரியர்.

''விநாயகம் தன் திருமணத்திற்கு முன் ஸ்டெல்லா என்ற பெண்ணைக் காதலித்தான். விநாயகத்தின் காதல் அவன் தந்தை சுந்தரபாண்டியனுக்குத் தெரிந்ததும் விநாயகத்தைக் கண்டித்தார். உடனே திருமணத்திற்கு ஏற்பாடு செய்து சந்திராவைத் திருமணம் செய்து வைத்துவிட்டார். இந்தத் திருமணச் செய்தி ஸ்டெல்லாவுக்கு எட்டவும் அவள் தற்கொலை செய்து கொள்ள முற்பட்டாள்.

''தங்கையை ஏமாற்றிய விநாயகத்தின் மேல் ஆத்திரப்பட்டுத் திருமணத்தை நிறுத்தி விடச் சென்னையிலிருந்து வேதாரண்யத்திற்கு ஓடி வந்தான் அவன் அண்ணன் பீட்டர். திருமணம் முடிந்து தேனிலவுக்காகக் கோவை செல்கிறுர்கள் என்ற விவரம் தெரிந்தது. பீட்டர் பின் தொடர்ந்தான். உறவினன் போல் வந்து பங்களாவில் மறைந்திருந்தான். தன் தங்கை வாழ்வைக் கெடுத்துவிட்ட கயவன் விநாயகத்தைச் சந்திராவோடு பார்த்தான். அவன் மனம் குமுறி எரிமலையாகியது. விநாயகத்தின் உயிரைக் குடித்துவிட்டான்.''

ரெங்கன் தன் கண்ணுல் பார்த்ததுபோல் கொடுத்த வாக்கு மூலத்தை இன்ஸ்பெக்டர் புண்ணியகோடியிடம் சொன்னுர் சப் இன்ஸ்பெக்டர்.

இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி நெற்றியைத் தடவியபடி கேட்டுக் கொண்டிருந்தார். அவர் எடுத்துக் கொண்ட வழக்கில் உண்மையைக் கண்டுபிடிக்க மிக உற்சாகம் காட்டினுள் மேகநாதனின் மனைவி மரகதம். குற்றம் செய்தவரைத் தண்டித்து அவர்கள் குடும்ப கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று இன்ஸ்பெக்டர் புண்ணியகோடிக்குப் புதுப் புதுச் சந்தேகங்களையும் கிளப்பி விட்டாள்.

ரெங்கனுக்கு அடுத்தபடியாக மேகநாதனுடைய பண்ணையாள் முத்தையாவைப் புண்ணியகோடியின் முன் கொண்டு வந்து நிறுத்தினுர்கள்.

''விநாயகத்தின் மரணத்திற்குக் காரணம் சுந்தரபாண்டியனுடைய மனைவி மங்களத்தம்மாள் தான். சுந்தரபாண்டியனது முழுச் சொத்துக்கும் வாரிசான தன் மகனுக்குத் தன் தம்பி மகள் மாலினியைத் தான் மணமுடிக்க வேண்டும் என்பது மங்களத்தம்மாளின் ஆவல். குடும்பச் சொத்து மற்றவர்கள் கைக்குப் போய்ச் சேராமல் தன் குடும்பம் மட்டுமே அனுபவிக்க வேண்டும் எனத் திட்டமிட்டுச் சுந்தரபாண்டியனிடம் வாதாடினுர்கள்.

சுந்தரபாண்டியனே அந்தச் சம்பந்தத்திற்கு மறுத்து விட்டார். அவர்கள் விருப்பத்திற்கு மாருக விநாயகத்திற்குச் சந்திராவை மணம் முடிப்பதை மங்களத்தம்மாள் விரும்பவில்லை. தடுத்து நிறுத்தவும் முடியவில்லை. அவர்கள் விருப்பத்தை அலட்சியம் செய்து திருமணம் நடந்தது. அந்தத் திருமணத்தின் ஊர்வலமே நடக்காமல் வேராண்யத்தில் காரில் வெடிகுண்டு வைத்து நிறுத்தியதும் அவர்கள் ஏற்பாடு தான்.

''மங்களத்தம்மாள் தன் தம்பி தங்கவேலுவைத் தூண்டி விட்டு மணமகள் சந்திராவிற்கு விஷமிட்டுக் கொன்றுவிடச் சொன்னுர்கள். விதி விபரீதமாக வேலை செய்துவிட்டது. தன் வினை தன்னையே அழித்துக் கொண்டது. மணமகள் சந்திராவிற்கு வைத்த விஷம் மங்களத்தம்மாளின் மகன் விநாயகத்தையே கொன்று விட்டது. விஷமுண்டு செத்துக் கிடந்த விநாயகத்தைத் தங்கவேலு அப்படியே இழுத்துக் கொண்டு போய்க் குளியறையில் தள்ளிவிட்டு வெளியேறி விட்டான்'' பெருமூச்சோடு சொல்லி முடித்தான் முத்தையா.

அடுத்த குற்றவாளியாக வாக்கு மூலம் கொடுக்க இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி முன் வந்து நின்றுர் மேகநாதனுடைய மேனேஜர் குமாரலிங்கம்.

(தொடரும்)

# நிழல் 4

பிறக்கும்போதே மனிதன் குற்றவாளியாகப் பிறப்பதில்லை. மண்ணில் பிறந்ததுமே அவன் பிறந்த மண்ணை ஆள நினைப்பதுமில்லை. சுற்றுச் சூழ்நிலை மனிதனைக் குற்றவாளியாக்கிவிடலாம் அல்லது வேண்டுமென்றேகூட ஒருவன் குற்றம் செய்யலாம். ஆனால் தண்டிக்கப்படும்போது, செய்த குற்றத்திற்கு ஆதாரம் தேவை. ஒருவன் மீது சாட்டப்பட்ட குற்றத்தைக் கண்ணாரக் கண்டதாக இருவர் சாட்சிசொன்னால் நிரபராதி சில சமயம் குற்றவாளியாகிறான். குற்றவாளி நிரபராதியாகி விடுகிறான்.

நல்லதைச் செய்பவனுக்குக் கூடக் கெட்ட குணங்கள் சில இருப்பதால் அவன் வாழ்வு சோபிக்காமல் மங்கி விடுகிறது. குற்றவாளியும் ஆகிறான். இதைப் போலத்தான் சுந்தரபாண்டியன் வளமாக வாழ்வதற்காகக் குற்றம் பல செய்துவிட்டார். அவர் செய்த குற்றங்கள் நிழலாக அவரைப் பின் தொடர்ந்து அவர் மகன் விநாயகத்தையே பலி கொண்டு விட்டன.

வாழ்க்கையில் ஒருவன் உயர்ந்திடத் தனக்குத் தெரியாமல் தவறு செய்தாலும் கூடக் குற்றம் செய்யக் கூடாது. குற்றம் வேறு-தவறு வேறு. உடலை வளர்க்கும் உணவைத் தேட எத்தனையோ தவறு செய்பவர்கள் இருக்கிறார்கள். பொய்சொல்கிறார்கள். இருப்பவனிடமிருந்து இல்லாதவன் தெரியாமல் எடுத்துக்கொள்கின்றான். உழைப்பிற்குத் தகுந்த ஊதியம் கொடுக்காதவனையும், மறைத்து வைத்துக் கொள்ளை லாபம் அடிப்பவனையும் சமூகமும் சட்டமும் வெகுநாள் விட்டு வைப்பதில்லை.

குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதையே தொழிலாகக் கொண்ட இன்ஸ்பெக்டர் புண்ணியகோடியின் கண்கள் அடுத்த குற்றவாளியான வாச்சுமேன் ராமுவின் மீது விழுந்தன. புண்ணியகோடியின் நேரடிப் பார்வை ராமுவின்மீது இமைக்காமல் விழவே, வாச்சுமேன் ராமு அலறிவிட்டான்.

''சாமி நான் கொலை செய்வேனுங்களா? நான் நிரபராதி. சின்னஞ் சிறிசுகள் சிங்காரிச்சுக்கிட்டு வரும்போது அவர்களைப் பார்த்து சந்தோஷப்பட்டவன் நான்.'' ராமு உள்ளம் நடுங்க உடல்வியர்க்க கையைப் பிசைந்தபடி சொல்லிக் கொண்டு நின்றான்.

'சம்பவம் நடந்த அன்று இரவு நீதானே காவல்?' என்று போலீஸ் இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி கேட்டார்.

''நான்தானுங்க காவல்''

''இரவில் காவல் இருப்பது திருடர்களுக்குத் துணை செய்யவா?'' கோபமாக அதட்டிக் கேட்டார் புண்ணியகோடி.

ராமு பதில் சொல்லவில்லை.

''விநாயகத்தை நீ கொலை செய்திருக்க வேண்டும்; அல்லது கொலை செய்தவனுக்கு நீ துணை செய்திருக்க வேண்டும்''. ராமுவைப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் புண்ணியகோடியின் கண்கள் துப்பாக்கியோடு காவல் புரிந்து கொண்டிருந்த கான்ஸ்டபிளைப் பார்த்தன.

அடுத்த வினடி அந்தக் காவலர்களின் இரும்புக் கரங்கள் ராமுவைப் பிடித்தன. குய்யோ, முறையோ என்று ராமு அலறினன். ''நான் கொலை செய்யலே; நான் கொலை செய்யலே'' என்று கூவினன்.

பலி கொடுக்க இழுத்துச் செல்லப்படும் பலி ஆடு கத்துவதைப் போலக் கத்தியும் ராமுவை அந்தக் காவலர்கள் விடவில்லை. வாசலிலே இருந்த போலீஸ் வேனில் ஏற்றிக் கதவைச் சாத்தினர்கள்.

காருக்குள்ளே வைத்திருந்த ஐஸ் கட்டியின் மீது ராமுவை அந்தக் காவலர் கரங்கள் உட்கார வைத்தன.

''விநாயகத்தை நான் கொலை செய்யலே. ஆனல் அவரைக் கொலை செய்ததை நான் பார்த்தேன். சுந்தரபாண்டியன் அய்யாவோட மூத்த மகன் சுரேஷ் தான் கொலை செய்தார். அவர் தான் கொலை செய்தார்'' ஐஸ் கட்டிமேல் உட்கார வைக்கப்பட்ட ராமு விஷம் தீண்டப்பட்டவன் போலக் கதறினன்.

பட்டுக்கோட்டை குமாரவேல்

ராமுவை மறுபடியும் போலீஸ் இன்ஸ்பெக்டர் புண்ணியகோடியின் முன் கொண்டு வந்து நிறுத்தினர்கள்.

ராமுவுக்குச் சூடான டீயைக் கொடுத்தார் புண்ணியகோடி.

டீயைக் குடித்த ராமு பேச ஆரம்பித்தான்.

''சத்தியமாகச் சொல்றேன் எசமான். அன்னிக்கு ராவு சரியா பன்னிரெண்டு மணி இருக்கும். வெளியே ஏதோ ஒருவகை வாடை வீசுச்சு..பங்களாவைச் சுத்தி நிறைய மனேரஞ்சிதப் பூ இருக்குதே ஒருவேளை அதோட வாசனையா இருக்குமோன்னு நினைச்சுக்கிட்டே பங்களாவைச் சுற்றி வந்தேங்க..... திடீரென்று ஏதோ மரக்கிளை குலுங்கிய மாதிரி இருந்துச்சு. மரங்களில் இரவுக்காக அடைந்திருந்த பறவைங்க கூச்சலிட்டுப் பறந்திச்சு. டார்ச்சு லைட்டை எடுத்தேன். அதோட ஸ்விட்சைப் போடறதுக்குள்ளே, 'ராத்திரி வேளைங்கள்ளே சிறுத்தைப் புலி நடமாடுது..நான் பார்த்திருக்கேன்னு'' பக்கத்து பங்களா வாச்சுமேன் சொன்னது நினைவுக்கு வந்திச்சுங்க. அதனலே என்னலே அடுத்தஅடி எடுத்து வைக்க முடியலிங்க. மனசு பக்குபக்குன்னு அடிச்சுக்கிடுச்சு. இருந்தாலும் மெதுவா டார்ச்சு பித்தானை அமுத்திச் செடிகள் அசையற பக்கம் திரும்பினேன்.

''அடர்ந்திருந்த செடிகளுக்கு மத்தியிலே இருந்த மரத்திலே ஏறி யாரோ பங்களாவிற்குள்ளே தாவினதைப் பார்த்தேன். விளக்கை அணைச்சுட்டு மறைஞ்சு மறைஞ்சு அந்த இடத்திற்கு ஓடினேன். அதுக்குள்ளே செடி மறைவிலேயே ஓடிய அந்த உருவம் மறைஞ்சு போச்சுங்க. சில வினடிகள் அசையாமல் நின்னு எங்கிருந்தாச்சும் சப்தம் வருதான்னு கவனமாகக் காது கொடுத்துக் கேட்டேன். ஆன எதுவுமே அப்பக் கேக்கலே. மெதுவா நடந்து மாடிக்குப் போக ஆரம்பிச்சேன். அப்ப, என் பின்னலே யாரோ நடந்து வர்ற மாதிரி இருந்திச்சு, நான் நின்னேன். அந்தச் சப்தமும் நின்னுடுச்சு. மறுபடியும் நடந்தேன். அந்தச் சப்தம் மறுபடியும் பின்னலே கேட்டுது. கூச்சல் போட நெனைச்சேன். ஆன என்னலே போட முடியலே. கண்ணை இறுக்கி மூடிக்கிட்டேன். அப்புறம் லேசா கண்ணைத் தொறந்து பார்த்தா அப்பப்பா....என்னைச் சுத்தி முகமூடி போட்டிருந்த நாலு உருவங்க கையிலே இருந்த துப்பாக்கிகளோடு என் நெஞ்சிலும் முதுகிலும் அமுத்திக்கிட்டிருந்துச்சு.





''என் கையிலிருந்த டார்ச்சை யாரோ பிடுங்கிக்கிட்டாங்க. என் வாயை ஒருத்தன் கட்டினன். அப்புறம் ரெண்டு கைகளையும் பின்னலே மடக்கி வைச்சு, என் தலைப்பா துண்டாலேயே கட்டினதும், தொலைவிலிருந்த உருவம் ஜாடை காட்ட என்னை அங்கே அழைச்சுக்கிட்டு போனங்க.''

''டேய் ராமு. பங்களாவோட ரகசியப் பாதையைக் காட்டு..ம் ....நட சீக்கிரம்.

''என் முன்னலே நின்ன முகமூடி மனிதன்தான் கனமாக குரல்லே பேசினன். நான் தயங்கினேன். என்னைச் சுத்தி ஒரு தடவை பார்த்துக்கிட்டு எனக்கு உத்தரவு போட்ட உருவத்தை உத்துப் பார்த்தேன்.''

''டேய் ராமு நான்தான் சுரேஷ். சுந்தரபாண்டியனேட மூத்த மகன். மாடிக்குப் போற வழியைக் காட்டு..ம்..சீக்கிரம். அப்படின்னன்.'' கேட்டுக்கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் புண்ணியகோடியின் புருவங்கள் நெளிந்தன.

இன்ஸ்பெக்டரின் சந்தேகத்தைப் புரிந்து கொண்டவன்போல ''அந்தச் சுரேஷ் யாருன்னு சொல்றேங்க'' ராமு பேசத் தொடங்கினன்.

''சுந்தரபாண்டியன் அய்யாவுக்கு சேரி அழகம்மாள் பேரிலே தனி மோகம். அவளிடம் பிறந்தவன்தான் சுரேஷ். தாலி கட்டித் தன் மனைவி யாக்கிக் கொள்ளச் சுந்தரபாண்டியனை வற்புறுத்தினு அழகம்மாள். கெஞ்சினுள். கொஞ்சிப் பார்த்தாள். ஆனல் சுந்தரபாண்டியன் மசியலே. அவளை மனைவியாக்கிக்க இசையலே. அதனலே அவ தன் சுற்றத்தாரையெல்லாம் கூட்டி நீதி கேட்பேன்னு பயமுறுத்தினு. சுந்தரபாண்டியனுக்குப் பயம் வந்துட்டுது. தன்னேட கௌரவம் என்ன ஆவது? வேதாரண்யம் காட்டிலே இருக்கிற கோவிலுக்கு வா. சாமி சாட்சியா உன்னைக் கல்யாணம் செய்துக்கிடறேன்னு ஆசைக் காட்டினரு...அய்யா. அவளும் அவரை நம்பிப் போனு. போறப்ப தன்னுடைய குழந்தையைத் தன் தாய்கிட்டே விட்டுத் தனியாப் போனு.



# வெற்றியை நோக்கி....!

நாளுக்குநாள்
நம்முடைய வாழ்க்கைக்கு
அரசு அளிக்கும்
பாதுகாப்புகள் ஏராளம்

அரசு அலுவலர்களுக்கு
குடும்பப் பாதுகாப்புத் திட்டம்
அதனைத் தொடர்ந்து
சமுதாயத்திலுள்ள அனைவரும்
பயனடையும் வகையில்
சமூகப் பாதுகாப்புத் திட்டம் !

இப்படி அளிக்கப்படும்
பாதுகாப்புகளைப் போன்று
நமக்கு நாமே
உருவாக்கிக் கொள்ளும்
பாதுகாப்புத் திட்டம்
குடும்பநலத் திட்டம் !

எல்லாரும்
இன்புற்றிருக்கச்
செயல்படுத்தும்
திட்டங்கள்
வெற்றி பெற்றிட
வலுமிக்க
அடித்தளம் அமைய

உதவுவதே
அளவான குடும்பம்.



அடுத்த குழந்தை இப்போது வேண்டாம் !
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம் !!

— குடும்பநலத்துறை,
தமிழ்நாடு அரசு.


# எங்களுக்கும் வாழ்வு வரும்...!

அமிர்தம்



அங்கம்மாளினல் நம்ப முடியவில்லை.

மணியக்காரர் பெரியசாமிதான் அப்படி பேசுகிருரா என்று சந்தேகம். ஒரு வாரத்துக்கு முன்பு அங்கம்மாளை 'கண்டபடி' எச்சரித்தவர் பெரியசாமிதான். இப்பொழுது அங்கம்மாளைப் பற்றிப் புகழ்மாலை பாடிக் கொண்டல்லவா இருக்கிருர். அங்கம்மாளுக்குக் கூச்சமாகவே இருந்தது.

''பஞ்சாயத்து போர்டு ஆபீஸிலே பிரஸிடெண்ட் ஐயா மணியக்காரர் இன்னும் யாரோ அதிகாரிகள் வந்திருக்காங்க. உங்களை கூப்பிட்டு வரச் சொன்ஞங்க'' என்று அங்கம்மாளிடம் ஆள் வந்து சொன்னபொழுது அவள் பயந்தாள்.

அச்சத்துடனே 'பஞ்சாயத்து போர்டு' ஆபிஸுக்கு வந்தாள். வந்தவுடனேயே அவளுக்குத் தெம்பு வந்தது. அவளுக்கு நன்கு தெரிந்த மாவட்ட மகளிர் நல அதிகாரியான அந்த அம்மாவும் வந்திருந்தார்கள். அங்கம்மாளை அழைத்து அருகில் நாற்காலியில் உட்காரச் சொன்ஞர்கள்.

ஊர்ப் பெரியவர்களுக்கு எதிரே சரி சமமாக உட்கார அங்கம்மாளுக்கு முதலில் தைரியமில்லை. பஞ்சாயத்துத் தலைவர் சொன்ஞர். 'அம்மா இந்த வருஷம் சர்வதேசப் பெண்கள் வருஷம்... சும்மா உட்காருமா'' என்ருர். அவர் அடியொற்றி மணியக்காரரும் பின்பாட்டுப் பாடிஞர். அவர்கள் அனைவரும் சேர்ந்து அன்பொழுக அங்கம்மாளிடம் பேசியதையே முதலில் நம்ப முடியவில்லை. அதற்கு மேலாக அவர்கள் சொன்ன செய்திகளோ அங்கம்மாளை மேலேயே பறக்கவைத்தன. இப்படியொரு 'நல்ல காலம்' தன்னைத் தேடிவரும் என்று அவள் கனவுகூட கண்டதில்லை!

மனத்தில் நிறைந்த மகிழ்ச்சியினல் பதில்கூடச் சொல்ல முடியாமல் தவித்தாள், அங்கம்மாள். இந்தச் செய்திகளை உடனே தன் தங்கை மங்களத்திடம் சொல்ல வேண்டும் என்ற ஆசையில் எல்லாருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டு புறப்பட்டாள்.

அங்கம்மாள் கொஞ்ச தூரம் சென்றிருப்பாள். எதிரே தங்கையன் வந்தான். அவனிடம் எப்படி பேசுவது என்று விளங்கவில்லை— அங்கம்மாளுக்கு! தாளுக போய்ப் பேசவும் துணிவில்லை. பேசாமல் போகவும் மனமில்லை....போன வாரம் எவ்வளவு கடுமையாக அவனைக் கண்டித்தாள். இப்பொழுது போய் எப்படிப் பேசுவது என்று தடுமாறிஞள்.

இப்பொழுது தங்கையன் மறுத்தால் என்ன செய்ய முடியும்? இந்த எண்ணமும் அவள் மனத்தில் தலைதூக்க, எதுவும் பேசாமல் அவனைப் பார்த்துக் கொண்டு நின்ருள்.

அங்கம்மாளின் தர்மசங்கடமான நிலையை உணர்ந்தவன் போல் அவள் அருகில் வந்தான் தங்கையன். அவன்தான் பேசிஞன்:—

''இப்பொழுது உங்களுக்கு சந்தோஷம் தானே...சம்மதம் தானே!''

பதில் பேசாமல் தலையாட்டிஞள் அங்கம்மாள். நன்றியுடன் அவள் கண்களில் கண்ணீர் சுரந்தது.

தங்கையன் உரக்கவே சொன்ஞன். ''எங்களுக்கும் வாழ்வு வரும்ன்னு அப்பவே தெரியும். ஒரு காலத்தில் நீங்களும் வாழ்த்து விங்கண்ணு தெரியும்...''

இப்பொழுது அங்கம்மாள் சொன்ஞள். ''நீங்க எல்லாம் நினைச்சது நடக்கக் காரணமா இருந்த நல்லவங்க உள்ளத்தை வாழ்த்துங்க...!''

அங்கம்மாள் விடைபெற்றுக் கொண்டு கிளம்பிஞள். அவளுக்குள்ள மகிழ்ச்சிதான் அவனுக்கும். அதைவிட மகிழ்ச்சியடையக் கூடியவள் ஒருத்தி இருக்கிருளே..... அவள்....?

* * *

மங்களம் - அங்கம்மாளின் தங்கை.

அவளுக்கு ஆதரவு காட்டும் துணையாகவும் தாயாகவும் தந்தையாகவும் விளங்கியவள் அங்கம்மாள்தான்.

இளமையிலேயே நெற்றியில் விளங்கிய குங்குமத்தைப் பறிகொடுத்தவள் அங்கம்மாள். அவள் கணவன் முருகேசன் கண்ணை மூடும்பொழுது கை நிறையக் காசு பணம் வைத்து விட்டுப் போகவில்லை என்ருலும் ஏதோ இரண்டொன்று மாடு கன்று என்று வைத்துவிட்டுச் சென்றிருந்தான்.

வாழ்வின் இளமை பாலை நிலமாக மாறிவிட்டாலும் 'பால் வியாபாரம்' செய்யும் பணியுடன் பெற்ருேர்களிடம் வந்து சேர்ந்தாள்.

அங்கம்மாள் வந்த நேரம்-மங்களத்தை அவள் கையில் ஒப்படைத்து விட்டு அவள் பெற்ருேர்கள் ஒருவர் பின் ஒருவராகக் கண்ணை மூடிவிட்டார்கள்.

இடிமேல் இடிவிழுந்த நிலைக்கு ஆளான தங்கம்மாள், மங்களத்தைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள். வறுமைக்கு ஆளாஞலும் - வாழ்வில் சுகமறியாமல் வாடிப் போஞலும் தன் தங்கையை வளர்ப்பதில் கண்ணுங்கருத்துமாக இருந்தாள்.

காலமும் தன் கோலத்தைக் காட்டியது. வாலை பருவத்தை எட்டிய மங்களம், கொள்ளையழகு கொஞ்சும் குமரியாகத் திகழ்ந்தாள்!

வரப்பெடுத்த வயலும் [illegible] தேகிய வாய்க்காலும் நிறை[illegible]

# குலசேகரபாண்டியன் காலத்துக் கோயிலும், கல்வெட்டும்!

புலவர் வெ. அ. முத்துக்கண்ணன்

பண்டைய பேரரசர்கள் மூவேந்தர்களும் கோவில்களைக் கட்டித் திருப்பணி செய்வதையே தங்கள் பெரும் பணியாகக் கருதினர். மூவேந்தர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டாலும், பாண்டியன் சேரனை வென்றாலும், சேரன் சோழனைத் தோற்கடித்தாலும்; சோழன் பல்லவனை வெற்றி கொண்டாலும்; ஒரு மன்னன் தோற்றுவித்த கோவில்களை, கலைச் செல்வங்களை மற்றவன் அழிக்கவில்லை. முஸ்லீம்கள் படையெடுப்பாலே பெரும்பாலும் இடிக்கப்பட்டிருக்கின்றன.

ஊரைவிட்டு இரண்டு, மூன்று கல் தொலைவில் காட்டிற்குள்ளே கூட பெரிய கோவில்களைக் கட்டியுள்ளார்கள். தங்களுடைய வெற்றிச் செய்திகளை, கோவில்களுக்குச் செய்யக் கூடிய அறக்கட்டளைகளைக் கல்வெட்டுக்களில் பொறித்துள்ளனர். கல்வெட்டுக்கள் தமிழகத்தின் தொன்மை வரலாற்றைத் தெள்ளத் தெளிவாகத் தெரிந்துக் கொள்ளச் சான்றுகளாக உள்ளன என்றால் மிகையாகாது.

பதின்மூன்றும் நூற்றுண்டைச் சேர்ந்த குலசேகரப் பாண்டியன் காலத்துக் கோவில், அக்காலத்திய நீண்ட கல்வெட்டையும் மேலூரிலிருந்து பதினைந்து கல் தொலைவிலுள்ள, முகவை மாவட்டத்தைச் சேர்ந்த கிளாதரி என்ற ஊருக்கு இரண்டு கல் தொலைவிலுள்ள அடர்ந்த, பயங்கரக் காட்டினுள்ளே கண்டேன். இது மாலிக்காபூர் படையெடுப்பால் அழிந்திருக்கலாமெனக் கருதுகிறேன். அதைப்பற்றி என் ஆய்வை எழுதுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

## கோவிலும் பேய்க்காடும் :

கிளாதரி பகுதிகளிலுள்ள காடுகளில் ஏராளமான கலைமான்கள் வாழ்ந்தனவாம். ஆதலின், அவ்வூர் கலைமான்தரி என்றிருக்க வேண்டும். அதுவே நாளடைவில் கலைமான்தரி, கிளாதரி என்று மருவியிருக்க வேண்டும். கோனூர் பட்டிக்கும் கிளாதரிக்கும் இடையே இரண்டரைக்கல் தொலைவில் பொய்க்கண்மாய், பொய்க்கோவில், பொய் முனியாண்டி கோவில் என்று வழங்கும் இடங்கள் உள்ளன.

அஃது அடர்ந்த பயங்கர காடு. அதில் பேய், பிசாசு நிரம்பிய பகுதி என எவரும் செல்வதில்லை. அதிலுள்ள மரங்களை வெட்டினால், அல்லது அப்பகுதியிலிருந்து ஏதேனும் ஒரு பொருளை எடுத்து வந்தால் கண்கெட்டுப் போகும் என்று எவரும் எந்தப் பொருளையும் எடுத்துச் செல்வதில்லை. இரவில் மேளம், சலங்கை ஒலி கேட்பதாகவும், சோதி தெரிவதாகவும் கூறுகிறார்கள். அங்கு ஏராளமான புதையல்கள் கிடைக்கக்கூடும் என்றும் இப்பகுதி மக்கள் நம்புகிறார்கள். அக்கோவிலில் பொய்கை இருந்து மூடப்பட்டிருப்பதற்கான அடையாளங்கள் உள்ளன. பொய்கைக் கோவில்தான், பொய்க் கோவிலாக மாறியிருக்க வேண்டும். அதன்படி பொய்கைக் கண்மாய், பொய்க் கண்மாயாகவும், பொய்கை முனியாண்டிக் கோவில், பொய் முனியாண்டி கோவிலாகவும் வழங்கி வந்துள்ளன.

## கலையும் கல்வெட்டும் :

இக் காட்டின் நடுவில் வேலைப்பாடுடைய அழகிய கோயில் இடிக்கப்பட்டு உள்ளது. அதனருகே $1\frac{1}{2}$ அடி அகலமும், 4 அடி நீளமும் உள்ள படிக்கல்லில் 24 வரிகளைக் கொண்ட கல்வெட்டு ஒன்று உள்ளது. அதில் ''குலசேகர'' என்ற அடிகள் காணப்படுதலால் அது குலசேகரப் பாண்டியன் காலத்துக் கல்வெட்டு என்றும், பதின்மூன்றும் நூற்றுண்டைச் சேர்ந்தது எனவும் உறுதியாகக் கூறலாம். அழகிய கலைத்திறனுடைய கற்கள் கிடைக்கின்றன.

## தேரும் ஊரும்:

அப்பொய்கையைச் சுற்றி தேர் ஓடியிருக்க வேண்டுமெனக் கருத இடமிருக்கிறது. அத்தேர் அப்பொய்கையில் மூழ்கியிருக்க வேண்டுமெனவும், அண்மையிலுள்ள திருவாதவூரிலுள்ள தேர் இதுதான் எனவும் பலர் பலவிதமாகக் கூறுகிறார்கள். அக்கோயிலைச் சுற்றி ஏராளமான வீடுகள் இருந்திருப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. ஓடுகள் இருக்கின்றன. ஒரு வேளை குடியிருப்புகள் நிறைந்ததாக இருந்திருக்கலாம்.

## சிலையும் சிற்பமும்:

அக்கோயிலில் அழகிய சிற்ப வேலைகளை உடைய தூண்கள் கிடைக்கின்றன. அதில் 'லிங்கம்' இருந்ததற்கான பீடம் உள்ளது. ஆகவே, அது சிவன்கோயிலாக இருந்திருக்கலாம். அக்கோயில் அதிஷ்டானம் (தளம்), பிரதி (சுவர்), பிரஸ்தரம் (கூரை), கிரீவம் (கழுத்து) சிகரம் (தலை) ஸ்தூபி (கலசம்) முதலிய அமைப்புக்களுடன் இருந்திருக்க வேண்டும். கோயிலின் எதிரில் நந்தி உள்ளது. அருகில் இரு வெள்ளை நிற வலம்புரி விநாயகர் சிலைகள் குடை காதுகளுடன் உள்ளன. அபயஹஸ்தம், ஊருஹஸ்தம் உடைய எட்டு சிலைகள் உள்ளன. அதில் மகேஸ்வரி, வைஷ்ணவி, இந்திராணி, கௌமாரி சிலைகள் குறிப்பிடத்தக்கன. முனியாண்டி கோயிலில் ஏராளமான நாணயங்கள் குறுக்கே வெட்டப்பட்டு கிடக்கின்றன. இதிலிருந்து இதனை சக்தி உடைய தெய்வமாக வழிபட்டு வருகிறார்கள் எனத் தெரிகிறது.

## பூவந்தியும் பூஞ்சுத்தியும்:

இக்கோயிலிருந்து 5 கல் தொலைவில் பூஞ்சுத்தி என்ற ஊரும் 7 கல் தொலைவில் பூவந்தி என்ற ஊரும் உள்ளன. இக்கோயிலுள்ள லிங்கத்தை பூவலிங்கம் என்று கூறுவதாலும், அக்கோயிலில் பூத்திருவிழா நடந்திருப்பதாலும் அருகே இருந்த ஊருக்கு பூஞ்சுத்தி என்று பெயர் இருந்திருக்க வேண்டும். இவ்விரு ஊர்களும் இங்கே இருந்து அங்கே குடிபெயர்ந்திருக்க வேண்டும். இன்றும் பூஞ்சுத்தி காரர்களுக்கு கிளாதரியில் கோயில் மரியாதை கொடுக்கிறார்கள். கீழவளவு அருகே உள்ள பஞ்ச பாண்டவர் மலை என்று அழைக்கப்படும் சமண படுக்கை உள்ள மலையின் மேற்குப் பகுதியில் முருகன் கோயிலில் உள்ள கல்வெட்டில் 'பூஞ்சுத்தி' என்ற சொல் காணப்படுகிறது. ஒரு வேளை இதற்கும் அதற்கும் தொடர்பு இருந்திருக்கலாம். ஆனால், கீழவளவு பாறையில் சமணர்கள் ஒளிந்திருந்ததாகவும், அங்கேதான் கழு ஏற்றியிருக்கக் கூடும் எனக்கருத இடமிருக்கிறது. ஆனால், பொய்கைக் கோயிலுக்கும் சமணர்களுக்கும் தொடர்பு இருந்திருக்க முடியாது. கீழவளவிற்கு அடுத்துள்ள வெள்ளருந்து, எரிச்சி மலைகளில் கல்வெட்டுகள் உள்ளன. இவைகள் தமிழ் வட்டெழுத்துக்களை உடையன.

## இலமநாயகி அம்மனும் இடைச்சி மண்டபமும்:

மேலூருக்கு அருகே நான்கு கல் தொலைவில் அரிட்டாபட்டி என்ற ஊர் உள்ளது. இங்கே உள்ள மலையிலுள்ள கல்வெட்டை மீனாட்சிபுரம் கல்வெட்டு என்றும் அம்மலைக்கு கழுகுமலை என்றும் ஓவா மலை என்றும் குறித்துள்ளார்கள். அம்மலைக்கு ''தேன் கூழ்மலை'' என்கிறார்கள். 'தேன் கூடுமலை' தான் தேன் கூழ் மலையாக மருவியிருக்கக்கூடும். ஓவா மலை, இராமாயிமலை' ஆப் பட்டான்மலை, தேன் கூழ்மலை இவைகள் தொடர்ச்சியாக உள்ளன. கழுகு மலையும், கழிஞ்ச மலையும் தனித்தனியாக உள்ளன. அங்கே யானைக்கிடங்கு, யானை கொண்டான் கண்மாய், விளக்குத் தூண் என்ற பகுதிகள் உள்ளன. அருகில் பொற்றமரைக் குளம் உள்ளது. இதனை 'மழட்டலைதம்மம்' என்கிறார்கள். வடக்கே புத்தர் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. கிழக்குப் பக்கத்தில் இடைச்சி மண்டபம் என்ற பகுதியில் குடவரைக்கோயில் உள்ளது. இதிலிலுள்ள லிங்கம், திருமயத்திலுள்ள லிங்கம் போன்று தனிக் கல்லால் செதுக்காது, மலையிலிருந்தே செதுக்கி உள்ளார்கள். முன்னால் நந்தி உள்ளது. இரு துவாரகப்பாலர்கள் உள்ளார்கள். வடப்புறம் விநாயகர் சிலையும் இடப்புறம் சுப்பிரமணியர் சிலையும் செதுக்கி உள்ளார்கள். வில்வ மரம் உள்ளது. அருகே இலமநாயகி அம்மன் கோயில் உள்ளது. துர்க்கை, அகோர மூர்த்தி சிலைகள் உள்ளன. மேற்கூரை சிதைக்கப்பட்டுள்ளது. அருகிலுள்ள கோட்டைப் புன்செய் என்ற இடத்தில் ஓர் இடிந்த சிவன் கோயில் உள்ளது. இதில் ஓர் லிங்கம் உள்ளது. வேலைப்பாடுடைய தூண்கள் ஆங்காங்கே உள்ளன. நடு வயலில் ஒரே கல்லால் செய்யப்பட்ட தேர் போன்று அமைப்புடைய அழகிய வேலைப்பாடுடைய கல் ஒன்று உள்ளது. பலி பீடமாக இருந்திருக்கலாமெனக் கூறுகிறார்கள். இதுவும் பதின்மூன்றும் நூற்றுண்டைச் சேர்ந்ததாக இருந்திருக்கலாம். அங்கே அக்காலத்திய தண்ணீர் குடிக்கும் கலயம் ஒன்று கிடைத்து, தொல்பொருள் ஆய்வுத்துறை அலுவலகத்தில் சேர்த்துள்ளேன். இக்கோயில் காராளனால் சிதைக்கப்பட்டிருக்கலாமெனக் கூறுகிறார்கள்.



## காராளனும் கரையிப்பட்டியும்:

காராளனால் சிதைந்ததாகக் கூறுவது ஏற்றுக் கொள்ளத் தக்கது அல்ல. ஏனெனனில் ஏராளமான காராளர்கள் கோயில்கள் கட்டியிருப்பதாகக் கூறுகிறார்கள். ஆதலால் காராளர்கள் கோயில்களை இடித்திருக்க முடியாது. எடுத்துக் காட்டாக, மேலூரிலிருந்து ஆறுகல் தொலைவிலுள்ள கீழவளவிலிருந்து கொங்கம்பட்டிக்குச் செல்லும் வழியில் நடுக்காட்டில், மணி முத்தாற்றங்கரையில் இரண்டு பெரிய கோயில்கள் இடிந்து காணப்படுகின்றன. ஒன்று சிவன் கோயிலாகவும், மற்றொன்று பிரம்மன் கோயிலாகவும் இருந்திருக்க வேண்டும். இரண்டிற்கும் உள்ள இடைவெளி ஒரு பர்லாங் தூரம். அங்கே ஊருணியும், வீடுகளும் இருந்திருப்பதற்கான சான்றுகள் உள்ளன. தேரும் ஓடியிருக்க வேண்டும். லிங்க பீடம் உள்ளது. லிங்கம் புதையுண்டு கிடக்கலாம்.

அதிலிருந்து ஒரு கல் தொலைவில் காராளர்களால் கட்டப்பட்ட கிணறு உள்ளது. அதன் அருகில் விநாயகர் சிலையும் உள்ளது. இடிந்த கோயில்களுக்கு அருகில் ஆற்றில் அடித்து வந்ததாகச் சொல்லப்படும் மசிடாசுரமர்த்தனி சிலை ஒன்று உள்ளது. இதனை நீலி கோயில் என்கிறார்கள். இக்கோவிலிலுள்ள சிலை, வெப்பனம்பட்டியிலுள்ள பட்டத்தளச்சி அம்மன் கோவில் சிலை, கரையிபட்டியிலுள்ள வடக்கிவாச் செல்வி அம்மன் கோவில் சிலை மூன்றும் ஒரேமாதிரி உள்ளன. 'பட்டத்தரசி' என்பதே பட்டத்தளச்சி என மருவி இருக்கக்கூடும். அல்லது பட்டித் தலைச்சி, பட்டத்தளச்சியாக மருவியிருக்கலாம். ஆக மூன்று சிலைகளும் ஒரு காலத்தவை என்பது தெளிவாகத் தெரிகிறது. அத்துடன் கரையிப்பட்டியில் ஒட்டைக் கோவில் என்று இன்று அழைக்கப்படும் ஒரு சிவன் கோவில் உள்ளது. அதில், லிங்கம், நந்தி, விநாயகர் சிலைகள் உள்ளன. சுற்றுப்புறத்தில் சிலைகள் இருந்து நாளடைவில் காணுமல் போய்விட்டன. இச் சிவன் கோயிலும் காராளன் காலத்தில் கட்டப்பட்டது.

அங்கும் தெப்பக்குளம் இருந்திருக்க வேண்டும். அருகில் காராளர்கள் குடியிருந்ததற்கான சான்றுகள் உள்ளன. அம்மி: குழவி, திருகை, நிலைப்படி, கலயங்கள் எல்லாம் கிடைத்திருக்கின்றன. காராளன்பட்டி என்பதே கரையிப்பட்டி என மருவி இருக்கக் கூடும் இம் மூன்றும் நவாப் காலத்தில் அழிந்ததாகக் கூறுகிறார்கள். ஒரு கால் மாலிக்காபூர் படையெடுப்பால்கூட அழிந்திருக்கக்கூடும். அக்கோயில்களிலுள்ள கற்களைக் கொண்டே கொங்கம்பட்டியிலுள்ள மகுதி கட்டப்பட்டதாக முதியோர்கள் கூறுகிறார்கள். அப்பகுதியில் ஏராளமான புதையல்கள் இருக்கலாமெனக் கூறுகிறார்கள். அப்படியிருக்க, அரிட்டாப்பட்டி கோவிலைக் காராளர்கள் சிதைத்திருக்க முடியாது. இதுவும் முஸ்லீம் படையெடுப்பால் பாதித்திருக்கக்கூடும்.

(முடிந்த முடிபல்ல ; ஆராய்ச்சிதான்).

அந்தச் சிற்றூரின் அழகு ராணியாகக் காட்சியளித்தாள் மங்களம்.

அந்த அழகை ரசிக்க உரிமையுள்ளவன், தான் ஒருவனே என்பதை மங்களத்திடம் முதலில் சொன்னவன் தங்கையன்! அவன் தான் எல்லாருக்கும் முந்திக் கொண்டான்.

மங்களமும் அவன் கோரிக்கை சரியானதுதான் என்று ஒப்புதல் தர முன்வந்தாள்.

ஆனால், அங்கம்மாள் குறுக்கே நின்றாள்.

மங்களம்-தங்கையன் இருவரும் கருத்தொருமித்து உருவாக்க நினைத்த அந்த வாழ்க்கையை அங்கம்மாளால் நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை.

தங்கையன் மணியக்காரர் பெரியசாமியின் அண்ணன் மகன்! ஏணி வைத்தாலும் எட்டாத அளவுக்குப் பணவசதி படைத்தவன் என்பது மட்டும் காரணமல்ல; சாதி வேற்றுமையும் உண்டு. கிராமத்து மக்கள் அவ்வளவு எளிதில் இதையெல்லாம் மறந்து விடுவார்களா என்ன?

சூழ்நிலைகளின் உண்மையை உணரும் அனுபவம் பெற்ற அங்கம்மாள், தங்கையன்-மங்களம் ஆகியோரின் ஆசைக்கு அணை போட்டாள்.

தன் தங்கையிடம் உண்மையை உணரும்படிச் சொன்னாள். கரைப்பார் கரைத்தால் கல்லே கரையும் பொழுது மங்களம் மனம் மட்டும் மாறாமலிருக்குமா?

ஆனால் தங்கையன் விடவில்லை. அவன் சுற்றத்தார் எவ்வளவோ சொல்லியும் கேட்கவில்லை. தங்கையனைத் தங்கள் பக்கம் இழுக்க முடியாதவர்கள் அங்கம்மாளைப் பயமுறுத்தினார்கள். உடனடியாக மங்களத்துக்கு மணமுடிக்க வேண்டும் என்றும் அவசரப்படுத்தினார்கள். பக்கத்தூரிலே மாப்பிள்ளை பார்த்தும் கொடுத்தார்கள். அங்கம்மாளும் தன் தங்கையின் வாழ்வு மலரட்டும் என்றுதான் அந்த மாப்பிள்ளைக்கு மங்களத்தை மணமுடித்து வைத்தாள்.

சுபயோக சுபதினத்தில் எல்லாப் பொருத்தமும் பார்த்து முடித்த மாப்பிள்ளையோ சரியான குடிகாரன். குடித்து விட்டுக் கண்ட இடத்தில் விழுந்து கிடக்கும் அவன் ஒருநாள், நல்ல குடிபோதையில் மரத்தின் உச்சியில் ஏறிக் கீழே விழுந்து விட்டான்; மண்டையில் சரியான அடி. விளைவு?

மங்களம், மங்கலம் இழந்தாள்.

மணமுடிந்த ஆறாவது மாதத்திலே விதவைக் கோலம் பூண்டு விட்டாள்.




'அக்காவைப் போலத்தானே தங்கை இருப்பாள். அட்ட தரித்திரங்கள்' என்று ஊர் அலர் பேசிற்று. அதனால் முடியும் காரியம் அவ்வளவு தானே!

ஆனால் இளமையின் ஏக்கம் சும்மாயிருக்குமா?

மீண்டும் தனக்கே 'வாய்ப்பு' வந்துவிட்டதாகத் தங்கையன் முன்னால் வந்தான். ஆனால் முன்பைவிட அவனுக்கு எதிர்ப்பு இப்பொழுது அதிகம்; எனினும் அவன் அதைப் பொருட்படுத்தவில்லை!

மங்களமும் ஒருவிதத் தீவிரத்துடன் இருந்தாள்.

அந்த உண்மையை அங்கம்மாள் உணர்ந்தாள். 'பாடாத தேனீயும் பசியாத நல்வயிறும் பார்த்ததில்லை' என்று இலக்கிய நயத்துடன் எண்ணிப் பார்க்காவிடினும் அந்த ஏக்கமான வாழ்க்கையை அவளும் அனுபவித்தவள் தானே.

மணியக்காரர் பெரியசாமியே வீடுதேடி வந்து கண்டித்தார் என்பதைவிடப் பயமுறுத்தினார் என்பதுதான் சரி. மங்களத்தை அடக்கமாகப் பார்த்துக் கொள்ளாவிட்டால் ஊரைவிட்டே விரட்டிவிடுவதாக அவர் எச்சரித்தார்.

அங்கம்மாள் பயத்தோடு தலையசைத்தாள். மங்களம் குறுக்கே வந்து ''முதலில் தங்கையனைக் கண்டித்து வையுங்கள்! பெண்களிடம் வீரம் பேசாமல் உங்கள் வீட்டுப் பிள்ளையை முதலில் திருத்திக் கொள்ளுங்கள்'' என்று சொன்ன பொழுதுதான் சொரணை வந்தவர்போல் மணியக்காரர் திரும்பிச் சென்றார்.

அன்று மாலை, அந்தப்பக்கம் சாலை வழியாகச் சென்றால், மங்களம் கண்ணில் படமாட்டாளா என்ற ஏக்கத்தோடு வழக்கம் போல வந்தான் தங்கையன்.

தங்கையன் சாலையில் வருவதைக் கண்டதும் அங்கம்மாள் அவனிடம் சென்று மிகுந்த மரியாதையுடன் வீட்டுக்கு அழைத்தாள்.

தங்கையனுக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சி! அங்கம்மாளுக்கு அஞ்சி அஞ்சி அந்தப் பக்கம் நடந்து வந்தவனை அவளே அழைத்தது அளவிலா ஆனந்தத்தை அளித்தது. தான் நினைத்தவை எல்லாம் தானாகவே நடக்கும் என்று நம்பினான்.

தங்கையன் வீட்டுக்கு வந்ததும் மங்களத்தையும் அழைத்தாள் அங்கம்மாள். இருவரிடமும் மிகக் கடுமையாகப் பேசினாள். கதறியழுதாள். அவர்கள் இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் மறந்து விட்டு வாழ்ந்தால் தான் தான் உயிரோடு வாழ முடியும் என்றும் இல்லாவிடில் தற்கொலை செய்து கொள்ள நேரிடும் என்றும் எச்சரித்தாள். காலையிலேயே மணியகாரர் பெரியசாமியிடம் மௌனம் சாதித்தவள், தங்கையனிடம் தங்கள் குடும்பச் சூழ்நிலையைச் சொல்லி மேலும் துன்பம் தர வேண்டாம் என்று கேட்டாள். அவள் பேச்சில் கடுமையும் இருந்தது. ஆற்றாமையும் தெரிந்தது. சூழ்நிலையின் உண்மையை உணர்ந்த ஏழையின் நிலையும் விளங்கியது.

மங்களம் பதில் ஏதும் பேசாமல் தேம்பித் தேம்பி அழுதாள். தங்கையன் பதில் பேசவில்லை. தலைகுனிந்தவாறு வீட்டைவிட்டு வெளியேறினான்!

இந்த நிகழ்ச்சி நடைபெற்று இரண்டு மாதங்களுக்குப் பிறகு தான் 'பஞ்சாயத்துப் போர்டு' அலுவலகத்திலிருந்து அங்கம்மாளை மணியக்காரர் கூப்பிட்டு அனுப்பி அந்த நல்ல செய்தியைச் சொன்னார்.

* * *

மங்களத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டு முத்தமழை பொழிந்தாள் அங்கம்மாள். மங்களம் தானாகவே காரணம் கேட்கட்டும் அப்பொழுது அந்தச் சந்தோஷச் செய்தியைச் சொல்லலாம் என்று நினைத்தாள் அங்கம்மாள்.

அக்காளின் அரவணைப்பிலிருந்து விடுபட்டுக் கொண்ட மங்களம், காரணம் என்ன என்பதுபோல மங்களத்தைப் பார்த்தாள்! இனி மேலும் தாமதப்படுத்தித் தகவலைச் சொல்வது தவறு என்று நினைத்து அங்கம்மாளே சொன்னாள்:—

''மங்களம் உனக்கும் தங்கையனுக்கும் திருமணம். இதை மணியக்காரரே சொன்னார். எனக்குச் சம்மதமான்னு கேட்டார். சரின்னு சொல்லக் கசக்குமா?'' அங்கம்மாள் சொல்லிக் கொண்டு போனாள்.

மகிழ்ச்சியையோ, ஆச்சரியத்தையோ மங்களம் காட்டவில்லை. ''அதை நம்ப வீட்டில்தானே வந்து சொல்ல வேண்டும். 'பஞ்சாயத்து போர்டு' ஆபிஸுக்குக் கூப்பிட்டா சொல்லணும்?'' என்று சாதாரணமாகக் கேட்டாள்.

மங்களம் இப்படிக் கேட்டது அங்கம்மாளுக்குப் பிடிக்கவில்லை. அதனால் பிரசங்கம் செய்வது போலப் பேசினாள். ''போடி பைத்தியக்காரி! ஊர்ப் பெரியவுங்களுக்கு முன்னாலே சொல்லணும்னு நினைச்சிருப்பார்... அப்பதான் நான் மறுக்க மாட்டேன்னு நினைச்சிருப்பார். கூட பிரசிடெண்ட் ஐயா, இருந்தார். பக்கத்து ஊரிலே வந்து பெண்களுக்கு தையல் வேலையெல்லாம் கத்துக் கொடுத்தாங்களே அந்த அம்மாளும் வந்திருந்தாங்க. அவுங்களும் சேர்ந்து சொன்னாங்க. எனக்காக அரசாங்கத்திலே சொல்லி இலவசமா தையல் மிஷினும் தரப் போறாங்களாம். இதெல்லாம் நம்ப மணியக்காரர் மனசு வச்சதாலேதான் நடந்திருக்கு... அவர்தான் எல்லாரிடமும் சொல்லி....''

அங்கம்மாள் பேச்சை முடிக்கவில்லை. மங்களம் சிரித்தாள்.

''அக்கா இத்தனை நாள் இல்லாமல் இப்ப எப்படி மணியக்காரர் சம்மதம் தெரிவித்தார்?''

''ஏதோ நம்ப நல்ல நேரம்... அவர் மனசு மாறியிருக்கு....''

''தானாக மாறவில்லை! 'ஆட்டுவித்தால் ஆடாதவர் யாருமில்லை' என்பாங்க அது சரியாகப் போயிருக்கு.''

''நீ என்ன சொல்றே மங்களம்?''

''எனக்கு எல்லாம் முன்பே தெரியும். நமக்கு நல்வாழ்வு தந்தது மணியக்காரர் இல்லை... நம்ப அரசாங்கம்....''

''அரசாங்கமா? நமக்கா..... நம்மை நினைவு வச்சு இதையெல்லாம் செய்யறாங்களா?''

அப்பொழுது அங்கே வந்த தங்கையன், 'அரசு கைம்பெண்களின் துயர் துடைக்க 1975 ஜூன் மூன்றாந்தேதி முதல் எடுத்துள்ள நடவடிக்கைகளைச் சுருக்கமாக விளக்கினான். 'எங்களுக்குப் வாழ்வு தந்திட முன்வந்தது நமது அரசுதான்' என்றான்.

நன்றிப் பெருக்குடன் அங்கம்மாள் பதில் சொல்ல முடியாமல் நின்றாள். தங்கையன் தன் கையில் கொண்டு வந்திருந்த பூவை மங்களத்திடம் நீட்டினான். அவள் உரிமையுடன் பெற்றுக் கொண்டாள். அந்த மூவரின் மனம் போல மலரும் மணம் வீசியது.

## மறவாதீர்கள்;

## உங்கள் மகள் ஒருநாள்

## மணமகளாக அமர வேண்டியவள்!



திருமணம் என்ருலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்ருல்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கிஞல் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்ரேம். மாதச் சேமிப்புத திட்டத்தின்படி ரு. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது—இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

**இதோ சில முக்கிய விவரங்கள்**

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரு. | ரு. | ரு. |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1,650/- |

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002


# கருஞ்சிறுத்தையின் கதை



இப்பொழுது சென்னை அரும் பொருட் காட்சியகத்தில், விலங்கியல் பகுதியில் புதிதாக வைக்கப்பட்டுள்ளது கருஞ்சிறுத்தை.

கருஞ் சிறுத்தை, மற்ற சிறுத்தைகளிலிருந்து நிறத்தில் மட்டுமே வேறுபடுகிறது. சுமதரா, ஜாவா, மலேயா, இந்தியா, அபிசீனியா. போன்ற நாடுகளிலுள்ள காடுகளில் கருஞ் சிறுத்தை அபூர்வமாகக் காணப் படுகிறது. நிறத்தில் மட்டும் வேறுபடும் கருஞ் சிறுத்தை மற்ற எல்லா வகைகளிலும் சாதாரணச் சிறுத்தையைப் போன்றிருப்பதால், இது இயற்கையின் அபூர்வமாகக் கருதப்படுகிறதே தவிர. தனி இனமாகக் கருதப்படுவதில்லை. கருஞ் சிறுத்தையின் உடலைக் கூர்ந்து கவனித்தால் மற்ற சிறுத்தைகளின் உடலின் மீது காணப்படும் பூம்புள்ளிகளைக் கரு நிறத்தினூடே காணலாம்.

பொதுவாக, சிறுத்தைகளிஞல் திறமையாக மரமேறவும், நீந்தவும் முடியும். இவற்றை வேட்டையாடும்பொழுது, இவை மரதின் மீது ஏறி பதுங்கிக் கொள்கின்றன. மான், நரி, குரங்கு, ஆடு, மாடு, கழுதை, நாய், பறவை, முஞ்சுறு, பல்லி போன்ற பிராணிகளும், இறந்த பிராணிகளின் உடல்களும் சிறுத்தைகளின் உணவாகும். சிறுத்தை மற்ற பிராணிகளைக் கொன்ற பிறகு, அவற்றை இழுத்துச் சென்று மரக் கிளைகள் சேருமிடத்தில் பொருத்தி வைக்கின்றன. சிறுத்தைகள், புலி, சிங்கங்களைவிட அமைதியானவை. இவை வழக்கமாகத் தனித்தோ, அல்லது இணையாகவோ திரிகின்றன. சிறுத்தைகள் தந்திரமாகப் போரிடக் கூடியவை. இவை ஆண்டு முழுவதும் இனப்பெருக்கத்தில் ஈடுபடுகின்றன. கருவுற்று மூன்று மாதத்திற்குப் பிறகு பெண் சிறுத்தை இரண்டு முதல் ஐந்து குட்டிகள் வரை ஈனுகிறது. சிறுத்தைக் குட்டிகளின் கண்கள், அவை பிறந்த பிறகு பத்தாம் நாளன்று திறக்கின்றன. வழக்கமாக பெண் சிறுத்தை தன்குட்டிகளுடன் குகைகளில் அல்லது மரங்களின் வேர்ப் பகுதிகளில் மறைந்து வாழ்கின்றன. மற்றப் பிராணிகளை வேட்டையாட, பெண் சிறுத்தை தன் குட்டிகளை இருட்டிய பிறகே வெளியே அழைத்துச் செல்கிறது.

## கையடக்க

மாரடைப்பு, மூச்சுத் திணறல், நச்சுக் காற்று உட்புகுதல் போன்ற நெருக்கடிக் காலங்களில் உயிர்காக்க உதவும் ஒரு கையடக்கமான ஆக்சிஜன் (OXYGEN) உருவாக்கி குவளை யுள்ளார்கள். இதன் பெயர்: ஸால்-ஓ-ஜென் ( Sol-o-gen ) எடை ஒரு கிலோதான். நிமிடத்துக்கு ஆறு லிட்டர் வீதம் கால்மணி நேரம் இது ஆக்சிஜன் சப்ளை செய்ய வல்லது.

குவளை, உலோகத்தால் ஆனது. அதற்குள் ஆக்சிஜன் உற்பத்தி செய்யக் கூடிய ஒரு திட இரசாயனப் பொருள் இருக்கிறது. குவளையின் மூடியினுள் முகத்தில் பொருத்திக் கொள்ளும் சுவாசக் கருவி வைத்திருக்கிருர்கள். எளிதில் எடுத்து முகத்தில் பொருத்திக் கொள்ளலாம். கலிஃபோர்னியாவிலுள்ள 'அலேடு ஃபார்

## ஆக்சிஜன் கருவி

மச்யூட்டிக்கல்ஸ்' என்னும் நிறுவனம் இந்தக் கையடக்க ஆக்சிஜன் சப்ளைக் கருவியை உற்பத்தி செய்கிறது. மூச்சுப் பொறியை முகத்தில் பொருத்தி ஒரு பொத்தானை அழுத்தியதும் ஆக்சிஜன் உற்பத்தியாகி சப்ளையாகிறது. கருவியிலுள்ள ஆக்சிஜன் தீர்ந்துபோகுமுன்பே மற்ெருரு குவளையைப் பொருத்திக் கொள்ள முடியும்.

ஒருமுறை இரசாயனப் பொருள் அடைத்த கருவி, இரண்டாண்டுக் காலம் ஆக்சிஜன் உற்பத்தி செய்யும் திறன் பெற்றிருக்கும். பூஜ்யம் முதல் 160 டிகிரி (ஃபாரன் ஹீட்) வரையுள்ள வெப்ப நிலைகளில் இதனை இயக்கலாம். இந்த வெப்ப நிலைகளில் இதனைப் பத்திரமாக வைத்திருக்கலாம்.

ஆக்சிஜன் ஒழுகக் கூடிய வாய்ப்புக் கிடையாது; கனமில்லாததாகவும் எளிதில் இயக்கக் கூடியதாகவும் இருப்பதால் நினைத்தவுடன் நினைத்த இடத்துக்குப் புதிய கருவியைக் கொண்டு போக முடியும்.



# குழந்தையில்லாக் குறை நீங்கிட....

மணம் புரிந்த பின் ஆண்டு ...ா பல கடந்தும் குழந்தை ...பெருத பெண்ணுக்கு 'மலடி' ...ன்று இந்தச் சமூகம் பட்டம் ...டுகிறது. இதற்குப் பெண் ...டுமே காரணமா? யோசிப்ப ...ல்லை! ஆண் காரணமில்லையா? ...ந்தித்துப் பார்ப்பதில்லை! ...பெண்ணே காரணமென முடிவு ...டி விடுகிறது. 'மலடி' என்ற ...சால்தான் வழக்கில் இருக் ...றது. குழந்தையே பெருத ...ம்பதிகளில் ஆடவரை ...லடன்' என்று சொல்லக் ...ள்விப் பட்டிருக்கிறோமா? ...ல்லை! குழந்தையில்லாக் ...றைக்குப் பெண்ணே காரண ...ன்ற மூடநம்பிக்கை வளர்ந் ...ருக்கிறது.

குழந்தை இன்மையால் ...வன் வெறுப்படைகிறான்? ...னவியை சமூகம் பழிக்கிறது. ...ழந்தை வரம் வேண்டிக் ...ாவிலை வலம் வந்து தரிசித் ...் பயனில்லை! பூசாரியின் ...ங்கு நடைபெற்றும் சம்பிர ...யங்களைக் கடைப்பிடித்தும் ...ழந்தை பெற வழி பிறக்க ...ல்லை! இப்படிச் சிந்தனை ...றிப் பரிகாரம் தேடி ...லந்து திரிந்திடும் குடும்பங் ...் இன்னமும் இருக்கின்றன! ...மூன நம்பிக்கையில் தேவை ...ற சிகிச்சைகளை மேற்கொள் ...ர்கள். எதுவுமே பலன் ...க்கவில்லை. கணவன் மறு ...ம் புரிந்து கொள்கிறான். ...ழந்தை இல்லாக் குறை மீண் ...் தொடர்கிறது.

...ற்றம் யார் மீது? தெரிந் ...ல் தானே பரிகாரம் கிடைக் ...! பெண் மட்டுமே காரண ...ல! ஆணும் காரணமாக ...க்கலாம்! ஆண் காரண ...் இருந்தும் புரியாமல் மறு ...ம் செய்து கொண்டால் ...லும் ஒரு பெண் வாழ்வு ...ாகிறது. இந்தத் தவறு

கள் களைந்தெறியப்பட வேண்டாமா?

இராயபேட்டை மருத்துவ மனையில் சிறுநீர் இயல் துறை அறுவைச் சிகிச்சை மருத்துவராக டாக்டர் அ. ராஜசேகரன் அவர்கள் பணியாற்றி வருகிறார்கள். குழந்தையில்லாத் தம்பதிகள் குறை தீர்க்க 1974-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இராயப்பேட்டை மருத்துவ மனையில்சிறுநீர் இயல்துறையில் ஆண்களுக்கான காரணங்களை ஆராய (Male Infertility clinic) ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தப் பட்டது. இப் பிரிவுக்கு டாக்டர் அ. ராஜசேகரன் அவர்களே தலைமை ஏற்றுப் பணியாற்றி வருகிறார்கள். வாரத்தில் இரண்டு நாட்கள்மட்டுமே இப்பிரிவு தற்போது பணி ஆற்றி வருகிறது. குழந்தை யின்மைக்கு ஆண்களின் குறைகளைச் சோதித்துத் தீர்வுகளையும் கண்டு வருகிறது.

குழந்தையற்ற ஆண்களின் மலட்டுத் தன்மைபற்றிஇந்தத் தனிப் பிரிவில் (Male Infertility clinic) 400 பேர்களை சோதித்து ஆராய்ந்து பார்த்தனர். அவர் களில் 35 பேர்கள் குழந்தைப் பெற வேண்டி மறுமணம் செய்திருக்கிறார்கள். களில் 22 பேர்கள் இவர் இன்மைக்கு முழுமையாகவோ, குழந்தை ஓரளவோ அவர்களே காரண மாக உள்ளனர் என்பதையும் சோதனைக்குப் பின் கண்டறிந் துள்ளனர். எனவே மறுமணம் நாடும் முன்னர் சோதனை அவசியமாகிறது.

மேலும் இந்தப் பிரிவில் குழந்தையின்மையைப் பற்றி சோதனை செய்யப்பட்டதில் 49 சதவிகிதம் ஆண்களே காரணமெனக் கணக்கிடப்பட் டுள்ளது.

குழந்தையற்ற ஆண்களை பெருமளவில் பல சோதனைகள் செய்து பார்த்ததில், இவற்றில் சில தடுக்கக் கூடிய காரணங்களாகவும், பல நிவர்த்திக் கப்படக் கூடியனவாகவும், மேலும் சில நிவர்த்திக்க இயலாதவைகளெனவும் உள்ளன எனக் கண்டறிந்துள்ளனர்.

இளம் வயதில் பெரிய அம்மை (Small Pox) நோய்க்கு ஆளானோர், பொன்னுக்குவீங்கி (Mumps) என்ற நோயினால் (Swelling of the Salivary glands due to virus) பாதிக்கப்பட்டோர், பால்வினை நோய்களில் (Veneral problems-gonorrhoea and Syphilis) ஆட்பட்டோர், காசநோய் (Tuberculosis) கண்டோர் இவர்களுக்கு மேற் கண்ட நோயினால் குழந்தை யின்மை ஏற்படுகிறது.

பெரிய அம்மை கண்டால் சிலரது தாது உற்பத்தி உறுப் புக்கள் பாதிக்கப்பட்டும் அவை வரும் வழித் தடங்கள் அடைக் கப்பட்டும் விடுகின்றன.

பொன்னுக்கு வீங்கி எனும் நோய் கழுத்துப் பகுதிஅல்லது கீழ்த் தாடைக்கு அருகில் வரு வதால் பெரிதும் எச்சில் சுரப் பிகளைத் தாக்கினாலும் இதற் கான நுண் அணுக்கள் (Virus) தாது உற்பத்தி உறுப்புக்களைத் தாக்கிச் சீரழித்துவிடுகின்றன.

பால்வினை நோய்கள்விதைப் பையைத தாக்கி (Testis) தாது



உற்பத்தியைச் சீரழியச் செய் கிறது. இவை குழந்தையின் மைக்குக் காரணமாக அமை கிறது. எனவே இந்த நோய் கண்டால் அவை இந்த உறுப் புக்களைத் தாக்கு முன்னரே சிகிச்சை செய்து தவிர்க்கப்பட வேண்டும்.

ஆண்களுக்குத் தாது உற் பத்திச் சுரப்பிகள் விதைப் பையில் (Testis) இருக்கின்றன; சில காரணங்களால் அவை கீழே இறங்காமல் வயிற்றி லேயே இருந்துவிடக் கூடும். (Undescended Testis) அவை வெப்ப மாறுதலால் தாது உற் பத்தியை இழந்து விடுகின்றன. 12 வயதுக்குள்விதைப் பையில் இந்த உறுப்பு இறங்கியிரா விட்டால், அறுவைச் சிகிச்சை மூலம் இவற்றை இறக்கிச் சரி செய்து விடலாம். விதைப் பை கீழே இறங்காமல் வயிற் லேயே இருப்பதும் குழந்தை யின்மைக்குக் காரணமாக அமைகிறது.

தனிப் பிரிவின் (Male Infertility clinic) ஆராய்ச்சித் திட் டம் எண்டோக்கிரினாலஜி (Endocrinology) துறை, பல்கலைக் கழக ஜெனிடிக்ஸ் (Genetics) துறை மற்றும், கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி பெதாலஜி (Pathalogy) துறை ஆகியவற் றின் ஒத்துழைப்புடன் கூட் டாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை இராயப் பேட்டை மருத்துவ மனையில் தான் தமிழகத்தில் முதன் முத லாக (Male Infertility clinic) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எளிமையான அறுவைச் சிகிச்சை மூலம் (Vasectomy) ஆண்களுக்கு நிரந்தரமாகக் குடும்பக் கட்டுப்பாட்டிற்கு வகை செய்யப்படுகிறது. இது உறுதியான பலனை அளிப்பது ஆகும். எதிர்பாராத விதமாக ஒரே குழந்தை இறந்துவிட்டால் அல்லது மனைவியின் அகால மரணத்தால் மறுமணம்செய்து கொள்ள நேரிட்டால், இந்தச் சிகிச்சை செய்து கொண்டவர் கள் அறுவைச் சிகிச்சை மூலம் (Recanalisation) சரி செய்து மேலும் குழந்தை பெறும் வாய்ப்பினை ஏற்படுத்தமுடியும்.



இப்படிப் பலர் இந்த சோதனைக் கூடத்தில் சிகிச்... பெற்று வெற்றிகண்டுள்ளன இந்த வாய்ப்பு இருப்பதா... யாவரும் துணிச்சலுட... அறுவைச் சிகிச்சைச் செய்... கொள்ளலாம்.

குழந்தை உள்ளோர் குடு... பக் கட்டுப்பாட்டுத் திட்... தைக் கடைப்பிடித்து அ... வோடு பெற்று வளமோ... வாழ வேண்டும். குழந்... யற்ற ஆண்கள் மனைவி... காரணம் என எண்ணும... தாங்களும் காரணமாக இரு... கலாம் என்று சிந்தித்து. மூ... நம்பிக்கைகளை விட்டு முன்... யாகச் சிகிச்சைக்குச் சென்று... குறை நீங்கி நிறைவு ெ... லாம்!

—ம. அ...

# சென்னை மாநகர் வளர்ச்சிக்குச் சீர்மிகு பணிகள்

உலக வங்கியின் கடனுதவி பெறத் தமிழ்நாடு நெடுஞ் சாலைத்துறை, போக்குவரத்துத் துறை, சென்னை மாநகராட்சி ஆகியவை ரூ. 13 கோடி செல வில் சென்னைச் சாலைப் போக்கு வரத்து நிருவாக வளர்ச்சித் திட்டம் ஒன்றைத் தயாரிக்கின் றன. தானியங்கிப் போக்கு வரத்து சுட்டுக்குறி விளக்குகள் நிறுவுதல், சாலைகள் அகலப் படுத்துதல், மேம்பாலங்கள், சுரங்கப் பாதைகள் போடுதல், கார், சைக்கிள் நிறுத்தும் நிலை யங்களை அமைத்து அண்ணா சாலை, பூவிருந்தவல்லி நெடுஞ் சாலைகளின் போக்குவரத்து வசதியை அதிகரிக்கும் அரும் பணிகளை உலகவங்கி பாராட்டி யுள்ளது.

அரசு நிறுவியுள்ள 2 பிரிவுகள் அரசு நெடுஞ்சாலைகளையும், மாநகராட்சிச் சாலைகளையும் சர்வே செய்கின்றன. நீண்ட தூரப் போக்குவரத்து நகரப் பாதைகள் மூலம் நடைபெறு மல் செய்து நகரில் போக்கு வரத்து நெரிசலை குறைப்பது பற்றியும் சர்வே செய்யப்படு கிறது. டிசம்பரில் உலக வங்கிக் குழு சென்னை வருகையில் மதிப்பீடு விவரங்கள் அதனி டம் அளிக்கப்படும். சென்னை மாநக நகர் வளர்ச்சிக்கான ராட்சி யோசனைகளில் தண் ணீர் வழங்குதல் விளக்கு வசதி களும் அடங்கியுள்ளன.

சென்னைப் பெருநகர் வளர்ச் சித்துறை 3 சுரங்கப் பாதை களும், 2 மேம்பாலங்களும் கட்ட திட்டமிட்டுள்ளது. ஆயிரம் விளக்கு மசூதி, கீழ்ப் பாக்கம் மருத்துவக் கல்லூரி, அண்ணாசாலை சாந்தி தியேட் டர் அருகே 3 சுரங்கப் பாதைகள் அமைக்கப்படும். இதற்கு மொத்தம் ரூ.. 31.72 இலட்சம் செலவாகும். இத் திட்டங்களுக்கு மாநில அரசு முன்னரே ஒப்புதல் அளித்துள் ளது.

நடந்து செல்வோர் மேம்பாலங்கள் தென் இரயில்வே நிருவாக அலுவ லகம், வால்டாக்ஸ் ரோடு அருகே கட்டப்படும். இத் திட்டங்கள்பற்றிப் பரிசிலிக்கப் படுகிறது.

திருச்சி பாலக்கரையில் சுரங்கப்பாதை கட்டும் வேலை விரைவில் துவங்கும்.

திருத்தணி இரயில்வே-சாலை சந்திப்பில் ரூ. 19.8 இலட்சம் செலவில் மேம்பாலம் கட்ட வும் அரசு அனுமதியளித்துள் ளது. மேட்டுப்பாளையத்தில் ரூ. 1 இலட்சம் செலவில் மேம்பாலம் ஒன்று கட்டப்பட விருக்கிறது.



# தமிழக மின் வாரியம் உருவாக்கி வரும் திட்டங்கள்! சாதனைகள்!



தொழிலமைச்சர் எஸ். ஜே. சாதிக்பாட்சா

அட்டை சொல்லும் செய்தி

மிழ் நாட்டிலுள்ள பொதுத் துறை நிறுவ
ளில் ஏறத்தாழ ஒரு இலட்சம் பேர் பணி
றுகின்ற மிகப் பெரிய நிறுவனம் மின்சார
யம்.

மின் வளர்ச்சியில், பல்லாண்டுகளாகவே ஒரு
ேடி நிறுவனமாக தமிழக மின் வாரியம்
ந்து வருகிறது. ஆகவே, நமது மாநிலத்தின்
ச்சி, மின்சார வாரியத்தின் வளர்ச்சியோடும்
களோடும் பின்னிப் பிணைந்துள்ளது.

தமிழ் நாட்டில் உற்பத்தியை விட மின்சாரத்
வ எப்பொழுதுமே அதிகமாகவே இருந்து வந்
ாது. தொழில் வளர்ச்சியிலும் வேளாண்மை
யேற்றங்களுக்கு மின் தொடர்பு அளிக்கப்
-திலும் மாநிலத்தின் மின் தேவை அதிக
வில் வளர்ந்துள்ளது. இன்று தமிழகத்தில
சார உற்பத்திக்கான நிறுவனத் திறன் 2,254
ாவாட்டுகளாகும். அனைத்து இந்தியாவின்
த்த நிறுவனத் திறனில், இது 12 சதவிகித
ம். அதேபோல், மாநிலத்தின் மின் உற்பத்தி
வு நாட்டின் மின் உற்பத்தி அளவில் 10 சத
மாகும். உணவு உற்பத்திக்குத் தொடர்ந்து
் முன்னுரிமையைத் தமிழக அரசு அளித்து
றது. தமிழ்நாட்டில் வேளாண்மைத்துறை
பயன்படுத்தப்படும் மின்சாரம் மொத்தம் 25
கிதத்திற்கு மேற்பட்டதாகும். அனைத்து
தியாவிலேயே தமிழ் நாட்டில் தான்
ாண்மைத் துறையில் பயன்படுத்தப்படும்
சாரத்தின் அளவு அதிகமானதாகும்.

கடந்த ஆண்டுகளில் மின் வளர்ச்சி தமிழ்
டில் சீராகவே இருந்து வந்துள்ளது. தமிழ்
டில், நிறுவனத் திறனளவிலும் உச்சத் தேவை
ம் மின் சக்தி உற்பத்தியிலும் இருமடங்கு உயர்
மின் வசதி அளிக்கப்பட்ட கிராமங்களின்
ணிக்கையிலும், மின் தொடர்பு அளிக்கப்பட்ட
விசையேற்றங்களின் எண்ணிக்கையிலும் மூன்று மடங்கு உயர்வும் ஏற்பட்டுள்ளது.

மின்சாரத்தைப் பயன்படுத்தும் முறை, துறை வாரியாகக் கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளது :—

| | | |
|---|---|---|
| 1. | வீட்டுப் பயன்களுக்கு ... ... | 5.9% |
| 2. | வணிகப் பயன்களுக்கு ... ... | 6.4% |
| 3 | பொதுவிளக்குகளுக்கு ... ... | 1.2% |
| 4. | தொழில்களுக்கு ... ... | 42.6% |
| 5. | வேளாண்மைக்கு ... ... | 29.1% |
| 6. | மற்றவை (இழுவை, உரியதாரர்களுக்கு மொத்தமாக வழங்கல், அரசுத் துறைப் பணிகள், திட்டப் பணிகள், மற்ற மாநிலங்களுக்கு விற்பனை போன்றவை) | 14.8% |
| | மொத்தம் ... ... .. | 100% |

நடப்பாண்டில், எண்ணூர் அனல் மின்நிலையத்தில் 110 மெகாவாட் பிரிவு ஒன்று செயல்படத் தொடங்கும். இது சார்ந்த பணிகளை விரைவுபடுத்தி முன்கூட்டியே முடிக்க, தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்துடன் 69 மில்லியன் யூனிட்டுகள் திறன் கொண்ட நடுவட்டம் திருப்புத் திட்டப் பணிகளும், 40 மில்லியன் யூனிட்கள் திறனைக் கொண்ட குட்டியாறு குழாய்த் திட்டப் பணிகளும் 1975—76-ல் முடிவடைந்துவிடும்.

தமிழ்நாடு மின் இணைப்பு மிகப் பெரிய அளவினதாகவும் தனித் தன்மை வாய்ந்ததாகவும் அமைந்துள்ளது. 1,224 மெகாவாட்டுகள் மொத்த நிறுவனத் திறன் கொண்ட 17 நீர்மின் நிலைகளில் 633 மெகாவாட்டுகள் திறன் கொண்ட 9 மின் நிலையங்கள் பாசனத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

ஒன்றன் பின் ஒன்றாக, இந்த மின் நிலையங்கள் பாசனக் காலம் முடிந்து மூடப்பட்டு விடுவதால், டிசம்பர் திங்களுக்குப் பின்னால் மின் உற்பத்திக்குப் பயன்படுவதில்லை. ஆனால், முக்கியமாக, வேளாண்மைக்காக மின் சுமை அதிகரிப்பின் காரணமாக, மின் இணைப்பின் உச்சத் தேவையானது, கோடைக் காலத்தில் தொடர்ந்து அதிகமாகிக் கொண்டே போகிறது. இதன் விளைவாக, சிக்கலானதொரு தொழில் நுட்பப் பிரச்சினையை மின் வாரியம் எப்பொழுதும் சமாளிக்க வேண்டி வருகிறது. குறிப்பாக பாசனமில்லாத காலங்களில், அதாவது பிப்ரவரித் திங்களிலிருந்து ஜூன் திங்கள் வரையில் மின் நிலைமையைச் சமாளிக்க மின்சார வாரியம் பெரும் முயற்சி மேற்கொள்ள வேண்டியுள்ளது.

கடந்த ஆண்டு மின்சார நிலைமை திருப்திகரமாக இல்லை. அவ்வாண்டில் 40 சதவிகிதத்திலிருந்து 75 சதவிகிதம் வரையில் மின்வெட்டு விதிக்க வேண்டி வந்தது. நெய்வேலியில் மின் உற்பத்தி வெகுவாகக் குறைந்துவிட்டதினாலும், எண்ணூரில் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டு விட்டபடியாலும், மின் இணைப்பிலிருந்து மின்சாரத்தைப் பெற வேண்டாமென்றும், ஏப்ரல் 75-ல் ஒரு சில வாரங்களுக்கு மின் இணைப்பைப் பயன்படுத்தாமல் அந்தக் காலத்தில் இயந்திரங்களை ஒழுங்குபடுத்தி, சீரான முறையில் பராமரிப்பு செய்து கொள்ளும்படியும் தொடர்ந்து இயக்கத்தில் இல்லாத தொழிற்சாலைகள் கேட்டுக் கொள்ளப்பட்டன. நெய்வேலியிலும் எண்ணூரிலும் நிலைமை சீரடையவே, சிறிய தொழில்களுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் படிப்படியாக எடுக்கப்பட்டன.

1975 ஜூன் மூன்றும் வாரத்தில், தென்மேற்கு பருவ மழைத் தொடங்கவே, 25-6-1975விருந்து மின்வெட்டை அறவே எடுத்து விட தமிழக அரசு முடிவு எடுத்தது. வேளாண்மைச் சார்ந்த இணைப்புகளுக்கு விதிக்கப்பட்டிருந்த எல்லாக் கட்டுப்பாடுகளும் 15—9—1975லிருந்து நீக்கப்பட்டன. புதிய மின் தொடர்புகள் அனுமதிக்கப்படுகின்றன. 1—12—74-க்கு முன் தொடர்பு செய்யப்பட்ட இணைப்புகளுக்குப் பகல் நேர மின்வழங்கலும் அனுமதிக்கப்படுகிறது.

அனல் மின் நிலையங்கள், நீர் மின் நிலையங்கள் ஆகியவற்றின் மின் உற்பத்தி நிலைமை மிகுந்த விழிப்புடன் கவனிக்கப்பட்டு வருகிறது. எந்தவிதச் சேதமும் ஏற்படாமலும் இயன்ற அளவுக்கு அண்டை மாநிலங்களுடன் உபரியாக உள்ள மின் சாரத்தைச் சேமித்து வைத்தும், நிலைமை சீரான முறையில் இருக்கும்படி பார்த்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

தென்மேற்குப் பருவ மழை சாதகமாகவும், நீர் சேமிப்பின் அளவு கணிசமாகவும் நன்றாகவும் உள்ளது. 1975-ஆம் ஆண்டு அக்டோபர் 20-ஆம் நாளில் மின்சார உற்பத்திக்குப் பயன்படும் நீரின் அளவு 2,061 மில்லியன் யூனிட்டுகள். 1974, 1973-ஆம் ஆண்டுகளில் இதே நாளில் நீரின் அளவு முறையே 1,751 மில்லியன் யூனிட்டுகளாகவும், 1,594 மில்லியன் யூனிட்டுகளாகவும் இருந்தன.

தமிழ் நாட்டில் மின்சார நெருக்கடி திடீரென்று ஏற்பட்ட ஒன்றல்ல. திட்டமிட்ட இலக்குப்படி, 1973—74-லேயே கல்பாக்கம் அணுமின் திட்டத்தின் 235 மெகாவாட் முதல் பிரிவு செயல் பட்டிருக்க வேண்டும். அதேபோல், இப்பொழுது நெய்வேலியில் தோண்டப்படும் நிலக்கரியின் அளவை ஆண்டொன்றுக்கு 3.5 மில்லியன் டன்களிலிருந்து 6.5 மில்லியன் டன்களுக்கு உயர்த்துவதற்கான மேம்பாட்டுப் பணிகள் முன்பேயே முடிந்திருக்க வேண்டியவையாகும். ஆனால், மேற்குறித்த இரு நிலைகளிலும் எதிர்பார்த்தபடி செயல்கள் நடைபெறவில்லை.

தமிழ்நாட்டில் ஒன்பது பெண்கள் கிராமத் தலைவர்களாக (கிராம முன்சீப்களாக) நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் மூன்று பேரும், திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டு பேரும், சேலம் மாவட்டத்தில் இரண்டு பேரும், கோவை மாவட்டத்தில் ஒருவரும், மதுரை மாவட்டத்தில் ஒருவருமாக மொத்தம் ஒன்பது பெண்கள் கிராம முன்சீப்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கல்பாக்கம் அணுமின் திட்டத்தின் பிரிவுகள் விரைவில் செயல்படவில்லை. நெய்வேலியில் விரிவாக்கப்பணிகள் இப்பொழுது தொடங்கியுள்ளன.

வெளியிலிருந்து கணிசமான அளவுக்கு மின்சாரத்தை வாங்குவதின் மூலம், தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னுடைய மின் தேவைகளை நிறைவு செய்து கொண்டு வருகிறது. தன்னுடைய தேவையில் 20 சதவிகிதத்திற்குக் குறையாமல், வெளியிலிருந்தே தமிழ்நாடு பெற்றாக வேண்டியுள்ளது. தமிழ்நாட்டின் மின்சாரத் தேவைகள் குறித்துத் திட்டங்கள் தீட்டப்படும்பொழுது, இந்த முக்கியமான அம்சத்தை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இந்த வகையில், எதிர்காலத்தைப் பற்றிக் கணிக்கும்பொழுது, மின் துறையில் எதையும் உறுதியாக நாம் முடிவு கட்டிச் சொல்லி விடுவதற்கு இல்லை.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஐந்தொகைக் கணக்குகள் சாதகமில்லாத நிதி நிலையைக் காட்டுகின்றன. எரிபொருள் உட்பட, எல்லாப் பொருள்களின் அதிக விலையேற்றம், ஊழியர்களுக்கு அளிக்கப்படும் ஊதியத் தொகை அதிகமாகிக் கொண்டே போவது, சிலநேர்வுகளில் மின் கட்டண விகிதங்கள் போதுமான அளவுக்கு இல்லாமை, திறனை முழுமையாகப் பயன்படுத்தாமல் குறைத்து பயன்படுத்துகின்ற தன்மை—ஆகியவையே இந்த நிதிநிலைக்கு முக்கியக் காரணங்களாகும்.

மின்கட்டண விகிதங்களைத் திருத்தி அமைத்தல், இயக்குதல், பராமரிப்புச் செலவுகளில் வீண் சேதம் இல்லாமல் சிக்கனத்தைக் கடைப்பிடித்தல், மின் உற்பத்தியை இயன்ற அளவுக்கு அதிகப்படுத்துதல், மின் நிலையங்களின் இயக்கத் திறனில் ஒட்டுமொத்தமாக மேம்பாடு காணல், கம்பி இழப்புகளைக் குறைத்தல், தரமான நிருவாகம் ஆகியவையும், வேலைச் சுமைகளையும் விஞ்ஞான ரீதியாகத் திருத்தி அமைத்தல் இந்த நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதின் மூலம், இந்த நிலையைப் போக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அண்டை மாநிலங்களிலிருந்தும், நெய்வேலி நிலக்கரிக் கழகத்திடமிருந்தும் வாங்கப்படும் மின்சாரத்தின் விலையானது கடந்த ஐந்தாண்டுகளாக உயர்ந்து கொண்டே வந்துள்ளது. 1—4—1975 லிருந்து கேரளத்திலிருந்து வாங்கும் மின்சாரத்தில் விலை யூனிட் ஒன்றுக்கு 8 காசுகளிலிருந்து 9.5 காசுகளாகவும், நெய்வேலி நிலக்கரிக் கழகத்திலிருந்து வாங்கும் மின்சாரத்தின் விலை 8.48 காசுகளிலிருந்து 9.36 காசுகளாகவும் உயர்ந்துவிட்டது. நெய்வேலி நிலக்கரிக் கழகத்தின் பணியாளர்களுக்கு கொடுக்கப்படும் ஊதிய உயர்வின் விளைவாக ஏற்படும் கூடுதல் செலவை ஏற்றுக்கொள்ளத் தமிழ்நாடு மின்சார வாரியம் ஒத்துக்கொண்டுள்ளது. அத்துடன், நிலக்கரிக்கான விலையும், கடல் மூலமாக நிலக்கரி கொண்டு வருவதற்கான செலவும் மிகவும் அதிகமாகி விட்டன. கடந்த ஓர் ஆண்டில் ரெயில் மூலமாக வரும் நிலக்கரியின் விலை 1 டன்னுக்கு ரூ. 102 ஆக இருந்தது—ரூ. 132 ஆக உயர்ந்துவிட்டது. அதேபோல், அந்தக் கால வரையறையில், கடல் மூலமாகக் கொண்டு வரப்படும் நிலக்கரியின் விலையும் ஒரு டன்னுக்கு ரூ. 186லிருந்து 263 ரூபாய்க்கு உயர்ந்துவிட்டது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிலக்கரித் தேவை இவ்வாண்டுக்கு 1.44 மில்லியன் டன்கள் ஆகும். அடுத்த ஆண்டிலிருந்து, 1978—79-ல் தூத்துக்குடி அனல் மின் நிலையம் முதல் பிரிவு செயல்படும் வரை, இந்தத் தேவை 1.58 மில்லியன் டன்களாக உயர்ந்து இருக்கும். அத்துடன், நெய்வேலியில் எண்ணெயினால் எரியவிடும் மாற்றத்தினால், மின்சாரத்தின் விலையும் ஏறிவிட்டது. எண்ணெயினால் எரியவிட்டாலும் மின்சாரத்தின் விலை யூனிட் ஒன்றுக்கு 30 காசுகள் என்றாகிவிட்டன.

1975—76-ஆம் ஆண்டுக்கு வெளியிலிருந்து வாங்கப்படும் மின்சாரத்துக்காகும் செலவு ரூ. 37.02 கோடி ஆகலாம். கடந்த ஆண்டில் 1974—75-ல் இந்தச் செலவு ரூ. 25.68 கோடிதான். 1974—75-ல் வாங்கப்பட்ட மின்சாரம் 2,298 மில்லியன் யூனிட்டுகள். இந்த ஆண்டிற்கு (1975—76) 2,350 மில்லியன் யூனிட்டுகள் என்றளவுக்கு இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மின் கட்டண விகிதங்கள் குறித்து பரிசீலனை செய்யப்பட்டு, 1974 அக்டோபரில் மின்கட்டண விகிதங்கள் திருத்தியமைக்கப்பட்டன. ஜனவரி 1975 முதல் கூடுதல் வரியும் 30லிருந்து 50 சதவிகிதத்திற்கும் உயர்த்தப்பட்டது. மார்ச் 1975-ல் சிமெண்ட், இராசயனப் பொருட்கள், அலுமினியத் தொழில் பிரிவுகள் ஆகியவற்றின் மீதான சிறப்புக் கட்டணங்களும் திருத்தப்பட்டன. 1975 ஆகஸ்ட் 30-ஆம் நாள் முதல், வேளாண்மைக்கான மின் கட்டணம் யூனிட்டுக்கு 16 காசு என்று உயர்த்தப்பட்டுள்ளது. இப்படியெல்லாம் செய்தும் கூட, 1975—76-ல் எதிர்பார்க்கப்படுகிற கூடுதல் வருவாயைக் கொண்டு, 1975—76-ல் தேய்மானச் செலவுகள் மற்றபடி வட்டி கட்டுகள் போன்ற செலவினங்களை முழுமையாகச் சமாளிக்க முடியாத நிலையில், நிதிப் பற்றாக்குறை இருக்கும்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலதனப் பணிகளுக்கான 1975—76-ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 39 கோடி. இதில் எப்பொழுதுமுள்ள நிதி வாயில்களான அதாவது வெளிச்சந்தை, ஆயுள் காப்புறுதிக் கழகம், கிராம மின்வசதிக் கழகம், மற்றும் இருப்புகள்போன்றவையிலிருந்து கிடைக்கக் கூடியவை ரூ. 40.62 கோடிதான். வங்கிகள், ஆயுள் காப்புறுதிக் கழகம், வெளிச் சந்தை போன்றவற்றிற்கு திருப்பிக் கொடுக்கப்பட வேண்டிய தொகை ரூ. 14 கோடியையும் சேர்த்து, மொத்தம் தேவைப்படுவது ரூ. 53 கோடியாகும். மூலதனப் பணிகளுக்கான ஆதாரங்களில் உள்ள 12.38 கோடி ரூபாய் இடைவெளியை நிரப்ப எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டத்தின் கீழ் வரும் மின் திட்டங்களுக்காக ஆன செலவு ரூ. 216 கோடி. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ. 326 கோடிதான். ஆகவே, மின் திட்டங்களைக் குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றி முடிக்க வேண்டுமெனில், 5-வது திட்டக் காலத்தில் மின்சாரத்துக்கு ஆண்டொன்றுக்கு ரூ.70-லிருந்து 80 கோடி என்றளவுக்குக் குறையாமல் இசைவளிக்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகை இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். ஐந்தாவது திட்டத்தில் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு மத்திய நிதிக் குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு நம்முடைய தேவையில் 50 சதவிகித அளவுக்குக் கூட இல்லை.

ஐந்தாவது திட்டத்தில் மிக அதிக அளவில் மின் உற்பத்தியை உள்ளடக்கியுள்ள திட்டமான தூத்துக்குடி அனல் மின் திட்டம் குறித்த உரையாடல்கள் புது டெல்லியில் 1975 ஆகஸ்டு திங்களில் நடைபெற்றன. 1975—76-ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடான ரூ. 10 கோடிக்குப்பதிலாக ரூ. 19 கோடி கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என மத்திய அரசுக்கு வலியுறுத்திக் கூறப்பட்டது. சில நிபந்தனைகளுக்குட்பட்டு, ரூ. 1 கோடி கூடுதல் ஒதுக்கீடு நிதியாக அளிக்க ஒப்புக்கொள்ளப்பட்டது. நம்முடைய மொத்தத் தேவையின் அளவோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இந்தத் தொகை எந்த வகையிலும் போதுமானது என்று சொல்ல முடியாது.

போதிய அளவிலும், தேவைப்படும் காலத்திலும் நிதி உதவி அளிப்பதன் மூலமும், மாநிலத்தின் முயற்சிகளுக்கு உதவியாக இருக்கும் வகையில் மத்திய அரசே தனியாக மின் திட்டங்களை ஏற்படுத்திச் செயல்படுத்துவதின் மூலமும், மத்திய அரசானது மாநில மின்சார வாரியத்துக்கு வெருவாகக் கைகொடுத்து உதவ வேண்டும்.

1975-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் சென்னை
யில் மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர் திரு.
பி. என். ஹக்சர் அவர்களுடன் நடத்தப் பெற்ற
பேச்சு வார்த்தைகளின் பொழுது கீழ்க்கண்டவை
குறித்து மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டி
யதன் அவசியம் மிகுதியாக வலியுறுத்தப்பட்டது:

(1) தமிழ் நாட்டில் பொதுவாக மின் திட்டங்களுக்கும், சிறப்பாக தூத்துக்குடி அனல் மின்திட்டத்திற்கும் போதிய நிதி வசதி.

(2) 50 மெகாவாட் கொண்ட மேலும் இரண்டு யூனிட்டுகள் நெய்வேலியில் எண்ணெயினால் எரியவிடுவதற்கு மாற்றுதல்.

(3) மாநிலத்தில் 50 மெகாவாட் கேஸ் டர்பைன்கள் ஆறு நிறுவுதல்.

(4) நெய்வேலியில் முதல் சுரங்க மேம்பாட்டுப் பணிகளை விரைவுபடுத்துதல்.

(5) நெய்வேலியில் 1,000 மெகாவாட் அனல் மின்நிலையத்துடன் கூடிய இரண்டாவது சுரங்கம் வெட்ட அனுமதி. திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரி வட்டத்தில் கூடன்குளத்தில் 1,000 மெகாவாட் திறனுடன் கூடிய இரண்டாவது அணு மின் நிலையம் அமைத்தல்.

(6) மாநில அரசினால் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள எல்லா நீர் மின் திட்டங்களுக்கும் அனுமதி.

சென்ற ஆண்டு நடைபெற்ற சட்ட மன்ற
விவாதத்தின்பொழுது, தமிழ் நாட்டில் மின் கழகம்
ஒன்றினை அரசு அமைக்க உள்ளது எனச் சொல்லப்
பட்டது. நெருக்கடியான நிதி நிலைமையின் காரண
மாக, இந்த மின் கழகம் அமைப்பது தள்ளிவைக்கப்
பட்டுள்ளது.

1975—76-ஆம் ஆண்டுக்கான முக்கிய வேலைத் திட்டங்கள் பற்றிய விவரங்கள் வருமாறு :



**மின் உற்பத்தித் திட்டங்கள்:**

1. தொடர்ந்து உருவாகி வரும் திட்டங்கள் :

(அ) எண்ணூரில் 5-வது பிரிவு (மூன்றாவது 110 மெகாவாட் பிரிவு) வேலைகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. விரைவில் இந்தப் பிரிவு செயல்படத் துவங்கும்.

(ஆ) குந்தா நீர்மின் திட்டத்தின் கீழ், நான்காவது நிலைப் பணிகளுக்கு கனடா நாடு மின் உற்பத்திக் கருவிகளை வழங்குகிறது. மின் உற்பத்திக் கருவியின் பாகங்கள் வந்து கொண்டிருக்கின்றன. மின்நிலையம் கட்டி முடிக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள 110 மெகாவாட் மொத்தத் திறனுடன் கூடிய இரண்டு பிரிவுகள் 1977—78-ஆம் ஆண்டில் செயல்படத்திட்டமிடப்பட்டுள்ளது.

(இ) பைக்காரா, மோயாறு மின் நிலையங்களில் ஆண்டுக்கு 69 மில்லியன் யூனிட்டுகள் கூடுதல் மின்சாரம் கிடைக்கச் செய்யக்கூடிய நடுவட்டம் நீர்த் திருப்புத் திட்டப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

(ஈ) கோதையாறு நீர்மின் திட்டத்தின் கீழ், குட்டியாறு குழாய்த் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கோதையாறு மின் நிலையங்கள் 1, 2-க்கு இதனால் கூடுதலாக 40 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம் கிடைக்கும். இவ்வாண்டில் (1975—76) இந்தத் திட்டப் பணிகளும் முடிவடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

**புதிய திட்டங்கள் :**

(அ) சுருளியாறு மின்நிலையத்திற்கான இயந்திரக் கருவிகள் ஆஸ்திரியா விநியோகஸ்தர்களால் தயாரிக்கப்பட்டு இக்கருவிகள் ஜனவரி 1977-ல் அனுப்பி வைக்கப்படும். கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அவை முடிக்கப்பட்டு 1977—78-ல் இயந்திரங்கள் நிறுவப்படும். 35 மெகாவாட் திறன் கொண்ட இந்த மின் திட்டம் 1978—79-ல் செயல்பட இலக்கு வகுக்கப்பட்டுள்ளது.

(ஆ) தூத்துக்குடி அனல் மின் திட்டத்திற்கான கட்டுமான வேலைகள் தொ[illegible]கப்பட்டுள்ளன. டர்போஜெனரேட்டர், பவர் [illegible]ட்ரான்ஸ்பார்மர் கொதிகலன், மற்றச் சார்பு[illegible] கருவிகள் வழங்க பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்திடம் ஆர்டர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 210 மெகாவாட் திறனுடன் கூடிய ஒரு மின் உற்பத்திப் பிரிவு 1978-79-ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கும்.

(இ) காடம்பாறை குழாய் நீரேற்றுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொன்றும் 100 மெகாவாட்டுகள் திறனுடன் கூடிய நான்கு பிரிவுகள் அமையும். இருந்தாலும் தொடக்க கட்ட வேலையாக இரண்டு பிரிவுகளை மட்டும் கட்டி முடிக்க இப்பொழுது முடிவு செய்துள்ளோம். இயந்திரப் பிரிவு ஒன்று இங்கிலாந்து நாட்டிலிருந்து பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்பட்டு நமக்கு வழங்கப்படும். மற்றொரு பிரிவு அவர்களாலேயே இங்கேயே தயாரிக்கப்படும்.

(ஈ) பாண்டியாறு புன்னப்புழா நீர் மின்திட்டத்தைப் பொறுத்த வரையில், அசல் திட்டத்தின் படியே செயல்படுவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. நிதி ஆதாரங்களைப் பொறுத்து மீண்டும் பணிகள் தொடங்கப்பெறும்.

(உ) சேர்வலாறு நீர் மின் திட்டத்தின் கீழ், அணைக்கட்டு அடித்தளம் தோண்டுதல், ஒன்றோடொன்று தொடர்புபடுத்தும் சுரங்க வாய்க்கால் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. போதிய நிதி வசதியின்மையால் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இத்திட்டம் செயல்படத் தொடங்கலாம்.

(ஊ) நெல்லித் துறை நீர்மின் திட்டத்திற்கான தொடக்கக் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த மின் திட்டமும் ஆறாவது திட்டக் காலத்தில் செயல்படத் தொடங்கலாம்.

எண்ணூரில் மின் உற்பத்தி சீர்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு செய்யப்பட்ட மின் உற்பத்திக்கு மேல் 17 சதவிகிதம் அதிகமாக 1974—75-ல் எண்ணூரில் மின் உற்பத்தி






செய்யப்பட்டுள்ளது. 1975—76-ல் மேலும் அதிகமாக உற்பத்தி செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எண்ணூரில் உள்ள பிரச்சினைகள் ஆய்வு செய்யப்பட்டு அப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ''340 மெகாவாட் உற்பத்திக் காணும் சிறப்பு விரைவு வேலைத் திட்டம்'' ஒன்று துவங்கப்பட்டுள்ளது. மாற்றங்கள் செய்யப்பட்டு பிறகு கருவிகளைத் திருப்திகரமாக இயங்க வைக்கும் பணிகளில் நெருங்கி ஒத்துழைக்க வேண்டுமென பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்தைக் கேட்டுக் கொண்டுள்ளோம். வடிவமைப்பில் மாற்றங்கள் அவர்களாலேயே செய்யப்பட்டு வருகின்றன. மின்நிலைய முதல் இரண்டு பிரிவுகளின் சிறப்புப் பராமரிப்புப் பணிகளும் ஒட்டு மொத்தமாகப் பழுது பார்த்தல் பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன. மூன்றாவது பிரிவுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அப்பணி முடிந்ததும் 4-வது பிரிவுப் பணிகள் எடுத்துக் கொள்ளப்படும். எல்லாப் பிரிவுகளையும் திருத்தி அமைத்து முழுமையாகப் பழுது பார்த்துச் சரி செய்யும் பணி 1975 டிசம்பர் திங்களிலிருந்து 1976 ஜனவரி திங்களுக்குள் முடிக்கப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த கோடைப் பருவத்தில் இந்நிலையத்திலிருந்து முழு அளவுக்கு மின்சார உற்பத்தியைக் காண்பதற்காக வேண்டி இந்தப் பணி மேற்கொள்ளப்படுகிறது.

எண்ணூர் சம்பந்தப்பட்ட வரையில் மகாலிங்கம் குழுவின் பரிந்துரைகளில் பெரும்பாலானவை செயல்படுத்தப்பட்டு விட்டன. அக்குழுவின் மற்றப் பரிந்துரைகளோடு, அனல் மின் நிலையத்தை இயக்குவது குறித்த பரிந்துரைகள் தொடர்பாக எண்ணூரில் நிலைய இயக்கம் சம்பந்தமான பிரச்சினைகள் ஆய்வு செய்யும் பணி டாட்டா கன்ஸல்டிங் இன்ஜினியர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் தங்கள் அறிக்கைகளை அளித்து விட்டனர். அவற்றை மின் வாரியம் பரிசீலித்து வருகிறது.

மின்சார நிலைமைகளைச் சீர்திருத்தவும், மேம்பாடு காணவும் சிரிய தொழில் நுட்ப ஆலோசனைப் பெறவும் வேண்டி, மின்சார வாரியத்தின்

முன்னாள் தலைவர் திரு. வி.பி. அப்பாதுரை அவர்கள் மின்சார வாரியத்தின் சிறப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். குறிப்பாக, எண்ணூரிலும் பேசின் பிரிட்ஜிலும், பொதுவாக, மற்ற நீர் மின் நிலையங்களிலும் இப்பொழுதுள்ள நிலைமைகளைச் சீர்படுத்தி மின் உற்பத்தியில் மேம்பாடு காண அவர் எடுத்துக் கூறியுள்ள கருத்துரைகளின் பேரில் வாரியமும், அரசும் தகுந்த கவனம் செலுத்தி வருகிறது. எண்ணூர் அனல் மின் நிலைய அளவில், தனிக் கவனம் செலுத்தி மேம்பாடு காண வேண்டும் என்ற நோக்கத்தில் அதற்கென்று தனியாக ஒரு தலைமைப் பொறியாளர் நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோல், தனியாகவே இரண்டு மேற்பார்வைப் பொறியாளர்கள் இப்பணியில் அவருக்கு உதவியாக இருப்பர்.

மாநிலங்களிடையேயான மின் திட்டங்கள் பற்றியும் தமிழ்நாடு அக்கறையுடன் முன்னோடியாகவே செயல்பட்டு வருகிறது. கேரளத்தில் உருவாக்கப்பட்டு வரும் இடிக்கி மின் திட்டப் பணிகளில் தமிழ்நாடும் சேர்ந்து தன்னுடைய பங்கினை ஆற்றுவது குறித்து, கேரள அரசுடனும், கேரள மின் வாரியத்துடனும் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன.

கர்நாடகத்தின் புதிய நீர் மின் திட்டப் பணிகளில் பங்குகொண்டு பணியாற்ற திட்டவட்டமான தன்னுடைய ஒப்புதலைத் தமிழ்நாடு, கர்நாடக மாநிலத்திற்கு தெரியப்படுத்தியுள்ளது. செலவும், பயன்களும் இரு மாநிலங்களுக்கிடையே சமமாகப் பங்கிட்டுக் கொள்ளலாம். இது குறித்து பயனுள்ள உடன்பாடு ஒன்று ஏற்படும் வகையில், மத்திய அரசு, இதைப் பரிசீலித்து தீவிரமாகக் கவனித்து ஆவன செய்யும் என எதிர்பார்க்கிறோம்.

ஸ்ரீலங்கா மின் இணைப்புடன், நம் மின் இணைப்பை ஒன்றோடொன்று தொடர்பு படுத்தும் அவசியம் குறித்துத் தமிழ்நாடு அரசு இந்திய அரசுக்கு எடுத்துக் கூறியுள்ளது மட்டுமின்றி, இது குறித்துத் தீவிரமாகக் கவனிக்கப்பட வேண்டும் என்றும் மத்திய அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளது. ஸ்ரீலங்காவுடன் தமிழ் நாட்டிற்குள்ள புவியியல், மற்றும் பண்பாட்டு உறவும் இந்த விஷயத்தில் தமிழ்நாட்டிற்குச் சாதகமாக கவனத்தில் கொள்ள

வேண்டியதொரு சிறப்பு அம்சமாகும். மின் இணைப்புகளை ஒன்ருெடொன்று தொடர்புபடுத்துவது குறித்து நடத்தப்பெறும் தொழில் நுட்ப ஆலோசனைகளில் தமிழ்நாடு பங்கேற்க வேண்டியது இயற்கையே. ஆகஸ்ட் 75-ல் டெல்லியிலும், சென்னையிலும் ஸ்ரீலங்கா மின்துறைப் பிரதிநிதிகள் குழுவுடன் நடைபெற்ற முதல் சுற்று முத்தரப்பு உரையாடல்களில் தமிழ்நாடு மின்சார வாரியம் கலந்து கொண்டது.

குவைத் நாட்டு எண்ணெய்—டாலர் திட்டத்தின்கீழ் வெளிநாட்டு உதவித் திட்டத்தின் தூத்துக்குடி அனல் மின் திட்டத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென தமிழ்நாடு மின்சார வாரியம் எடுத்துக் கூறியுள்ளது. கர்நாடகத்தின் காளி நதித் திட்டம், ஆந்திரப் பிரதேசத்தின் ஸ்ரீசைலத் திட்டம் ஆகியவற்றுடன் இந்தச் செயல் திட்டமும் இந்திய அரசின் கவனத்தில் உள்ளது.

மாநில அரசின் சார்பில், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் அமைக்கப்பட்டதும், நிலக்கரி கொண்டு வர அந்நிய நாட்டுக் கலங்களைத் தமிழ்நாடு சார்ந்திருந்த நிலை இப்பொழுது வெகுவாகக் குறைந்துவிட்டது. கிதர்பூர் கப்பல் துறையிலிருந்து நிலக்கரியைச் சென்னைக்குக் கொண்டுவர, 1974 செப்டம்பரில், தமிழ்நாடு மின்சார வாரியம், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்துடன் ஓர் உடன்பாடு செய்து கொண்டது. வங்காளம், பீகார் நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து நிலக்கரியைக் கொண்டுவரத் தற்சமயம் டிசம்பர் 74லிருந்து ''தமிழ்ப் பெரியார் ஈ.வே.ரா'', ''தமிழ் அண்ணு'' என்ற இரு கப்பல்களைப் பூம்புகார் போக்குவரத்துக் கழகம் நடத்தி வருகிறது.

கடல் மூலமாகக் கரி கொண்டு வர மத்திய அரசு அளிக்கும் நிதி உதவித் தொகை போதுமானதாக இல்லை.

ஆகவே, மேலும் மின் உற்பத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தை முன்னிட்டு, கடல் மூலமாக நிலக்கரி கொண்டு வருவதின் விளைவாக, மாநில மின்சார வாரியத்திற்கு ஏற்படும் கூடுதல் செலவுக்கு முழுமையான அளவில் நட்ட ஈடு தரும் ஒரு திட்டத்தினை மத்திய அரசு வகுக்க வேண்டும்.




மற்ற பணிகளோடு, ரூ. 101 கோடி மதிப்பீட்டுச் செலவில், மின் அனுப்புதல், மின் விநியோகம் குறித்து பெருந்திட்டம் ஒன்றினை, தமிழ்நாடு மின்சார வாரியம் உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது. இது வரையில் இந்த வகையில் ஏழு கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 4,300 கிலோ மீட்டர்கள் நீளக் கம்பிகள், 154 துணை நிலையங்களுக்கு இலக்கு வகுக்கப்பட்டு, 400 கிலோ மீட்டர் நீளத்திற்கு மேல் கம்பிகள் போடப்பட்டு, 27 துணை நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன. மேலும் முன்னேற்றம் காண்பது, போதிய நிதி கிடைப்பதைப் பொறுத்துள்ளது. ரூ. 138 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகளுக்கு கிராம மின்வசதிக் கழகம் அனுமதி வழங்கி, அவை செயல்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ளன.

31—3—1975 நிலவரப்படி, 69,775 கிலோ மீட்டர்கள் நீளமுள்ள கூடுதல் உயர் அழுத்த, உயர் அழுத்தக் கம்பிகளும், 2,02,645 கிலோ மீட்டர்கள் நீளமுள்ள குறைவு அழுத்தக் கம்பிகளையும் கொண்டுள்ள மிகப் பெரிய அளவிலான மின் அனுப்புதல், மின் விநியோக அமைப்பு முறையைத் தமிழ்நாடு மின்சார வாரியம் கொண்டு உள்ளது. இவற்றில் 1,038 கிலோ மீட்டர்கள் கூடுதல் உயர் அழுத்த, உயர் அழுத்தக் கம்பிகளும், 5,628 கிலோ மீட்டர்கள் நீளமுள்ள குறைவு அழுத்தக் கம்பிகளும் 1974—75-ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டவையாகும். 1974—75 ஆண்டு இறுதியில் தமிழக மின் அமைப்பில் 279 கூடுதல் உயர் அழுத்த, உயர் அழுத்தத் துணை நிலையங்கள் உள்ளன.

கேரளத்துடன் இணைக்கும் பம்பா—கயத்தாறு 230 கே.வி. இணைப்புக் கம்பி அமைக்கும் வேலை முடிவடைந்து விட்டது. இது, அந்த மாநிலத்துடன் செய்யப்படும் இரண்டாவது இணைப்பாகும். இடிக்கியையும்உடுமலைப்பேட்டையையும் தொடர்பு படுத்தும் மூன்ருவது இணைப்புக் கம்பி அமைக்கும் வேலை கருத்தில் கொள்ளப்பட்டு, அதற்கான ஆய்வு வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பொழுது அமைக்கப்பட்டு வரும் 230 கே.வி. எண்ணூர்—நெல்லூர் கம்பி அமைப்பு வேலை 1976—77-ல் முடிக்கப் பெறும்பொழுது, தமிழ் நாட்டுடன் ஆந்திரப் பிரதேசம் மறுபடியும் தொடர்பு படுத்தப் படும்.

**கிராம மின் வசதி :**

1974—75-ல் மேலும் 145 கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் மின்வசதி நீட்டிக்கப்பட்டுள்ளது. இதனுல் மின்வசதி அளிக்கப்பட்ட கிராமங்கள், சிற்றூர்களின் எண்ணிக்கை 61,217 ஆக உயர்ந்து உள்ளது. அதாவது தமிழ்நாட்டில் 74—75-ஆம் ஆண்டு முடிவில், மொத்தம் உள்ள கிராமங்களில் சிற்றூர்களில் 98 சதவிகித கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் மின்வசதி அளிக்கப்பட்டு விட்டது. 1974—75-ல், 25,709 வேளாண்மை விசையேற்றங்களுக்கும், 145 அரிசனக் குடியிருப்புகளுக்கும் மின் தொடர்பு அளிக்கப்பட்டுள்ளது. கிராமங்களுக்கு அருகிலுள்ள அரிசனக் குடியிருப்புகளுக்கு மின் வசதி அளிப்பதற்கு முதல் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது.

விசையேற்றங்களுக்கும் இதர இணைப்புகளுக்கும் மின்சாரம் வழங்க 10 திட்டங்களும், மின் திட்டங்களின் மேம்பாட்டுக்காக ஆறு திட்டங்களுக்கும் மொத்தம் ரூ. 216.822 இலட்சம் செலவில் கிராம மின் வசதிக் கழகம் 1974—75-ல் அனுமதி அளித்துள்ளது. இதற்காக ரூ. 204.765 இலட்சத்தினை அக்கழகம் கொடுத்துள்ளது.

கடந்த ஆண்டு அமைக்கப்பட்ட ஆராய்ச்சி—வளர்ச்சி இயக்குநர் அலுவலகம், மின் உற்பத்தி, மின் அனுப்புதல், மின் வழங்குதல் ஆகியவற்றில் ஆய்வுகள் நடத்திக்கொண்டு வருகிறது. ரிலே பாதுகாப்பு, பென்ஸ்டாக் குழாய்களில் ஏற்படும் அரிப்புகள் சம்பந்தமாக ஏற்படும் பிரச்சினைகளில் இவ்வாண்டில் பயன் தரத்தக்க நல்ல முடிவுகள் பெறப்பட்டுள்ளன. பதினெரு மின் திட்டங்கள் சம்பந்தமாக ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

கதிரவனின் வெப்பச் சக்தியைப் பயன்படுத்தி மின்சாரம் உருவாக்குவது சம்பந்தமான ஆராய்ச்சிப் பணியில் மத்திய விசை ஆராய்ச்சி நிறுவனமும் தமிழ்நாடு மின்சார வாரியமும் சேர்ந்து பணியாற்ற கருத்து உள்ளது.

**தொழிலாளர்களின் நலன் :**

(1) ஈட்டிய விடுப்பினை உயர்ந்த பட்சமாக 180 நாட்களுக்குச் சேர்த்து வைத்துக் கொள்ளலாமென்றும், பணிக்காலம் முழுவதிலும் மருத்துவச் சான்றிதழின் பேரில் எடுக்கப்படும் விடுப்புக்கு, முன்பு இருந்த அரை சம்பளம் என்பதற்குப் பதிலாக, முழுச் சம்பளம் பெறுகின்ற வகையிலும் ஊழியர்களுக்கான தமிழ்நாடு மின்சார வாரிய விடுப்பு ஒழுங்கு முறை விதிகளும் நிலை ஆணைகளும் திருத்தப்பட்டுள்ளன.

(2) தங்களுடைய குடும்பத்தினை நிராதரவாக விட்டுவிட்டு, பணியிலிருக்கும்பொழுதே வாரிய ஊழியர் இறந்துபோய்விட்டால், அன்ருருடைய வாரிசுகள், அவருடைய தகுதிகள், மற்ற தன்மைகளுக்கேற்ப, தமிழ்நாடு மின்சார வாரியத்தில் வேலை வாய்ப்பு ஏற்படும்பொழுது, வாரியத்தினுல் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு திட்டத்தின்கீழ், தகுந்த பரிவுடன் கவனிக்கப்படுவார்கள்.

3. இளநிலை உதவியாளர்கள், காசாளர்கள் பதவி இடங்களுக்கு நேரடியாக ஆட்கள் எடுப்பது, வாரியத்தின் பணியில் முன்பே இருந்து வருபவர்களை அந்தப் பதவி இடங்களில் எடுத்துக் கொள்வதற்காக வேண்டி, தற்பொழுது நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது.

4. பணியில் இருக்கும்பொழுது ஊழியர் ஒருவர் அகால மரணம் அடைந்துவிட்டால் அவருடைய குடும்பத்தினருக்கு மொத்தமாக ரூபாய் பத்தாயிரம் கொடுக்கப்படும் என்றுள்ள குடும்பப் பாதுகாப்புத் திட்டம் மின்சார வாரியத்தின் எல்லா முறையானப் பணியாளர்களுக்கும் கொண்டு வரப் பட்டுள்ளது.

5. நாட்கூலி வேலையாட்களை முறையானப் பணிகளில் சேர்த்துக் கொள்வதை படிப்படியாக மின்வாரியம் செய்து வருகிறது. 31—12—74-ல் நான்காண்டுக் காலம் பணி புரிந்துள்ள நாட்கூலி வேலையாட்களை முறையானப் பணிகளில் சேர்த்துக் கொள்கின்ற மூன்ருவது கட்டப் பணி மேற்கொள் ளப்பட்டுள்ளது. இதனுல் 4,500 வேலையாட்கள் பயனடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

6. ஊதியத் திருத்தம் குறித்த முந்தைய உடன்பாடு 30—11—1974-ல் முடிவடைந்து விட்டது. புதிய உடன்பாடு காண, சம்பந்தப்பட்ட சங்கங்களுடன் பேச்சு வார்த்தைகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

7. தொழிலாளர்களுக்கு மன நிறைவு இருக்க வேண்டும்; செய்கின்ற பணிகளில் அவர்களுக்குத் திருப்தியும் இருக்க வேண்டும் என்ற கருத்தில், அண்மையில், மூன்று தினங்களுக்கு, தொழிலாளர் பிரதிநிதிகள், பொறியியல் சங்கங்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தப் பெற்றன. அவர்கள் தெரிவித்த பல்வேறு குறைகளும் முறையீடுகளும் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. அவர்களுடைய கோரிக்கைகள் இயன்ற அளவுக்கு வாரியத்தினுல் ஏற்றுக் கொள்ளப்படும்.

8. மாநிலத்தில் மின் திட்டங்களிடையே விளையாட்டுப் போட்டிகள் நடத்தவும், அகில இந்திய விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு மின்சார வாரிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழ் நாடு மின்சார வாரிய விளையாட்டுக் குழுவினர் கலந்து கொள்ளவும் ரூபாய் நாற்பதாயிரத்துக்கு

நடுவட்டம் நிலவறை வழி



வாரியம் அனுமதி வழங்கியுள்ளது. வாரியத்தின் கீழ் உள்ள பல்வேறு விளையாட்டு மற்றும் மனமகிழ் மன்றங்களுக்கு, அவைகளுடைய தேவைகளை ஒட்டி, தொடர் மானியங்களுக்கும் தொடரா மானியங்களுக்கும் அனுமதி வழங்கப்படுகிறது.

பிப்ரவரி 1975-ல் இரண்டாவது அனைத்து இந்திய மின் வாரிய கூடைப் பந்தாட்ட விளையாட்டுப் போட்டியைத் தமிழ்நாடு மின் வாரிய விளையாட்டு ஆளுமைக் குழு ஏற்று நடத்தியது. பாட்டியாலாவில் நடைபெற்ற முதலாவது அகில இந்திய மின்வாரிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு மின்சார வாரிய விளையாட்டுக் குழு கலந்து கொண்டது.

1975 ஆகஸ்ட் திங்களில், புது டெல்லியில், மின்சார வாரியத் தலைவர்கள், ஊழியர்களின் பிரதிநிதிகள், மத்திய அரசின் விசை மின்சார அமைச்சர், தொழிலாளர் நல அமைச்சர் ஆகியோர் கலந்து கொண்ட முத்தரப்புக் கூட்டமானது, நாட்டில் உள்ள மின் அமைப்புகளை இயக்குவதில் தொழிலாளர்களின் பிரதிநிதிகளையும் ஈடுபடுத்துவான் வேண்டி, ஒரு பத்து அம்ச வழிகாட்டுதல்களை உருவாக்கி உள்ளது. இவை வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

மின்சாரம் பயன்படுத்துவோர் மனத்தில் ஏதாவது அச்ச உணர்வு இருக்குமேயானால், அதைப் போக்க நான் பெரிதும் விரும்புகிறேன். தொடர்ந்து மின்பற்றுக் குறையை நாம் அனுபவித்தோம். இருந்தாலும், அது ஒரு காலகட்டத்தில் நிகழ்ந்து, பின்பு மறைந்து விடுகிற ஒன்றேயாகும். தங்களுடைய பண்ணைகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் போதிய மின்சாரம் கிடைக்குமோ என்று தொழில்கள் தொடங்குவோர் யாரும் எந்தவித மனக்கவலையும் அடையத் தேவையில்லை. மின்சார நிலையைச் சீர்திருத்தி மின் உற்பத்தியில் மேம்பாடு காண, அரசும் வாரியமும் எல்லா இயன்ற நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டு வருகின்றன. மின்சாரம் எல்லா வகைகளிலும் பயன்படுவதாலும் மின்சாரத்தைப் பயன்படுத்துவதிலும் கையாள்வதிலும் நுணுக்கமான மாற்றங்கள் கடந்த ஆண்டுகளில் ஏற்பட்டுள்ளதாலும், பொதுவாக மின்சாரத்தைப் பயன்படுத்துவதில் எந்தவிதச் சிக்கனத்தையும் கடைப்பிடிக்காமல் தாராளமாகவே நடந்து கொள்ள நாம் பழக்கப்பட்டு விட்டோம். நம்முடைய இந்தப் பழக்கம்—போக்கு குறித்து மறு பரிசீலனை செய்து அதை மாற்றிக் கொள்ள வேண்டிய கட்டத்தில் நாம் இப்பொழுது உள்ளோம். உலகம் முழுவதிலுமே மின்சாரத்தைப் பயன்படுத்தும் முறையின் முக்கியத்துவமானது மக்களின் ஆதரவினையும் கவனத்தையும் ஈர்த்து வருகிறது. ஆகவே, இன்றைய உலகில், மின்சாரத்தின் முக்கியத்துவத்தை அனைவரும் உணர்ந்து, நிலவுகின்ற நடைமுறைகளுக்கேற்ப, சமுதாய ரீதியாக, தங்கள் மின் தேவைகளை வகுத்துக் கொண்டு செயல்படுவது சமூகத்திற்கு நாம் செய்கின்ற சிறந்த கடமைகளில் ஒன்றாகும்.

[தமிழ்நாடு மின்வாரியத்தின் 1975—76-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை குறித்தும் 1974—75-ஆம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கை குறித்தும் தமிழ்நாட்டுச் சட்ட மன்ற மேலவையில் விவாதத்தைத் தொடங்கிவைத்து தொழில் - மின் துறை அமைச்சர் திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து).

இலக்கியங்களுக்கு
இறவாப் புகழ் தருவது...

காகிதம்

ஹோமர் முதல் ஹெமிங்வே வரை,
காளிதாசர் முதல் காஃப்காவரை,
ஆதிசங்கரர் தொட்டு அரிஸ்டாடில் வரை,
திருவள்ளுவர் தொட்டு தோரூவரை......

தரமான காகிதம், சிந்தனையாளர்களின் எண்ணங்களும், கருத்துக்களும் காலத்தால் அழிவுறு வண்ணம் காத்து எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்கி உதவுகிறது.

**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்**

பள்ளிப்பாளையம்,
சேலம் மாவட்டம்
தமிழ்நாடு

SPB

The Watermark
of Quality

எழுத, அச்சிட, உறையிட
உன்னதமான காகிதங்கள்



# கேளுங்கள் கொடுக்கப்படும்

-ஆர்.எம்.

**வினா:** தமிழ்நாடு அரசு குடியிருப்பு மனைப்பட்டா வழங்குவதில் அரிசன மக்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளதாகச் சிலர் சொல்கிறார்கள். அது உண்மையா? உண்மையெனில் புள்ளி விவரத்துடன் விளக்கம் தருக.

—வி. முத்துவேல்,
ராயபுரம் நெடுஞ்சாலை,
சென்னை.

**விடை:** இன்றையத் தமிழ்நாடு அரசு குடியிருப்பு மனைப் பட்டா வழங்குவதில் அரிசன மக்களுக்கே அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது என்பது உண்மை. இதற்கான ஆதாரம் இதோ!

கடந்த எட்டு ஆண்டுகளில் குடியிருப்பு மனைப்பட்டா பெற்றவர்களின் எண்ணிக்கை —5,03,697.

அவர்களில் அரிசன மக்களின் எண்ணிக்கை—2,36,000.

அரிசன மக்களுக்காக மனைப் பட்டா வழங்க, நிலத்தை ஆர்ஜிதம் செய்து மனைகளாகப் பிரித்து வழங்குவதற்காகச் செலவிடப்பட்டுள்ள தொகை ரூ. 4.25 கோடி.

இதுமட்டும்தான் ஆதாரம் என்று எண்ணி விடாதீர்கள்! இன்னும் இருக்கிறது!

பரம்பரை பரம்பரையாகப் பண்ணையார்களின் வயலின் ஒரு பகுதியில் குடிசைப் போட்டு வாழ்ந்து கொண்டு பண்ணை வேலைகளைச் செய்து வந்த வேளாண்மைத் தொழிலாளர்களின் நன்மையைக் கருதி, இன்றையத் தமிழ்நாடு அரசு 1971-ஆம் ஆண்டில் தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் சட்டத்தைக் கொண்டு வந்தது!

1971-ஆம் ஆண்டின் தமிழ்நாடு அரசு குடியிருப்பு அனுபோகதாரர்கள் சட்டத்தின் கீழ் இதுவரை குடியிருப்பு மனை பெற்றவர்களின் எண்ணிக்கை —1,75,077.

அவர்களில் அரிசன மக்களின் எண்ணிக்கை—1,02,404

எனவே, மேற்கூறிய புள்ளி விவரங்களிலிருந்து இன்றையத் தமிழ்நாடு அரசு, குடியிருப்பு மனைப்பட்டா வழங்குவதில் அரிசன மக்களுக்கே அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது என்பது உள்ளங்கை நெல்லிக் கனி போல் தெளிவாகிறது.

**வினா:** நான் அரிசன வகுப்பி
லிருந்து கிறித்துவ மதத்திற்கு
மாறிய குடும்பத்தைச் சார்ந்த
வன். பள்ளி இறுதித் தேர்வில்
வெற்றி பெற்றபின் வேலை
தேடி அலைந்து கொண்டிருக்
கின்றேன். அண்மையில்
மாண்புமிகு தமிழக முதல்வர்
டாக்டர் கலைஞர் அவர்கள்,
அரிசனங்களுக்கு அளிக்கப்
படும் சலுகைகள் அனைத்தும்
இனிமேல் அரிசன கிறிஸ்தவர்
களுக்கும் அளிக்கப்படும் என்று
அறிவித்தது அறிந்து மகிழ்ச்சி
அடைந்தேன். ஆனால் என்
மகிழ்ச்சி நிலைக்கவில்லை. காரணம்
ணம் நான் ஒரு வேலைக்கு மனு
செய்வதற்காகத் தாசில்தார்
அவர்களை அணுகி மாண்புமிகு
தமிழக முதல்வர் அவர்களின்
அறிவிப்பையும் கூறி, 'தாழ்த்
தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த
வன்' என்று எனக்குச் சான்றி
தழ் அளிக்கும்படி வேண்டி
னேன். சட்டப்படி அவ்வாறு
சான்றிதழ் தரமுடியாதென்று
அவர் மறுத்து விட்டார்.
அதனால் அவரிடம் சண்டை
போட்டுவிட்டு வந்துவிட்டேன்.
இது தவறா? தவறு எனில்
அரிசன கிறிஸ்தவர்களுக்கு
என்னென்ன சலுகைகள்
அளிக்கப்படும் என்பதை ஆதா
ரத்துடன் விளக்கும்படி
வேண்டுகின்றேன்.

—எஸ். விக்டர்,
அயோத்தியா குப்பம்,
சென்னை-5.

**விடை:** நீங்கள் வட்டாட்சியாளரிடம் சண்டை போட்டது தவறுதான்!

மாண்புமிகு தமிழகமுதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ''பொருளாதார முன்னேற்ற அடிப்படையில், தற்போது தமிழ்நாடு அரசால் அரிசனங்களுக்கு கொடுக்கப்பட்டுவரும் எல்லா சலுகைகளும் இனிமேல் அரிசன கிறிஸ்தவர்களுக்கும் வழங்கப்படும்'' என்றுதான் அறிவித்தார். ஆனால் தாங்கள் தமிழக முதல்வர் அவர்களின் அறிவிப்பில் உள்ள ''பொருளாதார முன்னேற்ற அடிப்படையில்'' என்ற பகுதியைச் சரியாகக் கவனிக்காமல், வேலை வாய்ப்பிலும்அரிசனங்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள், அரிசன கிறிஸ்தவர்களுக்கும் கிடைக்கும் என்று நினைத்து விட்டீர்கள். அதனால்தான் வட்டாட்சியாளரிடம் 'தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன்' என்று சான்றிதழ் கேட்டு, அது கிடைக்காததால் சண்டை போட்டுக் கொண்டு வந்துள்ளீர்கள். எனவே, கீழ்க்கண்ட விளக்கத்தைத் தயவு செய்து கவனித்துப் படிக்கும்படி வேண்டுகின்றேன்.

அரிசன வகுப்பில் இருந்து, கிறிஸ்துவ மதத்தை தழுவிய அரிசன கிறிஸ்தவர்கள் (Scheduled Caste converts to Christianity) மதம் மாறிய பிறகும், சமுதாயத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகளின் காரணமாக தாழ்த்தப்பட்டவர்களைப் போலவே வாழ்வில் பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். எனவே

அரிசன கிறிஸ்தவர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளை அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையைப் பல்வேறு கிறிஸ்துவ சங்கங்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் அளித்தன. ஒரு இனத்திற்குச் சலுகை வழங்குவதில் அந்த இனத்தின் மதத்தைக் கவனிக்காமல், அந்த இனத்தின் சமுதாய இயலாமையை (Social disabilities) அடிப்படையாகக்கொண்டே சலுகை வழங்க வேண்டும் என்ற பரந்த மனப்பான்மையுடன் தான், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அரிசனக் கிறிஸ்தவர்களும் பொருளாதார முன்னேற்றம் அடைவதற்காக, அரிசனங்களுக்கு அளிக்கப்படும் எல்லாச் சலுகைகளையும் - பொருளாதார முன்னேற்ற அடிப்படையில்- அரிசனக் கிறிஸ்துவர்களுக்கும் வழங்கப்படும் என்று அறிவித்தார். அவருடைய அறிவிப்பு, சமுதாய நலத்துறையின் 16-9-1975 தேதிய அரசு ஆணை எண். 733 ஆக மலர்ந்தது! அந்த ஆணையின்படி, தற்பொழுது அரிசனங்களுக்கு அளிக்கப்படுவதுபோல், பின்கண்ட சலுகைகள் அரிசனக் கிறிஸ்துவர்களுக்கும் வழங்கப்படும்.

(1) உழவுமாடுகள் வாங்கவும், பாசனக்கிணறுகள் வெட்டவும் மானியம் வழங்கப்படும்.

(2) 27 வகையான சிறு தொழில்களுக்கு வட்டியில்லாக் கடன் வழங்கப்படும்.

(3) இலவசமாகக் கைத்தொழில் கருவிகள் வழங்கப்படும்.

(4) அரிசன வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடு கட்டி இலவசமாக வழங்கப்படும்.

(5) நிலப்பட்டா, வீட்டு மனைப்பட்டா வழங்கப்படும்.

(6) அரிசனங்களுக்கு உத்தியோகங்களுக்கான சிறப்புப் பயிற்சி பள்ளி அமைப்பதில், அரிசனக் கிறிஸ்துவர்களுக்கும் இடமளிக்கப்படும்.

இதுபோன்று அரிசன மக்களுக்கு வழங்கப்படும் எல்லா பொருளாதார முன்னேற்றச் சலுகைகளும், அரிசனக் கிறிஸ்துவர்களுக்கும் வழங்கப்படும்.

ஆனால் கல்வி நிலையங்களில் சேருவதிலும், வேலைவாய்ப்புப் பெறுவதிலும் அரிசனக் கிறிஸ்துவர்கள் பிற்பட்ட வகுப்பினர்களுக்குள்ள சலுகைகளைத்தான் பெற முடியும்!

ஏனெனில், இந்திய அரசின் ஆணைக்கு ஏற்ப கல்வி நிலையங்களில் சேருவதற்கும், வேலைவாய்ப்புப் பெறுவதற்கும் தற்பொழுது அரிசனங்களுக்கு அளிக்கப்படும் 18 சத ஒதுக்கீடு, அரிசன மக்களுக்கு மட்டுமே உரியதாகும். இச்சலுகை அரிசனக் கிறிஸ்துவர்களுக்குக் கிடைக்காது. எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்




அரிசனக் கிறிஸ்துவர்கள் கல்வி நிலையங்களில் இடம் பெறுவதற்கும், வேலைவாய்ப்புப் பெறுவதற்கும் ஏற்ற வகையில் பிற்பட்ட வகுப்பினருக்குள்ள 31 சத ஒதுக்கீட்டின் கீழ்-அரிசனக் கிறிஸ்துவர்களில் ''முதல் தலைமுறைக்கு மட்டும்' என்றிருந்த நிபந்தனையை நீக்கி எல்லாத் தலைமுறையினருக்கும் சலுகை அளிக்க ஆணைப்பிறப்பித்துள்ளார்.

சமூக நலத்துறையின் 16-9-1975 தேதிய அரசு ஆணை எண் 733-ன் படி, கல்வி நிலையங்களில் சேருவதிலும், வேலைவாய்ப்புப் பெறுவதிலும் அரிசனக் கிறிஸ்துவர்கள் பிற்பட்ட வகுப்பினர்களுக்கு என ஒதுக்கப்பட்டுள்ள 31 சதச் சலுகையின் கீழ் தான் பயன் பெற முடியுமே தவிர,! அரிசனங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 18 சதச் சலுகையின் கீழ் பயன் பெற முடியாது. ஆகவே தங்களுக்கு வட்டாட்சியாளர், '' Scheduled Caste Converts to Christianity '' என்று தான் சான்றிதழ் வழங்க முடியுமே தவிர, ''தாழ்த்தப்பட்ட வகுப்பினர்'' என்று சான்றிதழ் தர இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் மீண்டும் வட்டாட்சியாளரைச் சந்தித்து '' Scheduled Caste Converts to Christianity '' என்றே சான்றிதழ் பெற்று வேலைக்கு மனு அனுப்புதல் நல்லது.

**வினா:** கோவை ஜில்லா பெரியநாயக்கன் பாளையத்தில் இருக்கும் ஆர். சந்திரா எழுதும் விண்ணப்பம் யாதெனில் என் கணவர் ராமசாமி என்பவர் கோவையில் சவரத் தொழில் நடத்தி வந்தார். அவர் நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டார். எனக்கு ஒரு மகள் இருக்கிறாள். அவள் பெரியநாயக்கன் பாளையத்தில் உள்ள டி.ஏ.டி. கலா நிலையத்தில் 8-ஆம் வகுப்பு படித்து வருகிறாள். நான் கூலி வேலை செய்து மகளை படிக்க வைத்து வருகிறேன். இந்த நிலையில் குடும்பத்தை நடத்திச் செல்வது மிகக்கஷ்டமாயிருக்கிறது. எனக்குத் தையல் வேலையும் தெரியும். ஆகவே, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞரால் துவக்கப்பட்டிருக்கும் திட்டத்தின் மூலம் எனக்கு ஒருதையல் இயந்திரம் அளித்தால் அதன் மூலம் என் வருவாயைப் பெருக்கி வாழ்வைச் சிறந்த முறையில் நடத்திச் செல்ல உதவியாய் இருக்கும். ஆகவே, என் கஷ்டத்தினை தீர்க்க உதவி புரியுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

—ஆர். சந்திரா,
கதவிலக்க எண். 687
பெரியநாயக்கன்
பாளையம்,
கோவை மாவட்டம்.

**விடை:** தங்களுக்கு வழிவகைகளைத்தான் கூறமுடியுமே தவிர, நேரடியாக உதவி செய்ய முடியாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் துவக்கப்பட்டுள்ள ஆதரவற்றக் கைம்பெண்களுக்கு இலவசமாகத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின்கீழ், தாங்களும் ஒரு தையல் இயந்திரம் பெற்றுப் பயனடைவதற்கு, தாங்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு மனு அனுப்ப வேண்டும்.

மாவட்ட மகளிர் நல
அலுவலர்,
மாவட்ட ஆட்சித் தலைவர்
அலுவலகம்,
கோயம்புத்தூர்.

மனுவின் நகல் ஒன்றை, கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும் அனுப்பி வைத்தல் சிறந்தது.

தங்கள் மனுவை விசாரணை செய்து, தாங்கள் மனுவில் கூறியுள்ளது உண்மையாக இருக்குமானால், பிறகுதான் தங்களுக்குத் தையல் இயந்திரம் வழங்க ஆவன செய்வார்கள். எனவே, மேற் கூறிய வழியில் முயற்சி செய்யுங்கள்.

**வினா:** நான் சிறிய அளவில் கோழிகள் வளர்த்து வருகின்றேன். 'தமிழரசு' இதழ்களை விடாமல் படித்தும் வருகின்றேன். 16-4-1975 தேதிய ''தமிழரசு'' இதழில் பிளாக் மைனு கோழிகளின் போட்டோ போடப்பட்டுள்ளது. அவ்வினக் கோழிகள் எங்கு கிடைக்கின்றன என்ற விவரம் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

—சா. இராசாங்கம்,
62, ஏ. ஆர். ஆர். ரோடு,
கும்பகோணம்.

**விடை:** 16-4-75 தேதிய 'தமிழரசு' இதழின் அட்டைப் படத்தில் காணப்படுவது ''பிளாக் மைனார்க்கா'' என்ற கோழி ரகம் அல்ல! ''ஆஸ்ட்ரலார்ப்'' ( Austrolorps ) என்ற இனக் கோழிகளின் படம் அட்டையில் காணப்படுகிறது. ''பிளாக் மைனார்க்கா'' இனம் நம் நாட்டில் பிரபலமாகவில்லை. ஆனால் ''ஆஸ்ட்ரலார்ப்'' ரகம் தற்பொழுது அதிக முட்டையிடும் ரகங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இவ்வினப் பெட்டைக் குஞ்சுகளைப் பின்கண்ட முகவரியில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.



கண்காணிப்பாளர்,
அரசினர் கோழிப் பண்ணை,
காட்டுப்பாக்கம்,
காட்டாங்கொளத்தூர்
(அஞ்சல்),
செங்கற்பட்டு மாவட்டம்.

**வினா:** நான் தற்பொழுது பயிர் செய்துள்ள ஐ. ஆர். 20 மார்கழி மாதம் இரண்டாம் வாரத்தில் அறுவடைக்கு வரும் அதன்பிறகு (மழை இல்லாது போனாலும் இறைவைப் பாசனம் செய்ய தண்ணீர் வசதியுண்டு) என்னென்ன உயர் விளைச்சல் நெல் ரகங்களை அக்குளிர் காலத்தில் பயிரிடலாம்? அச்சாகுபடி முறைக் குறிப்புகளையும் கூறவேண்டுகின்றேன்.

— இராம. முத்தழகு,
செய்களத்தூர் (அஞ்சல்),
(வழி) மானாமதுரை,
இராமநாதபுரம்
மாவட்டம்.

**விடை:** மார்கழி மாதக் கடைசியில் அல்லது தை மாத முதலில் அதாவது ஜனவரி மாதத்தில் 'ஐ. ஆர். 8', 'ஐ. ஆர். 20', 'ஆடுதுறை-31', 'கண்ணகி', 'பவானி', 'வைகை' 'அன்னபூரணி' ஆகிய உயர் விளைச்சல் ரகங்களை நாற்று விட்டு நட்டால் நல்ல மகசூல் பெற முடியும். மார்கழி, தை மாதங்களில் உள்ள குளிர் இந்த ரகங்களைப் பாதிக்காது; பயமின்றிப் பயிரிடலாம்! இதன் சாகுபடி முறைகள் அனைத்தும் 16-1-1975 தேதிய ''தமிழரசு'' இதழில் வெளியிடப்பட்டுள்ளது. தயவு செய்து அவ்விதழைப் பாருங்கள். அல்லது வருகிற டிசம்பர் ஜனவரி மாதத் ''தமிழரசு'' இதழ்களைப் படிக்கத் தவறாதீர்கள்.

**வினா:** 1-3-1975 தேதிய 'தமிழரசு' இதழில் 40-ஆம் பக்கத்தில் கோவை மாவட்ட நண்பர் கேட்ட கேள்விக்கு நடவு செய்த 15-வது, 45-வது நாட்களில் வயலில் உள்ள தண்ணீரை வடித்துவிட்டு குருணை மருந்துகளைத் தூவிய பிறகு 2 அங்குல உயரத்திற்குத் தண்ணீரைத் தேக்கி, 3 நாட்கள் வரைத் தண்ணீரை வடிக்காமல் இருக்க வேண்டும் என்று கூறியுள்ளீர்கள்.

சில இடங்களில் வயல் ஒன்று போலச் சமமாக இருப்பதில்லை மேடு பள்ளத்தோடுதான் இருக்கிறது. மேடு தெரியாமல் இருக்கக்கூடிய அளவில் தண்ணீரைக் கூடுதலாகத் தேக்கி வைத்து குருணை மருந்துகளைப் போடலாமா? இது, எல்லா நடவு நெல் பயிருக்கும் மருந்து ஒன்றுபோல் வேலை செய்யுமா? இது பற்றிய விவரங்களை தங்களிடம் இருந்து விளக்கமாக எதிர்பார்க்கிறேன்.

—எஸ். வெங்கிடாசலம்
ஐயர்,
பெருமாள் கோவில் சந்து,
பூதப்பாண்டி (அஞ்சல்),
குமரி மாவட்டம்.

**விடை:** வயல் முழுவதும் ஒரே சமமாக இருந்தால்தான், வயலுக்குப் பாய்ச்சுகின்ற தண்ணீரும், இடுகின்ற இரசாயன உரம், குருணை வடிவப் பூச்சி மருந்துகள் ஆகியவையும் எல்லாப் பயிர்களுக்கும் ஒரே சமமாகக் கிடைத்து எதிர் பார்க்கும் மகசூல் கிடைக்கும்! எனவேதான், கடைசி உழவுக்குப் பிறகு நடவுக்கு முன்பாக வயலைச் சமப்படுத்த வேண்டும் என்று அடிக்கடி வற்புறுத்தி வருகின்றோம்.

தங்கள் வயலில் மேடு பள்ளம் இருப்பதாகக் கூறியுள்ளீர்கள். அடுத்த பயிர் செய்யும் போதாவது வயலைச் சமப்படுத்துவதில் கவனம் செலுத்தும்படி கேட்டுக்கொள்கின்றோம். இந்தத் தடவை, தங்கள் வயலில் உள்ள தண்ணீரை வடித்து விட்டு குருணை மருந்துகளைத் தூவிய பிறகு, மேடு தெரியாமல் இருக்கும் அளவுக்குத் தண்ணீரைத் தேக்கி 3 நாள் அப்படியே தண்ணீரை நிற்கச் செய்யுங்கள். மேட்டுப் பகுதியில் சீக்கிரம் தண்ணீர் வற்றி விடுமாதலின்- அப்பகுதியில் உள்ள பயிர்களுக்கு மருந்து கரைந்துள்ள தண்ணீர் குறுகிய காலத்திற்கே கிடைக்குமாதலின் - அப்பகுதியில் பூச்சிகளின் தாக்குதலை முழு அளவில் கட்டுப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்க முடியாது. இருப்பினும், குறிப்பிடத் தகுந்த அளவுக்குப் பூச்சிகள் கட்டுப்படுத்தப்படும் என்றுநம்பலாம்.

தங்களுடைய மற்ற 2 கேள்விகளுக்கும் அடுத்த இதழில் பதில் அளிக்கப்படும்.

**வினா:** நான் வரும் கார்த்திகைப் பட்டத்தில் கொத்து மணிலா சாகுபடி செய்யலாம் என்று இருக்கிறேன். தயவு செய்து (1-10-75 தேதிய தமிழரசு இதழில் 'பொன்னி' நெல் சாகுபடிக்கு அளித்த விவரம் போன்று) மணிலா சாகுபடிக்கும் எவ்வகை மணிலா அதிக மகசூல் தரும் என்றும், செய் நேர்த்தி முறைகள் என்னென்ன என்றும் விளக்கமாகக் கூறவும்.

—என். முத்துலட்சுமி அம்மாள்,
15பி, சாயப்பேட்டைத் தெரு,
செம்மண்டலம், கடலூர்-1



**விடை:** கார்த்திகைப் பட்டத்தில் (நவம்பர்-டிசம்பர்) கொத்து மணிலா பயிரிடலாம் எனினும், தை பட்டத்தில் (ஜனவரி-பிப்ரவரி) கொத்து மணிலா பயிரிடுவதே சிறந்தது. அப்பட்டத்தில் தான், உயர்ந்த மகசூல் பெற முடியும். அந்த அளவுக்குக் காலம் தள்ளிப் பயிரிட முடியாதென்றால், டிசம்பர் மாதம் பிறந்த பின்பு மணிலா விதைக்க முற்படுங்கள்.

டிசம்பர் முதல் பிப்ரவரி வரையான பருவத்தில் இறைவையாக மணிலா பயிரிட ''டி.எம்.வி. 7'' எனப்படும் கொத்து மணிலா ரகத்தைத் தேர்ந்தெடுப்பதே சிறந்தது. இந்த ரகம் ''டி.எம்.வி.2'' எனப்படும் கொத்து மணிலா ரகத்தைவிட 26 சதம் வரை அதிக மகசூல் தரவல்லது. இந்த ரகத்தைப் பயிரிட பின்கண்ட சாகுபடி முறையை மேற்கொள்ளவும்.

### நிலம் தயாரித்தல்

நிலத்தை 4 முதல் 6 தடவை நன்கு உழுது புழுதியாக்குதல் வேண்டும்.

### அடியுரம் இடுதல்

கடைசி உழவிற்கு முன் ஏக்கருக்கு 10 வண்டி தொழு எரு அல்லது கலவை எரு இட வேண்டும். பிறகு 3.5 கிலோ வெண்காரத்தை மணலுடன் கலந்து தெளித்து உழ வேண்டும்.

விதைப்பதற்கு முன்பாக ஏக்கருக்கு 41 கிலோ 17:17:17 காம்ப்ளெக்ஸ் உரம் + 44 கிலோ சூப்பர் பாஸ்பேட் + 23 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் உரமிட வேண்டும்.

அல்லது

175 கிலோ 7-ஆம் எண் கலப்பு உரத்தை இட வேண்டும்.

### விதையும் விதைப்பும்

ஏக்கருக்கு 50 கிலோ விதைப் பருப்பை விதைக்க வேண்டும். ஒரு கிலோ விதைப் பருப்புக்கு 4 கிராம் 'கேப்டான்' அல்லது 5 கிராம் 'தைரம்' மருந்து கலந்து 6 மணி நேரம் வைத்திருந்து பிறகு விதைப்பது சிறந்தது. விதைப்பதற்கு முன்பு 3 குடுவை நுண்ணுயிர்க் கலவையை மணல் அல்லது மரத்தூளுடன் கலந்து நிலத்தில் இடவும். விதைப்பருப்புகளை 9 அங்குலம் × 6 அங்குலம் இடைவெளியில் சால் விதைப்பாக விதைக்கவும்.

### நீர்ப்பாய்ச்சுதல்

விதைத்தவுடன் நீர்பாய்ச்சவும். விதைத்த 3-வது நாளில் உயிர் நீர் விடவும். தொடர்ந்து 10 முதல் 12 நாட்களுக்கு ஒரு முறை-மண்ணைப் பொருத்து-நீர்ப்பாய்ச்சவும்.

### களை எடுத்தல்

விதைத்த 20-ஆம் நாள் முதல் முறை களை எடுக்கவும். விதைத்த 50-ஆம் நாள் ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் இட்டு 2-ஆம் முறை களை எடுத்து மண் அணைக்கவும்.

### மருந்து தெளிததல

முதல் முறை களையெடுத்த பிறகு, ஏக்கருக்கு 200 மில்லி லிட்டர் 'பாரத்தியான்' அல்லது 400 மில்லி லிட்டர் 'என்ட்ரின்' மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கவும்.

இரண்டாம்முறை களையெடுத்த பிறகு, ஏக்கருக்கு 200 மில்லி லிட்டர் 'பாரத்தியான்' அல்லது 400 மில்லி லிட்டர் 'என்ட்ரின்' மருந்தையும், 500 கிராம் தாமிரப் பூசணக் கொல்லி மருந்தையும் 200 லிட்டர் தண்ணீரில்கலந்து கைத்தெளிப்பானல் தெளிக்கவும்.

### மகசூல்

மேற்கூறிய முறையில் சாகுபடி செய்தால், ஏக்கருக்கு 1,000 கிலோ (25 மூட்டைகள்) மகசூல் பெற முடியும்.

**வினா:** ''சிங்கப்பூர் ராணி'' என்று ஒரு நெல் ரகம் உள்ளதா? அது ஏக்கருக்கு எவ்வளவு மகசூல் தரும்?

—வி. ராமச்சந்திரன்,
கீழ வீதி,
சிதம்பரம்,
தெ. ஆர்க்காடு மாவட்டம்.

**விடை:** தமிழகத்தில் ''பொன்னி'' என்றபெயருடன் புகழ்பெற்று விளங்கும் நெல் ரகத்திற்கே, ''**சிங்கப்பூர் ராணி**'' என்ற பெயரும் உண்டு! சிங்கப்பூரில் அமோகமாக விளைந்ததால், இந்த ரகத்திற்கு''சிங்கப்பூர் ராணி'' என்ற பெயர் ஏற்பட்டது!

''சிங்கப்பூர் ராணி'' என்று பெயர் பெற்ற ''பொன்னி'' ரகம் ஏக்கருக்குக் குறைந்த அளவாக 2 டன் மகசூலும், உயர்ந்த அளவாக 3.5 டன் மகசூலும் கொடுக்கவல்லது!

'தென்னார்க்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், சோமண்டார்குடிஎன்ற ஊரில் உள்ள உழவர் விவாதக் குழு அங்கத்தினர் திரு. பாவாடை மூப்பர் என்பவர் கடந்த ஆண்டு சம்பாப் பாட்டத்தில் பொன்னி சாகுபடிச் செய்து ஏக்கருக்கு 45 மூட்டை (3,375 கிலோ) மகசூல் பெற்றுள்ளார்.





# மதுரை மாநகராட்சி வரலாற்றில்..

தமிழகத்தின் கலைச் செல்வத்திற்கும்—இலக்கியப் பெருமைக்கும்—வரலாற்றுப் புகழுக்கும் மதுரை உயிரோட்டமான நகரம். செயற்கையாக உண்டாக்கப்படுகின்ற நகரங்களைப் போல் அல்லாமல் இயற்கையாகவே மதுரை தனிச் சிறப்புகளைப் பெற்றுள்ளது. தமிழகத்தின் புகழ் மிக்க மதுரை நகரம் கிரேக்க நாட்டின் ஏதென்ஸ் நகருக்கு இணையானது என்று வரலாற்றுப் பேராசிரியர்கள் சான்றுகள் பலகாட்டிக் கூறியிருக்கிறார்கள். ஏதென்ஸ் நகரத்தின் தெருமுனைகளில் நின்று கொண்டுதான் தத்துவ ஞானி சாக்ரடீஸ் தனது பகுத்தறிவுக் கருத்துக்களுக்கு விளக்கம்கொடுத்ததாக அரிஸ்டாட்டில் போன்ற அரசியல் மேதைகள் உலகுக்கு அறிவித்து இருக்கிறார்கள். அகிலம் உள்ள வரைக்கும் அகிலும் தேக்கும் அழியாக் குன்றமுமாகத் திகழும் மதுரைக்குப் பல அருஞ் சிறப்புக்கள் அமைந்து உள்ளன. அதிலே ஒன்றுதான், மதுரைமாநகராட்சியின் 'அறிஞர் அண்ணா மாளிகை'. நகரத்தின் அமைப்பை வனப்புள்ளதாக்கிய செயல் திறம் படைத்த நகராட்சித் தலைவர்கள் மாநகராட்சித் தலைவர், உறுப்பினர்கள் பணியாற்றியிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில்இரண்டாவது தலைநகரம் எனத் தகுதியைப் பெற்ற மதுரை, இரண்டாவது மாநகராட்சி என்ற வாய்ப்பையும் பெற்றுக் கொண்டது. ஏறத்தாழ 2.5 கோடி வருமானத்தை அடையும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது.

, தமிழ் நாடு அரசு மான்யமாக வழங்கப் பெற்ற 21.24 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 55 இலட்சம் செலவில் புதிதாகக் கட்டப்பட்டு உள்ள மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் 2—10—75 அன்று திறந்து வைக்கப்பட்டது.

உள்ளாட்சித் துறை நிறுவனங்களின் தலையாய நோக்கம் மக்கள் அடிப்படைத் தேவைகளை ளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதும், அடிப்படையிலேயே மக்களாட்சித் தத்துவத்தை வலுப்படுத்துவதுமே யாகும். அரசின் சாதனங்களையும், அவை செயல்படும் முறைகளையும், பாமர மக்கள் அறியும் வழியில் உள்ளாட்சித் துறை அமைப்புக்கள் உதவுகின்றன. ஒரு குடிமகன் உள்ளாட்சி மன்றங்களிடம் எதிர்பார்ப்பது தனக்கும், தனது குடும்பத்தினருக்கும் மான எல்லா அடிப்படைத் தேவைகளையும், கல்வி, மருத்துவ வசதிகள், நல்ல சாலைகள், மின் வசதி, சுகாதார வசதிகள், தண்ணீர் விநியோகம், பூங்கா, விளையாட்டு மைதானங்கள் போன்றவைகளே. இத்தகைய வசதிகளைச் செய்து கொடுப்பதே உள்ளாட்சி மன்றங்களின் பெரிய நிலையான பணியாகும். மேலே கூறப்பட்ட வகையில் பரிசீலித்து ஒருவன் மதுரை மாநகராட்சியை எடை போடுவானானல் அதன் பணிகளும், அது தற்போதுசெய்துள்ள வசதிகளும், செய்து வருகின்ற பணிகளும், இன்னும் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ள பணிகளும் வசதிகளும் மிகவும் பாராட்டத்தக்கது.

மதுரை நகர் மன்றம் 1866-ஆம் ஆண்டு நகர வளர்ச்சிச் சட்டத்தின்படி 1866-ல் நிறுவப் பெற்றது. மீனாட்சி கோவிலைச் சுற்றி இரண்டு சதுர கிலோ மீட்டர் அளவில் 41,000-க்குச் சற்று அதிகமாக மக்கள் தொகையைக் கொண்டு தொடங்கிய ஒரு 'சிறு நகரியம்', 1971-ஆம் ஆண்டில் 8.84 சதுர மைல் பரப்பளவும், 5,49,114 மக்கள் தொகையும் கொண்ட நகராட்சியாக இருந்த நகரம், 1—5—1971 முதல் மாநகராட்சியாக அமைந்தது.

தற்பொழுது 51.23 சதுர கி. மீட்டர் பரப்பும், 6,93,309 மக்கள் தொகையும் கொண்ட ஒரு மாபெரும் மாநகராட்சியாக விளங்குகின்றது. 1866-ஆம் ஆண்டு, வருடம் ஒன்றுக்கு 31,000 ரூபாய் வருமானமுள்ள ஒரு சிறு மன்றமாக இருந்த 'நகர் மன்றம்' இன்று ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2.5 கோடிக்குமேல் வருவாய் உள்ள ஒரு மாநகராட்சியாக வளர்ந்து விளங்குகின்றது.

**சாலை வசதிகள் :**

1866-ஆம் ஆண்டில் நகரின் மத்தியில் 65 கி. மீட்டர் நீளச் சாலையைப் பராமரித்து வந்தது. இன்று 341 கி. மீட்டர் நீளச் சாலையைப் பராமரித்து வருகின்றது. மாநகராட்சி தற்பொழுது சாலைப் பராமரிப்புக்கு ஆண்டு தோறும் ஏறத்தாழ 20 இலட்சம் ரூபாய் செலவழிக்கின்றது.

**குடிநீர் வசதிகள் :**

1884-ஆம் ஆண்டு வரை பாது காக்கப்பட்ட குடிநீர் வசதியில்லை. 1888-ஆம் ஆண்டு வைகை நதியில் மைய மண்டபம் அருகில் மூன்று கிணறுகள் தோண்டப் பெற்று 17 தெருக்களுக்குக் குழாய்கள் மூலம் தண்ணீர் வசதி செய்யப்பட்டது.

1892-ஆம் ஆண்டில் நாளொன்றிற்கு 6 இலட்சம் காலன் தண்ணீர் விநியோகிக்கும் அளவில் ஆரப்பாளையம் தண்ணீர் நிலையம் துவக்கப்பட்டது. 1924-ஆம் ஆண்டில் கோச்சடையில் வடிகால் மேடை கட்டி நாளொன்றுக்கு 30 இலட்சம் காலன் அளவாகத் தண்ணீர் உயர்த்தப் பட்டது. 1963-ல் மேலக்கால் தண்ணீர்த் திட்டத்தினைத் தொடங்கி 62 இலட்சம் காலன் அளவாக உயர்த்தப்பட்டது. மாநகராட்சி இன்று நாளொன்றுக்கு ஏறத்தாழ 1 கோடி காலன் தண்ணீர் விநியோகிக்கின்றது. அண்மைக் காலம் வரை பாது காக்கப்பட்ட குடிநீர் வசதி பெருத வைகை நதியின் வடபுறமுள்ள முக்கியமான பகுதிக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் 1969-ல் இருந்து வழங்கப்படுகிறது. தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் தத்தநேரி, சோமசுந்தரபுரம் காலனி, எல்லிஸ் நகர், பகுதியில் ரூ. 11 இலட்சம் செலவில் புதிய தண்ணீர்த் திட்டத்தை நிறைவேற்றி வருகின்றது.

மதுரை நகரின் தென் பகுதியில் 3 இலட்சம் மக்களைக் கொண்ட 70 சதவிகிதப்பகுதிக்குச் சாக்கடைத் திட்டம் அமலில் உள்ளது. வைகை நதியின் வடபுறம் உள்ள பகுதியில் ரூ. 109 இலட்சம் செலவில் சாக்கடைகள் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. அது 1977—78-ல் பயன்படுத்தப்பெறும் நிலை பெறும்.

**பொதுச் சுகாதாரம் :**

குளிக்கும் அறைகளுடன் கூடிய பொதுச் சுகாதார வசதிகள் நான்கு செயல்பட்டு வந்தன. மேலும் ஆறு இடங்களில் இந்த ஆண்டு இறுதிக்குள் செயல்படத் துவங்கும்.

கழிவுநீர் முழுவதையும் பயன்படுத்தும் மதுரை மாநகராட்சிப் பண்ணைதான் இந்தியாவிலேயே மிகவும் நன்ருகப் பராமரிக்கப் பட்ட பண்ணையாகும். கழிவு நீர்ப் பண்ணையில் 200 ஏக்கருக்கு மேலுள்ள பரப்பில் கினியாப் புல்லும், சோளமும், பயிரிடப் படுகின்றது. இதன் மூலம் ஆண்டொன்றுக்கு 3 இலட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கின்றது. சோளம் பயிரிடுதல் 1975-ஆம் ஆண்டு தொடக்கத்தில் சுமார் 20 ஏக்கரில் தொடங்கிய புதிய திட்டமாகும். இதன் மூலம் 3 மாதங்களில் ரூ. 30,000 வருமானம் வந்துள்ளது. வரும் ஆண்டில் மேலும் 50 ஏக்கர் நிலப் பரப்பில் பயிரிடும் திட்டமும் உள்ளது.

நகரிலுள்ள குப்பை கூளங்களை நகரின் 7 மையங்களிலிருந்து மாநகராட்சி சேகரித்து 60 ஏக்கர் பரப்புள்ள கம்போஸ்ட் உர டிப்போவிற்கு அனுப்பப்படுகின்றது. பாடம் செய்யப்பட்ட உரம் விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்டு, சலுகை விலையில் விவசாயிகளுக்கு விற்கப்படுகின்றது. மதுரை மாநகராட்சியின் கம்போஸ்ட் உரடிப்போ மாநிலத்திலேயே மிகச் சிறந்தவற்றுள் ஒன்று என்று பாராட்டப்பட்டு பல சுழற்கேடயங்களும் பெற்றுள்ளன.

**மா**நகராட்சி அலுவலகத்தில் 41 அலுவலர்களும், அலுவலாளர்கள் 981 பேரும் பணியாற்றத்தக்க இட வசதிகள் உள்ளன. வங்கியும், அஞ்சலகமும் மாநகராட்சிக் கட்டடத்திலேயே உள்ளன. மாளிகை கட்டுவதற்குத் திட்டமிட்டச் செலவு ரூ. 70 இலட்சம். ஆனல் இருக்கைச் சாதனங்களுடன் முடிவான மொத்தச் செலவு ரூ. 55 இலட்சம் என்பது குறிப்பிடத்தக்கது.

விழாவில் கலந்து கொண்டு அமைச்சர்கள், தலைவர்களின் திருவுருவப் படங்களையும், தலைவர்களின் பெயரால் அமைந்த கூடங்களையும் திறந்து வைத்து உரையாற்றினர்கள்.

தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தை அமைச்சர் ச. இராமச்சந்திரன் அவர்களும், கல்வி அமைச்சர் நாவலர் அவர்களின் திருவுருவப் படத்தை அமைச்சர் ஓ.பி. இராமன் அவர்களும் திறந்து வைத்தார்கள்.

''அறிஞர் அண்ணு மாளிகை'' ஒரு இலட்சத்து 32 ஆயிரத்து 208 சதுர அடிப் பரப்பில் கட்டப் பட்டுள்ளது. மாளிகையின் மத்திய மண்டபத்தில் மூன்று அரங்குகள் உள்ளன.

மாநகராட்சி மன்றம் கூடும் இடம், 'தந்தை பெரியார் கூடம்' எனப் பெயரிடப்பெற்றுள்ளது. இக்கூடத்தை அமைச்சர் ப.உ. சண்முகம் அவர்கள் திறந்து வைத்து உரையாற்றினர்கள்.

இக்கூடத்திற்கு சாலையில் இருந்தபடியே நேராக அப்படியே காரில் இறங்குவதற்கு வசதியாக மேம்பாலம் அமைக்கப்பட்டுள்ளது. கூடத்தின் அளவு 215 சதுர அடியாகும்.

மாநகராட்சியின் ஆலோசனைக் குழுக்கூட்டம், இதர அலுவலர்கள் மாநாடு நடைபெறக் கூடியஇடம், 'டாக்டர் கலைஞர் கருணாநிதி கூடம்'. இக்கூடத்தின் அளவு 1,893 சதுர அடியாகும்.

டாக்டர் கலைஞர் கருணாநிதி கூடத்தைத் திறந்து வைத்து அமைச்சர் மன்னை ப. நாராயண சாமி அவர்கள் உரையாற்றினர்கள்.

மாநகராட்சியின் அலுவலர்கள் மற்றும் முக்கிய கலந்துரையாடல்கள் நடப்பதற்கு ஏற்ற கூடம் 'காமராசர் கூடம்' எனப் பெயரிடப் பெற்றுள்ளது. கூடத்தின் அளவு 1,893 சதுர அடியாகும். இக்கூடத்தை அமைச்சர் செ. மாதவன் அவர்கள் திறந்து வைத்து உரையாற்றினர்கள்.

விழாவிற்குத் தலைமை ஏற்று கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் உரையாற்றினர்கள்.

மதுரை மாநகராட்சித் துப்புறவுத் தொழிலாளர்களுக்கு 500 வீடுகள்தான் இருக்கின்றன. 1,000-க்கும் மேற்பட்டவர்களுக்கு வீடுகள் கட்டப்பட வேண்டியுள்ளது. ரூபாய் பத்து இலட்சம் செலவில் துப்புறவுத் தொழிலாளர்களுக்கு (நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு) வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை அறிவித்தார்கள்.

உயர்ந்த கோபுரங்களைக் காணும் போதெல்லாம் தாழ்ந்த மனிதர்களை நினைப்பதுதான் வாடிக்கை. அந்த வகையில், துப்புறவுத் தொழிலாளர்களுக்கு வீடுகளை அமைத்துத் தர இந்தப் பத்து இலட்சம் ரூபாயை முன் பணமாக வைத்து நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

**மின்சாரம் :**

மாநகராட்சி தற்பொழுது மின் வாரியத்தின் குத்தகைதாரராக இருந்து, மின்சக்தியை மின் வாரியத்திலிருந்து பெற்று 52,000 மின் இணைப்புகளுக்கு வழங்கி வருகின்றது. நகரை அழகுபடுத்தும் நோக்கில், மாநகராட்சி நான்கு வீதிகளிலும், சென்னை அண்ணு சாலையில் உள்ளது போன்று விளக்குகளை அமைத்துள்ளது.

**வயோதிகர் இல்லம் :**

கடைசிக் காலத்தில் வறுமையால் வாடும் வயோதிகர்கள் அனைவரும் தங்கள் பிள்ளைகளால் பாதுகாக்கப்படுவதில்லை. இது போன்ற திக்கற்ற ஏழை வயோதிகர்களுக்கு மதுரை மாநகராட்சியால் ஏழை வயோதிகர் இல்லம் நடத்தப்படுகிறது. இதில்வயோதிகர்களுக்குத் தாங்கள் இறக்கும் வரை உண்ணும் உணவு, உடை, மருத்துவ வசதிகள் இலவசமாக வழங்கப்பட்டு அவர்கள் இறந்து போன பின்பு அவரவர் மதச் சடங்குகளின்படி ஈமக்கடன்கள் முடிக்கப்படுகின்றது.

**குழந்தைகள் காப்பகம் :**

வசதியற்ற பெற்ருேர்க்கு வேலைக்குச் செல்லும்பொழுது தங்கள் குழந்தைகளை எங்கு விட்டுச் செல்வது என்பது ஒரு பெரும் பிரச்சினையாக இருக்கும். இதனை ஓரளவிற்குத் தவிர்ப்பதற்காகச் செல்லூர், சுப்பிரமணியபுரம் ஆகிய பகுதிகளில் 3 வயதிற்குட்பட்ட குழந்தைகளை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரையில் வைத்திருந்து அவர்களுக்கு உணவு, விளையாட்டுப் பொருட்களும் கொடுத்து, இரு குழந்தைகள் காப்பகங்கள் செயலாற்றி வருகின்றன.

**வரி அப்பீல் நீதித் துறை :**

தொழில் வரி, சொத்து வரி சம்பந்தமான அப்பீல்களை விசாரிக்க வரிஅப்பீல், நீதித் துறை அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார்

மாநகராட்சியாக மாறிய போது...



முதலில் மாநகராட்சி வருவாய்த் துறை அதிகாரிகள் சொத்து வரி, தொழில் வரியை நிர்ணயிக்கிருர்கள். அந்த வரி அதிகம் என்று கருதுபவர்கள் மாநகராட்சி ஆணையருக்கு (கமிஷனருக்கு) ரிவிஷன் மனுச் செய்து கொள்ளலாம். அந்த மனுவின் மீது கூறப்படும் தீர்ப்பில் மனநிறைவு அடையாதவர்கள் மாநகராட்சி நீதித்துறை அலுவலருக்கு அப்பீல் செய்து கொள்ளலாம். மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் தேர்ந்து எடுக்கப்பட்டு வரி அப்பீல் குழு அமைக்கப்பட்டால் இந்த நீதித் துறை அலுவலர் அந்த அப்பீல் குழுவின் தலைவராகப் பணியாற்றுவார். அவருடன் இரண்டு மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் வரி அப்பீல் குழுவின் உறுப்பினர்களாகச் செயல்படுவார்கள். அதுவரை நீதித் துறை அலுவலரே வரி அப்பீல் குழுவின் பணிகளைச் செய்து வருவார்.

தற்பொழுது மாநகராட்சி இருந்த கட்டடத்தின் ஒரு பகுதியில் 1.5 கோடி செலவில் பேருந்து நிலைய விரிவுக்காகவும், மற்ருெரு பகுதியில் டவுன் ஹால், கடைகள் கட்டவும் மாநகராட்சி திட்டமிட்டுள்ளது.

நகர் மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கான பல மாபெரும் திட்டங்களுக்கு, மான்யமாகவும், கடனுகவும் மதுரை மாநகராட்சிக்குத் தமிழக அரசு நிதிவழங்கியுள்ளது.

பழந்தமிழரின் பண்பாடு, இலக்கிய வளம், சிற்பத் திறன், போன்றவற்றிற்கு எடுத்துக்காட்டாய் அமைந்துள்ள ''அருள் மிகு மீனுட்சி ஆலயத்தினை'' கூடல் மாநகருக்கு அளித்து மங்காத புகழ் பெற்ருர் பாண்டிய மன்னர் குலசேகரன்.

தமிழரின் கட்டடக் கலைக்குக் கட்டியம் கூறி நிற்கும் ''நாயக்கர் மகாலையும்'' எழில்மிகு ''மாரியம்மன் தெப்பக் குளத்தையும்'' தந்து கூடல் மாநகரின் சரித்திரத்தில் நீங்காத இடம் பெற்ருர் மாமன்னர் திருமலை நாயக்கர்!

எழில்மிகு மதுரைக்கு, ஏற்றமும் புதுமைத் தோற்றமும் கொண்ட கவினுறு ''மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணு மாளிகை''யினைத் தந்துமாநகரின் பெருமைக்குப் பெருமை சேர்த்தது தமிழக அரசு.

—மருதம்

அன்றைய நகராட்சிக் கட்டடம்






குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எல்லாச் சத்துக்களும் அவசியம். அதுபோலவே பயிரின் வளர்ச்சிக்கு தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மூன்றும் அளித்தால்தான் முழுப்பலனைத் தரும்.

தற்போது உரங்களின் விலை அதிகமாக இருப்பதால் தழைச் சத்தைத் தரும் யூரியாவை மட்டும் இட்டால் போதும் என்று நீங்கள் கருதலாம்.

ஆனால் யூரியாவை மட்டும் இட்டால் பயிர்கள் பூச்சி நோய்களினால் அதிகமாக பாதிக்கப்படும். வறட்சியைத் தாங்காது. மேலும் நாளடைவில் மண்ணின் தன்மை கெடும். அதனால் விளைச்சலும் குறையும். அன்றியும் மணி, சாம்பல் சத்துக்கள் இல்லையென்றால் யூரியாவின் உற்பத்தித் திறனும் குறையும்.

தழைச்சத்துடன் மணி சாம்பல் சத்துக்களை இடும்போது விளைச்சல் கூடுதலாகி லாபம் அதிகரிக்கிறது. இதனை ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன.

| ஏக்கருக்கு இட்ட உரம் | ஏக்கருக்கு சாகுபடி செலவு ரூ. | ஏக்கருக்கு விளைச்சல் (75 கிலோ மூட்டை) | வருவாய் (மூட்டை ரூ. 82.50 வீதம்) ரூ. பை. |
|---|---|---|---|
| 50 கிலோ தழைச்சத்து மட்டும் | 1080 | 20 | 1650.00 |
| 50 கிலோ தழைச்சத்துடன் 25 கிலோ மணிச்சத்து | 1255 | 25 | 2062.50 |
| 50 கிலோ தழைச்சத்துடன் 25 கிலோ மணி, 25 கிலோ சாம்பல் சத்துக்கள் | 1305 | 32 | 2640.00 |

MFL-1044A

அதாவது தழைச்சத்துடன் மணி, சாம்பல் சத்துக்களையும் சேர்த்து இடுவதற்கான கூடுதல் செலவு ரூ. 225தான். ஆனால இதன்மூலம் கிடைத்த கூடுதல் வருவாயோ ரூ. 990.

இப்படி கூடுதல் வருவாயை தருவதற்கான தழை, மணி, சாம்பல் ஆகிய மூன்று சத்துக்களையும் கொண்டது விஜய் 17-17-17. ஆகவே உங்கள் பயிருக்கு விஜய் 17-17-17யும், விஜய் யூரியாவையும் சேர்த்து இடுங்கள்.

VIJAY
MADRAS FERTILIZERS

விஜய் உரங்களைப்பற்றி மேலும் அறிய கீழ்கண்ட முகவரியிலிருந்து இலவசமாக வெளியீடு ஒன்றைப் பெறலாம்.

ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமசந்திரபுரம், திருச்சி 620 017







# முன்னேற்றப் பாதையில
# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்

இந்தியாவின் மிகப் பழமையான வேளாண் கல்லூரிகளுள், கோயமுத்தூரில் 1907-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட வேளாண் கல்லூரி—ஆராய்ச்சி நிலையமும் ஒன்ருகும். இதுவே, 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் செயல்படத் தொடங்கியபோது, அதன் தலைமையகமாக அமைந்தது. இந்தியாவிலேயே வேளாண்மையில் மூதறிவியல் பட்டப்படிப்பு கொண்ட இரண்டாவது கல்வி நிறுவனமாக இது 1958 முதல் திகழ்ந்தது. அவ்வகைப் படிப்பு கொண்ட முதல் நிறுவனம் புதுடில்லியில் உள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனம்(I.A.R.I.) ஆகும். பயிர் இனப் பெருக்கமும், மரபியலும், மண்ணியல், உழவியல், பயிர் நோயியல், வேளாண் பூச்சியியல், தோட்டவியல், வேளாண் பொறியியல் இன்ன பிற வேளாண் தொடர்புடைய பல்வேறு துறைகளில் ஆற்றிய பணிகளால் இக்கல்லூரியின் ஆராய்ச்சி நிலையம் பெரும் சிறப்புடன் திகழ்ந்தது. தனித் தன்மை கொண்ட செம்மண், கரிசல்மண், வண்டல்மண் என்னும் பலவகை மண்கள் அடங்கிய நன்செய், புன்செய், தோட்டக்கால் நிலங்களைக் கொண்ட சுமார் 720 ஏக்கர் நிலப்பரப்பில், வேளாண்மையில் மிகவும் முன்னேற்றம் கண்ட கோவை மண்டலத்தில் இந்நிறுவனம் அமைந்திருப்பதால், தமிழ் நாட்டில் காண வேண்டிய மிகச் சிறப்பான இடங்களில் இதுவும் ஒன்ருகக் கருதப்படுகிறது. தமிழ் நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் ஆண்டுதோறும் ஆயிரக் கணக்கானேர் வந்து பார்த்துச் செல்லும் அளவுக்கு இவ்வாராய்ச்சி நிறுவனத்தின் கண்டுபிடிப்புகள் வேளாண் பெருமக்களுக்குப் பெருமளவில் பயன் பட்டுள்ளன.

மதுரையில் 1965-ஆம் ஆண்டு இரண்டாவது வேளாண் கல்லூரி தொடங்கப்பட்டது. இவ்விரு கல்லூரிகளும் இதுகாறும 5,000 வேளாண் பட்டதாரிகளையும், 1,000 வேளாண் மூதறிவியல் பட்டதாரிகளையும் தென் மாநிலங் களில் உருவாக்கியுள்ளன. அவர் களில் சிலர் பல்வேறு மாநிலங் களிலும், அனைத்திந்திய கல்வி நிறுவனங்களிலும் வேளாண் கல்வி, ஆராய்ச்சி, விரிவாக்கம் ஆகிய துறைகளில் தலைமைப் பதவியில் அமர்ந்து தொண் டாற்றுகின்றனர். கேரளம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் தோன்றிய புதிய வேளாண் கல்லூரிகள், கோவை வேளாண் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தின் கல்வி முறையையும், நிருவாக அமைப்பையும் பின் பற்றி வருகின்றன.



- டாக்டர் கோ. அரங்கசாமி,
துணை வேந்தர்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்.

இத்தகைய தனிச் சிறப்புடன் அரை நூற்றுண்டுக்காலம் செயல் பட்டு வந்த இக்கல்லூரி இந்திய அரசினுல் அமைக்கப்பட்ட இந்திய-அமெரிக்க கூட்டுக் குழு வின் கவனத்தைக் கவர்ந்தது! அதன் மூலம் 1958-ஆம் ஆண்டி லேயே, இந்தியாவின் முதல் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தை கோயமுத்தூரில் நிறுவு வதற்கான வாய்ப்பும் ஏற்பட்டது. துரதிர்ஷ்டவசமாக இவ்வாய்ப்பு 13 ஆண்டு காலம் நழுவிவிட்டது. இவ்விடைப்பட்ட காலத்தில், வேறு 14 வேளாண் பல்கலைக் கழகங்கள் இந்தியாவில் தோன்றி விட்டன. இன்றைக்கு இந்தியா வில் 22 வேளாண் பல்கலைக் கழகங்கள் உள்ளன; மகாராட்டி ரத்தில் நான்கும், உத்திரப் பிர தேசத்தில் மூன்றும், பிற மாநிலங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்று வீதமும் உள்ளன. அஸ்ஸாம் மாநிலத்திலுள்ள வேளாண் பல் கலைக் கழகம் மேகாலயா, மணிப் பூர், அருணுசலப் பிரதேசம், மிசோரம் ஆகிய மலைமாநிலங் களின் தேவைகளையும் நிறைவு செய்கிறது. தமிழ்நாடு வோளண் பல்கலைக் கழகம் கல்வியிலும், ஆராய்ச்சியிலும் தனக்குரிய பழம் பெருமையை நிலைநிறுத்த வெகுவாய் முயன்று வருகின்றது.

கடந்த நான்கு ஆண்டுகளாக இப்பல்கலைக் கழகம் தனது முன் னேற்றப் பாதையில் பல்வேறு இன்னல்களையும், இடையூறுகளை யும் கடக்க நேரிட்டது. இவை எத்தகைய புதிய நிறுவனத்திற் கும் இயல்பாக நேரிடக்கூடிய வையே! இப்புதிய பல்கலை கழகத்தின் அமைப்பு முறைகள் நிபுணர் குழுவின் பரிந்துரைப்

கல்வித் தகுதியை உயர்த்திய பின்னரும்கூட, இந்த எண்ணிக்கை வருகிறது என்பது குறிப்பிடத் தக்கது. இவ்வகையில் மிக உயர்ந்த அறிவுத் திறன் வாய்ந்த மாணவர்களைத் தெரிவு செய்து சேர்க்க முடிகிறது. **இன்றைய மாணவர்களே வருங்கால அலுவலர்கள்** என்ற உண்மையை மனதிற் கொண்டு வருங்காலத்தில் இப்பல்கலைக் கழகத்திலும், மாநிலத்திலும் வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி, விரிவாக்கக் கல்வி ஆகிய செயல் திட்டப் பணிகளின் தரத்தில் தொடர்ந்து முன்னேற்றம் காண உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளோம்.

## ஆராய்ச்சி

இப் பல்கலைக் கழகத்தில், ஆய்வுகள் வேளாண்மை அறிவியல் பிரிவுகளில் மட்டும் நடைபெறுவதோடல்லாமல், வயல் அமைப்பு, திட்ட அடிப்படை, காலவரையறை ஆகியவை பற்றியும் ஆய்வுகள் மேற்கொள்ளப் படுகின்றன. 'ஆய்வுக்குழு' வின் துணை கொண்டு இப் பல்கலைக் கழகத்தில், ஆய்வு நிகழ்ச்சிகள் உருவாக்கப்படுகின்றன. இந்த "ஆய்வுக்குழு" துணை வேந்தர் தலைமையில் இயங்குகிறது. இக் குழுவிற்கு, முதல்வர்கள், இயக்குநர்கள், தேர்வு செய்யப்பட்ட ஐந்து துறைத் தலைவர்கள், இப் பல்கலைக் கழகத்திற்கு வெளியே இருக்கின்ற ஐந்து முன்னிலை அறிவியல் நிபுணர்கள் ஆகியவர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

உள்ளூர் முக்கியத்துவம் வாய்ந்த, வயல்வெளி முறைகள் பற்றி தெரிந்து கொள்ளுவதற்காகவும், ஆய்வின் முடிவுகளைப் பற்றி மறு சீராய்வு செய்வதற்காகவும், மாநில விரிவாக்கத் துறையைச் சேர்ந்த முதுநிலை அலுவலர்களைக் கொண்டு, ஆண்டுக் கூட்டம் நடைபெறும். விரிவாக்கத் திட்டங்களுக்கு, ஆய்வுக் கண்டு பிடிப்புகளின் பயன்பற்றியும், ஏற்கனவே நடைமுறையில் இருக்கின்ற திட்டங்களுக்குத் தேவையான புதிய முறைகள் பற்றிய கவனமும், இருக்கின்ற திட்டங்களை ஏற்றதாக மாற்றியமைப்பதைப் பற்றியும், அவ்வாறு மாற்றியமைக்கப் படும் திட்டங்கள், விரிவாக்கத் துறையினருக்கும், மாநில உழவர்களுக்கும் ஏற்றதாக இருக்குமாறு அமைப்பது பற்றியும் அக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படும்.

**இன்று,** மாநிலமெங்குமுள்ள **18 ஆய்வு நிலையங்களில், 700 அறிவியல் நிபுணர்கள், 500**




தொழில் நுணுக்க வல்லுநர்கள் ஆகியவர்களின் துணை கொண்டு, 900-க்கும் மேற்பட்ட ஆய்வுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல்கலைக் கழக ஆய்வு நிகழ்ச்சிகளுக்காக ஏற்படும் செலவுக்கான நிதிகளில் மூன்றில் ஒருபங்கை, 'இந்திய வேளாண்மை ஆய்வுக்குழு' விடமிருந்தும், எஞ்சிய தொகையை, மாநில அரசிடம் இருந்தும், பல்கலைக் கழக வருவாயிலிருந்தும் பல்கலைக் கழக ஆய்வுக் குழு பெற்றுக் கொள்கிறது. பல்வேறு வேளாண் அறிவியல் பற்றி மேலும் ஆராயவும், உள்ளூர் ஆய்வு நிலையங்களின் செயல்களை மேலும் திறம்படச் செய்யவும், அவற்றின் மூலம் மாநிலத்திலுள்ள வேளாண் தட்ப வெப்பப் பகுதி மற்றும் மலைப் பிரதேசம் ஆகியவற்றிற்குத் துணை புரிவதற்கும், இப்பல்கலைக் கழகம் ஒரு பெரும் திட்டத்தை உருவாக்கியுள்ளது. இப்பெரும் திட்டம், நீண்டகால, குறுகியகாலத் திட்ட நிகழ்ச்சிகளைப் பற்றி ஆராய்வதோடு, மனித சக்தி, அச்சக்தியைக் கற்பதற்கும், ஆய்வுக்கும் பயன்படுத்தல், தானிய உற்பத்தி விரிவாக்கக் கல்வி, தோட்டக்கலை, விலங்கின இனப் பெருக்கம், வேளாண் பொறியியல், வீட்டுப் பொருளாதாரம், கிராமப்புற அபிவிருத்தி, மீன்வளம், வன வளம் ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றியும் இப்பெருந் திட்டம் ஆய்வு செய்யும். தற்போது இத்திட்டம், மாநில மத்திய அரசுகளிடமிருந்து கிடைக்கும் நிதிக் கட்டுப்பாட்டின் காரணமாக, குறைந்த அளவிலேயே தன் செயல் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது.

கடந்த நாலாண்டு காலமாக, அறிவியல் நிபுணர்களின் ஒருங்கிணைந்த முயற்சியின் விளைவாக, பல முன்னேற்றமான ஆராய்ச்சி முடிவுகள் வெளி வந்துள்ளன. அவற்றுள் 5 உயர் விளைச்சல் தரும் நெல் வகைகள், 2 சோள வகைகள், 2 கேழ்வரகு வகைகள், உளுந்து, பச்சைப் பயறு, துவரை ஆகியவற்றில் ஒவ்வொன்று, காய்கறிவகைகளில் 5, கனிவகைகளில் 2, வேர்க்கடலை வகையில் ஒன்று, பருத்தி வகைகளில் 2 ஆகியவை புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன! **இவ்வகைப் புதிய கண்டு பிடிப்புகளின் விளைவாக, மாநில உழவர்களின் வருமானம் ஆண்டொன்றுக்கு, முன்பிருந்ததைவிட கூடுதலாக 20 கோடி ரூபாய் அதிகரித்துள்ளது என்று கணக்கிடப்பட்டுள்ளது.** மல்லிகை வாசனை எண்ணெய் தயாரிக்கும் திட்டத்திலும், காலகை நிலைப் படுத்தும் தன்மையிலும், புரதச் சத்து மிகுந்த காளான்களைப் பயிரிடுதலிலும், விளைச்சலைப் பெருக்க வைப்பதற்காக ரைசோபியம் (Rhizobium), அசடோபேக்டர் (Azotobactor) ஆகியவற்றைப் பயன்படுத்தும் முறையிலும், பல புதுமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் மாநிலத்தின் பல்வேறு வகைப்பட்ட உழவியல் பகுதிகளில், அதற்கேற்றவாறு பயிரிடும் முறைகளில் பயிற்சியளிப்பதிலும் புது முறைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.



கடந்த ஐந்தாண்டுகளில் பயறுவகைகளில் விளைவின் வளமை

பல்வேறு புதிய ஆய்வு முறைகளில் முன்னேற்றம் காணப்பட்டு வருகிறது. விதை உற்பத்தி நுணுக்கம், புதிய வேளாண் பொறிகளின் அபிவிருத்தி, வடிவமைப்பு, அவற்றை வயல்களில் நடைமுறையில் செயல்படுத்தல், தினை, சாமை போன்றவற்றிலிருந்து புதுவகை உணவுப்பண்டங்கள் தயாரித்தல், கனிகளிலிருந்து மதுவகைத் தயாரித்தல், உள்நாட்டு நீர் நிலைகளிலும், குளங்களிலும் மீன்வளர்த்தல், சிறிய பண்ணை வனங்கள் அமைத்தல், கோழிகளுக்கும், கால்நடைகளுக்கும் ஏற்படும் தீவனச் செலவைக் குறைத்தல் ஆகியவை செயல் முறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

## விரிவாக்கக் கல்வி

விரிவாக்கக் கல்விக்கென ஒரு இயக்ககம் செயல்பட்டு வருகிறது 'விரிவாக்கக் கல்விக் குழு' விற்குத் துணை-வேந்தர் தலைவராகவும், முற்போக்கு உழவர்களின் பிரதிநிதிகளும், பல்கலைக் கழகத்தின் பிரதிநிதிகளும், மாநில அரசின் விரி பிரதிநிதிகளும் வாக்கக் கல்விக் குழுவில் உறுப் பினர்களாக உள்ளனர். புதிய வேளாண்மைப் பற்றிய அறிவு நலன்களை உழவர்களுக்கும், பொதுமக்களுக்கும் நன்கு தெரி விக்கும்படி, இக்குழு பல்கலைக் கழகத்திற்கு எடுத்துரைக்கின் றது. கடந்த நாலாண்டு காலத் தில், 28 பயிற்சி நிகழ்ச்சிகளை இவ் விரிவாக்கக் கல்வியகம் நடத்தி யுள்ளது. இதனால் மாநில அரசின் அலுவலர்களும், முற்போக்கு உழவர்களும் பயனடைந்துள்ள னர். சிறு நீர்ப்பாசனம், பொது வேளாண்மை, பண்ணை நிரு வாகம், விரிவாக்கத் தொழில் நுணுக்கம், நீர் அறிவியலும் வண் டல் மண் படிவமும், வேளாண் பொருளியல், விதை நுண்ணியல் மலரியல் முதலியவற்றைப் பற்றி



அன்றும்—இன்றும்! பருத்தியின் மகசூலும் தரமும்!



கடந்த 50 ஆண்டுகளில்
நெல் விளைச்சலில் முன்னேற்றம்

டி அமையாத காரணத்தினைக் ாட்டி இந்தநிய அங்கீகாரத்தை இந்தியவேளாண்மை ஆராய்ச்சிக் ழகம் நிறுத்தி வைத்தது. இதன் ஆராய்ச்சிப் பணிகள் மிகவும் தறுகிய அளவில் இருந்ததும், சென்னையில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி இதன் உறுப் ாக அமையாததும் மிகவும் குறிப்பிடத் தக்க காரணங்களாக இருந்தன. 1974-ஆம் ஆண்டில் சென்னை கால்நடை மருத்துவக் ல்லூரி, இப்பல்கலைக் கழகத் டன் இணைக்கப்பட்டதாலும், 973-ஆம் ஆண்டின் தொடக்கத் தில் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் ஆராய்ச் த் திட்டங்கள், அதற்கான ட்டடங்கள், தளவாடங்கள், அலுவலர்களுடன் மாநில அரசின் பொறுப்பிலிருந்து பல்கலைக் ழகத்திற்கு மாற்றப்பட்டதா லும், இச்சிக்கலின் ஒரு பகுதிக்கு ர்வு காணப்பட்டது. இவ்வாறு 974 பிப்ரவரி தொடங்கி இப் ல்கலைக் கழகம் ஒரு முழுமை யான பல்கலைக் கழகத்தின் அங்கீ காரத்தையும், இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம், பிற நிதியுதவும் நிறுவனங்கள் ஆகியவற்றின் நிதியுதவியையும் பெற்று வருகிறது. எனினும் இந்நிதியுதவி போதுமான அள வினதாக இல்லை என்றே சொல்ல லாம்!

இப்பல்கலைக் கழகம் தொடங் கப்பட்ட முதல் இரண்டு ஆண்டு களில் இதன் நிருவாகம், கல்வி, ஆராய்ச்சி, விரிவாக்கக் கல்வி ஆகியவற்றின் அமைப்பு முறைகள் ஒழுங்குபடுத்தப்பட்டன. இதற்கு நாட்டின் பிற வேளாண் பல்கலைக் கழகங்களின் அனுபவங்கள் பயன் படுத்தப்பட்டன. பல்கலைக் கழ கத்தின் சட்டம் ஒழுங்கு விதி முறைகள் உருவாக்கப்பட்டு முழுமை பெற்றது. மாநில அரசி லிருந்து மாறுதலாகி வந்தவர்கள், பல்கலைக் கழகத்தால் புதிதாகச் சேர்க்கப்பட்டவர்கள் ஆகிய பல தரப்பட்ட பணியாளர்களின் பதவிகள் 1974 அக்டோபர் முதல் ஒழுங்குபடுத்தப்பட்டன. பல்கலைக் கழகத்தின் சட்ட திட் டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏழுகலைப் பிரிவுகளில், பின்கண்ட நான்கு கலைப் பிரிவுகள் செயல் பட்டு வருகின்றன.

(1) வேளாண் கலைப் பிரிவு.

(2) வேளாண் பொறியியல் கலைப் பிரிவு.

(3) கால்நடை மருத்துவம், கால்நடை அறிவியல் கலைப் பிரிவு

(4) அடிப்படை அறிவியல், மானிடவியல் கலைப் பிரிவு ஆகும்.

ஒவ்வொரு கலைப்பிரிவின் கீழும் பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறைகள் செயல்பட்டு வருகின் றன.

மதுரையிலுள்ள வேளாண் கல் லூரியும், கோவை வேளாண் கல் லூரியின் அமைப்பைக் கொண்ட தாக இருக்கும்படி மாற்றி அமைக் கப்பட்டுள்ளது.

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி நீங்கலாக இப்பல்கலைக் கழகத்தில் 22 துறைகள் உள்ளன. அவற்றுள் மீன்வளத் துறை, வன வளத்துறை, உணவு நுண்ணியல் துறை ஆகியவைகளும் அடங்கும். இம்மூன்றிலிருந்தும் முறையே மீன்வள அறிவியல் கலைப்பிரிவு, வனவளஇயல் கலைப்பிரிவு, மனைப் பொருளியல் கலைப்பிரிவு ஆகிய மூன்றும் பல்கலைக் கழக சட்ட திட்டத்தில் காட்டப்பட்டவாறு எதிர்காலத்தில் தோன்றும் வாய்ப்புள்ளது. படர்ந்து நிற்கும் வேளாண் அறிவியலின் பல்வேறு பிரிவுகளையும் உள்ளடக்கும் விதத் தில் ஒருங்கிணைந்த பலதுறைச் செயல் முறைகளுக்கு ஏற்ப இப் பல்கலைக் கழகத்தின் அங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ் வொருதுறைக்கும் கற்பித்தல், ஆராய்ச்சி, விரிவாக்கக் கல்வி ஆகியவற்றை ஒருங்கிணைத்துச் செயல்படுத்தும் பொறுப்பு ஒப் படைக்கப்பட்டுள்ளது. அப்பணி களைப் பயனுள்ள வகையில் தீவிர மாகச் செயல்படுத்துவதற்குத் தேவையான பணியாளர்கள், நிதி வசதிகள் முதலியவை வழங் கப்பட்டுள்ளன.

## கல்வி

பட்டப்படிப்பு, பட்ட மேற் படிப்பு நிலைகளில் புதுமைக் கண் ணோட்டம், மாற்றத் தக்க பாடத் திட்டம் ஆகியவற்றின் அடிப் படையில் கற்பிக்கும் முறை, முழு தும் மாற்றி அமைக்கப்பட்டுள் ளது. முப்பருவக் கல்வித் திட்டம் 1972-இல் கொண்டு வரப்பட் டது. இதன் மூலம் பருவம் முழு வதும் மாணவர் வகுப்பறை யிலும், வெளியிலும் கற்கும் திறன் தொடர்ந்து மதிப்பிடப் படுவதோடு, முழு மதிப்பீடும் பாடம் நடத்தும் ஆசிரியர்களா லேயே செய்யப்படுகின்றது. இம் முப்பருவக் கல்வித் திட்டம் கோவை வேளாண் கல்லூரியிலும், மதுரை வேளாண் கல்லூரியிலும் திருப்திகரமாகச் செயல்பட்டு வருகிறது. 1972-இல் நான் காண்டு பி.எஸ்சி (தோட்டக்கலை) பட்டப்படிப்பும், ஐந்தாண்டு பட்டப்படிப் பி.இ. (வேளாண்) பட்டப்படிப் பும் தொடங்கப்பட்டன. 1973-இல் புதிதாகத் தொடங்கப்பட்ட விதை நுண்ணியல் துறை இரண் டாண்டு எம்.எஸ்சி. (வேளாண்) பட்டக்கல்வியை வழங்குகிறது. **இத்தகு விதை நுண்ணியில் பட்ட மேற் கல்வி இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழ் நாட்டில் தான் துவக்கப்பட்டுள்ளது என் பது குறிப்பிடத் தகுந்ததாகும்.** அடிப்படை அறிவியல், மானிட வியல் கலைப்பிரிவைச் சார்ந்த உயிரியல் துறையினர் சுற்றுப் புறச் சூழல் உயிரியலில் இரண் டாண்டு எம். எஸ்சி. பட்டப் படிப்பை நடத்துகின்றனர். **இதுவும் இந்தியாவிலேயே முதன் முதலாக வழங்கப்படும் பட்டமேற் படிப்புக் கல்வி வகையாகும்!**


படிப்பதுடன், பயிற்சியும் பெறுகின்றனர் மாணவர்கள்!

இப்பல்கலைக் கழகம் நிறுவப் பட்டதிலிருந்து வேளாண் பட்டப் படிப்புக்கு இடம் தேடி வரும் மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் வெகுவேகமாகக் கூடுகின்றது. 1971-ஆம் ஆண் டிற்கு முன்னர் ஒரு இடத்திற்குச் சராசரி ஏழு அல்லது எட்டு மாண வர்கள் விண்ணப்பம் செய்தனர். ஆனால் இப்போது பத்து முதல் பதினைந்து மாணவர்கள் விண்ணப் பிக்கின்றனர். விண்ணப்பம் செய்வதற்குரிய குறைந்த அளவு


# வேலூர் மையக் கூட்டுறவு வங்கி லிட். (வட ஆர்க்காடு மாவட்டம்)

**இன்றைய சேமிப்பு!!** **நாளைய பாதுகாப்பு!!**

ரூபாய் 1,50,000 - மதிப்புள்ள பரிசுப்பொருள்கள்

உங்கள் முதலீட்டின் இரட்டிப்பு வளர்ச்சிக்கும் உயர் வட்டிக்கும் வழி செய்கிறது எங்களின் ''அமுத சுரபி ரொக்கப் பரிசுத் திட்டம்''

தருவீர் ரூ. 50/- . . . பெறுவீர் ரூ. 100/-
இரட்டிப்புத் தொகை . . . இவற்றுடன் பல பரிசுகள்.
இன்றே வாங்கிடுவீர் . . . வென்றிடுவீர் பல பரிசுகள்.

**ஒவ்வொரு குலுக்கலுக்கும்:**

| | |
|---|---|
| முதல் பரிசு | ரூ. 5,000 |
| 2-ம் பரிசு | ரூ. 2,000 |
| 3-ம் பரிசு | ரூ. 1,000 |
| 4-ம் பரிசு (ரூ. 500 வீதம் இரண்டு) | ரூ. 1,000 |
| 5-ம் பரிசு (ரூ. 250 வீதம் நான்கு) | ரூ. 1,000 |
| **மொத்தப் பரிசுகள் 9.** | ரூ. 10,000 |

**15 குலுக்கல்கள் 135 பரிசுகள்**

பெருமதிப்பிற்குரிய ஆதரவாளர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் வேலூர் மையக் கூட்டுறவு வங்கி மிகப் பெருமையுடன் அளிக்கும் புதிய சேமிப்புத் திட்டம் ''அமுதசுரபி பரிசுத் திட்டம்''.

அரிய பரிசுகள் இன்றே நீங்களும் மெம்பராகுங்கள்! கடைசித் தேதி 31—3—1976

கவலையற்ற உங்கள் எதிர்காலத்துக்கும் திட்டமிட்ட வாழ்விற்கும் வழி செய்கிறது எங்களின் இதர டெபாசிட் திட்டங்கள்!

மற்றும் விவரங்களுக்கு உங்கள் அருகாமையிலுள்ள எமது கிளையினை அணுகவும்.
உங்கள் உதவி கொண்டு நாளும் உங்களுக்கு நாங்கள் சேவை புரிவோம்.

சி. வி. ஜான், பி.ஏ., தலைமை நிர்வாக அதிகாரி. ஆர். செல்வின், பி.எஸ்.சி., பி.காம்., செயலாளர். வேலன் தம்பிதாசன், உதவிப் பெருந்தலைவர். முல்லை. பொ. வடிவேல், பெருந்தலைவர்.



சனிக்கிழமையன்று காலையில் 9 மணி முதல் 12 மணி வரையிலும் பிற்பகலில் 4 மணி முதல் 7 மணி வரையிலும் இந்த வங்கி பணியாற்றுகிறது.

பொதுமக்களின் நன்மைக்காக இப்படித் தொடர்ச்சியாக இயங்கும் ஷெட்டியூல் வங்கியின் கிளை இது ஒன்றுதான் என்கிறார்கள். இதுபோன்று, தொடர்ந்து வேலூர் மத்தியக் கூட்டுறவு வங்கியின் கடைவீதி கிளையும் இயங்குகிறது. எனினும் மக்களைக் கவரத்தக்க வகையில் பணியாற்றுவதில் மயிலாப்பூரிலுள்ள தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி சிறப்பான இடத்தைப் பிடித்துள்ளது.

இங்குள்ள மொத்த அலுவலர்கள் பதினான்கு பேர்கள், இரண்டு ஷிஃப்டாக வேலை செய்கிறார்கள். ஆனால் மேலாளர் ஒருவர்தான். அவர் இரண்டு ஷிஃப்டுகளையும் கவனித்துக் கொள்கிறார்.

**உ**ண்மையை அறிய அன்பு எந்தத் தியாகத்துக்கும் தயாராகவே இருக்கிறது. வசனத்தை விட, கவிதை தன்னையே கட்டுப் படுத்திக் கொண்டு அதிகமாக இன்பத்தையும் சுதந்திரத்தையும் அனுபவிக்கிறதல்லவா?

—கவியரசர் தாகூர்.

முதல் ஷிஃப்டில் பணியாற்றுபவர்கள் காலை 9 முதல் 12 மணி வரை வங்கியின் அலுவல் நேரப் பணிகளைக் கவனிக்கிறார்கள். அடுத்த ஷிஃப்டில் பணியாற்றுவோர் 12 மணி முதல் 3 மணி வரை அலுவல்நேரப் பணிகளைக் கவனிக்கிறார்கள். மீண்டும் முதல் ஷிஃப்டில் பணியாற்றுபவர்கள் பிற்பகல் 3 மணி முதல் 5 மணி வரையிலும், இரண்டாவது ஷிஃப்டில் பணியாற்றுபவர்கள் மாலை 5 முதல் 7 மணி வரையிலும் பணியாற்றுகிறார்கள்.

காலை நேரத்திலும் மாலை நேரத்திலும் மிகவும் கூட்டமாக உள்ள இவ்வங்கி. சின்னஞ்சிறியவர்கள் பணம் போடவந்தாலும் எடுக்க வந்தாலும் மிகுந்த பொறுப்புடன் கவனித்து அவர்களுக்கு இவ்வங்கியில் பணி புரிவோர் உதவுகிறார்கள்.

சென்னையில் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியில் 22 கிளைகள் உள்ளன. அவ்வங்கிகளில் மூன்றாவது இடத்தை மயிலாப்பூர் வங்கி பெற்றுள்ளது. இந்த ஆண்டு இவ்வங்கியின் கணக்கு ஐம்பது இலட்சம் ரூபாயை எட்டும் என்று தெரிகிறது.

ஏறத்தாழ 2000 பேருக்குமேல் கணக்கு வைத்திருக்கும் இந்த வங்கி அமைந்துள்ள இடமே வங்கிகள் எப்படி அமைய வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது.

இந்த வங்கியில் மேனாட்டு முறையில் ஒரு பெட்டி வைத்திருக்கிறார்கள். வங்கியில் 'செக்' போட வேண்டியவர்கள் அதற்கு உரிய சலான்களை நிறைவு செய்து வேண்டும் என்பதில்லை. 'செக்'கில் கையெழுத்திட்டுத் தங்களுடைய அக்கவுண்ட் எண்ணைக் குறிப்பிட்டு அந்தப் பெட்டியில் போட்டுவிட்டுச் சென்று விடலாம். வங்கியில் உள்ளவர்களே 'சலானை' நிறைவு செய்துகொண்டு உரிய பணிகளைச் செய்கிறார்கள்.

''தொடக்க காலத்தில் இப்படிக் காலை 9 மணி முதல் இரவு 7 மணி வரை வங்கி செயல்படுவது தொல்லையாகவே தெரிந்தது. எனினும் இப்பொழுது இப்படிப் பணியாற்றுவது பொதுமக்களுக்கு எவ்வளவு நன்மையளிக்கிறது என்பது நன்கு விளங்குகிறது. இதுபோன்ற வசதியை இப்பகுதி மக்கள் இழக்க விரும்ப மாட்டார்கள் என்பதை நாள் தோறும் இங்கு வரும் வாடிக்கையாளர்களிடம் பேசுவதிலிருந்து தெரிந்து கொள்கிறோம்.

''கூட்டுறவுத்துறை அமைப்புகள் கூட்டுறவு வங்கியில் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை முழுமையாகச் செயல் படுத்துவதுடன் மாநில அரசு நிறுவனங்கள், அறநிலையங்கள் பிற அமைப்புகள் கூட்டுறவு வங்கியிலேயே முதலீடு செய்யும் நிலை உருவானால் ஈடு இணையற்ற நிலையில் வங்கி வளரும்'' என்றார் வங்கியின் மேலாளர் திரு ஈ. ஆர். ரங்கநாதன்.

''தமிழ்நாடு கூட்டுறவு வங்கியின் மயிலாப்பூர் கிளை இப்படித் தொடர்ந்து காலை 9 மணி முதல் இரவு 7 மணிவரை இயங்க வேண்டும் என்ற முயற்சிக்கு முழு ஆதரவு காட்டிச் செயல்படுத்தியவர்கள் வங்கியின் தலைவர் திரு. கனகசபை அவர்களும், கூட்டுறவுப் பதிவாளர் அவர்களும் ஆவார்கள்.

''மயிலாப்பூர் கிளை இப்படி நாள் முழுவதும் தொடர்ந்து பணியாற்றுவதை ரிசர்வ் வங்கியும் பாராட்டியுள்ளது.

''அனைத்துக்கும் மேலாக மயிலாப்பூர் பகுதி மக்கள் பாராட்டுகிறார்கள். அந்த அளவுக்கு மக்கள் மனத்தில் தமிழ்நாடு கூட்டுறவு வங்கியின் மயிலாப்பூர் கிளை இடம் பிடித்துள்ளது.

''சுருக்கமாகச் சொன்னால் — தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் மயிலாப்பூர் கிளை, ஏனைய வங்கிகளுக்கு வழிகாட்டியாக விளங்குகிறது என்பது மிகையல்ல-நூற்றுக்கு நூறு உண்மை!'' என்கிறார் அவர்.

—மாமூலன்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.



பயிற்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினால் 500 பேர்கள் பயிற்சி பெற்றனர். தானிய வகைகள், பயறுவகைகள் வெளியிடப்படுவதற்கு முன், அவை மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் வயல்-பரிசோதனை செய்யப்பட்டன. இவை போன்ற 74 வயல் பரிசோதனைகள், கடந்த மூன்றாண்டு காலத்தில் நடத்தப்பட்டன. விரிவாக்க அலுவலர்களுக்குச் செயல் திறன் பற்றிய முதல் தரமான அறிவினையும், அனுபவத்தையும் அளிப்பதற்கும் ஆய்வாளர்க்குத் தங்களின் ஆய்வுக் கண்டுபிடிப்புகளிலுள்ள, வலிவும் மெலிவும் உள்ள பகுதிகளைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கும் இவ்வயல் பரிசோதனை மிகவும் உதவியது.



புதிய கண்டுபிடிப்புகளைக் கண்டு மகிழும் உழவர் பெருமக்கள்

## வயல் நாள்

1972-74-ல் இப்பல்கலைக் கழகத்தின் கீழ், மூன்று தேசிய செயல்விளக்க நிலையங்கள் தென்னாற்காடு, திருச்சி, மதுரை ஆகிய மாவட்டங்களில் இருந்தன. தற்சமயம் மதுரையில் மட்டும் ஒரு நிலையம் செயல்பட்டு வருகிறது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 151 செயல் விளக்கங்கள், உழவர்களின் நிலங்களில் செய்து காட்டப்பட்டுள்ளன. தீவிரசாகுபடி முறைகட்கு நவீன அறிவியல் முறைகளைப் பயன்படுத்துவதனால், உழவர்கட்கு மிகுந்த பயன் கிடைக்கின்றன. அவர்களின் நிகர வருமானம் ஓராண்டில் ஒரு எக்டருக்கு ரூபாய் 18,000 முதல் 50,000 வரை கிடைப்பதன் மூலம் செயல் விளக்கத் திட்டத்தின் பயன் நன்கு தெரிய வருகின்றது. செயல்விளக்க நிலையங்கள், 'வயல் நாள்' கொண்டாடுவதற்கும் பயன்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிகளில் சுமார் 6,000 உழவர் பெருமக்கள் கலந்து கொண்டனர்.

கோவில்பட்டியில் மானாவாரி சாகுபடி பற்றிய ஒரு முன்னோடித் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இம்மாவட்டத்திலுள்ள பருத்தி பயிரிடக்கூடிய களிமண் பூமிக்கு ஏற்ற புதிய பயிர் திட்டங்களும், சாகுபடி முறைகளும் உருவாக்கப்பட்டுள்ளன. மண்ணின் நீர் தாங்கும் தன்மையைப் பாதுகாக்க கலப்புப் பயிரிடுதல், ஊடுபயிரிடுதல் ஆகிய முறைகளை உருவாக்கி உழவர்களின் நிலங்களிலேயே செயல் விளக்கம் செய்து காட்டப்பட்டது. நீர் சேமித்தல், மற்றும் சேமித்த நீரை சிக்கனமான முறையில் பயன்படுத்துதல் பற்றிய திட்டங்கள் உருவாக்கப்பட்டு முன்னோடித் திட்டப் பகுதிகளில் செயல் விளக்கம் செய்து காட்டப்பட்டது.

வேளாண்மை சம்பந்தமான பல்வேறு தலைப்புகளில், ஆங்கிலத்திலும், தமிழிலும் பல வெளியீடுகளைப் பதிப்பித்தலில், தகவல் தொடர்பு நிலையம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. தகவல் தொடர்பு நிலையத்தின் கீழ் உள்ள பல்கலைக் கழகப் பதிப்பகம், இதுவரை சுமார் 100 கையேடுகளும் வெளியீடுகளும், ஒரு சில புத்தகங்களும் பதிப்பித்துள்ளது. தமிழில் 'வளரும் வேளாண்மை' என்னும் காலாண்டுப் பத்திரிகையை வெளியிட்டு, பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இவ்விதம் உழவர் பெருமக்களுக்கு மட்டுமின்றி, பிற பொது மக்களுக்கும் வேளாண்மை சம்பந்தமான தெரிந்தெடுக்கப்பட்ட தலைப்புகளில் நவீன விஞ்ஞான முறைகள் பற்றி விளக்க முயல்கிறது.

## அஞ்சல் வழிக் கல்வி

வேளாண் பெருமக்கள் நன்மைக்காக இப்பல்கலைக் கழகம் **'அஞ்சல வழிக் கல்வி'** முறையினை ஆரம்பித்து, இதுவரை 18 குழுக்களுக்கு நன்முறையில் பயிற்சியளித்துள்ளது. இதனால் 300 உழவர்கள் தீவிர நெல்சாகுபடி, கோழிவளர்ப்பு, காய்கறிச் சாகுபடி, பருத்தி சாகுபடி, ஆகியவற்றில் பயிற்சி பெற்றுள்ளார்கள். நவீன அறிவியல், வானொலி மூலம் அடிக்கடி ஒலி பரப்பப்படுகின்றது. வேளாண் மக்களிடமிருந்து வரும் ஆயிரக் கணக்கான கேள்விகளுக்குப் பதில்கள் கொடுக்கப்பட்டுள்ளன. உழவர்களின் அன்றாட—தீர்க்க முடியாத—சில பிரச்சினைகளை **'வேளாண் அறிவுரைக் குழு'** தீர்த்து வைக்கின்றது. இக்குழுவில் பல்கலைக் கழக பேராசிரியர்கள் பலரும் அடங்கியுள்ளனர். வேளாண் மக்களின் சாகுபடி சம்பந்தமான சிக்கல்கள் அரசின் விரிவாக்க ஊழியர்கள் மூலம், இக்குழுவிற்கு தெரிவிக்கப்படுகின்றன. பல்கலைக் கழகத்தின் கீழுள்ள இரு உழவர் பயிற்சி நிலையங்களும், இதற்கு உதவுகின்றன. சிக்கல்கள் தகுந்த ஆராய்ச்சியாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டு, அவர்கள் சிக்கல்களை போக்கக்கூடும் வழி முறைகளை மீண்டும் வேளாண் பெருமக்களுக்குத் தெரிவிக்கப்படுவது மட்டுமல்லாமல், அவர்கள் நிலத்திலேயே செயல் விளக்கம் செய்து காட்டப்படுகின்றது.

இறுதியாக, இப்பல்கலைக் கழகம் உருவாகி நான்காண்டுகளில் நல்லதொரு வளர்ச்சியினை அடைந்து, கல்வித் துறையிலும், நிருவாகத்திலும் சிறந்ததொரு ஒப்பற்ற நிலையமாகத் திகழ்கின்றது. மாநிலத்திலுள்ள உழவர்களின் சிக்கல்களை எதிர் நோக்கி அவற்றைத் தீர்ப்பதில் இப்பல்கலைக் கழகம் தயார்படுத்திக் கொண்டுள்ளது. புதியதாக பல்வேறு துறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துறைகளுக்கிடையே ஒருமித்த, இணைந்த, கூட்டு முறையில் அணுகி, நவீன அறிவியல் முறைகள் மூலம், நிலம், நீர் மற்றும் இயற்கை வளங்களை சிக்கனமாகப் பயன்படுத்தி விளைச்சலைப் பெருக்கப் பல்வழிகளிலும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. மத்திய மாநில அரசுகளின் உதவியுடன் நன்முறையில் வளர்ச்சியடையவும் இப்பல்கலைக் கழகம் வாய்ப்புக்களை எதிர் நோக்கியுள்ளது!



உழவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க உதவுகிறது





# தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் மயிலாப்பூர் கிளை

கூட்டுறவுத் துறையின் பணிகளில் ஏனைய மாநிலங்களுக்கு வழிகாட்டும் வகையில் நமது மாநிலக் கூட்டுறவு அமைப்புகள் இயங்கி வருவது அனைவரும் அறிந்த ஒன்றாகும்!

இந்தியாவிலே உள்ள மாநில கூட்டுறவு வங்கிகளில் இரண்டாவது இடத்தை வகிப்பது தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியாகும். முதன்மையான இடம் வகிப்பது மராட்டிய மாநிலக் கூட்டுறவு வங்கி என்கிறார்கள். ஆனால், இந்தியாவிலே சிறந்த மத்தியக் கூட்டுறவு வங்கி, கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கி.

தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஏறத்தாழ எழுபது ஆண்டுகளுக்கு முன் தோற்றுவிக்கப்பட்டதாகும்.

பிரிக்கப்படாத சென்னை இராச்சிய அமைப்பு இருந்த பொழுது தோன்றியது இவ்வங்கி. எனவே, மொழி வழி மாநிலங்கள் அமைந்த பொழுது இவ்வங்கியும் பிரிவினைக்கு உள்ளாகியது. சென்னை மாநிலக் கூட்டுறவு வங்கியில் பணியாற்றியவர்கள் உட்பட பிரிக்கப்பட்டு அண்டை மாநிலங்களில் அமைக்கப்பட்ட கூட்டுறவு வங்கிகளுக்குச் சென்றுவிட்டனர்.

பிரிக்கப்பட்டு அமைக்கப்பட்ட வங்கிகள் அண்டை மாநில வளர்ச்சியை, அதன் பின்னர் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி அடைந்துள்ளது.

[illegible] இஃனந்து ஆண்டுகளில் [illegible] 1967-ஆம் ஆண்டுக்குப் பிறகு [illegible] மாநிலக் கூட்டுறவு வங்கியின் வளர்ச்சி மிகவும் சிறப்பானதாகும். தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கிக்கு இப்பொழுது சென்னை மாநகரில் 22 கிளைகள் உள்ளன. ஒவ்வொரு கிளையும் நாள்தோறும் சிறப்பான வளர்ச்சியை அடைந்து வருகின்றது.

> *தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் மயிலாப்பூர் கிளை காலை 9 மணி முதல் இரவு 7 மணி வரை தொடர்ந்து பணியாற்றுகிறது. இந்தியாவிலுள்ள ஷெட்டியூல் வங்கியின் கிளைகள் எதுவும் இந்தவகையில் பணியாற்றவில்லை.*

தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் எல்லாக் கிளையும் பெறாத சிறப்பான பெருமையை மயிலாப்பூரில் உள்ள தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் கிளை பெற்றுள்ளது.

இந்தக் கிளை வங்கி 1967-ஆம் ஆண்டில்தான் தொடங்கப்பட்டது.

இந்தியாவிலுள்ள எந்த ஷெட்டியூல் வங்கிக்கும் இல்லாத பெருமை இவ்வங்கிக்கு உள்ளது. ஒருநாள் முழுவதும் தொடர்ச்சியாகப் பணியாற்றுகிறது.

திங்கள்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை காலை 9 மணி முதல் இரவு 7 மணி வரை தொடர்ச்சியாக வேலை செய்கிறது. இடைவேளையே கிடையாது. இந்த நேரத்தில் எப்பொழுது வேண்டுமானாலும் பணம் போடலாம், பணம் எடுக்கலாம்.



மேலாளர் திரு. ரங்கநாதன்.

# வெற்றியை நோக்கி....!

...க்குநாள்
...டைய வாழ்க்கைக்கு
... அளிக்கும்
...காப்புகள் ஏராளம்

... அலுவலர்களுக்கு
...யப் பாதுகாப்புத் திட்டம்
...ந் தொடர்ந்து
...யத்திலுள்ள அனைவரும்
...டையும் வகையில்
... பாதுகாப்புத் திட்டம் !

...டி அளிக்கப்படும்
...காப்புகளைப் போன்று
...கு தாமே
...வாக்கிக் கொள்ளும்
...காப்புத் திட்டம்
...ம்பநலத் திட்டம் !

...லாரும்
...புற்றிருக்கச்
...ல்படுத்தும்
...டங்கள்
...ற்றி பெற்றிட
...மிக்க
...த்தளம் அமைய

...வுவதே
...வான குடும்பம்.





# குடும்ப நலத் திட்டம் — மத்திய அரசு முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்!

## முதல்வர் கலைஞர்

இந்தியாவில் குடும்ப நலத் திட்டத்தில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தை வகிக்கிறது.

22 மாநிலங்களில் முதலிடத்தை மராட்டியமும், இரண்டாவது இடத்தை இந்தியாவிலேயே அளவில் சிறிய மாநிலங்களில் ஒன்றான-நம்முடைய மாநிலத்தில் இருக்கிற செங்கற்பட்டு மாவட்டத்திற்கு இணையான-அரியானா, மாநிலமும், மூன்றாவது இடத்தைத் தமிழ்நாடும் பெற்றிருக்கின்றன.

ஆகவே, தமிழ்நாட்டில் நாம் இந்தத் திட்டத்தை வேகமாக நிறைவேற்றவில்லை என்கிற குறைபாட்டை யாரும் சொல்ல இயலாது!

இந்தத் திட்டத்தை இன்னும் கடுமையாக்க வேண்டும் என்று அனந்தநாயகி அம்மையார் எடுத்துச் சொன்னார். நான் முழுக்க முழுக்க இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

பஞ்சாப் மாநிலத்தில் கட்டாயக் குடும்ப நலத்திட்டச் சட்டம் கொண்டு வரப்பட்டிருப்பதாக அம்மையார் சொன்னார். ஆனால், நான் உடனடியாக அதிகாரிகளை அழைத்துப் பேசினேன். இப்படிப்பட்ட ஒரு சட்டம் போடலாமா என்பது பற்றி அங்கே பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் அதிகாரிகள் என்னிடம் தகவல் கொடுத்திருக்கிறார்கள்.

அப்படி ஒரு சட்டத்தை அவர்கள் நிறைவேற்றி இருந்தால் கூட அது மகிழ்ச்சிக்குரிய ஒன்று தான்!

ஆனால், பஞ்சாப் என்றோ-தமிழ்நாடு என்றோ மாநில அளவில் இந்தச் சட்டங்களைக் கொண்டு வருவதற்குப் பதிலாக அகில இந்திய அளவிலேயே இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவது மிகப் பொருத்தமுடைய ஒன்றாக இருக்கும்.

ஏனெனில், மக்களுக்குத் தேவையான சில முக்கியமான திட்டங்கள் அகில இந்திய அளவில் தான் நடைபெற்றாக வேண்டும்.

மதுவிலக்குத் திட்டம் என்று எடுத்துக் கொண்டால், அது அகில இந்திய அளவில் நிறைவேற்றப்படாமல் இருக்கின்ற காரணத்தால்தான் தமிழ் நாட்டில் என்னதான் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முன்வந்தாலும்,

பக்கத்திலே இருக்கிற பாண்டிச்சேரி அழைக்கிறது!

அருகாமையில் இருக்கிற ஆந்திரா 'வா' என்று சொல்கிறது!

தமிழரசு

மலர்: 6. இதழ்: 12

கர்நாடகம் கண் சிமிட்டுகிறது!

கேரளம்-'இங்கே வந்தால் என்ன?' என்று ஆசை காட்டுகிறது!

இதற்கிடையே தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தை வைத்துக் கொண்டு தத்தளித்துக் கொண்டிருக்கிறது!

அதுபோலத்தான் மக்களுக்குத் தேவையான இதுபோன்ற முக்கியமான திட்டங்களை அகில இந்திய அளவில் நிறைவேற்ற வேண்டும் என்ற கருத்தை எல்லாத் தரப்பிலுள்ளவர்களும் ஏற்றுக் கொள்வார்களென்றே நம்புகிறேன்.

தமிழ்நாட்டிலே மாத்திரம் செய்தாலென்ன? பஞ்சாபில் மாத்திரம் செய்தாலென்ன? என்ற கேள்விக்கு விடையளிக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறேன்!

இந்தியாவில் யார் வேண்டுமானாலும் எங்கே வேண்டுமானாலும் போகலாம். ஒரு மாநிலத்திலுள்ள மக்கள் இன்னொரு மாநிலத்தில் சென்று குடியேறத் தடை கிடையாது.

தமிழ்நாட்டில் நாம் இந்தத் திட்டத்தை வெகுவேகமாக நிறைவேற்றி நாலரைக்கோடி மக்கள் பத்தாண்டுக் காலத்தில் 6 கோடியாவதைத் தடுத்து நாலரைக் கோடியிலேயே நிறுத்திவிடுவதாக வைத்துக் கொள்வோம்!

இந்த நாலரைக் கோடியில் நாம் நிற்கும் நேரத்தில் இப்படிப்பட்ட கடுமையான முறையைப் பின்பற்றுமல், ஆந்திரமோ-கேரளமோ-கர்நாடகமோ அங்கெல்லாம் எட்டுகோடி, பத்து கோடி என்று பெருகிவிட்டால் அங்கு வாழ முடியாமல் அவர்கள் தமிழ்நாட்டுக்கு வருவதற்கு எவ்விதத் தடையும் கிடையாது. அவர்கள் இங்கே வந்து குடியேறிவிடுவார்கள்.

ஆகவேதான் ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்குச் செல்லலாம்-அப்படிச் செல்லுகின்ற சிறு பான்மையினருக்கு வாழ்வளிக்க ஒவ்வொரு மாநில அரசும் கடமைப்பட்டிருக்கிறது என்கிற அரசியல் சட்டத்தைக் கையிலே வைத்துக்கொண்டு ஒரு மாநிலத்திலே மாத்திரம் குடும்பநலத் திட்டத்தை வெகு வேகமாக-வெற்றிகரமாக நடத்துவதென்ருல் மற்ற மாநிலங்களில் அங்கே தாக்குப் பிடிக்காமல் அதிகரிக்கும் மக்கள் எங்கே குடும்ப நலத் திட்டம் சிறப்பாக நிறைவேற்றப்படுகிறதோ அங்கே வந்து குடியேறிவிடுவார்கள்.

புதிதாக இங்கே பிள்ளைகள் பிறக்காவிட்டாலும், வேறு மாநிலத்தில் பிறந்தவர்களுக்கு இது இடமாக ஆகிவிடும்.

ஆகவேதான் நான் சொல்லுகின்றேன் ஒரு மாநிலத்திலே என்றில்லாமல் அகில இந்திய அளவில் இந்தத் திட்டத்தை கடுமையாக்க வேண்டும்.

உதாரணமாக, திட்டங்களுக்காகச் செலவிடப்படுகின்ற தொகை-அல்லது நம்முடைய வரவு-செலவுத் திட்டம் மாநில அரசானாலும் அல்லது மத்திய அரசானாலும் அந்த வரவுசெலவு திட்டத்தில் இதற்காக ஒதுக்கப்படுகின்ற தொகை பெருமளவிலே இருந்திட வேண்டும்.

மாநில அரசு அதிக அளவு தொகை ஒதுக்க வேண்டுமென்பது எல்லா மாநில அளவிலும் இருக்க வேண்டும். இல்லா விட்டால் முன்பு சொன்ன விவாதம் தான் முன்னால் வந்து நிற்கும்.

ஆகவே இதில் மத்திய அரசு முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இருபத்து ஐயாயிரம் கோடி ரூபாய் செலவிடுவது என்று திட்டமிட்டார்களென்ருல் அதில் மூவாயிரம் கோடி ரூபாயாவது குடும்ப நலத் திட்டத்திற்கென ஒதுக்க வேண்டும்.

திட்டங்களால்எவ்வளவுநல்ல பயன்கள்கிடைத்தாலும் அதனைப் பங்கிட்டுக் கொள்கிறவர்களின் தொகை அதிகரிக்கப்படுமேயானல் அவரவர்களுக்குப் பயன் குறைவாகத்தான் கிடைக்கும்.

சாமானிய மக்களின் வாழ்க்கையை அடிப்படையாகக்கொண்டு இந்தப் பிரச்சினையை இன்று அணுகுகிறோம்.

அப்படி அணுகுகிற நேரத்திலே தான் மத்திய அரசின் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டமானாலும், மாநில அரசுகள் நடத்துகின்ற அதையொட்டிய ஐந்தாண்டுத் திட்டங்களானாலும்-அடுத்தடுத்து வருகின்ற ஆறுவது, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டங்களானாலும் அதன் பயனை மக்கள் முழுமையாக அனுபவிக்க வேண்டுமானால் மக்கள் தொகைப் பெருக்கத்தை ஒரு கட்டத்திலே வெகு வேகமாகத் தடுத்து நிறுத்தியாக வேண்டும். அதற்கான முயற்சிகளை நாம் மேற்கொண்டாக வேண்டும்.

55 ஆயிரம் கோடி ரூபாய் திட்டத்தில் 5 ஆயிரம் கோடி ரூபாயை இதற்காகச் செலவிட்டால் மிச்சமுள்ள 50 ஆயிரம் கோடிக்கான திட்டத்தை நாம் வெற்றிகரமாக ஆக்குகிறோம் என்று பொருள்.

இந்த ஐந்தாயிரம் கோடியை நாம் அதற்காகச் செலவழிக்காமல் நாம் 55 ஆயிரம் கோடி ரூபாயை செலவழித்தோமானல்-




ஓட்டைக் குடத்திலே தண்ணீரை ஊற்றுவதுபோல நாம் எத்தனை ஆயிரம் கோடி ரூபாயை திட்டங்களுக்காகச் செலவழித்தாலும் — கொஞ்சம் அதிகத் தொகையை ஒதுக்கி மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தினல்தான் பெரும் பயனை மக்கள் சமுதாயமும் நாடும் அடைய முடியும் என்ற கருத்தினை நான் இந்த நிகழ்ச்சியின் சார்பாக மத்திய அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்கிற வேண்டுகோளையும் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு காலத்தில் அதிகக் குழந்தைகளைப் பெறுவது கூடாது என்று சொல்வதே பாவம் என்று கருதப்பட்டது.

கடவுள் பெயரால்-மதத்தின் பெயரால் மறுக்கப்பட்டது. ஆனல் இன்றைக்கு மதங்களை—சாஸ்திரங்கள்—சம்பிரதாயங்களையெல்லாம் கடந்து-இது மிக மிக முக்கியமான ஒரு தேவை என்ற சூழ்நிலை நாட்டில் ஏற்பட்டிருக்கிறது.

ஒரு திருமணத்தில் பேசும்போது நண்பர் ஒருவர் 'அதிகக் குழந்தைகள் பெறுவதுதான் சிறப்பு'' என்ருர்.

அப்படிச் சொன்னதற்குக் காரணம்-எட்டுக் குழந்தைகள் பிறந்த காரணத்தால்தான் எட்டாவது குழந்தையாகக் கண்ணன் பிறந்தான். இல்லா விட்டால் கண்ணனே பிறந்திருக்க மாட்டான் என்று சொன்னுர்.

நான் அதற்குப் பதில் சொல்லும்போது—

துரியோதனுதியர் 100 பேர் பிறந்தார்கள். அந்த நூறு பேர்களுமே கெட்டவர்களாகத்தான் இருந்தார்கள். நல்லவன் பிறப்பான்—நல்லவன் பிறப்பான் என்று காத்திருந்தால், 101-வது பேரும் கெட்டவனுகத்தான் பிறந்திருப்பான்.

பரமசிவனுக்கு இரண்டு பிள்ளைகள்-புராணப்படி. இரண்டு பேருமே நல்லவர்கள்! ஆகவே கடவுள்களே இதற்கு விரோதமானவர்களல்ல! என்ற கருத்தை நான் அந்தக் கூட்டத்திலே வெளியிட்டேன்.

இப்படிப்பட்ட கருத்துக்களை நல்ல முறையில் நாம் மக்களிடம் பிரச்சாரம் செய்ய வேண்டும்.

தமிழக அரசின் சார்பாக, குடி



நீர் வாரியத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

1975-ஆம் ஆண்டில் ஒரு திட்டம் நிறைவேற்றப்படுகிறதென்ருல் இன்றைக்கு ஒரு நகரத்தில் கிராமத்தில் எவ்வளவு மக்கள் இருக்கிருர்கள் என்ற கணக்கை மாத்திரம் பார்த்து அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில்லை.

2001-வது ஆண்டு எவ்வளவு பேர் இருப்பார்கள் என்று கணக்கிட்டு அந்தத் திட்டங்களை நாம் நிறைவேற்றுகிறோம்.

இப்போது 40 ஆயிரமாக இருக்கிற ஒரு கிராமத்தின் மக்கள் தொகை, 2001-ஆம் ஆண்டு 60 ஆயிரமாக மாறிவிடக்கூடும் என்று கணக்கிட்டு அன்றைக்கு எவ்வளவு தண்ணீர் தேவைப்படும்-எவ்வளவு தொகை ஒதுக்க வேண்டும் என்று கணக்கிட்டுச் செலவிட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஆகவே இந்தப் பெரும் திட்டத்தை எல்லாத் திட்டங்களையும் விடப் பெரும் திட்டமாக மத்திய அரசும் ஒவ்வொரு மாநில அரசும் நிறைவேற்ற முன்வந்திட வேண்டும்.

சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை நம்முடைய தனி அதிகாரியும், ஆணையாளரும் எல்லாருடைய ஒத்துழைப்பையும் பெற்றுக் கடந்த ஆண்டு மிக வெற்றிகரமாகச் செய்து முடித்தார்கள்.

இந்த ஆண்டு இருபதாயிரம் பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்வதென்று இந்தத் திட்டத்தைத் தொடங்கி இருக்கிருர்கள்.

இருபதாயிரம் பேர் சிகிச்சை செய்து கொள்கிருர்களென்ருல் ஒரு இலட்சம் பேரை-சென்னையில் பிறப்பதைத் தடுக்கிருர்கள் என்று அர்த்தம்.

இன்று தொழிலதிபர்களுக்கு அதிகச் சம்பளம்-போனஸ் போன்ற பிரச்னைகள் எல்லாம் வருகிறது என்ருல்-ஒரு தொழிலாளி இரண்டு குழந்தைக்குத் தகப்பனுக இருக்கிற வரை அவனுக்குப் பெரிய சங்கடம் இல்லை.

அந்தக் குடும்பம் பெருகி விடுமானல் சம்பளம்-போனஸ் அதிகமாகத் தேவைப்படுகிறது.

ஆகவே, முதலாளிகள் தங்களின் சுயநலத்திற்காகவாவது தங்கள் தொழிலாளிகளெல்லாம் இந்தக் குடும்பநலத் திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டு அவர்களின் குழந்தைகள் குறைக்கப்படுவார்களேயானல்- தொழிலதிபர்களுக்குக்கூட நல்லது-உற்பத்தியை வேறு முனையில் பெருக்குவதற்கும் சாலச் சிறந்ததாக இருக்கும்.

**(முதல்வர் கலைஞர் அவர்கள் சென்னை மாநகராட்சியின் சார்பில் 'குடும்ப நலத் திட்ட முகாமை தொடங்கி வைத்து ஆற்றிய உரை).**



# நிரந்தரப் பொருட்காட்சி

பொருட்காட்சிகள் அவ்வப்போது நடைபெறுவதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால், என்றைக்கும் வேண்டுமானாலும் போய்ப்பார்க்கக்கூடிய நிரந்தரமான பொருட்காட்சி ஒன்று சென்னைக் கிண்டித் தொழிற்பேட்டையில் உள்ளது.

1957ல் கிண்டித் தொழிற்பேட்டை உருவாயிற்று. அப்போது 148தொழிற்கூடங்களே இருந்தன. இன்று 200க்கு மேற்பட்ட தொழிற்கூடங்களில் பல்வேறு தொழில்கள் பாங்காய் வளர்ந்து வருகின்றன. 404 ஏக்கர் பரப்பளவுள்ள இத் தொழிற்பேட்டையில் சுமார் 5,000 தொழிலாளர்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். இவர்களுக்கு 500க்கு மேற்பட்ட குடியிருப்புகளும் கட்டித் தரப்பட்டுள்ளன.

தமிழக அரசு, இங்குத் தொழில் தொடங்கவிருப்போருக்குத் தொழில் சம்பந்தமான தகவல்களைக் கூறி உதவியும் புரிந்து வருகிறது.

சிறிய அளவில் தொழிலைத் தொடங்கியவர்கள், கிண்டித் தொழிற்பேட்டைக்கு வந்த பிறகு தொழிலில் நல்ல வளர்ச்சி பெற்றிருப்பதையும், இடவசதி இல்லாமல் அவதிப்பட்டவர்கள் இன்று தொழிற்பேட்டையில் குறைந்த வாடகைக் கட்டணத்தில் நிறைந்த இடவசதி பெற்றிருப்பதையும் நாம் பார்க்கிறோம்.

தொழில் வளம் பெறுவதற்குத் தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ள இத் தொழிற்பேட்டையில் எல்லா வசதிகளும் உள்ளன. தொழில் நுட்பத் தகவலகம், நூலகம், பேருந்துநிலையம், அஞ்சல் நிலையம், காவல் நிலையம், உணவுவிடுதி முதலானவை தொழிற்பேட்டைக்குள்ளேயே இருக்கின்றன.

இந்த நிரந்தரப் பொருட்காட்சி 1959ல் அமைக்கப்பட்டது. இப்பொருட்காட்சியில், கிண்டித் தொழிற்பேட்டையிலுள்ள தொழிற்கூடங்களில் தயாரிக்கப்பெற்ற பல்வேறு பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன இவை தமிழ்நாட்டுத் தொழிலாளர்களின் கைத்திறமையைக் காட்டுவனவாக உள்ளன.

இப்பொருட்காட்சியை அமெரிக்கா, பிரிட்டன், தான்சானியா, கம்போடியா, பிலிப்பைன்ஸ், மலேசியா ஆகிய நாடுகளிலிருந்து வந்தவர்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

## பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் மாற்றம்

பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம்பெறும் சமூகத்தினரைக் குறிப்பிடும்போதும், தாழ்த்தப் பட்டோர் பட்டியலில் இடம் பெறும் சமூகத்தினரைக் குறிப்பிடும்போதும், ஒரு சில சமூகத்தினரைக் பெயர்களில் இறுதி எழுத்து ''ர்'' என்று இருப் பதற்குப் பதிலாக ''ன்'' என்று நீண்டகாலமாகக் குறிக்கப்பட்டு வருகிறது. இனி தமிழ்நாடு அரசு தயாரிக்கும் பட்டியலில் அந்தச் சமூகங்களின் மதிப்பைக் குறைக்கும் வகையில் ''ன்'' என்று இருக் கிற இறுதி எழுத்துக்களையெல்லாம் நீக்கிவிட்டு, அந்த இடத்தில் ''ர்'' என்று இருக்கிற எழுத்தையே பயன் படுத்தவேண்டுமென்று தமிழக அரசு ஆணைபிறப் பித்துள்ளது.

# ஆலயம் ஆற்றும் அரும் பணிகள்



# அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயில்

'சாமிபழ'

கடந்த ஒரு நூற்றாண்டுக்குள் உருவாகி ஓங்கிவளர்ந்து உயர் புகழ் பெற்று விளங்கும் திருக்கோயில்களுக்குள் குறிப்பிடத்தக்க ஒரு கோயில் அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயில். புகழ்மலிந்த தென்பழநிபோல, சென்னை நகரப்பகுதியில், சிறப்புப் பெற்றுத் திகழும் இந்த வடபழநி ஆண்டவர் திருக்கோயில், சாலிக்கிராமம் ஊராட்சியில் சாலிக்கிராமத்தில் அமைந்துள்ளது. இது கோடம்பாக்கம் இரயில் நிலையத்திலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவில் வடமேற்கில் உள்ளது.

சாலிக்கிராமம் அண்ணாசாமி என்பவர், தேனாம்பேட்டையைச் சேர்ந்த இரத்தினவேல் செட்டியார் என்பவரின் துணையோடும், பொது மக்களிடமிருந்து பெற்ற பொருளுதவியோடும், செங்கற் கட்டடம் ஒன்றுகட்டி, இப்போதுள்ள பழநியாண்டவர் திருமேனியை அமைத்து அந்தத் திருக்கோயிலில் எழுந்தருளச் செய்தார் என்றும், அதன் பிறகு, பாக்கியலிங்கத் தம்பிரான் என்பவர், கொஞ்சம் கொஞ்சமாகத் திருப்பணிகள் செய்தார் என்றும் கூறப்படுகிறது.

பிறகு 1-4-65-ல் தமிழவேள் பி.டி. இராசன் அவர்கள் தலைமையில் திருப்பணிக்குழு ஒன்று நிறுவப்பட்டது. இத்திருக்கோயிலுக்கு இராசகோபுரம் கட்டுவதற்காக அந்தத் திருப்பணிக்குழுவினரால், 22-1-67-ல் கால்கோள் செய்யப்பட்டது. இராசகோபுரம் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே, பட அதிபர் திரு. எம்.எம்.ஏ. சின்னப்பத் தேவர் அவர்களால் மகா மண்டபம் ஒன்றும் கட்டப் பட்டது. 26-1-72-ல் திருக்கோயில் குடமுழுக்குச் செய்யப் பட்டது.

கோயிலுக்கு வருகிற பிரமுகர்கள் தங்குவதற்காக ஏறத்தாழ 43 ஆயிரம் ரூபாய் செலவில் கோயிலுக்கு அருகிலேயே பயணிகள் விடுதி ஒன்று கட்டப் பெற்றுள்ளது.

பிறகு, 6-12-74-ல் திரு. ஏ.எஸ். இராமன் அறங்காவலர் குழுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். பொதுவாக, பெரும்பாலும் திருக்கோயில் விழாக் களோடு மட்டுமே இயங்கிக் கொண்டிருந்த இந்த வடபழநியாண்டவர் திருக்கோயிலின் வரலாற்றில் ஒரு புதியதிருப்பு முனை ஏற்பட்டது, இந்த 1974-ஆம் ஆண்டுதான் என்று குறிப்பிடுவது மிகையாகாது. அந்தத் திருப்புமுனை தான், சமயந்தழுவிய கோயில் விழாக்களோடு நின்ற இந்தக் கோயிலின் சார்பில் சமுதாயத் திருப்பணிகளும் நடைபெறத் தொடங்கியதாகும்!

1974-ல் ஏ. வி. எம். அறநிலயத்தின் சார்பில் இந்தத் திருக்கோயிலில் அநுபூதி மண்டபம் ஒன்று கட்டப்பெற்றது. இந்த மண்டபம் பெரும்பாலும் ஏழை



எளிய மக்களின் திருமணமண்டபம் போலவே பயன்படுகிறது. இம்மண்டபத்தையடுத்து ரூ. 85 ஆயிரம் செலவில் சண்முகர் மண்டபம் ஒன்று கட்டத் தொடங்கி அதுவும் முடியும் தறுவாயிலுள்ளது.

திருக்கோயிலில் இலவசத் திருமணங்களும் நடைபெறுகின்றன. அது தவிர, மற்ற இடங்களில் நடைபெறும் ஏழைகளின் திருமணங்களில், தாலி, புடவை, வேட்டி முதலியன திருக்கோயிலின் செலவில் வழங்கப்பட்டு வருகின்றன.

கோயிலின் சார்பில் நடைபெற்று வருகிற தேவாரப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது இந்த 74-ஆம் ஆண்டுதான். 'வேத பாராயணம்'- என்றில்லாமல் பிள்ளைகள் தேவாரம், திருவாசகம் முதலிய தமிழ்ப் பாடல்களை இசையோடு கற்றுக் கொள்ளவும் 'தமிழோசை' முழங்கவுமே இந்தத் தேவாரப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது என்கிறார் இத் திருக்கோயிலின் அறங்காவலர் குழுத்தலைவர்.

திருக்கோயிலின் திருக்குளம் தூர் எடுக்கும் விழா 28-4-75-ல் மாண்புமிகு அறநிலைய அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் அவர்கள், தலைமையில் நடைபெற்றது. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தூரெடுக்கும் பணியைத் தொடங்கி வைத்தார்கள். தண்ணீரே இல்லாமல் வறண்டுகிடந்த அந்தக் குளம், அண்மையில் பெய்த மழையால் நீர் நிரம்பி வழிந்து பொது மக்களுக்கு மிக நல்ல முறையில் இப்போது பயன்படுகிறது.



கடந்த 3-6-75-ல் முதல்வர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் நினைவாக, கோயிலின் சார்பில் 'கருணை இல்லம்' திறக்கப்பட்டது. மாண்புமிகு அறநிலைய அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் அவர்கள் தலைமையில் மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் அவர்கள் இந்தக் கருணை இல்லத்தைத் திறந்து வைத்தார்கள். இந்தக் கருணை இல்லம் ஆதரவற்ற 50 இளஞ்சிறுமியர்களின் அரவணைப்பு இல்லமாக விளங்குகிறது. சாதிமத பேதமின்றி 5 முதல் 10 வயது வரையுள்ள சிறுமியர்கள் இங்கு உள்ளனர். சென்னைப் பகுதியில் சிறுமியர்க்கென விளங்கும் கருணை இல்லம் இதுவே. இவர்களுக்கு உணவு, சீருடைகள் மட்டுமின்றி எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரே மாதிரியாகப் பாய், தலையணை, போர்வை முதலியனவும், புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், சிலேட்டுகள், உடைகள் முதலியனவும், பொருள்களை வைத்துக் கொள்ளப் பெட்டிகள் இல்லாத குழந்தைகளுக்குப் பெட்டிகளும் வழங்கப்படுகின்றன. இவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகளும் அவ்வப்போது நல்லமுறையில் செய்யப்படுகின்றன.

விழா நாட்களில் இல்லக் குழந்தைகளுக்கு இனிப்பு முதலியனவும் வழங்கப்படுகின்றன.






குழந்தைகளைப் பள்ளிக்குக் கூட்டிக் கொண்டு போகவும், திரும்பக் கூட்டி வரவும் ஒரு பணியாள் நியமிக்கப்பட்டுள்ளார்.

குழந்தைகளின் உடைகளைத் துவைத்துக் கொடுக்கவும் குளிப்பாட்டித் தலை வாரி விடவும் 'ஆயாள்' ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

கருணை இல்லச் சமையல் முதலியவற்றை அறங்காவலர் குழுத் தலைவர் அவ்வப்போது சென்று பார்வையிட்டுக் குழந்தைகளின் நலன்களை விசாரித்துக் குறைகளைக் கேட்டு அவ்வப்போது ஆவன செய்து வருகிறார்.

பொதுவாக, இந்தக் கருணை இல்லத்தில் இருக்கிற குழந்தைகள் அனைவரும், தங்கள் இல்லத்தில் தக்கவர்களின் அரவணைப்பில் இருப்பது போன்ற உணர்வுடனேயே இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து, திருக்கோயிலின் சார்பில், மாண்புமிகு கல்வி அமைச்சர் நாவலர் அவர்களின் பிறந்த நாளில் ஆண்டுதோறும் ஏழைப் பள்ளிச் சிறுவர் சிறுமியர்க்குச் சிலேட்டுகள், புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், எழுதுகோல்கள் முதலியன வழங்கப் பெறுகின்றன.

கடந்த 24-10-75-ல் திருக்கோயிலின் சார்பில் இலவசச் சித்த மருத்துவமனை, நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, அது நல்லமுறையில் நடைபெற்று வருகிறது.

இந்த மருத்துவமனை தினமும் காலை 8 மணி முதல் 12 மணி வரையிலும், மாலை 4.30 மணி முதல் 7.30 வரையிலும் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு கோயிலின் அன்றாட நடைமுறைகளோடு சமுதாய நலப் பணிகளையும் நல்லமுறையில் செய்து வருகிற அருள்மிகு வடபழநி ஆண்டவர் கோயிலின் வருமானமும் ஆண்டுக்காண்டு பெருகிக் கொண்டு வருகிறது. ஆம், 1965-ஆம் ஆண்டு 1,45,722 ரூபாயாக இருந்த வருமானம், 1974-ஆம் ஆண்டு 4,22,169 ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது

## பாடநூலில் நாட்டுத் தலைவர்கள்

ஏற்கனவே கல்லூரிகளுக்கான புத்தகத்தில் ''இந்திய சமுதாய வரலாறு'' எனும் புத்தகத்தில் சுமார் ஏழு இடங்களில் காந்தியடிகள், அம்பேத்கார், பெரியார், அண்ணா போன்றவர்களுடைய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. இது இப்போது கல்லூரிகளுக்கு புத்தகமாக உள்ளது.

அடுத்து கல்லூரிகளுக்கான — திரு. கே. கே. பிள்ளை அவர்கள் எழுதிய "தமிழக வரலாறு— மக்களும் பண்பாடும்'' எனும் புத்தகத்தில் ''20ஆம் நூற்றுண்டில் தமிழகம்'' என்ற தலைப்பில் பெரியாரைப் பற்றிய கட்டுரை இடம் பெற்றிருக்கிறது.

10ஆம்வகுப்பு ஆங்கிலப் பாட நூலில் ராஜாஜி பற்றிய கட்டுரை வெளியிடப்படவிருக்கிறது.

காமராசருடைய வாழ்க்கை வரலாறு பற்றி, பாட புத்தகத்தில் இந்த ஆண்டு அச்சு வேலைகள் முடிந்து விட்டதால் அடுத்த ஆண்டு புத்தகத்தில் சேர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.''

—செய்தியாளரிடையே
முதல்வர் கலைஞர்

# செல்வமெலாம் பெறுவோம்!

மருதங்குடி வெங்கடேசன்

எடுப்பு

ஏர்பிடித்துத் தாயகத்தின் சீர்படைப்போமே—கூடி
எந்நாளும் அன்புவழி நாம்நடப்போமே (ஏர்)

மேலெடுப்பு

ஊர்பிடித்த வறுமைதனை ஓட்டிடுவோமே—நல்ல
உழைப்பினாலே வளம்பெருக்கிக் காட்டிடுவோமே (ஏர்)

அடிகள்

உழுதவன்தன் கணக்குப் பார்த்தால் உழக்கும் மிஞ்சாதென்று
உளம் சோர்ந்து அழுபவர்கள் யாருமில்லை இன்று
பழுதில்லாத் தொழிலிந்த உழவு என்பதாலே
பாடுபட்டால் பசிப்பிணிதான் ஓடுமே தன்னாலே (ஏர்)

ஆடுதுறை முப்பத்தொன்று காஞ்சிதிரு வேணி
அருங்கருணை கரிகாலன் கண்ணகிப வானி
ஈடிலாத பொன்னி ஐ-ஆர் இருபதுடன் ரத்னா
ஏற்றபுதுரக மெல்லாம் போட்டிடுவோம் பொன்னா! (ஏர்)

வயல்களிலே விதைத்திடுவோம் பயறுவகை உளுந்து
வாய்த்ததிடல் திட்டுகளில் மரவள்ளிக் கிழங்கு
பயிரிடுவோம் கோடையிலும் பருத்திபயிர் செய்வோம்
பப்பாளி வாழை இன்னும் பலகனிகள் கொய்வோம். (ஏர்)

ஆற்றினிலே நீர்குறைந்தால் அதற்காக அஞ்சோம்
ஆழ்கிணறு தோண்டிவிட்டால் அழகுபயிர் கொஞ்சும்!
ஊற்றெடுக்கும் நிலத்தில்குழாய் உள்ளிறக்கி மோட்டார்
உதவியினால் நீரெடுப்போம் ஓய்ந்துவிட மாட்டோம், (ஏர்)

தவறாமல் பூச்சிகொல்லி களைகொல்லி தெளிப்போம்
தழைத்தோங்கி வளர்கின்ற பயிர்கண்டு களிப்போம்
உவர்நிலமே ஆனாலும் ஊக்கமுடன் செல்வோம்
உயர்'மணிலா' ரகம்போட்டுப் பெருமகசூல் கொள்வோம்(ஏர்)

தனைப்பிரிந்த தலைவன்வந்தால் தவிக்கவைக்கும் இல்லாள்
தன்மையிலே ஊடிடுவாள் நிலமென்னும் நல்லாள்
தினந்தோறும் வயல்மகளைச் சுற்றிச்சுற்றி வருவோம்
செய்யாளின் புன்னகையால் செல்வமெலாம் பெறுவோம்.(ஏர்)

பொதுவாகப் பள்ளி இறுதி
வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள்,
மேற்படிப்புப் பயின்றவர்கள்,
பள்ளி இறுதி வகுப்பிற்கும்
குறைந்து கற்றவர்கள், தொழில்
நுட்பம் சார்ந்த கல்வியைப் பயின்
றவர்கள் ஆகியோர் பதிவு செய்து
கொள்ளும் வகையில்தான் தமிழ்
நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட
வேலை வாய்ப்பு அலுவலகங்களும்
இயங்கி வருகின்றன.

ஆனால் தமிழ் நாட்டிலே வட
சென்னையிலுள்ள மாவட்ட வேலை
வாய்ப்பு அலுவலகம் ஒன்றுதான்,
பள்ளி இறுதி வகுப்பிற்குக்
குறைந்து படித்தவர்களுக்கெனத்
தனியாகச் செயல்பட்டு வருகின்
றது.

வட சென்னையில், மாவட்ட
ஆட்சியர் அலுவலகக் கட்டடங்
கள் ஒன்றில் 1959-ஆம் ஆண்டு
முதல்இவ்வலுவலகம்தொடர்ந்து
இயங்கிக் கொண்டு வருகின்றது.
சென்னை நகர எல்லைக்குட்பட்ட
அனைவரும் இங்கு தங்கள்
பெயரைப் பதிவு செய்து கொள்
கின்றனர். இங்குப் பதிவு செய்
கின்றவர்கள் அனைவரும் பள்ளி
இறுதி வகுப்பிற்குக் குறைந்த
கல்வித் தகுதி படைத்தவர்கள்
மட்டுமில்லாமல் அவர்களில்
யாரும் தொழில் நுட்பத் திறனோ
அல்லது முன் அனுபவங்களோ
பெற்றிருக்கத் தேவையில்லை.
தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்
திருந்தால் மட்டும் போதும்.
வயது வரம்பின்றி அனைவரும்
பதிவு செய்து கொள்ள வகை
செய்யப்பட்டுள்ளனர். தங்கள்
பதிவுகளை 6 மாதத்திற்கு ஒரு
முறை புதுப்பித்துக் கொள்ள
வேண்டும்.

ஆண்களுக்கும் பெண்களுக்கும்
ஏற்றார்போல் பணிகள் பிரிக்கப்
பெற்றுள்ளன. கல்வித் தகுதி,
வயதுஆகியவைகளின் அடிப்படை
யில் குறிப்பிட்ட பணிகளுக்கு
அனுப்பப்படுகின்றனர். ஆண்
களுக்கென கடைநிலை ஊழியர்,
சிற்றெழுத்தர், காவலர், துப்பு
ரவுப் பணியாளர், தோட்டப்
பணியாளர், சலவைத் தொழி
லாளர், முடிதிருத்துவோர், நீர்
கொண்டு செல்லுபவர், தீ
யணைப்புப் பணியாளர், சமையல்
பணியாளர், மருத்துவ மனையில்
ஆண் செவிலிப் பணியாளர்
களுக்கு உதவியாளர் என்பன
போன்ற பணிகள் வகைப்படுத்தப்
பெற்றுள்ளன.

பெண்களுக்கு மருத்துவ மனை
களில் பணிபுரிகின்ற வகையில்
ஆயாக்கள், பெண் செவிலியருக்கு
உதவியாள், சமையல் பணியா
ளர் போன்றவைகளும், மற்றும்
துப்புரவுப் பணியாளர், விற்பனைப்
பணியாளர், பள்ளி, கல்லூரி,
சிறைச்சாலை ஆகியவைகளில்
விடுதிப் பெண் பாதுகாவலர்
(Warden Female) போன்ற பல
வகைப் பணிகளாகப் பிரிக்கப்
பெற்றுள்ளன.

வேலையின்மையை அகற்றிட
வேண்டும் என்கின்ற கருத்தின்
அடிப்படையில் அரசு பல வழி
களைக் கைக் கொள்ள வேண்டிய
அவசியம் ஏற்படுகின்றது. அவை
களில் ஒன்றாக — முழு நேரப்
பணிகள் தவிர்த்து பகுதி நேரப்
பணிகளும் கிடைக்கின்ற வாய்ப்பு
கள் செய்து தரப்பட்டுள்ளன.
பகுதி நேரப் பணிகளுக்கு அனுப்
பப்படுகின்றவர்கள் அனைவரும்
நாட் கூலியின் அடிப்படையில்
தான் அனுப்பப்படுகின்றனர்.
தண்ணீர் கொண்டு செல்லுதல்,
துப்புரவுப் பணி, கழிவிடங்களைச்
சுத்தம் செய்தல் என்பனபோன்ற
பணிகள் பகுதி நேரப் பணிகளில்
அடங்குகின்றன. பொதுவாக
ஆண்களும் பெண்களும் இவ்
வகைப் பணிகளுக்குஅனுப்பப்படு
கின்றனர். நாட் கூலி ரூ. 4.75
என நிர்ணயம் செய்யப்பெற்று
அவை மாதத்தின அடிப்படையில்
வழங்கப்படுகின்றன.

இவ்வகைப் பணிகளுக்கான
வேலை வாய்ப்புகள் எந்தெந்த
இடங்களில் காணப்படுகின்றன?
எத்தகைய துறைகளுக்கு இந்த
அலுவலகத்தில் பதிவு செய்த
வர்கள் அனுப்பப்படுகின்றனர்?
எந்த அடிப்படையில் இவர்கள்
அனுப்பப்படுகிறார்கள் என்பன
போன்ற விவரங்களைத் தெரிந்து
கொள்ளுதல் இன்றியமையாதது
ஆகும்.

மாநில—மைய அரசுகளின்
பல்வேறு துறைகள், தனியார்,
பொதுத்துறை நிறுவனங்கள்,
மருத்துவ மனைகள், வங்கிகள்
போன்றவைகள் தங்களுக்குத்
தேவைப்படுகின்றபணிகளுக்கான
காலி இடங்களை இந்தஅலுவலகத்
திற்குத்தெரிவிக்கின்றன — அவை
களுக்கான விண்ணப்பதாரர்களை
அனுப்புமாறும் கேட்டுக் கொள்
கின்றன. கல்வி, வயது, முந்
துரிமைத் தகுதி (Seniority) ஆகிய
வைகளின் அடிப்படையிலும்,
பணிகளின் வகைகளுக்கு ஏற்ற
வாறும் இவ்வலுவலகம் பதிவு
செய்துள்ள விண்ணப்பதாரர்களை
அனுப்புகிறது. இந்த வகையில்
இத்தகைய அலுவலகங்கள்
பணிகள் வேண்டுவோருக்
கும், பணி தருவோருக்கும்
இடையே தொடர்பு நிலையங்க
ளாக—வழி காட்டுகின்ற அலுவல
கங்களாகச் செயலாற்றி வருகின்
றன என்பது குறிப்பிடத் தக்க
தாகும்.

பல்லவன் போக்குவரத்துக்
கழகம், நாட்டுடைமையாக்கப்
பெற்ற வங்கிகள் ஆகியவைத்
தங்களுக்குத் தேவையான காவ
லாள், பாதுகாவலர் (Security
Guard) பணியாளர்களையும், தீ
அணைப்புத் துறை தீயணைப்புப்
பணியாளர்களையும், மத்தியச்
சிறைச்சாலை காவலாள் (Warder)



# குறைந்த படிப்புக்கும் தகுந்த வேலையுண்டு!



பதிவைப் புதுப்பித்தல்.

பணியாளர்களையும் இந்த அலுவலகத்தின் மூலமாகத்தான் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றன. இந்த வகையானப் பணிகளுக்குக் குறிப்பிட்ட உயரம், நிரை, மார்பளவு உள்ளவர்களை மட்டுமே இவ்வலுவலகம் தேர்ந்தெடுத்து அனுப்புகிறது.



பதிவுசெய்தல்—மகளிர் பகுதி

ஏழை எளியோர் ஏற்றம் பெற்றிட வேண்டும்—தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப் பட்டவர்களின் வாழ்வு வளம் பெற வேண்டும்—நலிவுற்ரோர் நலம் காண வேண்டும் என்பவைகளைக் கருத்தில் கொண்டு இன்றையத் தமிழ்நாடு அரசு பலவகைகளில் உதவி புரிந்து வருவதுடன் வேலை வாய்ப்புகள் அளிப்பதிலும் பல சலுகைகளை அளித்து வருகின்றது. வேலை வாய்ப்புகளைப் பொறுத்த மட்டில் சிலருக்கென அரசு 50 சதவிகித்தை ஒதுக்கியுள்ளது பாராட்டுதலுக்குரிய — போற்றுதலுக்குரிய செயலாகும். இவ்வகையில் முன்னள் இராணுவத்தினர், பர்மா—இலங்கை அகதிகள், பொற்கொல்லர்கள், மாநில—மைய அரசுகளில் பணியாற்றிப் பின்னர் பணியினின்று விடுவிக்கப் பெற்ருேர், விபத்து போன்றவைகளில் உயிரிழந்தவர்களைச் சார்ந்தோர், ஆகியவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதில் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், மலைச்சாதியினருக்கும் வேலை வாய்ப்பு அளித்திடும் வகையில் இடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

பதிவு அட்டைகள் வகைபிரித்தல்.



மார்பின் சுற்றளவு பார்த்தல்.



வேலை வாய்ப்பு அளித்திடும்' வகையில்—இராணுவத்தில் பணியாற்றி, பின்னர் பணியினின்று விடுவிக்கப் பெற்றவர்களுக்கு அரசு அளவிலாச் சலுகைகளை அளித்து வருகின்றது. பல பணிகளுக்கு வயது வரம்புகள் தளர்த்தப்படுகின்றன. தொடர்ந்து மூன்று ஆண்டுகள் இராணுவத்தில் பணியாற்றியிருந்தால் அவர்கள் மூன்ரும் படிவத் (III Form) திற்கான கல்வித் தகுதியினை அளிக்கப்படுகின்றனர்; எல்லா வகைப் பணிகளுக்கும் வாய்ப்புகள் தரப்படுகின்றனர். கடைநிலை ஊழியர் பணியைப் பொறுத்த மட்டில் இவர்களுக்கு வயது வரம்பே கிடையாது. இத்தகு சலுகையினை அளித்துள்ளது தமிழ்நாடு அரசு ஒன்றுதான் என்பது குறிப்பிடத்தக்க ஒன்று ஆகும்.


ஏராளமான பக்கங்களுடன்
எண்ணற்ற செய்திகளுடன்
வண்ணமலர்க்
குவியலாக
**தமிழரசு**
பொங்கல் மலர்
தயாராகிறது!
விவரம்
அடுத்த
இதழில்


வேலையின்மை அகன்ருல்தான் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் உயர முடியும். மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்காகவே வேலை வாய்ப்பு போன்ற அலுவலகங்கள் உருவாக்கப் பெற்றுள்ளன என்பதை அனைவரும் அறிவர். பணி வேண்டுவோர் அனைவரும் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.

இந்த வகையில் வட சென்னை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் திங்கள்தோறும் ஏறத்தாழ 1,917 ஆண்களும், 486 பெண்களும் பதிவு செய்கின்றனர். மாதத்தில் சுமார் 326 பணிகளுக்கான காலி இடங்கள் பெறப்பட்டு, சுமார் 200 பேர்கள் பணிகளில் அமர்த்தப்படுகின்றனர். 1975-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் வரை பதிவு செய்துள்ளவர்களில் ஆண்கள் 44,352 பேர்களும், பெண்கள் 13,116 பேர்களும் ஆவார்கள்.

இன்றையச் சூழ்நிலையில் பணி வேண்டுவோரின் எண்ணிக்கை அதிக அளவில் ஒரு பக்கம் இருக்க—குறிப்பிட்ட சில பணிகளுக்கு ஆட்கள் கிடைப்பதே அரிதாக உள்ளது. பால் கறத்தல், தோட்டப் பணி, மேற்கத்திய முறையில் உணவு தயாரித்தல், உணவு பரிமாறும் பணி, வலை பின்னுதல் போன்றவைகள் இவைகளில் குறிப்பிடத் தக்கவைகளாகும்.

எனவே, குறைந்த அளவே படித்து, 'நமக்கும் வேலை கிடைக்குமா?' என்று ஏங்குவோருக்கெல்லாம் 'இங்கே வேலை கிடைக்கும்!' என்று அவர்கள் ஏக்கத்தைப் போக்கும் வகையில் வட சென்னையிலுள்ள மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் வேலை தேடித் தந்து அவர்களது வேதனையைத் தீர்க்கிறது என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண்டும்.

—ஆயிரம்




**விஞ:** அண்மையில் ஏற்பட்ட புயல், மழை காரணமாக எங்கள் பகுதியில் உள்ள மண் குடிசைகள் இடிந்து விட்டன. இதைப் புதுப்பித்துக் கொள்ள தமிழ்நாடு அரசு உதவி செய்யுமா? எவ்வகை உதவி கிடைக்கும் என்பதையும், எப்படிப் பெறுவது என்பதையும் கூறவும்.

—எஸ். முனியாண்டி,
மாம்பலம் ஏரிக்கரைப்பகுதி,
சென்னை-17.

**விடை:** ஏழை எளியவர்களின் இன்னலைத் துடைத்திடுவதையே தன் தலையாய கடமையாகக் கொண்டுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், சென்னை நகரில் புயலாலும், மழையாலும் பாதிக்கப்பட்ட குடிசை வாழ் மக்களுக்கு உதவி செய்வது பற்றி அறிவித்து இருந்ததைத் தாங்கள் நாளேடுகளில் படிக்கவில்லையா?

''சென்னை நகரில் மட்டும் 13,000 குடிசைகள் முழு அளவிலும், 20,000 குடிசைகள் ஓரளவிலும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. இவைகளுக்கு அரசின் நிவாரணத் தொகையாக சுமார் 20 இலட்சம் ரூபாய் அளிக்கப்பட வேண்டி இருக்கும். அவைகளை விரைவில் கணக்கிட்டு உடனடியாக இத்தொகையை வழங்கப்படும்'' என்று முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார். அதன்படி விரைவில் உங்களுக்கும் அரசின் உதவி கிடைக்கும்.

கடந்த சில ஆண்டுகளாக முழுவதுமாக குடிசைகளை இழந்தவர்களுக்குத் தலா 80 ரூபாயும், ஓரளவு பாதிக்கப்பட்டவர்களுக்குத் தலா 40 ரூபாயும் வழங்கப்பட்டு வருகிறது. அதே முறையில் இப்பொழுதும் நிவாரணம் அளிக்கப்படும். எனவே, பாதிக்கப்பட்டுள்ள வீடுகளைப்

—ஆர். எம்.

பற்றிய கணக்கெடுக்க வரும் அலுவலர்களிடம் உங்கள் வீட்டையும் காட்டி, உதவி பெற முயற்சியுங்கள்.

**விஞ:** பாண்டியன் கெமிக்கல்ஸ் நிறுவனம் தனியாருக்குச் சொந்தமானதா? அல்லது அரசுக்குச் சொந்தமானதா? அதில்நான் கூட்டுச் சேரமுடியுமா?

—எஸ். ஆண்டியப்பன்,
கீழ்ப்புல்லாணி,
இராமநாதபுரம் மாவட்டம்.

**விடை:** ''பாண்டியன் கெமிக்கல்ஸ் நிறுவனம்'' என்பது கூட்டுத்துறையைச் சார்ந்ததாகும். இந்நிறுவனத்தில் 29 சத பங்கு தமிழ்நாடு அரசுக்கும், 25 சத பங்கு பாண்டியன் கெமிக்கல்ஸ் நிறுவனத்திற்கும், மீதமுள்ள பங்கு 'பொட்டாசியம் குளோரேட்' பயன்படுத்துவோர்களுக்கும் சொந்தமானதாகும். ''டிட்கோ'' எனப்படும் தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் முயற்சியால் கூட்டுத் துறையில் உருவாகியுள்ள இந்நிறுவனத்தில் பங்கு பெறுவதென்றால், தீப்பெட்டித் தொழிலுக்குப் 'பொட்டாசியம் குளோரேட்' வாங்குபவராக நீங்கள் இருந்தால் தான் முடியும். அவ்வாறில்லாத தனிப்பட்டவர்களுக்கு இந்நிறுவனத்தில் பங்கு கிடைக்காது என்று நம்புகின்றோம். இருப்பினும் நீங்களே கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி விவரம் கேட்டறியலாம்.

தலைவர்,
பாண்டியன் கெமிக்கல்ஸ்
லிமிடெட்,
9, விநாயக நகர்,
மதுரை-625020.

**விஞ:** குறைந்த வயதில் நிறைந்த மகசூல் பெறவும், மார்கழியில் விதைத்திடவும் ஏற்ற நிலக்கடலை இரகம் எது? அதன் சாகுபடி குறிப்புகளைத் தயவு செய்து கூறுங்கள். ''கருணை'' நெல் சாகுபடி குறிப்புகளைக் குறிப்பிடவும்.

—சு. சாம்பசிவம்,
தம்பிக்கோட்டை,
மேலக்காடு அஞ்சல்,
தஞ்சைமாவட்டம்.

**விடை:** குறைந்த வயதில் நிறைந்த மகசூல் பெறவும், மார்கழி மாதத்தில் விதைத்திடவும் 'திண்டிவனம்-7' (டி.எம்.வி.-7) என்ற நிலக்கடலை இரகம் மிகவும் சிறந்தது. 'பொள்ளாச்சி-2' (பி.ஓ.எல்-2) என்ற இரகத்தையும் பயன்படுத்தலாம்.

இவ்விரு இரகங்களையும் ஜனவரி மாதத்தில் இறைவையாகப் பயிரிடுவது சிறந்தது. இவை 105 நாட்கள் வயதுடையவை.

'திண்டிவனம்-7' இரகத்தின் சாகுபடி குறிப்புகள் 1-12-75 தேதிய ''தமிழரசு'' இதழில்,



''கேளுங்கள் கொடுக்கப்படும்'' பகுதியில் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அதே முறையை ''பொள்ளாச்சி-2'' இரகத்திற்கும் மேற்கொள்ளலாம். ஆனால் விதையளவைப் பொறுத்த வரையில் 'பொள்ளாச்சி-2' இரகத்திற்கு ஏக்கருக்கு 55 கிலோ விதைப் பயறு விதைக்க வேண்டும்.

''கருணை'' நெல் இரகத்தைக் குறுவைப் பட்டத்திலும் (ஜூன்-ஜூலை), நவரைப் பட்டத்திலும் (ஜனவரி-பிப்ரவரி) பயிரிடலாம்.

நீர்ப்பாசன வசதி இருப்பின் நீங்கள் வருகிற நவரைப் பருவத்தில் பின்வரும் சாகுபடி முறைகளை மேற்கொண்டு ''கருணை'' பயிரிடுதல் சிறந்தது.

## ''கருணை'' சாகுபடிக் குறிப்புகள்

### விதையளவு

ஒரு ஏக்கர் நடவு செய்வதற்கு 18 கிலோ விதையை விதைக்க வேண்டும்.

### விதைநேர்த்தி

ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் ''அக்ரசான்'' அல்லது ''செரசான்'' மருந்து வீதம் கலக்கவும்.

### நாற்றங்கால்

ஒரு ஏக்கர் நடவு செய்ய 12 சென்ட் பரப்பளவில் நாற்றுவிடவும். ஒரு சென்ட் பரப்பளவில் 1.5 கிலோ முளைவிட்ட விதையை விதைக்கவும்.

### நடவு வயல் தயாரித்தல்

நடவு வயலை இரும்புக் கலவையால் நன்கு உழுது சேறுக்கவும். ஏக்கருக்கு 12 வண்டி தொழு எரு அல்லது 5 வண்டி தழை எரு இடவும்.

### அடியுரம்

ஏக்கருக்கு 20 கிலோ தழைச் சத்து, 20 கிலோ மணிச்சத்து, 20 கிலோ சாம்பல் சத்து தரும் இரசாயன உரங்களை அடியுரமாக இடவும். இந்த அளவுக்குச் சத்து அளிக்கவும், குறைந்த செலவில் உரமிடவும் ஏக்கருக்கு 44 கிலோ 'டை-அமோனியம் பாஸ்பேட்',26 கிலோ 'யூரியா', 33 கிலோ 'மியூரியேட் ஆப் பொட்டாஷ்' ஆகிய இரசாயன உரங்களைக் கடைசி உழவிற்கு முன்பு சேற்றில் அடியுரமாக இடவும்.

### நாற்றுக்கு மருந்து தெளித்தல்

நாற்றுவிட்ட 18-வது நாள், 25 மில்லி லிட்டர் 'பாரத்தியான்' அல்லது 50 மில்லி லிட்டர் 'என்ட்ரின்' மருந்தை 25 லிட்டர் தண்ணீரில் கலந்து நாற்றின் மேல் தெளிக்கவும்.

### நடவு

நாற்றுவிட்ட 24-ஆம் நாள் நாற்றைப்பிடுங்கி 6 அங்குலம் × 4 அங்குலம் இடைவெளியில் அதாவது சதுர மீட்டருக்கு 66 தூர்கள் இருக்கும்படி நடவு செய்யவும்.

### முதல்முறை மேலுரமிடுதல்

நடவு செய்த 16-ஆம் நாள், (நாற்றுவிட்ட 40-வது நாள்) ஏக்கருக்கு 22 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும்.

### முதல்முறை மருந்து தெளித்தல்

நடவு செய்த 21-ஆம் நாள் முதல் முறை களையெடுத்து ஏக்கருக்கு 400 மில்லி லிட்டர் 'என்ட்ரின்' அல்லது 200 மில்லி லிட்டர் 'பாரத்தியான்' மருந்தையும், 400 கிராம் 'டைத்தேன்' மருந்தையும் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கையால் இயக்கும் தெளிப்பான் மூலம் தெளிக்கவும்.

### இரண்டாம் முறை மேலுரமிடுதல்

நடவு செய்த 34-வது நாள் (நாற்றுவிட்ட 58-வது நாள்) ஏக்கருக்கு 22 கிலோ யூரியாவை இரண்டாம் முறையாக மேலுரமாக இடவும்.

### இரண்டாம் முறை மருந்து தெளித்தல்

நடவு செய்த 36-வது நாளும், 21-வது நாளில் தெளித்த அளவில் மருந்து தெளிக்கவும்.

மேற்கூறியவாறு, ''கருணை'' பயிரிட்டால் தஞ்சை மாவட்டத்தில் மாவுக்கு 30 கலத்திற்குக் குறையாமல் மகசூல் பெறலாம்.

**விஞ:** இறைவை மிளகாய்க்கு அடியுரம் ஏக்கருக்கு எவ்வளவு, என்ன உரம், எப்படி இடவேண்டும்?

எங்கள் ஊரில் உழவர் விவாதக் குழு ஆரம்பிக்கலாம் என்று இருக்கிறோம். இதற்கு யாரை அணுக வேண்டும்?



—எஸ். வி. வெங்கடாசலம்,
கொக்குப் பாளையம்,
பண்ருட்டி வட்டம்,
தென்னார்க்காடு மாவட்டம்.

**விடை:** இறைவை மிளகாய் பயிரிட ஏக்கருக்கு 14 கிலோ மணிச்சத்தையும், 14 கிலோ சாம்பல் சத்தையும் அடியுரமாக இட்டு, மிளகாய் நாற்று நட்ட 30-வது, 60-வது, 90-வது நாட்களில் முறையே 9 கிலோ, 10 கிலோ, 9 கிலோ தழைச்சத்தை மேலுரமாக இடுவது சிறந்தது.

அடியுரம் இட 87.5 கிலோ 'சூப்பர் பாஸ்பேட்' உரத்தையும் 23 கிலோ 'மியூரியேட் ஆப் பொட்டாஷ்' உரத்தையும் கடைசி உழவில் இடலாம். மேலுரமிட 30-வது நாளில் 20 கிலோ யூரியாவையும், 60-வது நாளில் 22 கிலோ யூரியாவையும், 90-வது நாளில் 20 கிலோ யூரியாவையும் இடலாம்.

உங்கள் ஊரில் உழவர் விவாதக் குழு அமைக்க பின்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.

துணை வேளாண்மை இயக்குநர்,
உழவர் பயிற்சி நிலையம்,
திண்டிவனம்(அஞ்சல்),
தென்னார்க்காடு மாவட்டம்.

**விஞ:** காய்கறி விலை ஏறி வருகிறது! வெங்காயம் விலை கிலோ ரூபாய் 4.00 அளவுக்கு விற்கிறது. இதன் காரணம் என்ன? இதைத் தடுப்பது எப்படி? இந்தச் சந்தர்ப்பத்தில் குறுகிய காலத்தில் பலன் தரும் வெங்காயம் பயிரிட்டால் நானும் வருவாய் பெற முடியும், நாட்டுக்கும் நல்லது செய்ததாக இருக்கும் என நினைக்கிறேன். எனவே, நான் இம்முயற்சியில் இறங்கிட வழி கூறுங்கள்.

—எஸ். முத்துராமன்,
பூந்தமல்லி,
செங்கைமாவட்டம்.



**விடை :** கடந்த 2 ஆண்டுக் காலமாகத் தமிழகமெங்கும் வறட்சி நிலவியதன் காரணமாக உழவர் பெருமக்களில் பெரும்பான்மையினர் உணவு தானியப் பயிர்களில் கவனம் செலுத்திய அளவுக்குக் காய்கறிப் பயிர்களின் சாகுபடியில் கவனம் செலுத்தவில்லை. இதன் காரணமாகவே, தற்பொழுது பொதுவாகக் காய்கறிகளின் விலையும், குறிப்பாக வெங்காயத்தின் விலையும் ஏழை எளியவர்களால் வாங்க முடியாத அளவுக்கு உயர்ந்து விட்டது! மேலும், வடஇந்தியாவில் வெள்ளச் சேதம் ஏற்பட்ட மாநிலங்களுக்கு ஆந்திராவிலிருந்து வெங்காயம் அனுப்பப்படுவதால், ஆந்திர மாநிலத்திலிருந்து தமிழகத்திற்கு வழக்கமாக வந்து கொண்டிருந்த வெங்காயம் தற்பொழுது தமிழகத்திற்கு வரவில்லையாம்! இதனால்தான் சென்னை மற்றும் சுற்றுப்புறங்களில், வெங்காயத்தின் விலை ஏறிவிட்டது என்று காய்கறி வியாபாரிகள் கூறுகின்றனர்.

தற்பொழுது உழவர் பெருமக்களில் பலர், தங்கள் தோட்டத்திலோ அல்லது வயலின் ஒரு பகுதியிலோ காய்கறிப் பயிரிட்டு வரும் பழக்கத்தை நிறுத்திவிட்டனர் என்பதும் காய்கறிகளின் விலையேற்றத்திற்கு முக்கிய காரணமாகும்.

**ஊட்டச்சத்துப் பற்றுக்குறையின் காரணமாக இந்தியாவின் எதிர்காலச் சமுதாயம் அறிவும் ஆற்றலும் குன்றியதாக-இந்தியாவில் பொருளாதாரத்தைச் சீர்குலைப்பதாக-உருவாகி வருகிறது!.** எனவே, ஒவ்வொரு உழவர் பெருமகனும் தன் நிலத்தின் ஒரு பகுதியில் ஊட்டச்சத்து நிறைந்த காய்கறிகளைப் பயிரிட்டு, அவர்களுடைய குடும்பத்திற்குத் தேவையானது போக மீதியை மற்றவர்களுக்கு விற்க முன்வர வேண்டும். இதை ஒவ்வொரு உழவர் பெருமகனும் தன் வீட்டிற்கும், நாட்டிற்கும் செய்யும் கடமையாகக் கருத வேண்டும்.

இவ்வாறு எல்லா உழவர் பெருமக்களும் தங்கள் வயலின் ஒரு சிறு பகுதியிலாவது காய்கறிப் பயிரிடுவதைக் கடமையாகக் கருதிச் செயல் பட்டால்தான், காய்கறி, வெங்காயம் ஆகியவற்றின் விலை குறையும்! விலை குறைவதால் உழவர் பெருமக்களுக்கு வருவாய் குறையுமென்பது உண்மையெனினும், நாட்டுக்குச் செய்யும் நல்ல தொண்டாகக் கருதி காய்கறி பயிரிட வேண்டும்!

அதிக வருவாயும் பெறவேண்டும், அதே சமயத்தில் நாட்டிற்கும் நல்ல பணி செய்ததாகவும் இருக்க வேண்டும் என்ற கருத்தில் தாங்கள் வெங்காயம் பயிரிட நினைப்பது அறிந்து உங்களைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். உங்கள் எண்ணம் நிறைவேற நீங்கள் ''கோ. 2'' எனப்படும் குறுகிய காலத்தில் நிறைந்த பலன் தரும் வெங்காயத்தைப் பயிரிடலாம்.

''கோ. 2'' வெங்காயத்தை 60 முதல் 70 நாட்களில் அறுவடை செய்திடலாம். இந்த இரக வெங்காயம் ஏக்கருக்கு 3 முதல் 5 டன் வரை மகசூல் தரவல்லது. இந்த இரகத்தை ஆண்டு முழுவதும் தனிப்பயிராகவோ அல்லது கரும்பு வயலில் கலப்புப் பயிராகவோ பயிரிடலாம்.

**தற்போது தமிழகத்தில் வெங்காயம் பயிராகி வரும் 17,000 எக்டேர் நிலப்பரப்பிலும் 'கோ-2' இரக வெங்காயத்தைப் பயிரிட்டால், அதன் மூலம் தமிழக உழவர் பெருமக்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ 2 கோடி ரூபாய் அதிக வருவாய் கிடைக்கும் !**




ஏக்கருக்கு 400 முதல் 500 கிலோ வெங்காயத்தை விதையாகப் பயன்படுத்தி இந்த ரகத்தைப் பயிரிடவேண்டும். ஏக்கருக்கு 10 வண்டி தொழு எரு, 11 கிலோ யூரியா, 60 கிலோ சூப்பர் பாஸ்பேட், 8 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவற்றை அடியுரமாகவும், 11 கிலோ யூரியாவை வெங்காயம் நடவு செய்த 30-வது நாளில் மேலுரமாகவும் இடவும்.

இதன் சாகுபடி விவரம் அனைத்தும் 1-4-75 தேதிய 'தமிழரசு' இதழில் 37, 38 பக்கங்களில் வெளியிடப்பட்டுள்ளது. அதைப் படித்து அதன்படி சாகுபடி செய்யுங்கள்.

வினா: 15-10-75 தேதிய 'தமிழரசு' இதழில் 'ஜே' பண்ணையில் ''பூசா-33'' நெல் பயிரிடப்பட்டது பற்றிய செய்து வந்தது. தற்போது நான் ''பூசா-33'' நெல் பயிரிட விரும்புகின்றேன். 'ஜே' பண்ணையில் ''பூசா-33'' நெல் விதைக்குக் கிடைக்குமா? இந்த நெல் ரகத்தை நல்ல விலைக்கு விற்க முடியுமா? இதை 'ஜே' பண்ணையில் விசாரித்துப் பதில் அளிக்கவும்.

—வி. ராமசாமி,
திருவள்ளூர்,
செங்கை மாவட்டம்.

(குறிப்பு: இதேபோல் பலரிடமிருந்து கேள்விகள் வந்துள்ளன)

**விடை :** 'ஜே' பண்ணையில் இருந்து 'பூசா-33' நெல் கிடைக்குமா என்று கேட்டுள்ள அனைவருக்கும் பதில் அளிக்கும் வகையில் மேற்கண்ட கேள்வியை 'ஜே' பண்ணையின் வேளாண்மைப் பொருளாதார நிபுணர் திரு. எஸ். எஸ். நாகராசன் அவர்களுக்கு அனுப்பினோம். அவர் அளித்த விடையைக் கீழே கொடுத்துள்ளோம்.

''15-10-75 தேதிய 'தமிழரசு' இதழைப் படித்த அநேக விவசாயிகள், புதிய நறுமணம் தரும் நெல் ரகம் 'பூசா-33' விதைத் தேவைக்கு 'ஜே' பண்ணைக்கு எழுதியுள்ளனர். 'ஜே' பண்ணைக்கு நேரில் வருபவர்களுக்கு (சென்னை திருப்போரூர் சாலையில் புதுப்பாக்கம் என்ற ஊரின் அருகில் உள்ளது) தலா 5 கிலோ விதையை 'ஜே' பண்ணையில் கொடுக்க இயலும். இதுசமயம் தமிழக விவசாயிகள் கவனிக்க வேண்டியது ஒன்று உண்டு. அதாவது இந்த நெல்லை எவ்வாறு விற்பது என்பது.

'பூசா-33' நெல், 'பிரியாணி' அரிசியை அளிப்பதால், இந்த நெல் ரகத்தை நமக்குத் தேவைப்படும் 'பிரியாணி' அரிசியின் அளவிற்குத்தான் சாகுபடி செய்யலாம். இன்றைய சமூகத்தில் உள்ள நுகர்வோர்களில் 90 சதவீதம் பேர் பொன்னி, பவானி, ஐ. ஆர். 20 போன்ற அரிசியையே அதிகம் விரும்புகின்றனர். 'பிரியாணி' அரிசியை விரும்பும் நுகர்வோர்கள் அதிகம் கிடையாது! இதன் காரணத்தால் ஏற்கனவே 'பூசா-33' சாகுபடி செய்த விவசாயிகள், தங்கள் நெல்லை, ஐ. ஆர் 20, பொன்னி போன்ற ரகங்களின் நெல்லைப் போல் எளிதில் விற்க இயலாமல் சிரமப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இதனால் 'பூசா-33' நெல் ரகத்திற்கு நல்ல எதிர்காலமே இல்லையென்றும் நினைக்கக் கூடாது! இந்த வாசனை அரிசியை வட இந்தியா அல்லது அரபு நாடுகளுக்கு அனுப்பினால்தான் இதற்கு நல்ல கிராக்கி ஏற்படுவதுடன், அதனால் விவசாயிகளுக்கும் இந்த நெல்லிற்கு நல்ல விலை கிடைக்கும்!

இந்த நெல்லை ஏற்றுமதி செய்வது என்பது தனிப்பட்ட விவசாயியால் இயலாது. தமிழ்நாடு அரசு ஒத்தாசை மூலம்தான் ஏற்றுமதி செய்ய முடியும். ஒத்தாசை கிட்டும் வரை 'பூசா-33' நெல் சாகுபடி இலாபகரமாக இருக்காது என்பது 'ஜே' பண்ணையின் கருத்து. தமிழ்நாடு அரசு விரைவில் 'பூசா-33' அரிசியை ஏற்றுமதி செய்யும் என்று நம்புகின்றேன். அதுவரை வாசனை அரிசியைச் சுலபமாக விற்கும் திறன் பெற்ற விவசாயிகள் மட்டும் 'பூசா-33' நெல் ரகத்தைச் சாகுபடி செய்யலாம்.''

**வினா :** வேளாண்மைத் துறையைச் சார்ந்த பலரிடம் கேட்டும் பதில் பெறமுடியாத ஒரு சிக்கலானக் கேள்வியை உங்களிடம் கேட்கிறேன்.

என்னுடைய நிலம் சற்று மணல் பாங்கானது. நான் கடந்த 15 ஆண்டுகளாக வேளாண்மைத் துறையினர் கூறும் முறையில் யூரியாவை மேலுரமாக இட்டு நெல் பயிரிட்டு வருகின்றேன். ஆனால் எதிர்பார்க்கும் மகசூல் கிடைக்கவில்லை. இதற்குக் காரணம் நான் போடுகின்ற யூரியா தண்ணீரில் கரைந்து மண்ணிற்குள் போய்விடுகிறது என்பது என் எண்ணம் (அனுபவரீதியாக). இரசாயன உர விலை ஏற்றமாக உள்ள இந்தக்காலத்தில், இதைத் தடுப்பது அவசியமாகும். எனவே, நான் போடுகின்ற யூரியா முழுவதும் பயிருக்குக் கிடைக்கவும், நல்ல மகசூல் பெறவும் வழி கூறுங்கள். இதற்கு நல்லவழி கூறுவீர்கள் என்று நம்பியே இக்கேள்வியை எழுதுகின்றேன். அடுத்த இதழிலேயே பதிலளித்தால், நான் மேலுரமிட பேருதவியாக இருக்கும்.

—ஆர். சீத்தாராமன்,
திருவரங்கம்,
திருச்சி மாவட்டம்.

**விடை :** நீங்கள் கேட்டுள்ளது முன்பு சிக்கலான கேள்விதான்! ஆனால் அந்தச் சிக்கலை தற்பொழுது வேளாண்மை ஆராய்ச்சியாளர்கள் தீர்த்துவிட்டனர்!

யூரியாவை மேலுரமாக இடும் போது தண்ணீரில் கரைந்து மண்ணுள் வடிகால் மூலமாக வடிந்து ஏறத்தாழ 40 முதல் 50 சதம் வீணாகிவிடும். இதைத் தடுக்க ஒரிசா மாநிலம், 'கட்டாக்' என்ற இடத்திலுள்ள மைய நெல் ஆராய்ச்சி நிலையத்திலும், ஆடுதுறையில் உள்ள மண்டல நெல் ஆராய்ச்சி நிலையத்திலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாராய்ச்சிகளின் மூலம் ஈரமண்ணுடன் யூரியாவை 5:1 என்ற விகிதத்தில் கலந்து மேலுரமாக இடுவதால், மண்ணினுள் வடிகால் மூலமாக வடிந்து யூரியா வீணாவதைத் தடுக்க முடியும் என்பது தெளிவாகியுள்ளது.

எடுத்துக் காட்டாக விளக்க வேண்டுமானால், 25 கிலோ யூரியாவை மேலுரமாக இடுவதாக வைத்துக் கொள்ளுங்கள். 25 கிலோ யூரியாவைத் தனியே இடாமல், 125 கிலோ மண்ணுடன் கலந்து 5 லிட்டர் தண்ணீர் சேர்த்துக் கிளறிக் குவித்து வைத்து, 48 மணி நேரம் நிழலில் அப்படியே வைத்திருக்க வேண்டும். பிறகு ஈரமண்-யூரியா கலவையை மேலுரமாக இடவும்.

நிழலில் உள்ள 48 மணி நேரத்தில் யூரியா, அமோனியாவாக மாறி, ஈரமண்ணின் அமைப்பில் இருத்தி வைத்துக் கொள்ளப்படுகிறது. ஈரமண்-யூரியா கலவையை நிலத்திற்கு இட்ட பிறகு ஈரமண்ணிலுள்ள அமோனியா சிறிது சிறிதாகப் பயிர்களுக்குக் கிடைக்கிறது.

இவ்வாறு யூரியாவைத் தனியே மேலுரமாக இடாமல், ஈரமண்



ணுடன் கலந்து இடுவதா
யூரியா வீணாவதைத் தடுத்
பயிர்கள் செழிக்கவும், அ
பயனாய் மகசூல் பெருகவும்
ஏற்படுகிறது. யூரியாவை
திறம்பட மேலுரமாக இட,
ஒரு சிறந்த முறையாகும்.

மேலும், மேலுரமிடுவத
முன் நிலத்திலுள்ள தண்ண
வடித்து விட்டு ஈரமண்-யூரி
கலவையை இடுவதும்,
திற்கு தொழுஎரு அல்லது
தழை எரு ஆகியவற்
போதிய அளவில் இட்டு,
தில் தண்ணீர் கீழ் நோக்கி
வதைத் தடுப்பதும் யூரியா
வதைத் தடுக்க உதவும்.

மேற்கூறிய முறைகளை
கொண்டால், உங்கள் நில
நெல் மகசூல் பெருகும் எ
திண்ணம்!

### சீரான உணவில் நீரழிவு நீங்கும்!

நீரிழிவு நோய்ச் சிகிச்சை
பற்றிய ஐரோப்பிய நீரிழிவு
மாநாடு மேற்கு ஜெர்
மனியிலுள்ள மூனிச் நகரில்
நடைபெற்றது. அம்மாநாட்
டில், நீரிழிவுக்காரர்கள் இன்
சுலினை அதிகமாகப் பயன்
படுத்தவேண்டாம் என்று
வல்லுநர்கள் எச்சரித்
துள்ளனர்.

மூனிச் டயபடீஸ் வல்லு
ரான டாக்டர் மெக்னர்ட்
என்பவர், நீரிழிவு நோய்
உள்ளவர்கள் சரியான
உணவை உட்கொள்வதின்
மூலம் நோயின் கடுமையை
குறைக்கலாம் என்றும், இ
படிச் செய்தால் நாளடை
வில் இன்சுலின் தேவை
படாது என்றும் கூ
யுள்ளார்.

மேற்கு ஐரோப்பாவி
சிறுநீரைப் பரிசோதனை
செய்வதற்கென லிட்ம
என்ற ஒரு காகிதம் வி
கிறது. இந்தக் காகிதத்தை
கிழித்துச் சிறுநீரில் போ
டால், சிறுநீரில் சர்க்கரை
இருந்தால் காகிதத்தி
நிறம் மாறிவிடும். அங்
இந்தக் காகிதத்தின் வி
மிகமிகக் குறைவே!

கத்தரிக்காய், பாகற்காய், வெண்டைக்காய் போன்ற சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் வகைக் காய்கறிகளில், நாம் எதிர்பார்க்கும் அளவுக்கு ஊட்டச் சத்து கிடையாது.

எல்லாக் காய்கறிகளிலும் நிறைய அளவுக்கு வைட்டமின், தாதுப் பொருள் ஆகியவை உள்ளன என்பது உண்மைதான். உணவைச் செரிக்க [illegible] தேவையான [illegible] பல காய்கறிகளில் கிடைக்கும். குறிப்பாகச் சைவ உணவில் பல்வேறு ருசிக்காக காய்கறி வகைகள் சேர்க்கப்படுகின்றன.

காய்கறி வகைகளில் ஊட்டச் சத்து ஓரளவுக்கே இருப்பதால் மிகவும் அரிய காய்கறிகளுக்குப் பதிலாக, எளிதில் கிடைக்கும் மலிவான காய்கறிகளை வாங்க வேண்டியிருக்கிறது.

## மலிவான ஆனால் ஊட்டச்சத்து நிறைந்த பழ வகைகள்

வைட்டமின் சத்துக்களையும், தாதுச் சத்துக்களையும் பெற நேர் வழி, பழங்களைச் சாப்பிடுவதுதான்! பப்பாளியும், [illegible] போன்றவற்றில் வைட்டமின் 'ஏ' சத்து அடங்கியுள்ளது. ஆரஞ்சு, சாத்துக்குடி, நெல்லிக்காய் போன்றவற்றில் வைட்டமின் 'சி' சத்து உள்ளது.

திராட்சை, ஆப்பிள் போன்ற விலை உயர்ந்த பழ வகைகளில், உண்மையிலேயே ஊட்டச் சத்து அதிகமாக இல்லை! அதே சமயத்தில் அதே தொகையைக் கொண்டு வாங்கப்படும் [illegible] குறைந்த விலைப் பழவகைகளில் அதிக அளவுக்கு ஊட்டச்சத்து இருக்கிறது! சீத்தாப்பழம், [illegible], பேரிச்சை, [illegible] போன்ற மிக மலிவு விலையில் கிடைக்கக் கூடிய பழங்களில் ஊட்டச் சத்து ஏராளமாக உள்ளது.

எல்லாப் பழ வகைகளின் விலையும் அதிகமாக இருப்பதால், வைட்டமின் சத்து, இரும்புச் சத்து ஆகியவை நிறைந்த [illegible]

[illegible]

காரட், வெங்காயம், தக்காளி, முள்ளங்கி, வெள்ளரிக்காய், [illegible], பச்சை மிளகாய், [illegible] இலை, எள், தேங்காய் போன்றவற்றைச் சமைக்காமல் உணவில் பச்சையாகச் சேர்த்துக் கொள்ளலாம். இவை சமைக்கப்படாததால், அவற்றிலுள்ள வைட்டமின்கள், இரும்புச் சத்து போன்றவை யாவும் கொஞ்சம் கூடக் குறையாமல் அப்படியே நமக்குக் கிடைத்து விடும்.

## ஊட்டச் சத்து இழப்பைத் தடுப்பது எப்படி?

எல்லா உணவுப் பொருட்களையும் சமைக்காமல் சாப்பிட முடியாது. சமைப்பது அவசியம்தான். ஆனால், வேக வைப்பது, வறுப்பது, நீராவியில் வேக வைப்பது, எண்ணெயில் பொரிப்பது ஆகிய எல்லாவிதமான முறைகளிலும் ஊட்டச் சத்து ஓரளவு சிதைந்து போகிறது! சில உணவுப் பொருட்களைப் பொறுத்தவரையில் இதைத் தவிர்க்க முடியாது. ஆனால் ஊட்டச் சத்து சிதைந்து விடாத வகையில் இவற்றைச் சமைக்க நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஒரு பொதுவான உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். அரிசியை வேக வைக்க நாம் அதிக அளவு தண்ணீரைப் பயன்படுத்துகிறோம். இதனால் அரிசியிலுள்ள வைட்டமின்கள், தாதுப் பொருட்கள் ஆகியவை நீரில் கரைந்து விடுகின்றன. அரிசி வெந்து சோறாகிய பிறகு, உபரியாக இருக்கும் நீரை (கஞ்சி) வடித்து விடுகிறோம். அதில் உள்ள ஊட்டச் சத்துக்களும் வெளியே போய் விடுகின்றன. எனவே, அரிசி வெந்து சோறாக [illegible] தேவைப்படும் [illegible] பயன்படுத்த அளவு நீரை [illegible] கற்றுக் கொள்வது [illegible] இன்றியமையாததாகும்.

காய்கறி வகைகளை வேக வைக்க அளவு [illegible] அதிக [illegible] வேண்டிய நீரைப் பயன்படுத்தத் தேவையில்லை. அதிக நீர் அவசியம் இல்லை. [illegible] விடும்.

காய்கறிகளை வேக வைக்கும் போது [illegible] வேண்டும். [illegible] காய்கறிகளை [illegible] வேண்டும். [illegible] காய்கறிகளை [illegible] நீரில் [illegible] அவற்றிலுள்ள [illegible] சத்துக்கள் யாவும் [illegible] போது நீரில் போய்விடும். அதே போன்று காய்கறிகளை [illegible] சமையலுக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

காய்கறி வகைகளில் உள்ள ஊட்டச் சத்துக்கள், அவற்றின் தோலுக்கு அடியில் [illegible] உள்ளன. ஆகையால் அவற்றின் தோலை [illegible] வேண்டும். காய்கறிகளை [illegible] நறுக்க [illegible] வேண்டும். [illegible] நீரில் [illegible] அவற்றை [illegible] சமைக்கக் கூடாது. [illegible] பயன்படுத்தக் கூடாது. [illegible] சமைக்கும் போது [illegible] வழக்கத்தில் உள்ளது. அதனால் சமையல் [illegible] சமையல் [illegible] வாயுவும் [illegible]. தவிர [illegible] இந்த முறையில் சமைப்பதால், ஊட்டச் சத்து [illegible]





நட்டம் அதிகமாக ஏற்படுவதில்லை.

## பயனுள்ள முறைகள்

உணவுப் பண்டங்கள் கெட்டுப் போய் விட்டால், இயற்கை மீது நாம் ஆத்திரப்படுகிறோம். ஆனால் சில சமயங்களில் இயற்கை நமக்கு உதவவும் செய்கிறது.

பண்டங்கள் கொதிப்பதை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோம். பாலேடு தயிராக்க நாள் தோறும் நாம் இந்த முறையைத் தான் கடைப்பிடிக்கிறோம். தோசை, இட்லி ஆகியவற்றிற்காக நாம் அரிசியையும், பருப்பு வகையையும் அரைக்கிறோம். அதைச் சிறிது நேரம் புளிக்க வைக்கிறோம். அவ்வாறு புளிக்க வைப்பது நொதித்தல் முறையில் தான் நடைபெறுகிறது.

நொதித்தலினால் நமக்குப் பல நன்மைகள் உள்ளன. நொதித்த உணவுப் பண்டத்தை நம்மால் நன்றாகச் செரிக்க முடிகிறது. நொதித்தலின்போது வைட்டமின் சத்து உருவாகிறது. மேலும் உணவில் காணப்படும் இரும்புச் சத்தில் பெரும்பகுதியைக் கிரகித்துக் கொள்ள முடிகிறது.

சில உணவுப் பொருள்களை முளைவிட அனுமதிப்பதால், அவற்றை எளிதாக செரிக்க இயலும். அத்தோடு வைட்டமின் சத்தும் அதிகரிக்கும். கோதுமை, கம்பு, கேழ்வரகு போன்ற தானியங்களையும் கடலைப் பருப்பு, பயறு போன்ற பருப்பு வகைகளையும் வீட்டிலேயே முளைவிடச் செய்வது மிகவும் சுலபமான செயல் ஆகும். இவற்றை 12 மணி நேரத்திற்கு நீரில் ஊறவைக்க வேண்டும். உப்பிய அந்தப் பருப்பு, தானிய வகைகளைத் தரையில் வைத்து, ஈரத் துணியால் மூட வேண்டும். 24 மணி நேரத்திற்குப் பிறகு, அவற்றில் முளை விட்டிருப்பதைக் காணலாம்.

இந்த எளிய முறையினால், அவற்றில் உள்ள வைட்டமின் 'சி' சத்தின் அளவு 10 மடங்கும், வைட்டமின் சத்துக்களின் அளவு இரு மடங்காகவும் அதிகரித்து விடுகின்றன. முளைவிடச் செய்வது மிகவும் எளியமுறை. இயற்கை நமக்குச் சாதகமாகச் செயல்படச் செய்வதற்கு இது சிறந்த முறையாகும்.

## முளைவிட்ட தானிய வகைகளை என்ன செய்வது?

முளைவிட்ட தானியங்களையும், பருப்பு வகைகளையும் எப்படி நாம் பயன்படுத்துவது?

சாதாரணமாகத் தானியம் அல்லது பருப்புக்களைக் கொண்டு சமைப்பதற்குப் பதிலாக, முளைவிட்ட கேழ்வரகைக் கொண்டு, 'கஞ்சி' செய்து குழந்தைகளுக்குக் கொடுக்கலாம்.

முளைவிட்ட உளுந்தையும், தேங்காயையும் கொண்டு, வாய்க்கு ருசியான 'சட்னி' தயாரிக்கலாம்.

எல்லா வகையான உணவுப் பண்டங்களும் பார்ப்பதற்கும், சுவைப்பதற்கும் ஒரே மாதிரியாக இருக்கும். ஆனால் முளைவிட்ட பருப்பு, தானிய வகைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் உணவுப் பண்டங்களில் ஊட்டச் சத்து அதிகமாக இருக்கும்.

அரிசிப் பொரியைப் பற்றி நம் யாவருக்கும் நன்றாகத் தெரியும். அரிசிப் பொரியை நன்றாக அரைத்துப் பொடி செய்து, குழந்தைகளுக்கும், வயது முதிர்ந்தவர்களுக்கும் உணவாகக் கொடுக்கலாம். ஏனெனில் இவற்றை அவர்களால் எளிதில் செரித்துக் கொள்ள முடியும்.

பச்சரியைவிட, புழுங்கல் அரிசியில்தான் ஊட்டச் சத்து அதிகமாக உள்ளது. ஆகையால் புழுங்கல் அரிசியைச் சாப்பிடப் பழகிக் கொள்ள வேண்டும். குழந்தைகள் கூட புழுங்கல் அரிசிச் சோற்றை விரும்பிச் சாப்பிடுவார்கள்.

கால்சியம் நம் உடலுக்குத் தேவையான முக்கியப் பொருளாகும். சுண்ணாம்பில் கால்சியம் சத்து அடங்கியுள்ளது.

சுண்ணாம்பு தடவி ஆறு வெற்றிலைகளைச் சாப்பிடுவதால் உடலுக்குக் கிடைக்கும் கால்சியம் சத்து அளவும், 300 கன சென்டி மீட்டர் பால் அருந்துவதால் கிடைக்கும் கால்சியம் சத்து அளவுக்குச்சமம் என்று கூறப்படுகிறது.

அமில குணம் கொண்ட மோர், ரசம், இட்லி போன்றவற்றில், கொஞ்சம் சுண்ணாம்புத்தூள் தூவினால், அவற்றின் வாசனையோ குணமோ மாறாது. 200 கிராம் உணவுப் பண்டங்களில், சுமார் ஒரு கிராம் சுண்ணாம்புத் தூளைக் கலக்கலாம்.

நாம் விலை கொடுத்து வாங்கும் உணவுப் பண்டங்களைக் கொண்டு சிறந்த பயனடைய வேண்டும். அவற்றை மிக நல்ல முறையில் உபயோகப்படுத்தி, சமைக்க வேண்டும். நவீன விஞ்ஞான அறிவைப் பயன்படுத்துவதற்கு நமது உணவுப் பழக்க முறை ஏராளமான வாய்ப்புக்களை அளிக்கிறது.



## சிவஞான முனிவர் நூல் நிலையம்

அறிவு வளர்ச்சிக்கு வழிகோலும் சாதனங்களில் நூல் நிலையமும் ஒன்று. சிந்தைக்கு விருந்தூட்டும் பல்துறை நூல்கள், நமக்குப் படிக்கும் ஆர்வத்தை மட்டுமல்ல நாமே ஒரு பல்கலைக் கழகமாக ஆகவும் வழி வகுக்கின்றது. 'அறிவாலயம்' என்னும் வரிசையில் 'திருநெல்வேலி சிவஞான முனிவர் நூல்நிலையம்' பற்றிய செய்தி இங்கே இடம் பெறுகிறது.

"இங்கே மட்டுமே கிடைத்திடத்தக்க சிறப்பான ஏடுகளைக் கொண்டு இவ்வறிவாலயம் திகழ்கின்றது. மெத்தவும் பயன்படத்தக்க அமைப்பு; சீரிய முயற்சி. என் பாராட்டுதலை வழங்கி மகிழ்கின்றேன்"

என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் பாராட்டப் பெற்ற 'திருநெல்வேலி சிவஞான முனிவர் நூல்நிலையம்' அறிவுப்பசியுள்ள பறவைகளையெல்லாம் வருகவருகவென அழைக்கும் பழமரமாக நின்று பயன் தருகின்றது.

தென்பாண்டி நாட்டுச் செந்தமிழ்த் தலைநகராய்த் திகழ்வது திருநெல்வேலிச் சீமை. ஆங்கே அறிவாலய மாய்க் காட்சியளிக்கின்றது, சிவஞான முனிவர் நூல் நிலையம். 1927-ல் துவக்கப்பெற்ற இது, ஏராளமான தமிழ், ஆங்கிலம், வடமொழி நூல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் ஆதரவில் செவ்வனே நடைபெற்று வரும் இந்நூல்நிலையத்தில், 73 பேழைகளில் சுமார் இருபதாயிரம் நூல்கள் உள்ளன. ஆண்டுதோறும் 300க்கு மேற்பட்ட நூல்கள் இந்நூலகத்தில் சேர்ந்த வண்ணமுள்ளன.

இந்நூல்நிலையம் காலை மாலை இருவேளைகளிலும் 8 மணிக்காலம் திறந்து வைக்கப்பெற்றுள்ளது. நகரிலுள்ள மாணவர்கள், அறிஞர் பெருமக்கள் நாள் தோறும் இங்கு வந்து படித்துப் பயன்பெறுகின்றனர்.

வெளியூரில் உள்ளவர்கள் இத்தகைய நூல்நிலைய வாய்ப்பு தங்கட்கு அமையாத குறையை நீக்கும் வகையில், முன்பணம் செலுத்தி நூல்களை எடுத்துப் படித்து இரண்டு வாரத்தில் திருப்பிக் கொடுக்கும் முறையும் வகுக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்நூல்நிலையம், இதற்கென்று ஏறத்தாழ ஐம்பதினாயிரம் ரூபாய் செலவில் அமைக்கப் பெற்றுள்ள புதிய கட்டடத்தில் நடைபெற்று வருகின்றது.

"தலைநிமிர்ந்து நின்று வடமொழியினும் தமிழ் சாலப் பெருமையுடைய மொழி என்று முந்நூறு ஆண்டுகட்கு முன்பு முரசறைந்த முனிவர் பெயரால் தமிழ்ச் செல்வங்கள் எல்லாம் ஒருசேரத் தொகுத்து வைக்கப்பட்டு, பயன்பட்டு வருவது காண மகிழ்கிறேன்" என்று நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் கண்டு மகிழ்ந்த இந்நூல்நிலையம், நெல்லை மாவட்ட மக்களுக்குக் கிடைத்த அமுதசுரபி என்றால் அது மிகையல்ல!

—பி.வி.ஜி.



## குழந்தைகளுக்குச் சுவை தெரியுமா?

"பிறந்த பச்சிளம் குழந்தைகளுக்குச் சில வகைச் சுவைகளில் பிடித்தது, பிடிக்காதது கூட அக்குழந்தைகளுக்கு உண்டு!" என்கின்றனர் ஆய்வாளர்கள். பிறந்த குழந்தைகளுக்குப் பலவகைச் சுவைகளை அறியும் ஆற்றல் இல்லை என்று இதுவரை இருந்துவந்த கருத்து இதனால் அடிபட்டுப்போகிறது.

மருத்துவ ஆய்வாளர்கள் குழு ஒன்று நாக்கின் எதிர் உணர்ச்சிக் கருவிகளைப் பயன்படுத்தி, நறுமணம் உள்ள தண்ணீர் இல்லாத தண்ணீர் வேற்றுமையைக் குழந்தைகள் உணர முடிகிறது என்று காட்டினர். தொட்டால் ஏற்படும் உணர்ச்சி, சுவையால் ஏற்படும் உணர்ச்சி, குழந்தைகளுக்கு உள்ள இந்த இரண்டு வகை உணர்ச்சிகளையும் ஆய்வாளர்கள் முதல் தடவையாகப் பிரித்தனர். பச்சிளம் குழந்தையின் நாக்கின் ஒரு புறத்தில் வெறும் தண்ணீரை 30 நொடிக்கு ஒரு தடவை சொட்டி வந்தனர். பின்னர், இனிப்புத் தண்ணீர்ச் சொட்டுகளை விட்டு வந்தனர். இனிப்புக் கூடக்கூட, நாக்கு உணர்வு மொட்டுக்கள் தெரிவித்ததிலிருந்து இனிப்பு எவ்வளவு இருக்கிறது என்பதை அறியக் குழந்தையால் முடிகிறது என்பது புலனாயிற்று. இதே மாதிரி உப்புக் கரைசல் வைத்தும் ஆய்வுகள் நடத்தியபோது இதே முடிவுதான் தெரிந்தது.


# டான்சியின் எழில் படைப்புகள்!

காலத்தை வெல்லும் டான்சியின் தயாரிப்புகள் மர மற்றும் எஃகு சாதனங்கள் டான்சியின் மேன்மையான படைபபுகள். நாளைய வடிவமைப்புகளில் இன்றே வழங்கப்படும் இச்சாதனங்கள் நீடித்து உழைப்பவை. நாற்காலிகள், மேசைகள், பீரோக்கள், கட்டில்கள் முதலிய பற்பல எழில்மிகு தயாரிப்புகளை வழங்குவது டான்சி.



# மறவாதீர்கள்:

## உங்கள் மகள் ஒருநாள்

## மணமகளாக அமர வேண்டியவள்!



திருமணம் என்ருலே - அதுவும் உங்களது மகளின் திருமணம் என்ருல் — செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கிஞல் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்ருேம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது — இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1,650/- |

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002


"சுந்தரபாண்டியன் மகன் விநாயகம். வேதாரண்யம் கிராமத்தில் பிறந்து வளர்ந்தாலும் சென்னையில் படித்தவர். [illegible] தன் அறிவை வளர்த்துக் கொள்வதை மறந்தார். அவர் [illegible] கற்றுக்கொண்டதெல்லாம் [illegible] நாகரிகத்தைத்தான். உலகமே அதிசயம். உலகில் [illegible] இறக்கிறார்கள். பிறந்து வளர்ந்து வாழ்ந்து [illegible] இந்த உலகில் [illegible] அனுபவித்து விட வேண்டும் என்று கூறித் திரியும் "ஹிப்பி"க் கூட்டத்தில் சேர்ந்து தன்னையே கெடுத்துக் கொண்டவர்.

"அவரது விபரீதப் போக்கைக் கேள்விப்பட்ட சுந்தரபாண்டியன் துடிதுடித்துப் போனார்."

"சென்னைக்கு நேரில் சென்று தன் மகன் இருக்கும் கோலத்தைக் கண்டு கண் கலங்கினார். [illegible]

"[illegible]

இன்ஸ்பெக்டருக்கு [illegible] குழப்பமாக இருந்தது. [illegible] யாகத் திரிந்து [illegible] மற்ற [illegible] விசாரிப்பதாகச் சொல்லி விட்டு நாற்காலியில் அப்படியே சற்றுச் சாய்ந்து கண்ணை மூடினார். [illegible] கலைந்து சென்றார்கள்.

[illegible] குற்றவாளியைக் கண்டுபிடித்து எங்கள் குடும்பக் களங்கத்தைப் போக்கி விடுங்கள். அப்போது தான் எனக்கு நிம்மதி கிடைக்கும் என் கேட்டுக் கொண்டாள். புண்ணியகோடியை ஓய்வெடுக்கச் சொல்லி விட்டு வீட்டிற்குள் போய் விட்டாள். சாய்வு நாற்காலியில் சாய்ந்தார் புண்ணியகோடி. அப்போது அவருக்கு வேண்டியதைச் செய்து கொடுக்கும் வேலை ஆளாக மாரிசாமி வந்து நின்ருன்.

ஆறு அடி உயரம். நரைத்த தலைமுடி. அடர்ந்து கருண்ட [illegible] முறுக்கிவிடப்பட்ட [illegible] அறுபதை [illegible] கூட்டுக் குலையாத [illegible] நினைத்து [illegible] [illegible] தீர்ந்துக் கொள்ள எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்கும் கண்கள். இப்படிப்பட்ட ஒரு [illegible] இன்ஸ் [illegible] புண்ணியகோடிக்கு [illegible] கொள்ளவில்லை. எழுந்து உட்கார்ந்தார். அவ [illegible] திரித்து [illegible] பறவை [illegible] ஆரம்பித்தது.

மாவித்து விட்டவர் போலக் கண்ணைத் திறந்துபடித்தார். தன் எதிரே நின்ற கிழவனைக் காணோம். பதட்டத்துடன் துடித்தெழுந்து வாசலுக்கு ஓடினார். அங்கும் காணவில்லை. இடுப்பில் மறைத்து வைத்திருந்த ரிவால்வரை அவசரமாகக் கையில் எடுத்தார். அப்போது பின்னால் ஏதோ உருண்டு விழும் சப்தம் கேட்டது. இமைப்பொழுதில் திரும்பினார். எதிரே மரகதம் சிரித்தபடி வந்து நின்ருள். இன்ஸ்பெக்டர் புண்ணியகோடிக்கு வியர்த்து விட்டது. மரகதம் கலகலவென்று சிரித்தாள்.

"என்ன நடந்தது? யாரைச் சுடத் துப்பாக்கியைக் கையில் வைத்திருக்கிறீர்கள்?" மரகதத்தின் கேள்விக்கு புண்ணியகோடி பதில் சொல்லவில்லை. மாரிசாமி காபியுடன் நிறைந்த தட்டோடு வந்து நின்ருன்.

# 5 சுழல்

பட்டுக்கோட்டை குமாரவே[illegible]

[illegible] விநாயகத்தின் வழக்கு விவரத்தை மீண்டும் எடுத்துப் படித்துப் பார்த்தார்.

வேதாரண்யத்தில் ஊர்வலத்திற்காக ஏற்பாடு செய்த காரில் [illegible] வெடியும், அதுவும் [illegible] போன நிகழ்ச்சி [illegible] போல் வந்து [illegible] திரைப்படம் போல் வந்து [illegible] சுந்தரபாண்டியன் [illegible] அதிர்ச்சியால் படுக்கையில் விழுந்ததும் அதன் பிறகு மணமக்கள் [illegible] புறப்படும்போது கோவைக்குப் [illegible] வர [illegible] திடீரென்று [illegible] ஓட்டிவந்தவர் ஒரு [illegible] அவர் [illegible] அவர் [illegible] வந்தவர். அவர் [illegible] அவரா?

[illegible]

புண்ணியகோடிக்கு மாரிசா[illegible] மறுபடியும் [illegible] எதும் [illegible] நின்றது [illegible] விட்டது. [illegible] பாதகத்[illegible] சொன்ன [illegible] தனமாக [illegible]

"[illegible] பிடித்து [illegible] வந்து [illegible] கொண்டு [illegible] ருர். [illegible] போனது [illegible] காபி [illegible] யில் [illegible] கண்கள் [illegible] புண்ணியகோடியை [illegible] பார்த்துக் [illegible] தான்.

"[illegible] சாப்பிடுங்[illegible] கொண்[illegible] [illegible]



உள்ளத்திற்கும் ஓய்வு வேண்டாமா?'' என்று சொல்லி வீட்டிற்குள் போனாள். புண்ணியகோடி டிபனைச் சாப்பிட்டுக்கொண்டே தன் முன்னால் நின்ற மாரிசாமியிடம் பேச்சுக் கொடுத்தார்.

''மாரிசாமி, நீ எத்தனை வருஷமா இங்கே வேலை செய்யறே?''

''முப்பது வருஷமா வேலை செய்யறேங்க எஜமான்!''

''நீ ரொம்ப நல்லா கார் ஓட்டுவே இல்லையா?''

''மாரிசாமி சிரித்தான். பதில் சொல்லவில்லை.''

''ஏன் சிரிக்கிறே......பதில் சொல்லு.''

''எனக்குக் கார் ஓட்டத் தெரியாதுங்க. காரைத் துடைப்பேன் அவ்வளவுதானுங்க''

''நிஜமாவா?''

''ஆமாங்க. கார் ஓட்டத் தெரிஞ்சா நானும் ஒரு முதலாளி ஆகிவிடுவேன்.!

''கார் ஓட்டத் தெரிந்தவங்க எல்லாம் முதலாளி ஆகமுடியுமா?'' சரி இருக்கட்டும். அப்படீன்னு நீ.

''பொதுவா நான் இந்த வீட்டுச் செல்லப்பிள்ளைங்க....'

''புண்ணியகோடி சிரித்தார்''

'ஏன் எஜமான் சிரிக்கிறீங்க?''

''ஒண்ணுமில்லே உனக்கு மனைவி குழந்தைகள்.....''

''எனக்குக் கல்யாணமே ஆகலியே''

''ம். நீ கல்யாணம் செய்துக்கயேன்''

''கல்யாணம்னுலே எனக்கென்னமோ பயம்மா இருக்குங்க''

''பயமா?''

''ஆமாங்க. கல்யாணம் செய்துகிட்டு இந்த பங்களாவுக்கு வந்தவங்க எல்லாம் நிம்மதியா போனதில்லே. யாராவது ஒருத்தர் இறந்து போயிடறுங்க. அதனாலே'' தன் பேச்சை முடிக்காமல் நிறுத்திக் கொண்டான்.

''அதனாலே..ஏன் பேச்சை நிறுத்திட்டே மாரிசாமி பேசு..''

''நீங்க காப்பி சாப்பிடுங்க எஜமான்'' பிளாஸ்கைத் திறந்து பீங்கான் கோப்பையில் காப்பியை ஊற்றினன்.

''கல்யாணம் செய்துக்கிட்டு இங்கே இருக்க பயமா இருந்தா வேறே இடத்துக்குப் போயிடலாமே''

''என்னாலே இங்கேயிருந்து போக முடியாதுங்க. நான் இந்த வீட்டு அடிமையா வளர்ந்துட்டேன். இந்த வீட்டை விட்டு நானும் போக முடியாது. என்னை வெளியே அனுப்பவும் மாட்டாங்க. அதனாலே...''

''சும்மா மனசிலே இருக்கறதைத் தயங்காமே எங்கிட்ட சொல்லு. அப்படி உனக்குப் பயத்தை உண்டு பண்ண இங்கே என்ன நடந்தது?''

''என்னை ஒண்ணும் விளக்கமாகக் கேட்காதீங்க. ம்...எங்க எஜமானி அம்மாளுக்கு அது பிடிக்காதுங்க.''

''யாரு மரகதத்தம்மாளுக்கா?,

''ஆமாங்க''

''எது பிடிக்காதுன்னு சொல்றே. திருமணமா?''

''ஆமாங்க''

''அவங்க திருமணம் செய்துக்கிட்டிருக்காங்களே''

''அது என்னமோ என்னைச் செய்துக்காதேன்னு சொல்லிட்டாங்க. என்மேலே அன்பும் பாசமும் நிறைந்த அவங்க ஏன் அப்படிச் சொன்னுங்கன்னே எனக்கு இன்னும் தெரியலே. செத்துப் போன விநாயகம் ஐயாவும் அந்தப்பெண் சந்திராவும் இந்தப் பங்களாவிற்கு வரப்போறுங்கன்னு கேள்விப்பட்டேன். பாவம். அந்த மணப்பெண் அநியாயமாகச் சாகப் போகுதுன்னு நினைச்சேன்!'

''அப்பன்னு, இப்படி ஒரு சாவு நடக்குமுன்னு நீ எதிர்பார்த்தியா?''

''அப்படித்தானுங்களே நடக்குது. ஏதோ ஒரு ரத்தக் காட்டேரி இந்த பங்களாவிலே இருந்துக்கிட்டு வர்ர மணப்பெண்கள் உயிரையே குடிச்சிக்கிட்டிருக்கு. இந்தத் தடவை என்னமோ மணமகன் விநாயகம் இறந்திருக்காரு' அது கிடக்குங்க. காபி ஆறிப் போறதுக்குள்ளே நீங்க சாப்பிடுங்க.''

''காப்பி சாப்பிடறது இருக்கட்டும். நீ கொஞ்சம் இந்த வீட்டுலே நடமாடுற ரத்தக்காட்டேரியைப் பற்றி விவரமாச் சொல்லு''

''என்னத்தைச் சொல்றதுங்க. நான் கண்ணைக் கட்டிக்கிட்டு ஒரு மூலையிலே பொழுதுபட்டதும் படுத்திடுவேன். ஏன்னு இந்த மாதிரி நடக்கறத்துக்கு முன்னே ஏதோ ஒரு மணம் மயக்கற மாதிரி வருது. அப்புறம் யாரோ மாதிரி நடக்கற மாதிரித் தெரியும். அவ்வளவுதான், எனக்கு எந்த நினைவும் இருக்கறதில்லே. பொழுது விடிஞ்சப்பறம் பார்த்தா மணமகள் செத்துக் கிடக்கும்.''

''இதுவரைக்கும் ஒரு கும்ப்ளெய்ண்ட் கூட இதுபற்றிப் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்ததில்லையே''

''ஆமா, அந்தப் பெண்ணுக்கு நாகதோஷம் இருந்திருக்கும்னு வந்தவங்க பேசிப்பாங்க. இன்னும் சில பேரு பூநாகம் தீண்டி இருந்திருக்கும்னு சொல்லுவாங்க விதி அப்படிச் சதி செய்துட்டு போயிடுவாங்க. காரணம் துன்னு தெரியலே! ஆனு அதை எனக்குத் தெரியலே! எனக்குத்தான் எப்ப நினைச்சா ஒரே திகிலாவும் மனசுக்குள்ளே இருக்குது''

''இதை உன் எஜமான் மேகநாதன்கிட்டே சொல்றதுதானே?''

''அவர் இந்த பங்களாவிலே தங்கினுத்தானே? ஏதாவது ஒரு வேலையை உண்டு பண்ணிக்கிட்டு அப்போ அவரு கோயம்புத்தூருக்குப் போயிடுவார்! ம்...இந்த பங்களாவிலே பயமில்லாம இருக்கிறது எங்க எஜமானியம்மா ஒருத்தர்தான். அவங்களும் இல்லேன்னு இந்த பங்களா பாழடைஞ்சே போயிடும். சரி நீங்க காப்பியைச் சாப்பிடுங்க.''

இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி காப்பியைக் குடித்துக்கொண்டே யோசனையில் ஆழ்ந்தார். மாரிசாமி சொன்ன வார்த்தைகள் இன்ஸ்பெக்டர் புண்ணியகோடியின் சிந்தனையில் வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

''இரவில் அங்கு என்ன மணம் வீசுகிறது? யார் அங்கே நடமாடுகிறார்கள்? அங்கு அவர் தங்கியிருந்த அன்றைய இரவில் எந்த மணமும் வீசவில்லையே ஏன்? அது எப்போது வீசும்?

மாரிசாமி கொடுத்த வாக்குமூலம் இன்ஸ்பெக்டர் புண்ணியகோடியின் சிந்தனையில் வட்டமிடத் துவங்கியது. கீறல் விழுந்த இசைத்தட்டுபோல அவன் சொன்ன வார்த்தைகள் திரும்பத் திரும்ப அவர் காதில் ஒலித்துக் கொண்டிருந்தன.

அவருக்குக் .கொடுத்திருந்த தனி அறையில் உலவிக் கொண்டிருந்தார் புண்ணியகோடி. அவர் எதிரே சிந்தனையில் பல சந்தேகங்கள் எழுந்தன. உடனுக்குடன் தீர்த்து வைப்பதுபோல அப்போதைக்கப்போது அவர் எதிர் பார்க்காமலேயே மேகநாதனின் மனைவி மரகதம்மாள் வந்து விளக்கம் சொல்லிக் கொண்டிருந்தாள். அவள் கொடுத்து வந்த விளக்கங்களும் அவருக்குச் செய்த உபசாரமும் புண்ணியகோடியைச் சிந்திக்கச் செய்து கொண்டிருந்தன.

மகனைப் பறிகொடுத்த சுந்தரபாண்டியனுக்கோ, மகளின் வாழ்வைப் பறிகொடுத்த கருணாகரன் தம்பதிகளுக்கோ இல்லாத கவலை, இவர்களின் நட்பைத் தேடிக் கொண்ட வந்த மேகநாதன் மனைவிக்கு, ஏன் வந்தது? குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதற்காக யாருக்கும் இல்லாத அளவுக்கு



மீறின அக்கறை மரகதத் தம்மாளுக்கு எப்படி வந்தது? எதற்காக வந்தது? இதற்குக் காரணம் என்ன?

நன்றோடு வலிய வந்து பேச வரும் மரகதம்மாளின் கண்களைக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தார். புண்ணியகோடியின் எக்ஸ்ரே கண்கள் மரகதத்தம்மாளின் உள்ளத்தை எக்ஸ்ரே எடுக்க ஆரம்பித்தன. மரகதம்மாளின் கண்களை இன்ஸ்பெக்டரின் கண்கள் ஊடுருவிப் பார்க்கும் போதெல்லாம் மரகதத்தின் வாய் குழற

வாக்கு மூலத்தில் சொன்ன வார்த்தைகள் அவர் காதில் ஒலிக்க ஆரம்பித்தன.

கடிகாரம் பன்னிரண்டு மணியை அடித்துவிட்டுத் தன் பாதையில் தொடர்ந்து ஓடிக் கொண்டிருந்தது. சிந்தனையிலிருந்து விடுபட்ட புண்ணியகோடி தலைக்கு மேலே சுற்றிக் கொண்டிருந்த மின்சார விசிறியை வேகமாகச் சுழற்றி விட்டு அறையின் புழுக்கத்தைப் போக்கினார். மனப்புழுக்கத்தையும் போக்க முயன்றார். அந்த நடு நிசியில் மல்லிகை மணம் வரு

ஒருவேளை தான் கேட்டது பிரமையாக இருந்தால்-புண்ணிய கோடி திறந்த கதவை மறுபடியும் சாத்திவிட்டுத் திரும்ப வந்து நாற்காலியில் உட்கார்ந்தார். சிந்தனையில் மூழ்கினார். அவர் செவியில் மீண்டும் ஒலித்துக் கொண்டிருந்த வார்த்தைகளெல்லாம் "இளம் தம்பதிகள் இந்த பங்களாவில் தங்கி, சந்தோஷமாக வெளியேறுவது இல்லை. நடு இரவில் ஏதோ ஒரு மயக்கும் மணம் வருகிறது. அதைத் தொடர்ந்து யாரோ நடமாடும் சப்தம் கேட்கிறது. விடிந்தால் இளம் தம்பதிகளில் யாரோ ஒருவர் பிணமாகக் கிடக்கிறார்கள் என்ற மாரிசாமியின் வார்த்தைகள் தான்.

தூங்கிக் கொண்டிருந்த புண்ணியகோடிக்குப் பொழுது விடிந்து

**தோ**லைவிலுள்ள மலைகள் பார்ப்பதற்கு அருகி விருப்பன போலத் தோன்றுகின்றன. வானளாவிய உச்சி நம்மை 'வா' என்று அழைக்கிறது. மலையை நெருங்க நெருங்க அது தொலைவில் போய்க் கொண்டிருக்கிறது. மலைமீது மேலே ஏற ஏற, ஏறுவது கடினமாகிறது. உச்சிமேகங்களில் மறைந்து விடுகிறது. என்றாலும் மலையேறுவது பயனுள்ள வேலையாகும். அதிலே ஒரு தனி இன்பம் இருக்கிறது. வாழ்க்கையில் இறுதிப் பயனைவிடப் போராட்டந்தான் வாழ்க்கைக்குச் சிறப்பளிக்கின்றது போலும். பெரும்பாலும் சரியான வழியைக் காண்பது கடினம். சில சமயங்களில் எது சரியல்ல என்று அறிவது எளிது. அதைத் தடுப்பது சிறந்தது.

சாக்ரடீஸ் தாம் இறக்கும்போது சொன்ன இறுதிச் சொற்கள்:

"சாவைப் பற்றி நான் அறியேன். அது நல்லதாக இருக்கலாம். அதைக் கண்டு நான் அஞ்சவில்லை. ஆனால் [illegible] கடமையை விட்டுப்பிரிவது கெட்டதென்று அறிவேன். கெட்டதென்று தெரிந்ததைவிட நல்லதாக இருக்கும் என்று தோன்றுவதையே நான் விரும்புகிறேன்."

—ஜவஹர்லால் நேரு.



[illegible]

[illegible] என்று கேட்டாள். மரகதம் அந்த மனம் எங்கிருந்தும் வரவில்லை. ஒரு வேளை [illegible] மின்சார விசிறியை நிறுத்தினார். [illegible] நட [illegible] என்று [illegible] அறைக்குப் பின்னால் யாரோ நடமாடும் [illegible] கேட்டது. [illegible] இப்படிப் [illegible] இருந்தார். [illegible] ஜன்னல் வழியாக [illegible] மரகதத்தம்மாள் [illegible] கொண்டிருந்தாள். [illegible] என்று கேட்பது?

[illegible] மரகதத் தம்மாள் [illegible] சிந்தனை [illegible] புண்ணியகோடி. [illegible] வந்திருந்த கான்ஸ்டபிள் அவரை எழுப்புவதற்குள் அவரே அவசரமாக எழுந்து விட்டார். மாடி சன்னல் வழியாக எட்டிப் பார்த்தார். மரகதம்மாள் குளித்து முழுகி அலங்காரமாகப் பொட்டு வைத்துக் கொண்டு பூஜைக்கான மலர்களைத் தோட்டத்தில் பறித்துக் கொண்டிருந்தாள்.

மரகதத்தம்மாளை ஜன்னல் வழியாக உற்றுக் கவனித்துக் கொண்டிருந்த புண்ணியகோடி பெருமூச்சு விட்டார். அந்தப் பெருமூச்சு ஏன்? எதற்காக? எதனால் ஏற்பட்டது?

தொடரும்.


தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட், நே. X. 406

வேப்பேரி : : சென்னை-600 007

"வெங்கடசாமி வாசகம் நிலயம்"

14, ரித்தர்டன் சாலை, வேப்பேரி, சென்னை 600 007

தொலைபேசி : 30877, 30878 தந்தி : "ஹவுஸ்பாங்க்"

செயலாளர் : 33000 தபால் பெட்டி : 486

தலைவர் : திரு. பழனிவேல்ராஜன், பி.எஸ்.சி., பி.எல்., எம்.எல்.ஏ.,

உப-தலைவர் : திரு. பி. கஸ்தூரி பிள்ளை

பொருளாளர் : திரு. எஸ். பழனிசாமி, எம். ஏ.,

அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் .. ரூ. 5 கோடி

செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் .. ரூ. 2,81,55,425/-

அடகு வைக்கப்பட்ட பிரதம சங்கங்களுக்கும், கட்டடச் சங்கங்களுக்கும் வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை .. ரூ. 22,23,28,765/-

இச்சங்கத்துடன் இணைக்கப்பட்ட தம வீடு அடமான சங்கங்கள், வீடு கட்டும் சங்கங்கள், கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் அவைகளின் அங்கத்தினர்களுக்குப் புதிய வீடு கட்ட 15 வருட நீண்ட காலக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன.

இது சம்பந்தமான விவரத்திற்கு அருகிலுள்ள பிரதம வீடுஅடமான அல்லது வீடு கட்டும் சங்கத்தை அணுகவும்.

தவணைவைப்புத் தொகைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

(முதலும் வட்டியும் திருப்பி அளிக்க தமிழ்நாடு அரசாங்கம் உத்தரவாதம் அளித்துள்ளது)

அங்கத்தினர் ஒருவருக்கு வழங்கும் உச்சக்கடன் அளவு

புதிய வீடுகள் கட்டுவதற்கு .. ரூ. 30,000/-

புதிய வீடுகள் கட்டுவதற்கு (கிராமபுற வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம்) .. ரூ. 10,000/-

பூ. அ. பத்மநாபன், பி.ஏ., எச்.டி.சி.,

இணைப்பதிவாளர்—செயலாளர்.



சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை) எண் 151.

சேலம்-1.

தொலைபேசி எண் : 2402

தபால் பை எண். 171

கிளைகள் : நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, [illegible] சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், [illegible], சேந்தமங்கலம், [illegible], தலைவாசல், [illegible] மகுடஞ்சாவடி, [illegible]

சொந்த நிதி ரூ. 327 லட்சம். நடைமுறை மூலதனம் 1711 லட்சம்

வட்டிவிகித அட்டவணை

கால் டெபாசிட்டுகள் : ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் (முன் அறிவிப்பு இல்லாமல்) $3\frac{1}{4}$%

ரூ. 10,000/-க்கும் அதற்கு மேலும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்) $3\frac{1}{2}$%

சேவிங்ஸ் டெபாசிட்டுகள் : ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும் 15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும் 3%

46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும் $3\frac{1}{2}$%

பிக்செட் டெபாசிட்டுகள் : ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு :

1. 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் 6%
2. 6 மாதத்திற்கும் அதற்குமேல் 9 மாதத்திற்குள் $6\frac{1}{2}$%
3. 9 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் $7\frac{1}{2}$%
4. 12 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் $8\frac{1}{2}$%
5. 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் $9\frac{1}{2}$%
6. 61 மாதத்திற்கும் அதற்குமேலும் $10\frac{1}{2}$%

சேமிப்புக் கணக்கு 6%

நடப்புக் கணக்கு ½%

ரூ. 5000/-க்கு மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு. பிக்செட் டெபாசிட்டுகளின் மீது மாதாந்திர வட்டி உண்டு. ரெக்கரிங், பிராவிடெண்ட் டெபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்புகொள்க.

எஸ். ஆறுமுகம், தலைவர்.

இ. பாலசுந்தரம், பி.ஏ., துணைப் பதிவாளர், நிர்வாக அதிகாரி.

பி. காசி, பி.எஸ்.சி., எச்.டி.வி., காரியதரிசி.

# வணிக இயல் கல்வியின் வளர்ச்சி

கல்வி வாழ்வின் ஒரு அங்கமாக இன்றைய நாளில் இயைந்து செயல்படுகின்றது. கல்வி கண்ணெனப் போற்றப்பட்டுச் சமுதாயத்தின் உயர்விற்கு வழி வகுக்கின்றது. வாழ்வில் வளம் பெறவும், மனிதன் உயர்ந்து நிற்கவும் உறுதுணையாக விளங்குகிறது. கற்றோர் போற்றப்படும் அளவிற்குக் கல்லாதார் வாழ்வில் போற்றப்படுவதில்லை. ஏற்றமிக்க வாழ்வில் எழில்நடை போட்டுத் தலை நிமிர்ந்து நடக்கக் கல்வி இன்றியமையாதது. இதனை வாழ்வில் உணராதார் எவருமில்லை. பண்பட்ட வாழ்வில் பகுத்தறிந்து செயலாற்ற இதன் துணையன்றி வேறு எத்துணையும் வாழ்விற்கு வளமை தராது என்பது கண்கூடு. சமுதாயத்தில் மனிதன் பல உன்னத நிலைகளை அடைய அறிவு வளர்ச்சியில் எவ்வளவோ சிறப்புக்களைக் கண்டிருக்கிறான். இன்னமும், பல்வேறு வகையான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறான். ஆராய்ச்சியில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகையான புதுமைகள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. ''கற்றது கைமண்ணளவு'' என்பதற்கிணங்க நாம் அறிந்துகொள்ள வேண்டியன எவ்வளவோ உள்ளன. உலகியல் அறிவில் பல்வேறு துறைகளில் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு அவை. மனித நல்வாழ்விற்குப் பல நன்மைகள் அளிக்கின்றன என்றால் மிகையன்று.

எத்தனை வகைப்பட்ட ஆராய்ச்சிகளும், அறிவியல் முன்னேற்றமும் காண முற்பட்டாலும் மனிதன் தற்கால சமுதாயத்தில் தன்னுடைய வாழ்விலும் வளம் காண வேண்டியவனாக இருக்கிறான். அவனுக்கென்று ஒரு குடும்பம், உற்றார் உறவினர் சுற்றத்தார் எனப் பல்வேறு வகையான சூழ்நிலைகளில் அவன் தன் வாழ்வில் பொருளீட்ட வேண்டியது இன்றியமையாததாகிறது. சமுதாயத்தில் எல்லாரும் ஒரே நிலையில் இல்லை. அதில் ஏற்றத் தாழ்வுகள் எவ்வளவோ! ஒவ்வொரு நிலையிலும் அவனவனுக்குத் தகுந்த அளவில் வாழ்க்கையை ஒரு சிறு வட்டத்திற்குள் அமைத்து அதற்குள்ளேயே சுற்றிச் சுற்றி வர வேண்டிய சூழ்நிலையிலிருந்து மீள முடியாமல் அவதிப்படுகிறான். அந்தச் சூழ்நிலையை நன்முறையில் காத்துத் தானும் தன் குடும்பத்தினரும் வாழ வழி செய்ய வேண்டிய கடமையில் கட்டுண்டு கிடக்கிறான்.

நமது சமுதாயத்தில் எத்தனை பேர் கல்லூரிகளுக்கும் மற்ற உயர் கல்வி தரும் துறைகளுக்கும் செல்ல முடிகிறது? எல்லாரும் கல்லூரி வாழ்வினில் காலெடுத்து வைக்க முடிவதில்லை. காரணம் சூழ்நிலையே! பள்ளி இறுதி வகுப்பு வரையிலும் பயின்று மேற்கொண்டு கல்லூரி சென்று தன்னுடைய கல்வியை உயர்த்திக் கொள்ள இயலாதோரின் எண்ணிக்கையும் அதிகம் உண்டு. பள்ளி இறுதி வகுப்பினைத் தாண்டி மேற்கல்வியினைத் தொடர இயலாதவர்கள் இருக்கிறார்கள். ஏன்? அவர்கள் குடும்பத்தைக் காக்க வேண்டிய பொறுப்பில் கட்டாயமாகத் தள்ளப்படுகிறார்கள். ஏதாவது வேலை பார்த்து, அதில் கிடைக்கும் ஓரளவு வருவாயைக் கொண்டு குடும்பத்தை நடத்திட வேண்டிய கட்டாய-இக்கட்டான-சூழ்நிலை.

**வே. சீனிவாசன்,**
தேர்வுக் கட்டுப்பாடு அலுவலர்,
தொழில் நுட்பக் கல்வித் துறை.

இவ்வாறு உள்ளோரின் எண்ணிக்கை ஆண்டுதோறும் பெருகி வருகின்றது. வேலை வேலை என்று ஏதாவது ஒரு பணியில் சேர்ந்து சம்பாதிக்க வேண்டுமென்ற துடிப்பு. இன்றையச் சமுதாயத்தில் வேலைவாய்ப்புகள் ஓரளவு பெருகிக் கொண்டு வந்த போதிலும் எல்லாரையும் முழு அளவிற்கு நிறைவு செய்ய இயலாத தொன்றாகும். இந்நிலை நமது நாட்டில் மட்டுமின்றி உலகெங்கிலும் காணப்படுவதுதான்.

இத்தகைய சூழ்நிலையில் பள்ளி இறுதி வகுப்பை வெற்றிகரமாக முடித்தவர்கள் தங்களுக்கெனத் துணைத் தகுதிகளைத் தேடிகொண்டாலன்றி அவர்களுக்கு வேலை கிடைப்பது மிகக் கடினம். அவர்கள் மற்ற துறைகளில் எளிதாகக் கிடைக்கக் கூடிய பாடங்களைப் பயின்று தேர்ந்தால் மிகவும் நன்மை தரக்கூடியதாகும். அதற்கான பயிற்சிகளை அவர்கள் மிகவும் எளிதாகப் பெறக் கூடிய வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன. அவற்றில் தங்கள் கவனத்தைச் செலுத்தி மிகக் குறுகிய காலத்தில் பயிற்சி பெற்றுக் கூடுதல் தகுதியினைப் பெற முடியும். அதனால் ஓரளவு வேலை வாய்ப்புகளைப் பெறுவதும் எளிதாக இருக்கிறது. பள்ளி இறுதித் தகுதியோடு மேலும் சில பயன்படத் தக்க கல்வியிலும் தேர்ச்சி பெற்றுத் தங்கள் வாழ்வில் உயரவும் வழி வகுக்கின்றன அத்தகைய சிறு பயிற்சிகள்.

அத்தகைய பயிற்சிகளில் வணிகஇயல், கல்வி, தட்டச்சு, சுருக்கெழுத்து, கணக்கியல் வங்கி இயல் பயிற்சி முதலிய பாடங்களில் தேர்வுகளை நடத்தி வருகிறது தொழில் நுட்பக் கல்வித் துறை. பல்வேறு துறைகளில் தட்டச்சுப்பொறி, மிகத் தலையாய முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தட்டச்சுப் பொறி மிகவும் அவசியமானதாகக் கருதப்படும் அளவிற்கு அரசு அலுவலகங்கள், தனியார் அலுவலகங்கள், மற்றும் பல நிறுவனங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே, தட்டச்சுப் பயிற்சி மிகவும் தவிர்க்க முடியாததாகிறது. அடுத்து, சுருக்கெழுத்து உலகில் மிகச் சிறப்பான முறையில் கையாளப்பட்டு வருகிறது. பத்திரிக்கை உலகிற்கு உயிர் நாடியாக விளங்குகின்றது என்பதோடல்லாமல், பல்வேறு துறைகளிலும் சுருக்கெழுத்து நன்மை அளிக்கின்றது. எத்தகைய சொற்பொழிவுகளையும் மிக விரைவில் பேச்சு வேகத்தோடு எழுதி விட முடியும். நிர்வாக அலுவலகங்களில் பல பணிகளை மேற்கொண்டிருக்கும் மேலதிகாரிகளின் குறிப்புகளைக் காலவிரைவு கருதி அவர்கள் சொல்லச் சொல்ல அதனைச் சுருக்கெழுத்தின் மூலம் விரைவாக எழுதிப் பணியை விரைந்து செயல்பட உதவுகின்றது. சட்டமன்றங்களில் நடக்கும் பணிகளுக்கும் சுருக்கெழுத்தாளர்களின் பணி மிகவும் அவசியமானதாகும். அரசுப் பணியகங்களிலும் மற்றும் தனியார் நிர்வாக அலுவலகங்களிலும், தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சி பெற்றவர்களுக்கு முதன்மை வாய்ப்பு வழங்கப்படுகிறது. பள்ளி இறுதி வகுப்புத் தேர்ச்சியோடு மேற்குறிப்பிட்ட இரண்டு பாடங்களிலும் தகுதி பெற்றவர்கள் கல்லூரி வரையிலும் செல்ல இயலாவிட்டாலும் அவர்கள் வேலை வாய்ப்பினைப் பெற ஓரளவு உதவுகின்றது. பணியாளர் தேர்வுக் கழகத்திலும் தட்டச்சுத் தேர்வில் வெற்றி பெற்றவர்களின் கூடுதல் தகுதியும் கணக்கில் கொள்ளப்படுகிறது.

மேலும் தமிழ்நாடு அரசின் அலுவலக நடைமுறையில் தமிழ்த் தட்டெழுத்து மற்றும் தமிழ் சுருக்கெழுத்துப் பெரிதும் உதவுகின்றது. கணக்கியல், வங்கியியல் பாடங்களில் உயர் நிலைத் தேர்வில் வெற்றி பெறுபவர்கள் வங்கிகளிலும், தனியார் நிறுவனங்களிலும், தணிக்கை அலுவலகங்களிலும் பணியாற்றுவதற்குத் தேர்வு செய்யப்படுகின்றனர். வரவு செலவுக் கணக்குத் துறையில் கணக்கியலும், வங்கியியலும், மிகச் சிறப்பான பலனைத் தருகின்றன. எனவே தொழில் நுட்பக் கல்வித் துறையால் நடத்தப்படுகின்ற வணிக இயல் பாடங்கள் பள்ளி இறுதி வகுப்புப் படித்து உடனடி வேலைவாய்ப்பினை நாடுவோருக்கு ஓரளவு அந்நல்வாய்ப்பினை அளிக்கும் அருமருந்தாக விளங்குகின்றது. பள்ளிஇறுதி வகுப்பு மட்டுமின்றி, பட்ட வகுப்பு படித்தவர்களுக்கும், தொழிற்கல்வியில் உயர் வகுப்புப் படித்தவர்களுக்கும் கூடத் தட்டச்சும் சுருக்கெழுத்தும் பயன்தரத்தக்கதே. வேலை வாய்ப்பிற்கு மட்டுமின்றித் தன்னுடைய சொந்தப் பணியினை நன் முறையிலும் விரைவிலும் ஆற்றவும் உதவுகின்றது.



அத்தகைய கல்வியில் பெறுகின்ற பயிற்சிகளுக்கான தேர்வுகள் தொழில் நுட்பக் கல்வித் துறையால் (தேர்வு வாரியத்தின் மூலம்) எத்தகைய அளவில் சிறப்புமிக்க தன்மையில் நடத்தப்படுகின்றன என்பதனைச் சற்று ஆராய்வோம்.

அரசுத் தேர்வு ஆணையாளரால் நடத்தப்பட்டு வந்த வணிகஇயல் பாடங்களான தட்டச்சு, சுருக்கெழுத்து (ஆங்கிலமும் தமிழும்), கணக்கியல், வங்கியியல், வணிக இயல், வணிகப் பயிற்சி முதலியன அரசு இணையின் பேரில் அக்டோபர் 71-ஆம் ஆண்டு முதல் இத்துறையினரால் ஏற்று மிகவும் சீரியமுறையில் நடத்தப்பட்டு வருகிறது. ஆண்டிற்கு இரண்டு முறை நடத்தப்படும் இத்தேர்வுகள் கடந்த நான்கு ஆண்டுகளில் மிக வெற்றிகரமான முறையில் நடத்தப்பட்டுள்ளது.

மேற்கூறிய தேர்வுகளுக்கான 1,200 பயிற்சிகள் ஏறத்தாழ தனியார் பயிலகங்களின் வாயிலாக மாணவர்கள் பயிற்சிபெற்று தேர்விற்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள். தனியே பயிற்சி பெற்றுத் தாமாகவே தேர்வு எழுத வருகின்றவர்களும் அனுமதிக்கப்படுகிறார்கள். அப்பயிலகங்களின் தரத்தையும் பயிற்சியளிக்கும் தன்மையையும் கருத்தில் கொண்டு அவைகளுக்கு ஒப்புதல் அளிக்கும் பணியும் இத்துறையின் மூலம் செயல்படுகின்றது.

தட்டச்சு, சுருக்கெழுத்து' ஆகிய இரு பாடங்களிலும் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகி வருகிறது. ஆண்டிற்கு ஏறத்தாழ ஒரு இலட்சம் மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர். ஒவ்வொரு முறையும் 50,000 மாணவர்கள் தேர்வு எழுதுகின்றனர்.

நெடுங்காலமாக, பட்டயப் பாடங்களுக்கான தேர்வுகள் நடத்திய சிறப்பான அனுபவத்தின் அடிப்படையை வைத்துக் கொண்டு வணிகஇயல் பாடங்களுக்கான தேர்வுகளை நடத்துவதில் நல்ல முறைகளைக் கையாண்டு அதில் வெற்றிபெற வழிவகைகள் ஏற்பட்டுள்ளன.

1,50,000 விடைத்தாள்கள் பல்வேறு தேர்வு மையங்களில் இருந்து பெறப்பட்டு மாற்று எண்கள் (Dummy number) அளிக்கப்பட்டு விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, தேர்வு முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன. தேர்வு அறை நுழைவுச் சீட்டில் (Hall ticket) 'பாஸ்போர்ட்' அளவு புகைப்படம் ஒட்டும்முறை முதன் முறையாக ஏற்படுத்தப்பட்டது. 10 ஆண்டுக் கல்வித் திட்டம் நடை முறையில் உள்ள ஆந்திரா, கேரளா, மைசூர் ஆகிய மாநில 'எஸ். எஸ். எல். சி.' தேர்வில் வெற்றிபெற்றவர்களின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. ஏனெனில் தமிழ்நாட்டில் 11 ஆண்டுக் கல்விமுறை நடைமுறையில் உள்ளது. தமிழ்நாடு மாணவர்கள் மற்ற மாநில 'எஸ். எஸ். எல். சி.' தேர்விற்குப் பயிலும் காலத்தைவிட ஓராண்டு அதிகம் பயிலுகின்றார்கள். மற்ற மாநிலத்தவர்கள் அந்த ஓராண்டு கல்வியை ஈடுசெய்யும் வகையில் உயர் கல்வித் தகுதி பெற்றிருப்பின் அவர்களும் இத்தேர்விற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

எல்லாப் பாடங்களுக்கும் விடைத்தாள்கள் (Answer books) ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. அதிலேயே மாணவர்களுக்கான குறிப்புரைகளும் தரப்பட்டுள்ளன. மே 1972 முதல் தமிழ் தட்டச்சில் உயர்வேகத் தேர்வு (High speed) தொடங்கப்பட்டது. இது வரை நடைமுறையில் இல்லாமல் இருந்த தமிழ்த் தட்டச்சுத் தேர்விற்கு அணிமுறை (Batch System) முதன் முறையாகப் புகுத்தப்பட்டு மாணவர்கள் தொல்லையின்றித் தேர்வு எழுத வகை செய்யப்பட்டது.

வணிகஇயல் பாடங்களுக்கான பாடத்திட்டங்கள் 1954-ஆம்

ஆண் ல் கடைசி முறையாகத் தயார ப்பட்டதோடு நின்றிருந்தது. அ ற்றிற்கான பாடத் திட்டங்கள் மே .973 முதல் இத்துறையால் சிறப்பான முறையில். மாற்றியமைக்கப்பட்டது. ஆங்கிலத்திலும் மற்றும் தமிழ் தட்டச்சிற்கான வடிவங்களும், படிவுங்களும் புதிய திருத்தியமைக்கப்பட்ட பாடத்திற்கு ஏற்ப, வரையறுக்கப்பட்டு 'வடிவங்களும் படிவங்களும்' என்ற புதியநூல் ஒன்று-மாணவர்கள் எளிதில் புரிந்து பயன் பெறத் தக்க அளவில்-வெளியிடப்பட்டுள்ளது. குறைந்த விலையில் அதனை மாணவர்கள் பெற்றுப் பயனடையத் தகுந்த விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன் துணை கொண்டு பயிலகங்கள் அனைத்திலும் மிகச் சீரான ஒரே மாதிரியான வழியைப் பின்பற்றி பயிற்சி அளிக்க இயலும்.

மேற்படித் தேர்வுகள் நடத்துவதோடு மட்டுமின்றி ஏறத்தாழ 1,200 பயிலகங்களுக்கு ஒப்புதல் அளிக்கும் பணியும் இத்துறையால் ஏற்கப்பட்டுள்ளது. பயிலகங்கள் அனைத்தும் நல்லவகையில் நடத்தப்படுகின்றனவா என்பதையும் தட்டச்சுப் பொறிகள் எவ்வாறு வைக்கப்பட்டுள்ளன, நல்ல தகுதிவாய்ந்த பயிற்சிமிக்க ஆசிரியர்கள் இருக்கின்றார்களா என்பன போன்ற பலவற்றை ஆய்ந்து அதன் அடிப்படையில் ஒப்புதல்கள் அளிக்கப்படுகின்றன. எல்லாப் பயிலகங்களையும் தரமுள்ளதாக அமைத்திடத்தக்க வகையில் அவ்வப்போது அறிவுரைகள் அளிக்கப்பட்டு வருவதனால் அவைகள் சீராக இயங்கிட உதவுகின்றது. மேலும் வணிகவியல் தேர்வுகள் நடத்தப்பெற இருக்கும் காலம், ஒப்புதல் வழங்கப் பெற்றுத் தமிழகமெங்கும் இயங்கிவரும் பயிலகங்களின் அட்டவணை போன்ற விபரங்களை ஒருங்கே கொண்ட 'தற்காலிகச் செயல் முறைத் தொகுப்பு' (Tentative programme) ஆண்டு தோறும் அச்சிடப்பட்டு ஒப்புதல் பெற்ற எல்லாப் பயிலகங்களுக்கும் உரிய காலத்தில் அனுப்பி வைக்கப்படுகிறது. இதன் துணை கொண்டு அவ்வப்போது எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை உரிய காலத்தில் காலதாமதமின்றிச் செயல்படுவதற்கு ஏதுவாக அமைந்துள்ளது.

1973-ஆம் ஆண்டு முதல் தட்டச்சு (ஆங்கிலம் மற்றும் தமிழ்) பாடத்தில் தொழில் நுட்ப ஆசிரியர்களாகத் தகுதி பெறுவதற்கான ஆறு வாரப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றது. ஆண்டிற்கு ஒருமுறை கோடைக் காலத்தி ... வகுப்பாக நடத்தப்படுகின்றது. பயிற்சி வகுப்புகள் முடிந்ததும் எழுதுமுறை மற்றும் செயல்முறைத் (Theory and practical) தேர்வுகள் நடத்தப்பட்டு, தேர்வு வாரியத்தின் மூலமாக வெற்றி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

வணிகஇயல் தேர்வுகள் எழுதும் 50,000 மாணவர்களின் தேர்வு முடிவுகள் (ஆண்டிற்கு இரண்டு முறையும்) பத்து வார காலத்திற்குள் வெளியிடுவதற்கான பணிகள் நன்கு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தேர்வுப் பெயர்ப்பட்டியல் (Nominal roll), தேர்வு முடிவுகளை வெளியிடுதல் போன்ற பணிகளுக்கு, கணக்கிடும் இயந்திரம் (Computor) பயன்படுத்தப்படுகிறது. தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட 15 அல்லது 20 நாட்களுக்குள் வெற்றி பெற்ற மாணவர்களுக்குக் 'கம்ப்யூட்டர்' முறை மூலம் தயாரிக்கப்படும் சான்றிதழ்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன. பத்திரிக்கை காகித பற்றாக்குறையின் காரணமாக அரசிதழிலோ, நாளேடுகளிலோ, தேர்வு முடிவுகள் வெளியிடப்படுவதில்லை. மாணவர்கள் தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ள வேண்டும் என்ற காரணத்திற்காகத் தேர்வுகள் அச்சிடப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட பயிலகங்கள், (1,200 எண்ணிக்கை) பல்தொழில்நுட்பக் கல்லூரிகள், எல்லா மாவட்ட கல்வி அலுவலகங்கள் ஆகியவற்றிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அங்கே, அவைகள் மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் அறிவிப்புப் பலகைகளில் போட விரிவான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளது. தொலைபேசி மூலம் அறிந்து கொள்ளவும் தக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் அரசு அலுவலகங்களில் தமிழ் நடைமுறை நன்முறையில் செயல்பட ஆரம்பித்து விட்டதால், தமிழ்த் தட்டெழுத்து, தமிழ்ச் சுருக்கெழுத்து இவைகள் மாணவர்களால் விரும்பிக் கற்கப்படுகிறது. தமிழ் சுருக்கெழுத்தில் "சுருக்கெழுத்து அகராதி சொற்றொடர் நூல்" ஒன்று தயாரிப்பதற்காக தமிழக அரசால் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றது. கூடிய விரைவில் அந்த அகராதி வெளியிட, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த அகராதி தமிழ்ச் சுருக்கெழுத்துப் பயிலவிருக்கும் மாணவர்களுக்கு மிகவும் நலம் பயக்கத்தக்கதாக அமையும். பெருவாரியான மக்களின் விருப்பத்திற்கிணங்க ஆங்கிலச் சுருக்கெழுத்துத் தேர்வில் முதன் முறையாக இடைநிலைத் தேர்வு (ஒரு நிமிடத்திற்கு 100 வார்த்தைகள் வீதம்) தொடங்கப் பெற்று நன்முறையில் இயங்கி வருகின்றது.

வணிகஇயல் தேர்வுகள் சிறந்த முறையில் நடத்தப்படுவதற்கான வழிவகைகள் சீர்படுத்தப்பட்டுள்ளன. சுருக்கெழுத்துத் தேர்வில் வினாக்களை நன்றாக வாசிப்பவரை நியமித்தல், எதிரொலி இல்லாத நல்ல ஒளிவசதியுடன் கூடிய தேர்வுக் கூடங்களைத் தேர்ந்தெடுத்தல் முதலியவற்றில் தனிக் கவனம் செலுத்தப்படுகிறது.

இறுதியாக, வணிகஇயல் பாடங்களில் மாணவர்கள் பெறும் பயிற்சி அவர்களுக்குக் கூடுதல் தகுதி அளிப்பதோடு மட்டுமன்றி ஓரளவு வேலைவாய்ப்பிற்கும் உதவும் என்ற வகையில் இப்பயிற்சி சிறப்பு வாய்ந்ததாகும். இந்தக் கல்வி மேலும் மேலும் மிகச் சிறப்பான முறையில் எதிர்காலத்தில் உருவாகி, மாணவர்கள் பல நன்மைகளை அடைந்து பயன் பெறுவார்கள் என்பது உறுதி.

" கடந்த நான்காண்டுக் காலத்தில் தமிழக அரசு பருப்பு வகைகள் உற்பத்தி செய்யும் பரப்பளவை 80.7 சதவிகிதமாக உயர்த்தியுள்ளது. தமிழக அரசின் இந்தப் பெருமுயற்சியின் வாயிலாகப் பருப்பு வகைகளின் உற்பத்தி 106.5 சதவிகிதமாக உயர்ந்துள்ளது ".

புதுடில்லியில் 22-11-75-ல் நடைபெற்ற இந்திய பருப்பு உற்பத்தி வளர்ச்சி ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் மத்திய வேளாண்மைத்துறை இணை அமைச்சர் ஷிண்டே.



# மனை வழங்கிய மாண்பு!

இல்லங்கள் அமைக்க மனைவழங்கிய மாண்பினைக் குறித்துப் பகர்ந்தது.

பாட்டுடைத்தலைவன் : புரவலர் மு. கருணாநிதி.

பாடல் புனைந்தோன் : புலவர் வைஇரா.

புள்ளா ரொலியின் முன்ன மெழுந்தே
புலமதை நாடி யுணவினை நாடார்
பகடெனத் தம்முடைப் பாடுகள் தந்து
கூகை யுரைக்குங் காலம் மீட்டும்
இல்லம் நாடும் இல்லோர் படுதுயர்
இல்லா தாகிடச் செய்தனை நீயே
உள்ளம் பெரிதே இல்லோர் தமக்கே
மனைவ ழங்கிய மாண்பே
வினைநல மஃதே விழையும் நிதியே !

திணை: பாடாண்திணை, துறை: பொதுவியல்துறை.

# நீ நிலம் வழங்கினை

நிலமற்றோர்க்கு நிலப்பட்டா வழங்கினமைக அவனை அவர் பாடியது.

பிறபுலம் புக்கு வினைவினை யாற்றி
தருதாழ் கூலி யதுவே போற்றி
விலங்கினுங் கீழாய் வாழுநர் கண்டு
உளங் குமைந்தனர் பலரே பலரே
நிலை கண்டனை நீயே தாயாய்
வழியும் விழிநீர் துடைத்தே வாழ
அளித்தனை யளவிலை யதற்கிணை யிலையே
நிலம் வழங்கிய நிதியே
நலம் பெறுகுவை நாளும் நீயே !

திணை : பாடாண்திணை, துறை : பொதுவியல்துறை.

# இந்தியாவின் மிகப் பழமையான நூலகம்-

கிழக்கிந்தியக் கம்பெனிக்காரர்கள் சென்னைக் கோட்டைப் பகுதியில் தங்கள் கொற்றத்தை உருவாக்கிக் கொண்டிருந்த நேரம் அது. கிழக்கிந்தியக் கம்பெனியின் சென்னைப் பகுதித் தலைமை ஆட்சியாளராக (Agent) இருந்தவர் 'சர் எட்வர்டு விண்டர்' (Sir Edward Winter) என்பவர். அவர்தான் முதன்முதலில், இந்த நூலகத்தைத் தொடங்கினார்.

சென்னைக் கோட்டையிலுள்ள மாதாகோவிலின் தலைமைப் பாதிரியாரின் பொறுப்பில் இந்நூலகம் இயங்கத் தொடங்கியது. வெள்ளையர்களால் தொடங்கப்பட்ட இந்நூலகம்தான் இந்தியாவின் மிகப் பழமையான நூலகமாக விளங்குகிறது.

நூலகத்துக்கான நூற்பட்டியல் தயாரிக்கப்பட்டு, இங்கிலாந்திலுள்ள கிழக்கிந்தியக் கம்பெனிக்கு அவ்வப்போது அனுப்பப்பட்டுப் புத்தகங்கள் பெறப்பட்டன.

கி.பி. 1714-ஆம் ஆண்டு 'ஜான் டால்பன்' (John Dalben) என்பவரும் 'ரிச்சர்ட் எலியட்' (Richard Elliot) என்பவரும் இந்நூலகத்திற்குத் தங்களிடமிருந்த நூல்களை வழங்கினர். கிறித்துவ ஞானத்தைப் பரப்பும் சங்கமும் (Society for Propagating Christian knowledge) இந்நூலகத்திற்குப் பல புத்தகங்களை நன்கொடையாகத் தந்தது.

1791-ஆம் ஆண்டில் இந்நூலகத்தை அடுத்து, வான்வெளி ஆய்வுக்கூடம் (Observatory) ஒன்று அமைக்கப்பட்டது. நூலகத்தின் பொறுப்பும் இவ்வாய்வுக்கூட [illegible] [illegible] நடத்தினர்.

இந்நூலகத்தை வழங்கும் நூலகமாக மாற்றினர் (Circulating Library) பயன்படுத்தியுள்ளனர். அதற்கு அப்பொழுது உறுப்பினர் கட்டணமாக ஒரு பகோடா (Pageda). பகோடா என்பது அக்காலத்தில் வழங்கிய நாணயத்தின் பெயர்) வசூலித்துள்ளனர்.

முதன் முதலில் இந்நூலகத்திற்கு என்ன பெயரிடப்பட்டது என்று உறுதியாகச் சொல்ல முடியவில்லை. ஆனால் பல நூல்களில் 'பேரரசு நூலகம்' (Imperial Library) என்று முத்திரை காணப்பட்டது. எனவே, முன்னர் இந்நூலகம் 'இம்பீரியல் லைப்ரரி' என்று அழைக்கப்பட்டுள்ளது என்று நம்பலாம். பின்னர் இந்நூலகம் தலைமைச் செயலக நூலகம் (Chief Secretariat Library) என்று அழைக்கப்பட்டது.

எங்கும் காணக்கிடைக்காத அரிய நூல்கள் இங்கே ஏராளமாக உள்ளன. சிலவற்றைக் கோடிட்டுக் காட்டுவோம்.

1. Vestiges of Old Madras 1640—1800.
2. Memoirs of Madras.
3. Records of Fort. St. George (Public Despatches from England) 1756—57.
4. Selections from the records of the Madras Government (papers and Correspondence concerning The Lawrence Asylum).
5. Selections from old records (Formation of Tuticorin, Tinnevelly and Quilon Branch Railways 1867.)
6. Reprint of old records (construction of the Srivaikuntam Anicut across Tambraparni river, Tinnevelly District) 1855.
7. A collection of statues relating to India 1856—1881.
8. Letters to Fort St. George 1699—1700.
9. The Land Revenue System of the Canara District in 1848.
10. East India (Royal Indian Engineering College) Correspondence related to the remodelling of the studies, etc.

Memoirs of Madras என்ற சென்னை புத்தகத்திலிருந்து நகரம் எவ்வாறு உச்சரிக்கப் பட்டது? எவ்வாறு அழைக்கப் பட்டது என்பதை அறியலாம்.

Madraspatnam
Chennapatnam
Chinnapatam
Madraza
Chilipatam

இந்தியாவிலேயே மிகத் தொன்மையான நூலகங்கள் தமிழ்நாட்டில்தான் உள்ளன. முதலாவது மிகப் பழமையான நூலகம் 16ஆம் நூற்றுண்டில் அமைக்கப்பட்ட தஞ்சாவூர் சரஸ்வதி மஹால். அடுத்த பழமையான நூலகம் 17-வது நூற்றாண்டில் கிழக்கிந்தியக் கம்பெனியார் உருவாக்கிய தலைமைச் செயலக நூலகம்தான்! இன்று இந்தியாவிலுள்ள ஏனைய பெரிய நூலகங்கள் எல்லாம் இவைகளுக்குப் பின்னுல் தோன்றியவைகளே!

# தலைமைச் செயலக நூலகம்!



இப்படிப் பல பெயர்களில் சென்னை நகரம் அழைக்கப்பட்டிருக்கிறது.

இப்பொழுது தமிழக அரசின் தலைமைச் செயலகம் உள்ள செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலிருந்து அந்தக் காலத்தில் ஆட்சி புரிந்த ஆங்கிலேயத் தலைவர்-ஆட்சியாளர்களின் நாட்குறிப்புகளும் (The Diary and Consultation Book of the President, Governor and Council at Fort St. George 1685) இங்கே இருக்கின்றன.

இவைகளின் அருமை பெருமைகளை வரலாற்றுப் பேராசிரியர்களே விளக்க முடியும். அத்தகைய அரிய நூல்கள் உள்ளன.

நம்முடைய சென்னை நகரத்தைப் பற்றித்தான் எத்தனை நூல்கள் உள்ளன! சென்னை நகரின் அக்காலத்திய வரைபடமும் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையின் ஓவியமும் இங்குள்ள நூல்களில் உள்ளன. இந்நாட்டை ஆண்ட 'கிளைவ்', 'வாரன் ஹேஸ்டிங்ஸ்' போன்றோரின் கையெழுத்துப் பிரதிகளும் இங்கு உள்ளன.

1835 முதல் 1838 ஆம் ஆண்டு வரை ஆராயப்பட்ட வங்க நாட்டின் தாய்மொழிக் கல்வி பற்றிய அறிக்கை 1868-ஆம் ஆண்டில் அரசுக்கு அளிக்கப்பட்ட விவரத்தை ஒரு நூல் விளக்குகிறது. புகழ்பெற்ற மேதை மெக்காலேயின் 1835-ஆம் ஆண்டுக் குறிப்புகளை ஒரு நூல் எடுத்துரைக்கிறது.

சென்னைப் பல்கலைக் கழகம் முழு உருவம் பெருத நிலையில் அதன் ஆண்டறிக்கையை First Annual Report from the Governors of Madras 1842 ஒரு நூலாகக் காணலாம். அப்பொழுது, பல்கலைக் கழகமாக முழு உருவம் பெறுவதற்கு முன்னுல், அது தொடக்கப் பள்ளியாக இருந்ததை அறிகின்ருேம்.

கோகினூர் வைரத்துக்கு உண்மையான பெயர் என்ன தெரியுமா? அது முதன் முதலில் கிடைத்த இடம்தான் தெரியுமா?

பழைய காலத்தில் ஆங்கிலேயர்களால் சென்னை நகரம் எந்தெந்தப் பெயரில் அழைக்கப் பட்டது என்பது தெரிய வேண்டுமா?

புக்டோ, புஷ்டோ, திபெத் போன்ற மொழிகளின் அகராதிகளைப் பார்க்க வேண்டுமா? ஒரு சொல்லின் பொருள் 130 மொழிகளில் எவ்வாறு கூறப் படுகிறது என்ற விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமா? வெள்ளைக்காரர்களே அந்தக் காலத்தில் We என்பதை Wee என்றும் ago என்பதை agoe என்றும் Diary என்பதை Dyary என்று குறிப்பிட்டதை அறிந்து கொள்ள வேண்டுமா?

தமிழ்நாட்டில் நான்காம் வகுப்பு ஆங்கிலப் பாடம், இளங்கலை வகுப்பு மாணவன் படிக்கும் பாடத்திற்கு இணையாக இருந்த வியப்பான செய்தியைத் தெரிந்து கொள்ள வேண்டுமா?

எங்கும் காணக்கிடைக்காத அரிய நூல்களின் குவியலைக் காண வேண்டுமா? வாருங்கள் சென்னை கோட்டையிலுள்ள தமிழ்நாடு அரசு தலைமைச் செயலக நூலகத்துக்கு! இது இந்தியாவின் தொன்மையான நூலகங்களில் ஒன்று!

நான்காவது வகுப்பு மாணவனுக்குப் பாடமாக அமைந்திருந்தவைகளைப் பார்த்தாலே நமக்கு வியப்பும் மலைப்பும் மட்டும் உண்டாகவில்லை. மயக்கமே ஏற்படுகிறது. ஆமாம். அக்கால மாணவர்களுக்கு ஆங்கில இலக்கணம் முதல் சொற்பொழிவு ஈருக பதினுறு பாடங்கள் அன்று கற்பிக்கப்பட்டதை அறிகிறோம். அக்கால மாணவர்களுக்குத் தரப்பட்ட வினாக்களையும், விடைகளையும் அதில் காணுகின்றோம்.

ஆண்டநாள் ஆண்ட புகழுக்கும் திண்டோள் வீரத்திற்கும் இலக்கியமாகத் திகழ்ந்த கட்டபொம்மன் வீரத்தைப் பற்றி ஆங்கிலேயர்கள் எழுதிய வருணனையைக் காண வேண்டுமா? திருநெல்வேலிப் பாளையக்காரர்களின் விடுதலை எழுச்சியை வீர வேட்கையைப் படம் பிடித்துக் காட்டுகிறது. Papers relating to Poligars War Tinnevelly District (1801) என்ற நூல்.

கோகினூர் வைரத்தை 'ஒளி மலை' என்கிறார்கள். ஆங்கில அரசின் மணிமுடியில் தலைமையிடம் பெற்றுள்ள இந்த வைரம் பற்றிய செய்திகளை நாம் பலவாறு கேள்விப்பட்டிருப்போம்.

ஆனால் தலைமைச் செயலகத்திலுள்ள ஒரு நூல் கோகினூர் வைரத்தைக் ''கொல்லூர் வைரம்'' என்று சொல்லுகிறது.

ஈடு இணையில்லா வைரமாகத் திகழும் கோகினூர் வைரம் கொல்லூர் என்ற ஊரில்தான் கிடைத்ததாம். கொல்லூர் என்பதையே சொல்லத் தெரியாதவர்கள் 'கோகினூர்' என்று சொன்னதால் வந்த விளைவு இது.

1701-ஆம் ஆண்டில் கிருஷ்ணை ஆற்றின் அருகிலிருந்த பார்தீல் சுரங்கத்தில் ( Parteal Mines ) ஓர் அடிமை அந்த வைரத்தைக் கண்டெடுத்தது பற்றியும் எவ்வாறு அதை அவன் ஒளித்து வெளியே கொண்டு வந்து பிட் ( Pitt ) என்பவருக்குக் கொடுத்தான் என்பதையும் விவரமாக அந்த நூல் விளக்குகிறது.

17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கில மொழியில் சொற்கள் எப்படி எப்படியிருந்தன என்பதற்கு From Letters to Fort St. George for 1699-1700 என்ற நூலைப் பார்த்தால் போதும் அதில்,

We—Wee
Fit—Fitt
ago—agoe
put—putt
Diary—Dyary
Substantial—Substantiall
difficulties—difficultys
Country—Countrey
Madras—Madrass
Factory—Ffactory

இவ்வாறு வழங்கியிருப்பதைக் காணலாம்.

தலைமைச் செயலகத்தில் மிக முக்கியமாகக் குறிப்பிடப்பட்ட வேண்டிய ஒன்று இந்நூலகத்தில் அடங்கியுள்ள வாழ்க்கை வரலாற்றுப் பகுதியாகும். இங்கே மிகச் சிறந்த நூல்கள் உள்ளன.

இந்நாட்டை ஆண்ட 'கிளைவ்' 'கர்சான்', 'ஹேஸ்டிங்ஸ்', 'நேப்பியர்', 'மன்றோ' போன்றோர்களின் வாழ்க்கை வரலாறும், பிறந்த பொன்னாட்டின் விடுதலைக்கு வித்திட்டுப் பாடுபட்ட பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகளும் மண்டிக் கிடக்கின்றன! '' Men whom India has known '' என்ற நூலில் கடந்த சில நூற்றாண்டுகளாய் இந்த நாட்டின் வளர்ச்சிக்கும், வீழ்ச்சிக்கும் முனைந்த முன்னோடிகளின் வாழ்க்கைச் சுருக்கங்களை நாம் சந்திக்கலாம். இவைமட்டுமின்றி 'பாரி கம்பெனி' ( Parry & Co. ) ஏற்படுத்திய 'தாமஸ் பாரி' (Thomas Parry) போன்ற வணிகர் சிலரின் வாழ்க்கை வரலாற்றையும் இங்கு காணலாம்.





இந்த நூலகத்தில் ஐரோப்பிய மொழிகளில் சிறந்த பத்து மொழிகளைப் பற்றிய அகராதிகள் உள்ளன. அன்றியும் தெலுங்கு, கன்னடம், மலையாளம், கொங்கிணி, பாரசிகம், பத்தாணியர் மொழி, உருது, இந்துஸ்தானி, இந்தி, சிங்களம் ஆகியன பற்றிய-எளிதில் கிடைக்காத விலைமதிப்பற்ற அகராதிகள் இங்கே உள்ளன. 'W.W. ஹண்டர் (Hunter) தொகுத்த ''The Non Aryan Languages of India and High Asia '' என்ற அகராதி இந்தியாவில் வேறெங்கும் கிடைக்காத அரிய புத்தகமாகும். ஒப்பற்ற இந்த அகராதியில் ஒரு சொல்லின் பொருள் 130 மொழிகளில் எவ்வாறு வழங்கப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மொழி ஆராய்ச்சியாளர்களுக்கும் மொழி பெயர்ப்பாளர்களுக்கும் இது இணையற்ற கைச்சுவடியாகும். கொச்சைத் தமிழ் பற்றிய ஓர் அகராதியும், ஆட்சியியல் சொற்கள் பற்றிய அகராதியும் ( Zillah Dictionary ) குறிப்பிடத்தக்க மற்றும் இரு புத்தகங்களாகும்.

இந்தியாவின் காட்டு மிருகங்களிடையில் பதின்மூன்று ஆண்டுகள் வாழ்ந்து கழித்த ஒருவரது வாழ்க்கைக் குறிப்பு நூலும் இந்நூலகத்தில் உள்ளது. பழமைக்குப் பழமையாய் விளங்கும் இந்நூலகம் புதுமையைப் போற்றுவதிலும் பின் வாங்கவில்லை! பல்வேறு துறைகளில் புதிதாகப் புறப்படும் புத்தகங்கள் இங்கு இடம் பெறுகின்றன. அண்மையில் மறைந்த அரவிந்தரின் அனைத்து நூல்களான 29 பெருநூல்களும் இங்கு உள்ளன. அண்ணல் காந்தியடிகளின் 35 படைப்புகளும் முன்னாள் தலைமையமைச்சர் நேருவின் நூல்கள் ''ஆட்சி மாற்றம்'' ( Transfer of Power ) முதலிய சிறந்த புத்தகங்களும் இங்கு உள்ளன.

இந்நூலகத்தில், வழங்கும் பகுதி, குறிப்புதவும் பகுதி, படிப்பறை (Reading Room) ஆகிய மூன்றும் உள்ளன. வழங்கும் பகுதியில் தத்துவம் முதற்கொண்டு கதை வரையிலும் 26 பிரிவுகள் உள்ளன. குறிப்புதவும் பகுதியில் கலைக்களஞ்சியங்கள், அகராதிகள், கைச்சுவடிகள் ( Hand Book ) ஆண்டுச் சுவடிகள் ( Year Book ) சட்டங்கள், நடைமுறைகள், அரசிதழ்கள், ஆண்டறிக்கைகள், சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகள் மக்கள்தொகைப் புத்தகங்கள், தேசப்படங்கள் முதலியன உள்ளன. டாக்டர் பட்டம் பெற ஆராய்ச்சி புரியும் மாணவர்களும் அனுமதி பெற்றுத் தலைமைச் செயலக நூலகத்தைப் பயன்படுத்துகின்றனர்.

அண்மையில் அமெரிக்க நாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து வந்த 'டேவிட் லட்டன்' (David Laddan ) என்ற ஆராய்ச்சி மாணவர், தனது டாக்டர் பட்டத்திற்காக மேற்கொண்ட ''19-ஆம் நூற்றாண்டில் திருநெல்வேலி



## அரிய நூல்களுக்கு சில எடுத்துக்காட்டுகள்!

திரு. எல். டி. சுவாமிக் கண்ணுப் பிள்ளை இயற்றிய An Indian Ephemeris என்ற மிகச் சிறந்த ஒரு நூலும் தலைமைச் செயலக நூலகத்தில் உள்ளது. இதில் கி. பி. 1,800லிருந்து 2,000 வரை உள்ள ஒவ்வொரு நாளைப் பற்றியும் குறிப்பு உள்ளது. ஆங்கிலம், தமிழ், மலையாளம், முகமதிய ஆண்டுகளைப் பற்றிய குறிப்புகள், திதி, நட்சத்திரம், உள்ளூர் நேரம் ஆகிய மிக நுண்ணிய கருத்துக்களும் இதில் அடங்கியுள்ளன. கிருத்துவ ஆண்டு, ஹிஜிரா, சகம், விக்ரமம், கலியுகம், கொல்லம் முதலான ஆண்டுகள் பற்றிய சந்திர, சூரிய அடிப்படைப் புள்ளி விவரங்கள் இந்நூலில் பொதிந்துள்ளன.

"Copies of Wills, Probates and Letters of Administration, Mayor's Court of Madras patnam (1744-46) என்ற அரிய நூல் சமுதாய இயல் ஆராய்ச்சியாளருக்கும் கிடைத்தற்கரிய விருந்தாகும்.

"Historical Record of the Honourable East India Company's First Madras Eropean Regiment" என்ற நூல் 1843-ல் அச்சிடப்பட்டது. அது 1645-ல் தனிப் போர்ப் படைகள் உருவாக்கப்பட்டது பற்றியும், 1842 வரை அப்படை ஆற்றிய பணிகளைப் பற்றியும் ஆதாரப் பூர்வமான தகவலை அறிவிக்கிறது. இந்தப் புத்தகத்தில் இப்படையின் முதல் பிரிவின் தலைவனான 'ஜேம்ஸ் ஜார்ஜ் ஸ்மித் நீல்' 1857-ஆம் ஆண்டில் வரைந்த கையெழுத்தும் சிறிதும் சிதையாமல் அப்படியே உள்ளது.

இவை அனைத்தும் தலைமைச் செயலக நூலகத்தில் உள்ள மிக அரிய நூல்களில் சில.





# இதுவே நூலகம்!

மனிதரெலாம் அன்புநெறி காண்ப தற்கும்,
மனோபாவம் வானைப்போல் விரிவ டைந்து
தனிமனிதத்தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வ தற்கும்,
இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ண மெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச் சாலை;
புனிதமுற்று மக்கள்புது வாழ்வு வேண்டில்
புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்

தமிழர்க்குத் தமிழ்மொழியிற் சுவடிச் சாலை;
சர்வகலா சாலையைப் போல் எங்கும் வேண்டும்.
தமிழிலிலாப் பிறமொழிநூல் அனைத்தும் நல்ல
தமிழாக்கி வாசிக்கத் தருதல் வேண்டும்.
அமுதம்போல் செந்தமிழிற் கவிதை நூற்கள்,
அழகியவாம் உரைநடையில் அமைந்த நூற்கள்,
சுமைசுமையாய்ச் சேகரித்துப் பலக லைசேர்
துறைதுறையாய்ப் பிரித்தடுக்கி வைத்தல் வேண்டும்.

—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

மாவட்டத்தில் ஆங்கிலேயரின் நிலவருவாய்த் துறையின் தாக்குதல்'' (The Impact of British Land Revenue Administration in Tinnevelly District in 19th Century) என்ற பொருளுக்கு உரிய புத்தகங்கள் இங்கே கிடைத்தது கண்டு பயன்படுத்தி நூலகத்தைப் பாராட்டிச் சென்றார்.

தலைமைச் செயலகத்தில் பணியாற்றிய சிலர் இந்நூலகத்தைப் பயன்படுத்தி இந்திய ஆட்சியியல் துறை (I. A. S.) யில் வெற்றி பெற்று வீறுடன் விளங்குவதாக மூத்த தலைமுறையினர் மொழிகின்றனர்.

''தலைமைச் செயலகம், தமிழ்த் தரணியில் மேன்மை வாய்ந்த மூளையாகச் சொல்லப்படுகிறது. இந்தச் செயலகத்தில் இருக்குமிடம் தெரியாமல் தொண்டு புரியும் இதயமாக இந்நூலகம் விளங்குகிறது'' என்கிறார் இந்நூலகத்தின் நூலகர் திரு. என். ராஜகோபாலன் அவர்கள்.

அவர் பொறுப்பேற்றுக்கொண்டு ஆறு, ஏழு மாதங்கள் தான் ஆகின்றன என்றாலும் நூலகத்தில் உள்ள எல்லா நூல்களையும் நுண்ணிய கவனத்துடன் ஆராய்ந்துள்ளார். புலவர் பட்டம் பெற்றுள்ள இவர், நூலகத் துறையில் பழுத்த அனுபவமும் உள்ளவர், ஆசிரியராகப் பணியாற்றிய பொறுப்பு உணர்ச்சியும், தமிழின்பால் இவருக்குள்ள ஈடுபாடும் அவர் ஆற்றும் பணிகளிலிருந்து விளங்குகின்றன.

தொன்மைமிகு இந்நூலகத்தில் ஏறத்தாழ நாற்பதாயிரத்துக்கும் அதிகமான நூல்கள் உள்ளன.

தலைமைச் செயலக நூலகத்தின் ஏனைய விவரங்கள் அனைத்தையும் பார்க்கும் பொழுது நமக்கு இயல்பாகவே ஓர் ஐயப்பாடு தோன்றும்!

இவ்வளவு தொன்மையும் சிறப்பும் வாய்ந்த இந்நூலகம் ஏன் தேசிய நூலக அளவில் மாபெரும் வளர்ச்சியை அடைந்திருக்கக்கூடாது என்று.

அதற்கு விடை இதுதான்.

கிழக்கிந்தியக் கம்பெனியர்களால் உருவாக்கப்பட்ட இந்நூலகம், ஒரு காலத்தில் பொது நூலக நோக்கத்தில் செயல்பட்டாலும், அது வளர வளர நிருவாக அமைப்பிலுள்ள ஆட்சித் துறையினர்களே பயன்படுத்திக் கொள்ள வேண்டிய நிலை உருவாக்கப்பட்டது.

இன்று ஆளுநர் முதல். அரசு ஊழியர்கள் வரைப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றதாக விளங்குகிறது.

நிர்வாகத் துறையினர் பயன்படுத்திக் கொள்ளத் தேவையான எல்லா நூல்களும் இங்கே உள்ளன.

இது தமிழ்நாட்டின் மிகப் பெரிய நூலகம் என்று சொல்ல முடியாவிட்டாலும் மிக அரிய நூலகமாகும்!

அரிய நூல்களின் குவியல்களாக விளங்கும் இந்நூலகம் பற்றி மகிழ்ச்சியானதொரு செய்தி—

இந்நூலகம் புதிதாகக் கட்டப்பட்டு வரும் தலைமைச் செயலகப் புதிய கட்டடத்தின் ஒரு பகுதிக்குச் செல்கிறது. அங்கே சென்னைப் பல்கலைக்கழக நூலகம் போன்ற முறையில் இந்நூலகம் அமைக்கப்படவிருக்கிறது. மேலும் இந்நூலகத்தில் பணியாற்றும் அனைவருக்கும் 'நூலகத் துறைப் பயிற்சி' அளிக்கப்படும் வாய்ப்பும் உள்ளது.

தமிழ்நாட்டில்தான் இந்தியாவின் தொன்மையான நூலகங்கள் உள்ளன என்பதை, அரிய நூல்களால் நமக்கு விளக்கிக் காட்டும் தலைமைச் செயலக நூலகத்தை பழம் பெரும் நூல்களின் களஞ்சியம், எனக் கருதத் தக்க இதனை ஓர் அறிவுப் புதையல் என்றே கூறலாம்.

—மாமூலன்

# தமிழகத்துக் கல்வெட்டுகள்

நடன காசிநாதன்.

பண்டைத் தமிழகத்தே சில முக்கியச் செய்திகளைக் கல்லில் பொறித்து வைக்கும் மரபு இருந்து வந்திருக்கிறது என்பது தொல்காப்பியம், புறநானூறு அகநானூறு போன்ற நூல்களால் தெரிய வருகிறது. போரில் இறந்துபட்ட வீரனுக்கு நடுகல் எடுக்கையில் அவனது பெருமையைக் கல்லில் பொறித்திருக்கின்றனர். அவ்வாறு பொறிக்கப்பட்ட நடுகல் சில, தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கற்களில் மட்டும் அல்லாது செப்புப் பட்டயம், பானை ஓடு, செப்புத் திருமேனிகளின் பீடங்கள், சங்குகள், பரிகலங்கள் ஆகியவற்றிலும் எழுத்துக்களைப் பொறித்திருக்கின்றனர்.

## தமிழி எழுத்து :

தமிழகத்தில் இதுவரையில் கிடைத்திருக்கின்ற கல்வெட்டுக்களைக் கருத்தில் கொண்டு பார்ப்போமானால், கி.மு. 3-ஆம் நூற்றாண்டு அளவிலிருந்துதான் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 3-ஆம் நூற்றாண்டுவரையான காலத்தில் கல்வெட்டுகள் என்று காணப்படுவன அனைத்தும் தமிழி எழுத்தில் எழுதப்பெற்றுள்ளன. இத்தமிழி எழுத்து, தற்காலத்தியத் தமிழ் எழுத்தின் பழமையான வடிவம் ஆகும். தமிழி எழுத்தின் பழைய வடிவம் மொஹஞ்சோதரோ, ஹாரப்பாவின் முத்திரைகளில் காணப்பெறும், உருவ எழுத்து என்று கருதப்படுகிறது.

இவ்வெழுத்தில் காணப்பெறும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கல்வெட்டுகள் புகளூரில் காணப்படும் சேரமன்னர்களின் கல்வெட்டு, மீனாட்சிபுரத்தில் காணப்படும் பாண்டிய நெடுஞ்செழியனின்கல்வெட்டுப்போன்றவைகள் ஆகும். இவ்வெழுத்தில் சுமார் நூறு கல்வெட்டுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. மதுரை மாவட்டத்தில்தான் இவ்வெழுத்தில் காணப்படும் கல்வெட்டுகள் மிகுதியாக கிடைத்துள்ளன. இவ்வெழுத்துப் பொறித்த பானை ஓடுகள் அரிக்கமேடு, உறையூர், கொற்கை போன்ற இடங்களில் அகழ்வாய்வு செய்கையில் எடுக்கப்பட்டுள்ளன.

## தமிழி எழுத்திலிருந்து தமிழ் எழுத்தும், வட்டெழுத்தும் :

கி.பி. 3-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு காணப்பெறும் கல்வெட்டுகள் தமிழ்நாட்டின் ஒரு பகுதியில் வட்டெழுத்து என்ற எழுத்திலும், மற்றொரு பகுதியில் தமிழ் எழுத்திலும் காணப்படுகின்றன. இவ்விரு எழுத்துக்களும் தமிழியிலிருந்து வளர்ச்சி பெற்றவை. கி.பி. 3 முதல் கி.பி. 6-ஆம் நூற்றாண்டுவரை இவ்விரு எழுத்துக்களும் கலந்து எழுதப்பட்டிருக்கின்றன. பின்னர் வட்டெழுத்து தொண்டை மண்டலப் பகுதியில் பொதுமக்கள் மத்தியில் மிகவும் பழக்கப்பட்ட எழுத்தாக இருந்து வந்திருக்கிறது. நடுகற் கல்வெட்டுகளில் பெரும் பகுதி வட்டெழுத்திலேயே காணப்படுவது இதற்குச் சான்றாகும். கி.பி. 8-ஆம் நூற்றாண்டுவரை தற்போதுள்ள வட ஆர்க்காடு, செங்கல்பட்டு, தென்னார்க்காடு மாவட்டப் பகுதிகளில் மிகவும் வழக்கில் இருந்த ஒரு எழுத்தாக இருந்து வந்திருக்கிறது. கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த பல்லவ மன்னன் சிம்மவர்மன் காலத்திலேயே செப்பேட்டிலும், ஒரு சில கல்வெட்டுக்களிலும் தமிழ் எழுத்துக்கள் காணப்பட்டாலும் தமிழ் எழுத்தில் காணப்படும் பெரும்பாலான கல்வெட்டுக்கள் கி. பி. 8-ஆம் நூற்றுண்டுக்குப் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்தவைதாம்.

கி. பி. -8ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு இவ்வட்டெழுத்து தமிழகத்தின் தென்பகுதியிலும், தென்மேற்குப் பகுதியிலும்தான் காணப்படுகின்றன. அதாவது மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, கேரளம் போன்ற பகுதிகளில் கி. பி. 8-ஆம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 17-ஆம் நூற்றாண்டு வரை இவ்வெழுத்து கல்லில் பொறிப்பதற்கும், ஓலையில் எழுதுவதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வெழுத்திலுள்ள கல்வெட்டோ அல்லது ஓலைச் சுவடியோ ஒன்றுகூட சோழ நாட்டின் நடுநாயகமான தஞ்சைப் பகுதியில் இதுவரையில் கிடைக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ் எழுத்து:

கி. பி. 8-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு தமிழ் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பரவலாகத் தமிழ் எழுத்துப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதிலும், குறிப்பாகத் தஞ்சைப் பகுதியில் தமிழ் எழுத்தில், அழகாகச் சித்திரம் வரைவது போல் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. சோழப் பேரரசன் முதலாம் இராசராசன் தமிழ்க் கல்வெட்டுகள் வெட்டப் பெறுவதற்குத்தன் நேர்முகக் கவனத்தைச் செலுத்தியிருக்கிறான் என்பது அவனது ஆணையின் கீழ் வெட்டப் பெற்ற தஞ்சைப் பெருவுடையார்க் கோயிற் கல்வெட்டுகளைக் கொண்டே அறிந்து கொள்ளலாம். தமிழ்க் கல்வெட்டுகளில், சில கிரந்த எழுத்துக்களும் காணப்படுகின்றன. கிரந்த எழுத்தில் உள்ள சில முழுமையான கல்வெட்டுகளும் உண்டு. சமஸ்கிருத மொழியை எழுத கிரந்த எழுத்தைப் பயன்படுத்தியிருக்கின்றனர்.

தமிழகத்தில் இதுவரையில் சுமார் 30,000 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் சுமார் 6,000 கல்வெட்டுகள்

பதிப்பிக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் இன்னும் புதிதாகப் படியெடுக்க வேண்டிய கல்வெட்டுகள் ஆயிரக் கணக்கில் உள்ளன. கல்வெட்டுகளைப் படியெடுக்கும் பணியைத் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறையும், இந்திய அரசுக் கல்வெட்டு துறையும் தொடர்ந்து செய்து வருகின்றன.

**கல்வெட்டுக் கூறுவது என்ன?**

கல்வெட்டுகளில் பெரும்பாலானவை கோயில்களுக்கு அளிக்கப்பட்ட கொடையைப் பற்றித் தான் குறிப்பிடுகின்றன. நிலக் கொடை, திருநந்தா விளக்கு அளித்தல் போன்றவற்றைத்தான் அதிக அளவில் புலப்படுத்துகின்றன. ஒரு சில கல்வெட்டுகள் அன்று நிலவிய சமுதாயச் சூழல்கள் சிலவற்றையும் தெரிவிக்கின்றன. கல்வெட்டுகளில் நூற்றுக்குத் தொண்ணூறு அவை எம்மன்னன் ஆட்சிக் காலத்தில், எந்த ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பட்டது போன்றவற்றைத் தெளிவாகக் கூறுகின்றன.

**செப்புப் பட்டயங்கள் தரும் செய்திகள்:**

ஜடிலவர்மன் பராந்தக நெடுஞ்சடையனின் வேள்விக்குடிச் செப்பேடு ''பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியையும் ஆலங்கானத் தமர் வென்ற நெடுஞ்செழியனையும்'' வரலாற்றுச் செய்திகளாகத் தருகிறது. இரண்டாம் ராஜசிம்மனின் சின்னமனூர்ப் பெரிய செப்பேடும், பராந்தக வீரநாராயணனின் தளவாய்புரச் செப்பேடும் ''மதுராபுரியில் சங்கம் இருந்த செய்தியையும் மாபாரதம் தமிழ்ப்படுத்தப்பட்ட செய்தியையும்'' உறுதிப்படுத்துகின்றன. தளவாய்புரச் செப்பேடு பராந்தக வீரநாராயணன் சைவப் பழமாகத் திகழ்ந்தான் என்பதைப் ''பிள்ளைப் பிறை சடைக்கணிந்த பினுகபாணி எம்பெருமானை உள்ளத்தில்னிறுவி உலகம் காக்கின்ற நாளில்'' என்ற வரிகளால் தெளிவுபடுத்துகிறது. இம்மன்னனின் அரவணைப்பில் தான் மாணிக்க வாசகர் வாழ்ந்திருக்க வேண்டும் என்ற நம்பிக்கையையும் உண்டாக்குகிறது. எனவே, மாணிக்கவாசகர் காலம் கி. பி. 9-ஆம் நூற்றுண்டாக இருக்க வேண்டும் என்று கொள்ள முடிகிறது.

**கல்வெட்டுக் கூறும் கருத்துக்கள்:**

பல்லவ மன்னன் மகேந்திர வர்மன் காலத்திய மண்டகப்பட்டுக் கல்வெட்டு, அதுவரையில் சுதை, உலோகம், மரம், செங்கல் ஆகியவற்றுல் கட்டடங்கள் எழுப்பப்படும் முறையை மாற்றிக் குகைத் தளிகள் புதிதாக அமைக்கப்பட்டதைப் புலப்படுத்துகிறது.

திருவெள்ளறைக் குளத்தின் படிக்கட்டுகளில் காணப்பெறும் எண்களைப் பார்க்கும்போது படிக்கட்டுகளுக்கு எண் இடும் முறை தமிழகத்தில் நிலவி வந்ததை உணரமுடிகிறது.

நெடுஞ்சடையனின் மானூர்க் கல்வெட்டினுலும், முதற் பராந்தகனின் உத்தரமேரூர்க் கல்வெட்டினுலும் தமிழ்நாட்டில் ஊர் அவைகள் இருந்து ஆட்சி செய்ததும், அவ்வவையில் உறுப்பினர்களாவதற்குச் சில தகுதிகள் நிர்ணயிக்கப் பெற்றிருந்ததும், உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்குக் குடவோலை முறை பயன்படுத்தப்பட்டதும் தெரிய வருகிறது.

சோழர் காலத்தில் கல்விச் சாலைகளும், ஆதுரச் சாலைகளும் நல்லமுறையில் கண்காணிக்கப்பட்டு வரப்பெற்றன என்பது முறையே எண்ணூர், திருமுக்கூடல் ஆகிய இடங்களிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ள கல்வெட்டுகளினுல் அறிய முடிகின்றன. பார்வை யிழந்தவர்களுக்கும் கோயில்களில் பணி தரப்பெற்றுப் போற்றிப் பாதுகாக்கப்பட்டதைக் கல்வெட்டினுல் உணரலாம்.

**நடுகற்கள்:**

போரில் வீரமரணம் எய்திய போர்வீரனுக்கு நடுகல் எழுப்பி வழி பட்டிருக்கின்றனர் என்பது பல நடுகல் கல்வெட்டுகளினுல் புலப்படுகின்றது. தந்தைக்குப் பொதுமக்கள் எடுப்பித்த நடுகல், போரிட்டு வீரமரணம் எய்திய வீரனுக்கு எடுப்பித்த நடுகல் போன்ற பல நடுகற்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.




**கவிதைக் கல்வெட்டுகள்:**

கவிதை நடையிலும் பல கல்வெட்டுகள் உள்ளன. திருத்தணியில் உள்ள பாடல் கல்வெட்டு அக்கோவிலை 'நம்பி அப்பன்' என்பான் எடுப்பித்ததாகக் கூறுகிறது. ''மலைபடுகடாம்'' என்ற இலக்கியம் கி. பி. 10-11-ஆம் நூற்றுண்டுக்கு முன்னரே தமிழக மக்களுக்கு மிகவும் அறிமுகம் ஆன ஓர் இலக்கியமாகத் திகழ்ந்திருந்தது என்பது செங்கத்தில் காணப்படும் கல்வெட்டில் ''மலைபடுகடாம் பாட்டுண்ட மாலவரை'' என்ற வெண்பா அடியினுல் அறிந்து கொள்ளலாம்.

**குடமுழாவில் கல்வெட்டு:**

திருத்துறைப்பூண்டி ஔஷதபுரீஸ்வரர் ஆலயத்தில் உள்ள குடமுழாவில், அக்குடமுழா ''மல்லாண்டாரான சோழகோனார்'' என்பவரால் அளிக்கப்பட்டது என்பது தெரியவருகிறது.

தஞ்சைப் பெரியகோயிலில் உள்ள கல்தொட்டிகளின் விளிம்பில் அவைகளில் எவ்வளவு நீர் ஊற்றி வைக்க முடியும் என்பதை எண்ணினுல் எழுதப் பெற்றிருப்பதை இன்றும் காணலாம்.

தஞ்சைக் கலைக் கூடத்தில் உள்ள சில செப்புப் பரிகலங்களில்கூட அவைகளின் எடை இவ்வளவு பலம் என்பது குறிக்கப்பட்டுள்ளன.

சில செப்புத் திருமேனிகளில் கூட அவை யாரால் எந்தக் கோயிலுக்கு அளிக்கப்பட்டவை என்ற செய்திகள் எழுதப்பட்டிருக்கின்றன.

தஞ்சைக் கல்வெட்டில் காணப்பெறும் 'முத்திரைச் சங்கு' என்ற சங்குகளில்கூட அவை யாரால் எந்தக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட சங்கு என்பவை குறிக்கப்பட்டுள்ளன.



**வௌவால் ஆராய்ச்சி**

பழம் உண்ணும் வௌவால் வகையின் இயல்பைப் பற்றிய ஆராய்ச்சி நடத்துவதற்கு பிராங்க்பார்ட் சென்னைப் பல்கலைக் கழகத்துக்கும் பல்கலைக் கழகத்துக்கும் இடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது.

அண்மையில் மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர், பிராங்க்பார்ட்டுக்குச் சென்றிருந்தபோது இந்த உடன்பாடு ஏற்பட்டது.

இந்த ஆராய்ச்சிக்கு வேண்டிய ரூபாய் 14 இலட்சம் மதிப்புள்ள கருவிகளை பிராங்க்பார்ட் பல்கலைக் கழகம் கொடுத்து உதவும்.

**குறியீடுகள்:**

கல்வெட்டுகள் சில சொற்களைக் குறியீடுகளால் தெளிவுறுத்துகின்றன. ஆண்டு, மாதம், நெல், கலம், மரக்கால், ஆழாக்கு, உழக்கு கழஞ்சு, பொன், பணம் போன்ற சொற்களைப் பெரும்பாலும் குறியீடுகளால்தான் காட்டப்பட்டுள்ளன.

**(முகத்தல் அளவை)**

| | | |
|---|---|---|
| 360 நெல் | = | 1 செவிடு |
| 2 செவிடு | = | 1 பிடி |
| 5 செவிடு | = | 1 ஆழாக்கு |
| 2 ஆழாக்கு | = | 1 உழக்கு |
| 2 உழக்கு | = | 1 உரி |
| 2 உரி | = | 1 நாழி |
| 8 நாழி | = | 1 குறுணி |
| 2 குறுணி | = | 1 பதக்கு |
| 4 குறுணி | = | 1 தூணி (அ) காடி |
| 5 குறுணி | = | 1 பறை |
| 12 குறுணி | = | 1 கலம் |
| 1 பொதி | = | $2\frac{1}{2}$ கலம் |
| 1 கோட்டை | = | 3 கலம் |

**எழுத்து அட்டவணை:**

இவ்வாறு பல முக்கியச் செய்திகளைத் தெரிவிக்கும் கல்வெட்டுகளிலிருந்து சில எழுத்து அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு இங்கு தரப்பட்டுள்ளன. அவை (1) தமிழி எழுத்து (2) வட்டெழுத்து (கி. பி. 6-7 ஆம் நூற்றுண்டில்) (3) வட்டெழுத்து (கி.பி. 12-13 ஆம் நூற்றுண்டில்) (4) தமிழ் எழுத்து, (5) தமிழியிலிருந்து தமிழ் எழுத்தும், வட்டெழுத்தும் வளர்ந்தது, (6) கல்வெட்டுக்களில் காணப்படும் சில குறியீட்டின் விளக்கங்கள் ஆகியவை ஆகும்.

# மாம்பழ மகசூல் பெருக்கும் முறைகள்

—எஸ். எஸ். நாகராஜன், எம்.எஸ்சி.,
வேளாண்மைப் பொருளாதார நிபுணர்,
டாஃபே.

உணவு உற்பத்தியில் நாம் அதிக கவனம் செலுத்தி, தற்போது நல்ல பலனை அடைந்துள்ளோம். இதுபோல், பழங்கள் உற்பத்தியை அதிகரிப்பதிலும் நம் கவனத்தைச் செலுத்த வேண்டும். நாம் நம்முடைய அன்றாட உணவில் உள்ள ஊட்டச் சத்துக்களின் குறைபாட்டைப் போக்க பழவகைகளை நாள்தோறும் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டியது அவசியத்துடன், அவசரமும் ஆகும். மேலும் பழங்கள் சமூகத்தில் சிலருக்குத்தான் கிட்டுகிறது. இந்நிலைமாறி பழங்களை அனைவருக்கும் கிட்டும்படி செய்வது நமது நோக்கமாக அமைய வேண்டும்.

தமிழ்நாட்டுப் பழவகைகளில் முக்கியமானது மாம்பழமாகும். முக்கனி வரிசையில் முதலில் நிற்பதும் மாங்கனியே! சுவையுள்ள மாங்கனிகள் வைட்டமின் சத்துக்களையும், தாது உப்புக்களையும் அதிகமாகக் கொண்டுள்ளன. தமிழ்நாட்டில் சுமார் 31,500 எக்டேர் பரப்பில் மா சாகுபடியில் உள்ளது. இதிலிருந்து கிடைக்கும் கனிகள் நம் மாநிலத்தின் தேவையைப் பூர்த்தி செய்யவில்லை. இதுசமயம் இந்திய மாம்பழத்திற்கு குவைத், ஜப்பான் போன்ற நாடுகளில் கிராக்கி இருந்து வருகிறது. ஏற்றுமதி வாய்ப்பு இருந்தும் இதைப் பயன்படுத்திக் கொள்ள இயலவில்லை. [illegible] நம் [illegible] தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளவும், ஏற்றுமதியில் ஈடுபட்டு அந்நியச் செலாவணியைப் பெறவும் தமிழ்நாட்டில் மாம்பழ மகசூலைப் பல மடங்கு பெருக்குவது அவசியம். எனவே, நாம் நம் கவனத்தை மாம்பழ மகசூல் பெருக்கும் வழி முறைகளில் செலுத்த வேண்டும்.

## வழி முறைகள்

உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு தற்போது உறுதுணையாக இருந்து வருவது உயர்விளைச்சல் இரகங்கள், ஒட்டு விரிய இரகங்கள் முதலியன. ஆனால் மா சாகுபடியில் இருக்கும் நிலையோ வேறு! மாவிலும் பல ஒட்டு விரிய ரகங்கள் உள்ளன. உதாரணமாக நீலம் X ஹிமாயுதின், நீலம் X சின்ன சுவர்ண ரேகா, ஜஹாங்கீர் X சுவர்ண ரேகா, நீலம் X ருமானி போன்றவைகள் மகசூலிலும், தரத்திலும் ஒழுங்காகக் காய்ப்புப் பிடிப்பதிலும் சிறந்தவை. இருப்பினும் இந்த ரகங்கள் அதிக அளவு சாகுபடியாகவில்லை. நுகர்வோர்களால் தோற்றுவிக்கப்பட்ட மார்க்கெட்டுகளில் புதிய ரகங்களின் பழங்கள் எடுபடுவதில்லை. இதனால் புதிய ரகங்கள் சாகுபடி அபாயகரமானது ( Risky )என்று விவசாயிகள் கருதுகின்றனர். ஒட்டுவீரிய ரகங்கள் பரவாத சூழ்நிலையில், மகசூல் பெருக்கும் வழி முறைகள்தான் என்னவென்று சிந்திக்க வேண்டும். தற்பொழுது தமிழ்நாட்டில் உள்ள பழத் தோட்டங்களைச் சிரகப் பராமரிப்பதுடன், புதிய தோட்டங்கள் அமைக்கும் போது விஞ்ஞான ரீதியான சாகுபடி முறைகளை மேற்கொள்வதே ஏற்ற வழி முறைகள் ஆகும்.

## புதிய தோட்டங்கள் அமைக்கும் முறைகள்

புதிய தோட்டங்கள் அமைக்க நல்ல இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். நல்ல ஆழமும், வடிகால் வசதியும் கொண்ட வளமுள்ள செம்மண் வகைக்கொண்ட நிலத்தைத் தெர்ந்தெடுக்கலாம். இங்கு 40 அடி இடைவெளியில் கன்றுகளை சதுரமுறையில் 3 அடி நீளம், 3 அடி அகலம், 3 அடி ஆழமுள்ள குழிகளில் நடலாம். ஒட்டுக் கன்றுகளை நடும்போது ஒட்டுப் பாகம் வெளியே தெரியும்படி நட்டு, உடனே நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். கன்றுகளை மழைகாலம் தொடங்குவதற்கு முன்போ அல்லது முடியும்போதோ நட வேண்டும். புதிதாக நடப்பட்ட கன்றுகளுக்கு நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் நீர்ப்பாசனம் செய்தால் போதும். ஒவ்வொரு ஆண்டும் கடும் கோடை மாதங்களான சித்திரை, வைகாசி ஆனியில் மட்டும் வாரத்திற்கு ஒரு முறை நீர்ப்பாசனம் செய்தால் போதும். மற்ற மாதங்களில் நீர்ப்பாசனம் அவசியம் இல்லை. ஐந்து ஆண்டுகளில் பெரிய மரங்களானதும் பாசனம் அவசியம் இல்லை. கன்று நட்டு முதல் ஐந்து ஆண்டுகளில் விவசாயி தோட்டத்தை நல்ல முறையில் கவனிக்க வேண்டும். இந்த முக்கிய கவனிப்பானது ஒரு கடைக்கால் போல் அமைந்து மரங்கள் சீரிய முறையில் மகசூல் கொடுக்க உதவும்.

முதல் ஐந்து ஆண்டில் ஒட்டுப் பாகத்திற்குக் கீழ்வரும் துளிர்களை கிள்ளிவிடுவதிலும், பூக்கும் பூக்களை அகற்றி மரங்களைக் காய்க்கவிடாமல் பாதுகாப்பதிலும், உரம் இடுவதிலும் பராமரிப்புப் பணியிலும் கவனம் செலுத்த வேண்டும்.

ஆடிமாதத்தில் கன்று ஒன்றிற்கு 2 கிலோ விதம் வேப்பம் பிண்ணாக்கு இடலாம். இதைச் செடியின் அடிபாகத்தில் இருந்து 1 அடிதள்ளி மூன்று சிறிய குழிகள் எடுத்து அதில் போட்டு மண்ணை மூடிவிடலாம். பிண்ணாக்கு இல்லாவிட்டால் ஒரு கிலோ எலும்புத்தூள், 0.5 கிலோ அம்மோனியம் சல்பேட், 0.5 கிலோ சூப்பர், 0.5 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் இவற்றுடன் ஒரு கூடை கம்போஸ்ட் கலந்து முதல் ஆண்டில் (1 வயது கன்றுகளுக்கு) இருந்து ஆண்டுதோறும் வைக்கலாம். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு எரு, உரமிடுவது கடினம். ஆடிப்பட்டத்து மழையும், ஐப்பசி, கார்த்திகை மழையும் கன்றுகளுக்கு இடப்பட்ட எரு, உரங்களைப் பயன் அளிக்கும்படி செய்யும். மாந்தோட்டங்கள் பெரும்பாலும் மானாவாரி நிலங்களிலேயே அமைக்கப்படுவதால், இத்தோட்டங்களைப் பராமரிப்பது எப்படி என்பது குறித்து 'ஜே' பண்ணையில் ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன. சீரிய பராமரிப்புக்கு நிலக்கடலையை ஊடுபயிராகவும், மூடுபயிராகவும் சாகுபடி செய்வது சிறந்தது என்று பரிசோதனைகள் எடுத்துக் காட்டின. இதிலுள்ள விஞ்ஞான நுணுக்கங்களை ஆராய்வோம்.

## நிலக்கடலை ஊடுபயிர் சாகுபடி

மானாவாரி நிலங்களில் தோட்டங்கள் அமைப்பதற்குக் காட்டும் கவனத்தைவிட முதல் ஐந்து ஆண்டுகளில் பராமரிப்புப் பணிகளில் அதிக கவனம் காட்ட வேண்டும். இதற்கு உறுதுணையாக அமைவது நிலக்கடலையை ஊடுபயிராகவும், மூடுபயிராகவும் (Inter and cover crop) மாந்தோட்டத்தில் சாகுபடி செய்வதாகும். வறண்ட நிலங்களில் அமைக்கப்பட்டுள்ள தோட்டங்களில் கீழ்க்கண்டவைகளில் முக்கியக் கவனம் செலுத்த வேண்டும்.

1. மண்ணில் உள்ள ஈரம் ஆவியாகப் போகாமல் பாதுகாத்தல்.

2. களைகள் மூலம் ஈரம் விரயம் ஆவதைத் தடுத்தல்.

3. மண்ணரிப்பைத் தடுத்தல்.

4. மண்ணில் அங்ககப் பொருளின் அளவை (Organic Matter Content) அதிகரித்து, அதன் உதவி கொண்டு மண்ணின் ஈரத்தையும், மண்ணில் உள்ள பயிர்களின் தேவைக்கேற்ற ஊட்டச் சத்துக்களையும் பாதுகாத்தல்.

5. பூச்சி, நோய் வரவிடாமல் தடுத்தல்.

இந்நிலைமைகளை ஏற்படுத்துவதற்குப் பழத்தோட்டத்தில் களைச் செடிகள் இல்லாமல் வைக்க வேண்டும். மானாவாரி நிலங்களில் களைச்செடிகள் வீரியத்துடன் வளர்வதற்கு ஏற்றச் சூழ்நிலை உண்டு. களைச் செடிகள் மண்ணின் ஈரத்தையும், வளத்தையும் அபகரித்துக் கொள்வதோடு பூச்சி, பூஞ்சான நோய்கள் பரவவும் வழிவகை செய்து விடுகின்றன. ஆகையால் தோட்டம் நிறுவிய நாள் முதலாகக் களைகளை அறவே நீக்குவது மிகவும் முக்கியம். களைகளைத் தடுத்துக் கட்டுப்படுத்த நிலக்கடலை ஊடுபயிர் சாகுபடி உதவியாக இருக்கும். நிலக்கடலைப் பயிர்சாகுபடிக்கு செய்யப்படும் பணிகளான நிலம் உழுதல், உரமிடுதல், பூச்சி மருந்தடித்தல், களையெடுத்தல் போன்றவைகள் மாமர வளர்ச்சிக்கும் உதவியாக இருக்கும்.

நிலக்கடலைப் பயிர்களின் வேர் முடிச்சுகளில் காணப்படும் வேர் முடிச்சுகளில் சேகரித்து வைக்கப்படும் தழைச்சத்து மாமரங்களுக்குப் பயன்படும். நிலக்கடலைச் செடிகளில் இருந்து கொட்டும்தழைகள் மாமரங்களுக்கு எருவாகப் பயன்படும். மாந்தோட்டங்கள் சில சமயங்களில் சரிவான நிலங்களிலும் காணப்படும். இந்தச் சரிவான நிலங்களில் மழைக் காலங்களில் மண்ணரிப்பு ஏற்பட்டு, அதனால் மண்வளம் சீர்குலைந்து மாமரங்களின் வளர்ச்சி பாதிக்கப்படலாம். இம்மாதிரி சரிவு நிலங்களில் உள்ள தோட்டங்களில் நிலக்கடலைப் பயிர் சாகுபடி செய்யும்போது நிலக்கடலை ஒரு மூடு பயிராக (Cover Crop) பயன்பட்டு, மண்ணரிப்பைத் தடுத்து நிறுத்துகிறது. நிலக்கடலைப் பயிரை மானாவாரி சாகுபடியில் மாந்தோட்டம் பூராவிலும் சாகுபடி செய்யலாம். மற்ற பயிரை இவ்வாறு மூடுபயிராகச் சாகுபடி செய்வது கடினம்.

நிலக்கடலை ஐப்பசி, கார்த்திகையில் அறுவடைக்கு வரும். அறுவடை செய்த பிறகு செடிகளைத் தோட்டத்திலேயே பரப்பிவிட்டு டிராக்டருடன் இணைக்கப்பட்ட 'ஹேரோ' கருவியினால் ஓட்டினால் செடிகள் மண்ணுடன் கலந்து அங்ககப் பொருளாக மாறி நிலத்தின் வளத்தை அதிகரிக்கிறது. இதனால் மாஞ்செடிகள் செழிப்பாக வளருகிறது. மாந் தோட்டத்தில் ஐந்து ஆண்டுகள் நிலக்கடலை ஊடுபயிராக சாகுபடி செய்யலாம். இதற்குப் பின் ஊடு பயிர் சாகுபடி அவசியம் இல்லை.

'ஜே' பண்ணையில் நிலக்கடலை ஊடுபயிர்



ஏனெனில், ஐந்தாவது ஆண்டு மாஞ்செடிகள் பலன் கொடுக்க ஆரம்பித்து விடும். மாஞ்செடிகள் பலன் கொடுக்கும் வரை நிலக்கடலைப் பயிர் பலன் அளிப்பதும் குறிப்பிடத்தக்கது. இதோடு நிலக்கடலைப் பயிர் சாகுபடி, மாந்தோட்டத்தைச் சீராக பராமரிக்க உதவுகின்றது. 'ஜே' பண்ணையில் தற்போது பலனுக்கு வந்துள்ள மாமரங்கள் வளமாக வளர்ந்து, சீராகவும் தவறாமலும் மகசூல் கொடுத்து வருகின்றன. எனவே, இளந்தோட்டங்களில் நிலக்கடலையை ஊடுபயிராகச் சாகுபடி செய்வதில் விவசாயிகள் கவனம் செலுத்தலாம்.

### பெரிய தோட்டங்களில் செய்ய வேண்டியது என்ன ?

மாமரங்களை நட்டு ஐந்து ஆண்டுகள் வரை சீராகப் பராமரித்து வந்தால், பிரச்சினை இல்லாமல் மரங்கள் பலன் அளித்து வரும். இது மாதிரி பராமரிக்கப்படாதத் தோட்டங்களிலும், மிகப் பழையத் தோட்டங்களிலும் மகசூலைப் பெருக்குவதில் கவனம் செலுத்த வேண்டும். தமிழ்நாட்டில் மாந்தோட்டங்களில் ஒரு ஆண்டு நல்ல காய்ப்பு இருந்தால், மறு ஆண்டு நல்ல காய்ப்பு இருப்பதில்லை! சில சமயம் காய்ப்பே இல்லாமலும் போய்விடுகின்றது! நல்ல நிலையில் இருக்கும் மரங்கள் காய்க்காமல் இருப்பதும், சில இடங்களில் பிரச்சினையாக இருந்து வருகிறது. வெகு நாளாக இப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் பல வித ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன. உதாரணமாக வளர்ந்த மாமரங்களுக்கு உரமிடுதல், கிளைகளில் வட்டமாகப் பட்டை உரித்தல், புகைபோடுதல், பூக்களைக் கலைத்து விடுதல், வளர்ந்த மரங்களுக்கு நீர்ப்பாசனம் செய்தல் போன்ற ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன. இவைகள் மாமரங்கள் தவறாமல் மகசூல் அளிக்க பெரிதும் உதவவில்லை. அதனால் விவசாயிகளிடம் இம்முறைகள் பரவவில்லை.

தற்போது தமிழ்நாட்டின் தலைசிறந்த தோட்டக்கலை நிபுணர்களான டாக்டர் வி.என். மாதவராவ், டாக்டர் சண்முகசுந்தரம் இவ்விருவரும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஒரு புரட்சிகரமான ஆராய்ச்சி செய்து மாமரங்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கண்டுள்ளனர். இத்தீர்வு யாதெனில் சீரான மகசூல் பெறுவதற்கு மாமரங்களை கவாத்து செய்வது. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகப்



## மாந்தோட்டம் செழிக்க நிலக்கடலை ஊடுபயிர் சிறந்தது.

பழத்தோட்டத்தில் 'மல்கோவா' மற்றும் 'பனேசான்' வகைகளில் கவாத்து செய்யும் சோதனை நடத்தப்பட்டது. அங்குள்ள மல்கோவா மரங்கள் 45 ஆண்டு வயதுடையனவாகவும், பங்கன பள்ளி (பனேசான்) மரமென்று 20 ஆண்டு வயதுடையதாகவும் உள்ளன. அந்த மல்கோவா மரங்கள் கடந்த 1960-ல் இருந்து ஒரே ஒரு ஆண்டில் (1968-ல்) மட்டும் சுமார் 500 முதல் 740 பழங்கள் வரை காய்த்ததாக குறிப்புகளிலிருந்து தெரிய வருகின்றது. ஆனால் 1960-க்கு முன்னரும், 1968-க்கும் 1972-க்கும் இடைப்பட்ட காலத்திலும் சராசரியாக 35 பழங்களையே கொடுத்தன. பங்கனபள்ளி ரகமும் கடந்த 20 ஆண்டுகளில் நன்கு மகசூல் கொடுக்கவில்லை. இந்த மரங்களில் 1972-ஆம் ஆண்டு கவாத்து செய்யப்பட்டன.

ஒரு அடிக்கு அதிக பருமனுள்ள குறுக்கும், நெடுக்குமாகச் சென்ற




கிளைகள் வெட்டப்பட்டன. இதனால் மரத்தின் மேல் நன்றாக சூரிய வெளிச்சம் பட்டது. காற்றோட்டம் அதிகரித்தது. ஒவ்வொரு கிளையிலும் நலிவுற்ற தண்டுகளும், காய்ந்தக் குச்சிகளும் நீக்கப்பட்டன. மூன்று முதல் ஐந்து தண்டுகள் கொண்ட முனைக்கிளைகளில், நன்கு வீரியத்துடன் வளரும் ஓரிரு தண்டுகளைத் தவிர்த்து மற்றவைகள் நீக்கப்பட்டன. அறுத்த பாகத்தில் ''போர்டோ பசை'' தடவப்பட்டது. கவாத்து செய்த மரங்களுக்குச் சிறிது இயற்கை எரு இட்டு நீர்ப்பாசனம் செய்யப்பட்டது. இதனால் 'மல்கோவா' மரங்கள் 1974-ல் 642 பழங்களையும், 1975-ல் 927 பழங்களையும் கொடுத்தன. 'பனேசான்' மரம் (பங்கன பள்ளி) 1974, 1975-ஆம் ஆண்டுகளில் இருந்து அதாவது கவாத்து செய்து இரண்டு ஆண்டுகள் கழித்து பலன் கொடுக்க ஆரம்பித்தது. 1974-ல் 171 பழங்களையும், 1975-ல் 504 பழங்களையும் கொடுத்தது. எனவே விவசாயிகள் 'கவாத்து' செய்யும் முறையைக் கையாண்டு காய்க்காத மரங்களையும் காய்க்க வைக்கலாம்.

### பூச்சி மருந்து தெளித்தல்

மா சாகுபடி முறைகளில் மிகவும் முக்கியமானதும், உடனடியாகக் கைமேல் பலன் தருவதும் — மாமரங்களுக்கு வடகிழக்குப் பருவமழை முடிந்து, மரங்கள் பூக்க ஆரம்பித்தவுடன்—பூச்சி மருந்து தெளிப்பதேயாகும்! பூச்சி மருந்து தெளிப்பதின் விவரத்தை, ''தமிழரசு'' பத்திரிகை 1-3-75 இதழில் 45-ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்ட கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது. அம்முறைகளையே விவசாயிகள் இந்த ஆண்டும் கடைப்பிடிக்கவும். பூச்சி மருந்து தெளிக்கும் அவசியத்தை விளக்கச் சென்ற ஆண்டு வறட்சி நிலையிலும் மாம்பழ மகசூல் நன்றாக இருக்கும் என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. ஆனால் எதிர்பார்த்த மகசூல் கிட்டவில்லை! அந்தச் சூழ்நிலையிலும் இலாபகரமான மகசூலை அடைந்தவர்களும் உண்டு! வறட்சி நிலையில் மார்கழி, தை மாதங்களில் மிக அதிக அளவில் பூக்கள் தோன்றின. அப்பூக்களைப் பெருமளவில் தோன்றிய தத்துப் பூச்சிகள் அழித்தன. அது சமயம் பூச்சிமருந்து தெளிக்கும் அவசியத்தை விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. இருப்பினும் வறட்சியில் வதங்கிய விவசாயிகள் செலவிற்குப் பயந்து பூச்சி மருந்து தெளிக்காத மரங்களில் காய்கள் அதிகம் பிடிக்கவில்லை. பிடித்த காய்கள் வளர்ச்சி அடைய பங்குனியிலும், சித்திரையிலும் மழை (Mango Showers) எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் மழை வரவில்லை. அதற்குப் பதில் கடும் வெப்ப நிலை நிலவியது. இந்த வெப்பத்தைத் தாங்காமல் காய்கள் ''வெம்பி'' கொட்டின! இதுவே சென்ற ஆண்டின் மோசமான மாம்பழ மகசூலுக்கு முக்கிய காரணம். அதாவது பூச்சி மருந்து தெளிக்காததும், நிலவிய கடும் வெப்பமுமே குறைந்த மகசூலுக்குக் காரணம் ஆகும். இதில் வெப்பத்தினால் ஏற்பட்ட நட்டத்திற்கு நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் விவசாயிகள் முயன்றிருந்தால் பூச்சிகளால் ஏற்படுத்தப்பட்ட நட்டத்தைத் தவிர்த்து இருக்கலாம். வறட்சி சூழ்நிலையிலும் பூச்சி மருந்து தெளித்தவர்கள் நல்ல பலனை அடைந்துள்ளனர். இதை விளக்கப்போன ஆண்டு செய்தச் செலவுகளையும், வருவாயையும் இங்கு விவரிக்கப்பட்டுள்ளது.

### மருந்து தெளித்த தோட்டத்தின் மகசூலும் வருவாயும் !

சாதாரணமாக 10 ஆண்டு வயதுள்ள பெரிய மரங்களில் மரத்திற்குச் சராசரி 1,500 பழங்கள் மகசூலாகக் கிடைக்கும். சென்ற ஆண்டு மருந்து தெளிக்கப்பட்ட தோட்டங்களில் ஒவ்வொரு மரத்திலும் சராசரியாக 700 பழங்கள் மகசூலாகக் கிடைத்தன. ஒரு ஏக்கரில் அதாவது 35 மரங்களில் இருந்து கிடைத்த மொத்த வருவாய் கீழே தரப்பட்டுள்ளது.

### ஒரு மரத்தில் 700 காய்களுக்குக் கிடைத்த வருவாய்

முதல் தரம் 100 காய்களுக்குக் கிடைத்தது—ரூ. 40.00

2-வது தரம் 300 காய்களுக்குக் கிடைத்தது—ரூ. 90.00

மூன்றாவது தரம் 300 காய்களுக்கு கிடைத்தது—ரூ. 75.00

மொத்தம் 700 காய்களுக்குக் கிடைத்த வருவாய்—ரூ. 205.00

ஒரு ஏக்கர் அல்லது 35 மரங்களில் வருவாய்—ரூ. 7,175.00

### ஒரு ஏக்கருக்குச் செலவு விவரம்

ஒரு ஏக்கருக்கு குத்தகை—ரூ. 1,000.00

மருந்து தெளிக்கச் செலவு—ரூ. 1,200.00

6 மாதங்களுக்கு காவலுக்கு ஒரு ஆள் வீதம்—ரூ. 720.00

அறுவடை-2 மரங்களுக்கு ஒரு ஆள் வீதம் ஏக்கருக்கு 17 ஆட்கள் கூலி—ரூ. 170.00

மார்க்கெட்டிற்கு அனுப்பச் செலவு—ரூ. 100.00

வியாபார செலவு, இடங்குதரகு மொத்த வருமானத்தில் 10 சதவீதம்—ரூ. 700.00

பழம் அழுகுதல், இதர சேதாரம் மொத்த வருமானத்தில் 10 சதவீதம்—ரூ. 700.00

மொத்த செலவு—ரூ. 4,590.00.

மருந்து தெளித்த தோட்டத்தில் ஒரு ஏக்கரில் கிடைக்கும் நிகர இலாபம்....ரூ. 7,175—4,590 =ரூ. 2,585

### மருந்து தெளிக்காத தோட்டத்தில் மகசூலும் வருவாயும்!

சென்ற ஆண்டு மருந்து தெளிக்காத தோட்டத்தில் மகசூல் மிகவும் குறைந்து விட்டது. சாதாரணமாகக் கிடைக்கும் மகசூலில் 30 சதவீதம் கூடக் கிடைக்கவில்லை! மாமரங்களில் சராசரியாக 200 பழங்களே கிடைத்தன. இதன் தரம் சிறந்ததாக இல்லாததால் மரத்திற்கு 50 ரூபாயும், ஏக்கருக்கு ரூபாய் 1760—ம்தான் வருவாயாகக் கிடைத்தது. மருந்து தெளிக்கும் செலவுகள் இல்லாவிடினும், இதர செலவுகள் இருந்தன. இங்கு ஏக்கருக்கு செலவு ரூ. 3,000 ஆனது. இதனால் மருந்து தெளிக்காத தோட்டத்தில் ஏக்கரில் ரூபாய் 1,250 வரை நட்டம் ஏற்பட்டது.

வறட்சி சூழ்நிலையிலும் பூச்சி மருந்து தெளித்ததால் கணிசமான இலாபம் கிட்டியுள்ளது.

## மாமரத்துக்கு மருந்து தெளித்தால் மகசூல் பெருகுவது திண்ணம்



# தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தமிழக அரசின் நன்மைகள்



ஒரு வீடு நான்காயிரம் ரூபாய் பெறுமானத்தில், வருகின்ற டிசம்பர் 30-ஆம் தேதிக்குள் முப்பதாயிரம் வீடுகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகக் கட்டி இலவசமாக வழங்கப்படுகிறது. இப்படிப்பட்ட வீடுகள் வேறு மாநிலத்தில் இலவசமாக கட்டித் தரப்படுகிறதா?

அரிசனங்களுக்கு இந்த அரசு என்ன செய்தது என்று கேட்பவர்களுக்கு ஒரேயொரு புள்ளி விவரத்தைத் தர விரும்புகிறேன். தமிழ்நாட்டின் மக்கள் தொகை ஏறத்தாழ 4½ கோடி. இதில் அரிசன மக்களுடைய தொகை 73 இலட்சம்; பழங்குடி மக்களுடைய தொகை 3 இலட்சம்; பிற்படுத்தப்பட்ட மக்கள் தொகை 2 கோடி. இதில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக 1967–68-இல் செலவு செய்யப்பட்ட தொகை 159 இலட்சம். இப்போது பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக செலவழிக்கப்பட்டு வந்த பணம் 6 கோடி ரூபாய்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்காக 1961-62-இல் செலவழிக்கப்பட்ட பணம் 3.63 கோடி; 62-63ல் 4.15 கோடி; 63-64ல் 4.52 கோடி; 64-65ல் 4.88 கோடி; 65-66ல் 5.38 கோடி; 66-67ல் 6.17 கோடி; 67-68ல் 6.31 கோடி; 68-69ல் 6.74 கோடி; 69-70ல் 7.99 கோடி; 70-71ல் 6.18 கோடி; 71-72ல் 7.78 கோடி; 72-73ல் 7.31 கோடி; 73-74ல் 8.68 கோடி; 74-75ல் 11.33 கோடி; 75-76ல் 17.05 கோடி ரூபாய்.

75 இலட்சம் மக்கள் இருக்கிற தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு 1975-76-ல் பதினேழு கோடி ரூபாய்; ஆனால் இரண்டு கோடி மக்கள் இருக்கிற பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு 6 கோடி ரூபாய் தான்; பிற்படுத்தப்பட்ட மக்களே கிளர்ச்சி செய்யுங்கள் — என்று தூண்டி விடுவதாக எண்ணக் கூடாது. தாழ்ந்து தாழ்ந்து தீண்டத்தக்கவர்களாக ஆக்கப்பட்ட இனத்திற்காக இந்த அளவு தமிழக அரசு செய்திருக்கிறது என்பதற்காகத்தான் இதை சொன்னேன்.

1966-67ல் கல்வி உதவித் தொகை விவரம்: பயன்பெற்றவர்கள் 2,76,000 பேர்; அவர்களுக்காக மொத்தம் செலவு செய்யப்பட்ட தொகை 96,89,000; 1974-75ல் கல்வி உதவித் தொகை தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வழங்கப்பட்டது 228 இலட்சம். 1975-76 246 இலட்சம்; இதில் மத்திய அரசு ஒதுக்கி இருக்கிற தொகை 43 இலட்சம். 1975-76-ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு ஒதுக்கியிருக்கிற தொகை 65 இலட்சம் ரூபாய் மட்டும்தான்.

1966-67ல் அரிசன மாணவ விடுதிகளின் எண்ணிக்கை 388. அதற்காகச் செலவு செய்யப்பட்ட மொத்தத் தொகை 65,61,000 ரூபாய். இப்போது 1974-75ல் 388 விடுதிகள் என்பது 557 விடுதிகளாக உயர்ந்திருக்கின்றன. செலவு 167 இலட்சமாக உயர்ந்திருக்கிறது.

[8.12.75ல் சென்னையில் நடைபெற்ற தாழ்த்தப்பட்டோர், மலைவாழ் மக்கள் மாநில மாநாட்டில் முதல்வர் கலைஞர் ஆற்றிய உரையிலிருந்து...]

குறிப்பிடத்தக்கது. இதோடு பூச்சி மருந்து தெளித்த மரங்கள் நலமாக இருந்து வருகின்றன. இந்த ஆண்டு அதிகப் பரப்பளவில் உணவுப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு இருப்பதாலும், நல்ல மழையின் காரணமாகவும் அமோக விளைச்சல் எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணத்தால் உணவு தானியங்களின் விலை இறங்குமுகமாக உள்ளது. ஆனால் இந்தப் பிரச்சினை மா சாகுபடியில் இல்லை. அதிக மழையின் காரணத்தால், மகசூல் கொடுக்கும் மா மரங்களின் பரப்பு அதிகரிக்கவில்லை. அநேகமாக ஏற்கெனவே [illegible] மரங்கள்தான் மறுபடியும் இந்த ஆண்டு மகசூல் கொடுக்கும். மாம்பழங்களின் விலை, உணவு தானியங்களின் விலை குறைவது போல் குறைந்து விடுமோ என்று அஞ்சி பூச்சி மருந்து தெளிப்பதற்குச் செலவு செய்யாமல் விட்டுவிட வேண்டாம். பூச்சி மருந்து தெளிக்கும்போது அதிக மகசூல் கிட்டும்! மாம்பழங்களுக்குச் சென்ற ஆண்டு கிடைத்த விலை கிடைக்கும் என்று நம்பலாம்; தரம் சீராக இருப்பின் அதைவிட அதிக விலையும் கிடைக்கும் வாய்ப்பும் உண்டு! இந்த ஆண்டு அதிக வெப்பத்தால் காய்கள் கொட்டும் சூழ்நிலை ஏற்படாது.

சீரான மாசாகுபடி வறட்சி நிலத்தில் பசுமைப் புரட்சியை தோற்றுவித்துத் தமிழ் நாட்டின் பொருளாதார நிலையைச் செழிக்கச் செய்யும், எனவே, பயிர் சாகுபடியில் பல சாதனைகள் புரிந்த தமிழக விவசாயிகள் மாம்பழ மகசூல் பெருக்குவதிலும் தங்கள் திறனைக் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தங்கள் தோட்டத்தின் நிலையை கவனித்து பராமரிப்புப் பணிகளிலும், மரங்களுக்கு கவாத்து செய்வதிலும், பூச்சி மருந்து தெளிப்பதிலும் உடனடி [illegible] செலுத்தும்படி

# குறைந்த விலையில் பாட நூல்கள்!

-அட்டை சொல்லும் கட்டுரை

பாடநூல் அச்சிடும் தாள், அச்சுமுறை, விலை முதலானவற்றில் முன்பெல்லாம் குறைபாடுகள் இருந்தன. அதோடு பிழைகளும் மலிந்திருந்தன. இக்குறைகளையெல்லாம் களைந்திட வேண்டும் என்று தமிழக அரசு எண்ணியது. அதன் விளைவாக உருவானதே 'தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்'

தரமான நூல்களைக் குறைந்த விலையில் குறித்த காலத்தில் கிடைக்கச் செய்யும் நோக்கோடு, தமிழ் நாட்டில் பாடநூல் வெளியீட்டினை நாட்டுடைமையாக்கும் பணி அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் விளைவாக 1969-70 கல்வியாண்டு வரை ஒன்று முதல் எட்டாம் வகுப்புகளுக்கான தமிழ்ப்பாட நூல்களும், நான்கு முதல் எட்டாம் வகுப்புகளுக்கான தமிழ்ப் பாட நூல்களும், நான்கு முதல் எட்டாம் வகுப்புகளுக்கான ஆங்கிலப் பாடநூல்களும் வெளியிடப் பெற்றன. ஒன்பது பத்தாம் வகுப்புகளுக்கான தமிழ், ஆங்கில நூல்களும், மூன்று முதல் பத்தாம் வகுப்புகளுக்கான கணக்கு நூல்களும் நாட்டுடைமையாக்கப்பட வேண்டுமென்று 1970-71-ஆம் ஆண்டில் அரசு கருதியது.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1970-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 4 ஆம் நாள் துவக்கப்பட்டது. அன்று முதல் இன்று வரை செவ்வனே நடைபெற்று வரும் இந்நிறுவனம், பாடநூல் வெளியீட்டுத் துறையில் இந்தியாவிலேயே மிகச் சிறந்த நிறுவனமாக விளங்கி வருகின்றது.

தமிழ்நாடு அரசு மாணவர்களுக்குப் பாடப்புத்தகங்களைத் தனியார் துறையில் இல்லாமல் அரசுத் துறையிலேயே ஒரு நூல் வெளியீட்டகம் அமைத்து அதன் மூலமாக, வழங்கவேண்டும் என்ற முறையை அமைத்திருக்கிறது.

ஒன்று, இரண்டு, மூன்று வகுப்புகளுக்கான தமிழ்ப்பாட நூல்கள் மூவண்ணத்தில் தமிழகத்தில் அச்சு ஏற்பட்ட நாளிலிருந்து இதுவரை யாரும் வெளியிட்டதில்லை. 1, 2, 3 வகுப்புகளுக்கு நான்கு வண்ணத்தில் ஆப்செட்டில் 72 ஜி.எஸ். எம். தாளில் இது வரை யாரும் அச்சிட்டு வழங்கியதில்லை. தாள் விலை, அச்சுக் கூலி, மை விலை ஏறினும், ஒரு முறை நிர்ணயித்த விலை மட்டும் அப்படியே கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. பாட நூல்கள் மிகக் குறைந்த விலையிலேயே விற்கப்படுகின்றன. விலையை மாற்றாமல் வைத்திருப்பதுதான், நிறுவனத்தின் நோக்கமாகும்.

பள்ளிகளில் படிக்கும் ஏழை மாணவர்களுக்கென 1972-ஆம் ஆண்டில் ரூ. 16,64,894 மதிப்புடைய 1, 2, 3-வது வகுப்புகளுக்கான தமிழ், 3-வது வகுப்புக்கான ஆங்கிலம், கணக்கு நூல்களை இந்நிறுவனம் வழங்கியுள்ளது.

1973-74-ஆம் ஆண்டில் ரூ. 13,97,125 மதிப்புள்ள 1, 2, 3 வகுப்புகளுக்கான தமிழ், 3-வது வகுப்புக்கான கணக்கு, அறிவியல், ஆங்கிலம் ஆகிய நூல்களை இந்நிறுவனம் வழங்கியுள்ளது.

1974-75-ஆம் ஆண்டில் ரூ. 22,63,780 மதிப்புள்ள 1, 2, 3 வகுப்புகளுக்கான தமிழ், 3-வது வகுப்புக்கான கணக்கு, ஆங்கிலம், அறிவியல் ஆகிய நூல்களை இந்நிறுவனம் வழங்கியுள்ளது.

1975-76-ஆம் ஆண்டில் ரூ. 22,63,780 மதிப்புள்ள பாட நூல்களை மேற்கண்ட வகுப்புகளில் படிக்கும் ஏழை மாணவர்களுக்காக இந்நிறுவனம் இலவசமாக வழங்கியுள்ளது.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

கற்க கசடற

ஆக மொத்தம் நிறுவனம் தொடங்கிய குறுகிய காலத்திற்குள் ரூ. 85,89,579. மதிப்புள்ள பாடநூல்களைத் தமிழகத்திலுள்ள ஏழைச் சிறுவர்களுக்கு இந்நிறுவனம் வழங்கியுள்ளது.

தமிழ்நாட்டுப் பாடல் நூல் நிறுவனத்தின் பாராட்டுக்குரிய பணிகளைப் பற்றி அறிந்து கொள்வதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் 20 அம்சத் திட்டத்தின்கீழ் கூறியதை நினைவு கொள்வது சாலச்சிறந்தது.

''ஆண்டுதோறும் பதினெட்டு இலட்சம் மாணவர்களுக்கு-மூன்றுவது வகுப்பு வரை படிக்கும் ஏழை மாணவர்களுக்குப் பாட புத்தகங்களை இலவசமாக வழங்குகின்றோம்; இதற்காக இதுவரை ஆகியிருக்கிற மொத்தச் செலவு 86 இலட்சம் ரூபாய். விலை அதிகம் என்று சொன்னார்கள். என்னுடைய கையில் இருக்கிற இந்தப் புத்தகம் 'ரிசார்ட்சன் லிவிங்ஸ்டன்-சம் டாஸ்க் ஃபார் எஜுகேஷன்' என்ற புத்தகத்தின் பக்கங்கள் 86. இதனுடைய விலை ரூ. 5. இது தனியார் வெளியிட்டிருக்கிற புத்தகம். அடுத்து, இந்தப் புத்தகம் ''அறிவியல்'' நம்முடைய தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் தயாரித்தது. இது 386 பக்கங்கள் கொண்டது இதனுடைய விலை ரூ. 4.80.

86 பக்கங்கள் கொண்ட தனியார் புத்தகம் 5 ரூபாய்.

386 பக்கங்கள் கொண்ட நம்முடைய புத்தகம் ரூ. 4.80 காசுகள்.

இந்நிறுவனம் அமைக்கப்பட்டவுடன் நூல்கள் வெளியிடும் பணி வெகு வேகமாக முன்னேறியது. இது அமைக்கப்படுவதற்கு முந்திய 1969, 70 ஆம் ஆண்டில் பள்ளி நூல்களில் 69.20 இலட்சம் படிகளே வெளியிடப்பட்டிருந்தன 1974-75-ல் 200 இலட்சத்திற்கும் படிகளே வெளியிடப்பட்டிருந்தன. 1974-75-ல் 200 இலட்சத்திற்கும் மேலான படிகள் வெளியிடப்பட்டன. ஓர் ஆண்டில் நிறுவனத்தின் சார்பில் 32 மில்லியன் பாட நூல்கள், 176 தலைப்புகளில் வெளியிடப்பெறுகின்றன.

பி.வி.ஜி.

# வானம் பார்த்து வாழ்ந்தது போதும்!

நமது முன்னோர்களின் காலத்திலெல்லாம், சரியாக வானத்தைப் பார்த்து விதை நெல்லைச் சரி செய்வார்களாம்! இந்த மாதம் இந்த தேதியில் மழை பெய்யும் என நிச்சயமாக நம்பி ஏர்பூட்டி வயலுக்குக் கிளம்புவார்களாம்! ஆனால் இப்போது? பருவமழை, இன்று பருவத்தே பெய்யா மழையாகி விட்டது! மழை பொழிய வேண்டிய பருவத்தில் பொய்த்துப் பெய்யக் கூடாத நேரத்தில் பயங்கரமாகப் பொழிந்து நம்மைச் சோதனைக்கு உள்ளாக்குகிறது. எனவே வானம் பார்த்து வாழ்ந்தது போதும்; இனி வேளாண்மைக்கு நில அடி நீரைப் பயன்படுத்துவோம் என்ற நிலை உருவாகியது.

நில அடி நீர் என்ற சொல்லே உங்களுக்குப் புதியதாயிருக்கலாம். நிலமட்டத்திற்கும் கீழே இயற்கையினருளால் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் நீரே நில அடி நீர்!

பொதுவாகத் தண்ணீரைப் பற்றி நமது மக்களிடையே ஒரு தவறான கருத்து நிலவுகிறது. அதாவது சிக்கனமாக உபயோகிக்கத் தேவையில்லாத ஒன்று உண்டென்றால் அது தண்ணீர்தான் என நாம் கருதுகிறோம். உதாரணமாக, ஒருவன் பணத்தை மிக உதாசீனமாகச் செலவு செய்தால் அவனை பார்த்து நாம் கூறுகிறோம் 'அவன் பணத்தைத் தண்ணீராய்ச் செலவழிக்கிறான்' என்று. ஆக, எச்சரிக்கை யுணர்வின்றி விரயமாக்கப்படும் ஒன்றாகத் தண்ணீர் கருதப்படுகிறது.

இந்த உலகத்தில் எந்த ஒரு உயிரினமும் உயிர் வாழ்வதற்குத் தண்ணீர் ஒரு அத்தியாவசியமான தேவையாகும். அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த தண்ணீரை எந்தக் குடிமகனும் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டுமென எண்ணுவதேயில்லை. ஏன் இருக்குமா? நம்முடைய முன்னோர்களின் காலத்திலிருந்தே காற்றைப் போல, சூரிய ஒளியைப் போலத் தண்ணீரும் பருவமழையின் மூலமாக வேண்டிய அளவு, வேண்டிய நேரத்தில் கிடைத்தது. அதனால் அதனை மனிதன் உதாசீனப்படுத்தினான். ஆனால் இன்று? மிகுந்த முன்னேற்றம் அடைந்துள்ள மேலை நாடுகளில் கூட, அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து அதனைச் சிக்கனமாகப் பயன்படுத்தத் துவங்கி விட்டனர். ஆனால் நமது நாட்டிலோ இன்னும் தண்ணீரைச் சரிவரப் பயன்படுத்தக் கூடிய சூழ்நிலையே உருவாகவில்லை!

தண்ணீரைப் பயன்படுத்துவதில் 'என்ன சரியான முறை? என்ன சிக்கனமான முறை வேண்டியுள்ளது என்று நீங்கள் கேட்கலாம். உண்மைதான். பஞ்சம் வரும் வரை யாரும் சிக்கனத்தைப்பற்றி நினைப்பதில்லை.

நமது தமிழ்நாட்டின் மொத்த நிலப்பரப்பு 1,29,901 சதுர மீட்டர்களாகும். மேற்படி பரப்பளவில் நமது மக்கள் தொகை 41.10 மில்லியன் என 1971-ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பு அறிவிக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் இந்த மக்கள் தொகை 2.2 சதவீதம் அதிகமாகி வருகிறது. மக்கள்தொகை பெருக்கம் ஒரு புறம்! அந்தப்

**அ.சொக்கலிங்கம்**



பெருக்கத்தினால் விவசாயத்திற்கு பயன்படும் நிலத்தின் அளவு குறைவது ஒருபுறம்! பருவமழை தவறுவது ஒருபுறம்! ஆக மும்முனைத் தாக்குதலால் வேளாண்மை மிகவும் பாதிக்கப்படுகிறது. மண் அரிப்பு ஏற்பட்டதனால் ஆறுகுளங்கள் ஆழக் குறைவாயின. உதாரணமாக நமது மூதாதையர் காலங்களில் ஒரு ஏரியில் தண்ணீர் நிறைந்திருந்தால், அது ஆறுமாதப் பாசனத்திற்குப் போதும். ஆனால் காலபோக்கில் அதே ஏரியிலுள்ள நீர் இரண்டு மாதப் பாசனத்திற்கு கூடப் போதுமானதாக இல்லை. அந்த அளவுக்கு ஆழக் குறைவாக ஏரிகளும், குளங்களும் மாறிவிட்டன. எனவே நமது அரசு, தரை மட்டத்தில் உள்ள நீர் நிலைகளை முடிந்த அளவுக்குச் சேமித்து வைத்திடப் பல திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செயல்படுத்தியும் வருகிறது.

நமது தமிழகத்தில் பூமியின் மேல் மட்டத்தில் உள்ள நீரின் அளவு 30 மில்லியன் "ஏக்கர் அடி" எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அதில் நாம் 90 சத அளவை ஏற்கனவே பயன்படுத்தி விட்டோம். எனவே, நில அடி நீரைப் பயன்படுத்திட வேண்டுமென எண்ணி நமது முப்பாட்டனார் காலத்தில் கிணறு தோண்ட ஆரம்பித்தார்கள். தரை மட்டத்திலிருந்து 10 அல்லது 15 அடிக்குள்ளாகவே நீர் கிடைத்தது. கவலைகள், ஏற்றங்களை வைத்து நீர் பாய்ச்சினர். ஒருவர் செய்ததைப் பார்க்கவுடன் எல்லாருமே கிணறு வெட்டி நீர் இறைத்தனர். விளைவு? 10 அடியிலிருந்து 15 அடிக்குள் இருந்த நீர் மட்டம் வற்றியது!

அடுத்த தலைமுறையினர் 25-30 அடி ஆழக்கிணறுகளை வெட்டினர். தொழிலிலும் வேளாண்மைத் போட்டி மனப்பான்மை புகுந்தது, அதனால் நான் நீ என்று போட்டி போட்டுக் கொண்டு கிணறுகளை வெட்டினர். அந்த 25 அடி மட்டத்திலிருந்த நீர்மட்டமும் வற்றியது! தொடர்ந்து மழையும் முன்னைப் போலின்றி பருவம் தவற ஆரம்பித்தது. மழை சரியாகப் பெய்யாமையினால், நிலம், அது இழந்த நீரை மீண்டும் சேமிக்க இயலவில்லை. மழை நீர் இறங்கினால் தானே பூமிக்குள் நீர் சேரும். வங்கிகளில் கூட பணத்தை எடுத்துக் கொண்டே இருந்தால், கணக்கில் மீதிப் பணம் எப்படி யிருக்கும்? எடுக்க எடுக்க, அவ்வப்போது பணம் போட்டுக் கொண்டும் வந்தால் தானே வங்கியில் பணம் இருக்கும். அதுபோல நாம் பூமியிலிருந்து நீரை எடுத்துக் கொண்டே இருந்தோம். ஆனால் பூமியில் மீண்டும் நீர் சேர வழி வகுக்கவே இல்லை!

1973-ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய தமிழ்நாட்டில் 11,96,641 கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன என்று சொன்னால் நம்புவது கூடக் கடினம்! இனியும் வானம் பார்த்தோ, வைகை மேட்டூர் அணையையும்,



கிணற்றினுள் உடைத்த பாறையை அகற்றிட உதவும் கருவி.

அணையையும், குளங்களையும், ஆறுகளையும் நம்பி வாழ நினைத்தால் முடியுமா? எனவே, நில அடிநீரை அது எவ்வளவு ஆழத்திலிருந்தாலும் அதனைப் பயன்படுத்திடத் திட்டம் வகுத்தது நமது அரசு. அந்தத் திட்டம்தான் 'சிறு பாசனத் திட்டம்'. இந்தத் திட்டத்தின் பெயரில் 'சிறு' என்ற வார்த்தையிருப்பதால், இது ஏதோ ஒரு சிறிய திட்டம் என எண்ணி விடாதீர்கள். ஏனைய மாபெரும் திட்டங்களைப் போல இந்தத் திட்டத்திற்கும் நமது அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாடு அரசு வேளாண்மை துறையின் பொறியியல் பிரிவில் இந்தத் திட்டத்திற்காகப் பயன் படுத்தப்படும் கருவிகளின் மொத்த மதிப்பீடு சற்றேறக் குறைய 4.5 கோடி ரூபாய் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். நமது பூமியில் உள்ள மொத்த நீர் அளவில் 3 சதம்தான் நாம் பூமியின் மேல் மட்டத்தில் பார்ப்பது. மீதி 97 சதம் தரை மட்டத்திற்குக் கீழ் உள்ள நில அடி நீர்தான்.!

நமது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஒருமுறை ஒரு கிராமத்தில் ஒரு குழாய்க் கிணற்றைப் பார்வையிடச் சென்றிருந்த போது, அங்கு கூடியிருந்த விவசாயிகளைப் பார்த்துச் சொன்னார்கள், "உங்கள் கால்களுக்கடியில் ஒரு சமுத்திரமே இருக்கிறது. இனியும் வானம் பார்த்து வாழ வேண்டாம்" என்று. அது நூற்றுக்கு நூறு உண்மை!

சரி! பூமியின் அடியிலுள்ள நீரை எடுப்பது எப்படி என்பது உங்களுக்கு ஒரு பிரச்சினையாக இருக்கலாம். அதிலும் சந்தேகம் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியைத் தவிர, நமது தமிழகத்தின் ஏனைய பகுதிகளிலெல்லாம் 150 அடிக்குக் கீழ் தான் நீர்மட்டம் தென்படுகிறது. எனவே, நீங்கள் உங்கள் நிலங்களில் குழாய்க் கிணறுகள் அமைக்



5ம் போது கூடுமானவரை ஒருவர் 5ழாய்க் கிணற்றிற்கும் அடுத்த பருடைய குழாய்க் கிணற்றி5ம் அதிக இடைவெளிவிட்டு அமையுங்கள்.

மிக அருகாமையில் இரு தழாய்க் கிணறுகள் அமைத்துக் கொண்டே போனால் நீர்மட்டம் விரைவில் வற்றிவிடும். பொதுவாக விவசாயப் பெருங்குடி மக்களிடையே ஒரு எண்ணம் நிலவுகிறது. அதாவது ஒருவர் ஒரு தழாய்க் கிணறு அமைத்து அதில் நல்ல முறையில் நீர் கிடைத்து விட்டால், அதே நீரோட்டப் பாங்கில் நாமும் ஒரு கிணறு அமைத்தால் நமக்கும் அதே அளவு தண்ணீர் கிடைக்கும் என்று எண்ணுகிறீர்கள். அது எப்போதும் சரியாக இருப்பதில்லை. நில அடி நீரைப் பொறுத்தவரையில் உங்கள் நிலத்தில் ஒரு அடி தூரத்தில் கூடப் பெரிய வேறுபாடுகள் காணப்படலாம். எனவே, கூடுமான வரை அதிக இடைவெளி விட்டுக் குழாய்க் கிணறுகளை அமைத்தல் மிகவும் சிறந்தது.

அடுத்தபடியாக, திறந்த கிணறுகளில் கிடைக்கும் அளவுக்குக் குழாய்க் கிணறுகளில் தண்ணீர் கிடைக்குமா என்ற ஐயம் உங்களில் பலருக்கு இருக்கலாம். ஒரு குழாய்க் கிணறு நல்ல நீரோட்டமுள்ள இடத்தில் உரிய முறைப்படி கவனமாக அமைக்கப் பட்டால், ஒரு திறந்த கிணற்றை விட ஒரு குழாய்க் கிணறு அதிக அளவுத் தண்ணீரைத் தரும். ஒரு குழாய்க் கிணறு அதிக இடத்தை அடைத்துக் கொள்ளாது. திறந்த கிணறுகள் கோடையில் வற்றி விடலாம். ஆனால் குழாய்க் கிணறுகள் அவ்வாறு வற்றிப் போவதில்லை. தொடர்ந்து வறட்சி நிலவும் காலங்களில் கூட குழாய்க் கிணறு வற்றாது. மேலும் பாறைப் பாங்கான பகுதிகளில் திறந்த கிணறுகள் அமைத்திட மிகவும் செலவாகும். ஆனால் தழாய்க் கிணறுகளை சிக்கனமாக அமைத்து விடலாம்.

நீங்கள் கேட்கலாம் குழாய்க் கிணறுகளிலிருந்து தண்ணீரை வெளியே எடுப்பதற்குப் பம்ப் செட்டுகள் அதிக விலையில் அல்லவா வாங்க வேண்டும்என்று உண்மைதான்? குழாய்க் கிணறுகளில் நீர்மட்டம் 25 அடிக்குக் கீழ் இருந்தால், ஆழ் கிணறு இறைவை இயந்திரங்கள் 'டீப் வெல் பம்பு' பயன்படுத்த வேண்டும். ஆனால் தற்போதுள்ள நீர் மட்ட அளவுக்குத் திறந்த கிணறுகள் வெட்ட வேண்டுமாயினும் அதிகச் செலவு ஆகத்தானே செய்யும். மேலும், 'சென்ட்டிரி பியூகல்' பம்புகளை உபயோகிப்பதும், பராமரிப்பதும் சுலபமாக இருக்கும். அதே சமயம் 'டீப் வெல் பம்பு'களை உபயோகிப்பதும், பராமரிப்பதும் மிகவும் சிரமம் என நீங்கள் நினைக்கலாம். ஆனால் தற்போது தொழில் துறையில் அடைந்துள்ள முன்னேற்றத்தினால் ஆழ் கிணற்றுப் பம்புகள், மிகச் சுலபமான முறையில் பழுது பார்க்கப்படுகின்றன. மேலும் குழாய்க் கிணறுகள் அமைக்கும் போது 'தானியங்கி ஊற்றுகள்' (ஆர்ட்டிஷன் கிணறுகள்) கிடைத்திடவும் வாய்ப்புண்டு.

நில அடி நீரை, அது எத்துணை ஆழத்திலிருந்தாலும் எடுத்துப் பயன்படுத்தித்தான் ஆக வேண்டும் என்கிற கட்டாயச் சூழ்நிலையில் நாம் இன்று இருக்கிறோம். பெருகிவரும் மக்கட் தொகைக்கு ஈடுகொடுத்திட உணவு உற்பத்தியையும் பெருக்குவது நமது கடமையல்லவா? எனவே, அதிக ஆழமுள்ள குழாய்க் கிணறுகளை அமைத்திட ஒரு விவசாயி தனிப்பட்ட முறையில் இயலாவிட்டால் பல சிறு விவசாயிகள் கூட்டாகச் சேர்ந்து **'சிறு விவசாயிகள் கூட்டுறவு நீரேற்றுச் சங்கம்'** என அமைத்துக் கொள்ள அரசு வழி வகுத்திருக்கிறது. அந்தச் சங்கங்களுக்கு அரசாங்கம் போதிய கடன் வசதி அளிப்பதுடன், தொழில் நுட்ப உதவிகளையும் பொறியாளர்களைக் கொண்டு அளிக்கிறது. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ஒற்றுமையுடனும், உயர்ந்த நோக்கத்துடனும் ஒன்றுபட்டுச் 'சிறு விவசாயிகள் கூட்டுறவு நீரேற்றுச் சங்கம்' ஒன்று அமைத்திட வேண்டியதுதான். அரசாங்கம் உங்களுக்குச் சகல உதவிகளையும் செய்யும். உங்கள் ஊருக்கு அருகிலுள்ள கூட்டுறவுத் துணைப் பதிவாளரை நீங்கள் அணுகினால் அவர் இதுபற்றிய மேல் விவரங்களை உங்களுக்குத் தருவார்.

தானியங்கி ஊற்று (ஆர்ட்டிஷன் கிணறு)



-வளரும்.







கல்லெல்லாம் கதை சொல்லும்
சிலப்பதிகாரக் காட்சிகள் !

புதையுண்ட பூம்புகார்
புது வடிவம் பூண்டுள்ளது !

சிந்தைக்கும் கண்ணுக்கும்
தெவிட்டாத தமிழ் விருந்து !

மனதைக் கவரும் மாதவியின் அழகுச் 4

பூம்புகார் கலைக்கூடம், சீர்காழியிலிருந்து 21 கிலோ மீட்
தொலைவிலும், மாயவரத்திலிருந்து 29 கிலோ மீட்டர்
தொலைவிலும் உள்ளது.

செய்தி, மக்கள் தொடர்புத் துறை, சென்னை-6



ஆசிரியரும் வெளியிடுபவரும் ! தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை